169623
600 008.
ஸ 211, m93 VC
N11-19-20

TABLE OF CONTENTS.

Vol. XIX (April 1911-March 1912.)

No. 1. For APRIL 1911.

		PAGE.
1.	"Number is the Law of the Universe"—The Meaning of the New year VirodhiKrithu ...	1
2.	On the Study of Number and Evolution of Form ...	6
3.	What shall we talk about: Dog, by M.N. Ganesa Iyer ...	6
4.	Study of Temple Traditions—"Angam Poombavai" The Worship of Lalita in Letter and Spirit ...	10
5.	The Ancient Eternal Symbols of Mystic Union ...	11
6.	Upanishad Artha Deepika: 10. Arunikopanishad by M. K. N. and S. S. A. ...	13
7.	Conditions of Health and Disease—1. Typhoid, Smallpox and other Zimotic Pestilence ...	18
8.	Easy Lessons in Economics by T. C. Venkataramana Aiyar—V-1, Result of Labour, ...	23
9.	Sita—A Tale of Hindu Domestic Life. Chap 35 by S. Ramaswami Iyer B A., ...	26
10.	To Our Readers and Subscribers ...	27
11.	O! My God Gracious—Praises and Prayers of a Parent Heart, in a Supreme Crisis of Life on Earth ...	29

1911-ம் வருஷ ஏப்ரல்மீ, 1-வது சஞ்சிகை.

1.	விரோதிகிருது வருஷம் ...	2
2.	"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" ...	6
3.	சீதா-மனோன்மணி—நாய்—எம். என். க. ...	6
4.	லளிதாக்ஷர வர்ணமாலிகாஸ்தோத்திரம் ...	10
5.	"பழமையால்குணங்குறி" ...	11
6.	உபநிஷதர்த்த தீபிகை: 9. ஆருணிகோப நிஷத் (M. K. N. and S. S. A.) ...	13
7.	சுகதுக்க சாதனங்கள்—1. சந்நிபாதம் அல்லது பித்தவாதசுரம், அம்மை வைசூரி முதலான பெருவாரிக் காய்ச்சல்கள் ...	18
8.	குடிவாழ்க்கை—V—1, வேலையின் பயன் ...	23
9.	சீதா அல்லது இல்லறவாழ்க்கை, 35-ம் அதிகாரம் (எஸ். ராமசுவாமி ஐயர், பி. ஏ.)...	26
10.	விவேகசிந்தாமணியை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கு ...	27
11.	"ஹே! தயாநிதே!"—பிரார்த்தனைக் கொத்து: திருவருட் சிறப்புவிண்ணப்பம் ...	29

No. 2. For MAY 1911.

1.	My Silver Jubilee By C. V. S. ...	34
2.	The Lord of Palni's Grace ...	44
3.	A Blessing in Disguise: Meditations in Maunam by V. Mauna Gurumurthi Achary ...	45
4.	The Lord's Play at Hide and Seek ...	46
5.	The Uprising or 'Uplift' ...	47
6.	Bee-stings-Cure for Rheumatism ...	49
7.	Lalitambal Chapter 1. ...	51
8.	Easy Lessons in Economics V-2, Result of Labour. by T. C. Venkataramana Aiyar ...	55
9.	Jubilee Thanksgivings ...	x

THE VIVEKA CHINTAMANI

A Monthly Tamil Magazine and High Thought Review

Devoted to the Diffusion of Practical Truth and Knowledge

Dealing with the Principles of Education, Psychology, Soul-Culture, and Ethics.
Adapted for Use in Homes and Schools.

God is Love: Knowledge is Power: AUM.

"Live and Learn"—"ஓதுவதோழியேல்."

SATYAMEVAJAYATE.

Vol. XIX.

(For the Tamil Year Virodikirudu.)

April 1911-March 1912.

விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையாரெல்லாமுடையார் அறிவிலா
ரென்னுடையரேனுமிலர்.—திருக்குறள்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.—திருக்குறள்.

19-ம் புத்தகம்.

(விரோதிகிருது வரு.)

1911-வரு ஏப்ரல்மீ முதல் 1912-வரு மார்ச்சுமீ வரை.

PUBLISHED BY
THE SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY,
For The Lalita Publishing Co., (Sole Agents and Managers.)
Lalitalaya, 19, Adam St, Mylapore, Madras, S.
1911-1912.

All Rights Registered.

Bound Vol. 5.] [Unbound Vol. 19.

The copyright of every article first published in this volume is vested solely in the Editor and registered in his name.

PAGE.

10. What Shall We Talk About: Sita-Manonmani, 2. A. Dialogue on Tiger by M. N. Ganesa Iyer 58
11. Sita—A Tale of Hindu Domestic Life. 61
12. Short Story: "That is the Law." 63

1911-ம் வரு மேமீ, 2-வது சஞ்சிகை.

1. 25-ம் ஆண்டு பூர்த்தியினும் பஞ்சவிம்சதி பாக்கியம் 37
2. பழனியாண்டவர் வரப்ரஸாதம் 44
3. "விவேகசிந்தாமணிப் பத்திராதிபர் நீடூழி வாழ்க" வென்ற விநோதை வினா—வி. மௌனகுரு மூர்த்தி ஆச்சாரி 45
4. ஸ்ரீ கோபால கிருஷ்ணன் கூத்து 46
5. உட்டியாணபந்தம், "திருவெம்பாவாய்" 47
6. வாதக்கட்டுக்கு வைத்தியம் தேனீக்கொட்டு 49
7. லலிதாம்பாள் சரித்திரம்: "அந்தண ரென்பர் அறவோர்" 51
8. குடிவாழ்க்கை V—II வேலையின் பயன்—டி. ஸி. வெங்கடரமணய்யர் 55
9. பஞ்சவிம்சதி பாக்கியப்பேறு 57
10. சீதா-மனோன்மணி 2-புலியைப்பற்றிய ஓர் சம்பாஷணை. எம். என். கணேசய்யர் 58
11. சீதா அல்லது இல்லறவாழ்க்கை 61
12. தநேவதர்மம் ஒரு சிறு கதை 63

No. 3. For JUNE 1911.

1. The 26th year of work—The meaning of thenumber 26o 66
2. The Mammonite's Picture: Drawn from Practical Life 69
3. A. Genuine Verdict 70
4. K. S. S. A.—"It matters not" 70
5. The Seven-fold Principle of Being 72
6. The Way to Health—To Free oneself from Filth 74
7. Conditions of Health and Disease 77
8. Upanishad Artha Deepika—11. Bhavanopanishad 78
9. Bhavanopanishad Prayoga-Vidhi—By M. K. N., R. V. S. Mahopadhyaya and K. S. S. A. 83
10. Easy Lessons in Economics —VI Changes in the Results of Work, Parts I & II By T. C. Venkataramana Aiyer 85
11. Lalitambal—II "Parvati, Take Care of the Child 87
12. Tell me your friends and I will tell you what you are—Extract from Duties of Parents 92
13. Cocoanut Palm Pests ... ...

1911-ம் வரு ஜூன்மீ, 3-வது சஞ்சிகை.

1. 26-வது வருஷத்துழைப்பு—ஷட்விமஜயபாவம் 66
2. பணவாசைப்பேய்கள் செய்யுமோசம் 69
3. ஓர் உண்மையான வார்த்தை 70
4. கேவலம் ஸத்தியம் சாந்தம் அவநூதம்— "எப்படி யிருந்தாலென் !" 70
5. "திருவெழுகூற்றிருக்கை"—சித்திரகவிப்படம் 72
6. சுகவழி:—மலச்சிக்கல் நீக்கம்— பொது 74
7. சௌக்கியா சௌக்கிய சாதனங்கள் 77
8. உபநிஷதர்த்ததீபிகை II. பாவநோபநிஷத் 78
9. பாவநோபநிஷத் பிரயோகவிதி, (M. K. N., R. V. S. M., and K. S. S. A.) 83
10. குடிவாழ்க்கை: VI வேலையின்பயன் மாறுபடுதல் 2. வேலையின் அளவு— டி. ஸி. வெங்கடரமணய்யர் 85

PAGE.
11. லலிதாம்பாள் சரித்திரம் II "பார்வதி! குழந்தை பத்திரம்" 87
12. ஸகவாஸதோஷம் (பெற்றோர் ஒழுக்கம்) 62
13. தென்னைமரத்து வண்டுகள் 96

No. 4. For JULY 1911

1. The Number 270—Its Mystic Meaning 98
2. In the Holy Presence of Death By K. S. S. A. 101
3. An Appreciation By V. M. R. A. 105
4. On Saintliness Or Colourless Prefection of Purity (By Sri Atmananda Sadhu) 106
5. Free from Bonds—The Autobiography of a Taluk Gumasta 110
6. Upanishad Artha Deepika—II. Bhavanopanishad By M. K, N., R. V. S. Mahopadhyaya, and K. S. S. A. ... 116
7. The Coronation Festivities 122
8. The Manufacture of Camphor 122
9. "Cease Thou All Vain Talk"—A Short Story 123
10. The Tinnevelly Tragedy 128

1911-ம் வரு ஜூலைமீ, 4-வது சஞ்சிகை.

1. இருபத்தியேழு—அதன் பொருள்: "ஸப்த விம்சதி சாயுஜ்யம்." 98
2. யமதரிசனம் (K. S. S. A.) 101
3. ஓர் வந்தனப்பத்திரம் (V. M. R. A.) 105
4. வெள்ளியம்பலம் (ஸ்ரீ ஆத்மாநந்தஸாது) 106
5. அவிழ்த்துவிட்ட கழுதை:—ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம் 110
6. உபநிஷதர்த்ததீபிகை—II. பாவனோபநிஷத் 116
7. முடிசூட்டல்கொண்டாட்டம் 122
8. கர்ப்பூரம் செய்யல் 122
9. "உன்வாயடைக்க!"—ஓர் உண்மைபான சிறு கதை 123
10. திருநெல்வேலி மோசக் கொலை 128

No. 5. For AUGUST 1911

1. The Mystic Number 230 130
2. Lalitambal—III, "Satipathi Dharmam". 133
3. Free from Bonds—The Autobiography of a Taluk Gumasta 140
4. Upanishand Artha Deepika—II. Bhavanopanishad By M. K. N., R. V. S. Mahopadhyaya and K. S. S. A. ... 143
5. Note on Astrology 148
6. Vivekachintamani in its 19th year. By V. M. R. A. 150
7. The Hon'ble Sri Gopala Krishna Gokhale in Madras 151
8. The Late Mahopadhyaya Visvesvarasastriar 154
9. "Tell me your friends and I will tell you what you are"—Extract from Duties of Parents ... 155
10. Floods in the Cauvery 160

1911-ம் வரு ஆகஸ்டுமீ, 5 வது சஞ்சிகை.

1. இருபத்தியெட்டு—அதன்பொருள்: "நமஸ்ஸவித்ரே ஜகத் ஏகச்சக்ஷுஷே." 130
2. லலிதாம்பாள் சரித்திரம், III "சதிபதி தர்மம்." 133
3. அவிழ்த்துவிட்ட கழுதை—ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம் 140
4. உபநிஷதர்த்ததீபிகை—II. பாவனோபநிஷத், (மு. கோ. நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல்.
ஆர். விசுவேசுவரசாஸ்திரி மஹோபாத்தியாயர் 148

PAGE.
5. சோதிடசாஸ்திரக் குறிப்பு 148
6. "விவேக சிந்தாமணியின் மடங்கைப் பருவம்" என்ற இருச் சொல்லலங்கார விகேதை விஞ—
வி. மென்ன குருமூர்த்தி ஆச்சாரி 150
7. கனம் ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே... 151
8. காலஞ்சென்ற பண்டிதாத்மாம் மஹோபாத்யாய விசுவேசுவர சாஸ்திரியார் 154
9. ஸ்வவாஸதோஷம் (பெற்றோர் ஒழுக்கம்) 155
10. காவேரியில் பிரளயம் 160

No. 6 For. SEPTEMBER 1911

1. The Resurrection Ode 162
2. The Spiritualisation of Science 165
3. The Silent Teaching of a Siddha 170
4. Easy Lessons in Economics—VI. By T.C. Venkatramana Iyer 172
5. The New Civil Marriage Bill 174
6. Lalitambal—IV, "Brahma's tie"—Settling a Match. 178
7. Free from Bonds—The Autobiography of a Taluk Gumasta 181
8. Upanishad Artha Beepika—II. Bhavanopanishad By M. K. N. R. V. S. Mahopadhyaya and K. S. S. A. ... 185
9. The Great Mystery of Guru Poojah 188
10. Extract:—Cocoanut Planting 191
11. Negapatam Bhakti Marga Sabah ... ... — 192
12. Correspondence. ... ...

1911-ம் வரு செப்டம்பர்மீ, 6-வது சஞ்சிகை.

1. ஜீர்ணோத்தாரண மஹா மந்திரமாலா 162
2. சாஸ்திரஞானமும் ஆத்மஞானமும் 163
3. ஸ்ரீ மாணிக்கவாசகர் மௌனப் பிரளங்கம் 165
4. குடிவாழ்க்கை—VI டி. சி. வெங்கடரமண அய்யர் 170
5. கவுகாரிகப் புது விவாகம் 172
6. லலிதாம்பாள் சரித்திரம், IV வருவார் நிச்சயம் "பிரம்மமுடிச்சு" 174
7. அவிழ்த்துவிட்ட கழுதை—ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம் 179
8. உபநிஷதர்த்ததீபிகை—II. பாவனோபநிஷத், (M. K. N., R. V. S. and K. S. S. A.) ... 181
9. குருபூஜை மஹத்துவம் 185
10. தென்—தோப்பு வைத்தல் 188
11. நாகப்பட்டினம் பக்திமார்க்க சபை 191
12. சடிதம் 192

No. 7. For OCTOBER 1911.

1. In Praise of the Son of God, OR "Kumara-Guru Saran's Holy Feet." 194
2. Think Thought and Prolong Life 194
3. In Quest of "Life's Big Things" 199
4. Upanishad Artha Deepika—II. Bhavanopanishad Prayogavidhi By M. K. N., R. V. S. M. and K. S. S. A. ... 203
5. [illegible] Hypnotist 206
6. Navaratri Poojah 210
7. Lalitambal: V, "Karma keep through Gayatri 213
8. Free from Bonds—The Autobiography 217
9. Vivekachintamani Riddles 221
10. Flies as Agents of Disease and Death By Dr. W. R. [illegible] ... 22

PAGE.

1911-ம்வரு அக்டோபர்மீ, 7-வது சஞ்சிகை.

1. குமரகுருபரனிணையடி சரணம் 194
2. 'நினைவின் மனனே! நினைமின்மனனே'... 194
3. பேரின்ப விவேகத் காதை 199
4. உபநிஷத்தத்தியிசை—II. பாவனோபநிஷத் பிரபோகவிதி, M.K.N., R.V.S.M. and K.S.S.A. 203
5. ஒரு ஞ்யகாதியின் சொல்லுண்மை, ... 207
6. நவராத்திரி பூஜை—1911 "காயத்ரீ மந்த்ர திருஷ்டானுபூதி" 210
7. லலிதாம்பாள் சரித்திரம்: V "காசிக்குப் போலைய[illegible]தாலயாது" 213
8. அவிழ்த்துவிட்ட கழுதை—ஒரு [illegible] குமாஸ்தாவின் சரித்திரம் 217
9. "விவேகசிந்தாமணி விநோதப்பருவ விநோதை வினா" 221
10. [illegible]ரும் வியாதியும் மரணமும் (டாக்டர் W. R. மாக்டொனல்ட்) 222

No 9. For NOVEMBER 1911

1. Use and Abuse of Words 226
2. On the Study of Words 229
3. "Realisation through Gayatri."... 233
4. Prayanama—Its Characteristics and Ultimate Aim 236
5. Free from Bonds—The Autobiography of a Taluk-Gumasta 241
6. Easy Lessons in Economics—VII By T. C. Venkataramana Iyer 245
7. Lalitambal:—VI "Thorough" or "Through and Through" 247
8. Sita-Mononmani—(Our King Emperor) 250
9. The Vivekachintamani Riddle 254
10. The Late Sister Nivedita 255
11. Agricultural Machinery 256
12. Coronation and Christmas Holidays 256

1911-ம்வரு நவம்பர்மீ, 8-வது சஞ்சிகை.

1. வாக்கின் அர்த்தசாத்தங்கள் 226
2. மந்த்ர தீக்ஷை 229
3. காயத்ரீ மார்க்க தரிசனம் 233
4. ப்ராணாயாம லக்ஷண-லக்ஷியம் 236
5. அவிழ்த்துவிட்ட கழுதை—ஒரு தாலூக்கா குமாஸ்தாவின் சரித்திரம் 241
6. குடிவாழ்க்கை—VII. டி. சி. வெங்கடாரமண அய்யர் 245
7. லலிதாம்பாள் சரித்திரம்—VI. நல்வழி யுபதேசம், "நாய்வழிகாட்டல்" 247
8. சீதாமனோன்மணி (சம்சக்கிரவர்த்தி) 250
9. விவேகசிந்தாமணி விநோதை வினா 254
10. ஸ்ரீ-விவேதிதையம்மாள் 255
11. விவசாய யந்திரங்கள் 256
12. மகுடாபிஷேக கிறிஸ்மஸ் விடுமுறை நாட்கள் 256

No. 9. For DECEMBER 1911

1. In the Horns of a Dilemma 261
2. The Sringeri Jagad Guru on the Establishment of Dharma 265
3. The Royal Visit 266
4. The Vision of the Eternal Dance—A Phantasy ... [illegible]pathy 268
5. "To Marry or Not to Marry—That's the Question" 271
6. Our King-Emperor's Declaration of Fa[illegible]

PAGE.

7. Paranayama Vidhih 273
8. The King-Emperor's Coronation Durbar Address 277
9. Coronation Boons 279
10. His Majesty's Reply to the Madras Address 282
11. Coronation Honours 283
12. The Truth Behind the Coronation Durbar (from the *Madras Dailies*) 285
13. In Honor of the Coronation of Their Imperial Majesties 287
14. The Compassion of the *Alone Become* ... ... 4th page of cover.

1911-ம்வரு டிசம்பர்மீ, 9-வது சஞ்சிகை.

1. தர்ம சங்கடம் 258
2. தர்ம ஸம்ரக்ஷணம் 261
3. மாகுமைதங்கிய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியவர்கள் விஜயம் 265
4. திருக்கூத்து தரிசனம் 266
5. "ஏகாங்கியாக விருப்பதா, யோகாங்கியாக விருப்பதா?" 268
6. நமது சக்ரவர்த்தியாரின் ஜீவகாருண்யம்... 271
7. பிராணாயாமவிதி 273
8. கிரானேஷன் தர்பாரில் சக்ரவர்த்தியார் கூறிய திருவாக்கு 277
9. முடிசூட்டு கன்கொடைகள் 279
10. சென்னை ராஜதானியார் விஜ்ஞாபனத்திற்குச் சக்ரவர்த்தியார் அளித்த பதில் 282
11. கிரானேஷன் கௌரவப்பட்டங்கள் 283
12. மாகுமைதங்கிய இந்திய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியார் மகுடாபிஷேகம் 287
14. தனி நின்றிரங்கல் ... ... மேலேட்டின் 4-வது பக்கம்

No. 10. For JANUARY 1912.

1. "The Truth behind the Coronation Durbar"—The Decad of the Lord of Palni's Grace (by S.S. Avadhuta) ... 290
2. The 12th Ananda Mission Founder's Day Celebration.—Arudradarisanam—1912 293
3. "Let the Current that knows its Way" 299
4. An Open Letter to All 301
5. The Right of Entry into the Land of the Supreme 302
6. 'Renunciation', and 'the Wordly Mind'—'Vascillation unto the Last' 304
7. The Lord of Palni's Grace—'Granting of the Great Boon' 308
8. Easy Lessons in Economics, by T. C. Venkatramana Aiyar 309
9. Extracts: Ananda Mission Founder's Day 311
10. The Importance of the Month '*Margazhi*,' 313
11. The Eternal Dance or the Lord's Play—Some Scenes from Real Life. 316

1912-ம்வரு ஜனவரிமீ, 10-வது சஞ்சிகை.

1. டில்லி தர்பாரின் உட்கருத்து.—பழனியாண்டவர் திருப்பதிகம் 290
2. ஆருத்ராதரிசனம் 293
3. கர்ம தர்ம ரகஸியம் 299
4. ஓர் பயிரங்க விநோதம் (இங்கிலீஷ்) 301
5. உயர்பூமிகையின் [illegible] பிரவேச பாத்தியதை 302
6 "சாவதானுல் [illegible]ஸம், பிழைப்பதானுல் பெண்டாட்டி" 304
7. பழனியாண்டவர் [illegible]ருளுப்பிரசாதம் 308

PAGE

8. குடிவாழ்க்கை —VII வேலைக்காரர்களின் நாணயம் 309
9. ஸத்யானந்த சபாநடேசர் ஆருத்தாரன். 311
10. மார்கழிமாச விசேஷம் 313
11. கோபால கிருஷ்ணன் கூத்து 316

No. 11. For FEBRUARY 1912.

1. "Judge not, lest ye be Judged": "Settle the Question Right" 322
2. Must *versus* Ought, or, Might Against Right 324
3. "*Opus* and *Opera*" or The Principle of Co-operation 327
4. Literary Piracy 331
5. The People's Governor 333
6. Progress of the Potential God from the Latent to the Patent Stage 334
7. Easy Lessons in Economics, IX., by T. C. Venkatramana Aiyar 337
8. Come ye and see 'The Deceiver who steals away my heart.' 339
9. "The Sorrows of Satan" (with apologies to Miss Marie Corelli) 341
10. Supplement: "Appeal in Love to Our Sovereign-Lord". ... ... (16 pages.)

1912-ம் ஆண்டு பிப்ரவரிமீ, 11-வது சஞ்சிகை.

1. "ஓரவஞ்சகம் செய்யாதே! ஒருதலைத் தீர்ப்புச் சொல்லாதே!" 322
2. "எளியானை வலியாராடித்தால் வலியானைத் தெய்வம் அடிக்கும்" 324
3. "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்!" 327
4. விஷயத் திருட்டு 331
5. நமது சென்னைப் புதிய கவர்னர் லார்ட் கார்மிகேல்... 333
6. "ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது" 334
7. குடிவாழ்க்கை—IX., டி. சி. வெங்கடரமண அய்யர் 337
8. "என்னுள்ளங்கவர் கள்வனைக் காணவாரீர்" 339
9. 'மொட்டைத்தாதன் குட்டையில்விழத் தட்டுவாணி தாலியறுத்தான்' 341
10. அனுபந்தம்: கோனிடமன்பிற்குழைந்துரை மாற்றம் (இங்கிலீஷ்) ... (16 பக்கங்கள்.)

No. 12. For MARCH, 1912.

1. The Armour of Light 346
2. The Betrayal of Friendship 348
3. My only Friend 352
4. The Decad of Dread (after Sri Manicka Vachagar) 357
5. Heigh-ho the Holly (A Song of Life) 358
6. Change of Government 360
7. A Jolly Song of Life Eternal... 361
8. "The Cinderella of the Empire" to H. E. Lord Carmichael "Her Prince" 365
9. Chingleput Dt. Co-operators' Conference... 366
10. "As You like it" 367

1912-ம் ஆண்டு மார்ச்சுமீ, 12-வது சஞ்சிகை.

1. விவேகசிந்தாமணிக் கவசம் 346
2. கூடாநட்பு 348
3. "நிக்கற்றவர்க்குத் தெய்வமே துணை" 352
4. அச்சப்பத்து (அசங்கோசமாதல்) 357
5. "ஈதென்னகேசமோ எனமோசமோ!" 359
6. கவர்ன்மெண்டு மெம்பர்கள் மாறுபாடு 360
7. அபயகந்த வாழ்வு 362
8. கார்மிகேல் பிரபுவின் பிரியாற்றாது சென்னை மாதேவி யிரங்கல் 365
9. "செங்கற்பட்டு ஜில்லா கொஆபரேடர்களின் மகாநாடு" 366
10. "உன்னிஷ்டப்படியே." 368

இதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் விவேகசிந்தாமணி ஆசிரியர்க்கு உரிமையானது; அப்படியே காபிரைட் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

10 MAY 1911 MADRAS.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is,
but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it." But,
"Make your choice and stick to it till you reach the End."
ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1911ஆ எப்ரல்மீ, விரோதிகிருதுஆ சித்திரைமீ [சஞ்சிகை. 1.

"NUMBER IS THE LAW OF THE UNIVERSE."

The Meaning of the New year Virodhi-krithu

"Every being according to Pythagoras represents a number, and the ultimate goal of science is to find for each being the number for which he stands. The harmony is the soul of the universe. The different beings form an ascending scale according to the degree of perfection with which they reflect the Universal Harmony.

"As number, he says, is the essence of things, so, unity, he says, is the essence of the universe. There are again two kinds of unity. First, the unity which is absolute and unopposed, the Monad of Monads and the God of Gods from which the series of numbers or beings is derived and which consequently contains and comprehends them all. Then there is a relative unity, first in the series of derived numbers which is opposed to the numbers two three etc., and naturally limited by them. Thus the opposition between the one and the many is the source of everything else. In as much as, he further asserts, everything can be reduced to numerical relativity and finally to Idea, the matter and motion of the Ionians' (Philosophy based on Physics)? are merely Negative, the absence of *Ideal unity."—Philosophy grafted on Mathematics of which Pythagoras stood as the chief exponent in the west.*

? Pythagorean Maxim.

"எண்ணும் எழுத்தும் கண்
ணெனத்தகும்."

விரோதிகிருது வருஷம்.

"மிக்கவிரோதி விளைவுண்டு மாரியுண்டு
தக்கிறப்புச் சனமுண்டு இக்குண்டு
உப்புப்பருத்தி யுலகத்திலே குறையும்
துப்புமிகு மாமணக் காஞ்சொல்"

சாதாரண வருஷத்திற்குப் பின் வருகிற வருஷத்தின்பேர் "விரோதிகிருது." † இந்தவருஷத்தின் பலன் மேலே வரப்போகிற செய்யுளிற் கண்டபடி புதுப்பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மிக்க விரோதத்தையே செய்யும் இந்த வருஷத்தில் விளைவு உண்டு; மழையுண்டு; கால தர்மத்துக்கேற்ற சிறப்பும் தனமுமுண்டு; இக்குண்டு; "உப்புப்பருத்தி யுலகத்திலே குறையும்;" "துப்புமிகு ஆமணக்கு ஆம்"-என்று இப்படி காலபலன் சொல் என்பது அதன் அருத்தம்.

நமக்குள்ளே ஸம்வத்ஸரங்களின் (வருஷங்களின்) பேர் அறுபது. இந்த அறுபது வருஷங்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் பொதுவாய் ஆறு ருதுக்கள் உண்டு; பனிரெண்டு மாசங்களுண்டு. மாசம் ஒன்றுக்குப் பக்ஷங்கள் இரண்டு: அதாவது, சுக்கில பக்ஷம், கிருஷ்ண பக்ஷம் என்பனவாம். பக்ஷத்துக்குத் திதி பதினாறு; பூர்ணமை அல்லது அமாவாஸை சேர்த்துப் பதினைந்து. இந்த சந்திரமானம் 30 நாளுக்கும் வருஷத்தில் 360 நாள். சௌரமானப்படி வருஷத்துக்கு 365 நாள் சொச்சம் சந்திரன் ஒருதரம் பூமியைச் சுற்றிவரப் பிடிக்கும் 30 நாள் (திதி) சந்திரமானம். இப்படி 12 தரம் சந்திரன் பூமியைச்சுற்றி வரும் பொழுது, பூமியானது கிட்டத்தட்ட சூரியனைச் சுற்றி ஒருதரம் வந்தோடி விடுகிறது. பூமியானது தட்டாமாலை சுற்றுவதுபோல் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றியோடி வருகிறது. சந்திரனோ பூமியைச் சுற்றிக்கொண்டே சூரியனையும் சுற்றியோடி வருகிறது. "பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும்" என்று சொல்கிற பழமொழிபோல் இந்த மண்டலங்கள் ராகத்துவேஷாதி ரூபமாய் விளங்கும் துருவ சக்திகள் (Polar attractions and repulsions) மூலமாய் ஒன்றுக்கொன்று ஆகர்ஷண சக்தி வாய்த்தனவாய் சலன சக்தியைக் கிரஹித்துக் கொண்டு, தத்தம் நிலை தவறாது ஆகாசத்தில் கோலாகாரமாய் சுற்றிச் சுழன்று வருகின்றன. இந்த மண்டலங்களுக்கெல்லாம் மத்தியம ஸ்தானமா யிருந்து கொண்டும் இவை யெல்லாவற்றிலும் அந்தர்யாமியாய் வியாபித்துக் கொண்டு மிருப்பது அவ்யக்தமான அக்னி மண்டலம். இந்த அவ்யக்தாக்னியின் வியத்தல்வரூபம் சூரியன். இந்த சூரியன் எல்லா கிரகங்களுக்கும் ஸ்திதி கர்த்தாவாய் இருப்பதினாலே அதில் அதிஷ்டானமாயுள்ள தேவதைக்கு 'சூரியநாராயணன்' என்று பேர். இந்த சூரிய காந்தியானது "இருளிலொளி" யாய் விளங்குவதனாலே, சூரிய பகவானைச் "சாயாதேவிசமேதன்" என்று சொல்லி உலகத்தார் பூஜார்ச்சனை செய்துவருகிறார்கள்.

இருளில் ஒளிரும் சந்திரன் பூர்ணனாயிருப்பதால் பௌர்ணமி யென்ற அது விளங்கும் திதிக்குப் பேர் வந்தது. அதே சந்திரன் சூரியனோடு தோன்றும்போது ஒளிமழுங்கி விளங்காதொழிவதால் அந்தத் திதிக்கு அமாவாஸை யென்ற பேர். பூர்ணமையிலும் அமாவாஸையிலும் சந்திரன் ஸ்வயம் பூர்ணமாகவே யிருக்கிறான். ஆனால் பூர்ணமை திதியில் இரவில் தோன்றுவதால் பூர்ணனாய் விளங்கிக் கொண்டும், அமாவாஸையில் பகலில் தோன்றுவதால் ஒளிமழுங்கி விளங்காத்தன்மை பெற்றும் இருக்கிறான்.

சந்திரிகை (சந்திரனொளி) பூர்ணமாகவும் சூக்ஷ்மமாகவும் விளங்குவதற்கு இரவு, பகல் என்னும் உபாதிகள் காரணமேயன்றி சந்திரனிடத்தில் ஸ்வதந்திரமாயுள்ள பேதமொன்றுமில்லை. இப்படி உபாதி நீக்கிப்பார்க்க வல்லோர்க்குச் சந்திரன் எப்போதும் பூர்ணனாகவே யிருக்கிறான். அஞ்ஞானிகள் (உபாதி ஸஹிதமாய் மட்டும் பார்க்க வல்லவர்கள்) இந்த உண்மையை (சந்திரனின் பூர்ணத்துவத்தை) அவன் இரக்காலத்தில் விளங்கும் பௌர்ணமி திதியில் மட்டும் கண்டுகளித்து, அவன் பகலில் (சூரியனோடு தோன்றுவதால்) ஒளிமழுங்கி விளங்கா நிற்கும் அவஸ்தையில் (உபாதி ரஹிதமாய்) காணும் சக்தியில்லாதவர்களாய் சந்திரன் தேய்ந்து போய்விட்டான் என்கிறார்கள். ஞானதிருஷ்டிக்கும் அஞ்ஞானதிருஷ்டிக்கும் உள்ள வித்யாஸம் இதுதான். ஞானி உபாதி ரஹிதமாய்ப் பார்த்ததை உபாதி ஸஹிதமாயும் பார்க்கும் சக்திவாய்த்தவனா யிருக்கிறான். அஞ்ஞானியோ, உபாதி ஸஹிதமாய் மட்டும் பார்க்கும் சக்திவாய்த்து உபாதி ரஹிதமாய்ப் பார்க்கும் சக்தியின்மையால் தனது ஞான சூர்யத்தை ஞேயத்தின் (அறியப்படுபொருளின்) மேல் ஏற்றி சிரிக்காமாயுள்ள ஞேய ஸ்வரூபத்தைச் சூக்ஷ்மமாக அறிகிறான். அப்படியே தனது மனோ விகாரத்தையும் அதனாலுண்டாகும் ரூப விசேஷங்களையும் ஞேயத்தின் மேலேற்றி ஸ்வபாவமாயுள்ள சூன்ய வெளியில் உருவெளித் தோற்றங்களைக் கண்டு மயங்குகிறான். இதற்குத்தான் நம்பவர்களில் பெரியோர்கள் 'சங்காதோஷம்' என்று சொல்வது. சமஷ்டியில் இது பாபாரமலமாம். இதை குருமுகமாகச்செய்யும் உண்மை விசாரத்தால் போக்கிக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் "இக்குண்டு."

"அமாவாஸை பூரணையாகுமவர்க்குச்
சமனுமி யிருடம்புதான்"—

என்றார் ஔவைப் பிராட்டியார். அப்படிச் சொன்னதின் உண்மையான அருத்தம் என்னவெனில், உபாதிரஹிதமாயுள்ள சுத்த முத்த ஸ்வரூபத்தைச் சாக்ஷாத்கரித்துணர்ந்த ஸ்வானுபவ ஞான விசேஷத்தால் உபாதிரஹிதமாயுள்ள அந்த ஸ்வரூபத்தை உபாதிஸஹிதமாய்க் காணவல்லார்க்கு உயிர் உடம்பு என்கிற பேதமில்லை: இரண்டும் சமனும். எப்படியெனில்: ஸ்வரூபஞானம் இருப்பதினாலே. இந்த ஸ்வரூபஞானம் திருஷ்டா, தரிசனம் இரண்டையும் தள்ளிப்பார்க்கும் யோகிகளுக்கே உதயமாகும். திரிபுடி ஞானம் சித்தித்தவனே யோகி; திரிபுடி ரஹிதமாய் பார்க்கும் பார்வையையும் ஆஃதோடு பார்ப்பவனையும் தள்ளி, பார்க்கப்படும்பொருள் மாத்திரமாய் நிற்பவன் அவனே ஞானி. திரிபுடிரகிதமான தீர்க்க தரிசனம் வாய்ந்தவனுக்கு ரூபநாசமான விடத்து அரூப தரிசனம் ஸித்தித்து அதற்கும் அப்பாலாய் நிற்பானாதலால், "அப்பாலுக் கப்பாலுக் கப்பாலாய் நிற்குமவன்" பேதபாலனைகளாலே மயக்கமுறான். அவனுக்கு "அமாவாஸை பூரணையாகும்"—"உயிருடம்பு" என்கிற இரண்டும் அவனுக்கு "சமனும்."—அதாவது, ஒன்றே. ஏனெனில், அவன் அத்வைத ஞான சித்தியில் எதையும் நிர்ப்பேதமாய் நிர்மலமாய் சாக்ஷாத்கரித்து நிற்பான். இப்படிப்பட்ட மஹான்தான் அண்டபிண்ட சமத்துவத்தை யறிந்தவனாவான். இந்த அகிலாண்ட கோடி யெல்லாம் அவனுள் அடக்கமாம். அவன் தானே வாமனரூபியாய் ஓடுங்குவான்: ஓடுங்கின அவனே உலகளந்த பெருமானாய் (த்ரிவிக்ரமனாய்) விரிவான். உபாதிபலம் எவ்வளவுதான் வாய்ந்தவனானாலும் சரி, மஹாபலி சக்கரவர்த்தியைப் போல், அவனிடம் தன் பலம் குன்றி யொடுங்குவான்.

† சென்ற சஞ்சிகையில் 'விகலாக்ஷ' என்று திருந்த அச்சுப்பிழையால் விளைந்த அர்த்தமென்று கொள்க.

OFFICE 18 MAY 1911 BOOKS MADRAS

கர்வம் தலைக்கேறினால் தலை கழுத்தில் நிற்காது. அந்த கர்வத்தை, விக்ரமனான விசுவரூபி மஹாபலியின் தலையில் தன் காலடி வைத் தழுத்தி அவனைப் பாதாளத்துக் கனுப்பியது போல், நாபி ஸ்தானத்துக்குக் கீழேயுள்ள பாம்புகள் (நெளியும் ஸ்வபாவமுள்ள சலந சக்திகள்) வசிக்கும் பாதாள லோகத்திற் கொண்டுபோய் இருத்தி விட்டால், விரோதி கிருது"ன்வி விஷமம் அடங்கிப்போம். அகங்கார மமகாராதி சர்வங்கள் தலைக்கேறினால் அவை மஹாபலி சக்ரவர்த்தியாய் அண்டபிண்ட மிரண்டையும் ஒன்றாய் வளைத்துத் தன் வசப்படுத்தி யாளப்பார்க்கும். தலைக்கேறின கர்வர்த்தைப்போல் "விரோதிகிருது"—ஆத்ம க்ஷேமத்துக்கு விரோதம் செய்வது—வேறொன்றில்லை. விளைவில்லா விட்டால் நான், எனது என்கிற விருத்திகளுக் கிடமின்றிப் போம். மழையில்லா விட்டால் விளைவின்றிப்போம். ஆகையால் இவ்விரண்டும் அவசியமாம். மழையும் விளைவும் உண்டானால் "தக்க சிறப்பும் தனமும்" அவற்றை யடுத்தன்பற்றித் தானேவரும். இந்த நான்கு முண்டானால் "கர்வம் தலைக்கேறி விடும்."—கர்வம் தலைக்கேறினால்; "இக்குண்டாம்" என்பதற்குக் கேட்க வேண்டியதில்லை. ஆகவே,

"மிக்கவிரோதி விளைவுண்டு மாரியுண்டு
தக்கசிறப்புந் தனமுண்டு, இக்குண்டு;"

என்பது வாச்சியார்த்தம் போல் தத்துவார்த்தமும் பொருத்தமுறப்பொருந்தி விளங்குகிறது என்பது ஸ்பஷ்டமாகிற தல்லவா? இப்படியே லக்ஷியார்த்தமும் பொருந்தும்.

ஐதிகமாய்ப் பார்க்கில் அப்பொழுதும் உண்மை பொருந்தும். உப்புக் குறைந்தால் உணக்கை கெடும்: உணக்கை கெட்டால் உப்புக் குறையும். "திருத்தி குறைந்தால் தவசு கெடும், பருத்தி குறைந்தால் பலிஷ—கெடும்" என்பது பழமொழி. கர்வம் தலைக்கேறினால் உணக்கையும் பலிஷ—ம் உலகத்திலே குறையுமென்பதற்குக் கேட்பானேன்? கர்விக்குப் "பேமானி" யென்கிற பட்டம் வந்தது என்னத்தினால்? உணக்கை கெட்ட தன்மையினாலல்லவா? அப்படியே பருத்திச்கும் பலிஷ—க்கும் வஸ்திர மூலமாய் சம்பந்தமுண்டு. ஆமணக்கு (நிலக் கடலை, வேர்க்கடலை) தாமஸ புத்தியையுண்டுபண்ணிப் பித்தம் தலைக்கேறச் செய்யுமாதலால், கர்வம் தலைக்கேறுவதற்கு உபகாணமாயிருந்து உதவ மிகுதியும் வேண்டியதேயாம். இப்படியாக இந்த வருஷபலனைக் காலபுருஷனுடைய நிலைபறிந்து பஞ்சாங்கத்திற் சொல்லிய பலனும், பஞ்சாக்ஷரத்தாற் சொல்லிய தத்துவமும், ஒன்றாப் பொருந்துவதைக் காட்டினோம். இனி இந்தக் காலபுருஷனை 60-நாமங்களால் குறிப்பானேனென்று சற்று விசாரிப்போம்.

இந்தக் கலியுக தர்மத்தில் மனுஷனுக்குப் பூரண ஆயுஸ் நூறு வருஷந்தான். அதற்கு மேலில்லை. இந்த நூறு வயதை "அங்ககணித" முறைப்படி பத்துக் கூறுகப் போட்டால் பத்துப் பத்து ஆகிறது. கால சக்ரமாகிய வருஷத்துக்கு ஆறுருதுக்கள் இருப்பதுபோல், இகபோக சுகத்துக்குரிய ருதுகாலம் ஆறு பத்து அல்லது 60-வருஷந்தான். ஆகையால் தான் "சஷ்டிபூர்த்தி-சாந்தி" என்கிற லம்ஸ்காரம் ஏற்பட்டது. மனிதனுக்கு 60-வயதில் தேஹத்தைப்பற்றிய விரக தாபங்கள் சாந்தியாகின்றன. ஆயிரம் தரம் பூரணசந்திரனைத் தரிசித்தால் (85-வயசுக்குமேல்) மரணதாபங்கள் சாந்தியாகிறது; (சூக்ஷ்ம சரீரம் சாந்தியாகிறது). நூறு வயதில் மனிதன் பூரணனாகிறான். அதாவது தன் ஆத்ம தத்துவத்தை யுணர்ந்து சுபாவத்தால் அதை யடைகிறான்.

இகலோகசாதன காலமான 60-வருஷங்களையும் 60-ஸம்வத்ஸரங்களாகப் பேரிட்டார்கள்,

இவற்றிற்குப் பிரபவா முதல் அக்ஷய வரையில் பேர் விளங்குகிறது.

பூரணத்துவ மடைந்த யோகி ஒரு நாளைக்கு அஜபா மந்திரமாக, ஹம்ஸ யோகத்தால் 21,600. உசுவாஸ நிசுவாஸங்கள் உள்ளவனாயிருக்கிறான். அண்டபிண்ட சமத்துவ முறைப்படி பிண்டத்துக்கான இந்த அங்ககணிதமே அண்டத்துக்குமொக்கும். இதில் "அங்கம்" என்பது ரேசக பூரக கும்பகத் திரயங்களோடு கூடிய உசுவாஸ நிசுவாஸ ரூபமான பிராணாயாமம் ஒன்றுக்கு அறிகுறியாக நிற்கும். தூணி தம் என்பது இவற்றின் மொத்தத் தொகையான 21,600-க்குப் போராய் நிற்கும். 320-முந்திரி (அங்கம்) சேர்ந்தால் ஒன்று என்கிற கணிதம் (க்ணக்கு) ஆவதுபோல், 21,600 (பிராணாயாம) வாசி (அங்கம்) சேர்ந்தால் ஒரு பூரண கும்பம் என்கிற (கும்பமுனி) வசம் ஆகிறது. கும்பமுனிக்கு சிவசம்பந்தவும்முண்டாதலால், 21,600-ம் ஒன்றாகச் சேர்ந்த அவருடைய "வாசி" யொன்றே "சிவா" என்கிற சிவசக்தி (பிராணசக்தி) யாகிறது.

"மூவாறுமாகி நின்றாள் வித்யையொடவித்யையாம் கலைகளென்ன காம்யமென்ன!" என்னும் அந்த சிவசக்தி தானே "மூவாறுமாகின்றாள்" ஆகிறாள். "21,600" என்கிற கணித குணசீலையான சிவசக்தியை (சமஷ்டிப்பிராண சக்தியை) மூன்று தரம் ஆறால் வகுத்தால் அவளுடைய சக்தி சரீரத் திரயங்களின் சங்கியைகள் வரும்: $\frac{21600}{6}=3,600$; $\frac{3600}{6}=600$; $\frac{600}{6}=100$.

வாசி அங்கமாகிய (the Unit of Pranic Energy) ஒன்றைக், காலத்தில் ஏற்றி அதை வருஷமாகக் கொண்டால், 100 என்கிற எண் (கணிதம்) மனுஷ ஜன்மத்தின் பூரணாயுஸைக் குறிக்கும். 600 என்கிற எண் ஜீவனின் அவித்யா ஸ்திதியைக் குறிக்கும். 3,600 என்கிற எண் வித்யா நிலையைக் குறிக்கும். 21,600 பூர்ணத்துவமாகிய ஆத்மத்துவத்தைக் குறிக்கும்.

அவித்யையின் பூரண வயசான (கணிதமான) 600-ல் பத்திலொன்று: 60. இந்த அறுபதும் காமியார்த்தமானதால், ஸம்வத்ஸரங்களாக நாமரூபந்தரித்து, ஜீவன்கள் காம்யபோக போக்கியங்களை யனுபவிப்பதற்குச் சாதனமாயிருந்து வருகின்றன. அந்த "காமியகலை"யின் அறுபதில் ஒரு அம்சம் இந்த "விரோதிகிருது" என்னும் வருஷமும் இதுபோன்ற மற்ற வருஷங்களுமாம்.

காமியகர்மம் நிஷ்காமியமாகும் பொழுது பந்தஹேதுவான சர்மங்கள் மோக்ஷஹேதுவாகின்றன. இந்த அர்த்தத்திலேயே சாதாரண வருஷத்துக்கு சென்ற சஞ்சிகையில் காலவர்தன ரூபமான வியாக்கியானஞ் செய்தோம். (ஜகமே கற்பனாமாத்திர மாதலால்) மனதின் சங்கல்ப விகல்ப விசேஷங்களுக்குத் தக்கபடி ஜீவன்களின் பூர்வவாசனா பலத்தால் (கர்ம சேஷம்) பலனைக் கொடுக்க, தனு கரண புவன போகங்கள் வந்து வாய்க்கின்றன. கர்மசேஷங்கள் அனுபவித்தழிந்த பின் "இருவினை நேரொப்பு நேருங்காலத்தில், திருவருள் விசேஷத்தால், குரு தரிசனமும் ஞான உபதேசமும் கிடைக்கிறது. தீக்ஷைகளில் தேவி உபதேசார்கனான அப்பியாசி சித்தவிருத்தி நிரோதனத்தால் மனதின் சங்கல்ப-விகல்ப ரூப விருத்திகளையெல்லாம் அடக்கியாளக் கற்றால், கற்பனா மாத்திரமான ஜகம் நிர்விகல்ப-சித்தனாகிய அவனை எவ்விதத்திலும் பாதிக்கிறதில்லை. இந்த உண்மையை ஸ்வானுபவசித்தராயுணரத்தான் தானம், தவம், யோகம், ஞானம், பக்தியெல்லாம் வேண்டியிருக்கிறது. இந்த அனுபவம் லித்தித்துவிட்டால், எல்லாம் தனக்குத் தானேவரும். அந்த மஹாபுருஷனுக்கு சாஸ்திரம், வேதம், புராணம், இதிஹாசம் முதலிய நூல்களெல்லாம் பயனற்றவையாகப் போகின்றன. அவன் அதிவர்ணாசிரமி யென்றும், அவ

நாதன், ஆத்மன், ஆருடனென்றும், நிர்வாண கதி யென்றும் பலவாறாகப் புகழ்ந்து துதிக்கப் பட்டிருந்தாலும், உண்மையில் அவன் நாமரூபங் கடந்தவனாதலால் அவனுக்குப் பேர், ஊர், ஜாதி, வர்ணம், காலம், தேசம் என்கிற வியவஸ்தையில்லை—அவன் "எஸ்லாமாய், அல்லவுமாய்" இருந்து, தனது பூர்ணலீலை குலையாது உலகுய்ய எல்லா வேஷமும் போடுவன். எல்லாக் கர்மங்களையு மியற்றுவன். ஓட்டியும் ஓட்டாதிருந்துலகையெலாம் தன் சங்கல்ப மாத்திரத்தால் ஆட்டிவைப்பான். இவன்தான் "விரோதிகிருது"வை வென்றவன். "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதில் எண்ணே கண்ணாவது எப்படி யென்பதை இதில் சூக்ஷ்மமாய்ச் சுட்டிக்காட்டினோம். எழுத்துக்கு உதாரணம் மற்றோர்பக்கத்தில் வரும் "லீலாதாக்ஷரவர்ண மாலிகா ஸ்தோத்திரத்தில்" கண்டு கொள்க.

ON THE STUDY OF NUMBER AND EVOLUTION OF FORM

Or

Philosophy based on Mathematics and Physics.

"எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்."

"Number is the Law of the Universe"

"Evolution is the Law of Life"

(1) "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகு"மால்
மண்ணும் விண்ணும் எண்ணில் ஒன்றே!
மண்ணே விண்ணும் விண்ணே மண்ணுமாய்
எண்ணிலொன்றாய் இலங்குஞ்சோதி.

(2) இலங்குஞ்சோதி ஏகமாய் நின்றபின்
துலங்குர்தோற்றம் பலவாய் விரியும்!
மலர்குமனத்தாற் காணுருண்மையை
மலர்குவிமாந்தர்கள் எண்ணிலெழுத்திற் கண்
[ணைக்காணார்.

(3) எண்ணிலெழுத்தில் கண்ணைக்காண்பார்
எண்ணில் விகற்ப மேதுங் காணார்:
எண்ணிலெண்ணாய்க் கற்பனை யற்றபின்
எண்ணிலெல்லை யொன்றாய்க் காண்பரே!

(4) எல்லாமொன்றாய்க் காண்பவர் கண்ணில்
எல்லாமொன்றாய் விளங்குஞ்சோதி!
எல்லாமொன்றும் ஏகாம்பரத்திலே
எல்லாமொன்று மெண்ணே கண்ணும்.

(5) கண்ணுமெண்ணே ஏகமிரண்டென்னாமல்,
கண்ணுமெழுத்தும் அகத்தே யொன்றும்,
கண்ணுமெழுத்தில், "அ-உ-ம்-" உண்டு
கண்ணுமெழுத்திது மேகாக்ஷரமே.

(6) ஏகாக்ஷரமே மோனாக்ஷரமுமாம்
மோனாக்ஷரமே நாதபிந்துவுமாம்
எழுதாக்ஷரமது உயிர் மெய் யெழுத்தாம்
பழுதறப் பார்க்கில் உயிருடலொன்றும்.

(7) உயிருடலொன்றுமெழுத்தே கமலமாம்
உயிருடலொன்று மெழுத்தே ஹம்ஸமாம்
உயிருடலொன்றுமெழுத்தே துரியமாம்
உயிருடலொன்றுமெழுத்தே கண்ணும் விண்ணு
[மாம்.

What Shall we talk About?

A Series of Object Lessons—Dog.

சீதா-மனோன்மணி.

நாய்.

சீதா:—மனோன்மணி! நாய் வர்க்கத்தைச் சேர்ந்த மிருகங்கள் எவை, எவை என்று நம் உபாத்தினி அம்மணி அன்று சொன்னது நியாபகமிருக்கிறதா?

மனோன்மணி:—ஆஹா! இருக்கிறது அவைகள், நாய், ஓனாய், நரி, குள்ளநரி என்று அன்று சொல்லித் தரப்பட்டது.

சீதா:—இன்று நாயைப் பற்றி ஆராய்ச்சி செய்ய விருப்புகிறேன்; நின் அபிப்பிராயமென்ன?

மனோன்மணி:—எனக்கு அது மிக்க விருப்புள்ளதே. நானும் அதற்குத் தயாராயிருக்கிறேன்.

சீதா:—அப்படியாயின் உனக்குத் தெரிந்திருக்கும் ஜாதி நாய்களுள் ஏதாவதொன்றைப் பற்றிச் சொல் பார்ப்போம்.

மனோன்மணி:—"வேட்டைக்காரன்" என்று கூறப்பட்டுள்ள ஓர்வித காட்டுநாயைப்பற்றி முதலில் கூறுகிறேன், கேள்.

சீதா:—வேட்டைக்காரன் என்ற அதன் பெயரே, நீ சொல்லப்போகும் விஷயம் அதிக ஸ்வாரஸ்யமாய் இருக்குமென்று காட்டுகிறதே! நீ சொல்லப் போகும் விஷயத்தைப்பற்றிக் கேட்க மிக்க ஆவலுள்ளவளாயிருக்கிறேன்.

மனோன்மணி:—நான் கூறிய நாய், நேபாளம், பர்மா முதலிய தேசங்களின் காடுகளில் மந்தை மந்தையாய்த் திரியும் ஓர் ஜாதியைச் சேர்ந்தது. இம்மந்தை நாய்கள், புலி, சிறுத்தை முதலிய துஷ்ட ஜந்துக்களையும் வேட்டையாடி நாசப்படுத்துவதாகக் கூறப்பட்டுளது.

சீதா:—அப்படியா! அது அவ்வாறு எங்ஙனம் செய்கிறதென்பதைச் சற்று விரித்துரைப்பாயாக.

மனோன்மணி:—இச் சாதி நாய் இயற்கையிலேயே மிக்க ஆக்ரோஷமும், காம்பீரமுமுள்ளது. ஓர் பிராணி கீழே விழுந்து விட்டால் அதைத் தொடுகிறதில்லையாம். ஓர் மிருகம் அல்லது மனிதன் ஓடிக்கொண்டிருக்கையிலேயே கடித்துப் பிடிங்கிக்கொள்ள வழக்கப்படுவனவை யென்றும், கீழே விழுந்து விட்டால் அது ஒன்றும் செய்வதில்லை யென்ற அதன் சுபாவத்தை நன்கறிந்துள்ள மனிதர்களும் மிருகங்களும், அவைகளைக் கண்டதும் பூமியில் படுத்துக் கைகால்களைச் செத்த பிணங்களைப்போல் வைத்துக்கொண்டு விடுகிறார்கள் என்றும், அவர்கள் அப்படிச்செய்யத் தவறிவிடும் பக்ஷத்தில், உயிருடன் பிடுங்கித்தின்னப்படுவது நிச்சயம் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சீதா:—அப்படியா! இவ்விஷயம் ஆச்சரியகரமானதே! சிங்கம் மிருகேந்திரனென்று கேட்டிருக்கிறோம். இந்நாய் அம்மிருகேந்திரனுக்கும் அரசனாகும்போல் காண்கிறதே! தவிர அதைக் கண்டதும் பிராணிகள் பூமியில் படுத்துக் கொள்வது மேலோரைக் கண்டவுடன் சாஷ்டாங்க நமஸ்காரம் புரிவதுபோலும்! இது நிற்க, வேறு ஜாதி நாய்களைப்பற்றியும் சற்று விசாரிப்போம். வேட்டைக்காரன் என்ற காட்டுநாயைப்பற்றிக் கிஞ்சித்துத் தெரிந்து கொண்டோம். ஆனால் மனிதர்களுக்குச் சிறு வண்டிகளை இழுத்தும், பனியில் புதைந்து போகும் பிரயாணிகளைக் கண்டுபிடித்துக் காப்பாற்றியும், உதவிபுரிந்து வரும் ஓர் ஜாதி நாய் இருப்பதாய்க் கூறப்பட்டுளதே! அதைப்பற்றிச் சொல் பார்ப்போம்.

மனோன்மணி:—சொல்லுகிறேன் கேட்பாயாக! நீ சொன்ன நாயின் பெயர் "நியூபவுண்ட்லண்ட் நாய்." அது காணப்படும் தேயத்தினின்றும் அப்பேரடையப் பெற்றுள்ளது. இது போன்ற சுபாவமுள்ள நாய், "லாப்ரடார்" என்னும் தீபகல்பத்திலும் காணப்படுகின்றனவாம். ஆனால் இவை நியூபவுண்ட்லண்டு நாயைவிடப் பெரிதும் பராக்கிரம முள்ளவைகளுமாயிருக்கின்றனவாம்.

சீதா:—நியூபவுண்டுலண்ட நாய் மனிதர்களுக்கு எவ்வாறு உபயோகமானதென்று சற்று விரித்துரைப்பாயாக.

மனோன்மணி:—உரைக்கக்கேள்: அது தனது எஜமானன் வீட்டைக் காப்பதுடன், ஜலத்தின்மீது போக மிக்கப் பிரியமுள்ளதா யிருத்தலினின்று, ஜலத்தில் விழுந்து முழுகி இறந்து போகவிருந்த அனேக மனிதர்களைக் கரையேற்றிக் காப்பாற்றிஇருப்பது புத்தகங்களில் ஏராளமாய்க் கதை கதையாய் கூறப்பட்டுளது. தவிர, யஜமானன் காட்டும் வஸ்துவைக் கொண்டுவந்து

அவனிடம் கொடுக்கும்படியான அறிவு வாய்ந்த பிராணி இது.

சீதா:—சரி! இதற்கடுத்த வேட்டையாடி மனிதர்க்கு உதவி புரியும் நாயைப்பற்றிச் சற்றுக் கூறு பார்ப்போம்.

மனோன்மணி:—வேட்டை நாய்களில் அநேகவித மிருக்கின்றன. இவைகள் மோப்பத்தினால் மனிதன் அல்லது பிராணிகளைத் தரையினின்றும் தவறாமல் கண்டுபிடிக்கக் கூடியவைகள். இவ்வித நாய்களிருக்கும் தேசம் இங்கிலாந்து, ஆப்பிரிக்கா, கியூபா என்ற தீவு. இத்தீவிலுள்ள நாயை, ஸ்பானியர்கள் தாங்கள் அத்தீவைப்பிடிக்க முயலுகையில், அதன் கதேசிகளை வேட்டையாடிக் கொல்ல உபயோகித்து வந்தார்கள். தவிர ஓர் காலத்தில் இச்சாதி நாய் ஒன்று, தன் எஜமானனை எதிர்த்த சிறுத்தை ஒன்றைக் கொன்று உயிரைக் காப்பாற்றினது கூறப்பட்டிருக்கிறது. அது சங்கிலி போட்டுக் கட்டப்பட்டிருந்த போதிலும், தன் யஜமானன் வெளியே போவதையும், பாதையில் அவனுக்கு நேரக்கூடிய அபாயத்தையும் உணர்ந்து சங்கிலியை அறுத்தோடிச் சென்று யமன் வாயினின்றும் அவனைத் தப்புவித்தாம்.

சீதா:—மோப்பத்தினால் பிராணிகளைக்கண்டு பிடித்து வேட்டையாடும் நாய் இனங்களுள், மேற்கூறிய இனத்தைவிட வேறு இனங்களிருந்தால் கூறு பார்ப்போம்.

மனோன்மணி:—அவைகள் நரி வேட்டையாடும் நாய், முயல் வேட்டையாடும் நாய், குறிகாட்டும் நாய் என மூன்று விதமானவைகள். இவைகளுள் முதலிரண்டும் மோப்பத்தினால் நரி, முயல்களிருக்குமிடங்களைக் கண்டு பிடித்து யஜமானனுடன், மிக்க பிரியத்துடன் வேட்டையாடும். ஆனால் குறிகாட்டும் இனமோ அவ்வாறு செய்யாமல், ஓர் முயலையாவது, பக்ஷியையாவது மோப்பத்தினால் கண்டு பிடித்ததும், தனது வாலை அவைகளிருக்குமிடம் நீட்டிக் கொண்டு அசைவற்று நிற்கும். யஜமானன் வெடி தீர்த்து, தனது துப்பாக்கியைத் திரும்பவும் கட்டித்து வருமளவும் அது அவ்வாறு நின்று பிறகு வேறோர் பிராணியைத் தேடிச் செல்லும்.

சீதா:— இப்பொழுது நாம் ஆராய்ச்சி செய்யாத நாய் இனங்கள் இன்னும் எவ்வளவிருக்கின்றன?

மனோன்மணி:—வீடு காக்கும் நாய்களுள் இரு ஜாதியும், மந்தை நாயும், எலி முதலிய சிறு பிராணிகளை வேட்டையாடும் நாய் இனமும், அதிவேகமாய் ஓடி வேட்டையாடிப் பிராணிகளைப் பிடிக்கும் கொடிநாய் என்ற ஜாதி நாயும் நாம் இன்னம் ஆராய்ச்சி செய்யாதவைகள்.

சீதா:—வீடுகாக்கும் ஜாதியில் இருஜாதியுண்டு, என்றனையே. அவைகளின் பேதாபேத மென்ன?

மனோன்மணி:—ஒன்றுமிக்க பலமும் காத்திரமுமான சரீரத்துடன் கூடியதும், உரக்கக் குலைத்துத் திருடர்கள் முதலியவர்களைத் துரத்தி விடத்தக்கதும், யஜமானனிடத்தில் மிக்க அன்பு பொருந்தினது மான ஆங்கில பாஷையில் 'மாஸ்டிவ்' என்ற பெயருடையது மற்றொன்றோ, தைரியத்திலும், ஆக்குரோஷத்திலும் பெயர் பெற்றிருந்த போதிலும் நன்றியறிவுள்ளதல்ல. தன் யஜமானனைக்கூடக் கோபமூட்டப்பட்டால் அது எதிர்த்து கடித்துவிடும் இச்சாதி நாயைத்தான், எருதுகளைக் கடிக்கவிட்டு வேடிக்கைபார்க்க முற்காலத்தில் வைத்து வளர்த்து வந்தார்களாம். எருதின்மேல் ஏவப்பட்டால் அது தாவிப்பாய்ந்து, எருதின் மூக்கைக் கடித்துக் கொண்டு, அது எவ்வளவுதான்

ஆட்டித் தள்ளிவிடப் பார்க்கினும் விடாமல் தொங்குமென்று ஒருவர் கூறியிருக்கிறார்.

சீதா:—நல்லது! பாக்கி இனங்களைப் பற்றியும் சற்றுக் கூறு. தெரிந்து கொள்கிறேன்.

மனோன்மணி:—இனிப்பாக்கியிருப்பது மந்தைநாய் ஒன்று, சிறு பிராணிகளை வேட்டையாடுவன ஒன்று, கொடி நாய் ஒன்று. இவற்றுள் மந்தை நாய், மயிரடர்ந்து நீண்ட, காதுகளும் முகமுமுள்ள இனம். அது இடையனுக்கு மிக்க உபயோகமுள்ளது. அதற்குத்தன் யஜமானன் ஆடுகளை நன்றாய்த்தெரியும். அது அவ்வாடுகளை வழி தப்பிப்போக விடாததுடன் ஏதாவதொரு ஆடு மந்தையை விட்டுப் பிரிந்து போக முயன்றால் அப்படிச் செய்யவிடாது. நரி முதலியவைகள் ஆடுகளை அடித்துக்கொண்டுபோய் விடாமல் காக்கும். தனக்குச் சேர்ந்த மந்தை ஆடு வேறு மந்தையில் கலந்து விட்டால் அதற்குத் தன்மந்தையைப் பிரித்துக் கொண்டுவர சாமர்த்தியம் உண்டு. தவிர யஜமானனது ஸகல சம்ஞைகளையும் அறிந்து கொண்டு அவன் குறிக்கும் இடங்களுக்கு மந்தையை ஓட்டிச் செல்லும்.

சீதா:—பேஷ். வெகு நன்றாயிருக்கிறது இவ்விஷயம். கொடி நாயைப்பற்றி நாம் என்ன தெரிந்துகொள்ளலாமோ தெரிவி.

மனோன்மணி:—கொடி நாய் எல்லா நாய்களைக்காட்டிலும் வேகமாய் ஓடிப்பிராணிகளை வேட்டையாடிப் பிடிக்கும். ஆனால் இதற்கு மோப்பத்தினால் பிராணிகளைக் கண்டு பிடித்து வேட்டையாடும் சக்தி மிகக்குறைவு. இது வேட்டையாடுவதெல்லாம் கண்களின் உதவியைக்கொண்டே. அது முயலைத் துரத்துகையில், முயல் திரும்பித் திரும்பி வளைந்து வளைந்து ஓடி அதனின்றும் தப்பிக்கப் பார்க்குமாம். நாயின் பருத்த உடலினால் அதுவும் அவ்வாறு செய்ய இயலாமல், நேராகப்போய்த் திரும்ப நேருகிறது. தவிர முயல் தன் இருப்பிடத்தினிடம் வந்ததும் சட்டென நிற்க, நாய் அது ஓடுகிறதென்று நினைத்து அதைப்பாய்ந்து பிடிக்க பத்தனிக்கையில் வெகு தூரம் முன்னுக்குப் பாய்ந்துவிட முயலும் தன் புதரில் புகுந்து கொள்ளும்.

சீதா.—சரி, எலி முதலிய சிறு பிராணிகளை வேட்டையாடும் நாயைப் பற்றிச் சற்று ஸம்பாஷித்து இன்று நிறுத்துவோம். நாளைக்கு நாய் இனத்தில் சேர்ந்த மற்ற மிருகங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முயலவேண்டுமே ஒழிய இன்று நேரமாய் விட்டதால் முடியாது.

மனோன்மணி:—சரி அவ்வாறே செய்வோம். பாக்கியிருக்கும் இச்சாதி நாயைப்பற்றிச் சொல்கிறேன் கேட்பாயாக; எலி முதலான பிராணிகளை வேட்டையாடும்; இது அதிகமாய் வளருவதில்லை. இச்சாதியில் அநேகம் பிரிவுகள் உண்டு. ஆனால் இங்கிலாந்து ஸ்காட்லாந்து தேயத்தைச் சார்ந்த இனங்கள் தாம் மிக்க பேர் பெற்றவைகள். இந்நாய்கள் முக்கியமாய் எலி முதலான பிராணிகளை நாசமாக்க உபயோகமாகின்றன. இவைகள் தைரியமாய் பூமியைப்பறித்து, வளைகளிற் புகுந்து சென்று பிராணிகளைக்கொண்டுவரும். தவிர, இவ்வினம் தங்கள் யஜமானனிடத்தில் பக்தியும் விசுவாசமுமுள்ளதுடன் அனேக வேடிக்கைகள் செய்ய எளிதில் பழகும். எம். என். கணேசய்யர்

கமலாம்பாள் சரித்திரம்.

ஒவ்வொருவரும் வைத்து வாசிக்க வேண்டிய தத்துவார்த்தமான ரசம் பொழியும் கதை. கமலாம்பாள் சரித்திரம் 3-வது பதிப்பு: 328 பக்கம் தயாராய்விட்டது. விலை ரூபா 1-4-0 தபாற் செலவு வேறு. V. P. P. ரூபா 1-7-0.

பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டில் எழுத வேண்டும்.

100-க்குக் குறையாமல் வாங்குகிற வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் மைலாப்பூர் லலிதாலயத்திலிருக்கும் அ. ப. ஏஜென்ஸி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளவும்.

(Cloth bound) களர்த்பைண்ட் செய்த காபி வேண்டுமானால் பைண்டிங்சார்ஜு அணா 6-ம் விலை ரூ. 1-4-0ம் சேர்த்து முன்பணமனுப்பினால் உத்தரவின்பேரில் பைண்டுசெய்து அனுப்பலாகும். வி. பி. யில் அனுப்ப படமாட்டாது.

Study of Temple Traditions—
["Angam-Poombavai"]

Worship of Sri Lalitambal* in Letter and in Spirit.

[Gleaned from the Pervading Essence of the din and noise of the Religious Crowd Gathered at Mylapore on All Saint's Day. †]

லலிதாக்ஷர வர்ணமாலிகா ஸ்தோத்திரம்.

திருமயிலையில் அறுபத்துமூவர் உற்சவத்தன்று கூடிய திருக்கூட்டத்தார் கோஷமாகிய சப்தத்தின் த்வனியின் அந்தர்க்கத ஜோதியிலிருந்துண்டான

"அங்கம்பூம்பாவை"யெனும்

ஆகாசமலர்க்கொத்து.

—:-:—

ஓம் ஸ்ரீலலிதாம்பாயைநம:

ஓம் சிவயவசிஅம்ப'தசிமசிகம: ஓம்ஸ்ரீ:

"சிவாயவென்னுமக்ஷரம் சிவனிருக்குமக்ஷரம்
உபாயமென்று நம்புவோர்க்கு உண்மையான அக்ஷரம்
நபாடமிட்டவாசலே நடந்துபோகும்வாயுவை
உபாயமிட்டழைக்குமே சிவாயவைந்தெழுத்துமே."
—வாகீசர்.

சிவநேசச்செல்வர்கள் திருக்கோஷத்வனி. { "ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ ஸாம்பசிவா."

ஸ்ரீஅக்ஷர நாமாவளி.

ஓ (1) "ஓங்காரப்பிரிய உரகவிபூஷண
ஹ்ரீங்காராதிமஹேசசிவா."(கோஷம்:ஸாம்ப)

சி (2) "சாந்தஸ்வரூபா 'ஸ:' காரோத்தம
வாசேஸ்வரவாதேசிவா."(கோஷம்)[ஸாம்ப-]

வ (3) "சீர்வேதாச்சித மௌநவிபூஷண
சந்திரார்க்காக்நி த்ரிநேத்ரசிவா."(கோஷம்)
[ஸாம்ப-]

ய (4) "லங்காதீச்வர காரணசேவித
லாவண்யாம்ருத லளிதசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

வ (5) "லாளிதபக்த ஜநேசநிஜேச்வர
களிநடநப்பிரிய காமசிவா."(கோஷம்)[ஸாம்ப-]

சி (6) "தத்துவமஸீத்யாதி வாக்கியஸ்வரூபக
நித்தியாநந்த மஹேசசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

அ (7) "அத்புதவிக்ரஹ அமாராதீசுவர
அகணிதகணகுண அம்ருதசிவா" (கோஷம்)
[ஸாம்ப-]

ம் (8) "அம்பரவாஸ திகம்பரநாயக
தும்புருநாரத சேவ்யசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

ப! (9) "பந்தவிநாசக ப்ருஹதீசாமர
ஸ்கந்தாதிப்ரிய கநகசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

["மும்மூன்று மொன்றாகி யொன்றே யொன்
பதுவாகுமுன்னருமை நிருத்தமென்ன!"]

திருக்கூட்டத்தார்கோஷப்போலேவநி. { "ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ ஸாம்பசிவா".

க (10) "யதிஜநஹ்ருதயநிவாஸதயாஸ்வர
விதிவிஹ்ருண்யா சுரேசசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

சி (11) "ஜசவரியாச்ரய சிந்மயசித்கண
அச்சுதாநந்த மஹேசசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

["ஒன்றுபத்தா யுற்பவித்த உன்நாதர்கால்தூக்கி
யாடின தோர் ஆட்டமென்ன!"]

ம (12) "நாநாமணிகண பூஷணநிர்க்குண
நடநஜநப்பிரிய நாட்யசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

["மண்டலங்கள் மூன்றுகுழ மாதேவர் கூத்தடங்க
அம்மேயுன் மாயை செய்த ஜாலமென்ன!"]

சி (13) "மந்மதநாசக மதுபானப்ரிய
மந்தரபர்வத வாஸசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

நம: (14) "ஆஹாரப்ரிய ஆதிகிரீசுவர
போகாதிப்ரிய பூர்ணசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

* 'Lalitambal' is the poorna-prajnâteetha-nirmala-Nija Sakti (the Kosmic Energy of Consciousness Absolute) of which all other saktis are but integral parts.

† Which occurred at Mylapore, Madras, this year on Sunday the 12th March 1911.

["காலே சிவபுரமாய் நல்லவஸ்தைக் கிலக்ஷியமாய்
நாதருடன்கொண்டோடிநான்மறையிலொளித்ததென்ன!"]

ஓம் (15) "கமலாக்ஷார்ச்சித கைலாஸப்ரிய
கருணாஸாகர காந்திசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

ஸ்ரீ ம (16) "க்ஷட்கருலம்ருகடங்காத்யாயுத
விக்ரமரூப விசுவேசசிவா." (கோஷம்)
[ஸாம்ப-]

ஓம்ஸ்ரீலலிதாம்பாயைநம:ஓம்ஸ்ரீ:

—:-:—

திருவருட்பா.

அழுதபிள்ளைதான் பால் குடிக்குமால்
அழுமியரே கூடிப் பாலுக் கழுவோம்:
விழுமியரே வாரும் வீணாகாதே நாம்
குழுமியே தேவியைப் பாடிக் குதிப்போம்.

"ஞானசம்பந்தா மோனஇன்பந்தா".

குழுமியர்கூடிப் பழமையாம் முறையால் பாலுக்கழுவ. { "சண்முகவேலா சம்பந்தா சரிபவளத்தின்பந்தா."

[விழுமியர்:-] [ஏழுமியர்-]

(1) "அம்பிகையே சிவஞானியரே
அம்புவியோர் மகிழும்பரிசே." [சண்முக-]

(2) "ஆரணியபரி பூரணியே
காரணியே ஐகத்காரணியே." [சண்முக-]

(3) "சங்கரியேசிவ சாம்பவியே
ஸாம்பஸதாசிவ சங்கரியே." [சண்முக-]

(4) "காரணிமனுதித நாயகியே
நாமகள்புகழ்வரி தாம்பிகையே." [சண்முக-]

(5) "ஆரணிகுணுதித குண்டலியே
வாரணிகொங்கையர் வாழ்வரசே [சண்முக-]

(6) "ரதிபதி மந்மத ரக்ஷணியே
சதிபதி சுந்தர ஸாம்பவியே." [சண்முக-]

(7) சிவகாமசுந்தர மந்திரியே
பவரோகபந்த விமோசினியே. [சண்முக-]

(8) நவவ்யூகாந்தித நாயகியே
சிவயோகாநந்த ஸ்வரூபிணியே. [சண்முக-]

(9) நாமகள்புகழ்வரி தாம்பிகையே
பூமகள்திகழ்சிவ ஸாம்பவியே. [சண்முக-]

(10) ஷண்முகசுந்தர ஸாம்பவியே
பண்முகத்திருத்துயிர் பாலிப்பையே. [சண்முக-]

[விழுமியர்] [ஏழுமியர்-]

(11) "அம்பிகையே சிவஞானியரே
அம்புவியோர் மகிழும்பரிசே." [சண்முக-]

(12) தும்புருநாரதர் பண்ணுயிரே
எம்பிரானிடைமருங் குற்றவரே. [சண்முக-]

(13) ப்ருங்கியைத்தடுமாட்டங் கொண்டவளே
ஹ்ரீங்காரத்தினி திருந்தவளே. [சண்முக-]

(14) ஐங்'காரத்துள்ளிருந் தாட்டுவையே
ஸ்ரீங்காரசுந்தர நாயகியே. [சண்முக-]

(15) க்லீங்காரத்திருந் தாடுவையே
பைங்காரச்சிற்றம் பலவடிவே. [சண்முக-]

(16) ஓங்காராக்ஷரப் பெண்மயிலே
டாலகஸஹ்ய ஸாம்பவியே. [சண்முக-]

[எல்லாரும்:-]

(17) மயிலையில் தவம்புரி மாதவியே
கயிலையில் சிவபுரத் தாள்குநவே. [சண்முக]

(18) கருணைக்கடலே கார்முகிலே
கருணைக்கழு'ரேம் கண்திறவே! [சண்முக-]

திருவிருத்தம்.

விழுமியர் மெய்விதிர்த் தாடவும்
குழுமியர்கூடிக் குணக்குன்றைப் பாடவும்,
தொழுமன்பர் கலிதீரக் கழுக்குன்றதெனை
யழுக்கறுத் தாண்டவம் மடமயிலாள்,
குழுமியர்கூட்டத் திடைநிமிர்த்திக் குறைபறித்துப்
பழமையாங் குணங்குறி பலகாட்டி,
விழுமியசம்பந்த னடிகூட்டியவளுள்ளன்பால்
முழுமோனவி நந்திட்டாள் கபாலீசுரமமர்
[கற்பகமே

—:-:-:—

"The Ancient Eternal Symbols of Mystic Union."

"பழமையாங் குணங்குறி.*"

பிரஹ்மாத்மைக்கியச் சிறப்பிலக்கணம்.

—:-:—

(திருவிருத்தங்களில் வரும் சிலவார்த்தைகளுக்கு லக்ஷியார்த்தம்)*

(1) "அன்னையே" யாமவன் ஆகியாய் நின்ற அறிவரு
[வாலே
பின்னையு மன்னையே யருட்சாந்தி பெற்றதால்.

* As given in the commentary of Vadi-kesari Azhagiya Manavala-Jiyar &c. See Siddanta Dipika Vol XI. No. 7.

(2) "புதுமணப்பெண்ணும்" பேரன்புவெள்ளம்
பொதுமணமகளிராம் பேரருளாளர்.

(3) "தோழியே"யாமவர் தூயசிந்தையினால்
குழுமியே துவம்தனைக்†கோன்வழிச்சேர்ப்பர்.

(4) "மணமகனே"யாம் மருவிலாக்கடவுள்
குணமகனாயினும் குறைவிலாச்செல்வனும்.

(5) "தூதே"யாமவன் தூய்நெறிகாட்டுவன்
வாதேசெய்திடார் வான்வழிப்பட்டோர்.

(6) "கண்ணொளியழகது" உள்ளொளிகாட்டிடும்
விண்ணொளிவேதாந்தப் பொருளிடத்தன்பினால்.

(7) "கோங்கையழகது" குறைவிலாபரீதியால்
அகங்கைநெல்லிபோல் அன்பினைக்கண்டு
மங்கையர்முயக்கென மருவியணைந்துபின்
கொங்கைகள்சோரக் கொழுநனைத்தழுவிய
குலமகளொழுக்கா யுள்ளுணர்காதல்
வெள்ளம்பெருகி விம்மிபெழுதலாம்.

(8) "நுண்ணியசிற்றிடை", யாவதும்
எண்ணியபற்றுடை பந்தங்களைதலாம்.

(9) "நடையழகாவதும்" நன்னெறிபற்றியே
யுள்ளத்தொழுகலாம்.

(10) "கூந்தலழகதும்" குணக்கடலண்ணலைக்
குனிந்தவணங்குந் தலைநெறியொழுக்காம்.

(11) "உடையழகாவது" முண்மைநெறிபற்றி
இடையறாப்பத்தியால் சிரத்தைபூண்டொழு
[கலாம்.

(12) "சொல்லழகாவது" ஸ்வயம்புவைப்போற்று
[மோர்
வில்லழகானவரகவிதானாய் வாக்கிலுதிப்பதாம்.

(13) "கைவளை"யாவதும் கங்கணந் தரிப்பதும்
மேய்வளையானையே மனமொழி மெய்களால்
பெய்வளைபோலுள்ளத் துவந்துதரித்துமே
செய்வளையிட்டானைச் செயலினாற்போற்ற
[லாம்.

(14) "இருளெ"னப்புகல்வது மருளுடைச்சிந்தையே.

(15) "தென்றல்,வாடையும் தெரிவுடை அன்றிலும்"
என்று சொல்லும் இயல்புடைத் தோற்றங்கள்
என்றுந்துன்பே இயல்பா வுடையதோர்
நன்றில்நாமரூபபேதமாம் இந்த்ரியதுகர்சுக
[மென்றேயுணர்க.

† துவம்தனை = துவம்பத வாச்சியார்த்தலக்ஷியமான அந்தராத்மாவை.

(16) "இரவும் பொழுதும் புலர்ந்திலை" யென்பது
விரவுமன்பர் வேட்கைப் பிணியினால்
இரவுபகலில்லா விடத்தைச் சேர்வான்
அல்லும்பகலும் அதுவேசிந்தையாய்
விரவிச் செல்லுமோர் தீவிரதாத்தினால்.

(17) பக்குவமானோர்க்குப்பரசுகநல்கஒப்பிலாஒருவன்
உவந்துவந்திலனால் 'ஒழியாவழியேகழியா இரவே'
எனக்கரைந்திருகுவ ருணரிதுகாமன்கணையாம்.

(18) உள்ளத்துறைப்ரஜ்ஞானமெழுந்தபின்
கள்ளமனமுற்றுங்கரைந்திலதானதால்
வெள்ளம்போலெழுவெண்ணிலாவதனின்
வேதனையுரைப்பர் உள்ளுறையன்பனைக்காணுக்
[குறையினால்.

(19) ஞானுதித்தன் உதித்தது கண்டவர்
மோனுதிக்கிய சாந்தியை நாடுவர்.

(20) "கடலின்பேரொலி" யெனவேகூறுவர்
பிரணவப்பொருளின் குணத்வனிதன்னை.

(21) தகமியிலே சாகரத்துக் கப்பாலேறிச்
சிலம்பொலியும் அம்பிகைதன் பாதங்கண்டோர்
அன்பேயின்பும்இன்பேயன்புமாயிலங்குஞ்சோதியால்

(1) கண்கள்தானு கவரப்பெறுவார்;
(2) ஹிருதயாகர்ஷணி யிழுக்கப்பெறுவர்;
(3) இச்சாசக்தியும் நிச்சயந்தானும்;
(4) உறக்கந்தானும் பதக்குமவர்முன்;
(5) ஊனுடம்புவர்ந்து வெளுக்கும் அப்பா!
(6) மாயைமயக்கென எல்லாம்வெறுப்பர்.
(7) ஆத்மபுத்தியினால் சித்தமும்பித்தமாம்.
(8) பொறிபுலனெடுங்கும் புத்திபின்காந்தியால்.
(9) மூர்ச்சையாகியே ஸமாதியெய்துவர்;
(10) சித்தம்செத்துச் சின்மயம்தானுவர்.

தத்தமறிவில் தோன்று முண்மையால்
சித்தமிறக்கக் கற்றவர்காணும் குறியிது
பத்தும் என்றுணர்ந்துள்ளே யூக்கங்கொள்வாய்!
நத்தமிலழகிய மணவாளஜீயர் மொழியிது!
சுத்தமனத்தினர் சுகம்பெறச் சொன்னான் சொன்
அத்தனருளால் சொன்னதைக்கேட்டனர் [னேன்
சத்தியிலுலே சொலலைத் தள்ளிச்சொல்லினுள்ளுறை
சுத்தப்பொருளைக் காண்பவர் சுகம்பெறுவாரே.

———:-:———

ஓம் ஸ்ரீசாவித்திரியை நம:

உபநிஷதர்த்த தீபிகை.

10. ஆருணிகோபநிஷத்.

———:-(o)-:———

(1) [உப] ஆருணி யென்பவர் பிரஜாபதியின் லோகத்திற்குப்போய் அவரை (=பிரஜாபதியை) யடைந்து கர்பங்களெல்லாவற்றையும் எதனால் தள்ளலாம் என்று கேட்டார். அவரை (ப்பார்த்து) பிரஜாபதி சொன்னதாவது:- உன் புத்திரர், சகோதரர், பந்துக்கள், முதலானவர்கள், சிகை,(=குடுமி),யஞ்ஞோபவீதம்,யாகம், சூத்திரம், (வேதமுதலிய)அத்தியயனம் இவைகளையும், பூலோகம்,புவர்லோகம்,சுவர்லோகம், மஹர்லோகம், தபோலோகம், சத்தியலோகம் இவைகளையும், அதலம், பாதாளம், விதலம், சுதலம், ரசாதலம், தலாதலம், மஹாதலம் இவைகளையும்,பிரஹ்மாண்டத்தையும் தள்ளவேண்டும்; தண்டத்தையும் (=கோலையும்) ஆச்சாதனத்தையும் (மாத்திரம்) கிரஹித்துக்கொண்டு பற்றவைகளைத் தள்ளவேண்டும்.

[குறிப்பு:—'சூத்திர' மென்பது யாகம், கிருஹ்யம் முதலிய விஷயங்களைச் சொல்லும் சாஸ்திரங்கள்; ஆபஸ்தம்பர், போதாயனர், கௌதமர் முதலியவர்களால் செய்யப்பட்டன. தண்டம் என்பது மூங்கில்கோல். இது மாடு, சர்ப்பம் முதலியவைகளை விலக்குவதற்காக உபயோகப்பட்டது. 'ஆச்சாதனம்' என்பது இரண்டு கௌபீனத்தையும், போர்வைக்காக ஓர் கந்தைத்துணியையும் குறிக்கும். இவ்வுபநிஷத் ஞானகம், பஹூ-ஏதகம், ஹம்ஸம், பரமஹம்ஸம் என்கிற நால்வகை சந்நியாசங்களுள் சகலபரித்தியாக ரூபமான பரமஹம்ஸத்தைச் சொல்லும். இச்சந்நியாசங்களும் வித்தவத் சந்நியாசம் (அதாவது ஞானோதயமான பிறகு சந்நியாசம்,) விவிதிஷா சந்நியாசம் (அதாவது ஞானமுண்டாகும் பொருட்டு செய்துகொள்ளும் சந்நியாசமென)இருவகைப்படும். இவ்விடம் சொல்லப்பட்ட கதையானது ஞானத்தைத் துதிக்கும் பொருட்டு வித்வத் சந்நியாஸத்தைச் சொல்கின்றது. இவ்விஷயங்களை நாரதபரிவிராஜகோபநிஷத்தில் பார்க்கவும் .இதன் பிறகு இச்சந்நியாசத்திற்கு அதிகாரிகளானவர்களும் அதன் வேறு விசேஷங்களும் சொல்லப்படுகின்றன.]

(2)[உப]:கிரஹஸ்தனாகவாவது,பிரஹ்மசாரியாகவாவது, வானப்பிரஸ்தனாகவாவது (இருக்குமொருவன்) லௌகிகாக்னிகளை (தன்) உதராக்னியில் ஆரோபணம் செய்து, காயத்திரியையும் தன் வாக்காகிய அக்னியில் ஆரோபணம் செய்து, யஞ்ஞோபவீதத்தை பூமியிலாவது ஜலத்திலாவது விட்டுவிட வேண்டியது.* குடுமிசகன் பிரஹ்மசாரி இவர்கள் குடும்பத்தை விடவேண்டியது: பாத்திரத்தை விடவேண்டியது: பவித்திரத்தை விடவேண்டியது: தண்டங்களையும் லௌகிகாக்னிகளையும் விட வேண்டியது - என்று சொன்னார்

[குறிப்பு.—"லௌகிகாக்னி" லோகங்களை யடையக்காரணமாகும் சிரௌத ஸ்மார்த்தாக்னிகள்; என்றால், யாகம் அக்கினி ஹோத்திரமுதலிகளைவிட வேண்டும். ஸந்நியாசம் செய்துகொள்பவன் விதிப்படி ஸந்நியாசத்துக்கு முன் செய்யவேண்டிய அதன் அங்கமாகிய இஷ்டியைச் செய்து பிறகு பரமஹம்சன் அக்னிகார்யங்களை விடவேண்டியவனாதலால், அவ்வக்னியை தன்னுடைய ஜாடராக்னியில் ஆரோபணம் செய்ய வேண்டியது. நாராயணர் இக்கிரியையை 'ஸம்யகக்னே' என்றாரம்பிக்கும் மந்திரத்தால் செய்யவேண்டுமென்றும், சங்கரானந்தர் மூன்றுதடவை ஜலத்தைப் பானம்செய்து 'யாதெஅக்னெ' யென்கிற மந்திரத்தால் செய்ய வேண்டுமென்றும் சொல்கிறார்கள். காயத்திரி

*உபவீதத்தையும் சிகையையும் பூமியில் விட வேண்டியதென்றும் பாடமுண்டு.

மந்திரத்தை தன் வாக்காகிய அக்நியில் ஆரோபணம் செய்வது, ஜபங்கள் வாக்கினிடம் உத்பத்தியாவதாலும், வாக்கு அக்னியில் உத்பத்தியாவதாலும், ஜபத்தையதன் காரணத்தில் லயப்படுத்துவதைக்குறிக்கும். ஆகவே காயத்திரியுடன் சகல ஜபங்களையும் அப்படியே லயம் செய்ய வேண்டியதென்பதைக் குறிக்கும்.

காயத்திரியை 'பூ: ஸாவித்ரீம் ப்ரவிஸாமி' முதலிய மந்திரங்களாற் செய்யவேண்டியது. உபவீதத்தை (பூநூலை) "பூ: ஸமுத்ரம் கச்சஸ்வாஹா" என்றுசொல்லி ஜலத்திலாவதுபூமியிலாவது எறிந்துவிடவேண்டியது. "குடீசகன்" என்பவன் சன்னியாசியாகியும் சிகை யஞ்ஞோபவீதங்களை எடுக்காமல் தன் பிள்ளை அல்லது பந்துக்கள் வீட்டில் சாப்பிடுவோன். சன்னியாசிகள் குடீசகன், பஹூதகன், ஹம்சன், பரமஹம்சன் என நால்விதமாக பிக்ஷோபநிஷத்திலும், துரியாதீதன், அவதூதன் எனச்சேர்த்து அறுவகையாக நாரதபரிவ்ராஜகோபநிஷத்திலும் பிரித்துச் சொல்லியிருக்கின்றது. இதன் விபரத்தை அந்தும் மனு முதலிய ஸ்மிருதிகளிலும் பார்க்கலாம். 'குடீசகன்' என்பது பஹூதகன் ஹம்சன் என்பவர்களையும் குறிக்கும். "பிரம்ஹசாரி" என்பது கிரகஸ்த வானபிரஸ்தர்களையும் குறிக்கும். 'தண்டங்களை' என்பதில் பன்மை குடீசகன் முதலியவர்கள் த்ரிதண்டத்தை தரிப்பதால், அம்முத்தண்டத்தையும் பரமஹம்ஸன் விடவேண்டுமென்பது பொருள்.]

(3) [உப] அதன் பிறகு மந்திரமில்லாதவனாய் (ஸ்நானம் ஆசமனம் முதலியவைகளை) ஆசரிக்கவேண்டும். ஊர்த்துவகமனத்தை விடவேண்டும். மூன்று சந்திகளுக்கு முன் ஸ்நானம் செய்யவேண்டும். சந்தியை (சந்தபாகால சம்பந்தமான சந்தியாவந்தனம் முதலிய கர்மங்களை) சமாதியில் ஆத்மாவினிடமே ஆசரிக்கவேண்டும். சகலவேதங்களிலும் ஆரண்யகத்தை ஆவர்த்தனம் (அத்தியயனம்) செய்யவேண்டும். உபநிஷத்தையே ஆவர்த்தனம் செய்யவேண்டும்.

[குறிப்பு:-"ஊர்த்துவகமனம்" என்றால் மேற்செல்லுதல் என்பது பதார்த்தம். அதற்கு பூர்லோக முதலியலோகங்களின் வாசனையென்று நாராயணரும், மேன்மை அல்லது வித்யை பணம் முதலியவைகளால் உயர்ந்த சம்பாத்தியம் என்று சங்கரானந்தரும் பொருள் சொல்கிறார்கள். சந்தியாவந்தனம் முதலிய கர்மங்களை சமாதியில் ஆத்மாவினிடம் அநுஷ்டிப்பதென்பது "ஜீவப்பிரஹ்மஐக்கியவிருத்தி" ரூபமாகிய சமாதியனுபவத்தால்பரமாத்மாவினிடம் மௌன நிலையாகிய நிஷ்கர்ம பாவத்தை யடையவேண்டுமென்பதைக் குறிக்கும். சந்நியாசிக்கு கர்ம காண்டாநுஷ்டானம் இல்லாததால் வேதத்தில் ஞானகாண்டமாகிய ஆரண்யக பாகமும் அதிலும் உட்பாகமாகிய உபநிஷத்துக்களுமே பாராயணம் பண்ணத்தக்கவை. ஏனெனில், ஆரண்யக பாகத்திலும் சிலவிடங்களில் கர்மத்தைப் போதித்தால் அப்பாகத்தை விடுத்து ஞானார்த்தத்தைச் சொல்லும் உபநிஷத்துக்களையே அத்தியயனம் செய்ய வேண்டும். ஏனெனில், சந்நியாசமே உபநிஷத்தின் பொருளாகிய ஞானத்தை அறியவும் அடையவும் வேண்டியே ஏற்பட்டது.

இவ்விதம் யஞ்ஞோபவீதத்தையும் தள்ளி பிராஹ்மண கர்மங்களையும் விட்டு இருக்கும் சந்நியாசியை எவ்விதம் பிராஹ்மணனென்று சொல்லக்கூடுமென்பதற்கு பின்வரும் வாக்கியம் உத்தரமாகும்—

(4)[உப] பிரஹ்மமாகிய நானே சூத்திரமல்லவா? சூசனத்தால் (ஊர்த்துவிற்பதால்) பிரஹ்மமே சூத்திரம் (நூல்). அச்சூத்திரம் நானே (பிரஹ்மத்தை) அறிந்தவன் மூன்று சுற்றுள்ள சூத்திரத்தை (யஞ்ஞோபவீதத்தை) விட்டுவிடவேண்டும். (அப்படியே) இவ்விதமறிந்தவனும் (விடவேண்டும்.)—

[குறிப்பு.-தானே பிரஹ்மசுவரூபமாய் சூத்திரத்தைப்போல் (வஸ்திரத்திலுள்ள நூலைப்போல்) ஊடுருவி நிற்பதால், தானே சூத்திர ரூபமானபிறகுவேறுவெளிப்படையான யஞ்ஞோபவீதமாகிய சூத்திரம்அநாவசியம். பிரம்ஹத்தை சூத்திரம் என்று சொல்வது ஜகத்தை வஸ்திரமாக உருவகப்படுத்தி எவ்விதம் வஸ்திரத்தின் உபாதான காரணமாகிய நூலும் வஸ்திரமும் அபேதமோ, அவ்விதம் ஜகத்தும் பிரஹ்மத்தைத் தவிற உண்மையில் வேறல்லவென்பதைக் காட்டும். கடைசிவாக்கியம் சங்கரானந்தர் உரைப்படி மொழிபெயர்த்திருக்கின்றது. அவர் உரைப்படிக்கு மேல்உபநிஷத்வாக்கியம் விதுவத் சந்நியாசம் விவிதிஷாசந்நியாசம் இரண்டையும் குறிக்கும். விதுவத் சந்நியாசம் என்பது ஒருவன் ஞானாநுபவம் வந்த பிறகு செய்துகொள்வது. "இவ்விதம் அறிந்தவன் மூன்று சுற்றுள்ள சூத்திரத்தை விடவேண்டும்" என்னும் வாக்கியம் விதுவத் சந்நியாசியைக் குறிக்குமென்றும், "(அப்படியே) இவ்விதமறிந்தவனும் (விடவேண்டும்)"என்கிற வாக்கியம் விவிதிஷா சந்நியாசியைப்பற்றிச் சொன்னதாகுமென்றும், சங்கரானந்தர் அபிப்பிராயம். விவிதிஷா சந்நியாசமென்பது ஞானாநுபவமுண்டாகுமுன்னரே உண்மையை யறியவேண்டுமென்னும் விருப்பத்துடன் செய்துகொள்ளும் சந்நியாசம். நாராயணர் முழுவாக்கியத்தையும் விதுவத் சந்நியாசியையே குறிக்குமென்று அபிப்பிராயப்படுகிறார்.

(5) [உப] ஸந்யஸ்தம்மயா, ஸந்யஸ்தம்மயா, ஸந்யஸ்தம்மயா, என மூன்று தடவை சொல்லி, சர்வபூதங்களுக்கும் அபயம், என்னிடமிருந்து சர்வமும் பிரவர்த்திக்கின்றது.

[குறிப்பு.—சந்நியாசம் என்கிற பதத்திற்கு நன்றாய் விடுதல் என்று பொருள். "ஸந்நியஸ்தம்மயா" வென்பதற்கு 'என்னால் நன்றாய் விடப்பட்டது' என்று பொருள். இம்மந்திரத்திற்கு பிரைஷமந்திரமென்று பெயர். இதை ஒவ்வொருதடவையும் பூ:, புவ:, ஸுவ: என்கிற வியாஹருதிகளில் ஒன்றொன்றுடன் சேர்த்து மந்த்ர, மத்திய, தார சுவரங்களால் மூன்று தடவை உச்சரிக்கவேண்டும். மூன்று தடவை உச்சரித்தல், தான் மூன்று லோகங்களையும் விட்டவனாதலால் அம்மூவுலகங்களும் தனது சங்கல்பத்தைக் கேட்கவேண்டி ஏற்பட்டது. ஏனெனில், ஸந்நியாசியானவன் எப்பொழுதாகிலும் மூவுலகங்களில் எவ்விஷயத்திலாவது ஆசைவைப்பானாகில் அவன் பதிதனாகி மூவுலகத்தின் பழிப்புக்காளாவான். சந்நியாசி அஹந்தையைவிட்டவனாதலால் சகல ஜனங்களுக்கும் அவனால் நன்மையுண்டாமே யல்லாது அவன் அவைகளுக்குக் கெடுதல் செய்யமாட்டானாதலால் அவன் அவ்வாக்கியங்களால் அபயம் கொடுக்கின்றான். சகல ஜகத்திற்கும் காரணபூதமான பிரஹ்மம் தானே என்கிற ஞானத்தால் சகல ஜகத்தையும் தனக்கு அநந்யமாய்ப் பார்ப்பவனாதலால் அவன் ஒரு காலத்திலும் ஒன்றிற்கும் கெடுதி செய்யக்கூடியவனல்லன். அபய மந்திரத்தின் பிறகு "ஸ்வாஹா" என்று சேர்த்து அம்மந்திரத்தாலேயே ஜலத்தை பூர்ணாஞ்சலியாக எடுத்து வடக்கே அல்லது கிழக்கே விடவேண்டியது.]

(6) [உப] 'ஸகாமெகோபாயஜ: ஸகாயோ ஸீந்த்ரஸ்ய வஜ்ரோஸி' என்கிற மந்திரத்தால் மூங்கில் தண்டத்தை (தடியை) (தனது வலது கையின்பேரில்) வைத்து கௌபீனத்தை கிரகிக்கவேண்டும். ஔஷதத்தைப்போல் அன்னத்தைச் சாப்பிட வேண்டும்: ஔஷதத்தைப் போல் அன்னத்தைச் சாப்பிடவேண்டும். பிரஹ்மசர்யத்தையும், அஹிம்ஸையையும், அபரிக்கிரஹத்தையும், ஸத்தியத்தையும் யத்னத்தோடு ரக்ஷிக்கவேண்டும், ரக்ஷிக்கவேண்டும்.

[குறிப்பு.—மந்திரத்தின் பொருள் "நீ என்னை ரக்ஷிக்கும்பொருட்டு தோழன் (ஆகியிருக்கின்றாய்) ஓஜஸ் (சரீரத்தில் வீர்யத்துக்குக்காரணமானதேஜஸ்) இது பத்தாவது தாது ஆகிய தோழனாயிருக்கிறாய். இந்திரனுக்கு வஜ்ரமாயிருக்கிறாய்.']

(7) [உப]மேலும் பரமஹம்ஸபரிவிராஜகர்களுக்கு ஆசனமும் சயனமும் (படுக்கையும்) பூமியில். பிரஹ்மசாரிகளான (அவர்கட்கு) மண்பாத்திரமாவது சுரைக்குடுக்கைப் பாத்திரமாவது (தீர்த்தம் சாப்பிடுவதற்காக வைத்துக்கொள்ளலாம்.) காமம், குரோதம், லோபம், மோஹம் தம்பம், தர்ப்பம், அசூயை, மமத்வம், அகங்காரம், அசத்தியம் முதலியவைகளை விடவேண்டும். 'வர்ஷகாலத்'தில் (மழைகாலமாகிய நாலு மாதங்களில்) ஒரே யிடத்திலிருந்து மற்ற எட்டுமாசங்களில் ஏகனாய் சந்நியாசியானவன் சஞ்சரிக்க வேண்டும்; இரண்டுமாசமாவது சஞ்சரிக்க வேண்டும்.

[குறிப்பு.—பரமமாகிய ஆத்மாவே தான் என்று செல்கிறவன் அல்லது அறிகிறவன் (ஹன்=செல்லுதல், அறிதல்) பரமஹம்சன். எங்கும் (பரித:) எவற்றையும் விடுகிறவன் (வ்ரஜ்=விடுதல்) பரிவிராஜகன். பரமஹம்சனாகிய பரிவிராஜகன், பரமஹம்ஸபரிவிராஜகன். காமம் என்பது விஷயத்திலாசை. லோபம், என்பது கிருபணத்தன்மை அல்லது துக்கமாகிய சரீரத்திடம் சத்தமென்னும் புத்தி. தம்பம் என்பது டம்பம், தான் தர்மம்செய்வோன் என்கிற பெருமை. தர்ப்பம்—கர்வம். அசூயை என்பது பிறர்மேன்மையை சகிக்காமை. மமத்துவம் சகல வஸ்துக்களுளும் தன் சம்பந்தமாகவேபார்த்தல். அஹங்காரம்—ஜாதி, குண, கர்மங்களில் அபிமானம். இரண்டு மாசமாவது தனித்து சஞ்சரிக்க வேண்டுமென்பது, குருசிஷ்யராவது சமானமனமுடைய பதிகளாவது சேர்ந்து சஞ்சரிக்கலாமாதலால், அப்படி இருக்கும் பக்ஷத்தில் இரண்டு மாதமாவது பிரிந்து தனியாய் சஞ்சரிக்கவேண்டும்.']

(8) [உப] வேதத்தின் அர்த்தத்தை அறிந்தவன் எவனோ அவன் உபநயனத்திற்கு பிந்தியாவது முந்தியேயாவது முன் சொன்னவைகளையும் (காமக்குரோதாதிகளையும்) தகப்பன், பிள்ளை, உபவீதம், கர்மம், பெண்சாதி (இவைகளையும்) இன்னும் மற்றவைகளையும் விடவேண்டும். ஓஃஹி, ஓஃஹி, ஓஃஹி, என்று ஜபித்துக்கொண்டு கையையே அல்லது வயிற்றையே பாத்திரமாகக்கொண்டு பிக்ஷையின் பொருட்டு சந்நியாசிகள் கிராமத்தில் பிரவேசிக்கின்றார்கள். அந்த உபநிஷத்தையே (பிரணவத்தையே) நியாசம் செய்யவேண்டும். யாதொருவன் இதை அறிகிறானோ அவன் வித்துவானாகிறான்.

[குறிப்பு:—இவ்வாக்கியத்தால் இன்ன ஆசிரமத்தார்தான் சந்நியாசம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றாவது, உபநயனம் ஆகியிருக்கவேண்டுமென்கிறதாவது நியமம் கிடையாதென்று ஏற்படுகின்றது. சந்நியாசம் செய்துகொள்ளப்புகுவோன் வேதார்த்தமாகிய ஜீவப்பிரம்ஹைக்கியத்தை பரோக்ஷமாகவாவது அறிந்திருப்பதே போது மென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கிராமத்தில் பிரவேசிக்க வேண்டுமென்பதால் பரமஹம்சர்கள் கிராமத்தில் வசிக்காமல் பிக்ஷையெடுக்கமாத்திரம் கிராமத்தில் பிரவேசிக்கவேண்டுமென்பது பொருள். அவர்களுக்கு தாகத்துக்கு சாப்பிடமாத்திரம் தீர்த்தபாத்திரம் வைத்துக்கொள்ளலாமென்று முன்னரே விதிக்கப்பட்டிருக்கிறது. அன்னத்தை பாத்திரமில்லாமலே கையில் வாங்கி அவ்விடமே சாப்பிடவேண்டும். அப்படி பிக்ஷைக்குப்போகும் காலங்களில் "ஓஃஹி" என்று பிரணவத்தை ஜபித்துக் கொண்டிருக்கவேண்டும். ஹி என்பது நிச்சயத்தைக்குறிக்கும். ஆகவே மந்திரத்திற்கு சகலமும் பிரணவசுவருபமே என்பொருளாகும். உபநிஷத் என்கிற பதத்திற்கு சங்கரானந்தர் பின்வருமாறு உரையிடுகிறார். உப, சமீபத்தில், (நான் பிரஹ்மமென்று அறியும்படி பிரஹ்மத்தினிடத்தில் செலுத்தி) நி, மிகவும், (அவித்தையையும் அதன் கார்யங்களையும் சம்ஸ்காரங்களையும்) சாதயதி, நாசம் பண்ணுகின்றது எதுவோ அது உபநிஷத். ஆகவே அப்பதம் இவ்விடத்தில் பிரணவத்தைக் குறிக்கும். பிரணவநியாசத்தை பிரணவ கல்பங்களில் பார்க்கலாம் இவ்விதம் அறிபவன் பிரஹ்மாநுபவ மடைந்த வித்துவானாகிறான்.]

(9) [உப] பலாசமரத்தாலும், வில்வமரத்தாலும் உதும்பர மரத்தாலும் (செய்த) தண்டத்னீதயும், அஜினத்தையும் (யஞ்ஞோபவீதத்தில் கட்டும் மான்தோலையும்) மேகலையையும் (அரைஞாணையும்), யஞ்ஞோபவீதத்தையும் விட்டு இவ்விதம் அறிகிறவன் சூரனாவன். அந்த விஷ்ணுவின் பரமபதத்தை (சந்நியாசிகளான) ஞானிகள் எப்பொழுதும் (நிர்மலமான) ஆகாசத்தில் வியாபித்த கண்ணைப்போல் பார்க்கின்றார்கள்.—விஷ்ணுவின் பரமபதம் எதுவோ அதனை விப்ரர்கள் (பிராஹ்மணர்கள்) குரோதம் (முதலியவைகள்) அற்றவர்களாய் விழித்திருந்து (லோகத்திற்கு) பிரகாசிக்கச் செய்கின்றார்கள். இவ்விதம் நிர்வாணத்தின் அநுசாஸனம் (உத்தரவு) வேதத்தின் அநுசாஸனம்.

[குறிப்பு—மூன்றுவிதமான தண்டங்களும் முறையே வைசிய க்ஷத்திரிய பிராஹ்மணர்களுக் குரித்தானவைகள். வைசிய க்ஷத்திரியர்களுக்கு சந்நியாசத்தில் அதிகாரமில்லாததாலும், பிராஹ்மணர்கள் தங்களுக்கு கீழ்வர்ணங்களின் தண்டத்தைத் தரிக்கலாமாதலாலும் மூன்றும் அவர்களுக்கே சொல்லப்பட்டதென்பது நாராயணாபிப்பிராயம். விஷ்ணு என்பது வியாபக பிரஹ்மத்தைக் குறிக்கும். ஞானிகள் பிரஹ்மத்தை யனுபவிக்கும் பிரகாரத்தை ஆகாயத்தைப் பார்க்கும் கண்ணின் திருஷ்டாந்தத்தால் காட்டுகின்றார்.

எவ்விதம் கண்ணானது நிர்மலமாகிய ஆகாயத்தைப் பார்க்கும்பொழுது அவ்வாகாயத்தில் ஆவரண மொன்றுமில்லாததால் விகல்பமற்று திரிசியமல்லாமல் (கண்ணுக்கு எதிரிடையாகிய தோற்றமற்று) நிர்விகல்பமாகிய பார்வை மட்டுமாக மிஞ்சிவிடுமோ அவ்விதம் பிரஹ்ம வஸ்துவையும் திருபுடியற்று திருக்கு(பார்வை) மாத்திரமாய் நின்று அநுபவிப்பார்கள் என்பது பொருள். விழித்திருந்து என்பதற்கு 'அஞ்ஞானம் நித்திரை யிவைகளில்லாமல் ஜாக்ரதையுடன் இருந்து சமாதியை யடைந்தமனதால்' எனப்பொருள். அவ்விதம் அறிந்து அப்பொருளை பிறருக்கு உபதேசிக்கின்றார்கள். நிர்வாணம் - (வாணம்=சரீரம்) அது அற்ற இடம் நிர்வாணம். வாணம்=நடக்கின்றது அல்லது துர்க்கந்தத்தை தரிக்கின்றது, அல்லது சப்திக்கிறது எதுவோ அது வாணம்; எனவே, சரீரத்தைக்குறிக்கும் ஸ்தூல சூக்ஷ்ம காரண மஹாகாரண சரீரங்களற்ற விடம் நிர்வாணமாகிய மோக்ஷம்.]

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

THE SPIRIT OF RELIGION
OR
VEERA-SAIVAM TO THE FORE.
AN EXPOSITION
OF THE PRINCIPLE OF UNITY IN RELIGION IN THE LIGHT OF ACTUAL EXPERIENCE
AND WITH
Special Reference to the Veera-Saiva faith
BY
C. V SWAMINATHA AIYER,
Editor of the Vivekachintamani,
With Corresponding Texts and References From the Veera-Saiva Scriptures
BY
M. K. NARAYANASWAMI AIYER, B. A., B. L.,
High Court Vakil.

MADRAS:-
THE LALITA PUBLISHING CO.,
LALITALAYA, MYLAPORE.
Price 8 As.] [1 Shilling
London Agents:—Messrs Luzac & co., Oriental Booksellers

Conditions of Health and Disease.

1. Typhoid, Small pox and other Zymotic Pestilence.

—(o)—

'Disease is not inevitably the fate and birthright of every born child, but is in fact of our own making; it is not outside our knowledge and our power, but within our control. Filthy conditions and the imperfect removal of effete material, without and within the body, are the factors of Zymotic pestilence, which aforetime walked in darkness, but is now made plain by the revealing light of science".—Sir William Collins M. D. in "Specificity and Evolution in Disease, p. 28.

If therefore, men can only be induced to live according to the Laws of Health, and will keep themselves, their houses, and their surroundings pure, they may bid defiance to the most violent epidemic that may be raging around them.—*From Vaccine Inquires and Health Review.*

சுக துக்க சாதனங்கள்.

—:o:—

1 சந்நிபாதம் அல்லது பித்தவாத சுரம், அம்மை, வைசூரிமுதலான பெரு வாரிக் காய்ச்சல்கள்.

துன்பமும் துக்கமும் இன்பசுக நீழலாம். துன்பமும் துக்கமும் மனதுக்கேயன்றி தேஹத்துக்கில்லை. ஆனால் மனது தேஹத்தை அபிமானித்திருப்பதால், தேஹத்தோடொன்றுபட்டிருக்குந் தன்மையால் தேஹத்துக்குண்டாகும் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு அவற்றால் துன்பமும் துக்கமும் அடைவதன்றி இன்பமும் சுகமும் கூட அடைகிறது.

இன்பமும் சுகமும் சௌக்கிய ஹேதுக்களாம். துன்பமும் துக்கமும் அசௌக்கிய ஹேதுக்களாம். ஆகையால் சுகதுக்க பிரண்டும் தேஹத்தின்மேல் ஏற்றப்பட்டால் தேஹத்தின் சௌக்கியா சௌக்கியங்களைக் குறிக்கும்.

உயிரின் உள்ளுணர்வு பிரணவ ஸ்வரூபமாயிருக்கிறது. இந்தப் பிரணவ ஸ்வரூபமும் மாத்திரையளவாகவிளங்கி "அமாத்திரையால்" சோபிக்கிறது. மாத்திரை யென்பது அகார, உகார, மகார ரூபமாய் விளங்குவது. "அமாத்ரை" யென்பது இம்மூன்றுஞ் சேர்ந்த ஒன்றன் பொருளாய் விளங்குவது. அதுவே பிரணவமென்று சொல்லப்படும் "உயிர்களின் சமஷ்டி ஸ்வரூபமாம்."

"ஓங்காரமாவது விரியுங்குவியும்
அகாரம்விரியும் உகாரம்குவியும்
மகாரம்ஒடுங்கும் மோனமுமாகும்
அகாரஉகாரமகாரமாய் நிற்பது ஓமதுவாமே."

விரிதலும்குவிதலும்விகாரமாம். இவ்விகாரமொழிந்து ஏகமாய் நிற்பது ஒடுக்கமாம். ஒடுங்கின விடத்து ஒன்றேயாவது எங்கும் நிறைந்த பரிபூரண வஸ்துவாதல் மோனமாம். இந்த மோன உருவத்தை, "ஓமவென்றோதி யுள்ளொளியாய் நிற்கும், நாமநறுங்குழற்றையலைக்கண்டபின்" என்னும் திருமந்திரோபதேசத்தினால், ஆமையைப்போல் இந்திரியஜயம்செய்த மந்திரதிருஷ்டாக்கள் அகார, உகார, மகாரங்களை அமாத்ரை கூட்டி "ஓம்" என்றோதி, "உள்ளொளியா" தரிசனஞ்செய்வர் என்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. இப்பொழுது நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால், உயிரின் உணர்வின் லக்ஷணங்கள் விரிதல், குவிதல், ஒடுக்கம் என மூவகைத்தாமென்பதே. அதில் ஒடுக்கம் இருவகைத்தாம்.

"விரிந்துரை மாண்டது" ஒரு ஒடுக்கம். இதுவே "ஒழிவிலொடுக்க"மென்றும் சொல்லப்படும். இதற்கு எதிர்மறையாய் "குவிந்துரைமாண்டது" ஒரு ஒடுக்கமாம். இதைக் "கழிவிலொடுக்கம்" என்று நாம் சொல்வோம். ஏனெனில் இந்த ஒடுக்கத்தில் கட்டின துணியைக் கழித்து விடுவதுபோல, ஆத்மா(அறிவு) தேஹேந்திரியங்களின் அழிவு காலத்தில் அதைக்கழித்துத் தான் ஜீவோபாதியிலொடுங்கிநிற்கும். ஜீவோபாதியாவது அவித்தை அல்

லது அறியாமை. "அறிவு" "அறியாமை"யிலொடுங்கினால் அது பந்தத்துக்கு (பிறப்பிறப்புக்கு) ஹேதுவாகும். "அறியாமை" அறிவிலொடுங்கினால் அது மோக்ஷத்திற்கு ஹேதுவாகும். முன்னதைச் சாகும்வழி யென்றும் பின்னதைப் பிழைக்கும்வழி யென்றும் மேலோர் செப்புவர். சாகும்வழி யென்றால் சாவுக்கே (மரணத்துக்கே) ஆளாகும் வழி.

பிழைக்கும்வழி யென்றால் செத்துப்பிழைக்காதவழி: இதை "செத்துப் பிழைக்கும் வழி" யென்று சொல்லுவர் யோகிகள்.

உலகிலுள்ள ஜனங்களெல்லாரும் "சாகத்தெரியாமல் சங்கடப்படுகிறார்கள்", என்பது உண்மையே. அப்படியே உலகத்தார் பிழைக்கத் தெரியாமல் பேரவாக் கொள்கிறார்கள். 'பேரவா" என்றால் பெருகுந்தன்மையதான "ஆசை." "விரிந்துரைமாண்ட" ஒடுக்கம் முத்தியைக்கொடுக்கும்; "குவிந்துரைமாண்ட்" ஒடுக்கம் மிருத்யுவைக் கொடுக்கும். இவ்விரண்டுக்கும் காரணமாயிருப்பது விரிதல், குவிதல். விரியுங் குவியுந் தன்மையுள்ள விடத்தில் ஒடுங்குந்தன்மையுமுண்டு.

ஆகையால் அகார உகாரம் ஒன்று சேர்ந்தால் அதன்பின் அனுஸ்வாரமான மகாரமும் கூடவேவரும். ஆகவே அ+உ+ம் என்பது ஓம் என்று சேர்ந்தொலிக்கும். இந்த ஒலியே "உயிரொலி"யென்றும் "பிரணவநாதம்" என்றும் சொல்லப்படும். இதுதான் ஓம் என்பதின் வாச்சியார்த்தம். "அ+உ+ம்=ஓம்" என்பது பதார்த்தம். ஓம்+அ(அமாத்ரை) = "ஓம்" என்பது வாச்சியார்த்தம்.

இந்த உண்மைகளை (தத்துவங்களை) உயிரின் லக்ஷண-லக்ஷியமறிந்து பிரயோக முறையால் அனுஷ்டித்தோர்சொல்லும் "பிரயோக முறை" யிது:—

"ஓம் எனச்சொல்வது பிரணவ மந்திரம்
ஓம் எனக்கொள்வது பிரணவப் பொருளையே
ஓம் எனக்காட்டு முறை விர்த்தி க்ஷய லயம்
ஓம் எனக்குறிப்பர் காட்டுக்குறி கடந்த காரணன்
[தன்னையே."

"விரிதல், குவிதல், ஒடுங்கல்" என்று நாம் மேலேயெடுத்துக்காட்டியதொன்றையே "விருத்திக்ஷயலயம்" என்றுசொல்லியுள்ளார்.

விரிதலுங் குவிதலுமா யிருப்பது விருத்திக்ஷயம். இதற்குச் சந்திரன் ஆதிதெய்விகமான அதிஷ்டான தேவதை. ஐம்பூதங்களாலான பிரபஞ்சாகாரமெல்லாம் ஆதிபூதம். "ஆங்காரி" அல்லது, அகங்காரம் அத்யாத்மா. ஓங்காரம் தானே (சமஷ்டிப்பிராணன் தானே) ஆங்காரம் அகங்காரம்=வியஷ்டிப்பிராணனும்) ஆகும். 'ஆங்காரி'யே 'ஐங்காரி'யாகும். இந்த 'ஐங்காரம்' தானே "பஞ்சீகரண விதியால்" பிரபஞ்சமெல்லாமாகவிரியும் குவியும். இதுதான் உயிரின் உண்மை:—

ஓங்காரி—the Ruling Principle of Life

"ஓங்காரியவன்தானே ஆங்காரியாயினள்
ஆங்காரியாகியே ஐவரைப்பெற்றெடுத்தாள்
ஆங்காரியமெல்லாம் ஐவர் தம் தொழிலாம்
ஆங்காரமழிந்தாலது ஓங்காரமாமே."

இப்படியாக உயிரின் உண்மையை நிதரிசனமாக அறிந்தவர்க்கு "தத்துவதரிசி" யென்று பெயர். உண்மையுணர்ந்து சாக்ஷாத்காரமாய் உயிரின் தத்துவங்களைப் பிரித்தறியவல்லார்க்கு உயிர்ப்பயம் ஒருக்காலும் இல்லை. அவர்கள் தம் உயிரைத் தியாகமாகக் கொடுப்பார்கள்; பிறகு தானமாகப் பிராணபிக்ஷை யேற்றுப்பெறுவார்கள். முன்னதற்கு அதிஷ்டான தேவதை தியாகராஜர். பின்னதற்கு அதிஷ்டானதேவதை பிக்ஷாடனர். பிக்ஷாடனர் உயிர்ப்பிச்சைக்குக் கப்பரையேந்தி நிற்கிறாரேயன்றி ஊன்பிச்சைக்கல்ல. இவையெல்லாம் ஆதியாயுள்ள தத்துவங்கள் (உண்மைகள்). இந்த உண்மைகளே வியாதி வைத்தியங்களுக்

கும் காரணமாயிருக்கின்றன. இந்த உண்மைகளின் தோற்றம், பரிச்சின்னம், இவை மாறுபடுகின்றனவே யன்றி உண்மைக்கு உள்ளபடி ஒரு மாறுபாடும் உண்டாவதில்லை. மாறுபாடுண்டானால் அது உண்மையாகாது.

ஆதியைப் பூரணமாய்ந்தவனுக்கு வியாதியில்லை யென்பது நிச்சயம். ஆதிதத்துவங்களை யறியாக்காரணத்தினாலேயே வியாதியுண்டாகி மலிகின்றது. ஆதியென்பது உன்மனஸ் என்னும் உள்ளத்தைப்பற்றியது. "உன்மனஸுக்கு" உபாதி "உள்ளுடம்பு". ஜீவன் அறிவின் பேதாபேத விசேஷத்தால் நாலவஸ்தைகளுக்குட்பட்டவனாக விருக்கிறான். ஜாக்கிர, ஸ்வப்ன, சுஷுப்தி, துரியமெனுமவற்றில் முதல் மூன்றுக் குரியவன்:—

(1) பஹிர்ப்பிரஜ்ஞன்=பஹிர்முகப்பார்வையோடு கூடிய அறிவுடையவன்.

(2) அந்தர்ப்பிரஜ்ஞன்=அஹமுகப்பார்வையோடு கூடிய அறிவுடையவன்.

(3) பிரஜ்ஞானகனன்.—அவித்யாசுகமனுபவிக்கும் அறிவுடையவன்.

(1) முதலவன் ஸ்தூல உபாதியோடு கூடினவன்: ஜாக்ராவஸ்தையுள்ளவன்.

(2) இரண்டாமவன் சூக்ஷ்ம உபாதியோடு கூடினவன்: ஸ்வப்னவஸ்தையுள்ளவன்.

(3) மூன்றுமவன் காரண உபாதியோடு கூடினவன்: சுஷுப்தி (நித்ரை) அவஸ்தையுள்ளவன்.

இப்படியாக மூன்றவஸ்தைக்கும் மூன்று தேகம் உபாதியாக விருக்க, நாலாவது அவஸ்தைக்குரியவனான

(4) துரியன்=சரீரத்திரயங்களுக்கும் அபிமானியான ஜீவனை ஆச்ரயித்து தேஹாதீதனாய் எல்லாத்தேஹங்களிலும் வியாபித்து சுகஸ்வரூபனாய் விளங்குகிறான்.

இவன் தான் தன்வந்தரி யென்று சொல்லுமவன். பாற்கடலிலிருந்து அமிர்த கலசத்தைக் கையிலேந்திக்கொண்டு வெளிவந்தவன்.

இந்த தன்வந்தரி தான் எல்லா வைத்திய முறைகளுக்கும் அதிகாரி. தான் சுகஸ்வரூபியாதலால் தன் கையில் அமிர்த கலசமேந்திக் கொண்டுவெளிவந்தான்.

மிருத்யுவை (மரணத்தை)ப் போக்குவதொன்றெதுவோ அது அமிருதம்.

தேஹத்துக்குண்டாகும் வியாதி யெல்லாம் "விருத்தி, க்ஷய, லயம்" என்கிற தேஹதாபம் மூன்றுக்குள் அடங்கும்.

தாதுவிருத்தியால் தேஹத்துக்கு வீரிய விர்த்தியுண்டாகும்.

தாதுக்ஷயத்தால் தேஹத்துக்கு வீரியக் குறைவுண்டாகும்.

தாதுலயத்தால் தேஹத்துக்கு மரணமுண்டாகும்.

தாதுவென்றால் 'மூலம்' 'வேர்' என்றுஅருத்தம். தேஹம் தரித்திருப்பதற்கு மூலகாரணமாய், தேஹவிருக்ஷத்துக்கு வேர்போல் இருப்பது வாயுவினியக்கம். ஆதலால் அதற்கு "தாது" என்னும் பேர் வந்தது. அந்தவாயு நடமாடும் ஆகாசத்துக்கு (இடத்துக்கு) 'நாடி' யென்று பேர்.

அந்த நாடியின் ஓட்டம் மூவகைத்தாம். ஒன்று பாம்பு ஊருவதுபோல் நகர்ந்து செல்லும், அதற்கு சிலேஷ்மநாடி யென்று பேர். மற்றொன்று தவளைநடையொத்துத் தத்திக் குதிக்கும். அதற்குப் பித்தநாடி யென்று பேர். வேறொன்று குக்குடம்போல் (கோழி நடையொத்து) நடமாடும். அதற்கு வாதநாடி யென்று பேர். வாத பித்த சிலேஷ்மம் என்கிற இந்த மூன்றுவித நடமாட்டமும் ஒரு சீராக ஒத்திருக்கவேண்டும்: அதாவது வாதம் ஒன்றினால் பித்தம் அதிற்பாதியான அளவும், சிலேஷ்மம் காலுமாயிருக்கவேண்டும்.—

இந்த மூன்று நாடிகளிலும் முக்கியமானது வாதநாடியே. இந்த வாதநாடியை வாயுதாரணை, அமுததாரணை யென்கிற தாரணைவித்திபெற்ற யோகிகள் "குக்குடாயநமஃ" வென்று மிகவும் தூக்கியோட்டுவர். ஓட்டமிகுந்த அதை மீட்டும் பிடித்துக் கட்டுவர். கட்டினகட்டவிழ்த்துப் பின்னும் சூந்யமாக விட்டொழிப்பர்.

வாயுபூரகத்தால் வாதநாடியைத் தூக்கியோட்டுவர். அப்பொழுது அது குக்குடம் போற் சிறிது ஆகாசத்திற் பறக்குந்தன்மை வாய்ந்ததா யிருக்கும்.

பறக்கு மந்நாடியை வாயுகும்பகத்தால் மீட்டும் கட்டுவர். அப்பொழுது அது தோகைவிரித்தாடும் மயில்போல் நடமாடும்.

பிறகு வாயுரேசகத்தால் வாதநாடியின் நடமாட்டம்ஒடுங்க ஆடியோய்ந்தமயிலன்னஅமர்ந்திருப்பர்.

இவையெல்லாம் "மலக்கட்டும்" "ஜலக்கட்டும்" என்கிற சிக்கல் முக்கல் வியாதிகளுக்கு இடங்கொடுக்காது செய்யவேண்டும். மலக்கட்டும் ஜலக்கட்டும் கேரிட்டால் வியாதிக் கிடங்கொடுக்குமென்பது நிச்சயம்.

வாதம் கட்டுக்கடங்காது சீறினால் மலத்தில் ஒடுங்கும். வாயுவொடுங்கினை மலம் விஷமாக மாறிக் குடலில் சிக்கும். மலச்சிக்கலுண்டானால் மூலச் சூடு புகைந்தெரியும். இந்த தூமாக்னியால் பித்தம் அதிகரிக்கும்.

பித்தாதிக்கத்தினால் பித்தநாடிசீறினால் அது தவளைபோல் தத்திக்குதித்து ஜலத்தில் ஒடுங்கும்.

பித்தம் ஒடுங்கப்பெற்ற ஜலம் மேகநீராகி மூடுபனிபோல் நாடி நாம்புகளில் ஜலத்தைக் கட்டும்.

நாடி நாம்புகளில் ஜலக்கட்டுண்டானால் நிமிர்வாதம் என்கிற உன்னாசங்கியுண்டாகி நீராவியந்திரத்தின் குழாய்களிலடைபட்ட ஆவியின் சக்தியானது யந்திரத்தை முடுக்கியோடச் செய்வதுபோல, தேஹத்தினுட் பரவியுள்ள நாடி நரம்புகளில் பிரவேசித்து "ஓட்டம், நாட்டம், ஒடுக்கம்" முதலிய அங்கசேஷ்டைகளைச் செய்விக்கும்.

இதற்குத்தான் சந்நிபாதசுரம் என்றும் பித்தவாதசுரம் என்றும் சொல்வது. நாடி நரம்புகளில் தாக்கிய மேகசூடானது அந்தர்பிரவேசமாயின்றி பஹிர்பிரவேசமாய் தோல்களின் வழியே கொப்புளமாகப் புறப்பட்டு வெளி வந்தால், அப்பொழுது அதற்கு வசூரி யென்றும் அம்மையென்றும் பெருவாரிக் காய்ச்சலென்றும் பேர். இவையெல்லாம் தேஹத்திலே மல-ஜலச் சிக்கல்களா லுண்டாகும் கொதிப்பு அல்லது புளிப்பு, (fermentation) கொதிப்பு, காரணமாக உண்டாவதால் இவைகளுக்கெல்லாம் 'Zymotic diseases'—கொதிப்பு காரணமாயுண்டாகும்பெருவாரிக்காய்ச்சல்கள் என்று பேர். இந்த வியாதிகள் தேஹத்தின் உள்ளும் புறம்பும் மலஜலச்சிக்கலினாலுண்டாகும்அசுத்தங்கள் அதிகமாவதினால், லுண்டாகிறது; அந்த அசுத்தாதிக்கத்தினால் கொதிப்பு (fermentation) உண்டாக, அதிலிருந்து புளிப்பு, நுரைப்பு முதலியவற்றை யுண்டுபண்ணும் விஷகரங்கள் நேர்ந்து, கொதிப்பினால் வாதம்சீறி பைத்திய சைத்தியங்களையுண்டுபண்ணிப் பிராணனை வதைக்கும்.

பித்தாதிக்கம் பைத்தியம் எனப்படும்.
சீதாதிக்கம் சைத்தியம் எனப்படும்.

ரக்தத்திலுண்டாகும் கொதிப்புக்கே (fermentation) சுரம் என்று பேர். இந்த சுரம் தேஹசுகத்துக்கும் அவசியமேயாம். ஏனெனில் கொதிப்பின்றி விருத்தி – க்ஷயமில்லை. தேஹம் வளர்வதும் குறைவதும், பெருப்பதும் இளைப்பதும் "fermentation" என்று சொல்லும் ரக்தக்கொதிப்பினால்தான். இந்த ரக்தக் கொதிப்பை யுண்டுபண்ணும் அணுப்பிரமாண

ஜீவன்களுக்கு "Microzymas" என்று Beschamp என்னும் ப்ரெஞ்ச் தேசத்து ஜீவ்ய தத்துவ சாஸ்திர மஹாபண்டிதர் அவைகளின் தத்துவத்தையறிந்து பெயரிட்டார்.

தேஹபோஷணைக்குக் காரணமாயிருப்பது இந்த mircrozymas என்னும் அணுப்பிரமாண ஜீவன்களே. இவைகள் மனிதனுடைய இரக்தத்திலும் தாதுவிலும் அளவில்லாமல் நிறைந்திருக்கின்றன. தேகம் சூடாயிருப்பதற்கும் இரக்தத்தினுஷ்ணத்திற்கும் காரணம் இந்த அணுப்பிரமாண ஜீவன்களே. இவை "அணோரணீயம்" என்ற சுருதிவாக்குக் கொத்தபடி அணுவிலும் அணுவான தேஹக்கூடுடையனவாயிருக்கின்றன. இந்ததேஹக்கூட்டின் விரிதல்குவிதலேகொதிப்புப் புளிப்புக்குக்காரணம். உபாதி ஸஹிதமான விரிதல் குவிதலையே 'Fermentation' என்றுசொல்வது. சுரமும் சந்தியுமுண்டாவது இவைகளின் சேஷ்டையினாலேயே.

இவை தேஹத்தினுள்ளே தானேயிருந்து சுகதுக்கங்களிரண்டுக்கும் ஒக்கநேர்ந்த உண்மையான சாதனங்களாக உதவுகின்றன. இவற்றினுள் இருக்கும், அபிர்தாஸம் தானே "நஞ்சேயமுதும் அமுதே நஞ்சுமா"ச் செய்யும் சிவன்செயல்போல் சுகதுக்கமிரண்டுக்கும் காரணமாயிருக்கிறது.

நாடிதாரணையிற்றேறினவன் இவற்றின் உறுப்பமைப்பு இயல்புகளை (auatomy) யுள்ளபடியுணர்ந்துய்வான். வாயுதாரணையில் தேறினவன் இவற்றின் விரிதல் குவிதலான (physiology) இயக்கசுபாவத்தை யுள்ளபடியுணர்ந்துய்வான்.

அந்திதாரணை அமுததாரணையில் தேறினவன் மஹாமாரி முதலிய துர்த்தேவதைகளையுமடக்கும் தன்வந்திரியேயாகிறான்.

வகுரி, அம்மை, பெருவாரி, பித்தவாதசுரம், சந்நிபாதம் முதலிய இவைகளுக்கு ஔஷதமுறையில் எதிர்மறை வைத்தியஞ் செய்வது கடிது. மஹாமாரியை சக்திரூபமாகத் தியானஞ்செய்து பக்தியோகத்தால் பிராணதாரணை செய்து பிழைத்தால் பிழைக்கலாமேயன்றி ஔஷதப் பிரயோகம் இவைக்குகூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் உள்ளே படிந்துள்ள மலஜலச்சிக்கலை வெளிப்படுத்தி தேஹத்தைச் சுத்திசெய்வதே இந்நோய்களின் நோக்கமாம். அதற்கு இடையூறு அதிகமானால் தேஹத்தை உள்ளுறவிருந்து குடைந்துசின்னாபின்னப்படுத்திவிடும்.

பித்தம் சீறினால் ஜலத்தைக் கட்டுமென்று சொன்னோம். ஜலம் கட்டுப்பட்டால் அது விஷ நீராகும். ஜலக்கட்டு சிலேஷ்மத்தை விருத்தி செய்யும்.

சிலேஷ்மகாடியதிகரித்தால் இரக்தம் குளிர்ந்துபோய் கபம் கட்டும். கபக்கட்டு உயிரையேகட்டும். சிலேஷ்மம் சீறினால் கபத்தைக் கட்டும். கபக்கட்டு நாடி நரம்புகளை யடைக்கும். நாடியோட்டம் குன்றினால் பிராணவோட்டம் குறையும். பிராணன் ஒடுங்க தேஹத்துக்கு மரணமே சம்பவிக்கும். இதற்கெல்லாம் பரம நிவாரணமாயுள்ளது "பிராணயாமம்."

பிராணயாமம் என்பது வாசிவசமாம். வாசிவசம் பிரணவோபாசனையாலும், "வாசிவா" என்கிற ஹம்ஸமந்திர அஜபவித்தியினாலும் பலிக்கும்.

இது பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று உபாஸியாகாரவித்தி பெற்றவர்களுக்கு இலகுவில்பலிக்கும். அவர்கள் எலும்பையும் உருவாக்குவார்கள்.

திருஞான சம்பந்தர் "அங்கம்பூம்பாவை" என்கிற அதிர்சயமான அருள்விளையாட்டுச் செய்தது இந்தப் பஞ்சாக்ஷரசித்தியினாலுண்டான வாசிவச விசேஷத்தாலேயாம்.

அங்கலிங்கஜங்கம (உபாஸக உபாஸ்ய ஐக்கிய) உண்மையை யுணர்ந்தவர்கள் பஞ்சாக்ஷர வித்திபெற்றவர்களாவார்கள். அங்கலிங்கஜங்கமஞானத்தின் அபரோக்ஷானுபூதியினால் "மும்மூன்று மொன்றாகி ஒன்றேயொன்பதுவாகும் உன்னருமை நிருத்தமென்ன!" என்றபடி நிரதிசயானந்த அபரோக்ஷானுபூதி பெற்றவர்கள் "எல்லாம் வல்லவித்தர்களாய்" உலகத்தின் சுகதுக்கங்களைப் பொறுத்துக்கொண்டு அவற்றில் ஒட்டியும் ஒட்டாது விளையாடிக்கொண்டு விளங்குவர். அவர்கள் விபூதி மாத்திரத்தினாலே எல்லா ஆதிவியாதிகளையும் சொஸ்தம் செய்ய வல்லவர்களாவார்கள். இதற்குச் சாதகசாதனமாயிருப்பதொன்றே. அது புறத்தில் 'சுத்தம்' என்றும் அகத்தில் 'சூந்நியம்' என்றும் இரண்டுக்கும் மேலான காரணத்தில் "சுபாவம்" என்றும், சரீரத்திரியங்களுக்கும் அபிமானியான ஜீவஸ்தானமாம் யோகஸம்யமத்தில் (அபிமான) "ஒழிவு" என்றும், சாக்ஷியதத்தில் "அதீதம்" என்றும் சொல்லப்படும்.

ஆகவே "சுத்தம்- சூந்நியம்- சுபாவம்" மூன்றும் சுகதுக்கங்களை யனுபவிப்பதற்குச் சாதனங்களாகவும், "(அபிமான) ஒழிவு," அவையிரண்டுக்கும் சாதகமாகவும், இவைகளுக்கெல்லாம் மேலாய் சாக்ஷி-பதத்தில் அதீதமாய் நிற்பது சாத்தியம் அல்லது ஸித்தி யென்றும் சொல்லப்படும். ஓம் தத்ஸத்.

ஆகையால் "அங்கம் பூம்பாவை"யாம் அற்புதமியற்றவல்லோன் ஸ்தூலத்திலே அகம்புறமிரண்டிலும் அழுக்காறற்ற சுத்தனாகவும், சூக்ஷமத்திலே அகம்புறமிரண்டிலும் பற்றற்ற சங்கல்பவிகல்ப சூந்நியனாகவும், காரணத்திலே தானே தானாய்த் தன்மயமாய் நிற்கும் (ஆத்ம)சுபாவம் வாய்ந்தவனாகவும், தேஹத்திரயங்களுக்கு மப்பாலே அபிமான-ஸ்தலத்தில் அபிமானம் ஒழிந்த ஒழிவுள்ளவனாகவும், சாக்ஷியத்திலே இவைக்கெல்லாம் அதீதமாய் நின்றுபார்க்கும் 'தீர்க்க தரிசன வித்தி' யென்று சொல்லும் சக்தி வாய்ந்தவனாகவு மிருக்கவேண்டுமென்பது ஏற்படலாயிற்று.

[சமீபகாலத்திலே அன்பிலேபிறந்து அன்பிலே வளர்ந்ததோர் கண்மணிதானும் சந்நிபாதசுரத்தால் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில் அசுரசுபாவ மிகுந்த அவள் புக்ககத்தோர் அக்குழந்தையைப் பெற்றோரிடம் அனுப்பாமல் அதற்குசங்காதோஷமென்று சொல்லி, அன்பாய் வளர்த்த அக்குழந்தையை அந்த அவஸ்தையில் ஒரு அறையில் விட்டுப் பூட்டிவைத்ததாகக் கேள்விப்பட்டதனால், மனங்கொதித்து, அறியாமை காரணமாகவும் அசுரபாவமிகுதியினாலும் செய்ததாகும் அக்கொடுமை சகியாது, அன்பிற்பிறந்து அபிமானத்தால் உருக்கொண்ட "அனுதாபசக்தி"யின் மிகுதியால் உண்டான "ஸம்யமவித்தி"யில் அக்கஷ்டங்களையெல்லாம் தானே தனையளாயிருந்தனுபவித்த விசேஷத்தாலும், அப்பொழுது அக்குழந்தையைப் பார்க்கவும் சரிப்படாதபடி நேர்ந்த விபரீதங்களினால் 'அங்கம் பூம்பாவை"த் திருவிளையாட்டை ஆதிபூத, ஆதிதெய்விக, அத்யாத்மக ஞானத்தோடு தரிசிக்கநேரிட்டதாலுமுண்டான உள்ளனுபவத்தைக் கொண்டு லோகக்ஷார்த்தம் இது எழுதப்பட்டது.

Easy Lessons on Economics.

குடிவாழ்க்கை.

V பாடம். 1-ம் பாகம்.

வேலையின் பயன்.

வேலையின் பயன் மூன்றுவித மெனலாம்.

1. ஜடவஸ்துக்களை தம்முடைய சுகத்திற்கும் அநுபோகத்திற்கும் உபயோகப் படும்படி செய்தல் தொழிலின் முதற் பயனாகும். இது யாவரும் அறிந்ததே யாகையால் அதைத் திரும்பவும் நிரூபித்தல் அவசியமன்று.

2. செல்வ விருத்தி விஷயத்தில் பயனுண்டாகும்படி மனிதர்களுக்கு கல்வியையும் பயிற்சியையும் உண்டாக்குதலாகும். பலவித உபாத்தியாயர்கள், ஜனங்களுடைய உண்மையான விருத்தியை நாடி வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்கள், பிரயோஜனப்படக் கூடிய புத்தியைப் போதிக்கும் சக்தியையுடைய தர்மோபதேசிகள், பத்திராதிபர்கள், தத்வபோதனை செய்

யும் குருக்கள், மனதின் சல்லியத்தையும், சரீரத்திலுள்ள வியாதியையும் நீக்கும் வைத்தியர்கள், கைத்தொழில் வேலைகளை போதிப்பவர்கள், இன்னும் இவைகள் போன்ற தொழிலைச் செய்கிறவர் களெல்லோரும் செய்யும் வேலையானது, மனிதருடைய தேக வலிமைக்கும், மனப்பயிற்சிக்கும் உதவும் வரையில் இரண்டாவது பயனாகும். கற்போருடைய வேலையும் கற்பிப்போருடைய வேலையுடன் ஒத்து வராவிடின், கல்வியினால் பயனொன்று முண்டாகாதாகையால், கைக்கு வரும் பிரயோஜனத்தின் ஒரு காரணமாகக் கற்போருடைய வேலையும் அங்கீகரிக்கத் தக்க பயனுளதே யாகும்.

3. இல்லிதப் பயன்களைத்தவிர வேலைக்கு வேறு விதமான பயனொன்றுண்டு. மேற்கூறிய இருவகைப் பயன்களும் ஏறக்குறைய நிலைபெற்றவை யெனலாம். ஜடப்பொருள்களுக்கும் மனிதருக்கும் அமைக்கிற குணங்கள் அமைந்த க்ஷணத்திலேயே மாறுவனவல்ல. பருத்தி ஆடையானால், அவ்வாடை சிறிது காலங் கழிந்த பின்புதான் பிரயோஜன மற்றதாகும். அப்படியே ஒரு தொழிலைக் கற்றவன் ஜீவனுள்ள வரையில் அதைச் செய்து செல்வ விருத்தியைச் செய்யலாம். அவன்விஷயத்தில் நேரிட்ட பிரயாசையின் பயன் அவனிடத்தில் நிலைத்து அவனுயுள்வரையில் நிற்கின்றது. ஆனால் நாம் இப்பொழுது கவனிக்கப் புகுந்தது அப்போதப்போதே நசிக்கும் தன்மையது. பாடகன் செய்யும் வேலையின் பயன் தற்காலசுகமேயாகும். கானம், நடனம், பிரசங்கம் முதலியவை போன்றவைகள் பிரத்தியக்ஷமாய் நீடித்து நிற்கும் காரியத்தைச் செய்வதில்லை. சங்கீதம் கேட்கும்பொழுது சுகத்தையும் ஆநந்தத்தையும் கொடுப்பது மல்லாமல், மனோ வியாதியை யகற்றி அதன் சேஷ்டையைப் போக்கி நீடித்து நிற்கும் பயனையும் ஒருக்கால் கொடுக்கலாம் கூடும்; ஆயினும் தற்கால சுகமே சங்கீதம் போன்றவற்றின் முக்கியமான உத்தேசமாகும்.

ஓர் தேசத்திலுள்ள சேனைகள் செய்யும் தொழிலும் இத்தன்மையதே என்று கூறலாம். சத்துருக்களினின்று தேசத்தைக் காப்பவர்களால், ஜடப்பொருள்கள் அநுபவயோக்கியங்கொண்ட பொருள்களாகவாவது, மனிதர் குணவான்களாகவாவது மாற்ற முடியாது. சட்ட நிரூபணக் காரர்களும், நியாய வாதிகளும் நியாயாதிபதிகளும் இவ்விதத் தொழிலையே பெரும்பான்மையாகச் செய்கின்றார்கள். அவர்களுக்குரிய வேலைகளால் செல்வவிருத்திக்கு கோடியான சாதகமில்லை யென்றும் கூறலாம். சண்டை சச்சரவு களில்லாமல் செய்வதால் ஜடப்பொருளாவது மனிதனாவது மேன்மையைப் பெறுதல் இல்லை.

வியாபாரிகள் சாமான்களை வேண்டு மிடத்திற்குச் சேரும்படி செய்கிறவர்களாகையால், அவர்களுடைய தொழிலானது முதலிற் கூறப்பட்ட பயனைத் தருவதெனலாம். அவர்களால் பொருள்கள் வேண்டிய இடத்தைப் போய்ச் சேருகின்றன. நமக்குவேண்டிய கோதுமை வடநாட்டி லுண்டாகின்றது. அவ்விடத்திலேயே அது இருந்தால் நமக்குப் பயன்படாது. அதை நம்முடைய கைக்குவரும்படி செய்பவர்கள் செய்யும் வேலையை ஸ்திரமான பிரயோஜனத்தைத் தராத தொழிலென்பது சரியாகாது.

மேற்குறித்த தொழிலின் பேதங்களைக் கொண்டு முதலிரண்டு தொழில்களை மேலானவை யென்றும், மற்றது கீழானதென்றும் நாம் கூறுவதாக நினைக்கலாகாது. மூன்றாவது முதலிரண்டைவிட மிகப் பிரயோஜனமுள்ள தென்று பலர் வாதிப்பார்கள். கிறிஸ்துவப் பாதிரிமார்களும், ஹிந்து வைதீகர்களும், பாடகர்களும் நியாயவாதிகளும் செய்யும் தொழில் செல்வ விஷயத்தில் ஒரு தன்மையுள்ளதுதான். இவர்

கள்படும் சிரமத்தினால் அவரவர்களுக்கு திரவிய லாபமும் பிறருக்குத் திரவிய நஷ்டமுமே யல்லாது நாட்டின் செல்வம் பெறுகவிடமில்லை. இத்தொழிலாளிக ளெல்லோரும் தங்கள் தொழிலை நிறுத்தி வேலையின்றி யிருப்பாராயின் அதனால் செல்வக் குறைவுண்டாவதில்லை. ஆனால் மற்றத்தொழிலாளிகளெல்லோரும் அவரவர்கள் தொழிலை நிறுத்தி வேலையின்றி யிருப்பாராயினும், எவ்வித காரணத்தினாலாவது அவர்கள் தொழில் க்ஷீணகதியடைந்தாலும், தேசத்தின் செல்வம் குறைந்து அனைவரும் கஷ்டப்படவேண்டியதாகும். கொஞ்ச காலத்திற்குமுன் மழைக் குறைவினால் உண்டான பஞ்சகாலத்தில் உழுது பயிர் செய்வோர்களிற் பலர் உணவின்றி மாண்டுபோகவே அதனால் பலவிடங்களில் நிலம் பயிர்செய்யப் படாமல் தரிசாகக் கிடந்தது. அதனால் ராஜ்யத்திற்கு விசேஷமான திரவிய நஷ்டமுண்டாயிற்று.

ஐரோப்பிய ஜாதிகளில் அனேக தேசத்தார் சண்டையையே முக்கியமான தொழிலாகக் கொண்டு மிருகங்களைப்போல் நாகரீகமின்றி யிருந்தபோது, பாதிரிமார் கல்விப் பொருளை நசித்துப் போகாமல் காத்தும், விருத்தி செய்தும், மனிதனது இயற்கையான குணங்களை மாற்றியும், தெய்வ பக்தியை போதித்தும், மோக்ஷமென்று வேறொரு உலகமுண்டென்றும் தீச் செய்கைகளுக்கு அங்கு தண்டனை யுண்டென்றும், ஒவ்வொரு மனிதனும் மற்றவனை தன்னைப்போல் எண்ணி இரக்கத்துடனும் நியாயத்துடனும் நடத்தாவிடில் ஈசன் கோபமூட்டப் படுவாரென்றும், பலதர்மங்களை அம் மனிதர்களின் மனதில் பதியும்படி செய்தும், அவர்கள் சண்டையை நிறுத்தி அமைதியையும் சமாதானத்தையும் கடைப்பிடித்து பூமியைப் பயிரிட்டு பலதொழில்களை நடத்தும்படி போதித்தும் தேசத்தின் செல்வவிருத்திக்குக் காரணமா யிருந்தனர்—பாதிரிமார் என்ற வகுப்பினர். இவ்விதமாக ஒருகாலத்தில் பாதிரிமார் தேசத்தின் செல்வ விருத்திக்கு இன்றியமையாத சாதகமா யிருந்தனரென்பது உண்மையே.

இப்பொழுதும் பாதிரிமார் நாகரீகமற்ற ஜனங்களால் பரவி யிருக்கப்பட்ட தேசங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு கிருஸ்துமத போதனைபுடன், சீர்திருத்தத்தையும், நாகரீகத்தையும் உண்டுசெய்து அதனால் செல்வ விருத்திக்கு உதவி செய்கின்றனர். நமது நாட்டிலும் சிற்சில விடங்களில் இப் பாதிரிமார்கள் தச்சவேலை, செங்கல் வேலை, துணி நெய்தல் முதலிய தொழில்களை கிருஸ்து மதத்திற் பிரவேசித்த ஏழைகளுக்குக் கற்பித்து வருகின்றனர். இவர்கள் தங்களுக்குரிய வேலையாகிய மதபோதனையை மாத்திரம் செய்து வருவாராயின், அதனால் மனிதவர்க்கத்திற்கு விலையில்லாத பேறுண்டாகலாமென வைத்துக் கொண்டாலும், தேச செல்வ விருத்திக்கு அவர்கள் பாடுபடுவது காரணமாகமாட்டாது. பரம பொருளினது நித்தியமாகிய பதவியின் பெருமையை யவர்கள் நம் தேசவாசிகளுக்கு அளிப்பது உண்மையாகவே பலித்தாலும் இதத்தில் நம் தேசவாசிகளின் செல்வப் பெருக்குக்கு அவர்களுடைய ஞான மார்க்கம் பயனற்றதே யாகும்.

பூர்வ காலத்தில் ரிஷிகள் என்று கூறப்படும் இந்துக்களின் குருமார்கள், ஒரு காலத்தில் கல்விக்கு இன்றி யமையாதவர்களாய் இந்துக்களுடைய செல்வ விருத்திக்குக் காரணமா யிருந்தனர். வேதத்தை ஓதுதல், ஓதிவைத்தலென்ற வேலையை மாத்திரம் செய்யாமல் மழையின் காலத்தையும் வரவையும், விதைக்கக் கிரமமான பருவத்தையும், துஷ்ட மிருகங்களைக் கொல்லுவதற்கு வேண்டிய சாதகங்களையும் ஜனங்களுக்கு போதித்தனர். தவிர இவர்கள் தேசத்தின் ஜனங்களுக்கு, தங்கள் நடவடிக்கையினால் ஒரு திருஷ்டாந்தமாக நின்று சீர்திருத்தத்தையும் திரவிய விருத்தியையும் செய்தனரென்றே கூறப்படுகின்றது. ஆயினும் தற்காலத்திலுள்ள வைதீகர்களின் உதவி நம் தேச ஜனங்களுக்கு பரலோகத்திலுயர்ந்த பதவியை யடைவதற்கு எவ்வளவு அவசியமாயினும், தேச செல்வப் பெருக்கத்திற்கு சாதகமொன்றுமில்லை.

T. C. வெங்கடரமணய்யர்.

Sita-A Tale of Hindu Domestic Life.

சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

——:-(o)-:——

35 - வது அதிகாரம்.

இராமச்சந்திர அய்யர் புறப்பட்டுப் போனவர் காமேசுவரய்யருக்கு ஒருமாதம் வரையில் கடிதமொன்றும் எழுதவில்லை. இராமச்சந்திர அய்யர் தாய்க்கு இராமச்சந்திர அய்யர் விஷயமாய் விசாரம் அதிகமாகி விட்டது. அவளுக்கு அங்கே இருக்க பிரியமில்லை. காமாக்ஷியம்மாளும் லக்ஷ்மியம்மாளும் எங்கே யிருக்கிறார்களென்பதை நாமிதுவரையில் சொல்லவில்லை. காமேசுவரய்யர் இராமச்சந்திரய்யரோடு வந்து சேர்ந்ததும் லக்ஷ்மியம்மாளும் காமேசுவரய்யருடைய சுவீகாரப் பிள்ளையும் கூடவேவந்து விட்டார்கள். ஆனால் காமாக்ஷியம்மாள் மட்டும் பூவரசநல்லூரிலேயே இருந்து விட்டாள். அவளுக்கு இராமச்சந்திரய்யரையும் அவர் தாயையும் கண்டால் ஆகாது. ஆதலால் அவள் வரமாட்டேனென்று சொல்லிவிட்டாள். ஆனால் இராமச்சந்திரய்யருக்கு அவள் வருவதில் ஆக்ஷேபனை யொன்றுமில்லை. அவரும் அவளை வரும்படி வருந்தி யழைத்தார். காமாக்ஷியம்மாள் தன் கெட்ட எண்ணத்தாலேயே, போகாமலிருந்து விட்டாள்.

காமாக்ஷியம்மாளுக்கு தமக்கை பெண்ணை காவாலி சுப்பய்யனுக்குக் கொடுத்திருந்தது. காமேசுவரய்யர் பூவரசநல்லூரிலிருந்தவரையில் காவாலி சுப்பய்யன் வீட்டிற்கு சாமான்கள் ஒன்றும் விலைக்கு வாங்க வேண்டியதில்லை. அவன் காமேசுவரய்யரை ஏமாற்றி பணம்பறித்துக் கொண்டிருந்தான். காமாக்ஷியம்மாள் காமேசுவரய்யர் வீட்டிலிருந்து சுப்பய்யன் வீட்டிற்கு சாமானாக தாட்டிக்கொண்டிருந்தாள். காமாக்ஷியம்மாள் காவாலி சுப்பய்யன் வீட்டில் சகல காரியங்களையும் பார்த்துவந்தாள். உண்ட வீட்டிற்கிரண்டு நினைப்பதற்கு யாரையாவது திருஷ்டாந்தமாகச் சொல்ல வேண்டுமானால், காமாக்ஷியம்மாளைத் தான் முன்னாடி சொல்லவேண்டும். இவளை சாப்பாடு போட்டுக் காப்பாற்றுகிறது முழுவதும் காமேசுவரய்யராயிருக்க இவள் அபிமானம் முழுவதும் காவாலி சுப்பய்யன் குடும்பத்திலேயே இருந்தது. காமேசுவரய்யர் இராமச்சந்திரய்யரிடம் போய் சேர்ந்துகொண்டபிறகு காமாக்ஷியம்மாள் சுப்பய்யன் வீட்டிலேயே இருக்கவேண்டியிருந்தது. சுப்பய்யன் பெண்டாட்டிக்குக் குடும்பத்தின் கஷ்டம் அப்போது தான் தெரிந்தது. காமாக்ஷியம்மாள் சகல காரியங்களை செய்தும் அவளுக்கு வைது கொண்டே சோறு போட்டாள். காமாக்ஷியம்மாள் இந்த ரோசம் பொறுக்கக் கூடாமல், காவேரியில் ஓர் மடுவில்போய் விழுந்து இறந்து விட்டாள். காமேசுவரய்யர் இராமசந்திரன் எல்லோரும் இந்த சாமாசாரத்தைக் கேட்ட பிறகு, வருத்தப்பட்டு, அவளுக்கு செய்யவேண்டியதை செய்து முடித்தார்கள். சுப்பய்யன் பெண்சாதி அதைக்கூட கவனிக்கவில்லை. காமாக்ஷியம்மாள் காரியம் இப்படி முடிந்தது.

காமேசுவரய்யர் லக்ஷ்மியம்மாளையும் தன் சுவீகாரப்பிள்ளையையும், ஊரிலேயே விட்டு விட்டு, பார்வதியம்மாளையும் ஒரு பரிசாரகனையும் கூட்டிக் கொண்டு இராமசந்திரய்யரைத்தேட புறப்பட்டார். இராமசந்திரய்யரைத் தேடப்போன காமேசுவரய்யர் வெகு நாளாகியும் வாராததால், அவரைத் தேடுவதற்கு லக்ஷ்மியம்மாளும் அவள் குமாரனும் புறப்பட்டார்கள். கூடத் துணைக்கு லக்ஷ்மியம்மாளின் தம்பி லக்ஷ்மண சாஸ்திரிகளென்ற ஓர் சாஸ்திரம் படித்தவரைக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். இராமசந்திரய்யர் இன்னும் வரக்காணோமென்பதைக் கேட்டு விசாரப்பட்டுக் கொண்டிருந்த இராமச்சந்திரய்யர் மாமனார் சுப்பராமய்யரும் அவர் மனைவி பாகீரதியம்மாளும், தங்களுக்குத் துணையாக தன் சின்னப்பெண் மீனாக்ஷியையும் அவள் புருஷன் வெங்கடாசலத்தையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். இராமச்சந்திரய்யர் புறப்பட்டுப்போய் ஒரு மாசத்துக்கு மேலாகியும் சுப்பராமய்யருக்கு உடனே புறப்பட சரிப்படவில்லை. மேலும் அவர் சின்னப் பெண் மீனாக்ஷிக்கு அந்த வருஷம்தான் தலை தீபாவளி.

சின்ன மாப்பிள்ளை வெங்கடாசலத்துக்கு மாலைக் கண் அதாவது மாலைவேளையில் கண்தெரியாது. பகலில்தான் தெரியும். இவன் கலியாணத்தின் போதே இந்த நாள் வழக்கத்தை யனுசரித்துப் பெண்டாட்டியோடு பேசுவதை வழக்கமாக செய்துவிட்டான். இவன் மாமனார் வீடு வந்ததும் பெண்டாட்டி ஓடிவந்து இவனை விஜாரிக்காம லிருக்கமாட்டாள். இவன்பெண்டாட்டியும் வீதாவுக்கு தங்கையாதலால் அழகுக்கு கேழ்க்கவும் வேண்டுமோ. அதிலும் மெட்டிசலங்கை

யெல்லாம் போட்டுக்கொண்டு வரும்போது அவள் மெட்டி அவளுடைய பாலியத்தை சுட்டிக் காட்டி, அவள் நடக்கும்போதெல்லாம் பதினெட்டு பதினெட்டு என்று ஓசையிடும். தீபாவளிக்கு அழைக்கப்பட்ட வெங்கடாசலம் ஊரைவிட்டு வெகுதாமதமாக புறப்பட்டபடியால் மாமனார் வீட்டுக்கு அஸ்தமித்தவுடன் வந்துசேர்ந்தான். இவனுக்கு மாலைக்கண் என்பது ஒருவருக்கும்தெரியாது. வந்தவன்உள்ளேபோக கண்தெரியாமல் வெளிதிண்ணையி லுட்கார்ந்து விட்டான்.

சுப்பராமய்யர் தன் வீட்டில் புதிதாய் ஓர் ஆட்டுக்குட்டி வாங்கியிருந்தார். அதற்கு சலங்கைகள் கட்டி ரேழியில் கட்டப்பட்டிருந்தது. அது புதிதாக வாங்கப்பட்டபடியால் வந்தவர்களையெல்லாம் முட்டிக் கொண்டிருந்தது. இந்த ஆடு சற்று நேரத்திற் கொருதரம், சலங்கையை குலுக்கிக்கொண்டு நின்றது. வெங்கிடாசலமய்யர் பார்த்தார். ஓகோ நமது பெண்சாதிதான் தனியாக ரேழியில் நம்மைப்பார்க்க வந்திருக்கிறாளென்று எண்ணி, மெள்ள ரேழிக்குப்போய் சபதம்வந்த இடத்தில் 'சென்று, ஏண்டி மீனாக்ஷி நான் வந்திருக்கிறது உனக்கு இப்போதுதான் தெரிந்ததோ' என்று சொல்வதற்குள் ஆடு ஒருமுட்டுமுட்டி அவரை கீழே தள்ளிவிட்டது. வெங்கடாசலமய்யர் ஓகோநாம் மோசம் போனோமே யென்று மெள்ள எழுந்திருந்து பழயபடி திண்ணையிலேயேயுட்கார்ந்தார். அன்றுவிடியற்காலம் எண்ணெய்தேய்த்துக் கொண்டு வெங்கடாசலமய்யர் தீபாவளி ஸ்னானம் பண்ணும்பொழுது பகீரதியம்மாள் தன் பெண்ணை புண்ணாக்கு புருஷனுக்கு கொண்டுபோய்க் கொடுப்பதுபோல போய் க்ஷேமசமாசாரம் விசாரித்துவிட்டு வரச்சொன்னாள். பெண் சலங்கையெல்லாம் போட்டுக்கொண்டு தூசையோடு உள்ளேபோனாள். வெங்கடாசலமய்யர் இந்த சப்தத்தை கேட்டவுடனே திகிலடைந்தார். தன் மனதிற்குள் அய்யோ பாவிபசங்கள் யாரோ ஆட்டை அவிழ்த்துவிட்டார்களே என்று திகிலடைந்திருக்கும் போதே சப்தம் கிட்டவந்தது. உடனே வெங்கடாசலமய்யர் முட்டி விட்டா லென்ன செய்கிற தென்று ஓங்கி ஒரு அடி அடித்தார். பெண் புண்ணாக்கை அப்படியே போட்டுவிட்டு கோ வென்று கதறிக் கொண்டு போனாள்.

உடனே வெங்கடாசலமய்யர் அய்யோ மோசம் போனோமே யென்று வருத்தப்பட்டார். பிறகு எல்லோரும் வெடியவில்லை யென்று சற்று தூங்க ஆரம்பித்தார்கள். வெங்கடாசலமய்யரும் ஓர் உள்ளில் தூங்கினார். சற்று நேரத்திற்கெல்லாம் வெளியே கால் அலம்பப்போகப் புறப்பட்டு, வழி தெரியாமல், மாமியார் படுத்திருந்த அறைபில்போய் அவள்காலில் இடறி கீழேவிழுந்தார். பாகீரதியம்மாள் விழித்துக் கொண்டு மாப்பிள்ளே இதென்னவென்று கேழ்க்கவும், வெங்கடாசலமய்யர் ஓகோ மாமியார் காலை யல்லவா இடறி விட்டோமென்று கண்டு அதைகாட்டிக் கொள்ளாமல் அவள் இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு, மாமி உங்கள் பெண்ணை அடித்து விட்டேனென்று கோபித்துக்கொள்ளக் கூடாது என்றார். இப்படி ஒவ்வொரு சமயத்திலும் குட்டு வெளியாகாமல் காப்பாற்றுவது வெங்டாசலமய்யருக்கு வெகு கஷ்டமாயிருந்தது. அவர் வெகு பேரிடம் லவ்யம் பார்த்துக்கொண்டு கடைசியில் அந்த வியாதியினின்று விடுவித்துக்கொண்டார். (இன்னும்வரும்.)

எஸ். ராமஸ்வாமிஐயர்.

——→•←——

To Our Readers & Subscribers.

விவேகசிந்தாமணியை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கு.

——◆——

விவேகசிந்தாமணி யேற்பட்டு 18-வருஷங்களாய் விட்டன. 18-வது வால்யமும் சென்ற மார்ச்சு மாசத்தோடு முடிந்து போயிற்று. இந்த ஏப்பிரல் மாசத்து சஞ்சிகையோடு 19-வது வருஷத்து வால்யம் ஆரம்பமாகிறது. இது ஆரம்பமானது முதல் அறிவைப் பரவச்செய்யும் நோக்கம் ஒன்றையே பெரிதாக வெண்ணி அதற்காக வேண்டிய ஏற்பாடுகளையே முனைந்து நின்று செய்து வந்திருக்கிறோம். அறிவு என்றால் என்ன?

"அறிவுடையார் எல்லா முடையார்
அறிவிலார் என்னுடையரேனு மிலர்."

என்று திருவள்ளுவநாயனார் செப்பியிருக்கிறார்.

இந்த விவேகசிந்தாமணிப் பத்திரிகையை நாம் வெளிக்கொண்டு வந்த பொழுது (1892-ம் வருஷத்தில்) வேறு மாதாந்தரப் பத்திரிகைகளே யில்லாமலிருந்தன. 'இது துவக்கப்பட்ட பின் தோன்றிமறைந்த

பத்திரிகைகள் எத்தனையோ! இதன் பேரையொட்டியும், இதன் நடையை ஒட்டியும், இதன் வழியையொட்டியும் வெளிவந்து நடைபெற்று வரும் பத்திரிகைகள் பலவுள.

விவேகசிந்தாமணி வேதாந்த பரிபாஷை மிகுந்ததாக விருக்கிறதென்று சிலர் குறை கூறுகிறார்கள். குறைபுள்ள மனது குறைகூறிக் கொண்டே தானிருக்கும். "மனிதன் அனுபவிக்கப் பிறந்த ஆத்மன். 'ஆத்மன்" என்றால் "அறிவுடையான்" என்று. அருத்தம்: வேறொன்று மில்லை.

தனு கரண புவன போகக்கள் என்று சொல்லும் அனுபோகத்துக் குரிய நான்கு சாதனங்களில்,

தனு: என்பது தேஹம். அம்பு விடுதற்கு வில் எப்படி யுதவுகிறதோ அப்படி ஸங்கல்ப மாத்திரத்தினாலுண்டான இவ்வுலகத் தோற்றங்களை (பிரபஞ்சத்தை) யுணருவதற்கு ஸங்கல்ப சக்திக்கு இருப்பிடமான தேஹம் காரண மாயிருக்கிறது.

கரணம்: என்பது மனம் முதலான இந்திரியங்கள்: வில்லில் பூட்டிய நாண் (கயிறு, சூத்திரம்) எப்படி வில்லுக்கு பிகுவையும், அதில் பூட்டப்பட்ட அம்புக்கு விசையையும் கொடுக்கிறதோ, அப்படிப்போல, மனோந்திரியாதி கரணங்கள் "தபஸ்" என்கிற "நாணேற்றம்" காரணத்தால் தேஹத்துக்கு வலுவையும் காரியசித்தியையும்), சங்கல்ப சக்திக்கு விசையையும் கொடுக்கிறது.

புவனம்: என்பது லோகங்கள். இவை ஆந்தரமாகவும் பாஹ்யமாகவும் உள்ளன. அம்புபோன்ற கூர்மையுள்ள அறிவு (ஆத்மபுத்தி) பாய்ந்து (ஊடுருவி) செல்வதற் கிசைந்த இடமாய் இருக்கிறது. ஆகாச வெளியில் அம்பு பாய்ந்தாலன்றி லக்ஷியத்தைப்போய்த் தாக்காது. அஃதேபோல ஆந்தரபாஹ்ய லோகங்களில் (லோக காரியமான லௌகிக விசாரங்களில்) புத்தி பிரவிர்த்தித்தாலன்றி அநித்யாநித்ய வஸ்து விவேகம் என்னும் உண்மையாகிய லக்ஷியத்திற்போய்த் தாக்காது.

போகம்: நித்யாநித்ய வஸ்துவிவேகத்தால் பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவி உண்மையனுபவம் உணர்தலே போகம். இன்ப துன்ப சுகதுக்க ரூபமான 'துவந்துவ' போகங்களெல்லாம் இந்த உண்மையான ஏகபோகத்துக்கு அனுகுண மாயிருக்குங் காரணத்தால் அனுபோகங்கள் எனப்படும்.

இப்படியுள்ள தனு, கரண, புவன, போகம் என்றுள்ள நான்கு சாதனங்களையும் முறைப்படி அனுஷ்டித்து தர்மார்த்த காம மோக்ஷ மென்கிற சாதகமாம் பயனைப்பெறுதலே அறிவின் தொழிலாம். இப்படிச் சாதன சாதகசித்தி பெற்ற சங்கல்ப மாத்திரத்தால் எல்லாம் சாதிக்க வல்லாதல் சாத்திய லக்ஷணமாம். இந்த லக்ஷணமமைந்து லக்ஷியத்திற் சிந்தை லயித்தவர் ஸித்தபுருஷர்கள் எனப்படுவர்.

அப்படிப்பட்ட ஸித்தபுருஷர்களின் அடிமையாகி அவர்களுக்குத் தொண்டுபுரிதலே தொழிலாக்கொண்ட சில மஹான்களுதவியால் இந்த விவேகசிந்தாமணி யானது இகபரசாதனானுகூல மாகவும், பராபர சாதகார்த்த மாகவும், லௌகீக, வைதீக, உத்யோக, மஹாயோக மார்க்கங்களை, சுருதியுக்தியனுபவங்களுக்கேற்க, உண்மைவழிப்பட்டு உள்ளாராய்ச்சி செய்து ஸ்வாநுபவத்தால் சாத்தியமென்று கண்டதைப் பரோபகாரார்த்தம் பல்லோரறியப் பஹிரங்கப்படுத்தப் பேருதவி புரிவதாயிருக்கிறது.

மூக்கரையன் கதையாக எல்லோரையும் மூக்கறுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டு மென்கிற எண்ணம் லவலேசமு மில்லையால், "உண்மைக்கொரு நாளும் கேடுவராது" என்கிற சித்தாந்தத்தினால் "மெய்யே வெல்லும் பொய்யல்ல" என்னும் வேதவாக்கியத்தை யனுஷ்டித்து, "ஸத்தியம்வத; தர்மம் சர" என்ற சுருதி வாக்கியப்படி, இக்கலிகாலத்திலும், ஸத்ஜனர் உண்மை யுபதேசம் செய்து தர்ம்ம வழிகாட்டச் சித்தமாயிருக்கிறார்களென்பதை நிரூபிக்க, இப்பத்திரிகையை "அறிவைப் பரவசசெய்ய" வென்றே நடத்திவருகிறோம். இதன் சந்தாதொகையை காலந்தாழ்க்காமல் உடனுக்குடனே யனுப்ப வேண்டிய கடமை யொன்றைத்தவிர வேறு திரவியஸகாயம் யாரிடத்தும் நாம் எதிர்பார்க்கவில்லை. ஆதலால் பத்திரிகையை வாங்கி வருவோர் காலந்தாழ்க்காமலும் சந்தா பாக்கிவிழாமலும் உடனுக்குடனே அனுப்பி விடவேணுமாய் எல்லாருக்கும் விண்ணப்பம் செய்து விநய பூர்வமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா பாக்கி தாரர்களுக்கு அறிவிப்பு.—சந்தா பாக்கியை நிறுத்தி வைத்துக்கொண்டு வல்லடி வழக்குரைத்துச் சண்டித்தனம் செய்கிற சாகஸக்காரர்களை "யத்பாவம் தத்பவதி" யென்கிற தர்ம சட்டத்துக்காளாக விட்டிருப்பதைவிட வேறு கடின தண்டனை யில்லையானாலும், ஆசிரம தர்மத்தையும், வியவஹார ஞாயத்தையும் உத்தேசித்து எல்லாரையும் சரி சமனாகப் பாவித்து பாக்கியுள்ள சந்தா தொகைக்கு விவேகசிந்தாமணியை வி. பி. போஸ்டில் அனுப்பி விடுவோம். சந்தா பாக்கியுள்ளவர்கள் பெரிய மனது வைத்து பாக்கித்தொகையைச் செலுத்திவிடக் கோறுகிறோம்.

பத்திரிகை நிறுத்தியும் பழம்பாக்கியைச் செலுத்தாதவர்கள் பேர்களை அவரவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளையும் காட்டி வெளியிடுவது டன் பணத்தை வசூல் செய்வதற்கான வேறு ஏற்பாடுகளும் செய்யப்படும்.

—:-:—

"O! MY GOD GRACIOUS."

PRAISES AND PRAYERS OF A PARENT-HEART

IN A SUPREME CRISIS OF LIFE ON EARTH.

"Our theism is the purification of the human mind."

"I may be allowed to point out, that language is the slave of thought; Thought, to use the words of Kingsley, grows out of Morals; Morals out of Religion; and Religion is what we preach and also practice. In short, a people's literature is its life, it is what its daily life makes it."—*Sir Narayan chandravarkar* in the *Times* of *India* on the meaning of the tercentenary of the English Bible to Indians.

"It lives in the ear like music;" it is "part of the national mind"—Father Faber on the language of the English Bible.

'ஹே! தயாநிதே!"

திருவருட் சிறப்பு

பிரார்த்தனைக் கொத்து,

திருமயிலைக் கல்பகாம்பாள்ஸமேத
காபலீச்சுரர் முன் குறையிறந்தோதிய
திருவருட் சிறப்பு விண்ணப்பம்.

"தபஸிலனைவைத்துப் பூஜைபண்ணு"—குருவாக்கு.
"மனிதரில் நான் ராஜாவாயிருக்கிறேன்"—பகவான்
"சக்திக்குவித்து தனதுபசாந்தமே"—திருமந்திரம்.
"கனவானாலுங் கற்றுமற."—பழமொழி.

Wire: "M—here, suffering typhoid, start immediately"

"குழந்தை சென்ற ஐந்து நாளாக முலைப்பாலில் தான் உயிரைவைத்துக்கொண்டிருக்கிறாள்."கடிதம்.

பெற்றமனம் புற்றாகிச் செய்யு முறையீடு.

"ஐயகோ! தெய்விகமே அநியாயங்கண்டாயே
வையகத்தோ ரேசவுன்னை வாதுமிகச் செய்தாயே
மெய்யகத்தோர் மெய்விரிப்ப மாருட்டந்தான்போட்டுப்
பொய்யகத்தோர்பொய்மலியப்போராட்டங்கொண்டாயே!"

தோத்திரம்.

சமச்சிவாயவாழ்க நாதன்றாள் வாழ்க! [வாழ்க!
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான்றாள்
கோகழி ஆண்ட குருமணிதன் றாள்வாழ்க!
ஆகமம் ஆகின்று அண்ணிப்பான் றாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகங்கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச்சேய யோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரகுவி வாருண்டிறும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க!
ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி!
தேசனடிபோற்றி சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!
மாயப்பிறப் பறுக்கும் மன்னனடி போற்றி!
சீரார் பெருந்துறைத் தேவனடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!

முகவுரை.

சிவனவ னென்சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தைமகிழச் சகபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பனியான்.

திருவருட் சிந்தை.

ஆறுறுமாகியே ஐம்மூன்றுந் தானாகி
முன்னான்கு மூன்றோடு மூவாறு மாகின்றாள்
மும்மூன்றும் ஒன்றுபத்தாய் மண்டலங்கள் மூன்று
நாலே சிவபுரமாய் நன்மதில்கள் மூன்றுஞ்சூழ் [சூழ
வாசல்கள் நான்கோடு வாலைவித்தை யம்பிகையாய்
தேவியவள் தான்திகழும் திவ்யபுரந் தான்கண்டு
ஆவிநெக்கு நெக்குருக ஆனந்தம் மேற்கொண்டு
பாவனா பூஜையதால் பணண்டையதாம் வாசனைகள்
விருத்தியதே யாமொன்று விட்டொழித்து வாசனை
[யைக்
கிருதகிருத்திய பூசனையால் திருவருட்பா லுண்
[டேனே!

சக்திவேலாயுத! சரண்.

ஆவிநெக்கு நெக்குருக அன்புமிகுந் தென்புருகவே
யிதயபுண்டரமலரிலெழு ஸுமுகரஸவாறுமுக
ஸம்க்ரமண ஸ்ரீகண்டர் பூர்ணோதரத்துதித்
துமையன் பிழுக்கவே அசரீரி ஈஸசரீரியாகி
யீரண்டஸ்வரூபிரூப மிவைக்கிலக் காகியே
யனலுண்டமெழுகு பேலாதாரவாதேய நேரொக்கவே
யொருரூப மாய்நிற்கு மெழில்பொழி யென்னீசனே
சரணம் சரணமென்றுன் பாதமே யடைந்தேன்
சரவணபவ வென்னைக் காத்தருளாயே!
சக்திவேலாயுத சமயந்தப்பாமலே
கைகொடுத் தென்னை நீ காத்தருள்வாயே!
ஓம் சரவணபவ நமோ நமோம்!
ஓம்தத்ஸத் இதி நமோ நமோம்.

சகபுராணம்.

(குதலைம்ஹிதை.)

I.

பூதமெனச் சொல்லியவெச் சீவருக்கும்
போகமொடு மோட்சத்தை யளித்துக்காக்கும்
நீதியதாற் பரசிவனே பூதபாலன்;
நிகிலர்க்கு மாந்தானாய் நின்றெப்போதும்
ஏதமற வங்கங்கே யேவலாலே
யீசுவரன் ஈசான னிரண்மோவன்;
ஓதியவா யாவையுமே பாலிக்கின்ற
ஒழுக்கத்தாற் பரமசிவன் பர்த்தாவாவன்.

II.

அகிலசரா சரசகமு மழிப்பதாலே
யச்சிவனே யர்த்தாவென் றறையலாவன் ;
சகலமுமே யபரோக்ஷ மாகவென்றுஞ்
சற்றும்விடா தறிவதனாற் பரமன்றானே,
நிகழுமகா சிவியாவன்; என்றுமெங்கும்
நிறைஞான வடிவாக நிகழ்வதாலே,
நிகழ்தேவ னெனலாவன் ; பொய்யாயெல்லாஞ்
சிருஷ்டிக்குந் திறமையினா லீன்றேனாவன்.

III.

பூரணமாய்ப் பரமசிவன் வியாபித்தெங்கும்
புரையறவே நிறைந்ததனால் விஷ்ணுவாவன் ;
காரியமாம் ஜகமெல்லாம் நசித்தபோதுங்
காரணமாம் பரமசிவன் நசியாதத்தாற்
பூரணமாம் அவன்என்றும் நாசமில்லான் ;
புகன்றசடா சடமான சகத்துக்கெல்லாங்
காரணமாம் பரமசிவன் நாதனான
கணக்கதனாற் பிரபுவாகச் செப்பலாவன்.

IV

எக்குறிகைத் தனைத்தையுமே யேவாநின்ற
ஈச்னுயிர்க் குயிரான பான்மையாலே
பங்கமிலாப் பிராணனெனப் பகரலாவன்;
பரிச்சேத மேதொன்று மின்றியென்றுந்
துங்கக வடிவாகித் துவிதமின்றித்
துரியவடி வாதலினாற் பூமானவன்;
மங்குசரீ ரங்களிடை யான்மாவாக
மன்னுவதாற் புமானெனவும் புகலலாவன்.

V

வேடன் அவதாரம்.

"மங்குசரீ ரங்களிடை யான்மாவாக
மன்னுவதாற் புமானெனவே" பேர்பெற்றெந்தை
கங்குலிற முடையவனாய்க் களங்கமாகத்
தன்னுமொரு சிந்தையினாற் றாசேபோலும்
பங்கமுறு கலிலைவிட் டொழுகுவோனாய்
மன்னுமொருபூங்காவிற் கெட்டொழுகு காட்டானை
யெங்குஞ்சென் றேதமிலாப்பரிதனை யழிக்கக்கண்டு
தன்னுமாமதயானை வேட்டையாடத் தோன்றினான்
[தாணியில்

"சிவராத்திரி"—யன்றே.

VI

பூபாலன் அவதாரம்.

தாணியிலே வந்துதித்த வேடன்தானும்
பரிசினாய்ப் பழிபாவங்கட் கஞ்சானாகி,
வியனுலகில் மாந்தர்களைக் காக்கவென்று
விண்ணுலக மேவியவன் பின்னுந்தோன்றி
மண்ணிலொரு பூபால னாகவந்து
மாட்சியுடன் தாணியெலாம் ஆண்டுவந்தான்,
காட்சியுடன் சாட்சியுமாய் நின்றவப்பன்
கண்ணப்பன் விக்கப்பிடித்து நில்லென்றான்முன் !

VII

தபசீலன் அவதாரம்.

பின்னுமொரு அவனாரத்திற் புமானேயாகி
பின்னமுறு தரையில்வந் தவதரித்தான்
தபசீலன் தத்துவனாய் தர்ம்மவானாய்த்
தத்பதத்தின் வாச்சியத்திற் கிலக்ஷியமாய்
அசிபதமே யானவந்த கல்பகாம்பான்
நசியாத திருமயிலா யவதரித்து
அதிபதமா மஹேசுவரனைப் பூஜைசெய்து
நிஜபதமாம் நின்மலனை யடைந்த வூரில்.

VIII

தபஸிலன் அவதாரம்.

தற்பரனே பின்னுமிந்தத் தரையில்வந்து
தபஸிலனாய்ப் புமானாகி யவதரித்து
மாசிலான் தானேயாகி மன்றிலாடும்
ஈசனாப் பேர்பூனைந் திரக்கமின்றிப்
பேதமிகச் செய்துபல பரீக்ஷையாலே
"பரகதியும் இதுவன்றி வேறன்றென்று" †
பற்பலவாம் சோதனையால் பரிந்துகாட்டி
சிற்கனமாய் சிற்சுகமாய் நின்றான்றானே !

IX

சங்கரனே சாசுவதன்.

பக்தர்கட்கா மிடரையெலா மரிப்பதாலே
பரமசிவன் அரனாவன்; மற்றுமன்னோன்
நித்தமுமே யனைத்துக்கு முள்ளாய்நின்று
நீதியுற வேவுதலால் அந்தரியாமி:
அத்தனவன் அனைவர்க்கும் நிஜமாம்ரூபம்
ஆகிநிறைந் திருப்பதனால் ஆன்மாவாவான்:
சத்தியமாய்ச் சந்ததமு மிருப்பதாலே
சங்கரனே சாசுவத னாவனென்றும்.

X

சிவபூஜை=அபரோக்ஷஸித்தி.

"பக்தர்கட்கா மிடரையெலா மரிப்பதாலே
பரமசிவன் தானே (யென்) அரனுமாகி"
அகங்கார மமகாரங்களறவேபோக்கி,
"நித்தமுமே யனைத்துக்கு முள்ளாய்நின்று
நீதியுற வேவுமவன் அந்தர்யாமி"—
"சருவர்க்குஞ் சந்ததமு மான்மாவாகச்
சாட்சாத்தாய் அகம்அகமென் றிலங்குஞ்சோதி—
அரியசிவன் அபரோக்ஷ மென்னுளானான்."

XI

(1) துவஜாரோகணம்.

அபரோக்ஷ மாயென்னுள் விளங்குஞ்சோதி
நிர்விகற்பத் தாலென்றன் நிலையுங்காட்டி
நீதியுடன் அதைக்கடக்கும் வழியுங்காட்டி
நிலைகுலையா நிர்விகற்ப நிலையில்நீயும்
நீதியுடன் அநீதியெலா மொன்றேயென்று
ஓங்கார வடிவாகி யுள்ளுக்குள்ளாய்
உள்-புறமென் றோதியவோர் பேதந்தீர்ந்து
எல்லைதற்குஞ் சாட்சியெலா யெல்லாமாகி—

† "அயமாத்மா பிரஹ்மம்" என்பதைக் குறிப்பி

XII

(2) பிரஹ்மோற்சவம்.

அல்லவுமாம், அற்புதமாம் சாந்தியாலே
உபசாந்தியுட்புகுந்து சித்தனாகி
சிற்கனமாய்ச் சின்மயமாய்ச் சிந்தைவிட்டுச்
சிந்தையிலாச் சிந்தையினாற் சிந்திப்பாயென்
றார்ப்புறமுள்ளதோர் மந்தைவெளி மூலையில்
நாற்சந்தி கூடுமோர் நல்லிடந்தன்னில்,
மறைந்திருந் தென்னைச் சண்டைக்கிழுப்பான்
மாயாவியாமந்தக் கிருஷ்ணனை யேவி—

XIII.

(3) மாயாஜாலம்—பூதவாஹனம்.

மருவிலாச் சதாநந்தன் மனையேடுகொளவி
ஈம்சக்தி முந்நூற் றிருபத்தைந்தாலே
ஏகமாம் என்னைமிக வேகமாக்கடிந்து
நாகஸர்ப்பம் போலவே சீறிச்சினந்து
நாட்டார்கள் நகைக்கவே சந்திக்கிழுத்து
ஹூங்காரம் போட்டென்னை யுருட்டிமருட்டி
உண்மையாம் தியாகராஜன் சந்திக்கிழுத்து
உண்மையாய் மனையேடு போனதைச்சொல்லி—

XIV.

(4) மாயாகாரியம்.— புருஷாமிருகவாகனம்.

உள்மர்மம் சொல்லாது வம்புக்கிழுத்து
கள்ளத்தனஞ்செய்தென் கண்ணில்மண் போட்டு
கௌவினதோர் மனையேட்டைக் கற்பனையாலொளி
உள்ளத்தையுள்ளபடி சொல்லாது மறைக்கவே [த்து
மாயாவிகிருஷ்ணனை மந்தைவெளி யிருந்தேவி
கள்ளத்தனமாகவே காரியத்தை முடிக்கவென்று
குள்ளத்தனஞ்செய்த வாமனைப் பின்னேவி
ஈம்சக்திமுன் நூற் றிருப்பதனதா தாலென்னை
முன்னிலும்பின்னதாக மாசவே மருட்டிட—

XV.

(5) மாயையின்கூத்து—விருஷபவாகனம்.

என்னிலும் "அத்தன் அனைவர்க்கு நிஜமாம்
ரூபமதாகி நிறைந்திருப்பதனால்" ஆன்மாவாமவன்
அந்தர்யாமியா யென்னுளேநிறைந்து பின்னாமில்
[சோதியாம்
பெருந்துறையப்பனாய் உள்ளத்தைச்சொல்ல உளவு
[கண்டுணர்ந்து,—
சுந்தரன்பரவையா ரெனச்சொல்லு மிருவர்க்கும்
சாக்ஷியாயிருந்துமுன் னுளவுசொன் னதுபோல்
ஈசுவரன் மாயையா யிருந்திந்த லீலையை
நடத்துறு னென்றுமே யுள்ளத்துணர்ந்து—

XVI.

(6-7) மாயையைவென்று நிஜபதாஸ்திரம்
பெறல் : ஆனைவாகனம்—இரதாரோகணம்.

உண்மைப்பக்தியா லூக்கமிகக் கொண்டு
ஈம்சக்தி முந்நூற் றிருபத்தைந்தாலே
ஈசுவரன்தன்னை யெதிர்த்துநான் வெல்லவும்,—
வில்லாலெதிர்த்த விடல்வீர னுக்கப்போ
பாசுபதாஸ்திரம் பரிந்துமே யளித்தவன்,
புட்டுக்குமண்சுமந்து பிரம்படி பட்டவன்,
சொல்லா லெதிர்த்தவென் சொல்லுக்குவந்து
"நிஜபத" மாமோர் நின்மலாஸ்திரத்தை
வாக்கியாதீத வாக்கியமாத் தொடுத்து
'துவம்பத' - 'தத்பத' - 'அசிபதங்' - கடந்துநீ
'அதிபத'வண்மையை அமர்ந்திருந் துணர்ந்து
சாந்திபதத்திலே சத்துருவை வென்றுபின்
உபசாந்தத்தாலே யுண்மையுரு வாகியே
'நிஜபத'த்தென்றும் நிலைத்திரு வென்றான்.

XVII

(8) துரியப்பரி வேட்டை.

நிஜபதமைந்தையும் நேர்நின்று கண்டநான்
'யதார்த்தம்' 'ரகஸியம்' 'அறுதி'யென்றோதும்
மூவகை யுண்மையை முத்தியிற்கண்டு
சக்தியுருவானவம் மூன்றையு மொன்றாப்
பக்தியினாலே பரிந்துமேற் கொண்டு
யுக்திக்கு மப்பாலாய் யுகாந்தரவெளியில்
சக்திக்கு மேலாய் சாந்தியாதீதமாய்
புத்திக்குமெட்டாத பூரணமாம் வெளியில்
சக்திக்குலக்ஷியமா, ஞானவாம் பதுவாய்
எத்திக்குமொன்றாய் இலங்குமோர் மோனமே—

XVIII

(9) நிஜபதாஸ்திரம் தொடுத்தல்.

லக்ஷியமாய்க் கொண்டுநான் நிஜபதாஸ்திரத்தை
லளிதையவள் கையேந்தும் கரும்புவில் தான்வாங்கி
விஜயதசமியிலே வில்லம்பு தொடுத்தாப்போல்
சிவராத்திரியன்றுநான் சிவபூஜை தான்முடித்து
நவராத்திரிமுதற்கொண்டு நான்செய்த பூஜாபலன்
அத்தனையுமுருவாகி அக்ஷரங்கள் தாமாக,
அக்ஷரத்துக்கப்பாலாம் ஆதிசிவன் பதம்பணிந்து
காணேற்றிக்வனிசெய்து நாமார்ச்சனைகள்செய்து
விண்ணேறி வானேறி வீணர்மனங்காணாத
கண்ணேறிக் கானேறிக் கைவல்யந்தானாகி
எண்ணேறிப் பறிக்கவொண்ணா ஏகாந்தவெளியில்
[தொங்கும்
மோனவுருவாமந்த மாம்பழத்தை † இலக்குவைத்து
நிஜபதாஸ்திரத்தையான் வில்வாங்கித் தொடுத்துவிட்
[டேன்.

† Compare:—

"அம்மாள் எனக்கொரு மாம்பழம் ஈன்றாள்
அதற்குத் தோலுமில்லை காருமில்லை
கட்டியுமில்லை கொட்டையுமில்லை
தின்னத் தின்ன ருசிக்கு மென்றாள்
தெவிட்டாத தேன் கட்டியென்றாள்."

(10) தர்ம்மபிக்ஷைக் கிரத்தல்: பிட்சாடனர் திருக்கோலம்.

"விட்டேன் வெகு வேகமதாய்
வேணமட்டும் நாணிழுத்து
சுட்டேன் மிகுதாபமதைச்
சூக்ஷியம்விட்டுச் சுபாவமேறிப்
பட்டேன் வெகுபாடெல்லாம்
பாரில்வந்த தபஸிலனல்
கெட்டேன் மிகுமண்ணாசை
கெடுவான் கெடுசிந்தையாலே."

பெண்ணாசை முன் விட்டேன்
பொன்னாசை பின் விட்டேன்
மண்ணாசை யவன்செயலால றவிட்டேன்
என்னாசை யறச்செய்த தபஸிலியை விட்டுளேற்குத்
தர்ம்மபிக்ஷையளி வீரோ தாணியில்வாழ் மாந்தர்களே!

வேதமாதாபிக்ஷைப்பிரதானம்: { அசரீரவாக்:— "ஸத்தியமேவஜெயதே நாந்ருதம்." "தர்மமேஜயம்."

பிட்சையாண்டவ ரூபதேசம்.

"தர்ம்மமேஜய"மென்ற பீக்ஷைகேட்டேன்:
தாணியிலே கலிமுற்றங்காலமாச்சு!
பாணியிலே யதிஷ்டானங் கூடலாச்சு!
அணியிலே அக்கினியும் தோன்றலாச்சு!
ஆன்பார்க்களீடேறு மார்க்கங் கேண்மின்:—
"ஆசையறுமின்கள் ஆசையற மின்கள்
"ஈசனோடாயினு மாசையறுமின்கள்
"பிட்சாடானத்திலும் பேதமறுமின்கள்
"மாசுபடிந்த மனத்தினுறவறுமின்கள்
"தூசுபடிந்த தபஸிலன்தயவை யாவினுறவெனவே
கண்டஞ்சியோடிப்பிழைமின்! பிழைமின்குழையீரே!

உண்டுடுத்துறங்கு வஞ்சகநெஞ்சினருள்ளம்போல் நீல
கண்டங்கறத்துள்ளம்நடமாடிகாட்டியவழியிதுவே!
நஞ்சுண்டஞ்சுண்டான் நெஞ்சுண்டெஞ்சிய' துவுண
பகர்சொல்லிதுவெனக் கண்டுண்டால்— [பான்
நிகர்சொல்லிலா நித்தமுத்த நின்மலசித்தாவீரே!

(11) திருக்கலியாணமஹோற்சவம்: அல்லது, திருவருட்பேறு. வீடுபேறல் விண்ணப்பம்.

விட்டேனுன் ஆசையெல்லாம்
வீடுபெற வேண்டியம்மா!
வீடானவீடுபெற வேணமட்டும்
பாடுபட்டேன்!—பாடுபட்டுத்தேடிப்
பணத்தைச்சே மித்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்
திருக்கூத்தை:—பணமில்லான்
இவ்வுலகிற் பிணமென்று சொல்லக்கேட்டேன்:
பணத்தைமிகத்தேடி பாங்கியிலேபோட்டுவைத்தேன்.
குணத்தைமிகத்தேடிக் கும்பகர்கள் பலசெய்தேன்:
"ரோசகபூரக கும்பகங்கள்" செய்திடவே
"தூரதுபோல்நிற்கும்" தலையென்ற துண்டையார்ச்ச!

(12) உமாமஹேசுவரர் தரிசனம்— பந்தம்பறி யுற்சவம்.

பாங்கியில்போட்டபணம் பாழாகத்தான்போச்சு!
ராங்கியில் பட்டகர்வம் ராஜஸத்தோடேபோச்சு!
கைலைய்யந் தான்வேண்டிக் கரபாத்திரசாமியானேன்
அர்ஞ்சுணனிவந்து அரும்பிச்சை யிட்டாள்காண்
லளிதையவள் முன்வந்து லளிதாலயமீன்றாள்
லளிதாலயத் துள்ளேயுண்டு சிந்தாயணிக்காஹரம்,
சிந்தாமணிக்ரஹத்தில் சிந்தையற்றுத் தபஸிருக்க
எந்தாயவள்தானும் சிந்தாமணிதந்து
சிந்தையிகநோகவென்னைச்சிரிப்பாணிகண்டாள்காண்

(13) ஆரோகண அவரோகணம்.

சிரிப்பாணிகண்டாலும் சீர்குலைய விடவில்லை!
ஊர்ப்பாடுபட்டுநீ யுண்மை யுணரவேண்டி
ஊரார்படும்பாட்டை யுன்னுள்ளேகாணென்று
தபஸிலனையேவியவள் தர்ம்மநிலை காட்டிவைத்தாள்
மாசிலையென்றுநான் மர்மத்தை வெளியிட்டேன்.
உன்னத்தைச்சொன்னேனென்றுன் மர்மஞ்சாதித்துக்
கன்னத்தனமாகவே கௌவினான் மனையேட்டை!
மனையேடுபோனாலும் மாட்சிகெடப் போகவில்லை!
மனையேடுமுறிந்தாலும் பதமெனக்குக் குலையவில்லை!
நினைவேடுநின்றாலும் நிமலன்சிந்தை குறையவில்லை!
முனையேடுகிழித்தாண்டான் †முத்திநிலைசித்தியிலே!

(14) வருதியோ எம்பாவாய்!

செத்துப்பிழைத்த குழந்தைக்கு விண்ணப்பம்.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திரபல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காண வருதியோ எம்பாவாய்!

(15) பூர்ணமத-அர்ப்பணம்.

வருதியோ எம்பாவாய் வாழ்மதுரைக்கோட்டைகட் [டிச்
சுருதியோ டறுதியெல்லாஞ் சுக்குமையால் நீயுணரக்
கருதியோகருத்திலனென் றுன்னுள்ளமுணர்ந்ததோர்
உறுதியோ! கண்டிலனான், கற்பகமே யர்ப்பணமீது
பூர்ணமத-இதிசாந்தி! [னக்கு!

ஓம்தத்ஸத்.

† சுந்தரமூர்த்தியடிகளைத் தடுத்தாள வேண்டித் திருவாரூர் அண்ணல் அவர் திருமணக்காலத்தில் முறியேடுகாட்டி அடிமைகோர, அவர் அதைக்கிழித்தெறிந்தும், அசல் வேறிருக்கிறதென்று சொல்லி அவரை யடிமைகொண்டருளிய தியாகராஜப் பெருமான் உலகுய்யக்காட்டி நிற்கும் "கர்மபலத் தியாகமாம்" முத்தி நிலைச் சித்தியில்,—என்று கொள்க.

—:-:—

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it." But,
"Make your choice and stick to it till you reach the End."
ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE T-

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 20 JUN 1911 MADRAS.



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1191ஆ மேமீ, விரோதிகிருது ஆ வைகாசிமீ [சஞ்சிகை. 2.

விவேகசிந்தாமணி அறிக்கை:
The Oldest and the Best Tamil Monthly.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

இது அறிவைப்பரவச்செய்வதற்கானதோர் ஒப்பற்ற மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை. பெயருக்கேற்றபடி இதில் விவேகத்தை விளைவிக்கக்கூடிய அற்புத விஷயங்கள் நிறைந்திருக்கும். இக்காலத்துக் கேற்றபடி தேசாபிமானம், பாஷாஞானம் நீதிபோதம், ஞான யோக சாதனங்கள், சதேச விதேச சரித்திரங்கள் முதலியவை அடங்கப்பெற்றுச் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுத் தமிழ்நாடெங்கும் கிடித்தகாலமாய் ஜ்வலித்து வருகிறது. இப்பத்திரிகையைக் வாங்கி வாசிப்போர் இகபர சாதனங்களிரண்டிலுந் தேறிப் பெருவாழ்வெய்துவர் இது 'காபிரைட் ரிஜிஸ்தர்' செய்யப்பெற்றிருப்பதால் இதிலுள்ள அற்புத விஷயங்களை வேறுவகைப்பத்திரிகையிலும் காணமுடியாது. கிரமப் போடுகிறார்கள் [illegible] வருஷசந்தா முன்பணமாக ரூ. 4. தனமான காகிதப் பதிப்புக்கு ரூ. 5. அந்நியதேசங்களுக்கு தபாற்கூலி 8-அணா அதிகம். முன்பணமல்லது V.P.வசூல். 1911-ஆ ஏப்ரல்மீ முதல் 19-வது வால்யம் ஆரம்பம். வால்யம் அல்லது வருஷக்கணக்காகவே சந்தா கணக்குவைக்கப்படும். பாதியில்நிறுத்தக்கூடாது.

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசித்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்ம விக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலு மிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான் சைச்சாற்றி. ஓம்.

MY SILVER JUBILEE.

"Wishing Your Journal All Success."

TWENTY-SIX YEARS OF HARD WORK.

(April 1885—April 1911.)

"Consis[illegible] Simplicity."

"I am much obliged to you for the [illegible] of your excellent Tamil monthly, "*Vivekachintamani*," you have kindly sent to me. It is full of interesting matter. Though I know but a little of Tamil, still I am able to read [illegible] appreciate it."—Communication dated 2—4—'11

"I beg to hand you.....my subs[illegible]ion for volumes 19 and 20, that is, up to [illegible] March 1913 for the thick paper Edition. [illegible] send me.....[illegible]ing your Journal all su[illegible]—Communication dated 11—4—'11.

"The magazine, is, as a rule, interesting from end to end"—Dr. G. U. Pope.

"It would be a pity if these articles were treated as ephemeral productions possessing only a momentary interest."—The Hindu.

"Fullterm Copyright."

"The Registration of the Proprietorship in the Copyright of the undermentioned Book," (viz., the *Vivekachintamani*) published by the Diffsion of Knowledge Agency having been secured from the very first, every page and part of it, with its reprints, reproductions and revised issues, is under the full and exclusive control of the Editor, the privilege of admission to which or first appearance therein, is, was, and ever will be open or reserved only to those who with heart and soul make an offering of their mental light to the cause, and unreservedly place their manuscripts with all inherent rights therein in the hands of the Editor. The right of reproduction, republication and revision of matter, first publishd in the Vivekachintamani or issued under the seal and authority of the Diffusion of Knowledge Agency, is solely and entirely reserved by the Editor and proprietor, to the said Agency, which through sunshine and storm he has maintained for the last twenty-five years.

This dedication of his life and life-work to the cause of "diffusion of knowledge" is so wellknown to all and the practice has been so long observed as to form a well-established tradition and policy of the Vivekachintamani and the D. K. Agency which the founder is resolved to honour and maintain undiminished, in spite of numerous imitators, who, in spite of their overflowing faith in the omnipotence of mammon, find it difficult to grasp and understand, much less to follow,

"Honesty" vs "Hypocrisy."

We find it necessary to re-state these long established facts to protect ourselves and our interests from the mischievous exploitations of literary scamps, piratical publishers and petty adventurers in the book-trade—an exuberant growth of literary-pests, which the dis[illegible]ve power and progress of Knowledge has, in [illegible] transitional stage and leavening process, in[illegible]ably though temporarily, brought into pro[illegible]ous being. We believe not in "humbug" [illegible] "hypocricy" but in "honesty" which we have [illegible], is "the best policy" in every walk of life.

"Our Seal."

Describing our Seal, Dr. G. U. Pope reviewing "the Vivekachintamani Series" in the Indian Magazine and Review, remarks:—

"We may remark that this series is published under the auspices of a native society (agency) for the 'diffusion of knowledge,' whose seal on the title-page gives us a representation of India (so we interpret it) seated on her own 'coral strand' having one or two English looking books on the ground beside her, and an open scroll on her lap in which she is making her notes. A tambur is by her side (for art must not be despised), and the sun is rising away in the East over the sea. A pretty seal and may its promise be fulfilled! Our personal knowledge of South India stretches over much more than half a century, and we are able to say that there has not in later days been such a healthy movemsnt of the Tamil Mind which all this indicates."

"Our Work."

"Your work.....is of great importance"—Dr. Paul Carus.

"I know personally that Mr. Swaminatha Iyer has worked hard to maintain the standard of writing at a h[illegible] level."—Dewan Bahadur S. Srinivasaraghava I[illegible]ngar C. I. E. in a personal letter to Dr. Duncan:

Dr. G. U. Pope has mentioned to me the Vivekachintamani as an excellent publication. I am glad to hear of your project for a Tamil Miscellany of useful knowledge (*Vivekamanjari*). The miscellany no doubt will be extremely useful and supply a great want among the ordinary Tamil reading public."—L. C. Innes, Esqr. I. C. S. Retired Judge of the Madras High Court.

"The Diffusion of Knowledge Agency of which Mr. C. V. Swaminatha Iyer is the life and soul"—Mr. K. Natarajan of the Indian Social Reformer.

"Many there were who jumped up to improve the current Tamil literature, but only a few remained firm to stand by and work for the cause. All credit to Mr. C. V. Swaminatha Iyer and his colleagues."—*The Thinker.*

We have had occasion to refer more than once to that excellent Tamil Monthly *Vivekachintamani* and the important pioneer work its talented editor Mr. C. V. Swaminatha Iyer is doing in the way of providing wholesome literature in Tamil"—The Indian Social Reformer.

"Your reprints from the Vivekachintamani...are within the comprehension of pupils even of the fourth Standard. I consider them excellent and the price reasonable."—Miss Carr, Inspectress of Girls' Schools.

"Dr. Duncan spoke to me with approval of your books and so did Mr. Jansen of the Danish Mission to whom I lent a copy of the Vivekachintamani"—Mrs Brander, Inspectress of Girls' schools.

"A well conducted journal will in time commend itself to the public."—Dr. Duncan, Director of Public Instruction.

"The Tamils have no decent books to be given to their daughters for their mental and moral culture.....you are supplying this great desideratum"—C. W. Tamotharam Pillay, B.A., B.L., Rao Bahadur.

"The (Vivekachintamani) Series is admirable: and when the history of Tamil literature comes to be written many years hence, you will occupy an honoured position as one of its founders. I refer, of course, to modern Tamil literature."— H. O. D. Harding Esq. I. C. S.

"The excellence and usefulness of his publications are now recognised on all hands."—Mr. Justice S. Subramania Iyer.

"Personalia."

"Mr. Swaminatha Iyer is not a mere theorist or essayist; he has done much practical work in the encouragement of Vernacular studies through his Diffusion of Knowledge Agency, and by means of his excellently conducted periodical the Vivekachintamani,"—Mr. H. K. Beauchamp C. I. E., late Editor of the Madras Mail.

Mr. A. E. Lawson, the present Editor of the Madras Mail writes: "I enclose a cutting about you which I published on the 28th October (1910):—"Mr. C. V. Swaminatha Iyer, the Editor of the monthly magazine, the Vivekachintamani, has been working hard for the diffusion of knowledge and enlightenment among the masses for which special purpose he has maintained an agency for the past twenty-five years. All this time he has been prominently associated with Vernacular Journalism in the Presidency."

"*The Vivekachintamani, which is eighteen years old,* has done much in providing wholesome literature in Tamil and several well-known *writers have utilised the columns* of its hospitable pages for this purpose."—*The Madras Mail.*

"I am glad to find you are devoting your time and talents to spiritual investigation. I wish our young friends of the rising generation will devote some portion of their time to such inquiries."—Dewan Bahadur P. Rajaratna Mudaliar. C. I. E.

"I shall never forget the short conversation which I had with you in 1893 in Madras. I was much impressed by your energy and enthusiasm in the noble cause of making people enlightened and healthy. I note with pleasure that since 1900, you have been working in a new direction and that you are able to suppress your mind."—A. Ramachandra Iyer Esq., Chief-Judge, Mysore (Retired.)

"The learned, patient and hard-working secretary and the Editor of the Vivekachintamani and the serial publications has been doing in a quiet and an unassuming way a work which ought to command the sympathy of the richest of our Tamil land, and he has been the means of bringing to the front a number of graduates of our local University who at other times would not have condescended to read a line of Tamil. These gentlemen have struck altogether a new and fruitful vein of literature in Tamil and with success too, as is borne testimony to by most learned Tamil scholars among Indians and Europeans alike.—*The Siddhanta Dipika.*

"It astonishes me to see your persistent devotion to what you regard as the truth. If you do not get much worldly reward, you have at least the satisfaction of good conscience."—Dr. D. Duncan, writing in July 1905.

"Royal Approbations."

H. E. LORD AMPTHILL'S ACKNOWLEDGMENT

"I am desired by His Excellency to inform you that he thinks the suggestion made in your letter a very good one. But before anything further is done His Royal Highness' pleasure must be ascertained"—L. M. Wynch Esq., Private Secy to H. E. the Governor. "We have no doubt that His Royal Highness (now H. I. M. George V. R. I.) will be agreeable to the re-christening of Black Town with a name so appropriate for the present occasion—"*Madras Mail* 25th January, 1906.

"CHILDREN'S TRIBUTE OF LOVE."

Government House, Madras, January 28, 1906.

"The Lady in Waiting presents her compliments to Mrs. C. V. Swaminatha Aiyar and is desired by Her Royal Highness the Princess of Wales (now Her Gracious Majesty Queen Mary) to thank her very gratefully for her kind letter and to say that it will give Her Royal Highness much pleasure to accept the copy of the Life of Her Majesty Queen Victoria which she so kindly offers her."

"His Royal Highness (afterwards H. I. M. Edward VII, R. I.) desires me to express to Mr. Swaminatha Aiyer his best thanks."—Sirs Franci (now Rt. Hon. Lord) Knollys.

I told the Private Secretary (to the Prince of Wales) that you were actively *interested in the improvement* of Sanitation in villages and towns."—Miss E. A Manning, *Secy. N. I. A., London.*

"I think Her Majesty (Queen Victoria) has read it (the review of her life in Tamil in the V. C. Series by Dr. Pope)with great pleasure."-From personal correspondence.

An Explanation and A Protest.

It will be seen that we have a character and reputation earned by the devotion of a life-time to hard work and harder trials and tests of success which we cannot now well afford the 'new school of pseudo-morality' nor yet "the new standard of Vernacular Journalism and enterprise' to trade upon with impunity. Lest our readers mistake or misjudge us, we give below the following excerpts from official and authoritiative sources, which speak for themselves :—

"Mr. C. V. Swaminatha Iyer.....is informed that the entry of Copyright in Vivekachintamani was made in the Registry Book of this office....."—Official memo from the Registrar of Books.

"Of course, these delays do not affect your Copyright which extends to all the numbers issued."—Letter from the Registrar of Books.

"The entry (in the Registry Book) is deemed equivalent to notice of the existence of the Copyright in the particular Book or article registered."—Com. on the Registration of Copyright.

"No copyright is acquired (under the statute) by the registration of a book before actual publication. The Statute contemplates two things: first, the person who makes the entry shall be the proprietor of the copyright, and secondly, the book to which the entry relates shall be a published book. Consequently no man who is not the proprietor of the copright in a published book, can make any entry with respect to it that will be of any avail. Until the thing is published and given to the world it is not within the statute."

Such being the state of the law, we had to adjust our space to meet our own demand. The publishing space at our disposal is so limited that it is always impossible for us to afford, much less to undertake, to give to the world that which we cannot later on fully control and claim to be ours by right. The right of first publication is, as a natural right vested in the author and if our agency and magazine the copyright of which is secured to us, is sought to be used as the means of giving to the world that which the author has every right to keep to himself or do anything he likes with it, we can consent to do so only on one condition and that is when we can claim the manuscript contents as our own before we decide on giving it to the world with the stamp and seal of our approval. Ever since the entry of our copyright was made in the Registry Book maintained for the purpose, we have consistently acted on the principle that the author should make a free and full surrender of his personal rights in the manuscript or article before parting with the same, so that our literary agent or editor may be free to decide, according to his light or in consultation, if he chose, with his Committee, the form and shape as well as the modifications necessary for giving the same to the world through ourAgency and in a form approved by us. These things we have explained inTamil in our very first number and is the guiding principle of our action in dealing with authors and contributors, potential or manifest, budding or full-blown, who wish to offer us their quota of Service, labour and goodwill in the furtherance of the cause, to which we have dedicated our life. We compel none and will be compelled by none. *Ich dien* s our self-chosen motto and we seek help from all those who are willing to help us "in the noble cause of making people enlightened and healthy." It is unnecessary for us to give our preface to the Vivekachintamani Series again here, but we may as well quote the words of a great Scholar who has given his whole life for Tamil and Tamils: The esteemed Dr. G. U. Pope writing in the Indian Magazine and Review says in an article from which we have already quoted, as follows :—

"In a little preface, the Editor strongly appeals to those of his compatriots who have learnt English to combine to bring out and make universally useful the stores of knowledge which they have acquired. We should like to translate the whole of it but time and space are lacking. We venture to say to all the brethren of this Tamil Guild that they must cultivate in their great work the spirit of simple earnestness here inculcated. If a combined, *honest*, and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English books in Tamil the effect will be to assist and stimulate greatly the study of both languages.

"No exercise of faculty is better and nobler for a real man than struggling with great thoughts, and labouring to express them in such a way that they shall reach the best feelings, and elevate the whole being of their fellow-men around them."

"Common Judgment."

"The style in it is simple and chaste. As a means of awakening and promoting a desire for general knowledge, your publication deserves encouragement"—Sir T, Muttusamy Iyer.

"Best calculated for the purpose"--C. W. Thamotharam Pillay B.A., B.L., Rao Bahadur.

"The subjects selected by you for your paper and the easy and chaste style in which you bring the knowledge of a variety of useful subjects—are highly calculated to achieve the noble object you have in view. Your Journal has an educational value"-Mr. M. Seshagiri Sastriar, Suptt. of Vernacular Studies and Professor of Sanskrit in the Presidency College.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. 23 JUN 1911 MADRAS.

"Our Appeal."

'ICH DIEN'—I SERVE; SELF-DEDICATION.

"We appeal (now as before) to our educated countrymen with all the earnestness that we can command, to open their eyes to the deplorable condition of the masses, to bestow some moments of thought on the sacred duty [illegible] owe [illegible] come forward with what lies in their power, boldly and promptly, to help the cause we have with much diffidence and humility but with a sincere conviction of its usefulness, undertaken to serve."—*Extract* from our "Appeal on behalf the Masses" issued by the Diffusion of Knowledge Agency in 1892.

"Our Scheme."

"The Scheme which you propose for diffusing useful knowledge is practicable and will do much good if carried out."—(Sd.) *T. Muttusamy (Iyer)* (Judge, High Court, Madras).

"Dear Sir, In reply to your letter dated 5th instant enclosing "an appeal on behalf of the masses" His Excellency the Governor desires me to say that he has read the latter with much interest, and to state that he is in full accord with you as to the desirability of a meliorating the condition of the people. His Excellency therefore will watch the progress of your Scheme with much interest."—Letter from C. F. MacCartie Esq., Private Secy.to H. E. the Governor, 17th April, 1892.

"Towards achieving this end (diffusion of knowledge,) it is proposed as a first step to publish a monthly Journal in Tamil devoted to the diffusion of knowledge,and to organise an Association of Helpers. The object of the originators of this scheme is "to mould together and create a fusion of hought and feeling between the two classes which though sprung from the same stock, are yet being separated and driven asunder everyday by an ever-widening difference in thought and feeling, caused by the difference in education received by them respectively."...Speaking for ourselves we must commend the movement as a well-meaning and earnest attempt to open the eyes of the educated Hindus to the condition of their less educated brethren, and to share with the masses to some extent their advantages of education and refinement."—*The Madras Mail*, 12th April 1892.

Public Opinion.

"We have no doubt the Magazine will be of benefit to the masses."—*The Madras Mail.*

"The contents of the first number indicate the aims of the [illegible] excellent."—The Indian Magazine and Review, London,

"The Agency is established—and has the support of some very competent Hindu gentleman who have promised literary and pecuniary help to the undertaking. The covering letter which accompanies the appeal is signed by Mr. C.V. Swaminatha Ayyar who is the [illegible] of the leading Tamil Newspaper in the Presidency. Mr. C. V. Swaminath is a young Brahmin of much enthusiasm and intelligence and possibly the project originated altogether from him. We dare say the persons who have promised to help and sympathise with him will keep their promise and it may be hoped [illegible] pathisers with something of his own enthusiasm...There can be no two opinion regarding the necessity and usefulness of an attempt like the one announced in the prospectus before us, and the originators can rest assured of the sympathy, we cannot say support, of all intellegent persons in the country."—*The Hindu* of 7th April 1892.

"The Vivekachintamani deserves a permanent place in the current Tamil Publications of the Presidency.—*The Hindu.*

"The *Vivekachintamani*, the organ of the Agency for Diffussion of Knowledge does not belie the object with which it has been started."—*The Madras Times.*

"I approve entirely of the movement. I shall be glad to become a patron,"—H. O. D. Harding Esq., I.C.S. 1892.

"If the educated poor will contribute their mite by writing upon useful subjects and the rich to help with their purse and all with sympathy, action and perseverance there is little doubt of the success of your scheme. Will my Indian brethren do this ? I hope they will."—Dewan Bahadur R. Ragoonatha Row.

"The project is an excellent one if it can be carried out; ...my experience however of such undertakings is not encouraging."—G. Subramani Iyer Esq, Editor of the *Hindu.*

"25-ம் ஆண்டு பூர்த்தி" யெனும்
பஞ்சவிம்சதிபாக்கியம்.
"ஊருக்குழைத்து ஊதாரியான கதை."
26-வருஷங்களாய் உழைத்த உழைப்பு.

"I have read with considerable interest the six numbers of the Vivekachintamani you were kind enough to send me. If this new Journal fails for want of subscribers the fault will not be yours. You are in my opinion doing a great service to the Tamil-speaking population of the Presidency and you deserve the hearty support of all Educational agencies in the country.—(Sd.) *P. Ranganatham*,". (Professor of Mathematics, Presidency College.)

"My dear Swaminathaiyar,..... I wish you every success in your effort to promote the diffusion of knowledge in the Vernacular. Persevere and I have no doubt you will be encouraged by every friend of Vernacular education (Sd.) *T. Muttusami.* (Judge. High Court, Madras.)

மேலே குறிப்பிட்ட இரண்டு கடிதங்களும் ராய்பஹதூர் பூண்டி அரங்காத முதலியார் அவர்களும், ஸர் திருவாரூர் முத்துஸாமி அய்யர் [illegible]

களுக்குமுன் "ஊருக்குழைத்து ஊதாரியான" அடியேனுக்கு எழுதியவை. முன்கடிதத்தில் அரங்கநாத முதலியார், "இந்த விவேகசிந்தா [illegible] இல்லாமல் நின்றுபோகும்படி நேரிடுமானால் அது [illegible] னுடையகுற்றமாகாது. தமிழ[illegible]க்கு ஒரு [illegible] பணிவிடை செய்து வருகிறாயென்பது எனது அபிப்பிராயம். வித்தியா சங்கத்தாரெல்லாருடைய உதவிக்கும் நீ அருகனாயிருக்கிறாய்" என்றார்.

ஸர் முத்துஸாமி அய்யர் அவர்களோ "ஊக்கமது கைவிடேல்" என்பதை யெடுத்தோதி, எப்பொழுது வேண்டுமானாலும் அவரிடம் தாராளமாக வந்து ஆலோசனை கேட்கும்படி அனுமதி கொடுத்தார். அவருடைய வாக்கு ஸகாயத்திலும் அவருடைய ஸந்நிதானத்தின் மஹிமை பெரிதாயிருந்தது. "ஊக்கமதுகைவிடேல்" என்று ஔவையார் ஒதினதைப் பாடமாகப் படித்ததுமட்டும் உண்டு. ஆனால் அதன் உண்மையை உள்ளபடி அறிந்தவனல்ல. ஸர் முத்துஸாமி அய்யர் காட்டிய அன்பினால் "ஊக்கமதுகைவிடேல்: நன்மை கடைப்பிடி" யென்னும் இவ்விரண்டு மூதுரைகளின் உண்மையை அவருடைய ஸந்நிதானத்தில் அபரோக்ஷசாக்ஷாத்காரமாய் அறியலானேன். அவ்விரண்டுமூதுரைகளும் உருவெடுத்து அவதாரமானால் எப்படியிருக்குமென்று கேட்டால் தங்கு தடையின்றி ஸர் திருவாரூர் முத்துஸாமி அய்யர் ஸந்நிதானம் சென்று அவர் இருப்பையும் பொறுப்பையும் உழைப்பையுமறிய மனக்கண்ணுண்டானால் அவ்விரண்டு மூதுரைகளையும் நிதரிசனமாகக் காணலாமென்று சொல்வேன். பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் வந்து [illegible] டிக்குக் காத்துக்கொண்டு நிற்கையில், 27-வயதாகாத ஒரு சாமானியன், அவரிடம் பேர் தெரிவிக்கப்பட்டவுடனே போய்வரவும் பேசவும் சுதந்திரம் பெற்றிருந்தது அப்பொழுது மிக [illegible] வக்கப்பெருமையிலும் அவருடன் பேசி, உள்ளக்கருத்தறிந்து அவர் சொல்லும் புத்திமதிகளைக் கேட்பது அதிலும் மேன்மையா யிருந்தது.

ஏனெனில் "பெரிய மனிதன்" என்ற சொல்லுக்கு அர்த்தம் இன்னதென்பதை அப்பொழுதுதான் நான் உள்ளபடி யறிந்துகொண்டேன். "பெரிய மனம்" எங்கே யில்லையோ அங்கே "பெரிய மனிதனும்" இல்லைத்தான் என்பது நிச்சயம்

"அறிவைப்பரவச்செய்வதற்கான ஏற்பாடு தயார் செய்து ஏகாக்ர சிந்தையோடு அதற்கு உழைத்து வருகையில், எல்லாரும் என்னைப் பித்தன் என்றும், பேயன் என்றும் பரிகாசம் செய்தது இன்னும் நன்றாக ஞாபகத்திலிருக்கிறது. ஸர் முத்துஸாமி அய்யர் ஒருவர் மட்டுமே எடுத்ததும் அதை பூர்ணமத அங்கீகாரத்தோடு ஏற்றுக்கொண்டு அதை நடத்த வேண்டியதவசியமென்று சொல்லி இடைவிடாது உற்சாகப் படுத்திவந்தார். அவருடைய அங்கீகாரமும் அபிப்பிராயமும் வெளிப்படவே எல்லாரும் ஒக்கப்பாட ஆரம்பித்தார்கள்.

"நாவசைய நாடசையும்" என்ற பழமொழியின் உண்மையை அப்பொழுது தான் உள்ளபடி கிரகிக்கலானேன்.

1892-ம் வருஷம் மார்ச்சு மாசத்தில்தான் அறிவைப் பரவச்செய்யும் ஏஜன்ஸி பஹிரங்கமாக ஆர்ப்பாடத்தோடு ஏற்படலாயிற்று. அதற்கு முன் 6-வருஷகாலம் ஏகாங்கியாயிருந்து அப்பொழுது நான் ஆசிரியனாயிருந்து நடத்திவந்த சுதேசமித்திரன் பத்திரிகையையே [illegible] தாரமாகக் கொண்டு அறிவைப் பரவச் செய்ய [illegible] யோடுமைத்துவந்தேன். சிற்சில பத்திரங்களும் சிறுபுஸ்தகங்களுங்கூடப் பதிப்பித்துவந்தேன். ஆற்றுமுன், அப்பொழுது பிரபலர்களாயும் பக்தோபகாரிகளாயும் இருந்த ஸ்ரீமத் ஸி. [illegible] பிரமணிய

அய்யர், மு. வீராஸ்வாசாரியர் இருவரும் "உபயோகமான அறிவைப் பரவச்செய்யும் சபை" யென்று ஒன்று ஏற்படுத்தி "ஸ்தானிகசுய ஆட்சி" என்று ஒரு புஸ்தகமும் பிரசுரித்திருந்தார்கள். அப்பொழுது தான் ஸார்ட்ரிப்பன் சுதேசபத்திரிகைகளின் வாய்ப்பூட்டைத் தெறித்துவிட்டு, ஸ்தானிக சுயஆட்சி சுதந்தரமளித்திருந்தார். இவர்களிருவரும் ஏதோசில துண்டுப்பத்திரங்களும் சிறு புஸ்தகங்களும் போட்டு வந்தார்கள். லார்டுப்ரூஹம் இங்கிலாந்தில் ஏற்படுத்தி நடத்தி வந்த "உபயோகமான அறிவைப் பரவச் செய்வதற்கான சங்கம்" (Society for the Diffusion of Useful Knowledge) என்பதை உதாரணமாக வைத்துக்கொண்டு இவர்கள் அச்சபை யேற்படுத்தினார்கள் போலும் தோன்றியது. ஆனால் நான் வருமுன்னமேயே வர வர ஊக்கம் குறைந்து சபை படுத்துக் கொண்டு ஒரே நித்திரையாகத் தூங்கிப்போய் விட்டது.

இந்த 26-வருஷ காலங்களாக நான் பார்த்து வருவதில், பொதுச் சபைகளென்றும் சங்கங்களென்றும் பேர்கொண்டு பிரபலமான பேர்வாங்கி வருவன வெல்லாம், உட்புகுந்து பார்த்தால், ஏதோ இண்டொருவருடைய சலியா முயற்சியாலும் இடைவிடா ஊக்கத்தாலும் பிரபலமாய் நடந்து வருகிறதென்பது நன்றாய்த் தெரிகிறது. அந்த ஒருவர் இருவர் ஆட்டம் ஓய்ந்தால் சபையின் ஆட்டபாட்டமும் அடங்கி விடும். கிராமசபைமுதற்கொண்டு காங்ரெஸ் மஹாசபை வரையில் இது உண்மையென்பது தோற்றத்தைத் தள்ளி தத்துவத்தை [உண்மையை] நேர்நேராகப் பார்க்க சக்தியுள்ளவர்களுக்கு நன்றாக விளங்கும். அதி கூர்மையான புத்தி வாய்ந்த இராஜதுரந்தரர்களுக்கும் இது தெரிந்த விஷயமே. மிஸ்டர் ஏ. ஓ. ஹியூம் அவர்களுடைய விடாமுயற்சியினாலேயே காங்ரெஸ் சபை அனேக வருஷங்கள் வரையில் குந்தகமின்றி நடந்து வந்தது. இப்படியே ஒவ்வொருபெரிய ஏற்பாடுகளும் உற்சாகம் நிறைந்த ஒருவர் உள்ளத்திலுதித்தஉண்மையான மனவெழுச்சியினால் சங்கல்பரூபமாக மாறிப் பிரவிர்த்தியடைந்து எல்லார் மனத்திலும் பரவுகிறது. ஒரு பெரிய தடாகத்தில் விழுந்த கல்லான்று உள்ளமுங்க அதனாலுண்டான அலை மட்டும் எப்படி வட்டமிட்டுக் கொண்டு பரவிக் கரையைத் தட்டுகிறதோ, அவ்வாறாகவே உள்ளத்துதித்த உண்மைப்போதம், மனவெழுச்சியாக மாறிச் சங்கற்ப ஸம்ஸ்காரமாக உள்ளமுந்த, அதனாலுண்டான சித்தவிருத்தி பலர் மனதையுங் கவர்ந்து அலை பரவுவது போல் எல்லாரையும் அதற்கிசையச் செய்கிறது. இதுதான் பொது விஷயங்கள் என்று சொல்லப்படுவன. பொது மனம் (சமஷ்டி மனம்) எதைப்பற்றி வியவகரிக்கிறதோ அது பொது விஷயமாம். பொது மனம் கிளர்ச்சியுறும் வழியெதுவோ அது அறிவைப் பரவச்செய்யும் வகையாம். இந்த உண்மையைத் தத்துவ தரிசனமாக உணர்ந்தவர்களுக்கு "அறிவைப் பரவச்செய்யும் ஏற்பாட்டின் குட்டு" தானே விளங்கும். 'மனம்' என்னும் வியஷ்டிபாவம் செத்து 'மஹத்' என்னும் சமஷ்டிபாவம் உதிக்கப் பெற்றவர்களே இந்த இரகஸியத்தை யறிவார்கள். மற்றவர்களெல்லாம் என்னைப் பித்தனென்றும் பேயனென்றும் பரிகாசம் பண்ணினர். ஸர் தி. முத்துஸாமி அய்யரும், பூண்டி அரங்கநாத முதலியாரும் மட்டும், என் உள்ளக்கருத்தை யுள்ளபடி யறிந்து உவகையுடன் உற்சாகப் படுத்தினதிலுள்ள இரகஸியம் இதுதான். அவர்களிருவரும் உள்ளபடி பெரியமனது (மஹத் என்னும் சமஷ்டிபாவம்) கொண்டவர்கள். மற்றவர்களெல்லாரும் சின்ன மனதுள்ளவர்களாய் (வியஷ்டிபாவம் நீங்காதவர்களாய்) இருந்தார்கள். பிறகு மிஸ் ஹாரீட் மார்ட்டினோ (Miss Hariet Marteneau) சரித்திரத்தைப் படிக்க நேர்ந்ததனால் மனவெழுச்சி மிகவுண்டாயிற்று.

1885-ஆம் ஏப்பிரல்மீ சென்னைவந்துசுதேசமித்திரனுக்கு ஆசிரியனாக அமரப்பெற்றேன். அதற்கு 5-வருஷங்கள் முன் வைத்தியத்தில் பேர்போன ஒரு நண்பர் "கல்வியைக் கைவிட வேண்டாம்: நீ பத்ராசிரியர் தொழிலில் அமர்ந்து பேரும் புகழும் பெற்று வாழ்வாய்" என்று சொன்னார். அவர் சொன்னது என்னவோ மனதுக்கு ஹிதமாயிருக்க அதையே உள்ளத்திற் சிந்தித்துக்கொண்டிருந்தேன். 'சங்கற்பம் வீண்போகாது' என்கிறபடி, வேறு ஒரு காரணம்பற்றி சென்னைக்குவர நேர்ந்த விடத்தில் பத்திராசிரியர் வேலை வலுவில் கிடைத்தது. பட்டணத்தாருடைய பகட்டும் பத்திரிகைபோடுகிறவர்களுடைய புறட்டும்கொஞ்சங்கூட தெரியாதவனா யிருந்தமையால், பலர் பலவிதம் ஏமாற்றவும், அதற்கு உடன்படவும் சந்தர்ப்பம் நேர்ந்தது. ஆனால் அதையெல்லாம் ஒருபொருட்டாக எண்ணவில்லை. "கருமமே கண்ணாயினார்" பசிநோக்கார், கண்துஞ்சார் (தூங்கார்) எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளா ரென்பது அனுபவத்தி லுண்மையா யிருந்தது. ஏகாக்ரசித்தனாய் ஏழுவருஷகாலம் பத்திரிகை வாயிலாக ஊருக்குழைத்துவர, அறிவைப் பாவச்செய்ய வேண்டுமென்கிற பித்துப்பிடித்தது.

சிவனைப் பித்தனென்று நன்றாகச் சொன்னார்கள். ஏனெனில் சிவனுக்குப் பிடித்தது போல் காரணப்பைத்தியம் பிடித்தவர் வேறு யாருமில்லை. வயிற்றிலிருக்கிற பித்தம் தலைக்கேறினால்தான் காரியம் சாய்கிறது!

காரியத்துக் கெல்லாம் காரணமாயிருப்பது பித்தம். பித்த மில்லாவிட்டால் தேஹயாத்திரை நடவாது. பித்தமின்றி உண்ட உணவும் சீணமாகாது. பித்த மில்லாவிட்டால் சித்தமும் சரியாக வேலைசெய்யாது. ஜகத்திலுள்ள ஜீவர்களுக்கு சூரியாக்னி யெப்படியோ, அப்படிப்போல தேஹத்திலுள்ள அணுப்பிரமாண ஜீவராசிகளுக்குப் பித்தத்தின் வேகம் உயிர்க்கு ஆதாரமா யிருக்கிறது. மனிதனுக்கு வயிற்றிலுள்ள பித்தம் தலைக்கு ஏறினால் காரியமெல்லாம் காரண மாத்திரமாகி அதிலொடுங்கிவிடும். அப்படியென்றா லென்ன ?

நீங்கள் பைத்தியக்காரன் யாரையாவது உற்றுப் பார்த்திருப்பீர்களானால், அவன் சேஷ்டைகளெல்லாம், உட்பிரபஞ்சமென்று சொல்லும் அந்தர்முக பாவனைகளை யடக்கியாள முடியாமையால் கருவி காரணங்கள் செய்யும் சேஷ்டையினால் அவனிடத்துள்ள விகாரங்களெல்லாம் ஏற்படுகின்றனவென்று நன்றாகத்தெரியும். அவனே இந்திரியங்களை ஜயித்தவனானால் ஞானியாய் விளங்குவான். இந்திரிய ஜயம் எதனால் சித்திக்கிறதென்று பார்த்தால், சித்த விருத்தி நிரோதனத்தாலென்று தெரியவரும். சித்த விருத்தி எதனாலுண்டாகிறது என்று ஆராய்ந்து பார்த்தால் விஷயப்பற்றினால் என்று விளங்கும். மனம் பற்றுவதொன்றெதுவோ அதுவே விஷயம். விஷயப்பற்றை யறத்தால் மனது அந்தரத்தில் நிற்கும். அந்தரத்தில் நின்றால் மனது நிராகாரமாய் ஆகாசமாத்திரமாய் விளங்கும். இந்த ஆகாசம் ஐந்துவிதமானதென்று சிவயோக தீபிகையில் ஸதாசிவ யோகேந்திரர் விளக்கிக்காட்டியிருக்கிறார். உபநிஷத்துக்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி மனது ஆகாசமாத்திரமாய் நிற்பதுதான் தியானம். "தியானம் நிர்விஷயம் மன:" என்பது சுருதி வாக்கியம். ஆகாசம்எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துக்கொண்டு தான் எதனாலேயும் கட்டுப்படாமலிருக்கிறது. அஃதே போல் ஞானி எல்லா பாவனைகளுக்கு மிருப்பிடமாக மனதை யறிந்து, அந்த மனதை எந்த பாவனையினாலேயும் கட்டுப்படாதபடி காப்பாற்றிவருவான். இதற்குத்தான் 'நிர்விகல்பநிலை' யென்று சொல்கிறது. இந்த 'நிர்விகல்பநிலை' யடைந்தவன் பித்தன், பேயன், பாலன், உன்மத்தன் இவர்களைப்போ லிருப்பனென்று ஆன்றோர் சொல்வது வழக்கம். அப்படியென்றால் என்ன? பித்தன் அகமுகப் பார்வையே பார்வையாய் அதிலீடுபட்டுப் பிரபஞ்சலக்ஷியமிழந்து கூத்தாடுவான். ஞானியும் அப்படியே விளையாடுவான். இவனுக்கு இந்திரியங்கள் சொன்னபடி கேட்கும்: அவனுக்கு சொன்னபடி கேட்காது. பேயன் விஷயப்பற்றே பற்றாப் வேறுபற்றுதலின்றி யாடியலைவான். ஞானியும் "பவோபவம்" என்கிற அந்தர்லக்ஷியம் ஒன்றிலன்றி வேறு பற்றுதலின்றி ஜகத்தோடு ஜகமாய்த் தோற்றமாத்திரத்தால் ஆடி யலைந்து நிஷ்காம்ய கர்மஞ்செய்துகொண்டு திரியாமல்திரிவான். பாலன் (குழந்தை) சுபாவம் நிச்சிந்தையா யிருத்தலாம். ஞானியும் மனமிறக்கப்பெற்று நிர்விகல்பனா யிருப்பன். உன்மத்தன் பித்தவெறி மத்தித்து மதோன்மத்தனாய்த் திரிவன். திரிகுணாதீதனான ஆருடனும் திரிகுணாத்மகமான மதயானையை யடக்கியாளும் அங்குசம் கையேந்தினவனாய்மனோன்மத்தனாய் விளங்குவான். "ஆனையும்மதங்கொண்டால் யாரே யடக்கலாகும்!" என்பது திருமந்திரோபதேசம்.

இப்படியாக அறிவைப்பாவச்செய்ய வேண்டுமென்கிற பித்துப் பிடித்து அதுவே சிந்தையாய்த் திரிந்தபொழுது பத்திரிகை நடத்தும் தொழிலிலமர்ந்து ஸப்த ஸம்வத்ஸரம் (ஏழு வருஷம்) ஆய்விட்டது. இந்த ஸப்த ஸம்வத்ஸரமும் எனக்கு ஸப்தஸ்தான உற்சவமாயிருந்தது. ஸப்தஸ்தான உற்சவமென்பது பஞ்சாநந்த க்ஷேத்திரமாகிய திருவாரூரில் இன்றைக்கும் விமரிசையாக நடந்து வருகிறது. ஸப்தஸ்தான உற்சவத்தின் உண்மையை ஸப்தாக்ஷரங்களினால் சொல்லலாம். "டரலகஸஹய: ஓம்" இதில் "ஓம்" சிவம்; "டரலகஸஹய:" சக்தி; இவை யிரண்டின் அபேத ஐக்கிய ஸ்வரூபமான திருமணக்கோல ஊர்வலமே ஸப்தஸ்தானமஹோற்சவமாம். ஏழு அக்ஷரங்களையும் ஸப்த லோகங்களாக பாவிப்பார். ஏழு லோகங்களும் ஷடாதாரங்களும் அவற்றின் சமஷ்டியுமாம். இவை யேழுமே முக்கிய க்ஷேத்திரங்களாம். ஸ்தல விசேஷ மஹிமையால் இவைகள்தானே ஸப்த ஸ்தலங்களும் (திவ்ய க்ஷேத்திரங்கள்) ஆம். இப்படியாக நான் முதலில் பட்ட ஏழு வருஷங்களின் பாட்டை நினைத்துக்கொண்டு பார்த்தால் பின்னர் யோகாப்பியாஸகாலத்தில் ஷடாதாரங்களையும் கடந்து ஏழாவது ஸ்தானமாம் அவைகளின் சமஷ்டி ஸ்தலத்தில் போய்ச்சேர்ந்த "யோகயாத்திரை" யென்று சொல்லும் "காசி யாத்திரைக்குச்" சரியொத்ததாகத் தோன்றுகிறது. முதல் ஏழு வருஷம் சுதேசமித்திரனுகவே யிருந்துழைத்து ஜீவனம் நடத்தினது தான் "ஜீவயாத்திரை". உலகத்தாரெல்லாரும் 70-வயது இருக்க வரன் பெற்று நடத்தும் ஜீவயாத்திரை எனக்கு 7 வருஷத்தில் முடிந்தது. பிறகு அறிவைப் பாவச்செய்ய வேண்டு மென்கிற பித்துப் பிடித்து ஊரிலுள்ள பெரிய மனுஷர்களையெல்லாம் பார்த்து அவர்களுடைய "தரிசனம், அனுக்ரஹம்" என்கிற பரிச்சயமும் அனுகூலமும் பெற்றதே "ஸ்தலயாத்திரை" யென்று சொல்லும் "காசியாத்திரை." இப்படியாக ஜீவயாத்திரை புறப்பட்டது 1885-ல்; பிறகு காசியாத்திரை யென்று சொன்ன ஸ்தலயாத்திரை செய்ய ஏற்பட்டது 1892-ம் வருஷத்தில். அப்பொழுது தான் அ. ப. ஏஜன்ஸியும் விவேகசிந்தாமணியும் ஆடம்பரமாயேற்பட்டு வெளிவரலாயிற்று. பிறகு 7-வருஷங்கள்செல்ல, காசியாத்திரை முடிந்து, 1899-ல் சிவயோகயாத்திரைக்கு வேண்டிய ஆஸ்பதங்கள் நேரிட்டன. இதுதான் காசியில் கங்காஸ்நானம் செய்தபின் நடக்கும் இராமேசுவரயாத்திரை. அப்புறம் 7-வருஷங்களானபின் 1906-ல் "சிவயோகயாத்திரை" முடிந்து, பிறகு 'கேவல யாத்திரை' யென்று சொல்லும் "கைவல்லியப்பித்துப்" பிடிக்கலாயிற்று. இதையே ஞேயப்ரஹ்மாகாரமென்றும் நிர்வாணயாத்திரையென்றும் அவதூதாத்மாவென்றும் சொல்வார்கள். இந்தக்கலை

...யாத்திரை 1913-ம் வருஷம் மார்ச்சுமாசத்தோடு முடிவுபெறுவதாகும். அதுவரையிலிருப்பது முழுப்பதும் என்ன நிச்சயமென்றால், எப்படி யென்றுசொல்கிறேன் கேளுங்கள்:—

ஒரு வண்டிக்காரனிடத்தில் சத்தம் பேசி முடிந்தாலும் சமயத்துக்கு வண்டி வருமென்பது நிச்சயமில்லை. ஆனால் அதே வண்டிக்காரன் சத்தம் பேசியபின் அச்சாரமும் வாங்கிவிட்டானானால் காலந்தப்பாமல் வண்டி சவாரிக்குக் கொண்டுவருவானென்பது நிச்சயமல்லவா? இகலோக வாழ்வே யாத்திரை. தேஹமே வண்டி; செல்வமே சகடக்கால் (வண்டியுருளை); சங்கல்பமே அச்சாணி; வஸ்து நிச்சயமே அச்சு. உசுவாஸ நிசுவாஸமே வண்டி யிழுக்கும் ஜோடி மாடு அல்லது குதிரைகள்; ஜீவாத்மகனே (சிதாபாஸன்) வண்டிக்காரன்; சுத்தாத்மகனும் தேசிகாச்சாரியனே (குருவே) சவாரி புருஷன். விவேகசிந்தாமணியே யாத்திரையின் பெறற்பேறு (பலன்). இப்படியாக ஸர்வகாரண பூதாசக்தியானகுரு, வாகலூரண்ணனுக்கு குருந்தமரத்தடியில் குருமூர்த்தங் கொண்டு குருமணியாகத் தோன்றியவாறே போல், இந்நிலவுலகில் நியாயபரிபாலனம் (தர்ம்மஸ்தாபனம்) செய்யும் தேசிக மணியாகத்தோன்றி "அப்பா, விவேகசிந்தாமணி 19,20-வது வாலியங்களுக்கு அதாவது 1913-ம் வருஷம் மார்ச்சு மாசம் முடிகிற வரையில் தளமான காசிதப் பதிப்புக்குரிய என் சந்தா தொகையை இதோ கொடுக்கிறேன், வாங்கிக்கொண்டு எனக்கு ஒரு வரியனுப்புக உனது பத்திரிகை (பத்திரிகாதர்மம்) நிர்விக்னமாக நடப்பதாக" என்று ஆசீர்வதித்தால், அதை பேற்றுக்கொண்டு அச்சாரம் வாங்கினபின் சந்தேகமேன்!

இப்படியாக நாலுயாத்திரையில் மூன்று முற்றும் நடந்துவிட்டது. நாலாவதில் பாக்கி யிருக்கும் இரண்டுவருஷங்களுக்கும் 'வி-சி-தேசிகன்' ஆகிய அச்சாரமும் கொடுத்துவிட்டான். அச்சாரம் கொடுத்த தொகையும் தசமஸ்தான எண்ணையிருப்பதாலே, "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்கிற ஔவையார் சொல்லிய மஹாவாக்கியத்தைக் கொண்டு, "ஷட்விமஜக பாவம்" அதாவது "26" என்கிற தோற்றமாம் எண்ணை ஸ்மரித்து இப் பிரபஞ்சநாடகமெல்லாம் இந்த 26-ம் வருஷத்தில் ஆடி முடிக்க வேண்டுமென்பது ஈசுவர சங்கல்பம் என்று விளங்குகிறது. இது சாதாரணவருஷம் பங்குனிமீ கடைசிநாள் அன்று பிறந்த அசரீரிவாக்கின் அந்தர்க்கதஜோதிபிளிருந்துண்டான குப்த வித்யா விசித்திர வைபவம். நான் பத்திரிகைக்கெழுதப் பேனாக் கைப்பிடித்தும் 26-வருஷங்களாய்விட்டன. பஞ்சலிம்சதியென்றால் 25. சென்ற25-வருஷங்களாக வூருக்குழைத்ததால் வந்த பாக்கியத்தை யெல்லாம் திரட்டிச் சுருக்கி ஒரு எண்ணில் சொல்லவேண்டுமானால் "26" என்கிற "ஷட்விமஜகபாவம்" என்று சொல்வேன்.

1885-லிருந்து முதலேழு வருஷமான (ஜீவனமுயற்சி) லோகயாத்திரை செய்தகாலம்; ஸப்தஸ்தானம் என்பது திருக்கலியாணமான வுடனடக்கும் ஊர்வலத்திருக்கோலம். லோகத்தின் சுபாவமறிந்தால் அந்த யாத்திரை முடிந்தது. சுதேசமித்திரன் பத்திராசியரை அன்று கண்ட கண்ணால் இன்றும் அகக்கண் விளங்கக்கண்டேன். 26-வருஷகாலத்தில் அவர் குட்டும் வெளியாயிற்று. இதுதான் ஜாக்ராவஸ்தை.

1892-லிருந்து ஏழுவருஷம் காசியாத்திரை, அல்லது ஸ்தலயாத்திரை; அன்றைக்கு ஹைகோட்டு ஜட்ஜாயிருந்து அபயங்கொடுத்த கண்பனை அதே ஸ்தானத்தில் இன்றைக்குங் கண்டேன். ஸ்வப்னவஸ்தையில் கர்த்தவ நகரம் கண்டதுபோல் அவன் குட்டும் வெளியாயிற்று.

1899-1900-ல் "கழுக்குன்றிலே வந்தேவியழைத்தென்குறையோருது" ஓதியசக்குரு மணியாம் தேசிக மூர்த்தியை, அன்றைக்கு

திருக்கழுக்குன்றேறுகையிலுண்டான அநாஹத சப்தத்தின் த்வனியின் அந்தர்க்கத ஜோதியில் கண்டுகளித்துத் திடங்கொண்டது போல், சுஷுப்தியவஸ்தையென்று சொல்லும் பிரஞ்ஞானகனமான இகசுகநிலையிலிருந்து இன்றைக்கும் "கூவியழைத்துக் குறையிறந்திரு" வெனச் சொல்லக்கேட்டு அவன் சூக்ஷ்மாதிசூக்ஷ்மமாம் 25-ம் தத்துவமென்கிற பஞ்சலிம் சதி பாக்கியத்தைக் பெற்றுக் களித்தேன். களித்த பின் உள்ளதைச் சொன்னேன். துரிய வடிவாம் அருவ சிவத்தின் சகஜவடிவை விரோதிகிருது வருஷத்தின் பங்குனி உத்தர நாளில் காணுமற்கண்டு அடுத்தவருஷ முடிவில் அபரோக்ஷ சாக்ஷாத்காரமாய்க் கலந்தனுபவிப்பேன்.

[illegible] திரிகரண சுத்தியாய் திரியலந்தீர்ந்த ஞானக் கண்ணால் ஸ்தூல சூக்ஷ்மகாரண மென்கிற சரீரத் திரயங்களிலுங் கண்டேன். கண்டதைக் கண்டபடி விண்டேன். 'பிதகோராஸ்' என்பவர் கணிதங்களைக் கொண்டே தத்துவம் பேசுகிறதீர்; சென்ற சஞ்சிகையில் அவர் பிரபஞ்ச தர்மமெல்லாம் எண்ணளவே (சங்கியை மாத்திரமே) என்றும், எல்லா வுயிர்களும் எண்ணிக்கைக் கணக்காயிருக்கிறதென்றும் சொன்னதை யிங்கிலீஷில் குறிப்பிட்டு விட்டு அதன் உட்கருத்தை "எண்ணுமெழுத்தும் கண்ணனைத்தகும்" என்னும் வாகவி வாக்கால் விளக்கிக் காட்டினேன். அஃதையே இம்முறை எம் வாழ்நாள் அனுபவத்தைக் கொண்டு பொய்யும் மெய்யும் (திகபா அனுபவங்கள்) பொருந்த பத்திரிகைத் தொழில் புரியத் துவக்கிய 25-வது வருஷபூர்த்தி மஹோற்சவமாக "வினையுடைய உள்ளுடம்பி" னனுபவத்தைக் கொண்டு சாதிப்தேம்.

"வெள்ளிபொன்மேனியதொக்கும் வினையுடைய
உள்ளுடம்பி னுய கொளி."—என்ற

ஔவை வாக்கால் "வெள்ளிய தொக்கும் வைபவம்" தானே "பஞ்சலிம்சதி பாக்கியம்" அல்லது 25-ம் ஆண்டுநிறை யுற்சவமாமென்பதூஉமென வெளிப்படையாகக் கண்டு கொள்க.

"தசமியிலே சாகாத்துக் கப்பாலேறிச்
சிலம்பொலியு முனதுடைய இருக்கால்கண்டு
நிஜமாக ஸ்தூல சூக்ஷ்மத்தில் தோன்றி
நிஷ்களத்தில் நீயுநானு மொன்றேயாகி
யறிவில்லா ஆநந்த மயமேயாகி
அருள்வெளியாய் வரமருள்வா யகண்டரூபி
சுசிவழியாய் சுசிமுகமாய்ப் பிள்ளைமுகம் பார்த்தாள்
சோதியே மணேன்மணியே சுதினவாழ்வே!" [வாய்

என்ற ஆச்சாரிய வாக்கினாலும் "எண்ணே கண்ணாயிலங்குஞ் சோதியின்" குட்டு வெளிப்படும்.

பித்தமில்லா விட்டால் சித்தமுமில்லையாம், பித்தம் தலைக்கேறுவதாவது:—சித்தவிருத்தி நிரோதனத்தால் மனதை யடக்கி லயப்படுத்தும் போது, அதுகோரத் தலைக்கேறினால் இந்திரிய ஜயம் செய்தலரிதாம்: பைத்தியம் சைத்தியமென்கிற வாத சேஷ்டைகளில் போய் முடியுமாதலால், உட்டியான பந்தத்தால் உன்மனிபாவத்தில் பிராணனை வசப்படுத்தி அபானனோடு சேர்த்து சுழுமுனை மார்க்கமாய்த் தலைக்கேறச் செய்யல் வேண்டும்; பித்தம் உட்டியனத்தால் (ஆகாசத்தில் பறத்தல் மூலமாய்) தலைக்கேறுவதே திருக்கலியாண மென்றும் திருவருட்பேறு என்றும் சொல்லப்படும். ஸஹஸ்ராதள கமலத்தில் சிவத்தோடு சேர்ந்த குண்டலினி சிவசக்திலீலையஸ்வரூபமாக ஸஹஸ்ராரத்தைவிட்டுப் புறப்பட்டு ஷடாதாரங்களிலும் பிரவேசித்து (சுத்த)ஸ்தலயாத்திரைசெய்து தையடைந்து சூந்நியங்கடந்த சுபாவத்தில் 'எங்கனும் வியாபீ' யென்கிற வாச்சியத்துக் கிலக்கியமாயிருத்தலே ஸப்தஸ்தான மஹோற்வம். இதை ஸ்ரீ பகவத்பாத ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் ஸௌந்தரியலஹரியில் நன்றாகச் சொல்லியிருக்கிறார். ஓம்தத்ஸத் ஓமிதி பூர்ணமத அர்ப்பணம். சி. வி. ஸ்வா;

The Lord of Palni's Grace.

Of the Power of Prayer.

"What are they better than sheeps or goats
That nourish a blind life within the brain,
If, knowing God, they lift not hands of prayer
Both for themselves and those who call them friend."
—*Tennyson.*"

பழனியாண்டவர் வரப்ரஸாதம்.

"வேலுமயிலுந்துணை."

*"பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதேவிட்"—ஔவைகுறள்.*

1. பழனியாண்டவர் தருப்ரஸாதம் தரணியில் தந்தான் அரக்கநாதன் : பழனியில் வசிக்கும் பிராமணன்கோலமாய் பஞ்சாமிர்தமெனக் களித்தானவன். நஞ்சாமிவ்வுலகை † நலமென்றுண்ணி நாகையில்தூங்குவோன் தூக்கத்தைத்தள்ளினன்: தள்ளினதூக்கம் தாயவன்சாக்ஷியாலோயதாக்ஷியின் நிலையறிந்தே!

2. குருவாரந்தன்னில் கோமளநாயகி குணமறிந்துபின் மணமறிந்தேன். வெள்ளிக்கிழமையில் கள்ளத்தனஞ்செய்து வள்ளியுங்குறஞ்சொல்லிக் கூடலுற்றான். தெய்வானையொருபக்கம் வள்ளியொருபக்கம் திவ்யமாவிளங்கவே வந்துதித்தான்††பாதையில்நடமாடும் பாம்பொன்றுசிறியே படந்தூக்கி யென்னைத் தூரத்தக்கண்டேன்.

3. தூக்கினபடமும் சிறினமூச்சுமாய் ஓடினபாம்பது உறங்கக்கண்டேன்:ஓடினபாம்பதும்ஆடினபடியே உறங்கக்கண்டுநான்கண்விழித்தேன்.உறக்கம்விட்டான் ‡துரக்கமேறி ஆடுடனாகவே யமர்ந்திருந்தேன். அமர்ந்திருந்துநான்கண்டதோர் காட்சியை என்னென்றுசொல்லுவேன் எந்திழையே!

† cf. Browning :—

"This world is no blot for us
Nor blank; it means intensely and means good
To know its. meaning is my meat and drink.

†† பாதை=நடைபாதை="Conduction path"=நாடி நாம்பு.

‡ துரகம் என்பதின் விகாரம் இங்கே 'துரியப் புரி' யென்று கொள்ளப் பொருந்தும்.

முடுகு.— கரநாரா யணனுய்
நாதவடி வினனுய்
பரநாரா யணனுய்ப்
பாரளந்தான் ரூபங்கண்டேன்!

பாரளந்தான்ஊரளந்தான்
பேரளந்தான்சீரளந்தான்
பாவியேன் படுதுயரைச்
சீரளந்தான்சீர்குலைத்தே!

I

சீரானசீதம்மா சீர்குலையாச் சீரம்மா!
பேரானபேறதம்மா பேர்குலையாப் பேரம்மா!
சீரானபேர்குலையச் சிரிப்பாணி செய்தானம்மா!
ஊரானபேர்களாலே உருக்குலையச் செய்தானம்மா!

II

ஐயகோ!என்செய்வேன் யாரைநான் அடித்திடுவேன்!
மெய்யகோ! யான்பொய்யேன் மெய்விதிர்ப்பப் [பொறுத்திடுவேன்!
பொய்யவோபுல்லியவோ பொய்யமல்லயபபெறறயவோ
நையவோ நான்பிறந்தேன் [illegible] டிறந்தில [னே!

III

ஐயகோ புண்ணியனே! $ யாரிடம்போய் முறையிடு [வேன்!
மெய்யகோ! தையலனே! புகலிடந்தா னெனக்கிலை [யோ!
வெய்யகோ வத்ஸலனே! வேதாந்த பூரணனே!
ஐயகோ! அடியேனை அஞ்சலென்றுவாராதோ!

IV

அஞ்சலென்று கையமர்த்தி ஆர்வநிறைந் தெனை [யணைத்துக்
கொஞ்சிநிக விளையாடிக் கூத்து 'மிகக் காட்டுவித்து
துஞ்சுமெனை யஞ்சலென்று தூயநெறி காட்டிவிட்டு
அஞ்சுமெனை யஞ்சலென்னு நார்ப்பாடஞ் செய்வ [தேனோ!

V

முன்னொருநாள் இட்டவர்தேன் முதுபணியான் [செய்கவென்றாய்
பின்னொருநாள் இட்டிவர்தேன் 'கட்டையுடை' ‡ [யெனப்பணித்தாய்
முன்னொருநாள் தேரேறித் திரிபுரமூன் றெரித் [திட்டாய்
பின்னொருநாள் புச்சத்தியால் தென்னிலங்கைத் [தீயுமிட்டாய்.

$ புண்ய கர்மவிசேஷ வசத்தால் 'யமதர்மராஜா' என்கிற பட்டம் பெற்றவன். யமதர்ம=The Law of Being.

‡ ஸ்ரீ சொரைக்காய் ஸ்வாமிகள் மூலமா யிட்டபணி.

VI

சிவபுரத்தே வந்தவயன் செப்பறியான் ஓமவென்றே $
பவபுரத்தே நொந்திருக்கச் சிறையிலிட்டாய் விளையா [ட்டாய்
யுவபுரத்தே †† நொந்திருந்த குறையிறக்கச் செய்து [மென்னை
பவபுரத்தே நொந்திருக்கச் சிறையிருந்த லுனக்கழ [கோ!

VII

அழகோவென் றுண்டவனே யாரமுதே போழகே!
புகழோவென் றுண்டவனே பேரமுதே பூரணமே!
பழனியிலேயாண்டவனு யாண்டிவேஷந்தரித்தவனே!
பழனியக்ர-ஆரத்தனுய்ப் பஞ்சாமிர்தந் தந்தவனே!

VIII

'பழனிவேலா!' வென்றுசொன்னுல் பழவினைகள் பற [ந்திடுமே!
பழனிவேலா!குக்குடமேதுவஜமாகக்கொண்டவனே!
கழனியிலே களைபிடுங்கும் அடிமையெனை யாளாவிட் [டால்
பழனியிலே வேல்தாங்கிப் பாராள்வ தெப்படியோ!

IX

வேல்தாங்கி நிற்குமுன்றன் வீரியத்தை யானறிவேன்
*கோல்தாங்கிநிற்குமென்றன் குறைதீர்க்கவந்திலையோ?
ஆல்தாங்கி நிற்கும்வீழ்தே போல்தாங்கும் பொற்பின [னே!
[illegible]தாங்கி நிற்குமென்னைப் பாலமாறச் செய்யலா [மோ!

X

வேல்விழியான் வள்ளியுன்னை வாமத்திலே கூடிநிற்க
கோல்விழியான்தெய்வயானை கூர்வலத்தில்தானிருக்க
வேலேந்தும் திருமேனி மயில்வாகனத்திருக்கக்
காலேந்தும் பணியாளைக் கடைக்கணித்துப் பாரா [யோ!

$ cf. "ஆமையொன்றேறி அகம்படியானெனை
ஓமவென்றோதி யெம்முன்னொளியாய் நிற்கும்
நாம கறுங்குழற்றையலைக் கண்டபின்
சோமநறுமலர் சூடிநின்றானே"—திருமந்திரம்:

†† யுவபுரம்=யௌவனத்தேயனுபலிக்கும் ஸம்ஸாரூப கதுக்கம்.

* கோல்தாங்கி நிற்கும் என்றன்—எவனுல் ஞானமாகிய தண்டம் (கோல்) பிடிக்கப்பட்டிருக்கிறதோ அவனை எத்தண்டி யென்று சொல்லப்படும் என்பது பரமஹம்ஸ உபநிஷத் வாக்கியம். மற்றப்படி ஞானமில்லாமல் ஸ்தூலமான கோல்தாங்கித் திரிபவன் 'மஹாரௌரவம்' என்றுசொல்லப்பட்ட ரௌரவ நரகத்தை யடைவானென்று அதேசருதி முறையிடுகின்றது.

XI

வேலவனே சரணமையா வேலுமயிலுந் துணையளிப் [பாய்
பாலகனே சரணமென்றுல் பாலுஞ்சோறு மளித்திடு [வாய்
மாலவன்தன் மருமகனே மையல்தீர்க்க வந்தவனே
வேலவனே சண்முகனே வித்யாஜாவுக்கினையவனே!

வேலுமயிலுந் துணையளிப்பாய்
வேலுமயிலுமானவனே
பழனிவேலா ஆண்டவனே
பழமையாஞ்சரவணபவனே!

A Blessing in Disguise : Meditations in Maunam.

"விவேகசிந்தாமணிப் பத்திராதிபர் நீடும்வாழ்க"வென்ற விடுகதை வினு.

பழனியாண்டவர் தருப்ரஸாதம்.

தரு - இராகம் - புன்னுகவராளி - தாளம், சாப்பு.

தானதனத்தானதனத்தானதனத்தனனு
தானதனத்தானதனத்தானதனத்தனனு

கண்ணிகள்.

1. மாவதிஞர்பெயரொன்றுசிவவேடப்பேரொன்று
வண்டமிழ்நிகண்டொன்றுதமின்பெயரிலொன்று
பாவளர்நீர்ப்புன்னொன்றுகங்கையின்பேரொன்று
பகருமரசப்பேரொன்றுகிருபையின்பேரொன்று
பூவளர்சிப்பெயரொன்று தைரியப்பேரொன்று [று
புல்கவயன்மனைவியொன்றுமிருதுவின்பேரொன்
தேவசேனுபதிவாழ்தலமொன்றுகமமொன்று
செந்தமிழகத்தியன்பேரொன்றுதிதியொன்று.
(தானதனத்தான—)

2. வேதஉபநிடதமொன்றுகுறித்தலின்பேரொன்று
மிக்கதலமொன்றுமாலையொன்றின்பப்பேரொன்
பூதலம்புகழுஞ்சத்தத்வீபமதிலொன்று [று
புளகிதமாய்ச்சொல்லுவதற்கைந்தெழுத்துப்பேராம்
சாதகவப்பொருளினவெழுத்தெடுத்துப்பார்க்க
தரணிபுகழும் "விவேகசிந்தாமணிப்பத்தி
ராதிபர் நீடும்வாழ்க"வென்றுதினஞ்சொல்லும்
கற்றமிழ்க்கவிஞர்விடைசொல்வீர்மகிழ்கூர்வே.
(தானதனத்தான—)

இக்கவிவதைக்கு விடைப்பொருள்.

அறிஞர்பெயர்	கல்-வி-மான்
சிவலோகப்பெயர்	திரு-வே-டம்
தமிழ்நிகண்டு-ஒன்று	திவா-க-ரம்
அழகின்பெயர்	மஞ்-சி-மம்
சீர்ப்புள்-ஒன்று	சகு-நீ-தம்
கல்லையின்பெயர்	மன்-தா-கினி
ஆசப்பெயர்	திரு-ம-ரம்
நெருப்பின்பெயர்	காரு-ணி-யம்
வளர்ச்சிப்பெயர்	தலை-ப்-பாடு
தைரியப்பெயர்	மனோ-ப-வம்
அயன்மனைவி-ஒன்று	காய-த்-திரி
மிருதுவின்பெயர்	சார்-தீ-ரம்
முருகன்வாழ்தலம்-ஒன்று	சம-ர-புரி
ஆகமம்-ஒன்று	சிந்-தி-யம்
அக்கினியின்பெயர்	கும்-ப-சன்
நிதி-ஒன்று	சது-ர்-த்தி
உபநிடதம்-ஒன்று	தாப-நீ-யம்
குறித்தற்பெயர்	கட்-டு-தல்
நலம்-ஒன்று	கட-ம்-பூர்
மலை-ஒன்று	திரு-வா-கிகை
இன்பப்பெயர்	யுகி-ழ்-ச்சி
சத்தத்துவிபம்-ஒன்று	அட்-க-ரம்.

—இதின் கடைவெழுத்துக்களை யெடுத்து வரிசைக்கிரமமாக வெழுதி வாசித்துப் பார்க்க "விவேகசிந்தாமணிப் பத்திராதிபர் நீடூழிவாழ்க"வென்றாகும்.

வி. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.
மாஜி முனிசிபல் கௌன்சிலர்.
பழனிஸ்தலம்.

The Lord's Play at Hide and Seek.

"Work is the first chapter of human life, God is its conclusion. To work unattached is exceedingly difficult in this world of ours where the senses are worshipped!"—**Sri Ramakrishna Paramahamsa.**

ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் கூத்து!

*"சேத்தியம்பாரம்
சொரத்திரியம்பாரம்
ஸ்ரீ கிருஷ்ணராயருக்கென்னெய்!

* சேத்தி=ஸ்ரீ ஜயந்தி தம்பாரம்=அம்பரம் (ஆகாசம்) என்பதின் திரிபு.

பட்டினியம்பாரம்
பரணியம்பாரம்
பாலகிருஷ்ணனுக் கென்னெய்!

என்னெய்வார்த்தாலென்னெய்!
உ'ளாக்கட்டி பொம்மை!
வாசி வாத்தா லாசி †
உ'ளாக்கட்டி பீசி ‡

முடிகு : கொக்கு நிற்க நிற்க
குளம் வத்த வத்த ஸ்ரீ
கோபாலகிருஷ்ணனுக்
கென்னெயோ வெண்ணெய்!"

—கோபாலகிருஷ்ணன் கூத்துப்போட நாட்டுப் புறத்துச் சிறுவர்கள் வீடுதோறும் எண்ணெய் தண்டும் பாட்டு.

கூத்துப்பார்க்க வாரும் சதரே! — கலிகாலக் கூத்துப் பார்க்க வாரும்!

(1) பிறந்ததோர்வம்சம் புகுந்ததோர்வம்சம்
கறந்ததோர்பாலிற் புகுந்ததோர்நெய்க்கழுங்
கோபாலகிருஷ்ணன் கூத்துப்பார்க்கவாரும்
கலிகாலக் கூத்துப் பார்க்க வாரும்! சதரே!

(2) நிறைந்தவோர்பானையில் மறைந்தவோர்கள்வன்
குறைந்தவோர்முலையில் கரைந்தவோர்செல்வன்
கோமாளிக்ருஷ்ணன் கூத்துப்பார்க்கவாரும்
[சதரே!
இந்தக் கலிகாலக் கூத்துப்பார்க்க வாரும்!

(3) தன்னய மறியாத் தற்பர நாயகன்
சொன்னய மறியாச் சூந்யசங் கற்பன்
மார்ஜ'லாமான் ம'யக்கூத்துக்காண்'வாரும்.
கலிகாலக் கூத்துக் காண வாரும்! [சதரே!

(4) என்னயமில்லான் நாமகன்சிலம்பொலிச்
சொன்னயமெல்லாஞ் சூந்யமாக்குவான்
என்னயமெல்லாம் பொன்னயமாக்குமோர்
கோபாலகிருஷ்ணன் கூத்துப்பார்க்கவாரும்
[சதரே!

(5) சொல்லியுங்கேளான் சொல்லினுக்கடங்கான்
மெல்லியர்போல்மன மொழிமெய்மாறுவான்
கோமாளிக்கிருஷ்ணன் கூத்துப்பார்க்கவாரும்
[சதரே!
யவன்கலிகாலக் கூத்துப் பார்க்க வாரும்!

† வாசி='வாசி' (வாய்தாரணை) யிக் விளாசம்.
‡ பீசி=மீசி, மீசை யென்பதின் திரிபு.

The Uprising or "Uplift."

"உட்டியாண பந்தம்."†

திருவெம்பாவாய்!

"எந்தக் காரணத்தால், எந்த பந்தத்தால் கட்டுப்பட்ட பிராணன் சுழுமுனை யென்னும் மத்தியநாடியில் பறக்கின்றதோ, அந்தக் காரணத்தால் அது மச்சேந்திரர் முதலிய யோகிகளால் உட்டியாணபந்தமெனப்பட்டது.''—ஹடயோக தீபிகை.

"உட்டியாணம்''=பறத்தல். இந்த பந்தத்தால் பிராணன் சுழுமுனையில் பறக்கின்றமையால் உட்டியாணமெனப்படுகிறது. "நாபியின் மேற்கீழ்ப் பாகங்களை மிகமுயற்சியால் (முதுகோடொட்டும்படி) பின் இழுக்கவேண்டும்: ஆறுமாசம் அப்பியசித்தால் மிருத்யுவை ஜயிப்பன். இதில் சந்தேகமில்லை." பந்தங்களெல்லாவற்றிலும் உட்டியாணபந்தமே உத்தமம். ஏனெனின் உட்டியாணம் திடமாகச் செய்யப்படின், முக்தி இயல்பாகவே புண்டாம்'.—ஹடயோகதீபிகை.

"எல்லாவற்றையும் பற்றி எனக்குக் கடிதத்தில் எழுத மனம் துணியவில்லை. காசமாலையோடு உட்டியாணமும் பண்ணுவாயானால். .....பார்க்கலாம்."—கடிதம்

"வாயுமனமுங் கடந்த மனோன்மனி
பேயுங்கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயுமறவுங் கடந்த வாறுக்குத்
தாயுமகளு கற்றாருமாமே."—திருமந்திரம்.

"தாயாயிருந்து தன்னுருத் தந்தவள்
பேயாயிருந்து பொன்னுரு வானவள்
மகளாயிருந்து மின்னுருக் கொண்டவள்
நாரமுமாவளிரு-தசாரமத்தியில்."-குருவாக்.

திருவெம்பாவாய்!

"மேலவே தாவிருந்து வேணமட்டுங் கைகொடுப்பேன்
மேலவே நீயிருந்து தாவிப்பிடி யென்றான்''—ஆனந்தத்தாய் [மொழி.

1. "புன்னையங்கானல்''—சமஷ்டி உயிர்.

"வருதியோ எம்பாவாய் [illegible] துடிக்கமிகக்
கருதியோ எம்பாவாய் கண்ணிலா [illegible]!
கருதியோ டறுதியெல்லாம் குக்குமையா லுணர்ந்த [பின்னும்
*குருதியோடெறுதியிலாவுன்னுயிரைவதைக்கலாமோ!

† 'பந்தம்' என்றாலும் 'பந்தனம்' என்றாலும் ஒன்றே. 'உட்டியானம்' என்றும் பாடமுண்டு.

‡ c-f. "தன்னுக் கணிகலம் கண்ணோட்டம்"—அக்கிலனார் குரூர சித்தமுள்ளார்.

* குருதி=இரத்தம்

2. "பெண்கிளி''—பரையில்வாக்கு.

வதைக்கலாமோ பெண்கிளியைப் பொன்பறிக்க [வாசைகொண்டு!
பதைக்கலாமோ வென்னுயிரும் பூனைவாயிற் *பட்டா [யென்றே!
சிதைக்கலாமோ வுன்சிறைச் சிறையிலிட்டுக் [கொடுமைகண்டு!
விதைக்கலாமோ தீவினையை வீணாசைப்பேய்பிடித்து!

3. "பூதாகரன்''—மாயாமோசம்.

வீணாசைப் பேய்பிடித்துவீணனவார்த்தைசொன்னான்
பூணாசைப் பித்தேறிப் பெண்ணைவிடச் சொல்லிவந் [தான்
நாணாசை†தான்டவுன்னை, நமன்வாயிற்கிரையாகாய்;
ஊணாசை கொண்டேயுன்னை நம்பவைத்து மோசஞ் [செய்தான்!

4. "புருஷாமிருகம்"—அவித்யாஸம்பந்நன்

(மாயாமோசம்.)

மோசஞ்செய்தான் நம்பவைத்து மோஸங்கெட்ட $ [மூடனவன்
நாசஞ்செய்தான் மாசம்வைத்துக் காசுபறித் திட [வெண்ணி
நேசஞ்செய்தான் காசுக்கென்று நீதிகெட்ட வேசி [மகன் §
கோசஞ்செய்து கொடுமைசெய்தான் சதுர்வேத [வஞ்சனம்மா!

* 'இளியை வளர்த்துப் பூனையினிடம் கொடுத்தல்' என்கிற பழமொழிலக்ஷியம்:மெய்ப்பயன் அளிக்கும் 'வாய்மை'யாம்வாக்கைப்பொய்ப்பயனளிக்கும் பொய்மையாம் மாயையின் வசம் ஒப்பிவித்தல். "வாய்மையாற்பொய்யா மனத்தினால் மாசற்ற, தூய்மையாமீசனருள்" என்றார் ஔவையாரும்.

‡ ஹரீங்காரப்பிரியம்: c-f. "ஹரீங்காரத்தினி திருக்கவே."

$ உள்ளுணர்வில்லா அவிவேக அவித்யா ஸம்பந்நன்.

§ மாயாபுருஷன். c f "Intellect is a whore"—Emerson

5. "விருஷபோற்சவம்"—"தத்துவமஸி"

சதுர்வேதவஞ்சனம்மா விதித்தானிவ்வல்லலெல்லாம்
யஜுர்வேத சாகை"யஹம் ப்ரஹ்மாஸ்மி" யென்று [சொன்னான்!
பிதுர்வேத வாக்காமந்த "தத்துவமஸி" வாக்கியத் [தைச்
சதுர்வேத ஸத்புருஷன் வாக்காயுளைக் கோதுவனான்.

6. 'ஆனைகட்டினமரம்'—"ஆவரணசேஷ்டை"

ஓதுவனான் உண்மைதனை யுள்மர்மங் கண்டுணர்வாய்
கோதுவரா தொழுகுவோர்க்குக் கோடுமையில்லை யிவ் [வுலகில்
போதுபோகா துளறுவோர்க்குப் போகசுகஞ் சிறிது [மில்லை!
சேதுபந்தம் செய்தாமன் சிதைபுகழ்உட்டியாணங் [கேள்.

7. "இரதாரோஹணம்"—"ஆத்மநிஷ்டை"

உட்டியாண மென்றுசொல்வர் சிற்றிடையார் பூண் [பணியை
"உட்டியன" ‡ மென்றுசொன்னாற் பற்றமுற்று மற் [றுப்போம்:
உட்டியாணம் பூணவேண்டில் உள்ளாசையறல்வேண் [டும்
உட்டியாணம் பண்ணவேண்டில் பேராசை தீரவே [ண்டும்.

† 'மிருத்தியுவை வென்ற ராமன்' என்றபடி.

'சேதுபந்தம்' என்றாலும் மூலபந்தம் 'என்றாலும் ஒன்றே. முன்னது பாஹ்யார்த்தம், பின்னது அந்தரார்த்தம்." மூலபந்தத்தால் கீழ்ச்செல்லும் அபான வாயு மேற்செல்வதாய் அக்கினிமண்டலத்தை யுடையும். ஜாடராக்கினியின் சிகை வாயுவோடு சேருதலால் நீறு என்றது. அக்கினிமண்டலம் நாபியின்கீழ்ப்பாகத்தில் நிகோணமாயிருக்கின்றது [illegible]

c-f."முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்
அன்னையிட்டதீ யடிவயிற்றிலே"

‡ உட்டியனம் = பறத்தல். உட்டியாணம்=பிராணனைக்கட்டிப் பிடித்து ஆகாசத்தில் (சுழுமுனைமார்க்கத்தில்) பறக்க (பிரவேசிக்க)ச் செய்தல்.

8. "பரிவேட்டை"—"உட்டியமலக்ஷணம்."

பேராசை தீரவேண்டும் பேய்க்கூத்தும் நிற்கவேண் [டும்
கூராசை கொண்டமகன் கொட்டமுந்தா னடங்கவே [ண்டும்
$ நீராசை கொண்டவுன்றன் பித்தமுந்தான் இறங்க [வேண்டும்
நேராசை கொண்டவுன்றன் சித்தமுந்தான் தெளிய [வேண்டும்.

9. "தங்கத்தொட்டி"—"நிஷ்காமியதர்மம்."

தெளியவேண்டும் சித்தமுந்தான் உட்டியாணம் பூண [வேண்டில்
தெளியவேண்டும் ஆசைதானும்உட்டியாணம் பண்ண [வேண்டில்
தெளியவேண்டும் புத்திதானும் புன்மைவிட்டு நன்மை [பற்றித்
தெளியவேண்டும் பொய்பேசும் பித்தலாட்டத் தன [மும்மா!

10. "தாருகாசுரன்வதை"—"காமிய தபலறுத்தல்."

பித்தலாட்டத் தனமும்மா போகவேண்டும் பூரணமா-
பித்தலாட்டம் செய்யும்புத்தி புநிதமாகத் தேறல்வே [ண்டும்
பித்தலாட்டம் செய்துபணம் பறிக்குமாசை யறல்வே [ண்டும்
பித்தலாட்டம் செய்துபெண்ணைப் † படித்துமுத்தி [மாறல்வேண்டும்.

11. இதுவுமது—துஷ்டநிக்ரகம்.

மாறல்வேண்டும் பேராசைமாறல்வேண்டும்தூராசை ‡
மாறல்வேண்டும்காசாசை மாறல்வேண்டும்பணவாசை
மாறல்வேண்டும் பொன்னாசை மாறல்வேண்டும் மன [வாசை
மாறல்வேண்டும் ஆசையெல்லா முட்டியாணம் பூண [வே[illegible]

$ பித்தம் [illegible] ஜலத்திலொடுங்கி மேகநீராகி [illegible] நாடிகளைக் கட்டும். சீற்றம் தணிந்ததால் மேகோஷ்ணம் குறைந்து நீரிறங்கும். "நேராசை"=நிஷ்காம்யகர்மத்தில் ஆசை: கர்மபலாபேக்ஷையின்றி கர்மத்தைச் செய்ய ஆசைப்படல் பக்தத்தைக் கொடாதாதலால் 'நேராசை' யென்று குறிக்கப்பட்டது.

† c-f. "புதுமணப் பெண்ணும் பொன்பு வெள்ளம்." (See 9.)

‡ தூராசையின் நீட்டல்விகாரம்.

12. "பிருந்தாவனபோஜனம்"—சிஷ்ட பரிபாலனம்.

உட்டியாணம் பூணவேண்டி லுள்ளாசை யொழிய [வேண்டும்.
உட்டியாணம் பூணலம்மா உள்ளாசை யொழிந்ததெ [ன்றே!
உட்டியாண பந்தமம்மா உள்ளாசை யொழிக்குந் [தானே!
உட்டியாண பந்தசிதை யிராமனுக்கே யுரியவள்காண்!

13. ப்ரதோஷ விசேஷம்—பரோக்ஷதரிசனம்.

உரியவள்காண் சிதையுமே யுட்டியாண பந்தமதால்
உரியவள்காண் சிதையுமே சேதுபந்த ராமனுக்கு
உரியவள்தன் உரிமைதானும் உட்டியான பந்தமதால்
உரியவளும் உரியவனும் ஒன்றுபடில் உட்டியானமாம்.

14. "அபரோக்ஷ சாக்ஷாத்காரம்"—அனுபவானந்த உறுதி.

உட்டியாண மாமந்த உயர்பந்த னஞ்சொன்னேன்
உட்டியாண மாமிந்த உயர்பூணும் உள்நோக்கில்
உட்டியாண மாமந்த உயிருடல் † ஒன்றுசேரக்
கெட்டியாம் பொன்மேனி‡யிடைமருங் கதுவாமே.

15. "அனுக்ரக விசேஷம்"—உட்டியாண மளித்தல்.

பொன்னிடை மருங்குள தட்டியாண பந்தங்கேள்
மன்னிடை மருங்குள மாயையும் அதுவே
என்னிடை மருங்குதித் தருவேயுருவா யமர்ந்தபெண் [மயிலே]
உன்னிடை மருங்கிலோர் "உட்டியாண" பந்தன [முளதறிவாயே!

16. "ஆத்மஸம்பூரணம்"-உட்யாணந்தரித்தல்.

"உட்டியாண" பந்தன முளதறிவாய் பெண்மயிலே!
உட்டியாண பந்தன முள்ளறிவாய்க் * செய்தவரே
உட்டியாண பந்தனமுள்ளறிவாய்க் கண்டுகொள்வா
குட்டியாண முத்திரையும் எனையின்றாள் $ இடை [மருங்கே!

ஓம் உட்டியாணபீட நிலயாயை நமஃ

† உயிருடல்=நாதபிந்து. c-f. "அழியாதிவ்வுடலங்காண் நாத பிந்து சேர்ந்தால்." [யுடைய

‡ c-f. "வெள்ளிபொன் மேனிய தொக்கும் வினை
உள்ளுடம்பி னாய வொளி."-ஔவைகுறள்.

* குருவழிப்பட் டுணரவேண்டிய இரகஸியமாம் சிவயோக முறையால்.

$ c-f."பொய்யா யெல்லாஞ் சிருஷ்டிக்குந் திறமை
யினாலீன்றோனாவன்."—குதலம்ஹிதை. c-f. "உட்டியாணபீட நிலயா"— இரகஸிய நாமாவளி.

Bee-Stings-Cure for Rheumatism.

—(:-:)—

வாதக்கட்டுக்கு வைத்தியம்; தேனீக்கொட்டு.

வாதக்கட்டுக்கு தேனீக்கொட்டு கைகண்ட வைத்தியம் என்று பரீக்ஷித்துக் கண்டிருக்கிறார்கள். 10 வருஷம் 15-வருஷங்கள் வாதக்கட்டினால் வருந்தினவர்களெல்லாம் தேனீக்கொட்டினால் குணப்பட்டுத் தேறியிருக்கிறார்களென்றும், அதற்காகச் சில வைத்தியர்கள் தேனீக்களை வளர்த்து வருகிறார்களென்றும் தெரிகிறது. வாதக்கட்டுக்குத் தேனீக்கொட்டு வைத்தியமாவது எப்படி?

"பிரமரகீட நியாயம்" என்று சொல்கிறார்களே, அப்படி யென்றால் என்ன தெரியுமா? பிரமரம் என்றால் வண்டு: கீடம் என்றால் புழு. வண்டு (beetle) கூடுகட்டி பச்சைப்புழுவைக் கொண்டுபோய் அதில் வைத்து நியமமாய்க் கொட்டி தீங்காரஞ் செய்து வருகையில், கொட்டுப்பொறுக்காமல் புழுத்துடிக்க, அப்பொழுது வண்டின் தீங்காரத்வனி நாதாகாரமாய்த் துடிக்கும் அதன் பிராண நாடியின் நேரொலியோடு கலக்க, சமுத்திரத்தைச் சேர்ந்த நதிஜலம் அதன் மயமானாற் போல், பச்சைப் புழுவின் பிராணன் துடிக்கும் நாதம், வண்டின் தீங்காரத்வனியினால் விழுங்கப்பட்டு அதன் மயமாக மாறி விடுகிறது. ஹ்ரீம் என்ற சாதுவுக்கு லஜ்ஜை யென்று பெயர், ஹ்ரீங்காரம் என்று அவ்யக்த ரூப மூலப்பிரகிருதிக்குச் சொல்கிறது. தாயுமானவரும் "நாதவடிவான மஹா மந்திராதிரூபியே" யென்று பாடியிருக்கிறாரல்லவா! ஆதலால் வண்டின் தீங்காரத்வனி நாதவடிவுக் கறிகுறியாம். நாத தத்துவத்திலிருந்து "பூதங்களுண்டாகும் பரிணாமக் கிரமத்தையும், பூதங்களெல்லாம் காரியகாரண தோரணையாக ஒன்றிலொன்று தடங்கி யொடுங்க எல்லாம் நாதமாத்திரமாக எஞ்சி நிற்கும் லயக்கிரமத்தையும், "பஞ்சீகரணவிதி" யென்று சொல்வர்.

"பூதமுதலாகவே நாத பரியந்தமும் பொய்யென்றனைக்காட்டி" யென்றமையால் இவை யெல்லாம் 'ஜகத்பாவம்' அல்லது 'தோற்றமாத்திர' மாமென்றுணர்வார், தத்துவஞானிகளாவார். 'விருத்திகடியலய

முறையை யறிந்தவர்கள் பஞ்சீகரணவிதியை யறிவார். இந்தப் பஞ்சீகரண விதியே பஞ்சஜந்தியம் என்கிற சங்குமாம். ஜகத்காரணரும் ஜகத் ரக்ஷகருமானபகவான்" சங்குசக்ர கதாபாணி யாகநிற்பது சிருஷ்டிஸ்திதி ஸம்ஹார கிருத்தியங்களுக் கெல்லாம் அவர் கர்த்தவாயிருக்கிறார் என்பதைக் காட்டுவதன்றி வேறல்ல:

சங்கினால் சிருஷ்டியும் (பஞ்சீகரணமும்) சக்கரத்தினால் ஸம்ஹாரமும் (ஒடுக்கமும்) கதையினால் பிராணதாரணமும் செய்கிறார்.

மனிதனது இந்த பஞ்ச பௌதிக ஸ்தூல தேஹத்தை சாதன சாதக சாத்திய முறையறிந்து கையாடினால் ஜீவகாரணமான ஆத்மாவுக்கழிவின்றி தேஹத்தைக் கரைத்து நாதத்திலொடுக்கி, நாதத்திலிருந்து தேஹத்தையுண்டு பண்ணலாம்.

வாதரோவென்பது வாயுவின் சீற்றமன்றி வேறல்ல. வாயுச்சீறினால் ஜாடராக்னி நீறாகும். நீறான தாளனம் ஜலத்தில் சேர்ந்து, ஆகாயத்தில் வாயுவின் சீற்றத்தால் மேகநீர் ஆகாயத்தில் தானே யுறைந்து கட்டி மழையாகப் பொழிவதுபோல், இரக்தமானது கட்டி விழத்தோய்ந்தபோக நாடி யோட்டம் தடைப்பட்டு முடையுற்று நிற்கிறது.

இதனால் வாதக் கட்டுண்டாகிறது. தேனீக்கொட்டு இதற்கு நல் வைத்தியமாவேனேன் என்றால் சொல்லுகிறேன் கேளுங்கள்:—

குண்டலினி (ஜாடராக்நிமுதல்சிதக்னிவரையிலுள்ள பஞ்சாக்னிகளும்) தூக்கம்விட்டெழுந்து சீறினால் தாதுக்களேழும் வெந்துநீறாகும். நீறானதாதுக்கள் நாடிகாம்புகளின் துவாரத்திற் சிக்கிக்கொண்டு அவைகளை யடைத்துக்கொள்ளாதபடி, 72-ஆயிரம் நாடிகளையும் அமிருத வருஷத்தால் அடிக்கடி நனைக்க வேண்டுமென்று உபநிஷத்துக்களிலும் சுகஸம் ஹிதையிலும் முறையிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நனைத்து வந்தால், பட்டமரம் பாலொழுகுவதுபோல் கட்ட தாதுக்களெல்லாம் 'கட்டு விட்டுத் தளர்ந்து சேரும்.' இதனால் தேஹ மிருக்கையில் தானே அணுத்திரள்கள் முளையாய் 'செத்துப் பிழைக்கலாம்.' இப்படி செத்துப் பிழைத்தால் புனர்ஜன்மமுண்டாகி, 'தேஹோஹம்' என்கிற பாவம் நீங்கி, 'சிவோஹம்' என்கிற சித்தை யுதிக்கும். 'சிவோஹம்' என்கிற சித்தை நாத வடிவான சித்தத்தில் தான யடைகும். ஆகையால் எப்படியாவது, தேஹத்தைக் கொட்டிப் பிராணனைத் துடிக்கச்செய்தால், உள்ள முணராமலே நாதமென்கிற பிரணவ குணத்வனியுண்டாகும். அந்த அவஸ்தையில் மனது உருக்கின தங்கம் போலிருப்பதால் நினைத்த வுருக்கொள்ளும். அப்பொழுது 'தேஹசுகம்' வான்தவத்தில் தானே க்ஷணமாத்ரை யளவாக ஸித்தித்திருக்கும். அந்த க்ஷணமாத்திர சுகத்தை நீடித்து வளரச்செய்தால் அது எல்லா வியாதியையும் போக்கி சுகத்தை யளிக்கும். இதுதான் உசோத்தினால் வைத்தியம் செய்வோர் அப்பியசிக்கும் "hypnotic power" என்கிற வசியசக்தி.

தேனீக்கொட்டு என்? தேளைக்கொண்டு கொட்டவிடக் கூடாதா? என்று கேட்கலாம். இதுதான் ஆத்ம சங்கல்பத்துக்கும் (சுத்தமனசினால் காமத்தைக் களைந்து சங்கல்பித்தற்கு),காமஸங்கல்பத்துக்குமுள்ள வித்தியாஸம். தேனீ சுத்தாகாரமுண்டு அமிர்த ரஸத்தினால் ஜீவிக்கும் ஜந்து. அது சுத்தமனசுக்கு உதாரணம். தேள் மல மூத்ராதி (எருமைச்சாணி போன்ற) அசுத்த வஸ்துக்களிலிருந் துண்டாகும் புழுக்கம் நிறைந்த விடத்தில் வளருவது. அது அசுத்த மனதுக்குச்சரி. சுத்த சங்கல்பம் எப்போதும் நிஷ்காம்ய கர்மத்தால் சுகத்தைக்கொடுக்கும். அசுத்த சங்கல்பம் காமிய சங்கல்பங்களை வளர்த்துக் கர்ம பந்தத்தையுண்டுபண்ணும். இந்தக் கர்மபந்தமே தேஹத்தில் "வாதக்கட்டு." ஆதியில்லாமல் வியாதியில்லை. சித் அன்றிச் சடமில்லை. அறிவின்றி அறியாமையில்லை, பகலின்றி இரவில்லை. சூரியனில்லாமல் சாயா தேவியில்லை. ஆகையால் இப்படி 'துவந்துவ' ரூபமாயுள்ளவைகளுக்கெல்லாம் நிவாரணம் லயயோகமே. பிராணயாமமின்றி லயயோக மில்லையால், பிராணயாமமே எல்லாவற்றிற்கும் ஆரணமும் காரணமுமாயிருக்கிறதென்று சொல்லலாம். தேனீக் கொட்டினவன் ஒரு விதத்தில் பஹிர்முகவிர்த்தியற்று (பிரத்தியாஹார சித்தியால்) எளிதில் பிராணிருதப் பிராணயாமஞ் செய்கிறான். தப்பொழுது தேனீக் கொட்டினால் சுகம் ஜநித்ததாக நினைப்பதால் அவன் அந்த சுகத்தை சுத்த சங்கல்ப விசேஷத்தால் அடைகிறான். இதுவே யங்குள்ள மர்மம்.

ஓம் தத்ஸத்.

LALITAMBAL.

லளிதாம்பாள் சரித்திரம்.

1.

"அந்தணரென்பர் அறவோர்."

"இதுதானே தில்லை ஸ்தலம்!" என்று நந்தனார்கண்டு உவகைமேலிட்டு உடலுருகக் கரங்குவித்துத் தொழுத தில்லை மகாக்ஷேத்திரமாம் சிதம்பரத்துக்குப் பதினெட்டுமைல் தூரத்திலே கருவேலங்காடு என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அதற்குக் "காட்டு விண்ணூர் கோயில்" என்கிற மறுநாமம் உண்டு. இந்த ஊரிலே விஷ்ணுவாலயம் ஒன்றிருக்கிறது. அவ்வாலயத்திற்குத் தெற்கேயுள்ள ஒத்தைத் தெருவில் வாமதேவ சாஸ்திரி என்று ஒரு பூஜ்யர் இருந்தார். அவருக்கு ஆறுபாஷைகள் பேசவரும். அத்தியயனம் ஏதோ செய்திருக்கிறார். சாஸ்திரங்களும் கொஞ்சம் பார்த்திருக்கிறார். பூர்வத்தில் சோழராசன் ஆண்டகாலத்தில் இவர் வமிசத்தவர்கள் சாஸ்திர பாண்டித்தியம்பெற்ற வைதிக சிரேஷ்டர்களாயிருந்தமையால் அக்காலத்தில் அவர்களுக்கு விட்டுக்கொடுத்த ஸர்வமானிய நிலம் இன்னமும் அவர்கள் வசத்திலிருக்கிறது. சாஸ்திரியாருக்கு ஜீவனாம்சமில்லையால் குடும்பவிசாரம் கொஞ்சமும் கூடையாது. புத்திர சந்தானமில்லை. பெண் குழந்தைகள்மட்டும் உண்டு. அவர்களில் மூத்த பெண்ணுக்கு ஏழுவயதாய், எட்டாவது வயது பிறந்துவிட்டது. குடும்ப விசாரமற்றுக் குதூகலமாயிருந்த சாஸ்திரி[illegible] கவலைவந்து [illegible]கொண்டது. ஏனென்றால், "குழந்தைக்குக் கன்னிகாதானம் செய்யும் வயது வந்துவிட்டது: நல்லவரன் பார்த்து இந்த வருஷமே காலந்தப்பாமல் குழந்தையைக் கன்னிகாதானம் செய்து கொடுத்துவிடவேண்டும்! என்னசெய்கிறது!" என்று மருளமருள விழிப்பார்.

திருவசலூர் என்றும் திருவிசை நல்லூர் என்றும் பேர்பெற்ற மஹா க்ஷேத்திரமொன்று இருக்கிறது. இதற்கும் மத்தியார்ஜுனத்துக்கும் (திருவிடைமருதூருக்கும்) நடுவில் இரண்டு புண்யநதிகள் ஓடுகின்றன. அங்கே ஸ்ரீ சதாசிவ ப்ரஹ்மமென்று புகழ்பெற்ற சித்தபுருஷர் அவருடைய சகபாடிகளோடு வித்யாப்பியாசம் செய்துவந்தார். பூர்வந்தொட்டு மஹான்களால் பிரகாசிக்கப்பெற்ற இடம். இல்லறத்துறவியும் ஸஹஜாநுபவ ஞானியுமாகிய ஸ்ரீ வேங்கடேசுவர ஐயாவாள் ஜ்யோதிமஹாலிங்கத்தின் கிருபைபெற்று பூரணானுக்ரக விசேஷத்தால் ஸ்வாநுபவச் செல்வராய் வாழ்ந்த புண்யக்ஷேத்திரம் இது. இன்றைக்கும் அந்தவூரிலே அவருடைய மடம் ஒன்று இருக்கிறது. அவருக்கு கங்காதேவி வந்து கிருபைபாலித்த கிணறு அந்த மடத்தின் கொல்லையில் தானே யிருக்கிறது.

ஸ்ரீ ஜ்யோதிமஹாலிங்கருடைய வரப்பிரஸாத வள்ளலாரான ஐயாவாள் ஸ்வாநுபவ வித்திபெற்ற பின்னும் இல்லறத்துறவியாயிருந்து அந்தர்யஜ்ஞஞ் செய்து பகவானைப் போற்றித் தொழுது வந்தார். பகவன்நாமசங்கீர்த்தனஞ் செய்துகொண்டு பாகவத சிரேஷ்டராய் அவர் ஜீவயாத்ரை செய்துவருங் காலத்தில், அவருடைய ஜீவகாருண்ய மகத்துவத்தை வெளியிடவேண்டி ஜ்யோதிமாகாலிங்கர் திருவுளம் பற்றலானார். ஒருநாள் காலையில் ஐயாவாள் வழக்கம்போல் விடியற்காலையில் நதிக்கரைக்குச் சென்று ஸ்நானம ஜபம் [illegible] மெல் [illegible] செயது முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பும் பொழுது, ஜ்யோதிமஹாலிங்கர் தானே ஒரு சண்டாள வேடங்கொண்டு பசியினால் மூர்ச்சித்து வருந்துபவராய், வழியில் களைபோட்டு விழுந்து, அவ்வழியே போகும் பிராம்மணர்களை யெல்லாம் தன்பசிக்களைதீர ஒரு கவளம் சோறு போடல் வேண்டுமென்று கேட்டு வருந்திக் கொண்டிருந்தார். வழியே சென்ற பிராம்மணர்களெல்லாரும் அவனைவைது திட்டி அவனுடைய அருகே சென்றாலும் தீட்டு ஒட்

டிக் கொள்ளுமென்று, 'ஐயோ! பாபம்! சண்டாளன் வழியில் கிடக்கிறானே'யென்று, அவனை விலகிப் போம்படி தாக்கீது செய்தும், அவன் நகரமாட்டாமல் கிடந்தமையால், அவரவரும் தங்கள் வழிவிட்டு விலகி யொழுகி வீடு சென்றார்கள்.

"அந்தணரென்பர் அறவோர் எவ்வெவர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலால்"

என்ற பொய்யாமொழி, இவர்களிடத்தில் மட்டும் பொய்த்துப் போகலாயிற்று. ஐயாவாள் வரும்பொழுது அந்தச் சண்டாளன் அவரைக் கண்டு கூவிக் குறையிரந்து தன் பசிக்களை தீர ஒரு கவளம் சோறு கொடுத்துப் பிராணனைக் காத்துப் பிராணதாதாவென்று பெயரெடுக்க வேண்டுமென்று கேட்டான். அவனுடைய பரிதாப நிலைமையைக்கண்டு உள்ளம் உருகி உடல் விதிர்ப்ப நடுநடுங்கி "என் அப்பனே என் பின்னே சற்றுதூரம் எழுந்து வரத் தானும் சக்தியுண்டோ!" வென்று உள்ளன்போடு விசாரிக்க, அச்சண்டாளன்: "ஐயா! பசிக்களையால் நகரவும் சக்தியற்றேன்! ஆயினும் தங்கள் வாய்ப் பிறந்த கருணைமொழி செவிப் புகுதலும் எனக்குள் என்னை யறியாது ஒருவித திடம் உண்டாய் தேஹத்துக்கு உறுதி பயக்குகிறது! ஆகையால் உத்தரவானால் மெள்ள மெள்ளத் தத்திக்கொண்டு வருவேன். அலை அக்கிரஹாரவாசலில் வந்தால் என்னைப் பார்ப்பாரச்சாதியார் புடை புடையென்று புடைத்து விடுவார்களே யென்று அஞ்சுகிறேன்!" என்ன,—ஐயாவாளும், கருணை மிகுதியால் "அப்படி யாயின் இதோ நான் வீடுபோய்ச் சோறு கொண்டுவந்து போடுகிறேன்" என்று ஒரு எட்டாய் வீட்டுக்குச் சென்று அங்கே அன்றைக்குப் பிதுர் தினமாகையால் எல்லாரும்ஸ்நானம்செய்து மடியாக விருக்கக்கண்டு, தான் தானே பழையவமுது பானையைத் தோட்டு அன்ன மெடுத்துக் கொண்டு ஓடோடியும் வந்து உப்பிட்ட சோறு தனை உவகையுடன் தனது திருக்கரத்தாலேயே அச்சண்டாளனுக்களிக்க அவன் இருகரமேந்திப்புசித்து ஐயாவாளை வாழ்த்திவிட்டு மாயமாய் மறைந்துபோனான். ஐயாவாள் இதுவும் எம்பெருமான் திருவிளையாடல்களில் ஒன்றே யென்று உள்ளம் நிறைந்த உவகையோடு ஆனந்த பாஷ்பம்விட்டு ஜ்யோதிமஹாலிங்கத்தின் திருவருளைத் துதித்துத்தொழுது நிற்கும் பொழுது இந்தசெய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது.

திருவசலூர்ப் பார்ப்பனர் குலமெல்லாம் ஐயாவாள் செய்த அருஞ்செயலின் பெருமையுணர மாட்டாதவர்களாய், திருவருளுக்கு அயலூர்தானே யானவர்களாய், அவர்களுடைய அஜ்ஞான அந்தகாரத்தி லுதித்தெழுந்த காமக்குரோத லோப மோக மத மாச்சரியங்களான ஷடூர்மிகளுக் கீடுபட்டவர்களாய், "பிதுர்தினத்தன்று சண்டாளனுக்குச் சோறுபோட்டானாகையால், இவன் ஜாதியிழந்தனன்" என்று பலவாறு தூற்றி ஐயாவாளைக்கண்டு பகலைக்கண்டொதுங்கும் இரவன்ன எல்லாரும் ஒதுங்கி நின்றார்கள். ஐயாவாள் அவர்களுடைய நடத்தைக்குக் காரணமின்னதென்று ஊகித்துணர்ந்து அது "சுபாவம்" தானேயென்று ஏதும் மறுமொழிகூறாத திருவருட்சிந்தனையி [illegible] மனத்தினராய் பஞ்சபத லக்ஷணத்திலும் மௌனம் சாதித்துச் சும்மாவிருந்தார்.

இங்கே பஞ்சப[illegible] வென்று சற்றுச் சொல்லவேண்டிய [illegible] என்ன வாக்கியங்களிலெல்லாம் சிறந்தது மஹாவாக்கியங்கள். இவை நாலு வேதங்களுக்கும் அறுதியாயிருந்து மனிதனது ஆத்மதத்துவத்தை (ஆத்மலக்ஷணத்தை) யுணர்த்தும். இவைகளுக்குமேலாய் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாய் மோனமேயுருவாயுள்ள "வாக்கியாதீத மென்றொரு வாக்கியமுண்டு."

"ஞானமென்பது மோனவரம்பு" என்றார் ஔவையாராதலால், இந்த வாக்கியாதீதமான வாக்கியம் ஞானத்திற்கு 'மோனவரம்பாய்' விளங்கும். அந்த வாக்கிய மென்னவென்றால்: "துவந்தத்அசிஅதிநிஜ"மென்பது.

அவற்றுள்,—

I

துவம்பதமாவது:—(1) ஸ்தூலசரீரம், (2) சூக்ஷ்மசரீரம், (3) காரணசரீரம், (4) ஜீவன், (5) கூடஸ்தர், ஆகிய இந்த ஐந்தும் சேர்ந்தது. இந்த துவம்பதத்துக்கு லக்ஷியார்த்தம் கூடஸ்தர் அதன் வாச்சியார்த்தமானது வியஷ்டி சரீரத்திரயங்களுக்கும் அபிமானியான ஜீவன். சரீரத்திரயங்களும் பதார்த்தமாம்.

II

தத்பதமாவது.—(1) விராட்டு, (2) இரண்யகருப்பம், (3) மாயை, (4) ஈசுவரன், (5) பிரமம் என ஐந்தும் சேர்ந்ததாம். இந்தத் தத் பத லக்ஷியார்த்தம் பிரஹ்மம்; அதன் வாச்சியார்த்தம் சமஷ்டி சரீரத்திரயங்களுக்கும் அபிமானியான ஈசுவரன். சமஷ்டி சரீரங்கள் மூன்றும் பதார்த்தமாம்.

(தோட்பில் மரந்தோன்றுவது சமஷ்டியில் வியஷ்டி. மரங்கள் தோப்பில் மறைவது வியஷ்டியில் சமஷ்டி.)

III

அசிபதமாவது:—(1) சத்து, (2) சித்து, (3) ஆனந்தம், (4) பரபிரஹ்மம், (5) சர்வஸாக்ஷி என ஐந்தும் சேர்ந்ததாம். அசிபத லக்ஷியார்த்தம்: சர்வசாக்ஷி. அதன் வாச்சியார்த்தம்: காரணத் திரியங்களான சத்து, சித்து, ஆனந்தம் என்கிற மூன்று காரண உபாதிகளுக்கும் அபிமானியான பரப்ரஹ்மம். மூன்று காரண உபாதிகளும் பதார்த்தம்.

IV

அதிபதமாவது:—(1) சுத்தம், (2) சூன்யம், (3) சுபாவம், (4) ஒழிவு, (5) அதீதம் என ஐந்தும் சேர்ந்ததாம். அதிபத லக்ஷியார்த்தமாவது: அவாங் மனோ கோசரமாய், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததாய், சாக்ஷாத்காரத்தினாலே மட்டும் விளங்கக்கூடியதாய் கீழாலவஸ்தைகள் (ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தி) மூன்றுக்கும் [illegible]யுள்ள அதீதம். அதன் வாச்சியார்த்தம் காரணாதீதமான "சுத்தம், சூன்யம், சுபாவம்" எனும் மூன்று நித்தியதத்துவங்களுக்கும் அபிமானியான ஒழிவு. இதையே சாந்தோபசாந்தம் என்பாருமுளர். சுத்தம், சூன்யம், சுபாவம் என்றுள்ள ஸ்தூல சூக்ஷ்மகாரணமான நித்திய தத்துவங்கள் மூன்றும் பதார்த்தமாம்.

V

நிஜபதமாவது:—(1) யதார்த்தம், (2) இரகஸியம், (3) அறுதி, (4) ஒடுக்கம், (5) மோனம் என ஐந்தும் சேர்ந்ததாம்.

நிஜபதலக்ஷியார்த்தம்: மோனம். அதன் வாச்சியார்த்தம்: ஆதியந்தமற்று நித்திய நிர்மல ஸ்வரூபமாய் விளங்கும், யதார்த்தம், இரகஸியம், அறுதி என்னும் அசரீராத்மகத் திரயங்களுக்கும் அபிமானியான ஒடுக்கம். (ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதர் தரிசனம் பெற்றோர்க்கு இதுவிளங்கும்.) யதார்த்தம், இரகஸ்யம், அறுதி என்னும் மூன்று மஹாசக்திகளும் பதார்த்தமாம் (இவை பூதேவி, ஸ்ரீதேவி, நீளாதேவி இம்மூவரின் ஸ்வரூபாரூபங்களாம்.) இப்படியாக வுள்ள இருபத்தியைந்து அங்கங்களும் "அங்காங்க பஞ்ச வுபக்கிரமப்படி" † ஒன்றிலொன்று ஐந்தைந்தாய் லயமாகிக் கடைசியில் எஞ்சிநின்ற நிஜஸ்வரூபமான யதார்த்தம், இரகஸியம், அறுதி, ஒடுக்கம், மோனம் என்னும் இவையே விதேஹமாய்க் கொண்ட பஞ்சாங்க

† பஞ்சபதங்களின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் வியஷ்டி, சமஷ்டி, காரணம், தத்துவம், விதேஹமென, ஸ்தூலத்தை விராட்டிலும், விராட்டைச் சத்திலும், சத்தைச் சுத்தத்திலும், சுத்தத்தை யதார்த்தத்திலுமாக இப்படியே அங்காங்க உபக்கிரமப்படி ஒன்றிலொன்றொடுங்கச் செய்து நிஜபதமாத்திரமாய் எஞ்சி நிற்பது.

வேதியராய்ப் பரங்கருணை பூண்டவராய் ஐயாவாள் சகஜநிலையனுபவத்தி லிருந்தார்.

ஐயாவாள் இப்படி சகஜசமாதியிலிருந்து கிருதகிருத்திய நித்திய ஸ்வரூபியாய் விளங்க, ஊரிலுள்ள பிராமணர்களெல்லோரும் சேர்ந்து கொண்டு அவரை ஜாதியை விட்டுத்தள்ளிவைத்திருப்பதாக ஆர்ப்பாடஞ் செய்து, பிதுர்தினமான அன்றைக்கு யாரும் அவர் வீட்டிற் செய்யும் பிதுர்யஜ்ஞத்துக்குப் போகுதல் கூடாதென்று கட்டுப்பாடு செய்து கொண்டிருந்தார்கள். ஐயாவாள் வீட்டில் யாதொரு ஆர்ப்பாடமுமின்றி பிதுர்யஜ்ஞத்துக்கு வேண்டிய சமையல் காரியங்கள் தடையற நடந்தன. மணி 11 ஆயிற்று. பிராஹ்மணர்கள் யாரும் வரவில்லை. 12-ம் அடித்தது. உச்சிகாலமாகியும் யாரும் வரவில்லை. இதை யறிந்த ஐயாவாள் ஏதும் சொல்லாது மாத்தியாந்நிகஸ்நானத்துக்குச் சென்று, நித்தியகர்மங்களை முடித்துக் கொண்டு, அவ்வூரிலுள்ள பிள்ளையார் கோயிலுட் சென்று விக்நேசுவரரை வைசுவாகாராகவும், விஷ்ணு கோயிலில் சென்று விஷ்ணுவை மஹாவிஷ்ணுவாகவும் வந்திருக்கப் பணிந்தழைத்துப், பிதுர்தேவதைகளை நேரில் வந்து பூஜையேற்றுப் போசன முண்டு போகவேண்டுமென்று மந்திரோக்தமாய் ஆவாஹனம் செய்து அழைத்தார். அவர் நினைத்தபடியே, மூவரும் வந்து சேர பிதுர்யஜ்ஞமும் இனிது முடிந்தது. சாப்பாடானதும் பிதுர் தேவதைகளை உபசாரம் செய்து யதாஸ்தானத்துக் கனுப்பிவிட்டு, மஹாவிஷ்ணுவையும் மஹாகணபதியையும் தோத்திரஞ் செய்து வணங்கி திருக்கோயில் கொண்டருளலாமென்று விடைகொடுத் தனுப்பினார். ஊரிலுள்ள பிராம்மணர்களெல்லாரும் கண்கொட்டாது இவர் வீட்டில் யார் பிராம்மணார்த்தம் சாப்பிடுகிறார்கள் பார்க்க வேண்டுமென்று காணக்காத்திருந்தார்கள். இரண்டுமணியாகவும், கதவைத் திறந்துகொண்டு இரண்டு பிராம்மணர்கள் உள்ளிருந்து வெளியேறவே, எல்லாரும் அதிசயித்து அவர்கள் யாரென்று அறிய ஆவல் கொண்டு அவர்கள் பின்பற்றிச் செல்லலானார்கள். கோயிலண்டை சென்றதும் அவர்கள் அந்தர்த்தானமாய் விட, எல்லாரும் திகைத்து இதென்ன புதுமையென்று அதிசயித்தார்கள். ஆயினும் உள்மலம் நீங்காதவர்களானபடியினாலே, ஜலத்தை விட்டு ஒதுக்கப்பட்ட பாசியானது உடனே அந்த ஜலத்தை மூடிக்கொள்வதுபோல, அவர்களுடைய அஜ்ஞான விருத்தியானது ஈசுவர சாக்ஷாத்காரம் பெற்ற அவர்கள் உளக்கண்ணை யுடனேமறைத்துக் 'கண்டதுகனவெனக் கொண்டவர்மனத்தை' மலத்திலாழ்த்தியது. எல்லாரும் பின்னர்கூட்டங்கூடி ஐயாவாள் சண்டாளனுக் கன்ன மிட்டமையால் காசியாத்திரை சென்று கங்காஸ்நானம் செய்தாலன்றி அந்தத் தோஷம் நீங்காதென்று வர்ஜித்தார்கள். ஐயாவாள் அதற்கு முடன்பட்டு கங்கா ஸ்நானம் செய்வதாக ஒப்புக்கொண்டார். அவர் பரம ஏழையாதலால் அவருக்கு ஸ்தூலத்தில் காசியாத்திரை செய்வதற்கான சாதனங்கள் எளிதில் ஏற்படவில்லை. ஆகையால் கங்காதேவியைத் தோத்திரஞ்செய்து தனக்கு அவளுடைய கடாட்சம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். உடனே அவருடைய கிரஹத்தின் புறக்கடையிலிருந்த கிணற்றில் கங்காதேவி அந்தர்வாஹினியாய்த் தோன்றி ஜலம் குமிழியிட்டுக் கொண்டு கிளம்ப, ஊரெல்லாம் ஜலப்பிரளயமாகி விட்டது. அருட்கண் இல்லாத அந்தணர் குலத்தோர் தங்கள் மருட்கண்ணால், ஊர் முழுகிப்போவதை யுணர்ந்து, ஐயாவாளை வணங்கி, அவருடைய மஹிமை விளங்கிற்றென்று ஒப்புக்கொண்டு, கங்காதேவியை அந்தர்வாஹினியாகத்தானே யதாஸ்தானம் போகும்படி பிரார்த்தித்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவரும் அப்படியே செய்ய வெள்ளம் குறைந்து பிரவாகம் அடங்கிற்று. இப்படிப்பட்ட அந்தண சிரேஷ்டரான மஹான் வசித்த அந்த ஊரில் கிருஷ்ணஸ்வாமி ஐயர் என்றொரு பெரிய குடித்தனக்காரர் இருந்தார்.

ஓம் தத்ஸத்.

—(:o:)—

Easy Lessons in Economics.

குடிவாழ்க்கை.

V பாடம். II-ம், பாகம்.

வேலையின் பயன்.

—:-:—

செல்வ மொன்றே நாம் தேடவேண்டுமென்பது நமது கருத்தன்று. இவ்வியாசத்தில் செல்வம்தேட வழியை மாத்திரமே நாம் கவனிக்கிறபடியால் பரலோகத்தை நாடி நாம் செய்யவேண்டிய காரியங்களை இவ்விடத்தில் விவகரிப்பது அவசியமாகத் தோன்ற வில்லை. நிரந்தரமான மோக்ஷலாபத்தை நாடி, யதன் பொருட்டு திரவியச் செலவிட்டு, இம்மையில் வருத்தத்திற் குள்ளாகி மனம் சென்ற மார்க்கத்தி லுழன்று இவ்விக சுகங்களை அற்பமென மறக்கலாம். ஆயினும் இவ்வுலகத்தில் மனிதனுக்கு இன்பத்தைத் தரும் சாதனங்களின் விருத்திக் கிரமங்களைக் காட்ட முயலுகிறோமாகையால் அவ்வின்பத்தை யடைவதற்குரிய அநுகூலங்கள் குறைந்து பயன்படாமற் போகும் காரணங்களை யெல்லாம் எடுத்துக் கூறுதல் நமது கடமை யாகும்.

வேலையால் அமையும் பொருள்களெல்லாம் செல்வமே யாயினும், அவைகளிலும் சிற்சில, செல்வ விருத்திக்கு உபயோகப்பட மாட்டாது. கிரமத்தினால் உண்டாக்கப்படுகிற ஒவ்வொன்றும் தேசத்தின் செல்வத்தை வரவுப் பெருகச் செய்யும் குணமுடையதென்று எண்ணலாயமில்லை. மனிதனுக்கு உணவும், ஆடையும், குடியிருக்க வீடும் இன்றியமையாச் சாதனங்கள். உணவு தேகவலிமைக்கும் சுகத்துக்கும் வேண்டுமளவு இருப்பினும் வலாழிய வேலை செய்வதாகக் மாட்டாது. ஆயினும் நாம் உண்ணும் பொழுது தேக சௌக்கிய மொன்றையே கவனித்து உணவை ஆராய்ந்தெடுப்பதில்லை. ருசியினுணர்ச்சிக்குத் தக்கபடிக்கும் நம்முடைய வழக்கத்திற் கிசைந்த படிக்கும் உணவைத் தேடுகின்றோம். வாசனைக்காகவும் ருசிக்காகவும் நம்முணவில் சேர்க்கப்படும் பல பதார்த்தங்களை நீக்குவதினால் சரீர சௌக்கியம் குன்றாது. புகையிலையின் உபயோகம் சுகத்திற்குப் பிரதானமென்றாவது அவசிய மென்றாவது சொல்லவிடமில்லை. பலவகை விலையுயர்ந்த சாராயங்கள் செல்வநஷ்டத்திற்கு இடங் கொடுக்கின்றன. காப்பி, டீ, கோக்கோ முதலிய பானங்கள் அவசியமானதென்று சொல்ல முடியவில்லை.

இப்படியே ஆடையைப்பற்றி யுன்னும் பொழுது, நாம் வெயில், குளிர் முதலியவைகளை யுத்தேசித்தே ஆடையை நாடுவதில்லை. உயர்ந்த நெசவும், பட்டும், சரிகையும் மெய் வலிமைக்கும், ஆரோக்கியத்திற்கும், அவசியமானதன்று.

மனிதர்களை மூன்று வகுப்பினராகப் பிரிக்கலாம். மனிதருடைய ஜீவனத்திற்கு இன்றியமையாத சாதனங்களைச்செய்யும் தொழிலாளிகள் முதல் வகுப்பினர். மனிதர்களின் ஜீவனத்திற்கு அனுவசியமாயிருந்தும் சுகத்தைக் கருதி உபயோகிக்கப்படும் சாதனங்களைச் செய்யும் தொழிலாளிகள் இரண்டாம் வகுப்பினர். பிறர் செய்து முடிக்கும் சாதனங்களின் பயனை யனுபவித்தலிலும், ஊனுறக்கத்திலும் தமது ஆயுளைச் செலவிடுவோரே மூன்றாம் வகுப்பினர். தொழிலின்றிச் சுகவாசஞ் செய்வோர் பிறர் செல்வத்தைக் களவாண்டு [illegible] பெரும் மற்றும் பலரும் [illegible] சேர்ந்தவரே யாவர்.

மேற்கண்ட மூன்று வகுப்பினரில் முதல் வகுப்பினருடைய ஜீவனத்தினிமித்தம் செலவாகும் பொருளே, தேசத்திலுள்ளோரனைவருடைய ஜீவனத்துக்கும் இன்றியமையாச் செலவாகும்.

அந்த முதல் தரத்து வேலைக்காரர்கள் திட சரீரத்துடன் ஜீவித்திருந்து வேலையைக் குறைவன்றி நடத்துவாராயின், மற்றையோரனைவருக்கும் வேண்டிய முக்கியமான சாதனங்களில் குறைவுண்டாகாது. ஆனால் அம்முதல்வகுப்பினரும், தங்கள் உயிரையும் தேக வலிமையையும் வேலைத்திறமையையும் காக்க வேண்டி அளவுக்கு மிஞ்சி சுகத்தைக்கருதி பலபொருள்களை இச்சிக்கலாம். இரண்டாம் வகுப்பினர் செய்யும் வேலையின் பயனாகும் சகல வஸ்துக்களும் இன்றியமையாதவைகளன்று. பல நட்டு முட்டு சாமான்கள், வாகன வகைகள், சரிகை பட்டு முதலிய பல ஆடைக்குதவும் பொருள்கள், வாசனாதிரவியங்கள், சாராயவகைகள் இவைபோன்ற பலசாதனங்கள் சுகமொன்றையே நாடி உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகள் உயிரைக் காப்பாற்ற அவசியமானவையல்ல. இத்தனை தொழிலாளிகளுடைய வேலையின் பயனாகிய பொருள் சுகமொன்றுக்கே உதவுவதைப் பார்த்து நாம் துக்கப்படக் காரணமில்லை.

நம்முடைய தேசத்தில் பெரும்பான்மையோர் ஜீவனமார்க்கத்தைத் தேடிக் தொழிலொன்றையே செய்து வருகின்றனர். இந்துக்களில் மூன்றிலிரண்டு பாகத்தோர் பயிரிட்டுக் காலங் கழிக்கின்றனர். பாக்கிநிற்கும் மூன்றிலொரு பாகத்தினர் உணவு போன்றவையல்லாத சாதனங்களைச் செய்வதிலும், மற்றுமுள்ள தொழில்களிலும் ஏற்பட்டிருக்கின்றனர். பயி[illegible]ர்களுக்கு தங்கள் உணவுக்கு வேண்டுமளவுகூட [illegible]கிறதில்லை. பயிரிடவேண்டிய உதவிகளுக்காகவும், [illegible]க்காகவும், தங்கள் வேலையின் வரும்படியிலிருந்து [illegible] போக எஞ்சி நிற்பதே பயிரிடுவோனுக்கு வருஷத்திற்கு உயிரைக் காப்பாற்றுதலொன்றுக்குங் கூடப் போதாததாக விருக்கின்றது. ஆகையால் எப்பொழுதாவது காலவித்தியாசங்களினால் நிலத்தில் வழக்கம்போல் விளையாது வரும்படி குறைவு படுமானால் அவனுணவின்றித் தவிக்கின்றான். இதற்கு இவ்விடத்தில் நேரும் பஞ்சமே நிதரிசனம்.

இங்கிலாண்டு போன்ற தேசங்களிலுள்ள ஜனங்களுடைய ஸ்திதி இவ்விதமன்று. அவ்விடத்திலுள்ள வேலைக்காரர்களுக்கு உணவுக்கு வேண்டிய அளவுக்குமேல் வரும்படி யுண்டு. அவ்வரும்படியில் சிலபாகத்தை யவர்கள் மிகுத்து வைப்பதுமுண்டு. சிலபாகத்தை அப்போதைக் கப்போது சுகத்தை நாடிய பொருள்களில் செலவிடுவார்கள். வரும்படி முழுமையும் செலவிட்டு மீதி வைக்காமலிருந்தாலும், உணவுப் பொருள்களின் விலையேற்ற காலத்தில் அதற்குத் தகுந்த கூலியை, தொழிலை நடத்துகிறவன் கொடுக்க கட்டாயப்படுத்தப் படுகிறான். அன்றியும் சுகத்தை நாடிய பொருள்களின் பொருட்டு செலவிடப்படுவதை நிறுத்துவாராயின் உணவுக்கு சிரமமின்றி ஜீவிக்கலாம்.

தவிர நம்முடைய தேசத்தைப்போல் அவ்விடங்களில் ஜனங்கள் பெரும்பான்மையோர் உழுது பயிர் செய்கிறவர்களல்ல. கைத்தொழில்களினால் ஜீவிக்கிறவர்களே யதிகம். தேசத்தின் செல்வம் சுக விஷயங்களில் அதிகமாக செலவிடப்படுகிறது. அங்கிருக்கும் செல்வவான்கள் வாகனாதிகளிலும், சங்கீதத்திலும் நாடகத்திலும் செலவிடுவது ஏராளமாகும். ஆகையால் சமயம் நேர்ந்தபொழுது இவ்விதச் செலவை சற்று சுருக்குவாராயின் அத்தேசத்தார் சேகரிக்கக் கூடிய செல்வத்திற்கு அளவில்லை. பிரதேசங்களுக்குள் யுத்தங்களுண்டானாலும், திரவியச் செலவு மிகுதியாய் வேண்டியிருக்கும்படியான எவ்வித காரியம் சம்பவித்தாலும், அச்சமயங்களில் அவர்கள் தங்களுக்கு அவசியமாயுள்ள சுகங்கள் யாதொன்றையும் கைவிடாமலே வேண்டிய தொகையை வேண்டிய காலத்தில் சேகரித்து காரியங்களை நிறைவேற்றுகிறார்கள். ஆகையால் நமக்கு அவசியமான ஒவ்வொரு பொருளையும் நம் தேசத்திலேயே செய்ய முடிக்கவல்ல தொழிலாளிகளும், பெருந் தொழில்களை வைத்து நடத்தக் கூடிய தனிதர்களும் பெருகவேண்டும்.

T. C. வெங்கடரமணய்யர்.

JUBILEE-THANKSGIVINGS.

Silent Prayers for Simple Blessings

பஞ்சவிம்சதி பாக்கியப்பேறு.

போற்றி போற்றி!—மௌனகுருவாழ்த்து.

".....and only to desire
The purity of Yôg is to pass
Beyond the *Sabdabrahm*, the spoken Vêd.
* * * * *
* * Such an one ranks
Above ascetics, higher than the wise,
Beyond achievers of vast deeds ! Be thou
Yôgi Arjuna ! And of such believe,
Truest and best is he who worships ME
With inmost soul stayed on MY MYSTERY."

—*Bhagavad Gita.*

"மச்சித்த: ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி."-கீதை

"என்னிடத்திலேயே மனதையுடைய நீ என்னுடைய அனுக்கிரஹத்தால் எல்லாத் துக்கங்களையும் அதிக்கிரமிப்பாய்."—பகவான் வாக்கு.

"அனேக வர்ணங்களுள்ள பசுக்களானாலும் அவைகளின் பால் ஒரு வர்ணமுள்ளது. ஞானமானது பால்போல காணப்படுகிறது. லிங்கங்களோ (ரூபங்களோ) பசுக்கள்போலிருக்கின்றன. (பாலில் நெய்போல ஞானம் வியாபித்திருக்கிறது.) ஞானக் கண்பெற்று நிஷ்களம், நிச்சலம், சாந்தம் இப்படியாயிருக்கிற மஹத்தான பரமபதமாகிற ப்ரஹ்மம் 'நானே' யென்று ஸ்மரிக்கவேண்டும்."—திரிபுராதாபிநீயுபநிஷத்.

"விவேகசிந்தாமணிப்பத்திராதிபர் நீடூழிவாழ்க"
வென்ற
விடுகதை வினா வியற்றிய
மௌனகுருவாக்குத்துதி.

(1) மௌனகுரு வென்று சொல்வர்
மனமொடுங்கப் பெற்றவரை :
மௌனமாநல் தேசிகனே
மனமொடுங்கக் காட்டவல்லன் !
மௌனகுரு வாய்திறந்தால்
ருத்திரமூர்த்தி தரிசனமாம்
மௌனகுரு வாழ்த்தப்பெற்றால்
சித்திரமும் ருத்திரமாம் !

(2) ருத்திரமாம் மௌனகுரு
சித்திரமாம் முத்திரையால்
எத்திரமாம் இடையூறும்
இல்லையுனக் கென்றேசொல்லிப்
பத்திரமாய்ப் பதினாறு
பதங்களையு மொன்றுசேர்த்துச் (1)
சித்திரமாம் நடுவெழுத்தைச் (2)
சூத்திரமாயக் கோத்தெடுத்தான்! (3)

சி (1) அறிஞர் முதல் திதி யீறாகக்கூறியுள்ள பதினாறு பதங்களும் அவற்றின் பேர்கொடுக்கப்பட்டிருப்பதின் நடுவெழுத்தை பீஜாக்ஷரமாகக் கொண்டு யோகஸம்யமத்தில் லக்ஷியார்த்தம் செய்து பார்த்தால் "தயவுநிறை ஷோடசாக்ஷரீ" யென்று துதிக்கலான ஸ்ரீ தேவியின் பதினாறு கலைகளாக மாறியொலிக்கும்.

வ (2) 'ப்' என்று நடுவில் வந்த சக்தி யெழுத்தை 'கிங்கிணி' யென்கிற நாதவொலி 'கப் 'கப்' பென்றொடுங்கும் ஒடுக்கத்தின் குப்த வித்தியா சித்திரமாக வைத்துப் பார்த்தால் அதில் ஷோடசியின் நடுவெழுத்தின் அதிஷ்டானமான 'ஸ்மரா' என்னும் அதிதேவதை பிரசன்னமாகும். ஸ்மரணத்தில் (தியானத்தில்) மிகவு முயர்ந்தது 'நாதாநுசந்தானம்' என்றுணர்க.

ய (3) "விவேகசிந்தாமணிப்பத்திராதிபர்" என்பதின்ற 16-பெயர்களின் பொது லக்ஷண லக்ஷியங்களைக் "குக்குடாயமநம:" என்று சிந்தையொடுங்கச் சேர்த்துக் கோத்துப் பார்க்கவொரு(பிரஹ்ம)சூத்திரம் பிறக்கும். அது:—

வ (4) வாமத்திலுள்ள பதங்களை லக்ஷியார்த்தம் பொருந்தச் சூத்திரமாய்க் கோத்திடில், 16-பதங்களின் லக்ஷியப் பொருள்களும் நாலுபாத [பாதம்] மாகிப் பின்வருமாறு அமையும்.—

1—"அறிஞர் சிவவேடந்தமிழ் நிரண்டழகு
2—"கீர்ப்புன் கங்கை அரசகிருபை(யொக்குமால்)
3—"மனர்(மதிமுகத்) தைரியதேவி மிருது(வொளி காண்பர்)
4—"முருகன்வாழ்தலம் ஆகமம் அகத்தியன் திதி(யி வற்றினில்).

இது சகுண சாக்ஷாத்காலக்ஷணலக்ஷியமாம்.

(3) கோத்தெடுத்தான் நடுவெழுத்தைச்
சூத்திரமாய்த் தொடுத்திடென்றான் (4)
கோத்தெடுக்கும் குணங்குறியால்
பின்னுமாறு பதங்கள்சேர்த்தான் (5)
கோத்தெடுத்த பதினொருடு
பின்னுறின் நடுவெழுத்தைக்
கோத்தெடுத்துக் கும்பிடென்றான்
விவேகசிந்தா மணியவனே!

(4) விவேகசிந்தா மணியவனே
வீரியனே வாழ்கவென்றான்;
"விவேகசிந்தாமணிப்பத்திராதிபர்
நீடூழிவாழ்க" வுலகிலென்றான்;
விவேகசிந்தா மணியேயான
வேதியனும் மனங்குளிர்ந்தான்;
விவேகசிந்தாமணியவனே வேலவனே ருத்
[திரமூர்த்தி!
பழனியில்வாழ்புண்ணியனே! பாலனே
போற்றிபோற்றி!

வசந்த பௌர்ணமி { பஞ்சவிம்சதி பாக்கியம்பெற்ற விவேகசிந்தாமணிப்பத்திராதிபர்.

(4)57வது பக்கத்தின் அடியில் 4-வது குறிப்புப் பார்க்க.

சீ (5, பின்னுமாறு பதங்கள் சேர்த்தது நித்தியவாழ்வைக்குறிக்கும் நிர்க்குண சாக்ஷாத்கார சாம்பிராஜ்யத்தின் பொருட்டு.—சகுணோபாசனையில் தேறினவனுக்கு "வேத உபநிடதங்(கள்) குறித்தல் மிக்க (அநிதமான) தலம், மாலை, இன்பம், (சுத்த)ஸ்பதத்வீபம் (ஆகிய இவைகளாம். இவை முறையே அநிபத லக்ஷியமாம் (வாசனாதீத)சுத்தம், (சங்கல்ப விகல்ப) சூந்நியம், (ஆனந்த)சுபாவம், கிருதகிருத்தியத்துவம் அல்லது (வினை)ஒழிவு எனும் இவைகளைக் குறிக்கும். இவைகாரணாதீத மானபடியால் அநிபத லக்ஷியங்களாம். இவற்றோடு "புனிதமாய்ச் சொல்வதற் கைந்தெழுத்துப்பேர்" சிவயவசி யென்பதைக்கூட்ட சத்தமுத்த நித்தமாம் வாழ்வு சித்திக்கும்.

*முன்னதிலிருந்துண்டான பின்னுமொரு விடுகதை வினா.

* [46-வது பக்கத்தின் வாமபாகத்திலுள்ள பத்தியின் பதங்களை யொன்றுசேர்த்து மற்றொரு பத்தியிலுள்ள நடுவெழுத்திலிருந்துண்டான "விவேகசிந்தாமணிப்பத்திராதிபர்"—யார்? என்றும், "நீடூழிவாழ்க"—எப்படி? யென்றும் எழும்வினாவிற்கு சூத்திரரூபமாகவந்த விடையுமளிக்கப்பட்டிருக்கிறது.]

(5) விவேகசிந்தாமணிப்பத்திராதிபர்"—யார்?

இதற்கு விடை:—

சூத்திரம்.

"அறிஞர் சிவவேடந் தமிழ்கிகண் டமுது
நீர்ப்புள் கங்கை யரசுகிருபை (யொக்குமால்)
வளர்மதி(முகத் தைரிய)தேவி மிருது(வொளி
காண்பர்)
முருகன்வாழ்தலம் ஆகமம் அக்தியம் திதி
(யிவற்றினில்)."

(6) வினா: "நீடூழி வாழ்க."—எப்படி?

சூத்திரம்: 'உபநிடதங்குறி தலமாலை யின்பம்
சுத்தஸ்பத த்வீபம் சிவயவசி."

——:-:——

WHAT SHALL WE TALK ABOUT?

Sitha-Manonmani

2. A Dialogue on Tiger.

——(:-:)——

சீதா—மனோன்மணி

2. புலியைப்பற்றிய ஓர் சம்பாஷணை.

——(:-:)——

மனோன்மணி:—சீதா! சின்னாளுக்கு முன்னர் நாம் பூனையைப்பற்றிச் சம்பாஷித்தோமே ஞாபகமிருக்கிறதா?

சீதா:—ஆஹா! நன்கு ஞாபகமிருக்கிறது. அதைப் பற்றி நீ இப்பொழுது எதற்காகக் கேட்கிறாய்?

மனோன்மணி:—இப்பொழுது வெயில் தாழ்ந்து இளிமையாய்த் தென்றல் வீசுதலால் நாம் உத்தியான வனத்தில் கடாரம்போல் விழுதினால் பரவியிருக்கும்

ஆலமரத்தடியில் உட்கார்ந்து சற்றுநேரம் காற்றுவாங்குகையில் உபயோகமாய் எதையாகிலும் பற்றிப் பேசிக்கொண் டிருக்கலாமென்றுதான் கேள்விகேட்டேன். நின் அபிப்பிராய மென்ன?

சீதா:—எனக் கப்படிச் செய்வதில் யாதொரு ஆக்ஷேபனையு மில்லை. ஆனால் புறப்படுமுன் எதைப் பற்றிப் பேசுவோ மென்று தீர்மானித்துக்கொண்டு போவோமே!

மனோன்மணி:—நாம் அன்று பூனையைப் பற்றி ஆராய்ச்சி செய்திருத்தலால், இன்று அதன் வர்க்கத்தைச் சேர்ந்த புலி சிங்க மிரண்டில் புலியைப் பற்றித் தெரிந்துகொள்வோமே!

சீதா:—சரி! எனக்கும் அது சம்மதமே! நீ இப்பொழுது உட்சென்று, தரையிற் போட்டு உட்கார ஏதாவது கொண்டு வா செல்வோம்!

மனோன்மணி:—நான் முன்னரே, கருணாலயத்தை இரண்டு புலித்தோல்கள் அவ்விடம் கொண்டுபோய்ப் போடச் செய்திருக்கிறேன். நீ வா, நாம் போகலாமென: இருவரும் சென்று, ரத்தின கம்பளம் விரித்தாற்போலவிருக்கும் பசும் புற்றரையில் விரித்துள்ள புலித்தோலில் உட்காருகிறார்கள்.

சீதா:—புலி சாதாரணமாய்க் காணப்படும் தேசமெது சொல்வாயா?

மனோன்மணி:—இக்கம்பீரமான பிராணி, ஆசியா கண்டத்திலும், இந்தியாவிலுள்ள காடுகளிலும் சாதாரணமாய்க் காணப்படுவதாய்க் கேள்வியுற்றிருக்கிறேன்.

சீதா:—புலிக்கும், சிங்கத்திற்கு முள்ள பேதா பேதத்தைத் தெரிந்துகொள்ளப் பிரியப் படுகிறேன்.

மனோன்மணி:—விரித் துரைக்கக் கேட்பாயாக. புலியின் உயரம் மூன்று முதல் நான்கு அடிவரையுள்ளதாயும், அதன் நீளம் சுமார் எட்டு அடி யுள்ளதாயும் கூறப்பட்டிருக்கிறது. சிங்கத்தின் உயர நீளமும் அவ்வளவேயாம். ஆனால் சிங்கத்திற்குள்ள பிடரி மயிர் புலிக்கிராததால், அதற்குப் பிரதியாக புலி வெந்த மஞ்சள் வர்ணமுள்ள மயிரடர்ந்த தோலில் கறுத்த வரைகளுள்ளது. தவிர அதன் வயிற்றின் அடிப்புறம் துல்லிய வெண்மை[illegible]

சீதா:—புலி எவ்வாறு வேட்டையாடப் படுவதென்பது தெரிந்திருக்கின் உரைப்பாயாக.

மனோன்மணி:—புலிவேட்டை இந்தியாவில் முக்கிய ஆனந்தத்தை விளைவிக்கும் விளையாட்டு. அநேக வேடுவர்கள் ஒருங்கு கூடி, வேட்டைக் கென்றே பழக்கப் பட்டிருக்கும் யானைகளின் மீது ஏறிச் சென்று வேட்டை யாடுவார்கள். யானையின் மீதுள்ள அம்பாரியில் துப்பாக்கிகள் தயாராய் கெட்டித்து வைக்கப் பட்டிருக்கும். மலையர்களால் புலியிருக்குமிடம் காட்டப்பட்டு அவர்கள் அவ்விடம் சென்றதும், ஏழெட்டு அடி உயரமுள்ள புற்களால் அடர்ந்த காட்டில் மறைந்து கிடக்கும் அது விரட்டப்பட்டவுடன், புற்களுக்குள் மறைந்து சென்றே அது தப்பித்துக்கொள்ள முயலும். ஆனால் அது அவ்வாறு ஊர்ந்து செல்வதினாலேயே அசைக்கப் பட்டுள்ள இலைகளினின்றும், அதனிருப்பிடம் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு அதன் இருப்பிடம் தெரிந்ததும், யானையின் மீதுள்ளவர்களில் ஒருவன் அதை நோக்கிச் சுடுவான். தான் தப்பித்துக்கொள்ளல் இயலாதென்று அது தெரிந்துகொண்டதும், அது திரும்பி யானையின் மீதேறி அம்பாரிக்குள் இருப்பவர்களை எதிர்க்க முயலுமாம். அப்பொழுது அனேகம் யானைகள் பயந்து வீறிட்டோடுவதால் அதன் மேலிருப்பவர்களுக்கு அதிக அபாயமுண்டாவது திண்ணம். யானை அவ்வாறு ஓடாமல் சற்றுநேரம் தைரியமாய் நிற்கின் புலி சீக்கிரம் சுட்டுக்கொன்றுவிடப்படும்.

சீதா:—புலிகள் மேற்கூறியவாறில்லாமல் கொல்லப் படுவதில்லையோ?

மனோன்மணி:—இல்லாமலென்ன! ஜனங்கள் ஆழ்ந்த குழிகள் வெட்டி அக்குழிகளில் அடியில் கூர்மையான மூங்கில் பிளாச்சுக்களை நட்டு வைப்பார்கள். புலிகள் அக்குழிகளில் விழுவதால், நன்கு குத்துண்டு மடிகின்றனவாம்.

சீதா:—புலிகள் பழக்கப்படுவன அல்ல வென்கிறார்களே அது வாஸ்தவமா?

மனோன்மணி:—புலிகள் பழக்கப்படுகிறதில்லை என்பது தப்பிதமான அபிப்பிராயம். அவைகள் சாதாரணமாய்ப் பழக்கப்படும் பிராணிகள் தாம். ஆயினும், எல்லா துஷ்ட மிருகங்களையும் போல் இதுவும் [illegible] முடியப்படின், தன் இயற்கை மூர்க்க சுபாவத்தைக் காட்டுவதால் அதிஜாக்கிரதையா பிரா[illegible]

சீதா:—அன்று நம் உபாத்தினி அம்மணி ஓர் ஊரில் இருந்த ஓர் சிங்கத்திற்கும், பெண் புலிக்கும்

பிறந்த குட்டிகள் மூன்றிருந்ததாகச் சொன்னார்களே, ஞாபகமிருக்கிறதா?

மனோன்மணி:—ஆஹா! இருக்கிறது. அக்குட்டிகள் சிங்கக் குட்டிகளைப் போலிருக்க வில்லையென்றும், ஆனால் புலிக்குட்டிகளைவிட அவைகளின் மீதுள்ள வரைகள் ஆழ்ந்த நிறமுள்ளவைகளாயும், மயிர்களின் நிறம் அதிக பிரகாசமாயு மிருந்ததாகவும் கூடச்சொன்னார்கள்.

சீதா:—புலியின் நிறமும், அதன்மீதுள்ள வரைகளும், அதற்கேதாவது உபயோக முள்ளதாமோ?

மனோன்மணி:—ஆஹா! ஜந்துக்களின் நிறமும், அவைகளின் மீதிலுள்ள பொட்டுகள் கோடுகள், வரைகள் முதலியவைகளும், அவைகளை அபாயத்தினின்றும் காக்க அனுகூல மென்பதற்கு ஓர் இன்றியமையாத உதாரணம். நீ கேட்ட கேள்விக்குப் பதிலினின்று நன்கு விளங்கும்.

சீதா:—புலியின் நிறமும், அதன் மீதுள்ள வரைகளும், எவ்வாறு, எவ்விதமாய் உதவுகின்றனவென்பதைத் தெரிவி பார்ப்போம்.

மனோன்மணி:—புலி விசேஷமாய் புற்களின் மத்தியில் கிடப்பதாய் முன்னமே சொன்னோமல்லா! புலியின் நிறம் அப்புற்களின் நிறத்தை ஒத்திருத்தலாலும், அதன் மீதுள்ள வரைகள் புற்களை ஒத்திருத்தலாலும், ஆழ்ந்து நோக்கப்பட்டா லொழிய அதிருப்பது தெரியமாட்டாது. ஆதலால் தான் மான் முதலிய பிராணிகள், அதன் சமீபத்தில் பயமின்றிவந்து அதற் கிரையாவதுடன், வேட்டைக்காரர்கள் முதலானவர்களுக்கு அதிருப்பது தெரிந்து கொள்ளல் முடியாததாகின்றது.

சீதா:—அப்படியா! நீ சொன்னதினின்றும், நம் தோட்டத்தில், பூச்சி புழுக்கள் இலையோடிலையாய் மறைந்திருக்கும்படியான நிறத்துடன் கூடியிருத்தலும், மரத்தின் மேலிருப்பவைகள், பட்டையோ வென்று நினைக்கும்படியான தோற்றத்தோடு கூடியிருத்தலும், இளனம் செஞ்சில, ஏதோ செடிகொடிகளின் மீதுள்ள புஷ்பங்களோ என்று நினைக்கும்படியாயிருத்தலும், அவைகளைப் பிடித்துத் தின்னும்படி [illegible] தெரியாமலிருக்க ஈசுவரனால் ஏற்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறது. அல்லவா?

மனோன்மணி:—ஆம்! ஈசுவர சிருஷ்டியில் ஒன்றும் காரணமில்லாமல் உண்டாக்கப் பட்டிருப்பதில்லை. புஷ்பங்களின் நிறமும், அவைகளுள் அமைக்கப்பட்டிருக்கும் தேனும், காரணமின்றி ஏற்படுகின்றனவென்று நினைக்கிறாய்?

சீதா:—ஏதாவது விசேஷமான காரண மிருந்தால் தெரிவிப்பாயா? அவைகள் அவ்வாறு ஏற்பட்டிருத்தல் மனிதர்களின் உபயோகத்திற்கென்பது அநேகரது அபிப்பிராயம்.

மனோன்மணி: — அப்பேர்ப்பட்ட அபிப்பிராயம் தப்பானதே. புஷ்பங்களின் நிறமும், அதற்குள்ளிருக்கும் தேனும் செடிகொடிகள் நசித்துப் போகாமல் வித்துக்கள் உண்டாகி விருத்தி ஆகும் நிமித்தம் ஏற்பட்டிருப்பன.

சீதா:—நீ சொல்வது எனக்குச் சற்றும் தெரியவில்லை. விவரித்துக் கூறுவாயாக.

மனோன்மணி:—கூறக்கேண்மின்; புஷ்பங்களின் வர்ணம், தூரத்திலுள்ள வண்டுகளைக் கவரவும், உள்ளே யிருக்கும் தேன் அவ்வண்டுகளைப் புஷ்பங்களுக்குள் புகச் செய்யவும் ஏற்பட்டிருக்கின்றன.

சீதா:—வண்டுகள் புஷ்பங்களுள் புகுவது வித்துக்களை உண்டாக்குவ தெப்படி புலப்பட வில்லையே!

மனோன்மணி:—தெளியச் சொல்கிறேன் கேள். புஷ்பங்களுக்குள் மகரந்தப் பொடிகளிருப்பது தெரியுமா உனக்கு?

சீதா:—தெரியும். அதனாலென்ன?

மனோன்மணி:—இம்மகரந்த ரேணுக்களில் ஆண் ரேணுக்களென்றும், பெண்ரேணுக்கள் என்றும் ஏற்பட்டிருக்கின்றன. வண்டு ஒரு புஷ்பத்தில் புகுந்து தேனை உட்கொள்ளும் பொழுது, அப் புஷ்பத்திலுள்ள, மகரந்தப் பொடிகளிற் சில அதன் தலையில் ஒட்டிக்கொள்ளும். பிறகு அது மற்றொரு புஷ்பத்தினுள் புகும் பொழுது, அதன் தலைமீதுள்ள ஆண் பெண்ரேணுக்கள் அப்புஷ்பத்திலுள்ள பெண், ஆண் ரேணுக்களுடன் உரைவதால் சிறுவித்துக்களுண்டாகி, அவ்வித்துக்கள் முற்றிப் பக்குவமாகின்றன.

சீதா:—என்ன ஆச்சரியம்; இவ்விஷயம் எனக்கிது காறும் தெரியாது. தவிர பெரும்பாலோர் [illegible] நினைக்கிறேன். இது நிற்க, புலிவர்க்கத்தைச் சேர்ந்த பிராணிகள் வேறு யாதேனு முளதாமோ?

மனோன்மணி:—புலி ஜாதியிலேயே இன்னம் மூன்றுவித முண்டு. ஒன்று, ஆப்பிரிக்கா இந்தியா, ஜாவா முதலான விடங்களில் காணப்படும் சிவிங்கி என்றது. அதன் தோல் நீ உட்கார்ந்திருக்கும் தோலைப்போல் புள்ளிகளோடு கூடியிருக்கும். அது சுமார் இரண்டடி உயர முள்ளது. இதுவும், அமெரிக்காவில் காணப்படும் மேற்கூறிய புள்ளிகளைப்போலிராமல் சற்று மாறி யிருக்கும் புள்ளிகளுடன் கூடின ஜாகுவர் என்ற ஓர்வித சிறுத்தையும், மரமேறி கிளைக்குக் கிளைதாவி குரங்குகள் முதலியவைகளையும் பிடித்துத் தின்று ஜீவிக்கும் புலிவர்க்கத்தைச் சேர்ந்த பிராணிகள். தவிர மேற்கூறிய ஜாகுவர் என்ற மிருகம், ஆடுகளை நாசம் செய்வதுடன், அதிக ஆழமில்லாத ஜலத்தில் இறங்கி, தனது பாதத்தினால் அடித்திரைத்துக் கரையேறிய மீன்களைத் தின்பதையும் பார்த்திருக்கிறார்கள்.

மனோன்மணி:—அப்படியா! சரி, ஏதோ மூன்றுவதொரு ஜாதி இருப்பதாய்ச் சொன்னாயே அதெது?

சீதா:— அமெரிக்காவில் காணப்படும் பூமா என்ற பெயருடன் கூடிய பிங்களநிற ஜாதி மிருகம் ஒன்றுளதாகக் கேள்வி. இப்பிராணியைக் கண்டால் அத்தேசத்தார்க்கு மிக்க திகிலாம்! சரி நேரமாகிறது: சூரியாஸ்த மனமாகி, வெகு நேரமாய்விட்டதால் உட்செல்வோம்.

மனோன்மணி:—சரி! அவ்வாறே செய்து, நாளை சாயங்திரம் கூடுமானால் சிங்கத்தைப்பற்றி சம்பாஷிப்போம் என்று சொல்லி இருவரும் செல்கிறார்கள்.

எம் என் கணேசய்யர்.

———(:o:)———

Sita-A Tale of Hindu Domestic Life

சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

———(o)———

35 - வது அதிகாரம்.

தீபாவளியான மறுநாளே காமேசுவரய்யரிடமிருந்து தான் இராமச்சந்திரய்யரைத் தேடப்புறப்பட்டுவிட்டதாக கடிதம்வந்தது. காமேசுவரய்யர் வடபுறமாகத் தேடப்புறப்பட்டபடியால் அதே திசையில் தானும்போக வேண்டாமென்று சுப்பராமய்யர் தென்புறமாய் புறப்பட்டார். இவர்கள் புறப்படுவதற்குள் காமேசுவரய்யர் வடக்கே வெகுதூரம் போய்விட்டார். லக்ஷ்மியம்மாள் காமேசுவரய்யரைத்தேடப்புறப்பட்டவளாதலால் அவள் தென் புறமிருந்து வடபுறம் புறப்பட்டு வந்தாள். லக்ஷ்மியம்மாள் கூடப்புறப்பட்ட அவள் தம்பி ஓர் படித்தமுட்டாள். இவருக்கு தான் படித்ததை சமயத்துக்குத் தகுந்தபடி உபயோகப்படுத்தத்தெரியாது, இவருடைய பெண்சாதி வெகு அழகாயிருந்தவளை இவர் குருடாகச் செய்துவிட்டார்.

ஒரு காலத்தில் இவர் ஓர் ராஜாவிடத்தில் தண்டனையடைவதாயிருந்தார். பிறகு இவர் பைத்தியமென்று கண்டு விட்டு விட்டார். எப்படி யென்றால் இவர் ஓர் ராஜாங்கத்திலிருந்த தன்பெண்சாதியை பார்த்து வெகு நாளாகி விட்ட படியால், பார்க்கப் போனார். வழியில் ஓர் கழுதை இறந்து கிடந்தது. சாஸ்திரிகள், அனுதிப்பிரதேசம்ஸகாரம் அசுவமேதபலம் லபேத் என்று சாஸ்திர மிருக்கிறது. இந்த அனுதிப்பிரேதத்தை நாம் ஸம்ஸ்காரம் செய்தால் நமக்கு அசுவமேதபலன் கிடைக்குமென்று எண்ணி கழுதையை தோள்மீது எடுத்துப் போட்டுக் கொண்டு தூக்கக் கூடாமல் தூக்கிக்கொண்டு போனார். இப்படி கொஞ்சதூரம் போகவும் பாரம் பொறுக்கக் கூடாமல், ஸர்வஸ்யகாந்தா ஸ்சிரப்ரதானம் என்று சொல்லியிருக்கிறதல்லவா என்று தலையைமட்டும் வெட்டி எடுத்துக்கொண்டு போனார். மறுபடி அதையும் தாங்கக் கூடாமல் ஸர்வேந்திரி யாணாம் நயனம் ப்ரதான மென்பதை அனுசரித்து கண்களை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு மாமனார் வீடு போய்ச் சேர்ந்தார். மாமனார் வீடு போனால் முதலில் மாமியாரைப் பார்க்க வேண்டுமென்ற சாஸ்திரத்தை யனுசரித்து மாமியார் வெந்நீர் உள்ளில் நிர்வாணமாய் ஸ்னானம் செய்யும்போது ! போய், மாமி இப்போது தான் வந்தேனென்றார். மாமியார் அவரை வைது வெளியே துறத்தி விட்டாள். பிறகு கூடத்தில் போனதும் ஓர் தொட்டிலில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. மாப்பிள்ளை அதை சுருக்கென்று கிள்ள அது வீறிட்டழுதது. உடனே மாமியார் ஓடிவந்து என்னவென்று கேட்க மாப்பிள்ளை ஒன்றுமில்லை நான்தான் கிள்ளினேன். பாலானும் ரோதனம் பலமென்று சொல்லி யிருக்கிறது. குழந்தை அழ அழ அதற்கு பலந்தரனென்றார். மாமியார் கோபித்துக்கொண்டு பெண்ணினிடம் போய்ச்சொன்னாள்.

பெண் புருஷனுக்கு நல்ல புத்தி சொல்லலாமென்று வந்தாள். சாஸ்திரிகள் பெண்ணைப் பார்த்ததும் பெண் வெகு அழகாயிருக்கக் கண்டு ஓகோ பார்யா

ருபவதி சத்ரு என்று சொல்லி யிருக்கிறதே இவள் நமக்குச்சத்துருவாகக் கிளம்பிடுவாளென்று திடீரென்று அவள் கண்களில் ஒன்றை குத்திவிட்டார். அப்பெண் கூ கூ என்று கத்துவதற்குள் சாஸ்திரிகள் கோகோ மோசம் போனேனே ஏகாக்ஷி லோக சம்ஹாரி யென்றல்லவா சொல்லி யிருக்கிறது. இவள் லோகத்தையே ஸம்ஹரிப்பவள் நம்மை மிச்சம் விடுவாளாவென்று சொல்லி அவளுடைய மற்றக் கண்ணையும் குத்தி பொட்டை யாக்கி விட்டார். இதைக் கண்ட மாமனார் சாஸ்திரிகளை கொன்று விடுகிறதென்று ஓடிவந்தார். சாஸ்திரிகள் உடனேபயந்துக்கொண்டு வெளியே ஓடிப்போய் விட்டார். ஓடிப்போனவர் அரண்மனை வாசலில் போய் நின்று அங்கே ஒருவரும் காவலில்லாமலிருந்தது கண்டு வெகு சந்தோஷமாய் உள்ளே நுழைந்தார். உள்ளே ஓர் அறையில் ராஜா தன் பெண்சாதியின் வலது துடைமீது தலைவைத்து தூங்கிக் கொண்டிருந்தார். ராணியும் அப்படியே சாய்ந்துகொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். சாஸ்திரிகள் பார்த்தார். யதாராஜா ததா ப்ரஜா என்று சொல்லி யிருக்கிற தல்லவா என்று நினைத்து ராணியின் இடது துடையில் தலையை வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டுவிட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் ராணி விழித்துக் கொண்டு பார்க்க வேறு புருஷன் தன் மடியில் தலை வைத்து படுத்திருப்பதைக் கண்டு கூ கூ என்று கத்தினாள். ராஜா எழுந்திருப்பதற்குள் சாஸ்திரிகள் வெளியே ஓடிப்போய் விட்டார். பிறகு அவரைக் கூப்பிட்டு விசாரிக்க அவர் ராஜா எப்படியிருக்கிறாரோ அப்படி ப்ரஜையுமிருக்க வேண்டு மல்லவா என்றார். ராஜா அவரைக் கழுதை மீது வைத்து கிராமத்தை பிரதக்ஷிணம் செய்யச் சொன்னான். சாஸ்திரிகள் வெகு சந்தோஷமாய் கழுதைமேல் உட்கார்ந்து உச்ச ஸ்தானேஷு பூஜ்யதே என்று சொல்லிக் கொண்டே போனார். ராஜா கடைசியில் அவரை பைத்திய மென்று கண்டு விடுதலை செய்யச் சொன்னான். இப்படிப் பட்ட பைத்யத்தைக்கூட்டிக் கொண்டு லக்ஷ்மியம்மாள் புறப்பட்டாள்.

சப்பாராமய்யர் புறப்பட்ட வண்டியிலும், லக்ஷ்மியம்மாள் புறப்பட்ட வண்டியிலும் ஜனங்கள் வெகு கூட்டமாயிருந்தார்கள். சப்பாராமய்யர் இதற்காக 2 வது வகுப்பு வண்டியிலேறினார். அதிலும் வெகு கூட்டம் வந்த படியால் அவர் தன் பெண்சாதியையும் கூட்டிக் கொண்டு 3 வது கிளாஸ் வண்டிக்கே போய் விட்டார். கடைசியில் பாதிராத்ரியில் வண்டி ஓர் பாலத்தின் மீது போகும்போது வண்டி ட்ரைவர்கள் குடித்து விட்டு வெகு வேகமாய் வண்டியை விட்டார்கள். இரண்டு வண்டிகளும் முட்டிக் கொள்ள வண்டிகள் அப்படியே கீழே சாய்ந்து விட்டன. எல்லா ஜனங்களும் ஐயோ ஐயோ என்று கத்திக் கொண்டு கீழே விழுந்தார்கள். சிலர் காயம்பட்டார்கள். சிலர் இறந்தார்கள். சிலர் நதியில் இழுத்துக் கொண்டு போகப் பட்டார்கள். இரண்டு வண்டிகளிலும் கடைசி 3 வது கிளாஸ் வண்டிகள் இரண்டு மட்டும் தப்பிக் கொண்டன. அந்த ஜனங்களும் ரொம்பவும் பயந்துகொண்டிருந்தார்கள். மறுநாள்காலையில் இந்த ஜனங்களெல்லோரும் ஓர் பாசலில் ஏற்றி விடப் பட்டார்கள். அப்போதுதான் லக்ஷ்மியம்மாளும் பாகீரதி யம்மாளும் ஒருவரை யொருவர் கண்டார்கள். பிறகு எல்லா சமாச்சாரத்தையும் விஜாரித்துக் கொண்டு எல்லோரும் சேர்ந்து தேடுவதாக தீர்மானித்தார்கள்.

காமேசுவரய்யர் கூடப்போன பரிசாரகனும் சுத்த முட்டாள். அவனை அவன் அண்ணன் தன் பெண்சாதியை கூட்டிவர அனுப்பினான். ஒரு கடிதமும் கையில் கொடுத்தான். ஆனால் போகும்போது நம் பிணையைப் பார்த்து அடே நீ பைத்தியக்காரன் போனாலங்கே நீ 3 வார்த்தைகளுக்கு மேல் பேசாதே என்று சொல்லி யிருந்தான். இவன் அப்படியே ஒப்புக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்ததும் அண்ணன் மாமியார் வந்து இப்போதுதானா வந்தாயென்றாள். ஆமென்று சொல்லிஒன்று என மனதில் கணக்கு வைத்துக் கொண்டான். நி மட்டும் தானா என்றாள். ஆமென்று சொல்லி இரண்டு என்று எண்ணிக் கொண்டான். ஊரிலிருந்து தானே என்றாள். ஆமென்று சொல்லி மூன்று என்று கணக்கு வைத்துக் கொண்டு இனி பதில் சொல்லக் கூடாது, அண்ணா கோபித்துக் கொள்வாரென்று தீர்மானித்து நினைத்துக் கொண்டான். பிறகு அண்ணன் மாமியார் அண்ணாசௌக்கியமாஎன்றாள். இவன் பதில் பேசவில்லை. அவள் உடனே திகிலடைந்து "என்ன! என்ன! உடம்பு ஏதாவது அசௌக்கியமா?" என்றாள். இவன் தலையைக்குனிந்துகொண்டு கையிலிருந்த கடிதத்தைப்பார்த்து அழ ஆரம்பித்தான். உடனே மாப்பிள்ளை இறந்து போய்விட்டானென்று எல்லோரும் அழ ஆரம்பித்தார்கள். இவன் அவர்களைப் பார்த்து தேம்பித் தேம்பி அழுதான். இதற்குள் ஊர் முழுவதும் கூடிவிட்டது. எல்லோரும் அழுதார்கள். கடைசியில் ஒருவன் இவனென்ன கடிதத்தை வைத்துக் கொண்டே அழுகிறானே யென்று கடிதத்தை வாங்கி வாசித்துப் பார்த்தான். அதில் அண்ணன் சௌக்கியமாயிருக்கிறதாக எழுதி யிருந்தது. உடனே அவன் எல்லோருடைய அழுகையையும் நிறுத்தி வந்த தம்பியைப் பார்த்து எண்டாபையா நீ அழுகிறாயென்றான். அவன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே எங்களண்ணா எழுத்து வெகு காலத்திற்கு முன் கொட்டை கொட்டையாக யிருந்ததே இப்போது அதுகளுக்கு என்ன வியாதியோஎல்லாம் இளைத்துப் போய்விட்டதே நான் என்ன செய்வேனென்று மறுபடியும் அழுதான். பிறகு அவனை சமாதானப் படுத்தி அண்ணா சௌக்கியமா என்றான். அவன் மூணு வார்த்தைக்கு மேல்தான் நான் பேசக்கூடாதே நான் எப்படி பதில் சொல்வே னென்றான். பிறகு அவனை சாவகாசமாய் விஜாரித்து சமாசாரங்களைத் தெரிந்து கொண்டு எல்லோரும் சிரித்துவிட்டு பைத்தியக்காரா நீ ஊருக்குப் போ என்று அனுப்பிவிட்டார்கள். இதை யெல்லாம் கேட்ட அண்ணன் நீ என்னிடம் இருக்கவேண்டாம் போஎன்று அவனைத் தள்ளிவிட்டான். இப்படிப்பட்ட புத்திசாலியை காமேசுவரய்யர் கூட கூட்டிப்போனார்.

(இன்னும்வரும்.)

எஸ். ராமஸ்வாமிஐயர்.

THE SPIRIT OF RELIGION
OR
VEERA-SAIVAM TO THE FORE.
AN EXPOSITION
OF THE PRINCIPLE OF UNITY IN RELIGION IN THE LIGHT OF ACTUAL EXPERIENCE
AND WITH
Special Reference to the Veera-Saiva faith
BY
C. V SWAMINATHA AIYER,
Editor of the Vivekachintamani,
With Corresponding Texts and References From the Veera-Saiva Scriptures
BY
M. K. NARAYANASWAMI AIYER, B. A., B. L.,
High Court Vakil.

MADRAS:
THE LALITA PUBLISHING CO.,
LALITALAYA, MYLAPORE.

Price 8 As.] [1 Shilling
London Agents:—Messrs Luzac & co, Oriental Booksellers

SHORT STORY.
"That is the Law."
ததேவ தர்மம்.
ஒரு சிறு கதை.

"அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்றுகொல்லும்" என்பது உண்மையான வோர் பழமொழி. "நான் மனிதரில் ராஜாவாய் இருக்கிறேன்" என்று பகவான் சொல்லியிருக்கிறானபடியால், இராஜதர்மம் நழுவாதிருக்க துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வதே ராஜநீதியாம். அப்படிச் செய்யத்தவறின் ராஜதர்மம் கெட்டுப்போம். "குடியுயரக் கோலுயரு"மென்பது எவ்வளவு உண்மையோ, அப்படியே "கோல்தாழக் குடிதாழும்." இதற்கு ஆதாரம்: "யதாராஜாததாப்ரஜா" என்னும்ஆப்த வாக்கியமே.

ஒரு ஊரில் ஒரு குடித்தனக்காரன் சர்க்கார் உத்தியோகஸ்தன் ஒருவனிடம் வியவகாரார்த்தமாய்ச்சென்றான். உத்தியோகஸ்தன் அநீதியாய் அவனது உரிமையையும் உடைமையையும் அபகரித்துக்கொண்டு அவனைச் சந்தியில் விட்டுவிட்டான். ஏழைக்குடியானவன் என்ன செய்வான்! அவனுக்குக் கோர்ட்டுக்கும் கச்சேரிக்குமாக அலைந்துகொண்டிருக்க அவகாசமில்லை. அவனுழைத்தால்தான் பூமிவிளையும். அவனுழைக்காமல் கோர்ட்டும் கச்சேரியுமாக நின்று அநியாயம்செய்த உத்தியோகஸ்தன் அக்கிரமத்தை யடக்க வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருந்தால், தானும் தன் குடித்தனமும் அழிவதோடு பூமியும் விளைவுருன்றிப்போம். ஆகையால் அந்தக் குடியானவன் தர்மநீதி யறிந்த மந்திரியிடம் போய் முறையிட்டான். அந்த மந்திரி நடந்ததை விசாரித்து ஏழைக் குடியென்று உத்தியோகஸ்தன் அவனை ஏமாற்றி விட்டதாக அறிந்துகொண்டு, அதை யவனிடம் சொன்னால் அவன் மனங்குன்றி சோர்ந்து போவானென்றுணர்ந்து, சட்டப்படி அவனைக் கண்டனை தண்டனை செய்

வதற்கு வேண்டிய லாயக்கு அவனிடமில்லை யென்பதை யுணர்ந்து, அவனுக்கு மனந்தேற ஒரு சிறிய உபாக்கியானம் செய்தார். குடியானவன் குறையிரந்து "சாமி! இது தர்மமா? அடுக்குமா?" என்று கேட்டு நிற்க, பின் வருமாறு அவனுக்கு பதில் சொன்னார்.—

"அப்பா நீ தர்ம விசாரம் செய்கிறவனாயிருக்கிறாயே, எனக்கு நேர்ந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன் கேள். நான் இன்றுகாலையில் உலாவச் சென்றேன். காலைவேளையில் எல்லாம் கண்ணுக்கு ரமணீயமாயிருந்தது. வசந்தகால மாதலால் மரஞ் செடிகளும் புஷ்பித்து பிரசந்நமாய் விளங்கின. எல்லாவற்றையுங் கண்டு மனங்களித்துச் சந்தோஷப் பட்டுக்கொண்டிருக்கையில், தலைக்குமேல் ஆகாசத்தில் திடீரென்று "கீச்சு" "கீச்சு" என்று ஒரு சத்தம் கேட்டது. அதைக்கேட்டு உடனே தலை நிமிர்ந்து பார்த்தேன். ஒரு காக்காய் தன் மூக்கில் ஒரு சிறிய அணிற்குஞ்சைக் கௌவிக்கொண்டு போனதைக் கண்டேன். எனக்கானால் மனம் பொறுக்க வில்லை. வயிறு குபீரென்று பத்திக்கொண்டது. நான் என்ன செய்கிறதென்றுபோசிக்குமுன் காக்காய் கண்ணுக்குத்தெரியாமல் பறந்தோடிவிட்டது. இது தர்மமா? என்று சிந்தித்தேன். சிந்தையிலே சிந்திக்கச் சிந்தையோய்ந்து உட்கார்ந்தேன். 'துஷ்டருக்குச் சிஷ்டரை வதைப்பதுதான் தர்மம்' என்று அசரீரி வாக்கொன்று பிறந்தது. துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வது எங்கே? யென்று அந்த அசரீரியைக் கேட்டேன்.—'தர்மம் நசித்து அதர்மம் தலையெடுக்கும் பொழுதெல்லாம் நான் அவதாரமாகி தர்மத்தை நிலைநிறுத்துகிறேன்' என்று பகவான் கொடுத்த அபயவாக்கு வீண்போமா?' என்று மறுபடியும் அசரீரிவாக்குப்பிறந்தது. பகவான் எங்கே? யென்றேன். "எங்கே!" யென்னும் சத்தம் பிறந்த விடத்திலேயே இருக்கிறேன்-என்று மறுபடியும் அசரீரிவாக்குப்பிறந்தது. கண்விழித்துப் பார்த்தேன். வழிபோகிபோன ஒரு பரதேசி 'எளியாரை வலியாரடித்தால், வலியாரைத் தெய்வமடிக்கும்" என்று சொல்லிக்கொண்டே போனார். 'ஆ! அப்படியா!' வென்று அதிசயப்பட்டுக்கொண்டு போனேன். அரைமைல்தூரம் போகுமுன் ஒரு தோப்பில் காக்காய் பிடிக்கிற குறவன் அனேக காக்கைகளைப் பிடித்துக் கொன்று அவைகளை யெல்லாம் தின்னும்படி தன் குடும்பையில் போட்டுத் தூக்கிக்கொண்டு போனான். ஆகாசத்தில் ஆயிரம் காக்கைகள் கத்திக் கத்திக் கொண்டு பரிதாபமாய்ப் பறந்தன.

"எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கு" மென்பது ஸத்தியந்தான்: என்று நம்பி வீடுவந்து சேர்ந்தேன். "கெடுவான் கேடு நினைப்பான்" என்றிருப்பதாலே "தேவ தர்மம்" என்று மந்திரி குடியானவனுக்குச் சொன்னார்.

குடியானவனும் அவர் சொன்னதைக்கேட்டு கர்மத்தை வெல்ல யாரால் முடியும்! விதை விதைத்தவன் விளைந்தபின் அறுக்கிறான். நாம் செய்த பாபம் நம்மை இந்த அக்கிரமஸ்தன் கையில் அகப்பட்டுக்கொள்ளச் செய்தது! என்று சொல்லிவிட்டு, சந்தோஷ முடனே தன் பயிர்த்தொழில் வேலை செய்யப்போனான். குடியானவன் கழனியில் உழைத்த உழைப்பில் தன் கஷ்ட நஷ்டங்களை மறந்து ஆநந்தநித்திரையனுபவித்தான். அக்கிரமம் செய்த உத்தியோகஸ்தனோ 'எங்கே நம் குட்டு வெளியாய் விடுமோ!' என்று ஏங்கி, பொய்மேல் பொய்யாகப் பொய்க்கோட்டை கட்டிக்கொண்டு தூக்கமின்றிப் புரண்டுருண்டுகொண்டு கிடந்து, விடியற்காலையில் மூளை அயர்ந்துபோய் மலைப்பாம்பு போல் பிரஜ்ஞையற்றுக் கிடந்தான்.

தூக்கத்தின் சுகத்தை யவனறிந்தவனல்ல. "தேவ தர்மம்" என்பது உண்மையல்லவா?

C. V. S.

———:-:———

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

OFFICE OF THE REGISTRAR 24 JUL MADRAS



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1911ஆ ஜூன்மீ, விரோதிகிருதுஆ ஆனிமீ [சஞ்சிகை. 3.

NOTICE.

The Editor of the Vivekachintamani while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copyright in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, M.K. Editor, & Proprietor — Narayanaswami Iyer, B.A. B.L. Hon. Secy, V. C. Vivekachintamani Pub. Committee.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சக்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்ம விக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்; அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினான் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓம்.

THE 26th YEAR OF WORK.

The Meaning of the Number 26.

"No exercise of faculty is better and nobler for a real man than struggling with great thoughts, and labouring to express them in such a way that they shall reach the best feelings, and elevate the whole being of their fellow-men around them."—Dr G.U. Pope in the Indian Magazine and Review (vide "My silver Jubilee" Number, page 36.)

"We venture to say to all the brethren of this Tamil Guild that they must cultivate in their great work the spirit of simple earnestness here inculcated."—Dr. G. U. Pope on the Preface to the Vivekachintamani Series of publications.

Pilfering prohibited, which please note.

Gentlemen cannot and will not commit the prohibited deed. Others shall not and must not commit it for fear of pains and penalties. The incorrigibles will reap as they sow in due course.

26-வது வருஷத் துழைப்பு.

ஷட்விமஜகபாவம்.

——:-o-:——

"உழைப்பு" என்றாலென்ன? இதை நாம் முதலில் யோந்திரிபற அறிந்துகொள்ளல்வேண்டும். சிறுபிள்ளைகள் மணல்வீடு கட்டித் தொட்டதோர் வேலையை முட்டின்றி முடிக்கலாற்றாது, ஒருபக்கம் கட்டினது மறுபக்கம் கட்டுங்கால் கலைந்துபோகக் கட்டி முடிக்கும் சக்தியில்லாமையால், மனோபாவத்தால் மனைகோலி முடித்ததாக பாவனைகாட்டி யதில் சோறாக்கித் தின்பவர்போல் கடிப்பர். ஆனால் அந்த மணல் வீடும், மணல் சோறும் அவர்களுக்குத் தலை சாய்க்க இடந்தருமா? அல்லது பசிதீர்க்கப் போஜனமாமா? இரண்டுமில்லை! அதுபோல நண்டு பொறுக்கிவிற்று, நாட்டிலுள்ளாரை மோசஞ் செய்து பணஞ்சேர்த்துப் பிணம் போல் வாகனமேறி யுண்டுடுத் துறங்கி ஊனை வளர்ப்பதே தொழிலாகக் கொண்டுழைப்பதோர் உழைப்பல்ல! 1908-ம் வருஷம் டிசெம்பர் மாசம் விவேகசிந்தாமணியில் உழைப்பின் உண்மையை யெடுத்துக்கூறி யுள்ளேன். அதையொரு பாவி யென்பேரைக் கொன்று ஆபகரித்தான். தேனீயானது சேர்த்துவைத்த தேனையெல்லாம் பறிகொடுத்தாலும் காக்கையைப் போலக் கசுமாலத்தைத் தின்று பிழைக்காது: பட்டினிகிடந்தும் சாகாது! காக்கையோ கண்டதை யெல்லாம் புசித்து ஆயிரம்காலம் ஜீவித்திருக்கும். காக்கையைப்போலுள்ள மனிதர்களு மிருக்கிறார்கள்: தேனீயைப்போலுள்ள தபோதனரு மிருக்கிறார்கள். காக்கை 'காகா' வென்று கத்தினால் ஆயிரங் காக்கைகள் ஒருமிக்கக் கூடும். ஒரு கல்லை விட்டெறிந்தால் அத்தனை காக்கைகளும் மூலைக்கொன்றாய்ப் பறந்தோடிப்போம்! ஆதலால்தான் "ஆயிரங் காக்கைக் கோர்கல்!" என்கிற பழமொழி வழக்கத்தில் வரலாயிற்று. தேனீயோ வெனில் சிறிய ஜந்துவானாலும் பெரிய உழைப்புக்குரியது. ஒவ்வொன்றும் வெகுதூரம் பறந்து போய்ப் புஷ்பங்களிலிருக்கும் மதுவையுண்டு மிகுந்ததைக் கொண்டுபோய்க் கூட்டில் சேர்க்கும்: தானே யுழைத்துக் கூடுகட்டும். "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்பதற்குதாரணமாயிருந் துழைக்கும். அது கொட்டினாலும், "தேனீக்கொட்டு வாதக்கட்டுக்கு மருதாம்" என்கிற உண்மை யனுபவத்தால் உழைக்க முடியாது கைகால் முடக்கமாய்க் கிடைக்கும் மனிதனையும் உழைக்கத்தக்கவனாகச் செய்யும். தேனீ தேனைச்சேர்த்து மிகுத்து வைக்க, காக்கையிலுங் கேடாய், களவாடிப் பிழைப்பதே தொழிலாயுடைய குறவர், அத் தேனை லாகவமாய் எடுத்து அனுபவிக்கத் தெரியாமல், பந்தத்தைக் கட்டித் தேனீக்களைப் பொசுக்கி நாசஞ்செய்து அதன் தேனைக் கூட்டோடுகொள்ளை கொள்வர்! ஆ! பாதகம்! பாதகம்!! ஆயினும் பாதகத்தொழில் புரிவதே யுழைப்பாயும், காக்கை கசுமாலத்தைத் தின்று பிழைப்பதுபோல் தன்வயிறு வளர்ப்ப தொன்றே

பிழைப்பாகவுங் கொண்ட காக்கை பிடித்துத் தின்னும் கூறக் கூட்டங்கள் பல, ஜனசமூகத்திலிருக்கின்றன. இவர்களால் "கூஷ்டிவித்தை" யாம் பெண்ணொருத்தி படும்பாடு அப்பப்பா!! சொல்லி முடியாது.

"ஓங்காரி யென்பாள் அவளொரு பெண்பிள்ளை" யென்றோதினார் எம்பிரான் திருமூலநாயனார். அந்த ஓங்காரி யவள்தானே க்லீங்காரி தானவள். க்லீங்காரி யாமவளே சமஷ்டிவித்தையென் றுரைப்பேன். "க்லீம்" பீஜத்தொலியதுவே "நாதகீத நாமகள் சிலம்பொலி." சிலம்பொலி கேட்ட சிறப்புடைக் கவிஞன் முன்னொரு காளில் முதுமொழித் தமிழில் சிற்சுவை மலிந்த சிறப்புடை நூலொன்றியற்றினன் தானுப். † கண்ணகி யென்ற கதாநாயகியை உண்ணெகி முண்மையில் உளத்திலே சிந்தித்துப் பண்ணெடுஞ் பாணன் பாவினால் வளர்த்தான்: அன்னவனீன்ற அருந்தவப் புதல்வியாம் கண்ணகி யவளை ‡ யுண்ணெக யாலும் உளத்திலே சிந்தித்துப் பஞ்சமாகாவிய நூலின் கருத்தைப் பாமரருணரக் கதையாய் நடித்தபின் உள்ளதை யுணர்த்த உன்னினே னுள்ளத்தே. பாவியவன் காகாசுரன் முன்னொரு காலத்தில் சமஷ்டிவித்தையாம் சீதையை வருத்தியே மானபங்கஞ் செய்தானன்றோ! பாச்சரியத்தாலே மனக்கண்ணிழந்தவந்தப் போக்கிலிக் காகன் பொற்புடைக்கிஷ்ணன் தன் நாமத்தைச் சொல்லி யென்றன் பூஜையைக் கலைத்துப் பொய்கள் மிகப் பேசிப், பொற்புடை யண்ணலாம் பேர் புனைந்தென்னையவன் மோசமுஞ் செய்தான். கெடுவான் கேடு நினைப்பானால், படுவான் பட்டழிந்தால் பாரமெனக்கென்ன வன்னாப்!

ஆனாலவன் என்னை மட்டும் மோசஞ்செய்து பின்னை யொன்றுஞ் செய்யாவிட்டால் அன்னையிடஞ் சொல்லி யழுதமர்ந்திருப்பேன் நான் சும்மா! பொல்லாத புன்சொல்லன் பொய் மலியப்பெற்ற பாவி, கண்ணகி யென் தாயவளைக் கற்புடைய பெண்ணரசை, க்லீங்காரத்தே யிருந்து மாங்காரமற்றவளை, ஹ்ரீங்காரத்தே யிருந்து ரௌத்ராகாரமானவளைப் பொய்பேசிப் பங்கஞ் செய்து புன்மொழியால் பலியிட்டான். ஸ்ரீதோஷம் வருமென்று ஸ்ரீங்கார நாயகியை ஸ்ரீகுருவா யான் பணிந்து ஸ்ரீவித்யா பூஜை செய்தேன். தனமதனைத் திருகியவள் தரணியிலே யெறிந்த வந்த வுண்மையது வுணராது உள்மர்மம் ஓராது பாவியவன் பெண்ணுருவை (ஓங்கார ஸ்வரூபத்தை) ப்பலியிட்டுக்கொன்று விட்டான். சந்நியாசி வேஷங் கொண்டு சீதையை முன்னபகரித்தான் லளிதையவள் போர்கொண்டு லயமர்ம முணராமல் தேவியைப் பலி யிட்டுவிட்டான். உருக்குலைந்த தேவியவள் ஓடோடியும் வந்து அவலரிசி வேண்டுமென்று ஆர்ப்பாடஞ் செய்கிறாளே! யேகோ! என் செய்வேன்! யாரிடம் நான் முறையிடுவேன்! உலகெலாம்படி யளக்கு முத்தமியாந் தேவியவட் கவலரிசிபோடவோ நான் அருந்தவங்கள் செய்திருந்தேன்! கண்ணே யென் கண்மணியே! கண்ணகியே கார்முகிலே! பெண்ணே யுன்னைப் பாதகர்கள் பலியிட்டோ பிழைக்கப் பார்த்தார்! ஸ்ரீஹத்தி செய்தாலுன்னை ஸ்ரீகிருஷ்ணன் பொறுப்பானோ! மாயாவிக் கிருஷ்ணனுன்னைப் பங்கம் பண்ணித் தொக்க விட்டால், ஸ்ரீதேவியா முனக்குக் குறைதானும் வந்திடுமோ! கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னேயால், கெடுகாலம் வந்தால் யார்க்கும் கெடுமதியுங் கூடவரும்!

சமஷ்டிவித்தையம்பணி நீ, ஸௌபாக்கிய லக்ஷ்மி நீயே! உன் சமஷ்டிவித்யா விலாஸமதை யுன்னினே னுள்ளத்தே! உள்ளத்தே யுன்னினேனென் றுளங்கனிந்து நீயும் வந்தாய். உளவறியாப் பேதையவள் உன்வரவைத்

† இதற்குப் பேர் சிலப்பதிகாரம் என்று சொல்லுவர். பஞ்சமாகாவியங்களில் ஒன்றும் இது.

‡ உள்ளகெ=உள்ளன்பால் உள்ளம் நெக்குவிட்ருே.

தானுணரப் போதாது பக்குவமால் போதை
யினு லுனையறிந்தாள். "அவலரிசி போடா
விட்டால் உயிரை வதை செய்திடுவேன்" என்று
நீ சொன்ன சொல்லைச் சூக்ஷ்மமா யறியப்
போமோ! கதை கதையாம் காரணமாம், கார
ணத்திலொரு பூரணமாம். பூரணத்திலொரு
புல் முளைத்தாலது பூரணத்துக்கன்னிய மாய்
விடுமோ? கண்ணே யென் கண்மணியே! கண்
ணகியே கார்முகிலே! பெண்ணே யென் பெண்
மயிலே பாதகருன்னை வதைக்கல் ஆமோ!

"அகாரமாவ தைம்மூன்றாகு மப்பா!
உகாரமாவது மூவிரண்டாமே பிள்ளாய்!
மகாரமாவது மறைந்துளதொன்றே கேளாய்!
அகார உகார மகாரஞ்சேர்ந்தது தம்பீ!
ஓங்கார ரூபமா முண்மைக்கிருப்பிடமது
ஐங்காரமாகியே ஐயைந்துக் கிடங்கொடுத்து
றீங்காரத்துள்ளே யினிதிருந்த தன்மையினால்
ஸ்ரீங்காரமான ஷட்விமஜக பாவமப்பா!"

"ஷட்விமஜகபாவம்" என்றால் இருபத்தி
யாறாகத் தோற்றுமோர் திவ்ய சங்கல்பம் என்
பது பொருள். இந்த இருபத்தியாறைப் பதி
னாறும் பத்துமாய்ப் பிரித்து பூரணமா புணர
வல்லார் மஹத்துக் களாவார். எம்போலும்
சிஷ்டர்கள்,

பஞ்சாக்ஷரீ பதினைந்தை அகாரமாகவும், அதா
வது ஸ்தூலதன்மாத்ரையாகவும்;

ஷடாக்ஷரீ யாறை 'உகாரமாகவும்' அதாவது
சூக்ஷ்ம தன்மாத்ரையாகவும்;

ஏகாக்ஷரி யொன்றை மகாரமாகவும், அதாவது
ஸர்வகாரணபூதாசக்தியாகவும்;

இம்மூன்றுஞ் சேர்ந்த வொன்றை ஸோமஸ்
கந்த மூர்த்தியாம் ஓங்கார ரூபமாகவும்;

அந்த ஸோமஸ்கந்த மூர்த்தியின் புருவ மத்தி
யிலிருந்துண்டான ஐங்காரியை துர்க்கை
யாகவும்;

அவளின் சாந்தசக்தி ஸ்வரூபமாம் றீங்காரியை
ஸரஸ்வதி யல்லது பவானி யாகவும்;

பஞ்சீகரண விதியால் விளைந்த பாக்கியமாம்
ஸ்ரீங்காரத்தைச் சமஷ்டி வித்தையாம்
கண்ணகி, லக்ஷ்மி, புவனேசுவரி யாகவும்,

பாவித்து சுத்த ஹிருதயத்தோடு பூஜை
செய்து புனிதராவர்.

அந்த ஸ்ரீதேவியைத் திரிகரண சுத்தியோடு
சேவிப்பவர்களுக்கு அவள் பாலகனும் கபாலி
மணியன் பாலுஞ் சோறும் பரிந்தளிப்பாள்.
அவளை வஞ்சிப்போர் தானே தனக்குப் பகை
யாகிப் படாத பாடெல்லாம் பட்டனுபவிப்பா
ரென்பதிற் சந்தேகமில்லை!

"துர்க்கா லக்ஷ்மி ஸரஸ்வதீ தேவி
மஹிஷாஸுர மர்த்தனீ ஜய!
வித்யா லக்ஷ்மி ப்ரஹஸ்பதீம் வந்தே
அத்யாத்மிக சாந்தநீ து பவ!
வித்யாரம்பதினை விஜயதசமியாம்
ஹே அமிர்தமே! துவாம் வந்தே துஸர்வதா!"

அம்மணி யுனக்கு அவலும் அரிசியும் நிவே
தனம் செய்தேன். உண்டு பசி தீர்ந்து உண்மை
யோங்கிடப் பொய்மை சாய்ந்திடப் புவியில் உன
நித்தியசக்ரம் சுழல்வதாக! ஹே! தேவி!
சமஷ்டிவித்யாஸ்வரூபிணி!

என்னென்ன செய்கினுநீ
யேதேதே யிற்றிடினும்
உன்பிள்ளை யுன்னடிமை
யுனக்கே நானர்ப்பணங்காண்!
என்பிள்ளை யென்னடிமை
யென்றென்னை யாளாவிட்டால்,
உன்பிள்ளை யுன்னடிமை
யென்றுன்னை யார்தொழுவார்!

ஓம் தத்ஸத்.

K. S. S. A.

The Mammonite's Picture.

Drawn from Practical Life.

பணவாசைப் பேய்கள்

செய்யு மோசம்.

(From the Gospel of Strenuous Life |By Satyananda Santa Sarma.) *

"பணம் பணமென்று
பணவாசைப்பட்டு
பிணமதுபோலும்
பணத்தைச்சுமப்பார்;
பணத்தைச்சுமப்பார்
குணத்தைமறப்பார்' பின்
மாசுணம் போலுண்டு
மயக்கிக்கிடப்பார் †
தாசிவேசி யோடு
நேசித்திருப்பர்;
ஊசிமுனை மேல்நிற்கும
உள்ளறி வதனை
‡ வெ ரூவால்
நேசியாதொழிவார்;
காசிராமேச்வரமென்று
பேசியே திரிவார்
நாசிமேல் நாட்டம்வைத்து
வாசியை யறியார்;
கூசிடாதுபணத்தைக்
குவித்துபேவைத்து
புசிக்கும்வகையறியாது
புலாலைவளர்ப்பார்;
பூசித்துநேசித்த
புண்யத்தைமறப்பார்;
நேசித்துப்பூரித்து
வாசிவசம்செய்யார்
வாசித்துவழக்குரைத்து
வகைமோசம்போவார்."

† கர்மவினையும் தர்மவிதியை மறப்பார்.

‡ வெ=Cf Emerson's dictum. "Intellect is a whore."

அவர்சள்செய்யும் மோசடி வியாபாரம்.

"வகைமோசம் தாம்போவார்
பகைமோசம்செய்வார்;
$ நகைமோசம் செய்தவர்
ஊர்மோசம் செய்வார்;"
வகைவகையாப் பேசியவர்
வார்த்தைகளை வளர்ப்பார்;
சிகைசிகையா $ வேதத்தைச்
சீச்சியென் றொறுப்பார்
பகையென்றும் உறவென்றும்
பாராது பேசியவர்
நகையென்றும் நட்டென்றும்
பணத்தையே சேர்ப்பார்;
வகைவகையா அவர்செய்யும்
மோசத்தைச் சொல்லில்
பகைபகையாய்ச் சொன்னோரைப்
பகைத்துமே காய்வார்;
ஆகையினாலே யனைத்தையுஞ்சொல்லாது
இனத்தையே கோறி
ஊகையி னாலேயிதை
யுணர்ந்திடு மென்றுரைப்பேன்."*

[இந்த வாக்கு உள்ளதுள்ளபடி தாரியத்தில் பலித்தது ஆச்சரியத்திலு மாச்சரியமே யானாலும், நிரதிசயானந்த நிலையுற்றவர்களுக்கு எல்லாம் வெள்ளிடைமலைபோல் விளங்குமென்பது திண்ணம். வி-சி-ப-ர்.]

$ பொய்ச்சிரிப்புக் காட்டி.

$ குடிமிவைத்தவர் = குடித்தனஞ்சார்ந்தவர் ஒவ்வொருவரும்.

* First published under the statutory protection of the Copyright Act in the December Issue of the Vivekachintamani for 1908.

A GENUINE VERDICT.

"Somehow or other I like your Journal."

"What is the meaning of that somehow or other?"

"Though people say that you are writing this and that, that you are *Vedanti*, *Nadanti* and so on, I cannot help liking your Journal. That is a fact which one cannot honestly deny. There is a charm about it which compels admiration while it defies analysis."

"Thank you for speaking the truth: '*They say, let them say*,' is a good motto for those who work for truth."

ஓர் உண்மையான வார்த்தை.

"எப்படியுமுங்கள் பத்திரிகையில் எனக்கு மிகப்பிடிமானந்தான்."

(1) உள்ளதை யுள்ளபடி யுள்ளுணர்ந்து
உண்மைசொன்னான்
கள்ளமன முள்ளவர்கள் எள்ளியென்னை
யேசினாலும்
பள்ளமுள்ள விடந்தனிலே நீர்தங்கும்
பான்மைபோல்
கள்ளமுள்ள மனந்தனிலே காமக்குரோதஞ்
சேர்ந்திடுமால்.

(2) "எப்படியு முங்கள் பத்திரிகையில்
எனக்குமிகப்பிடிமான" மென்றான்.
எப்படியுமென்ற வாச்சியத்தின் லக்ஷியம்
என்னென்றேயானு மேவலுற்றேன்.
"அப்படியிப்படி யென்றுபலர் தம்மைச்
செப்படிவித்தையாப் பேசுவார்கள்!
அப்படியிப்படி யென்றவர் சொல்லியும்
தப்படிவார்த்தை தரிப்பதில்லை!

(3) "வேதாந்தி போதாந்தி நாதாந்தி
யென்றும்மை
மாதாந்தம் பழிபேசி யேசுவர்
பலருண்டு:
வேதாந்தி போதாந்தி நாதாந்தி
போடுமோர்
மாதாந்தப்பத்திரிகை நாமகன் வாக்கென்றே
சொல்லவேண்டும்."

(4) என்றுரை செப்பினன் ஏதமில்
ஆந்த்ரவன் †
நன்றுரை செப்பினன் நாசமில்
க்றைஸ்டவன்: ‡
கன்றுரை போலுங் கதறிய
கசடர்கள்
ஒன்றுரை சொல்லுவர் ஒன்றுள்ளம்
நினைக்கவே!

ஓம் தத்ஸத்.

—(:-:)—

K. S. S. A.—It matters not.

கேவலம் ஸத்தியம் சாந்தம் அவதூதம்—

எப்படியிருந்தாலென்!

—(:o:)—

(1) அப்படி யிப்படி ஆனந்தப்படி
எப்படி யிருந்தாலென்!
[illegible]
எப்படி யிருந்தாலென்!
அப்படி யிப்படி ஆனந்தப்படி
சொப்பிரகாசமான சுகமகமானபின்
எப்படி யிருந்தாலென்!—எனக்கினி
எப்படியிருந்தாலென்!

(2) "நாடியே துதித்தாலும் அனைவரும்
நாப்பியே பழித்தாலும்
தேடிய பொருள் தன்னில்
நாடியமனமுறைந்
தாடிய கூத்தமர்ந் தசங்கோச
மானபின்"
ஓடியே பிழைத்தாலும் உள்ளிருந்
துழைத்தாலும்—
"எப்படியிருந்தாலென்!—எனக்கினி
எப்படி யிருந்தாலென்!"

† 'St Andrew' என்பவரைப்போல் அந்தர்முக லக்ஷியத்தில் 'ஆந்த்ரபாவம்' என்கிற அந்தர்முக லக்ஷிய பாவனையில் மனம் ஆழ்ந்து நின்றவன் என்று பொருள் செய்யப் பொருந்தும்.

‡ க்றைஸ்ட் வழிபட்டவன் என்று கொளினும் பொருந்தும். 'சத்தாத்மன்' என்பது பொருள்.

கேவலசித்தப்ராப்தி.

(3) "ஆறுவிகார மற்றேன் அறிவென்னும்
சொரூபமொத்தனுபவித்தேன்
சீறியே அகம்புத்தி சீதள
மானபின்
சோதிர் மயமான சுகமக
மானபின்"—
கோதில் மனமுனை குஹ்யனு
மானபின்—
எப்படியிருந்தாலென்—எனக்கினி
எப்படி யிருந்தாலென்!

ஸத்யானந்தஸ்வரூபஸித்தி.

(4) தன்னிலே யடக்கமென்றே தடஸ்தமாய்
தன்மயமாகநின்றேன்
பொன்னுக்குள் பணியது பிரிந்தாற்
போலவே
சின்மய மாயெங்குஞ் சேஷித்து
நின்றபின்"—
பொன்மய மாமென்னைப் பூசித்து
நின்றபின்—
"எப்படியிருந்தாலென்!—எனக்கினி
எப்படி யிருந்தாலென்!"

"சாந்தஸ்வரூபா 'ஸ்' காரோத்தம"

(5) எண்ணிலே யொன்றிலை யென்றே
ஏகாந்தமா யெங்குமானேன்
மண்ணிலே யொன்றிலை யென்றே
மோகாந்தகாரத்தைவிட்டேன்
†ஒண்ணிலே யொன்றிலை யென்றே
ஓங்காரலக்ஷியங்கொண்டேன்
[illegible] யென்றே
வேதாந்தப் பேச்சையும்விட்டேன்.
"எப்படி யிருந்தாலென்—எனக்கினி
எப்படியிருந்தாலென்!"

† The Number One represents the Universe. ஒன்றிலையென்ற = தேடிய பொருள் ஒன்று [illegible]ணச் சித்திப்பதில்லை யென்று.

"அவதூதாத்மாடப் [illegible]"

(6) (1) கண்ணிலே யொன்றிலை யென்றே
காமதேனுவுமானேன்
(2) தண்ணிலே யொன்றிலை யென்றே
தாமரவர்ணமுமானேன்
(3) புண்ணிலே யொன்றிலை யென்றே
பொய்யரைக்கூட்டோடுவிட்டேனிப்
(4) பண்ணிலே யொன்றிலை யென்றால்
பக்குவமுனக்கிலையண்ணே!

"எப்படியிருந்தாலென்—எனக்கினி
எப்படியிருந்தாலென்!"

(1) பஹிர்முகப் பார்வையாம் ஸ்தூல சாக்ஷியில் "தேடியபொருள்' ஒன்று சித்திப்பதில்லை யென்று 'காமதேனு' வென்கிற சுத்தாத்ம சங்கல்பனானேன்.

c-f: "பஹிர்முகஸ்ஸுதர்லபா" (ரஹஸ்யநாமாவளி)

Compare:

"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்,
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதேயானந்தம்"—
திருமந்திரம்.

(2) தாவரூபமான சூக்ஷ்மத்திலுமப்படியே என்று காம்யசித்திகள் முதலான மனோராஜ்யத்தைவிட்டு 'தாமரவர்ணமாம்' அருள்வடிவானேன்.

Compare:

"செம்பிற் களிம்புபோல செங்குருதி தன்னில்தாயே,
அம்பரத்தாடீசன் அருளென்றும் களிம் பொன்று
[ண்டு."

காம்யதபம் ஜபம் யஜ்ஞம் முதலிய ருத்ரதபஸ்கள் செய்து என்றபடி.

(3) புண் = வினைப்பயனும் கர்மருணம், வினையை வளர்ப்பதால் 'தேடியபொருள்' ஒன்று சித்திப்பதில்லை யென்று, பொய்மலியப்பெற்றுப் பித்த லாட்டஞ் செய்து போலிப்பிழைப்புப் பிழைக்க வழைக்குமவரை (அதாவது உலகவாசனை மலிந்த தொண்ணூற்றறுவரையும்) 'கூட்டோடு' (அதாவது) அவர்கள் குடியிருக்கும் தேஹவாசனையோடு விட்டேன். Compare "பூதமுதலாகவே நாதபரியந்தமும் பொய்யென்றெனைக் காட்டி."

(4) நாதானுசந்தான முதிர்ச்சியிலுண்டான "நாத தீத நாமகன் சிலம்பொலி" யாமிப்பண்ணில்.

The Seventold Principle of Being.

"திருவெழுகூற்றிருக்கை."

சித்திரகவி படம்.

—(o)—

"ஓங்காராகூரப் பெண்மயிலே
டாரலகஸ ஹ்ய ஃ ஸாம்பவியே."

"சண்முகவேலா சம்பந்தர் [பொலி.
சக்கரிபர்வ இன்பந்தர்."—நாதநே நாமகள் சிலம்

"எரியலாறுருவமில்லை ஏறவாலேறவில்லை
கரியலாற் போர்வையில்லைகாண்தகுசோதியார்க்குப்
பிரிவிலாத் தேவர்கூடிப் பெருந்தகைப் பிரானென் [றேற்றும்
அரியலால் தேவியில்லை யயனையாற னுக்கே."
—வாசேர்.

மனிதனுடைய வாழ்நாளுக்கு "ஜீவயாத்திரை" யென்று பேர். ஏனெனில் ஜீவன் யாத்திரிகனாய்ப் புறப்பட்டு நடமாடுகையினாலே அவனது நடமாட்டம் ஜீவயாத்திரை யென்று பேர் பெற்றது. யாத்திரையின் வாச்சியார்த்தம் நடமாடித் திரிதல். அதன் லக்ஷியார்த்தமோ, ஸ்தலம், யாத்திரை, மூர்த்தம் என்று மூவிதமாயுள்ள திரிகுணாத்மக ஸ்ரூபவத்தை ஆய்ந்தறியும் அறிவுதானாதலாம். ஆத்மன், அச்சுதன், நித்தியன், நிர்மலன், நிராமயன்—என்று இப்படிச் சொல்லப்பட்ட லக்ஷணங்களுக்கு லக்ஷியமாயிருப்பவன் அசலன்: அதாவது சலனமற்றவன். இவன் யாத்திரிகனுமாட்டான். ஸர்வஜ்ஞனாதலால் இவனுக்கு அறிய வேண்டிய தொன்றில்லை. ஸச்சிதானந்தனாதலால் அனுபவிக்க வேண்டிய தொன்றில்லை. ஸம்பூரணனாதலால் குறைபொன்றுமில்லை. இப்படிப்பட்ட ஆத்மனுக்குள்ளேயிருந்து அவனுக்குள் ஐக்கியமாய் இரண்டற்று விளங்கிய சக்தி யொன்றுண்டாயிற்று. அந்த சக்தி:—

"ஸர்வபூதாகுத நாயகியே
ஸெயோகாநந்த ஸ்வரூபிணியே.—(சண்முக.)"

என்று பக்தஜனங்களால் தொழுது கொண்டாடப் படுமவள். அவள் ஸ்ரீம் பீஜத்துள்ளிருந்து விளங்குவதால் ஸ்ரீங்காரியென்றும், ஹ்ரீம் பீஜத்துள்ளிருந்து ஒளிவதால் ஹ்ரீங்காரி யென்றும், ஐம்பீஜத்துள்ளிருந்து ஆட்டுபவளாகையால் ஐங்காரியென்றும், ஸௌம் பீஜத்திருந்தழகு பொழிவதால் ஸௌந்தரிய லக்ஷ்மியென்றும், "ஸௌஃ" என்னும் அக்ஷரத்திருந்தாடுபவளாதலால் ஸௌபாக்கியலக்ஷ்மியென்றும், நிருமயிலவதார மென்றும் மந்திர திருஷ்டாக்களால் கூறப்பட்டிருக்கிறாள்.

ஸ்ப்தஸ்தான மென்றும், ஸப்தஸ்தலம் என்றும், ஸப்ததாதுக்களென்றும், ஸப்தலோகங்களென்றும், ஸப்த மாதாக்களென்றும், ஸப்த மஹாதத்துவங்களென்றும் சொல்வதெல்லாம் "திருவெழுகூறு" ஒன்றையே குறிக்குமன்றி வேறல்ல. "பிரிவிலாத் தேவர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேற்றும் ஹரியலால் தேவியில்லை" யென்றதனால் அபின்னசக்தியான ஓம் தானே, "டாரலகஸ ஹ்ய ஃ" என்று எழு கூறுகப்பிரிந்து ஃ (ஆஹா) என்னும் விஸர்க்க லக்ஷணத்தால் ஸப்த ஸ்தலங்களையுமிட்டு, க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞ விபாக யோகத்தால் "ஜகந்மாதா" வென்று சொல்லும் ஸ்ரீ லோகநாயகி (நவவ்யூகாந்ருதகாயகி) தானே—"அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்கிற வாச்சிய லக்ஷியத்துக்கேற்ப—"சிவயோகாநந்த ஸ்வரூபிணியாய்" "நாமகள் புகழ்ஸ்ரீதாம் பிகையாய்" விளங்குகிறாள்.

மஹாமந்திரம், (1)

1. அக்ஷர லக்ஷியமான நாதவிஸ்தாரம் The Vibration.

மஹாமந்திரம், (2)

2. அக்ஷர லக்ஷணமான தேவிபீஜம் அல்லது ஆகமம்.—The Octave of Vibrations.

மஹாமந்திரம் (3)

3. அக்ஷர லக்ஷணமான பூத வாகிபம்.—The Vibrating medium or instrument.

என்றுள்ள மூன்றும் தேவாதி தேவனுக்கு சரீரத்திரயங்களாம். * இந்தசரீரத்திரயங்களின் அபிமானி. † ஹரிஃ, இதற்குச்சாக்ஷி ஓம். 'ஹரிஃ ஓம்' என்றால் அபிமானியாகிய பரப்ரஹ்மமும் அதன் சாக்ஷி சைதந்நியமாகிய ஸர்வசாக்ஷியும் ஒன்றாயிருப்பதைக் குறிக்கும். இதனுண்மையை உள்ளபடி அறியத் தச்சவர்களுக்கு இம்மந்திரம் வசியமானால் அது ராம பாணம் போல் அவர்களுக்கு உற்ற விடத்துதவியாய் உதவும்.

"நாதவடிவாகிய மஹாமந்திராதி ரூபியே, நாதாந்தவெட்டவெளியே" என்றதனால், பின்னமாயும் அபின்னமாயு மிருக்கும் சக்திகளிரண்டும் உண்மையிற் பார்க்கப்போனால் ஒன்றே. ஒருவன் உள்ளேபோய் வெளிவந்தால், உள்ளே போனவன் ஒன்று வெளியே வந்தவன் ஒன்று எனத் தொழில்பற்றி வியவஹார புருஷர்கள் இருவர் ஏற்பட்டாலும், பாரமார்த்திகத்தில் (உண்மையில் பார்க்கப்போனால்) உள்ளவன் ஒருவனே: அவனும் ஏகமேவாதுதீயனாயிருக்கிறான்—இரண்டன்றி யொன்றேயானவனாயிருக்கிறான். வியவகாரத்தில் 'போனவன்' 'வந்தவன்' என்கிற தொழிலாளிக ளிருவராயினும் தொழிலற்றவிடத்து உண்மைபாயுள்ளவன் (சத்ரூபி) ஒருவனே! வியவகாரத்தில் இருவன் உண்மையான தொழில் பற்றி யேற்படுதலால், அந்த இருவகைத் தோற்றத்தை மறுக்க அத்விதீயன் என்றும், ஆனால் வியவகாரத்தில் தோன்றின இருவர்கள் என்னுமிருவர்கள் என்றுதிக்கும் சுபாவமான சங்கைக் குத்தரமாக 'ஏகமேவ'—அவ்விருவரும் ஒருவரேயன்றி யிருவரல்ல என்கிற சப்தமும் வந்தமைந்தது. இப்படி ஒருவனே இருவராகியும் "இரண்டல்ல, ஒன்றேதான்' என்று எப்படி ஏற்படுகின்றதோ அப்படியே போல்,—

இருவர் மூவராகியும் மூன்றல்ல ஒன்றேதான்,
மூவர் நால்வராகியும் நான்கல்ல ஒன்றேதான்,
நால்வர் ஐவராகியும் ஐந்தல்ல ஒன்றேதான்,
ஐவர் அறுவராகியும் ஆறல்ல ஒன்றேதான்,
அறுவர் எழுகூறாயினும் எழல்ல ஒன்றேதான்.

இப்படியாக அருவாயுள்ளதிருவே (அபின்னமாயுள்ள [illegible]யே) எழுகூறு ஆகி (ஏழுச்சங்களாகப்பிரிந்து) [illegible] யிருக்கும் துரியவடிவாம் தூயஅவஸ்தையை "ஜீவேசுவரஜகத்" என்கிற தோற்ற வாயிலினால் எழுகூறாகவும், "ப்ரஹ்மாத்மைக்கியம்" என்கிற ஒடுக்க வாயிலினால் ஒன்றேயாகவும் இருக்கையை (இருக்கும் உண்மையை) விளக்க ஸ்ரீ திருஞானசம்பந்தரும், திருமங்கையாழ்வாரும், திரிகரணமும் ஒருகரணமான அந்தக்கரணத்திலினால் விரிதல் குவிதல் ரூபமாயுள்ள தோற்றம் ஒடுக்கம் என்கிற ஸநாதனமான தர்ம வியவகாரத்தைத் "திருவெழுகூற்றிருக்கை" யென்று சித்திரக் கவியினால் பாடியிருக்கிறார்கள். அஃதை பஹிர்முகப் பிரவிருத்தி மிகுந்த பாமரஜனங்களும் தந்திரவாயிலாக இலகுவினுணர்ந்து பக்திசிரத்தை பூண்டு பரமனைப் பூஜித்து ஹிருதய சுத்தி பெய்துயாறு ஸ்ரீமான் சூ. ப. நாதமுனி நாயுடு, திருஞானசம்பந்தர் திருமங்கையாழ்வார் இவர்களியற்றிய "திருவெழுகூற்றிருக்கை" யென்னும் சித்திரக் கவியை அழகிய திருத்தேர் வடிவமான சித்திரத்தினுள்ளமைத்து, சமயத்துக்குத் தக்கவாறு மத்தியில் நடராஜப் பெருமானையும், கோவிந்தராஜப் பெருமானையும் அமைத்து திருவாரூர் தனையில் வைத்து பூஜிக்கத் தக்கவிதமாய் அழகான பெரிய உருவத்தில் லிதக்ராப் (Lithography) படமாகச் செய்து பிரசுரப்படுத்தி யிருக்கிறார். இதை இந்து மதாபிமானிகளனைவரும் வாங்கி தங்கள் தங்கள் குலதனமாக வைத்துப் பூசிக்க வேண்டுமென்பது இதைச் சித்திரப் படமாக வெழுதி அதில் சித்திரக்கவியைக் கிரமப்படி பிரித்தடக்கி வெளியிட்டவரது நற்சிந்

* ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமென சரீரங்கள் மூன்றும்.

† வியஷ்டி சரீரங்களுக்கு அபிமானிஜீவன்; சமஷ்டி சரீரங்களுக்கு அபிமானி—ஈசுவரன். காரண சரீர அபிமானி பிரஹ்மம்.

தையாயிருக்கிறது. இதன் இரகஸியத்தைவெளியிட வேண்டில் படம் ஒவ்வொருவர் கையிலுமிருக்கவேண்டும். சுமார் 200-பேர்கள் வரையிலாவது புதிய சந்தாதார்கள் விவேகசிந்தாமணிக்குச் சேர்ந்தால், இப்படங்களை வாங்கி விவேகசிந்தாமணியோடு சேர்த்தனுப்புவதோடு கூட அதன் ரகஸ்யத்[illegible] [illegible]லாது சொல்லி[illegible]டிகாட்டலாம். பணமே [illegible]யதாகக் கொண்டாடு மிக்காலத்தில் குணமே பெரிதாகக் கொண்டாடும் திருவுளம் அமைந்தவர் எத்தனை பேரிருப்பார்களோ தெரியவிரும்புகிறோம். பிரத்தியேகமாக வாங்க விரும்புவோர் சென்னை 'இந்தியன் பாட்ரியட்' அச்சாபீஸ் பிரதம வேலைக்காரரான சு. ப. நாதமுனி நாயுடுவுக்கு எழுதி விவரமறிந்துகொள்ளலாம். ஒவ்வொரு படங்களின் விலை அரையணாதான். ஆனால் அவற்றின் உண்மை விலை மதிக்கற்பாலதன்றும்.

The Way to Health.

Of Constipation in General.

சுகவழி.

மலச்சிக்கல் நீக்கம்—பொது.

(ஸ்ரீ ஆத்மானந்த ஸாது எழுதியது.)

சுகத்துக்குக் காரணம் சுத்தம். சுத்தம் நான்கு வகைத்தாம்: அகச்சுத்தம், மனச்சுத்தம், புறச்சுத்தம், சுத்த சுத்தம் என அவற்றைக் கூறலாம்.

(1) அகச்சுத்தம் என்பது அந்தக்கரண சுத்தம். இந்த சுத்தம் சித்திக்க மருந்து "வாய்மையால் அகம் தூய்மையாம்" என்னும் மூது[illegible] [illegible]ரிக்கை [illegible] [illegible] [illegible] செய்வதாம்.

(2) மனச்சுத்தம் என்பது மனம் விஷயப்பற்றற்றிருப்பது. விஷயப்பற்றை நீங்கிய மனம் தியான யோக்கியமாம். "தியானம் நிர்விஷயம் மனது" என்ற சுருதி வாக்கியத்தினால் விஷயப்பற்று விட்டு நிற்பதே தியானமாம். இதில் இரண்டு அம்சங்க ளிருக்கின்றன: பற்றுவிடல் ஒன்று, நிற்பது மற்றொன்று. மனம் அலைபுந்தன்மை யுள்ளதாகையால் அதற்குப் பேய் என்[illegible]பேர். கண்டதை யெல்லாம் பற்றுவதால் 'பிசாசு' என்றும் பேர். இந்த இரண்டு துர்க்குணமும் நீங்கவேண்டும். இவ்விருகுணங்களு மிருப்பதே மனதுக்கு மலச்சிக்கல்: இவற்றின் நீக்கமே மலச்சிக்கல் நீக்கமாம். இதற்குக் கைகண்ட ஔஷதமொன்றுண்டு. அது, "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்: நிலையில்லாக் காரியத்தை நினைத்தவேண்டாம்." இந்த ஔவையார் முதுமொழிகளிரண்டின் அப்பியாஸசித்தியினால் மனத்தின் மலச்சிக்கல் நீங்குவதற்கான பரமஔஷதம் சித்திக்கும். மனச்சிக்கல் உள்ளமட்டும் ஐயந்திரிபு உண்டு. மனச்சிக்கல் நீங்கினால் ஐயந்திரிபற்று மனம் தெளியும்.

(3) புறச்சுத்தம். இது தேகத்தின்உள்ளும் புறமும் சுத்தமாயிருத்தலாம். அகச்சுத்தம் மனச்சுத்தம் இரண்டும் சித்தித்தவர்களுக்கு புறச்சுத்தம் தானே வந்துலபிக்கும். ஏனெனில் காரணம் சுத்தமானால் தானாகவே காரியமும் சுத்தமாம். தேகத்தின் புறச்சுத்தம் ஸ்நான சௌசங்களால் சித்திக்கும். தோலின் அழுக்கைப் போக்குவதன்றி, இரத்தத்தின் கொதிப்பையும் சாந்தி செய்யும். அதனால் இரக்த சுத்தியும் துவக் (தோல்) சுத்தியுமுண்டாம். இவையிரண்டின் சுத்திபால் நாடி நரம்புகளும் சுத்தியாம். ஆனால் அகச்சுத்தம், மனச்சுத்த மிரண்டும் சேர்ந்திருந்தால்தான் ஸ்நானபலன் பூரணமாய்ச் சித்திக்கும். அதுவும் ஓடுகிற நதிகளில் அமிழ்ந்து ஸ்நானம் செய்வதால், நீரோட்டத்தின் வேகத்தால் நாடி நரம்புகள் கிளர்ச்சி கொண்டு தளர்ச்சி நீங்கும்: சௌசம் என்பது கால்கையலம்பல், வாய்க்கொப்பளித்தல் முதலிய

அங்கசுத்திகளாம். இதில், அவசியமான பொழுது குடலை யலசல், இறைப்பையை யலசிச் சுத்தம் செய்யல், நாசித் துவாரத்தைச் சுத்தம் செய்யல், இவையும் அடங்கும். ஆனால் சாமான்யர்கள் இச்சாதனங்களை யனுஷ்டிக்க அதிகாரம் போதாதவர். அங்கங்கள் சுத்தமாயிருந்தால்தான் தேகம் சுத்தமாயிருக்கும். ஆகையால் புறச்சுத்தத்துக்கு முக்கிய சாதனமாயிருப்பது நீர்மையும் (ஜலத்துவமும்) நேர்மையும் நல்லொழுக்கமுமாம். நீர்மையை நீரின்மேலேற்றி நீரையே(ஜலத்தையே) புறச்சுத்தத்துக்குக் காரணமென்று உபசாரமாகக்கூறுவர். ஆனால் உஷ்ணதிக்கம், சுரம், சந்நிபாதம் முதலிய நோய்களுற்ற காலத்தில் ஜலம் சுத்தத்துக்குக் காரணமாக வின்றி தேகத்தில் தங்கி விஷநீராகி ஜலதோஷத்தை யுண்டுபண்ணுகிற தல்லவா! அது ஏன்? தேஹத்தின் நீர்மை (ஜலத்துவம்) தண்ணீரின் நீர்மையோடு பொருந்தாமையே அதற்குக்காரணம். தேஹம் என்றால் தேஹத்தின் தாதுக்களையெல்லாம் குறிக்கும். இவையேழு: தோல், இரக்தம், மாமிஸம், கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்கிலம் எனப்படும்.

(1) தோலுக்கு நீர்மை மயிர்க்கால்களெல்லாம் சுதந்தரமாயிருத்தலாம்.

(2) இரக்தத்துக்கு நீர்மை கொதிப்பு, நொதிப்பு, நுரைப்பு, பொங்கல், தோய்தல், திரிதல் என்றுசொல்லும் பலவான குற்றசேஷ்டைகளற்றிருத்தலாம்.

(3) மாமிஸத்துக்கு நீர்மை தடிப்பு, மடி[illegible] வலிப்பு, சலிப்பு, கடுப்பு, குடைதல் முதலிய வாதவை[illegible]யிருப்பதாம்.

(4) கொழுப்புக்கு நீர்மை வழுக்குறு ஒழுக்கும், இழுக்குறு வழுக்[illegible]

(5) எலும்புக்கு நீர்மை புரையற்றிருத்தலாம்.

(6) மஜ்ஜைக்கு நீர்மை லஜ்ஜையில்லாத் தூக்கமாம்: சுகநித்திரை யென்றும் அறிதுயில் என்றும் கூறுவரிதையே "அஹம் பிரஹ்மாஸ்மி" யின் அர்த்த மறிந்தோர்.

(7) சுக்கிலத்துக்கு நீர்மை சுகாரோக்கியமாம். ஓஜஸ் (இந்திரியங்களின் சக்தி), தேஜஸ் (காந்தி), ப்ராஜஸ் (பிரகாசம்), பலம் என்று சொல்லும் தேவதா லக்ஷணங்களெல்லாம் சுக்கிலத்தின் நீர்மையா லுண்டாவனவாம்.

இங்கே நீர்மை யென்றால் சுக்கிலம் நீர்த்துப் போவதில்லை: அது துர்ப்பலத்துக்குக் காரணமாதலால் வியாதியில் சேர்ந்ததாம்.

இப்படியாகத் திரிகரண சுத்தம் இன்னதென்று சொன்னபின் எஞ்சியுள்ள (4) சுத்த சுத்தம் என்ன வென்பதைச் சொல்வோம். சுத்த சுத்தம் என்பது சரீரத்திரயங்களின் அபிமானியாகிய ஜீவனின் சுத்தம். ஜீவனைச் சிதாபாஸன் என்று சொல்லுவர். அவித்யையில் பிரதிபிம்பித்த சித்ரூபியே ஜீவன். அவித்யை யென்கிற அஞ்ஞானமலம் சிக்காமல் நீக்கமுறப்பெற்றவர் ஜீவசுத்தி பெற்றவர்களாம். ஜீவன்முக்திலக்ஷணத்தால் இவர்கள் தத்துவஞானி, தத்துவதரிசி யென்றும் சொல்லப் படுவார்கள். சரீரத் திரயங்களிலுமுள்ள அபிமானம் நீங்கி, அசரீரியாயுள்ள ஆத்மாவில் உள்ளப்பற்றுண்டானால் தத்துவமஸி யென்கிற மஹா வாக்கியத்தில் குறிக்கப்பட்ட துவம் பத லக்ஷியார்த்தபுருஷனும் கூடஸ்தராவர்.

இப்படியாக "சுகத்துக்குக் காரணம் சுத்தம்" என்ற வாக்கியத்தில் சுத்தம் என்பதை 'உடலறி விளக்கம்' கொண்டு உண்மைக் கொக்க (தத்துவார்த்தம் விளங்க) ச்சொன்னோம்.

இனி [illegible]லம் ஜடார்த்தமான மலச்சிக்க[illegible] உப[illegible] பற்றிக் கொஞ்சம் சொல்வோம். குடலில் மலம் சிக்கல் மலச்சிக்கலாம். மலம் என்பது இங்கே, ஆகாரத்தின் ரஸபாகங்கள் போக உபயோக மற்றதாய் எஞ்சி நின்ற மிகுதியாம். இது அவரவரின் சீரணசக்திக்குத் தக்கபடி யர்த்தம் செய்யத்தக்கதாகும். அசீரண

ஹேதுவான எவ்வகை யாகாரம் எந்த ஸ்திதியில் உள்ளே தங்கினும் அது மலச்சிக்கலே யாம். குடல் சுத்தமாயிருந்தால் உட்கருவிகளில் வியாதி பற்றாது. குடல் அசுத்தமா யிருந்தால் எல்லா வியாதிகளும் பற்றுவதற்கு ஹேதுவுண்டாகும். ஆகையால் ஆண் பெண், பாலர் விருத்தர் எல்லாரும் குடலில் மலச்சிக்கல் நேராதபடி வைத்துக் கொள்ளப் பழகவேண்டுமென்று எல்லா வைத்தியர்களும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். மலம் இறுகியாவது, சிறுகலாகவாவது போனாலும், வேறு எவ்விதமாகவாவது சிக்கியிருந்தாலும் அது மலச்சிக்கலேயாம். குடலில் அசுத்தம் தங்கினால் அது ஸப்த தாதுக்களையும் பாதிக்கும். மூளையில் (மஜ்ஜையின் சுத்தம் மூளை) தாக்கினால் அது மனதைக் கலைத்து அந்தக்கரணத்தையும் பாதிக்கும். மலப்பிரவிர்த்தி நன்றாக ஆகாவிட்டால் அன்றைக்கு லங்கணமிருப்பது பிரதமத்தில் பரம சாதனமாம். லங்கணம் என்றால் பட்டினி. காலாகாலத்தில் மலங்கழியப் பழகுவது அத்தியாவசியமாம். மருந்துகளைச் சாப்பிடுவதைவிட நித்திய சாக்கிரதையாயிருந்து, பழவகைகள், தேன், மோர், வெண்ணெய், ஷர்பத்துகள், போன்ற மல விமோசனகாரிகளைப் புசித்து குடலை மலங்கழிக்கப் பழக்குவது உசிதமாம்.

தேஹத்தில் நீர் குறைந்தால் மலச்சிக்கலுண்டாகும். ஆதலால், தேன்கலந்தநீர், ஷர்பத்து, மோர், 'மார்மலேட்' இவைகளைச் சேர்த்துக் கொள்வது நலமென்று டாக்டர்கள் சொல்கிறார்கள். படுக்கப்போவதற்குச் சற்று முன்னும், எழுந்தவுடனும், வெந்நீர் அல்லது குளிர்ந்த ஜலம் தேகஸ்திதிக்குத் தக்கபடி சாப்பிடுவது மலப்பிரவிருத்தியை யுண்டுபண்ணும். "Concentrated Food" சத்துகளை மட்டுஞ் சேர்த்து அசத்துக்குறைந்த ஆகாரம் மலச்சிக்கலுக்குக் காரணமாகலாம். சத்தாகவிருப்பதால் அசத்துப் பாகம் மிஞ்சாது குறையும். அதனால் குடல் நெளிவதற்கு வேண்டிய சாதனம் குறையும். குடல் கீழ்நோக்கி நெளிதல் நிற்குமானால் அந்த வழக்கம் குன்றியதனால் மலமுள்ள காலத்திலும் குடல் அசையாமல் நிற்க ஹேதுவாகும். அதனால் மலச்சிக்கலுண்டாகும். தண்ணீர் தாராளமாக வுட்கொள்வது மலப்பிரவர்த்திக்கு அனுகூலமாம்.

இரண்டாவது, தேஹப்பயிர்ச்சியும் அப்பியாசமும் வேண்டும். நடமாட்டம் மிகுதியான எம்முயற்சியும் நல்லதாம். மலச்சிக்கல் வந்தபின் வைத்தியம் செய்து கொள்வதிலும் வராமற் காப்பது மேல். மலம் சிக்கினால் வாதம் சீறி ஓடுங்கும். வாதம் ஓடுங்கினால் பலம் ஓடுங்கும். பித்தம் சீறும். இரக்தம் முறியும். மேகநீர் அல்லது விஷநீர் தங்கும். சிலேஷ்மங் கட்டிச் சேஷ்டைகள் பல செய்யும். அதனால் எல்லா வியாதிகளும் சம்பவிக்கும். வியாதிகளின் பேரை யெல்லாம் சொல்லி சிறுவர் மனதைக் கலக்க இஷ்டமில்லை. சுகவழி காட்டுவது நம் கடமை. அசுகம் பற்றாதிருக்கப் பார்த்துக் கொள்வது சுகத்தைவிரும்பும் விவேகிகள் கடமை. ஆதியின்றி வியாதியில்லை. (ஆதியென்றால் சங்கல்பமூலம்.) ஆதிவைத்தியம் தெரியாது வியாதிவைத்தியம்செய்வது அனேகமாய் அநர்த்தத்தை விளைவிக்கும். வியாதிக்காரர்களுக்கு வைத்தியர்களிருக்கிறார்கள். சுகவழி நாடுவோருக்குச் சூத்திர மிருக்கிறது சூத்திரமென்றால் சூக்ஷமமாயுள்ள புதிமுதல் பிரஹ்மம் வரையில் அர்த்தங் கொள்ளும். அதைப்பற்றி விசாரிக்க விரும்புவோர் சாதன சதுஷ்டய ஸம்பன்னராய் குருவையடுத்து குருமுகமாய் விசாரம் செய்யவேண்டும். ஏனெனில் மலச்சிக்கு நீங்காதமனது உண்மையை உள்ளபடி யுணர்ந்து பற்றுவதருமை. குருமுகமாய் விசாரம் செய்தால் தேஹத்திரயங்களிலுமுள்ள மலச்சிக்கலைப்போக்கி நீர்மையும் மென்மையுமுண்டாகச்செய்து பக்குவமறிந்து உபதேசிப்பார். நீர்மை, நேர்மை யென்றதையே யோகமுறைப்படி [illegible] சாமமென்பார். நல்லெண்ணமும் நல்லொழுக்கமும் எல்லா யோகத்துக்கும் பிரதம காரணமாம்.

—:o:—

Conditions of Health & Disease.

How to live to 150.

(Mr Edison's recipe.)

(2) சௌக்கியாசௌக்கியசாதனங்கள்.

150-வயசிருக்க வழி.

(மிஸ்டர் எடிஸன் சொல்லும் உபாயம்.)

சுகவழி நாடுவோர் தேஹ பாவனையை விடவேண்டுமென்று நாம் சொல்கிறோம். மேற்றிசையிலுள்ள வித்யா விற்பன்னர் சிலர் ஆத்மா வென்பதைப்பற்றிய பேச்சையே யெடுக்காமல், இந்த தேஹத்தை ஒரு யந்திரம்போல் பாவித்து அதை சரியாக நடத்தி வந்தால் 150-வருஷ காலம் தேஹத்தோடு ஜீவித்திருக்கலாமென்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்கிறவர்களில் முக்கியமானவர் மிஸ்டர் தாமஸ் எடிஸன் என்பவர். சென்னையிலுள்ள ஷாப்புகளில் பாடும்யந்திரங்கள் விற்கப்படுகின்றனவே! அந்த யந்திரங்களைக் கண்டுபிடித்துச் செய்தவர் இவர் தான். இவருக்குக் காது நன்றாகக் கேட்காது. ஆனாலும் ஸ்வரத்தில் ஒரு அசைகூட விடாது சங்கீத ஸாஹித்தியங்களைப் பாடினபடி திருப்பிப்பாடும் யந்திரங்களை யிவர் நிர்மித்திருக்கிறார். இவர் மனுஷன் நித்தியாத்மன் என்பதைத் தான் நம்பவில்லை யென்கிறார்.

ஆனால் தேஹத்தை ஒரு யந்திரத்துக் கொப்பானதென்றும் அதை சரியாகப் பார்த்துக் கொண்டு வந்தால் 150 வருஷகால மிருக்கலாமென்றும் சொல்கிறார். இதனால் என்ன வெளியாகிறது. இவர் "தேஹம் நான்" என்கிற பாவனையை அறவிட்டொழித்தவரென் றேற்படுகிறதல்லவா!

மிஸ்டர் எடிஸனுக்கு இப்பொழுது வயது 64-ஆகிறது. இவர் 12-வயதில் வேலைசெய்ய ஆரம்பித்தார். அது முதல் விடாது மனத்தாலும் தேஹத்தாலும் உழைத்து வருகிறார். [illegible] ய 64-வது வயதில் ஒரு நாளைக்கு 17-மணி நேரம் வேலை செய்கிறார். [illegible] 48-மணி நேரம் ஓய்வொழி வின்றி வேலை செய்தார். ஆனாலும் இவர் தேஹஅசௌக்கியத்தால் வருந்தினவரேயில்லை. தேகம் சௌக்கியமாயிருப்பதற்கு வழி யென்னவென்று இவரைக் கேட்டால், முதலாவது சரியான போஜனம் உட்கொள்ள வேண்டும்; இரண்டாவது சரியானபடி தூங்க வேண்டும்; மூன்றாவது சரியானபடி உடைகள் தரித்தல் வேண்டும். இந்த மூன்றிலும் சரியாக இருந்தால், மனிதன் இந்த தேஹத்தை 150-வருஷகாலம் வைத்துக் காப்பாற்றலாமென்கிறார். அவர் தானே அந்த 150 வருஷகாலம் ஜீவித்திருக்கப் போகிறதாகச் சொல்கிறார். இவர் ஆத்மாவொன்றுண்டென்றும் அதில் தான் நம்புவதாகவும் சொல்லாவிட்டாலும், தேஹம் தான் அல்லவென்றும், மனமும் தான் அல்லவென்றும், தேஹமும் மனமும் தான் உபயோகிக்கும் கருவிகளே யன்றி வேறல்ல வென்றும் சொல்கிறார். அப்பொழுது தேஹமனோ தத்துவங்களுக்கு அந்நியமான விஞ்ஞானமயன் தானென்பது ஏற்படுகிறதல்லவா. இஃதேயல்ல: இவர் இதுவுங்கடந்தவர் என்பதற்கு ருஜு வேற்படுகின்றது.

சாதாரணமாக மனுஷர்கள் எதை யடக்கியாண்டாலும், பசி தாஹங்கள், காமக்குரோதங்களை யெல்லாம் அடக்கியாள வல்லவர்களானாலும், தூக்கம், ஸ்வப்னம் இவ்விரண்டையும் அடக்கியாள அவரால் முடியாது. ஏனெனில் சொப்பனமற்ற [illegible] ஆனந்த மயகோசத்தில் தான் அனுபவிக்கத் தக்கது. இவர் தலையணையில் தலை சாய்த்த 30 க்ஷணத்துக்கெல்லாம் நல்ல ஸுஷுப்தியில் இருப்பதாகக் கூறுகிறார். ஒரு நாளைக்கு 17-மணி நேர முழைத்தாலும், 6-மணி நேரம் சொப்பனமென்பதில்லாத நல்ல தூக்கம் தூங்கிறதாகக்

சொல்கிறார். இவருடைய தேஹ சௌக்கியத்தின் இரகஸியம் சொல்[illegible] [illegible]கிறது. அந்தத் தூக்கம் மனோசுத்தத்தால் தான் உண்டாகக்கூடும். மனோ சுத்தத்தோடு தேஹ சுத்தமும் வேண்டும். எவனொருவன் தூங்கும் பொழுது சொப்பனம் காண்கிறானோ, அவன் வயிற்றிலுள்ள ஆகாரம் அதிமதமான தென்று சொல்லல் வேண்டும் என்கிறார். இது உண்மையே! மனுஷன் மிதபோஜன முண்ண வேண்டுமானால் அவன் காபாத்திரசாமி யாக வேண்டும். அதாவது வயிற்றுக்கு அளவு கையே! மிஸ்டர் எடிஸன் ஒரு கையளவு ஆகாரமே சாப்பிடுவதாகச் சொன்னார். சந்நியாஸ உபநிஷத்துக்களில் மனுஷனுக்கு மிதமான ஆஹாரம் இவ்வளவென்று நன்றாகச் சொல்லப் பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள மனுஷர்களெல்லாரும் மிதமிஞ்சி யுண்கிறவர்கள்: ஆதலால் தான் அற்பாயுளில் போகிறார்களென்பது இவருடைய சித்தாந்தம். இவரிடத்திலுள்ள ஒரே குற்றமென்ன வென்றால், அது புகையிலை மெல்லுதலாம். அவருடைய மனைவி அது கூடாதென்று ஆக்ஷேபித்தாளாம். ஆனால் சீப் ஜஸ்டிஸ் (சிரேஷ்ட நியாயாதிபதி) அவர்களும் அந்த வழக்கம் அனுஸரிக்கிறவர் என்று தெரிந்ததும் புகையிலை போடுதல் கௌரவமான வழக்கந்தானென்று சும்மாவிருந்து விட்டாளாம். பெண்புத்தி யெங்கும் பேதைமையுடத்தே. மிதமிஞ்சின ஆகாரம் சாப்பிடுவதினால், தேஹத்திலே மலஜலச் சிக்கல்கள் ஜாஸ்தியாகி வாதபித்த [illegible] நாடிகள் முறை பிறழ்ந்தோடுகின்றன. ஆதலால், இந்த [illegible] [illegible]கத்தை வெல்ல யத்தனிக்கிறவன், முதலில் தேஹசுத்தி செய்துகொள்ள வேண்டும். தேஹசுத்தி அந்த சுத்தியால் தான் சித்திக்க வேண்டும். அந்தசுத்திக்கு ஹிருதயசுத்தி அவசியம். ஆகையால் ஹிருதயசுத்தி வாய்த்த சற்சீஷன், அந்தசுத்தி தேஹசுத்திகள் செய்து [illegible], பமுகு ஆத்மசுத்தி தேட வேண்டும். ஆத்மசுத்தி யென்றால் "தெளிந்த அறிவு" என்று அருத்தம்: வேறொன்று மில்லை. அறிவு தெளிந்தால், மாயையின் மயக்கம் நீங்கும். சுகநித்திரை சித்திக்கும். நீடித்துழைக்கலாம். நமது சித்தர்கள் அனுபவமும் இதுவே.—

"உடம்பினை யிழுக்கென்றிருந்தேன்.
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்பிலே யுத்தமன் கோயில்கொண்டானென்
னுடம்பினை யானிருந்தோம்பு கின்றேனே."

என்கிற ஒரு திருமந்திரத்திலே, தேஹத்தைக் காப்பாற்றும் வழியைத் திருமூலதேவர் சொல்லி விட்டார். இதன் விவரம் ஹடயோக சாதனங்கள் மூலமா யறியவேண்டும்.

———:-:———

உ

ஸ்ரீ சாவித்திரியை நமோ

விவேகசிந்தாமணி உபநிஷதர்த்த தீபிகை.

11. பாவனோபநிஷத். *

(விவேகசிந்தாமணிக்கென்று பிரத்தியேகமாக எழுதப்பட்டது).

(யாவரும் இதை யெடுத்து அச்சிடக்கூடாது.)

———:-:———

அவதாரிகை:—ஸ்தூலம், சூக்ஷ்மம், பரம் எனப்படும் ஸ்ரீதிரிபுரசுந்தரியின் மூவுருவுக்கேற்ப, அவளுபாசனையும் காயிகம் (சரீரத்தாற் செய்யக்கூடியது), வாசிகம் (வாக்கால் செய்யக்கூடிய ஜபம்), மானதம் (மனதாற் செய்யத்தக்க பாவனை) என மூவிதப்படும். இவைகளை முறையே பஹிர்யாகம், அந்தர்

* இவ்வுபநிஷத்தை பாஸ்கரராயரால் செய்யப்பட்ட பாஷ்யத்தின் முக்கியாம்சங்களையும், அவரால் செய்யப்பட்ட (இதுவரையும் அச்சிட்டு வெளிவாத) பாவனோபநிஷத் பிரயோக விதியின் முக்கியாம்சங்களையும் சேர்த்து ஒருவாறு மொழிபெயர்த்திருக்கின்றது.

யாகம், பாவனை யெனக் கூறப்படும். இவைகளொவ்வொன்றிலும் மற்ற விரண்டினுடைய சம்பந்த மிருக்குமாயினும் அதுதன் பிராதான்னியதையும் அதிகாம்சத்தையும் குறித்து காயிகம், மானதம், வென்றிவ்வாறு [illegible]படும். முதலிரண்டும் திரிபுராதாபினீ உபநிஷத்தில் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளைக் காட்டிலும் ரஹஸ்யமானதும் காலசக்கிரத்திலடங்கிய ஸ்ரீசக்கிரத்தின் பாவனை யென்று சொல்லப்படும் மூன்றாவது உபாஸனையை யோகிகளான ஜனங்களை அனுக்கிரகம் செய்வான் வேண்டி ஆதிவேத புருஷனானவர் ஆரம்பத்தில் சக்குருவின் பரரூபத்தை வர்ணிக்கின்றார். தந்திரங்களில் பாவனைகள் காதிமதம் கௌளமதம் என இருவகையாகச் சொல்லப்படும். இவ்வுபநிஷத்திற் சொல்லப்பட்ட பாவனைகள் காதிமதத்தை யனுசரித்தவை. இவ்வுபநிஷத்தில் அநேக பாட பேதங்களிருந்தாலும் காதிமதம் முதலிய தந்திரங்களையும் சுத்திரம் முதலிய சாஸ்திரங்களையும் ஒட்டிய பாடங்களை யனுசரித்தே பாஷ்யத்தைத் தான்எழுதியிருப்பதாயும், ஆகையினாலேயே தன்னுடைய பிரயோக விதியில் பாஷ்யஞ் செய்யப்பட்ட உபநிஷத் சாகையில் காணாத பாடங்களையும் சேர்த்து அதற்கு வேண்டிய மற்ற அம்சங்களை யோகினீஹிருதயம், தந்திரராஜம், பிந்து சூத்திரம் முதலான கிரந்தங்களினின்றும் சேர்த்திருப்பதாகவும் பாஸ்கரராயர் சொல்லுகிறார்.

1. [உப] ஸ்ரீகுருவானவர் சர்வகாரண பூதமான சக்தி.

2. [உப] அதனால் (அச்சக்தியினுடைய) தேகம் (ஸ்வரூபம்) நவரந்திர ரூபமாகும்.

(குறிப்பு.) "குரு" வென்கிற பதத்தில் "கு" என்பது இருள் என்று பொருட்படும், "ரு" என்பது அவ்விருளைப் போக்கடிக்கின்றது என்று பொருளாகும், ஆகவே "குரு" வென்றால் இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கும் வஸ்து, அதாவது விவேக மென்பது கருத்து. ஈசுவரானுக்கிரகத்தாலுண்டாகும் அவ்விவேகமே சர்வ சம்சயங்களையும் போக்கி, மந்திரங்களின் வீர்யத்தை பிரகாசிக்கச் செய்வதாலும், உண்மையா[illegible] சகனுடைய மனதில் தங்கும்படிச் செய்வதாலும் அதை விமர்சம் என்று சொல்லப்படும். அதுவே சர்வ பிரபஞ்சத்திற்கும் காரணமாகிய சக்தி. (விமர்சம் என்றால் பரியாலோசனை அல்லது விருத்தி.) குரு வென்கிற விவேகஞானமாகிய பூமிகையில் பிரஹ்மாநுசந்தானமாகிய விருத்தியிருப்பதாலும், அதுவே பூர்ணாஹந்தா ரூபமானதாலும் தேவியின் ஸ்வரூபத்தை பின் சொல்வதில் சதாநந்த பூர்ணமாகிய தன் ஆத்மாவே ஸ்ரீ பரதேவதையென்றும், சத், சித், ஆநந்தம், ஆகிய மூன்று தர்மங்களுமற்ற தர்மியாகிய சுத்த சம்வித்தே காமேசுவரர் என்றும் சொல்வதாலும், ஸ்ரீ பரதேவதைக்கு சதானந்தமாகிய உபாதியுண்டு என்று ஏற்படும். அவ் விருத்திரூபமாகிய உபாதியிருப்தால்தான் தேவியின் வர்ணம் சிகப்பாகவும் காமேசுவரரின் வர்ணம் சுத்த ஸ்படிக ரூபமாகவும் வர்ணிக்கப்படும்: ஆகவே அசுத்தத் திரிபுடி நீங்கி சுத்தத் திரிபுடியாய் நின்ற அநுபவம் பரதேவதை. சுத்தத் திரிபுடியும் நீங்கிய விடம் ஸ்ரீகாமேசுவரர். (தேவியை விமர்சமென்பதுபோல் காமேசுவரரை பிரகாசமென்று சொல்வது சம்பிரதாயம்.)

தேகத்திலிருக்கும் நவ துவாரங்களும் அந்த விமர்ச சுவரூபமேயன்றி வேறில்லை. அவற்றில் இரண்டு சுரோத்திரமும் வாக்கும்—திவ்வெளகம்; இரண்டு கண்களும் உபஸ்தமும் சித்தௌகம்; இரண்டு மூக்குகள் பாயு இவை மானவௌகம் என்று சொல்வது சம்பிரதாயம். இவ்வொன்பது விமர்சங்களுக்கும் ஆதாரமானது சுஷும்னை நாடியே. சுஷும்னையின்

நவ துவாரமுள்ள மூலபாகத்தில் சுரோத்திரம் முதலான நாடிகள் எல்லாம் சேர்ந்திருப்பதாலும், சுஷும்னையின் சம்பந்த முடைய சித்சக்தியே அந்தந்த நாடிகளின் வழியாய் அதனதன் விஷயங்களைக் [illegible] லும் [illegible]வானபது [illegible]சங்களுக்கும் ஆதாரம் சுஷும்னா நாடியே. இவ்வொன்பதும் நல்லதைக் கிரகித்தல், தீமையானதை விடுத்தல், விஷயங்களை யுணர்தல் முதலிய வியவகாரமுடையதானவைகளாதலால் அவை விமர்ச மெனப்படும். இவ்வித விவேக விருத்தி சம்பந்தமான சித்சக்தியானது பிராணசக்தியின் இயக்கத்தோடு கூடின சுஷும்னையே. அதுவே விமர்சமயீயெனவும் சொல்லப்படும். இந்நாடிகள் ஒன்பதில் மூலாதாரத்தின் மத்திய திரிகோணத்தின் மத்தியிலிருந்து மேல்நோக்கி சிரசில் பிரஹ்மரந்திர பர்யந்தமும் மூக்கினின்றும் பனிரெண்டங்குலமும் போவதுமான சுஷும்னையும், கீழ்நோக்கி பாயுஇந்திரியம் வரையிற் போகும் அலம்புஸாவும் உண்டாகும். திரிகோணத்தின் நுனியிலிருந்து மற்றவை யுதிக்கும். குஹு என்கிற நாடி துவஜம் வரைப்போகும். குஹுவின் இடது வலது பாகங்களில் விசுவோதரா, வாருணி என்ற இரண்டும் உண்டாகி விசுவோதரா வயிற்றிற்கும், வாருணி உடம்பு முழுதும் போகும். ஹஸ்தி ஜிஹ்வா, யசஸ்வினி என்கிற இரண்டுநாடிகளும் இரண்டு பாதங்களின் கட்டை விரல்களுக்கும், இடை, பிங்கலைகள் மூக்கு நுனிவரையிலும், காந்தாரி, பூஷா இரண்டும் கண்களிரண்டிற்கும், சங்கினி, பயஸ்வினி இரண்டும் இரண்டு காதுகளுக்கும், சரஸ்வதி நாக்கு பரியந்தமும் போவனவாகும். இப்பதினாலு நாடிகளில் முன் சொல்லிய ஒன்பதின் வழியாய் அவைகளின் விஷயங்களை யறியும் விமர்சத்தின் (அதாவது உணர்ச்சியின்) சமஷ்டியையே ஸூக்ருவோடு அபின்னமாய் பாவனைசெய்ய வேண்டுமென்பது பொருள். ஸூக்ருவின் ரூபமும் பலவிதமெனத் தந்திரங்களில் பிரதிபாதித்திருப்பதால் தேகரந்திரங்கள் ஒன்பதையும் நவநாதர்களாகிய ஸ்ரீகுரு பரம்பரைக்கு அபேதமெனக் கொள்ளவும். ஸூக்ருவின் ரூபம் திவ்யௌகம், சித்தௌகம், மானவௌகம், என மூவகையாகி, பிறகு ஒவ்வொன்றும் மும்மூன்றாகி, ஒன்பது வகையாகும். இவைகளை பிரயோக விதியில் பார்க்கலாம். சிலர் நாம் சொன்னபடி உணர்ச்சியை அபேத பாவனை செய்ய வேண்டுமென்று சொல்லாமல், சுரோத்திராதி இந்திரியங்களையும், நாடிகளையும் குருவுக்கு அபின்னமாக பாவிக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. [உப] ஸ்ரீசக்கரம் நவசக்கர ரூபமாம்.

[குறிப்பு] கடந்த உபநிஷத் வாக்கியத்தினின்றும் "தேஹம்' என்கிற வார்த்தை இங்கே தொடர்வதால் தன்னுடைய தேகத்தையே த்ரைலோக்ய மோஹனம் முதலான ஒன்பது * சக்கரங்களின் சமஷ்டி ரூபமான ஸ்ரீசக்கரத்தோடு அபின்னமாய்ப் பாவிக்க வேண்டும். உள்ளடங்கிய ஒன்பது சக்கரங்களின் பிரவு பிறகு ஆவரண தேவதைகளைக் கூறு மிடங்களில் தெளிவாகும். தேகத்திலதனதின் ஸ்தானங்கள் ரஹஸ்யமானதால் அந்தந்த சாகைகளின் வேற்றுமையை யநுசரித்துத்தான் விவரிக்கப்பட்டிருக்கும். ஆகையால்தான் நித்தி பா ஷோடசி கார்ணவம் என்கிற கிரந்தத்தில் சொல்லியிருக்கின்றன, தந்திரராஜத்திற் சொல்லப்பட

* சுவசக்கரங்களாவன்; (1) த்ரைலோக்ய மோஹன மாகிய சதுர சிரம் (2) சர்வாசாபரிபூரகமாகிய 16-தளங்கள் (3) சர்வசம்க்ஷோபணமாகிய 8-தளங்கள் (4) சர்வ சௌபாக்கிய தாயகமாகிய சதுர்தசாரம் 14-திரிகோணங்கள், (5) சர்வார்த்த சாதகம்: பஹிர்தசாரம்—வெளியிலிருக்கும் 10-திரிகோணங்கள். (6) சர்வரக்ஷாகரம்: அந்தர்தசாரம்—உள்ளிருக்கும் 10-திரிகோணங்கள் (7) சர்வரோகஹரம்—8-திரிகோணங்கள் (8) சர்வசித்திப் பிரதாயகம்—மத்தியத்திரிகோணம் (9) சர்வானந்தமயம்—பிந்து சக்கரம். இவைகளை இத்துடன் சேர்த்திருக்கும் ஸ்ரீசக்கரப்படத்தில் பார்த்துக் கொள்க. (படம் பின்வரும்)

வில்லை. இவ்விஷயத்தையே பிந்து சூத்திரத்தின் வாக்கியத்தை அனுசரித்து பத்மபாதாசாரியரால் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது: "அபர சிவனால், அதாவது, தந்திரங்களைச் சொன்ன சிவனுக்கு வேறாகிய வேதபுருஷனால் வெவ்வேறு சாகைகளாய்ச் சொல்லப்பட்டிருக்கும் ஸ்தானங்களை யறிகின்ற சக்தியுடைய குருவின் பிரசாதத்தால், யாதொன்றினுடைய பாவனையின் ரஹஸ்யம் அறியப்பட்டிருக்கின்றதோ, அப்படிக்கொத்த தேகரூபமாகிய ஸ்ரீசக்கரம் அபரோக்ஷ சாக்ஷாத்காரத்தின் உபாயங்களில் ரகசியத்தைக் குறித்து உபஹ்வரமா யிருக்கின்றது."

4. [உப] வாராஹீ(தேவதை) பிதாரூபமானவள். குருகுல்லாவளீதேவதை மாதா.

5. [உப] புருஷார்த்தங்கள் சமுத்திரங்கள்.

(குறிப்பு) தன்தேகம் இந்திரியம் புத்தி இவைகளில் எலும்பு முதலான பிதாவின் அம்சங்களை வாராஹீ தேவதைக்கு அபின்னமாகவும், மாம்சம் முதலிய தாயின் அம்சங்களை குருகுல்லாவளி யென்கிற பலிதேவதைக்கு அபின்னமாகவும் பாவிக்க வேண்டும். வாராஹீ என்கிற தேவதை ஸ்திரீரூபமான போதிலும், முகம் புருஷரூபமானதால் அதை பிதாவாக பாவிக்கக் கூடும்.*

மேற்கு முதல் வடக்குவரையுள்ள † திக்குகளிலுள்ள இஷு (கரும்புரசம்), சுரா (சாராயம்), கிருதம் (நெய்), க்ஷீரம் (பால்), இன்னான்கு சமுத்திரங்களும் முறையே தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்கிற நான்கு புருஷார்த்தங்களெனப் பாவிக்க வேண்டும்.

6. [உப] தேகம் நவரத்னத்வீபம்.

7. [உப] (அவை) துவக்கு முதலிய ஏழு தாதுக்களும் ரோமமும்.

* See footnote under ரசம்.

† மேற்கு, தெற்கு, கிழக்கு, வடக்கு.

8. [உப] ஸங்கல்பங்களே கல்பகவிருக்ஷங்கள்; தேஜஸு கல்பகத்தோட்டம்.

(குறிப்பு) துவக்கு முதல் ஏழுதாதுக்கள், (அதாவது, துவக்கைத் தனிர ஏழுதாதுக்கள்):—(ரசம்,)† மாம்சம், ரோமம், (துவக்கு சரீரத்தின் தோல்), ரக்தம், சுக்கிலம், மஜ்ஜை, அஸ்தி, மேதஸ் * இவை முறையே புஷ்பராகம், நீலம், வைடூர்யம், பவழம், முத்து, மரகதம், வஜ்ரம் கோமேதகம், பத்மராகம் முதலிய நவரத்தினமயமாகிய கண்டங்கள்; மேற்கு முதல் நிருருதி (தென்மேற்கு) வரையுள்ள திக்குகளிலுள்ளனவாக பாவிக்க வேண்டும். [பத்மராகத்தை ரஸத்துக்கு ஒப்பிட்டு மத்தியஸ்தானமான அபிமானி ஸ்தலத்தில் வைத்துப்பார்க்கவும். வி-சி. ப-ர்.]

நவதாதுக்களும் காலசக்ரேசுவரீ முதலிய தேவதைகளுக்கு அபேதமெனச் சொல்லும்

† ரசம் அல்லது ஒஜஸ் என்பது ஸப்தாதாதுக்களின் சாரமாகிய ஓர்தாது. அது தேகத்திற்கு பலத்தையும் புஷ்டியையும் கொடுப்பதென்றும், வெண்ணிறமானதென்றும், கபருபமானதென்றும், சரீரத்திலெங்கும் வியாபித்திருப்பதென்றும் வைத்திய சாஸ்திரங்கள் சொல்லும்.

* துவக்கு, ரத்தம், மாம்சம், மேதஸ் அஸ்தி என்கிற இவ்வைந்து தாதுக்களும் சக்தியம்சமென்றும், மஜ்ஜை, சுக்லம், பிராணன், ஜீவன் (அதாவது ஓஜஸ்) இவைகள் சிவாம்சமென்றும், பிண்டாண்டத்தைப் போல பிரஹ்மாண்டத்திலும் பஞ்சபூதங்கள் சக்தி யம்சமென்றும், மாயை, சுத்தவித்யை, மஹேசன், சதாசிவன் என்கிற நாலு தத்துவங்களும் சிவனுடைய அம்சமென்றும், இவ்வொன்பது தத்துவங்களில் சகல தத்துவங்களு மடங்குமென்றும், ஆகவே சகல ஜகத்தும் சிவசக்தி ஸ்வரூபமென்றும் சொல்லும் காமிகாகம வாக்கியத்தை லக்ஷ்மீதாரர் லௌகரியலஹரீ வியாக்கியானத்தில் மேற்கோளாக எடுத்துக்காட்டி யிருக்கிறார்.

* [இங்கே துவக்கைச் சேர்த்தும் எடுத்தான் கணக்காகிறது. இவற்றின் சஷ்டிமடி ரஸமான 'பிந்து' வையும் சேர்த்துக் கொண்டால் 9-ஆகும். ஔவை குறள் பார்க்கவும். ஔவையார் ரோமத்தைத்தள்ளி ஏழுதாதுக்கள் சொல்லியிருக்கிறார். பிந்து, ஓஜஸ், ஜீவன் இம்மூன்றும் ஒரு அர்த்தத்தில் உபயோகித்திருப்பதாகக் கொள்ளல்தகும். வி-சி. ப-ர்.]

வேறுசாகையில் பிரதிபாதிக்கப்படும் பாவனையையும் கிரஹித்துக் கொள்ளவேண்டியதே. அதன் பிரகாரத்தை பிரயோகவிதியில் பார்க்கவும்.

மனதிலுண்டாகும் சங்கல்ப விசேஷங்களே சந்தானம், ஹரிசந்தானம், மந்தாரம், பாரிஜாதம் என்ற கல்பக விருக்ஷங்களாக பாவிக்க வேண்டும். இச்சங்கல்பங்களுக்கு ஆதாரமாகியு தேஜஸ் எனப்படும் மனமே கல்பகத்தோட்டம். "மனமே ஜ்யோதி" (தைத்திரிய சம்ஹிதை 1-5-3) எனச் சுருதி உரை சொல்வதால் இங்கே தேஜஸ் என்பது சங்கல்ப விகல்பாத்மகமான மனதைக்குறிக்கும்.

மனோசங்கல்பமுதயமானபிறகுதான் ஓர் தொழிலில் பிரவிர்த்தி ஏற்பட்டு நினைத்த காரியத்தைச் சித்தித்துக் கொள்வதால் சங்கல்பங்களை கல்பகவிருக்ஷங்களாக பாவனை செய்யும்படிச் சொல்லப்பட்டது.

ஸளிதோபாக்யானம் முதலிய கிரந்தங்களில் காணப்படும் ஸ்ரீநகரத்தின் வர்ணனைக்கிணங்க இங்கு பாவனை சொல்லப் பட்டிருக்கின்றது. ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளும் சௌந்தரிய லஹரியில் பின்வருமாறு வர்ணித்திருக்கின்றார்.

"ஆழு தின்கடல் வேலி செழுந்தரு
வாய்மணி பம்பிய தீவுடே
பாரக டம்படர் கானி லருங்கொடை
பாய்மணி மண்டப வீடுடே
கோரசி வன்பர மேசனுன் மஞ்சமொர்
கூர்பரி யங்கமெ னுமலே
சேட ரும்பர ஞான முறுங்களி
தேவர ருந்துவர் பூமாதே."

9. [உப] ரஸனையால் (ஜிஹ்வேந்திரியத்தால், நாக்கினால்) அனுபவிக்கப்படும் மதுரம் (தித்திப்பு), ஆம்லம் (புளிப்பு), திக்தம் (கசப்பு), கடு (உரைப்பு), கஷாயம் (துவர்ப்பு), லவணம் (உப்பு) என்கிற (ஆறு) ரசங்கள் ஆறு ருதுக்களாம்.

(குறிப்பு):—ஷட்ருதுக்களும் ஸ்ரீநகரத்தின் பிராகாரங்களிற் சேர்ந்தனவாய் வர்ணிக்கப்பட்டிருப்பதால் அவைகளின் பாவனை இங்கு சொல்லப் பட்டிருக்கின்றது. ஷட் ருதுக்களாவன, வஸந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம் என்பன.

"அநுபவிக்கப்படும் ரசங்கள்" என்று கூறுவதால் அவ்வாறு அநுபவிக்கும் காலத்திலே தான் பாவனைசெய்ய வேண்டும். இல்லாவிடின் கேவல ரஸங்கள் தேகத்தையன்றி வேறுவஸ்துக்களிலிருப்பதாலும், பாவனையோ பிரத்தியக்குவிருத்தி அப்பியாச ரூபமானதாலும், மனதினால் மற்ற வஸ்துக்களிலுள்ள ரசத்தை நிரோதம் செய்தல் கூடாமையாலும் வேறுவிதம் பொருள்கொள்ளில் மனதிற்கு பராக் (பஹிர்முக) விருத்தி யேற்படுமேயன்றி பாவனை யேற்படாது. இவ்விதமே மற்ற ரசங்களுக்கும் பொருள் சொல்லல்வேண்டும் தந்திர ராஜத்தில் "ஸ்வாதாரங்கள் ருதுக்கள்" என்று வாக்கியமிருக்கின்றது. சிலர் இதற்குப் பின்வருமாறு உரைசெய்கின்றார்கள்:—"ஸ்வாதாரம்" என்கிறபதம் டாகினி முதலான ஆறு யோகினிகளுக்கு ஆதாரமாகிய ஆறு ஆதார சக்கரங்களைக் குறிக்குமென்றும், சுஷும்ணா நாடியானது இடைபிங்கலையென்கிற சந்திர சூர்யரூபமான நாடிகளின் சேர்க்கையில் அனுயானிக்கப்பட்ட (ஊகிக்கப்பட்ட) காலஸ்வரூபமானதால், அச்சுஷும்ணையில் இருக்கும் ஆறுதாரங்களையும் ஆறு ருதுக்களாக பாவனைசெய்வது நியாயமென்றும்சொல்லுகிறார்கள். ஆனால் நாம் சொல்லியபாவனையே சுருதியனுபவ மிரண்டிற்கும் ஒத்திருப்பதால் சரியாகும். இங்கு ஓர் சங்கையுண்டாகலாம். "அனுபவிக்கப்படும்" என்று நிகழ்காலம் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் உபாசனாகாலத்திலோ ஷட்ரஸங்களின் அனுபவம் இருக்காதேயெனில், அக்காலத்தில் அவ்வனுபவத்தின் ஸம்ஸ்காரங்கள் உளவாதலால்

அச்சம்ஸ்காரங்களோடு ஷட்ருதுக்களையும் அபேதமாகக் கொள்ளலாம். "ஸ்வாதாரம்" என்பதில் "ஸ்வ" என்கிறது ஆத்மா. அவ்வாத்மா எவைகளுக்கு ஆதாரமோ அந்த ஷட் ரசங்களின் அனுபவத்தால் உண்டாகிய ஸம்ஸ்காரங்கள் என "ஸ்வாதாரம்" என்ற பதத்திற்குப் பொருளாகும். மேலும் டாகினீ முதலிய சக்திகள் அந்த வாசிய பரியந்தம் சொல்லப்படாததால் "ஸ்வ" என்பதற்கு டாகினீ முதலிய சக்திகள் என்று பொருட்படுத்தக் கூடாது. வைத்திய சாஸ்திரங்களில் ருதுக்களின் பேதப்படி ரசங்களையும் விபவஸ்தை செய்திருப்பதால் நாம் சொல்லிய அர்த்தமே பொருத்தமாகும்.

இப்பாவனைக்குள் ஸ்ரீநகரத்தில் வர்ணிக்கப்படும் யானைகள், குதிரைகள், வெளிமண்டபங்கள் இவைகளின் பாவனைகளும் அடங்கிவிடும்.

10. [உப] ஞானமே அர்க்கியம்; ஞேயம் (அறியப்படும் பொருள்கள்) ஹவிசு (ஹோமம் செய்யப்பட்ட பொருள்); ஞாதா (அறிகின்றவன்) ஹோதா (ஹோமம் செய்பவனுவன்); ஞாதுரு—ஞான—ஞேயங்களின் அபேத பாவனையே ஸ்ரீசக்ரத்தின் பூஜை.

(குறிப்பு) ஞானமென்பது கடபடாதிகளை யறியும் பரிச்சின்னமான அறிவு. அர்க்கியம் என்பது பூஜா சாதனங்களைக் குறிக்கும். ஞேயம் என்பது பாஹிய விஷயங்களைக் குறிக்கும். இது இதுவென்று தோற்றுவனவெல்லாம் ஹவிஸு என்று சுருதி சொல்லும். அவைகள் உபாஸ்ய தேவதைக்கு நைவேத்திய மென்பது கருத்து. சிக்ரூபியாகிய பூஜிக்கப்படும் தேவதையோ பிரசித்தமானதால் இங்கு சொல்லவில்லை. "நான் என்கிற அஹந்தைக்கு விஷயமாகிய ஆத்மாவே பூஜிப்பவன். ஸ்வாத்மசைதன்னியத்தினின்றும் வேறாகத் தோற்றும், ஞாதுரு-ஞான-ஞேயங்களுக்கு வேற்றுமையுண்டு பண்ணும் நாம ரூபங்களை அனுசந்தானம் செய்யாமல் அவைகளைச் சின்மாத்திர ரூபமாய் பாவித்தல் இங்கு விதிக்கப்பட்டிருக்கின்றது. பூலோகத்தில் நைவேத்தியத்தின் பேரில் தெளிக்கும் விசேஷார்க்கியஜலம், நைவேத்தியம், பூஜகன், இவை மூன்றையும் தேவதைக்கு சமர்ப்பிப்பதான சம்பந்தமே பூஜை. அவ்வாறே இங்கும் ஞாதுரு ஞானம், ஞேயம் மூன்றிற்கும் சித்துடன் தாதாத்மிய சம்பந்தம் சொல்லப்படும். ஆகிலும் உபநிஷத்தில் சொல்லி யிருப்பது அத்தாதாத்மியம் அனுபவத்தில் சித்திப்பதற்கு அனுகூலமான பாவனையையே பூஜையெனச் சொல்லப் பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்.)

பாவநோபநிஷத் பிரயோகவிதி.

முன்பு மூலமந்திரத்தால் பிராணாயாமம் செய்து, ரிஷியாதி நியாசம்செய்து விவேக விருத்தியில் அவச்சின்னமாகிய சித்சக்தி ரூபமாகிய சுஷும்னை ஸ்வரூபமான ஸ்ரீ குருவுக்கு நமஸ்காரமென்று பிரஹ்ம ரந்திரத்தை தொட்டபின் பாவனையை யாரம்பம் செய்யவும்.

1. வலது சுரோத்திர (செவி) ரூபமான பயஸ்வினீநாடி யாத்மகமாகிய பிரகாசாநந்த ருக்கு நம:
2. இடது சுரோத்திர ரூபமான சங்கினீயாத்மகமான விமர்சானந்த நாதருக்கு நம:
3. ஜிஹ்வை (உருசி) ரூபமான சரஸ்வதியாத்மகமான ஆனந்தானந்த நாதருக்கு நம:
4. வலது நேத்திர ரூபமான பூஷாத்மகமான ஞானானந்த நாதருக்கு நம:
5. இடதுநேத்திர ரூபமான காந்தாரியாத்மகமான சத்தியானந்த நாதருக்கு நம:

6. துவஜ ரூபமான குஹ்யாத்மகமான
பூர்ணானந்த நாதருக்கு நம:

7. வலதுநாசி ரூபமான பிங்களாத்மகமான
ஸ்வபாவானந்தநாதருக்கு நம:

8. இடதுநாசி ரூபமான இடாத்மகமான
பிரதிபானந்த நாதருக்கு நம:

9. பாயுரூபமான அலம்புஷாத்மகமாகிய
சுபகானந்த நாதருக்கு நம: என்று

அந்தந்த ஸ்தானங்களைத் தொடவேண்டும்.

நவசக்கர ரூபமாகிய ஸ்ரீசக்ராத்மகமான தேகத்திற்கு நம:

பிந்துரூபமான அஸ்திமுதலிய அவயவங்கள் வராஹீ*

மாதா ரூபமான மாம்சம் முதலிய அவயவங்கள் குருகுல்லாவளி யென்ற பலிதேவதை.

இவ்விதம் நமஸ்கரித்து மூன்றுதடவை வியாபகம் செய்யவும்.

தேகத்தின் பின்பாக ரூபமான தர்மம் இக்ஷு சாகரம்.

தேகத்தின் தென் (வலது) பாகரூபமான அர்த்தம் சுரா (கள்ளு) சாகரம்.

தேகத்தின் முன்பாக ரூபமான காமம் கிருத (நெய்) சாகரம்.

தேகத்தின் வடக்கு (இடது) பாகரூபமான மோக்ஷம் க்ஷீர சாகரம்—

என்றிவ்விடங்களைத் தொடவும்.

தேக ரூபமானது	நவரத்ன த்வீபம்.
மாம்ஸம்	புஷ்பராக ரத்னம்
ரோமம்	நீல ரத்னம்
துவக்கு	வைடூர்ய ரத்னம்
ரத்தம்	பவழ ரத்னம்.
மஜ்ஜை	மரகத ரத்னம்.
அஸ்தி	வஜ்ஜிர ரத்னம்.
சுக்லம்	முத்து ரத்னம்.
மேதஸ்	கோமேதக ரத்னம்.
ஓஜஸ்	பத்மராக ரத்னம்.
மாம்ஸத்தின்	அதிதேவதை கால சக்ரேசுவரீ.
ரோமத்தின்	,, முத்திரா சக்ரேசுவரீ.
துவக்கின்	,, மாதிருகா * சக்ரேசுவரீ.
ரக்தத்தின்	,, ரத்ன சக்ரேசுவரீ.
மஜ்ஜையின்	,, குரு சக்ரேசுவரீ.
அஸ்தியின்	,, தத்துவ சக்ரேசுவரீ.
சுக்லத்தின்	,, தேச சக்ரேசுவரீ.
மேதஸின்	,, கிரஹ சக்ரேசுவரீ.
ஓஜஸின்	,, மூர்த்தி சக்ரேசுவரீ.

தேஜஸ் (சங்கல்ப விகல்ப ரூபமனம்.) கல்ப கோத்தியானம் (கல்பகத்தோட்டம்).

மதுர ரசம்	(திதிப்பு)	வஸந்த ருது.
ஆம்ல ,,	(புளிப்பு)	கிரீஷ்ம ,,
திக்த ,,	(கசப்பு)	வர்ஷ ,,
கடு ,,	(உரைப்பு)	சரத் ,,
கஷாய ,,	(துவர்ப்பு)	ஹேமந்த ,,
லவண ,,	(உவர்ப்பு)	சிசிர ,,

இந்திரியங்கள்	குதிரைகள்.
இந்திரியங்களின் விஷயங்கள்	யானைகள்.
கருணை	நீர்நிறைந்த பரிதை.

(அதாவது சுற்றுமுள்ள நீர்ப்பாத்தி).

ஓஜஸின் கூட்டம்	மாணிக்கமண்டபம்.
ஞானம்	விசேஷார்க்யம்.
ஞேயம்	ஹவிஸ்.
ஞாதா	ஸ்வாத்மா.
சித்	ஸ்ரீமஹாதிரிபுரசுந்தரி.

இவ்வாறு அநுசந்தானம் செய்து மனதால் நமஸ்காரம் செய்யவும்.

* "மாதிருகை" யென்பது 51 அக்ஷரங்களைக் குறிக்கும்.

* இதற்குமேல் நாம நமஸ்காரத்தைச்சேர்த்து எழுதவில்லை. ஒவ்வொரு பாவனையின் பின்னரும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த பிரயோகவிதி பாவனோபநிஷத்திற் சொல்லிய பாவனைகளை எளிதிலப்பியசிக்குமாறு பாஸ்கராராயரால் செய்யப்பட்டது. இது இதுகாறும் அச்சாகி வெளியாகவில்லை. கை யெழுத்துப் பிரதிகளினின்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

ஞாதுரு-ஞான-ஞேயங்களின் நாமரூபாம்சங்களின் லயாநுசந்தானத்தாலும் அவைகளை சின்மாத்திர ரூபமாய் பாவித்தலாலும் ஓர் க்ஷணம் இளைப்பாறி, பிறகு பதினைந்து திதிநித்தியா தேவதைகளை பஜனம் செய்யவும்.

இப்பதினைந்து நித்தியா தேவதைகளுக்கும் ஓர் நாளில் நடக்கும் 21,600 சுவாசங்களைப் பங்கிட்டு ஒரோர் தேவதையையும் 1440-சுவாசத்திற்கு அபின்னமாய் பாவனை செய்யவேண்டும்.

திதியின்பேர்	தேவதையின்பேர்	
(1) பிரதிபத்	காமேசுவரீ நித்யாதேவதை.	
(2) த்விதீயை	பகமாலினீ நித்யாதேவதை.	
(3) த்ரிதீயை	நித்தியக்லின்னு	,,
(4) சதுர்த்தீ	பேருண்டா	,,
(5) பஞ்சமீ	வஹ்நிவாஸினீ	,,
(6) ஷஷ்டி	மஹாவித்யேசுவரீ	,,
(7) சப்தமீ	சிவதூதி	,,
(8) அஷ்டமீ	துவரிதா	,,
(9) நவமீ	குலசுந்தரீ	,,
(10) தசமீ	நித்யா	,,
(11) ஏகாதசீ	நீலபதாகா	,,
(12) துவாதசீ	விஜயா	,,
(13) திரயோதசீ	சர்வமங்களா	,,
(14) சதுர்தசீ	ஜ்வாலாமாலினீ	,,
(15) பௌர்ணமீ	சித்ரா	,,

சிலர் இப்பாவனைகளுடன் அந்தந்த தேவதையின் மந்திரங்களைச் சேர்ப்பது முண்டு.

(இன்னும் வரும்)

மு. கோ. நாராயணஸ்வாமி அய்யர்.
ஆர். லிச்வேச்வர சாஸ்திரி உபாத்யாய:

—:-o-:—

Easy Lessons in Economics.

குடிவாழ்க்கை.

VI-பாடம். 1-பாகம்.

வேலையின்பயன் மாறுபடுதல்.

தேசபேதங்களினாலும், தொழில் செய்வோருடைய குணவித்தியாசங்களினாலும், அவர்களுடைய வேலையின் அளவின் வேறுபாடுகளினாலும், தேசத்திற்கு தேசம் திரவிய விஷயத்திலுள்ள ஆசை வித்தியாசப் படுவதாலும், தொழிலிற்கு வேண்டிய ஒருமைப்பாடும், முதலும் எல்லா தேசங்களிலும் ஒரேவிதமாயில்லாததினாலும், இவைபோன்ற மற்றகாரணங்களினாலும் வேலையின் பயனிலுண்டாகும் ஏற்றத் தாழ்வுகளை கவனிப்போம்.

தேசபேதம்.—வேலையினாலுண்டாகும் திரவியப் பெருக்கம் எங்கும் ஒரே அளவுடையதன்று. உழவுக்கு பூமி எங்கும் ஒரே தன்மையானதல்ல. நீர்வளமும் நிலவளமும் இடத்திற்கிடம் வேறுபடுகின்றது. சில நிலங்களுக்கு எருவும் தழையுமின்றி பயிர்விளையாது. சில நிலங்களுக்கு அவை அவ்வளவு அவசியமாயில்லை. சில தேசங்களில் பயிர்த் தொழிலுக்கும் மற்ற கைத்தொழிலுக்கும் வேண்டிய உலோகங்களும் மற்ற பல சாதனங்களும் ஏராளமாய் அதிகபணச் செலவின்றி கிடைக்கும். மற்ற சில விடங்களில் அவைகளை வெட்டியெடுத்துக் கைப்பற்றுவது கஷ்டமானதாயிருக்கும். இவைகள் சற்றும் கிடைக்காதவிடங்களுமுண்டு. பலதேசங்களில் நதிகளும் கடலின் கழிமுகங்களும் ஜனங்களுடைய சஞ்சாரத்திற்கும் செயற்கைப் பொருள்களை அந்நிய விடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இயற்கையாகவே அமைந்த பாதைகளாய் உதவுகின்றன. இவ்விதவுதவி அற்பமுமில்லாத தேசங்

கள் அநேகம். மிருகங்களினுடைய கஷ்டமின்றி தொழில்களை நடத்தக்கூடிய இடங்களும், அவைகளினுடைய கஷ்டமே எப்பொழுது முள்ள வேறிடங்களும் நாமறியாததன்று. இருப்புப்பாதைகள் அமையப்பெற்ற நாடுகளில் போக்குவரத்து சௌகரியமும், அவையில்லாவிடங்களில் போக்குவரத்திலுள்ள கஷ்டமும் நாம் பிரத்தியக்ஷமாக வறிந்ததேயாகும். இவ்விதமாக இயற்கையாகவே அற்பவேலைப் பாட்டினால் மனிதன் ஜீவிக்கும்படியான நாடுகளும், அல்லும் பகலும் கஷ்டப்பட்டு வேலை செய்தாலொழிய வயிறுறஉண்ணத்தகுந்த உணவுக்குச் சரியான வழிகாட்டாத வேறுசில நாடுகளும் இவ்வுலகத்தி லிருக்கின்றமையால், இயற்கை யமைப்பும் பொருள்களும் எங்கும் ஒரே தரத்ததென்று கூறமுடியவில்லை. இவ்விதமாக இயற்கையாக வமைந்த ஏற்றத்தாழ்வுகளிருப்பது வாஸ்தவமே யாயினும், அக்காரணத்தைக் கொண்டே அந்தந்த தேசத்தின் செல்வப் பெருக்கை மதிப்பிடலாமென்று எண்ணக்கூடாது.

பூமியும் இயற்கைப் பொருள்களும் எத்தேசத்தில் மனிதனுடைய சுகத்திற்குப் பொருந்த வில்லையோ அவ்விடங்களிலுள்ள மனிதர்களும் அவர்களுக்கு உபயோகப்படுகிற மிருக ஜாதிகளும் தேகவலிமையிலும் மனோதைரியத்திலும் சிறந்தவர்களாயும் மேலான வைகளாயும் மதிக்கப்படுகிறது. பூமி மனிதர்களுடைய சிரமத்தை விசேஷமாய்க் கோராமல் அவனுக்கு வேண்டியவற்றை யளிக்குமாயின், அவன் தொழில் செய்வதில் பழக்கமும் வழக்கமுமற்று எப்பொழுதும் சுகத்தை நாடி, இயற்கையாய் அமையாத பலவிதப் பொருள்களைத் தேடியனுபவிக்க முயற்சி யற்றவர்களாய், எக்காலத்திலும் சோம்பேறிகளாய் மிருகங்களைப் போல் உண்டுறங்கி காலத்தை கழிப்பவராவார்கள்.

இந்தியாவில் வெருசாய் பயிரிடுதல் கடினமானதன்று, உயர்ந்த விலைபெற்ற வஸ்திரங்களும், வாசஞ்செய்ய அதிக பணச்செலவாலாகிய கட்டடங்களும் விசேஷமாகவில்லாமலே காலங்கழிக்கலாம். ஐரோப்பாவில் உயிர் ஜீவித்திருக்க உணவு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு உடுப்பும் இருப்பிடமும் முக்கியமாகும். குளிர் காலத்தில் தகுந்த உடுப்பும் இருப்பு மில்லையாயின் மரணம் நிச்சயம். நமது தேசத்திலோ சாண்வயிற்றை நிரப்பப் பிடிசோறும் மானத்தைக் காப்பாற்ற முழத்துணியும் போதுமென்று சொல்வது வழக்கம். இங்கிலாந்து, பிரான்ஸ்முதலிய நாடுகளில் குளிரின் மிகுதியினால் உணவு அதிக சத்துள்ளதாயும் ஏராளமாயும் வேண்டி யிருப்பதன்றி, விலையேறப் பெற்ற ஆடையும் இருப்பிடமும், பனியால் உபாதி நேராதிருக்க கணப்பு நெருப்பும் ஜீவனத்திற்கு இன்றியமையாத சாதனங்களாகும். தவிர உழுது பயிர் செய்தல் இந்தியாவைப்போல் எளிதான காரியமல்ல. தண்ணீரைப் பாய்ச்சி மண்ணைப்புறட்டி விதையைத் தெளிப்பதினால் மாத்திரம் பயனுண்டாகாது. எருவின் வல்லமையினாலும் செய்கை வன்மையினாலுமே நிலமானது பயனை யளிக்கும்.

VI பாடம். 2. பாகம்.

வேலையின் அளவு.

தேச இயற்கை வேறுபாடுகளினால் இந்துக்களாகிய நாம் அற்பசந்தோஷ முள்ளவர்களாய் நீடித்துநின்று பெரும் காரியங்களை கைக்கொண்டு முடிக்கும் திறமையற்றவர்களாயும், தொழில்களிற் தகுந்த பயிற்சி இல்லாதவர்களாயும் சீர்திருத்த முறையை யறியாதவர்களாயும் ஒவ்வொரு விஷயத்திலும் குறைவடைந்தவர்களாயிருக்க, ஐரோப்பியர்களோ சரீரவல்லமையிலும் மனோதைரியத்திலும் சிறந்தர்வளாய்

எவ்வித இடையூறுகளையும் நீக்கிக்கொள்ள சக்தி வாய்ந்தவர்களாய் அறிவில் மிக்கோர்களாயுமிருக்கின்றனர். ஆகையால் திராவிடவிருத்திக்கு அந்தந்த தேசத்திலுள்ள இயற்கையமைப்பாயுள்ள உதவிகளின் ஏற்றத்தாழ்வுகளன்றி மனிதனுடைய செயலாலமைந்த ஏற்றக் குறைவுகள் விசேஷமாயுண்டென்பது விசிதமாகிறது. பவுத்தமதத்தை யனுசரிக்கிற திபெத் (Tibet) போன்ற நாடுகளில் பவுத்த சந்நியாசிகளுக்கு எளிதில் ஜீவனம் நடப்பது மல்லாமல் மரியாதையும் விசேஷமாயிருக்கிற படியால், வேலை செய்ய மனமில்லாதவர் களெல்லோரும் பவுத்த மதப் பிரசங்கிகளாய் மாறுவதால் வேலை செய்வோர் குறைந்து செல்வப் பெருக்கத்திற்கு வேண்டிய தொழில்களை நடத்த மனிதரின்றி ஜனங்கள் ஹீனஸ்திதியில் வருந்துவதுண்டு. அங்கிருக்கிற செல்வக் குறைவிற்கு ஆஸ்பதமான தொழிலாளிகள் பெருகி, மற்ற தொழிலாளிகள் குறைவாராயின் தேசச் செல்வம் குன்று மென்பதில் தடையில்லை.

உற்சவம், நோன்பு, பண்டிகை என்ற பல காரணங்களினாலும் வேலைசெய்யும் காலமும் குறையலாம். தினமொன்றுக்கு எவ்வளவு காலம் வேலைசெய்யலாகுமோ அவ்வளவு நேரம் வேலை செய்யாமல் வேலைக்காரன் வீண் பொழுது போக்கி செல்வ விருத்திக்கு தடை செய்பவும் கூடும். ஒவ்வொரு வேலைக்காரனும் இத்தனை வயதான பின்புதான் வேலைசெய்யத் தொடங்க வேண்டியது, இவ்வளவு வயதானதும் வேலையை ஒழிக்க வேண்டியது, என்பவை போன்ற கட்டுப் பாட்டினால் வேலை செய்யும் காலம் குன்றலாம். இவைபோன்ற காரணங்களினால் வேலையினளவு குறைந்து செல்வம் பெருகாமல் கீழ் நோக்கலாம்.

நம்முடைய தேசத்தில் தொழிலாளிகள் பல உற்சவங்களின் பொருட்டும் நோன்புகளின் பொருட்டும் வேலையை அடிக்கடி நிறுத்தி விடுகின்றன ரென்பது அறியாத தன்றே. முதலெடுப்பிலேயே வேலையைத் தொடங்க நல்ல நாள் கிடைக்க வேண்டுமென்று பல நாள் கார்க்கிறார்கள். வீடு, கொட்டகை கட்டுகிறவனும் வண்டி செய்கிறவனும் கல், மரம் முதலிய சாமான்களுக்கு நல்ல நாள் பார்த்தே அச்சாரம் கொடுக்கின்றான். அச்சாமான்களும் நல்ல நேரத்திலேயே வேலைசெய்யு மிடத்திற்கு வர வேண்டும். முகூர்த்தக்கால் போடுவதற்கும் ஜோதிஷர் அநுமதிவேண்டும். நிலைநாட்டவும் உத்திரம் போடவும், சக்கரத்திற்கு பட்டா போடவும் சக்கரத்தை வண்டியில் பூட்டவும் சுபமுகூர்த்தமின்றி காரியம் நடவாது. இவ்விதமாகக் காலம் வீணாவதுமன்றி, பிரதமை யென்றும் அமாவாசை யென்றும், சனிக்கிழமை யென்றும், விரதநாளென்றும் வேலை நிறுத்துவது வழக்கந்தானே. அவைகளால் வேலையின் அளவு குறையுமன்றோ.

T. C. வேங்கடரமணய்யர்.

LALITAMBAL.

லலிதாம்பாள் சரித்திரம்.

II.

"பார்வதி! குழந்தை பத்திரம்!"

"அடியே! குழந்தை குப்புவைக் கொண்டுவா! நான் அவளைப்பார்க்க வேணடும். சீக்கிரம் வா!"

"அம்மா பார்வதி! அப்பா கூப்பிடுகிறார். குழந்தை குப்புவை யெடுத்துக் கொண்டு ஓடிவா!"

"இதோ வந்து விட்டேன்!"

இந்த வாக்கியங்கள் ஒன்றின் பின் ஒன்றாகப் பிறந்தன. பரை, பச்யந்தி, மத்யமை யென்னும் வாக்குகள் ஒன்றிலிருந்து ஒன்று பிறந்ததுபோல் இவ்வாக்கும் ஒன்றிலிருந்தொன்று பிறந்தென்னலாம்.

முதல் வாக்கு அத்தியாவஸ்தை யிலிருந்த கிருஷ்ண ஸ்வாமி ஐயருடைய வாக்கு ஸ்தானத்தில் பிறந்து அவரது நேத்திரங்களாலும் சைகை களாலும் வெளி யிடப்பட்டது, அவருடைய ஸ்திதியை யறிந்து அவ ரிடத்திலே கண்ணுங்கருத்து மாயிருந்த அவருடைய தர்மபத்நி அவர் குறிப்பறிந்து அவருடைய கருத் தைப் பக்கத்துக் கூடத்திலிருந்த அவர்களுடைய மூத்த பெண்ணுக்குத் தெரிவித்தாள்.

அவளும் வாய்திறந்து மூடுமுன் குழந்தை குப் புவை வாரியெடுத்துக் கொண்டு தாயாரிடம் ஓடிவந் தாள்.

பார்வதி குழந்தையும் கையுமாக வந்து நிற்கவும், கிருஷ்ணஸ்வாமி ஐயர் தம் கையை நீட்டிக் குழந் தையை வாங்கி மாரில் வைத்துக்கொண்டு அதை யுடம்பெல்லாம் தடவிக் கொடுத்து மாரோடணைத்துக் கட்டிக்கொண்டு உச்சி முகர்ந்து உவகையூக்கத் தம் இருகண்களாலும் ஆநந்தபாஷ்பம் விட்டார். அப் பொழுது அவருடைய முகம் சூரியனைக்கண்ட தாமரை போல் மலர்ந்தது. முகத்தில் விசேஷமான களையொன்று தோன்றி கண்களின் வழியாய் பிர காசித்தது. அவருடைய பத்நியார் தம் பர்த்தா முகத்திலுண்டான களையையும் கண்ணில் தோன் றிய ஒளியையும் பார்த்து சந்தோஷப்பட்டு, "இது ஒடுங்கின பிராணன் திரும்புங் குறியாக விருக் கிறது! தேவீ எனக்கு மாங்கல்ய பிச்சையளிக்க வேண்டுமென்று உள்ளமுருக அவள் ஹிருதயத்தில் பிரார்த்தித்து நின்றாள். அவர்கள் மூத்த பெண் பார்வதியும் பக்கத்தில் தானே நிற்கிறாள். அவளுக் குப் பின்னால் அழகுகண்ணும் சிந்தியமூக்குமாய் அவள் தங்கை வாலாம்பாள் நிற்கிறாள், அவள்தான் குழந்தை குப்புவின் தாயார். காட்டுவிண்ணூர் கோவில் வாமதேவ சாஸ்திரியின் தர்ம பத்நி. அவளுக்கும் பின்னால் அவள் தங்கை "குஞ்சு"நிற்கிறாள். கிருஷ் ணஸ்வாமிஐயர் தலைப்பக்கத்தில் அவருடைய மூன்று குமாரர்களும் வரிசையாய் ஒருவர்பின் ஒருவராக நிற் கிறார்கள்.

எல்லாரும் திறந்த கண் மூடாமல் கிருஷ்ண ஸ்வாமி ஐயர்மேல் வைத்த கண் வைத்தபடி நிற்கிறார் கள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர், குழந்தையை உச்சிமுகர் ந்து உடம்பெல்லாம் தடவிக் கொடுத்து உளமகிழ்ந்த வாய்ச் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார். அந்த உள்ளே எல்லாம் நிச்சப்த மாயிருந்தது. ஊசி விழுந் தால் கேட்கும் போல் இருந்தது. கிருஷ்ணஸ்வாமி ஐயர் குழந்தையை மாரில் வைத்துக்கொண்டேதானே கண்ணை மூடிக்கொண்டு கடவுளைத் தியானம் செய் தார். எல்லாரும் சுப்பாக்கு வைத்ததுபோல் அசை வற்று நின்றார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயர் உதடு அசைந்தது. மெதுவாக அவரது கண்டஸ்வரம் த்வனிக்க லாயிற்று. எல்லாரும் உற்றுக் கேட்டார் கள் :—

"குசாம்சித விபம்சிகாம் குடிலகுந்தலா லங்கிருதாம்
குசேசய நிவாஸிநீம் குடிலசித்தவித்வேஷிணீம்||
மதாருண விலோகாம் மநஸிஜாரிஸம்மோஹிநீம்
மதங்க முநிகந்யகாம் மதுரபாஷிணீம்ஆச்ரயே||"

என்று தேவியை வாயால் ஸ்தோத்திரம் செய்தார்.

"ஸ்குங்கும விலேபநாமளிகசும்பிகஸ்தூரிகாம்
ஸமந்தஹஸிதேக்ஷணாம் ஸசரசாப பாசாங்குசாம்||
அசேஷஜநமோஹிநீம் அருணமால்யபூஷாம்பரா
ஜபாகுஸுமபாஸுராம் ஜபவிதௌ ஸ்மராம்யம்பிகாம்||"

என்று இன்னொரு ஸ்லோகம் சொல்லக் கேட் டார்கள். பிறகு மூச்சு அடங்கி விட்டது. ஆனால் முகத்தின்ஒளி மாறவில்லை. குழந்தையைப் பிடித் துக் கொண்டிருந்த கை மடுவவில்லை. எல்லாரும் திகைத்துப்போய் நின்றார்கள். ஆனால் ஒருவரும் ஆரவாரம் செய்யத் துணியவில்லை. ஏனெனில், அவர் தியானசமாதியிலிருந்ததால் அதைக்கலைப்பது மஹாபாபமென்று அவர்கள் எல்லாருக்கும் தெரி யும். இப்படி ஐந்து நிமிஷம் கழிந்தது. பத்து நிமி ஷம் கழிந்தது. அவரையே கண் கொட்டாது பார் த்துக் கொண்டிருந்த அவர் பத்நியார் சித்திரப் பது மைபோல் நின்றவள் நின்றபடி மூர்ச்சித்து நின்று விட்டாள். பக்கத்தில் நின்று கொண்டிருந்த பார் வதி, தாயார் கைசோர்வதைக் கண்டு அம்மாள் முகத் தைப் பார்த்தாள். திறந்தகண் மூடி விட்டது. "ஓஹோ! பகவானே! இதென்ன புதுமை." என்று உள்ளத்தில் உன்னி தன் தாயார் கால் சோர்ந்து விழுந்துவிடாதபடி அவளைத் தாங்கிக்கொள்ளத் தயாராய் நின்றாள்.

"பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை" யென்றால் அந்த அம்மாளுக்குத்தான் பொருந்தும். கணவன் எங் ளென்று வாய்திறக்கு முன் எண்ணெயாக நிற்பாள். அப்படி யென்றால் என்ன? அவர் ஸ்தூலமான வார் த்தைகளால் தன் உள்ளக்குறிப்பை வெளியிடுமுன் அந்த அம்மாள் அவர் குறிப்பறிந்து பணிவிடை செய் வாள். "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" யாதலால், புருஷன் வாய்திறந்து சொல்லுமட்டும் காத்துக் கொண்டிருக்கிற பெண்பெண்டாட்டி என்ன பெண்டாட்டி! யென்று அந்தம்மாள் தனது நாட்டுப் பெண்களுக்கு அடிக்கடி புத்தி சொல்வாள். தன்னுடைய பெண்களையும் அப்படியே பழக்கி வந் தாள். பார்வதி மட்டுந் தாயார் குணமறிந்து தகப் பனார் மணமறிந்து புத்திசாலியாய் நடந்துகொள் வாள். வாலாம்பாளுக்கு அப்பா சொன்னபடி கேட் கத் தெரியும், அவ்வளவுதான்; அகமுடையான், தெய் வம் எல்லாரும் அவளுக்கு அப்பாவுக்கு அப்புறந் தான். "குஞ்சு" விளையாட்டுப் புத்தியுடையவள். உல்லாசப் பிரியளாதலால், மனோல்லாஸ மாயிருப் பாள். அவளுக்கு இன்னம் குடித்தனபாரம் தலையி லுறைக்கவில்லை யாதலால், குழந்தைமனஸை வீண் கவலையினால் கெடுக்கக்கூடாது என்று சும்மாவிட்டு விட்டார்கள். பார்வதி குடித்தனப் பொறுப்பாய் எல் லாவற்றையும் பார்ப்பள். வாலாம்பாளுக்கு "அப்பா செல்லம்" என்று பட்டப்பேர்; அதையே சில சமயம் சொட்டுப் பேராகவும் உபயோகிப்பதுண்டு. குஞ்சு விளையாட்டுக் குழந்தையாகவே யிருந்தாள்.

சரி! பத்து நிமிஷம், பதினைந்து நிமிஷமாய் விட் டது. இன்னம் கிருஷ்ணஸ்வாமி ஐயர் கண் திறக்க வில்லை. மூத்த பிள்ளை [illegible] அவர் மூக் கில் கை வைத்துப் பார்த்தான். பார்வதி தன் தாயா ரைப் பாதுகாத்துக் கொண்டு நின்றபடி 'அவரைத் தொடாதே' யென்று தன் தமயனைப் பார்த்து கண் [illegible] தலையை [illegible] அமைதியாய் அடக்கிப் பின்வாங்கி விட்டார்.

பதினைந்து நிமிஷம் இருபது நிமிஷமாய் விட் டது. கூட விருந்தவர்களுக்கு சங்கடம் பொறுக்க முடியவில்லை. பார்வதிமட்டும் புத்தியும் பொறுப்பு மாய் நிலைகுலையாமல் நிதானம் தவறாமல் தன் தாயைத் தொடாமல் தானே அவளைப்பாதுகாத்த வண்ணம் நின்றுகொண்டிருந்தாள்.

இருபத்தையைந்து நிமிஷமும் ஆய்விட்டது. பார் வதி "பகவானே!" யென்று ஒரு பெருமூச்சு விட் டாள். சற்று நேரத்துக்கெல்லாம் கிருஷ்ணஸ்வாமி ஐயர் மூடின கண் திறந்து எல்லாரையும் தெளிவுறப் பார்த்தார். பார்வதிக்குக் கொஞ்சம் ஆயாஸம் தீர் ந்து தன் தாயார் முகத்தைப் பார்த்தாள். அந்தம்மா ளும் அப்பொழுது தானே தூங்கின குழந்தைபோல் கண்விழித்து நின்றாள். "அதோ அப்பா உன்னைப் பார்க்கிறார் பார்!" என்று பார்வதி அவள் காதி லோத அவள் கண்ணை நன்றாக விழித்துக்கொண்டு கிருஷ்ணஸ்வாமி ஐயருக்குச் சிஷ்ருஷை செய்ய முன்போலத் தயாராகிநின்றாள்.

தன் தாயார் முகந்தெளியவும் பார்வதிக்குத் தலைப் பாரம் குறைந்தது. அவளும் இளங்கொடி போல் அவளைத் தழுவி நின்றாள்.

ருக்மணியம்மாள் கிருஷ்ணஸ்வாமி ஐயர் கண் சாடையை யறிந்து "அப்பா என்னவோ சொல்கிறார்: யாரைக் கூப்பிடுகிறார் என்று தெரியவில்லையே! சற் றுக் கவனித்துப்பார்!" என்று பார்வதி காதில்படச் சொல்லி விட்டு, தன் பர்த்தாவை அண்டினாள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் பார்வதி நின்ற விடத்திற் கண்ணைக்காட்டி யவளை யழைத்தார். அவருடைய தர்மபத்நி அவர்மேல் கண்ணுங் கருத்துமாய் இருந்த படியே "அம்மா உன்னைத்தான் அப்பா கூப்பிடு கிறார்: கிட்டவந்து என்ன சொல்லப்போகிறாரோ, நன் றாகக் கவனித்துக்கேள்!" என்று மிருதுவசனமாய்ச் சொன்னாள்.

அதற்குள் பார்வதியும் ஸர்வோபசாரத்தோடும் நெருங்கி பயபக்தி நிறைந்த வுள்ளத்தோடு, அப்பா என்ன சொல்லப்போகிறார் என்று அவரிடத்தில் கண ணும் கருத்துமா யிருந்தாள்.

அவள் கிட்ட நெருங்கியதும் கிருஷ்ணஸ்வாமி ஐயர், தான் இதுகாறும் பத்திரமாகத் தானே வைத்துக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிப் பார்வதி யிடம் கொடுத்து, "அம்மா பார்வதி! இந்தா! இந்தக் குழந்தை யுன் பொறுப்பு: நான் இந்தச் செல் வத்தை யுன்னிடம் ஒப்புவித்துப் போகிறேன், நீ அதைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள். மறந்து போகாதே! பத்திரம்! பத்திரம்!" என்று 'கண் கணார்' என்று கண்டத்துவனி கேட்க வாய்திற ந்து மொழிந்தார். அந்த சப்தத்தைக் கேட்கவும் எல் லாரும் திகைத்துப் போனார்கள். ஏனென்றால் அது அத்தியாவஸ்தையி லிருப்பவருடைய ஸ்வரமாகக் கொஞ்சங் கூடத் தோற்றவில்லை. கண்டாமணி யடி"

த்தது போல் கணீர் என்று சப்தம் பிறந்தது. வாக்குகள்மூன்றும் பொருந்த வைகரி பிறந்தால் அப்படித்தானிருக்கு மென்கிற யோகரகஸியம் அவர்களுக்குத் தெரியாது.

மார்க்கண்டன் யமனை வென்றதுபோல் அப்பா யமனை யடித்துத் துறத்தி விட்டார் போலிருக்கிறது என்று பார்வதி மட்டும் நினைத்தாள்.

அவருடைய பத்நியார் அந்த சப்தத்தைக் கேட்டதும் தன்னை யறியாமல் "தர்மராஜா! மாக்கிலியப்பிகை கேட்டேன்: மறுக்காதே! ஸாவித்திரியைப் போல் நானும் கூடவே வருவேன்! என் நாதருக்குச் சிஷ்ருஷை செய்ய நானும் கூடவே வருவேன்!" என்று தீரமாய்த் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் குழந்தை குப்புவைப் பெற்றதாயிடம் ஒப்புவியாமல் தன் மூத்த பெண்ணிடம் ஒப்புவித்து 'பத்திரம்! பத்திரம்!' என பத்திர புஷ்பத்தால் அர்ச்சனை செய்வது போல் உள்ளன்புக்குவந்த உண்மையான அர்ச்சனை செய்தபின், வாயைத் திறவாமல் தானே அழுதுகொண்டிருந்த வாலாம்பாளைப் பார்த்து, "அம்மா அழாதே பகவான் இருக்கிறார் உன்னைக் காப்பாற்ற" என்று திடஞ்சொல்லி விட்டுத் தன் பத்தினி முகத்தைப் பார்த்தார். அந்தம்மாள் 'நாதா' என்று நடுக்கிட்டுக் கூவினாள். "கட்டை உளுத்துப் போய்விட்டது. இனித்தாங்காது! தாமசிப்பதில் பிரயோசனமில்லை" யென்று சொன்னார். எல்லாரும் கோவென்று கதறினார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயர் தம் இருகைகளாலும் காதைப் பொத்திக் கொண்டார். உடனே பார்வதி தன் அழுகையை யடக்கிக் கொண்டு "எல்லோரும் வாயை மூடுங்கள்! அப்பாவுக்கு சக்கம் பொறுக்க முடிய வில்லை." என்று குழந்தை குப்புவை யிடுப்பில் வைத்துக்கொண்டபடியே தன் வாயில் கையைவைத்தமர்த்திச் சைகை காட்டி யொரு நிமிஷத்தில் நிச்சப்த முண்டாகச் செய்துவிட்டாள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் தர்மபத்நி மட்டும் அவரை யணைத்துத் தழுவிக்கொண்டு அவர் கண்ணோடு கண் பொருந்தக் கண்ணொளி மங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மற்றவர்களெல்லாரும் பொறுக்கக் கூடாத துக்கத்தைப் பொறுத்துக்கொண்டு அவர் திருமுக மண்டலத்தைப் பார்த்தவண்ணமாயிருந்தார்கள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு மூச்சு சிறிது திணர ஆரம்பித்தது. "பார்வதி! குழந்தை பத்திரம்! என் லோகநாயகியை உன்னிடம் ஒப்புவித்திருக்கிறேன்! பத்திரம்! பத்திரம்! சொன்னேன்! பத்திரம்!" என்று கடைசிவார்த்தைகளை மொழிந்துவிட்டு "தயாநிதே!" என்று ஒரு பெருமூச்சு † விட்டார். எழுபத்தியைந்து வருஷமாகப் பட்ட கஷ்டங்களின் களைப்பினைப்பெல்லாம் அந்த ஒரு பெருமூச்சில் ஆறியமர்ந்து சாந்தியாய்விட்டது. அவர்விட்ட பெருமூச்சை "ரேசகும்பகம்" என்று யோகசாஸ்திரங்கள் சொல்லும். "தயாநிதே!" யென்றதோர்வார்த்தையே மந்திரமாகி, அந்த மந்திரமும் மஹாமந்திரத்தோடைக்கியமாகி, மஹாமந்திரம் அஜபாமந்திரமாகி, அசபையும் ஆனந்தமாகி, ஆனந்தம் சுபாவமாகி, சுபாவம் "அறுதி" யாம் அநிபத லக்ஷியார்த்தத்தில் ஒடுங்க, கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களிரண்டையும், கட்டினதுணிகளை வதுபோலவும், மலமுள்ள பாண்டத்தை நீக்குவது போலவும், சுலபமாய் விட்டொழித்துத் தமது காரண உபாதிகளான அவித்யை, மாயை, ஆனந்தம் மூன்றுக்கும் அபிமானியான "பிரகிருதி சுபாவம்" என்னும் அவ்யக்தமும் தாண்டிய அக்ஷர லக்ஷணத்திற்குச் சாக்ஷியாகவுள்ள "அறுதி ஸ்தலத்தில்" தனது பாசபந்தங்களெல்லாம் அற்றுவிழ, சிற்றம்பல வீதி கடந்து "பொன்னம்பலத்துட் போனேன், போனேனே!" யென்று பங்குனி மாசம் உத்தர நக்ஷத்திரத்தில் பரமபத மடைந்து நின்றார்.

முன்னமே காட்டுவிண்ணாங்கோவிலிருந்த மாப்பிள்ளை வாமதேவசாஸ்திரியவர்களுக்கும், கருவேலூர் முனிசீப்தாரான மூத்த மாப்பிள்ளை தண்டநாதய்யருக்கும், பள்ளியிற் படித்துக்கொண்டிருந்த கடைசி மாப்பிள்ளை [illegible] முறையார்களுக்கும் தந்தி கொடுத்திருந்ததால் அவர்களும் சமயத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் பரமபத மடைந்த ஒழுங்கு போலவே அவரது உத்தரக்கிரியைகளும் வெகு ஒழுங்காக நடத்தப்பட்டன. மூன்று மாப்பிள்ளைகளும் சம்பந்திகளில் ஒருவரும் தோளெடுக்க கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய தேஹம் ருத்திர பூமி யடைந்து

† 'பூரகும்பகரேசகம்' சேர்ந்தது பெருமூச்சு ஒன்றும்.

அங்கே தனது புத்திரர்கள் வேதோக்த மந்திரம் சொல்லி அவர்கள் கையாலிட்ட ஔபாஸனாக்கினியினால் திரிமலந்தீரத்தஹிக்கப்பட்டு, ஸ்மசான வாசியான பரமசிவன் உத்தூளனமாய்த் தரிக்கும் விபூதி மாத்திரமாக மிஞ்சியது.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஜீவதசையிலே ப்ராஜ்ஞான ப்ரஹ்ம பதமடைந்து யஜுர்வேத மஹாவாக்கியமாகிய "அஹம்பிரஹ்மாஸ்மி" யென்கிற அற்புத லக்ஷியசித்தி பெற்றவராதலால் அவர் சரீரத்திரயங்களையும் ப்ரஜ்ஞான வசத்தராகத்தானே விட்டொழித்தது அதிசயமில்லை. ஆனாலும் அந்தப்பதவி அபூர்வ சித்தி பெற்றவருக்கே கிடைக்குமாதலால், எல்லாரும் அவர் அநாயாஸமாய் "தயாநிதே!" யென்று பகவன் நாமத்தை ஸ்மரித்துக்கொண்டு அர்ச்சராதி மார்க்கத்தில் யோகஸாம்ராஜ்யராய்த் தன் பிராணனை விட்டதைப்பற்றி மிகவும் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டார்கள்.

அவருடைய உத்தரக்கிரியைகள் நடந்த பத்து நாளும் அவ்வூரில் அது ஒரு மஹோத்சவமாகக்கொண்டாடப்பட்டது.

கருவேலூர் முனிசீப்தார் தண்டநாதய்யர் எல்லாக் காரியங்களையும் தன் பொறுப்பா யெடுத்துப் போட்டுக்கொண்டு வெளியாடம்பரங்களில் ஒன்றும் குறைவு வாராது பார்த்துக்கொண்டார்.

காட்டுவிண்ணாங்கோவில் வாமதேவசாஸ்திரிகள் வைதிக கர்மங்களி லல்பாலோபமேற்படாமல் எல்லாவற்றையும் சாஸ்திரோக்தமாக நடத்தினார். பார்வதியம்மாள் தன் தாயாருடைய ஸ்தானத்தை வகித்தவளாய் சம்பிரதாய விஷயங்களில் யாதொரு குறைவும் நேரிடாதபடி யெல்லாவற்றையும் சரிவரப்பார்த்து நடத்திவந்தாள்.

[illegible]ப்பாள் அப்பாவுக்கு அழுதுகொண்டே யிருந்தாள். "குஞ்சு" தன் விளையாட்டுக்குக் குறைவு வராமல் வேங்கடநாதன் வந்திருக்கிற புதுமையில் விளையாடிக்கொண்டே யிருந்தாள்.

[illegible] கள் சஹிதமாய் கர்மலோபஞ் செய்யாமல், பிதுர்யஜ்ஞத்தை விமரிசையாகச் செய்துமுடித்து கிருதக்ஞராயினார்கள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் தம்பி "ஸதர்அமீன்" என்று சொல்லும் பெரிய கோர்ட்டு ஜட்ஜாயிருந்த கணபதி அய்யர் 10-ம் நாள் வந்து சேர்ந்து தன் தமயனார் கைவல்ய முக்தி பெற்றதைப் பவத்தைக் கேட்டு அவர் துக்கமெல்லாம் மாறி ஆனந்த பரவசமானார். அவர் பெரிய ஜட்ஜ் உத்தியோகம் செய்த பெருமையைவிட அவருடைய தமயனார் யோகாரூடராய் விதேஹ கைவல்யம் பெற்ற வைபவப்பெருமை அவருக்கு உண்மையில் பெரிதாயிருந்தது.

பிராம்மணன் என்னதான் லௌகீக வேலனாயிருந்தாலும், யமனுக்கு மூன்றால் அவன் லௌகீக மகிமையை யெல்லாம் துச்சமாய் எண்ணித்தானே தூர எறிந்து விட்டு, தன்னிடத்தில் வைதீகத் தன்மையில்லா விட்டாலும் தன் குலம் கோத்ரம் முன்னோர் பெரியோர்களுடைய வைதீகமகிமையைக் கண்டு பெருமை கொண்டாடாமலிரான்.

ஏன்! ஹைக்கோர்ட்டு சிரேஷ்ட நியாயாதிபதியாயிருந்து நைட்பட்டம்பெற்ற திருவாரூர்முத்துஸ்வாமி ஐயருங்கூட அவருடைய அந்தியந்தாவஸ்தையில் அவருடைய உத்தியோகப் பெருமையை யெல்லாம் திரணமாயெண்ணி வைதிகாசார மாயிருந்து பிராணனை விட்டாரல்லவா!

இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கு முள்ள வித்தியாஸ மெல்லாம் இதில் தானிருக்கிறது. வாவரக் காலம் மாறிவருகிறதானாலும் வைதிகதர்மம் ஸநாதநமானதால் அதற்கு யாதொரு குறைவும் வாராதென்பதே நிச்சயம். கெடுகிறவர்கள் கெட்டால் படுகிறவன் தானே படுகிறான். கர்ம விதியை லஞ்சங் கொடுத்து ஏமாற்ற முடியாது—வினைப்பயன் யாரையும் விடாது. இக்காலத்தவர்கள் வைதிக தர்மத்தை விட்டு ஸநாதனமான ஆத்ம லாபத்தை யிழந்து அற்பக்கியாதிக் காசைப்பட்டுப் பாகற்காய்க்குப் பங்கை விற்றவன் மாதிரி நிலையில்லாத இகசுகத்துக்காகப் பரசுகத்தை யிழந்து பரிதவித்து நிற்பாரானால், அது அவர்களுடைய பா[illegible] ஸநாதனமான தர்மத்துக்கு யாதொரு குறைவும் வாராது என்பது பெரியோர் துணிபு.—யதார்த்தமும் இதுவேயாம்.

"Tell me Your Friends and I will tell you what You are."

ஸகவாஸதோஷம்.

—(o)—

"ஸகவாஸதோஷம்" என்பது மிகவும் கொடியது. இது விஷம்போல் பற்றும். பற்றினால் இலகுவில் விடாது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்கிற பழமொழி மிகவும் உண்மையானதே. ஆகையால் பெற்றோர்கள் தம்மக்கள் முன்னுக்கு வரும் பொருட்டும், தம்மக்களால், தேசம் முன்னுக்கு வரும்பொருட்டும் அவர்களுடைய பால்ய சிநேகத்தை யறிந்து கோது நீக்கிக் குணத்தை யறிந்து விர்த்தி செய்யவேண்டும். கூடா வொழுக்கம் கேடாய் விளையும். ஆகையால் இது விஷயத்தில் "பெற்றோர் ஒழுக்கம்" * என்கிற ஒரு அருமையான தமிழ் கிரந்தம் இயற்றிய ஆசிரியர், நம்மிடம் வந்து அவரது நன்மொழி பரவவேண்டி, தக்க விஷயங்களைத் திரட்டி, விவேகசிந்தாமணியில் அச்சிட்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற் கிணங்க, காபிரைட் ரிஜிஸ்தரான அவரது புஸ்தகத்தி லிருந்து பின்வரும் பாகத்தை யெடுத்து அச்சிடுகிறோம். கிரந்தகர்த்தாவினுடைய எழுத்து மூலமான அனுமதியின்றி இதை வேறு யாரும் எடுத்து மறுபடியும் அச்சிடக் கூடாதென்று எச்சரிக்கச் சொன்னார். விஷயங்களைத் திருடிப் பிழைக்கிறவர்கள் அவர்கள் திருட்டுத் தொழிலை இவரிடம் காட்டாதிருக்கவேண்டி இவ்வெச்சரிக்கை அவசியமென்றே நாமும் நினைக்கிறோம். யோக்கியர்கள் தாமாகவே இது செய்யமாட்டார்கள். அந்நியர் பொருளை யபகரித்து திருட்டுத் தனமாக தனதல்லாதவற்றைத் தனதுபோல் காட்டி வியாலங்களும், விஷயங்களும், புஸ்தகங்களும் எழுதி, தப்பிலி வியாபாரம் செய்யும் அயோக்கியர்களைக் கொண்டு உண்மையான கிரந்தகர்த்தாவையும் வாங்கிவாசிப்போரையும் ஏமாற்றிப் போலிப்பேர் பெற்றுப் பிழைக்கும் சில தப்பிலிகள் தமிழ்வித்தையைச் சீர்குலைத்துச் சிரிப்பாணிசெய்யத் தலைக்கிளம்பி யிருக்கிறார்களாதலால் அவர்கள் அக்கிரமம் வெளியாகவேண்டி இவ்வெச்சரிக்கையை இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூறலானோம்.

பெற்றோர், தமது மக்களுடைய தோழர்கள் விஷயத்திலே, கொள்ளவேண்டிய கவனத்தைப்பற்றி, "பெற்றோர் ஒழுக்கம்" இயற்றிய நூலாசிரியர் பின்வருமாறு 6-வது அதிகாரத்தில் விவரமாய்க் கண்டு எழுதுகிறார்:—

மக்கள் தோழமை.

1. "மக்கள் தோழமை மட்டில் பெற்றோருக்குள்ள கவலையினால்.—பல பெற்றோர், தங்கள் பிள்ளைகள் அவர்களுக்கு இஷ்டமானவர்களோடு கூடிச் சிநேகஞ் செய்வதைச் சற்றும் கவனியாமல், அது தங்கள் கடமை யல்லவென் றெண்ணியோ, அல்லது அஜாக்கிரதையினாலோ, அசட்டையாய், இருந்து விடுகிறார்கள். பலர், தம்மக்களைக் கட்டு திட்டம் செய்தபோதிலும், அதனை முற்றும் கவனியாமல், தங்கள் இதர வேலைகளில் மூழ்கினவராய், மக்கள் மனம் போல் விட்டு விடுகிறார்கள். சிலர் வாய்ச்சொல்லால் மாத்திரஞ் சொல்லிக் கூவிக் குரைந்த பொழுதிலும், மக்கள் தஞ்சொல்லைக் கவனித்ததாகத் தண்டிக்காமல் விடுகிறார்கள். இதனால், மக்கள் பெற்றோரை அலட்சியஞ் செய்து, தங்கள் இஷ்டப்படி [illegible] ஆதலால், இவை பெற்றோருடைய [illegible] சொந்தத் தப்பிதமாகி, மக்களைக் கெடுத்து விடுகின்றன.

2. தோழமைப் பயன்.— மக்களது தோழமை நல்லதானால் மாத்திரம் நன்மையுண்டாகுமே தவிரக்

* மக்கள் சன்மார்க்க [illegible] பெற்றோர் ஒழுக்கம்"—விலை ரூபா 1. தபாற்செலவு பிரத்தியேகம். மைலாப்பூர் லலிதாலயத்திலுள்ள இந்த ஆபீஸில் கிடைக்கும். வேண்டுவோர் முன்பணம் மணியாடர் பெற்றுக்கொள்ளலாம்.

கெட்டதானால் கெடுதிதான் உண்டாகும். நல்லவன் என்கிற பெயர் படைக்க அதிக காலஞ் சொல்லக், கெட்டவன் என்று ஒரே நாளிலும் [illegible] என்பது போல, நல்ல தோழமையின் பயன் சீக்கிரமாய் வெளிப்படாமல், பனி போல மெதுவாகவும், காணப்படாமலும் பலன் தரக், கெட்ட தோழமையின் பயன் தீயைப்போலத் தீவிரமாகவும், கொடுமையாகவும், பிரத்தியக்ஷமாகவும் பலன் அளிக்கும். ஒருவனுடைய துஷ்டத் தோழமையின் பயன் இவ்வாறு துரிதமாய் வெளிப்படப், பெற்றோர் கலங்கித் தயங்கிப் பரிதபித்து, "ஐயோ! இது வரையிலும் எவ்வளவோ நல்லவனாக இருந்த எனது மைந்தன், இப்பொழுது ஏனோ, எப்படியோ கெட்டவனாக மாறிவிட்டான்! அவனிடத்தில் இப்பொழுது கெட்ட குணங்களும், துஷ்டச்செயல்களும், சொற்களும், தூதனமாய் உதித்திருக்கின்றனவே! இதனை என்னென்று சொல்லுவேன்? ஐயோ, தெய்வமே! நல்ல குமாரனை நான் கோண்டிருந்தது உன் கண்ணுக்குப் பொறுக்கக்கூடாததாயிற்றோ? என் இவனைக் கெட்டவன் ஆக்கிவிட்டாய்? இதுவும் உன் செயலோ, சித்தமோ? அல்லது, அவன் தலை விதியோ? என் கெட்டகாலமோ? ஒன்றும் அறியேன்!" என்று பிரலாபித்துக் கடவுள் பேரிலும், விதியின் பேரிலும், காலத்தின் பேரிலும், குற்றஞ் சாட்டுவாரே யன்றித், தமது அறிவீனமும், அசட்டையுமாகிய குற்றத்தைப் பெரும்பாலும் உணரமாட்டார்கள்.

3. மக்கள் தங்கள் அமைப்பின் படியே வாழும்படி விட்டுவிடலாகாதெனல்—தங்கள் மக்களை நல்ல பிள்ளைகளோடு சேர்த்து, அவர்களுடைய சிநேகத்தை யிவர்கள் கைப்பற்றச் செய்யவேண்டியது மாத்திரமன்றிக் கெட்ட தோழருடன் சேராமலிருக்கவும் கவனிக்கவேண்டிய கடமையுள்ள பெற்றோர், மக்கள் தங்கள் அமைப்பின்படி நல்லவர்களோ, கெட்டவர்களோ சேர்ந்து, நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ ஆகட்டும் என விட்டுக் கவலையின்றி யிருப்பது மதியீனமல்லவா? மக்களைத் தனியாக விடாமல், பெற்றோர் இருவரையும் அவர் தோழமைக்குக் காவலாகவைத்த ஜநாதீசன் "தீங்கன் ஏன் உங்கள் மக்களை கவனியாமல் கெட்டவர்கள் ஆக்கி விட்டீர்கள்" என்று கேட்கும் காலத்தில் இவர்கள் என்ன மாறுத்தரஞ் சொல்லப் போகிறார்களோ? அது அவருக்கே வெளிச்சம்.....இவை மக்கள் அமைப்பு மல்ல, கடவுள் செயலுமல்ல. [illegible] காரியம் இப்படியிருக்க, இது விஷயத்தைப் பெற்றோர் கவனியாமல் மக்கள் அமைப்பின்படியாகட்டு மென்று விட்டுவிட்டால், மக்கள் கெட்டதோழரோடு கூடாமற் போவார்களா? அவர்களுக்கு நல்ல அமைப்பு வருமா? சற்று யோசித்துப் பாருங்கள்? இது பெற்றோருடைய குற்றமா? மக்கள் குற்றமா! அல்லது கடவுள் குற்றமா? யாருடைய குற்றம் என்று நீங்களே சொல்லக் கடவீர்கள்.

4. மக்கள் தோழமைமட்டில் கொள்ளவேண்டிய கவனம் ஈதேனல்—மக்கள் பேச வாரம்பித்ததுமுதல், அவர்கள் தோழமை விஷயத்தைப் பெற்றோர் கவனித்து வரவேண்டிய கடமை யுடையவராதலால், சிறுவயதுமுதல் மக்கள் கெட்ட பிள்ளையோடு சேராமலும், நல்ல பிள்ளைகளுடன் கூடியும், அல்லது அவசியமானால், தனிமையாகவும் விளையாடவிட்டு அத்தருணத்தில் தாங்கள் அருகிலிருந்து கவனித்துத் துட்ட மொழிகளும், கெட்ட குணத்தைக் காட்டும், மட்டிச் சொற்களும் குட்டிக் குழந்தைகள் காதில் விழாமற் கெடுத்து, அவை தவறி விழுமானால் பரிகரித்து, நல்லவர்கள் கெட்டவர்கள் என்றில்லாமல் எல்லாருடனும் தாங்கள் சிநேகம் வைத்துக்கொள்ளாமலும், எல்லாரும் தங்கள் வீட்டுக்கு வாராமலும் கவனங் கொண்டு கெட்டவர், பந்துக்களானாலும் வாராமல் தடுத்து, எவரானாலும் நல்லவரையே அடுத்து, தாம் வீண் விஷயங்களையும், பிறனுடைய சமாசாரங்களையும், விசேஷமாய் அவர் குற்றங்களையும் கடவுளுக்கும் பெரியோருக்கும் விரோதமான விஷயங்களையும் ஒரு காலமும் மக்களுக்கு எதிரில் பேசாமலும், தம் வீட்டுக்குவரும் அன்னியரும் பேச வொட்டாமலும் கவனித்துப் பிறர் அவ்வாறு பேசும் இடங்களினின்று மக்களையப்புறப்படுத்திக், கெட்ட புத்தகங்கள் துட்டப் பாட்டுகள் மக்கள் கைக்கு எட்டாமல் தடுத்து, மக்களோடு வெளியே போகும் போது வழியில் சம்பவிக்கும் துர்மாதிரிகளி னின்று காத்து, தோழமை விஷயத்திற்கடுத்த நல்ல கதைகளைச் சொல்லி, நல்லறிவு போதித்துப் பள்ளிக்கூடம் தொடங்கும் நேரத்திற்கு அதிக முன்னதாக மக்களை ஒருக்காலும் அனுப்பாமலும், பள்ளிக்கூடங் கலைந்ததும் உடனே நேரே வீட்டுக்கு வரவும் கவனித்து, அவர்கள் தோழர்களை அடிக்கடி சோதித்துக், கெட்டவர்களை நீங்கி, நல்லவர்களுக்குப் புத்திமதி புகட்

மக்கள் [illegible] மக்கள் போல் பாவித்துச் சிநேகித்து, கெட்ட தோழர் சிநேகத்தை [illegible] மக்களைக் குக் கட்டு திட்டம் செய்வது, தக்க கண்டனை தண்டனைகளால் மக்கள் அப்படிச்செய்யக் கவனித்து, உபாத்தியாயரையும் இவ்விஷயத்தில் கவனிக்கக் கேட்டுக் கொண்டு, கெட்ட தோழமைக்குக் காரணமும், ஆகாரமுமாகிய மக்கள் கைக்காசை ஒடுக்கி அடக்கி, மக்கள் தோழமையை நல்லதாக்க வேண்டியது பெற்றோர் அவசியச்செயலேயாம்.

5. மக்கள் விளையாட்டுத் தோழமை விஷயத்தில் பெற்றோர் கவனம் வேண்டுமேனல்.—நல்ல தோழர்கள் இருக்கும் இடங்களில், மக்கள் அவர்களோடு வெளியே போய் விளையாட விடலாம் என்றாலும், கெட்ட பிள்ளைகள் இருக்கும் வீதியிலும், அவர்கள் வந்து இவர்களுக்குத் தொந்தரவு செய்யும் இடத்திலும், இவர்களோடு விளையாட வரும் பட்சத்திலும், இது தகாது. இதனால், நல்ல தோழர்கள் இல்லாத விடத்தில் பரிச்சேதம் மக்கள் வெளியே போக விடலாகாது என்று தெளிவாய் விளங்குகிறது. சிறுவயதில் சகோதரர் சகோதரிகளோடு கூடியும், வெளியே போகாமலும் வீட்டுக்குள்ளேயே விளையாடப் பணிக்க வேண்டும். அனால், முன் கூறியுள்ள படியே, பள்ளிப் பருவத்தில், ஆண்மக்கள் பெண்மக்கள் இரு பாலாருங் கலந்து விளையாட விடலாகாது எனப் பொது விதியிருந்த போதிலும், அவர்கள் வயது, குணம், நடத்தை முதலியவற்றை நன்கு அறிந்த பெற்றோர், இது குற்றம் என்றும், குற்றம்அல்லவென்றும் தீர்க்கக் கடவார்கள். அன்றியும், மக்கள் விளையாடும் போது, பெற்றோராவது, அல்லது பெற்றோரால் நியமிக்கப்பட்ட பெரியவராவது அவர்களைக் கவனிப்பது அவசியமும் நன்மையுமாக விருக்கிறது. இதனால், பெற்றோர் மக்கள் தங்களுக்குள் சண்டை யிடாமலும், குற்றமில்லாமலும் விளையாடக் காரணமா யிருப்பது மன்றி, அவர்கள் தப்பிதங்களை அப்போதைக் கப்போது எடுத்துக் காட்டவும், பிறருக்கு வருத்த முண்டாகாமல் விளையாடச் செய்யவும் கூடும். சிறு பிள்ளைகள் தாமே யென்றெண்ணி அவர்களை வெளியே தனியாய்ப் போகவும், விளையாடவும், கெட்ட பிள்ளைகளோடு திரிந்தவும் முதலாய் விடலாகாது.

6. மக்கள் காதில் விழுந்த கெட்ட சொற்களைப் பரிகரிக்கும் வகை.—கெட்ட வார்த்தைகள் பிள்ளைகள் காதில் விழுந்தன என்று அறிந்த அக்ஷணமே, பெற்றோர், 'ஐயையோ! ஐயையோ! கெட்ட வார்த்தைகள்!" என்று மக்களறிய வாற்றிச் சொல்லி அதற்றின்மேல் அருவருப்பைக்காட்டி, அவசியமானால் காது இரண்டையும் கைகளால் அடைத்துக் காட்டவும், அல்லது கடவுள் திருநாமத்தைப் பிள்ளைகள் கேட்கும்படி அடிக்கடிக் உச்சரித்துக் கூடிய விரைவில் அவ்விடத்தை விட்டு நீங்கவும் வேண்டும். மக்கள் பெற்றோரை "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்"? என்று கேட்டால், "கெட்ட சொற்களை காதால் கேட்டால் பாவமானதால் இவ்வாறு செய்கிறோம்" என்று சொல்லவேண்டும். இவைகளுக்குப்பெற்றோர் பயந்தால் தான், பிள்ளைகளும் பயப்படுவார்கள். சில பெற்றோர் தங்கள் சமயோசித தந்திர புத்தியால், அவ்வேளைகளில், அவை மக்கள்காதில் விழாதிருக்கும்படி, அல்லது மக்கள் அவற்றைக் கவனிக்காதபடி ஏதோ ஒரு சந்தடி செய்வதும், உரத்திப் பேசுவதும், மக்களை அல்லது பிறரை அழைப்பதும், இவ்வாறு தடுப்பதும் உண்டு.

7. சிநேகஞ் செய்யும் முறை.—எவரையும் முதல் தரம் பார்த்த வுடனே, அவர்களோடு முகமலர்ந்து, சிரித்துப் பேசிக், கண்டவுடன் கொண்டுவிடும் கத்திரிக்காய்போல், அவர்களைச் சிநேகர் ஆக்கிக்கொள்ளுவது அநேகர் வழக்கம். இது தப்பிதம். ஏனெனில், தொழில், உடுபாவனை, முகலட்சணம், முதலியவற்றால் மனிதருடைய குணம் இவ்வாறு இருக்கலாம் என ஒரு வகையாய் யூகித்துக் கொள்ளலாம் என்பாராயினும், இது பெரும்பாலும் தவறி விடுவதால், இவ்விஷயத்தில் ஆத்திரப்படாமல், அவர்களுடைய சொல், தோழமை, செயல் முதலியவற்றை அடிக்கடி கவனித்தால், அவை அவர்கள் நல்லவர்கள், கெட்டவர்கள் என்றும், அவர்கள் குணம் இன்னதன்மையதென்றும் சொல்லிவிடும். அவ்வாறு அவர்கள் குணங்களை அறிந்துகொண்ட பின்பு, சிநேகஞ் செய்யத்தகுமானால் செய்யவும்; தகாவிடில்,விடுக்கவும் வேண்டும். பின்னும் அச்சிநேகத்தைச் சோதித்துத், தவறான குணம் ஏதாவது காணப்பட்டால், அதை உடனே நேரில் சொல்லித் திருத்த வருந்தவேண்டும். அப்படியுந் திருந்தாமல் போனால், இதைப் பற்றிச் சிநேகம் கெடநேரிடும்என்று எச்சரிக்க வேண்டும். பின்னும், அசட்டையா யிருந்தால், முற்றும் விட்டு நீங்க வேண்டும் என்பதாக மக்களுக்குப் போதிக்க வேண்டும். சிலர், தமது சிநேகரிடத்தில் ஏதாவது குற்றங் கண்டால் அதை அவர்களுக்கு அறிவிக்காமலே, அவர்கள் தோழமையைத் தேடாமலும், அவர்களே வலிய வந்து பேசினாலும், நன்றாய் முகங் கொடுத்து பேசாமலும், தங்கள் வேலையைக் கவனிப்பதுண்டு இது, துஷ்டர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்கு. ஆனால், கூடிய வரைக்கும் சன்மார்க்கத்தில் நடக்க முயலுகிறவர்களிடமது இவ்வாறு செய்வது திருந்தக் கூடியவர்களையும், திருத்தாமல் விடுவதாகும். அன்றியும், தங்களைப் பற்றி அவர்களுக்குக் கெட்ட அபிப்பிராயம் உண்டாக்குவதாகும். ஆதலால், நல்ல மனிதரைத் தேடிச் சிநேகஞ் செய்ய முயல வேண்டும்.

8. துஷ்டமனிதர் விட்டுக்கு அடிக்கடி வராமல் தடுக்கும் முறை.—துஷ்ட மனிதரும், கெட்டஸ்திரீகளும், இஷ்டப்படி திரியும் மட்டிப் பிள்ளைகளும் தமது வீட்டிக்கு உறவாட அடிக்கடி வருவார்களானால், பெற்றோர், அவர்கள் வருகையால், மக்கள் கெடாதபடி, அவர்களை நோக்கி "யெம் வீட்டுக்குத் துஷ்டராகிய நீங்கள் எல்லாம் வரவேண்டாம்" என்று முரட்டுத் தனமாகச் சொல்ல லாகாது. ஏனெனில், இதனால், கெட்டவர்களாகிய அவர்கள், பகை, வர்மம் கொண்டு, இவர்களுக்குப் பெருந் தீமைகளைச் செய்வதும் உண்டு என்பதனால் தான். துஷ்டரானவர் எவ்வளவு நெருங்கிய பந்துவாக இருந்தாலும், தம் வீட்டுக்கு வந்த விடத்துப், பெற்றோர், அவர்களைச் சற்றும் சட்டை பண்ணாமலும், நாகலைப் பார்க்கும் கண்ணாலும் அவர்களைப் பாராமலும், அவரிடத்து ஒரு வார்த்தை முதலாகப் பேசாமலும், முற்றும் மௌனமும், அசட்டையுமாய்ப், பகைவரைக் கண்டவர்கள் போல், இருந்துவிட வேண்டும். அவர்கள் தாமாகவே வலியப் பேசினாலும், அவர்கள் முகத்தைப் பாராமல், தமது வேலையையே கவனித்துக் கொண்டு, அவசியமான விஷயத்தை அதி சுருக்கமாக இரண்டொரு வார்த்தையில் அடக்கிச் சொல்லித் தீர்க்கவேண்டும். இப்படிச் செய்தால், அவர்கள் ஏன் திரும்பவும் அவ்வீட்டுக்கு வருவார்கள்? பார்வையானது சிநேகாரணங்களில் ஒன்றாகிச், சிநேகத்தை வளர்க்கவும், உறுதிப்படுத்தவும், வாக்கின் காரணமாகவும் உபயோகிக்கப் படுவதாகையால், பார்வையும், அநாவசியமான ஒரு வார்த்தை, அநேக வார்த்தைகளுக்குக் காரணமாகவும், அதனால் ஒன்றில் சிநேகமோ, அல்லது பகையோ, உண்டாகவும் நேரிடுமாதலால், வாக்கையும் தவிர்க்கும்படிக் கூறப்பட்டது. அப்படி அனுப்பப் பட்டவர்கள், பெரும்பாலும், பின்னால், முதுகுக்குப் பிறகே, பலவகையாய்ப் பிதற்றுவது சகஜம். அதனால் நமக்கு ஒன்றும் சேதமாவதில்லை- நாய் குரைத்து நத்தம் பாழாகுமா? இஃதன்றிச், சில கெட்ட ஸ்திரீகள், எதிரிலேயே, "என்னடி கெடுவாய்! உனக்குப் புதுவாழ்வு வந்துவிட்டதோ? என்னடி! முகத்தைப்பார்த்துப் பேசவும் முடியாமற் போயிற்றோ? கண்ணிலுந் தொண்டையிலுங் கொழுப்பு அடைத்துக்கொண் டிருக்கின்றதோ?" என இப்படிப் பலவிதமாகவும் பேசுவார்கள். இதனை, யேதோ நாய் குரைக்கிறது, கழுதை கத்துகிறது, என்றெண்ணி முற்றும் மௌனங்காக்க வேண்டும். தவறி வாயைத் திறந்தாலோ, கெட்டது சகலமும். அவர்கள் அப்புறம் போனபிறகு, பிள்ளைகளிடத்தில் "மக்காள்! அவர்கள் மகாதுஷ்டர்கள். ஆனதினால்தான், அவ்வாறு கெட்டகெட்ட வார்த்தைகள் எல்லாம் பேசினார்கள். அதினாலேயே, நான் அவர்களிடத்தில் பேசவில்லை. "அரசன் அன்றொறுப்பான், தெய்வம் நின்றொறுக்கும்" என்றபடி அவர்கள் பேசிய அத்தனை துஷ்டவார்த்தைகளுக்கும், கடவுள் உடனே தண்டியாமல், 'ஒருகாலத்தில் தங்கள் குற்றங்களை உணருவார்கள்' என்று எவ்வளவு பொறுமையாகவும், தயவாகவும், இருக்கின்றார்! பார்த்தீர்களா? வல்லபமுள்ள ஈசனுடைய தயவும், பொறுமையும் எவ்வளவுபெரிது!" என்று சொல்லி, அதனால் மக்களுக்கு உண்டாகிய துன்மைகளை ஒருவாறு பரிகரித்துக் கொள்ளலாம். இது மக்களுக்கு ஒரு நல்ல படிப்பினையாகும்; பிறர் தம்மை யெவ்வளவு பேசினாலும், ஏசினாலும் ஒரு வார்த்தையும் பேசாமல் மகா பொறுமையாய் மௌனத்தை யநுசரிக்கக் கற்றுக் கொள்ளுவார்கள்.

9. மக்கள் முன் தகாத பேச்சுகளைப் பேசுவதும் பிறர் பேச விடுவதும் ஆகாதெனல்.—அநேக பெற்றோரிடத்தில் உள்ள இன்னொரு பெருங் குறை மக்கள் முன்னிலையில் தாங்கள் தங்களுக்குள்ளும், பிறரிடத்தும், பிறர் தங்களிடத்தும், அவர்களுக்குள்ளும், வேதம், நல் லொழுக்கம் இவற்றிற்கும், கடவுள், பெரியோர், குருக்கள், நல்லோர், பக்திமான்கள், இவர்களுக்கும் விரோதமாக அநேக விஷயங்களைப் பேசுவதும், தர்க்கிப்பதும், விரோதிப்பதும், பிறர் பேசவும், தர்க்கிக்கவும்! விரோதிக்கவும் விடுவது மாம். இதுவும் ஒரு பெரும் பாதகமாமே. ஏனெனில், இது மக்களுக்குத் துர்மாதிரி யாகிக், கோபம், பகை நிந்தனை முதலிய குணங்களையும், அக்குணங்களுக்கு அடுத்த குற்றமான சொற்களையும், பேச்சுகளையும், சைக்கிளைகளையும், மக்கள் அடிக்கடி கேட்டுக் கண்டு பழகி, அவற்றைக் கற்றுத் துஷ்டராகிறார்கள். ஒரு விஷயம் நல்லதானால் என்ன, கெட்டதானால் என்ன? எவர் எப்படி நடந்தால் தான் நமக் கென்ன? நாம் மாத்திரம் நல்லவர்களாயிருந்து, நன்று என்று கண்ட விஷயத்தைப் பின்பற்றி, மனம் சாக்ஷியா யிருக்கக் குற்றமானவைகளை விலக்கி நடவாமலும், இவ்வாறு மக்கள் முன்னிலையில் பேச வரும்பிறருக்கும் போதிக்காமலும், தர்க்கிக்கஇஷ்டப்பட்டவர், அதற்கடுத்த இடங்களுக்குப் போய்த் தர்க்கஞ்செய்ய ஏவாமலும், பெற்றோர் நாள்சாய்ந்த தாங்கள் கெடுவது மன்றி, நாள்போக வாழ விருக்கும் சின்னஞ் சிறியதுகளையும் கெடுத்துத், தோஷத்தை வீணாகக் கட்டிக் கொள்ளுகிறார்கள். இவ்விதமான பெற்றோர் கடவுளுடைய கோபத்திற்குஞ் சாபத்திற்கும் தப்புவது அரிது. அன்றியும், பலர் பிறருடைய குற்றங்களை யெடுத்துப் பழிப்பாகப் பேசுவதிலே அதிக விருப்பங் கொண்டவராய், "ஊர்ப்பேச்சு என்னும் ஊன்று கோல் இல்லாமல், வாய்ப் பேச்சு என்னும் வழி மாளாது" போல எங்நேரமும், ஊர்ப் பேச்சு பேசுவதில் ஊக்கங் கொண்டு உழைத்துப், பழிபாவஞ் சுமந்து, மக்கள் தலையிலும் தச்சுனை மண் வைக்க முயலுகிறார்கள்."

COCOANUT PALM PESTS.

தென்னைமரத்து வண்டுகள்.

—:-:—

இரண்டு தினுசு வண்டுகள் தென்னை மரங்களையும் மற்ற பனை தினுசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகிறது. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்தில் சென்னுவென்றும் பெயர். தலையில் ஒரு கொம்பையுடைய கருப்பு வர்ணமுள்ள ஒரு ஜாதி வண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் தலையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னை மரங்களை இவ்வண்டுகள் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப்போல் முற்றின் மரங்களை கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடி மரங்களிலாவது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து வெளிவந்து, அழுகும் வண்டுக்களை தின்று பெரிதாகி காளாவட்டத்தில் வண்டாய் உருமாறுகிறது.

தமிழில் செவ்வண்டென்று சொல்லப்படுவது முன்சொன்ன கருப்புவண்டைவிடச்சின்னது. இதை அதினுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்து கொள்ளலாம். இது பனைகளில் உச்சிகளில் சாதாரணமாய் தென்னம் வண்டாலாவது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சி மரத்தைத் துளைத்து செடிகளைக்கொன்று விடும். இப்புழுக்கள் கார் இழைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரங்களில் உருமாறி வண்டுகளாகிறது.

இவைகளின் கெடுதிகளை நிவர்த்திக்குமார்க்கம்.

1. தென்னம் வண்டு ஜாஸ்தி கெடுதி செடிகளுக்கு செய்யா விட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்கு காரண பூதமாயிருக்கிறது. இந்த தென்னம் வண்டை அனேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல்யெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் வளைகொண்டு எடுத்து விடலாம்.

[illegible] செவ்வண்டுகளை அப்புறப்படுத்திப் பின் அவை [illegible] துளைகளைத் தார்னால் நடவி [illegible] மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேல் சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைவைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களை இவைகளின் பாதையிலிருந்து சுலபமாய் நிவர்த்திக்க முடியாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டு தடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக் கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம் வண்டைத் துரத்திவிட ஏதுவுண்டு.

4. செவ்வண்டினால் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா ஆகையால் அவைகளைத் தாமதமின்றி வெட்டிவிட வேண்டும். இந்த புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால், இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாகமாறி புது மரங்களை நாசமாக்கும்.

5. ஒரு தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் தீயுடைத்து காயப்போட வேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவே கூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம்வண்டு பல்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங் கொடுக்கக்கூடாது.

6. சில இடங்களில் தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளே சென்று மரத்தைக் கெடுக்கிற தென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல் தரையிலிருந்து சில அடிகளுக்கு மேல் மரத்தை துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேல் சொன்ன பிரகாரம் மரங்களை துளைப்பது அதிர்ஷ்டத்தை யுண்பெண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படி செய்யவேகூடாது.

மேல் சொன்ன இரண்டு வண்டுகளின் நகம் ஒன்றை ஒன்று பெருத்ததாயிருக்கிறது. தென்னம் வண்டு கன்றாயிருக்கும் உச்சி மரங்களில் துளைகளை யுண்டாக்கி செவ்வண்டு அதில் வந்துசேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னம் வண்டுகள் பல்கிப் பெருக கல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால் மேல் சொன்ன முன் ஜாக்கிரதையோடு கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னந்தோப்பில் மரங்கள் காளாவட்டத்தில் ஒன்றுக்கு பின் ஒன்றாய் நாசமாவதைத் தடுக்கமுடியாது.

—*Agricultural Bulletin.*

Full term Copyright secured in every [illegible], and the right of reproduction, revision and republication strictly [illegible] Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Port St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that sublime faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime faith that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேசிவம்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] "God is Love: Knowledge is. Power: *Aum*

ஸத்தியமேஜயம்—SATYAMEVA JAYATE.

புத்தகம். 19.] 1911 ஜூலை, விரோதிகிருது ஆடி மீ [சஞ்சிகை. 4

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copyright in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lilita Publishing Co., Sole Agents and Managers

M. K. Narayanaswami Iyer, B.A. B.L. Hon. Secy, Vivekachintamani Pub. Committee.

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தரார்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சந்தப்பலனகபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லறிவுபுரும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்: அடாஅது மையதவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிதியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினாயாண்டவன் வேலுமயிலுந்துணை. ஆண்டயாய்உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றி

Number 27.—Its Mystic meaning.

"இருபத்தியேழு"—அதன்பொருள்.

"ஸப்தவிம்சதி ஸாயுஜ்யம்"

—:-:—

"There are some commemorative days of the Church which should obliterate all differences of creed, because the observance of them turns our minds towards truth which we all used to remember, but which we are apt, among the absorbing trifles of our daily life, to forget. One of these is Christmas Day, the day of common regoicing; another is Good Friday, the day sacred to unworldliness, the day of common mourning for the worst error the world has ever committed. It commemorates the extreme of defeat and ignominy and pain, and in doing so reminds us of that doctrine which, threatened by the passing heresies peculiar to each successive age, has been handed down from generation to generation of saints and heroes; the doctrine that success in this world is not the test of life; and only when men despise it are they most divine and free from the slavery of material things. It is easy enough to give a general assent to the doctrine, but most difficult to make conduct and judgment conform to it in any particular case. For the worldly success which the saints and heroes despise is not only the vulgar success of wealth and power. They have a purpose and standard which makes them indifferent to the mere Judgment of the world: they have a constancy which is not shaken even when they are condemned as evil-doers by the appointed Judges of the people. That the crucifixion is symbolical is, indeed, profoundly true; and the lapse of ages has not made the symbolism obsolete, even for those who are not Christians. The Cross once a symbol of shame and now a symbol of glory, proves how easy it is for the world to reverse its judgment after the event, how difficult is right judgment at the moment."—*The (London) Times on Good Friday.*

"தர்மமேஜய" மென்ற பிக்ஷைகேட்டேன்!
தாணுவிலே கலிமுற்றக் காலமாச்சு!
பாணியிலே யதிஷ்டானங் கூடலாச்சு
அரணியிலே அக்கினியுந் தோன்றலாச்சு
ஆன்மாக்க ளீடேற மார்க்கங் கேண்மின்!"

—திருவருட்சிறப்பு விண்ணப்பம்.

O Strength of God, slow art thou and still,
Yet failest never.
On them that worship the ruthless will,
On them that dream, doth His Judgments wait,
Dreams of the proudman, making great
And greater ever
Things which are not of God,"—*Euripedes* (quoted by *The Times.*)

The worship of the 'ruthless will' is only the worship of success disguised with a new philosophical or scientific jargon. When Euripedes denounced it then there was no long tradition or experience of the true faith to support him, nor was there any universal symbol of it to which he could appeal. All the ages which have passed since he wrote the "Bacchae" have at least achieved this, we have the Cross to warn us against every new form of the worship of success, and the recurrence of Good Friday to remind us that what was once the symbol of shame to all the world is now its chief symbol of Glory"—*The Times (London).*

"The way to heaven lies through hell."—*The Swami Vivekananda.*

"பஞ்சவிம்சதிபாக்கியம்" பெற்றவன் பாராளும் வேந்தரிற் பெரியவன் என்பர். எப்படியென்னிலோ, இயம்பக்கேண்மின்!—பாராளும் வேந்தர் பூபாரம் தாங்குவர்: ஸம்ஹாரசக்தி முன் ஸிம்ஹாஸனம் விட்டுச் சவமாவர். "பஞ்சவிம்சதி பாக்கியம்" என்றுசொல்லும் "குருவருள்" பெற்றவர் திருவுருத்தாமாகி, ஸம்ஹாரசக்தியைத் தேடியே தொழுவர். பிறப்பிறப்பவர்க்கு நினைப்பு மறப்புமாம். பிறந்திறந்துழல்வார் பாராளும் வேந்தர்கள். பிறந்திறவாதவர் பேரருளாளர்: பிறந்திறவாமலே யிருந்தவர் உழைப்பார். இதிஹாஸம் வேண்டில் எத்தனையோ வுண்டு. யேசுகிறிஸ்துவை யிதிஹாஸ பூரணமாய் எடுத்துச் சொல்லில், அவர் பிறந்ததோர் நாளும், இறந்ததோர் நாளும் சிறந்ததோர் நாளென்று செப்புவர் மேலோர். பிறந்ததோர் நாளை யுவகையோ டெவரும் சிறந்ததோர் நாளாய்ச் சிறப்புடன் துதிப்பர். ஏனெனில் அவருடன்பிறந்தது சாந்தமும் சத்தியமும்: பிழையற வுலகிலிவை நிலைபெறவேண்டி யுழைத்தனர் அவரும் உண்மையிற் சித்தராய்! சித்த முத்தராமந்தச் சிருஷ்டை யண்ணலைப், பித்தம்முத்தப் பெற்றவோர் பாழுலகச்சிந்தையர், தத்தமுட் சித்தம்போற் குற்றமில் நாதனைக் குறையுளனாக்கொண்டு, நற்றமில் வழக்குரை நிகழ்த்தஞ் செய்கையால், ஏற்றமில் சிலுவையி லறைந் துயிர்வாங்கினர். வாங்கினர்

உயிரை வாழ்ந்திட வெண்ணியே—உலகில், தாழ்ந்திடுங்கதி யவர்க்குள்ளது ஓர்ந்திலர். பழிபாவ மஞ்சாப் பாதகர் செய்த இழிபாவத்தாலே இசைந்ததோர் பயன் என்? என்று விசாரிக்கும் ஏற்றமுடை யன்பர்க்கு உண்மையை யோதினன் உலகுபுகழ் 'டைம்ஸ் ஐயன்' (ஆசிரியன்.) அது இது:—

"உலகிலே யுலகத்தார் ஒரு தலையாய்க் கொண்டாடும் இகலோக ஜயமெல்லாம் ஜயமல்ல வாராயில்! யேசுவைச் சிலுவைதனிலேற்றியே கொன்றவர்கள் தம்கலி ஜயித்ததாகத் தாணியிலே நினைத்திருக்கத், தர்மமல்லோ கடைசியிலே தாணியிலே ஜயித்ததுகாண்! கொலைபாதகர்க் குரியதா மச்சிலுவையது உலகதனில் இழிவுடைய சின்னமாக விருந்ததுவும் போயிப்போ, முதுகுரவர் தாந்தொழுமோர் திவ்ய சின்னந் தானாச்சு. யேசுவைக் கொன்றுவிட்டோம் அவர் தொல்லை யொழிந்ததென்று எண்ணிய அப்பாதகர்கள் எண்ணமெல்லாம் வீண் போச்சு! பாராளு மன்னரெல்லாம் அவர் பாததூளிதாம்பெறுமென் றாராளுந்தொழிலையெல்லாம் அவர் பேராளும் பாக்கியமென்பர். பாதகர்கள் செய்த தொழில் பாரில் மஹா பாபமென்றே நிலைத்ததொன் றன்றி யம்மா! பயன் வேறு கண்டதில்லை! அவர் பாவத்தொழில் நிலைத் துலகில் பக்தர் சீரைக் குலைத்தாலும் புடம்போட்ட தங்கம்போல் பக்தர்மனம் மாறவில்லை! "ஸத்தியமேவ ஜயதே நாந்ருதம்" என்ற வேதவாக்குப் பொய்க்கவில்லை. "மெய்யே வெல்லும் பொய்யல்ல!" வென்பது உலகத்தோர்மனதில் முன்னிலும் பல்கோடிமடங் கதிகமாகப் பதியலான தொன்றேபலன்! ஆனாலும் உலகில் பொய்யும் புனைசுருட்டும் விட்டபாடில்லையே யென்றால், அவையேன் விட்டுப் போம்! பொய்யுலகுள்ளமட்டும் பொய்யும் புனைசுருட்டும் மலிந்தே யிருக்கும். இது கால தர்மம். இந்தக் காலதர்மத்துக் கதிபதி கலிபுருஷன். ஆனாலும் தர்மம் தலையெடுக்கவே யெல்லா மிசைந்துவழக்கின்றன வென்பதும் ஸ்பஷ்டமாம்." எப்படி யெனில்:—

"காலத்தில் முளைத்தது தேசம்: தேசத்தில் முளைத்தது பாசம்; பாசத்தில் முளைத்தது மோசம் (மோகம் என்றாலும் சரிதான்.) மோசத்தில் முளைத்தது கோசம். கோசத்தில் முளைத்தது ரோஸம். ரோஸத்தில் முளைத்தது கிலேசம் கிலேசத்தில் முளைத்தது நேசம் (பற்றுதல் என்னும் மனோதர்மம்) நேசத்தில் (மனப்பற்றில்) முளைத்தது விஷயம். விஷயத்தில் கண்டது பேதம். பேதத்தில் உண்டுகாண் சுகதுக்கம்."

இந்த சுகதுக்க மென்னும் பேதபாவனைக்காகவே உலகத்தார் பொய்யும் புனைசுருட்டும் பழிபாதற்காய்க்காகப் பங்கைவிற்றவன் கதையாகப் பாபத்தைச் செய்து (ஆத்ம) லோபத்தைக் கட்டிக்கொள்கிறார்கள். ஆத்மலோபம் செய்யச்செய்ய, அன்பே யுருவாயமர்ந்த எம்பிரான் தத்துவங்களெல்லாங் கடந்த கடவுளராயினும், "கருணாரஸ ஸாகர"மானதால், அறிவழிந்த மானிடரை யீடேற்ற வேண்டி, மானைக்காட்டி மானைப்பிடிப்பது போல், அவதார புருஷராய் மானுட வுருக்கொண்டு பாசக்கட்டில் அகப்பட்டுழலும் பசுக்கூட்டங்களாகிய மானிடர் மந்தையைக் காக்கவெண்ணித் தம் திருவுரு மறைத்து மறுவுருக்கொண்டு, உலகில் பிக்ஷாடனமூர்த்தியாக உயிர்ப்பிச்சைக்குக் கப்பரை கையேந்தி நிற்கிறார். அவர் எப்பொழுதும் பிச்சைக்கு அழுதுகொண்டே யிருக்கிறார். அவர் குரலோசை கேட்டுப் பிச்சை யிட்டவர்களுக்குப் "பஞ்சவிம்சதி பாக்கியம்' என்கிற "குருவருள்" தந்து பின்னும் வேண்டிய "வரப்பிரஸாதங்களை"யளிக்கிறார்.

"அம்மா' பிக்ஷையா அண்டி உயிர்போஒகுது!
ஊனமில்லா உணர்வு ஒருகொடி தாவேன்'
உயிர்ப்பிச்சை யம்மா! ஊனுணர்வுவேண்டேன் தாயே.
ஆண்டிப்பிச்சை யம்மா' அம்மணமா அக்கொடுக்கனுக்,

[தாயே!

என்று அவர் எல்லாருள்ளத்திலு மிருந்து கொண்டு நிர்வாணநிலை தேட்டுக் கொண்டேயிருக்கிறார். "ஜீவன்முக்தர்" ஒழித்தலே நிர்வாணமாம். ஊனுணர் வொழித்து உள்ளுணர்வானார் அவர் கையேந்தி நிற்கும் கப்பரையோட்டைக் கண்டு, அதில் "27" என்கிற எண் எழுதாமல் எழுதி விளங்குவதைக் கண்ட திசயிப்பார்.

இந்த "27" என்கிற எண் நக்ஷத்திர மண்டலத்தைக் குறிக்கும். 'பஞ்சவிம்சதி பாக்கியம்' பெற்ற, ஷட்விமுகபாவ முணர்ந்த உத்தமர்களுக்கே இதன் மர்மம் விளங்கும். ஐதிக புராணாதிகளில் அவர் கையேந்தி நிற்கும் கப்பரையை ப்ரம்மாவினுடைய தலையோடு என்று சொல்வர்.

ஆதியில் கடவுள் ப்ரம்மாவை ஐந்து தலைகளோடு தனக்குச் சமானமாக விருக்கவென்று சிருஷ்டித்தார். ஆனால் "சதுர்வேத வஞ்சன்" எனப் பேர்பெற்ற ப்ரஹ்மன் பொய் சொல்லவே, அவனது ஐந்தாம் தலையைப் பைரவர் மூலமாய்க் கொய்து அந்த மண்டை யோட்டைத் தான் பிச்சை யெடுப்பதற்கான கப்பரை யோடாகத் தமது கையில் தானே வைத்துக் கொண்டார். ப்ரஹ்மாவின் ஐந்தாவது தலை நக்ஷத்திரமண்டலத்தை யளாவி அம்மண்டலத்தைத் தன்னிலடக்கிக்கொண்டிருந்தால், நக்ஷத்திரங்களின் மொத்த சங்கியையான "27" அந்தக் கப்பரை யோட்டில் எழுதாமல் எழுதப் பெற்றிருக்கிறதென்பர். "25" என்கிற எண் "குருவருளையும்," '26" என்கிற எண் "ஜகத்பாவத்தையும்" குறித்தது போல, "27" என்பது மூலாவரணமாம் "மறைப்பு" சக்தியைக் குறிக்கும். இதையே உலகத்தார் மரணம் என்றும், யமன் என்றும், யமதர்மராஜா என்றும் சொல்லுவர். இந்த யமனும் மிருத்தியுவை வென்றவர் மார்க்கண்டேயர். தர்ம சிந்தையே உருவெடுத்தவரான மார்க்கண்டேயருக்காகக் காலனை யுதைத்ததனால், கடவுளுக்குக் "கால காலன்" என்கிற திருநாமம் உண்டாயிற்று "ஷட்விம" (26) ரூபமாயுள்ள ஜகத்பாவத்தை யறிந்தபின், (27) ரூபமாயுள்ள மரணத்தை யறிய வேண்டும். மரணத்தை யறிந்து (சிலுன்வயி லறையப் பெற்று) அஃதை வென்றவர் (அதற்குப் பின்னும் பிழைத்திருந்தவர்) யாரோ, அவர் சுத்தாத்மனும். அவரை மார்க்கண்டேய ரென்றாலும் சரி, கிறைஸ்ட் என்றாலும் சரி, சுப்ரஹ்மணியர் என்றாலும் சரி, ஞானசம்பந்தர் என்றாலும் சரி, எப்பெயரிட்டு எவ்வித மழைக்கினும் அவர் கடவுளின் ஏகபுத்திரரும், 'ஏகமேவாத்விதிய'மாயுள்ள கடவுளுக்குப் பிறக்கும் பிள்ளை "ஏகபுத்திரனே" யாவன். விக்நராஜா வொருவர் இருக்கிறாரே யென்றால், அவர் பாரமார்த்திக ப்ரஹ்ம ஸ்வபாவராதலால், அவர் தம் பிதாவிலும் வேறானவரல்லராம். ஆனால் சுப்ரஹ்மண்யஸ்வாமிமட்டும் வேறே என்றால், அல்ல! ஆயினும் தேவகாரியமாக உதித்தவராதலால், அவருக்குக் காரியத்திருமேனியுண்டு. விக்நேசுவரர் எப்பொழுதும் காரணஸ்வரூபியே! இங்கே தத்துவார்த்தமாயுள்ளதைச் சுட்டிச் சொன்னோம். இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டுமானால் மிக விரியுமெனச் சுட்டிக்காட்டி விட்டோம்.

———:-:———

THE LALITA PUBLISHING CO.,
Sole Agents and Managers,
Lalitalaya, 19, Adam St., Mylapore, Madras, S.
Notice is hereby given that owing to the large number of petty and unscrupulous adventurers in the book-trade, and increasing piracy, the D. K. Agency, to protect its interests, has been obliged to reorganise its well-established publishing business by placing it under the watchful care of the Lalita Publishing Co., as Sole Agents and Managers. Every article first published in the *Viveka-Chintamani* has "subsisting copyright" which is vested solely in the name of the Editor and Publisher. To print any such article or cause it to be printed or have the same in possession for sale or hire by any one without proper authority from the Editor, is an actionable wrong and an offence under the Indian Press and Copyright Acts. Please note the Tamil form of our Name and Style, which is registered, is "Lalita Vilasa Vidya Sangam." "லலிதா விலாச வித்யா சங்கம்," லலிதாலயம், 19 ஆடம்தெரு, மைலாப்பூர், சென்னை.

In the Holy Presence of Death.

யமதரிசனம்.

யமாயநம:

"யமாய தர்மராஜாய ம்ருத்யுவே சாந்தகாய ச-
வைவஸ்வதாய காலாய ஸர்வபூத க்ஷயாயச-ஔதும்பராய தத்நாய நீலாய பரமேஷ்டிநே-விருகோதராய சித்ராய சித்திரகுப்தாயவைநம:-சித்திரகுப்தாயவை நமோம் நம இதி||."

ஸந்தியா வந்தன மந்திரத்தின் வேதோக்தமான ஜபம் முதி இவைகள் முடிந்தபின் வேண்டியழைத்த காயத்ரி தேவியை யதாஸ்தானம் போகும்படி விடைகொடுத் தனுப்பி விட்ட பிறகு, உபஸ்தான (துதி) மந்தரத்துக்குப் பின், லோகயாத்ரை நிர்விக்நமாய் நடக்கும் பொருட்டு திசைகளுக்கு நமஸ்காரம் செய்து 'திக்குபாலகர்களான' தேவதைகளுக்கும் நமஸ்காரம் சொல்வது சம்பிரதாய மாயேற்பட்டது. இதில் தெற்குத்திசைக் குரியவரான யமனுக்கு நமஸ்காரம் சொல்லும் மந்திரத்தை மேலே யெடுத்தெழுதி யிருக்கிறேன். அதன் பொருள் சுலபம். யமனுக்கு நமஸ்காரம். யமன், தர்மராஜா, மிருத்யு, அந்தகன், வைவஸ்வதன், காலன், ஸர்வபூதக்ஷயன், ஔதும்பரன், தத்நன், நீலன், பரமேஷ்டி, விருகோதரன், சித்ரன், சித்திரகுப்தன் என்று பேர்கள் பெற்ற யமனுக்கு நமஸ்காரம். நிஜமாக அந்த சித்திரகுப்த னீறாகவுள்ள நாமங்கள்தரித்த யமனுக்கே நமஸ்காரம், நமஸ்காரம். அதாவது பன்முறையும் அந்த யமனையே நமஸ்காரம் செய்து துதிக்கிறேன் என்பது பொருள். யமனை யறியாமல் அவனுக்கு நமஸ்காரம் எப்படிச் செய்வது? அவனை யறிந்ததற்கடையாளமாக அவனது நாமங்களைச் சொல்லி அவனுக்கே நமஸ்காரம் செய்கிறேன் என்று உறுதி கூறுகிறான். யமனுடைய பேர்கள் ஒவ்வொன்றும் அவன் தொழில்களைக் குறிக்கும்.

1. யமன்=(ஸ்ரீ தேஷதாத்மகனாயிருந்து) அடக்கியாளுவோன்.
2. தர்மராஜா=(தர்மத்தை நிலைநாட்டச்செய்வோன்) தாமத்தினால் உலகத்தை ரஞ்சிப்பவன்.
3. மிருத்யு=மரணத்தை யுண்டு பண்ணுகிறவன்: மரண ஸ்வரூபி.
4. அந்தகன்=முடிவையுண்டு பண்ணுமவன்: முடிவாயிருப்பவன்.
   அப்படி யென்றால், 'லோகயாத்திரைக்கு முடிவு' என்றபொருள்
5. வைவஸ்வதன்=விவஸ்வான் = சூரியன்) சூரியபுத்திரன்.
6. காலன்=காலத்துக்கு அதிகாரியா யிருப்பவன்.
7. ஸர்வபூதக்ஷயன்=எல்லா பூதங்களையும் நசிப்பிக்கப்பட்டவன்:பூதஸம்ஹாரன்.
8. ஔதும்பரன்=(உதும்பரம் அத்தி) அத்திமரத்தில் வஸிப்பவன்.
9. தத்தினன்=உலகத்தைத் தரிப்பவன்.
10. நீலன்=நீலவர்ண மேனியன்: இருள் வடிவினன்.
11. பரமேஷ்டி=மேலானபதத்திலிருப்பவன்.
12. விருகோதரன்=(விருகம்=செந்நாய்) செந்நாயின் வயிறு பெற்றவன்.†
13. சித்ரன்=ஆச்சரிய மகிமையுடையவன்.
14. சித்திரகுப்தன்=ஆச்சரியத்தை ஆவரணமாகவுடையவன் (மாயா விசித்திரன்—என்றபடி.)

இப்படியாகப் பன்னான்கு நாமங்களால் ஈரேழுலகையும் ஆண்டுவரும் யமனைத் தரிசிக்க வேண்டில் அது சுலபத்தில் கிடைக்குமா? தபோதனர்களுக்கே யன்றி மற்றவர்களுக்கு தர்சனமரியான்: திரிசியமுமாகான். ஸர்வித்திரி யமனைப்பார்த்தாள்: பார்த்ததுமன்றி அவனது தர்மோபதேசத்தாலேயே அவனை வென்

† அதாவது, எவ்வளவு புசித்தாலும் திருப்தியில்லாதவன்—என்றபடி.

ருள், எல்லாத் தர்மங்களும் அன்பு ஒன்றில் அடங்கும். அந்த அன்பே சிவன். அச்சிவமே காலகாலன். அந்தச் சிவத்தைப் பூஜித்து மார்க்கண்டேயன் யமனை வென்றான். ஸாவித்ரி மார்க்கண்டேயர் இவர்களிருவரும் யமனை வென்ற சிரேஷ்டர்கள். இவர்களைத் தவிர (அதாவது, இவர்கள் சென்ற மார்க்கத்தைத் தவிர வேறு விதமாய்) யமனை வென்றவர்கள் யாருமில்லை. அதாவது, மிருத்யுவை (மரணத்தை) வெல்ல இரண்டே மார்க்கமுளவாமென்பது கருத்து. ஒன்று ஸாவித்திரி மார்க்கம்: மற்றொன்று மார்க்கண்டேய மார்க்கம். முன்னது காலவந்தனம் எனப்படும். பின்னது காலவஞ்சனம் என்று யோகதர்சநங்களில் சொல்லப்படும். காலத்துக்குட்பட்டுக் காலனை வெல்வது காலவந்தனம். காலத்தைக்கடந்த கடவுளை வழிபட்டுக் காலனைவெல்வது காலவஞ்சனமாம். ஸத்தியவான், மார்க்கண்டேயர் இருவர் விஷயத்திலும் யமதர்மராஜா தன் விதிக்கு (கால தர்மத்துக்கு) விலக்காக நடந்து கொண்டான். ஸத்யவான் விஷயத்தில் ஸாவித்ரியின் அளவு கடந்த அன்பி லீடுபட்டவனாய் அவளுக்குக்கொடுத்த தன் அனுக்ரக வாக்கைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு—அதாவது, அன்பிலீடுபட்டவனாய் ஸத்யத்தைக் காக்க வேண்டி—தன் கால சக்ரத்தை நிறுத்தி காலாதீதமான நிலையை யுணரும்படியான பாக்கியமளித்தான். இது காலவந்தனத்துக் குகந்தளித்த வரன்.

மார்க்கண்டேயனோ காலனைச்சிந்தியாமல் சிவத்தையே சிந்தித்து வந்தவன். கால நியமப்படி அவன் முடிவுகாலம் வந்தபொழுது காலாந்தகன் தன் கடமையைச் செலுத்த வந்தான். ஆனால் மார்க்கண்டேயன் ஆதியந்த மில்லா யெம்பிரகாச வெளியில் சிவதரிசனம் கண்டு காலத்தைக் கடந்த காலாதீதனாய் விளங்கினான். யமன் காலத்துக்குள்மட்டும் அதிகாரியாதலால், கால்வரையரைப்படி நடந்து கொள்வானானான். ஆனால் காலனறியாமல்தானே காலத்தின் கோட்டை (வரையரையை) க்கடந்து விட்டான் மார்க்கண்டேயன். இதைக்காலன் உணர்ந்திலன். ஒரு ராஜாங்கத்திலிருந்து அங்கு இராஜத்துரோக குற்றம் செய்தவன் அந்த ராஜாங்க எல்லை கடந்துபோய்விட்டால், மற்றொரு ராஜ்யத்தின் எல்லையை மிதித்த அவனை இவ்விராஜாங்கத்தார் பிடிக்கவோ, விசாரிக்கவோ, தண்டிக்கவோ யாதும் செய்யச் சக்தியற்றவர்களாகிறார்கள். அப்படி யத்துமீறி நடந்துகொண்டால் இரண்டு ராஜாங்கங்களுக்கும் மட்டுமல்ல, எல்லா ராஜாங்கங்களும் சம்பந்தப்படும்படியான சண்டை யுண்டாகும். அது போலக் காலன் ராஜ்யத்தைக் கடந்தவர்களை (காலாதீதமானவர்களை) ப்பிடிக்க காலனுக்கு அதிகாரமில்லை. அவன் அத்துமீறி நடந்து கொண்டதால், காலாதீத ராஜ்யத்துக்கு அதிபதியான அனந்தப்ரஹ்மமாகிய கடவுள் அந்தக்காலனைக் காலாலுதைத்துக் கண்டித்தார். காலம் சக்கரம் போல் சுழலும் ஸ்வபாவமுள்ளது. அதற்குள்ள சுழலும் சக்தி வாயு (கால்) அம்சமாதலால், காரியத்தைக் காரணத்தால் தடுத்துக் கண்டித்தனர். மஹாதீரர்களான யோகிகளே காலவஞ்சனம் செய்ய யோக்கியராவர். மற்றவர்களெல்லாம் ஸாவித்திரியைப் போல் காலவந்தனத்தினாலேயே கடைத்தேற வேண்டும்.

இங்கே மிருத்யுவை வெல்லுதல் என்றால் என்னவென்று சற்று விசாரிப்பது ஒக்கும். பூதசரீரம் விழுந்துபோவதையே உலகத்தார் மரணம் என்கிறார்கள். லிங்க பூத க்ஷயனான யமன் பூதமயமான தேஹத்தை நாசஞ்செய்து அங்குஷ்டப் பிரமாணமான ஜீவனைக் கொண்டு போகிறானென்பது வாஸ்தவம். ஆனால் ஜீவனுக்கு நாசம் ஒன்றும் வருகிறதில்லை. ஜீவோபாதியான அவித்தை அந்த ஜீவனோடுகூடவேதானிருக்கிறது. அவித்தியா நாசத்தாலன்றி ஜீவனுக்கு (பிறப்பிறப்பினின்றும்) விடுதலையில்லை. ஆதலால் பூததேஹத்தை யொழிப்பதொன்றே ஜீவநாசமாகாது. ஜீவன் உண்மையில் சின்மயனாயிருந்து அவித்தையில் பிரதிபிம்பித்ததனால் சிதாபாஸன் என்று பேர்பெற்றவன். ஜீவநாசம் என்றால் ஜீவனுடைய உபாதிக்கு நாசமுண்டென்பதைக் குறிக்குமேயன்றி சுத்தாத்மனான நிருபாதிக கூடஸ்தருக்கு நாசம் என்பது ஒருகாலத்திலு மில்லை. ஆகையால் "மிருத்யுஜயம்" என்று காலசக்ரத்தை நிறுத்தும் வல்லமைக்கே சொல்லத்தகும். காலதேச பரிச்சேதங்களுக்குள் காலசக்ரத்துக்கு உண்மையான அதிகாரி யமதர்மராஜாவாதலால், அவனதிகாரத்தை அவனருளால் வெல்லலாமேயன்றி வேறுவிதமாக வெல்லமுடியாது. இப்படி யமனருளால் காலசக்ரத்தை வென்றவன் நசிகேதஸ் (நசிகேதன்.)

இவன் தர்மலோபம் செய்த தன் பிதாவுக்கு தர்மலோபஞ் செய்வதால்வருங் சேட்டையெடுத்துரைக்க, அவர் கோபங்கொண்டு, "ஆனால் உன்னை யான் யமனுக்குருத்தத்தம்செய்து கொடுத்துவிட்டேன் போ!" என்று சொல்ல, பிதுர் வாக்கிய பரிபாலனார்த்தம், நசிகேதஸ் "அப்படியே ஆகுக!" வென்று யமபுரம் சென்று (காலத்தின் வரையரைக் கோட்டையுணர்ந்து) அந்த ஸ்தானத்துக்கு அதிஷ்டான தேவதையான யமதர்மராஜாவின் தரிசனத்துக்குக் கார்த்துக்கொண்டிருந்தான். மார்க்கண்டேயன் விஷயத்தில் உதைபட்டுணர்ந்த யமன் பிரஹ்மத்தியானியாகிய பிராஹ்மணன் ஒருவன் தன் வீட்டு வாசலில் (அதிஷ்டான பூமியின் ஆந்தர வெளியில்) காத்திருக்கக் கண்டு அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச்செய்து யமதரிசனம் பெற்றவர்கள் வெறுங்கையாகத் திரும்பலாகாதாகையால் அவனைத் தனக் கிஷ்டமான மூன்று வரங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளும்படி உத்தரவு கொடுத்தான்,

இப்படி யவனுடைய அனுக்கிரகம் பெற்ற நசிகேதஸ், ஹிருதயசுத்திபெற்ற விவேகபுருஷனாதலால், தனது நித்யாநித்யவஸ்துவிவேக பூரணத்தால், அநித்தியப் பொருள்களையெல்லாம் விடுத்து, மரணம் என்ற காலமுடிவுக் கப்பாலுள்ள ஆத்ம ரகஸியத்தைத் தனக்கு விளங்க வுபதேசிக்கும்படி முதல்வரன் கேட்டுக்கொண்டான். யமதர்மராஜாவும் ஹிருதய பரிசோதனைசெய்து அவனுக்கு அந்த ரஹஸ்யத்தையுபதேசித்து, மற்ற வரன்களையுங் கொடுத்து, அவனுடைய யோக தீர பராக்கிரமத்துக்கு வியந்து, அப்பா இதுமுதல் உன்னைப்போல் வாசிவசம் செய்து என்னுடைய தரிசனம் காணத் துணியும் தீரர்கள் உபாசிக்கும் அக்கினிக்கு நாசிகேதாக்னி யென்று பேர் வழங்கட்டுமென்று அவன் தன்னிடம் வந்து தனது தரிசனம் காணக்கிடைத்த இரகஸியத்தை ஸத்துக்களான யோகிகள் மர்மமுணர்ந்து அனுஷ்டிக்குமாறு "நாசிகேதாக்னி யுபாஸனையை" யேற்படுத்தினார்.

இந்த நாசிக்கேதாக்னி யுபாஸனையானது மிகவும் பரமரகஸியமானது. ஸத்துக்களும் ஸாதுக்களுமான யோகதீரர்களே அந்த உபாஸனை செய்ய அதிகாரிகளாவர். மற்றவர்களுக்கு அதிகாரமில்லை. அதிகாரமற்றவன் குப்தவித்தையில் பிரவேசித்து யத்தனித்தாலும், அவனுக்கு யோக்கியதை யுண்டாவென்பதை விசாரிக்காமல் அவனுக்கு குப்தவித்தையின் இரகஸியங்களை யொருவர் உபதேசித்தாலும், உலகுக்குச் சொல்லிமுடியாத அநர்த்தம் விளையுமாதலால், இவ்விருவர் முயற்சிக்கும் பக்கம் விளைக்கவென்றே குப்த யோகினிகளும், குப்த தர யோகினிகளும் சதா குப்தவித்யேசுவரியைக் காத்துக்கொண் டிருக்கிறார்கள். இந்த ஆவரண சக்திகள் தங்களுடைய இந்திரஜால மஹேந்திரஜால முதலான மாயாஜால வித்யைகளால் அநருகர்களான முறட்டுத் துணிச்சற்காரர்களைத் தங்கள் மோகவலையில் சிக்கவைத்து

அவர்களுக்கு காம்யசித்தி முதலான இஷ்டசித்திகளைக் கொடுத்து குப்த வித்யையின் மானத்தை (ரகஸியத்தைக்) காப்பாற்றி வருகிறார்கள்.

நாசிகேதாக்னி யுபாஸனையினால் யமபுரம் சென்று யமதரிசனங் கண்ட நான், யமனை தர்ம ராஜாவாகவே பார்த்து மிகமகிழ்ந்ததுண்டு. அவனுடைய இருள்வடிவம் அவனுக்கு ஸ்வபாவமாயுள்ளதல்ல. மோகாந்தகாரத்தினால் சூழ்ந்தவர்களுக்கு அவன் இருள்வடிவாய் பயங்கரமாய்த் தோற்றுகிறானேயன்றி நசிகேதஸைப் போன்ற யோகதீரர்களுக்கு அவன் தர்மஸ்வரூபியாக விளங்குகிறான். அவனுடைய நீலமேனி சுத்தஹிருதயமுள்ள தர்மிஷ்டர்களுக்கு ஆகாசவடிவினதாகத் தோற்றும். யமபுரம் என்று சொல்லும் காலாந்த (காலத்தின் எல்லை) பூமியையாகிய அந்த நீலாகாசத்தில் நான் ஆகாசகமனஞ் செய்தகாலத்தில் அலையோய்ந்த சமுத்திரத்தில் மிதக்கும் மரக்கலம்போல் நிச்சல தேஹத்தோடு (சித்தவிருத்தி நிரோதன சித்தியால் இது பெறற்படும்) மிதந்துகொண்டு ஸம்ஸாரம் என்கிற ஸாஹரத்தின் கரையைக்கண்டு களித்ததுண்டு.

ஆனால் நாசிகேதாக்னி யுபாஸனைக்கு ஆவரண பூஜை அவசியமில்லையாதலால், அந்த அக்கினி மத்தியில் வசிக்கும் குப்தவித்யேசுவரியைச் சூழ்ந்துள்ள யோகினிகணங்களை யான் வந்தனை வழிபாடுகளால் அனுகூலப்படுத்திக் கொண்டதில்லை. பெரியஇடத்து வேலைக்காரர்களைப் பாராமரிப்பாய் விடுவது எப்பொழுதும் அநர்த்த ஹேதுவுக் கிடமாமென்பது என் விஷயத்தில் உண்மையாயிற்று.

வைசாகி மாசம் காலாந்தேதி ஜகத்துக்கெல்லாம் ஒரு கண்போல விளங்கும் ஸவிதாதேவதையான சூரியபகவான் அக்னி நக்ஷத்திரத்தில் (கிருத்திகையில்) பிரவேசித்து உச்சியில் வரலும், மனதுக்கதிஷ்டானமான சந்திரன் மூன்றுங்கலை யிழந்த சமயம்பார்த்து ராகத் தோஷம் பற்றச் செய்தது. அப்பொழுதுண்டான அனுராகத்தில் மஹாமாரிகண்ட ஒரு குழந்தையின் மீது அனுதாபத்தால் மனம் பதிந்து யோகஸம்யமத்தில் ஐக்கியம்ஸம்பவிக்க, தேஹம் காய்ந்த மரத்தில் காட்டுத்தீ பற்றிக்கொண்டதுபோல் தாபாக்கினியால் எரியலாயிற்று! "மஹாமாரி" என நன்றாகப் பேரிட்டார்கள்: அப்பேருக் கேற்கவே தேஹ ரக்தத்திலுள்ள ஜீவாணுக்களை நன்றாக மாரகஞ் செய்தாள். ஜீவாணுக்கள் ரக்தத்தில் உஷ்ணதிக்கத்தினால் மரிக்கவும், ரக்தத்தில் கொதிப்பும் கொதிப்பு முண்டாயிற்று. கொதிப்பு கொதிப்புண்டானால் ஜ்வரமும் தானே வரும்! இது தேஹ தர்மம். அஹம் சீறியே குளிர்ந்த பின் தேஹம் சுட்ட சாம்பலாய் நீற்றுப் போகும். இந்த அவஸ்தையில் குப்தயோகினிகளின் கிருத்திரமத்தால், ரஸபாஷாணமும் ரக்தத்தில் சேரத்தக்க வைத்திய சிகிச்சை கிடைத்தது. ஆடியோய்ந்த பாம்பைப் பாடியெழுப்பாது குச்சியெடுத்துக் குத்தி வதைக்கும் குதர்க்கச்சிறுவர் செய்கைபோல், ரஸபாஷாணம் ரக்தத்தில் சுவாவும், நாடி நரம்புகளெல்லாம் நாக ஸர்ப்பம் போல் சீறிக்கொண்டு கிளம்பின! எழுபத்தியீராயிரம் பாம்புகள் ஏககாலத்தில் சீறிச் சினந்து ஒருவனை யுள்ளிருந்து பிடுங்கினவென்றால், அவன் எவ்வளவு சுகமனுபவிப்பானோ அவ்வளவு சுகமும் அநிச்சாப்பிராரப்த வசத்தால் அனுபவிக்கலானேன். ஆகாச ரூபியாய் தர்மஸ்வரூபியாய்த் தரிசனங்கொடுத்த யமன், காலாந்தகனாய், ஸர்வபூதக்ஷயனாக வந்து தேஹத்தின் நாடி நரம்புகளில் புகுந்து இந்த ஒன்பது வாசற் கோட்டையை நிர்த்துளி செய்யக் கண்டேன். அந்தர்முகத்தில் ஆனந்த சுந்தரியாய் அனுகூல தேவதையாயிருந்த குப்தவித்யேசுவரி, மனம் பதிர்முகப்பட்ட பொழுது அவித்யா ஸ்வரூபியாய் அநர்த்தம் விளைப்பவளாய்த் தோன்றினாள்.

இந்திரியங்களெல்லாம் எரிந்து போயின: உட்கருவிகளெல்லாம் உலர்ந்து போயின: ஆலகால விஷமதீண்டியது போல் தேஹமெல்லாம் தீப்பற்றி யெரிந்தது. எரிச்சல் பொறுக்க மாட்டாமல் தண்ணீர்த் தொட்டியில் அமிழ்ந்து கிடந்தேன். தாபஸாக்னியோடு, தாபாக்னியும் மருந்தின் வேகாக்னியும் சேரவே, அக்னி தாபம் பொறுத்தலரிதாய்விட்டது. கோர ரூபமான யமன் பஹிர்முகப்பட்ட மனதுக்குப் பார்க்க பயங்கரமாயிருந்தான். நான் எப்பவும் சாவுக்கு பயப்பட்டவனல்ல! ஆனால் இப்படிப்பட்ட சாவை நான் ஸ்வப்னத்திலும் விரும்பினவனல்ல. ஸ்வஸங்கல்பமின்றி யொன்றும் தானாய் வந்து சேராது என்கிற ஸதரியத்தினால், தேஹத்துக்கு வேண்டிய உபசாந்திகளைச் செய்துகொண்டு கட்டுக் கடந்தோடிய மனசை முன்னால் வசப்படுத்திக் கொண்டேன், மனசு வசப்படவும் தேஹத்தின் தாபாக்னி சாந்தப்படலாயிற்று. சாந்தப் படவும், சாந்தகுணசம்பந்நனான ஒரு யுவனோடு மனங்கலக்கக் கண்டு அவனை யழைத்துவந்து உண்மையைச் சொன்னேன். அவன் "அஷ்டாங்கஹிருதயத்" திலிருந்து ஒரு ரகஸியத்தை யெடுத்துச் சொல்ல, அது எனது ஆந்தரபாவனைக்கு மொத்திருக்க, "கிருத கிருத்திய பூசனையால் திருவருட் பாலுண்டேனே" யென்ற திருமந்திர உபதேசத்துக்கு நூதனமாக ஒரு அருத்தம் உதித்தது. "கிருத கிருத்தியம்" என்பதற்குப் பதார்த்தம் செய்தால் (கிருதம்=நெய்; கிருத்தியம்=யஜ்ஞம்) "நெய்யினால் ஹோமம் செய்வதாம் யஜ்ஞம்" என்றும் பொருள் தரும். அந்த யஜ்ஞத்தை தேஹத்திலுள்ள வந்நிகலைகளைத் தியானித்து, சுத்தநெய்யைக் கொண்டு ஜாடராக்னியில் ஹோமஞ் செய்து பூஜித்தேன். அக்னியின் தாபமும் குறைந்தது. உட்கருவிகளெல்லாம் வெந்து நீறானவை வேக்காடு தணிந்து, பட்டமாம் துளிர்த்தாப்போல், துளிர்விடலாயிற்று. இன்றைக்குச் சரியாக ஒரு மாசமாயிற்று: எல்லாம் வெந்து நீறாகச் சாம்பலாய்த் தஹித்த ஜாடராக்னி, சாந்தியடைந்து, செந்தழல் விட்டு ஜ்வலிக்கத் துவக்கியது. நாடி நரம்புகளிலெல்லாம் உயிர்பற்றி ஊனை வளர்க்கலாயிற்று. மனமோ புடம்போட்ட தங்கம் போல் அழுக்கு நீங்கிப் பிரகாசிக்கலாயிற்று. இப்படி அதிர்சயமாயுள்ள யமதரிசனம் கண்ட காட்சியையும் அனுபவத்தையும் உள்ளதுள்ளபடி வஞ்சனையின்றி வரைந்தேன். கண்டவர் கேட்டவர் காணாததைக்கண்டவர் அவரவர் உள்ளம்போல் உண்மையை ஓர்ந்துணர்வாராக. ஜீரணமான தேஹத்தை ஜீரணோத்தாரணம் செய்யும் வழியைப்பற்றி யிங்கு சொல்வதற்கு இடமில்லை.

K. S. S. A.

ஸ்ரீ லலிதாம்பாயை நம:

An Appreciation.

ஓர் வந்தனப் பத்திரம்.

——(:-:)——

பஞ்சவிம்சதி பாக்கியம் பெற்ற-கனம் விவேகசிந்தாமணிப் பத்திராதிபர் அவர்கட்கு வந்தனம்.

ஐயா, தாங்கள் "விவேகசிந்தாமணிப் பத்திராதிபர் நீடூழிவாழ்க" வென்று யான் இன்சொல்லாலியற்றிய "விடுகதைவினாவிடை"களை நன்சொல்லாக மதித்து, அறிஞர் முதல் திதியீறாகக் கூறியுள்ள பதினாறு பதங்களின் நடுவெழுத்தை பீஜாக்ஷரமாகக்கொண்டு யோகஸம்யமத்தில் லக்ஷியார்த்தஞ் செய்து பார்த்ததில் ஷோடசாக்ஷரி தேவியின் பதினாறு கலைகளாய் மாறி யொலிக்குமெனவும்,—

ப் = என்று நடுவில்வந்த சந்தி யெழுத்தை கிண்கிணி யென்கின்ற நாதம் "கப்-கப்"-எனவொடுங்கும் ஐக்கியத்தின் குப்தவித்தியாசித்திரமான ஷோடசி நடுவெழுத்தின் அதிஷ்டானமான "ஸ்மரா" என்னும் அதிதேவதை பிரசன்னமாகுமெனவும், தியானத்தில் மிகவு முயர்ந்தது "நாதானுசந்தானம்" எனவும்,—

"விவேகசிந்தாமணிப்பத்திராதிபர்" என்ற பதினாறு பெயர்களின் பொதுலக்ஷண லக்ஷியங்களை "குக்குடாய நமஃ" என்று சிந்தையொடுங்கச் சேர்த்துக் கோர்த்துப் பார்க்க ஒரு "பிரம்ஹ சூத்திரம்" பிறக்கு மெனவும்,-வேதப்பொருள்களுக்கு ஸ்ரீ வித்யாரணயசுவாமிகள், ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள், மாதவாச்சாரியர், இராமாநுஜாச்சாரியர் முதலான மஹான்கள் பாஷ்ய மெழுதி யிருப்பதுபோல ஞானத்மகமாகப் பொரு ளிலக்கணங்களை யெடுத்துக்காட்டி 1911-ஆ மேஷத்திற் பிரசுரஞ் செய்யப்பட்டுள்ள 19-வது புத்தகம் 2-வது சஞ்சிகையின் 57-வது பக்கம். 1-வது கலத்தில் "மௌனகுருவாக்குத்துதி" என்ற தலைப்பின் கீழ் வரையறுத்து வியாக்கியானம் செய்திருக்கிறதைப் பார்த்து மகிழ்ந்து அதற்காக தங்களுக்கு நான் மனஸ் பூர்வகமாக வந்தன மளிக்கிறேன்.

சர்வலோக சரண்யனான பகவான் சதாகாலமும் முன்னின்றுதவிபுரிவாராக.

தங்கள்விதேயன்

V. M. R. A (பழனிஸ்தலம்)

On Saintliness
Or Colourless Perfection of Purity.

வெள்ளியம்பலம்.

(நிர்க்குண நிர்மலம்.)

"வெள்ளிபொன் மேனியதொக்கும் வினையுடைய உள்ளுடம்பி னாய வொளி"—ஔவைகுறள்.

ஔவையார் உள்ளுடம்பினிலைமையைப் பற்றிச் சொல்லும் பொழுது "கற்கலாம் கேட்கலாம் கண்ணாரக்காணலாம், உற்றுடம் பாலாய வுணர்வு" என்று சொல்லிப், பிறகு மேற்குறித்த குறளை இரண்டாவதாகச் சொல்லியிருக்கிறார். பின்னர் இவ்வுள்ளுடம்பைப் பற்றி "சென்றுண்டு வந்து திரிதரும் உள்ளுடம்பு, என்றுங் கெடாத திது" என்று சொல்லியிருக்கிறார். இதனால் "உள்ளுடம்பு" என்றது இரக்த மாம்ஸங்களால் ஆகிய இந்த உடம்பல்ல; ஆனால் இதன் உள்ளே அந்தரியாமியாய், அழிவற்றதாய், முக்திக்கு வித்தாய், மோக்ஷகாரணமாய், கர்மத்துக்கும் விளைநிலமாய், நவவ்யூகாக்ருத நேர்மையுறபாய், பொய்க்கெல்லா மிருப்பிடமாயும், உள்ளதற்கு (உண்மைக்கு) ஓர் வித்தாகவும், ஸத்பத்துக்குள்ளிருந்தும் மாயாரூபமுடையதாயும், வாயுவினாலாயதாயுமிருப்பது இந்த உள்ளுடம்பு. இத்தனையும் ஔவையார் சொல்லியிருப்பதின் கருத்தே யன்றி வேறல்ல. அனுபவத்திலும் இவற்றின் உண்மையை யோக ஸாம்ராஜ்யம் பெற்ற தீரபுருஷர்கள் உள்ளபடி யுணர்ந்துகொள்ளலாம். ஔவை சொல்லியபடி இவ்வுள்ளுடம்பின் உணர்வினால் "கற்கலாம், கேட்கலாம், கண்ணாரக்காணலாம்." சிரவணம் (கேட்டல்), மனனம் (கற்கல்), நிதித்தியாஸனம் (சமாதியில் சாக்ஷாத்கரித்தல்) ஆகிய மூன்றுக்கும் ஆதாரபூதமா யிருப்பது இந்த உள்ளுடம்பு. இங்கே முதலாவது கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு: அது என்ன வெனில், இந்த உள்ளுடம்பானது "வாயுவினாலாயது." இதை "சித்ததேஹம்" என்று சொல்வார்கள். அதாவது மிருத்யுவை ஜயித்த தேஹம்: அப்படியென்றால், அழியாத தேஹம். தேஹம் சுபாவமாய் அழியத்தக்கது: ஜநநமரணத்துக் குள்ளானது. அழிவுக்கும் ஜநநத்துகதும் காரணமாயிருப்பது மரணம் (மிருத்யு). மிருத்யு ஜயம்பெற்றால் "என்றுங் கெடாத" தாகிய "உள்ளுடம்பைக்" கொண்டு "சென்றுண்டு வந்து திரிதரும்" செயல்கள் எல்லாம் செய்யலாம். வினையியற்றி, வினைப்பயிர் செய்யவும் செய்யலாம்: அந்த வினைப்பயனை அனுபவித்தலும் ஆகும். அல்லது மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைத் தேடி "அல்லற் பிறப்பை யகற்றுவிக்கும்" ஆதியனாதியாயுள்ள ஜடதத்துவங்களை "ஆய்ந்தாயல்" என்னும் பூரணவிசாரம் செய்து கடைத்தேறவும் தேறலாம். வாயுவினாலாயதா மிவ்

வுள்ளுடம்பினுள் வாழும் "நவவ்யூகம்" என்று சொல்லும் நிலையில்லாத நவாத்மகமான தத்துவக் கூட்டங்களைக் கொண்டு பொய்யான மாயா தேஹத்தைச் சங்கற்பமாத்திரத்தா லுண்டு பண்ணி அச்சங்கற்ப விகற்பத்தாலேயே அழிக்கலாம். இந்திரஜால மஹேந்திரஜால மாயா ஜாலங்களெல்லாம் செய்யலாம். ஏனெனில் "பொய்க்கெல்லாம் பாசனமாய்" (இருப்பிடமாய் உறவாய்) இருப்பது இவ்வுள்ளுடம்பு.

இவ்வளவு சித்திமுத்தி வித்தைகளுக்கெல்லாம் காரணமாயிருப்பது என்றும் அழியாத இவ்வுள்ளுடம்பேயாம். இதைக்கொண்டு ஒரு கற்பகால முழுவதும் வாழ்ந்திருக்கலாம்: (ஞான வாசிஷ்டத்தில் புசுண்டயோகி யென்னும் காக்கையின் கதையை வாசித்துப்பார்க்க.) இந்த வுடம்பைப் பெறுவதே யொருபெரும்பேறாகக் கருதி யோகிகள் இதற்காக அகோராத்திரம் (இரவும் பகலும்) இடைவிடாது யோக சாதனங்களை யனுஷ்டித்து அப்பியாச யோகத்திலிருந்து பாடுபடுகிறார்கள். இவ்வளவு பாடும் பட்டு அப்பியாஸ முதிர்ச்சியில் யோகவித்தி பெற்றபின், இந்த உள்ளுடம்பைக் கொண்டு அவன் என்ன செய்யப்போகிறான் என்பதுதான் இப்பொழுது நமக்கு முக்கிய விசாரம்.

"நல்வினையுந் தீவினையுமுண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு."—என்றதனால்,

அவன் பாபபுண்யங்களைச் செய்து அவற்றின் பயனை யனுபவிக்கலாம். ஊனுடம்பினுள்ளவர்கள் அனுபவத்தைவிட இவனுடைய அனுபவம் நுண்ணிய வுணர்ச்சியுடைமைபற்றி பல்கோடி மடங்கு அதிகமான வுணர்ச்சியோடு அந்தப் பாபபுண்யங்களின் பயனை இவன் அனுபவிக்கத் தக்கவனாகிறான். அப்படியே பாபபுண்யங்களைச் செய்வதிலும் பல்கோடி மடங்கு அதிக சக்தியுள்ளவனா யிருக்கிறான். ஏனெனில் பூத பௌதிகங்களெல்லாம் குயவன் கை மண்போல் இவன் கையில் அகப்பட்டுச் சொன்னபடி கேட்கும். அதாவது, திருகையிலேற்றின குயவன் கைமண்ணானது அவன் இஷ்டம் போல் பாண்டங்களாக வனையப்பெறுவது போல், பூதபௌதிகங்களான ஜடாத்மகங்கள் இவன் "கிரிசக்ர ரதாரூடனாய்" இருந்து கொண்டு இட்ட வேலைகளைச் செய்யும். அவைகளுக்கு இவனிட்டது பிச்சை! ஆனால் "கிரிசக்ர ரதாரூடனாயிருந்து கொண்டு" என்ற அடைமொழியால், இவன் பிரகிருதி தர்மத்துக்கு விரோதமாய் ஏதும் செய்ய இயலாது என்பது ஏற்படும். அதில் தான் இவனுடைய விஷமத்துக்குத் தக்க கத்திரி யிருக்கிறது. இவன் பிரகிருதி தர்மத்துக்கு விரோதமாய் நடந்து கொள்வானானால் இவன் கொடுக்கைக் கத்தரிக்க "தண்ட நாதை" யென்னும் அதிஷ்டான தேவதை ஆயுதமும் கையுமாகக் காத்துக் கொண்டிருக்கிறாள். "மாமியாருக்கும் ஒரு சாமியாருண்டு" என்கிற வசனப்படி பூத பௌதிகங்களை யெல்லாம் வென்றவனான இவனுக்கும் ஒருகட்டுக் காவலிருக்கிறது. அத்துமீறி நடந்தானானால் அநர்த்தம் உடனேவிளையும் அவனுக்கு. இதில்தான் பிரகிருதிதர்மத்தின் பெருமைக்கு அழகும் விசேஷமும் ஏற்படுகிறது.

துஷ்டப்பிள்ளைகள் பச்சைக் குழந்தையிடம் விளையாடுகையில் அக்குழந்தையின் கண்ணைக் குத்தி காதை யறுத்து மூக்கைப் பிடுங்கி இன்னும் பல்விதமாய் அங்க பங்க முண்டாக ஆபத்து விளைக்கலாம் என்பது வாஸ்தவமானாலும், அந்தப் பச்சைப் பாலகனுக்குத் தன்னைக் காத்துக்கொள்ள அழுகையன்றி வேறொன்றில்லையானாலும், தாயின் கண்ணும் கருத்தும் அக்குழந்தையின் பேரிலே யிருப்பதால், துஷ்டப் பையல்கள் அதிக்கிரமித்து விளையாடினால் அவர்களைக் கண்டிக்கவும், குழந்தைக்குக் கேடு வராமல் காப்பாற்றவும் தாயாரிருக்கிறாள். அவளுடைய அன்பும் ஆதரவும் அக்குழந்தை

க்கு யாதொருதீங்கும் நேரிடாதபடி காப்பாற்ற வல்லதாகும். வீட்டுக் காரியங்களில் உழன்று கொண்டிருந்தாலும் தாயின் கவனமெல்லாம் குழந்தை மேலிருப்பதுபோல், ஜகத்ஜநநியான நம் அருட்தாய் ஜகத் காரியங்களை லீலார்த்தமாக நடத்திக் கொண்டிருந்தாலும் அவளுடைய கண்ணும் கருத்தும் தர்மம் என்கிற குழந்தையின் பேரிலே யிருக்கிறது. அந்த தர்மம் என்கிற பச்சைப் பாலகனை அவள் பெற்று வளர்ப்பவளாதலால், அவளுக்கு தர்மாம்பிகை யென்றும், தர்ம ஸம்வர்த்தனி யென்றும் திருநாமங்கள் ஏற்பட்டன. தர்ம வழிப்பட்டு தர்மத்தை யனுசரித்து தர்மமே தலைகாக்கு மென்கிற பூர்ண பக்தியுள்ளவர்களை "தண்டநாதை" கோலுங்கையு மாயிருந்து காத்துக் கொண்டிருக்கிறாள். ஆகையால் இரவில் தலைசாய்த்துத் தூங்கப்போகுங் காலையில் "தர்மாம்பிகே! தர்மஸம்வர்த்தனி! திரிபுரசுந்தரி! லோகநாயகி! ஹும்மணீ! தாயே!" என்று அவள் திருநாமங்களைச் சொல்லிச் சரண்புகுந்து கண்ணயர்வோரை துராத்மாக்கள், பத்மாசுரனைப் போல் மகா வல்லவர்களானாலும், ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் தர்ம தேவதை அவர்களைத் தூங்கும்பொழுது மடியிற்குழந்தைபோல் வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாளானபடியால் என்க. காயசித்தி பெற்றவர்கள் துராத்மாக்களா யிருந்து மன்பதைக்குத் துன்பமியற்றினு மியற்றலாகுமாதலால், அவர்களது சூழ்ச்சியை வெல்வதற்கான சூக்ஷ்மத்தை முன்னெடுத்துக் கூறிச் சற்று விரிவாய்த்தானே வெளியிட்டுச் சொன்னோம். அன்றியும் இதை யெழுதுமவன் அப்பியாஸாரம்பத்தில் இப்படி "உள்ளுடம்பு" என்று சொல்லும் "காயசித்தி" பெற்ற சில துராத்மாக்களின் உபாஸகர்கள் கையில் சிக்கித் துன்பமனுபவித்த துண்டாகையால், ஸ்வானுபவத்திலிருந்து இந்த துஷ்டப் பேய்களைத் துரத்துவதற்கான அக்னியாஸ்திரம் யோகிகளுக்கு "ஸத்யமே ஜயம்" என்கிற வேதமந்திரமும், குடும்பத்தார்க்கு "தர்மமே ஜெயம்" என்கிற "சிவகவசமும்" அன்றி வேறு இல்லையென்பதை வற்புறுத்திக்கூற விரும்புகிறான். தூயஹிருதயமும் நல்ல சிந்தையு முள்ளவர்களை ஸத்யதேவதையும், தர்ம தேவதையும் இமை கொட்டாது பார்த்துப் பராமரித்துக்கொண்டிருக்கிறார்களென்பது ஸத்யம், ஸத்யம், ஸத்யம். "பனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்பதும் "கெடுவான் கேடுநினைப்பான்" என்பதும் ஸநாதநமான உண்மைகள். இப்பொய்யாமொழிகள் பொய்த்தன வென்பது ஒரு காலத்திலும் ஒரு யுகத்திலு மில்லை!

இப்படிப்பட்ட "உள்ளுடம்பை"ப் பெறலரும் பேறாய்ப்பெற்று அனுபவிக்க வாய்த்த போகஸாம்ராஜ்யபுருஷர்கள் "ஒன்பது வாசலு மொக்கவடைத்து" "அன்பதிலொன்றும் அரனை" யர்ச்சித்து ஜீவன்முக்திபாக்கியம் பெற்று ஜநத்தோடிருந்து வாழ்ந்தும் அஃதோடொட்டாமல் ப்ராரப்த கர்மத்தைப் புசித்துக் கொண்டு "சித்தன்போக்கு சிவன்போக்கு" என்றபடி சிவனடியாராயிருந்து, பரோபகாரமே தொழிலாய், ஜீவகாருண்யமே சிந்தையாய், தம் முக்தி நிலையினின்றும் நழுவாது விதேஹ கைவல்யத்தை யெதிர்பார்த்திருக்கினு மிருப்பர். அல்லது, சூரன், பத்மன், ராவணன், தாருகன் இவர்களைப்போல் அசுரபாவமேலிட்டு தங்கள் யோகசக்தியினால் உலகுக்குத் தீங்கிழைத்து எல்லாரையும் தன் அதிகாரத்துக்குட்படுத்த வேண்டுமென்கிற பேராவாக்கொண்டு அகந்தையை வளர்த்தாலும் வளர்ப்பர். இப்படி யோகசித்தியினால் காயசித்தி (உள்ளுடம்பு) பெற்ற தீர்களை வெல்லத்தான் பகவான் திருவவதாரமாகி வரவேண்டிய தவசியமாக வேற்படுகிறது. யமன் வாய்ப்பட்டிறக்கும் அந்துப்பூச்சிகளான மானிடர்களைக்

காப்பாற்றவும் கண்டிக்கவும் தர்ம்மதேவதை நித்தியாவதாரமாய் எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறாள்.

மேலே சொன்னவற்றிலிருந்து "உள்ளுடம்பு" (காயசித்தி) பெறுதலேயே பெறற்பேறாகவும், சித்தி முத்தியாகவும், மற்ற யாதனுசரீரங்களை விட்டு இந்த உள்ளுடம்பைப் பற்றுதலொன்றையே "கடைப்பிடி" யாகவும் பிடித்துழைக்கிறவர்கள் உலகத்தில் உண்டென்பது விளங்கும். ஸாதுக்களென்றும், ஸந்யாசிகளென்றும், யோகிகளென்றும், சித்தர்களென்றும், பிரஹ்ம ஞானிகளென்றும் பேர்பூனைந்து திரிபவர்கள் எல்லோரும் அனேகமாய் இந்த "உள்ளுடம்புப் பேற்றையே" கடைப்பிடியாகக் கொண்டுழைப் பவர்களாவார்கள். இவர்கள் கிரமமுத்தியை யிச்சிப்பவர்களாய்ச் சொல்லிக் கொண்டு தூமமார்க்கத்தை யனுஷ்டித்துக் காம்யதபஸியற்றி "காம்யஸித்திகளையே" பெரிதாகக் கொண்டாடி, உலகம் அவர் வழிப்பட்டுவா ஆர்ப்பாடங்கள்செய்துழைப்பர். இராவணன் முதலானவர்களெல்லாரும் திரிலோகமும் தம்வசமாகும்படியுழைத்து ஆண்டார்கள். இவர்கள் முக்கியமாய் ஸ்வதர்மத்தை விட்டு ஸஹோதர தர்மத்தை யுபதேசித்துத் திரிவர். இந்த ஸஹோதர தர்மம் எப்படி வந்தது என்று கேட்டதால்தான் சரியான விடை கிடைப்பதில்லை. பாவனுமாத்திரத்தால் வாச்சா உபசாரமான ஸஹோதர உறவைப் பாராட்டினால் "ஸஹோதரதர்மம்" ஏற்பட்டு நிலை நின்று விடுமா? யேசுநாதர் "என் மாமிசத்தைத் தின்று என் இரக்தத்தைக் குடித்தாலன்றி நீ தெய்வலோக ப்ராப்தி பெறலரிது" என்று சொன்னார். அங்கே அவர் "என்" என்று சொன்னது அவருடைய ஏண்சாணுடம்பைக் குறித்தல்ல! ஆனால் "என்றுங்கெடாத" அவருடைய "உள்ளுடம்பைக்" குறித்தே இவ்வசனத்தை யுபயோகித்தார். அந்த உள்ளுடம்புக்கு ரக்தமும் மாம்சமும் ஆவது எது? அது "வாயுவினாலாய வுடம்பு" என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். வாயுவில் நந்த தன்மாத்ரையாம் வாசனையன்றி வேறு கனமில்லையால், அதுவே அதற்கு மாம்சமாம் இரக்தமாவது அதில் பிரதிபிம்பித்து விளங்கும் தேவியின் விமர்ச ரூபமான அருள்வடிவாம். * வாசனுதேஹத்தையுண்டு, அருள்வடிவாம் கருணாரஸத்தைக் குடித்தாலன்றி பதமுக்தி கிட்டாதென்று சொன்னார். அப்படி யென்றாலென்ன? "தொல்லையுடம்பின் தொடர்பை" "ஆய்ந்தாய" அதனாலுண்டாகும் கேவல சைதந்நியத்தினால் (அவ்வுடம்பை சித்தில் லயிக்கச்செய்து) வாசனாக்ஷயம் லபிக்க, விமர்சரூப ஸ்ரீகுருவின் அருள்வடிவான கருணாரஸத்தைப் பானஞ்செய்து தாபத்திரயங்களும் தீர்ந்தாலன்றி சாலோக சாமீப்ய, சாரூப, சாயுஜ்ய பதவிகள் சித்தியாவென்றபடியாயிற்று. ஸதாசிவ சாயுஜ்யம் பெற்ற பின்னரே "சிதக்னிகுண்ட ஸம்பூதை" யான ஸ்ரீகுருவைக்கியம் சித்திக்கு மாதலாலும், ஸ்ரீ தேவியி னருளாலேயே அகண்டானந்த அனுபவமாகிய கேவலமுத்தி சித்திக்கவேண்டுமாதலாலும், அவர் சொல்லியது ஸத்யத்துக்கும் ஸ்வானுபவத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது.

இப்படி காலதேச பரிச்சேதங்களின் எல்லை கடந்த அனுபவத்தைக் காலதேச வர்த்தமானங்களிலேற்றி "எங்கம்மானுத்துக்கொல்லையிலே மஞ்சட்குருவி யூஞ்சலாடுகிறது!" என்கிற விடுகதை விநோத வாச்கைப்போல், வெள்ளியம்பலம் என்ற பேரை "ஞானாசாரியர்களின் மஹாசபையான வெள்ளியம்பலம் (The White Brotherhood) ஒன்று என்றும் உளது" என்று அறியாச் சனங்களுக்குக் காதுகுத்துகிற சமாசாரமாய், சிலர் இவ்வுண்மையை வற்புறுத்திக் காட்டவே உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்திருக்கிறார்கள்" என்று சொல்லி "எங்கம்மானுத்துக் கொல்லை

* செவ்வானமிடும் அதிர்சயத்தை "ஆய்ந்தாய" இந்த இரகஸியம் வெளிப்படும்.

பிலே மஞ்சட்குருவி உஞ்சலாடுகிறது!" என்றாற்போல் புதிர் புதிராய் வார்த்தையைக் கொட்டி யளக்கிறார்கள். அதை நம்மவர்களும் மொழி பெயர்த்து அந்த ஜாலவாக்கை வேதவாக்காக ஜனங்கள் நம்பவேண்டுமென்று திரிகரண சுத்தியோடுழைத்துப் பாடுபடுகிறார்கள்.

"எங்கம்மானுத்துக் கொல்லையிலே பொன்னுங்குருவி (மஞ்சட்குருவி) யூஞ்சலாடுகிறது! போகிறவாள் வருகிறவாள் பிடித்துக் கொண்டுபோகலாம்!" என்று சொன்னதும், குருவியடைக்கப் பொன்னால் கூடுசெய்ய வேண்டுமென்று பிரயத்தனம் செய்த பித்தன் கதையாக, ஊரில் எல்லாரையும் பைத்தியக்காரனாக்கப் பார்க்கிறார்கள்! "அம்மானுத்துக் கொல்லையிலே மஞ்சட்குருவி யூஞ்சலாடுகிறது" என்றால் "எலுமிச்சம் பழம் பழுத்துத் தொங்குகிறது" என்று அருத்தம். அதற்குக் கூடை தேடாமல், பொன்கூடு தேடின பைத்தியக்காரன் கதையாக, நம்மில் பிரம்மஞானம் தேடியலையும் அனேக ஆப்த நேயர்கள் "வெள்ளியம்பலத்தை"நாடி ஹிமாலயம், ஸிக்கிம், திபெத் முதலிய எட்டாக்கையான தேசங்களுக்குப்போய், பித்துக்கொண்ட பிரம்மையிலே உடல் பொருளாவியையும் தத்தம் செய்து தவிக்கிறார்கள். ஐயோ! இவர்களின் அறியாமை யிருந்தபடி யென்ன!

சிதம்பரத்தில் பொன்னம்பலமும் துவாதசாந்தலமாகிய மதுரைமாநகரில் வெள்ளியம்பலமும் பிரதிஷ்டா விதிப்படி ஸ்தாபனமாயிருப்பதாக ஆகம புராணங்கள் கூறும். மேல் ரகஸியத்தை குருமுகமாக அறிந்துகொள்ள வேண்டியது. அப்படியே ஹிமாலயத்திலுமிருக்கிறதென்பது வாஸ்தவம். ஆனால் மனோபலம், பவோபலம் என்கிற இரண்டுக்கும் வித்தியாசமில்லாமல் வார்த்தைகளைக் கொட்டியளப்பதுதான் அநர்த்தம் விளைப்பதா யிருக்கிறது.

(Sd.) ஸ்ரீ ஆத்மாநந்தஸாது.

—:-(o)-:—

FREE FROM BONDS.

The Autobiography of a Taluk Gumastah.

(Special for the Vivekachintamani.)

* அழித்துவிட்ட கழுதை.

ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

(விவேகசிந்தாமணிக்கென்றெழுதப்பட்டது.)

III—கௌமாரம்: உத்தியோகம்.

——(:o:)——

இக்கதையின் முன்னிரு பாகங்களையும் படித்தவர்களுக்கு நான் மூன்றாவது பாகம் எழுத ஆரம்பிப்பது சலிப்பா யிருக்கலாம். வேறு சிலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். "என்னடா இவன் சமாசாரம் ஒன்று மில்லாமல் ஆகாயப்பந்தல் போட்டுக்கொண்டு போகிறான்! மற்றவர்கள் சரித்திரத்தில் நடவாத விசேஷ அற்புதம் இவன் சரித்திரத்தில் என்ன நடந்துவிட்ட" தென்று கேட்கலாம். மற்றவர்களைக் காட்டிலும் என்னிடத்தில் விசேஷமொன்றுமில்லை என்பதுதான் என்னிடத்திலுள்ள விசேஷம். அதாவது ஒவ்வொருவருடைய சரித்திரத்தையும் கவனித்துப் பார்த்து எழுதினால், என்னுடைய சரித்திரத்தின் ரஸத்துக்குக் குறைவில்லாமல் ரஸமாக எழுதலாம்என்பதே. இதுநிற்க. என் குதிரையின் ஓட்டத்திலும் என் ரதம் செல்லும் மார்க்கத்திலும் திருப்தியில்லாதவர்கள் இங்கேயே நின்றுவிடலாம். மற்றவர்களுக்கும் எச்சரிக்கையாக நான்காவதுபாகமும் எழுதுகிற உத்தேச முண்டென்று இங்கேயே சொல்லிவிடுகிறேன்.

"உத்தியோகஸ்தர்" என்கிற பதத்துக்கு என்னுடைய சிநேகிதரான ஒருபண்டிதர் வேடிக்கையாக ஒரு அர்த்தம் சொல்வதுண்டு: "உத்தியோகேநகிரஸ்த:" அதாவது உத்தியோகத்தினாலே பிடிக்கப்பட்டவர் (அல்லது, பீடிக்கப்பட்டவர் என்றாலும் பொருந்தும்): சந்திர சூரியர்கள் ராகு கேதுக்களினால் போல என்பது "கிரஸ்த" என்னும் பதத்தினால் சூசிப்பிக்கப்பட்ட உபமானம். அதனால்தான் பெரிய மனுஷாள் வீட்டுஸ்திரீகள் "உத்தியோகிரஸ்தார்" என்று ஸம்ஸ்கிருதமாகப் பேசுகிறார்கள் போலும். இப்படி அவர் வேடிக்கையாகச் சொன்ன அர்த்தம் யதார்த்தத்திலேயும் பொருந்தும் என்பது என் அனுபவம். உத்தியோகம் என்னும் பதத்துக்கு "உழைப்பு" என்றர்த்தம். தத்காலத்தில் நம்தேசமுழுவதும் அடைந்திருக்கும் க்ஷீணதசை நம்முடைய பாஷையையும் பிடித்துக்கொண்டதினால் உத்தியோகம் என்னும் பதமும் "ஸ்வேச்சையாய் உத்லாகசக்தியுடன் செய்யும் உழைப்பு" என்கிற மேன்மையான முதலர்த்தத்திலிருந்து நழுவி "எண்சாண் உடம்பில் ஒரு சாண் வயிற்றுக்காகப் பிறர் சவுக்கினால் அடித்து ஓட்டும் மார்க்கத்தில் ஓடுகிற ஜட்காவண்டிக் குதிரையின் உழைப்பு" என்கிற ஸ்திதிக்கு வந்திருக்கிறது. நான் குமாஸ்தாக்களைமட்டும் பற்றிப்பேசவில்லை. யதார்த்தத்தில் பார்த்தால் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் குமாஸ்தாக்களுக்கும் இவ்விஷயத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை. தான் செய்யவேண்டியதொழில் இன்னதென்றறியாமல் "எனக்குப் பொழுது போகவில்லை, நீ எனக்கு ஏதாவது வேலை கொடு (எந்தவேலையானாலும் சரி)" என்று கேட்டலைவதுதான் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் பொதுவான லக்ஷணம்.

நல்ல குமாஸ்தாவின் லக்ஷணங்களாவன: யஜமானன் வீட்டு எருமை மாடு எந்தமாதம் எந்த தேதி கன்றுபோட்டது என்று ஞாபகத்திலிருந்தோ புத்தகத்தில் குறித்து வைத்திருந்தோ கேட்ட சமயத்தில் சொல்லவேண்டும். யஜமானனுக்குப் பெருக்கல் வாய்ப்பாடு மறந்து போயிருக்கு மாதலால் அவர்கொடுக்கும் தொகைகளைக் கூட்டிப்பெருக்கிக் கொடுக்கவேண்டியது. யஜமானன் பார்த்துவிட்டுக் கீழே எறிந்துவிடும் காகிதங்களை யெல்லாம் பொறுக்கி அதில் உபயோகமானதை பத்திரமாக எடுத்துவைத்து உபயோகமற்றதைக் குப்பையில் போட வேண்டியது. "உபயோகமில்லை" என்று குமாஸ்தா எறிந்து விட்ட காகிதத்தை மறுநாள் யஜமானன் உபயோகமானது என்று கொண்டு வரச் சொன்னால் குமாஸ்தாவுக்கு உத்தியோகம் போய்விடும். யஜமானன் கையெழுத்துப்போட்டுக்கொண்டு போகும் காகிதங்களுக்கெல்லாம் மையொத்திக்கொண்டே வரவேண்டியது. யஜமானனுடைய குதிரைக்குநோய்கண்டால் வைத்தியம்செய்வதற்கு வரவேண்டுமென்று வைத்தியருக்கு எழுதும் சீட்டில் வரிகோணுமல் கீறலில்லாமல் எழுதவேண்டியது. அப்படி முதலில் எழுதாவிட்டால் அந்தச் சீட்டைக்கிழித்துவிட்டுப் புதிதாய் நன்றாய் வேறு எழுதவேண்டியது. யஜமானன் இன்றைய தினம் செய்யவேண்டிய வேலை இன்னதென்று அவருக்கு தினம் காலையில் ஞாபகப்படுத்த வேண்டியது. யஜமானன் யாரோடாவது பேசிக் கொண்டிருக்கையில் குமாஸ்தாவைத் திரும்பிப் பார்த்தால் எதற்காகத் திரும்பிப்பார்க்கிறார் என்று ஊகித்தறிந்து அவருடைய, அபிப்பிராயத்தை நிறைவேற்ற வேண்டியது. இவையெல்லாம் ஊரறிந்த உத்தியோகம். இது தவிர குமாஸ்தாக்கள் ரஹஸியமாய் யஜமானனுடைய தாக்ஷிண்யத்திற்காகச் செய்ய வேண்டிய சில கடமைகளுமுண்டு. யஜமானனுடைய மனைவிக்குப் புலாக்குத் திருகு கெட்டுப்போனால் தட்டானை அழைத்து வந்து அவன் வேலை செய்யும் பொழுது காவலிருக்க வேண்டியது. யஜமானன் வண்ணானுக்குப் போடும் அழுக்கு உடுப்புகளில் புத்தான்கள், பையிலிருக்கும் சில்லரைக் காசு காகிதங்களைக் கழற்றிக்கொண்டு போடவேண்டியது. யஜமானனுடைய பாப்பிள்ளை தீபாவளிக்கு வந்திருந்தால் அவருக்கு ஊரைச் சுற்றிக்காட்டி கோவில் குளங்களுக்குத் துணையாகப்போய்வரவேண்டியது. கடையாக அதிக பொறுமையுடன் செய்யவேண்

* தன்னையறிந்து தன் தொழிலில் பிரவேசிக்குமளவும் தடையறியாது! அடக்கமும் ஸ்வதந்திரமும் பரஸ்பர விருத்தமான குணங்களல்ல!!

டிய தொழிலொன்று: யஜமானனுக்கு வம்புப் பேச்சுக்கு ஆள் அகப்படாத பொழுது குமாஸ்தா அவருக்குப் பேச்சுக்கொடுத்துக் கொண்டே தன் எழுத்து வேலையையும் கவனித்துக் கொள்ள வேண்டியது. அப்பொழுது அவர் "அதோபார்! வெள்ளைக்காக்கை!" என்றால், "ஆம் உரலைத் தூக்கிக்கொண்டு பறக்கிறது!" என்று பதில் சொல்லவேண்டும்.

நல்ல யஜமானனுக்கு அடையாளமென்னவென்றால்: காலை 6 மணிக்கு வேலை செய்ய வந்த குமாஸ்தாவைப் பத்துமணி அடித்தவுடன் சாப்பிட அனுப்ப வேண்டியது. மத்தியானம் இரண்டாந்தரத்துக்குத் தான் சாப்பிட்டு மிகுந்ததை குமாஸ்தாவுக்குக் கொடுக்க வேண்டியது. தீபாவளிக்குக் குமாஸ்தாவுக்கு ஒரு வேஷ்டி வாங்கிக்கொடுக்க வேண்டியது. சவுகரியப்பட்டால் குமாஸ்தாவின் மனைவிக்கு ஒரு புடவையாவது அல்லது ரவிக்கைத் துண்டாவது வாங்கிக்கொடுப்பது மிக்க தயாளகுணமுள்ள யஜமானனுக் கடையாளம். யஜமானன் வீட்டில் சுபாசுப விசேஷங்கள் நடந்தால் குமாஸ்தா வீட்டில் அடுப்பு மூட்டக்கூடாதென்றுத்தரவளித்து அவனை உக்கிராணக் காவலில் வைத்து அவன் மனைவியை யஜமானன் மனைவிக்கு வீட்டுக் காரியங்களில் ஒத்தாசை செய்யச் சொல்ல வேண்டியது. வேலை தெரியாத முட்டாள் குமாஸ்தாவை "இவன் வேலையில் கெட்டிக்காரன்" என்று சிபார்சு செய்து தன்னிடமிருந்து அவனை நீக்கி உயர்ந்த உத்தியோகத்துக் கனுப்பிவிட வேண்டியது. வேலை தெரிந்த குமாஸ்தாவை "உன்னைப்பற்றிப் பெரிய உத்தியோகஸ்தர்களிடம் சிபார்சு செய்திருக்கிறேன்" என்று அவனைப்பேச்சினால் உத்ஸாகப்படுத்தித் தன்னை விட்டு அனுப்பாமலே வைத்துக்கொள்ள வேண்டியது. அவனுடைய யோக்கியதையை அறிந்த பெரிய உத்தியோகஸ்தர்கள் அவனை உயர்ந்த சம்பளத்துக்குத் தங்களிடம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டால் 'இந்த சமயம் அவனை அனுப்பிவிட்டால் என் கச்சேரி வேலை ஊழலாய்ப் போய்விடு" மென்று மறுத்துவிட வேண்டியது. யஜமானன் அயலூர்களில் உத்தியோக சம்பந்தமாய் சஞ்சரிக்க வேண்டிவரும் பொழுது குமாஸ்தாவைத் தன்னுடன் கூட அழைத்துக்கொண்டு காலை மாலை உலாவி வரவேண்டியது; தன்னோடு கூடவே சாப்பிடச் சொல்ல வேண்டியது.

உத்தியோகம் என்பது ஒரு பெரிய ஏலச்சீட்டு வியாபாரம். புத்தியுள்ள சில பேராசைக்காரர்கள் புத்தி யில்லாத பல பேராசைக்காரர்களைக் கூப்பிட்டு "நீங்கள் தலைக்குக் கொஞ்சம் அவல் (பணம், உழைப்பு) கொண்டு வாருங்கள், நாங்கள் உமி (காகிதம், பேனா, மைக்கூடு, மேஜை, நாற்காலி பங்கா) கொண்டுவருகிறோம்; இரண்டையும் கலந்து ஊதி ஊதித் தின்போம்: அதாவது நாங்கள் உங்களுக்குப் பங்கிடுவதற்காக எடுத்துக்கொண்ட கூலிபோக மிகுந்ததை, ப்பொறுக்கி யெடுத்த (எங்கள் அபிப்பிராயத்தில்) யோக்கியதையுள்ள இரண்டு மூன்று பேர்களுக்கு பாதிக்கு மேற்பட்ட பங்கைக் கொடுத்து விட்டு, மற்றப்பாதியை அவ்வித யோக்கியதை யுள்ளவர்களாகக் காணப்படாத அதாவது அவ்வளவு அதிர்ஷ்ட மில்லாத ஆயிரக்கணக்கான வாயில்லா வகையறியாக் கூட்டங்களுக்குக் கொடுப்போம். இதில் தான் அவரவர்கள் அதிர்ஷ்டம் வெவளியாகப்போகிறது!", என்கிறார்கள். அதிர்ஷ்டம் முன்னேயே வெளியாகி விட்டதே! இரண்டு மூன்று பேர்களுக்குத்தான் அதிர்ஷ்ட மென்றால், மற்றவர்கள் அதிர்ஷ்டம் வெட்ட வெளிச்சமன்றோ! ஆனால் ஒவ்வொருவனும் நினைப்பதென்ன வெனில் "நான் ஏன் அந்த இரண்டு மூன்று பேர்களில் ஒருவனாயிருக்கக் கூடாது!"

"நீ இருந்துவிட்டால் மற்றவர்கள் கதி என்ன?"

"அதைப்பற்றி எனக்கென்ன கவலை?"

"இதில்தான் உன்னுடைய மடமை ஏற்படுகிறது—அந்த மற்றவர்களில் நீ ஒருவனாயிருந்துவிட்டாலோ? அப்பமயம் இருக்கக்கூடியதுதானே, அப்பொழுது எனக்கென்னவென்று சொல்வாயா?"

"அதைப்பற்றி யோசித்தால் அப்புறம் அதில் அதிர்ஷ்டமென்ன இருக்கிறது?"

மகிழ்ச்சியையே எதிர்பார்க்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நடக்கக்கூடிய நன்மை கெடுதி இரண்டு விஷயங்களில் நன்மையையே நம்பிக்கொண்டிராமல் இரண்டையும்பற்றி யோசிக்கவேண்டியதுதான்—என்பதே"

கடைசியில் கடை யாருடையதென்றால் உமி கொண்டு வந்தவனுடையது. இந்த வியாபாரத்துக்கு இரண்டு முதல் தேவை—பங்கிட்டுக்கொடுப்பவனுடைய புத்திகூர்மை, பங்கு கொண்டு வருபவர்களுடைய புத்தியின்மை. அவரவர் பங்கு அவரவரிடத்தில் இருப்பதில் அவர்களுக்கே திருப்தியில்லை. ஆயிரம் பேர்களிடமிருந்து பிடுங்கி இரண்டு மூன்று பேர்களுக்குக் கொடுக்கத் தாங்களே உடந்தையாயிருக்கிறார்கள். பிடுங்கிக்கொடுக்கிறவன் பிழைக்கிறான்.

"புத்திமான் பலவான்" என்பது எங்கும் உண்மை. பிச்சையில் அதிகாரப்பிச்சை என்பதுபோல், கூலி வேலையில் அதிகாரக்கூலியுமுண்டு. யஜமானன் வேலைக்காரன் என்கிற இரண்டுபேர்களில், எவன் பலவானோ (அதாவது) புத்திமானோ அவன் யதார்த்தத்தில் (அனுபவரீதியாய்,) யஜமானனாயிருக்கிறான்; யஜமானன் என்கிற பெயர் யாருக்கிருந்தபோதிலும் சரி—வேலை செய்கிறவன் வேலை வாங்குகிறவன் என்கிற இரண்டு பேர்களில் யார் பலவானோ அவன் வாக்குச்செல்லுகிறது. வேலைசெய்கிறவன் பலவானாயிருந்தால், நான் இவ்வளவுவேலை இவ்வளவு கூலிக்கு இந்தமாதிரி இந்த காலத்தில்தான் செய்வேன் என்றால், அந்தப்பேச்சுக்கு வேலை வாங்குகிறவன் உடன்படவேண்டியிருக்கிறது. வேலை வாங்குகிறவன் பலவானாயிருந்தால், நான் இவ்வளவுவேலை இவ்வளவு கூலிக்கு இந்தமாதிரி இந்தக்காலத்தில் செய்யவேண்டியது என்றால் வேலைசெய்கிறவன் அதற்கு உடன்படவேண்டியிருக்கிறது.

உதாரணமாக,—ரெயில்வண்டிக் காரர்களை எடுத்துக்கொள்வோம்; அவர்களுடைய கூலி ஆட்கள், சிப்பந்திகளை உத்தேசித்து அவர்கள் யஜமானர்களாகிறார்கள் பிரயாணிகளை உத்தேசித்து அவர்கள் வேலைக்காரர்களாகிறார்கள். ஆனால் இவ்விரண்டு பேர்களிடத்திலும் அவர்களை வாக்குத்தான் செல்லுகிறது; அதாவது அவர்கள்தாம் யதார்த்தத்தில் (அனுபவரீதியாய்) யஜமானர்களாயிருக்கிறார்கள். தங்கள் சிப்பந்திகளை இந்தவேலை இந்தநேரத்தில் இந்தமாதிரிதான் செய்யவேண்டும்; அதற்கு இந்த சம்பளம்தான் கொடுப்போம் என்கிறார்கள். சிப்பந்திகளும் அதற்கு உட்பட்டு நடக்கிறார்கள். பிரயாணிகளை இந்த நேரத்துக்கு இந்தக் கொட்டகையில் இந்தக் கதவுக்குள்ளால் நுழைந்து இந்த ஜன்னலுக்குள்ளால் பறந்து இந்த முகமாகத் திரும்பிக்கொண்டு சீட்டு வாங்கி வாங்கின இத்தனை நிமிஷநேரத்துக் குள்ளாக வண்டியில் ஏறி, ஏற இடமில்லாவிட்டால் மூட்டைகளோடு மூட்டைகளாய் அடைக்கப்பட்டு வண்டிக்கு இத்தனை பேர்களுக்குக் குறையாமல் உட்கார்ந்து கொண்டு (கூடுமானால்) ஊர்போய்ச் சேரவேண்டியது. இல்லாவிட்டால் வழியில் சாகவேண்டியது என்கிறார்கள். பிரயாணிகள் அதற்கு உடன்பட்டுச் செல்லுகிறார்கள். இதற்கெல்லாம் உடன்பட்ட பிரயாணிகள் ரயில்வண்டியை விட்டிறங்கினதும் ஜட்கா வண்டிக்காரன் நாலணா கேட்டால் ஒன்றேகாலணாவுக்குச் சம்மதமா என்று அவனிடத்தில் தங்கள் யஜமான அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். அவரவர்கள் அனுபவத்தில் இம்மாதிரி இன்னும் எவ்வளவோ உதாரணங்கள் கண்டு கொள்ளலாம்.

இப்படிப்பட்ட உத்தியோகத்தில் நானும் முப்பது வருஷத்துக்கு மேற் காலங்கழித்தாகி [illegible] அதில் எவ்வளவு கஷ்டப்பட [illegible] என்று சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். ஆனால் வக்கீல் உத்தியோகத்தில் இம்மாதிரி கஷ்டங்களில்லை என்பது சிலர் அபிப்பிராயம். என் தம்பியும் அப்படி உத்தேசித்தே அடிக்கடி என்னைச் சின்ன வக்கில் பரீக்ஷைக்குப் படிக்கச்சொல்லிப் புத்திசொல்லியிருக்கிறான். ஆனால் அவன் சென்னப்பட்டணத்தில் வீட்டு வாசலில் தன் பெயர் வெட்டிய விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டு அதன் பின்புறத்தில் தாழ்வாரத்தில் புதிய மேஜை நாற்காலி காகிதம் மைக்கூடு பேனாவெல்லாம் தயாராய்த் தீட்டி வைத்துக்கொண்டு தெருவில் போகிறவர்களையெல்லாம் (தலை மயிர் வளர்ந்திருக்கிறதா வென்று பார்ப்பது போல்) உற்றுப் பார்த்துக்கொண்டும், மாதம் 30 ரூபா வீட்டு வாடகை 10 ரூபா குமாஸ்தா சம்பளம் வருஷத்தில் 25 ரூபா வருமான வரி செலுத்திக் கொண்டும், ஊரிலிருந்து அரிசி, பருப்பு, புளி, மிளகாய் எல்லாவற்றையும்மாதம் தவறாமல் வரவழைத்துக்கொண்டும் இவன் சம்பாதிப்பதைப்பார்த்த எனக்கு அவன்புத்தி மதியை அங்கீகரிக்கத் தைரியம் வரவில்லை. இப்பொழுது எம். எல். பரீக்ஷைக்குப் பணம்கட்டியிருக்கிறான். முன்சீப் (கிராம முன்சீப் அல்ல) வேலைக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறான். ஹைகோர்ட்டார் இவன் பெயரைத் தாக்கல் செய்துகொண்டிருக்கிறதாக உத்தரவளித்திருக்கிறார்கள். எம். எல். பரீக்ஷை தேறினதும் முன்சீப் வேலை ஆகிவிடும்.

இருவருக்குள் வழக்குநேர்ந்து அதை அவர்களுக்குள்ளாக்கவே தீர்த்துக்கொள்ள முடியாவிட்டால் நியாயஸ்தலத்துக்குப் போகிறார்கள். இவர்கள் கக்ஷிகளில் உள்ள நியாயம் இவர்களுக்குத்தான் நன்றாய்த் தெரியும். ஆதலால் நியாயப்படி வழக்கைத் தீர்த்துக்கொள்ள இஷ்டமுள்ளவர்கள் கச்சேரிக்குப் போகாமலே [illegible] ஆனால் யாராவது ஒரு கக்ஷிக்காரர் அநியாயத்தில் பிரவேசித்தால் அப்பொழுது இரண்டு கக்ஷியிலும் உள்ள நியாயத்தை நியாயாதிபதிக்கு எடுத்துக் காண்பிப்பதற்கு வக்கீல்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொரு வக்கீலும் தன் கக்ஷியில் இருக்கிற நியாயம் முழுவதையும் எடுத்துச்சொல்லி எதிர்க்கக்ஷியிலிருக்கிற நியாயம் முழுவதையும் எடுத்துச்சொல்லி எதிர்க்கக்ஷியில் இருக்கிற அநியாயத்தையும் அவசியமானால் எடுத்துச் சொல்லலாம். அதாவது வக்கீல்கள் தன் கக்ஷி ஜயிக்கவேண்டுமென்று சண்டை போடாமல் நியாயம் ஜயிக்கவேண்டும், சத்தியம் ஜயிக்கவேண்டும் என்றும் தன் கக்ஷியில் நியாயமிருந்தால் அதில் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கு அது ஜயிக்கவேண்டும் என்றும் வழக்காடி நியாயம் தீர்ப்பதில் நியாயாதிபதிக்கு உதவிபுரியக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தன் கக்ஷியில் இல்லாத நியாயத்தை இருப்பதாகப் பேசவும் அநியாயக் கக்ஷியை ஜயிக்கச்செய்கிறேன் என்று பிடிவாதம் பிடிக்கவும், நான் காலினால் போடும் புளிசுருட்டு முடிச்சுகளை நீர் கையினால் அவிழ்த்துவிடும் பார்ப்போம் என்று நியாயாதிபதியைப் பந்தயத்துக் கழைக்கவும் அவர்கள் கடமைபட்டவர்களல்ல. இதனால் வக்கீல்கள் சர்க்காருக்குக் கடமைப்பட்ட சேவகர்களே ஒழிய கக்ஷிக்காரர்களுக்குக் கடமைப்பட்டவர்களல்லவென்று ஏற்பட்டுவிடும். அப்பொழுது கக்ஷிக்காரர்கள் வக்கீல்களுக்குப் பணம் கொடுப்பார்களா வென்றால், கக்ஷிக்காரர்கள் கொடுப்பதற்குப்பதிலாக சர்க்காரே வக்கீல்களுக்கு மாதச்சம்பளமுங்கொடுத்து ஒவ்வொரு வழக்குக்கு இவ்வளவென்று பிரத்யேக சம்பளமுங்கொடுத்து நியாய விசாரணை செய்யவேண்டும். ஏனெனில் நியாயத்தைக் கண்டுபிடித்து நடத்துவது சர்க்கார்கடமை; அக்கடமையைத்

தீர்க்க ஏற்பட்ட நியாயாதிகாரிக்கு வக்கீல்கள் உதவி புரிவதால் வக்கீல்களும் சர்க்கார் சம்பளம் பெறவேண்டியவர்கள் என்று ஏற்படவில்லையா? அப்படி வக்கீல்கள் கக்ஷிக்காரர்களுக்குக் கடமைப்பட்டவர்களல்லவென்றால் கக்ஷிக்காரர்கள் வக்கீல்களைத்தேடி வரமாட்டார்களே, வக்கீல்களுக்கு வழக்கும் வரும்படியுங் குறைந்து போமே என்றால், அப்படிப் போகவேண்டுமென்பதுதான் நம்கோரிக்கை. அப்பொழுதுதான் தேசத்துக்கு க்ஷேமம். அப்பொழுது அனாவசியமான வழக்குகளை யாரும் கொண்டு வரமாட்டார்கள். அனாவசியமாக யாரும் வக்கீல் வேலையில் புகுந்துகொண்டு ஊரை இரண்டு செய்து ஆட்டைத்தூக்கி மாட்டில் போட்டு மாட்டைத்தூக்கி ஆட்டில் போட்டுக்கொண்டு நாரதர்களாக விளங்கிக்கொண்டிருக்கமாட்டார்கள். இந்தஊருக்கு இவ்வளவு வக்கீல்கள் போதுமென்று சர்க்கார் கட்டுப்பாடுசெய்யலாம். நியாயஸ்தலங்களின் தொகையும் நியாயாதிகாரிகளின் தொகையும் குறையும். இப்பொழுதோ ஊரில் சாவுண்டானால் சவந்தூக்கிகளுக்குப் பிழைப்பு என்பதுபோல், ஊரில்கலகமுண்டானால் வக்கீல்களுக்குப் பிழைப்பு. மற்றவர்கள் செல்முதலிய தானியங்களைப் பயிரிடுவதுபோல வக்கீல்கள் கலகத்தைப் பயிரிடுகிறார்கள். கலகம் விளைந்தால் அது இன்னும் அதிகப்படியாக வக்கீல்களைப் பயிரிடுகிறது (அதாவது வக்கீல்களின் தொகை அதிகரிக்கிறது.) இப்படிக்கலகமும் வக்கீலும் (கீதையிற் சொல்லியபடி) பரஸ்பரம் போஷிக்கப்பட்டு வளருகிறார்கள்.

வக்கீல்களுக்கு மற்ற உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் ஸ்வதந்திரம் அதிகம்என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் தன் கக்ஷி ஜயிக்கவேண்டுமென்கிற ஆவலினால் நியாயாதிகாரிகளின் ஸ்நேகத்தையும் தயவையும் வக்கீல்களும் சம்பாதிக்கவேண்டியிருக்கிறது. சில சமயம் குமாஸ்தாக்களுடைய தயவையும் தேடவேண்டியிருக்கிறது. அப்பொழுது மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் வக்கீல்களுக்கும் உள்ளதாகச் சொல்லிக்கொள்ளும் ஸ்வதந்திரம் என்னும் வித்தியாசம் பறந்துபோய் விடுகிறது.

வக்கீல்களுக்கும் கக்ஷிக்காரர்களுக்கும் உள்ள ஸ்நேகம் ரயில்வண்டி ஸ்நேகம், தாசியின் ஸ்நேகம்போலத்தான். ஒருவரைவிட் டொருவர்பிரியும்போது "ஞாபக மிருக்கட்டும், அடிக்கடி கடிதம் போடுங்கள்" என்று ஒருவர் விலாஸத்தை யொருவர் புஸ்தகத்தில் குறித்துக்கொள்வார்கள். அடுத்த தடவை பையில் பணமில்லாமலும் கையில் வகாலத்தில்லாமலும் ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தால் வேறு பக்கத்து சந்துவழியாய் நுழைந்து போய்விடுவார்கள். வழக்கிருந்த காலத்தில் வருந்தியுபசரித்து சாப்பாடு போடப்பெற்ற கக்ஷிக்காரன் மற்றொரு காலத்தில் வக்கீல் வீட்டுக்குவந்தால் "வக்கீல் ஊரிலில்லை" என்று திரும்பிவரவேண்டும். அல்லது கக்ஷிக்காரனைக் கண்டு வக்கீல் "என்ன பிள்ளையவர், இந்தமாதம் நமது குட்டிக்குக் கலியாணம் செய்ய யோசித்திருக்கிறேன். முந்தின வருஷம் நீங்கள் அனுப்பினதுவரை முதல் தாமானது. அம்மாதிரி இந்தத்தடவை அனுப்பினீர்களானால் பெரிய உபகாரமா யிருக்கும். விலை ஊரிலுள்ளதுபோல் போட்டுக்கொள்ளுங்கள்" என்றால், "இந்தத்தடவை துவரை வெகு யோசம். துளிர்காலத்தில் மாடுமேய்ந்து விட்டது. பின்பு பூக்குங்காலத்தில் பூச்சி விழுந்து விட்டது." என்று பதில் கிடைக்கும்.

(இன்னும் வரும்.)

ஒருதாலூகா குமாஸ்தா.

———:o:———

ஓம் ஸ்ரீ சாவித்திரியை நமஃ

விவேகசிந்தாமணி உபநிஷதர்த்த தீபிகை.

[விவேகசிந்தாமணிக்கென்று பிரத்தியேகமாக எழுதப்பட்டது].

11. பாவனோபநிஷத்.

(இரண்டாம் பாகம்.)

———:*:———

முதல் ஆவரணத்தின் பாவனை.

11. [உப] நியதி, சிருங்காரம் முதலான நாலங்கள்,—இவை அணிமாதி (சித்திகள்). காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், புண்யம், பாவம்,—இவைகள் பிராஹ்மீ முதலான அஷ்டசக்திகள். (11)

(குறிப்பு):—இங்கு ஸ்ரீ சக்ரத்தின் சதுரசிரத்தில் முதல் ரேகையிலுள்ள அணிமா முதலான பத்து சக்திகளின் பாவனையும்; இரண்டாவது ரேகையிலுள்ள பிராஹ்மீ முதலான எட்டு சக்திகளின் பாவனையும் சொல்லப்பட்டது. நியதி யென்றால் பிராரப்த கர்மம். ரஸங்கள் ஒன்பது. அவையாவன:(1) சிருங்காரம், (2) பயாநகம், (3) ரௌத்ரம், (4) பீபத்ஸம், (5) ஹாஸ்யம், (6) வீரம், (7) கருணை, (8) அத்புதம், (9) சாந்தி என்பன. இவை பத்தும் (1) சர்வகாமசித்தி, (2) பிராப்திசித்தி, (3) இச்சாசித்தி, (4) புத்திசித்தி, (5) பிராகாம்ய சித்தி, (6) வசித்வ சித்தி, (7) ஈசித்துவசித்தி, (8) மஹிமாசித்தி, (9) லகிமாசித்தி, (10) அணிமாசித்தி முதலான பத்து சித்திகளுக்கும் பாவனையாகும். இவை சதுரசிரத்தின்வெளிக்கோட்டிலிருப்பன.—இப் பாவனையின் கிரமத்திற்கு 'பிந்துசூத்திரம்' பிரமாணமாகும்.

இரண்டாம் ரேகையிலுள்ள (1) பிராஹ்மீ, (2) மாஹேசுவரி, (3) கௌமாரீ, (4) வைஷ்ணவீ (5) வாராஹீ, (6) மாஹேந்திரி, (7) சாமுண்டீ, (8) மஹாலக்ஷ்மீ என்கிற எட்டு சக்திகளையும் காமம் முதலிய ஷடூர்மிகள், புண்யம், பாபம் என்னும் இவ்வெட்டுகளுக்கும் அபேதமாக பாவிக்க வேண்டும். 'தந்திரராஜம்' என்கிற ஆகமத்தில் "ஊர்மி" என்கிற பதத்திற்கு மேற்சொன்ன பிரகாரமே பொருட்சொல்லி பாவனையையும் அவ்வாறேசொல்லியிருப்பதால், "ஷடூர்மி" என்பதற்கு பசி, தாகம், சோகம், மோஹம், மூப்பு, மரணமெனப் பிறரால் வியாக்கியானம் செய்யப்பட்டிருப்பது பிரத்தியக்ஷ சுருதி விரோதமானதால் ஆதரிக்கத்தக்கதல்ல.

12. [உப] நவாதாரங்களும் முத்ராசக்திகள். (12)

(குறிப்பு): — இவ்விடம் சதுரசிரத்தில் மூன்றாம் ரேகையிலிருக்கும் முத்ராசக்திகளின் பாவனை சொல்லப்பட்டது. அம்முத்ரா சக்திகள் (1) சர்வசம்க்ஷோபிணீ, (2) சர்வவித்திராவணீ, (3) சர்வாகர்ஷணீ, (4) சர்வவசங்கரீ, (5) சர்வோன்மாதினீ, (6) சர்வமஹாங்குசா, (7) சர்வகேசரீ, (8) சர்வபீஜா, (9) சர்வயோனி என ஒன்பது. நவாதாரம் என்பது மூலாதாரம் முதலான ஷடாதாரங்களும், ஊர்த்துவ(மேலுள்ள) ஸஹஸ்ரதளகமலம், அதோ(கீழுள்ள) ஸஹஸ்ரதளகமலம், இந்திரயோனியென தைத்திரீய உபநிடதம் முறையிடும் லம்பிகாக்ரம் என்பவை. நவமுத்ரைகளும் முறையே (1) அதோ ஸஹஸ்ரதளகமலம், (2) மூலாதாரம், (3) சுவாதிஷ்டானம், (4) மணிபூரகம், (5) அநாஹதம், (6) விசுத்தி, (7) லம்பிகாக்ரம், (8) ஆஞ்ஞை, (9) துவாதசாந்தமாகிய ஊர்த்துவ சஹஸ்ரதள கமலம் என்கிற ஒன்பதுக்கும் அபேதமாய் பாவனை செய்ய வேண்டுவன—இவ்வொன்பது சக்ரங்களின் சமஷ்டியையே தேவியின் முத்திரையாகிய சர்வத்ரிகண்ட முத்திரைக்கு அபேதமாகப் பாவனை செய்யல் வேண்டும்.

சிலதந்திரங்களில் மூன்றாவது ரேகையில் தேவதைகள் சொல்லப்படாததால், அவைகளை

அநுசரிக்கும் பிந்துசூத்திரமுதலான சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஆவரண தேவதைகளின் ஸ்தானங்கள் இங்கு எடுக்கப்படவில்லை. ஆனால் யோகினீஹிருதய மானது காதிமதத்தை அநுசரித்ததானதால், அதில் முத்திராதேவதைகளுக்கு சரீரத்தில் சொல்லப்பட்ட ஸ்தானங்கள் இங்கு எடுத்துக்கொள்ளத் தக்கன. இவ்வுபநிஷத்திற் சொல்லப்பட்ட தேவதாபாவனையானது பூஜை, நியாசம் இவ்விருவித ரூபமாகவுமிருப்பதாய் நிதிகாரர் முதலியோரின் சம்பிரதாயமானதால் நியாசத்திற் சொல்லிய விசேஷங்களையுமிங்கு சேர்க்கவேண்டுமென்பர். அதைக்கொண்டே பிரயோகவிதியில், சதுரசிரத்தின் முதல் ரேகைக்கு நமஸ்காரம்என நியாசம்செய்ய வேண்டுமென்று சேர்க்கப்பட்டிருக்கின்றது. இவ்வபிப்பிராயத்தைக்கொண்டே ஸ்ரீசக்ரத்தின் ஒவ்வொரு ஆவரண பாவனையிலும் ஒரோர் சித்தி, முத்திரை, சக்ரேசுவரீ இவைகளின் பாவனை பிரயோகவிதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது ஆவரணத்தின் பாவனை.

13. [உப] பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், சுரோத்திரம், துவக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வா, கிராணம், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம், மனோவிகாரம், (விகாரத்தையடைந்த மனம்) (இப்பதினாறும்) காமாகர்ஷிணி முதலிய பதினாறு சக்திகள். (13)

(குறிப்பு):—இங்கு பஞ்சபூதங்கள், ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, விகாரமடைந்த மனம் இவை பதினாறையும் (1) காமாகர்ஷிணீ, (2) புத்திபாகர்ஷிணீ, (3) அஹங்காராகர்ஷிணீ, (4) சப்தாகர்ஷிணீ, (5) ஸ்பர்சாகர்ஷிணீ, (6) ரூபாகர்ஷிணீ, (7) ரஸாகர்ஷிணீ, (8) கந்தாகர்ஷிணீ, (9) சித்தா கர்ஷிணீ, (10) தைர்யாகர்ஷிணீ, (11) ஸ்மிருத்திபாகர்ஷிணீ, (12) நாமாகர்ஷிணீ, (13) பீஜாகர்ஷிணீ, (14) ஆத்மாகர்ஷிணீ, (15) அமிர்தாகர்ஷிணீ, (16) சரீராகர்ஷிணீ, என்று ஸ்ரீசக்ரத்தில் ஸம்ஹாரக்கிரமத்தில் (அகாவகுலக்கிரமத்தில்) இரண்டாவது ஆவரணமாகிய ஷோடசதளத்தில் இருக்கும் பதினாறு நித்தியகளைகளுக்கு அபேதமாகப் பாவிக்கவேண்டும். விகாரமடைந்த மனமென்பதால் பின்னால் 'மனமே கரும்புவில்' என்குமிடத்தில் சொல்லப்படும் மனதிற்கு வேறாகும்.—[இந்தக்குறிப்பில் கண்ட லக்கிரமப் பிரகாரம் உபநிஷத் வாக்கியத்திற் கண்ட தத்துவங்களுக்குப் பிரயோக விதியில் அங்க நியாசம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதன்மர்மம் குருமுகமாகவே யறிந்துகொள்ளல் வேண்டும். தேவியின் இந்த 16-நித்தியகளைகளும் முனீந்திரர்கள் மஹரிஷிகள் தேஹத்தில் ஷோடசதள பத்ம ரூபமாக வ்யாபித்திருக்கின்றன.—வி. சி. ப-ர்.]

மூன்றாவது ஆவரணத்தின் பாவனை.

14. [உப] வசனம் (பேசுதல்), ஆதானம் (எடுத்தல்), கமனம் (போதல்), விசர்ஜனம், (விடுதல்), ஆனந்தம், ஹானம் (தள்ளுதல்), உபாதானம் (ஏற்றுக்கொள்ளுதல்), உபேக்ஷை எனப்படும் புத்திகள் அனங்ககுசுமை முதலிய சக்திகளெட்டாகும். (14)

(குறிப்பு):—முற்சொல்லிய ஐந்தும் கர்மேந்திரியங்களின் தொழில்களாகும். தள்ளல்கொள்ளலென விரண்டுமின்றி உதாசீனமா யிருத்தல் உபேக்ஷையெனப்படும். இவை யெட்டும் மூன்றாமாவரணமாகிய அஷ்டதளத்திலுள்ள அனங்ககுசுமா, அனங்கமேகலா, அனங்கமதனா, அனங்கமதனாதுரா, அனங்கரேகா, அனங்கவேகனீ, அனங்காங்குசா, அனங்கமாலினீ, என்கிற எட்டு சக்திகளுக்கு முறையே அபேதமாகும்.

நான்காம் ஆவரணத்தின் பாவனை.

15. [உப] அலம்புஷா, குஹூ, விசுவோதரா, வாரணா, ஹஸ்திஜிஹ்வா, யசோவதி, பயஸ்வினீ, காந்தாரீ, பூஷா, சங்கினீ, சர்ப்

வதி. இடா, பிங்களா, ஸுஷும்னா, என்ற பதினாலு நாடிகளும் ஸர்வஸம்க்ஷோபினீ முதலிய பதினாலு சக்திகள். (15)

(குறிப்பு):—இங்கு நான்கா மாவரணமாகிய 14-திரிகோண ரூபமாகிய சதுர்த்தசாரத்தின் பாவனை சொல்லப்பட்டது. பதினாலு சக்திகளாவன; சர்வசம்க்ஷோபிணீ, சர்வவித்ராவிணீ, சர்வாகர்ஷணீ, சர்வாஹ்லாதினீ, சர்வஸம்மோஹினீ, சர்வஸ்தம்பினீ, சர்வஜம்பினீ, சர்வ வசங்கரீ, சர்வரஞ்ஜினீ, சர்வோன்மாதினீ, சர்வார்த்தசாதினீ, சர்வஸம்பத்ப்ரபூரணி, சர்வமந்த்ரமயீ, சர்வதுவந்துவக்ஷயங்கரீ, என்பன. இந்நாடிகளின் ஸ்வரூபம் முன்னர் குருமண்டலமாகிய நவகாதர்களின் பாவனை சொல்லு மிடத்தே விவரிக்கப்பட்டது. சதுர்தசார தேவதைகள் அவைகளுக்கு அபின்னம்.

ஐந்தா மாருமாவரணங்களின் பாவனை.

16. [உப] பிராண—அபான—வியான—உதான—சமான—நாக—கூர்ம—க்ருகர—தேவதத்த—தனஞ்ஜயங்களாகிய பத்து வாயுக்கள் சர்வார்த்த சித்திப்பிரதை முதலான பஹிர் (வெளி) தசார சக்ரத்தின் தேவதைகள். (16)

17. [உப] இந்த வாயுக்களின் சம்பந்தமுள்ள உபாதியின் பேதத்தால், ஜாடராக்னியானது பிராணனை முக்கியமாய்க்கொண்டு ரேசகம் (வெளிப்படுத்துவது), பாசகம் (அன்னத்தைப் பக்குவப்படுத்துவது), சோஷகம் (வற்ற வைப்பது), தாஹகம் (எரிப்பது, சுடவைப்பது), பிலாவகம் (நிறப்புவது) எனஐவகையாகும். 17

18. [உப] நாகத்தின் பிராதான்யத்தால் அந்த ஜாடராக்னியே) க்ஷாரகம் (காரத்தைக் கொடுப்பது), உத்காரகம் (வெளியில் தள்ளுவது), க்ஷோபகம் (அலைவு அல்லது எரிச்சல் அல்லது கலக்கத்தைச் செய்வது), ஜ்ரும்பகம் (கொட்டாவி விடச்செய்வது), மோஹகம் (மயக்கத்தை உண்டுபண்ணுவது) என ஐந்து விதங்களாகி, அவைகள் ப—ஷ்யர்கள் தேகத்திலிருந்து கொண்டு, பக்ஷியம் (தின்பதை கூடியது), போஜ்யம் (சாப்பிடக்கூடியது), சோஷ்யம் (உருஞ்சி சாப்பிடக்கூடியது), லேஹ்யம் (நக்கிச் சாப்பிடக்கூடியது), பேயம் (குடிக்கக் கூடியது) என்கிற ஐந்துவிதமான அன்னத்தையும் பக்குவம் செய்கின்றன. (18)

19. [உப] இப்பத்து அக்னி கலைகளும் சர்வஞ்ஞா முதலான அந்தர்-தசாரத்திலுள்ள தேவதைகள். (19)

(குறிப்பு):—பிராணன் முதலிய மகா வாயுக்கள் ஐந்து, நாகன் முதலான உபவாயுக்கள் ஐந்து ஆகிய பத்தும், ஸர்வார்த்த சாதக சக்ரமெனப்படும் ஐந்தாமாவரணமாகிய பஹிர் (வெளி) தசார சக்ரத்திலுள்ள (1) சர்வசித்திப்பிரதா, (2) சர்வசம்பத் பிரதா, (3) சர்வப்பிரியங்கரீ, (4) சர்வமங்களகாரிணீ, (5) சர்வகாமப்பிரதா (6) சர்வதுக்கவிமோசினீ, (7) சர்வமிருத்தியுபிரசமனீ, (8) சர்வவிக்ன நிவாரிணீ, (9) சர்வாங்கசுந்தரீ, (10) சர்வசௌபாக்கியதாயினீ என்கிற பத்து தேவதைகளுக்கு அபேதமாய் பாவிக்க வேண்டும். ஜாடராக்னி ஒன்றே. பிராணன் முதலிய மஹா வாயுக்களைந்து, நாகன் முதலிய உபவாயுக்கள் ஐந்து, இப்பத்தினுடைய ஸம்பந்தத்தினால் பத்து விதமாகிய தொழிலுடைத்தானதாகும் என்பது வாக்கியத்தின் பொருள். ஜாடராக்னியின் தொழிலாகிய இப்பத்து அக்னி கலைகளும் ஆறுமாவரணமான சர்வரக்ஷாகர சக்ரமென்கிற அந்தர்(உள்)தசாரத்திலுள்ள (1) சர்வஞ்ஞா. (2) சர்வசக்தி, (3) சர்வைச்வர்யப்பிரதா (4) சர்வஞானமயீ, (5) சர்வவியாதிவிநாசினீ, (6) சர்வாதாரஸ்வரூபா, (7) சர்வபாபஹரா, (8) சர்வானந்தமயீ, (9) சர்வரக்ஷாஸ்வரூபிணீ, (10) சர்வேப்சித பலப்பிரதா என்ற பத்து சக்திகளுக்கு அபேதம்.

ஏழா மாவரணத்தின் பாவனை.

20. [உப] சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், இச்சைகள், சத்துவம், ரஜஸ், தமஸ், (இவ்வெட்டும்) வசினீ முதலிய எட்டு சக்திகள். (20)

(குறிப்பு)-சீதோஷ்ணம், சுக துக்கம் என்கிற இருதுவந்துவங்கள், இச்சை ஒன்று, முக்குணங்கள் ஆகிய எட்டும், சர்வரோகஹர மென்கிற அஷ்ட கோணத்திலுள்ள (1)வசினீ, (2) காமேசீ, (3) மோதினீ, (4) விமலா, (5) அருணா (6) ஜயினீ, (7) சர்வேசீ, (8) கௌளினீ என்கிற எட்டு வாக்தேவதைகளுக்கு அபேதமென்று பாவனை செய்யவேண்டும்.

ஆயுதங்களின் பாவனை.

21. [உப] சப்தம்முதலிய தன்மாத்திரைகள் ஐந்து புஷ்ப பாணங்கள். (21)

22. [உப] மனம் கரும்பு வில். (22)

23. [உப] ராகம் பாசம். (23)

24. [உப] துவேஷம் அங்குசம். (24)

(குறிப்பு)—இவ்விடம் அஷ்ட கோணத்திற்கும் மத்திய திரிகோணத்திற்கும் இடையிலுள்ள ஆயுதசாலை யெனப்படும் வீதியிலுள்ள ஆயுதங்களின் பாவனை சொல்லப்பட்டது. காமேசுவரர், காமேசுவரீ இருவருடைய ஆயுதங்களும் இங்கு இருப்பதாய் ஆகமங்கள் சொல்லும். சப்த, ஸ்பரிச, ரூப, ரச கந்தங்களாகிய பஞ்சதன்மாத்திரைகளும் காமேசுவரர் காமேசுவரீ இருவருடைய பஞ்சபுஷ்ப பாணங்களுக்கு அபேதமாகும். தன்மாத்திரைகளை ஜம்பநங்களாகிய புஷ்பபாணங்களாய்ச் சொல்வதெதனாலெனில் அவை சுகத்திலபிமுகமாயிருந்து கடைசியில் துக்கத்தைக் கொடுப்பதால்தான்.

விகாரமடையா மனம் வெள்ளைக் கரும்பு வில்லுக்கபேத மாகும். முன்னரே விகாரமடைந்த மனதைச் சொல்லியாய் விட்டது. மனமானது விஷயங்களினிடம் பாய்தல் ரூபமாகிய இந்திரியங்களைச் செலுத்துவதால், கரும்பு வில்லாகச் சொல்லப்பட்டது. ராகம் என்றால் பிரீதி. அது சைவசாக்தாகமங்களிற் சொல்லப்பட்ட 36 தத்துவங்களில் ஒன்று. சாமான்யமான 'இச்சை' யன்று; ஆகையால் அருணாவாக்தேவதைக்கு பாவனையாய்ச் சொன்ன இச்சையல்ல. பாசத்தைப்போல் ராகம் பந்தமானதால் சர்வ வசீகரமாகிய, பாசத்திற்குப் பாவனையாய்ச் சொல்லபபட்டது. துவேஷம் என்றால் குரோதம் அல்லது வெறுப்பு. அது அங்குசத்தைப்போல் துவேஷயமாய் இருப்பதாலும் வேண்டாதனவைப் போக்கடிப்பதாலும் சர்வஸ்தம்பனமாகிய அங்குசத்திற்கு பாவனையாய்ச் சொல்லப்பட்டது.

எட்டா மாவரணத்தின் பாவனை.

25. [உப] அவ்யக்தம், மஹத், அஹங்காரம் (இவை) காமேசுவரீ, வஜ்ரேசுவரீ, பகமாலினீ என்கிற திரிகோணத்திலுள்ளிருக்கும் தேவதைகளாம். (25)

(குறிப்பு)—இதில் எட்டாவ தாவரணமாகிய சர்வஸித்திப் பிரதமென்கிற மத்தியகோணத்திலுள்ள தேவதைகளின் பாவனை சொல்லப்பட்டது. அவ்யக்தமென்பது பிரகிருதி தத்துவம். அது மத்தியத் திரிகோணத்திலுள்ள பகமாலினி தேவதையோடு அபின்னம். மஹத் என்கிற அஹங்காரம் காமேசுவரீயோடு அபின்னம். அஹங்காரம் வஜ்ரேசுவரீ யோடபின்னம்.

ஒன்பதாமாவரணத்தின் பாவனை.

(அவதாரிகை) பின்வரும் மூன்று வாக்கியங்களால் பதினொரு பதார்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

(1) முக்கிய விசேஷ்யையாகிய லலிதை.

(2)விசேஷ்யதாவச்சேதகமான காமேசுவரர்.

(3-4) இவர்களின் ரக்த, சுக்ல சரணங்கள்

(5) இவ்விருவர்களுக்கு மாத்திரம் உள்ள சம்பந்த விசேஷம்.

(6-7-8) ஸ்தூல, சூக்ஷ்ம, மிசிரசரணத் தன்மை.

(9) உபாஸனா பிரகாரத்தின் விஷயமாகிய உபாஸகன்.

(10) அவனுக்கும் உபாஸனா தேவதைக்கும் சம்பந்தம்.

(11) பிரகாரதாவச்சேதகம். என்பன.

26. [உப] நிருபாதிக (உபாதியற்ற) சம்விதே (ஞானமே) காமேசுவரர். (26)

27. [உப] சதானந்த பூர்ணமான ஸ்வாத்மாவே பரதேவதையாகிய லளிதை. (27)

(குறிப்பு) இவ்விடம் நவாவரணங்களில் கடைபதாகிய சர்வானந்தமய சக்ரமெனப்படும் பிந்து சக்ரத்தின் பாவனை சொல்லப்பட்டது. உபாதி ரஹிதமாகிய சுத்தசைதன்யமே பிந்துரூபமாகிய காமேசுவர். "சம்வித்" என்ற பதத்திற்கு "நிருபாதிகம்" என்றவிசேஷணத்தைக் கொடுத்திருப்பதால், அந்நிருபாதிக சம்விதாகிய காமேசுவரர் அங்கத்தில் வீற்றிருக்கும் பரதேவதையாகிய லளிதைக்கு ஏதோகொஞ்சம் உபாதியுண்டென்றும் அதனால் உபாசகனுக்கு பின்னமாய் உபாஸிக்கப்படும் பொருள் என்ற குணமேற்படுமென்றும் வெளியாகும். அப்பரதேவதை தன் ஆத்மாவைத் தவிர வேறல்ல. தனக்கபின்னமான பரதேவதை யானவள் உபாஸனா ரூபமாகிய ஞானவிசேஷத்தால் நிரூபிக்கக்கூடிய முக்கிய விசேஷங்களையு டையவள். அவளையே அவளுக்கே உரித்தான லளிதை யென்றும் போல் குறிப்பார். "சதானந்தபூர்ணம்" என்கிற பதத்தால் அவளுக்கு சதானந்தமாகிய உபாதி யென்று குறிக்கப்பட்டது. ஆகவே சத் என்கிற அடைமொழியினால் அந்தக்கரண சம்பந்தமுடைய ஆநந்த முடையவள் லளிதையாக மாட்டாள். அப்பொழுது அவளை உபாஸகக் கூட்டத்தில் சேர்க்கவேண்டுவதாகும். இக்கருத்தைக் கொண்டே "ஸ்வாத்மா" (தன் ஆத்மா) வென்கிறபதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வாத்மா வென்றால், ஸ்வ-உபாஸகனாகிய தன்னுடைய, ஆத்மா-அந்தர்யாமி, யெனப் பொருளாகும். ஆகவே, ஆத்மா ஒருவனே அந்தக்கரணோபாதியோடு கூடினவனாய் உபாஸகனாகவும், சத்து, சித்து, ஆனந்த மென்கிற மூன்று தர்மங்களினின்றும் விடுபட்டவனாய், தர்மி (தர்மத்தையுடையவன்) மாத்திரமாய், உபாஸ்யமாகிய பரதேவதைக்கு ஆதார பூதனாகிய காமேசுவரராகவும் இருக்கின்றானென்பது கருத்து. இவ்விஷயத்தை அப்பயதீக்ஷிதரவர்கள் ரத்னத்ரய பரீக்ஷை யென்கிற கிரந்தத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கின்றார்:—

"நித்தியமாய் தோஷமென்பதின் வாசனை "கூட இல்லாததாய் நிரதிசயானந்தமாகிய பிர "ஹ்ம சைதன்ய மொன்றே மாயா வசத்தால் "வேறுபட்டு "தர்மம்" "தர்மி" என இருவகைப் "பேதத்தை யடையும். அவற்றுள் தர்மம் "என்பது ஒன்றாயிருந்தே, ஸ்வப்பிரகாசரூப "மான தர்மிக்கு ஸகல பிரபஞ்ச விஷயமான "அனுபூதியாகவும், சகலகார்யங்களை சித்திக்க "அநுகூலமான ஸ்வேச்சா—ஞான—கிரியா ரூப "மான சக்தியாகவும், குண சமூகமாகவு மிருக்"கும். வேதத்தை யறிந்தோர் இத் தர்மத்தை "யே சர்வவியாபகமானதும், அகிலாதாரமு "மாகிய ஆகாசமென்றும், சிதம்பர சக்தி "யென்றும், மனோவாக்குகளுக் கெட்டாத தர் "மியின் ஆனந்தமென்றும் ஸதாநந்த ஸ்பூர்த்தி "யென்றும், மூலப்ரகிருதி அகமென்றும், பிரா "ணோபாஸனை, ஆகாசோபாஸனை இவைகள் "அதை ஆதாரமாயுடைத்தனவாகி, அதில் ஓர் "அம்சமானவையெனவர்ணிப்பார். இவற்றுள் "தர்மி * யானது ஜகத்தின் சிருஷ்டி, ஸ்திதி,

* இது ரத்னத்ரய பரீக்ஷை அச்சுப்புஸ்தகத்தின் பாடம். பாவனோபநிஷத் பாஷ்ய புஸ்தகத்தில் "தர்மமானது" என்று பாடம் காணப்படுகிறது. முன் பாடமே சுத்தமெனத் தோன்றுகிறது.

"ஸம்ஹாரம், திரோதானம், அனுக்கிரகம் என் "கிற பஞ்சகிருத்தியத்தில் கர்த்திருத்துவத் "தை யடைகின்றது. தர்மம் இருவகையாகும். "ஒன்று புருஷரூபமான ஆத்மாவாய் சகல ஜக "த்துக்கும் உபாதான காரணத்தன்மையைத் "தரித்துநிற்கும். அதுவே [illegible] "தனக்கு ஆசிரயமாகிய (ஆதாரமாகிய) ஆதி "கர்த்தாவுக்கு (தர்மிக்கு) திவ்யமஹிஷியாய் "(பட்டஸ்திரீயாய்) நிற்கும். தர்மத்தின் இவ் "விரண்டு பேதமும் வேதமறிந்தோரால் தர்மி "யைப்போல் பிரஹ்மமென்றே சொல்லப்ப "டும். தர்மியையே சம்புவென்றும், சிவமென் "றும், பரப்பிரஹ்மமென்றும் சொல்வர். தர்ம "மியின் திவ்ய மஹிஷியைப் பிரசித்தமாய் அம் "பிகையென்றுஞ் சொல்வர்—சகல ஜகத்துக்கும் "உபாதானமாகிய பரமபுருஷனே (புருஷோத் "மனே) நாராயணனென்று ஸ்ரீ கூர்ம புராண "வாக்கியங்களாலும் நாரதர்வாக்கியங்களாலும் "வெளியாகும்."*

28. [உப] இவை சர்வத்தின் விமர்சம் (அநுசந்தானம்) லௌஹித்யமாம் (தேவியின் சிகப்பு நிறமாம்). [28]

(குறிப்பு) சர்வமென்பது காமேசுவரர், லளிதை, உபாசகனாகிய தான், இம்மூன்றையுங்குறிக்கும். இம்மூன்றின் அநுசந்தானமே தேவியின் சிகப்பு நிறம். சகலருக்கும் ஸ்வாத்மாவினிடம் அநுராகம் எப்பொழுதும் உள்ளது. தேவி ஸ்வாத்மா வானதாலும், அநுராகத்திற்கும் சிகப்புநிறத்திற்கும் அபேதமானதாலும், இது ஒக்கும். இதில் குருமுகமா யறியவேண்டிய ரஹஸ்யமாவது—"நிருபாதிகம்" என்கிற பதத்தால் கேவலத்தன்மையையும், "சதானந்தபூர்ணம்" என்கிற பதத்தால் தர்ம விசிஷ்டதனவையையும் கூறுவதால், கேவலத்திற்கும் (தர்மிக்கும்), விசிஷ்டத்திற்கும் (தர்மமாகிய லளிதைக்கும்) அயுதஸித்தங்களாகிய அதாவது பிரிக்கக்கூடாதனவாகிய அவயவி அவயவங்களுக்குப் போல் (அதாவது நூலுக்கும் வஸ்திரத்திற்கும் போல்) பேதமில்லாமையால், அவர்களுக்கு தாதாத்மிபம என்கிற சமவாயி சம்பந்தமே யன்றி, பேதமான ஸம்யோகம் முதலான சம்பந்தமில்லை. ஆனால் திரிபுரசுந்தரி, காமேசுவரர் இவர்களின் சரீரங்களாகிய ஸ்தூல ரூபயிரண்டின் சம்பந்தமோ, காமேசுவரரின் அங்கத்தில் (மடியில்) காமேசுவரி இருப்பதாகச் சொல்லியிருப்பதால், சிவசக்தி சமரஸஸ்வரூபமாகிய அச்சம்பந்தம், சாயத்திற்கும் துணிக்குமுள்ள சம்பந்தத்தைப் போல் ஒருவித சம்யோக சம்பந்தமென்றே சொல்லல் வேண்டும்.

இவ்வாறு உபாதியற்றதே சுத்தமானதாலும், ஸ்படிகமானது மற்ற வர்ணங்களின் சேர்க்கையில்லாத காலத்தில் மாத்திரம் வியக்தமாவதாலும், சுத்தத்தை ஸ்படிகத்திற்கு அபேதமாய்ச் சொல்லி, நிருபாதிகமாகிய காமேசுவரரை சுக்ல சரணர் (வெண்மையாகிய பாதார விந்தங்களை யுடையவர்) என்கிற பாவனைக்கு [illegible] "அஹம்" † ரூபமான மானஸவிருத்தி மாத்ரரூபமானதால், அவ்வாறு அவ்வநுசந்தானத்திற்கு விஷயமாயிருத்தலாவது, அவ்வாறு

* இதன் பொருளாவது.—"தர்மம்" பிரவிர்த்தியுன்முகமாய் ஜகத்தைப்பாலனம் செய்யும் பொழுது புருஷரூபமாகிய விஷ்ணுவென்றும், அத்தொழிலிலுத்து நிவர்த்திமார்க்கத்தில் நிற்கும்பொழுது தர்மியுன்முகமாய் (அந்தர்முகமாய்) கற்புடையபெண்ணானவள் எப்படி தன்போதம் முர்தையுடைக்கி தன்புருஷனுக்கு அதீனமாகச் செய்கிறாளோ, அவ்விதம் இவ்வவசரத்தில் "தர்மம்" தான் பரம்பொருளிடம் அதீனமாய் விடுவதால் பெண் ரூபமாய் வர்ணிக்கப்படும். பிரவிர்த்திக்குப்பின்தான் நிவர்த்தி மார்க்கத்தில் பிரவேச முண்டாவதால்தான் பரதேவதையை விஷ்ணுவின் தங்கையாக பாவிப்பதும், ஸ்ரீ அப்பர்சுவாமிகள் "ஹரியலால், தேவியில்லை யெனையாளுடையார்க்கே" என்று சொன்னதும் என்றுணரவேண்டியது.

† ஸ்ரீ பரதேவதையை "பராஹந்தா" அல்லது பூர்ணாஹந்தா ஸ்வரூபமானவள் என்று சாஸ்திரங்கள் சொல்லும். "அகம்" என்கிற ராகம் சித்திலிடம் இருப்பதால் அதை சிகப்பாகச் சொல்லப்படும்.

விஷயமாயிருத்தலுக்கு சம்பந்தமான விருத்தி பாவது, அவ்விருத்தி சம்பந்தமுள்ளமனஸாவது ராகத்திற்கு அபேதமானதால் (ராகம் என்றால் பற்றுதல், சிகப்புவர்ணம் இரண்டையும் குறிப்பதால்), (ராகஸ்வரூப) அவ்வனுசந்தானத்தால் விசிஷ்டமாயிருக்கும் ஸ்ரீபரதேவகைக்கு "ராக்ஷ சரணம்" (சிகப்பு வர்ணமுடைய பாதார விந்தங்களை யுடையவள்) என்கிற பாவனை ஏற்படும். "சர்வம்" என்கிற பதத்தால் இவ்விரு சரணங்களின் காந்தியின் சமரசபாவ சம்பந்த ரூபமாகிய மிச்ரசரணத்தின் பாவனையும் சூசிக்கப்பட்டது. இது விஷயமே பின்வரும் குருவந்தன சுலோகத்திலடங்கியிருக்கும்: "வந்தே குருபத துவந்துவம் அவாங்மனஸகோசரம், ரக்த சுக்ல பிரபாமிச்ரம் அதர்க்யம் த்ரைபுரம் மஹா—." தந்திரராஜத்தி "ஆதிசக்தியே குருவாகும்' என்ற இவை முதலான பாவனைகளின் அனுசந்தானமே உபாசனை யென்று சொல்லப்படும். அதுவே நான்காவது சரணம். அல்லது உபாஸனை மூவிதமாகும்: அவை விக்ரஹாதிரூபமான ஸ்தூல உபாசனை, மானசிகஜபமாகிய சூக்ஷ்ம உபாஸனை, முற்சொல்லிய பாவனையாகிய பரஉபாஸனை என்பன. ஆகையால் உபாஸனையாகிய பாவனையை பாவனை செய்யும்படி சுருதி விதித்துவிட்டதாக சந்தேகம் ஏற்பட விடமில்லை.

The Coronation Festivities.

முடிசூட்டல் கொண்டாட்டம்.

1911-ம்ஆண்டு ஜூன்மீ 22உ வியாழக்கிழமை பன்று மாஸிமைதங்கிய 5-வது ஜார்ஜ் அரசருக்கும் மேரி மஹாராணி யவர்களுக்கும் நாம் 'மகுடாபிஷேகம்' என்று சொல்லும் முடிசூட்டும் சடங்கு வெகு ஆடம்பரமாக நடந்தேறியது. அதற்காக எல்லா தேசங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அன்றைக்கு லண்டன்மாநகர் இந்திரப்பட்டணம் போல் விளங்கியது. இராஜ்ஜிய முழுவதிலும் அத்தினத்தை சுதினமாகக் கொண்டாடினார்கள். இந்தியாவில் ஊர் ஊராக அத்தினத்தைக் கொண்டாடினார்கள். கோயில்களிலும் மசூதிகளிலும், அபிஷேகங்களும் பிரார்த்தனைகளும் நடந்தன. வருகிற டிசெம்பர் மீ 12உ மாகிமைதங்கிய அரசரும் அவர் ராணியாரும் இந்தியாவுக்கு வந்து டில்லி மாநகரில் இந்தியா சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியாக முடிசூட்டிக் கொள்வார்கள். அப்பொழுது ஒரு பெரிய தர்பார் கூடும்.

The Manufacture of Camphor.

கர்ப்பூரம் செய்யல்.

கடையில்விற்கும் கர்ப்பூரம் கர்ப்பூர மரத்திலிருந்து உண்டாகிறது. அந்தமரம் வெகு காலம்வரையில் நீடித்திருக்கும். அது ஜப்பான் தேசத்தில் ஏராளமாகப் பயிராகி வருகிறது. கர்ப்பூரமரங்கள் அங்கே பெருங்காடுகளாகவும் தோப்புகளாகவும் இருக்கின்றன. இதுவரையில் 50 வருஷமான மரங்களை அடியோடுவெட்டி அதன் இலைகளைத் தள்ளிவிட்டு, மரக்கிளைகளைமட்டும் கர்ப்பூர ரஸமிறக்குவதற்காக உபயோகிப்பது வழக்கம். இது பண்டைக்காலம் முதற்கொண்டு வழக்கமாயிருந்து வருகிறது. இதனால் 100 முதல் 200 வருஷங்கள் வரையில் வளரக்கூடிய கர்ப்பூரமரங்கள் வெட்டிச் சேதமாக்கப்பட்டுவந்ததால், கர்ப்பூரம் விலை கிராக்கியாக நேரிட்டது. இப்பொழுது மலேயா தீவிலும், கீழாபிரிக்காவிலுள்ள அமானி (Amani) என்னுமிடத்திலுள்ள பரிசோதக சாலையிலும் ஐரோப்பியர் பரிக்ஷைசெய்து பார்த்ததில் மரத்தைவெட்டாமல் தானே, அம்மரத்தின் தழைகளை பறித்து கர்ப்பூரம் செய்யலாமென்றும், அப்படிச்செய்வதால், மரத்தைவெட்டிச் செய்யும் கர்ப்பூரத்தைவிட அதிக கர்ப்பூரம் கிடைப்பதா யிருக்கிறதென்றும், மரத்துக்கும் சேதமில்லாமல் அது வெகு காலத்துக்கு நீடித்திருக்கத்தக்கதாகிறதென்றும் நிர்ணயமாகக்கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஜெமெய்காதீவில் ப்ரொபெஸர் ராபர்ட் கென்னடி டங்கன் அவர்கள் இந்தப்புதிய வழியை யனுசரித்துப் பரீக்ஷைகள் செய்துபார்த்து இதுவே நலமென்று தீர்மானித்திருக்கிறார். இவர் ஒரு டன் நிறையுள்ள கர்ப்பூரத்தழையை அமெரிக்காவிலுள்ள கான்ஸாஸ் யூனிவர்ஸிடிக்குச் சப்பலேற்றிக்கொண்டுபோய் தானே பரீக்ஷைசெய்து பார்த்ததில், மரத்தைவெட்டி கர்ப்பூர ரஸமிறக்கினால் 100 க்கு ·61 அசுத்த கர்ப்பூரம் தேறுகிறதென்றும்; கிளைகளிலிருந்து 100 க்கு 1·05 தேறுகிறதென்றும், பச்சையிலையிலிருந்து 100க்கு 2·37 தேறுகிறதென்றும், உலரவைத்த இலைகளிலிருந்து 100 க்கு 2·52 தேறுகிறதென்றும், உதிர்ந்துபோன சருகுகளிலிருந்து 100க்கு 1·39 தேறுகிறதென்றும் பரீக்ஷைகள் செய்து கண்டுபிடித்திருக்கிறார்.

இந்தப் பரீக்ஷைகளினால் கர்ப்பூர மரத்தில் அதிகமாய்க் கர்ப்பூரரஸமில்லையென்றும், அதன் தழைகளில் அதிகமான ரஸமிருக்கிறதென்றும் ஆகையினால் மரங்களை வெட்டிச் சேதமாக்காமல் தானே வருஷத்துக்கொருதரம் தழைகளை பறித்து கர்ப்பூரம் செய்யலாமென்றும் நன்றாக ஏற்படுகிறது. இதனால் கர்ப்பூரச் சரக்கு விர்த்தியாகும்.

"Cease thou All Vain Talk."—A Short Story.

"உன் வாயடைக்க!"

ஓர் உண்மையான சிறு கதை

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்
கள்ளப் பிராணர்க்கு வாய் கோபுரவாசல்."
'நானெனநீயெனத்தத்துவமிரண்டே'—திருமந்திரம்.
"சாக திருந்த தலமே மனமது
ஏகாந்த மாக விரு"—ஔவைகுறள்.

நான் ஒரு மாசமாக தேஹம் சுவாதீனமில்லாமலிருந்து ஒருவாறு சொஸ்தப்பட்டபின், வெளியேறி நித்தியப்படி வேலைகளைக் கவனிக்கலா மென்றிருந்தேன். தேஹத்திற்குண்டான ஆயாஸம் முற்றும் தீர்ந்ததில்லையாயினும், ஒருவாறு மனோதிடத்தினால் தேஹத்தை திடப்படுத்திக்கொண்டு ஒரு மாசகாலமாகக் கண் காட்சியில்லாமல் களேபரமாயிருந்த வேலையை ஒருவாறு கண்பார்த்துச் சீர்திருத்தலா மென்றிருந்தேன். இப்படி வெளியேறவிருந்த தினத்தன்று தேஹம் திடீரென்று உபாதிகண்டு எழுந்துநடக்கச் சக்தியில்லாமல் படுத்த வண்ணமாயிருக்க வேண்டி நேரிட்டது. இப்படி இரண்டு நாளிருக்க மறுபடியும் தேஹம் குணப்படலாயிற்று! காரணம்:-பழைய நண்பர் ஒருவரை நினைத்துக் கொண்டிருக்க, அவர் அகஸ்மாத்தாய் நேரில் வந்து தரிசனங் கொடுக்க நேரிட்டது. அந்த ஸங்கல்ப ஸித்தியினாலுண்டான மனவெழுச்சியில் தேஹத்தின் அயர்வும் சோர்வும் தெரியவில்லை. யோகக்ஷேமம் விசாரிக்கவென்றுவந்த நண்பருடன் அளவளாவி யிருந்து லௌகிக விஷயமாக ஏதோ ஒரு ஆலோசனை கேட்டதற்கு, அவர் பிரஹ்லாதன் சரித்திரத்தைச் சாமான்ய வார்த்தைகளால் அதிற் பொதிந்து கிட்கும் அசாமான்யமான தத்துவ ரகஸியங்களை பெடுத்துக் காட்டி, உவமான உவமேயத்தோடு விஷயார்த்தமான சம்பாஷணையைத் தத்துவார்த்தகாலக்ஷேபமாக மாற்றி உள்ளங்கனிகிற உட்பொருள் உவகை பூரிக்க உரையாடிச் சென்றார். உண்டான தேஹமனோ உற்சாகத்தில் தேஹத்தின் சோர்வு தெரியவில்லை. வந்துபார்த்த நண்பரைத் திரும்பிப்பார்க்க வேண்டுமென்கிற உபசாரம் பற்றி உண்மையாகப் பார்க்கப் போனேன். போன விடத்தில் ஒரு அதிர்ச்சியம் நடந்தது. அதை விவரிக்கில் வளரும். "பொன்னம்பலம் திறந்து வெள்ளியம்பலம் கள்ளமின்றிப் பிரகாசிக்க லாயிற்று."

அந்த "வெள்ளியம்பலத்திலே" "வேதாந்த சித்தாந்த ஸமரஸ நன்னிலை பெற்ற, சித்தரைச் சித்தர்களையே" யென்று தாயுமானவர் பாடிய

சித்தர்கணம் சிவகோஷம் செய்து பரமனைத் துதித்த சப்தம் அநாஹத ஸ்தானத்தில் ஆசங்கையின்றிக் கேட்கலாயிற்று. இந்த அனுபவத்தை உண்மையென்று கொள்பவர் கொள்ளட்டும்; பொய்யென்று தள்பவர் தள்ளட்டும்; அதனால் எனக்காவது, சித்தர்கணத்துக்காவது, சிவனுக்காவது குறைவொன்று மில்லை.

"அற்புத விக்கிரஹ அமராதிகேவா
அகணித கணகுண அம்ருதசிவா"

என்கிற அகாராக்ஷர வர்ணனையை உள்ளத்தில் சிந்தித்து அம்பாளோடு கூடியவரான குருமூர்த்த சிகாமணியாம் 'ஸாம்ப ஸதாசிவத்தை' ஹிருதாயாகாசத்தில் தோன்றச் சிந்தித்து அச்சிந்தனையும் நழுவினவிடத்தில் மேற்குறித்த "அகாராக்ஷர வர்ணனையை" ஸபீஜமாகவும், நிர்பீஜமாகவும் சிந்தைகடந்த விடத்தில் சிந்தித்து நிற்போர்க்கு, நாம்சொல்லிய அனுபவம் மெய்யென்றும் பொய்யென்றும் பிரத்தியக்ஷப்ரமாணமாக அறிந்துகொள்ள வழியேற்படும். மற்றப்படி இந்திரியங்கள் போனவழி மனதை விட்டு, மனம்போனவழியில் புத்தியைப் போகவிட்டு, புத்தி பேதித்துப்போன வழியில்தானே அறிவையும்(ஆத்மாவையும்) நிலைதடுமாறிப்போகவிட்டு, "கெண்டைதேகோலம் கண்டதேகாட்சி"யெனத் திரிகிறவர்களுக்கு நாம் ஒன்றும் சொல்லவரவில்லை. இந்த அதிசயக்கதையை அன்புகூர்ந்து படித்து, ஸ்ரீமதினவன் கிருதார்த்தனாக அருள்புரிய வேண்டுமென்றுமட்டும் அவருள்ளத்தில் விசுவரூபியாய் விளங்கும் அம்பிஜலக்ஷியார்த்த சுந்தரனைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறோம்.

"வித்தகச் சித்தர்கணம்" வெள்ளியம்பலத்திலே செய்த கோஷத்வனி அநாஹத ஸ்தானத்திலே சூக்ஷ்மசப்தமாகக் கேட்டது. கேட்டுத் கண்(அகக்கண்) விழித்துப்பார்த்தேன். ஒன்றுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் அந்தசப்தத்திலும்சூக்ஷ்மமான துவனியொன்று உள்ளிந்திரியமாம் காதிற்பட்டது. அந்த துவனியிலே கண்ணுங்கருத்துமாயிருக்க, அதிலிருந்து அதிர்சயமான ஜோதியொன்று பிரத்தியக்ஷமாயிற்று. அந்த ஜோதியம்பலத்துள்ளே ஒரு பொன்னம்பலம் பிரத்தியக்ஷமாகத் தோன்றலாயிற்று. அந்தப் பொன்னம்பலத்தினுள் புகுந்து பார்க்கவும், அது சிற்றம்பலத்தின் சோதியன்றி வேறிலையெனக்கண்டேன். சிற்றம்பல தெரிசனம் செய்துகொண்டு பஞ்சாக்ஷரப் படியேறி யிறங்கினேன். ஏற்றம் இறக்கம் இரண்டையும்விட்டு பஞ்சாக்ஷரப்படியின் உண்மையை யுள்ளத்துணரவும், அவ்வுண்மையுணர்ந்த வுள்ளத்தின் மத்தியிலே ஒரு வெண்ணிலாத் தோன்றியது. அந்த வெண்ணிலாவையுற்றநோக்கித் தியானிக்க, அங்கேதானே சிவனின் ஜடாமுடிபாரம் அக்னிப் பிழம்பாகத் தோன்றியிற்று. அந்த அக்னிப்பிழம்பின் மத்தியில் தண்ணளிவீசும் வெண்ணிலா விருக்கக்கண்டேன். சியாமளா தேவியைச்சிந்தித்து அந்த அக்னியைத் தொழுது அதிற் பிரவேசத்தேன்.

"அம்புலிமானே ஆடியசிற்றப்பா எங்கெங்கேபோ'றே"யென்று சிறுகுழந்தைகள் பஹிராகாசத்தில் சந்திரனைவிளித்து "சந்திரமாமா வா வா" என்று கூப்பிடுவதுபோல, நானும் விளையாட்டென்றும் வினையென்று மறியாமல், அக்னியிற் பிரவேசித்து அதனுள் தண்ணளி வீச்யுள்ளங்குளிர உயர்நலம் விளங்க எறித்த அழகிய வெண்ணிலாவைப் பிடித்துவிடப் பார்த்தேன். அக்னிபயம்நீங்க சியாமளாதேவியைத் துதித்து அவளோடைக்கியமாகத் தீக் குதித்தேன்.

அந்தத் தீ யென்னைச் சுட்டதில்லை தொட்டதில்லை. ஆனால் என் அகம்பாவத்தைப் பொடி சாம்பலாகச் சுட்டெரித்துவிட்டது. அஹம்பாவம் அற்றுப்போகவே சற்றுமயக்கங்

கொண்டு தியங்கி விழித்தேன். சியாமளை "அப்பனே என்ன மயக்கம்! ஏனிப்படித் தியங்குகிறாய்? ஏதோ கொள்ளைகொடுத்தவன் போலவும் தேடித்தியங்கிப் பார்க்கிறாயே! என்ன?" வென்று மனங்குளிரக் கேட்டாள்.

"அம்மணீ! என்னைக் கொடுத்து உன்னைக் கொண்ட போதிலும் ஒழியாத 'மனம்' இப்பொழுது எங்கேயோ என்னைவிட்டோடி ஒளித்துக்கொண்டு விட்டது! அதைத்தான் தேடிப் பார்க்கிறேன். இந்தச் சுத்தவெளியில் அது எங்குதான் ஒளித்துக்கொள்ளக்கூடும்! என்று தியங்குகிறேன்!" எனப் பதில் சொன்னேன்.

அது எங்கும் ஒளித்துக்கொள்ள வில்லை! இதோ இருக்கிறதுபார்! என்று உத்தூளனமான விபூதியைக் கையில்கொடுத்து மேலெங்கும் கடவிக்காட்டி அஃதையே பூசிவிட்டாள்.

"ஐயகோ! சாம்பலாண்டியாய் விட்டேனே!" யென்று குழந்தைபோல் ஆச்சரியப்பட்டுத் திகைத்து நகைத்தேன். நகைத்த நகைப்பில் மின்னற்கொடிபோல் என்னெதிர் நின்ற சியாமளாதேவி திடீரென்று போனவிடம் வந்தவிடம் தெரியாமல் மறைந்துபோனாள். "இதென்ன ஆச்சரியம்!" என்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.

முன்கண்டதோர் 'வெண்ணிலா' இப்போது வெள்ளியம்பலமாய் விளங்கக் கண்டேன்! வெண்ணிலாவைப் பிடிக்கப்போய் வெள்ளியம்பலத்தில் புகுந்துநிற்கக் கண்டேன். அங்கே கண்டதோர்காட்சியைச் சொல்லாமற் சொல்லிவிண்டேன்.

அங்கே "வித்தகச் சித்தர்கணம்" பாடிய அகாராக்ஷர வர்ணனையைச் சொன்னேன். அகாரலக்ஷியத்தையும் பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமாய் அறிந்துகொண்டு, உகாராக்ஷரத்தைப் பார்த்தேன்.

"உகாரதிப் பிரிய பூஷண சங்கர
நாகவிநாச நடேச வோ"

என்கிற சப்தம் (காதில்லாத) காதில் விழுந்தது. அதன் லக்ஷியத்தையும் உணர்ந்து கொண்டு மகார மெங்கேயென்று மறைவழிப்பட்டுப் பார்த்தேன். எங்கும் காணவில்லை. மறைவழிவிட்டு நிறைவழிபற்றி நிமிர்ந்து பார்த்தேன். "வித்தகச்சித்தர்கணம்,—"

"மந்மத நாச மதுபா னப்பிரிய
மந்தரபர்வத வாஸ சிவா"—என்று

ஆர்ப்பரித்துக் காகோஷம் செய்தார்கள்.

"மந்தர பர்வதமெங்கே!" யென்று கேட்டேன்.

தந்த்ரபர்வதத்தைக் காட்டினார்கள்.

"இது தந்த்ரபல்லவா, மந்த்ரம் எங்கே?" யென்றேன்.

எல்லாரும் கைகொட்டிச் சிரித்து,—

"ஓம்கா ரப்பிரிய உரக விபூஷண
ஹ்ரீம்சா ராதி மஹேசசிவா"—என்று

பின்னும் சிவநாமஸ்மரணைசெய்தார்கள். "ஓம் காரசப்தம்" காதில்படவும் பிரணவோபாசனை செய்தவாசனை மேலிட்டதால், "மனம் ஒரு வழிபட்டது மந்திரம்" என்கிற வாசனையுதிக்க, அதிலிருந்து "மந்த்ரபர்வதமெங்கே?" யென்று கேட்ட கேள்விக்குத் "தந்த்ர பர்வதத்தைக் காட்டினார்கள்" என்றதிலுள்ள மர்மம் தெரிந்தது.

"மந்த்ராராஜாய வித்மஹே, மஹா தந்த்ராயதீமஹி,
தன்னோ மந்த்ர ப்ரசோதயாத்,"

என்கிற மஹாமந்த்ரம் ஞாபகத்துக்கு வந்தது. மஹாதந்த்ரத்தை தியானம் செய்தால் மந்த்ராராஜாவினுடைய அனுக்ரஹத்தாலே அந்த மந்தரப (மலையிலக்காய் விளங்கி)உள்ளத்தைப் பிரகாசிக்கும் என்று சூக்ஷ்மாதிசூக்ஷ்மமாய்ச் சுட்டிக்காட்டின வித்தகச்சித்தர்கணத்துக்கு "நமோ நமஃ" என்ற அனேக நமஸ்காரங்கள் செய்தேன்.

"அம்பரவாஸ சிதம்பரநாயக
தும்புருநாரத சேவியசிவா."—

என்கிற கோஷம் காதில் விழவும், சிதம்பரத்துக்குப் போகவேண்டுமென்கிற எண்ணம் உதித்தது. வெள்ளியம்பலத்திலுள்ள "வித்தகச் சித்தர்கணத்தை" வணங்கி விடைபெற்றுக் கொண்டு வெள்ளியம்பலத்திலிருந்து பொன்னம்பலம் வரப்பார்த்தேன். வழிதெரியவில்லை. எங்கும் சித்தர்கணம்! எங்கும் சுயம்பிரகாசமான வெண்நிலவொளி! யாரும் வாழிகாட்ட இணங்கவில்லை. அப்பொழுது தும்புருநாரதரைத் தியானித்தேன். அவர்களில் நாரதர் உடனே தோன்றினார். அவரை வெள்ளியம்பலத்திலிருந்து பொன்னம்பலத்துக்கு வழிகாட்டவேணுமென்றுகேட்டேன். அவர்: "வழிகாட்டத் தடையில்லை. ஆனால் இங்கே வந்தவர்கள் திரும்புகிறது என்பதில்லை. அப்படித் திரும்புவதானால்துவாரபாலகர்களுக்கு பரமசிவனுடைய ஆஜ்ஞையிருக்கிறதுஎன்று ருஜுக்காட்ட வேண்டும்"என்றார். வெள்ளியம்பலத்தில் எல்லாம் சுயப்பிரகாசமாக விருக்க அதில் விழுங்கப்பட்டு, விபூதியன்றி வேறு "நான்" என்கிற அகந்தை மருந்துக்குமகப்படாத ஸ்திதியில் (சிர்க்குண வெளியில் நிர்மலாகாரமா யிருக்கையில்—என்றபடி,) பரமசிவன் எங்கே? அவர் ஆஜ்ஞையெங்கே? பிறகு அவருடைய அனுமதிச் சீட்டெங்கே? எனக்கொன்றும் தலைகால் புரியவில்லை. இந்த அவசரத்தில் யாரும் எனக்கு உதவி செய்வாரில்லை. இப்படி அம்பல வெளியில் அறிவழிந்து (தற்போதமழிந்து) நிற்கையில், வித்தகச்சித்தர்கணம்,—தும்புருநாரதர்கள் சேர்ந்துபாட,

"ஆஹாரப்பிரிய ஆதிகிரீசவா
போகாதிப்பிரிய பூர்ணசிவ"—

என்று சிவகோஷம் செய்தார்கள்.

அதைப்பிடித்துக் கொண்டேன். போகசிவனைத் தியானித்தேன்: அவர் கைலையங்கிரிவாசியாய் எதிரே வந்து நின்றார். அவர்தான் வந்தாரே! கைலையங்கிரியையும் கூட வேரோடு பிடுங்கிக்கொண்டு வந்து விட்டாரே! யென்று பரிதாபப்பட்டு, "சுவாமி! இந்த வெள்ளியம்பலத்தைவிட்டுப் பொன்னம்பலம் போகச் சீட்டுத்தரவேண்டுமென்று வாயில்லாவார்த்தையால் கேட்டேன். அவர் மஹாவிஷ்ணுவைச் சாட்டி விட்டார்.

"ராமேஸ்வாராண்யமுகாம்புஜ
லோமேஸ்வரஸுக்ருதசிவா"

என்று எல்லாரும் கரகோஷம் செய்து துதித்துக்குதித்தார்கள். உடனே மஹாவிஷ்ணுவானவர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியாக வந்து முன்னின்றார். அவரையு மப்படியே வரங்கேட்டேன். வரங்கேட்டு வாய்மூடுமுன் "உன்வாயடைக்க!" வென்றார். பக்கத்திலிருந்த லக்ஷ்மி நாராயணனைப் பார்த்தேன். "உன்வாய் திறக்க! (வாக்கு இன்னும் விஸ்தாரமாக"!) வென்றார். அந்தவரனையும்பெற்றுக்கொண்டு, பகவான் நாரதரைப்பார்த்தேன்! "அப்பா! இந்த இடத்தை விட்டுப்போக வேண்டுமென்கிற எண்ணம் உனக்கு எப்படி உதித்ததோ!" என்று கேட்டார்.

"ஸ்வாமி! என்னுள்ளத்தினுள்ளே கண்ட தொன்றையே வெளியிலும் கண்டு கிருதார்த்தனானேன். அகம்புறம்ஒத்தனுபவிப்பதல்லவோ அனுபவம். ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றினால் அனுபவம் பூரணமாவதெப்படி?" யென்றேன்.

"ஸத்யம்! வா போவோம்"! என்றார்.

அவர் பின்தொடர்ந்தேன்: துவாரபாலகர்களை சீட்டெங்கேயென்றுகேட்டார்கள். ஒருவருக்கு "உன்வாயடைக்க!" என்பதைக்காட்டினார்.மற்றொருவருக்கு"உன்வாய்திறக்க! (வாக்குஇன்னும் விஸ்தாரமாக"!) என்பதைக்காட்டினார். இருவரும் சரியென்று ஒப்புக்கொண்டு கபாடமிட்ட வாசலைத்திறந்தார்கள். திடீரென்று யஜ்ஞவெயில் எரித்தாற்போல், அந்த வாசல்வழியே கிரணங்கள் வீசி எங்கும் பொன்மயமாய்ப் பிரகாசித்தது. "அப்பா! பொன்னம்பலம் பார்த்தாயா!" என்றார் நாரதர்,

"ஸ்வாமி! பார்த்தேன்! பார்த்தேன்! கலிதீரக் கண்டகண்ணால் பின்னும் பார்த்தேன்!" என்று அவருக்கு நமஸ்காரம்செய்து துதித்தேன்.

"அப்பா! அம்பலவெளியிது! அப்பலத்தறையைக் காட்டுகிறேன் வா!" என்றார்.

உடனே அவர் கிரிசக்ரம் என்கிற ரதத்திலேறிக்கொண்டு என்னையும் அதிலழைத்தார். அதிலேறிக்கொண்டு ஒரு சுற்றுச் சுற்றிவரவும், சிதறிப்போன மந்தையாட்டைச் சேர்த்துப் பட்டியிலடைக்கும் இடையனைப்போல, எங்கும் பரவியிருந்த மஞ்சட்கிரணங்களையெல்லாம் சுற்றிப்பிடித்து மத்திய ஸ்தானத்தை நோக்கித் திருப்பினார். அவையெல்லாம் திரண்டு செவ்வான மிட்டுக்கொண்டு, அருணோதய சூரியன்போல் ஒன்றுகூடி மண்டலாகாரமாய் ரோஜாவர்ணமாக விளங்கக்கண்டேன்.

"மித்ரஸ்ய சக்ஷுணீ தாதுஃ ச்ரவோ தேவஸ்ய
லாகஸிம், ஸத்யம் சித்ரச்ரவஸ்தமம்" *

என்னும் வேதரிக்கினால் பிராஹ்மணர்கள் தினந்தோறும் காலையில் துதிக்கும் ஜகத்காரணனான ஸ்ரீமந் நாராயணன், (சூரியநாராயணனாய் விளங்கும் வைபவத்தைப்பார்!"என்று நாரதர் "ஸஹஸ்ரகோடிஸதர்சாம்" † அந்த "உத்பத்பானு"வைக் காட்டினார்.

பிறகு இருவருமாய் அச்சூரியமண்டலத்திற் பிரவேசித்தோம். அது முன்போல பச்சைவர்ணமான கிரணங்களாகமாறி வெளியெங்கும் பரவிப் பின்னர் ஒன்றுகூடி நீலாகாரமான சந்திரமண்டலமாக விளங்கியது.

அந்தச் சந்திரமண்டலத்தில் பிரவேசிக்கவும் அது கருநீலமாக விரிந்து கறுப்புவர்ணமாகிக் குவிந்து ஸ்வர்க்க மத்ய பாதாளம் என்கிற மூவுலகையும் தன்னிலடக்கிய பூமண்டலமாயிற்று.

இந்தப்பூமண்டலத்திலே விசுவரூபதரிசனம் செய்துகொண்டு நாரதபகவானை வணங்கித்துதித்து விடைபெற்றுக்கொண்டு இந்த எண்சாணுடம்பிற் புகுந்தேன். புகவும் ஆகாசவாணி,

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்
கள்ளப்பிராணர்க்கு வாய் கோபுரவாசல்"—

என்கிற திருமந்திரத்தை யுபதேசிக்கக்கேட்டேன்.''ஸத்யம் ஸத்யம் புனர்ஸத்யம்" என்று அதன் உண்மையைக் கண்கூடாக் கண்டுகொண்டு, முன் செய்த லயயோகாப்பியாஸ சித்தியால் ஜீரணமான இத்தேஹத்தைப் பழனியாண்டவர் அனுக்ரகத்தால் ஜீரணோத்தாரணம் செய்ய வெண்ணினேன். எண்ணவும், எண்ணினபடி ஜீரணோத்தாரணம்செய்ய பஞ்சக்ருத்யபரநிருத்த மூர்த்தியானான ஆனந்தநடேசன் அருள்புரியலானான். இப்படியாக அவனருள்பெற்று இத்தேஹத்தை இடித்துக் கோவிலாகக் கட்டி வருங்காலத்தில், ஆகாசத்திலிருந்து

"உன்வாயடைக்க!" என்றும்,
"உன்வாய் திறக்க!" என்றும்,

இரண்டு தெய்வவாக்குப் பிறந்தது. இதற்கு அர்த்தம் என்னவோ அதை இதைவாசிப்போர் அவரவர்கள் மனோபாவம்போல் திரியத் திரித்துத் தெரிந்து கொள்ளலாம். இங்கே, வேதாரண்யத்திலுள்ள கோயிலின் கதவடைபட்டிருந்ததும், அதை அப்பர் சுவாமிகள் தேவாரம் பாடித் திறக்க, ஞானசம்பந்தர் தேவாரம் பாடியஃதை யடைக்கலானாரென்னும் ஐதிகம் விசாரித் துணரத் தக்கதாக ஞாபகத்துக்கு வருகிறது. வேதாரண்யத்தில் இத்தருணம் கும்பாபிஷேகமும் ஒன்று நடந்ததாகக் கேள்விப்பட்டுக் குதூஹலமடைந்தேன். "கோவில்கட்டிக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும்." பிறகு, "மூடினகதவைத்திறந்து, திறந்தகதவை மூடல் வேண்டும்." அப்பொழுதுதான் ஆடின உருவம் தேடின அருவமாகி அருவுரு வாகியும் உருவுரு வாகியும் உலகோர் உய்யவிளங்கும். ஓம் தத்ஸத்.

போக சிவனைக் காணவேண்டின யான் வெள்ளியம்பலம் விட்டுப் பூமண்டலத்துக்கு

* [ஈபிரன்ஜகளைப் போஷிக்கும் தேவதையாகிய ஸூர்யனுடைய உண்மையானதும் நன்றாக அடைவக்கூடியதும் மிகவும் ஆச்சரியமாகக் கேட்கப்படுவதுமான கீர்த்தியை ஸ்துதிசெய்கிறேன்" என்பது இதன் பதப்பொருள்.]

† ஆயிரம்கோடி சூரியப்ரகாசத்தோடுகூடிய.

வந்தேன் என்று சொன்னேனல்லவா! வந்த பின் கண்டது கனவோ நனவோ என்று பார்த்துக்கொண்டேன். கனவுமில்லை! நனவுமில்லை.—நனவு நனவழிந்ததோர் துரியமுமில்லை. பின்னை? கனவொடு நனவு சுஷுப்தி மூன்றிலும் குரலொடு சுருதி கூடினாற்போலவே, வியாபித்து நிற்குமோர் உயர் துரியத்தினின் அத்தமென்றே யறிந்தனன் உள்ளே. அஃதையே துரியாதீதமென்று செப்புவர் மேலோர். 'சகஜநிலை'யென்பதும் அஃதேயாகும். இப்படியிருக்கும் அவஸ்தை நேர்ந்ததோர் "அவஸ்தாதீதமாம் அவஸ்தை தன்னில்" ஸ்ரீ பழனி ஆண்டவர் சந்நிதானத்திலிருந்து "விபூதிப்ரஸாதம்" விளம்பரத்துடன்வர, அஃதினை யேந்திநான் ஆர்வமுடன் தரிக்க அக்ஷரமாம் முத்திரையில் அதன்கண்ணே விளங்கிய வோர் அற்புதமாம் நிஜபதத்தை அருமையுடன் 'நான்' கண்டேன். கண்டதைக் கண்டபடிக் குறிப்பிடக் கீழே ஆண்டவனடிமையா யுடன்பட்டேன் ஆஜ்ஞையினால். ஆண்டவன் அனுப்பிய ஆசீர்வசனமும் இதுவாம்:—

"இப்பிரபஞ்சத்தின்கண் நெடுங்காலம்வரை தீர்க்காயுளுடனிருந்து விவேகசிந்தாமணி யெனும் பெண்ணரசிமூலமாக சமஸ்தமான ஜனங்களுக்கும் லௌகீக வைதீக விஷயங்களை எடுத்துப் போதித்து, எல்லோரையும் இகபரபுருஷார்த்த சித்திகளைப் பெற்றுய்யும்படி செய்யவேண்டிய பக்குவங்களுடன் அவதரித்திருக்கின்ற புண்யதேஹியாகிய நின்றனக்கு எவ்வித ஆபத்துகள் வந்தாலுங்கூட சூரியனைக் கண்ட பனிபோல் ஓரிமைப்பொழுதில் பறந்து விடுமென்பதற்குச் சந்தேகமில்லை." "கோறிய காரியங்கள் நிறைவேறும்படி ஸர்வலோக சரண்யனை பகவான் அநுக்ரகம் செய்வாரென்பது திண்ணம்."-அதாவது, "ஆத்மஸங்கல்பம் எப்போதும் இடையூறின்றி நிறைவேறுமென்பது திண்ணம்."— என்றபடி.

ஓம் சரவணபவநமோநம:

திருநெல்வேலி மோசக் கொலை.

———(:-o-:)———

சென்ற ஜூன்மீ 17உ சனிக்கிழமையதினம் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஆஷியென்பவர் ஒரு மாசராஜாவின்பேரில் கொடைக்கானலிலிருக்கும் தனது புத்திரர்களைப் பார்க்க வேண்டி மனைவி சகிதமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் மணியாச்சி ஸ்டேஷனில் ஒரு பாதகன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். உடனே அவனும் ஸ்டேஷன் கக்கூசுக்குள் ஓடி யொளிந்துகொண்டு அதற்குள் தானே தன்னைச் சுட்டுக்கொண்டு மாண்டுவிட்டான். அதைப்பற்றி வேண்டிய விசாரணைகள் நடந்து வருகின்றன. இந்த மஹாபாதகம் செய்தவன் ஒரு உயிரை வாங்கினதன்றி தன்னுயிரையும் மாய்த்துக்கொண்டு யமலோகம் போய்விட்டபடியால், அங்கே தர்மராஜா முன்னிலையில் அன்னவன் தன் கர்மத்துக்குத்தக்க தண்டனையடைவானென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இப்படி நடக்கும் கொலைபாதகங்களால் தேசத்தின் நல்லபேர் கெட்டுப் போகிறது. 'குலத்தைக் கெடுத்தது கோடரிக் காம்பு' என்றது போல், சில துராத்மாக்களின் துஷ்கிருத்தியத்தால் தேசத்தின் நல்லபேர் கெட்டுப்போகிறது! இதுவும் ஓர் கொடுமைதான்! திடீரென்று காலஞ்சென்றவருடைய மனைவி மக்களிடத்து நடக்குண்டாகும் அனுதாபத்துக்கு அளவில்லை. திக்கற்றவருக்கு தெய்வமேதுணை யாதலால், அந்த அம்மாளுக்கும் குழந்தைகளுக்கும் பகவான் தான் மனோதைரியத்தைக் கொடுத்து ஆறுதலை யுண்டுபண்ணவேண்டும். மனுஷன் துயருற்றவரோடு துயரப்படலாம். பகவான் ஒருவரே தீனதயாளு! அவர்தான் தீனரைத் தேற்றவும் ஆற்றவும் வல்லவர். எல்லாம் வல்ல கடவுள் அநாதரக்ஷகராதலால் திடீரென்று ஆறாத்துயரிலாழ்ந்த அவர் குடும்பத்தார் மனதை யருள்நோக்கால் ஆற்றுவாரென்று ஸர்வலோக சரண்யனைத் தியானித்துப் பிரார்த்திக்கிறோம்.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, adaptation and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பே வடிவம்: அறிவே சக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE.

புத்தகம். 19.] 1911ஆ ஆகஸ்டுமீ, விரோதிகிருதுஆ ஆவணிமீ [சஞ்சிகை. 5.

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copyright in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lilita Publishing Co., Sole Agents and Managers

M. K. Narayanaswami Iyer, B.A. B.L.

Hon. Secy,

Vivekachintamani Pub. Committee.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய்உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓ.

The Mystic Number "28."

"இருபத்தியெட்டு" — அதன்பொருள்.

"நமஸ்ஸவித்ரே ஜகத்ஸகச்சக்ஷுஷே."

———(:-:)———

[1880-ஆ டிசெம்பர்மீ 28உ நாராயணவாம் ஸ்ரீ சுரைக்காய் ஸ்வாமிகளுக்கும் அவரைப் பார்க்கச் சென்றவர்களில் ஒருவருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. பின்னவர் பேர் கோபாலகிருஷ்ண பிள்ளையாம்.

கோபால கிருஷ்ணபிள்ளை:—"வாசி விஷயமாய் எட்டுடனே நாலைக் கட்டவேண்டு மென்கிறார்களே அதென்ன?"

ஸ்வாமிகள்:—"தச்சன் செதுக்கிற வாசியா?

கோ.—"அல்ல, வாயு."

ஸ்வாமி:—"அபானவாயு பறிகிறதே, அதுவா?"

கோ.—அல்ல சுவாமி, சுவாஸம்."

ஸ்வாமி.—"நானென்ன படித்திருக்கிறேனு இதற்கெல்லாம் பதில்சொல்ல!"

" அப்பா நீ என்னமோ நல்லவன்தான்! குடிகாரனைக்கண்டால் குடிக்காதேயென்று சொல்லு."—The Swami's greeting to a drunkard.]

†"எட்டுடனேநாலைச்"வாசிவா"வென்றுகட்டவும்வேண்டும்
எட்டாலே யெட்டைவெட்டிப் பிளக்கவும் வேண்டும்!
எட்டாலே யெட்டைவெட்டிச் சுட்டெரித்த தீயால்
மூட்டாமலே யெட்டைச் சுட்டிநீ பார்த்தால்
தட்டாமலே யந்த எட்டிலே வலிப்பவனை
எட்டாமலே யப்பா எட்டிநீ பிடிப்பாய்!—
எட்டோ டிருபத்தின் ரகஸியநீ தறிவாய்!"

'தருமம் பொருள்காமம் வீடெனு நான்கும்
உருவத்தா லாய பயன்"—ஔவைகுறள்.

'மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு."—ஔவைகுறள்.

ஓம் நமோ நாராயணாய—"அஷ்டாக்ஷரம்."

"குலத்தைக்கெடுத்தது கோடரிக்காம்பு
நலத்தைக்கெடுத்தது நாமகன்-சிலம்பொலி
மலத்தைக்கெடுத்தது மாமஹயாகமென்
றலத்தைக்கெடுத்தது தற்பத-லக்ஷியம்."

"குலத்தைக் கெடுத்தது கோடரிக்காம்பு." இதன் அருத்தம் சுலபம். கோடரிக்கு காம்பாக உதவ அமைந்த ஒரு தண்டுமரம் அது கோடரிக்குச்செய்த சகாயத்தாலே தன் குலமாகிய மரமெல்லாம் வெட்டுண்டு விழக் காரணமாகித் "தன்குலத்தைக் கெடுத்தது." அஃதே போல, நாவில்வஸிப்பவளான வாக்தேவியின் சிலம்பொலி (அதாவது, பரைவாக்கு) நலத்தை ('நலந்தீது'என்கிறதுவந்தகாரஸ்வரூபமான இந்திரிய வுணர்ச்சியாம் நலத்தை)க் கெடுத்தது. இந்தப் பரைவாக்காம் நாமகள்-சிலம்பொலி நாதானுசந்தானம் செய்ய வல்லார்க்கே கேட்கும். யாகங்கள் எல்லாவற்றிலு பஹு பெரியது "தன்னைக் கொடுப்பதாம்." தன்னைக் கொடுத்தார்க்குத் தியாகராஜமூர்த்தி பிரஸன்னமாகித் திரிமலந்தீர்த்தலாலே "மலத்தைக் கெடுத்தது" என்றார்.

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகத்தாலே ஆத்ம அநாத்ம விவேகம்பெற்ற ஸத்புருஷன் ஆத்மலாபத்தை யுத்தேசித்து தத்பதலக்ஷியத்திலே மனதை யிருக்கச் செய்ய அது கிருபாதிகமாகி விளங்குவதால் "தலத்தைக் கெடுத்தது" என்றார். இஃதெல்லாவற்றிலும் காரிய காரண தோரணைவிளங்குவதை ஊன்றி உணர்ந்துண்மையுணரல்வேண்டும். இங்கே ஸித்தர்வசனம் ஒன்றையும் உள்ளபடி ஆய்ந்துணர வேண்டும். உள்ளதை யெல்லாம் உள்ளபடியாராய்ந்து பார்த்தால் முடிவுரையாக விளங்குவது இந்த ஸித்தர்வாக்கில் சொல்லப்படடிருக்கிறது:—

'ப்ரணவமுக்திஃ ப்ராணஃசக்திஃ
ப்ரணவ—ப்ரணவ ஸம்யமன்திதி புருஷரூப:
ப்ரணவத்வாகே ப்ராணகர்ப்பன்திதிஃ இதி ஸ்ரீரூபஃ
ஸ்ரீபுருஷஸம்யமவசாத் ஜிவஃ"—(இதி ஸித்தௌவாச்சா.)

இதன் பொருள் என்னவெனில்:—

(1) அகார உகார மகாரரூபம் சேர்ந்த ப்ரணவம் எப்போதும் முக்தி ஸ்வரூபமாய் விளங்குவது. சிவாயநம வென்றும் (ஸோ, ஹரீம், க்லீம், வேம், ஸௌம் என்றும்) பஞ்ச ஸங்கியோபசாராத்மகமான பிராணன் எப்போதும் சக்தி ஸ்வரூபமாய் விளங்குவது.

OFFICE OF THE REGISTRAR 5 - SEP 1911 MADRAS.

(2) "ப்ராண ப்ரணவஸம்யமஸ்திதி புருஷரூபஃ"—ப்ரணவமுக்தியும் ப்ராணசக்தியும் ஏகரஸமாய் ஐக்கியப்பட்டிருக்கும் ஸ்திதி யொன்றெதுவோ அது புருஷரூபம், அதாவது விஷ்ணுபதம். இது எப்போதும் அஷ்டபீஜமாக வேவிளங்கும். அஷ்டாக்ஷரம் என்றும், சுருக்கமாக "எட்டு" என்னும் பரியாயநாமகங்கியையாலும் [illegible]ப்படும். சக்தி ஸ்வரூபமாம் மீதவி "பஞ்சஸங்கியோபசாரணி"யா யிருப்பதுபோல் புருஷ ரூபமாம் விஷ்ணு "அஷ்டஸங்கியோபசாரண"ராகவிருக்கிறார்.

(3) இந்தப் புருஷ ரூபத்துக்கு "ஸ்ரீரூப"மான மஹாலக்ஷ்மி எப்போதும், ஷட்ஸங்கியோபசாரணியாய் "ஷட்பீஜம்," "ஷடாக்ஷரீ" என்னும் ரஹஸ்ய நாமங்களால் விளங்குகிறாள். (சிவபநமஸ்ரீ.) இந்த ஷடாக்ஷரீயோடு மூன்றுமயமாயிருக்கிற பிரணவம் சேர்ந்தால் 'நவாக்ஷரி'யென்னும் அபின்னசக்தியாகிறது. இந்த நவாக்ஷரி யெப்போதும் ஏகரூபமாயுள்ளது. இவைகளெல்லாம் பரமரஹஸியங்கள்: அப்படியென்றால் பரதத்துவங்களை விளக்கும் குப்தவித்யை யென்று அருத்தம். இவற்றின் உண்மை தத்துவதரிசனங்கண்டு திரிபுடி ரஹஸிய முணர்ந்து திரிபுடி ரஹிதமான அபரோக்ஷானுபவஸித்திக் குழைக்கிறவர்கள் நாமரூபங்கடந்த ஜ்ஞேயப்ரஹ்மத்தைச் சாக்ஷாத்கரிக்கவேண்டி நாதானுசங்கேதமாக உபயோகிப்பார்கள்.

(4) ஸ்ரீபுருஷஸம்யமவசத்தில் உதிப்பது ஜீவன். இங்கே சிஷ்டர்கள் உள்ளமுணர்க்கிரஹித்து உள்ளத்தில் வைக்கவேண்டிய இரகஸிய சங்கியைகளைக் கீழே குறிக்கிறோம்:—

ப்ரணவ முக்தி:—மூன்று மயமாயிருப்பது-3
ப்ராணசக்தி:—பஞ்ச ஸங்கியையாக விருப்பது: =5
புருஷரூபம்:—அஷ்டஸங்கியாத்மகமாயிருப்பது: =8
ஸ்ரீரூபம்:—ஷட்ஸங்கியாத்மகமாயிருப்பது-6
நவாக்ஷரீ=நவஸங்கியாத்மகமானது: =9
ஏகரூபம்=நவாக்ஷரீயின் சமஷ்டிரூபம்=1

ஆகமொத்தம் சங்கியை: =32
இந்தமுப்பத்திரண்டின்சமஷ்டி=1

ஆகமொத்தப்படிகள்=33

இப்படியாக பரதத்துவங்களெல்லாம் (33) என்கிற இரகஸிய சங்கியையில் அடங்கிவிடுகிறது.

ஜீவன் "ஸ்ரீபுருஷஸம்யமவாசாத்" என்று சொல்லியிருப்பதால் (6+8)=14-என்னும் ரஹஸியசங்கியை அவனுக்குரியதா யிருக்கிறது. இந்த ஜீவன் 'யமதரிசனம்' செய்து விட்டால் ஆரோஹ அவரோஹண கதியில் "ப்ரதோஷ தரிசனம்" என்கிற பரோக்ஷ சாக்ஷாத்காரம் பெற்றவ னாய்விடுகிறான். சூரியபுத்திரனான (வைவஸ்வதன்) யமனதுதரிசனம் பெற்ற நசிகேதஸ் போல அந்த மஹாபுருஷனிடம் ஆத்மோபதேசமும் பெற்றுத் தேறினவன் 28-ம்படி யேறினவனாகிறான். அவன் சூரிய தரிசனம் பெற்று சூரியநாராயணனைத் தியானம் செய்பவனாய் சூரியநமஸ்காரம் செய்து "நமஸ்ஸவித்ரே" என்கிற வேத மந்திரத்தில் சொல்லியிருக்கிறபடி சூரியத் தியானம் செய்து தியேயாகார மாகிறான்.

"நமஸ்ஸவித்ரே ஜகத்ஸகச்சக்ஷுஷே ஜகத்ப்ரஸூதி
ஸ்திதிநாசஹேதவே த்ரயீமயாய த்ரிகுணாத்மதாரிணே,
விரிஞ்ச நாராயண சங்கராத்மகே॥ த்யேயஸ்தோ..."

இதன் அருத்தம்:—ஸவிதுவுக்கு (ஸூரிய பகவானுக்கு) நமஸ்காரம்; (அவர்) ஜகத்துக்கெல்லாம் ஒருகண் (ஆகவிருக்கிறார்); ஜகத் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்கும் ஹேதுவாய் (காரணமாய்) இருக்கிறார்; த்ரயீமயி=மூன்றின் மயமாயிருக்கிறார்: (மூன்று வேதங்களின் பொருளும் தாமேயாக விளங்குகிறார்.); மூன்று குணங்களைத் தரித்தவராக விருக்கிறார்; விரிஞ்ச நாராயண சங்கராத்மகே=பிரஹ்மா விஷ்ணு சிவன் என்கிற திரிமூர்த்திகளின் சம

ஷ்டியா (ஏக ரூபமா)யிருக்கிறார்; (இவரை)ஸதா காலமும் தியானிக்க வேண்டியது.

யமதரிசனம் காணாத லோக யாத்ரிகர்களுக்கு இவரை தியானிக்கும் விதம் எப்படியென்று பின்னால் இவருடைய சகுணோபாசனை சொல்லப்படுகிறது.

யமதரிசனம் கண்டு "ஸப்த விம்சதி சாயுஜ்யம்" பெற்றவர்கள் ("27°" என்கிற படியேறினவர்கள்) இவரை அகண்டைகரஸமாய் தியானிக்கும் விதம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஸூரியனை (நிருபாதிக ஸ்வரூபமாயிருக்கும் தேஜோரூபியான பகவானை) தியானித்து தியேயாகாரமானவர் தூம மார்க்கத்தை யறவிட்டு, தேஹத்தோடிருந்தாலும், உலகத்திலிருந்தாலும், பிள்ளை குட்டிகளோடு குடும்பியாயிருந்தாலும், அல்லது இவைகளை யெல்லாம் விட்டொழித்த ஸந்நியாசியா யிருந்தாலும், தாமரை யிலையில் தண்ணீர் போல் உபாதிகளில் ஒட்டியும் ஒட்டாமல், நைஷ்கர்ம ஸித்தி பெற்று, எல்லாம் செய்தும் ஒன்றும் செய்யாத முக்த சித்தராய் அர்ச்சராதி மார்க்கத்திலேயே திருடமாக நிலைக்கப்பெற்ற கதியுடையவராய், அவரிருக்கு மிடமெல்லாம் தேவலோகமாகச் செய்துகொண்டு, காஷாயதாரியா யிருந்தாலும், அப்படி யில்லாவிட்டாலும், தம்முள் விளங்கும் ஆத்மப் பிரகாசமானது உதய கால சூரியனைப்போல் செம்மையாய் விளங்க, பிரகாச விமர்ச ஐக்கியத்தை அஹம் புறமென்று மிரண்டு மொன்றாய் விளங்கும் ஐக்கிய பத்தியத்தினால் உருக்கின தங்கம் போல் பிரகாசம் விளங்க, உலகுக்கோர் உதாஹரணமாய், ஊனுடம்பே ஆலயமாய், திவ்ய பாத்ரை செய்து கொண்டு விளங்குவர். இவர்களுக்கு பூதாகாரமான தேஹம் இருந்தும், அது சங்கல்ப மாத்திரத்தினாலே லயிக்கக் கூடிய பக்குவம் பொருந்தியதால், இல்லாமைக் கொப்பாக விளங்குவர். கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், பஞ்சப்பிராணன், அந்தக்கரணாதி பேதங்கள் ஆகிய இருபஃதும் இவர்களுக்குச் சொன்னபடி கேட்கும். பஞ்சதன்மாத்ரையாம் (அபஞ்சீகரண சூக்ஷ்ம பூதங்களையே) தேஹமாகக்கொண்டு, 25ம்படியில் (25°) குருவருள்பெற்று, (26°)-ல் ஷட்விம ஜகதபாவத்தை யுணர்ந்து, (27°)-ல் யமதரிசனம் பெற்று அவரிடம் காலாதீதமான உண்மையுபதேசமும் பெற்று, (28°)-ல் (நிருபாதிகநிலை பெற்ற தேஜோமய) ஸூரியனைத் தியானித்து தியேயாகார ஸித்திபெற்ற நிலையில் உலகத்துக்கெல்லாம் "ஓர் கண்ணாக" ஸர்வஜ்ஞத்துவம் பெற்று விளங்குவார்.

இவர்கள் சிஷ்டபரிபாலனார்த்தம் தங்கள் ஸர்வஜ்ஞத்துவத்தை உலகத்தார்க்கு உபயோகமாகும்படிப் பிரயோகிப்பார்களானால் இவர்களை உலகத்தார் திரிகாலஞானியென்று துதிப்பார். காலாதீத நிலையடைந்தவர்கள் காலத்துட் பிரவேசித்தால் திரிகாலமும் திரைவிரித்தாற்போல் அவர்கள் ஞானக்கண்முன் விளங்கும். இப்படி விளங்கப் பெற்றவர்களில் மஹத்தான ஒருவர் நாராயணவநம் சுவாமிகள். அவர் நிர்வாண தகையடைந்த 9-வது வருடோற்சவம் இந்த 1911ஆ ஜூலைமாதம் 31-உ ஹஸ்தநக்ஷத்திரங் கூடிய சோமவாரத்தன்று சம்பவிக்கிறது. அந்தமஹான்,

"ரிக்வேதாச்ரித மௌனவிபூஷண
சந்த்ரார்க்காக்நித்ரிநேத்ரசிவா."

என்றபடி, ரிக்வேதத்தினால் துதிக்கப்பட்ட ப்ரஜ்ஞானப்ரஹ்மமாம் 'சிதக்னிகுண்டத்தை' வளர்த்து ஞானத்துக்கு லக்ஷணமான 'மோனலாம்பு' கடவாது, மனோமௌனம் பூண்டவராய், சந்திரனை ஒருகண்ணாகக்கொண்டு கருணாமிர்தம் பொழிந்து, சூரியனை யொருகண்ணாகக் கொண்டு காலாதீதத்திலிருந்து சிஷ்டபரிபாலனார்த்தம் திரிகாலஞானியாய் விளங்கி,—அக்னி ஸ்வரூபமான நெற்றிக்கண்ணை யுபயோகிக்க, "அடிமடியில் கைபோடுகிறவன் ஒருவனையும் காணோமே!" யென்று யேசுகிறிஸ்து இரங்கினதுபோல் ஜீவகாருண்ய பூரண இரக்கத்தினால் சுட்டிச் சொன்னவார்த்தையானது ஸத்துக்கள் மனதிற்புகுந்து காட்டுத்தீபோல் கண்டதையெல்லாம் பற்றியெரிக்கிறது.

(28°) என்கிற சங்கியோபசார ஸித்திபெற்றவரே உண்மையான காஷாயதாரிகள். கோடிக்கணக்கான இளஞ்சூரியனைப்போன்ற விமர்ச ரூபமாம் ஸ்ரீகுருவருளைப் போர்வையாகத் தரித்தவர் அவர்களே. "மௌன விபூஷணரான" அவர்கள் திருவடிசரண்புகுந்தார்க்கு நிகபர சாதனங்கள் இரண்டும் சித்திக்குமென்பது திண்ணம். ஆனால் "அடிமடியில் கை போட"த் துணியவேண்டும்.

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
நானுமிட்ட தீ மூள்கமூள்கவே!"

என்று ஞானத் தீயால் வாழை மரத்தைக் கொண்டு தன் தாயாருக்குத் தஹன ஸம்ஸ்காரம் செய்த பட்டணத்துப்பிள்ளை யவர்கள் வாக்கினால் "அடிமடியில் கைபோடல்" என்பதற்கு யோகாருடரான விவேகிகள் கூடார்த்தம் செய்து கொள்ளலாம். தீரத்தெளிந்த ஞானிகளின் 'அடிமடியில் கை போட்டால்' 'மடியில் நெருப்பா' யிருக்குமவர்,

"அக்கினி கர்ப்பூரத்தை யறவிழுங்கிக் கொண்டாப் [போல்
மக்கினம் பட்டுள்ளே மருவியருந்தான்'டி"—என்ற

பட்டினத்தடிகள்வாக்குப் பொய்க்காது பொருந்தி,—

"குருவாகி வந்தானே குலமறுக்க வந்தானே
உருவாகி வந்தானே உருவழிக்க வந்தானே"

என்றபடி "கொள்ளைப் பிறப்பறுக்க" குருவடிவம் கொண்டு, "கள்ளப் புலனறுக்கக் காரணமாய்" வந்துதித்து—

"ஆதாரமோராறும் ஐம்பத்தோரக்ஷரமும்
ஓதான கோட்டையெல்லாம் சுட்டான் துரிசறவே"

என்றவாறு "தொண்ணூற்றறுவரையும்" துரிசறச் சுட்டு, "கண் நீறுபடக்" "கருவோறுத்துக்" காப்பாற்றுவார்கள். இது ஸத்யம், ஸத்யம், முக்காலும் ஸத்யம். ஓம்தத்ஸத்.

LALITAMBAL.
லளிதாம்பாள் சரித்திரம்.

——:–:——

III.

சதிபதி தர்மம்.

"நானொருகுற்றஞ் செய்தக்கால்
தானேபொறுக்க வேண்டாவோ!"

சென்னபட்டணம் திருவல்லிக்கேணியில் பெரியதெரு 320-ம் நெம்பர் வீட்டில் ஒரு யுவனும் யுவதியும் தனிக்குடித்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். யுவனுக்குச் சுமார் 29 வயதிருக்கலாம்: யுவதிக்கு வயது 17 ஆய்விட்டது. கையில் ஒரு வயசுக் குழந்தை: அக்குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு "குழலினிது யாழினிது" என்றமையல் தீர்ந்த மாதவப் பெற்றோர் அக்குழவியின் மழலைச் சொல் மதுரத்தை நுகர்ந்தோராய், அதிலீடுபட்டு அக்குழந்தையை மதுரம் என்றே யழைத்து வந்தார்கள். மதுரம் தன் பவழவாய் திறந்து பால்மணம் வீச அரையுங் குறையுமாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், பெற்றவர்கள் அந்த மழலைச்சொற்கேட்டு அகமகிழ்ந்து உடல் பூரித்துப்போவார்கள். பாச்சி, சோச்சி யென்கிற மழலைச்சொல் அவர்களுக்குப் பரமானந்தம் விளைக்கும் பூரணோபதேசமாக விருந்தது. அந்த மழலைச்சொல்லில் என்ன விருக்கிறது? அது ஏன் யௌவன பருவங்கடவாத தம்பதிகள் இருவர் மனதையுங் கொள்ளை கொண்டு போய் ஆனந்த சமுத்திரத்தில் ஆழ்த்த வேண்டும்? ஒருவரை யொருவர் பார்த்துப் புன்முறுவல் செய்தபோதுண்டான சந்தோஷமெல்லாம் இச்சிறு பாலான் மழலைச் சொல்முன் எங்கே பறந்துபோயிற்று? என்று இவ்வாறு எழும் எண்ணிறந்த கேள்விகளுக்கு ஆராய்ந்து பதில் கண்டுபிடிக்க அவர்களுக்கு அவகாசமில்லை. யுவதி வீட்டுக்காரியமா யிருக்கும்பொழுது அக்குழந்தையை

[illegible] அது விளையாடிக் கொண்டிருக்கத் தன் குடித்தனக் காரியங்களை யதிகபரபரப்புடன் பார்த்து வந்தாள். காரியத்தில் முயன்றவளாய் அவள் காலும் கையும் ஓடியாடி யுழன்று வந்தாலும், அவள் கண்ணும் கருத்தும் அப்பாலகன் பேரிலேயே யிருக்கும். அதிகவசரமாக அப்பெண்மணி அடுப்புக் காரியம் பார்த்து வருகையில், அக்குழந்தை, வீட்டுவேலைசெய்கிற கிழவியைப் பார்த்துவிட்டு, "அம்மா! கீ'வி!"யென்று மழலை வாய்திறந்து பேசிவிட்டால் அவளுக்கு ஆனந்தம் பூரிக்கப்போய்விடும். உடனே எல்லா வேலையையும் மறந்து தேஹம் பரவசப்பட்டவளாய் அக்குழந்தையிடம் ஓடி அதைக்கட்டியொரு முத்தம் கொடுப்பள். முத்தம் கொடுத்த மறுக்ஷணம் அடுப்பில சாதம் வடிக்க நேரமாய் விட்டதே யென்கிற நினைவுவரும். சித்தமும் புத்தியும் குழந்தையினிடமிருக்க, அவள் சூத்திரப் பாவைபோலும் மின்னற்கொடிபோலும் பறந்தோடி, சோற்றைவடித்து இறக்கியபின், அடுப்பில் கறி குழம்பு ஆவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு ஒரு நிமிஷத்தில் அக்குழந்தையினிடம் வந்து விடுவாள். அதற்குள் குழந்தையும் பேசி விளையாடிக் களைத்துப் போயிருக்கும். அம்மாவைக் கண்டதும் அது இல்லாத சமத்காரமெல்லாம் செய்துகொண்டு ஸ்தந்யபானம் செய்ய வேண்டுமென்கிற விருப்பைக்காட்ட அதை யுணர்ந்தும் உணராதவள் போல் அகமகிழ்ந்து அதற்குச் சரியாக விளையாட்டுக்காட்டிக் கொண்டிருந்து, அக்குழந்தை விளையாடி யலுத்துப்போய் "பாச்சிக்கழும் பொழுதே" அதை "யெடுத்துவிடுவள்." "அழுதபிள்ளை தான் பால் குடிக்கும்" என்பது அவளுடைய தாயனுபவத்தில் அவளுக்கு நன்றாகத்தெரிந்து விட்டது. குழந்தை யழுவதற்குச் சற்று முந்தியே, தனது ஸ்தனத்தில் பால் சுரப்பதைக் கொண்டு அதை யெடுத்துவி[illegible]ந்து வந்தாள். ஆனால் அக்குழந்தை பால் குடிப்பதில் அவ்வளவு சிரத்தை காட்டாது, விளையாட்டில் கருத்தாயிருக்கக் கண்டாள். பெற்றவளுக்கோ பால்சுரந்து ஸ்தனம் விம்மி யொழுகுகிறது: பிள்ளையோ பால்குடிப்பதில் சிரத்தையில்லாமல் விளையாட்டில் கருத்தா யிருக்கிறது! இந்த அவஸ்தையிலுள்ள தர்மசங்கடத்தைப் பெற்றெடுத்த புண்யவதிகளறிவார்களே யன்றி மற்றவர்கள் அறியார்கள்.

"அழுதபிள்ளைதான் பால்குடிக்கும்" என்பதில் "அழுதபிள்ளைதான்" என்ற ஆத்ம சப்தத்திற்கு அநுத்த மென்னவென்று ஆலோசித்துப் பார்த்தால், குழந்தையும் பசித்தீயின் வாதையை உணரவேண்டும். பசிதாபம் உணர்ந்தால்தான் குழந்தை அழும். பசியின் உணர்ச்சியில்லாதவரையில் அதற்கு நிவர்த்தியும் அவசியமில்லைத்தானே! ஆகையால் எதையும்உணரவுணர்ந்துபின் பரிகாரம் தேடுவதே ஜீவனின் சுபாவம். அந்த சுபாவத்துக்கு விரோதமாக நடந்தால் பிரகிருதி தர்மத்துக்குக் குறைவுவருகிறது. ஆகையால், தாயானவளும் சீக்கிரத்தில் தானே பிரகிருதி தர்மத்துக்கு அனுகுணமாக நடந்து கொள்வதே மேலென்று தாயன்பு என்னும் உள்ளறிவால் உணர்ந்து கொள்கிறாள்.

இங்கே அறிவு இருவகைத்தாகப் பிரித்துணரத்தக்கதா யிருக்கிறது. அதாவது விவேகத்தோடு கூடியது என்றும், பழக்கவாசனையால் (தேஹமாத்திரத்தால்) ஜனிப்பது என்றும் இருவகைத்தாம். 'விவேகத்தோடுகூடியஅறிவு' விவேகம் என்றும் உள்ளுணர்வு என்றும் சொல்லப்படும். இது எப்போதும் அன்பு காரணமாயுதிப்பது. நித்தியாநித்தியவஸ்து விவேகத்தால் இன்னது சாசுவதமான நன்மையளிக்கும், இன்னது நன்மைபோல் காட்டித் தீமைவிளைக்கும்என்று உணரும் உள்ளறிவுக்கே, விவேகம் என்றுபேர். தாயார் அன்பிலீடுபட்டவளாய் குழந்தையைப்பார்க்கும்பொழுது தனக்கு பால் சுரந்து மார்கட்டிக் கொண்டாலும், குழந்தை அழுகிற சமயம் பார்த்துத்தான் பால்கொடுக்க வேண்டுமென்றுணர்ந்து, தனது வேதனைக்கு வேறுபரிகாரந்தேடியோ, அல்லது பொறுத்துக் கொண்டோ குழந்தையின் க்ஷேமத்தையே மேலாகக்கருதுகிறபுத்தி விவேகபுத்தி. தன் தேஹ சுகத்தையே பார்த்துக்கொள்வதற்காகக் கருதி, இந்த உபத்திரவம் பொறுக்கலாற்றாது, மருந்து மாயங்களைத் தின்று பெற்றவளுக்குப் பால் வற்றிப் போகச்செய்து பின் காசுகொடுத்து முலைப்பால்காரிதேடிப் பிள்ளைவளர்க்கும் புத்தி தேஹ புத்தி, அல்லது அசுர புத்தி, அல்லது பழக்க வாசனையால் (தேஹவாசனையால்) வந்த புத்தி யென்று சொல்லப்படும்.

இரண்டுக்குமுள்ள வித்யாசம் என்னவெனில்: ஒன்று விவேக பூர்ணமானது; மற்றொன்று விவேக சூன்யமானது. இதுவே தேஹத்துக்கும் ஆத்மாவுக்குமுள்ள வித்யாஸம்.

தேவர்கள் (சுரர்கள்) ஆத்மோபாஸகர்கள்.

அசுரர்கள் (ராக்ஷஸர்கள்) தேஹோபாஸகர்கள்.

முன்னவர் ஸ்வயம்பிரகாசத்தை நாடியுழைப்பவர்கள்.

பின்னவர் இருளிலொளியைப் பெரிதாய் மதித்துழைப்பவர்கள்.

தாயன்பு தேவதானுக்ரஹ பூரணத்துக்கு வழிபாம்.

தேஹாபிமானம் (ஆத்ம லோபத்தால்) ஸ்வாநுகூலத்தை யுண்டுபண்ணுவதுபோல் காட்டிப் பிரதிகூலம் விளைக்கும்.

முன்னது நிலையுள்ள வாழ்வு: பின்னது நிலையற்ற வாழ்வு.

தாய், பிள்ளை யென்கிற இரண்டு அனுபவங்களின் சுபாவத்தை யாராய்ந்தால் எல்லா சுபாவங்களும் அவற்றிலடங்கும்.

தாய்பாவம் "கருணாரஸம்" நிறைந்தது. பிள்ளைபாவம் "பக்திரஸம்" நிறைந்தது. கருணாரஸம் உபாஸிய லக்ஷணம். பக்திரஸம் உபாஸக லக்ஷணம். இவ்விரண்டுக்கு முள்ள உறவே "உபாஸனை." தாய் பிள்ளையினுறவில் உபாஸனை [illegible]க்கையும் உற்றுணர்ந்துய்யலாம்.

"தாயைப்போல பிள்ளை" "நூலைப்போல சேலை" யென்கிற பழமொழியை யெல்லாரும் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் இவ்வசனங்களை நித்தியப்படி உபயோகித்து வருகிறார்கள். இவற்றின் அருத்தமென்ன? தத்துவார்த்தமாய்ச்சொன்னால் "காரணத்தைப் போல் காரிய மிருக்கும்" என்பது பொருள்படும். இஃதையே ஔவையார் "நன்மை விதைத்தால் நன்மை விளையும்; தீமை விதைத்தால் தீமை விளையும்" என்று பரிஷ்காரமாய் எடுத்துச் சொன்னார். தாய் குணவதியாயிருந்தால் பிள்ளை குணவானாயிருப்பான். நூல் ஸந்நமாயும் கெட்டியாயு மிருந்தால், சேலையும் ஸந்நமாயும் அழுத்தமாயு மிருக்கும். தாய் தனது தாயன்பு தூண்டப் பிறக்கும். உள்ளுணர்விலிருந்து பிரகிருதி தர்மத்துக்கனுகுணமாக நடந்து கொண்டால், பிள்ளை தத்துவஞான முடையவனாகவிருப்பன். தாய் ஸ்வநயம் பாராட்டுகிறவளாயிருந்தால் பிள்ளையும் காமாதுரனாய் ஸ்வநயம் பாராட்டுபவனாயிருப்பன் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தியாவில் தாய்க்குள்ள கௌரவத்துக்கும் மரியாதைக்கும் காரணம் இதுதான். ஏனெனில் தாய்பாவம் ஸர்வத்தியாக ஸ்வபாவமானது. தன் குழந்தையைத் தவிரத் தாய்க்கு வேறு லக்ஷியமில்லை. தான் உண்பது உடுப்பது உறங்குவதும் குழந்தையின் க்ஷேமத்தைக் கருதியே. அப்படிக்கின்றி குழந்தைக்கு நோவு வந்த காலத்தில் தான் ஊணுறக்கம்விட்டுக் கஷ்டப்படுவதும் அக்குழந்தையின் பொருட்டே!

இந்தத் தாய்பாக்கியம் பெண்ணாய்ப் பிறந்தவர்க்கெல்லாம் கிடைப்பதரிது. புருஷனை

படைந்தவர்களுக்கும் கிடைக்காது. பிள்ளைப் பேறு பெற்றவர்களெல்லாம் தாயர்கமாட்டார்கள். பெண்ணாயிருந்து பெண்தன்மை கெடாது பெண்டாட்டி யானோர் ஆவர்களுக்குப் "பெண்பெண்டாட்டி" யென்று பேர். அடங்காப் பிடாரிகளாயிருக்கிற "ஆண்பெண்டாட்டி"யுமுளர். ஆணுக்கழகு அறிவுடைமை. பெண்ணுக்கழகு கற்புடைமை. தற்புடைமகளிரே பெண்பெண்டாட்டி யென்னும் பேருக்கு இசைந்த பொருத்த முடையவராவர். அவர்களுக்குப் பதிவிரதமே பூஷணம். பதிவிரதம் என்றால் என்ன? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று குழந்தைப் பருவத்திலிருந்தபோல, யௌவன காலத்தில் புருஷனைத் தானே அந்த தெய்வமாகப் பாவித்துப் பதிவிரதம் தவறாமல் நடந்து கொள்பவர் கருவில் பகவான் தானே வந்து உதிக்கிறார். இப்படிப்பட்ட பதிவிரதா சிரோமணிகள் பிள்ளை பெறுமுன்னரே பூர்ண அன்புநிறைந்த ஹிருதய பக்குவமுடையவராதலால், அவர்கள் ஒட்டு மாங்கன்றுபோல், பிறந்தவிடம்விட்டுப் புதுக்விடத்தில் ஒட்டிக்கொண்டு வெகுசீக்கிரத்தில் ஹிருதயம் கனிந்தவர்களாகிறார்கள். இந்தப் பதிவிரதா தர்மம் பிறவிக் குணத்தால் அமைய வேண்டுமே யன்றி செயற்கையினால் வரவில்லை. இந்தப் பதிவிரதா சிரேஷ்டைகள் புண்யத்தினால் தான் இந்த பாதக்கண்டம் இன்னும் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனைக்கும் அடி சறுக்கும் என்பதுபோல், பதிவிரதா தர்மத்தை யனுஷ்டிப்பவர்களுக்கும் பிசகு நேரிடுமென்பது சகஜம். ஏனெனில் மனம் பஹிர்முகப் பட்டிருக்கையில் விஷயப்பற்றி லாழ்ந்திருப்பது அதற்கு சகஜமாதலால், அந்த மோகத்தில் தர்மம் தவறிப்போவது முண்டு.

மேலே நாம் வர்ணித்து வந்த பதிவிரதா சிரோமணி யொருநாள் தான் பதியினிடமிருந்து ஒரு அற்பவிஷயத்தை ஒளிக்க வேண்டியதாயிற்று. குழந்தையின் காலில் போட்டிருந்த கொலுசு ஒன்று கழன்று விழுந்துபோக அஃதையுடனே பார்த்தாவிடம் சொன்னால் அவர் கோபிப்பாரோ யென்று, சமயம் பார்த்துச் சொல்ல வெண்ணி, அதை உபசாரமாய் ஒளிக்கலானாள். காணாமற்போன கொலுசு அவர் பார்த்தா கையிலேயே அகப்பட அவர் அதை வைத்துக்கொண்டு தன் பத்னியின் வாக்கு ஸத்யத்தைப் பரிசோதிக்க நினைத்தார். தென்றல் முற்றிப் பெருங்காற்றானது போல் சிறு பரீக்ஷைகள் செய்யப்போய் அது பிரமாதமாக முடிந்தது.

"குட்டீ! குழந்தை காலிலிருந்த சங்கிலி யெங்கே காணோமே?"

"இல்லை! உள்ளே யிருக்கிறது!"

"பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறாயா?"

"உள்ளே வைத்திருக்கிறேன்!"

"பொய் சொல்லாதே! அநர்த்தம் வரும்!"

அம்மாள் பதில் சொல்லாது மௌனமாயிருந்து விட்டாள். ஐயரும் ஆபீஸுக்குப் போக நேரமாய் விட்டபடியால், அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்.

உத்தியோக புருஷன் அவன் வேலையைக்குறை வறச்செய்ய வேண்டுமானால், ஆபீஸுக்குப் போகப் புறப்பட்டவுடன் வீட்டு ஞாபகம் மனதிலிருப்பது கஷ்டம்! ஏனெனில், ஆபீஸ் வேலைகளில் கவனமிறங்கி விட்டால், மனதில் வேறு எந்தக் கவலைக்குமிடமிராது! அப்படி உத்யோக காரியங்களில் கண்ணுங் கருத்துமாயிருந்தால் தான், வேலை சரிவர நடக்கும். இல்லாவிட்டால் உத்யோக வேலைகள் ஊழலாக விழுந்து விடும். சாயங்காலம் திரும்பி வந்தால் தேஹமும் மனமும் களைத்துப்போயிருக்கும்: ஆயாஸம் தீர இளைப்பாறிப் போஜனம் செய்யவே பொழுது சரியாகப்போய்விடும்.

இப்படிப் பல தினங்கள் கழிந்து விட்டன. கடைசியில் ஒரு நாள் அகஸ்மாத்தாகக் காணாமற்

போன நகை ஞாபகத்துக்குவர புருஷன் தன் மனைவியைப் பார்த்து "குட்டீ! அந்த நகையை யேன் எடுத்துக் குழந்தை காலில் போடவில்லை! அதைக் கொண்டுவா! பார்ப்போம்!" என்று சொல்ல, மனைவியும், நகையைக் கொடுத்தாள்.

புருஷனுக்கானால் ஆச்சர்யம் யெதுக்கக்கூடவில்லை. குழந்தையின் காலிலிருந்த சங்கிலி கீழே விழுந்து தன் கையில் அகப்பட்டிருக்க, அதேமாதிரி வேறு ஜதை யுள்ளேயிருந்து எப்படி வந்தது! என்பது அவனுக்குத் தெரியவில்லை. அந்த நகையை நுட்பமாய்ப் பரிசோதித்துப் பார்த்தான். வித்யாஸம் தெரியவில்லை. "சரி! குழந்தையின் காலில் போடு!" என்று சொல்லிவிட்டு, இரவு முழுவதும் யோசிக்கலானான். இதில் ஏதோ தப்பிருக்கிறது என்று மட்டும் தெரிந்தது! அது இன்னதென்று தெரியவில்லை! கடைசியில் ஒரு விதமாக ஊகித்து மனதைத் திடப்படுத்திக் கொண்டு "இந்த நகை விஷயத்தில் ஏதோ சூது நடந்திருக்கிறது! உண்மையை என்னிடம் சொல்லவில்லை! உண்மையைச் சொல்ல மூன்றுநாள் கெடு கொடுத்திருக்கிறேன். அதற்குள் சொல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் விட்டது உறவு!" என்று சொல்லிவிட்டு சும்மாவிருந்து விட்டான்!

மூன்றுநாளாயிற்று; உண்மை வெளிவரவில்லை; தன்னிட மிருந்த நகையை யெடுத்து மனைவியிடம்கொடுத்துக் "குழந்தை காலிலிருந்து விழுந்தநகை இதோ இருக்கிறது. இஃதன்றி வேறு ஒரு நகையும் அதோ இருக்கிறது. நீ உண்மையைச் சொல்லவில்லை யாதலால் உனக்கும் எனக்கும் விட்டது!" என்று வைராக்கியசித்தனாய்த் தன் மனைவியோடு எல்லா உறவையும் ஒழித்து ஏகாங்கியானான்!

ஆனபின் அப்பெண்மணி! ஓஹோ! அநர்த்தம் விளைந்ததே!" என்று கருதி, காணாமற் போன சங்கிலியின் விலை சொற்பமானதால், அதைச் சொல்லி மனவருத்த முண்டுபண்ணுவானேனென்று வேறு சங்கிலி செய்துவிட்ச் செய்ததாகவும், உண்மையை சமயம் பார்த்து சொல்லலாமென்று முதலில் ஒளிக்க, அது அநர்த்தம் விளைத்ததென்றும் சொல்லி துக்கித்தாள்.

"என் சொற்படி நீ நடந்துகொள்ளா விட்டாலும் நானாவது என் சொற்படி நடந்து கொள்கிறேன்! இனி உனக்கும் எனக்கும் விட்டது! என்று சொல்லிபாயிற்று! இனி நீ யாரோ! நான் யாரோ! உன்வழியில் நீ போ; என் வழியில் நான் போகிறேன்" என்று பிடிவாதமாய் விரக்த சித்தனாய்த்தானே யிருந்து விட்டான். ஒரு நாள், இரண்டு நாளாயிற்று! ஒரு வாரம் இரண்டு வாரமும் ஆயிற்று. ஆடவனுக்கு மனம் மாறவில்லை! பெண்மணியோ அனலிலிட்ட மெழுகா யுருகிப்போகிறாள். புருஷனுக்குச் சித்தம் இரங்கவில்லை! "பெண்கள் எப்போதும் சாகஸக்காரிகள்! அவர்கள் வலையில் நாம் சிக்கக்கூடாது!" என்பது அவனுடைய எண்ணம்!

பதினைந்து நாளுமானபின் புருஷன் மனம் மாறாதது கண்டு, பெண்மணி தன் குற்றத்தையே நினைந்து மனம் நொந்து "ஐயோ! இத்தனாமாய் வருவித்துக்கொண்ட கேடுதானே! பெண்புத்தி பின்புத்தி யென்பது என் விஷயத்தில உண்மை யாயிற்றே!" யென்று மனம் புழுங்கி நெருப்பில் விழுந்த புழுவாய்த் துடித்தாள். பதினாறும் நாள் நள்ளிரவில் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிக்கொண்டு பெண்மணி கண்ணீர் ஒழுகக் கரைந்துருகிக் கொண்டிருந்தாள்: அப்பொழுது வேதாந்தப் புலம்பலில் ஏதோ ஒன்றைப் பாடிப்பாடி யுருகி யழுதுகொண்டிருந்தாள். அதைக்கேட்ட கணவன் "பொய்சொல்வதெல்லாம் சொல்லிவிட்டு வேதாந்தப்பாட்டுப்பாடு! அதுதான் சரி!

வேதாந்தம் பாழாகப் போவது இப்படித்தான்!" என்று கடிந்து சொன்னான்.

"ஐயோ! நான் கெட்டது மல்லாமல் என்னால் வேதாந்தத்துக்குமா பழிச்சொல் வர வேண்டும்! நான் தான் பாபியானேன்! யாரோ மஹாத்மாக்கள் சொன்னதோர் சொல்லை என் பொய்த்தவாக்கினால் சொல்ல அதற்கும் பழிப் பேர் வந்தது! சிவ சிவா! அதையும் நான் சொல்வது தப்புத்தான்!" என்று தன்னையே கண்டித்துக் கொண்டு "இந்த பனதை நெருப்பில் போட்டுத் தஹிக்கும் வழிதான் தெரிந்தால் என் கண்முன்னே நன்றாக காமதஹனம் செய்து விடுவேனே! அந்தவழி தானே தெரியவில்லை! ஈசுவரா!" என்று ஒரு பெருமூச்சு விட்டாள். விட்டவள் அப்படியே மூர்ச்சித்துப் போய்விட்டாள். புருஷன் பார்த்தான்! 'இதென்ன சனி! மூர்ச்சித்துக்கிடக்கிறதென்று கிட்டப்போயுட்கார்ந்தான்! முகத்தில் ஒளி வீசியது! குற்றம் செய்த மனம் இப்படி துல்லியமாய் விளங்காதே! இதில் என்னவோ அதிசய மிருக்கிறதென்று ஊகித்தான். அவன் உற்றுப்பார்க்கப் பார்க்க அப்பெண்ணரசியின் அகத்தழகு முகத்தில் விளங்க வீசியது. நல்ல வெயிலெறிக்கையில் மழையும் பெய்தால் அந்த மழையில் நனைவது "திவ்யஸ்நானம்" என்று சொல்லப்படும். அதை "நாய்க்கும் நரிக்கும் கலியாணம்" என்று சொல்கிறதுண்டு. நாய் என்பது தான் ஜீவசாக்ஷி. நரியென்பது தான் இந்திரியக் கூட்டங்கள். இந்திரியங்கள் லயக்கிரமத்தில் உன்முகப்பட்டு ஜீவசாக்ஷியில் ஒடுங்கினால் அப்பொழுது இந்திரியங்களெல்லாம் விஷயப்பற்று நீங்கி நிர்மலாகாரமாய் விளங்கும். இதைத்தான் "நாய்க்கும் நரிக்கும் கலியாணம்" என்று சொல்கிறது. அழுத கண் அழுதபடி கண்ணீர் ஓடிக்கொண்டிருக்க, ஜீவன் மூர்ச்சையான அவஸ்தையில் ஜீவசாக்ஷி தானாகி நின்றது. அறத்தழகு முகத்தில் தெரியுமாதலால், அந்த உன்மனுவஸ்தை முகத்தில் விளங்கியது. அந்த ஜோதிப் பிரகாசத்தில் இவன் உள்ளத்திற்கொண்ட வர்மமெல்லாம் இருந்த இடந்தெரியாமல் போயிற்று. அந்தப் பெண்ணிடத்தில் ஒரு விதப் பச்சாதாபமும், அஃதை யொட்டியே அவ்வளவு களங்கமற்ற அரவிந்த முகத்தில் மனக்களங்க மிருக்க விடமில்லை யென்கிற உறுதியும் தன்னையறியாமல் அவனுக்குள் உண்டாயிற்று. இதைத்தான் உள்ளுணர்வு என்று சொல்கிறது. உள்ளமும் உள்ளமும் ஒன்றுபட்டுரைக் கள்ளமும் தானாய்க் கரைந்தே போகும். அன்றி, உள்ளம் உருக உருகக் கள்ளம் கரைந்துபோய் மனம் ஸ்படிகம்போல் விளங்கும். இதையே "நிருபாதிக நிலை" யென்று சொல்கிறதுண்டு. உபாதி நழுவின விடத்தில் மூர்ச்சைகாண்பதும் சகஜம் தானே! பிராணாயாமசித்தி பெற்றவர்கள் இந்த அவஸரத்தில் கேவலகும்பகசமாதியிலிருப்பர். அந்த யோகாப்பியாஸம் சித்திக்காதவர்களுக்கு அந்த நிலை "மூர்ச்சை" யென்று சொல்லும் அவஸ்தையை யுண்டுபண்ணுவது சகஜம். அந்த நிலையில் உள்ளம் கள்ளமின்றி விளங்குமானால், அதனால் தேஹத்துக்கு யாதொரு தீங்கும் வராது; பட்ட கஷ்டங்களெல்லாம் அந்த நிலையில் பரிஹாரமாய் நீங்கும்! அப்பெண்மணியின் அரவிந்த முகம் தேஹம் மூர்ச்சித்துக் கிடந்தும் பாலொழுகப் பிரகாசிப்பதைக் கண்ட புருஷன் "ஓ ஹோ! நாம் ஏதோ தப்பாகநினைத்து விட்டோம்! அவள் உள்ளம் கெட்டதா யிருந்தால், இவ்வளவு சுகிர்தம் இந்தச் சவத்துக்கு எங்கேயிருந்துவரும். ஏதோ யோசனைக் குறைவால் செய்த தப்பன்றி வேறு பிரமாதமான குற்றம் ஒன்று மில்லை" யென்று அவன் உள்ளத்தில் தனக்குத்தானே உறுதிதோன்ற, தன்னெண்ணங்களை யெல்லாம் விட்டொழித்து, அப்பெண்ணைக் கௌரவச் செய்யவேண்டு மென்று

தீர்மானித்தான். முதலில் தன் ஹிருதயத்தைப் பரிசுத்தம் செய்துகொண்டு, பிறகு பரிசுத்தமான குளிர்ந்தஜலம் கொணர்ந்து அவள் முகத்தில் ஜில்லென்றுபட வீசித் தெளித்தான். அப்பெண்மணியின் வாயதைந்தது. உதடு நனைய குளிர்ந்தஜலத்தைத் தொட்டுத் துடைத்தான்.

"நானொரு குற்றஞ்செய்தக்கால்
தானே பொறுக்கவேண்டாவோ
நானுந் தானு மிருக்கிற ஒருமைக்
கிப்படியுந்தான் வாலாமோ!"

என்ற தத்துவாமிர்தம் பொழியும் வார்த்தைகள் நன்றாகக் காதில்பட்டன. இங்கே நான் யார்? தான்யார்? என்றுயோசித்தான். அவள் திருமுகமண்டல வொளியில் அக்கேள்விக்குப் பதில் தானாகப் பிறந்தது. "நான்" ஜீவன்? "தான்" சாக்ஷி; "நான்" = பேதைப்பெண்; "தான்" = போதப்புருஷன்; என்று பதில்கிடைத்தது! சரி, இவளிடத்திலேதோ அதிர்சயமிருக்கிறது! என்றுன்னி, ஹிருதய சுத்தியோடு கனிமொழியால் அவளை மெதுவாய்த் தட்டியெழுப்பிக் "குட்டீ! என்ன உடம்பு!" என்று கேட்டான். "ஒன்றுமில்லை! நான்பாபி! தங்களுக் கடிமையாயிருக்கப் புண்யம்செய்யவில்லை" யென்றாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"நான் அற்பத்துக்குப் பொய் சொல்லி அருமையான பாக்கியத்தையிழந்த பாபியானேன்!"

"ஏன் அப்படி அற்பத்துக்குப் பொய்சொல்ல வேணும்?"

"பெண்புத்தி பின்புத்தி யாதலால் மதிமழுங்கிச் சொன்னேன்!"

"ஆனால், இப்பொழுது புத்திவந்து விட்டதோ?"

"இன்னமும் புத்தி வராமல் போகவேண்டுமோ?"

"இனிமேல் என்ன நேர்ந்தாலும் பொய் யென்பது சொல்லாமலிருப்பாயா?"

"இந்த ஜன்மத்துக்கு மட்டுமல்ல, ஈரேழு ஜன்மத்துக்கும் இனிப் புருஷனிடத்தில் பொய் சொல்ல மாட்டேன். ஏதோ என் பாபகர்மம்! என் புத்தி மயங்கிப்போகச் செய்தது!" அப்புறம் நடந்ததை இங்கே யெழுதுவதா யெளவனதப்பதிசம் மனதுக் கிதமாயிராது. புருஷன் பெண்சாதிக்கிருந்த மனவருத்தம் நீங்கி யிருவரும் ஒருவருக்கொருவர் பிரதிஜ்ஞை செய்துகொண்டு புதுமணம் செய்த தம்பதிகளாய் புனிதமான ஸ்தலத்தில் ஹிருதயங் கலக்க ஒருமனப்பட்டிருந்தார்கள். அதுமுதல் அவர்களிருவருக்கும் மனோவித்யாசமென்பது நேர்ந்ததில்லை. "ஈருடலும் ஒருயிரும்" என்று சொல்வது உலக வழக்கம். அவர்கள் அதுமுதல் ஸம்யோக ஸம்பந்தமற்று நூலும் சேலையும் போல், அவயவ அவயவிகளின் சம்பந்தமென்று சொல்லும் தாதாத்மிய சம்பந்தமுற்று விளங்கினார்கள். வசிஷ்டரும் அருந்ததியும் எவ்வளவு ஒற்றுமையா யிருந்தார்களோ அவ்வளவு ஒற்றுமையாக விருந்தார்கள். "அன்றைக்கு அம்மி மிதித்து அருந்ததி காட்டினீர்களே, அதன் அருத்தம் இப்பொழுது தான் தெரிந்தது எனக்கு!" என்றாள் ஸ்ரீ லோகநாயகி! "அதன் அருத்தம்என்ன? சற்றுச் சொல்பார்ப்போம், கேட்கலாம்!" என்றான் ஆத்மநாதன்.

"நான் மூர்ச்சித்துக்கிடந்தேனே, அதுதான் அம்மி: அப்பொழுது என் உள்ளம் சித்விலாஸமாய் விளங்கியதே, அதுதான் அருந்ததி. கிட்டவிருந்து மூர்ச்சை தெளிவித்து பிரஜ்ஞையுண்டு பண்ணினீர்களே அதுதான் "அம்மிமிதித்து அருந்ததிகாட்டியது." அதாவது, ஜீவனுக்கு ஜடமான தேஹ உபாதியைக்காட்டி, அதன்மேலேறி (அப்படியென்றால் அதை அதிக்கிரமித்து), சித்விலாசமான ஜீவசாக்ஷியை (அருந்ததியாகப்) பார் என்று காட்டியதே காட்சி. அக்காட்சியைக் காட்டிய தாங்களே கர்த்தாவும் போக்தாவும். காட்டக்கண்ட நானே காரியமும் போக

மும். காரியத்துக்கும் கர்த்தாவுக்கும் பேத முண்டாகலாமோ! போக்தாவுக்கும் போகத் துக்கும் பேதமுண்டோ?" என்று புன்முறுவ லோடு ஸ்ரீலோகநாயகி சொன்னாள்.

"இதுஎன்ன பெரிய உபதேசமா யிருக்கிற தே!" என்று ஆச்சரியப்பட்டு அடங்கா மகிழ் ச்சி கொண்டிருந்தான் ஆத்மநாதன்.

இப்படியாக சதிபதிதர்மத்திலே வேதாந்த மெல்லாம் அடங்கி விட்டது!

இதற்கு முன்னால் தாய்பிள்ளை யுறவில் உலக வியவஹார மெல்லாம் அடங்கிவிட்டது என்று கண்டோம்.

இப்படியாக உற்றுப் பார்க்கிறவர்கட்கு உண்மை யெல்லாவற்றிலும் பிரகாசிக்கிறது!

———:-(o)-:———

FREE FROM BONDS.

The Autobiography of a Taluk Gumastah.

(Special for the Vivekachintamani.)

* அவிழ்த்துவிட்ட கழுதை.

ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

(விவேகசிந்தாமணிக்கென்றெழுதப்பட்டது)

III-கௌமாரம்! உத்தியோகம்.

———(:o:)———

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாரா யிருந் தால் ஏதாவது ஸ்வதந்திரம் உண்டோ என் றால், இக்காலத்தில் அதிலும் ஸ்வதந்திரம் அரி தாகிவிட்டது. ஏனெனில் முற்காலத்தில் ஒவ் வொரு உபாத்தியாயரும் தனக்குத் தெரிந்த வித்தையைத் தன்னை யாசிரயித்த பிள்ளைகளு க்கு இனாமாகக் கற்றுக்கொடுத்து அவர்கள் கொடுத்த தக்ஷிணையை அங்கீகரித்துக்கொண் டிருந்தார். வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் பள்ளிக்கூடம் போடுதல் கிடையாது. குரு வின் பாண்டித்தியத்தை அறிந்து சிஷ்யர்கள் அவரை வலுவிலேபோய் அடைந்தார்கள். பிள் ளைகள் வித்தியாப்பியாசம் முடிந்தபிறகு தங்கள் தங்கள் தொழிலுக்குத் திரும்பிச் சென்றார் கள். அல்லது பிறர் தங்களை வித்வான்களாக அங்கீகரிக்க வேண்டுமென்கிற இஷ்டமுள்ளவர் கள் வித்வான்கள் சபையில் தங்கள் கற்றவித் தையை அரங்கேற்றிக் கொண்டார்கள்.

இக்காலத்தில் குரு சிஷ்யன் இருவரும் 'சோற்றப்படிப்பு' 'கலியாணப்படிப்பு' இவை களில் இறங்கிவிட்டார்கள். சீமையிலிருந்து வரும் துரைமார்களே இத்தேசத்துக் கல்வி என்னும் மரக்கலத்தைத் திருப்பும் மாலுமிக ளாகிறார்கள். சீமையில் ராத்திரி 8-மணிமுதல் 11-மணிவரையில் பள்ளிக்கூடம் நடத்தினால் இத்தேசத்திலும் அதேமாதிரி அனுஷ்டிக்க வேண்டுமென்று உத்தரவளிக்கிறார்கள். பிள்ளை கள் பிறக்கும் பொழுதே இங்கிலீஷ் பாஷை யில் பேசவேண்டும் என்று உத்தரவளித்தால் உபாத்தியாயர்களும் கர்ப்பத்திலேயே (நாரதர் பிரஹலாதனுக்குச் செய்ததுபோல்) இங்கிலீஷ் உபதேசம்செய்ய ஆரம்பிக்கிறார்கள். இந்தியா வில் படிக்கும் பிள்ளைகளுக்காகவென்றே அவர் களுக்காக மாத்திரம் சீமையில் அச்சடிக்கப் புஸ்தகங்களைத்தான் அப்பிள்ளைகள் படிக்க வேண்டும் என்றால் உபாத்தியாயர்கள் அப்புஸ் தகங்களின் ஞானகெல்லையைத்தாண்டி வேறெ தையும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டார்கள்; தங்கள் சிஷ்யர்களையும் பார்க்கவொட்டார்கள்.

நம்தேசத்துப்பிள்ளைகளுக்குத் தேவையான வித்தை இதுதான் என்றுசொல்லச் சீமையி லிருந்து வரும் துரைகளுக்கென்ன அதிகார மென்பது ஏற்படவில்லை. ஒவ்வொருவனும் தனக்குவேண்டிய வித்தையைத் தெரிந்தவனிட மிருந்து அவன் கேட்ட கூலியைக் கொடுத்துக் கற்றுக்கொள்ளுகிறான். இதில் மூன்றாம் பேர் வழிக்கு பேச்சுமில்லை பேச்சுமில்லையே! பிள்

? தன்னையறிந்த தன் தொழிலில் பிரவேகிக்குமளவு தலையறியாது! அடக்கமும் ஸ்வதந்திரமும் பரஸ்பர விருத் தமான குணங்களல்ல!!

ளைகள் தலையில் மயிர்முளைத்த நாள்முதல் பரீ க்ஷை, பரீக்ஷை என்று பரீக்ஷைகளுக்குப் படி த்து மூளைகலங்கி ஸ்வபுத்தியைஇழந்து புஸ்த கத்தை விழுங்கும் பூச்சிகளாகி விடுகிறார்கள். நான் புஸ்தகங்கள் வாசிக்கக் கூடாதென்று சொல்லவில்லை. பரீக்ஷைக்காக வென்று வாசி த்துக் கஷ்டப்படவேண்டாம் என்பதே! நமக்கு அபிருசியுள்ள புஸ்தகங்களை நாம் எந்தப்பாடு பட்டாவது சம்பாதித்து வாசிக்கவேண்டியதே. பரீக்ஷைக்காகத் திணறத்திணற வாசித்துவிட் டுப் பரீக்ஷைமுடிந்தபின் படித்ததையெல்லாம் மறந்துவிட்டு நிற்பதில் லாபமென்ன? "பரீக்ஷை தேறுவிட்டால் உத்தியோகம் யார்கொடுக்கிறார் கள்?" என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வியில் தான் உத்தியோகம் என்னும் பதத்தை ஆபா லமான அர்த்தத்தில் உபயோகிக்கிறார்கள். முன்சொன்ன சரியான அர்த்தத்தில பார்த் தால் நம் உத்தியோகத்தை நாம் தேடிக்கொள் ளாது பிறர்நமக்கு எப்படி அதைக் கொடுக்கக் கூடும் என்று ஏற்படவில்லை. கற்றவித்தையின் பலன் ஒவ்வொருவனையும் தன்னிஷ்டப்படிதன க்குத் தெரிந்த தொழிலைத் தானாகவேசெய்து பிறர்தயையின்றி ஜீவிக்க யோக்கியதை யுள்ளவ னாக ஆளாக்குவதே. அஃதல்லாதது வித்தையு மல்ல.

உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவது குற்றமென்று சர்க்கார் சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் லஞ்சமென்பதென்ன வென்று தெளிவாய் விளங்கவில்லை. ஒருவன் தன் உத்தியோக அதிகார முறைமையில் மற் றொருவனுக்கு லாபகரமான ஒரு காரியத்தைச் சாதித்துக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவனிடமிருந்து பணமாவது பொருளாவது வாங்கிக்கொண்டால் அதை லஞ்சமென்கிறார் கள். ஒழிந்த வேளைகளில் யஜமானனுடைய பிள்ளைகளுக்குப் படிப்புச்சொல்லிக் கொடுக்கிற குமாஸ்தாவுக்குச் சம்பளம் உயரவேண்டுமென் று பொர்சுசெய்வது லஞ்சமா அல்லவா? யஜ மானன் வீட்டுக் கலியாணத்தில் சாப்பிட வேண்டியவர்களைக் கூப்பிட்டு அவர்களுக்குப் பரிமாறுதல் லஞ்சமா அல்லவா? இன்னும் இம் மாதிரி அநேக கேள்விகளுக்குப்பதில் சொல்ல முடியாது. பொதுவாய் நமக்கு ஒருவன் செய்த அல்லது செய்யப்போகிற யாதொரு அற்ப உப காரத்தையும் எதிர்பார்த்து நாம் அவனுக்கு நம் உத்தியோகத்தினாலாகக் கூடிய ஒரு காரி யததை சாதித்துக் கொடுத்தாலும் கொடுப் பதாகச் சொன்னாலும் அது லஞ்சமே. இம்மா திரி லஞ்சத்தை சர்க்கார் கண்டுபிடிக்கவும் முடி யாது, தண்டிக்கவும் முடியாது. சில உத்தி யோகஸ்தர்களுக்கு அவர்களை அடிக்கடி போய் ப்பார்த்துப் பேசிவிட்டு வருவதே போதுமான லஞ்சம். சில வைத்தியர்கள் தன்னிடம் வரும் நோயாளிகளைத் தன் தோழனாகிய மற்றொரு வைத்தியர் தன்னைக்காட்டிலும் நிபுணர் என்று அவரிடம் அவர்கேட்ட தொகையைக் கொடுக் கச் சொல்லி அனுப்பி விடுகிறது வழக்கமாம். அவரும் இவருக்கு விதேமாதிரி பிரதியுபகாரம் செய்வார்போலும். அது போலவே சில உத் தியோகஸ்தர்கள் தாங்கள் அனுப்பும் மனிதர் களுக்குத் தங்கள் சகோதர உத்தியோகஸ்தர் கள் உபகாரம் செய்யவும் அவர்கள் அனுப்பும் மனிதர்களுக்குத் தாங்கள் உபகாரம் செய்யவும் ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள். இதைப் பரஸ்பர லஞ்சம் என்னலாம். இது தவிர சர்க் கார் அறிந்த லஞ்சமும் உண்டு. ஒரு சேவக னுக்கு ஆயுசு முழுவதும் மாதம் 8 ரூ. சம் பளம் கொடுத்து அவன் வேறுதொழில் ஒன் றும் செய்யக் கூடாதென்று கட்டுப்பாடு செய் வது, அவனைப் பார்த்து "லஞ்சம் வாங்கிப் பிழைத்துக்கொள். ஆனால் வெளிப்படையாக அகப்பட்டுக் கொள்ளாதே!" என்று சொல்வ தைத்தவிர வேறென்ன அருத்தம்? அல்லது ஒரு சார்கூன் உத்தியோகஸ்தனுக்கு மாதம் 40 ரூ. கொடுத்து அவன் வண்டியும் மாடுகளும் வைத் துக்கொள்ள வேண்டுமென்றும் அவனுடைய

ஊருக்கு வரும் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் எதிர்பார்த்தலுக்கு வேறென்ன அர்த்தம்? இம்மாதிரி உத்தியோகத்திலிருந்து பழகினவர்கள் பிறகு உயர்ந்த உத்தியோகத்திற்கு வந்தபோதிலும், பிச்சையெடுத்து ஜீவித்துப் பொருள்சேர்த்த பிற்பாடும் சிலருக்குப் பழையதொழிலை விட்டுவிட மனம் வாராததுபோல், தங்கள் பழைய வழக்கங்களைவிட மனம் துணியார்கள். அல்லது இவர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுக்கிறதில்லை என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாலும், இதற்கு முன் நம் உத்தியோகம் உயர்வதை நம் அயோக்கியதையினால் தடுத்துக் கொள்ளக் கூடாதென்றிருந்த பயமும் நீங்கித் தைரியமாய்க் கொள்ளையடிக்க ஆரம்பிக்கிறார்கள். குதிரை முன்னே போனால் உதைக்கிறது, பின்னே போனால் கடிக்கிறதென்பது போலிருக்கிறது. குதிரைக்குப் போதுமான தீனி போட்டு நல்ல சம்ரக்ஷணையில் வைத்திருத்தலைக்காட்டிலும் இதற்கு வேறு வைத்தியம் கிடையாது. உண்மையில் நாம் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராமல் பக்ஷபாத மில்லாமல் நம் வேலையைச் செய்துவந்தால் அதனால் லாபமடைந்தவர்கள் நமக்குப் பிரியத்துடன் மனப்பூர்வமாய்க் கொடுப்பதை அங்கீகரித்தல் லஞ்சமாகாது.

இந்த அழகில் 6-ரூபா சம்பளம் வாங்குகிற ஒரு சோம முன்சீப் தன் கிராமத்தில் செய்யும் அட்டஹாஸத்துக்குக் கணக்கு வழக்கில்லை. தான் தெருவில் போகும்போது பத்து வேலைக்குடித்தனக்காரன்கூடக் காலை நீட்டிக்கொண்டு தெருவில் உட்கார்ந்திருக்கக் கூடாது. இருந்தால் மறுநாள் அவன் ஆடுமாடுகளைப் பட்டியில் பார்க்கலாம், அல்லது அன்றிரவு அவன் வீட்டுச்சுவர் துளைக்கப்படும், அல்லது அவன் வைக்கோல்போரில் நெருப்பு வைக்கப்படும். இதே சோம முன்சீப், தாசில்தார் தன் கிராமத்துக்கு வந்தால் அவருடைய செருப்பைத் தூக்கிக் கொண்டு அவர்பின் போவான். அந்தத் தாசில்தாரும் கலெக்டருடைய நாய்க்குட்டியைத் தோளிற்றூக்கிக் கொண்டு அவர் பின்னால் போவார். ஒவ்வொரு மாமியாரும் தான் மருமகளாயிருந்த காலத்தை நினைத்துத் தன் மருமகளை வருத்துவது போல் ஒவ்வொரு உத்தியோகஸ்தனும் தனக்குக் கீழ்ப்பட்டவர்களைச் சமயம் நேர்ந்த போதெல்லாம் ஓடினமட்டும் துரத்துவது வழக்கமாயிருக்கிறது. ஓடினவன் திரும்பி எதிர்த்து நின்றால் அப்புறம் இருவரும் நயந்து சிநேகமாகி விடுதலுமுண்டு.

ஒவ்வொருவனும் தன் வேலையைச் சரிவர முடித்துவிட்டுத் தான் பிறருக்கு அடிமை என்று ஒப்புக்கொள்ளாமல் மட்டுமிருந்தால் அவனை யாரும் தாழ்வாய் நடத்த முடியாது. அப்படியில்லாமல் தன் வேலையைச் செய்த பிறகுங்கூடத் தன் உடல்பொருளாவி யெல்லாம் யஜமானனுக்கு விற்று விட்டதாகக் காட்டிக் கொண்டால் அவனை யார்தான் மதிப்பார்கள்? ஒவ்வொரு அடிமையும் தன் அடிமைத் தனத்தின் சின்னங்களைக் காண்பிப்பதனாலேயே தன்னைக் குரூரமாய் நடத்தும் யஜமானனை வருவித்துக் கொள்ளுகிறான். பிறகு தான் யஜமானத்துவமடையுங் காலத்தில் தனக்குக் கீழ்ப்பட்டவர்களை அடிமைகளாகப் பாவித்து நடத்துகிறான். இப்படி அதிகாரம் செலுத்தும் உத்தியோகஸ்தனைத் தெருவில் ஒரு நாய் துரத்தினால் அப்பொழுது அவருடைய யஜமானத்துவமெல்லாம் பறந்து போகிறது. சாதாரணமாகப் 'பென்ஷன்' வாங்கிக்கொண்ட உத்தியோகஸ்தர்களைப் பல்லைப் பிடுங்கின பாம்பு என்று சொல்லுகிறதுண்டு. இதனால் அடிமைத்தனமுள்ளவனே குரூரமான யஜமானனாகிறான் என்றும் இருவரும் ஒரே அமைப்பான மனத்தினர் தாம் என்றும் ஒருவருக்கொருவர் இசைந்த பொருத்த முள்ளவரென்றும் விளங்கும்.

உ

ஓம் ஸ்ரீ சாவித்திரியை நமஃ

விவேகசிந்தாமணி

உபநிஷதர்த்த தீபிகை.

[விவேகசிந்தாமணிக்கென்று பிரத்தியேகமாக எழுதப்பட்டது].

11. பாவனோபநிஷத்.

(இரண்டாம் பாகம்.)

———:*:———

29. [உப] அனன்ய சித்தத்துவத்தினாலும் சித்தி. (29)

(குறிப்பு) அன்ய விஷயங்களை சித்தம் நாடாமல் பாவனையில் ஏகாக்ரமாய் இருப்பதே சித்தியாகும்.—பஹிர் யாகமாகிய பூஜையில் ஒவ்வோர் ஆவரணத்தில் ஓரோர் சித்தியும் முத்திரையும் பூஜிக்கப்படும். அவ்வாறு பூஜிக்கப்படுவதான சித்தி, முத்திரை, இவைகளின் பாவனை இங்கு சுருதியால் சொல்லப்பட்டது. "உம்"மையால் முத்திரையும் குறிக்கப்பட்டது. அந்தந்த ஆவரணங்களிலுள்ள தேவதைகளை தன் சரீரத்திலுள்ள அந்தந்த அவயவங்களோடு அபேதமாய் பாவிப்பதுடன், தன் ஆத்மாவோடபேதமாய் சித்தத்தில் பாவித்தலே அவ்வவ்வாவரணத்தின் சித்தி. ஆகவே "இவை என்னிலும் வேறல்ல" என்கிற புத்தியே சித்தியாகும். சிலர்மதப்படி உபாசனையின் பலவித்தியே சித்தியென்பர். அவர் பக்ஷப்படி முற்சொல்லிய பாவனையில் தனக்கும் பாவனையின் பொருளுக்கும் அப்பாவனைக்கு விஷயமாயிருப்பதாகிய ஓர் பேதத்தோடு கூடினதாகவே உபாஸனைக்குப் பலமென்று ஏற்படும். ஆனால் உண்மையில் பின்னர் சொல்லப்போகிற தர்ப்பண பாவனையில் இப்பேதத்தை நீக்கி, நிர்விகல்ப துரீய அகண்ட விஷயதையை யடைந்து, அதையும் விடுத்து ஸ்வாத்ம மாத்திரமாய் நிற்பதே தர்ப்பணத்தின் பாவனையென்று சொல்வதால் அதுவே பூர்ண உபாஸனையின் சித்தியாகும். ஆகையால் இவ்விடம் "சித்தி" யென்பதை நாம் சொல்லியபடியே ஓரோர் ஆவரணத்தின் சித்தியெனவே பொருட் படுத்தவேண்டும்.

அவ்வாவரண தேவதைகளின் வைபவத்தை அதாவது அபரிச்சின்னமாகிய தன்மையை பாவனைசெய்தலே அந்தந்த ஆவரணத்திலுள்ள முத்திரைகளின் பாவனையாகும்.

30. [உப] பாவனையின் கிரியைகள் உபசாரங்களாகும். (30)

(குறிப்பு) ஸ்வாத்மாவுக் கபேதமாய் லளிதையை பாவிப்பதாய் முன்சொன்ன பாவனையை மறுபடியும் மறுபடியும் செய்தலே அதாவது தைலதாரா ரூபமாகும்படி செய்தலே பாவனையின் கிரியைகள். அதுவே உபசார சமர்ப்பணமாகும்.

உபசார சமர்ப்பணமென்பதை தூப தீப கந்தாதி உபசார பாவனையாகக் கொள்ளில் பேதமேற்படுமாதலாலும் முன்னர் விதிக்கப்பட்ட அபேத பாவனைக்கு விரோதமாகு மாதலாலும், அவ்வபேத பாவனைக்கு விரோதமல்லாத உபசார பாவனைகளை நாமே கற்பித்துக்கொள்ள வேண்டுமென்பது கருத்து. தந்திரராஜம் என்கிற கிரந்தத்திலும் "சலன முண்டானாலும் தன் மயத்தினின்றும் தவறாமையே உபசாரங்கள்" என்று சொல்லி யிருக்கின்றது.—அதாவது அபேத பாவனையில் ஸ்திரத்தன்மை யில்லாமை ஸ்வபாவமானபோதிலும், சகலம் பிரஹ்ம மயம் என்கிற அம்சத்தில், எவ்வாறு தவறுதல் கொஞ்சம்கூட இல்லாமல் மிகவும் சாவதானத்தன்மை யுண்டாகுமோ அவ்வாறு சித்திக்க உபாயபாவனை செய்தலே உபசாரமென்பது பொருள்.

தந்திரராஜத்தில் நாம் எடுத்த வாக்கியத்திலிருக்கும் "சலனம்" என்கிற பதத்திற்கு தந்திரராஜத்தின் வியாக்கியானக்காரராகிய மனோரமாக்காரர் "சட்டாயம் சம்பவிக்கக்

கூடிய தவறுதலாகிய ஸ்வப்னம் முதலான அவஸ்தைகள்' என்று உரையிட்டிருக்கின்றார். ஆகிலும் "சலனமுண்டானாலும்" என்று "உம்" மையைச்சேர்த்து உபயோகித் திருப்பதால் அவ்வாக்கியம் ஜாக்கிராவஸ்தையில் சாவதானத் தன்மையை மட்டும் குறிக்குமென்று அறிய வேண்டும்.

இவ்விதத் தவறுதலின்மை அல்லது சாவதானத்தன்மையை யோகவாசிஷ்டத்தில் சிவபூஜைகதையில் விரிவாய்ச் சொல்லியிருக்கக் காணலாம். விஷயபோகத்தால் ஆத்மாவுக்குண்டான ஆநந்தத்தையும் ஆத்மாவுக்கு அபேதமாய் அனுசந்தானம் செய்தலும், எவ்வாறு ஒருவன் வியாதியால் பீடிக்கப்பட்ட போது துவர் கசப்புள்ள மருந்துகளை தேகத்தில் பூச அவ்வஸ்துக்கள் முதலில் வருத்தத்தைக் கொடுத்து பிறகு தேகத்திலேப்பொழுதும் ஸ்வபாவமாயுள்ள சுகத்தை நிலைநிறுத்துமோ அதுபோல் பிராரப்தகர்மவசத்தால் வரும் சுகதுக்கத்தையும், (அவை) கர்மக்ஷய மூலமாய்ப் பரிணாமசுகத்தைக் கொடுப்பதால் ஆத்மானந்தத்துக்கு அபேதமாய் பாவனை செய்வதுமே அபேத பாவனையில் மறுபடி கூட்டி வைக்கும் பாவனாபூஜை யென்கிற உபசாரம் என்பது வாசிஷ்டத்தின் சித்தாந்தம். ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகளும் சௌந்தர்யலஹரி 27-வது சுலோகத்தில் இந்தக் கருத்தைக் கொண்டே பின்வருமாறு பிரார்த்திக்கின்றார்:- "நான் பேசுவதெல்லாம் ஜபமாகவும், என்னங்களின் சேஷ்டைகளெல்லாம் முத்திரைகளைப் பிடித்தலாகவும், நடையே பிரதக்ஷிணம் செய்வதாகவும், நான் சாப்பிடுவதெல்லாம் ஆஹுதி செய்வதாகவும், கிடத்தலே நமஸ்காரமாகவும், எல்லாம் சுகரமாகவும், என்னிடம் நிகழும் எவ்வித விலாசமும் (கிரியையும்), ஓ! தேவியே, ஆத்மார்ப்பண புத்தியால் உன்னுடைய பூஜாபர்யாயமாகவேண்டும்."

ஆனால் இவ்வித பூஜை இராப்பகல் விடாமல் சாதிக்க வேண்டுவதானதாலும், மேல் காலியமம் பாவனைக்கு விதித்திருப்பதற்கு விரோதமாகும். ஆகவே வேறு விதமாகவே இங்கு பாவனைகளைச் செய்யவேண்டும். அதன் பிரகாரம் யாதோவெனில், சொல்வோம்.

1. அபரிச்சின்னமாக பாவிக்கப்பட்ட ஸ்ரீ லளிதை ஸ்வ(தன்)மகிமையில் பிரதிஷ்டையே (நிலையாயிருப்பதே) ஆஸனம்.

2. "சகல பூதங்களும் அதன்பாதம்" என்கிற சுருதிப்படி பாதரூபமாயிருக்கும் ஆகாசம் முதலிய சகல ஸ்தூலப் பிரபஞ்சத்தில், மலரூபமாயிருக்கும் நாமரூப அம்சங்களை சச்சிதானந்த ஏகரூப பாவனையாகிய ஜலத்தால் அலம்புதலே பாத்யம்.

3. இவ்வாறே சூக்ஷ்மப் பிரபஞ்சமாகிய கையிலுள்ள நாமரூப அம்சங்களாகிய மலத்தைப் போக்குதல் அர்க்யம்.

4. இவ்வித பாவனா ரூபமாகிய ஜலத்தை கபளீகரணம் செய்தலே (விழுங்கி விடலே) ஆசமனம்.

5. சத்துவம், சித்துவம், ஆனந்தத்துவம்முதலிய சகல அவயவங்களிலும் அபேதமாகவே பாவனையாகிய ஜலத்தின் சம்பந்தமே ஸ்நாநம்.

6. சத்துவம், சித்துவம், ஆனந்தத்துவம் முதலான அவயவங்களில் மேற்சொன்ன பாவனையாகிய ஜலசம்பந்தத்தால் உண்டாகிய சித்த விருத்திக்கு (ஸ்ரீ லளிதா தேவி) விஷயமாகவிருக்கும் தன்மையால் உண்டாகும் ஆவரணமே (அதாவது மறைப்பே) வஸ்திரம்.

7. நிர்விஷயத்துவம், நிரஞ்ஜனத்துவம் இவை முதலான பிரஹ்மத்துக் கடையாளமாகவுள்ள தர்மங்களை தர்மியாகிய பிரஹ்மத்திற்கு அபேதமாகவே பாவித்தல் ஆபரணங்களாகும்.

8. தன் சரீரத்திலிருக்கும் பிருதிவீ அம்சத்வத, அதன் ஜடபாகத்தைப்போக்கி (நாம

ரூப பாகத்தைப்போக்கி) சச்சிதானந்த மாத்திரமாய் பாவித்தல் கந்தம்.

9. அவ்வாறே ஆகாசாம்சத்தைச் செய்தல் புஷ்பம்.

10. அவ்வாறே வாயு அம்சத்தைச்செய்தல் தூபம்.

11. அவ்வாறே அக்னி அம்சத்தைச்செய்தல் தீபம்.

12. அவ்வாறே சந்திரமண்டலத்திலிருக்கும் அமிருதமாகிய ஜலபாகத்தைச் செய்தல் நைவேத்யம்.

13. ஷோடசாந்தத்திலுள்ள சந்திரமண்டலத்தை அவ்வாறு செய்தலே தாம்பூலம்.

மேற்சொல்லிய கடைசியாகிய ஐந்துமே பஞ்ச பூஜையெனப்படும். யோகினீ ஹிருதயத்திலும் "உன்னை உன் மயமான நைவேத்யம் முதலானவைகளால் அர்ச்சிக்கவேண்டும்" என்றும், "ஜகத்து பஞ்சபூத மயமானது, நீயும் அம்மயமாய் இருக்கப்பட்டவள்" என்றும் சொன்னது இப்பஞ்சபூஜையைக் குறித்தே.

14. இப்பாவனையின் அங்கமாகிய தனதான பரை, பச்யந்தீ, மத்தியமை, வைகரீ, என்ற சப்தங்களை நாதவழியாய் பிரஹ்மத்தில் உபஸம்ஹாரம் (லயம்) ஆனதாய் பாவனைசெய்தலே ஸ்தோத்திரம்.

15. அங்கு மிங்கும் விஷயங்களில் தாவாநின்ற சித்தவிருத்திகளை விஷய சம்பந்தமான ஜடபாகத்தை (நாமரூப பாகத்தை) நீக்கி, (சச்சிதானந்த ரூபமாய் பாவித்து) பிரஹ்மத்தில் லயம் செய்வதே பிரதக்ஷிணம்.

16. விருத்திகளை விஷயங்களினின்றும் திருப்பி, பிரஹ்மமொன்றிலேயே பற்றி நிற்கும்படிச்செய்தல் நமஸ்காரம். ஷோடசோபசாரங்கள் இவ்விதமாகும்.

சில உபநிஷத் மூலபாடங்களில் "பாஹ்ய யாந் தக்கரணங்கள் (வெளி, உள் இந்திரியங்கள்) ஏக ரூபத்தில் நிற்பதே ஆஸனம்"-இவை முதலிய வாக்கியங்கள் காணப்படும். ஆகிலும் அவற்றுள் சில உபசாரங்கள் இங்கு சொல்லிய பாவனைக்கு ஒத்ததாக வில்லாததாலும், அநேக புஸ்தகங்களில் காணப்படாததாலும், தந்திரங்களில் அவ்வாறு உபப்பிரஹ்மணம் (விவரணம்) இல்லாததாலும் அவற்றை இவ்விடம் எடுத்துரைக்கப் படவில்லை என்று பாஸ்கராயர் சொல்கிறார்.

31. [உப] நான், நீ, இருக்கின்றது, இல்லை, செய்யத்தக்கது, செய்யத்தகாதது, உபாஸிக்தக்கது என்கிற விகல்பங்களை ஆத்மாவில் லயம் செய்வதே ஹோமம். (31)

(குறிப்பு)—ஸ்ரீ சக்ரத்தில் பூர்வபாவனைகளில் சொல்லப்பட்ட சக்திகளைத் தவிர வேறு அளவற்ற சக்திகளுண்டு. அவ்வனந்த சக்திகளையும் ஸ்ரீதிரிபுரசுந்தரிக்கு அபேதமாகிய பாவனையைப் பயனுடைய ஹோமபாவனையிவ்விடம் சொல்லப்பட்டது. அதனால்தான் நைவேத்தியத்தின் அங்கமாகிய ஹோமத்தை உபசாரங்களினின்றும் வேறுபடுத்தி தனியாய் இவ்விடம் கூறுவது பொருத்தமுள்ளதாகும். "நான்" என்று துவக்கிய (31, 32, 33) மூன்று வாக்கியங்களும் விசர்ஜன மென்கிற பூஜையின் முடிவாகிய உபசாரத்தைக் குறிப்பன வென்று ஏற்படும். "நான், நீ" என்பது அவ்வித வுணர்ச்சியை (விருத்தியை)க் குறிக்கும். - "இருக்கின்றது, இல்லை" என்பது லௌகிக விதிநிஷேதங்களைக் குறிக்கும். "செய்யத்தக்கது, செய்யத்தகாதது" என்பது வேத கர்மகாண்டத்திலுள்ள வைதிக விதிநிஷேதங்களைக் குறிக்கும். – "உபாஸிக்கத்தக்கது" என்பது உபநிஷத்துக்களிலுள்ள விதிகளைகுறிக்கும். உபாஸிக்கக் கூடாதென்று உபநிஷத்துக்களில் நிஷேதமில்லாததால் அதை இங்கு சொல்லவில்லை. இவ்வேழு பதங்களாலும் விருத்தியின் சாமக்கிரிகள் குறிக்கப்பட்

டன. ஆகவே விகல்பங்களை யெல்லாம் போக்கி அவ்விகல்பங்களுக்குக் காரணமான சக்திக்கூட்டத்தை பரதேவதையினிடம் லயமானதாகப் பாவிக்க வேண்டுமென்பது கருத்து.

32. [உப] பாவனு விஷயங்களின் அபேத பாவனை தர்ப்பணம். (32)

(குறிப்பு) ஸ்ரீகுருமுதல் ஹோமம் வரை கூறப்பட்டுள்ள பதார்த்தங்கள் எல்லாம் ஒன்றற் கொன்று அபேதமென பாவிப்பதால், அப்பாவனைகளுக்கு விஷயமான தன்மையின் பேதத்தால் அவைகள் வஸ்துபேதமானவை யென்கிற பாவனையைநீக்கி நிர்விகல்ப துரீய அகண்ட விஷயதையை அடைந்து, அதையும் விடுத்து, ஸ்வாத்ம மாத்ரமாய் மிஞ்சுதல் தர்ப்பணத்தின் பர்வனையாகும்.

[அவதாரிகை:—இதுகாறும் தேகமாகிய ஸ்ரீ சக்கரத்தை ஸ்வாத்ம மாத்திரமாய் மிஞ்சும்படிச் செய்யவேண்டுவதைச் சொல்லி, அத்துடன் பஹிரங்க சம்பந்தமுடைய பிரபஞ்சத்தையும் ஆத்மாவில் லயப்படுத்தும் கிரமத்தை மேற் சொல்கின்றார்.]

33. [உப] பதினைந்து திதிரூபமாய் காலத்தின் பரிணாமத்தை (மாறுதலை) அறிதல் (வேண்டும்). (33)

(குறிப்பு) I—பிரபஞ்சமானது (a) காலரூபம், (b) தேசரூபம், (c) (உபயரூபம்) அவ்விருரூபம் என மூவிதமாகும்.

I-(a) அதில் காலரூபமாவது—சந்திரமண்டலத்திலுள்ள சாதாக்யமென்கிற ஷோடசியாகிய நித்திய கலையைத்தவிர 15-கலைகளுண்டு. அவைகளை சுருதியானது (தைத்திரீய பிராஹ்மணம் 3.10.1) (1) தர்சா, (2) திருஷ்டா, (3) தர்சதா, (4) விசுவரூபா, (5) ஸுதர்சனு, (6) ஆப்யாயமானு, (7) ஆப்யாயமானு, (8) ஆப்யாயா (9) ஸமன்ருதா, (10) இரா, (11) ஆபூர்யமாணு, (12) ஆபூர்யமாணு, (13) பூரயந்தி (14) பூர்ணு, (15) பௌர்ணமாஸீ எனப் பேரிட்டுச்சொல்லும். அவைகளே பிரதமை முதல் பௌர்ணமீ முடிய உள்ள திதிகள். திதிரூபமாகிய இவைகளே * (1) காமேசுவரீ, (2) பகமாலினீ, (3) நித்தியக்லின்னு, (4) பேருண்டா, (5) வஹ்னிவாஸினீ, (6) மஹாவித்யேசுவரீ, (7) சிவதூதீ, (8) துவரிதா, (9) குலசுந்தரீ, (10) நித்தியா, (11) நீலபதாகா, (12) விஜயா, (13) சர்வமங்களா, (14) ஜ்வாலாமாலினீ, (15) சித்ரா என்கிற பதினைந்து நித்யா தேவதைகளாகிய கலைகளுடன் அபின்னம். சாதாக்யகளை என்கிற நித்யகளையே ஸ்ரீலளிதை. எப்பொழுதும் புரண்டு கொண்டிருக்கும் இவ்வித காலரூபமான திதிசக்கிரத்தின் மத்தியிலேயே ஸ்ரீசக்ரம் நிற்கும், வெளியிலல்ல.

I-(b) தேசரூபமாகிய பிரபஞ்சமாவது—பூகோளத்தின் வடபாகத்தில் (1) மேருபர்வதம் இருக்கின்றது. அதன் தென்பாகத்தில் (2) ஜம்பு, (3) ப்லக்ஷ, (4) சால்மலி, (5) குச, (6) க்ரௌஞ்ச, (7) சாக, (8) புஷ்கரங்க ளெனப்படும் எழுத்வீபங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொன்றினிடையே பூகோளத்தைச் சுற்றிக்கொண்டு (9) லவண (உப்பு), (10) இக்ஷு (கரும்புச்சார்), (11) ஸுரா (சாராயம்), (12) ஸர்பிஸ் (தயிர்), (13) மது (தேன்), (14) க்ஷீரம் (பால்) களென்ற ஆறு சமுத்திரங்களுண்டு. பௌஷ்கர துவீபத்திற்கு வெளியில் (15) மதுரமான தீர்த்தம் (ஜலம்) நிறைந்த சமுத்திரம் ஏழாவது. அதற்கும் தெற்கே (16) பரமவியோமம் (பரமாகாசம்) இருக்கும். ஆகப் பதினாறு தேவதைகள்.

மேருமுதல் பரமவியோமம் வரையுள்ள 16 தேவதைகளும் கிரமமாக ஸ்ரீலளிதையாகிய சாதாக்ய அல்லது நித்யகளைமுதல் சித்திராகளை வரையுள்ள கலைகளோடு அபின்னம். இவை இந்தக்

* இந்நித்யாதேவதைகளின் பெயர்களை தந்திரங்களில் கொஞ்சம் மாற்றிச் சொல்வதுமுண்டு.

கிரமமாய் யுகத்தின் முதல் வருஷத்தில் நிற்கின்றன. இரண்டாம் வருஷத்தில் ஜம்பூதுவீபமுதல் மேருவரை யிருக்கின்றன. மூன்றும் வருஷத்தில் லவண சமுத்திரமுதல் ஜம்பூத்வீபம்வரை நிற்கின்றன. பதினாறுவது வருஷத்தில் பரமவியோமம் துடங்கி மதுரஜல சமுத்திரம்வரை ஸ்ரீலளிதை முதலாகிய 16-கலைகளும் நிற்கின்றன. 16, 16 வருஷங்களில் ஒவ்வோர் நித்யா தேவதைகளாகிய கலைகளுக்கு ஓரோர் சுற்று ஆகும். இவ்வாறாகிய தேசரூபமாகிய சக்ரத்தினுள்ளேதான் ஸ்ரீசக்ர மிருக்கின்றது. வெளியிலல்ல.

I(c) உபயரூப பிரபஞ்சமாவது:—பூகோளத்திற்கு மேலும் கீழுமாக வட்டமாய் சந்திர, புத, சுக்கிர, சூர்ய, குஜ, குரு, சனி, நக்ஷத்திரங்கள் இவைகளின் மண்டலங்கள் எட்டு, இவைகள் ஒவ்வொன்றின் மத்தியிலுள்ள இடைவெளிகள் எட்டு. ஆகப்பதினாறு தேசங்கள் காலசக்ர ரூபமாயிருக்கின்றன. இந்த ஸ்தானங்களில் தேச பரிவிருத்திக்கு (சுற்றுதலுக்கு) விபரீதமாக நித்தியதேவதைகள் சுற்றுகின்றன. இச்சக்கரத்தின் உள்ளாகவே ஸ்ரீசக்ரம் நிற்கின்றது, வெளியிலல்ல.

இம்மூவிதசக்ரத்திற்கும் பாரமார்த்திகரூபம் (உண்மைரூபம்) நித்தியாசக்ரமே. பிரஹ்மத்திற்கு வேறாகியவெல்லாம் தேசகாலசம்பந்தமுள்ளனவாதலால் சகல பிரபஞ்சமும் நித்தியா தேவதைகள் ரூபமே. அவைகளை ஆத்மாவுக்கு அபேதமாக பாவித்தலே இங்கு விதிக்கப்பட்டிருக்கின்றது.

மூலத்திலும் இவ்வாக்கியத்திற்கு உபப்பிரஹ்மணமாகிய தந்திரராஜவாக்கியத்திலும் காலத்தைமட்டும் சொன்னதின் கருத்தென்னவென்றால், காலம்தானே சகல பிரபஞ்சமாக பரிணமித்திருக்கின்றது என்கிற பாவனையினாலேயே மற்றுள்ள 15-நித்தியா தேவதைகளின் பாவனையாகும் என்பதே.

II—வாஸ்தவத்தில் சகலசக்திகளும் 21,600 சுவாஸமாகிய காலரூபமானவைகள். அதன் சமஷ்டியை விக்ரஹமாக (சரீரமாக, ரூபமாக) உடையவள் ஸ்ரீலளிதை. மற்றுள்ள 15-நித்தியா தேவதைகளும் வியஷ்டிரூபமாய் ஒவ்வொன்றும் 1440-சுவாஸரூபமாய் இருப்பன. அவைகளை அவ்வாறு பாவிக்கவேண்டு மென்பது பொருள்.

இவ்விருபக்ஷமாகிய பாவனையை ஆவரண பூஜைக்குப் பிறகு செய்யவேண்டுமென்று சிலர் சொல்லுவர். அவர் அப்படிச் சொல்லுவது பாஹிய பூஜையில் அதுவே ஸ்தானமானதாலும் சகலத்தையும் லயம்செய்தபிறகு வேறுபாவனைக்கு இடமில்லை யென்பதையும்கொண்டு அவ்வாறு சொல்கிறார்கள். வாஸ்தவத்தில் ஆத்மபாமாத்திரமாய் மனம் ஸ்தம்பித்து நிற்கவே சுவாஸமும் அவசியம் ஸ்தம்பனமாகுமாதலால், பரதேவதையின் ரச்மிகளாகிய (கிரணங்களாகிய) நித்தியா களைகளை லயப்படுத்த பூஜையின் விஸர்ஜன காலமே உசிதமானதாலும், மனம், சுவாசம் இவ்விரண்டையும் லயம் செய்தபிற்பாடு காலத்திற்கு லயம் செய்வது இவ்விடத்தில் வருவதுதான் யுக்தமானதாலும், அப்படியர்த்தம்செய்யாவிடில் வாக்கியம் இவ்விடம் நிரர்த்தகமாய் ஆகிவிடுமாதலாலும், நித்தியா பாவனை இவ்விடமே செய்யவேண்டியது யுக்தமாகும். திதி சக்ரம், காலசக்ரம், தேசசக்ரம் இவையெல்லாம் நாமரூபத்தை யுடையனவல்ல, சகலமும் அஸ்தி பாதி பிரியமானவை (சச்சிதானந்த மானவை,) ஆகவே யெல்லாம் பிரஹ்மமயமே என்கிற பாவனை இவ்விடம் சொல்லப்பட்டது.

(அவதாரிகை) இவ்விதம் உள்ளும் புறம்புமுள்ள அகிலப்பிரபஞ்சத்தையும் லயம் செய்து ஸ்வாத்ம மாத்திரமாய் மிஞ்சுதலாகிய பாவனையானது இராப்பகல் விடாமல் தைலதாரையைப் போல் இடைவிடாமல் செய்யவேண்டுமென்பதைக் காட்டுவான் வேண்டி அவ்வாறு செய்ய சக்தியில்லாதவர் விஷயத்தில் உத்தம,

மத்திம, அதம சாதகபேதத்தால் மூன்று வித கால நியமத்தைக் கூறுகின்றார்.

34. [உப] இவ்வாறு மூன்று முகூர்த்தமோ, இரண்டு முகூர்த்தமோ, ஒரு முகூர்த்த மாத்திரமோ பாவனுபாஸனனவன் ஜீவன்முக்தனாகின்றான். அவனே சிவயோகி யென்று சொல்லப்படுகின்றான். (34)

(குறிப்பு)—உபநிஷத்திலுள்ள "இவ்வாறு" என்கிறதால் அடுத்து முன் கூறப்பட்டதும், ஸ்வாத்ம மாத்திரத்தை விஷயமாயுடையதும், சுவாஸ ஸ்தம்பத்தோடு கூடிய நிர்விகல்ப விருத்தி கூறப்பட்டிருக்கின்றது. இவ்வித பாவனையில் ஆசக்தனாயிருப்பவன் (பிரியமுள்ளவனாயிருப்பவன்) அதாவது மற்ற வியாபாரமில்லாதவனாயிருப்பவன் அதாவது தைலதாரை போல் விடாத பாவனையை யுடையவன் சீக்கிரத்திலேயே ஜீவன் முக்தியாகிய பலத்தை யனுபவிப்போனாவன். சிவயோகிகளென்று சொல்லப்படும் ஜைகீஷவ்யர் முதலானவர்கள் இவ்வித பாவனை யுடையவர்களாதலால் அவர்களடைந்த பதவியை யடைய இப்பாவனை வேண்டுமென்பது கருத்து.

மூவேதங்களும் பஹிரங்கமாகிய கர்மத்தைப் பிரதிபாதிக்கும். நான்காவதாகிய அதர்வ வேதமோ பெரும்பான்மையும் அந்தரங்க கர்மங்களையே பிரதிபாதிக்கும். அவ்வதர்வவேதத்தின் சிரமாகிய இவ்வுபநிஷத்தோ மிகவும் அந்தரங்கமாகிய பாவனையைச் சொல்கின்றது.

35. [உப] காதிமதத்தால் அந்தர் சக்ர பாவனைகள் (அந்தர் முகமான சக்ரங்களில் பாவனைகள்) சொல்லப்பட்டன. (35)

36. [உப] யாவனொருவன் இங்ஙன மறிகின்றானோ அவன் அதர்வ சிரஸை அத்தியயனம் செய்கின்றவன். (36)

(குறிப்பு):—இவ்வுபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் சக்கரங்களின் பாவனைகள் காதியெனப்படும் சக்தி மதத்தை யனுசரித்தே சொல்லப்பட்டன; கௌளமதத்தை யனுசரித்தனவல்ல. இவ்வுபநிஷத்து இவ்வித பாவனையைப் பிரதிபாதிக்கின்றது என்று பதம் பதமாகவும், வாக்யம் வாக்யமாகவும் எவன் அர்த்தத்தை அறிந்து அனுசந்தானம் செய்கின்றானோ அவன் அதர்வசிரஸாகிய இந்த உபநிஷத்தை அத்தியயனம் செய்தவனாவான்.

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.
விசுவேசுவரசாஸ்திரி மஹோபாத்தியாயர்.
ஸ்ரீ பரதேவதாயை நமஃ.

முற்றும்.

(:-o-:)

NOTE ON ASTROLOGY.

சோதிட சாஸ்திரக் குறிப்பு.

சோதிட சாஸ்திரமென்பது வேதாங்கம் ஆறில் ஒன்றாகக் கூறப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி ஒருவர் செந்தமிழ்ப் பத்திரிகைக்கெழுதியிருப்பதில் சோதிடத்தின் அங்கங்களைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—

"சோதிடமென்பது ஒரு பெரிய நூல். அது நான்கு அங்கங்களுடையது. அவையாவன:—1. சோதிட சம்பந்தமான கணிதங்கள்: இது சகோள (வான) சாஸ்திர மெனப்படும்; ஸித்தாந்தம் என்பது இதற்கே பெயர்.

2. ஜாதகம்; 3. முகூர்த்தம் (சுபகாலங்களைத் தெரிவிப்பது); 4. பிரச்னை (கேட்ட கேள்விகளைக் கொண்டு குறி சொல்வது.)

சோதிட சாஸ்திரத்தில் முக்கியமான அம்சங்கள் மூன்று, அவை (1) காலம், (2) தேசம் (இடம்), (3) கிரஹங்கள். பாரமார்த்திகமாக விசாரிக்குமிடத்து, தேசமே பிரகிருதியாகும், காலமே கர்மமாகும், கிரஹங்களே ஆத்மாவாகு மென்று சொல்கிறார்.

"சோதிடஞானம்" என்கிற தலைப்பின் கீழ் அவர் பின்வருமாறு எழுதுகிறார்:—"பூர்வத்தில் நம்மவர்கள் வான சாஸ்திரத்தையும் அதை யனுசரித்துச் சோதிடத்தையும் மிகவாகப்பயின்று வந்தார்கள். பரப்பிரஹ்ம வஸ்துவைத் தெரிந்து கொள்வதற்கு ஜ்யோதிஷ சாஸ்திரஞானம் அவசியமென்பது அவரது கொள்கை. வேதத்துக்குரிய ஆறு அங்கங்களுள் சோதிடமும் ஒன்றாகும். சோதிட நூற்பழக்கமில்லாவிடின், வேதத்திற் சிற்சில பாகங்களின், முக்கியமாக மந்திரபாகங்களின், பொருள் விளங்காது என்பர். கர்ம சாஸ்திரங்களின்படி ஒவ்வொருவருக்கும் பிறப்பு முதற்கொண்டு பதினாறு அந்தஸ்துக்கள் ('ஸம்ஸ்காரங்கள்' என்பர் இவற்றை) ஏற்படுகின்றன. இந்த அந்தஸ்துக்கள் ஒவ்வொன்றாகப் பிராப்தமாகும்போது ஒவ்வொரு கருமம் செய்வதுண்டு. இந்தக் கர்மங்களுக்கு ஷோடச (16) கர்மங்கள் என்று பேர். இவற்றுள் உபநயநமும், விவாஹமும் முக்கியமானவைகளாகும். இந்தக் கருமங்களின் சம்பந்தமான மந்திரங்கள் ஒவ்வொன்றிலும், ஸந்தியா வந்தனம் முதலிய நித்திய கருமங்களிலும், நக்ஷத்திரங்கள் சூரிய சந்திரர்களின் சாரம் (தசைவு, ஓட்டம்), கிரஹங்கள், பஞ்சபூதங்களின் அதிதேவதைகள் ஆகிய இவை சம்பந்தமான விஷயங்கள் கூறிக்கப்பட்டிருக்கின்றன. அதையால் இவைகளைப்பற்றித் தெரிந்து கொண்டாலன்றி நாம் அந்த மந்திரங்களின் பிரயோஜனத்தை யறியமாட்டோம். இதை உத்தேசித்தே நம்மவர் சோதிட நூலைப்பயில ஆரம்பித்தனர்; அல்லாது, பணஞ் சம்பாதிக்கும் பொருட்டும், வினோதத்தின் பொருட்டுமென்று."

சோதிடம் யாருக்குப் பயன் படுமென்பதைப்பற்றி ஆன்மாக்களை மூவகையாகப் பிரித்து, உத்தமர்களான பகவத் பக்தர்களையும், அதமர்களான பரலோகத்தின் ஞாபகமே கிடையாத மூடத்தனமான தன்னயக் கொள்கையுள்ள நாஸ்திகர்களையும் தள்ளி, ஆஸ்திக புத்தியுள்ள ஸம்ஸாரிகளான மத்தியம அதிகாரிகளுக்கே பயன்படும் என்று கூறுகிறார். உத்தம அதிகாரிகளுக்கு ஜோதிஷம் என் அவசியமில்லையென்றும், சொல்கிறார்:—

"எப்பொழுதும் ஈசுவரனையே தியானித்துக் கொண்டு, பக்தியிற் சிறந்து யோகமார்க்கத்திலிருக்கும் மகான்களுக்கு நல்ல காலம் என்பதும் கெட்டகாலம் என்பதும் இல்லை. ஒவ்வொரு நிமிஷமும் அவர்களுக்கு நல்லகாலமே யாகும். அவர்கள் நன்மை தீமை சுகம் துக்கம் என்கிற இரட்டைகளைக் கடந்தவர்கள்."

உத்தமாதிகாரிகள் என்பவர் மனோஜயம் பெற்றவர்கள்: ஸத்யசங்கல்பரான அவர்களுக்கு நினைத்ததானே பலிக்கும். "மனோஜயந்து மாண்டவ்யம்" என்கிறபடி, மனதில் ஒருகாரியம் ஜயமாகுமென்கிற திடம் எப்போ உண்டாகிறதோ, அதுவே அவர்களுக்கு நல்ல முகூர்த்தம். ஏனெனில் "அண்ட பிண்ட ஸமத்வ" ஞானவிசேஷத்தாலே யென்க. சஞ்சல சித்தமுடையவர்கள், ஜீவயாத்திரையில் "வரும் வழி போம்வழி மாயாவழி" யறியாத ஸம்ஸார சித்தர்கள் கிரஹசாரங்களை யறிந்து நடந்துகொள்ளவேண்டும். வழிதெரியாதவன் வழியில்காணு மவர்களையெல்லாம் வழிகேட்டுத் தெரிந்துகொண்டும், இராப்பகல் என்கிற வித்தியாஸம் பார்த்துக்கொண்டும், அனுகூல பிரதிகூலங்களை யுத்தேசித்து வழி நடக்கிறான். "முற்றும் வழிநடந்து முழுவழியுந் தானறிந்தவன்" நேர்வழிபோனாலும் சரி, குறுக்குவழிபோனாலும்சரி, சாதனசாத்தியமறிந்து குறித்தஇடம்போய்ச்சேருவான். அப்படியேபோல, பிண்டத்திவ் உண்மையைக் கண்டவன், அண்டத்திலும் அந்த உண்மையை உள்ளபடி யறிவான். மூடனோ சொல்லியுமறியான்.

கடைசியாகத் தீர்க்காலோசனை செய்துபார்க்கில் நிச்சயம் உதித்தவன் எப்படியும் லக்ஷியம் தவறான். உத்தமாதிகாரிகள் சிரவணமாத்திரத்தியாஸனங்களால் நிச்சயம் (அனுபவநிச்சயம்) உணர்ந்தவர்களாதலால், அவர்கள் எதுவரினும் மனதைத் திருத்திக்கொண்டு கர்மானுபவம் தவறாது காரியத்தை நடத்திக்கொண்டு போவார். அவர்களுக்கு லக்ஷியமெல்லாம் காரணத்திலே யாதலால், காரியம் காரணம் போல் கூடிவரும்.

நிச்சய புத்தியில்லாத சஞ்சல சித்தர்களுக்கு எப்பொழுதும் சமுசயம் விடாது. அந்தச்சமுசயம் ஒழிய இது ஒரு வழியாமேயன்றி வேறு இதில் விசேஷமில்லை. விதைவிதைத்தவன் பலனறுக்கிறான். கர்ம விதியை மாற்ற யாராலும் முடியாது. கர்மம் ஞானத்தால் நசியும். அப்படியென்றால், நிஷ்காமகர்மம் செய்யக்கற்றவரே கர்மபந்தத்துக் காளாகாது தப்புவார்; மற்றவர்களெல்லாரும் கர்மபந்தத்துக்குக் கட்டுப்பட்டவர்களே! வியாதியுறல் பயங்கொண்டு மரணத்துக்கஞ்சி நடுங்குவதுக்கு வைத்தியன் தைரியம் சொல்வதுபோல் சஞ்சலபுத்தியால் நிச்சயம் வற்படாதவர்களுக்கு ஜோதிஷநூல் வல்லோர் அண்டத்தைப் பிளந்து பிண்டத்தைத் திருத்தும் வழிசொல்வர். ஆனால் அண்டத்தைப் பிளக்கவல்லவர் யார்? என்று

கற்றயோசித்துப் பார்க்கவேண்டும். ககோள சாஸ்திரம் கற்றதனால் மட்டும் ஜோதிஷம் கைவந்ததாகாது. ககோள சாஸ்திரத்தையறிந்து அண்ட பிண்ட சமத்துவத்தையும் உள்ளபடி யுணர்ந்து எதையும் "அஹம், இதம்" என்கிற அபிமானம் விட்டு பாரமார்த்திகமாகப் பார்த்து உணரவல்லராக விருக்க வேண்டும். இவர்களே உண்மையான திரிகாலஞானிகளாவார். மற்றவர்களெல்லாம் எதோ கற்றுக் குட்டிகள் தைப்பாகமாகச் சோதிடநூலைக் கையாண்டு வருகிறார்கள். அவர்களைப்பற்றி நாம் ஒன்றுஞ் சொல்ல வரவில்லை. ——:-:——

"விவேகசிந்தாமணியின் மடந்தைப்பருவம்" என்ற இருக்கோல்லலங்கார விடுகதைவினா.

நொண்டிச்சிந்து.

தெந்தினத்தினதினனா-தினனதின
தெந்தினத்தினதினதினதினனா
கண்ணிகள்.

(1 தண்டிகையின்பெயரொன்று-நதியிலொன்று
தாமமிகுங்கோபுரப்பெயரொன்று
வண்டடர்மாலைப்பேரொன்று சிவன்பேரொன்று
வையமிசைசத்தத்தின்பெயரொன்று
மண்டலஞ்சொல்துர்க்கையின்பேர்தன்னிலொன்
மாதவசுப்பிரமண்யதலமொன்று [று
கண்டனைவருந்துதிசெய்-மாமலையொன்று
காசினிபுகழும்வெற்றிப்பெயரொன்று...(தெந்)

(2)நன்மதியின்பெயரொன்று-பூமிப்பேரொன்று
ஞாலமிசைசாங்கத்தின்பெயரொன்று
தன்மையின்பெயரொன்று இடைவேற்றுப்பேர்
தனிலொன்று குருவியின்பெயரொன்று
வன்மையுளமீனென்று நன்மைப்பேரொன்று
வண்புகழ்சேர்வேடுவர்கோன்பெயரொன்று
பன்மையுடனதங்கள்முற்றும் மூவெழுத்தெனப்
பகருவாய்பதங்கள்தனையறிந்து ... (தெந்)

(3)கட்டமில்லாகடுவனையி லுள்ளவெழுத்தை
ஞாலமிசைவரிசையாயெழுதிப்பார்க்கத்
திட்டமுடன்[விவேகசிந்தா]மணியின்[மணியின்]
திவ்யிய[மடந்தைப்பரு-ம்] எனவே
சட்டமுடனேயுரைக்கும்-நவரசப
தங்களினுதியந்தவக்ஷரங்களாக
இட்டமிகுங்கிரணப்பெயர்-தன்னிலொன்று
இந்திரன்பேரொன்றவாட்பேரொன்று (தெந்)

(4)மாதவப்பெயரொன்று-தீர்த்தப்பேரொன்று
வயமாவின்பேரொன்றுபகைப்பேரொன்று
பூதலத்திலழகின்பெயர்தன்னிலொன்று
பூஜிதமிகுங்கல்விப்பெரொன்று
சாதன மஸ்துவின்பேர்தன்னிலொன்று
தாரணியிலறிஞன்பெயரொன்று
கோதிலாதபூமியின்பேர்தன்னிலொன்று
கோலமிகும்பார்வதிபெயரொன்று ... (தெந்)

(5)வையமிசை-பேதைமை-எனும்-பதப்பேரொன்று
வடிவத்தின்பெயரொன்றசெல்வப்பெயரொன்று
துய்யகாசிபன்மனைவி-தன்னிலொன்று
சுருதிசொல்லலங்காரப்பெயரிலொன்று
ஐயமில்லாமஹமதியர்-தீர்க்கதரிசி
அபிதானமொன்றுறுதியாகக்கூறும்
மெய்மையுடனிப்பொருளையறிந்துவிடை
விளம்புவீர்செந்தமிழ்வல்லோரே. (தெந்)

விடைப்பதமாவன:

1.	தண்டிகைப்பேரொன்று	சி-வி-கை
2.	நதியொன்று	கா-வே-ரி
3.	கோபுரப்பேரொன்று	சி-க-ரி
4.	மாலைப்பேரொன்று	வா-சி-கை
5.	சிவன்பேரொன்று	ந-ந்-தி
6.	சத்தப்பேரொன்று	ஆ-தா-ளி
7.	துர்க்கைபேரொன்று	ச-ம-ரி
8.	சுப்ரமண்யர்தலம்ஒன்று	த-ணி-கை
9.	மலையொன்று	ச-யி-லை
10.	வெற்றிப்பேரொன்று	வெ-ன்-றி
11.	நன்மதிப்பேரொன்று	சு-ம-தி
12.	பூமிப்பேரொன்று	பு-ட-வி
13.	சாங்கப்பேரொன்று	ச-ங்-தி
14.	சுபாவப்பேரொன்று	பே-தை-மை
15.	இடைவேற்றுப்பேரொன்று	வ-டி-வு
16.	குருவிப்பேரொன்று	வி-ப-தி
17.	மீனொன்று	தி-ரு-தி
18.	நன்மைப்பேரொன்று	அ-வ-னி
19.	வேடுவர்கோன்பேரொன்று	ந-ம்-பி

மடந்தைப்பருவம் 19-வயதுக்கு முன்னுள்ள மேற்கண்ட 19-பதங்களின் நடுவெழுத்தை யெடுத்து வரிசைக் கிரமமாக வெழுதி வாசித்துப்பார்க்க "விவேகசிந்தாமணியின் மடந்தைப்பருவம்" என்றாகும்.

மேற்கண்ட பதங்களின் ஆதியந்த அக்ஷரப் பதங்களாவன:—

1.	(சிகை) யென்பது	கிரணம்
2.	(காரி) யென்பது	இந்திரன்
3.	(சிரி) யென்பது	வாள்
4.	(வாகை) யென்பது	தவம்
5.	(நதி) யென்பது	தீர்த்தம்
6.	(ஆளி) யென்பது	சிங்கம்
7.	(சரி) யென்பது	பசு
8.	(தகை) யென்பது	அழகு
9.	(கலை) யென்பது	கல்வி
10.	(வெறி) யென்பது	மஸ்து
11.	(சுதி) யென்பது	அறிஞன்
12.	(புவி) யென்பது	பூமி
13.	(சதி) யென்பது	பார்வதி
14.	(பேதைமை) யென்பது	பேதைமை
15.	(வடு) வென்பது	உடல்
16.	(விதி) யென்பது	செல்வம்
17.	(திதி) யென்பது	காசிபன் மனைவி யொன்று
18.	(அணி) யென்பது	அலங்காரம்
19.	(நபி) யென்பது	தீர்க்கதரிசியாம்.

——:-o-:—— V. M. R. A.

The Hon'ble Sri Gopala Krishna Gokhale in Madras.

கனம் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே.

——:-:——

கனம் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் ஜூலைமீ 22உ சனிக்கிழமை காலையில் சென்னைக்கு விஜயமாய் வந்திருந்து மூன்றுநாள் தங்கிவிட்டு செவ்வாய்க்கிழமை சாயந்திரம் மெயில் வண்டியில் புனாவுக்குத் திரும்பிச் சென்றார்.

இவர் இப்பொழுது இராஜப்பிரதிநிதி யவர்களுடைய சட்டநிருபண சபையில் இந்தியாவில் பிரதம வித்தையை 6-வயதுமுதல் 10-வயது வரையிலுள்ள ஆண்குழந்தைகளெல்லாருக்கும் போதிக்க வேண்டுமென்கிற கட்டாயமான சட்டநிபந்தனையொன்று இருக்கவேண்டுமென்று அதற்காக ஒரு மசோதா ஆலோசனைக்குக் கொண்டுவந்திருக்கிறார். அந்த மசோதா சட்டமாகச் செய்யப்படவேண்டியதற் கனுகூலமாக ஜனங்கள் அபிப்பிராயம் கொள்ளவேண்டுமென்று அதற்காகப் பாடுபட்டுழைத்து வருகிறார். இச்சென்னையிலும் அவருடைய கொள்கையை யங்கீகரித்துப்பிரதம வித்யானுகூலசங்கம்ஒன்று ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தலைவராகவிருக்க ஏற்பட்டிருக்கிறது. அச்சங்கத்தார் சனிக்கிழமை சாயங்காலம் அரங்கேற்று சபையொன்று விக்டோரியா பப்ளிக் ஹாலில் கூட்டி, அச்சபையில் கனம் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் கூடவிருக்க அவருடைய மசோதாவை யாதரித்து அங்கீகரிப்பதாக ஒருதீர்மானம் செய்தார்கள். அத்தீர்மானம் செய்தபிறகு, ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயவர்கள் பிரதம வித்யாபோதனை 6-வயதுமுதல் 10-வயதுவரையிலுள்ள ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டுமென்கிற சட்டநிபந்தனை யொன்றிருக்கவேண்டியதைப்பற்றியும், அதனால் தேசத்துக்கு விளையக்கூடிய நன்மையைப்பற்றியும், ஓர் திவ்யப் பிரசங்கம் செய்தார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று சாயந்திரம் பொதுஜனவாழ்வு சம்பந்தமாய் நம்மவர்களிடத்துள்ள குறைகளையும் அதன் பொறுப்புகளைப்பற்றியும் ஒரு திவ்யப்ரசங்கஞ் செய்தார். இவர் செய்யும் பிரசங்கங்களை திவ்யப் பிரசங்கங்கள் என்று சொல்வது உபசாரம்பற்றியல்ல. இவர் உள்ளபடி உண்மையான ஆத்மதீக்ஷை பெற்றவர். பம்பாய்ஹைகோர்ட்டுஜட்ஜாயிருந்த ஸ்ரீ மஹாதேவ கோவிந்த ரானடே யவர்களிடம் சிக்ஷை பெற்றவர் இவர். ஆத்ம தீக்ஷையும் அதற்குவேண்டிய சிக்ஷையும் பெற்றவராதலால் இவர் வாயினின்று வரும் வார்த்தைகள் திவ்யலக்ஷணம் பொருந்தியவையா யிருப்பது அதிசயமில்லை. ஆனால் இவர் துரைத்தன விஷ

யங்களில் புகுந்துகொண்டுழைக்க ஆரம்பித்த பின் "யதார்த்தவாதி வெகுஜந விரோதி" யென்கிற உண்மையை யறிந்தவராய், காரணம் பற்றி உழைப்பவராயினும், காரியவழியாயிருந் துழைக்கவேண்டுமென்கிற கொள்கையும் கொண்டுள்ளாரென்று தெரிகிறது. காரணமின்றிக் காரியமில்லையாயினும் காரியவாதம் செய்யப்புகின் காரணத்துக்கு எப்படியும் ஒருகுறை ஏற்படுமென்பது இவர் விஷயத்தில் உண்மையாக விளங்குகிறது.

காரியமென்பது காலதேச வர்த்தமானங்களுக்குட்பட்டது. காரணமென்பது காலதேச வர்த்தமானங்களுக்கு அதீதமாய் நித்தியமாய் ஸத்தியமாய் நிரந்தரமாய் உள்ளது. காரணத்தைக்கொண்டு காரியத்தை எளிதில் சாதித்துக்கொள்ளலாம். காரியத்தைக் கொண்டு காரணத்தைச் சாதித்துக் கொள்வது சாத்தியமானாலும், அது மிகவும் துர்லபமென்று சொல்லக்கூடியபடி அவ்வளவு கஷ்ட சாத்தியமாயிருக்கிறது.

காரண காரிய தோரணை யறிந்தவரே மாயை மயக்கொழிந்து மஹத்தென்னும் பெரிய மனது கொண்டுழைக்க வல்லவராவர். காரியத்தைக் கொண்டு காரணத்தை யளக்க முயலுவோர் உழக்கைக்கொண்டு சமுத்திர ஜலத்தை யளக்க முயலுமவர்க்கு ஒப்பாவர். "பலதுளி பெருவள்ளம்" "எறும்பூறக் கல்லுந்தேயும்" என்ற பழமொழிகள் இருப்பதாலும், "எறும்பும் தன் கையால் எண் சாண்," என்ற ஔவை வாக்கினாலும், காலக்கிரமத்தில் எறும்பும் பிரம்மாவாகலாம். இந்தவுண்மையை வற்புறுத்தவே, முக்திக்குவழி யிரண்டென்றுகூறி, அவற்றைப் பக்திமார்க்கமென்றும் பிபீலிக (எறும்பு)மார்க்கமென்றும் வகுத்துக் கூறினர் மேலோர். பக்தி மார்க்கத்தை சுகமார்க்கம் என்றும், எறும்பு மார்க்கத்தை வாமதேவர் மார்க்கமென்றும், இவ்விருவகை மார்க்கங்களைத் தவிர முக்திக்கு வேறு மார்க்கங்களில்லை யென்றும் உபநிஷத்துகள் முறையிட்டுக் கூறுகின்றன. சுகமார்க்கத்தை ஸத்தியோமுக்தி யென்றும், வாமதேவ மார்க்கத்தைக் கிரமமுக்தி யென்றும் சொல்லுவர்.

முட்டையுட் கருவாயிருக்கும் பதத்தில் பக்ஷியும் எறும்பும் சமத்துவமா யிருந்தாலும் "வாரணஞ்செய் உடலிந்திரியாதி யென வந்த காரிய உபாதிகள்" ஏற்பட்டபின், பக்ஷிக்கு எறும்பு மார்க்கமும், எறும்புக்குப் பக்ஷி மார்க்கமும் அனுஸரிக்க இயலுமானதாகுமா? நிற்கத் தெரிந்ததும் தத்தித் தடுமாறி விழுந்துகொண்டு பறக்கும் பறவைக்குஞ்சை, முட்டையை விட்டு வெளிவந்ததும் உறுதியாயூர்ந்துநடக்கும் எறும்பைப்போல் நடக்க வேண்டுமென்றால் இயலுமா? அந்த அபாவ யுக்திக்கு அது ஒத்து நடக்கவில்லை யென்று அதன் இறக்கைகளை யொடித்து அதைக் காலால் நடந்தே காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டுமென்றால், அது எறும்பு போல் நடக்கும் சக்தி வாய்ந்ததாகுமா? இல்லை, எறும்புக்குத் தான் இறக்கை முளைத்தால் அது கருடனைப்போல் பறக்குமா? எதுவும் அதனதன் பூர்வவாசனைக்குத் தக்கபடி மேலுள்ள விருத்தி நிவிருத்தி மார்க்கத்தை யனுசரிக்குமே யல்லாது, மனிதன் இட்டது சட்டமாய் நடக்கும் பிராணி ஜகத்சிருஷ்டியில் பிறந்ததுமில்லை, இனிப் பிறக்கப்போகிறதுமில்லை.

குணத்திலும் பிறவிக்குண மென்பதொன்றுண்டு. அந்தக் குணத்தின் முன் பின் நாட்டமறிந்து நடக்க வல்லாரே, அக்குணத்தை வளர்க்க வல்லார். பிறவிக் குருடனுக்கு இருளில் மருளும், அறிவிற் குருடனுக்கு அருளில் தெருளுமில்லை யென்பது வாஸ்தவம். புலியைப்பார்த்து பூனை சூடிட்டுக் கொண்டால் அது புலியாகுமா? கழுதைக்கு சிங்கத்தின் தோலைப்போற்றினாலும் அதன் குரல் மாறுமா? ஆதலால் சுபாவத்தை மனுஷயத்தனத்தால் மாற்றமுடியாது. அறுதியிலது தானாய்ஓடுங்கும்.

சுபாவத்தைக் கெடுத்தால் அது சூந்யத்தில் மறையும். சூந்யத்தைச்சொண்டு இரகஸியத்தை யறிய வல்லவரே சுபாவத்தை மாற்று மாற்றலுடையவராவர். "ஒழிவிலோடுக்கம்" பெற்ற உத்தமரான நிருபாதிக நிர்மல சித்தரே சுபாவத்தையழித்துச் செய்யும் ஆற்றலும் தேற்றலும் பெற்றவராவர்.

பக்ஷிக்கூட்டத்தை யெறும்புக்கூட்டமாக்கப் பார்த்தால் அது பலிக்குமா? காக்கைக் கூட்டத்தைக் கருடன்களாக்க வேண்டுமென்றால் கூடுமா? இஃதெல்லாம் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையில் சேர்ந்தது. அதாவது தேஹாபிமானத்தைவிட்டுச் சாக்ஷி மாத்திரமாயிருந்து செய்யவேண்டிய வேலை.

"பிரம்மாமுதல் எறும்பீறாக உள்ள சரீரங்களில் அமைந்துளதாயும், ஜாக்ர, ஸ்வப்ந, சுஷுப்தியென்கிற மூன்று நிலைகளிலும் தெளிவாய்ப் பிரகாசிப்பதாயும், எந்த ஞானம் (அறிவு அல்லது ஆத்மா) ஏற்றக்குறைச்சலின்றி யமைந்துள்ளதோ அந்த ஞானஸ்வரூபி நானே! (நசத்ருச்பவஸ்து) புலனறிவுக்கெட்டாத அந்த வஸ்து நானேதான் என்கிற திடமானஞானம் எவனுக்கு இருக்கின்றதோ அப்படிப்பட்டவன் சண்டாளனானபோதிலும் அல்லாது பிராமணனானபோதிலும் குரு (அஜ்ஞான அந்தகாரவிலங்கைத் தரித்துப்போக்குவோன்) என்பது என்னுடைய அபிப்பிராயம்" என்று ஸ்ரீ பகவத்பாத சங்காராசார்ய ஸ்வாமிகள், அவரை மறுத்துக்கேட்ட சண்டாளத்மகனான நசனுக்கு விடையாய் அளித்த "மநீஷாபஞ்சகம்" என்னும் திவ்ய கிரந்தத்தில், என்றென்றைக்கும் அழியாத அக்ஷரங்களினால் இப்பரதக்கண்டத்தின் சமஷ்டிவித்யா லக்ஷ்மியின் ஹிருதயாகாசத்தில் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அதுவே இந்தியாவின் சமஷ்டிஜீவன் உய்யும்வழி... அந்த வழியினின்றும் விலகிப் போகப்போக இந்தியாவுக்கு (இந்தியாவின் சமஷ்டிக்குறைவேயன்றி நிறைவில்லை.....

ஆகையால், ஐரோப்பியரைப்பார்! அமெரிக்கரைப்பார்! இக்கரைக்கக்கரை எவ்வளவு பச்சையா யிருக்கிறதென்று போதிப்பதெல்லாம் வீண் பசப்பு வார்த்தையன்றி வேறல்ல!

உன்னைப்பார்! உன் கண்ணைப்பார்! கண்ணுள் மணியைப்பார்! அம்மணியிற் பாவையாம் புருஷனைப்பார்த்து மனிதரிற் பதராயிருக்கும் நீ உன் பேடித்தனத்தைவிட்டு தீரத்தனத்தைக் கைக்கொண்டு புருஷ சிங்கமாகக் கர்ச்சித்தெழுந்து தாமஸபுத்தியைவென்று ராஜஸத்தை யடக்கியாண்டு ஸாத்விக சித்திபெற்று ஸத்ய சங்கல்பனாய் நித்ய முக்தனாய் விளங்குவாயாக! அப்படி விளங்குவாயானால் உலகமெல்லாம் உன் வழிப்பட்டு நிற்கும்! எழுந்திரு! எழுந்திரு! தூங்காதே! என்று ஆத்மோத்தாரணம் செய்து இந்தியாவின் சமஷ்டி பாவத்தை வளர்க்கவல்ல மஹான் யாரோ அவன் இட்டது சட்டமாய் ஆடும் இந்த மஹத்தான பாரதக் கண்டத்தின் சமஷ்டிவாழ்வு!

பாசற்காய்க்காகப் பங்கை விற்றவன் சதையாக அனுதியாயுள்ள உன் சுபாவகுணத்தை விட்டு நீக்கி அபாவமான வழியைப்பற்றி நடவென்றால், சொன்னவனுக்கு சொல் நஷ்டம், கேட்டவனுக்குக் கேள்வி நஷ்டமே யன்றி, சமஷ்டி வித்யையாம் தேசவாழ்வு தாழாமல் தாழ்ந்து வாழ்வான வாழ்வாம் பெருவாழ்வு பெறுதலில்லை.

சமஷ்டி வித்தையாம் தேசவாழ்வுக்குப் "பற்றற்றார் பற்றுகப்பற்றி யிருந்தா' னோடு சேர்ந்தன்றி மற்றப்படி இந்தியாவில் அதற்கு வாழ்வில்லை.

"வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்,
தாழாமற்றாழ்ந்தேண்டி சற்றுங் குறையாமல்"

என்பதே இந்தியாவின் லக்ஷியமாம்.

இந்தியா தேவி வாழ்வுறத் தேடும் சமஷ்டி புருஷன் "தேச மிறந்தவன்காண், திசை யிறந்

த தேன்கடல்காண்". இவன் எங்கே யிருக்கிறானென்றால்:—

"ஊசிமுனை யின்றி இல்லாவுறுப் பொருள்காண்" என்று பட்டணத்தடிகள் முதல் இந்தியாவின் ரிஷிகள் எல்லாரும் அநாதிகாலம் முதல் ஓதியிருக்கிறார்கள். அவர்கள் வார்த்தையைக் கேட்பாரில்லை! ஆதலால் தான் பட்டணத்தடிகள் "இறந்த காலத் திரங்கலில்" பொதுப் பிரசங்கப் பொய்வாழ்வில்,

"வார்த்தைத்திறமில்லா மனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச் சதிரிழந்துகெட்டேனே"

"மெத்தமெத்தச் சொல்வாக்கில் வேறுமருளடுத்துத்
தத்தித் தலைகீழாய்த் தானடந்தும் கெட்டேனே'

யென்றும்; உலக வாழ்க்கையிலிருந்த காலத்தில்,—

"ஆசாரமில்லா வாசருடன்கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்து கெட்டேனே!— யென்றும்

"குருமார்க்கமில்லாக் குருடருடன்கூடிக்
கருத்தழிந்து கெட்டேனே!"—யென்றும்

புலம்பி யிருக்கிறார். ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் ஸ்ரீமான் மஹாதேவ கோவிந்தரானடே யவர்களால், குருமார்க்க தீக்ஷை யளிக்கப் பெற்றவர். ஆகையால் இவர் வாய்பிறப்பாம் வார்த்தைகள் உத்தம லக்ஷியத்திற் குறைவு பட்டால் சத்துக்களுக்கு வருத்தத்தை யுண்டுபண்ணுவதாயிருக்கிறது. ஏனெனில் சத்துக்கள் எவ்வாற்றானும் பூரண லக்ஷியத்துக்குப் பங்கம் வரப் பேசார்கள்.

"கண்டபுலவர் களக்கவே தான்புகழ
உண்டவுடம்பெல்லாம் உப்பரித்துக் கெட்டேனே!"

என்று பட்டணத்தடிகளும்,

"மேலவே தானிருந்து வேணமட்டுங் கைகொடுப்பேன்
கீழவே நீயிருந்த தத்திப்பிடி யென்றான்"—என

ஆனந்தத்தாய்மொழியும் சொல்லிருக்கக் காணலாம்.

சாதக சாதனங்கள் எப்படி வேண்டுமானாலும் மாறுபடலாம். அதனால் குறைவொன்றுமில்லை. ஆனால் லக்ஷியத்துக்குப் பங்கம் வர்தால் அது எல்லாவற்றையும் பாதித்து கடைசியில் பூரணானுபவமும் சித்திக்காது மாயையிற் சிக்கவைக்கும். இந்த உண்மையை இங்கு வற்புறுத்திக் கூறவேண்டிய தவசியமாயிருப்பதுபற்றிச் சொன்னோம். மற்றப்படி ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் செய்த திவ்யப் பிரசங்கம் எல்லாராலும் கொண்டாடப்பட்டதென்றும், கொண்டாடத் தக்கதாயிருந்ததென்றும் நம் உள்ளமுணர்ந்த அபிப்பிராயத்தை யிங்கு குறிப்பிட்டு வைக்கிறோம்.

———:*:———

THE LATE MAHOPADHYAYA VISVESVARA SASTRIAR.

காலஞ்சென்றபண்டிதரத்நமாய் மஹோபாத்யாய விசுவேசுவரசாஸ்திரியார்.

———(:-:)———

விவேகசிந்தாமணிக்காகவென்று "பாவனோபநிஷத்" "திரிபுராஉபநிஷத்" அன்னபூர்ணோபநிஷத் இவைகளைப் பரிசிரமப் பட்டுத் தமிழில் மொழிபெயர்த்து ஸ்ரீ மு. கோ. நாராயண ஸ்வாமிஐயர் அவர்களுக்குப் பக்கபலமாயிருந்த மஹோபாத்யாயர் விசுவேசுவரசாஸ்திரியார் அவர்கள் அதிபால்யத்தில் அபாரபாண்டித்தியம் பெற்று விளங்கிக் கொண்டிருந்து இளவயதில்தானே பரகதியடைந்ததைக் குறிப்பிட மிகவிசனிக்கிறோம். காலஞ்சென்றவர் 28-30-வயதுகுட்பட்டவராயிருந்து ஸம்ஸ்கிருதத்தில் மஹாபாண்டித்தியம் உடையவராக விளங்கினார். உபநிஷத் வாக்கியங்களுக்கு வாச்சியார்த்தம் செய்வது மிகவும் கஷ்டம். சாமான்ய பாண்டித்தியம் போதாது. அபார சாமர்த்தியமும் அதிகூர்மையான புத்தியும் புனிதஸமஸ்காரமும் சுத்த ஹிருதயமும் அந்தர்முக சிக்ஷையும் ஒருங்கே யமைந்திருந்தாலன்றி உபநிஷத்வாக்கியங்களின் ஸாரத்தை கிரஹித்து அவற்றின் வீரியம் குறையாமல் வேறுபாஷையில் அவற்றிற்கு வாச்சியார்த்தம்

செய்வது முடியாத காரியமாம். அதுவும் பாவனோபநிஷத், திரிபுரா உபநிஷத் வாக்கியங்களுக்கு அர்த்தம்செய்வது மிகவும் அருமை. ஏனெனில் இவற்றில் கர்மம், உபாஸனை, ஞானம் என்கிற மூன்றும் ஒன்றாய் விளங்க வார்த்தைகளும் வாச்சியங்களும் அமைந்துள்ளன. இவை மந்திர திர்ஷ்டாக்களால் அபரோக்ஷ சாக்ஷாத்காரத்தில் அனுபவித்த அனுபவங் கலையாமல் சகஜஸமாதியிலிருந் துரைக்கப்பட்ட வாக்கியார்த்தமான வாக்கியங்கள் நிறைந்துள்ளன. இவருடைய பாண்டியத்தைப்பற்றி நாம் முதலில் திருவனந்தபுரம் ஆர்க்கியலாஜிகல் சுபரின்டெண்டு ம-ா-ா-ஸ்ரீ தி. அ. கோபிநாதராவ் அவர்களால் கேள்விப்பட்ட பொழுது அவ்வளவாக நம்பக்கூடாமலிருந்தோம். ஆனால் அவரை நேரில்கண்டு சம்பாஷிக்கும்படியான பாக்கியம்பெறவும், அவருடைய மேலான வித்வத் சாமர்த்தியமும், சாதகசாதனா முறைகளில் தெளிந்தஞானமும், ஆத்மபுத்தியும், அதிசயிக்கத்தக்கதா யிருந்தது! பண்டிதர்களுக்குரிய குதர்க்கவாத புத்தியும் விசாரக்குறைவும் அவரிடத்தில் சிறிதேனுமில்லை. பரம்பரையான வித்வத் வமிசத்தி லுதித்தவரானபடியால், மீன் குஞ்சுக்கு நீஞ்சக்கற்றுக் கொடுக்கிற தர்மமாய் அவருக்கு வித்தியா சம்பத்தும் விவேகமும் இயல்பாய் வரலாயிற்று. அஃதோடு பாடுபட்டுழைக்கும் குணமும் சேர்ந்திருந்தபடியால் அவருடைய குணமும் மணமும் ஒழுக்கமும் சீலமும், வித்தியாவிஷயத்தில் அவருக்குள்ள உற்சாகமும் மிக மெச்சத்தக்க விதமாயிருந்தது. இவர் திருவனந்தபுரம் ஆர்க்யலாஜிகல் சுபரின்டெண்டுக்குள் பண்டிதராயிருந்தார். இவர் காலஞ்சென்றதில் இந்தியாவின் கல்விக்குக் களஞ்சியமா யிருக்கும் உத்தம பாத்திரமொன்று நஷ்டமாய்ப் போனதாகச் சொல்லவேண்டும். மூலைமுடுக்குகளிலுள்ள உத்தம வித்வான்களைத் தேடிப்பிடித்து ஊருக்குபகாரிகளாக விருந்துழைக்கச் செய்யவேணுமென்கிற நம் கோட்பாடு சிறக்க இவர் நீடித்திருந்து இவர் பாண்டித்தியம் விளங்க ஊருக்குழைக்கக் கொடுத்து வைக்காமற் போனது நம்முடைய துரதிர்ஷ்டமே.

———:-(o)-:———

"Tell me Your Friends and I will tell you what you are."

ஸகவாஸ தோஷம்.

———(:o:)———

(95-வது பக்கத் தொடர்ச்சி)

(10). மக்களை வெளியில் அழைத்துப் போகும் வழியில் உண்டாகும் துர்மாதிரிகளில் காக்கும் முறை.—இவ்வாறு மக்கள் கெடாமல் காத்து வருகையிலும், முன் கூறியபடியே, பெற்றோர் மக்களை யடிக்கடி வெளியே அனுப்பாமலும், போக விடாமலும், கூத்துக் கால க்ஷேபம் முதலிய காரியங்களுக்கு மக்கள் போகாமலும் கவனித்து வருகையிலும், ஏதோ ஒரு அவசிய முகாந்தரமாக மக்களோடு வெளியே போகவும், பிரயாணஞ் செய்யவும் நேரிடுகையில், துட்டர் பேசுங் கெட்ட சொற்கள் காதில் விழுவதும், அவர்கள் செய்யும் துட்டச் செயல்கள் கண்ணில் படுவதும் பெரும்பாலும் சகஜம். ஆதால், பெற்றோர், வீட்டை விட்டுத் தம் மக்களோடு புறப்பட்டது முதல் குறித்த இடத்திற்குப் போய்ச்சேரும் அளவும், அடிக்கடி விசேஷமாய்த் துன்மாதிரி சம்பவிக்கையில், அவர்களுக்குப் பல பொருள்களையும் காண்பித்து, அவைகளைப்பற்றித் தமக்குத் தெரிந்த வரைக்கும் சொல்லி, அவைகளைச் சிருஷ்டித்த, அல்லது, உண்டாகக்காரணமாயிருந்த மெய்யங் கடவுடைய வல்லபத்தையும், நன்மைத் தனத்தையுங் கூடிய வரைக்கும் எடுத்துக் காட்டிப் புகழ்ந்து கொண்டாடிக், கண்ணில் படும் ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு செயலிலும் நின்று நற்புத்தி, படிப்பினை மக்களுக்குப் போதிக்க வேண்டும். இதனால் அவர்

கள் அந்தத் துர்மாதிரிகளைக் கவனிக்காமலும், சித்திக்காமலுந் தடுக்கலாம்.

(11). பல பொருள்களிலும், செயல்களிலும் நின்று புத்திமதி போதிக்கும் முறை.—இதற்கு உதாரணமாகக் கருங் கல்லில் எடுக்கக் கூடிய படிப்பினை-(1). இஃது, தண்ணீரில் ஊறி மிருதுவாகாமலும் ஒளியில்லாமலும் இருப்பது போலப், புத்திமதிகளுக்கு இணங்காத, அறிவு இல்லாத மட்டி மனிதரும் உண்டு எனவும், (2). இது உடைந்தால் திரும்பவும் சேராதது போலத் துட்ட நேசர் பிரிந்தபின் மறுபடியும் கூடமாட்டார்கள் எனவும் கெட்டவர்களுடைய தன்மையையும், (3). இஃது வெயிலுக்கும் மழைக்கும் அஞ்சாமற்கிடந்து, காற்றினாலும் அலைக்கப்படாமல் இருப்பதுபோல், நல்லோர், இப்பிரபஞ்ச துன்பங்களுக்கு அஞ்சாமலும், துர்மாதிரி யென்னும் சோதனையால் அசைக்கப் படாமலும், தம் நன்னிலையையே கைப்பற்றி வருவார்கள் எனவும், (4). இது உப்புப் போல் தண்ணீரில் கரைந்துபோகாமல் அவ்வளவிலேயே யிருப்பதுபோல, நல்லோர், துட்டப் பெண்கள், ஆடவர்கள் இவர்களுடைய பசப்பு வசனமும், சொலுமாகிய மோகன மயக்கத்தால் நிலைகெடாதவர் ஆவார்கள் எனவும் போதிக்கலாம். அஃதே போல், கல்லெறியும் செயலி லிருந்து கற்பிக்கத் தக்கது:—(1) தின்மை செய்ய மனமில்லாத கல்லானது, ஒருவருடைய கட்டாயத்தால், ஒரு தீமையைச் செய்வது போல், தீயோர் கையில் பட்ட நல்லவர்களும் குற்றஞ் செய்ய ஏவப்படுவார்கள் எனவும், (2) இது எறிகிறவனுடைய குறிப்புக்கும் பலத்திற்குந் தகுந்தபடி பலனளிப்பது போல், ஒரு விஷயத்தில் கொண்ட நோக்கத்திற்கும், கவனத்திற்கும், முயற்சிக்கும் தகுந்தபடி பலனளிக்கும் எனவும், (3)ஒருவனுடைய முயற்சியின்று, இஃது, உயர எழும்பாதது போலக், கடவுளுடைய கிருபை யில்லாமல் நாம் ஒரு விதத்திலும் உயர முடியாது எனவும், (4) காய்க்காதமரத்தின் மேல் கல்லெறிதல் இல்லை யென்பது போல், பொருளில்லாதவரிடத்துக் கள்ளர் அணுக மாட்டார்கள்; ஒருகால் சென்றாலும், வீணே திரும்பும்படியாகும் எனவும், (5) கல்லானது நல்லோர், தீயோர் என எண்ணாமல் காயப்படுத்தி விடுவது போலத், துட்டர்கள் எவருக்குந் தீமை செய்யத் துணிவார்கள் என்றும், (6) பூமியினின்று எழுந்த கல்லானது மறுபடியும் பூமியிலேயே விழுவது போல், பூமியினின்று எழுந்த தேகம் பூமிக்கே திரும்பவேண்டும் எனவும், பல விஷயங்களைப் போதிக்கலாம்.

(12). மக்கள் பள்ளித் தோழர்.—பள்ளிக்கூடத்திற்குப் புதிதாய் அனுப்பப்படும் பிள்ளைகள், அது வரைக்கும் நல்ல பிள்ளைகளுடைய சகவாசத்திலேயே பழகி யிருந்தார்களானால், "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றதிற்குறிக்கப்பட்டபடியே நல்ல பிள்ளைகளோடு தான் சிநேகம் செய்ய விரும்புவார்களே அன்றிக், கெட்ட பிள்ளைகளோடு எளிதில் பழக மாட்டார்கள். ஏனெனில் அவர்களுடைய குணம், செயல், சொல், முதலியவை தங்களுக்குப் பிரியப் படா. நல்லொழுக்கத்தில் வளர்க்கப்பட்டவர்களும், துஷ்டப் பிள்ளைகளோடு நின்ற அறியாதவர்களும், அநேக விதமான குணம் செயல்களை யுடையவர்களைக் காணும்பொழுது, தங்களை யொத்த குணம் உடையவர்களிடத்திலேயே பழக விரும்புவார்கள் ஒழியக், கெட்ட பிள்ளைகளோடு சேரமாட்டார்கள். என்றாலும், "எறும்பூரக் கல்லுந்தேயும்" என்றபடி கெட்டவர்களுடைய துட்ட செயல்களையும், சொற்களையும் அடிக்கடி உணர்ந்தும், கண்டும், கேட்டும் வருவதாலும், மனிதசுபாவம் துர்விஷயங்களையே பெரும்பாலும் நாடுவதாலும், இவைகளில் பிரியங் கொண்டு, தங்கள் நற்குணங்களைப் போக்கடித்துத், தீக்குணங்களைப் பழகும்படி நேரிடும்.

இந்துதேச சரித்திரத்தில் காண்பதுபோல, சிவாஜி யென்பவன், சிறுபோதில், "இராமாயணம்," "மகா பாரதம்" இவைகளில் உள்ள சண்டைகளைக் கேட்டதினாலல்லவோ, சண்டையில் பிரக்கியாதியடைந்தான். அதுபோல, அடிக்கடி காணுங் கேட்கும் விஷயங்கள் மகா சக்தியுள்ளனவாய், சிறுவர்களுடைய மனதைமாற்றி, அவற்றைச்செய்ய ஆசையை யுண்டாக்கித் தீர்மானப் படுத்தத் தூண்டுமாதலால், பெற்றோர், தங்கள் மக்கள் அவ்வாறு தீமைக்கு உள்ளாகாமல் தடுக்கும்படி பள்ளிக்கூடம் ஆரம்பிக்கக் குறித்த நேரத்திற்கு முன் அனுப்பாமலும், பள்ளிக்கூடம் கலைந்ததும் உடனே நேரே வீடுவந்து சேரவும் கவனிக்க வேண்டும். ஆனால் அடிக்கடி கண்டு வருகிறபடியே காலை 10-மணிக்கு ஆரம்பமாகும் பள்ளிக்கூடத்திற்கு மக்கள் 8-மணிக்கெல்லாம் போகவிடுவதால் இவர்கள், அங்கு அந்நேரத்தில் வந்திருக்கும் துஷ்டப் பிள்ளைகளோடு பழக இடமுண்டு. நல்ல பிள்ளைகள் சாதாரணமாய், அவ்வளவு சீக்கிரத்தில் பள்ளிக்கு வரமாட்டார்கள். அப்படியும், ஒருவர், இருவர் வந்திருந்தபோதிலும், அவர்கள் தங்கள் அறியாமையாலும், பெற்றோரது அசட்டையினாலும், துஷ்டப் பிள்ளைகளோடு கூடிப்பழக ஆசையினாலும் வந்திருக்கலாம் ஆதலால், அவர்களும் கெட்ட பிள்ளைகளாவார்கள் என்பதற்குத் தடையில்லை. இந்தப் பிள்ளைகளுக்குக் கெட்ட குணங்களில் சில மாத்திரம் இருந்து மற்றவையுங் கற்றுக்கொள்ள, இவ்வாறு பள்ளிக்குச் சீக்கிரமாய் வருகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

(13). மக்களைப் பள்ளிக்குக் குறித்த நேரத்திற்குமுன் அனுப்பியதால் வந்த கேடுகள்.—தமது மக்களை யிவ்வாறு குறித்த நேரத்திற்கு முன் அனுப்பாமல் இருக்கத் தவறியதால், அநேக பெற்றோர் தங்கள் மக்களை வீணே யிழந்து விட்டார்கள். அநேக பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தங்களுக்கு உதவாமல் செய்துகொண்டார்கள். பலர் தங்கள் பிள்ளைகளை மட்டிகளாக்கி, வித்தையைக் காணில்வெறுப்பும், விளையாட்டைக் கண்டால் விருப்பும் அவர்களுக்குண்டாக்கி, அவர்கள் தங்கள் காலத்தில் மிகவும் வருந்தியுழைத்து, மிக சொற்ப வருவாயுடன் ஜீவனஞ் செய்யும் கஷ்டதிசையடையச் செய்து விட்டதனால், அவர்களால் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய பல நன்மைகளையுங் கெடுத்துக் கொண்டார்கள். சில பெற்றோர் தங்கள் மக்கள் பள்ளிக்குக் குறித்த காலத்துக்கு நெடு நேரத்திற்குமுன் செல்ல விட்டதனால், அவர்கள் துஷ்டப் பிள்ளைகளோடு கூடிப், பூ, காய், கனி, பறிக்கும்பொருட்டு மரங்களின் மீதேறித், தவறிபோ, கிளைமுறிந்தோ கீழே விழுந்து, கை கால்கள் முறிபட்டும், தலை யுடைபட்டும், மறைவான விடங்களில் அடிபட்டும், பற்பல விடங்களில் காயப்பட்டும், தசை சிதைபட்டும், வேதனை யநுபவித்தார்கள். சிலர் அவற்றினின்றும், சுவர்களினின்றும் தவறி, அருகிலுள்ள கிணற்றிலும், குட்டையிலும் விழுந்து இறந்து போனார்கள். சில பிள்ளைகள், விழுந்த அதிர்ச்சியினால், மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்துத் திரிகின்றார்கள். சில பிள்ளைகள் இதனால் குடல், நரம்பு, இரத்தத்தாதுவை முதலிய அறுந்து மாண்டார்கள். சில பிள்ளைகள், துஷ்ட நேசரோடு சேர்ந்து கிணற்றிலோ, குளத்திலோ, கடலிலோ, விளையாடும் பொருட்டாவது, குளிக்கும் பொருட்டாவது, துணிவெளுக்கும் பொருட்டாவது, மச்சம், நண்டு முதலிய பிடிக்கும் பொருட்டாவது, அவற்றில் இறங்கி, தங்களுடைய சொந்த அஜாக்கிரதையினாலோ, மற்றப் பிள்ளைகளால், விளையாட்டுப் புத்தியினாலாவது, காய்மகாரத்தினாலாவது தள்ளப்பட்டதினாலோ, அந்நேரத்தில் காக்காய் வலி கண்டோ, விழுந்து விருதாவில் தங்கள் உயிரைமாய்த்துக் கொண்டார்கள். சில பிள்ளைகள் துஷ்டப் பிள்ளைகளோடு கூடி, வேடிக்கை, விநோதங்கள் பார்க்கவோ, அல்லது சூது விளையாடவோ, ஒரு

ட்டுபிடித்தல் முதலிய துரப்பியாசங்களைப் பழகவோ, தோட்டங்களுக்குப் போய்க் காய் கனி திருடவோ, பள்ளிக் கூடத்தை விட்டு வெளியிடங்களுக்குப் போய், மனம்போன ஆட்டமெல்லாம் ஆடித், துர்ப்பழக்கங்களை அப்பியசித்துப் பொழுது போக்கிப், பள்ளியில் இருந்து திரும்புவது போல, நேரத்தின்படியே, வீட்டுக்கு வந்து, அடுத்தநாள் உபாத்தியாயருக்கு ஏதாவது சாக்கு போக்கு சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள். இவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திய புலிகளைப்போல், உள்ளே துஷ்டர்களும், வெளியே நல்லவர்களுமாய்க் காணப்படுகிறார்கள். இவர்கள் சூது கொஞ்ச காலம் வரைக்கும் தாய்தந்தையருக்கும், உபாத்தி யாயருக்கும் தெரியாமல் இருந்த போதிலும், "பல நாளைய திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்" என்பது போலும், "மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம் பறையறைந் தாங்கோடிப் பரக்கும்" என்பது போலும், கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளைக்குள் வெளிப்பட்டுப் போகும். அப்போது "அகப்பட்டுக் கொண்டான் தீவிட்டிப்பட்டன்" என்று அவனைப் பிடித்துப் பெற்றாரும் உபாத்தியாயரும் சிரித்து விடுவார்களென்றாலும். அவன் கற்றுக் கொண்ட துர்ப்பழக்கங்கள் அவனை விட்டுத் தொலைவது அருமையாகும். இப்படிப்பட்ட பிள்ளைகளும், திருட்டுப் பிள்ளைகளும் முதன் முதல் கற்றுக் கொள்வது பொய். இந்தப் பொய்யைத் துவக்கத்திலேயே வேரோடறுத்துவிட வேண்டும். சில பிள்ளைகள் ஏற்கனவே பள்ளிக் கூடத்திற்கு வந்துவிடுவதால் அந்நேரத்தில் அங்கு வந்திருக்கும் பிள்ளைகளோடு, கோலி, பம்பரம், முதலிய விளையாடி, அவர்கள் பேசும் அசுசியான கெட்ட வார்த்தைகளை படிக்கடி கேட்டுப் பழகி, அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சற்றேனும் கூச்சநாச்சமின்றிப் பேசக் கற்றுக்கொள்ளுகிறார்கள். தூள் போடுகிறவன், சருட்டு பிடிக்கிறவன், கள் சாராயங் குடிக்கிறவன், கூத்து நாடகம் பார்க்கப் போகிறவன், தாசி வீட்டுக்குப் போகிறவன் ஆகிய இப்பஞ்சபாதகர்கள், உடனிருப்பவனையும் அவ்வாறு செய்ய அழைப்பதும், கட்டாயப் படுத்துவதும் இயற்கையாகையால், அவ்வண்ணமே தூள்போடும் பிள்ளைகளும், சுருட்டு முதலிய பிடிக்கும் பிள்ளைகளும், சூதாடும் பிள்ளைகளும் இவர்களை அழைத்து அதனைச் செய்து பார்க்கக் கட்டாயஞ் செய்து பழக்கப்படுத்தி விடுவதால், இப்பிள்ளைகள் அந்த நினைப்புகொண்டு, பெற்றோருக்கு அநேக சாக்கு போக்குகளைச் சொல்லியும், அவர்கள் கண்ணில் மண்ணைப் போட்டும், தங்கள் துஷ்ட விஷ்டானைத் தேடி, அவர்களுக்கு முன்னதாகவே பள்ளிக்கூடத்திற்குப் போல், அவர்கள் வரவுக்குக் காத்துக் கொண்டிருப்பார்கள். அந்த நேசரைக் கண்டதும், செங்கதிரைக் கண்டு செந்தாமரை மலருவதுபோல, இவர்கள் முகம் மலர்ந்து, அகங் குளிர்ந்து மேற்கூறிய துர்ப்பியாசங்களைப் பழகித், தங்களுக்கு முன்னிருந்த நற்குணங்களெல்லாஞ் சூரையிட்டு, அவற்றிற்குப் பதில் துற்குணங்களைக் கற்றுத் தேறுகிறார்கள். இவர்கள் இந்தப் படிப்பில்தான் நாளுக்குநாள் விருத்தி யாகி வருகிறார்களேயன்றி, இதற்குமுன் கற்றிருந்தவற்றையும் முற்றும் மறந்துவிட்டு, வகுப்பில் பேசுவதும், விளையாடுவதும், விரும்பிக் கற்கும் பிள்ளைகளிடத்தில் குறும்புத்தனஞ் செய்வதும், உபாத்தியாயரை முதலாய்ப் பரிகசித்து, அவருக்குக் கீழ்ப்படியாமலும், கற்பிக்கும் விஷயங்களைக் கவனமாய்க் கேளாமலும் சிரிப்பதும், பேசுவதும், விளையாடுவதும், அடிபடுவதும், சண்டையிடுவதுமாகிய கல்வித்தான் கற்றுக் கொண்டுத் தேறிவருகிறார்கள். பின்னும், கள் முதலிய குடித்து ருசிபார்த்து, வெறியவர்களானால், அப்பழக்கங்களைக் கைவிடத் தீர்மானித்து, ஏழைகள், வயதுசென்றோர், பைத்தியக்காரர், துறவிகள், குருடிகள், பிராணிகள், இவர்களுக்குச் செய்யும் அநியாயமும்

கொடுமையுமான செயல்களும், பரிகாசங்களும் பெண்பிள்ளைகள், ஸ்திரீகள், கிழவிகள் இவர்களிடத்துச் செய்யும் கேலியும் சரச வார்த்தைகளும், சேஷ்டைகளும், அவமானமும், நிந்தையும் அனந்தம். அன்றியும், பள்ளிக்கூடத்துச் சுவர்களிலும், விசேஷமாய்க் கக்கூசுவர்களிலும், உபாத்தியாயரையும், தத்தம் பரிவரையும் தூஷணித்தும், தங்களுக்குள்ள துராசையை வெளியிட்டும், இவர்கள் தீட்டிவைக்கும் அக்கிரமமான படங்களும், எழுதிவைக்கும் உதாசின வார்த்தைகளும், வேறநேக விஷயங்களும், இவ்வள வவ்வளவல்ல. இதனைப் பார்க்கும் நல்ல பிள்ளைகளும் ஒவ்வோர் வேளைகளில் கெட்டுப் போகும்படி நேரிடும். இவைகளையெல்லாம் வாசித்து உணர்ந்த பின்னாவது, பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஒருகாலமும் குறித்த நேரத்திற்கு முன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

(14). மக்கள் பள்ளித் தோழரைப் பெற்றோர் சோதித்து வர வேண்டும் எனல்.—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குச் சாதாரணமாய்ப் பள்ளிக்கூடத்துத் தோழர் தாமுண்டு. அப்பள்ளித் தோழரைத், தமது பிள்ளை, வீட்டுக் கழைத்துவர உபாயஞ் செய்து, அவர்களுடைய குணங்களைத் தாய் தந்தையர் சோதித்தறிந்தும், இதர பிள்ளைகளைக் கேட்டறிந்தும், அவர்களிடத்தில் யாதாமொரு கெட்டகுணம், செய்கை, பழக்கம், வார்த்தை யுண்டானால், அவர்களுடைய சவகாசத்தை விட்டு விடப் பிள்ளைகளுக்கு வேண்டிய வகைகளை யெல்லாம் போதித்து, அவர்களுடைய நேசத்தை யிவன் முற்றுந் தொலைத்து விடப் பெற்றார் தங்களாலான கவலை கொண்டு வருந்த வேண்டும். இதனைத் தமது பிள்ளை மீறி அவர்களுடைய சிநேகத்தைக் காத்து வருகிறான் என்று பெற்றோர் அறிந்தபோது, தமது குமாரனை நன்றாய்த் தண்டித் தடக்க வேண்டும். பெற்றோருக்குப் பயப்படும் பிள்ளைகளைப் பரிகாசஞ் செய்க. தாய் தந்தையரை மீறி நடக்கவும், இஷ்டப்படி திரியவும் துஷ்ட நேசர் அவர்களுக்குப் போதிப்பா ரானதால், பெற்றோர் தமது மகன், அவர்களோடு பேசுவதையுந் தடுக்கப் பிரயாசை படவேண்டியது.

(15). மக்களைப் பள்ளிக்கு அனுப்புவது அவசியம் எனல்.—இது விஷயங்களுக்குப் பயந்து சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பாமல், வீட்டிலேயே, தாங்களாவது, உபாத்தியாயரை வைத்தாவது கல்வி கற்பிப்பார்கள். இதுவும் சரியல்ல ஏனெனில், இதனால் உலகத்தில் சஞ்சாரஞ் செய்ய விருக்கும் மக்கள் உலகம் இன்னது, கல்வியிலும், மற்றத்திறத்திலும், நமக்கும் பிறருக்கும் உள்ள பேதாபேதம் இன்னது என்றறியாதிருக்கிறார்கள். மற்றப் பிள்ளைகளோடு கலந்து படிப்பதனால் அவர்களை வெல்ல வேண்டுமென்ற சிரத்தை கொண்டு படிக்கக் கூடுமாயிருக்கும். இல்லாவிடில், தான் ஒரே வகையாய் நெடு நேரம் படித்து, மெதுவா யெழுதிச் சோம்பனாகிறான். மேலும் உலகம் இன்னதென்று அறியாவிடில் கல்வியினால் மாத்திரம் பயனென்ன? அன்றியும், பள்ளிக் கூடத்திற்குப் போவதினால், உபாத்தியாயர் முதலிய அதிகாரிகட்குக் கீழ்ப்படியவும் குறித்த நேரத்திற் கிரமமாய்ப் பள்ளிக்கூடம் போகும் பழக்கத்தினால் தனது தகுந்த வயதில் உத்தியோகசாலைக்குக் குறித்த நேரத்திலுங் கிரமமாகவும் போகவும், அவ்விடத்திய அதிகாரிகட்குக் கீழ்ப்படியவுங் கற்றுக் கொள்ளுகிறான். மக்கள் கல்வி விஷயத்தைப் பெற்றோர் நாள் முழுதும் கவனிப்பது அசாத்தியமான காரியம். குழந்தைகளைக் கவனிக்கவேண்டிய தாய்மார், மக்களைப் பள்ளிக்கனுப்புவதே நன்மை. இது முதலிய அநேக நன்மைகள் பள்ளிக்கூடம் போவதால் தான் அடையக் கூடுமாயிருக்கின்றன.

(16). பெற்றோர் கவனம்.—ஆதலால், பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டியது தான். ஆனால் சரியாய்ப் பள்ளிக் கூடம் தொடங்கும் நேரத்தில் பிள்ளைகள் அங்கு போய்ச் சேரும்படி தகுந்த நேரத்தில் அனுப்ப வேண்டியது என்றாலும், 5, 10 முந்தி, பிந்தி, யிருந்தாலும் தப்பிதமில்லை. இதனோடு, தமது மக்களது தோழர்களை மாதத்திற்கொரு முறை, அல்லது கூடுமானால், திருமுறை சோதித்துப் பார்த்துப் பிள்ளைகளுக்குக் கட்டு திட்டஞ் செய்ய வேண்டியது பெற்றோர் கடமை. பிள்ளைகள் முதிர்ந்த திசையை யடையும் பரியந்தம், அதாவது 21 பிராய மாகும் பரியந்தம் அல்லது அவர்களுக்குக் கலியாணமாகும் பரியந்தம் பெற்றோர் இவர்களுடைய தோழமை மட்டில் அதிக எச்சரிக்கையா யிருக்க வேண்டியது. அதற்குமேலும், கூடுமானால், அவர்கள் தோழமையின் அதிகாரத்தைத் தாங்கள் கொண்டிருக்கலாம் என்றாலும், அது அவ்வளவு அவசியமல்ல. ஏனெனில், நல்ல தாய் தந்தையரிடத்துப் பிறந்து, இதுவரையில் நல்லொழுக்கத்தில் நடத்தப் பட்டவர்களும், நல்ல நேசகரைக் கொண்டிருந்தவர்களும், இதற்கு மேல் தங்களைத் தாங்களே நடத்திக் கொள்ள சக்தியுடைவர்களா யிருப்பார்கள்.—"பெற்றோர் ஒழுக்கம்.'

FLOODS IN THE CAUVERY.

காவிரியில் பிரவாகம்.

மற்றெவ்வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் காவிரி நதியில் வெள்ளம் அளவுக்கு மிஞ்சிப் பெருகிவிட்டது. மேற்கு மலைத்தொடரில் அந்த நதி உற்பத்தியாகும் ஸ்தானத்தில் மழை சராசரியாய்ப் பொழிந்ததே இம்மாதிரியான வெள்ளப் பெருக்கெடுத்ததற்குக் காரணம் என்று தெரிகிறது. காவிரி நதிக்கரையோரமாயிருந்த பற்பல கிராமங்களில் நீர் நிரம்பியிருந்ததாகவும், சிற்சில விடங்களில் குடிசைகள் அவ்வவ்வாறே மிதந்துகொண்டிருந்தனவெனவும், பின்னும் சில விடங்களில் கொஞ்சம் தேக வலிமை கொண்டவர் மரங்களின் மீது ஏறிக்கொண்டிருந்தார்களென்றும் அங்கங்கே பேசிக்கொண்டிருக்கும் சமாசாரங்களினால் தெரிய வருகிறது. காவிரி நதியில் வெள்ளம் கரைபுரண்டு போனதினாலே பொருட்சேதமானதற்குக் குறைவில்லை. இரண்டோரிடங்களில் உயிர்ச்சேதங்களும் விளைந்தன வென்று தெரிகிறது. கும்பகோணம் தாலுகாவிலிருக்கும் கருப்பூரண்டை உடைப்பு உண்டாகிச் சுமார் 100-குடிசைகள் வரையில் பிரவாகத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டன; பின்னும் பூர்ணப் பிரவாகமாயிருக்கும்போது கும்பகோணத்திலுள்ள பற்பல வீதிகளெல்லாம் தண்ணீர் வரய்க்கால் போல் ஓடிக்கொண்டிருந்ததென்றும் பிறகு வெகு சிரமப்பட்டு அடைக்கவேண்டி வந்ததென்றும் தெரிந்தது. நதிப்பிரவாகத்தில் பரிசல் கீழக்கரையிலிருந்து மேலக் காவிரிக்குப் போய்க்கொண்டிருந்தபோது கரையண்டை பரிசல் கவிழ்ந்ததோர் விபத்தும் கூடச் சேர்ந்ததென்றால் இவ் வருஷத்துப் பிரவாகம் எத்தன்மைய தென்று படிப்போரே யோசித்துக் கொள்ளலாம். மைசூர் சமஸ்தானத்தில் சுமார் எழுநூறு வீதேன் வரை வெள்ளத்தினாற் சேதமாயின. 800 குடும்பங்கள் நிற்க நிழலின்றியும் உண்ணச் சோறின்றியும் குஞ்சு குழந்தைகள் சகிதமாய் வீதிகளிலும் சாலைப்புறங்களிலும் உட்கார்ந்து தலையிற் கை வைத்து 'நாராயணா' வென்று ஓலமிடுந் துக்கத்தைக் கேட்கும் கன்னெஞ்சும் கரையுமென்பது திண்ணம். காவிரி வெள்ளத்தினால் நேர்ந்த சேதத்திற்கு நிவாரணமாய் ஒரு நிதி மைசூரில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு அவரவர்கள் தத்தம்மாலான வரையில் நன்கொடை யளித்து உபகரித்து வருகிறார்கள்: மைசூர் கவர்ன்மெண்டாரே இரண்டாயிரம் ரூபாய் கொடுத்திருப்பதுடன், இன்னும் அந்த சமஸ்தானத்தில் ஜீவகாருண்ய சித்தைகொண்ட ஜீவாத்மாக்கள் அனைவரும் ஸர்வவியாபகனுமிருக்கும் கருணாகரக் கடவுளின் திருவிளையாடலோ வென்னவென்று மதித்துத் தம் பிராதாக்களான ஜனங்கள் கண்கசிந்துருகுவதைப் பார்த்து மனந்தாளாது வெதும்பி உதவி புரிய முன்வந்திருப்பதும் சித்த முத்த சத்தன்ன அவ்வம்பலவாணனது திருக்கூத்தே யன்றி மற்றென்னே! யென்று ஒருவர் சுருக்கமாயெழுதி யிருக்கிறார்.

Full term Copyright secured in page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

"HITCH YOUR WAGON TO A STAR." சத்தியம் வத—SPEAK THE TRUTH. "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன்: அறிவேகக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE.

புத்தகம். 19. 1911வரு செப்டம்பர்மீ, விரோதிகிருதுவரு புரட்டாசிமீ [சஞ்சிகை. 6.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C. M. K. Narayanaswami Iyer, B.A. B.L. Hon. Secy, Vivekachintamani Pub. Committee.

Lalita Publishing Co., Sole Agents and Managers

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி புணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையுமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன [illegible] பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலு மிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய்உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓம்.

ஓம் ஸ்ரீ:

The Resurrection Ode.

ஜீர்ணோத்தாரணமஹாமந்த்ரமாலா

We want men with muscles of iron and nerves of steel to lead the religious life".-The Swami Vivekananda.

"மூலத்துதித்தெழுந்த முக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப்போற்றி வகையறிந்தேன் பூரணமே."

———:(*):———

ஜீர்ணோத்தாரணமாலாமஹாமந்த்ரஸ்ய, தத்தாத்ரேயாவதூதோருஷிஃ அவ்யக்த(அஜப)காயத்ரீச்சந்தஃ ஜீர்ணோத்தாரண ஜகத்ரக்ஷகதேவதா.

க்ரோம் - பீஜம்; ஹ்ரீம்-சக்தி:; க்லீம்-கீலகம்.

ஸ்ரீ ஜீர்ணோத்தாரண ஜகத்ரக்ஷக தேவதாப்பிரஸாத ஸித்தியர்த்தே ஜபேவிநியோகஃ.

கரந்யாஸம்.

க்ரோம்—அங்குஷ்டாப்யாம் நமஃ
ஸௌம்—தர்ஜநீப்யாம் நமஃ
ஹ்ரீம்—மத்தியமாப்யாம் நமஃ
க்லீம்—அநாமிகாப்யாம் நமஃ
ஸ்ரீம்—கநிஷ்டிகாப்யாம் நமஃ
ஸ்ரீயைம்—கரதலகரப்ரஷ்டாப்யாம் நமஃ

ஷடங்கந்யாஸம்.

(முத்திரைகளை குருமுகமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது.)

க்ரோம்—ஸைஷ்கர்மஸித்திதாயஹிருதயாய நமஃ
ஸௌம்—நித்தியானந்தைசுவரியாயசிரஸேஸ்வாஃ
ஹ்ரீம்—ஸர்வாத்மைகசக்தியைகாயைவஷட்.
க்லீம்—மஹாபலாயகவசாயஹும்.
ஸ்ரீம்—ப்ரஹ்மதேஜஸைநேத்ராப்யாம்வௌஷட்.
ஸ்ரீயைம்—அனந்தவீர்யாயஅஸ்த்ராயபட்.

"ஓமாபோஜ்யோதிரஸோமிருதம்ப்ரஹ்மபூர்புவஸ்வரோம்"—இதிதிக்பந்தஃ

ஜயபேரிகாநாதஃ "ஸத்யமேவஜயதேநாந்ருதம்."
ஹம்ஸத்துவஜாரோஹணமிதியுத்ஸ்வாரம்பஃ

ஆத்மஸ்துதி.

ஜகத்ரக்ஷகஜநநீஜயஜய
மஹாத்ரக்ஷகமஹேஷ்மநீஜய
வாக்ரக்ஷகவாணீஜயஜய
ஜீர்ணோத்தாரணவருணீஜயஜய!

த்ரிதசநாமாவளி - தோத்திரம்.

("தியானம் நிர்விஷயம் மநஃ - ஸ்திவாக்")

ஓம் ஸ்ரீ [illegible], மாதவஸோதரீ!
காமேஸ்வரமுகாலோககல்பிதஸ்ரீ
கணேசுவராநந்தவிமலே!
ஸோஹமேவகதியதா!
ஸகலஸம்பத்காரணீ!
ஜீர்ணோத்தாரணவாருணீ!
உசேஷஜநமேஹநீ!
ஆபத்பாந்தவதாரிணீ!
இஷ்டஸித்திப்பிரதாயிநீ!
ஈஷணத்ரியநாசிநி!
உச்யத்பாநுஸஹஸ்ராபா!
ஊர்த்துவரேதஸகாமிநி!
ஹ்ருஷீகேசரூபிணி!
஋ப்தசித்தவிநோதிநி!
ஏகலக்ஷியவிலக்ஷணீ!
ஐம்பீஜாத்மகவிருத்திநீ!
ஓங்காரப்பிரியபூஷணீ!
ஔசித்யாநந்தசாக்ஷிநீ!
அம்பீஜாத்மகலக்ஷியநீ!
ஆஹாரப்பிரியஸ்வரூபிணி!
ஏட்டொன்பதாம்லக்ஷநீ!
ஏகாக்ரசித்தநிவாஸிநி!
மூலமந்த்ர [illegible]!
மூர்த்தாமூர்த்தலக்ஷியநீ!
ஜநநமரணசாக்ஷிநீ!
ஜகத்ரக்ஷகமூர்த்திநீ!
ஜந்மமிருத்யுநாசிநி!
ரக்ஷ ரக்ஷ அம்மணீ!
ஜீவசாக்ஷி ரக்ஷணி.!

நவகவசாத்மக ஏகாதசருத்ரம்.

ரக்ஷ ரக்ஷ மாஹேசுவரீ துவக்குரக்ஷக டாகினீ
ரக்ஷ ரக்ஷ சியாமா ரக்தரக்ஷக ராகினீ
ரக்ஷ ரக்ஷ மாதுவா மாம்ஸரக்ஷக லாகினீ
ரக்ஷ ரக்ஷ காள் யேதோரக்ஷக காகினீ
ரக்ஷ ரக்ஷ கணபதீ அஸ்திரக்ஷக ஸாகினீ
[illegible] விநாயகா மஜ்ஜாரக்ஷக ஹாகினீ
ரக்ஷ ரக்ஷ ஸோமா சுக்லரக்ஷக யாகினீ
ரக்ஷ ரக்ஷ ஹம்ஸா மூர்த்திரக்ஷக மோஹிநீ
ரக்ஷ ரக்ஷ லக்ஷியதா காமரக்ஷக காரணீ
மா-சி-மா!கா-க-வி! ஸோஹம்(ஏவ)லக்ஷியதா.
டாலக ஸஹ ய: மோஹிநீ (ஸகலஸம்பத்)காரணீ!

ஜீர்ணோத்தாரணவாருணீ!* * * * * * * *
* * * * * * * * * * * * * * * *

மூலமந்திரம்.

ஓம் க்ரோம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் வேம் ஸௌம் ஸ்ரீயைநமஃ

(அஜபாகாயத்ரி)

குஹ்யராஜாயவித்மஹே, வித்யாராஜாயதீமஹி, தந்நோ குஹப்பிரசோதயாத்.

"எரியலாலுருவமில்லை ஏறமுலேறலில்லை
கரியலாற்போர்வையில்லை காண்தகுசோதியார்க்குப்
பிரிவிலாத்தேவர்கூடிப் பெருந்தகைப்பிரானென்றேநம்
ஹரியலால்தேவியில்லை ஐயனையாறனார்க்கே!"

—வாகீசர் (அப்பர்.)

——(:-:)——

The Spiritualisation of Science.

A Lecture on Nervous Impulses.

By Dr J. C. Bose C. I. E.

"It lies with me and me aolne to determine, whether the thing that was intended as a blow shall not be to me the highest good"— Dr J. C. Bose.

சாஸ்திரஞானமும் ஆத்மஞானமும்.

"குஹ்யராஜாயவித்மஹே வித்யராஜாய தீமஹி
தந்நோ குஹப்பிரசோதயாத்."

"தானேதனக்குப்பகையும்நட்டானும்" திருமந்திரம்

மேற்றிசைச் சாஸ்திர விற்பந்நர்களால் மேதாவி யென்று கொண்டாடப்பட்ட டாக்டர் ஜகதீச சந்திர போஸ் ஸி. ஐ. இ. அவர்கள் மாயாவதியில் ஸ்தாபகமாயுள்ள அத்வைதாச்ரமத்திற்குச் சின்னாள்முன் மூன்று முறை விஜயமாய் வந்திருந்த பொழுது, ஸ்வாமி விவேகாநந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட அந்த ஆச்ரமத்திலுள்ள ஸந்யாஸிகளான ஸாது ஸங்கத்தாருக்கு "Nervous impulses"—"நாடிவழக்கம்" என்று சொல்லும் நரம்புகளின் வழியாய்ச் செல்லும் ஏவுதல்களைப்பற்றி ஒரு திவ்யமான பிரசங்கம் செய்தார். அதன் சாராம்ஸம் பிரபுத்தபாரதா என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அவர் பிரசங்கிக்கத் தொடங்கவும், "இப்பொழுது நான் இங்கிருந்து நரம்புகளின் வேகத்தைப் பற்றிச் சொல்லப்போகிற சமாசாரம் உங்கள் உள்ளத்தில்பட்டு உற்சாகம் விளைக்க வேண்டுமானால் எனக்கும் உங்களுக்கும் நடுவிலுள்ள இடைவெளியை நிரப்பிக் கொண்டிருக்கும் வஸ்து வொன்றிருக்க வேண்டும். அதுதான் வாயு. அந்த வாயு இல்லாவிட்டால் நான் பிரசங்கிக்கலாம், நீங்களும் கேட்கலாம்; ஆனால் என் வார்த்தையை நீங்கள் கேட்டு உற்சாகப்படுவது கூடாமையாக முடியும். இப்படியாக ஒரு சப்தம் பிறந்தால் அது பயனடைய மூன்று படிகள் இன்றியமையாது பொருந்தி யிருத்தல் வேண்டும். அவையாவன:- சப்தம்உண்டுபண்ணும்கர்த்தாவொன்று; அந்த சப்தத்தை வாங்கிக்கொள்ளும் கருவியொன்று; இவ்விரண்டுக்கும் ஸம்பந்தம் உண்டு பண்ணும் வகையொன்று; ஆக மூன்றுவித அமைதிகள் பொருந்தியிருக்க வேண்டும்." என்றார். (இதையே பேசுவான், பேச்சு, பேசப்பெறுவோன் என்கிற திரிபுடியாகச் சொல்வது) மின்சார முண்டாகும் யந்திரங்களில், மின்சக்தி யுண்டு பண்ணும் அறை, அதை வாங்கிக்கொள்ளுமறை, அவை யிரண்டையும் சேர்த்துவைக்கும் கம்பி அல்லது மூட்டு என மூன்றும் அமைந்திருக்கிறது. தந்தி சமாசாரம் அனுப்பும் யந்திரங்களில் விருத்திசக்தி க்ஷயசக்தி யென இரண்டிருக்கிறது. விருத்திசக்திமின்சாரம் தாக்கும் பொழுது யந்திரத்திலுள்ள முள் வலது பக்கமாகச் சாய்ந் தசைகிறது. க்ஷயசக்தி மின்சாரம் வந்து தாக்கும்பொழுது அதே முள் இடது பக்கமாகச் சாய்ந் தசைகிறது.

இப்படியே நமது தேஹத்திலும் மூளையிலிருந்து வெள்ளிய கொடிபோன்ற நரம்புகள் ஏராளமாய்த் தேஹத்தின் எல்லாப் புறங்களுக்கும் செல்லுகின்றன. உலகத்தில் நடக்கும் எல்லாச் சம்பவங்களும் இந்த நரம்புகளின் வெளிப்புறங்களில் தாக்க, அங்கிருந்து அவை நரம்புகளின் வழியே வேகாகாரமாய் மூளைக்கும்

அதன் வழியாய் மனதுக்கும் போகிறது: போனவை பின்னும் திரும்பி எதிர்வேகமாக வருகிறது.

இதில் வெளிப்புரத்திலிருந்து உள்நோக்கிச் செல்லும் வேகத்துக்கு "Stimulus" தூண்டுதல் என்றும், அங்கிருந்து திரும்பி வருகிற வேகத்துக்கு "எதிர்வலி" "response" என்றும் பேர். இதனால் அந்தர்முகமாகச் செல்லும் நாடிவழக்கத்தால் உண்டாகும் வேகமெல்லாம் தூண்டுதலினால் உற்சாகத்தையும் (மனக்கிளர்ச்சியையும்) உள்ளிருந்து பஹிர்முகப்பிரவேசமாகிவரும் நாடிவழக்கத்தால் உண்டாகும் வேகமெல்லாம் எதிர்வலியால் சோர்வையும் (மனச்சோர்வையும்) உண்டுபண்ணுவதாயிருக்கிறது என்பது புலப்படும்.

இதையே ஆழஅமர்ந்து ஊன்றிப்பார்த்தால் சங்கல்பங்களெல்லாம் உற்சாகத்தையும் செயல்களெல்லாம் சோர்வையும் உண்டுபண்ணும். மனிதனில் மட்டுமில்லை. செடி கொடிகளிலும் இது உண்மையே! தொட்டாற்சுருங்கி யென்னும் செடியில் அதை நாம் தொடுவதால் உண்டாகிற தூண்டுதலின் உற்சாகம் அதனுள்ளிருந்து திரும்பிவரும் வேகத்தால் எதிர்வலிச் சோர்வுரூபமாக மாறி இலைகள் சுருங்கிக்கொள்வதைப் பார்க்கலாம்.

சுகதுக்கம் என்பதும் இன்பதுன்பம் என்பதும் இந்த நரம்புகளின் வேகத்தாலுண்டாகும் ஒரு காரியமே யன்றி வேறல்ல. ஆனால் இந்த நரம்புகள் இச்சாசக்திக்குட்பட்டவையாயிருக்கின்றன. மெதுவாக முதுகில் சொறிந்தால் அல்லது தட்டினால் அது 'குரு குரு' வென்று சுகத்தைக் கொடுக்கிறது. ஆனால் பலமாகப் பராண்டினால் அல்லது புடைத்தால் அது எரிச்சலாகி வலி வருத்தத்தைக் கொடுக்கிறது. இதனால் வருத்தமும் சந்தோஷமும் நாடி நரம்புகளிலுமில்லை: அவற்றைத் தூண்டும் வெளிவிஷயங்களிலுமில்லை. ஆனால் அந்த நரம்புகளை அடக்கியாளும் சக்தியாகிய இச்சாசக்தியில் இருக்கிறது. பராண்டினாலும் அடித்தாலும் அதைச் சுகமாக வெடுத்துக்கொள்ளும் சக்தி அந்த இச்சாசக்திக்கு இருக்கிறது. ஆகையால் சுகதுக்கங்களுக்குக் காரணம் நம்முள் இருக்கிறதேயன்றி நமக்கு வெளியிலில்லை. இந்த "நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கில் ஐம்பதி லொன்றும் அரன்" நரம்பின் வேகம் ஒரு போது (உற்சாகம் விளைக்கும்போது) சவ்வியமாகவும் (வலபுறமாகவும்) மற்றொருபோது (சோர்வுண்டாகும்போது), அபசவ்யமாகவும் (இடப்புறமாகவும்) சுழன்று வருகிறது நன்றாகத் தெரியும். இதையே அஹம், புறம் என்றும், வலசாரி, இடசாரி அல்லது சவ்யாபசவ்யமென்றும் சொல்வதுண்டு. இப்படி வலமிடமாக மாறியோடும் வேக சக்தியை உள்முகமாயிருந்துணர்ந்தறிந்தால் அதுவே இடைபிங்கலையாகப் பிரியும். டாக்டர் போல் கடைசியாக பிரசங்கத்தைமுடிக்கும்பொழுது "நமக்கு நேருவதெதுவாயினும் சரி, அதற்குத் தானாய் நம்மைப் பாதிக்கும் சக்தி யில்லை. ஆனால் நமக்கு நேருவதை நாம் உபயோகிக்கும் வகை யெதுவோ அதுதான் நம்மைப் பாதிக்கவல்லது" என்று சொல்லி முடித்தார். "தானே தனக்குப் பகையும் நட்டானும்" என்கிற திருமந்திரோப தேசத்தின் லக்ஷியமும் இதுவே. "It is not what happens to us, but what we make of it, that is the crucial factor in our lives" என்று சொன்னார் டாக்டர் ஜகதீச சந்திரபோஸ் அவர்கள். இப்படியாக சாஸ்திராராய்ச்சிசெய்து அதனால் அறியு முண்மைகளை அஹமுகப்படுத்திப் பார்த்தால் எல்லாம் அறிவு மயமாகவும் ஆனந்தமயமாகவுமிருக்கும்: இப்படி அறிவானந்த சுந்தரராயிருப்பவர் தான் சுப்ரஹ்மண்யர். அவர் எல்லாவற்றையும் அறிவானந்த மாக்கும் இரகஸிய மூர்த்தியாதலால் அவருக்கு குஹன் என்றபேர். "குஹ்யோத்பவ குஹஃ"—இரகஸியத்தி லுதித்தவன்

குஹன். இரகஸியங்களில் எல்லாம் மேலானதாய் "ராஜ குஹ்யம்" என்றும் "குஹ்யராஜா" வென்றும் சொல்லத் தக்கதா யிருப்பது பிரஹ்ம ரகஸியம். சாஸ்திரங்களெல்லாவற்றிலும் மேலானதாய் "ராஜ்வித்யா" என்றும் "வித்யராஜா" என்றும் சொல்லத் தக்கது "ஸ்ரீவித்யை" யென்றுசொல்லும் ஆத்மஞானம். ஆகையால் நாம் ரகஸியங்களிலெல்லாம் மேலான பரமரகஸ்யமாகிய (பிரஹ்ம ஸ்வரூபத்தை) யறிந்து வித்தைகளிலெல்லாம் மேலான ஸ்ரீவித்யை யென்று சொல்லும் சிதாகாயகமனமாகிய [illegible] இலடயறு திருப்பதாம் ஆத்மாவுக்கான வித்யையை "நிர்விஷயமான மனத்தோடு" தியானம் செய்துவந்தால், பரஹ்மாத்மைக்கிய ஸ்வரூபமான அறிவானந்த மூர்த்தியாம் குஹன் நம்முடைய மனசு புத்தியிந்திரியங்களை யெல்லாம் ஆத்மஞானத்தால் பிரகாசிக்கச் செய்வார். இதையே அஜபாகாயத்ரியாகக் கொண்டு நித்யானுசந்தானம் செய்கிறவர்களுக்கு இகபர மிரண்டிலும் யாதொரு குறைவுமில்லை யென்பது நிச்சயம். "குஹ்ய ராஜாய வித்மஹே, வித்யராஜாய தீமஹி, தந்நோ குஹப்பிரசோதயாத்" என்ற காயத்ரி மந்திரத்துக் கருத்தும் இதுவே. இதை அஜபமாக, அதாவது வாக்பாதீத வாக்கியமாகக் கொண்டு நிர்விஷயமான தேஜோ மனசினால் ஆந்தரத்தியானம் செய்யவேண்டும் என்பது கருத்து. டாக்டர் ஜகதீச சந்திர போஸவர்கள் செய்த சாஸ்திரப் பிரசங்கத்தைக் கேட்டவரில் ஒருவர் "How wonderfully Science can be spirtualized!" என்று சொன்னது உண்மையே! பஹிர்முகவிருத்தியினாற் பயின்ற சாஸ்திர ஞானங்களெல்லாம் அஹமுக விருத்தியால் ஆத்மஞானமாக மாறும்.

"பார்வை யிரண்டுண்டு: பஹிர்-அஹ முகமென்பர்;
பார்வை பஹிர்முகம்பார்த்த அலகாராய்ந்தால்;
பார்வையஹமுகம் உள்ளுணர்வையோர்ந்துணரில்;
பார்வை யிரண்டுமொன்றுவ துணரார் பரிதவித்துழல்
வாரே!"

——(:-:)——

Short Story.

The Silent Teaching of a Siddha.

ஸ்ரீ மாணிக்கஸ்வாமிகள் மௌனப்பிரசங்கம்.

"நசாபோற்றி யென்னிறைவா போற்றி!
மாசிலாமணியே மாகதவொளியே போற்றி!
ஏசிலாமொழியாலிரந்தார்க்கருள்நேசாபோற்றி!
ஆசிகர்! அண்ணலே வாசியென்றுன்தான்
[பற்றினேன்போற்றி!"

ஜூலை மாசம் 21உ சனிக்கிழமையன்று நான் வியவகாரார்த்தமாய் வெளியில் புறப்பட்டுப் போனேன். கெட்டலைந்து [illegible] சுவையில் முடிக்காத தோஷமாய்த் திரும்பி வந்து "தருமூலம்" தருவித்துக்கொடுக்க இசைந்த ஒரு நண்பரை யடைந்தேன். அவருடன் சென்று தசமூலங்களையும் ஆராய்ந்து அவற்றின் பேர் விவரங்களைக் குறித்துக்கொண்டு அவருடன்கூடவே திருவல்லிக்கேணியில் ஒரு நாடியைப்பார்க்கப் புறப்பட்டோம். உத்தேசித்துவந்த நண்பர் வீட்டிலில்லை. விசாரித்ததில் வெளியே போயிருக்கிறதாகச் சொன்னார்கள்.

வெளியேறின புருஷனை எங்கேயென்று தேடிப்பிடிக்கிறது! "விக்நேசுவரா!" என்று ஆடியலைந்த மனமோய்ந் துட்காரக் காலயர்ந்து போய்க் கட்டையையும் கீழேகிடத்தினேன். அப்பொழுது மோதகம் (கொழுக்கட்டை) செய்யும் யந்திரம் ஒன்று நூதனமாய்ப் புறப்பட்டிருப்பதைக் கொணர்ந்து காட்ட, அதன் விசித்திரத்தை யாராய்ந்து அதிர்சயப் பட்டுக்கொண்டிருந்தோம்.

'மூடுபல்லாங்குழி' (பன்னன்குகுழி) போல் செம்மரத்தால் முன்பின் இருபுறமாகவும் மூடும்படியான கட்டோட்டு முடுக்கின இரண்டு செம்மரத்துண்டுகள் இரண்டு நீளத்தில், நிகளமான கொழுக்கட்டைப் பிரமாணமுள்ள [illegible] குழித்த குழிகள் எட்டு வெட்டப்பட்டதாயிருந்தது. அம்மரத் துண்டுகளைப் பல்லங்குழி

போல் திறந்து வைத்து 6-அங்குல நிகளமுள்ள தேன்குழல்பிடி போலுள்ள வேறொரு மா அச்சில், வேகவைத்த மாவைப்போட்டு மேல் மூடியால் அமுக்கினால், அதில் போடப்பட்ட மாவு துணிபோல் மெல்லிதாக 6-அங்குல அகலம் இரண்டடி நிகளத்துக்கு அப்பல்லாங் குழியில் விரிந்து விழச் செய்கிறது. இந்த மாத்துணியைப் பள்ளத்தில் அமுக்கி, அதில் ஒவ்வொன்றிலும் "பூரணத்தை" வைத்துச் சட்டங்களை மூடினால், கொழுக்கட்டைமாவு பூரணத்தை மூடிக்கொண்டு விளும்புகளில் ஒட்டிக்கொள்ள [illegible] அதிகப்படி மாவெல்லாம் [illegible] சட்டத்தின் ஓரத்திலுள்ள உலோகத்தாலான ஒரு [illegible]டத்தால் நேர்த்தியாக வெட்டப்பட்டுக் கீழே விழுந்து விடுகிறது. இப்படியாக ஒரு கொழுக்கட்டை செய்கிற நேரத்தில் எட்டுக் கொழுக்கட்டை நேர்த்தியாகவும் அழகாகவும் செய்து விடலாம். இந்த அற்புதத்தைப் பார்த்து அதிர்சயித்துக் கொண்டிருந்து "தொப்பைக் கணபதி காப்பு" என்று உள்ளத்தே சிந்தித்து "அப்பா! அவர் போன விடம் தெரியாதா?" வென்று கேட்க, "கணபதி ஐயர்" வீட்டுக்குப் போயிருக்கிறாரென்று பையன் சொன்னான். விக்கிரகவரரை உள்ளத்தில் ஊன்ற நினைத்து மானஸீகமாகவேனும் மோதகம் செய்திட்டால், அவர் அதை ஏற்றுக்கொண்டு விக்நங்களை நீக்காமலிராரென்பது ஸத்யமென்று கண்டுகொண்டேன்.

மூலக்கணபதிக்கு மோதகமளித்த மனத்தோடு தானே "கணபதி ஐயர்" வீட்டுக்குப்போக, அங்கே யொரு பிரஹ்மசாரி ஆத்மானுசந்தான சித்தராய் வீற்றிருக்கக் கண்டேன். வல்லபையைத் தொழுதிருந்து அவரிடம் வாக்குத்தொடுக்க நினைத்தேன்.

"சொல்வதற்கென்ன விருக்கிறது! ஒன்றுமில்லை!" யென்றார்.

"ஒன்றுமில்லாததைத் தான் ஊமைவார்த்தையால் சொல்லுமே கேட்போம்!" என்று நினைத்து உசாவினேன்,

செத்தபிணம் நித்தம் சுடுகாடு போவதை திருஷ்டாந்தமாகக் காட்டி "இந்தத் தேஹம் எப்படியும் அழிந்து போகிறது தானே!" யென்றார்.

"ஆம் அதில் சந்தேகமென்ன!" என்றேன். "அதில் சந்தேகமில்லாதபோது தேஹத்தைத் தள்ளிப் பார்த்தால், மிஞ்சினதெதுவோ அது தான் ஸத்யம்! 'அதுதான் நாம்!' என்றிருப்பதே ஸத்துக்களுக் கழகு" என்று சொன்னார்.

தேஹத்தைத் தள்ளிப் பார்க்கிற விதம் தான் சற்று விளங்கச்சொல்ல வேண்டுமென்று கேட்டேன்.

தேஹம் தான் பொய்யென்று நிச்சயமாய் விட்டதே! யென்றார்.

நிச்சயிக்கும் வழியைப் பற்றித்தான் கேள்வி! யென்றேன்.

"நாலுபேர் தூக்கிக்கொண்டு போக ஐந்தாமொருவன் சட்டியில் நெருப்புக்கொண்டு போகிறானே!—பார்த்தால் தெரியவில்லையா?" என்றார். (பஞ்ச சாக்ஷியைச் சுட்டினபடி.)

"அந்த நெருப்புச் சட்டியை (சிதக்னிகுண்டத்தை)த் தூக்கும் விதம் தான் சற்றுத் தெளியச் சொல்லவேண்டும்." (மூலக்கனலை யெழுப்பி யாறுதாரங்களையும் கடந்துபோய் ஸ்மசானம் என்கிற சுஷும்னா வெளியில் வினையுடம்பைச் சுட்டு நீறாக்கும் சாதன வழியைக் கேட்டபடி யென்றுணர்க.)

தேஹம் பொய்யென்று நிச்சயமாகக் கண்டால் '(தேஹோஹம்' என்கிற பாவனை யறவிட்டொழிந்ததானால்) மற்றது பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறதே! —யென்றார்.

மூலக்கனலை யெழுப்பி ஊத்தைச் சலடத்தைச் சுட்டு நாற்றமெல்லாம் போக நீறாகச் செய்து, காற்றுப்படாத சிமிழில்வைத்துக் கனகதண்டியில் எடுத்துக்கொண்டு போய், கங்காஜலத்தில்கரைக்கும் கர்மத்தின் மர்மத்தை விளக்கிச் சொல்லக் கேட்டேன்.

"பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லாதே" யென்கிற பழமொழி வசனத்தை வழிப்பட்டவராய் அந்த ப்ரஹ்மசாரி உள்ளதைச் சொல்லியும் கள்ளவழி காட்டச் சம்மதியாமல் தயங்கினார்.

வெகு நேரம் மன்றாடியும் அவர் அந்தரங்கமான சாதன வழியைப் பஹிரங்கமாகச் சொல்லவாவதென்று சண்டித்தனம் [illegible] கண்டு "ஸ்வாமி அந்தரங்கமாக உங்களுக் கிஷ்டமானபடி சொல்லும்!" என்று கேட்டேன்.

கேட்ட கேள்விக்கு சரியானபதில் சொல்லாமல் வாயில் வார்த்தை யிருக்க விதண்டாவாதம் பேசுவதாகச் சொன்னபடியினால், அவர் குரு மேல் ஆணையிட்டு "கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும்! இனி நான் வாய் திறப்பதில்லை!" யென்று கை கட்டி வாய்பொத்திச் செத்தும் சாகாத பிணமாய், அவர் உடலையே குறியாகக் கொண்டு அவர் குருவைச் சிந்தித்து மௌனஞ் சாதிக்க, ஸித்திபெற்ற மஹானாகிய அவர் மாணிக்க வொளிதிகழ நீங்காத பச்சைநிறத்தனராய் மந்திர தந்திர யந்திரங்களுக் கெல்லாம் மூல காரணமான ஓங்காரத்தைப் பற்றியுசாவலானார். பிரம்மசாரிப் பிள்ளையாண்டான் "குருவாணை" யென்று சொன்னதினால், "குருவருளினால் நான் கடைத்தேறின தொன்றன்றி வேறறியேன்' என்று உண்மையைச் சொன்னார். "அந்த குருவருளைத்தான் நானும் வினவுகிறேன்" என்று பதிலுரைத்து இராத்திரி 11 மணிக்கு விடை பெற்று, அர்த்தசாம நேரத்தில் ஸ்மசான வழியாகத்தானே "ஜட்காவண்டி" யென்கிற நிமிஷவாஹனமாம் காலசக்ரத்தில் ஏறிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

இரவில் ஸ்ரீ மாணிக்க ஸ்வாமி அவர்கள் தரிசனங்கிடைத்தது! அவர் கோரக்க மூலிகை (கஞ்சா)ப்பிரியரென்று சொன்னதால், போதசித்தரென்றும், அவரது கஞ்சாக்குடிநெருப்பில் செம்பு விழுந்தால் ஸ்வர்ணமாய் மாறிவிடு மென்றதால் அவர் போதாந்தத்துக் கப்பாலுள்ள நாதாந்தஸித்தி பெற்றவரென்றும், "மாணிக்க ஸ்வாமிகள்" என்ற தீக்ஷாநாமத்தால், பிராண ஸித்தியோடு பிரணவ முக்தியும் பெற்ற ஸித்த முக்தர் என்றும் வெட்ட வெளியில் விளங்கலாயிற்று.

"குருவாணை" யென்று சொல்லி ஐந்து மொடுங்க வொடுக்கி "சாத்திரங்களோதும் சதிர்களை [illegible] மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்" [illegible] உபதேசப்படி அம்பரவாசலில் அஹம் ஸ்தம்பித்து [illegible]னால், "ஏசிலாமொழியால் இரந்தார்க்கருள்நேச" னாகிய "மாசிலாமணி" தானே மாணிக்கவொளியாத்தோன்றி, தன்னொளிவீச மின்னொளி மறையப் "பரைவாக்கால்" மௌனப்பிரசங்கம் செய்து அஷ்டாங்கயோகமுற்றும், நவகுண்டநாயகியாம் குண்டலினியோகமும், தசமத்தில்பூரணமாம், சவிகல்ப நிர்விகல்பநிலை கடந்த நித்ய முக்த நிராலம்ப நிஜபதமாம் சகஜானுபவநிலையையும் ஓதாமலோதி யுணர்த்தி உண்மை விளங்க விளக்கிக் கண்ணிமைப்பொழுதில் காணாமல் மறைந்தார்.

சிவஞான சித்தியார் இலக்கண விளக்க பரம்பரை ஸ்ரீ சிதம்பரநாத தேசிகரது உரையில் சொல்லப் பட்டிருக்கிறதாகப் பின்வரும் செய்யுளை யொருவர் "ஆறுதாரமும் குண்டலினியும்" என்னும் தலைப்பின் கீழ் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்:

"சகமார்க்கம் புலனெடுக்கித் (1) தடுத்தவளி யிரண்டுஞ்
சலிப்பற்று (2) முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்(3)தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி(4) யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வமுத[ண்டு]டல (5) முட்டத் தேக்கி (6)
முழுச்சோதி நினைந்திருத்தன் (7) முதலாக விசைக
ளுக(8)மார்க்க வட்டாங்க யோக முற்றும் (9)
உழத்தலுழந் தவர்சிவன்ற(10) னிருவத்தைப்பெறுவர்."

[இங்கே சகமார்க்கமென்றது எத்துணையு மெக்காலத்தும் கடவுளை விட்டிணைபிரியாதிருத்த

லாம் தோழமார்க்கமென்று சொல்லும் யோகாரூட மார்க்கத்தைச் சொன்னதாம். சமயாசாரியர் நால்வரில் "தம்பிரான் தோழர்" எனப் பேர்பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் அனுசரித்துக்காட்டிய மார்க்கமிதுவே யாம். கடவுளை விட்டிணைபிரியாதிருத்தலாவது: தைலதாரை போல் இடையறாத்தியான விசேஷத்தால் தியேயாகாரமாகி "அங்கலிங்க சங்கம்" உபக்கிரமப்படி எவ்வவஸ்தையிலும் எத்திசை[illegible] வுளும் நானும் [illegible] என்கிற ஐக்கிய [illegible]லகலையாதிருந்து, "நிஜமாக ஸ்தூல சூக்ஷமத்தில் தோன்றி நிஷ்களத்தில் நீயும் நானுமொன்றேயாகி, அறிவில்லா ஆனந்தமயமேயாகி அருள் வெளியாய் வரமருள்வாய் அகண்டரூபி" என்கிற வாக்கியாதீத வாச்சியத்திற் கிலக்ஷியமாய், எல்லாக் கிருத்தியங்களிலும் கடவுளையன்றி வேறு ஒன்றையும் காணாத லீலாத்மக லளிதாலக்ஷியசித்தராயிருத்தல். இப்படியிருத்தல் எப்படி சாத்தியமெனில், 1-முதல் 8 வரையில் குறிப்பிட்ட அஷ்டாங்கமாகவுள்ள புலனொடுக்கல் முதல் சமாதிநிலை முதிர்ச்சியில் வினைகளுகல் ஈறாகவுள்ள யோகபாதங்கள் முற்றும் அபின்னசக்தியாம் (9) நவாக்ஷரிவரையில் "உழைத்தலுழந்தவர்"—பழகிப் பழகித் தேர்ந்த பழக்கமும் நழுவச் சகஜநிலை பெற்றவர் தசமத்தில் சிவயோகியாய் சிவனது ஸ்வஸ்வரூபமான பிரஹ்மாத்மைக்கியஸ்வரூபத்தைப்பெறுவர். அப்பேறுபெற்றார்க்குச் சகமார்க்கம் "தசமத்தில்" (10-ம் பாதத்தில்) சகஜமாகவே சித்திக்கு மென்றபடி.]

இதை யாதாரமாகக் கொண்டு மாணிக்க சித்தர் செய்த மௌனப்பிரலங்கத்தின் கருத்துரையாவது:—

இங்கே சகமார்க்க மென்றது சமயாச்சாரியர் நால்வரில் சுந்தரமூர்த்தி நாயனார் பற்றியொழுகிய யோகாரூட சித்தி - முத்திமார்க்கத்தைச் சொன்னதன்றி வேறல்ல. இது எல்லா மார்க்கத்திலும் சாதிக்க மிகக் கஷ்டசாத்தியமானதாமென்று கொள்க. இத்தகையார் கேவல முக்தியை மட்டும் பெரிதாகக் கருதாது கேவலமுக்தியில் சகலசித்தியும்கூட, ஜகத்தோடு ஒட்டியு மொட்டாமலிருத்தலே சகஜநிலைக்கொத்ததா மென்று அந்த நிஜபதமாம் நித்தமுக்தசித்திபெறப் பெரும்பாடு பட்டுழைப்பர்.

சகமார்க்க மென்பது கடவுளைவிட்டிணை[illegible]திருத்தலாம் வித்தர்மார்க்கம். "சித்தன் போக்கு சிவன்போக்கு; அத்தன் போக்கு அதே போக்கு." இந்தமார்க்கத்தை யனுசரிப்போர்,—

முதலாவது, "புலனொடுக்கம்" சித்திக்கப் பழகவேண்டும். ஆமை தன் அவயவங்களை யுள்ளே யிழுத்துக்கொள்ளும் தன்மைபோல் அதிசாமான்யமாக இந்திரியங்களை யுள்ளேயிழுத்துக்கொண்டு கேவலசித்த மாத்திரமாய் நிற்கப் பழகல்வேண்டும். இதற்கு அகமுக அப்பியாசம் முதிர்ந்து பஹிர்முகப்பட்ட விடத்தும் அஹமுகப்பழக்கம் கலையாது நிற்கும் சக்தி சித்திக்கவேண்டும்.

இரண்டாவது, "கேவலகும்பகம்" சித்திக்கப் பழகல் வேண்டும். அதாவது, ரேசகபூரகமாய்ச் சலிக்கும் வாயுவினோட்டத்தை (சலனத்தை)த் தடுத்துக் கும்பித்து உள்ளும் புறம்பும் பிராணசக்தி நிறைந்திருத்தலாகிய பிராணாயாம சித்தி பெறல்வேண்டும். சமுத்திரத்தில் மூழ்கப்பெற்ற குடமானது உள்ளும் புறமும் ஜலத்தால் நிறைந்திருப்பதுபோல், பிராணவாயுவின் சலனத்தைத் தடுத்தலால் அது நிச்சலனமாய்ப் பிராணசக்தி மயமாகி அந்தக்கரணத்தின் உள்ளும் புறமும் நிறைய நிறப்பிக்கொண்டிருக்கும். இப்படி யுள்ளும் புறமும் பிராணசக்தியால் நிறைந்து வியாபிக்கப் பெற்றுள்ள மனோகாசத்திலேயே ஆறு ஆதாரங்களும் 51-அக்ஷரங்களுமிருக்கின்றன.

மூன்றாவது, முன்சொன்ன "கேவலகும்பகம்" சித்திக்கப் பெற்ற நிலையிலேயே "முச்சதுரமுதல் ஆதாரங்கள் அகமார்க்க மறிந்து" உணர்தல் வேண்டும். அதோமுகமாயுள்ள முக்கோணவடிவான மூலாதாரம் முதல் ஊர்த்துவ முகமாயுள்ள முக்கோணவடிவான ஆஜ்ஞாசக்கரம் வரையிலுள்ள ஆறாதாரங்களையும் அவற்றில் பத்மதளங்கள்போலமர்ந்திருக்கும் 51-அக்ஷரங்களின் வர்ணமான சக்திகளையும் "அகமார்க்க"மாக (உண்முகமாய் உள்ளபடி) அறிந்துணரலாகும். இப்படி ஆறாதாரங்களின் "அகமார்க்கமறிந்து" உணர்ந்தபின்,—

நான்காவது, "அவற்றின் அரும்பொருள்களுணர்ந்து அங்கு அணைந்துபோய் மேலேறும்" சக்தி வாய்க்கவேண்டும். ஆதாரதேவதைகளின் உண்மையறிந்து அவற்றோடு ஐக்கிய பத்தியமாயிருந்து அவற்றின் ஸ்வரூப லக்ஷணங்களை யறிந்தாலன்றி அவை அப்பியாஸகனை "மேலேற" விடா. பாராக்காரனை யறிந்து அவனுள்ளமுணர அவன் நம்மை யறியும்படி அவனுக்குமட்டும் ரகஸியமாய்த் தெரிந்துள்ள, (Watchword) பாராவிடுவார்த்தை (வழிவிடுவார்த்தை) யென்னவுண்டோ, அதையுணர்ந்து அவன் "யாரங்கே?" என்றுகேட்கும் கேள்விக்குச் சரியான பதில் அளித்தாலன்றி அவன் வழிவிடானல்லவா? அஃதேபோல ஆதாரதேவதைகளின் பாராக்காரர்களுக்கு உள்ளபடி தக்க ஜவாபுசொல்லி, அவர்கள் பாராக்கடந்து ஆதாரதேவதைகளைக் கண்டு அவர்களுக்கும் "அங்கலிங்கசங்கம்" ஞானத்தால் சரியான விடைகொடுத்தால் அந்த ஆதாரதேவதைகளான ஆவரணசக்திகள் "உரியடி உற்சவத்தில் †வழுக்குமரம் ஏறுகிறவனைப்போலொத்தயோகி" தங்கள் கட்டைக்கடந்து "மேலேறிப்போக" வழி விடுவார்கள். இப்படியாக "அவற்றின் அரும்பொருள்களுணர்ந்தங்கு அணைந்துபோய் மேலேறி" யவன்,—

ஐந்தாவது, படியாக "அலர்மதிமண்டலத்தின் முகமார்க்க"மாய் ஒழுகும் "அமுது" உண்டு, மேலேறின களைதீர விளைப்பாறுகிறான். இது தான் உரியடி யுற்சவத்தில் வழுக்குமரத்தின் "மேலேறினவன்" முக்கோணவடிவாகக் கட்டியலங்கரிக்கப்பட்டிருக்கிற மண்டலத்தில் ஸ்திரமாயுட்கார்ந்துகொண்டு பக்ஷண பக்ஷியங்களைப் (அமுது)புசித்துக்களைதீர்ந்து உளந்தேறினபின் கீழேயிருக்கும் ஜனங்களாகிய பசுக்கூட்டங்களுக்கெல்லாம் "கொக்கு"க்காட்டுகிறதின் உட்கருத்து.

ஆறாவது படியென்ன வென்றால் மேலேறினதீரனான க்ஷேத்திரஜ்ஞன் க்ஷேத்திரபாலனம் செய்யவேண்டி அந்த சந்திரமண்டலத்திலிருந்து ஒழுகும் அமுதகலையானது "உடல முட்டத்தேக்க" நிறைக்கிறான். அதாவது குண்டலினியின் வேகத்தாலும் தான் கட்டறுத்துக்கொண்டேறிய காரணத்தாலும், தான் குடியிருந்த க்ஷேத்திரமாகிய "உடலம்" "எல்லாரும் பட்டகளம்" ஆகின படியால், "பொல்லாங்கு தீர்க்கும் பொறியிலியைக் கண்ட" அவன்,

"மனக்காணமத்தனையும் வகைவகையேமட்டழிய
இனக்காணத்தோடே யெரிந்துவிழக்கண்டேன்'டி"

என்றபடி "நீற்காப்புலன்களைந்தும் நீறாகவெந்ததுகண்டு" அவைகளையும் "அடுக்கழிபவெந்த" ஆத்மதத்துவங்களையும் "போற்றும் வகை" தேடி, த்தானுண்ட அமிர்தகலைகளாம் "அமுது உடலம் முட்டத்தேக்கி" க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞவிபாக யோகத்தால் "போதமிழந்தானை"ப் போற்றும் வகையறிந்துபோற்றிப் பின்னர்,—

ஏழாவது படியில் "முழுச்சோதி நினைந்திருத்தல்" எனும் பூர்ணப்ரஜ்ஞ சமாதி பழகி, அந்த ஸம்பரஜ்ஞாத சமாதியில் தேறினபின், அது "முதலாகவுள்ள வினைகள் உக" வேண்டி,—

எட்டாவது படியில் சமாதி காரியங்கள் பிரயத்தனங்கள் தானும் "தூங்கினவன்கைமலர் நழுவுமாறுபோல்" நழுவி விழுந்துபோகும்படி அஸம்பரஜ்ஞாத சமாதியெனும் நிர்விகல்ப, நிர்த்துவந்துவ சமாதி பழகி நிருபாதிகநிலையாம் நிலையில்லாநிலையில் நிலைத்திருக்க "அஷ்டாங்க யோக முற்றும் உழத்தல் உழந்தவர்"—அதாவது, "புலனொடுக்கம்" முதலாக "ஒழுலி

† ஓங்காரக்கம்பம்.

லோகேக்க"மாம் நிர்விகல்ப சமாதி வரையில் எட்டுப் படிகளாகவுள்ள யோகசாதன முற்றும் வருந்தி யுழைத்துச் சாதனைபற்றிச் சாதித்தவர்கள்,—

ஒன்பதாவது படியில் சிவராஜயோக ஸித்தர்களாய் விளங்கி "குண்டலினியோக" மெனும் சிவயோக ஸாம்ராஜ்யமனுபவித்து" அதையும் விட்டு,—

பத்தாவது படியில் "சிவன் தன் உருவத்தைப் பெறுவர்"—சிவ ஸ்வரூப சாயுஜ்ய சாக்ஷாத்கார நிலைபெற்று அந்த ஆரூடநிலையில் சமாதி கலையாது சகஜாநந்தத்தையனுபவித்துக் கொண்டு சிவாத்வைத சித்தி - முத்தி பெற்று விளங்குவர். இவர்கள் தான் உண்மையான சிவயோகிகள். மற்றவர்களெல்லாம் அப்பியாச யோகிகளே! சிவவாக்கியர் சொல்கிறபடி,—

"வடிவுபத்ம வாசனத்திருத்தி மூலவனலையே
மாருதத்தினாலெழுப்பி வாசலேந்து நாலையும்
முடிவுமுத்திரைப் படுத்தி மூலவீணைதண்டினால்
முளரியாலயங்கடந்து மூல நாடியூடுபோய்,—

"அடிதுவக்கிமுடியளவுமாறுமாநிலங்கடந்து,
அப்புறத்தில் வெளிகடந்த ஆதியெங்கள்சோதியை
யுடுபதிக்கண் அமுதருந்தி உண்மைஞானஉருகையுள்
உச்சிபட்டிறப்குகின்ற யோகெல்ல யோகியே!"

மந்திர, தந்திர, யந்திரங்களெல்லாம் சாதனமாத்திரம் உபயோகமே யன்றி வேறல்ல; சாத்தியமான பின் அவையெல்லாம் தன்னில் ஒடுங்கிவிடும். "மந்திரங்களாவது" † "மதித்தெழுந்த வாயுவை" சித்தவிருத்தி நிரோதனத்தால் கட்டி விழுங்கி விடுவதே! சிவவாக்கியர் சொல்கிறபடி "மந்திரத்தை யுண்டவர்க்கு மரணமேது மில்லையே!"

"மந்திரங்கள் கற்றநீர் மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்கள் கற்றநீர் மரித்தபோது சொல்லிரோ!
மந்திரங்களும்முளே மதித்த நீருமும்முளே
மந்திரங்களாவது மனத்தினைக் தெழுத்துமே"

† cf. "மந்திரங்களுண்டு நீர்மயங்குகின்றமானிடர்
மந்திரங்களாவது மறத்தினுறலன்றுகாண்
மந்திரங்களாவது மதித்தெழுந்தவாயுவை(ம்)
மந்திரத்தையுண்டவர்க்கு மரணமேதுமில்லையே."

Also Compare: "மனமொருவழிப்பட்டது மந்திரம்."

"உள்ளதோ பிறப்பதோ வுயிரொடுங்கிநின்றிடம்'
மெள்ளவந்து விட்டிடீர் விரைவவேண்டுமென்கிறீர்!
உள்ளதும் பிறப்பதுமொத்தபோதுநாதமாங்
கள்ளவாசலைத்திறந்துகாணவேண்டுமாந்தரே!"

"சிவாய வென்னுமக்ஷரம் சிவனிருக்குமக்ஷரம்
உபாயமென்று நம்பினோர்க்கு உண்மையானவக்ஷரம்
கபாடமிட்ட வாசலைக்கடந்துபோகும் வாயுவை
உபாயமிட்டழைக்குமே சிவாயவைந்தெழுத்துமே."

K. S. S. A.

Easy Lessons in Economics.

Lesson VI.

குடிவாழ்க்கை.

VI. பாடம்.

3. வேலையின் பயன் மாறுபடுதல்.

வேலையின் பயன் மாறுபடுவதற்கு முந்திய பாடங்களில் கூறியதைத் தவிர வேறு காரணங்களுமுண்டு. சில விடங்களில் தொழில்களைச் செய்யும் ஒரு தொழிற்சாலை கட்டினால் அது பல வருஷங்களுக்கு நின்று வேலைக்கு உதவி செய்யும். இங்கிலாந்து தேசங்களில் அதிக சீதள பருவம் நீடித்து நிற்பதால் கட்டடங்கள் வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமடையும். ஆப்பிரிக்கா போன்ற அதிக உஷ்ணமான பாகங்களில் அதிக உஷ்ணபருவம் நீடித்து நிற்பதால் அங்கும் கட்டடங்கள் நீடித்திரா. இத்தேசத்திலேயே கடற்கரை யோரத்தில் கட்டப் படுகிற கட்டங்களின் சுவர் ஸ்வல்பகாலத்தில் உப்பின் வேகத்தால் அலர்ந்து உதிர்ந்து போகின்றன. சில ஜில்லாக்களின் நதிகளில் வருஷந்தோறும் கரைபுரண்டு வெள்ளம் போவதால் வேலையின் பயனைக் கெடுத்து விடுகின்றன. அணைகளை யுடைத்தும் ஏரிகள் மதகுகளைத் தவிர்த்தும் பயிரை நஷ்டப்படுத்தி வேலையின் பயனைக் கெடுக்கும் காரணங்கள் தஞ்சையில் வருஷந்தோறும் நேருகின்றன. மரக்கலங்களும் பெருங்கட்டடங்களும் வாசஸ்தலங்களும்

மரங்களும், தொழிற் சாலைகளும் பெருங்காற்றினால் நாசப்படுத்தப் படுகின்றன. சிலதேசங்களில் வெகு காலம் வேலை செய்து பலனுக்குக் கொண்டுவந்த தோட்டங்களும், வெகு திரவியம் செலவிட்டு கட்டுவித்த கட்டடங்களும் தோண்டப்பட்ட சுரங்கங்களும் அடிக்கடி நேரும் பூகம்பத்தினால் பாழாக்கப் படுகின்றன. இத்தேசத்திலேயே சில விடங்களில் பயிரிட்டு பலன் கைக்கு வரும் வேளையில், காட்டுப்பன்றி, எலி, வெட்டுக்கிளி போன்ற ஜீவன்களால் பயிரழிக்கப்பட்டு நஷ்ட முண்டாகின்றன. இவ்வித காரணங்களினால் தேசத்திற்கு தேசம் வேலையின் பயன் மாறுகின்றது.

தவிர சில விடங்களில் நூதனமான தொழில் பெருகுவதினால் பயனேறியும், பழய தொழில் நசிப்பதினால் பயன் குன்றியும் போவதுண்டு. கிருஷ்ணா நதிக்கரையில் பயனின்றிக் கிடந்த நிலங்கள் இப்பொழுது சாகுபடிக்கு வந்து வருகின்றன. [illegible] வில்லாவில் விசேஷமாக பூஸாரம் குறைந்து போனபடியால் மிகப் பிரயாசையின்றி முன்போல் நிலம் விளைவதில்லை. பவானி நதிக்குத் தலைமடையிலிருந்த 'உணயக்கன் கோட்டையணை' என்ற கட்டடம் ஆற்று வெள்ளத்தால் தகர்ந்து போக அது மறுபடியும் கட்டப் படாததால் அப்பாகத்தில் சாகுபடியாய்க் கொண்டுவந்த பூமிகள் காடாகவே, பயன் குன்றிவிட்டது. பாதைகளும் இருப்புப் பாதைகளும், அணைக் கட்டுகளும், கால்வாய்களும், ஏரிகளும், பாலங்களும் இக்காலத்தில் [illegible] முண்டாயிருக்கின்றபடியால் முந்நாளில் சாகுபடிக்கு யோக்கியமற்றதென்று நீக்கப்பட்டிருந்த பல விடங்கள் இப்பொழுது சாகுபடிக்குத் தகுந்தவைகளாய் மாறிவிட்டபடியால் பயன் அதிகரிக்கின்றன. முந்நாளில் பத்துபேர் சேர்ந்து செய்த வேலையை இப்பொழுது ஒரே மனிதன் யந்திரத்தினால் செய்கிறபடியால் பயனதிகரிக்கின்றது. துஷ்ட மிருகங்களால் இப்பொழுது நமக்கு அவ்வளவு தீங்கு நேருவதில்லை.

பல வருஷங்களுக்கு முன் புத்திமான்கள் மிகப் பிரயாசைப்பட்டு செல்வ விர்த்திக்காகும் உதவிகளை வேண்டிய அளவு அறிந்திருந்தார்கள். அவைகளைப் பிற்காலத்திய ஜனங்கள் மறந்து விட்டார்கள். நம் முன்னோர்கள் இயற்கைப் பொருள்களை நம்முடைய சுக சௌக்கியத்திற்குதவும்படி அறிந்திருந்த வகைகளை நாம் வெகுவாக மறந்துவிட்டோ மென்றே எண்ண வேண்டும். மகமதியர்கள் இத்தேசத்தை யாள வந்த பொழுது உண்டான சங்கடங்களினால் கல்வி குறைந்து ஜனங்களறிவீனர்களாய்த் தங்கள்கைக்கு வந்திருந்த பலவித சாதகங்களை இழந்து விட்டனர். முன்னோர்கள் எழுதி வைத்திருக்கிற புஸ்தகங்களிலுள்ள பதங்களுக்கு சரியான அர்த்தமின்னதென்று அறியவும் அசக்தர்களா யிருக்கிறார்கள்.

கணிதம், வைத்தியம், சிற்பம் முதலியவைகளில் நம்முடைய தேசத்தில் முந்நாளில் செய்து முடித்திருக்கும் அபூர்வ விநோதங்களை நாம் இப்பொழுதும் பார்க்கின்றோம். தலைவலியை நீக்கக் கபாலத்தையகற்றி வியாதிக்குக் காரணத்தைக் கண்டு அகற்றியவர்களு மிருந்தார்கள். பலாப் பழத்தின் முட்களைக் கணக்கிட்டு உள்ளிருக்கும் சுளை இவ்வளவென்று கூறியவர்களு மிருந்திருக்கின்றனர். அப்பேர்க்கொத்த செய்கையைச் செய்து முடிக்கும் திறமையை நாம் நிலை நிறுத்திக்கொள்ள சக்தியற்றவர்களானோம். நம்முடைய நாட்டு வைத்தியர்கள் சாஸ்திர மென்பதையே அறியார்கள். அவர்களிற் பலர் வேறுதொழில் இல்லாமை கண்டு வைத்தியத் தொழிலைக் கைக்கொண்டு திரிகின்றனர். பிணியை யறிய சாஸ்திரப் பயிற்சியும் பழக்கமும் அவசியமென்பதை யுணராமலும், தேகக் கூறுகளை அற்பமேனும் தெரியாமலும் ஏமனிடத்தில் மானிடரை எளி

தில் அனுப்பி விடுகின்றனர். முன் காலத்தில் கட்டப்பட்ட கோபுரங்களென்ன, மண்டபங்களென்ன, கல்லணைகளென்ன, இவைகளை யவர்கள் எவ்வித மியற்றினார்களென்று ப்ரமிக்கும்படியாக விருக்கின்றது. இவ்விதமாக செல்வ விர்த்திக்கு வேண்டிய சாதகங்களை மறந்து செல்வக்குறைவை யடையும் தேசத்தாருமுண்டு. ஒரு தேசத்துச்செல்வம் குன்றுவதற்கு வேறு காரணங்களுமில்லாற் போகவில்லை. ஜனங்கள் விரைவில் எண்ணிக்கையில் பெருகுவாராயின் தேசத்தில் சிறுவர்களும் வயோதிகர்களும் அதிகப்பட்டு வேலைசெய்யத் திறமையுள்ளவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கிடைப்பது அரிதாகி அவர்களுடைய தேகவலிமை குன்றலாம். குழந்தைகளைச் சரிவர போஷிக்காவிடினும், ஜனங்களுக்கு பரிசுத்தமான காற்றும் தண்ணீரும் கிடைப்பது கஷ்டமாயினும், அநாகரீக வழக்கங்களினாலும், மிகுந்த குடியினாலும், அடிக்கடி கொள்ளை வியாதிகளும், பஞ்சங்களும் நேரிடுவதினாலும், ஜனங்களின் தேகவலிமை குன்றி வேலையின் பயன் குன்றும். மேற் சொன்ன கஷ்டங்களில்லாத தேசங்களில் செல்வம் விர்த்தியடையத் தடையென்ன?

T. C. வேங்கடரமணய்யர்.

The New Civil Marriage Bill.

Reasoning Round in a Vicious Circle.

நவ நாகரிகப் புது விவாகம்.

பீஜாங்குர நியாய விசார தோரணை.

வித்திலிருந்து மரம் உண்டாகிறதென்று எல்லாருக்கும் தெரியும். அப்படியே மரத்திலிருந்து பழமும் பழத்தினுள் விதையும் தானே யுண்டாகிறதென்று கண்ணுள்ளோர் எல்லாரும் கண்டிருக்கலாகாள். இவ்விரண்டையும் அறிந்த ஒரு வித்வானுக்கு மரத்துக்கு வித்துக்காரணமா? வித்துக்கு மரம் காரணமா? என்கிற ஒரு பெரிய சந்தேகம் பிறந்து விட்டது. அதைத் தீர்த்துக்கொள்ள வேணமட்டும் பரீக்ஷைகள் செய்து பார்த்தான். இவன் கேட்ட கேள்விகளுக்குத் தான் பதில் கிடைக்கவில்லை! இந்த அவஸ்தையில் அவன் யோசித்து யோசித்து அவனுக்கு மூளையுருகிப் போய்விட்டது. அப்பொழுது அவன் அயர்ந்து நித்திரை போனான். அயர்ந்து நித்திரை போகவும் உருகின மூளை மறுபடியும் தெளிந்து குளிர்ந்தது. அப்பொழுது அவன் தேஹத்திலுள்ள எழுபத்தி யீராயிரம் நாடி நரம்புகள் வழியாகவும் அமிருத ரஸம்ஊறி ஒன்றோடொன்று சேர கண்களைப் பிரவாகமாகப்பெருகித் தண்ணலைமோத வெண்ணிலவெறிக்க தேஹமாத்யந்தம் வீரியக்கொழுவூறி உன்முகமாய்ப் படர்ந்தது. இந்த ஊர்த்துவரேதஸானது கண்ட ஸ்தானத்தைக் கடக்குங்கால் வாயுமண்டலத்தில் அக்னியாதித்ய மண்டலங்களிரண்டின் ஒளிதாக்கப்பளீர் என்று ஒரு ஓசையும் மின்னலும் உண்டாயிற்று.

அது அயர்ந்த நித்திரை யிலிருந்த புருஷனுக்கு யாரோ ஒரு தேஜோ மயமான புண்யபுருஷன் தோன்றி பளீர்என்று கன்னத்தில் அடித்ததுபோல் இருந்தது. அந்த அறை கன்னத்தில் பளீர் என்று விழவும் தூங்கின புருஷன் தேஹஸ்மரணை [illegible] திறக்கப் பார்த்தான். அங்கே புண்ய புருஷனும் ஸதயஸ்வரூபமாயும் பரபிரஹ்ம மூர்த்தியாயும் கறுப்பும் மஞ்சளும் கலந்த நீலமேக வர்ண மேனி சோபிக்க அவனது வீரியம் மேல் நோக்கிச் சென்றதனால் விரக்த வீரியனும், ஞானக்கண் விளங்கிய விரூபாக்ஷனும் எல்லாம் தானாய்நிற்கும் விசுவரூபியைக் கண்டு அச்சமும் அன்பும் நிறைந்தவனாய் 'நமோ நமஃ' என்று பல காலும் விழுந்து நமஸ்கரித்துத் துதித்தான்.

ருதம் ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்
ஊர்த்துவரேதம் விரூபாக்ஷம் விசுவரூபாயவை
நமோ விசுவரூபாயவை நமோநமஇதி!"

[இந்த ஸ்தோத்திரத்தில் அருத்தத்தை முந்தியே சொல்லி விட்டோமாகையால் மறுபடியும் சொல்லத் தேவையில்லை.]

இப்படி விசுவரூப தரிசனங்கண்டு விசுவரூபியாகிய பகவானையே சரணடைந்தவனாய் [illegible] பளீரென்று அறை அவன் கன்னத்தில் விழுந்தது. கைகளிரண்டும் தானாகக் கன்னத்தை தடவி கொடுக்க அந்த வலி பொறுக்காமல் வித்வான் தேஹஸ்மரணையோடு விழித்துக் கொண்டு பார்த்தான்

எதிரே நின்ற புருஷனைக் காணோம். பீஜாங்குரநியாய விசாரம் தனக்குத்தானே யவனுக்கு ஸ்மரணையிலுதித்தது. இப்பொழுது வித்தையும் மூளையையும் கொண்டு பரீக்ஷைசெய்ய வேண்டுமென்கிற புத்திமயம் தோன்றவில்லை: அதற்கு பதிலாக தேஹேந்திரியங்களுக்கெட்டாததாய்ப் புலனறிவுக்குத் தோன்றாததாய் உள்ளறிவுக் குண்மையாயுள்ள சக்தி யொன்றிருக்கிறது என்று கண்டுகொண்டான். பீஜாங்குர நியாயவிசாரத்தின் முடிவு என்ன ஐயா? வென்று கேட்டால், பீஜத்துக்கும் (வித்துக்கும்) அங்குரத்துக்கும் (மூளைக்கும்) காரணமாய் அவைகளைத் தத்தம் வழியில் பிரவிருத்திக்கச் செய்யும் சக்தி யொன்றிருக்கிறது" என்று பதில் சொல்கிறார். அதற்கு ருஜு வெங்கே யென்றால் தன் கன்னத்தைத் தடவிக்கொண்டு "அது இருக்கிறது நிஜம்! நான் அறைபட்டதுபோல் நீயும் அறைபட்டால் தெரியவரும்! வீண் குதர்க்க வாதங்கள் செய்வதில் பயனென்ன?" என்று ஒரே தீர்மானமாய்ப் பதில் சொல்லிவிடுகிறார். இவரிடத்தில் பீஜாங்குர நியாய விசாரம் கற்றுக்கொள்வதெப்படி? அவரைப்போல் பட்டனுபவித்தால் தானே அந்த அனுபவம் சித்திக்கும். வீணான வாக்கு வாதம் செய்வதினால் பயனென்ன? ஒன்றுமில்லை!

"பட்டால்தான் தெரியும் பார்ப்பானுக்கு!" விவாகலக்ஷியம் விளங்காத சிலரோடு வீணான வாக்குவாதம் செய்வதில் பயனில்லை. இப்பொழுது கிளம்பியிருக்கும் "நவ நாகரிக நாதர்களான" சிலர் ஹிந்துக்களுள் நவீனமான விவாகமொன்று ஏற்படுத்தக் கருதி, பழமையான வேத ஸம்ஸ்காரார்த்தமான விவாஹத்தை விட்டுப் புதிதாய் செய்யப்படும் ஒரு சட்ட நிர்மாணப்படி, ஹிந்து மதத்தைவிட்டு விலகாமல் தானே ஜாதி வர்ணாசிரம தர்மக்கட்டுகளொன்றையும் கருதாமல் தானே யார்யாரை வேண்டுமானாலும் விவாகம்செய்து கொள்ளலாம் என்றும் அப்படி விவாஹம்செய்து கொள்கிறவர்கள் பின்னால் அந்த விவாஹத்தைக் கோர்ட்டுகளில் அதற்கான "டைவோர்ஸ் ஆக்ட்" என்கிற சட்டப்படி ரத்து செய்து கொள்ளலாமென்றும் சட்டம் செய்யக்கருதி அதற்காக இராஜப்பிரதிநிதி யவர்களுடைய சட்டநிருபண சபையில் ஒரு மசோதா ஆலோசனைக்குக் கொண்டு வந்திருக்கிறார். கவர்ன்மெண்டார் அதை ஆலோசனைக்குக் கொண்டுவர அனுமதி கொடுத்தும் வேத ஸம்ஸ்காரமான மத சம்பந்தப்பட்ட இவ்விஷயத்தில் அந்நிய கவர்ன்மெண்டான நாங்கள் புகுந்து சட்டம் செய்வது கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியர்கள் தாமே இந்த நவீன நாகரிக விவாகத்துக்குச் சம்மதப்பட்டவர்களா யிருக்கிறார்களென்று ருஜுவாக்கட்ட வேண்டி அங்கங்கே யுள்ள லாயர்களும் சீர்திருத்தக் காரர்களும் "பொதுக் கூட்டம்" கூடி ஜனங்கள் இதை யாதரிப்பதாக ஆரவாரம் செய்து வீண் ஆர்ப்பாட்டப்படுத்தி வருகிறார்கள். பத்திரிகைகள் பலவும் இந்த வாயால் வல்லவர்கள் வசத்திலிருப்பதால் இப்படிப்பட்ட நூதன விவாகம் வேத ஸம்ஸ்காரமான ஸப்தபதி விவாகத்துக்கு விருத்தமானதென்று சொல்லி விவாகலக்ஷியத்தைச் சீர்குலைக்கலாகாதென்று எழுதியதற்காக அப்படியெழுதியவரைக் கண்டித்து சண்டப்ரசண்டமாய் பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறார்கள். பம்பாயில் ஸர் பாலசந்திரகிருஷ்ணர் அவர்கள் முதலான பிராமணர் சேர்ந்து பொதுக் கூட்டங்கூடி இந்த மசோதா சட்டமாகக் கூடாதென்று ஆக்ஷேபித்துத் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். சென்னையிலும் ஒருகூட்டம் ஆகஸ்டுமீ 26உ கூடப்போகிறதாக விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள்.

"வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்னும் வழக்குரையை யனுசரித்து வரும் இவ்விராஜதானியில் வாயால் வல்லவர்கள் தம் கக்ஷியே பலமெனப்பேசி பஹிராடம்பரங்கள் செய்து வருகிறார்கள். இந்த ஆடம்பரங்கள் பலிக்காதபடி விவாகம் ஆத்ம ஸம்ஸ்காரம் என்று கருதுகிறவர்கள் தம் அபிப்பிராயத்தையும் ஆக்ஷேபனையையும் சர்க்கார் தெரியத் தெரியப்படுத்த வேண்டும்.

பிரம்மசமாஜிகள் தங்களுக்காக வென்று ஒரு விவாக சட்டம் கேட்டபொழுது 1872-ம் வருஷம் இந்தியாவிலுள்ள மதங்களில் எதிலும் சேராத அவர்களுக்காக வென்று 1872-ம் வருஷத்தில் ஒரு "பிரத்யேக விவாக சட்டம்" செய்தார்கள். இப்பொழுது ஹிந்து மதத்திலிருந்து கொண்டே ஜாதி மத வித்யாஸங்களைப் பாராமல் எந்தஜாதி எந்த மதஸ்தனானாலும் வேறு எந்தஜாதி எந்த மதஸ்தரானாலும் தனக்கு இஷ்டமான ஒருபெண்ணை தம் ஜாதிமதம் இன்னதென்று வெளியிடாமல் தானே பத்திரம் ரிஜிஸ்தர் செய்வதுபோல் விவாகத்தை ரிஜிஸ்தர் செய்துவிட்டால் அது சட்டப்படி விவாகமாக பாவிக்கப்படு

மென்கிறார். இதச் சட்டப்படி பிராமணனுக்கூட வேறு எந்த ஜாதியிலும் கலியாணம் செய்துகொள்ளலாம். புத்திகெட்ட ஒரு விப்ரன் அழகு பறைச்சியை ஆலிங்கனம் செய்யவிரும்பில் ரிஜிஸ்திராரிடம் போய் இரண்டு சாக்ஷிகளுடன் கையெழுத்துப் போட்டு வந்து விட்டால் அவளை பஹிரங்கமாய் தன் மனைவியென்று எங்கும் அழைத்துச் செல்லலாம். இதில் விபரீதமொன்றும் இல்லை யென்று வைத்துக் கொண்டாலும் ஆத்ம ஸம்ஸ்காரம் அல்லாத விவாஹம் அங்கீகரிக்கத் தக்கதாயில்லை. ஏனெனில் விவாக லக்ஷியத்திற்குக் குறைவு வருவதாலென்க!

———(:-o-:)———

LALITAMBAL.

IV. "Brahma's tie"—Settling a match.

லளிதாம்பாள் சரித்திரம்.

IV.

வதூவரர் நிச்சயம்.

"பிரம்மமுடிச்சு."

——:-:——

பிரஹ்மஸ்ரீ வாமதேவசாஸ்திரிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் பாகதியடைந்தது முதல் மனத்தாங்கல் அதிகமாக ஏற்பட்டது. ஸம்ஸார பாரம் அவருக்கு இப்பொழுது தான் தலையில் உறைத்தது. இதுவரையில் எல்லாம் மாமனார் பார்த்துக்கொள்வார் என்கிற தைரியம் அவருக்கு உள்ளுக்குள் மிகவுண்டு. வெளியில் கிரஹஸ்தாச்ரமதர்ம்மத்துக்குக் குறைவு வராமல் தன் குடித்தனப் பொறுப்பைத் தான் பார்த்துக் கொள்கிறவர்போல் நடந்து வந்தாலும், உண்மையில் இவருடைய குடித்தனப் பொறுப்பை யெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயர் தானே வகித்துவந்தார். இப்பொழுது வாமதேவ சாஸ்திரியார் தான் நிராதாரமாய் நிற்கக்கண்டார். சிறு வயதிலேயிருந்து குடித்தனத்திலடிபட்டவர்களுக்கு குடித்தனப்பொறுப்பைத் தாங்குவது நாளடைவில் சகஜமாகப் போய்விடும். "குடித்தனமோ துரைத்தனமோ!" என்கிற பழமொழிப்படி, ஒரு குடித்தனத்தைத் தாங்கி அதை முன்னுக்குக் கொண்டு வரும் பொறுப்பானது உண்மையில் ஒரு ராஜாங்கத்தை நடத்தும் துரைத்தனப்பொறுப்புக்குச் சமானமானதா யிருக்கிறது. ஒரு துரைத்தனத்தை நடத்துவதற்கு வேண்டிய சமயோசித சாமர்த்தியமும் பாரதூர யோசனையும் வேண்டும் ஒரு குடித்தனத்தைச் சரிவர நடத்துவதற்கு. அதில் உண்டாகும் கவலைகளும் விசாரங்களும் மெத்தவுண்டு. இவைகளை யெல்லாம் அனுபவ ஞானத்தாலும் நல்ல பழக்க வழக்கங்களால் திடப்பட்ட மனத்தினாலும் சில்லரைத் தொந்திரவுகளைப் பொறுத்துச் சமாளிக்கும் சாமர்த்தியத்தினாலும் தாங்கி நிர்வகித்தால் நிர்வகிக்கலாமே யன்றி மற்றப்படி நிர்வகித்தல் மிகவும் கஷ்ட சாத்தியமாம். வாமதேவசாஸ்திரிகளுக்கு இந்த சாமர்த்தியமொன்றுமில்லை யென்று நாம் சொல்லத் தேவையில்லை. ஆகையால், அவர் மாமனார் காலகதியாகவும் குடும்பவிசாரம் தலைக்கேறினவராய் "மனக்கவலை பலக்குறைச்சல்" என்றபடி கவலை மேற்கொண்டு பலக் குறைவுற்றிருந்தார்.

இந்த சமாசாரம் தஞ்சாவூரில் வாழ்ந்து கொண்டிருந்த பார்வதியம்மாளுக்கு எட்டியது. "செல்லப்பெண் வாலாம்பாள்" மன உத்ஸாகம் குறைந்து தன் பிதா போனது முதல் ஏக்கம் பிடித்துப்போனாள். ஒவ்வொரு சமயம் அவளுக்கு துக்கம் பொறுக்கமுடியாத பொழுது வாலாம்பாள் பலாக்கணம் பாடி அப்பாவுக்கு அழுது கொண்டிருப்பள்.

"மடியிற்கிளிவளர்த்துதரையில்விட்டுப்பார்த்தாப்போல்
சிறுடனேவளர்த்தென்னைச் சிரிப்பாணி சண்டாபே!"

என்று தெய்வத்தை சொந்துகொண்டு அப்பாவை நினைத்து நினைத்து விம்மி அழுவள். இவள் என்ன அழுதாலும் மாண்டவர் வந்து இவளைத் தேற்றவில்லை. ஏனெனில் வாலாம்பாள் சுபாவமாகவே கோழைமனதுடையவள். பார்வதியைப்போன்ற மனோதைரியமும்

திடமும் இவளுக்கில்லை: உண்மையான பக்தி சிரத்தையும் இன்னம் உதிக்கவில்லை. அப்பா போனது முதல் தன்னைச் செல்வமாய் நடத்த யாருமில்லாமையால், தானிருந்த இருப்பையும் இப்பொழுதிருக்கும் கதியையும் நினைத்து துக்கித்தாள். அவள் அப்பாவை நினைத்துக்கொண்டு அழுதாலும், தன்னுடைய செல்வம் சீர் இவைகளுக்குக் காரணமாயிருந்த அவர் போய் விட்டதால் தனக்குக் குறை நேர்ந்ததென்னு துக்கம் மேற்கொண்டு அது தாங்க மாட்டாமல் அழுதாளேயன்றி, உள்ளன்பு காரணமாக அப்பாவின் பிரிவாற்றாமல் அழுதவளில்லை. ஆகையால் தான் அவளுக்குக் கேறுதல் ஒன்றும் தோன்றவில்லை. அழுதழுது உடம்பு துரும்பாகப் போய்விட்டது. வாமதேவ சாஸ்திரிகளுக்கு குடித்தனத்தை வகிக்கும் சாமர்த்தியம் போதாதென்கிற எண்ணத்தோடு அவருக்கு [illegible] கியங்குன்றிவருகிற விசாரமும் அவளை ஒரு பக்கம் பாதித்தது. அவருக்கு மனதிலுண்டான சோகம்முற்றி அது தேஹத்தில் சோகை வியாதியாகத்தென்பட்டது. இந்த சமாசாரமெல்லாம் தாயார் ருக்மணியம்மாள் சொல்லியனுப்பப் பார்வதிக்குத் தெரியவந்தது. பார்வதி புருஷனை தண்டநாதையர் கரூரில் முனிசீபாயிருந்தாரென்று சொன்னோம். அவர் அதற்குமுன் தென்தஞ்சைக்கோர்ட்டில் பெரிய சிரஸ்தாராயிருந்தார். அவருக்குத் தஞ்சாவூரில் வீடு மனை வாசலெல்லாம் உண்டு. பார்வதியம்மாள் கோலை ராஜாவுக்குத் தன் புருஷனோடு கூட தஞ்சைக்கு வந்திருந்தாள். வந்திருந்த சமயத்தில் தன் தங்கையின் குடும்ப சமாசாரங்களைக் கேள்விப்பட்டு வருத்தப்பட்டாள். அப்பொழுது அவளுக்குத் தன் தகப்பனாருடைய அத்தியாவஸ்தையில் நடந்தவைகளெல்லாம் ஞாபகத்துக்குவர, என்னதான் புத்திசாலியும் திடநெஞ்சுடையவளுமாயினும், தகப்பனாருடைய ஞாபகம்வர அவளுக்கு நெஞ்சருகிப்போய்விட்டது. உட்கார்ந்து கொண்டிருந்தவள் உட்கார்ந்தபடியே மூர்ச்சித்துப் போய்விட்டாள். மூர்ச்சை தெளிந்துங்கூட அவள் வாய்விட்டொன்றும் சொல்லாவிட்டாலும்; கண்ணால் தாரை தாரையாக கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள். அவள் மூர்ச்சித்திருந்தபொழுது அவளுடைய தகப்பனார் தன்னைக் கூப்பிட்டுத் தன்மாரில் வைத்திருந்த குழந்தையைத் தூக்கி யவளிடம் கொடுத்து "பார்வதி! குழந்தைபத்திரம்! பத்திரம்!" என்று பத்திர புஷ்பம் சமர்ப்பிப்பதுபோல் அக்குழந்தையைத் தன்னிடம்ஒப்புவித்த அவர் குரல் அவளுக்கு நிஜமாகவே காதில் நன்றாகக் கேட்டது. அப்பா குரல் கேட்டதும் அவள் மூர்ச்சை தெளிந்து அப்பாவைப் பார்க்கலாமென்று விழித்துக் கொண்டாள். அப்பாவின் திருவுருவைக்காணாமல் அவருடையகண்டத்வனிமாத்திரம் நாதாகாரமாய் அவளது உட்செவியில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கக்கேட்டாள். இதையெல்லாம் நினைக்கவும் அவளுக்குத் தன்னால் கண்ணீர் சொரியத் தொடங்கியது. தான் துக்கப் படுவது தன் புருடனுக்குத் தெரியக்கூடாதென்று அதை யடக்கிப்பார்த்தாள். முடியவில்லை! தாளமுடியாத காரியத்துக்குத் தெய்வமே துணையென்று தெய்வத்தின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுக் கண்ணீர் ஆறாகப் பெறுகத் தான் பொறுப்பதுமைபோல் உட்கார்ந்திருந்தாள். கூடவிருந்த பெண்பிள்ளைகள் ஒன்றும் ஆறுதல்சொல்ல நாவெழாமல், 'எஜமானி' யென்கிற மரியாதையினால் எட்டியிருந்து மிகவும் அனுதாபப்பட்டார்கள். கடைசியில் அந்தவீட்டில் வெகுநாளாய் வேலைபார்த்துக் கொண்டிருந்து எல்லாராலும் விசேஷமாய் மதிக்கப்பெற்ற "அம்மாமி" யென்கிற பட்டப்பேரும் பெற்ற பெரியகிழவி கிட்டநெருங்கி, "அம்மா! பார்வதி! இப்படித்தான அழுவாளா அம்மா! ஐயோ! முந்தாணியெல்லாம் நனைந்து போய்விட்டதே! வெள்ளம் கரைகடந்தால் யார் யாரை விழுங்குமோ! இப்படி அழுகலாமா

அம்மா!" என்று மிக்கபரிவோடு அவள் முந்தாணியில் விழுந்திருந்த கண்ணீரைத் துடைத்து அம்முந்தாணியினாலேயே அவள் கண்களையும் துடைத்தான். 'அம்மாமி! என்னையறியாமல் இன்றைக்கு துக்கம் கரைகடந்த வெள்ளமாய்த் தானே வந்துவிட்டது! அடக்கிப்பார்த்தேன்! முடியவில்லை! நான் என்னசெய்வேன்!" என்று சொல்லி ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள். பார்வதி கண்களைத் துடைத்துக் கொண்டு துக்கத்தினால் அடைபட்டிருந்த நெஞ்சைத் திருத்திக்கொள்ளவேண்டி மெதுவாய் கனைத்துக்கொண்டிருக்கையிலேயே, "அம்மாமிப்பாட்டி" "ஆம்! அம்மா! அடக்கமுடியாத துக்கம் வந்துவிட்டால் ஆர்தான் என்னசெய்யலாம்! நீ புத்திசாலியானதால் வாய்திறவாமல், வீட்டில் புருஷாள் காதில் படாமல் அமைதியாய் உன் துக்கத்தை வெளியிட்டாய்! உன்தங்கை வாலாம்பாள் நினைத்து நினைத்து அப்பாவுக்கு பிலாக்கணம் பாடி யழுகிறாள்! உடம்பு தூரும்பாகப் போய்விட்டதென்று உன்தாயார் ருக்மணியம்மாள் அவளைப்பற்றிப் பெரு விசாரப்படுகிறாள்! என்னமோ பகவான்போல் ஒரு தகப்பனாரிருந்தார்! அவர் ஞாபகம் வந்தால் யார்தான் அழமாட்டார்கள்!'—என்று உபசாரம் சொன்னாள்.

"அம்மாமி! அதற்காகக்கூட நான் அவ்வளவு துக்கிக்கவில்லை. அப்பா போகும் பொழுது என்னைப் பேர்சொல்லி யழைத்துப் "பார்வதி குழந்தை பத்திரம்! பத்திரம்!"என்று என்னிடம் பத்திரபுஷ்பம் சமர்ப்பிப்பதுபோல் குழந்தையை ஒப்புவித்துவிட்டுப் போனாரே! நான் பாவி அப்பொறுப்பை வகித்து நிறைவேற்றாம லிருக்கிறேனே! குழந்தை குப்புவுக்குக் கன்யாதானம் செய்யும் வயதாய் விட்டதென்று நல்ல வரன்கிடைக்காமல் அவள் தாயார் தகப்பனார்கள் ஏங்கிப்போயிருக்கிறார்கள்! நான் எங்கேபோய் வரன் தேடுவேன்! அந்தக் குழந்தையை நல்ல விடம்பார்த்து உடமைக்காரன் யாரோ அவனையறிந்து அவனிடத்தில் அவனுடமையை ஒப்புவிக்க வேண்டுமே! அவன் எங்கே யிருக்கிறானோ! யாரோ! எப்போ வருவானோ! நான் எங்கேபோய்த் தேடுவேன்! இந்தப் பெரிய பொறுப்பை நினைத்துக்கொண்டால் எனக்கும் மனது திக்பிரமை கொள்கிறதே! நான் என்ன செய்வேன் அம்மாமி! பகவான்தான்வந்து எனக்கு வழி காட்டவேண்டும். நான் என்னசெய்வேன்!" என்று தன் உள்ளக் கவலையை வெளியிட்டுச் சொன்னாள் பார்வதி.

"அதற்கென்ன! பிரம்மா ஏற்கனவே ஒரு முடிச்சு முடிந்து தானே போட்டிருப்பன்! காலம்வந்தால் தானே அவனும்வருகிறான். விடிய விடிய இன்னம் குழந்தைக்கு 8-வயதாகவில்லை! அதற்குள் என்ன அவ்வளவு விசாரம்!" என்றாள் அம்மாமிப் பாட்டி. "அப்படியில்லை, அம்மாமி! பெண்ணுக்குத் தகப்பனார் சாஸ்திரம் படித்தவரா யிருப்பதனால் தக்கபருவத்தில் குழந்தையைக்கன்னியாதானம்செய்துகொடுக்க வேண்டுமென்று கவலைப் படுகிறார். அது நியாயந்தானே! இக்காலத்தில் இங்கிலீஷ் படித்தவர்கள் தான் பெண்ணைப் பன்னிரண்டு பதின்மூன்று வயது வரையில் வைத்துக்கொண்டு தக்கவரன் அகப்படாமல் அலைகிறார்கள். வைதீகனும் அப்படியிருந்தால் கட்டிவருமா? குழந்தையைத் தக்க பருவத்தில் தானே கன்யாதானம் செய்துகொடுத்து விட்டால் நல்ல தென்றுதான் நானும் நினைக்கிறேன்! நல்லவரன் கிடைக்கவேண்டுமே யென்றுதான் விசாரமாயிருக்கிறது!" என்றாள் பார்வதி.

"உனக்கும் அப்படியே இஷ்டமிருந்தால் இதற்கு விசாரமென்ன! உன்னுடைய மாமியாருக்கு மருமான் லக்ஷ்மிகாந்த னிருக்கிறானே இல்லையோ! அவனுக்கு ஒரு மைத்துனனிருக்கிறான். தங்கக் கொடிபோல் வளர்ந்திருக்கிறான். இரண்டு பரீக்ஷை கொடுக்கும்வரையில் படித்திருக்கிறான். பிள்ளை பரமசாது! இங்கே வந்தால் ஒரு சேஷ்டை செய்யாது. ஏதோ சோற்றுக்குத் துணிக்கு மிருக்கிறது. அவனைவிட நல்லவன் எங்கே போய்த் தேடிப்பார்க்கப் போகிறாய் நீ! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க் கழுவானேன்!" என்றாள் அம்மாமிப் பாட்டி.

"ஆமா, அம்மாமி! எனக்கு ஞாபகமே யில்லாமற் போய்விட்டது! நல்லசமயத்தில் ஞாபக மூட்டினீர்களே! அந்தப் பையன் இங்கே தஞ்சாவூரிலேதான் படித்துக்கொண்டிருக்கிறானென்று கேள்வி. பள்ளிக்கூடம் இன்னம் சாற்றவில்லையே! இங்கே யிருந்தால் லக்ஷ்மிகாந்தனோடு சொல்லி அவனை வரவழைக்கச் சொல்ல வேண்டும்!" என்றுசொல்லிப் பார்வதி வாய்மூடுமுன், அவளோடுட்கார்ந்துகொண்டிருந்த அவள் ஓர்ப்படியார் பார்த்து "நமது லக்ஷ்மீகாந்தன் மைத்துனனா! அதாவது திருவையாறு மீனாக்ஷியம்மாள் பிள்ளைதானே! அதோ வாசலோடு போகிறான் பாருங்கள்! அம்மாமி, நீங்கள்தான்போய் அந்தப்பையனைக் கூப்பிடுங்களேன்!" என்றாள்.

பார்வதியம்மாள்! "யார்! அந்தப்பிள்ளையா! அம்மாமி, கூப்பிடுங்கள்! கூப்பிடுங்கள்!! இது ஒரு நல்ல சகுனம்தான். அவனுக்கு ஆயுஸு நூறுதான்! சந்தேகமில்லை!" என்றாள்.

அம்மாமிப் பாட்டி வயது சென்றவளானாலும் நன்றாக வேலைசெய்து தேஹம் கெட்டிப்பட்டவள். 50-வயதுக் கிழவி யானாலும் அவள் 10-வயதுக் குமரிபோல் குடு குடுவென்று வாசலில் ஓடி வந்து தெருவோடு போன பிள்ளையைப் பார்த்து, "அடே பையா! அடே அப்பா! ஏ! மீனாக்ஷி பிள்ளை, உன்னைத்தானடா கூப்பிடுகிறேன்! இங்கே வா! வா!" என்று கையைக் காட்டியும், வாயால் கூவியும் அழைத்தாள்.

பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த அப்பையன் வாலிப தசை யடைந்தவனாதலால் நம்மை யார் கூப்பிடுகிறது! இந்தப் பாட்டி யாரோ! இவள் நம்மையேன் கூப்பிடுகிறாள்? வேறு யாரையோ கூப்பிடுகிறாள்! நமக்கென்ன! வென்று அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு ஏதும் பதில் சொல்லாது அவன் வழியைப்பார்த்துக் கொண்டு போய்விட்டான்.

அம்மாமிப் பாட்டி, உள்ளே வந்து, நான் அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டேன்; அவன் திரும்பிப்பார்த்து விட்டு யாரையோ கூப்பிடுகிறானென்று நினைத்துக்கொண்டு பேசாமல் போய் விட்டான். லக்ஷ்மிகாந்தனுக்குச் சொல்லியனுப்பி அவனை வரவழைக்கச் சொன்னாற் போகிறது! என்றாள். பார்வதிக்கு ஓர்ப்படியாரான கமலாம்பாள், "லக்ஷ்மீகாந்தனால் ஒன்றும் சாயாது. நான் அந்தப்பிள்ளை தாயார் மீனாக்ஷியம்மாளுக்குச் சொல்லியனுப்புகிறேன். அந்தம்மாளோடு பேசினால் காரியம் சாயுமே யன்றி, லக்ஷ்மிகாந்தனோடு பேச்சுக் கொடுத்தால் காரியம் கெட்டுப்போம். அவனுக்கும் அந்தப் பையனுக்கும் அதிகமா யொற்றுமையில்லை யென்று எனக்குத்தெரியும். இவன் ஏதாவது சொல்ல அவன் முரண்டு கொண்டால் பின்னர் சரிப்படுத்துவது கஷ்டம். சும்மாவிருங்கள், நான் சரிப்படுத்தி வைக்கிறேன். இப்பொழுது மாசிமாசத்தில் என்ன செய்யப் போகிறீர்கள். கிணற்று ஜலத்தை வெள்ளங் கொண்டுபோய் விடுமா?" என்றாள்.

அதற்குள் பார்வதியம்மாள் பிள்ளை சோமசுந்தரம் அங்கேவர, அவன்: "யார்! நம்முடைய லக்ஷ்மிகாந்தன் மைத்துனன் தானே? அவனை எனக்குத் தெரியுமே! அவன்பேர் ஆத்மநாதன். அவனுக்கு இப்பொழுதுதான் எப். ஏ. பரீக்ஷை தேறினதாக சமாசாரம் வந்தது. அதற்காகத் தான் திருவையாற்றிலிருந்து வந்து 'காலேஜ் ப்ரின்ஸிபால்' வீட்டுக்குப்போய் விட்டுத் திரும்

பிப்போகிறான். மேலே பி. ஏ. க்குப் படிக்கப் பட்டணம் போகப் போகிறதாகக் கேள்வி. அவன் குப்புவுக்குப் புருஷனாகக் கிடைத்தால் நல்ல அதிர்ஷ்டந்தான்" என்றான்.

"அப்பா சோமு அவனைக்கண்டால் இங்கே யழைத்து வருகிறாயா? நமது குப்புவை அவனுக்குக் கொடுக்கலாமென்று இப்பொழுதுதான் வாய்திறந்து சொன்னாள். சொல்லி வாய்மூடுமுன், அவனும்வாசலில் போனான். நீயும் தெய்வவாக்குப்போல், அவன் நல்லவரன் என்று சொல்கிறாய்! அவனைக் கண்டால் அழைத்து வருகிறாயா!" என்றாள் பார்வதி.

"அவனை இதற்கென்று கூப்பிட்டால் வரமாட்டான். அதிக சங்கோசி. ஆனால் வேறு முகாந்தரம் சொல்லி யழைத்து வருகிறேன். அவன் இங்கேதா னிருக்கிறானே நேரத் திருவாதிக்கே போய்விட்டானே! விசாரித்துச் சொல்லுகிறேன்" என்றான் சோமசுந்திரம்.

இப்படியாகக் கலியாணம் செய்துகொள்ளப் போகிற பிள்ளைக்கும் பெண்ணுக்கும் தெரியாமல், அவர்களிருவருக்கும் பிரம்மா முடிந்து போட்ட முடிச்சைக் கண்டுபிடித்து விட்டதாக இந்தப் பெண்பெண்டாட்டிகள் தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு உடனே யொரு மானஸீகக்கோட்டைகட்டி அதில் வதுவரர்களை யமர்த்தி யாருமறியாமல்'வதூவரன் நிச்சயம்'செய்துவிட்டார்கள். பிரம்மாபோட்ட முடிச்சாம்! அதை யாரால் அவிழ்க்க முடியும்! பிரம்ம முடிச்சை யவிழ்த்தாலும் அவிழ்க்கலாம். விவாக முடிக்கப் போடுவதில் சமர்த்தர்களான நமது தாயார், அத்தை, பாட்டிகள் முதலான பெண்பெண்டாட்டிகள் போடும் முடிச்சை யவிழ்ப்பது அசாத்தியமே யென்று பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்,கொண்டு கொடுத்து சம்பந்தம் செய்தனுபவப்பட்ட எல்லாரும் ஒருமனதாய் ஒப்புக் கொள்வார்கள்.

வேலிக்கு ஓணான் சாக்ஷியென்பதாக பிரம்மா இவர்களுக்கு நல்ல உடந்தையாக ஏற்படுகிறான்! உண்மையாகவே பார்த்தால் வதுவரநிச்சய விஷயத்திலும் பிறகு நடக்கும் கலியாணத்திலும் தேட்டாமைக்காரன் மேலுக்குப் பகட்டாய் அதிகாரம் செய்கிறானேயன்றி உண்மையில் நடப்பதெல்லாம் இரண்டாங்கட்டில் கொலுவிருக்கும் அம்மன்கள் நிச்சயித்தபடி நடக்கிறதேயன்றி வேறல்ல.

தேட்டாமைக் காரர்களான புருஷர்கள் முன்னின்று காரியத்தை நடத்திவைக்க வேண்டியது! அகத்துக்காரிகள் உள்ளிருந்தபடி யெல்லாவற்றையும் சட்டதிட்டமாய்த் தீர்மானித்துத் தீர்ப்புச்செய்து பிரம்மா முன்னிலையில் கொண்டுபோய் அதை ரிஜிஸ்தர் செய்து வைத்துவிட்டு வந்துவிடுகிறார்கள். அப்படி ரிஜிஸ்தரான தீர்ப்பை மாற்ற மனுஷர்களாலாவது புருஷர்களாலாவது முடியுமா? முடியாது! முடியாது!! முடியாது!!!.

———(:-o-:)———

FREE FROM BONDS.

The Autobiography of a Taluk Gumastah.

(Special for the Vivekachintamani)

* அவிழ்த்துவிட்ட கழுதை.

ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம்.

(விவேகசிந்தாமணிக்கென்றெழுதப்பட்டது.)

III–கௌமாரம்: உத்தியோகம்.

———:(o):———

(142-வது பக்கத் தொடர்ச்சி)

"செத்தால் தெரியும் செட்டியார்வாழ்வு" என்று உத்தியோகஸ்தருடைய வாழ்வெல்லாம் செத்த பிறகு தான் வெளிப்படும். தற்காலத்தில் பணத்தைச் செலவழித்துப் படித்து உத்தியோகத்திற்கு வந்தவர்களில் நூற்றில் நாலைந்து பேர் தாங்கள் செலவழித்த பணத்தைத் திரும்பவும் சம்பாதித் திருப்பார்கள் என்று நம்பலாம். மற்றவர்கள்கதி கைப்பொருளைக் குளத்தில் எறிந்துவிட்டுச் சல்லடைப்போட்டுச் சலிப்

பவன் கதியே. இப்படி சம்பாதித்தவர்களில் பொய்யான யோக்கியதை பாராட்டாமல், சம்பாதிப்பதற்காகத்தான் உத்தியோகம் செய்கிறதென்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டு நடந்தவர்கள் எனக்குத்தெரிந்து இரண்டுபேர்களுண்டு. ஒருவர் ஒருபோலீஸ் இன்ஸ்பெக்டர். அவர் ஒரு சொலைக்குற்றத்தில் 10,000 ரூ. லஞ்சம் வாங்கிக்கொண்டு குற்றவாளியைத் தப்புவித்தார். பிறகு இவர் லஞ்சம் வாங்கினாரென்பது கச்சேரியில் ருசுவாகிவிட்டது. அப்பொழுது அவர் தான் லஞ்சம் வாங்கினதைக் கச்சேரி முன்பாக ஒப்புக்கொண்டு சம்பாதிப்பதற்காகத்தான் தனக்கு உத்தியோகம் தேவை என்றும், தனக்கு வேண்டியதை சம்பாதித்துக் கொண்டாகி விட்டபடியால், தான் இனி 3 வருஷம் ஜயிலிலிருந்துவிட்டுப் பிறகு குடியும் குடித்தனமுமாய்ப் பெண்டாட்டி பிள்ளைகளுடன் சுகமாயிருக்கப் போகிறதாகவும் சொன்னார்.

இன்னொருவர் ஒரு மாஜிஸ்ட்ரேட். அவரிடத்தில் ஒரு பொய்ச்சாக்ஷிக்குற்றம் விசாரணைக்கு வந்தது. குற்றவாளியின் பேரில் குற்றம் ருசுவாகிவிட்டது. அவனை மாஜிஸ்ட்ரேட் 3 வருஷங் காவலில் வைப்பதாக உத்தேசித்திருந்தார். அப்பொழுது குற்றவாளி தன்னை அபராதத்ததுடன் விட்டுவி_ வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டான். அவரும் அப்படியே அவனுக்கு 200 ரூ. சர்க்கார் அறிந்த அபராதமாகவும் 1000ரூ. சர்க்கார் அறியாத ரஹஸ்ய அபராதமாகவும் விதித்து அவனைச் சிறைக்குப் போகாமல் தப்புவித்தார். தான் அம்மாதிரி செய்ததற்குப் பின் வருமாறு காரணம் சொன்னார்: "குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பவதனால் அவனுடைய பொய் சொல்லுங்குணம் மாறாது. சிறைச்சாலைக்குப்போன பின் மானம் அவமானமிழந்து திருடவும் கொள்ளையடிக்கவும் ஆரம்பிப்பான். ஆனால் 1200 ரூ. நஷ்டம் வைத்தால் அதைக்கொடுக்க அவனுக்குச் சக்தியுமுண்டு. இனி இம்மாதிரி திரவிய நஷ்டத்துக் குள்ளாகக் கூடாது என்கிறபயமு மிருக்கும். 1200 ரூபாயையும் சர்க்காருக்கே கொடுத்து விட வேண்டிய அவசியமென்ன? சர்க்கார் ஏழையல்லவே? ஏழையாகிய என் குடும்பம் பிழைக்க அதில் பெரும் பாகத்தை எடுத்துக்கொண்டு சர்க்காருக்கும் லஞ்சனை செய்யாமல் 200 ரூ. கொடுத்துவிட்டேனல்லவா" என்றார். உத்தியோகஸ்தனுக்கு வேண்டிய யோக்கியதை ஒன்றும் என்னிடத்திற் கிடையாது. நான் கறுப்பாய் மெலிந்து குள்ளனாயிருப்பவன். என் உருவத்தைக்கண்டு யாரும் என்னை மதிக்கமாட்டார்கள். வெகு பேர்கள் உருவத்தினாலேயே உத்தியோகம் செய்கிறார்கள். ஒரு தாசில்தார் கன்னம் நிறைய மீசை தாடியும் கோபுரத்தை யொத்த வெப்பு ஜரிகைத் தலைப்பாகையும் நாற்காலி யிலடங்காத பருத்த சரீரமும் நிஜார் சீமைஜோடு முடையவர். புதிய குமாஸ்தாக்களை முதல் இரண்டு மூன்று நாளைக்கு விழித்துப் பார்ப்பார், அதட்டிப் பேசுவார். அவரிடம் கையெழுத்துக்குக் காகிதம் கொண்டுபோனால் கையெழுத்துப் போடவேண்டிய இடத்தை நீல வர்ணத்தினால் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவருடைய கோபத்துக்குப் பயந்ததுபோல் காண்பித்துக் கொண்டு அவர் கேட்கும் கேள்விகளுக்குத்தியங்காமல் ஏதாவது பதில் சொல்லிவிட்டால் அவன் தான் வேலை தெரிந்த குமாஸ்தா. ஒரு தடவை கையெழுத்துக்குக் காகிதம் கொண்டுவந்த குமாஸ்தாவை "இதென்ன காகிதம்" என்றார். "இது பம்பாயில் புதிதாய் காகிதசாலை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் கோரைப்புல்லினால் காகிதம் செய்கிறார்கள். அங்கிருந்து மாதிரிக்காக ஒரு காகிதம் வந்தது அதுதான் இது. அதனால் கோரைக்காடுகளில் கோரைப் புல்லறுப்பவர்களுக்கு வரிபோட உத்தரவாகியிருக்கிறது." என்று குமாஸ்தா சொல்லி முடிப்பதற்குள். மேல் ஐந்தாறு காகிதங்களுக்குக் கையெழுத்துப் போட்டாகிவிட்டது.

கக்ஷிக்காரர்களைக் கச்சேரிக்கு வா வழைக்கும் ஸம்மன் உத்தரவுகளுக்கு இவரிடம் அடிக்கடி கையெழுத்து வாங்கத்தொந்திரவு படாமலிருக்கும் பொருட்டு பெயர் ஊர் தேதி ஒன்றும் பூர்த்திசெய்யாத அச்சிட்ட ஸம்மன் காகிதங்களை அடியில் வைத்து இருக்கும். மேலே இரண்டொரு ஸம்மன் காகிதங்களுக்கு மட்டும் பெயர் ஊர்தேதி எல்லாம் பூர்த்திசெய்து கையெழுத்துக்கனுப்பி விட்டால், எல்லா ஸம்மன் காகிதங்களுக்கும் கையெழுத்தாகி வந்து விடும். பிறகு நமக்குத் தேவையான கக்ஷிக்காரர்களின் பெயர் ஊர் தேதி எல்லாம் பூர்த்திசெய்து ஸம்மன்களை நமக்கு இஷ்டப்பட்ட காலத்தில் இஷ்டப்பட்ட பேர்வழிகளுக்கனுப்பலாம்.

நான் ஒருநாள் ஆற்றங்கரையி லிருந்து ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிப்போகையில் ஒரு குத்திரப்

பையன் தன் தாயைக் கூப்பிட்டு என்னைக்காட்டி "அம்மா அதோ ஒரு பார்ப்பான் போகிறான், நம்முடைய மாடினைப்போலவே யிருக்கிறான் பார்" என்று என்காதில்படச் சொன்னான். நல்லவேளையாய் என் மார்பில் பூணூல் இருந்தது.

நானைக் சிரிக்கும் வேளைகளில் தவிர சாதாரண காலங்களில் என்முகம் அழுவதுபோலிருக்கும். என் உபாத்தியாயர்களில் ஒருவர் என்னை "மழுங்கின மாங்கொட்டை" என்றழைப்பது வழக்கம். நான் பள்ளியில் படிக்கும் பொழுது ஒரு நாள் காவேரிப் பாலத்தில் நின்றுகொண்டு கீழ்நோக்கிப் பிரவாகத்தைக் கவனித்துக்கொண் டிருந்தேன். அடுத்த பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களில் ஒருவர் அவ்வழியே போனவர் என்னைப் பார்த்து "கணக்குப் பரீக்ஷையில் நீ சரியாய் எழுதவில்லையோ? வருத்தப்பட்டுக்கொண்டு தனியே நிற்கிறாயே" என்றார். (அப்பொழுது மெட்ரிகுலேஷன் பரீக்ஷை நடந்து கொண்டிருந்தது. கணக்குப்பரீக்ஷைக் கேள்விகள் கடினம் என்று சொல்லிக்கொண் டிருந்தார்கள்.) நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பிறகு அவ்வுபாத்தியாயர் ஒரு போலீஸ் சேவகனைக் கூப்பிட்டு என்னைக் காட்டி "அந்தப் பையனைக் கவனித்துக்கொள். காவேரியில் விழுந்துவிட யோசிப்பவன்போ லிருக்கிறான்" என்று சொல்லிப் போனார்.

நான் கக்சேரிக்குப்போகும் வேளைதவிர மற்ற வேளைகளில் சட்டைபோட மாட்டேன். ஒரு தரம் தஞ்சாவூரில் ஒரு போலீஸ்சேவகன் என்னைத் தெருவில் அசுத்தம் செய்ததற்காகப் பிடித்துக்கொண்டு ஊர் பெயர் தொழில் விலாஸமெல்லாம் விசாரித்தான். நான் எல்லாம் ஒழுங்காகச் சொன்னேன். "அப்படியானால் நீர் தாலுகா குமாஸ்தாவா?" என்றான். (அதுவரையில் என்னை "நீ" என்று வசவசனமாகவே பேசினான்.) "ஆம்" என்றேன் "உம்முடைய உடுப்பு எங்கே?" என்றான்.

"நான் இப்பொழுது முண்டமாயில்லையே, உடுத்துக்கொண்டுதா னிருக்கிறேன்" என்றேன்.

"உம்முடைய உத்தியோக உடுப்பு எங்கே?" என்றான்.

"எங்கள் இலாகாவில் குமாஸ்தாக்களுக்கு உடுப்புக் கொடுக்கிறதில்லை" என்றேன்.

"ஒரு உள்சட்டை மேற்சட்டை கூடக் கிடையாதா"? என்றான்.

"எல்லாம் ஊரில் கக்சேரியில் என் மேசைப் பெட்டியில் பத்திரமாய் வைத்திருக்கிறேன்" என்றேன்.

"ஏன் இங்கு கொண்டுவரவில்லை?"

"அநாவசியமாய் இங்கு கொண்டுவந்தால் அடிக்கடி அழுக்காய்ப் போய்விடும் நான் அதை வண்ணானுக்குப் போடுகிற வழக்கமில்லை யாதலால் நானே துவைக்கவேண்டும். மேலும் இரண்டாவது சட்டையும் நான் வைத்துக்கொள்ள வில்லை" என்றேன்.

"நீங்கள் தாலூகா குமாஸ்தாவென்று நான் நம்பும்படி இவ்வூரில் ஒரு சாக்ஷி கொடுக்க முடியுமா?"

"அப்படியே ஆகட்டும்" என்று நான்பார்க்கவந்த சிநேகிதரிடத்தில் அச்சேவகனைக் கூட்டிக்கொண்டு போனேன். அவர் ஒரு கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா. பிறகு அச்சேவகன் திருப்தியடைந்து திரும்பிப் போகையில் "தாங்கள் என்பேரில் கோபிக்கக் கூடாது. தாங்கள் இனி வெளியே போகும்போதெல்லாம் ஒரு சூட்டையாவதில்லாமல் போவது அழகல்ல, அதனால்தான் நான் உங்களைப்பார்த்து எமாந்து விட்டேன்." என்று கும்பிட்டுச் சென்றான்.

"நான் உன்னை இவ்வளவுதூரம் பயனின்றி வேலையை விட்டிழுத்து வந்ததற்காக நீதான் என்னை மன்னிக்கவேண்டும்" என்று நான் புன்சிரிப்புடனே சொன்னேன்.

எந்த அற்பக் காரியத்தையும் இடறி விழாமல் ஒழுங்காய் எனக்குச் செய்யத் தெரியாது. எனக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர் யாராவது தூரத்தில் எதிர்ப்பட்டால் அவருக்கு வந்தன மளிக்க எண்ணிக்கொண்டேயிருப்பேன். அவர் சமீபத்தில் வந்ததும் மறந்துவிடுவேன்; அல்லது அவர் கிறிஸ்தவராயிருந்தால் நமஸ்காரம்என்பேன்; பிராமணராயிருந்தால் "சலாம்" என்று இடதுகையைத் தூக்குவேன்.

ஒருதரம் தாசில்தார் ஒரு பெரிய அர்ஜி ஒன்றை என்னிடம் கொடுத்து "இதைப்பார்த்து ஐந்து நிமிஷத்தில் சுத்தநகல் ஒன்று தயார் செய் கலெக்டர் துரைக் கனுப்பவேண்டு" மென்றார் வேகமாய் எழுதினால் அதைப் பத்து நிமிஷத்தில் முடிக்கலாம். சற்று எழுத்து கன்று யிருக்கவேண்டுமானால் பதினைந்து நிமிஷம் பிடிக்கும். நான் அதை வெகுவேகமாய் எழுதி ஆறுவது நிமிஷத்தில் முடித்துக் கடைசிக் காகிதத்தில் மையொற்றும் பொருட்டுக் சுருமணற் பெட்டியைக் * கவிழ்ப்பதற்குப் பதிலாகக் கைதவறி மைக்கூட்டைக் கவிழ்த்து விட்டேன் - அது முதல் அந்தத் தாசில்தார் என்னிடம் அவசரமான வேலை யொன்றையும் கொடுக்கிறதில்லை.

ஒருதரம் நான் ரயில் பிரயாணம் செய்யும்பொழுது ஒரு கிச்சிலிப்பழம் வாங்கினேன். ஒரு கையில் பழத்தைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் அதன் தோலை உரித்தேன். ஓடும் ரயில்வண்டியிலிருந்து ஏதாவது ஒரு கனப்பொருளை வேளியே எறிந்தால் அப்பொருள் எறிந்தவனது வண்டிக்குப் பின் தங்கி நிற்காமல் அது கீழே விழுமளவும் அவனுக்கு நேராகவே ஓடிவரும். ஏனெனில் ரயிலின் வேகம் அப்பொருளிலும் ஐக்கிய பாவத்தினால் அத்தியாரோபமாகியிருப்பதால், அப்பொருள் எறிபட்ட வேகத்தினால் வெளியே போவதோடுகூட ரயிலினிடமிருந்து கிரஹிக்கப்பட்ட வேகத்தினால் ரயில் செல்லும் திசையிலேயே அதற்கு சரியாய் அதன் பக்கத்திலும் ஓடிவரும் என்று என் உபாத்தியாயர் சொல்வதுண்டு. அது எனக்கு அக்காலத்தில் நன்கு விளங்கவில்லை. அதை பரிசோதிப்பதற்காகக் கிச்சிலிப் பழத்தின் தோலை எறிய உத்தேசித்துக் கையிலிருக்கும் பழத்தை எறிந்து விட்டு அது பறக்கும் திசையையும் வேகத்தையும் ரயில்போகும் திசையையும் வேகத்தையும் இரண்டுக்குமுள்ள சம்பந்தத்தையும் ஆலோசித்துக் கணக்குப் போட்டுக் கொண்டே தோலைப் பழமென்று தின்றேன். கொஞ்சம் தொண்டையில் கால் கண்டபிறகுதான் கையிலிருப்பது தோல் என்று அறிந்தேன்.

இன்னொருதடவை நான் வயல் வெளியில் ஒற்றையடிப் பாதை வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு சிறு கன்னிகை எதிரேவந்தாள். நான் அவளுக்கு வழிவிட எண்ணி வலதுபுறம் ஒதுங்கினேன் அவள் எனக்கு வழிவிட எண்ணி அதே சமயத்தில் அதே பக்கத்தில் ஒதுங்கினாள். நான் அதைக்கண்டு ப்பழைய பாதைக்குத் திரும்புகையிலேயே அவளும் அப்புறமே திரும்பினாள். பிறகு அவள் வேறுபக்கம் போகட்டும் என்று நான் சற்றுக் காத்திருந்தும் அவள் பிரமித்து நின்றமையால், நான் இடதுபுறம் ஒதுங்கினேன். அவளும் அதே சமயத்தில் வெகு பரபரப்பாய் அப்புறமே ஒதுங்கினாள். பிறகு நான் எங்கும் திரும்பாமல் அங்கேயே ஸ்தம்பமாய் நிற்க அவள் வயலுக்குக் குறுக்கே ஓடி வரப்பைத்தாண்டி அடுத்த வயலுக்குப்போய் சிரித்துக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தாள். நான் வெட்கித் தலைகுனிந்து சென்றேன்.

(இன்னும்வரும்)

தாலூக்காதுமாஸ்தா.

* மையொற்றுங் காகிதம் அக்காலத்தில் தாசில்தார்களுக்கு மட்டும் சர்க்காரில் மாதமொன்று கொடுப்பார்கள். குமாஸ்தாக்களுக்குக் கிடையாது.

உ

ஓம் ஸ்ரீ சாவித்திரியை நமஃ

விவேகசிந்தாமணி உபநிஷதர்த்த தீபிகை.

[விவேகசிந்தாமணிக்கென்று பிரத்தியேகமாக எழுதப்பட்டது].

11. பாவனோபநிஷத் பிரயோகவிதி.

(இரண்டாம் பாகம்.)

———:-(o)-:———

(84—வது பக்கத்தொடர்ச்சி.)

இந்த்ரிய பாவனையை எல்லாவற்றிற்கும் கடைசியிலும் செய்யலாம்.

முதலாவரணமாகிய சதுரசிரம்.

(அ) முதல் ரேகை.

"சதுரசிரத்தின் முதல் ரேகைக்கு நமஸ்காரம்" என்று பின் சொல்லப்போகும் ஸ்தானங்களில் வியாபக நியாஸம் செய்யவும்.

(1) வலது தோளின் பின்பாகம்.—சாந்தரஸமாகிய அணிமாசித்தி.

(2) வலதுகையின் விரல்களின் நுனி.—அத்புதரஸமாகிய லகிமாசித்தி.

(3) வலது ஸ்பிக் பிருஷ்டபாகம்—கருணரஸமாகிய மஹிமாசித்தி.

(4) வலது காலின் விரல்களின் நுனி.—வீரரஸமாகிய ஈசித்துவ சித்தி.

(5) இடது காலின் விரல்களின் நுனி.—ஹாஸ்ய ரஸமாகிய வசித்துவசித்தி.

(6) இடது ஸ்பிக்.—பீபத்ஸ ரஸமாகிய பிராகாம்ய சித்தி.

(7) இடது கைவிரல்களின் நுனி.—ரௌத்திர ரஸமாகிய புத்திசித்தி.

(8) இடது தோளின் பின்பாகம்.—பயானக ரஸமாகிய இச்சாசித்தி.

(9) குளியின் (மயிரின்) மூலம்.—சிருங்கார ரஸமாகிய பிராப்திசித்தி.

(10) குளியின் பின்பாகம்.—நியதியாகிய சர்வ காமசித்தி.

(b) இரண்டாம் ரேகை.

"சதுரசிரத்தின் மத்திய ரேகைக்கு நமஸ்காரம்" என்று வியாபக நியாஸம் செய்யவும்.

(1) இரு பாதங்களின் இருபெருவிரல்கள்.—காமமாகிய பிராஹ்மீ சக்தி.

(2) (தேகத்தின்) வலதுபக்கம்.—குரோதமாகிய மாஹேசுவரீ.

(3) மூர்த்தா (சிரசு).—லோபமாகிய கௌமாரீ.

(4) இடது பார்சுவம்(பக்கம்).—மோஹமாகிய வைஷ்ணவீ.

(5) இடது ஜானு (முழங்கால், முட்டு)—மதமாகிய வாராஹீ.

(6) வலது ஜானு.—மாத்ஸர்யமாகிய மாஹேந்திரீ.

(7) வலது தோளின் வெளிப்புறம்.—புண்யமாகிய சாமுண்டீ.

(8) இடது தோளின் வெளிப்புறம்.—பாபமாகிய மஹாலக்ஷ்மீ.

(c) மூன்றாவது ரேகை.

"சதுரசிரத்தின் கடைசி ரேகைக்கு நமஸ்காரம்" என வியாபக நியாஸம் செய்யவும்.

(1) இரண்டு கால்களின் இரண்டு பெருவிரல்கள்.—அதோ சஹஸ்ரகமலமாகிய ஸர்வஸம்க்ஷோபிணீ முத்திரை.

(2) வலது பார்சுவம் (பக்கம்).—மூலாதாரமாகிய சர்வ வித்ராவிணீ முத்திரை.

(3) மூர்த்தா (சிரசு).—சுவாதிஷ்டானமாகிய சர்வாகர்ஷிணீ முத்திரை.

(4) இடது பார்சுவம்.—மணிபூரகமாகிய சர்வவசங்கரீ முத்திரை.

(5) இடது ஜானு (முழங்கால்).—அனாஹதமாகிய சர்வோந்மாதினீ முத்திரை.

(6) வலது முழங்கால்.—விசுத்தியாகிய சர்வ மஹாங்குச முத்திரை.

(7) ஹிருதயத்தின் வலதுபாகம்.—இந்திரயோனி(லம்பிகாக்ரம்)ஆகிய சர்வகேசரீ முத்திரை.

(8) ஹிருதயத்தின் இடதுபாகம்.—ஆஞ்ஞையாகிய சர்வபீஜ முத்திரை.

(9) துவாதசாந்தம்.—ஊர்த்துவ சஹஸ்ரகமலமாகிய சர்வயோனி முத்திரை.

(10) பாதாங்குஷ்டம்.— நவாத்காரமாகிய (ஒன்பது ஆதாரமாகிய) சர்வத்ரிகண்ட முத்திரை.

ஹிருதய ரூபமான த்ரைலோக்ய மோஹன சக்ரேசுவரீயான திரிபுரைக்கு நமஸ்காரம்.

பிரகடயோகினீ ரூபமான ஸ்வாத்ம ஸ்வரூபமாகிய அணிமாசித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்ன ரூபமான ஸ்வாத்ம ஸ்வரூபமாகிய சர்வசம்க்ஷோபிணீ முத்திரைக்கு நமஸ்காரம்.

இரண்டாமாவரணமாகிய ஷோடசதள பத்மம்.

ஷோடசதள கமலத்திற்கு நமஸ்காரம் என வியாபக நியாஸம்.

(1) வலது காதின் பின்புறம்.—பிருதிவியாகிய காமாகர்ஷணீ நித்தியாகளை.

(2) வலது தோள்.—அப்புவாகிய புத்தியாகர்ஷிணீ நித்தியாகளை.

(3) வலது கூர்பரம் (முழங்கை).—தேஜஸாகிய அஹங்காராகர்ஷிணீ நித்தியாகளை.

(4) வலதுகையின் பின்பாகம்.—வாயுவாகிய சப்தாகர்ஷிணீ நித்தியாகளை.

(5) வலது துடை.—ஆகாசமாகிய ஸ்பர்சாகர்ஷிணீ நித்தியாகளை.

(6) வலது முழங்கால்.—சுரோத்தரமாகிய ரூபாகர்ஷிணீ நித்தியாகளை.

(7) வலது குல்டம் (கணைக்கால்).—துவக்காகிய ரஸாகர்ஷிணீ நித்தியாகளை.

(8) வலது காலின் தலம் (உள்ளங்கால்).—சக்ஷுஸ்ஸாகிய கந்தாகர்ஷிணீ நித்தியாகளை.

(9) இடது காலின் தலம்.—ஜிஹ்வையாகிய சித்தாகர்ஷிணீ நித்தியாகளை.

(10) இடது குல்பம் (கணைக்கால்).—கிராணமாகிய தைர்யாகர்ஷிணீ நித்தியாகளை.

(11) இடது முழங்கால்.—வாக்காகிய ஸ்மிருத்தியாகர்ஷிணீ நித்தியாகளை.

(12) இடது துடை.—பாணீ (கை) யாகிய நாமாகர்ஷிணீ நித்தியாகளை.

(13) இடது கையின் பின்பாகம்.—பாதமாகிய பீஜாகர்ஷிணீ நித்தியாகளை.

(14) இடது கூர்பரம் (முழங்கை).—பாயுவாகிய ஆத்மாகர்ஷிணீ நித்தியாகளை.

(15) இடது தோள்.—உபஸ்தமாகிய அம்ருதாகர்ஷிணீ நித்தியாகளை.

(16) இடது காதின் பின்பாகம்.—விகாரத்தையடைந்த மனமாகிய சரீராகர்ஷிணீ நித்தியாகளை.

ஹிருதய ரூபமான சர்வாசாபரிபூரகசக்ரேசுவரீயாகிய த்ரிபுரேசிக்கு நமஸ்காரம்.

குப்ததர யோகினீ ரூபமான ஸ்வாத்மஸ்வரூபமான லகிமாசித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்ன ரூபமான ஸ்வாத்மஸ்வரூபமான வித்ராவிணீ முத்திரைக்கு நமஸ்காரம்.

மூன்றும் ஆவரணமாகிய அஷ்டதள பத்மம்.

"அஷ்டதள பத்மத்திற்கு நமஸ்காரம்" என வியாபக நியாஸம்.

(1) வலது சங்கம் (நெற்றியின் எலும்பு).—வசனமாகிய அனங்க குசுமை.

(2) வலது ஜத்ரு (சப்பை எலும்பு).—ஆதானம் (எடுத்தல்) ஆகிய அனங்க மேகலை.

(3) வலது துடை.—கமனம் (போதல், நடத்தல்) ஆகிய அனங்க மதனை.

(4) வலது குல்பம் (கணைக்கால்).— விஸர்ஜனமாகிய அனங்க மதனாதுரா.

(5) இடதுகுல்பம்.—ஆனந்தமாகிய அனங்க ரேகா.

(6) இடது துடை.—ஹான (விடுத்தல்) புத்தியாகிய அனங்கவேகினீ.

(7) இடது ஜத்ரு (சப்பை எலும்பு).—உபாதன (ஏற்றுக்கொள்ளுதல்) புத்தியாகிய அனங்காங்குசா.

(8) இடதுசங்கம் (நெற்றி எலும்பு).—உபேக்ஷாபுத்தியாகிய அனங்கமாலினீ.

ஹிருதய ரூபமான சர்வசங்க்ஷோபணசக்ரேசுவரீயாகிய திரிபுரசுந்தரிக்கு நமஸ்காரம்.

குப்ததர யோகினீ ரூபமான ஸ்வாத்மஸ்வரூபமான மஹிமா சித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்னரூப ஸ்வாத்ம ஸ்வரூபமான ஸர்வாகர்ஷணீ முத்திரைக்கு நமஸ்காரம்.

நான்காமாவரணமாகிய சதுர்தசார சக்கிரம்.

"சதுர் தசாரசக்ரத்திற்கு நமஸ்காரம்" என வியாபக நியாஸம்.

(1) லலாடத்தின் (நெற்றியின்) மத்திய பாகம்.—அலம்புஷாநாடியாகிய ஸர்வஸம்க்ஷோபிணீ சக்தி.

(2) லலாடத்தின் வலதுபாகம்.-குஹூ நாடியாகிய சர்வ வித்ராவிணீ சக்தி.

(3) வலது கன்னம்.—விசுவோதரா நாடியாகிய சர்வாகர்ஷணீ சக்தி.

(4) வலது தோள்.—வாரணா நாடியாகிய ஸர்வாஹ்லாதினீ சக்தி.

(5) வலது பார்சுவம் (பக்கம்).—ஹஸ்திஜிஹ்வ நாடியாகிய ஸர்வசம்மோஹினீ சக்தி.

(6) வலது துடை.—பசோவதீ நாடியாகிய ஸர்வஸ்தம்பினீ சக்தி.

(7) வலது ஜங்கா (கணைக்கால் முதல் முழந்தாள் வரை).—பயஸ்வினீ நாடியாகிய ஸர்வஜம்பினீசக்தி

(8) இடது ஜங்கா (கணைக்கால் முதல் முழந்தாள் வரை)-காந்தாரீ நாடியாகிய ஸர்வவசங்கரீ சக்தி.

(9) இடது துடை.—பூஷாநாடியாகிய ஸர்வரஞ்சனீ சக்தி.

(10) இடது பார்சுவம் (பக்கம்).—சங்கினீ நாடியாகிய ஸர்வோன்மாதினீ சக்தி.

(11) இடது தோள்.—சரஸ்வதீ நாடியாகிய ஸர்வார்த்தசாதினீ சக்தி.

(12) இடது கன்னம்.—இடாநாடியாகிய ஸர்வஸம்பத்பூரணீ சக்தி.

(13) நெற்றியின் இடதுபாகம்.— பிங்களை நாடியாகிய ஸர்வமந்த்ரமயீ சக்தி.

(14) நெற்றியின் பின்பாகம்.— சுஷும்னை நாடியாகிய ஸர்வதுவந்துவக்ஷயங்கரீ சக்தி.

ஹிருதய ரூபமான ஸர்வஸௌபாக்கியதாயக சக்கரேசுவரீயாகிய திரிபுரவாஸினிக்கு நமஸ்காரம்.

சம்பிரதாயயோகினீரூப ஸ்வாத்மஸ்வரூபமான ஈசித்துவ சித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்ன ரூப ஸ்வாத்மஸ்வரூபமான சர்வவசங்கரீ முத்திரைக்கு நமஸ்காரம்.

ஐந்தாமாவரணமாகிய பஹிர்தசார சக்கரம்

"பஹிர்தசார சக்ரத்திற்கு நமஸ்காரம்" என வியாபக நியாசம் செய்யவும்.

(1) வலது கண்.—பிராணவாயுவாகிய சர்வ சித்திப்பிரதா தேவி.

(2) நாசியின் மூலம்—அபான வாயுவாகிய சர்வசம்பத் பிரதா தேவி.

(3) இடதுகண்.—வியான வாயுவாகிய சர்வ பிரியங்கரீ தேவி.

(4) குஹ்யின் (வயிற்றின்) ஈசானியமூலை.—உதான வாயுவாகிய சர்வகாம பிரதா தேவி.

(5) வயிற்றின் வாயுமூலை.—சமான வாயுவாகிய காமப்பிரதா தேவி.

(6) இடதுஜானு (முழங்கால் முட்டு).—நாக வாயுவாகிய சர்வதுக்கவிமோசினீ தேவி.

(7) குதம் (அபானம்).—கூர்ம வாயுவாகிய சர்வமிருத்தியுப்பிரசமனீ தேவி.

(8) வலது ஜானு (முழங்கால் முட்டு).—கிருகர வாயுவாகிய சர்வவிக்னவினாசினீ தேவி.

(9) குஹ்யின் (வயிற்றின்) நிர்ரிதிமூலை.—தேவதத்த வாயுவாகிய சர்வாங்கசுந்தரீ தேவி.

(10) குஹ்யின்(வயிற்றின்) அக்னிமூலை.—தனஞ்ஜய் வாயுவாகிய சர்வசௌபாக்யதாயினீ தேவி.

ஹிருதய ரூபமான சர்வார்த்தசாதகசக்ரத்திற்கு ஈசுவரீயான திரிபுராஸ்ரீக்கு நமஸ்காரம்.

குளயோகினீரூப ஸ்வாத்ம ஸ்வரூபமான வசித்துவ சித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்ன ரூப ஸ்வாத்ம ஸ்வரூபமான சர்வோன்மாதினீ முத்திரைக்கு நமஸ்காரம்.

(இன்னும்வரும்)

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

ஆர். விசுவேசுவர சாஸ்திரி மஹோபத்யாயர்.

The Great Mystery of Guru Poojah.

The Mystic sermon of two tiny weeds. †

Heard in the Mystic Cave at Kolampakkam.
On Monday Evening, 28th August 1911.

குருபூஜை மஹத்துவம்.

கோடம்பாக்கம் குரு ஸமாதிக் குகையில் இச்சிறு முலிகைகள் செய்த மவுனப் பிரஸங்கம்.

(:-*-:)

குருஸ்துதி.

அறிவினுக்கறிவாக் தன்மை
யருளினா லளித்தாய் போற்றி!
சிறியனேன் சிறுமை தீர்த்துச்
செம்பதமருள்வாய்போற்றி!
பிறிதறும் பொருளா யெங்கும்
பேதமற்றிருந்தாய் போற்றி!
யறிவறும் அறிவானந்த
அருட்திருப் பாதம் போற்றி!

குருசொல்.

"அது நீ யானாய்! அதி நிஜம்!"

"அது என்றால் எது?"

வேதாகமங்களிற் சொல்லிய வெல்லாம் "இது". இவையொன்று மல்லாதது "அது". அப்படிச் சொல்வது அவாந்தர வாக்கியம். வாச்சியாதீதமான வாக்கியம். தத்பத லக்ஷிய மான பிரணவமுக்தி ஸ்வரூபமாம் அறிவு 'அது'. யதார்த்த ஸ்வரூபமும், ரகஸ்ய சூக்ஷ்மமும், அறுதியாங் காரணமும், அபிமான ஒடுக்கமும், சாக்ஷியாம் மோனமும் பஞ்சபூதமாக வுடையது எதுவோ அந்த மோனகுருநாதருக்கும் அப்பாலாயுள்ளது "அது". அந்த "அறிவறும் அறிவானந்தம்" நீ யானாய்!

"நீ"—என்றால் யார்?

வேதாகமங்கள் கோஷித்துக் கூறி யொடுங்கும் வேதாந்த மோனமாய், நாதாந்த ரூபமாய், 'அவதூதாத்மனாய்' மஹாவாக்கியங்களுக் கிருப்பிடமாய், தவம்பத லக்ஷியமாய், சாக்ஷி விருத்தி யன்றி வேறலவாய், நிவிர்த்தியின் முடிவாய், மோனமே முத்தரையாயுள்ள "பஞ்சசாக்ஷி" "நீ". இது மஹாவாக்கியம் என்று சொல்லப்படும். "ஆனாய்' என்பது சங்கேதமறச் சொன்ன நிவிர்த்தி வாக்கியம்.

பஞ்சசாக்ஷி யாவது யாது.

(1) வியஷ்டியில் ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களுக் கபிமானியான ஜீவசாக்ஷியாம் கூடஸ்தர்— 1.

(2) சமஷ்டியில் விராட்டு, இரண்யகர்ப்பன், மாயையென்கிற சரீரத்திரயங்களுக்கு அபிமானியான ரசுவர சாக்ஷியாம் பிரஹமம்— 2.

(3) வியஷ்டி, சமஷ்டி யிரண்டிற்கும் பொதுவான காரணமா யிருக்கும், சத்து, சித்து, ஆனந்தம் என்கிற காரண சரீரங்கள் மூன்றுக்கும் அபியான தேவதையான பரப்ரஹ்ம சாக்ஷியாம் ஸர்வசாக்ஷி— 3.

(4) மேற்சொன்ன சரீரத் திரயங்களும் விட்ட விடத்தும் வாலனு பலத்தால் சுத்தம், சூந்யம், சுபாவம் என்கிற மூன்றையும் சரீரமாக அபிமானித்து 'உபாதி யொழிவு' தானாகி சுத்தசூந்ய சுபாவங்களை யபிமானித்து நிற்கும் "ஒழிவு" நிலைக்குச் சாக்ஷியாம் அதீதசாக்ஷி—4.

(5) அதீத சாக்ஷியிலும் அபிமானத்துவம் நீங்காதது கண்டு அதையுங் கடந்து போய், யதார்த்தம், இரகஸ்யம், அறுதி யென மிவற்றையே நித்தமுத்த சரீரமாக (உபாதியாக) க்கொண்டு அபிமான மொடுங்கப்பெற்ற ஒடுக்கமே தானாகி நிற்ச, அந்த ஒடுக்க நிலைக்குச் சாக்ஷியாய் நிற்கும் மோன சாக்ஷி— 5.

இப்படியாகவுள்ள பஞ்சசாக்ஷிகளில் (1) கூடஸ்தர், (2) பிரஹ்மம், (3) ஸர்வசாக்ஷி, (4) அதீதசாக்ஷி யென்கிற நால்வரும் நாலுபக்கத்திலிருந்து செத்த பிணமாம் (ஸ்தூல, சூக்ஷ்ம, காரண-அபிமானம் என்றுள்ள) சதுர்வித சரீ

† Natural order: *Amaranthaceæ* Saps: *Thanduliya.*

ரத் திரியங்களைத் தூக்கிக்கொண்டு போக, ஐந்தாம் சாக்ஷியாகிய "மோனம்" சிதக்னிகுண்டம் என்கிற நெருப்புச்சட்டி தூக்கிக்கொண்டு போகிறது. சரீரத் திரியங்களுக்கும் ஜநநதசையில் அபிமான தேவதையாயிருந்த ஜீவேசுவர பரப்ரஹ்ம (அபிப்ரான)ஒழிவு என்னும் அபிமான தேவதைகள் அதீத சாக்ஷியுங்கடந்த அபிமான ஒடுக்கத்தின் ஐக்கிய பத்தியத்தினால் பிணத்துக்கு ஆதாரமான பாடையாக உதவ, (அபிமான) ஒடுக்கம் தலையணையாக உதவுகிறது. இப்படியாகச் செத்தபிணம் நித்தம் சுடுகாடு போகிற (சுஷும்னை யேறுகிற) காக்ஷியை—"அறிவு அறும் அறிவானந்த அருட்திருப்பாதம் போற்றி" யிருளோடு மருளும் போக்கி இரவிமதி யொத்திலங்கும் குருபரன் ஆணையாலே குருமொழி கடவாச் செல்வர், மறுமொழி கூறலாற்றார், மாறுசொல்பேசாமௌனத் திருந்திருந்தேகமாகி, ஏகமும் அத்வைதமான அன்பினில் கண்டுகண்டு அஹம்புறம் ஒத்துவாழ இருவினைத் துவந்துவம் தானும் ஏதிலா மொழியாப் போமே!

இதுதான் "அதி நிஜம்"—அதாவது சந்தேக விபரீதமற்ற உண்மை. அதிபதத்தால் சந்தேக சுபாவநீக்கமும், நிஜபதத்தால் விபரீத வேற்றுமை நாசமும் வித்திக்கச் செய்தபடி யென்றுணர்க. இப்படிப்பட்ட 'குருபூஜை' செய்ய இந்த ஆகஸ்டுமீ 28-உ சுக்லபஞ்சமியோடு சுவாதி நக்ஷத்திரங்கூடிய சோமவாரத்தன்று கோடம்பாக்கம் சென்று குருமடதரிசனம் செய்து பின் திரும்பினோம். திரும்பி வரவும் ஸ்ரீ மாணிக்க சித்தர் திருவருளைச் சிந்தித்திருக்க, அவர் சிஷ்யரைக்கேட்ட கேள்விக்கு அவர் மறுமொழி சொல்லாவிடினும் அதற்கு உத்தரம் (ஆகாசவாக்காகத் தானே பிறந்தது. பிறந்ததோர் புரைவாக்கைப் பச்யந்தி தன்னிலேற்ற, வக்யந்திதானுமந்த மத்யமை வாக்குத்தானுப் பூமத்தினிலிருந்திலங்க, வைகரி வாக்கிலஃதை வரைந்திடக் குறிபார்த்திட்டேன். பார்த்திட்ட குறியதனால் இருதயத்தில் சோதிகாண, இன்பரஸ மதிலிருந்து தானேயூற, அதையறிந்து அமிர்த மென்றன்போடுண்டு, அலைபாயாமல் மனம் நிறுத்தி மௌனம் பூண்டேன்!—'பரம கைலாச'மென்ற வெளியுங்கண்டேன். கண்டதோர் வெளியில் உண்டதோர் உண்மையை "விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர்" என்றவர்திருமுறைப் படியேயானும் ஊமையர் வார்த்தையால் உரைத்திடக்கேண்மினோ! "கேட்டவர்க்கழிவில்லை, கேளார்க்குச் செவியில்லை: கேட்டுங்கேளாத சிர்மூடர்க்கறமில்லை, பொருளில்லை, இன்பமொடு வீடில்லை, காடில்லை நாடில்லை, கர்மியவன் தர்மியாகான்" என்றுரை செய்தனன் என்னுருவழித்துப் பொன்னுருத்தந்த புநிதனும் மாணிக்க வித்தன் தானே.

"ஆமப்பா தேகமென்ற பஞ்சபூதம்
அடங்கியொன்றாய் நின்றவிடம் ஆர்தான்காண்
நாமப்பா சொல்லுகிறோம் மைந்தாகேளு! [பார்!
நாட்டமென்ற பூதமைந்தும் நாவென்றெண்ணி
தாமப்பா தன்னிலையாம் தமருக்குள்ளே
தன்னறிவே பூரணமாய்த் தானேசென்று
ஓமப்பா வென்றுமன துன்னியாட
ஊடுருவிப் பாய்ந்துமன மொடுங்குங்காணே!"

மனமொடுங்கப்பெற்ற சற்சிஷ்யனும் மைந்தனுக்கு பரமகுரு தரிசனங்காணக் இடைத்தற் பொருட்டு ஸர்வகாரண பூதாசக்தியான ஸ்ரீகுரு தானும் 'தண்டுலி' என்கிற மூலிகையைக் காட்டி, ஸ்வர்ணாகாரமான பைம்பொன் செம்பொன் நிறம் விளங்கப் பாலொழுகும் அப்பச்சிலைத்தண்டை அம்மான்பச்லசயாய்ப் புசிக்கச்செய்து "கோனான(இறைவனான) குருபீட மானவீட்டைக் குறிப்பறிந்து வணங்குதற்கு" வழிசென்றனரே!

'காணுதஅந்தரங்க சுஷும்னைவீடு!
கண்ணான மணிவீடு கமலவீடு!
தோணுது தோன்றுகிற ஜோதிவீடு!
ஜோதிர்மய மானசிவ கயிலைவீடு!
வானான தேவர்களும் சிஷிகள்சித்தர்
வரிசையுடன் தான்வணங்கி மகிழ்ந்தவீடு!
கோனான குருபீட மானவீட்டைக் [பாரே!"
குறிப்பறிந்து வணங்குதற்குச் சொன்னேன்

"பாரப்பா மனமேது தியானமேது!
பதிவான சரியையொடு ஞானமேது!
நேரப்பா விழிமடவார் மயக்கமேது!
நிஜமான மக்களொடு சுற்றமேது!
காரப்பா உபதேச குருத்தானேது!
கருவேது கைபாக முறைதானேது!
சாரப்பா உடலேது உயிர்தானேது!
தகமையில்லாப் பெருவெளியில் சாருந்தானே!"

"தானென்ற ஓங்காரக் கம்பமாச்சு!
சகையுடன் அகாரமங்கே பிறந்ததாச்சு!
வானென்ற வழியறியார்க் கொன்றுமில்லை!
மகத்தான பூரணத்தை மகிழ்ந்துகொள்ளு!
ஊனென்ற உடலுயிரும் நாதவிந்து!
ஒடுங்கிநின்ற சுழினையடா அண்டமேரு!
கோனென்ற குருபீட மானமேரு'ன்
குறியறிந்து நெறிதமர்க்குள் குணமாய்நில்லே!"

"குணமான மந்திரத்தைச் சொல்லக்கேளு!
குருவான அகாரமொடு உகாரத்தோடு
இனமான மகாரமொடு மூன்றுஞ்சேர்ந்தால்
இருத்துமடா சிவயோகத் தின்பமாக!
கனமான உச்சிவெளி சுழினைமூலம்
கண்ணறிந்து விண்ணதனைக் கருவாய்ப்பாரு!
மனமான பஞ்சஅறை † வாசல்காண
மவுனமுடன் ஓம்சிவயவசி யென்றானே *!"

* "ஊனுவது சுழிமூனையில் 'வங்' 'சிங்'என்று
உண்மையுடன் அண்டவெளிக் குள்ளேசென்று
காணுவது ரேசகபூரகமாய் நின்று
கலையறிந்து கும்பகத்திற் கனிந்துகொண்டால்
தோணுவது என்னென்று சொல்வேனப்பா!
தூண்டாத மணிவிளக்கின் சோதிதன்னைப்
பேணுவதாற் கயிலாச தேகமாச்சு
பேரண்டத் துச்சிவெளி மகாரமாச்சே!"

இப்படி ஸ்தூல சூக்ஷ்ம காரணமாகிய தேகத்திரியங்களும் பழுத்து விழுந்துபோக, அவைகளை யபிமானித்திருந்த பெத்தனும் ஜீவன்தான் முத்தனாகத் "தூண்டாத மணிவிளக்கின் சோதி தன்னைப்பேணி" "கயிலாசதேகம்" என்னும் ஜோதிர்மயமான அழியாத தேவதாரூபம் பெற்று, சாலோக, சாமீப்ய, சாரூப, சாயுஜ்ய பதமுத்தி லித்தியினால், "பேரண்டத் துச்சிவெளி" கண்டு காரண பஞ்சாக்ஷரத்தால் அதையுங் கடந்து துரிய வடிவினனாய்த் துரிய பஞ்சாக்ஷரமாம் "சிவயவசி" தரிசனஞ் செய்துகொண்டு, அங்கிருந்து ஓங்காரக் கம்பத்தின் உச்சியேறி உடலுயி ரொன்று முண்மையறிந்து "ஊனுடம்பாலயமா" யமர்ந்திருத்தலே நிஜமான சமாதி தரிசனமாம். இந்த சமாதி தரிசனம் காணவே, ஆகஸ்டுமாசம் 28உ சுக்ல பஞ்சமியோடு சுவாதி நக்ஷத்திரங் கூடிய சோமவாரத்தன்று "கோடம்பாக்கம்' சென்று குதூஹலம் நிறைபக் "குருபூஜை" செய்து வந்தோம். அப்பூஜை மஹத்துவத்தை உள்ளத் துணர்ந்த துணர்ந்தபடி சொன்னேன். பஹிர்முகத்தி லெல்லாம் பயித்தியக் காரத்தனமே! கு-ரு, அதாவது, இருளைப் போக்குகிறவர் • குரு. "குருபூஜை', செய்வதாவது "தூண்டாத மணிவிளக்கின் சோதிதன்னைப் பேணுவதாம்." இந்தக் குருபூஜை செய்தால் "கயிலாசதேகம்" எனும் தேவதாஸ்வரூபம் சித்திக்கும். அப்பொழுது மந்திர யந்திர தந்திரங்க ளெல்லாம் சொன்னபடி கேட்கும். ஒரு சிறு பச்சிலையுங்கூட சின்மயானந்தமாய் விளங்கி நாதப்பாலொழுக மவுனப்பிரசங்கம் செய்யும். ஸ்ரீமாணிக்கஸ்வாமிகள் மவுனப்பிரஸங்கம் கேட்கப்பெறும் பேறுபெற்ற விசேஷத்தால் தண்டுலம் (அரிசி) போல் வித்தையுடைத்தா யிருப்பதால் "தண்டுலி" † என்னும் பெயர்பெற்றுப் பைம்பொன், செம்பொன், நிறம் பொதிந்து பூத்துப் பூரித்துப் பாலொழுக விளங்கிய சித்தர்மூலிகையாம் திருமூலப் பச்சிலைக ளிரண்டு செய்ததோர் திவ்யப் பிரசங்கத்தைக் கேட்டு "சகமார்க்கம் புலனொடுக்கித்,

† 'அஞ்சபை' என்றும்பாடம்.
* 'ஊன்று' என்பதன் திரிபு.

† "தண்டுலம் இவ பீஜாரி அஸ்மிந் ஸந்தி இதி தண்டுலி".

அதாவது "தண்டுலம் (அரிசி) போல விதைகள் இதில் இருக்கிறபடியால் தண்டுலி யென்று பெயர்."

தடுத்துவளி யிரண்டுஞ் சலிப்பற்று, முச்சதுர முதலாதாரங்கள் அகமார்க்கமறிந்து, அவற்றி னரும்பொருள்க ளுணர்ந் தங்கணேந்துபோய் மேலேறி, அலர்மதி மண்டலத்தின் முகமார்க் கவமுது[ண்டு]டல, முட்டத்தேக்கி, முழுச் சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகளுக அஷ்டாங்க யோகமார்க்க முற்றும், உழத்த லுழந்து, சிவன் தனுருவத்தைப்பெற்று" அம் மூலிகைகள் செய்த அவாந்தரமான மௌனப் பிரசங்கத்தின் கருத்தைக் 'கருத்தரிக்க' வெடுத் துரைத்தேன் ஸ்ரீ மாணிக்க சித்தர் தம் மௌ னப் பிரஸங்க மகிமையினால்.

"அறிவினாலையைந்தாக அறிவித்தவரசே போற்றி!
அறிவினாலொன்று முன்னாதிருந்திடவமைத்தாய் போற்றி!
அறிவுபேரின்பமாகவளித்திடுமத்தாபோற்றி
[அறிவறுமதிவானந்த அருட்திருப்பாதம்போற்றி!"

ஓம்தத்ஸத்.

———:(o):———

EXTRACT.

COCOANUT PLANTING.

தென்னந்தோப்பு வைத்தல்.

சில வருஷங்களுக்கு முன்னால் தேங்காய் ஒன்று 4-பை முதல் 6-பை வரையில் தேங்காயின் பருமனுக்குத் தக்கபடி விற்றுக்கொண்டிருந்தது. இப் பொழுதோ சென்னையில் தேங்காய் ஒன்று ஒரு அணா முதல் ஒன்றரை அணா வரையில் விற்று வருகிறது. அதாவது ஏறக்குறைய மூன்றுபங்கு விலையாகியிருக் கிறது. சரியானபடி மழைகள் பெய்யாததால் உண வுப் பொருட்களுக்கெல்லாம் விலையேறி யிருப்பதைப் போல் தேங்காய்க்கும் விலை யதிகரித்திருக்கிறதென் பது பொதுஜன அபிப்பிராயம். இப்படி அபிப் பிராயப்படுவது சரியன்று. ஏனென்றால் விசேஷ மாய் தென்னந்தோப்புகள் வைத்திருப்பது நீர்வளம் நிலவளம் நிறைந்த இடங்களிலானதாலும், மழையின் உதவியை எதிர்பாராமல் எப்போதும் தண்ணீர் பாய்ச்சக்கூடிய இடங்களிலானதாலும், மானாவாரியை நம்பி ஒருவரும் தென்னந்தோப்பு வைக்கமாட்டார் கள். எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினாலும் மழைக்குச் சமானமாகுமென்று நாம் சொல்லவில்லை. என்றா லும் தென்னம்பிள்ளைகளுக்குப் போதுமானபடி தண்ணீர் இறைத்து வந்தால் மழையில்லாமற் போன போதிலும் அதன் மகசூலில் விசேஷமாய் வித்யாசப் படாது. முன் விளைவடைந்ததைப்போல் இப்போ தும் விளைந்து வந்தால் விலை யதிகப்படவேண்டிய காரணமென்ன வென்னும் கேள்வி பிறக்கலாம். பொதுவாக இதற்குப் பல காரணங்கள் கூறுகிறார் கள். அதாவது முன்னாலிருந்த கூலியைவிட இப் போது அதிகக்கூலி கொடுக்கவேண்டியிருக்கிறதென் றும், எருவின் கிரயம் அதிகரித்திருக்கிறதென்றும், ஆர்பத்நட் கம்பெனி அழிந்துபோன பிற்பாடு நிலக் கிரயம் அதிகரித்திருக்கிறதென்றும், நாகரீகம் அதி கமாக அதிமாகக் காலையில் ஜனங்கள் பழையசாதம் சாப்பிடுவதை விட்டு இடியாப்பம், ஆப்பம், பிட்டு முத லிய தேங்காய் சேரும் பலகாரங்களைச் சாப்பிடுவதால் தேங்காய்கள் அதிகமாய்ச் செலவாகிற தென்றும் அதனால் விலை அதிகரித்திருக்கிறதென்றும் நினைக் கிறார்கள்.

விலை அதிகமானதற்கு இவைகள் மட்டும் முக்கிய மான காரணங்களல்ல. பின் என்னதான் முக்கிய காரணங்களென்றால் ஐரோப்பியர்கள் கொப்பரைத் தேங்காயிலிருந்தும், தேங்கா யெண்ணெயிலிருந்தும் அநேக உபயோகமான பதார்த்தங்கள் செய்வதற் காக இந்தியாவிலிருந்து தேங்காய்களையும் தேங்கா யெண்ணெயையும் ஏற்றுமதியாக்கிக்கொண்டு போவ துதான். இப்போது மேல் நாட்டாருக்கு எவ்வளவு எண்ணெய் வேண்டியதா யிருக்கிறதோ அவ்வளவு எண்ணெய் நமது தேசத்தில் அகப்படவில்லை. ஆகை யால் விலைகளை நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். தேங்காய்களாய்விற்பதைவிடதேங்காய் யெண்ணெய் செய்து விற்பதில் இவர்களுக்கு அதிக இலாபம் கிடைப்பதால் விசேஷமாய்த் தேங்காய்களை அனுப்புவதில்லை. நம்மிற்சிலர் தேங்காயெண்ணெயை அப்பளம் வறுப்பதற்கும், வடை முதலிய பலகாரங் கள் செய்வதற்கும், கறிகள் தாளிப்பதற்கும், மருந்து கள் செய்வதற்குமட்டும் உபயோகிக்கிறோம். ஐரோ ப்பியர்களோ தேங்கா யெண்ணெயிலிருந்து நானாவித மான சோப்புகளும், தேங்காய் சிறட்டைகளிலிருந்து விதம் விதமான பத்தான்களும் (Buttons) தேங்காய் நாரிலிருந்து புருஷ்களும் (Brush) தேங்காயிலிருந்து

நெய்யும் செய்து விசேஷ இலாபம் பெறுகிறார்கள். தேங்காயிலிருந்து செய்யப்படும் நெய்க்கும் வெண் ணெய் உருக்கி எடுத்த அப்பட்டமான நெய்க்கும் கொஞ்சமாவது வித்யாசமில்லையாம். குழந்தை முதல் நல்லநெய் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்களால் கூட தேங்காயிலிருந்து செய்யப்படும் நெய்க்கும் அப்பட்ட மான நெய்க்கும் வித்யாசம் கண்டு பிடிக்க முடியா தாம். இப்போது இவ்வியாபாரம் செய்வதற்காக கொழும்பிலும் சீமையிலும் பெருத்த விடுமுதலோடு ஒரு வியாபாரஸ்தலம் ஏற்பட்டிருக்கிறது. இதில் நாளொன்றுக்குத் தற்காலம் இலட்சம் தேங்காய்கள் வாங்கிவருகிறார்கள்.

சீமையிலோ தேங்காயெண்ணெய் வீசை ஒன்றுக்கு ஒருரூபாய் வரையில் கொடுத்து வாங்குகிறார்கள். இவ் வியாபாரம் சீமையோடு மட்டும் நிற்கவில்லை. இப் போது அமெரிக்கா தேசத்து வியாபாரிளும் இதில் ஊக்கங்காட்டி வருகிறார்கள். எல்லா ஜாதியாரிலும் ஜெர்மனி தேசத்தார்தான் அதிகவியாபாரம் செய் கிறார்கள். அவர்கள் நாளொன்றுக்குப் பதினாயிரம் மணங்கு தேங்காய்நெய் செய்து விற்கிறார்கள். பிரா ன்ஸ் தேசத்தாரோ அதிகமாய்க் கொப்பரைத்தேங் காய் வாங்கிவருகிறார்கள். புதுச்சேரியில் தேங்காய் நெய் செய்வதற்காகச் சுற்றுப்பக்கங்களிலுள்ள தேங் காய்களெல்லாம் வாங்குவதோடு வெளியிலிருந்து தேங் காய்கள் வரவழைக்கிறார்கள். இன்னும் இருக்க இருக் கத் தேங்காய்களுக்கு கிராக்கி அதிகமாய் ஏற் பட்டு விடுமே தவிர விலை இறங்காது. நமது விவசாயிகளோ தாங்கள்தான் அதிக புத்திசாலிக ளென்றும், இப்பூலோகத்திலுள்ள மற்றவர்களெல் லாம் ஒன்றும் தெரியாத விளையாட்டுப்பிள்ளைகளென் றும், அவர்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும் அவர் வஹித்து வரும் பெரிய உத்தியோகங்களுக்காக அவ ர்கள் நேரில் சொல்லும்போது நல்லது, நல்லது என்று தலையை யசைத்துக்கொண் டிருந்துவிட்டு எழுந்து போகுமுன்னமே அதையெல்லாம் மறந்தா வது போவார்கள் அல்லது அதைக்குறித்து ஏளனமா யாவது பேசிக்கொண்டு போகிறார்கள். இப்படிச் செய்யாமல் விவசாய அனுபோகமுள்ள பத்திரிகை களில் எழுதும் விஷயங்களையும், விவசாய டிபார்ட் மெண்டாரால் ஜனங்களின் உபகாரார்த்தமாய்ப் பிர சுரித்து இனாமாக அனுப்பும் துண்டுப் பத்திரிகை களிலுள்ள விஷயங்களையும், விவசாயத்தில் அனு போகமும் பாண்டித்யமு முள்ளவர்கள் உபந்நியாசம் செய்யும் விஷயங்களையும் தங்களுக்குள்ளாக நன்றாய் ஆலோசித்துப்பார்த்துச் சரியாயிருக்குமா சரியாயிருக் காதா வென்று பார்த்தார்களானால் அவர்களுக்கே உண்மை வெளியாகும். இப்படி எப்போது நமது விவசாயிகள் செய்ய ஆரம்பிக்கிறார்களோ அப்போது தான் நமது தேசத்து விவசாயம் முன்னுக்கு வரும். நிற்க இப்போது நாம் மேலேசொன்ன விஷயங்க ளால் இனி யிருக்க இருக்க தேங்காய்கள் கிராக்கி யாகுமேதவிற இறங்காது: ஆகையால் ஒவ்வொரு கிருஷிகரும் தங்கள் எவ்வளவு நிலத்தில் தென்னந் தோப்புகள் வைத்து சரியாய்ப் பாதுகாத்துவர முடி யுமோ அவ்வளவு செடிகள் வைத்து உண்டாக்கினால் நல்ல இலாபம் பெறுவார்கள். "கிருஷிகன்" சந்தா தாரர்களாவது இப்படிச் செய்ய பின்னடைய மாட் டார்களென்று நம்புகிறோம். தென்னை பயிர்செய்வ தைக்குறித்து இனி சுருக்கமாய்ச் சொல்வோம்.

தென்னைமரமானது நீர்வளம் மிகுந்த எல்லா இட ங்களிலும் பயிர் செய்யலாம். இருந்தாலும் மணற் பாங்காயுள்ள சமுத்திரக்கரை யோரங்களில்தான் இது விசேஷப் பலனைத் தருகிறது. சவுக்குமரத் தைத்தவிர விசேஷமாய் வேறு பயிர்செய்யக்கூடாத அநேகமாயிரம் ஏக்கரா மணல்பாங்கான நிலம் சமுத் திரக்கரை யோரமாய் நமது இராஜ தானியிலிருக் கின்றன. அந்நிலங்கள் வெகுவாய் தரிசாய்த்தான் கிடக்கின்றன. இந்நிலங்களைத் தர்க்காஸ்து கொடுத் தாவது அல்லது சொற்பமாய் விலைகொடுத்தாகிலும் பெற்று அந்நிலங்களில் தென்னம்பிள்ளைகளைவைத்து உண்டாக்கினால் விசேஷ இலாபந்தரும். சமுத்திரக் கரையோரமா யில்லாதவர்கள் மணற்பாங்கான ஆற் றோரத்து நிலங்களிலும் வைத்து உண்டாக்கலாம். இப்படியும் செய்யச்சாத்யப்படாதவர்கள் தங்கிளிட மிருக்கும் மணற்பாங்காண நன்செய் அல்லது புன் செய் நிலங்களில் வைத்தும் உண்டாக்கலாம். இத ற்கு முக்கியமாய் அத்யாவசியமானது என்னவென் றால் இதன் வேர்கள் சுலபமாய் பூமிக்குள் புகும்படி யான மண்ணும் ஜலாதாரமுந்தான். எங்கெங்கே இவ்விரண்டும் அபிரிமிதமா யிருக்கின்றனவோ அங் கெல்லாம் தென்னை பயிராகும். வெகுஆழம் வரை யில் வண்டல்சேர்ந்தால் கொழுத்த மண்ணாயிருக்கும் நன்செய்களில் இது சரியாய்க்காய்ப்பதில்லை. ஏனெ ன்றால் செடிகள் வளத்தில் கொழுத்துப் போகின்

தன. சமுத்திரக்கரையோரமா யில்லாத இடங்களில் ஒரு செடிக்கு ஒருபடி உப்பு வீதம்வைப்பது அதிசிலாக்கியமாகும். தேங்காய்களில் அநேகவிதங்கள் இருந்தபோதிலும் (1) பச்சைகாய்ச்சி, (2) கவுளிபாத்ரம், (3) நக்குவாரி, (4) செவ்விளநீர், (5) யாழ்ப்பாணம், (6) கோவா என்னும் ஜாதிகளே முக்கியம்.

1. பச்சைகாய்ச்சி.—காம்பு காய்கள் முதலியன பச்சை நிறமாயிருக்கும். காய்கள் உருண்டையாயும் குலை கனத்து மிருக்கும். இந்த ஜாதி ஆறு வது வருஷம் முதல் காய்க்கும்.

2. கவுளி பாத்ரம்.—காய்கள் மஞ்சள் நிறமாயாவது ஊதா நிறமாயாவது இருக்கும். காய்கள் அவ்வளவு பருமனு யிராமற்போனாலும் ஏடுத்தரமாயிருக்கும். ஆனால் கொட்டாங்கச்சியும் அதற்குள்ளிருக்கும் பருப்பும் அதிக கனமாயிருக்கும். இதுவும் ஏறக்குறைய பச்சைகாய்ச்சியைப் போலவே காய்க்கும்.

3. நக்குவாரி.—இது மூன்றுமுதல் ஐந்து வருஷத்திற்குள்ளாக காய்க்க ஆரம்பித்து விடுகிறது. ஆனால் செடி நீடித்து நிற்பதில்லை.

4. செவ்வீளநீர்.—காய், பூ, காம்பு இவைகள் சிகப்பாயிருக்கும். காய் சிறியதாயும் உருண்டையாயுமிருக்கும். இதற்குள்ளிருக்கும் தண்ணீர் (இளநீர்) வைகுரிகண்டிருக்கிற காலங்களில்கூட ஔஷதமாகக் கொடுக்கலாம். இது ஏழாவது வருஷத்தில் காய்க்கிறது.

5. யாழ்ப்பாணம்.—இதுவும் பச்சைநிறம் சம்பந்தப்பட்ட காய்தான். ஆனால் இதன் காய்கள் பெரியதாயிருக்கும். உள்ளிருக்கும் பருப்பு அவ்வளவு கனமாயிருப்பதில்லை.

6. கோவா.—அலங்காரத்திற்காகவும், காஷிச் சாலைகளுக்குக் கொண்டுபோகக் கூடிய அவ்வளவு பருமனும் உள்ளது. இது குலைக்கு சுமார் இரண்டு காய்களுக்கு அதிகமாய்க் காய்க்கா தாகையால் வியாபாரத்திற்கு லாயக்கில்லாதது.

வித்துதெரிந்தெடுத்தல்.—இளமரமாயும், கிழமரமாயுமில்லாத நடுத்தரமான மரத்தில் நன்றாய் முற்றின நெற்றுக்களாய்ப்பார்த்து, காய்களை அறுத்து அங்கிருந்து கீழேபோட்டால் உடைந்து போகுமாதலால் அப்படிப் போடாமல் குலைகளைக் கயிறுகொண்டு கட்டி மெதுவாக இறக்கிக்கொண்டுவந்து வைக்க வேண்டும். காய்கள் இறக்கிய ஒரு மாதத்திற்குப் பின் நடுவது வழக்கம். மூன்று அடி ஆழத்திற்கு நன்றாய்த் தோண்டி எருக்கொட்டி காய்களைப் பூச்சி கரையான் முதலானவைகள் அரிக்காதபடி போதுமானபடி சாம்பலும் உப்பும்போட்டு ஒரு அடி தூரத்திற்கு ஒரு தேங்காய் வீதம் தேங்காய் சற்றுமேலே தெரியும்படி நடுகிறார்கள். அப்பால் அப்பாத்திகளில் ஈரம் காய்ந்து போகாத படிக்குத் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள். இப்படிச் செய்தால் சுமார் மூன்று மாதத்தில் குருத்து வரும். நெற்றுகளை நடுவதற்குமுன் ஒன்று அல்லது ஒன்றரை மாதத்திற்குத் தண்ணீரிலே போட்டு வைத்திருந்து அப்பால் நட்டால் ஒன்றரை அல்லது இரண்டு மாதத்திற்குள் குருத்து வருகிறதாம். இப்படிச் செய்வதில் தண்ணீர் இறைப்பு குறைவதுடன் ஜல்தியில் முளையுறுவதால் கரையான் முதலிய பூச்சிகளால் கஷ்டமடைவது குறையும். இம்முறை யனுசரிப்பதே நலம். நெற்று நடுவதில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் நெற்றுக்குள்ளிருக்கும் இளநீர் பூராவாய்ச் சுண்டிப்போகக் கூடாதென்பதுதான். குருத்து வந்த ஆறுமாதத்தில் செடிகள் நடலாம்.

செடிகள் வைத்தல்.—தென்னம் பிள்ளைகள் வைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்றாய் அலர உழுது நீர் நிலவளங்களுக்குத்தக்கதாகப் பதினைந்து அடி முதல் இருபது அடி சதுரத்திற்கு ஒரு குழி வீதம் தோண்டவேண்டும். அப்படித்தோண்டும் ஒவ்வோர் குழியும் ஒவ்வொரு சதுரகெஜத்திற்குக் குறையாமலிருக்கவேண்டும். (அதாவது மூன்றடி நீளம் மூன்றடி அகலம் மூன்றடி ஆழம்). இப்படிக் குழி தோண்டி நன்றாய்க் காயப்போட வேண்டும். குழி நன்றாய் காய்ந்தபின் சப்பாத்துக்கள்ளி அதன் வேர், வேர்ப்பக்கத்திலுள்ள மண் முதலானவை கொண்டு வந்து போடுவதுடன் கொஞ்சம் மக்கிய சாணியும் போட்டுக் குழியின் பாதிபாகத்தை நிரப்புவதுடன் ஒவ்வோர் குழிக்கும் ஒருபடி உப்புவீதம் போட வேண்டும். இப்படிப்போட்டுக் குழிகள் நன்றாய் ஆறியபின் தென்னம் பிள்ளையைக் கரையான் அரிக்காமல் இருப்பதற்காக அகப்படுமானால் போதுமானபடி மரச்சாம்பலும், இல்லாவிட்டால் சாதாரண சாம்பலாவது போட்டுத் தென்னம்பிள்ளைகளை நட்டு வெயில்படாதபடி அதற்கு மூடாப்பு போட வேண்டும். (தென்னம்பிள்ளைகளை மழைகாலத்தில் நடுவது

தான் சிலாக்கியம்). இருபது அடிக்கு ஒரு பிள்ளையாகவைப்பதுதான் சிலாக்கியம் குறைத்துவைத்தால் இடம் போதாததால் மரங்கள் கோணிக்கொண்டே போவதோடு சரியாயும் காய்க்காதென்று முன்னொரு தரம் கிருஷிகனில் தெரிவித்திருக்கிறோமல்லவா? 15-அடிக்கு ஒன்றாக நட்டால் சுமார் 210 பிள்ளைகளும் 20 அடிக்கு ஒன்றாக நட்டால் சுமார் 120 பிள்ளைகளும் ஏக்கருக்குச்செல்லும். செடிகள் வாங்குவதைவிட நாமே நாற்றுவிட்டு வைப்பதே நல்லது.

பின்பருவம்.—தென்னம்பிள்ளைகள் வைத்து வேர் நன்றாய் ஊன்றும்தரையில் இரண்டு நாளைக்கு ஒரு தண்ணீரும் வேர் ஊன்றியபின் ஈரம் காப்பதற்குப் போதுமானபடி அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி வாரத்திற்கு இரண்டு தண்ணீரோ அல்லது ஒரு தண்ணீரோ இறைத்து வரவேண்டும். இப்படி ஐந்து வருஷங்கள் வரையில் இவைகளை அதி ஜாக்ரதையாய்க் காப்பாற்றவேண்டும். அதற்குப்பின் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதும் வேண்டாததும் அந்தந்த இடத்தைப் பொறுத்தது. கேவலம் வெறும் மணலாயில்லாத மற்றநிலங்களில் பிள்ளைகள் நட்ட இரண்டு அல்லது மூன்றுவருஷம் வரையில் காய்கறி, இஞ்சி, மஞ்சள், வெங்காயம் அல்லது சொற்ப தானியங்களைச் சாகுபடி செய்யலாம். இப்படிச் செய்வதால் பிள்ளைகளுக்குத்தண்ணீர் இறைக்கும் செலவு தள்ளிப்போவதோடு நிலமும் அடிக்கடி கிளறப்பட்டும் எருப்போடப்பட்டும் வருவதால் நிலம் மிகுந்த வளமாயிருக்கும். இப்படிப் பயிர்செய்யப் படாத இடங்களில் வருஷத்திற்கு இரண்டொரு முறையாவது நன்றாய்க்கொத்தி செடிகளுக்கு எருவிட வேண்டும். ஐந்து வருஷங்களுக்குப் பின்னால் ஒவ்வொரு வருஷத்திலும் மழைகாலத்தில் செடிகளைச் சுற்றி ஒவ்வொரு பக்கத்திலும் 4 அடி தூரத்திற்கு நன்றாய் ஆழக்கொத்தி வேர்களை அப்புறப்படுத்திவிட்டு தொழு எரு, சாம்பல், இலைச்சருகுகள், சப்பாத்துக்கள்ளி, தோல்எரு, எலும்புத்தூள், உப்பு இவைகளில் எவை சுலபமாய் அகப்படுமோ அவைகளைப்போட்டு மழை ஜலம் வெளியே போகாதபடி பெரிய பாத்திகளாய்க் கட்டவேண்டும்.

சாதாரண ஜாதி தென்னைமரங்கள் நன்றாய் போஷிக்கப்பட்டு வந்தால் ஆறுவது வருஷம் முதல் காய்க்க ஆரம்பிக்கும். சரியானபடி பின் பருவம் செய்யாவிட்டால் பத்து பதினைந்து வருஷங்கள் வரையில் கூட காய்க்காது. பின் பருவங்களெல்லாம் சரியானபடி செய்து மரங்கள் நட்டையும் இலையுமாய் நின்றால், செடிகளுக்குக் கொழுப்பு அதிகமாயேறியிருக்கிறதென்று தெரிந்துகொண்டு மரங்களைச்சுற்றி ஆழமாய்க் குழிகள் தோண்டி அவைகளில் சரல் (Gravel) கொண்டுவந்து கொட்டி மண் போட்டு மூடிவிட வேண்டும். இப்படிச்செய்தால் கொழுப்பேறிய செடிகள் காய்க்கும்.

வயது.—தென்னை மரமானது 70 வருஷம் முதல் 100 வருஷம் வரையில் ஜீவித்திருக்கும். இருந்தாலும் 70 வருஷத்திற்குமேல் அது காய்ப்பது அபூர்வம். தென்னை மரத்தைச் சுற்றிலும் மட்டைகள் விழுந்த அடையாளங்கள் நன்றாய்த் தெரியும். ஆறு மாதத்திற்கொரு மட்டை விழுவதால் அவ்வடுக்களை எண்ணிப்பார்த்தால் மரத்தின் வயது தெரிந்து கொள்ளலாம்.

மகசூல்.—ஒரு வருஷத்தில் ஒரு மரமானது 10 குலை தள்ளும். குலை யொன்றிற்குப் பத்துக்காய் முதல் 20 காய்கள்வரை காய்க்கும். 20 அடி தூரத்திற்கு ஒரு மரமாக நட்ட கணக்கையும் குறைந்தது குலைக்குப் பத்துக்காய்கள் அகப்பட்டதாயும் வைத்துக்கொண்டாலும் ஏக்கர் ஒன்றுக்கு 120 செடிக்கு செடி ஒன்றுக்கு நூறு காய்களாக வருஷத்திற்கு 12,000 காய்கள் அகப்படும். காய் ஒன்று 9-பைவீதம் குறைந்த விலையாகப் போட்டுக்கொண்டாலும் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு அதிகம் அகப்படும். செலவு ரூபாய் இருநூறு போனாலும் ஏக்கர் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் இலாபம் அகப்படும். நாம் மேலே சொல்லியபடி இதை வாசித்தவுடன் மறந்து போகாமல் சற்று இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி இலாபம் அடைவார்களென நம்புகிறோம்.

—கிருஷிகன்.

———(:o-:)———

நாகபட்டினம் பக்திமார்க்கசபை.

நாகபட்டினத்தில் ம-ா-ா-ஸ்ரீ எஸ் சடையப்பிள்ளை யவர்களை அக்கிராசனாதிபதியாக வுடைய பக்திமார்க்க சபையின் முதல் வருஷத்தறிக்கைப் பத்திரம் ஒன்று வரப்பெற்றுப் பார்த்து மகிழ்ந்தோம். இச்சபையின் நோக்கம் "அன்பேசிவம்; அதுவே பொருள்" என்றுள்ள அன்புருவாய தெய்வத்தினிடம் பக்தியை விருத்தி செய்வதாம். அன்புருவாய தெய்வம் எப்படிப்பட்ட தெனில்,—

"அன்பெனுங் குடியுளகப்படு மலையே
அன்பெனுங் குடி புகுமரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம்பொருளே
அன்பெனுங் காந்தம் ரமுதே
அன்பெனுங் கடத்துளடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபேரொளியே
அன்புரு வாம்பர சிவமே,"—

என்றதனால் விளங்கும். இந்த அன்புருவான தெய்வம் "அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளா"யிருத்தலால் அப்பரம் பொருளை யறிந்தனுபவிக்க "அன்பு செயல்" எனும் வழியன்றி வேறுவழி யில்லையாம். இவ்வழியை உளவறிந்து விர்த்திசெய்வதே "பக்திமார்க்கமாம்." இந்த பக்திமார்க்கத்தை விர்த்தி செய்யும்பொருட்டு "நாமறிந்ததைப் பிறருக்கு எளிதிலறிவித்தலும், பிறரறிந்ததை நாமறிதலும், மனதிலறிந்த பொருளை வெளியிடும் சொல்வன்மையை விருத்திசெய்தலும், இதன் பொருட்டு தமிழ் ஆங்கில பாஷைகளினறிவை விருத்திசெய்வதும் இரண்டாவதுநோக்கமா." யுடையது இச்சபை. இதன் மூன்றும் நோக்கம் மேற்கூறியபடி 'எம்மதமும் சம்மதமே' யென்றறிதற் பொருட்டு நம் மதசாஸ்திரங்களையும் பிறமத நூல்களையும் ஆராய்வதாகும். இச்சபையில் "அன்பு" சிவகாருண்யம் என்பதை யங்கீகரிக்கும் எவரும் இதற்கு அங்கத்தினராவதற் குரியர். இச்சபைக்கு அக்கிராசனதிபதியால் ஒரு கட்டிடம் புதுப்பித்து விடப்பட்டிருக்கிறது.

——:-(o)-:——

ஜாக்ரமே கர்மம் கர்மமேதேஹம்.

——:-:——

மனிதன் தினந்தோறும் ஜாக்கிரஸ்வப்ன சுஷுப்தி என்னும் மூவிதமான அவஸ்தைகளை அனுபவிக்கிறான். அப்படி அனுபவிக்கையில் விவகாராதி சம்சாரத்தின்கண் சாக்கிரமம் முழுமையும் அனுபவித்த ஜீவன் அலுத்துச் சலுத்து இவைகளில் சுகத்தைக்காணமல், எப்படி பக்ஷியானது அதிவேகத்தோடு கூட்டில் சுகமுண்டாகுமென படுக்கைக்கு ஓடுகிறதோ அப்படி ஜீவனும் புண்ணிய பாபத்தைப் புசிக்கும்பொருட்டு ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் சுழன்று கர்மமானது நாசத்தை அடைந்த காலத்தில் சுஷுப்தியை அடைகிறான். சுஷுப்தி சுகமென்பதற்கு 'நான் சுகமாக தூங்கினேன்' என்கிற ஜனங்களுடைய அனுபவமே பிரமாணமாக இருக்கிறது. தூக்கமில்லாத அவஸ்தையாம் சுஷுப்தி சுகமுள்ளது என்று கேட்கவேண்டியதில்லை. அப்படி சுக அவஸ்தையில் யாதொரு ஆனந்தமயன் இருந்தானோ அவன் அதிலிருந்து வெளிக்கிளம்பினவுடன் ஸ்தாநபேதத்தால் ஜாக்கிரத்தையாவது அல்லது சொப்பனத்தையாவது அடைகிறான். ஏனென்றால்,

"கர்மஜன்மாந்தரேபூத்யத்தத்யோகாத்பூத்யதேபுனர்"

ஜன்மாந்தரத்தில் செய்த யாதொரு கர்மமுண்டோ அந்த சம்பந்தத்தால் மறுபடி விழித்துக்கொள்ளுகிறான்.

ஜீவன் நேத்திரத்தில் வரும்பொழுது ஜாக்கிரத்தையும் கண்டத்தி லிருக்கும்பொழுது சொப்பனத்தையும் ஹிருதயகமலத்திலிருக்கும்போது சுஷுப்தியையும் அடைந்து ஜாக்கிரத்தில் தேகமுழுமையும் வியாபித்து சேதனான ஜீவன் ஜீவித்து இருக்கிறான்.

அப்படி சுகம் என்றும் துக்கம் என்றும் உதாசீன மென்றும் சொல்லப்பட்ட மூன்றுவிதமான அவஸ்தைகளை அடைந்த ஜீவன் புண்ணிய பாபங்களுக்குத் தகுந்தபடி பலன்களை அனுபவித்து தாழகியும் விழித்தும் இப்படி காலத்தைக் கழிக்கிறான். புல்லாயும் பூண்டாயும் இருந்தநாள் போதாதோ என்று அனேக பெரியோர்கள் பாடி இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஜன்மாக்களை காட்டிலும் அறிவு உள்ளதான மானிடப்பிறப்பை அடைந்தது ஓர் பெரும்பாக்கியமல்லவா. இந்த மானிட ஜன்மத்தை தவிர்த்து வேறுஜன்மாவை அடைந்தாலுஞ் ஞானத்தை அடைய தகர்கனாகிறான். அயோக்கியதையுள்ள அச்சீவர்கள் மானிடப்பிறப்பை மிருகப் பிறப்பாகச் செய்து பிறப்பு இறப்பு என்னும் பந்தத்தில் கட்டுண்டு சம்சார சக்கிரத்தில் சிக்கி சகிக்காதவர்களாய் சாகத்துணிய ஆசைமிக கொள்ளுகிறார்கள். மாயை யாரைவிட்டது! ஐயோபாவம்! வேஷம்போட்டுக் கொண்டு கூத்தாடுபவன்போல், விழிக்கிறதும் தூங்குகிறதுமாக இருந்து காலத்தைக் கழித்துக் காலனுக்கு அற்பிதம்செய்து எனது எனது என்று அபிமானத்தால் "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மனம் புண்ணாகி" அகம்பிடித்து அவாமேலிட்டு அநர்த்தம் விளைவித்து அநாத்மபுத்தியால் தன்னை தூரவிலக்கி, யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல் தானே தன்னைத் தகாதவனாகச்செய்து தர்க்கமென்னும் குதர்க்கவாதம் பேசி குய்யோமுறையோவென்று குழியில்விழுந்து கூக்குரலிட்டு கூண்டுவிட்டோடித் தேடியலைந்து தேகத்தைநாடித் தேங்கியழுது தபிக்கவும் செய்துகொண்டு அவித்தியாவாசனையினால் அழிவையும் அடைகிறான். இப்படி அதோகதியாக அடையும் ஜீவன் மனிதப்பிறப்பில் பிரஹ்மஞானத்தை அடைந்து ஆனந்தமான தேஜோமயத்தில் சேரவும்மாட்டான். என்னென்றால் பிராரப்தத்தால், இப்படி ஜீவன் மூன்று அவஸ்தைகளையும் தாண்டி அப்பாலுள்ள துரிய துரியாதீதமான அவஸ்தைகளை எட்டிப்பார்க்க சக்தியற்றவனாய் சந்ததமும் சம்சாரத்தில் சுற்றித்திரிந்து திக்பிரமைகொண்டு திகிலடைந்து திகைத்துநிற்பன். முப்பாழும்தாண்டி அப்பால் நின்றவர்களுக்கு கண்ணொன்னாத காகியாம் திருநடனக் காகியைக் கண்டு கரைந்து உருகிக்கலந்து, காண்பான் காண்பொருள்காகியென்னும் பேதமின்றி அதுவேயாகி ஆனந்தமயமாக இருப்பர் "அனுபவி" என்னும் மஹத்தான யோகிகள்.

வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

——(:-:)——

Poojah Special Number.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1911ஆவு அக்டோபர்மீ, விரோதிகிருதுவு ஐப்பசிமீ [சஞ்சிகை. 7.

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C. Lalita Publishing Co., Sole Agents and Managers

M. K. Narayanaswami Iyer, B.A. B.L.

Hon. Secy,

Vivekachintamani Pub. Committee.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியிலவரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புரும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது டுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினான் பழனியாண்டவன். வேலுயயிலுந்துணை. ஆண்டானடிமையாய்உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓம்.

In Praise of the Son of God, or

"Kumara-Guru-Paran's Holy Feet,"

"குமரகுருபரனினையடிசரணம்".

(திருச்சிற்றம்பலம்: சிறப்புப்பாயிரம்.)‡

"அருமறையந்தமு மாகமாதிகளும்
தெரிவரும்பரமாய்ச் சத்தாய்ச்சித்தாய்
ஆனந்தமாகி யகண்டாகாரமாய்
தானந்தமில்லாத் தத்துவமுடிவாய்
நித்தமாய்ச்சுத்தமாய் நிருமலவடிவாய்
புத்தமாய்முத்தமாய்ப் பூரணவொழிவாய் *
சாக்ஷாத்காரந் தருபரம்பொருளாய்
மோக்ஷாதிக்ய முதலாய்முதலீறு'
இல்லாவொன்றாய் என்றுமோரியல்பாய்
கல்லாருள்ளத்தில் கண்ணுங்கேபமாய் †
அடியவர்க்கென்றும் அருளாபருளில்
கொடியவர்க்கென்றுங் குறித்திடாவிருளாய்
சகலவுயிர்தொறுஞ் சகலவிடந்தொறும்
புகலொருதன்மையாய்ப் பொருந்தியசிவமே
மன்னுயிர்க்கிரங்கி மனிதவடிவுகொண்டு'
இந்நிலத்தெய்திட தெனைப்பழமலையில்வந்து
அன்னையார்பெரியநா யகியருளாலே
முன்னுறவருளமு துண்டுமூவாது
உரியஞானப்பொரு ளுணராதுணர்ந்து
தாணுவிலெவர்களுந் தாமனுபவித்த
ஸமரஸமெனன ஸதானந்தவாழ்வை
அமையொருகணத்தறிந் தளவில்லீட்டின்பம்
எளிதினிற்பெறவுளத் தெண்ணியெண்ணிரண்
தெளிவுறுசாத்திரந் திருவாய்மலர்ந்தருள் [டாம்
எங்கோன்குமர குருபரனினையடிப்
பங்கயச்செழுந்தேன் பதைப்பறவுண்டு
மும்மலப்பகையொரீஇ முத்திகைக்கோர்
அமலவேந்தாகி யரசுவீற்றிருப்பனே."

‡ From the published work of *Vadasreni Chidambara Swamigal*.

* 'ஒளியாய்' என்றும் பாடமுண்டு.

† அளவற்ற நிறை நிதியாய்.

Think Thought and Prolong Life.

"நினைமின்மனனே! நினைமின்மனனே."

——:(*):——

"Good thinking is the best exercise"
"Good thinking strengthens and prolongs Life."
"Bad thinking wastes and destroys the *life-energy i.e:* Vital force" "Man grows by taking Thought"

"It is impossible to resist the conclusion that All Nature is a Living Thought."—*Professor Fitzgerald.*

"அத்திமுகத்தனை நித்த நினைத்திட
முத்தியளிப்பன் சத்திய மிதுவே."

மனிதன் என்னும் பதம் மன் (=நினைத்தல்) என்னும் தாதுவிலிருந்து வந்தது. நினைக்கலாற்றாதவன் மனிதனல்ல. ஸ்ரீமாணிக்கவாசக ஸ்வாமிகள் "பிறப்பும் இறப்பும் நினைப்பும் மறப்புமாம்" என்று சொல்லியிருக்கிறார். நினைப்பு மறப்பு—இந்த இரண்டினாலேயே மனிதன் சுக துக்கங்களையும் பந்த மோக்ஷங்களையும் அடைகிறான். ஆத்மா ஸ்வயப்பிரகாசமாயுள்ள வஸ்து. அதற்கு நினைப்பு மறப்பு இரண்டு மில்லை. தமிழில் நினைப்பு என்று சொல்வதை ஸம்ஸ்கிருதத்தில் ஸங்கல்பம் என்று சொல்லுவர். நினைவு இல்லாவிட்டால் தேஹத்தில் உயிர் தரிப்பதில்லை. நான் தேஹம் என்கிற நினைவே தேஹத்துக்கு ஆதாரம். இந்த நினைவு அழிந்தால், தேஹமும் அழிந்துபோம். ஆனால் நினைவை அழிப்பது அவ்வளவு இலகுவான காரியமில்லை. ஏனென்றால் நினைக்க நினைக்க நினைவு பெருகும். வித்திலிருந்து மரம் உண்டாவதுபோல் நினைவிலிருந்து ஸம்ஸார விருக்ஷம் முளைத்துக் கிளைக்கிறது. முளைத்துக் கிளைத்துத் தழைத்துப் படர்ந்த ஆல விருக்ஷத்தைப் போன்ற ஸம்ஸாரமானது ஆலம் வித்தைப் போன்ற ஒருசிறு சங்கல்பத்திலிருந்து உண்டாயிருக்கிறது. "அஹம் அஸ்மி"—"நான் இருக்கிறேன்" என்கிற ஸ்வஸ்தமான நினைவிலிருந்து குணபேதங்களினாலும் கர்ம விசேஷங்களாலும் இந்தப் பிரபஞ்சமெல்லா முண்டாயிற்று. "நான் இருக்கிறேன்" என்று சத்தாமாத்திரமாயிருந்த ஆத்மா, அதிலிருந்துதானேயுண்டான சித்விலாஸத்தின் மஹிமையால், "நான் சித்ரூபியாய் இருக்கிறேன்" என்று தன்னைத் தானே அறிந்துகொண்டு சேதனனானான். தன்னைத்தான் சித்ரூபியாயறிந்துகொண்டதிலுண்டான ஆனந்தத்தினால் "நான் ஆனந்தமயமாயிருக்கிறேன்" என்று ஆனந்தாத்மனாக விளங்கினான். இப்படியாக "அஹம் அஸ்மி" என்ற நினைவாம் வித்திலிருந்து "சச்சிதானந்த பிரஹ்மம்" என்கிற பிரஹ்ம விருக்ஷமுண்டாயிற்று.

இந்த விருக்ஷத்திலிருந்து மஹத் முதலாகப் பஞ்ச பூதங்களீறாகவுள்ள கப்புக் கிளைகள் முதலானவை பரிணாம விதிப்படி யுண்டாய் பிரபஞ்சாகாரமாய் விரிந்து விளங்கலாயின. இந்தப் பிரபஞ்சாகாரமான விருக்ஷத்தில் "அஹம் அஸ்மி" யென்ற ஆத்மா சாக்ஷிமாத்திரமாக உயர்ந்ததோர் கிளையில் வீற்றிருக்க, "அஹம் தத்துவம்," என்று நினைத்ததால் துவந்தாகாரமானதாய் "நான் என்றும் நீ யென்றும்" பேதம் பாராட்டக் கற்றுக்கொண்ட சிதாபாஸனான ஜீவன் தன் அபிமான விசேஷத்தால் செய்த கர்மங்களின் பலனான கனிகளைப் புசித்து இன்ப துன்பம், சுகதுக்கம் என்கிற அனுபவங்களையனுபவித்துக் கொண்டிருக்கிறான். இப்படியாக இரண்டு பக்ஷிகள் மரத்தின் கிளைகளில் உட்கார்ந்துகொண்டிருக்க கீழ்க் கிளையிலுட்கார்ந்து கனிகளைப் புசிக்கும் பக்ஷியானது இன்ப துன்பமான சுகதுக்கப் பலன்களை யனுபவித்தலுத்தபோது மேற்கிளையிலுள்ள பக்ஷியைப் பார்த்தது. பார்க்கவும் அதன் புசியாநிலையும் மாறு இன்பமும் அதைப் போலிருக்கில் தனக்கும் சித்திக்கும் என்று அதன் உள்ளத்திற்பட்டது. படவும் அவ்வாறிருக்க நினைத்தது: நினைத்தது பலிக்காமை கண்டு அஃதொன்றையே நினைந்துருகியது. அனலிலிட்ட

மெழுகுபோல் மனமுருகவும் தேஹம் மெலிந்தது. தேஹம் மெலிவு பட்டும் நினைவு குன்றாமல் நினைத்ததே நினைவாக நினைக்க அந்நினைவே கனவாகி தேஹஸ்மரணையற்றது. நினைவே கனவானவிடத்தும் நினைவு குன்றாது நினையத் 'தூங்கியாடும் பம்பரம்போல்' மனம் அதிவேகமாய்ச் சுழலத்துவங்கியது. அந்தச் சுழற்காற்றில் அகப்பட்ட மனக்கரணங்கள் இலையுதிர் காலத்துப் பழுப்பிலைகள் போல் மனதைவிட்டு நீங்கி விழுந்து போயின. இந்திரியாதி மனக்கரணங்கள் விழுந்து போகவும், கனவு, சுஷுப்தி (தூக்கம்) ஆகி சுகநித்திரையுண்டாகலாயிற்று. ஆயினும் ஸூக்ஷ்ம சூக்ஷ்மங்கள் நழுவும்படி நினைந்த நினைவின் வேகமானது நனவுகனவுறக்கம் என்னும் இயல்பாயுள்ள மூன்றவஸ்தையுங் கலந்தும் நில்லாததாகி நிர்விஷயமான மனதிற் புகுந்து ஆட்டியது. நிர்விஷயமானமனது ஸ்பர்சதன்மாத்ரை சம்ஷ்டிராஜஸத்தோடு சேர்ந்ததோர் வியாபக நிலையாதலால் அங்கே ராஜஸத்தின் வேகமும் ஸ்பர்சதன்மாத்திரையான (நிர்விஷய) உணர்ச்சியும் மாத்திரமிருந்தது.

"'உணர்' என்று சொன்னதோர்
சொல்லை மேற்கொண்டு
கணமும் இடைவிடா தென்னுள்
அவளையே உன்னி
ருணமெல்லாந் தீரவல்
வினையது போக்கி நான்
குணமென்னும் குன்றேறி
யவளையே தொழிதனன்."

என்கிற பஞ்சதசாக்ஷரீஸ்தவத்தில், ஏழாவது அக்ஷரத்தின் அதிதேவதையான "சீதகிரண:" என்கிற சந்திரனுடைய ஸ்தோத்திரப்பாவில் சொல்லிய அனுபவம் இதற்கு அத்தாக்ஷியாம்.

"தியானம் நிர்விஷயம்மனஃ" என்ற சுருதி வாக்கியப்படி ஸ்பர்சஉணர்ச்சியை அதற்கு

விஷயமான ராஜஸரூப சலனத்திலிருந்து பிரித்தால், "உணர்வான், உணர்ச்சி, உணர்பொருள்" என்கிற திரிபுடி விளங்கும். உணர்வான் தானே அறிவு; உணர்ச்சிதானே ஸ்பர்சதன்மாத்திரையின் சமஷ்டியுணர்வு; சமஷ்டிராஜஸமே உணரப்படும் பொருளாகிறது. சமஷ்டி ராஜஸமான வியானன் உணர்விலிருந்தும் பிரித்துணரப்பட்டதாகும் பொழுது, அது வலியிழந்து ஸாத்விக சமஷ்டியில் ஒடுங்குகிறது. இப்படி ஸாத்விகசமஷ்டியில் ஒடுங்கிய ராஜஸமானது சலனமற்றதாகி ஸாத்விகமாத்திரமாய் நின்றபொழுது ஸ்பர்ச தன்மாத்ரை யஃதுடன் சேர, மனுகாசம் தானுப் விளங்கும். இந்தஸ்பர்ச தன்மாத்ரைக்கு வியஷ்டியில் ஸாத்விகமாம்ஞானேந்திரியம் த்வக் (தோல்); வியஷ்டியில் ராஜஸமாம் கன்மேந்திரியம் பாணி(கை); இதற்கு விஷயம் ஸ்பர்சம்.

இப்படியாகவுள்ள பஞ்சகூறுகளில் விஷயமான ஸ்பர்சத்தைத் தள்ளி, ஞானேந்திரிய கன்மேந்திரியங்களான த்வக், பாணி இவைகளையும் தள்ளினுல், எஞ்சி நிற்பது சமஷ்டி ராஜஸத்தின் சேர்க்கையாலுண்டான வியான வாயுவும், சமஷ்டி ஸாத்விகத்தினுலுண்டான மனமும் ஆம்: இவற்றில் திரிபுடி ஞானத்தால் சமஷ்டி ராஜஸத்தையுணர்ந்து நீக்க, சமஷ்டி ஸாத்விக சம்பந்தமான மனம் ஒன்றே திரிபுடிஞானத்துக்கு லக்ஷியமாக நிற்கும். இதில்சேர்ந்துள்ள ஸ்பர்ச தன்மாத்ரையை ஸாத்விக சமஷ்டியினின்று பிரித்து அறிந்தால், அறிந்த அறிவு 'தெரிவானுகவும்,' ஸ்பர்ச தன்மாத்திரை தானே 'தெரிவு' அல்லது 'உணர்ச்சியாகவும்,' ஸாத்விக சமஷ்டி 'தெரிபொருளாகவும்' திரிபுடி சித்திக்கும். இந்தத் திரிபுடி யுணர்ச்சியைப் பின்னும் நீர்க்கமாய் ஐயந்திரிபறவுணர்ந்து "தெரிவானும் தெரிபொருளும் ஒன்ருகில்"—அதாவது சப்த தன்மாத்ரையைப் பிரித்தறிந்த அறிவும் தெரிபொருளான ஸாத்விக சமஷ்டியும் ஒன்ருனுல் ஆஜ்ஞா சக்கரத்திற்கு அதிபதியான "ஞானம்" விளங்கும். ஸ்பர்ச தன்மாத்ரையானது அதற்குக்காரணமான சப்ததன்மாத்ரையில் ஒடுங்கி சப்ததன்மாத்ரை மட்டாக நிற்கும்.

இந்த அவஸ்தையில் முன் வியானனுயிருந்து ஸர்வாங்கமும்பரவியிருந்த வாயு (மனோசலனம்) சமானனுகமாறி நாபிஸ்தானத்தை நிலையாக வுடையதாய் நிற்கும்.

சப்ததன்மாத்ரையின் பஞ்ச கூறு இங்கு அறியத்தக்கது.

சப்ததன்மாத்ரை ஸாத்விக சமஷ்டியுடன் கூடி ஞான மாகி புருவமையத்திலுள்ள ஆஞ்ஞா சக்ரத்தைத் தனக்குரிய க்ஷேத்ரமாகப் பொருந்தி அங்கே நிலையாய் நிற்கும்.

அந்த சப்த தன்மாத்ரை சமஷ்டி ராஜஸத்துடன்கூடி சமான வாயுவாகி நாபிஸ்தானத்தை நிலையாகக் கொண்டுநிற்கும்.

வியஷ்டியில் அது (சப்த தன்மாத்ரை) ஸாமத்விகத்தோடு கூடி சுரோத்திரேந்திரியமாகிச் செவியைத் தனக்கு ஸ்தானமாகக் கொண்டிருக்கும்.

வியஷ்டியில் ராஜஸத்தோடு கூடின சப்ததன்மாத்ரை வாக்கிந்திரியமாகி வாயைத்தனக்குரிய ஸ்தானமாகக் கொண்டு நிற்கும். இதற்கு விஷயம் சத்தம்.

இப்படி நினைக்க நினைக்க நினைவழிந்து கனவாம் காக்ஷியில் நியதிகளைந்து மேன்மேலும் சென்றுல் "ஞானம், சமானவாயு, சுரோத்திரேந்திரியம், வாக்கிந்திரியம, சத்தவிஷயம்" என்கிற ஐந்தையும் பஞ்சகூறுக வுடைய சப்ததன்மாத்ரையாம் விக்ஷேபசக்தியின் காரியத்தை யுணர்ந்து பிரபஞ்சத்தில் எல்லாவித வித்திகளையும் நினைத்தமாத்திரத்தால் அந்த ஞானசக்தியின் விசேஷத்தால் பெறப்பெற்று வாழலாம், ஆனுல் அந்த ஞானசக்தியும் விக்ஷேப

சக்தியின் காரியமென்று சொன்னதால், அதன் காரணத்தை யறியாதவரையில் காரியம் நிலையாய் நிற்காது ஆகையால் அந்த ஞானசக்தியையும் சப்ததன்மாத்ரை, ஸாத்விகசமஷ்டியெனப் பிரித்துணர்ந்தால் அப்படி யுணர்ந்த உணர்வுதானே சமஷ்டியில் இரணியகர்ப்பனென்றும் வியஷ்டியில் தைஜஸாத்மனென்றும் சொல்லப்படும்.

இந்த இரணிய கர்ப்பனுக்கு சப்தாதிதன்மாத்ரைகள் முதல் அவற்றின் பஞ்சீகிருத விருத்தியான,—

(1) ஞானேந்திரியங்கள் (ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என)— 5

(2) வாயுக்கள் (சமானன், வியானன், உதானன், அபானன், பிராணன், என)— 5

(3) ஞானேந்திரியங்கள் (சுரோத்திரம், த்வக், சக்ஷுஸ், சிங்குவை (நாக்கு), கிராணம் (மூக்கு) என)— 5

(4) கன்மேந்திரியங்கள் (வாக்கு, பாணி, பாதம், குய்யம், குதம், என)— 5

(5) விஷயங்களான, சத்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என— 5

ஆகமொத்தம்,=25.

இந்த இருபத்தைந்து தத்துவங்களையும் ஆதாரமாகக்கொண்டு அவற்ருலான சரீரோபாதிக்கு அபிமானியாக விளங்குவது இரண்யகர்ப்பன்.

இந்த இரண்யகர்ப்பனையும் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகயோகத்தால் பிரித்துப்பார்த்தால், ஞானம் (அல்லது அந்தக்கரணம்) க்ஷேத்ரஜ்ஞ (லிங்க)ரூபமாகவும், மற்றைய 24-தத்துவங்களும் க்ஷேத்திர (பீட)ஆதாரமாகவும் விளங்கக் காணலாம். அது எப்படியெனில்,—

மூலப்பிரகிருதிரூப மூலஅஜ்ஞானமான முக்குணத்தில் சத்துவகுணத்திலிருந்து ஈசுவராதிகளும், இராஜஸ குணத்திலிருந்து ஜீவர்களும், தாமதகுணத்திலிருந்து ஆவரண விக்ஷேப சக்திகளும், அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்ரைகளும், சூக்ஷ்மசரீரங்களும், பஞ்சீகிருதபஞ்சமகாபூதங்களும், ஸ்தூலசரீரப் பிரபஞ்சங்களுமுண்டாயின என்பது சித்தாந்த பூர்வமாயுணர்ந்தவுண்மை. இவற்றுள், பிரபஞ்சம் அனுபவிக்கப்படுகின்றது; ஜீவன், அனுபவிப்பவன்; ஈசுவரன், ஜீவர்களுடைய கர்மானுசாரப்படி யனுபவங் கொடுப்பவர்.

"அபஞ்சீகிருத பஞ்சதன்மாத்ரைகள் மூலதாமத குணத்தில் சத்துவம் பிரதானமானபோது அதிற் பிரதிபலித்த விக்ஷேபசக்தியினுல் பிறந்தன" வென்பதையும் திரிபுடிஞான சூக்ஷ்ம விசாரத்தால் ஆய்ந்தறிந்தால் திரிமூர்த்திகளின் தரிசனம் கிடைக்கும்.

தாமஸகுணத்திலிருந் துண்டான ஆவரண விக்ஷேபசக்திகளில், ஆவரண சக்தியானது ஈசுவரனையும் ஞானிகளையுந் தவிர, மற்ற சீவராசிகளனைத்தையும் "திரிபதார்த்த நிச்சயம் (பதி-பசு-பாசம் என்பதின் உட்பொருள் இதுவென வுணரும் உணர்வு) தெரியவொட்டாமல் திரை போட்டு மறைத்ததுபோல் உள்ளறிவின் ஒளி விளங்காது மறைக்கும்.

விக்ஷேபசக்தியானது பிறவி முதல் துணைக்காரணமாயிருந்து முன்னர் விஷயஞானத்தை விளக்கிப் பின்னர் ஞானசாதனமா யிருந்து சொரூபஞானத்தை விளக்கிவைத்து அதுவும் அந்த சொரூபஞானத்திற் "பிணஞ்சுடுதடி போல்" லயமாகிவிடும்.

முற்குறித்த முக்குணங்களில் மூலசத்துவத்திற் சத்துவம் பிரதானமாகும் பொழுது அதிற் பிரதிபலித்த ஈசுவரனுக்கு விஷ்ணு வென்றும், ராஜஸம் பிரதானமாகும்பொழுது அதிற் பிரதிபலித்த ஈசுவரனுக்கு பிரம்மா வென்றும், தாமசம் பிரதானமாகும் பொழுது அதிற் பிரதிபலித்த ஈசுவரனுக்கு ருத்திரனென்றும் பெயர்.

இப்படி முக்குணப் பிரதானமாய் மும்மூர்த்திகளுக்கு மிருப்பிடமாய் விளங்குவதொன்

றெதுவோ அதுவே மாயை. இந்த மாயையும் சமஷ்டி ஜீவனின் காரண சரீரமான அஞ்ஞானமும் கூடி ஈசுவரனுக்குக் காரண சரீரமாம். இதுவே ஈசுவரனுக்குச் சுஷுப்தி யவஸ்தை, இந்த அஞ்ஞானாந்தகார மாயாவஸ்தையை அபிமானித்த ஈசுவரனுக்கு அவ்வியாகிருதனென்றுபேர். இராஜ சத்திலுதித்த ஜீவனுக்குக் காரண சரீரம் அஞ்ஞானம். அதை அபிமானித்த ஜீவனுக்குப் பிராஜ்ஞன் என்றுபேர்.

அவ்வியாகிருதனுக்கும் பிராஜ்ஞனுக்கும் சமஷ்டி வியஷ்டி பேதமன்றி குணபேதமுண்டு. அவ்வியாகிருதன் சத்துவத்திற் பிரதிபலித்த திரிகுணாத்மகமான மாயையை உபாதியாகக் கொண்டவன். ப்ராஜ்ஞனோ ராஜஸத்தில் உண்டான முக்குணபேதமான அஞ்ஞானமாகிய அவித்யையை உபாதியாகக் கொண்டவன்.

ராஜஸத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபலித்த ஜீவர்களுக்கு நிஷ்டாபரரென்றும்; இராஜஸத்தில் ராஜஸம் பிரதானமாகும்போது அதில் பிரதிபலித்த ஜீவர்களுக்கு கர்மநிஷ்டாபரரென்றும்; இராஜஸத்திற் தாமஸம் பிரதானமாகும்போது அதில் பிரதிபலித்த ஜீவர்களுக்கு சோம்பல் நித்திரை மயக்க முடையவர்களென்றும் பெயர்.

தாமசத்தில் சத்துவம் பிரதானமானபோது அதிற் பிரதிபலித்த விக்ஷேப சக்தியிலிருந்து அபஞ்சீகிருத தன்மாத்திரைகள் பிறக்கும். இந்த அபஞ்சீகிருத தன்மாத்திரைகளும் ஜீவர்களது வியஷ்டி சூக்ஷ்ம சரீரங்களுங்கூடி ஈசுவரனுக்குச் சமஷ்டி சூக்ஷ்ம சரீரமாம்; இந்தச் சமஷ்டி சூக்ஷ்மசரீர அபிமானிக்கு இரண்யகர்ப்பன் என்று பெயர்.

வியஷ்டி சூக்ஷ்ம அபிமானியாகிய ஜீவனுக்கு தைஜஸன் என்று பேர். ஆகவே நினைக்க நினைக்க நனவுகடந்த கனவும், கனவுகடந்த சுஷுப்தியும் வளர்த்திப்பதால், சுஷுப்தியிலும் அழியாத அறிவொன்றிருக்கிறதென்பதை யறிவதே நினைவின் முடிவாம். இந்த அறிவையறிந்து அவ்வறிவுக்குச் சாக்ஷியாயிருப்பது "கூடஸ்தர்" அல்லது ஜீவசாக்ஷி.

இந்த ஜீவசாக்ஷியை யறிந்து அது தானாகும் வரையில் நினைப்பது நினைவின் பூரணமாம்.

ஆகையால் நினைக்க நினைக்க நினைவழிந்து நினைவுண்டாகும். அப்படியெனில், வியஷ்டி பாவம் போய் சமஷ்டிபாவம் சித்திக்கும் என்றபடி. வியஷ்டி சமஷ்டி பாவங்களிரண்டு மழியும் வரையில் நினைப்பது எதுவோ அதுவே உன்மனஸ். அந்த உன்மனஸால் உன்னியதொன்றெதுவோ அதுவே லக்ஷியமாம். லக்ஷியத்தை நினைத்து நினைத்து நிர்விஷயமான மனத்தால் லக்ஷியம் குன்றாது நினைப்பது தியானம். தியானம் இடையறாது தைலதாரை போல் ஓடிய விருத்திப் பிரவாகத்தில் தியேயாகாரமாக விளங்குதல் ஞானம். இந்த ஞானத்தில் நிலைத்திருத்தல் சமாதி.

இந்த சமாதி, ஞானசமாதி யென்றும், யோக சமாதி யென்றும், பாவசாமாதி யென்றும், சகஜ சமாதி யென்றும் நால்வகைத்தாம். இதில் ஞானசமாதி நித்த முத்த சுத்தமாம் சுயஞ்சோதிதானாய் விளங்குவதாம். நித்தியத்துவம் பெற்று விளங்குதல் யோகசமாதியாம். நினைத்தது தானாய் விளங்கும் தீரம் பாவசமாதியாம். நினைவின்றி நிர்விகற்ப நிலையுங் கடந்து திரிபுடி ரஹிதமாயிருந்து திரிபுடிஞானத்தால் ஆனந்த லீலைபுரிதல் சகஜ சமாதியாம். இவைக்கு ஆதாரம் திருமூலர் திருமந்திரம்:—

1. ஞான சமாதி.

"மன்மன மெங்குண்டு வாயுவுமங் குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவுமங்கில்லை
மன்மனத்துள்ளே மகிழ்ந்திருப்பார்க்கு
மன்மனத்துள்ளே மனோலயமாமே"

2. யோக சமாதி.

"மூலநாடி முக்கட் டுலகுச்சியுள்
காலுவாசல் நடுவிலிருப்பீர்காள்
மேலைவாசல் வெளியுறக் கண்டபின்
காலன்வார்த்தை கனவிலுமில்லையே."

3. பாவ சமாதி.

"கற்பனை யற்றுக் கனல்வழியே சென்று
சிற்பனை யெல்லாம் சிருஷ்டித்தபே ரொளிப்
பொற்பினை நாடிப்புணர் மதியோடுற்றுத்
தற்பரமாகத் தகுந்தண் சமாதியே"

4. சகஜ சமாதி.

"சமாதி செய்வார்க்குத் தகும் பலயோகஞ்
சமாதிகள் வேண்டா மிறையுடனேகிற்
சமாதி தானில்லை தானவனாகிற்
சமாதிபெட்டெட்டுச் சித்தியு மெய்துமே."

இதற்குச் சலியாமனமே சாதகமும் சாதனமுமாம். ஆதலால் "குருசொல்" என்னெனில் —

"என்னும் என்னும் என்னுதே! பொன்னும்
பொன்னும் பொன்னுமே!"
'எண்ணாத எண்ண மெல்லாம்'
எண்ண மனம் புண்ணாமே
எண்ணான எண்ண மொன்றே
எண்ண மனம் பொன்னாமே.

ஓம் தத்ஸத்.

———:-:———

IN QUEST OF "LIFE'S BIG THINGS."

"Now the Big Things of Life belong to the realm of Spirit and Character. It is in the region of the soul that we find the pearl. The really good things, the big things, are inside and not outside the man. The big thing is not luxury, but contentment; Not a big house, but a big satisfaction; not accumulated art treasures, but a fine, artistic appreciation; not a big library, but a serene studiousness; not a big estate, but a large vision. The big things are not 'the things that are seen,' but 'the things that are unseen.' 'Seek peace and ensue it'. Seek the things that are above, 'Seek first the Kingdom of God and His righteousness.' Such are the goodly pearls."—Dr. Jowet in the *Christian World.*

"பேரின்ப வீடு தேடல்"

———•••———

[சென்னைக்கடுத்த சைதாபேட்டைக் கிரண்டு மைல் தூரத்துக்கப்பால் "வேளச்சேரி" யென்னும் கிராமத்தில் "வேதஸ்ரேணி" யென்னும் ஒரு மஹா க்ஷேத்திர மிருக்கிறதென்றும், அங்கே ஸ்ரீ குமார தேவர் பரம்பரையி லுதித்து "எக்கோன் குமர குருபரனிணையடிப், பங்கயச் செழுந்தேன் பதைப்பறவுண்டு, மும்மலப்பகையோரீரு முத்திநகர்க்கோர், அமலவேந்தாகி யாசுவீற்றிருக்கும், அடியவர்க்கடியாராடியிணைமருமலர், முடிமிசைதரித்திடு மூர்த்திமாதவக், குழந்தைவேலென்னுங் குருபரனருளால், அழுந்து மஞ்ஞான வகந்தையை மாய்த்து, ஞானமாமணியை நண்பினிற் கைக்கொண், டினமாமோக விருளணுகாவகை, இல்லறநெறி மேலின்புறுதுறவெனும், நல்லறங்கையுறீரு நற்குருவிலிங்க, ஜங்கமமெனச் சொலுந் தக்கமூன்றுருவையும், துங்கமாய்ப் பணிந்து தொழு மறிவானன், வேதநிரேணி விமலன் சிவாலயத் தோதுந்திருப்பணி யுள்ளனவெலாம்பர, பக்தியாற் செய்துயர் பஞ்சபர்வத்துடன், நித்தியவிழாக்கள் நெடிதுறப்புரிந்து, பிரமோச்சவமுதற் பெருவிழா வென்றும், நிரமாய் நிகழ்வுறச் செய்வித்ததுமலால், தண்டபாணியனார் தனித்தேர்த் திருப்பணி, மண்டல முழுது மதித்திடச் செய்வோன், நிடமுறவினும்பல சிவாலயப்பணியும், மடமறச்செய்தருள் வள்ளல்மனப் பகை, வீட்டிமெய்ப்போதக னாகிமெய்யடியவர், ஈட்டும்பவப்பிணி யெலாமொருகொடியில், போக்குஞ் சிதம்பரப் புண்ணியன்" என்று அவர் நூலின் சிறப்புப் பாயிரத்திற் புகழ்ந்துள்ள ஸ்ரீ வேதஸ்ரேணி சிதம்பரஸ்வாமிகள் பூர்வாச்ரமத்தில் பட்டாளத்தி லுத்தியோகம்செய்து பின்னர் குருவருள்பெற்றுத் திருவுருக்கொண்டபின் துறவரம்பூண்டு சிவாலயத் திருப்பணிகள் பலசெய்துவந்து பூரணமெய்தினாரென்றும், அப்பெரியவர் ஜீவகோடிகளான "உயிர்த்தொகை, தாக்கும் பவப்பெருஞ் சாகரந்தாண்டியும், முத்தியங்கரையிடை முந்திமாமகிழ்வுறச், சத்தியமாகத் தனதகங்கருதியோ,—

"அறிவறிந்தேயோ அறிவறியாமலோ
"அன்பினாலேயோ அன்பதின்றியோ,
"இலக்கியமிலக்கண மெனுமிருவகையின்
"துலக்கமதுணர்கிலாத் தோன்றலாகியும்
"முற்பவந்தன்னின் முதிர்வுறப்பயின்ற
"நற்றவப்பேற்றால் நவிலுபதேச
"உண்மையுமதன்கட்டளையுமுகந்துரைத்,
"தெண்மைதீர்தோத்திர மாலையுமியற்றித்
"தேவருக்கமுதந் திருமாலீந்தென
"ஆவலாய்மெய்யடி யார்க்களித்தனனே."—
என்றுங்கேட்டுணர்ந்து,—

1911-ஆ ஸெப்டெம்பர்மீ 10உ ஞாயிற்றுக் கிழமையன்று சென்னையிலிருந்து சிவநேசர் சிலர் ஒன்று சேர்ந்து ஒருமனதாய்ச் சென்று இவரது சமாதியைத் தரிசித்து இவர் பரபக்தியால் சிவாலயத் திருப்பணி செய்துவந்த சிவாலயத்தையும் தரிசித்து அங்கு கற்சிலையிற் பின்னப்பட்டுக்கிடந்த ஆதிமஹா ஞகிய ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் திருவுருவத்தையும் பார்த்துவந்து, அப்பெரியோர் மாதவம்புரிந்த அந்ததிவ்ய க்ஷேத்திரதரிசனம் கிடைத்ததின் பெருமையைப் "பேரின்பவீடுதேடற்" காதையாகக் கீழே வரைகிறோம்.]

"பேரின்ப வீடுதேடல்."

முதலாவது: வீடுதேடற்காதை.

[அவதாரிகை :—புருஷார்த்தங்கள் நான்கில் அறம் பொருளின்பமென மூன்றையு மனுபவித்தறிந்த பஞ்சவர் (1) வீடுதேடிச் சென்றது கூறல்.]

"அடைகாய் கனிகிழங்கு அகப்பட்ட தைப்புசிக்கும்—
பெரியதொரு வீடுதனில் பெருமையுளக் குண்டோசொல்
லாய்."—வயிரேடுகிளத்தல்.

I.

அறம்பொரு ளின்பம்
வீடெனு நான்கில்,
ஆதியாய்நின்ற அறிவுமுதலெழுத்
தோதிய நூலின்
இகபா வுண்மையை
யிரண்டறக் கற்றறிந்து'—(2)
"ஈதலறம் தீவினைவிட்
டீட்டல்பொரு" ளென்றோதி,—
5. உவப்பிலின்பப் பொருளதனை
அஹம்புற மென்றுயாது,
"ஊடலுவகையா" ஓதியவள்ளுவன்
சமர்த்தே சமர்த்தாய்
எடுத்துரை செய்வான்
"காதலிருவர் கருத்ததானும்
ஏகமா யொருமித்
தாதரவுப் பட்டதே"
"ஐங்காத் தண்ணல்
அருள்தரு காமம்"—அஃது,

10. "ஒன்றிரண் டென்னு
துடலுமுயி ரும்போல்
"ஓங்கி வளர்ந்து
ஓரள வற்றதாய்
"ஓளவிய மென்னு
நஞ்சையமுதா நயக்கச்செய்து
"கன்னல்தேன் பாலொடு
கனிரசங் கலந்த
"காதல் தானுயிக்
கரைகடந் தொலித்துக்
15. "கிருதகிருத்தியப் பேற்றைக்
கிளையொ (3) டளிக்குமெனக்
கீதா வாக்கியமாய்க்
கிருபையுடன் கூறியே
தருமூர்த்த மாயுதித்த
குணமுடையாள் ஓரவையவள்
கூவி யழைத்துக்
குரூப தேசஞ்செய்வான்
"கெங்கைமுடி சூடியவன்
தேய்மதியை வளரவைத்தான்
20. "கேவலத்திற் சகளமாகி
ஸத்தியத்திற் சாந்தமாகும்
"கைவல்ய முத்திதரும்
காருண்ய ஸாகரமாம்
"கொங்கைமகிழ் மங்கைதன்னைக்
கொண்டுருவாச் சமைந்துநின்ற
"கோனவனை நினைந்துள்ளே
கொண்டபொருள் மூன்றும்விட்டுக் (4)
"கௌபீன தாரியாகக்
கண்டதொன்றே பேரின்ப
25. "வீடே"ன்று சொன்னதோர்
வீட்டைத்தேடி ப்போனோமம்மா !

(1). துவம்பத, தத்பத, அசிபத, அதிபத, நிஜபத நிலையிற்கண்டதை விண்டிலாப் 'பார்ப்பார்' ஐவர். These are called "the Seers Five."

(2) அபரோக்ஷானு பூதிபாலையர்திரிபற அனுபவித்துணர்ந்து.

(3) இடம்பொருளேவலோடு. C.f. தாயுமானவர்: "பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள் பக்கமுண்டெக்காலமும், பவிசுண்டு தவிசுண்டு திட்டார்ந்த மாகயம படரெனுந் திமிரமணுகாக் கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு காயசித்திகளுமுண்டு, கரையுண்ட கண்டர்பா லம்மைநின் தாளிற் கருத்தொன்று முண்டாகுமேல்."

(4) அறம், பொருள் இன்பமென அனுபவித்துக் கண்டுகொண்ட புருஷார்த்தப் பொருள் மூன்றும் விட்டு.

இரண்டாவது: குருமடதரிசனம் கண்ட காதை.

[அவதாரிகை:—வீடுதேடிச் சென்ற பஞ்சவர் வேதஸ்ரேணி † க்ஷேத்திரத்தில் தண்டபாணீசுவரர் கோயிலில் அங்க-லிங்க-ஜங்கம ரூபமாய் அமர்ந்து குருமடதரிசனங் கண்டது கூறல்]

"ஆன்வன்குருவாய்வந்தாங்காரம் போக்குவிப்பன்
மான்வனவெல்லாமயக்கமறக் காட்டுவிப்பன்
தான்தந்தருளீவன் தாகவிடாய் தீர்த்துவைப்பன்
ஆனாவானைக்காட்டி மானாவரமளிப்பன்."

II.

வேதசிரேணி யென்னுமூரில்
தண்டபாணி கோவிலொன்று
வேதசிரேணியின் மூலஸ்தானத்தில்
தண்டபாணி லிங்கமொன்று
அங்க லிங்க ஜங்கமமா
யமர்ந்திருந்த லிங்கமதை
மங்குசித்தை யறவிட்டு
மஹத்தாம்சித்தா லூன்றிப்பார்க்க
30. தங்கக்கொடி போலிலங்கும்
மங்கையுருக் கொண்டதுகாண் !
பங்கமுறு தெங்கன்குரு
சொன்னசொல்லில் நின்றுபார்த்தோம்
தங்கமேனியா விளங்குமொரு
தாரகவொளியைத் தூண்டிப்பார்த்தோம்
அங்கபங்கம் சிறிதுமிலா
அன்புருவுந் தோன்றலாச்சு !
தங்கக்கொடிபோ லிலங்குமங்கையைத்
தேடியங்கே சுற்றிப்பார்த்தோம்
35. அங்கபங்கம் சிறிதுமில்லா
அன்புருவே யவ்வாக்கண்டோம்
அன்புருவாம் மங்கையைக்கண்டு
அவளுருவத்தை மனதில்வைத்தோம்
என்புருகவே யவளும்மனதை
யுருக்கிப்பெருக்கித் திரவமாக்க
இன்புறுகாமத்தின் காமப்பாலங்கே
காமப்பாலாய் விளங்கக்கண்டோம் !
துன்புறுபோதையின் தூக்கமுமூக்கமும்
இன்புறுகாமத்தி லில்லாதுபோக

40. அன்புறுகாமாக்ஷி பாகந்தவடிவை
இன்புறுமெங்கள் இதயத்திருத்தினோம்!
இதயத் திருத்தினோ
மெங்கள்கா மாக்ஷியை
உதயத் துதித்த
சூரியன் போலவள்
இதயத் திருந்து
எங்களைக் காக்கவே
பதையா மனத்துடன்
ப்ராகார வீதியில்
45. சிதையாமலே யெங்கள்
குருவைக் கண்டோம் !
குருவைக்கண்டு நாங்கள்
குதூஹலம் நிறைய
குருமூர்த்த மாமெங்கள்
கோனைக் கண்டோம் !
குருபாதம்பணிந்து குரூரமிருத்யுவை
யழுந்தப்பதித்த பாதங்கண்டோம்!
குருவுரு வாமவர்
கைமுத்ரை கண்டுபின்
50. குருவுரு வானவ
ரடிமுடிகாணு வதிர்சயங்கண்டோம்!

மூன்றாவது: ஆலயந்தொழு காதை.

[அவதாரிகை:—"ஆலயந் தொழுவது சாலவு நன்றே" என்றபடி சிவாலய தரிசனம் செய்து கொண்டு ஸத்துக்கள் (சிவனடியார்) ஆலயந் தொழ மற்புதக் கூத்தை அஹம்புற மற்றுக் சகஜமாய் சகஜத்திருந்து கூறல்.]

"வெட்டவெளியைக் கண்டேன்: கட்டுவிட்டுக் கரைந்தழுதேன்."—கண்டனைப்படலம் (ஆனந்தத்தாய்மொழி.)

III.

ஹம்ஸமாய்ப் பறந்தயன்
ஆகாய மேறியும்
ஹம்ஸஸ் ஸோஹமா
மற்புதஜ்யோதியின் முடிகாணான்!
ஹம்ஸனைகாபிக் கமலத்திற்பெற்றவன்
ஆதிவராகமாய்ப் பாதளஞ்சென்றும்
ஹம்ஸனைப் போலவே
யற்புதவிங்கத்தி னடிகாணான் !

† இதற்கு "வேளச்சேரி" யென்று தற்காலம் பேர் வழங்குகிறது. சைதாப்பேட்டைக் கிரண்டுமைல் தூரத்துக் கப்பாலிருக்கிறது.

55. "ஹம்ஸோஹம்ஸோஹம்ஸோஓம்"என்றஹ
ஸஹவையு மறவிட்டோம்! [முடன்
அற்புதலிங்கமும் தற்பதலகூயமா
அஹக்கண்ணுக்குண்மையா விளங்கக்கண்
தற்பதலகூயமா மற்புதலிங்கத்தைத் [டோம்!
தாழ்விலாமோனத்தா லர்ச்சித்தோம்!
கற்புடை யென்னம்மை
காமாக்ஷி யருள்பெற்று
விற்புரு வத்திடை
வேதிகையொன்றுமே கிருமித்தோம்:
60. தற்புகழ்சொற்புகழ் ஆஹுதிசெய்தக்கே
தானவனுமந்த யஜ்ஞம்செய்தோம்!
வானவர் கோனுறை
வாத்ஸல்யாக்னியும் குளிரக்கண்டோம்!
மானவர் தேனுரை
மார்ஜல்யாக்னியின் மாற்றறிந்தோம்!
போனவர்வந்தவர் பொய்யுரைசொன்னவர்
காணுக்காக்ஷியை நாங்கள்கண்டோம்
ஏனிவரிங்கனம் ஊனவர்காணு
உண்மைக்கோயிலைப் புகழ்ந்தெனில்?
65. ஊனவர்காணு ருண்மைக்கோயிலை
யென்றொருமாதவர் திருப்பணிசெய்ததால்,
குருலிங்க ஜங்கம
மெனச்சொலுந் தக்கமூன்
றுருவையுந் துங்கமாய்ப்
பணியறி வாளன்
வேதசிரேணி விமலன்
சிவாலயத் தோதுந்திருப்பணி
காதல் நிறைவால்
கனிந்துமுன் செய்ததால்,—
70. நீதில் மாதவன்
செய்தவத் திருப்பணி
கோதிலா ருள்ளத்
துறைநிறை செல்வம்போல்
நீதிலா ருள்ளத்
தினிதுறை தெய்வம்போல்
ஏதிலா ருள்ளத்
துறைநிறை யன்புபோல்
வாதிலா ருள்ளத்
துறைநிறை புண்ணியம்போல்
75. கோதிலா வெம்முன்னக்
கோயிலைச் சமைத்தே!

நாலாவது: திருக்கோயிற்சிறப்புக் காதை.

[அவதாரிகை:—கவிகற்ப நிர்விகற்பமற்றுச் சகஜத்திருந்தபடிக் கோயிற்சிறப்புக் கூறல்]

"அல்லலறுத்தாட்கொண்ட அம்பிகையைப்புல்லிப்புணர்ந்
[தேன்
புலனற்றுப்பொறியிழந்தேன் பொன்னம்பலத்துட்போனே
[ன் போனேனே."—அநுபவானந்தம்.

"முத்தியென்னப்படும் மங்கையைச் சோமுயல்பவருஞ்
சத்தியென்னப்படுமீசனருளின்றிச் சார்தலுண்டோ!"

IV.

கோயிலாவது கோயில்
கோனுறைமாதவன் கோயில்!
வாயிலார் வாழ்த்தும்
வானுறைமாதவக் கோயில்!
சேயில்லா மிருநண்டர்
செய்தவத் தாலுதித்
துய்வழிகண்டவ ருண்மையைக்
காத்தவன் கோயில்!
80. காலனைக்காலா லுதைத்தவன்
வாழ்ந்திருக் கோயில்!
காலனுமுதைபட்டுத் தண்டமேலிங்கமாத்
தொழுதவோர் கோயில்!
முப்பாழுக் கப்பாலுக்
கப்பாலாயுள்ளவன் கோயில்!
எப்பாழுக் கப்பாலா
மேற்றமுடையதோர் கோயில்!
தத்துவந் தொண்ணூற்
றாறையுங்கழித்தவன் கோயில்!
85. தத்-துவம் எனுமிரு
பதமுங்கடந்தவன் கோயில்!
அசிபதப்பொருளை அங்கைநெல்லிபோ
லறிமாதவன்பணி கோயில்!
சிதம்பரநாதன் திருக்கூத்துக்கண்டவன்
திருப்பணிசெய்த†வோர் கோயில்!
பதிபசுபாசம் மூன்றையுமுணர்ந்த
சிற்றம்பலன்தொழு கோயில்!
சதிசெயுங்கருவி கரணங்கள்விண்டு
சத்தவப்புரிப்புண்ணுங் கோயில்!

†c.f. "சிந்தையே கோயில் கொண்ட செம்பெருமான்
திருப்பெருந் துறையுறைசிவனே!
எந்தையேசுசா! உடலிடங்கொண்டாய்
யானிதற்கிலனோர் கைம்மாறே!"

90. அப்பயதீக்ஷிதர் ஆகியிற்றவஞ்செய்த
அற்புதமாயொரு கோயில்!
"முப்பயனும்விட்ட மூதறிமாதவர்
தவம்புரியற்புதக் கோயில்!
"எல்லாம்நீ யென்றுரைத்த
வென்குருவே நின்னருளால்
"எல்லாம்நானுன வியல்புதானென்னேயோ!"
வென்றுரைசெய்தவன்*கோயில்!
"வாழைமட லூரித்தப்பால்
வளமான தண்டைக்காட்டிப்
95. 'பாழுமுடல் பிரித்தேயதைப்
பார்க்கச்சொன்னவன்" கோயில்!
"பார்த்தவிட மெல்லாம்பா
ழாகவதிற் பரசுகமே
"ஆர்த்தெழு மன்பர்க்
கமுதளிக்குங் களஞ்சியமாம்!—"
அதுபோல, நீத்தவிட
மெல்லாம்பா ழாகவேநிம
லனதுசிவலிங்கம் பார்த்தவிடமதுவே
பரம்பொருளாய் விளங்கியதே'
100. "உள்ளம் பெருங்கோயி
லானுடம்பா லய"மென்றே—
கள்ளப்பிரா ணருமென்னைக்
கைகாட்டிக் கலந்துகொண்டார்!

——:-:—— K. S. S. A.

உ

ஓம் ஸ்ரீ சாவித்திரியை நமஃ

விவேகசிந்தாமணி

உபநிஷதர்த்த தீபிகை.

[விவேகசிந்தாமணிக்கென்று பிரத்தியோகமாக எழுதப்பட்டது.]

11. பாவனோபநிஷத் பிரயோகவிதி.

(இரண்டாம்பாகம்.)

——(:-:)——

(184-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆறாவது ஆவரணமாகிய அந்தர்தசார சக்கரம்.

அந்தர்தசார சக்கரத்திற்கு நமஸ்காரம் என வியாபக நியாசம் செய்யவும்.

(1) வலதுநாசி—ரேசக (வெளிப்படுத்தும்) அக்கினியாகிய சர்வஞ்ஞா தேவி.

(2) வலதுகடைவாய்—பாசக (பக்குவப்படுத்தும்) அக்கினியாகிய சர்வசக்தி தேவி.

(3) வலதுஸ்தனம்—சோஷக (வற்றவைக்கும், காயவைக்கும்) அக்கினியாகிய சர்வைசுவரியப்ரதா தேவி.

(4) வலது வ்ருஷணம்—தாஹக (எரிக்கும்) அக்கினியாகிய சர்வஞானமயீ தேவி.

(5) சீவனி—பிலாவக (நிரப்புவதான) அக்னியாகிய சர்வவியாதிவினாசினீ தேவி.

(6) இடது வ்ருஷணம்—க்ஷாரக (காரத்தைக் கொடுக்கும்) அக்னியாகிய சர்வாதாரஸ்வரூபா தேவி.

(7) இடது ஸ்தனம்—உத்காரக (வெளியில் தள்ளும்) அக்னியாகிய சர்வபாபஹரா தேவி.

(8) இடது கடைவாய்—க்ஷோபக (அலைவு, கலக்கம் செய்யும்) அக்னியாகிய சர்வானந்தமயீ தேவி.

(9) இடது நாசி—ஜிரும்பக (சொட்டாவிடச்செய்யும்) அக்னியாகிய சர்வரக்ஷாஸ்வரூபிணீதேவி.

(10) நாஸாக்ரம் (மூக்குநுனி)—மோஹக (மயக்கம் செய்யும்) அக்கினியாகிய சர்வேப்ஸிதபலப்ரதா தேவி.

ஹிருதயரூபமான சர்வரக்ஷாகரசக்ரேசுவரீயான திரிபுரமாலினிக்கு நமஸ்காரம்.

நிகர்பயோகினீரூப ஸ்வாத்மஸ்வரூபமான பிராகாம்ய சித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்ன ரூப ஸ்வாத்ம ஸ்வரூபமாகிய சர்வமஹாங்குச முத்ரைக்கு நமஸ்காரம்.

ஏழாம் ஆவரணமாகிய அஷ்டகோண சக்கிரம்.

அஷ்டகோண சக்கரத்திற்கு நமஸ்காரம் என வியாபக நியாஸம்.

(1) சிரகத்தின் (மேல்வாய்க்கட்டையின்) வலதுபாகம்—சீதமாகிய (குளிர்மையாகிய) வசினீவாக்தேவதை.

* ஸுமாரதேவர் பரம்பரையிலுதித்த வேதஸ்ரேணி சிதம்பரஸ்வாமிகள். இவருடையஸமாதி அக்கோவிலுக்குப் பக்கத்தில்தானேயிருக்கிறது.

(2) கழுத்தின் வலதுபாகம்—உஷ்ணமாகிய காமேசுவரீ வாக்தேவதை.

(3) ஹிருதயத்தின் வலதுபாகம்—சுகமாகிய மோதினீ வாக்தேவதை.

(4) நாபியின் வலதுபாகம் — துக்கமாகிய விமலா வாக்தேவதை.

(5) நாபியின் இடதுபாகம்—இச்சையாகிய அருணா வாக்தேவதை.

(6) ஹிருதயத்தின் இடதுபாகம்—சத்துவ குணமாகிய ஜயினீ வாக்தேவதை.

(7) கழுத்து இடதுபாகம்—ரஜோகுணமாகிய சர்வேசுவரீ வாக்தேவதை.

(8) சிபுகத்தின் இடதுபாகம்—தமோகுணமாகிய கௌளினீவாக் தேவதை.

ஹிருதயரூப சர்வரோகஹரசக்ரேசுவரீயாகிய திரிபுராசித்திக்கு நமஸ்காரம்.

ரஹஸ்யயோகினீரூப ஸ்வாத்மஸ்வரூபமான புக்தி சித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்னரூப ஸ்வாத்ம ஸ்வரூபமான சர்வகேசரீ முத்திரைக்கு நமஸ்காரம்.

ஆயுதசாலை.

(1) ஹிருதயத்ரிகோணத்தின் கீழ்பாகம்—பஞ்சதன் மாத்திரைகள்–சர்வஜ்ப்பனங்களாகிய பஞ்சபுஷ்பபாணங்கள் (இரண்டு கொத்துக்கள்) *

(2) ஹிருதயத்தின் வலதுபாசம்—மனம் – சர்வஸம்மோஹனமாகிய வெண்கரும்புவில் (இரண்டு)

(3) ஹிருதயத்தின் மேல்பாகம்—ராகம்-சர்வவசங்கரமாகிய பாசங்கள் (இரண்டு)

(4) ஹிருதயத்தின் இடதுபாகம்—துவேஷம்—சர்வஸ்தம்பனமாகிய அங்குசங்கள் (இரண்டு).

* இங்கு காமேசுவரர், காமேசுவரீ இருவருக்கும் ஆயுதங்கள் ஒரேமாதிரியானதால், இவ்வாயுதசாலையில் இருவருடைய ஆயுதங்களுமிருக்கும்.

எட்டா மாவரணமாகிய மத்தியத்ரிகோணம்.

திரிகோண சக்ரத்திற்கு நமஸ்காரம் என வியாபக நியாஸம்.

(1) ஹிருதய த்ரிகோணத்தின் நுனி—மஹத் தத்துவமாகிய காமேசுவரீ தேவி.

(2) அதன் வலது மூலை.—அஹங்காரமாகிய வஜ்ரேசுவரீ தேவி.

(3) அதன் இடது மூலை.—அவ்யக்தமாகிய பகமாலினீ தேவி.

ஹிருதயரூப சர்வசித்திப்ரதசக்ரேசுவரீயாகிய த்ரிபுராம்பாவுக்கு நமஸ்காரம்.

அதிரஹஸ்யயோகினீரூப ஸ்வாத்மஸ்வரூபமான இச்சா சித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்ன ரூப ஸ்வாத்ம ஸ்வரூபமான சர்வபீஜா முத்திரைக்கு நமஸ்காரம்.

ஒன்பதா மாவரணமாகிய பிந்து சக்ரம்.

பிந்து சக்ரத்திற்கு நமஸ்காரம் என வியாபக நியாஸம்.

ஹிருதய மத்திய ரூபமான* நிருபாதிக சம்வித் (ஞான) ரூபமான காமேசுவரர் அங்கத்தில் வீற்றிருக்கும் சச்சிதானந்த பிரஹ்ம ஸ்வரூபமாகிய ஸ்ரீ பரதேவதையான லளிதா திரிபுரசுந்தரிக்கு நமஸ்காரம்.

நிருபாதிக ஞானமே சச்சிதானந்த தர்மத்தோடு கூடினதாய் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்க, உபாஸகனாய், அவன் செய்யும் 'அது நானே' என்கிற அனுசந்தானம் ஸ்ரீலளிதையின் சிகப்பு நிறம் என பாவனை செய்யவும்.

சத்துவம், சித்துவம், ஆனந்தத்துவம் இவைகளால் விசிஷ்டமான சம்வித்திற்கும் (ஞானத்திற்கும்), கேவல (சுத்த) சம்

* பிந்து சக்ரத்தில் ஸ்ரீபரதேவதை வீற்றிருப்பதால் அப்பிந்து சக்ரமே நிருபாதிக ஞானமாகிய காமேசுவரர் என்பது பாவனைக் கிரமம்.

வித்திற்கும் (ஞானத்திற்கும்) உள்ள தாதாத்மிய சம்பந்தமே காமேசுவரர் அங்கத்தில் பரதேவதை வீற்றிருத்தல் என பாவிக்கவும்.

உபாதியின் மையாகிய வெண்மையால் குறிக்கப்பட்ட சுத்த சம்வித்தே (ஞானமே) சுக்ல சரணம். சித்துவத்தினால் (சித் என்னும் தன்மையால்) விசிஷ்டமான சம்வித் (ஞானம்), ஆரம்பமாகிய பாரஹந்த ரூபமான ராகத்தால் குறிக்கப்படும் ரக்தசரணம்.

"நான்" என்கிற விருத்தியால் நிரூபிக்கப்பட்ட விஷயதையே (அதாவது 'நான்' என்கிற விருத்திக்கு விஷயமாயிருக்கும் தன்மையே) சுக்ல ரக்த சரணங்கள் இரண்டுக்கும் உள்ள விசேஷ்ய விசேஷண பாவமான இரண்டின் சாமரஸ்யமென பாவிக்கவும்.

ஹிருதய ரூபமான சர்வானந்தமய சக்ரேசுவரீயாகிய ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரிக்கு நமஸ்காரம்.

பராபரரஹஸ்யயோகினீரூப ஸ்வாத்ம ஸ்வரூபமான பிராப்தி ஸித்திக்கு நமஸ்காரம்.

அபரிச்சின்னரூப ஸ்வாதம்ஸ்வரூபமான சர்வயோனி முத்திரைக்கு நமஸ்காரம்.

—என அந்தந்த ஸ்தானங்களைத்தொட்டு செவ்வனே அனுசந்தானம் செய்து உபசாரங்களை சமர்ப்பிக்கவும்.

உபசாரங்களின் பிரகாரமாவது.

(1) இவ்வாறு அபரிச்சின்னமாய் பாவிக்கப்பட்ட ஸ்ரீ லளிதைக்கு தன் மஹிமையில் ப்ரதிஷ்டை ஆகிய ஆஸனத்தை அனுசந்தானம் செய்கிறேன்.

(2) ஆகாசம் முதலான ஸ்தூலப் பிரபஞ்ச ரூபமான – (அவள்) பாதங்களிலுள்ள நாமரூபமாகிய மலத்தை சச்சிதானந்த ஏகரூபமாகிய ஜலத்தால் அலம்புவதான பாத்யத்தைப் பாவிக்கின்றேன்.

(3) சூக்ஷ்ம பிரபஞ்சரூபமான அவளுடைய கைகளில் உள்ள நாமரூபமாகிய மலத்தை மேற்சொன்ன ஜலத்தால்அலம்புவதான அர்க்கியத்தை சிந்திக்கின்றேன்.

(4) பாவனா ரூபமான ஜலங்களையும் உட்கொள்ளுதலாகிய ஆசமனத்தை சமர்ப்பிக்கின்றேன்.

(5) சத்வம், சித்வம், ஆனந்தத்துவம் முதலான அகில அவயவங்களிலும் அபேத பாவனையாகிய ஜலத்தின் சம்பந்தமாகிய ஸ்நாநத்தை சிந்திக்கின்றேன்.

(6) மேற்சொன்ன அவயவங்களில் பற்றியிருக்கும் பாவனாரூபமான விருத்திக்கு விஷயமாகிய (தேவிக்கு) அவ்விருத்திக்கு விஷயமாயிருத்தல் என்கிற பாவனையாகிய வஸ்திரத்தை கல்பிக்கின்றேன்.

(7) நிர்விஷயத்வம், நிரஞ்சனத்துவம், அசோகத்வம் (துக்கமின்மை), அம்ருதத்வம் முதலான அநேக தர்மங்களாகிய ஆபரணங்களை தர்மிக்கு (பரதேவதைக்கு) அபேதமாக சமர்ப்பிக்கின்றேன்.

(8) தன் சரீரத்திலிருக்கும் பிருதிவி பாகங்களின் ஜடத்தன்மையை (நாமரூபத்தன்மையை)ப் போக்குதலால் சின்மாத்திரமாய் மிஞ்சுதலாகிய கந்தத்தைக் கொடுக்கின்றேன்.

(9) ஆகாசபாகங்களை அவ்வாறு பாவிப்பதாகிய புஷ்பங்களைக் கொடுக்கின்றேன்.

(10) வாயுபாகங்களை அவ்வாறு பாவிப்பதாகிய தூபம் சமர்ப்பிக்கின்றேன்.

(11) அக்கினியின் பாகங்களை அவ்வாறு பாவிப்பதாகிய தீபத்தைக்கொடுக்கின்றேன்.

(12) அமிருத பாகங்களை அவ்வாறு பாவிப்பதாகிய நைவேத்தியம் செய்கின்றேன்.

(13) ஷோடசாந்தத்திலுள்ள சந்திர மண்டலத்தை அவ்வாறு பாவிப்பதாகிய தாம்பூலத்தை சமர்ப்பிக்கின்றேன்.

(14) பரா, பச்யந்தி, முதலான சகல சப்தங்களையும் நாதவழியாக பிரஹ்மத்தில் லயப்படுத்துவதான சிந்தனையால் ஸ்தோத்திரம் செய்கின்றேன்.

(15) விஷயங்களில் தாவிக்கொண்டிருக்கும் சித்த விருத்திகளை விஷய சம்பந்தத்தாலான ஜடத்தன்மையை (நாமரூபாம் சத்தை) நீக்கி பிரஹ்மத்தில் லயிக்கச் செய்வதான பிரதக்ஷிணம் செய்கின்றேன்.

(16) அவ்வவ்விருத்திகளை விஷயங்களினின்றும் திருப்பிபிரஹ்மம் ஒன்றினிடத்திலேயே நிற்கும்படியாய்ச் செய்தலாகிய நமஸ்காரம் செய்கின்றேன்.

இவ்வாறு உபசாரங்கள் செய்து ஹோமம் செய்யவும்.

விதிக்கப்பட்டன விதிக்கப்படாதன வாகிய வஸ்துக்களை விஷயமாக வுடையனவாய் உண்டாயினவாகிய, நான், குரு, தேவதை இவை முதலான கீழ்சொல்லப்பட்ட விருத்திகளே, ஸ்ரீசக்ரத்திலுள்ள அனந்த சக்திக்கூட்டங்கள். அவைகளும், அவைகளின் சூக்ஷ்மரூபங்களும், அவைகளின் லப்ஸ்காரங்களும், சகலமும் சின்மாத்திரமே என்கிற பாவனையால் ஸ்வாத்மாவில் ஹோமம் செய்கின்றேன்.

இப்பாவனைகளில் சக்திக்கூட்டங்கள் வரையுள்ள சகல விஷயங்களும் சின்மாத்திரரூபமே, ஒன்றற்கொன்று பேதமில்லை என்கிற பாவனையால் தர்ப்பணம் செய்கின்றேன்.

முன்சொன்ன திதிசக்கரம், காலசக்கரம், தேகசக்கரம் சர்வமும் சச்சிதானந்தமே, நாமரூபத்தோடு கூடினவையல்ல, ஆகையால் சர்வமும் பிரஹ்மமே என்று பாவிக்கின்றேன்.

அல்லது இவ்விடத்தில் முன்சொன்னதும சுவாலையத்தைக் கொடுப்பதுமாகிய நித்தியா பாவனையைச் செய்யலாம். அதனால் மனம், வாயு இரண்டும் பரமாத்மாவினிடம் லயமானதாய் மூன்று முஹூர்த்தமாவது, ஓர் முஹூர்த்தமாவது அபரிச்சின்னபாவ பாவிக்கவும்.

பிறகு இறங்கி, பிராணாயாமம் செய்து, ரிஷியாதி நியாஸங்களைச் செய்து குருவை ஸ்துதி செய்யவும்.

மு. கோ. நாராயணஸ்வாமிஐயர்.
ஆர் விஸ்வேசுவரசாஸ்திரியார் மகோபாத்யாயர்.

Confessions of A Hypnotist.

"But while these (Hypnotic) experiments assured me of the truth of certain statements that I had read as to the wonderful latent powers in man, I had still a feeling that it was morally wrong for me to be making those experiments. This feeling became stronger and stronger so that I found myself asking these questions, "Am I doing an injury to these people? Am I weakening their will-power-their power to resist evil? Have I any right whatever to control and dominate their minds and bodies?" I reached the conclusion that I was wronging them, and resolved never to hypnotise another person, not even to cure disease. For more than twenty-five years I have kept this resolution and after becoming a student of theosophy I was glad that I had given up hypnotism, for I then came to understand what I had intuitively felt before."—*John Schofield* in the September *Kalpaka*.

Charcot, one of the greatest hypnotists of this generation, says:—"The more I have examined the facts and the more I have advanced in my study, the more I am convinced that hypnotism is a reaction, not an action." What does this mean? It can only mean that hypnotism is to a certain degree a suspension of the vital force that animates and controls the body of man.—*Ibid.*

"Hypnotism weakens the will of the subject and destroys his independence."

"In the first place Hypnotism is founded on selfishness and cannot therefore be of real service to man."

"Our medical men have a good knowledge of anatomy and physiology but many of them understand little of the workings of the human-mind.

"Such a great power as this cannot be put into the hands of any class or profession with safety. Power is only safe in the hands of the unselfish wise, with those

whose desire is to bless not to curse, to quicken and strengthen the minds of our brothers and sisters and not to dull and deaden their faculties; who desire to increase and not to lessen the will power of all, so that all may be self controlled and in perfect harmony with the laws of being. Hypnotic suggestion is the reversal of certain laws of life and it is immoral to do evil that good may result."

"This much at least is plain, that we should never use our wills to force another to do, or refrain from doing even when we think that it would be for his good. We should never force on another the acceptance of any truth however important we may think it is—he must have liberty to accept, or reject as he may chose."—*Ibid.*

ஒரு சூந்யவாதியின் சொல்லுண்மை.

வாதம் என்றால் என்ன? ஒன்றை மற்றொன்றாக மாறச்செய்தல் வாதம். (Transformation). சொல்லை வதைத்து அதன் பொருள் மாறும்படிச் செய்தல் "வீறு வாதம்." இந்தவாதம் செய்வோரைத் தாயுமானவர் "வாதகோ வாளர்" என்று சொல்கிறார். ரஸவாதம் என்றால் லோகங்களின் ரஸபாகத்தை (Essence) மாற்றி அதனால் ஒருலோகத்தை மற்றொன்றாக மாறும்படி செய்வதற்குச் சொல்கிறது. கரும்பொன் (இரும்பு), செம்பொன் (செம்பு) முதலாகிய தாழ்ந்த லோகங்களை வெண்பொன் (வெள்ளி) பசும்பொன் (தங்கம்) முதலான உயர்ந்த லோகங்களாக மாற்றுவதற்கு ரஸவாத வித்தையென்கிற பேர் வழங்குகிறது. ஆனால் இந்த வித்தையின்பேரால் செய்யப்படும் பொய்பித்தலாட்டங்களுக்கு அளவு சங்கையில்லை. "ரஸவாதம் செய்கிறேன்" என்று எவனொருவன் வெளிப்படச் சொல்கிறானோ அவனை மோசக்காரனென்றே நம்பலாம். ஸ்தூலப் பிரபஞ்சத்துக்கு ரஸவாதம் எப்படியோ அப்படியே சூக்ஷ்ம ப்ரபஞ்சத்துக்கு சூந்யவாதம் என்று சொல்லலாம். சூந்யவாதம் என்றால் சேதநமானபொருளை சூந்யமானதாக மாற்றல். மனிதன் சேதனன்; அவனை ஜடவஸ்துவைப்போல் செய்யவேண்டுமானால், அவன் மனதைச் சூந்யவெளியில் கொண்டு போய் அழுத்தவேண்டும். சூந்யமென்றாலும் பாழ் என்றாலும் ஒன்றே. குளிர்ந்த ஒரு பதார்த்தத்தை சூடானது என்று ஒருவன்சொல்ல மற்றொருவன் அதை ஒப்புக்கொண்டு 'ஆம்; சுடுகிறது!' என்று கீழே போட்டு விடுவானானால், அது அவன் இந்திரிய உணர்ச்சியைப் பாழ்படுத்தாமல் எப்படி முடியும்? "சூந்யவாதம்" என்பது ஸ்தூல சூக்ஷ்ம காரணமாகிய மூன்றுக்கும் பொதுவான சொல். பூத பைசாசங்களையேவி தேஹத்தை பாழ்படுத்துவதற்கு 'ஏவல்' வித்தையென்றும், மனோசக்தியால் மனதைப் பாழ்படுத்துவதற்கு "மந்திரவாதம்" என்றும், புத்தியைப் பாழ்படுத்துவதற்கு "சூந்யவித்தை" யென்றும்பேர்.

Hypnotism என்பது ஸ்தூல சூக்ஷ்ம காரணம் மூன்றுக்கும் பொதுவாதலால், அது பொதுவில் சூந்யவித்தையே. வசீகரவித்தையென்று சொல்வது அதற்குப் பொருந்தாது. ஏனெனில் உண்மையான வசீகரவித்தை ஊசியைக் காந்த மிழுக்கின்றவாறு ஆத்ம சக்தியால் அநாத்மசக்தியை யிழுப்பதற்குள்ள சக்திக்குச் சொல்கிறது. காந்தத்தோடுறைபட்ட ஊசிக்கும் காந்தசக்தி யுண்டாவதுபோல வசீகரசக்திக்குள்ளான ஜீவன் ஆத்மசக்தியைப் பெறுகிறான். அதுதான் மஹான்களாயிருக்கப்பட்டவர்களுடைய புநிதசக்தி. † அதற்கு அது கவர்ந்ததையெல்லாம் புநித மாக்கும் சக்தியுண்டு. Hypnotism என்று சொல்லும் சூந்யசக்திக்கு அது கவர்ந்ததை யெல்லாம் சூந்யமாக்கும் சக்தியே உண்டு. இது அசுர வித்தையாம். இப்பொழுது அனேகர் வெளிப்பகட்டுக்கு வேஷமாய்ப் பலபல பேர்களை வைத்துக்கொண்டு, இந்த சூந்யவித்தையைக் கையாடி வருகிறார்கள். சிலர் வைத்தியரென்றும், சிலர் வைதீக சம்பிரதாயரென்றும் பேர்வைத்துக்கொண்டு பத்திரிகைகளின் மூலமாய் ஜனங்

† Compare Jesus' saying: "And I when lifted up from earth will draw all men unto me."

களை மயக்கி இந்த சூந்யவித்தையைக் கையாடி வருகிறார்கள். சூந்யவித்தையான அசுரவித்தையை "divine healing" என்று சொல்வது, இராவணன், பத்மாசுரன் முதலானவர்கள் தபஸிருந்து வரம்பெற்றதுபோல் தான்! இராவணன் மூவுலகையும் அடக்கியாண்டும், திருப்தியுறாதவனாய், அவனுடைய காமமனசு தூண்டப் பரதாரமோஹனாய் சீதையைக் கவர்ந்து சீரழிந்து கெட்டான். இப்படியே அசுரர்களில் தபஸியற்றி வரம்பெற்றவர்களெல்லாம் தாங்கள் பெற்ற வரப்பிரஸாதத்தாலே உலகத்திலுள்ளாரையெல்லாம் கெடுத்ததுமன்றி, தாங்களும் கெட்டார்கள். அப்படிப்போல இக்காலத்தில் அனேகர் பணவாசை மேற்கொண்டு மனோதத்துவங்களை அறைகுறைபாக விசாரித்து உண்மையான ஆத்மஸம்யமமோக மில்லாமல் விகார மனசுடன் கூடினவர்களாயிருந்துகொண்டுவெளிக்கு வேஷம் போட்டு ஜனங்களைக் கெடுத்து காசு பறித்து வருகிறார்கள். இந்த வித்தையை அனுசரித்த ஒருவர், தம்முடைய அனுபவத்திலிருந்துணர்ந்த சொல்லுண்மையை இங்கிலீஷில் மேலே வரைந்திருக்கிறோம். அவர், Hypnotism என்னும் சூந்யவித்தையானது Selfishness என்கிற அகங்கார மமகார விருத்தியை மூலாதாரமாகக் கொண்டிருப்பதால் அதனால் மனித வர்க்கத்துக்கு உண்மையான உபகாரம் ஒன்றும் செய்ய சாத்தியமில்லையென்று சொல்லியிருக்கிறார். இது ஸத்தியம், ஸத்தியம். வைத்தியர்கள் இதை யுபயோகிக்கிறார்களே யென்றால், அதுவும் முழுமோசந்தான். "ஊமையனுக் குளறுவாயன் சண்டப் பிரசண்டன்" என்கிற கதையாக அவர்கள் வெளிப்பகட்டினால் வீண்வேஷம் போட்டு வருகிறார்களென்பதில் சந்தேகமில்லை.

இதனால் "சூந்யவித்தை பொய்"யென்று நாம் சொல்லவரவில்லை. அது பிரபஞ்சத்தில் மிகவும் நிஜமாயிருப்பதினால்தான் அஃதை யுபயோகிப்பவர்கள் அகப்பற்றறுத்த ஞானிகளாயிருந்தாலன்றி மற்றவர் கையில் அது ஜனங்களுக்குக் கெடுதலையே உண்டுபண்ணு மென்று உறுதியாய்ச் சொல்கிறோம்.

ஒருவன் இன்னொருவனை யழைத்து 'சொக்குப்பொடி' போட்டு மயக்கித் தன்னுடன் வரும்படி யழைத்துக்கொண்டு போய் அவனது கைப்பொருளை யபகரித்துக்கொண்டு விட்டானாகில், அவனைக் குற்றவாளி யென்று தண்டிக்க பினல்கோடில் விதிகளிருக்கின்றன. ஆனால் இதே குற்றத்தை யொருவன் மனோவிலாஸமாய் விளங்கும் சூக்ஷ்மப் பிரபஞ்சத்தில் செய்வானானால் அவனைத்தண்டிக்க ராஜாங்கச் சட்டமில்லை. ஏனெனில் பூலோக இராஜாங்கம் ஸ்தூலப் பிரபஞ்ச மட்டில் செல்லத்தக்கதா யிருக்கிறது. ஒருவனுக்குள்ள வியாதியை சொஸ்தப் படுத்துவதாகச்சொல்லி அவனுடைய இச்சாசக்தியை அபகரித்துக் கொண்டு அவனை வெறும் பிரம்மைக்கு ஆளாக்கி அவனுடைய மனோசக்தியைக் கொள்ளைகொண்டு, அவனுக்கு தேஹ வியாதியை சொஸ்தம் செய்வது, கரும்பு ரஸத்தை யெல்லாம் பிழிந்தெடுத்துக் கொண்டு சக்கையை சுத்தம்செய்து கொடுப்பது போலிருக்கிறது.

இதற்கு எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம்.

சுமார் 10—வருஷங்களுக்கு முன் ஒரு சண்டாளன் தான் வைத்தியப் பட்டம் பெற்றிருக்கிறதைரியத்தைக்கொண்டு, ஒரு குலஸ்திரீக்கு 'குளோரொபாரம்' கொடுக்கிற வியாஜத்தில், அவள் மனதைக் கெடுக்கப்பார்த்தான். அந்தப் பாவியின் எண்ணம் பலிக்காவிட்டாலும் அவனுடைய பேதபாவனையானது அந்த ஸ்திரீயின் மனோஸ்திரத்தைக்கெடுக்க, அவள் மூன்று மாசகாலத்தில்தேஹசுகங்கெட்டு மாண்டாள். இங்கேஇந்த வைத்தியன் செய்தது தெரிந்துசெய்த குற்றமா, தெரியாமற் செய்தகுற்றமா வென்பது நமக்கு விசாரமில்லை. தெரிந்தோ தெரியாமலோ ஒரு வைத்தியன் குளோரொபாரம் கொடுக்கும்வியாஜத்தால் மனோபேதமுண்டு பண்ணி மனதிலேயைக் குலைக்கலாமென்றால், Hypnotism என்ற சூந்யவித்தையும் பூரணமாய்க் கற்றிருந்தால், அந்த ராக்ஷஸன் வேறு என்னதான் செய்யமாட்டான்.

இந்த ஸெப்டெம்பர் மாசத்தில் நான் இச்சென்னைமாநகரில் ஒரு தெருவழியே போய்க்கொண்டிருந்த பொழுது ஒரு வாலிபன் ஏதோ யோகம்செய்து கெட்டுப்போனதாக ஒருவர் பரிதாபமாகச் சொல்லக்கேட்டு, அப்பிள்ளையாண்டானைப் பார்க்கச் சொன்னதின்பேரில் பார்த்தேன். அவனுக்கு ஏதோ ஒருவித "மனப்பிரம்மை" யேற்பட்டு, அதை நிவர்த்தித்துக் கொள்ளும்வகை தெரியாது, இரண்டுமாச காலமாக "டாக்டரிடம்" ஏதோமருந்து சாப்பிட்டு வருவதாகச் சொன்னான்.

மனமே மாயையாயிருக்க, அந்த மனமாயை செய்யுங்கூத்து மிகவும் பெரிய பொய்க்கூத்தாக விருக்கிறது. இந்தப் பொய்க்கூத்தை மெய்க்கூத்தறிந்தார் ஒருவரே உண்மையாக வறிந்துமாற்றமுடியும்.

"மனமாயை மாயையம்மாயை மயக்க
மனமாயை தான்மாயும் மற்றொன்றுமில்லை
பினையாய்வதில்லை பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந்திருப்பது தத்துவந் தானே."

என்றார் திருமந்திரமோதிய திருமூலதேவரும். பொய்க்கூத்தை மெய்க்கூத்தால் வெல்லலாமன்றி பொய்யைப் பொய்யால் வெல்லுதலரிது. ஆவரணசக்தியானது ஈசுவரன், அகப்பற்றறுத்த ஞானிகள், இவரைத் தவிர மற்றவர்களை யெல்லாம் உண்மையறியவிடாது திரைபோட்டது போல் மறைத்து விவேகசூந்தியர்களாக்கும். விக்ஷேபசக்தியும் தாமசத்திற் சத்துவம் பிரதானமான குணத்திற் பிரதிபலித்ததாகையால், குணத்திரய விபாகமறியாதவர்களுக்குக் காரணகாரிய தோரணை விளங்கக் காட்டாது, மஞ்சட்காமாலை பிடித்தவனுக்கு எல்லாம் மஞ்சளாகத் தோற்றுவது போல, மனதின் களங்கம் நீங்காதவர்களுக்கு அவர்கள் மனோபாவம் போல் எல்லாம் விளங்கச் செய்யும். காரியத்தின் காரணம் தெரியாது காரியத்தைக் காரியத்தால் மாற்ற முயன்றால், அநர்த்த பரம்பரைக்கிடமுண்டாகும்.

வைத்தியத்தில் வியாதியின் குணங் குறியோடு வியாதியஸ்தனுடைய தேஹ மனோவாசிகளும் ஸ்வபாவமுமின்ன தென்றறியாது வைத்தியஞ் செய்தால், தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகச் சிறிய வியாதிபோய் பெரிய வியாதிக்கு அஸ்திபாரம் போடுவது போல் ஆகிறது நிதரிசனம். அப்படியே மனோபாவத்திலும் பாவாபாவத்தின் உண்மையறியாது Hypnotism போன்ற சூந்ய வித்தைகளால், மனதைப் பாழ்படுத்தி வியாதியை சொஸ்தம் செய்வதானது, பிள்ளை வரத்துக்குப்போய்ப் புருஷனை யிழந்த கதையாகத்தான் முடியும்.

வியாதி வருத்தங்களை யுண்மையாகச் சொஸ்தம் செய்ய ஒரேவழிதானுண்டு. அது என்னவெனில்,

"உள்ளமறிந்தே உயிர்நிலையுந் தானறிந்து
கள்ளமறிந்து கனவொடு நனவறிந்து
கள்ளப்பி ராணரின் கருத்தறிந்து
உள்ளத்துறவறுத்து உள்ளாறிவாய் நிற்றல்சுகம்."

(1) 'உள்ளமறிந்தே' யென்றதால், அந்தக் காரணசுத்தியின்றி யது கூடாதாகையால், ஹிருதயசுத்தியின் அவசியமும்;

(2) 'உயிர்நிலையுந் தானறிந்து' என்றதால், யோக ஸம்யமத்தாலன்றி யறியக்கூடாத தத்துவ தரிசனத்தின் இன்றியமையாமையும்;

(3) 'கள்ளமறிந்து' என்றதால், கள்ளத்தனம் செய்யு மனத்தை யறிந்தாலன்றி அதன்

'கள்ளம்' அதாவது 'மாயாஜாலம்' அறிதற்கரிதாமாதலால், சித்தவிருத்திநிரோதனுகார யோகசித்தியாம் சாத்தியப் பேறும்;

(4) 'கனவொடு நனவறிந்து' என்றதால், காரணம் கைக்கு வந்த பின்னும், அக்காரணத்தை விட்டுப் பிரியாமற்றானே, உட்பிரபஞ்ச வெளிப் பிரபஞ்சங்களின் ஆராய்ச்சியில் தேர்ச்சியும்;

(5) 'கள்ளப் பிரானுரின் கருத்தறிந்து' என்றதனுல் "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயமாய்" உறையும் "சிந்தையே கோயில் கொண்ட எம்பிரான்" கருத்தாகிய 'ஈசுவர சங்கற்பம்'—சமஷ்டி பாவநோக்கம் எப்படி யிருக்கிறதென்றறிவதற் கின்றியமையாத சமாதிப்பழக்க வாசனையாம் "ஒழிவில் ஒடுக்கம்" என்கிற அஹம்பாவ ஒழிவில் "சுத்த, சூந்ய, சுபாவங்களின் அபிமானம் விட்டு" சாக்ஷியாதீதத்தில் ஒடுங்கி யிருத்தலாம் சமாதிப்பழக்க முதிர்ச்சியும்;

(6) "உள்ளத் துறலருத்து" என்றதனுல், காரியகாரண தோரணை விசாரஞ் செய்ததனுலுண்டான "காரியகாரண வாசனைப்பற்று" தானும் "அற அறுத்து," சவிகல்பம் நிர்விகல்பம் எனகிற சமாதியில் உள்ளத்துணர்ச்சி மாத்திரமாய் விளங்கும் சமாதி பேதந்தானும் விட்டு "நான், நீ" அல்லது "சக்தி—சிவம்" என்கிற உறவறுத்து "மோனந்தனுய்,"-

"சாகாதிருந்ததலமே மவுனமது
ஏகாந்தமாகவிரு"—என்ற

மவுனஸ்தானத்தில் ஏகாந்தமாயிருத்தலாம் இருப்பும்;

ஆகவுள்ள ஷட்குண பூரணமான பகவத் லக்ஷணங்கள் ஆமம்பொருந்தி "அறிவறுமானந்த அருட்திருப்பாதந்தானுய் விளங்கும்." "உள்ளறிவாய்"—"நிற்றல்," அதாவது, நிலைகடந்த நிலையறிந்து நிற்றல் ஒன்றதானே "சுகம்"—சுகம் என்னும் பதத்துக்குப் பொருளாம். இப்படியாக "சுகம்" என்பதின் லக்ஷியார்த்தத்தை யுள்ளபடி உண்மையாய் அபரோக்ஷானுபூதியால் அனுபவித்தறிந்தவர் தாமே, ஆக்கவும் அழிக்கவும் காக்கவும் உண்மையாய்ச் சக்திவாய்ந்துள்ளவர். அவர்கள் கர்மானுசாரப்படி ஜீவன்களுக்கு தனுகரண புவனபோகங்களை யளித்துக்காக்கும் ஈசுவரனுடைய ஆஜ்ஞையை யறிந்தவர்களாதலால், அவர்கள் ஒருவரே ஈசுவராம்சமாயிருந்து அனுக்கிரகம் செய்ய வல்லனரும், அப்படி செய்வதற்கு அருகரும் ஆவார். மற்றப்படியுள்ள "சுற்றுக்குட்டிகள்" வைத்தியனென்றும், வித்துவானென்றும், யோகி யென்றும், வரப்பிரசாதனென்றும் (Divine Healer) பேர்வைத்துக்கொண்டு வெளிப்பகட்டாய்ச் செய்வதெல்லாம் வெறும் மோசமே யன்றி வேறல்ல வென்பது ஸத்யம், ஸத்யம், முக்காலும் ஸத்யம்.

NAVARATRI-1911.

நவராத்திரி பூஜை (1911)

Realisation through Gayatri.

MOTTO: "I long to enter *Samadhi*, perfect Samadhi,..... *Sandhyavandanam* must be the means of entering it. Realisation must come to me through Sandhyavandanam and not through any other means"—*The ultimate longing of an aspiring Heart.* *

"The eye of the flesh does not conceal God from man. It is he (man) himself who conceals himself from his own Self. When he knows himself truly as he *is*, then God and Man are one. Then he has nothing to deny himself, nothing to long for. There is then for him no labour, no effort, all outward life flows softly and gently in one. unbroken continuity from inward Being.—*Gleanings.*

"O'Lord in whatever thousands of incarnations I may have to pass, may I ever have unflinching devotion to Thee. That uninterrupted and constant love which men of the world have for things of the world, may I ever have the same for Thee."—*Prahlada.*

"Just as his mistress is dear to her lover, his riches to the miser, so may thou, O Rama, be dear unto me."—*Tulsidass.*

"To Such as these the whole world becomes one TEMPLE OF GOD."

"He who finds his own happiness within himself, who sports within himself whose light is within his own self, that Yogi becoming Brahma is absorbed in Brahma."—*Bhagavad Gita.*

*ஒரு கிருபர் எழுதுகிறார்:—"தங்களுடைய 'விவேகசிந்தாமணி' ஜூலை நம்பரில் பிரசுரமாயிருக்கும் "யமதரிசனம்" என்னும் வியாஸத்தை நான் வாசித்து ஆனந்தித்ததுமன்றி என் அன்னைக்கும் வாசித்துக் காண்பித்தேன். அதைக்கேட்ட அவள் என்னிலும் பதின்மடங்கு ஆனந்தத்தையடைந்து ஸந்தியாவந்தனம் முழுவதற்கும் இம்மாதிரி லக்ஷியார்த்தம் எழுதினுல் உலகுய்ய ஒரு வழிகாட்டினதாகு மென்றாள். "அன்னைசொல்மிக்கமந்திரமில்லை" யாதலால் இதைத் தங்கட்குத் தெரிவிக்கலானேன்."

"Neither the Vedas, nor the Sastras, nor the Gita aim at declaring the true nature of that which cannot be conceived by the intellect, but they aim at so purifying the nature of the *Thou* (தவம்பதம்), the individual Self, as to make it realise its *unity* with *That* (தத்பதம்). This they do by showing that it is *not this, not this*, etc.'

"When we have broken our god of tradition, and ceased from our god of rhetoric, then may God fire the heart with His Presence."—*Emerson.*

"அர்கமண்டலமத்யஸ்தம்லலரியகோடிஸமப்ரபம்,
ப்ரஹ்மாதிஸேவ்யபாதாப்ஜம்நௌமிப்ரஹமாமாஸகம்.‖"

1. அவ்யக்தஸ்துதி—அஜபாகாயத்ரி

(1) எங்குநிறைபுன்வடிவையுள்ளத்திருத்திக்
கங்குல்பகலறவாடுநல்லரவையெழுப்பிபுன் *
னங்குசபாசத்தாலைந்தொடுநாலையுமறப்படுத்தித்
துங்கமுறவெங்குநிறையாலயங்கடந்து †
பங்கமிலாதெங்குநிறையம்பரத்துடுபோய்—

2. ஆத்மாநந்தபூரணம் ‡-துரீயகாயத்ரி

(2) மாதவர்புகழாறுமாநிலங்கடந்து $
யாதவர்புகழ்மந்தைமாவெளிகடந்த §
சேதனர்புகழுண்மைச்சோதியையருந்தி
வேதனைக்கெட்டாதவீட்டுச்சிபட்டுன்
காதனைக்கண்டிறங்கநல்யோகியாமே.

3. சாதனம்

(3) நல்யோகமாவதுநவகுண்டநாயகியின்
பல்யோகமெல்லாம்பரிந்துள்ளேசெய்தபின்,
வில்யோகம்செய்யம்புவிட்டுநோணேற்றியே
வில்வேகத்தாலந்தவம்பரத்துடுபோய்
நல்யோகத்தால்தொட்டகுறியெய்தற்போலவே,-

4. சாத்தியம்

(4) நவவியூகமாயுள்ளநல்லிசைத்தோற்றமாம்
நவலோகபாவனத்தின்மூலமாம்நவகுண்டத்
துவந்தெழுந்தத்பாவமத்தனையுமொன்றாக
பவயோகத்தாலிலங்கும்துவம்பதமேதத்பதமா
நவலோகநாயகியைநல்லிதயத்திருத்தலாமே.

5. யோகதீக்ஷை

(5) நவலோகநாயகியைநல்லிதயத்திருத்தல்யோகம்
நவலோகநாயகியைநல்லிதயத்தருந்தல்போகம்
நவலோகநாயகியைநல்லிதயத்தறுத்தல்மோகம்
நவலோகநாயகியைநல்லிதயத்தொறுத்தல்சோக
நவலோகநாயகியைக்காணுதகண்புண்ணுமே. [ம்

† பிரணவாலயங்கடந்து.

‡ பரப்ரஹ்மதுரி—நாராயண நிஷ்டானுபூதி.

$ தபோதனர் புகழும் பூஃ புவஃ சுவஃ மஹஃ ஜநஃ தபஃ எனுமாறுலோகங்களுல் கடந்து.

§ 7-வதான சத்யலோகமுங்கடந்த

* Compare: "I move, ever awake day and night, knowing me, the MAN OF WISDOM becomes happy"—*Mahabarata*, (Udyoga Parva Ch. 43 No 28-31.

6. ஞானதீக்ஷை

(6) நவலோகநாயகியேநல்யோகலக்ஷியமாம்
நவலோகநாயகியேபவயோகத்தின்பொருளாம்
நவலோகநாயகியேசிவபோகமளிப்பவளாம்
நவலோகநாயகியேபவமோகமாற்றுவிப்பன் [வன்.
நவலோகநாயகியேபவரோகவைத்தியஞ்செய்

7 'செம்பு பொன்னுக்கல்' $ —ஆத்மதீக்ஷை.

(7) போற்றுகின்றேன்புகழ்ந்துபுகல்ஞானத்தைத்
தேற்றுகின்றேன்சிந்தைநாயகன்சேவடி
சாற்றுகின்றேனறையோசிவயோகத்தை
யேற்றுகின்றேனெம்பிரானேரெழுத்தே!
மாற்றுகின்றேன்செம்புபொன்னுகவையனே!

8 திருவம்பலம்

(8) செம்புபொன்னுகுஞ்சிவாயநமவென்னிற்
செம்புபொன்னுகத்திரண்டதுசிற்பரம்
செம்புபொன்னுகும்'ஸ்ரீயுங்கரீயுமென' ‡
செம்புபொன்னுன திருவம்பலத்தே
வம்புசெய்மநநமச்சிவாயவானதே.

(9) மாரன்வெற்றி—மார்க்கண்டேயபூஜை.

(9) 'சிவாய'வென்னுமக்ஷரம்சிவனிருக்குமக்ஷரம்
உபாயமென்றுநமபினேர்க்குண்மையானஅக்ஷரம்
கபாடமிட்டவாசல்க்கட்டுபோகும்வாயுவை
உபாயமிட்டழைக்குமேசிவாயவைந்தெழுத்துமே
யமாய'வென்னுமிருத்புவையெட்டிக்காலாலுதைக்கு [மே.

10 அருச்சனை

(10) ஹரஹரவென்னவரியதொன்றில்லை
ஹரஹரவென்னவறிகிலர்மாந்தர்
ஹரஹரவென்னவமரருமாவர்
ஹரஹரவென்னவறும்பிறப்பன்றே
ஹரஹரவென்றேபறுத்தனன்பிறப்பை.

11 நவகுண்டம்

(11) பார்த்திடமெங்கும்பரந்தெழுசோதியை
† யாத்தமதாகவேயாய்ந்தறிவாரில்லை
காத்துடலுள்ளேகருதியிருந்தவர்
மூத்துடல்கோடியுங்கண்டவாறே
நீத்துடலொன்பதுகுண்டமுமொன்றுக்
[கண்டதுகாண்பொருளே.*

$ 'நரி—பரியாக்கல்.'

‡ ஸ்ரீ ம்-ஹ்ரீ ம்

† ஆத்தம்=அர்ஹம்=(Arhat) பரிசுத்தம் = the Holy, The Holy Entrance.

11. * Compare: "Having closed all the gates of the body with the mind centered in the heart, the life-breaths within between the eyebrows, firm in Yoga, he who departs this body uttering Aum & thinking of ME attains to the highest goal." (Bhagavad Gita Chap VIII).

12 திரிபுரை

(12) குண்டலக்காதிகொலைவிற்புருவத்தன்
கொண்டவரத்தினில்மன்னுகோலத்தன்
கண்டிகையாரங்கதிர்முடிமாமதிச்
சண்டிகைநாற்றிசைதாங்கிநின்றாளே
யெண்டிசைபத்துமேகமாய்நின்றனன்.

13 திரிபுரசுந்தரி

(13) வெளிப்படுவித்துவிளைவறிவித்துத்
தெளிப்படுவித்தென்சித்தையினுள்ளே
களிப்படுவித்துக்கதிர்ப்படுசோதியை
யொளிப்படுவித்தென்னையுய்யக்கொண்டவள்
வெளிப்படத்தன்னையும்விட்டுநின்றாளே.

14. பயிரவி (பைரவி)

(14) ஆதியனாதியகாரணகாரணி
சோதியசோதிசுகபரசுந்தரி
மாதுசமாதிமனோன்மனிமங்கலி
யோதியென்னுள்ளத்துடனிருந்தம்பர
வீதியிலென்னைவிடத்துணிந்தாளே.

15. பூரணசக்தி

(15) கும்பக்களிறைந்துங்கோலொடுபோகனும்
வம்பிற்றிகழுமணிமுடிவண்ணனும்
இன்பக்கலவியினிதுறைதையலும்
அன்பிற்கலவியுளாயொழிந்தாரால்
இன்பக்கலவியுமன்பாய்முடிந்ததே.

16. ஆதாரவாதேயம்

(16) அதுவிதுவென்னுமவாவினைநீக்கித்
துதியதுசெய்துசுழியுறநோக்கில்
விதியதுதன்னையும்வென்றிடலாமே
மதிமலராள்சொன்னமண்டலமூன்றும்
பதியிடங்கொள்ளப்பறந்திடுங்காணே.

17. மந்திரப்பேறு

(17) காணும்பொருளுங்கருதியதெய்வமும்
பேணும்பதியும்பெருகியதீர்த்தமும்
ஊணுமுணர்வுமுறக்கமுந்தானாகக்
காணுங்கனகமும்காரிகையாமே
பூணும்பணியெலாம்பொன்னாகுமாபோல்.

18. யந்திரப்பேறு

(18) சீவிப்பதன்முன்னேதேவியையுத்வாகனத்தால்
பாவித்திதயகமலம்பதிவித்தங்கு
யாவர்க்குமெட்டாவியந்தாராசனை
நீவைத்துச்சேவிநினைந்ததுதருமே
பாவித்ததெல்லாம்பலித்திடுங்காணே.

19. நிஷ்களநவாக்ஷரீ

(19) உற்றிடமெல்லாமுலப்பில்பாழாக்கி *
† சற்றிடமெல்லாங்கடுவெளியானது
மற்றிடமில்லைவழியில்லைதானில்லை
சற்றிடமில்லைசலிப்பறநின்றிடே
மற்றிடமெல்லாமறைப்பில்லைபாரே.

20. அசல-நிச்சலசக்தி (விருத்தாசலத்தம்மை.)

(20) நின்றிடுமேழ்கடலேழ்புவியெல்லாம்
நின்றிடுமுள்ளநினைத்தவைதானெக்கும்
நின்றிடுஞ்சத்திநிலைபெறக்கண்டிட
நின்றிடுமேலைவிளக்கொளிதானே!
நின்றிடமனத்துளேயில்லடைந்தாளுமே!

வாழ்த்து.

21. இல்லடைந்தான்றெப்பு (பெரியநாயகிபிரலாதம்)

(21) இல்லடைந்தாளுமியல்புடைமாதவள்
இல்லடைந்தானுக்கில்லாததொன்றில்லை
யில்லடைந்தானுக்கிரப்பதுதானில்லை
யில்லடைந்தானுக்கிமையவர்தாமொவ்வார்
இல்லடைந்தானுக்குமில்லாததில்லானையே.

22. 'இல்-ஆனை'—மூலாவரணநீக்கம்.

(22) ஆனைமயக்குமறுபத்துநாற்றறி
யானையிருக்குமறுபத்துநாலொளி
யானையிருக்குமறுபத்துநாலறை
யானையுங்கோடுமறுபத்துநாலிலே
யானையுமில்லடைந்தாளங்குசத்திலே.

திருவருட்சிறப்பு.

அதுவதுவாய் நின்ற அனுபவங்கள் ஐயைந்த்
அதுவதுவாய் நின்றறிவித் ததன்றி—யதுவதுவுந்
தானல்லால் வேறில்லை யென்றான் தனிநின்ற
கோனருளா நந்தவல்லி யென்றாய்.

K. S. S. A.

* உலப்பில் = கேடில்லாத, சாவில்லாத. பாழ்ச
சூந்யம், சுத்தத்தின் சூக்ஷ்மரூபம்.

† சற்றிடம்=சிற்றிடம்=சிற்றம்பலம்=
தஹராகாசம்=இதயாகாசம்.

LALITAMBAL.—V.

லளிதாம்பாள் சரித்திரம்.

V. "காசிக்குப்போனாலும் கர்மந்தொலையாது."

ஸ்ரீ ஹரிதத்தாசாரியார் குரு பரம்பரையில் அவதரித்த மஹான் ஒருவர் இருந்தார். அவருக்கு "நாராயணகுருஸ்வாமி" யென்று பேர். அவருடைய சமாதி திருவாதிக்கடுத்த திருப்பூந்துரை ஸ்தலத்தில் இன்றைக்கு மிருக்கிறது. தஞ்சாவூர் மஹாராஜா நாளையில் அவருடைய சமாதியில் சரியாக பூஜை நடந்து வருவதற்காக விட்ட மானியங்கள் இன்னுமிருக்கின்றன. அங்கே யொரு தம்பிரானிருந்து அந்த தர்ம கைங்கரியத்தை மேற்பார்த்து வருகிறார்.

இந்த "நாராயணகுருஸ்வாமி" யென்பவர் ஒரு பெரிய ஹடயோகி; குண்டலினி யோகத்தில் தேர்ந்தவர்; அவருடைய சமாதியின் வாசலில் இன்றைக்கு மிரண்டு நாகர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே அபிஷேகார்ச்சனைகள் செய்யும் பிராமணர் இன்றைக்கும் சமாதியினுள்ளிருக்கும் பொழுது வாய்திறந்து பேசுவதில்லை. மவுனம் கலைந்தால், அபசாரதோஷம் ஸம்பவிக்குமாம். அப்படி யேதாவது ஆசாரக்குறைவு நேர்ந்தால் வாசற்படியின் குறுக்கே பாம்புவந்து படுத்துக்கொண்டு வழியை மறைக்குமாம்.

குண்டலினியை "வாழும் பாம்பு" என்று சொல்வார்கள். அந்தப் பாம்பு சில வீடுகளில் குடியிருப்பதாகவும், அது மனிதர்கள் கண்ணுக்குப்படாமல் வீட்டில் குடியிருந்து வருகிறதென்றும், உபாலகர்கள் கண்ணுக்கு மட்டும் படுமென்றும் சொல்வதுண்டு. இப்பொழுது நான் உட்கார்ந்து கொண்டு இச்சரித்திரத்தை யெழுதும் வீட்டில் "வாழும்பாம்பிருக்கிறதென்று" கிழவிகள் சொல்லக்கேட்டிருக்கிறேன். ஜனங்கள் சொல்லும் கதைகள் எப்படியிருந்தாலும் "ஒன்பது வாசற்குச்சாம்" இந்த மானிட தேகத்தில் ஒரு 'வாழும்பாம்பு' இருக்கிறது நிஜம். குடித்தனக் கிரஹங்களும், தேவாலயங்களும் "தேஹோ தேவாலயப்ரோக்தஃ" என்ற சுருதி [illegible] தேஹ அமைப்பை ஆதாரமாகக்கொண்டு கட்டப் பட்டிருப்ப[illegible] "உலப் பிரதியிலுள்ளது நகலிலும் உண்டு" என்கிற நியாயப்படி, வீடுகளிலும் வாழும்பாம்பு இருப்பது வாஸ்தவம் என்பதற்கு ஐயமில்லை.

வாழும் பாம்புக்கு இரவு பகலென்கிற வித்யாஸம் கிடையாதாம். அது அக்னிஸ்வரூபமாய் தோஜோமயமாய் விளங்குவதா யிருப்பதால், இரவு பகலில்லாதவிடத்தே யது தன் ஒன்பது தலையையும் விரித்து ஆடிக்கொண்டிருப்பதாகச் சொல்வார்கள். இப்படிச் சொல்வதெல்லாம் ஜனங்களின் ஐதிகபாவனைகளாம். இவற்றிற்கு ஆதாரமான தத்துவ உண்மைகளை யாய்ந்தறிய அவர்களுக்கு சக்தி போதாதாகையால், அவர்கள் தங்களுடைய ஸ்வப்நாவஸ்தையில், அல்லது ஸ்வப்ந-ஜாக்ரத்தில் கண்டவற்றைப் யதிர்சயமாகச் சொல்லி பக்தி பாராட்டி வருகிறார்கள்.

"எங்குநிறையுன்வடிவையுள்ளத்திருத்திக்
கங்குல்பகலறவாடுகில்லாவையெழுப்பியுன்
அங்குசபாசத்தாலைந்தொடோலையுமறப்படுத்தி
துங்கமுறஎங்குநிறைஆலயங்கடந்து
பங்கமிலாதெங்குநிறையம்பரத்தூடுபோய்—

"மாதவர்புகழாறுமாகிலங்கடந்து
யாதவர்புகழ்மந்தைமாவெளிகடந்த
சேதனர்புகழுண்மைச்சோதியையருந்தி
வேதனைக்கெட்டாதவீட்டுச்சிபட்டுன்
காதனைக்கண்டிறங்கல்யோகியாமே."

—என்றதனால் ஐதிக புராண வழக்காய் "வாழும் பாம்பு" என்று ஜனங்கள் கொண்டாடுவதும், குண்டலினி யென்று யோகிகள்தொழுவதும், ஒன்றே யென்று நினைக்க ஆஸ்பதமுண்டாகிறது. இந்தக் குண்டலினி யென்னும் பாம்பானது அக்னியின் ஸ்வரூபமான சக்தி மய

மானது. மாயாசக்திக்கு இருப்பிடமானது. விஷ்ணுவின் அம்சமாய் விளங்குவது. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்றபடி தோன்றுவதாயிருக்கும் உலகங்களெல்லாம் விஷ்ணு மயமாக விருக்கிறது. [illegible] சக்தி வியாபகமாயிருக்கிறது. இந்த வியாபகசக்தி அவ்யக்தமாகையால், அந்த சக்தியை "உத்வாஹனத்தால்" மேல்தூக்கியெழுப்புவதுதானே குண்டலினியை எழுப்புவதாம். வியாபகமான சக்தி ஏகாக்ரப்பட்டு மேல் எழும்பும்பொழுது அது படந்தூக்கி யாடுபாம்பை யொக்கும். விரிந்த தலையே வியாபக சக்தி; அதன்வாய் ஏகாக்ர முகம்; அந்தப் பாம்பின் உடல் வியக்தமான வியாப்யியஜகம். படந்தூக்கி யாடும் பொழுது நல்லபாம்பு செய்யும் வாயுபந்தனம்போல சமஷ்டி ஜீவசக்தி. சமஷ்டிஜீவன்களின் உயிரையுந்தன்னுளடக்கிக் கொண்டு வாயு பந்தனத்தால் சித்தவிருத்தி நிரோதம்செய்துகொண்டு சமஸ்தஜகமும் தானுய்த் தன்னுளடக்கிக்கொண்டு பார்த்தும், "பார்ப்பான், பார்வை, பார்க்கப்படும் பொருள்" என்கிற திரிபுடி மயக்கம் தீராதவராய் பகவானைத்துதித்து நிற்க, அவரது துரியபாதம் தன் சிரஸிற்பட திரிபுடிமயக்கம்தீர்ந்து எல்லாமொன்றாக விருக்கப் பலவிதமாகத் தோற்றுவிக்கும் தோற்றரவாம் திருநிருத்தத்தைப் பார்த்துக்கொண்டு நிற்பவர் பதஞ்சலி பகவான். இவர் ஆதிசேஷனின் அவதாரம் என்பர். அதாவது அவ்யக்தசக்தியின் அபிமானியான அவ்யாகிருதனின் அம்சமாம். சமஷ்டிகாரணவஸ்துவையறிந்து தன் யோகமகிமையால்அதுவே தானாய்வமைந்து நின்றும், அந்தக் "காரணத்துக்குக்காரணமாய்" தான் அகாரணமாயிருக்கும் பொருளைக்காண அருட்கண்ணின்றித் தவித்தார் பதஞ்சலி முனிவர் என்பது புராணம். அருட்கண்பெற்ற பின்னரே மருட்கண் வீழ்ந்தால், அவர் சாங்கிய யோகிகள் சொல்கிறபடி பிரகிருதி-புருஷன் வரையில் தத்துவங்களைபாராய்ந்து சென்றாலும் திரிபுடி மயக்கந் தீராமை கண்டு "ஆறுமாநிலங் கடந்து அப்புறத்தில் வெளிகடந்த ஆதி யெங்கள் சோதியை, உடுபதிக்கண் அமுதருந்தி உண்மைஞான உவகையள், உச்சி பட்டிறங்குகின்ற யோகி நல்ல யோகியே" என்று சிவவாக்கியர் கூறியபடி சித்த விருத்தி நிரோதனத்துக் கப்பால் அருள் வெளிதரிசனங் கண்டு, அருள்மயமாகப்பெற்று, "அயனருளே கண்ணாக" அவனைப் பார்த்தவரே யோகஸாம்ராஜ்யம் பெற்றவரென்று யோகசாஸ்திரத்தைக் குறைதீர நிறைவெய்த நிர்ணயஞ் செய்தார்.

அத்வைத வஸ்துவை யறிந்தனுபவித்து அறிந்த அறிவு அழிந்தும் உடலழியாது "உச்சிபட்டிறங்குகின்ற யோகி நல்ல யோகியே" என்பது யோக சாஸ்திரத்தின் உட்பொருளாம். இந்த உட்பொருளை யறிந்து அத்வைதானுபவம் ஸித்திக்கத் திரிபுடிரஹிதமாய் நின்று நிலையில்லா நிலையறிந்து நிர்மலமாய் உன்முகப்பட்டவரே நல்ல யோகஸாம்ராஜ்யத்தைப் பெற்றவர். மற்றவர்களெல்லாம் "கற்றுக் குட்டி யோகிகள்." காசிக்குப் போனாலு மிவர்களுக்குக் கர்மம் தொலையாது.

ஸ்ரீநாராயணகுருஸ்வாமிகள் ஹடயோக ஸித்தரானாலும், அவர் அஃதோடு நில்லாமல், யோக ஸாம்ராஜ்யமாகிய அத்வைதானுபவம் சித்திக்கும் வரையில் மேலுழைத்து அபரோக்ஷாநுபூதி பெற்ற மஹான். இவருக்குள்ள யோகசித்திகளால் அனேக அற்புதங்கள் செய்தாராகிலும் அவற்றை யெல்லாம் அவர் பெரிதாகப் பாராட்டவில்லை.

இந்த மஹான் கொள்ளிடக்கரைக்கப்பால் ஓர் மரத்தடியில் மௌனாந்த மூர்த்தியாய் வீற்றிருப்பதைக் கேள்வியுற்ற, பஞ்சநதக்ஷேத்திரமாகிய திருவாதியில் வசித்த பார்ப்பனச் சிறுவரில் ஒருவர் அவருடைய தரிசனஞ் செய்யவேண்டி, காலையில் பூஜை நைவைத்தியத்துக்கு வேண்டிய சாமான்களை ஆயத்தம் செய்

துகொண்டு அவரைத் தரிசிக்கப்போனார். போனவர் அந்த மஹானைக் கண்டு [illegible] கரைந்துருகி கல்லாச் சமைந்துநிற்க, அந்த யோகீசுவரர் அவருடைய பரிபக்குவமறிந்து 'ஸ்பரிசதீக்ஷை கொடுத்து' அவரை மறுபடியும் பிரஜ்ஞை யுண்டாகச்செய்தார். தேஹப்பிரஜ்ஞை வந்ததும் அச்சிறுவர் யோகீசுவரருக்கு அமுதருந்தக் கொடுத்து 'கற்றாபோல் மனங் கசிந்துருகப்' பிரியமாட்டாமற் பிரிந்து பின்னும் தன்வீடுவந்து சேர்ந்தார். இப்படியாக அவர் தினம் திருவாதியிலிருந்து கொள்ளிடந்தாண்டி அக்கரையிலுள்ள யோகீசுவரருக்கு அமுதருந்தக்கொடுத்து அவரது ஸந்நிதானத்தின் மகிமையால் தானும் உண்மையான அமுதருந்தி, வீடு திரும்புவதாயிருந்தார்.

இப்படி நடந்துவருநாளில் ஒருநாள் சித்திரைக்கோடையில் கொள்ளிடம் காய்ந்து அதன்மணல் பொரியும்படியான சுடுண்டிருக்கையில், திருவாதியிலிருந்து போய்க்கொண்டிருந்த பார்ப்பனச்சிறுவர் அக்கொள்ளிடந்தாண்டிப் போய் அம்மஹானுக்கு அமுது படைக்கவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. வெயிலுக்கஞ்சாது சிறுவன் குருபக்தியுண்டக் கொள்ளிடத்து மணலில் இறங்கிவிட்டான். ஆனால் சுடு பொறுக்க முடியவில்லை! காலுக்கு செருப்பு முதலான ரக்ஷைகள் ஒன்றுமில்லை. இந்த அவஸ்தையில் பாதிக்கொள்ளிடம் வந்துவிட்டான். மணலின் சுடுதாங்கமுடியவில்லை. கால்கொப்புளிக்கலாயிற்று. அதற்குமஞ்சாமல் குருவைத் தியானம் செய்துகொண்டு தானே, அச்சிறுவன் ஒரு கையில் நிவேதனப்பாத்திரமேந்தி, மற்றொரு கையால், மேல் சவுக்கத்தை மணலிற்போட்டு அதில் நின்று நின்று சற்றிளைப்பாறிக் கடைசியில் அக்கரைபோய்ச்சேர்ந்தான்.

அன்று அமுது படைக்குங்காலம் மிகத் தாழ்ந்தமைக்காக வஞ்சி, தன் கால்நோவையும் கொப்புளங்களையும் பாராமல் தானே, கைகால் சுத்திசெய்து கொண்டு யோகீசுவரர் இருக்குமிடமேகிச் [illegible]ன். இவன் போகுமுன் மௌனவிருதரான அவர், தனதுடம்பிலுண்டாயிருந்த கொப்புளங்களைக் காட்டி "அப்பா ஏனிந்தத் தேஹத்தை யிப்படி வதைக்கிறாய்!" என்று சொல்லி கண்ணில் நீர்ததும்பப் பரங்கருணைமிகுதியால் கரைந்துருகிப் பின்னும் மவுனம் சாதித்தனர்.

பிள்ளையாண்டான் தன் குருவின் திருமேனியிற் பெரிய பெரிய கொப்புளங்கள் இருக்கக் கண்டு, 'இந்த அபராதத்துக்கு நான் ஆளானேனே!' யென்று தவித்துருகினான். அவன் தவிப்பதைக்கண்டு குருவானவர் அவன் காலிலுள்ள கொப்புளங்களைக் காட்ட, தன் தேஹத்திலுண்டான கொப்புளங்கள் அவர் திருமேனியில் தோன்றியதாக வறிந்து பதைபதைத்து நடுங்கினான். யோகீசுவரர் அஞ்சிய தன் சீஷனுக்கு அபயஹஸ்தம் கொடுத்து அன்று சாயங்திரமே கொள்ளிடக் கரையைவிட்டு கண்டியூர்ப் பக்கத்திலுள்ள திருப்பூந்துரை வந்தெய்தினர்.

இவர் திருப்பூந்துரையில் வெகு காலமிருந்து பூரணமெய்துங் காலையில் திருவாதியிலுள்ள வேதபாராயண பிராமணர்கள், பண்டிதர்கள், ராஸ்திரவிற்பன்னர்கள் எல்லாரையும் தருவித்து அவர்கள் திருக்கூட்டத்தின் நடுவே ஹடயோக ஸாதனையினால் தன் கபாலம் வெடிக்கப் பிராணனை உத்வாஹனம் செய்து ஜோதியோடு ஜோதியாய்க் கலந்தாரென்று சொல்கிறார்கள்.

இப்பேர்ப்பட்ட மஹானுக்கு ஆத்ம புத்திரராயிருந்து ஸமாதிக்கிரியைகளெல்லாமியற்றிய அப்பார்ப்பனச் சிறுவர், அவருடைய திருவருளால் பூரணஞானமெய்தி தஞ்சாவூர் மஹாராஜாவினால் மிகவும் மதிக்கப்பட்டவராய் அவரால் மானியம்விடப்பெற்றுத் திருவாதியில் கிருஹஸ்தாசிரம தர்மம் தவறாமல் ஞானமார்க்கத்தையு மனுசரித்துக்கொண்டு விளங்கினார். அவர் பேர் இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது. "தீர்த்தம் பஞ்சநத சாஸ்திரிகள்"

என்றபேர் இன்றைக்கும் பிரவலமாய் [illegible] மஹான் தான அபராக்ஷானுபூதியைப்பற்றபின் தன்னை வந்தடுத்த ஏழைகளுக்கெல்லாம், பூஜா தீர்த்தமளித்து, அதனால் அவர்களைப் பிடித்த பீடைகளெல்லாம் பரிகாரமாகப் பரோபகாரமியற்றி வந்ததால், அவருக்கு "தீர்த்தம் பஞ்சநத சாஸ்திரிகள்" என்கிற பிரஸித்தப் பேர் கிடைத்தது. உண்மையில் ஸ்வாநுபவச் செல்வரான இந்தமஹான் தமது அப்பியாஸகாலத்தில் மௌனவிரதம்சாதித்துவந்ததன் குருவைச் சாதனமளிக்க வேண்டுமென்று கேட்டார்: அவர் அப்படிக்கேட்ட சற்சிஷ்யனுக்கு குண்டலினி தரிசநமுண்டாகச்செய்து அதுவே சாதநமென்று சொல்லாமற் சொல்லிச் சும்மாவிருந்தார்.

தன் குரு மஹாசமாதியடைந்தபின் கிரஹஸ்தாசிரமம் புகுந்த வாலிபர் "விவாகம்" தன்னையெங்கே ஸம்ஸாரத்தில் தள்ளிவிடுமோவென்று அஞ்சி, தாலிகட்டினபெண்ணைக் கூடிவாழ்கிறதா, அல்லது "கூறுமற் சந்நியாசங்கொள்" என்ற வாக்கை யனுசரித்து அவளை விட்டு ஓடிப்போகிறதாவென்று சங்கைபெழ, அதனால் மனம் சலித்துக்கொண்டிருக்கையில், வேட்டகத்துக்குப் போகும்படியான சந்தர்ப்பம் வந்தது தனது சஞ்சலந்தீர குருநாதனே திடஞ் சொல்லவேண்டுமென்று எதிர்பார்த்த சிந்தையினராய் வெளிக்குச் சமாதானப்பட்டவராயிருந்தார். அவர் வேட்டகத்துக்குப் போயிருந்த வேளையில், தன் சஞ்சலந்தீர குருநாதனருளால் அவருக்கு விந்தையான ஒரு சொப்பனம் கண்டது. தன் குருவருளால் தரிசிக்கப்பெற்ற குண்டலினியானது ஓர் பெரிய வாழும்பாம்பாக வந்து அவருக்கு சொப்பனத்தில் தரிசனம் கொடுத்து, தான் இன்னஇடத்தில் வயல் வெளியில் புதையுண்டுகிடக்கிறதாகவும் தன்னையெடுத்து ஆராதிக்கவேண்டுமென்றும் சொன்னதாகச் சொப்பனம் கண்டார். விழித்துக்கொண்டு பார்க்க, கண்டகனவு மறையாமல் நன்றாக ஞாபகத்திலிருந்தது. தான் கனவில்கண்ட அந்த அடையாளத்தைச் சொல்லி தன்வேட்டகத்தாரை யழைத்துக்கொண்டு போய் வயலில் வெட்டிப்பார்க்க, குறித்த விடத்தில் ஒரு பெரிய நாக லிங்கம் இருக்கக்கண்டு உவகைமேலிட்டு அது தன்குருநாதன் தனக்குக் கொடுத்த அபயஸ்தத்தின் உண்மையை உறுதிப்படுத்தத் தோன்றிய தெய்விகப் புதையலென்று அதை அருமையாயெடுத்துக்கொண்டாடிப் பூஜைசெய்து வந்தார். அந்த நாகலிங்கம் இன்றைக்கு மிருக்கிறது. ஒரு மஹா பெரிய பாம்பின் உடல் துண்டாய் வெட்டுப்பட்டு அப்படியே மண்ணில் புதைந்து சாளிக்ராமமாக மாறினதுபோல் தோன்றுகிறது. அதைத் தற்காலத்தில் அதன் அருமை பெருமையுணராத ஒரு மூடாத்மா வயிற்றுப் பிழைப்பை வேண்டி வேஷம் போட்டுக் காசுக்குப் பூஜை செய்து வருகிறான்.

இப்படி மஹான்களாயிருந்தவர்கள் வைத்துவிட்டுப் போன பெருந்தன மெல்லாம் சிறுதனக்காக சேர்க்கும் பெண்டிர் சொத்துப் போல்—புருஷனைக்காணாது கள்ளத்தனமாய் பண்டம் விற்றுச்சேர்த்த பொருளாய்,—ஆத்ம வுணர்ச்சி யின்றி புருஷஞான மில்லாமல், வயிற்றுப்பாடேபாடாய் ஜடத்துவம் பதித்த மூடர்களால் அர்விநியோகப்படுத்தி கள்ளப் பூஜை செய்யப்பட்டு வருவதால், கல்லெறிந்தாயனார் பூஜைக்குவந்த பரமசிவன் தன்மீது புஷ்பபாணம் தொடுத்த மன்மதனை நெற்றிக்கண் ணால் சுட்டெரித்தது போல, சம்பத்துகளெல்லாம் போய் விபத்துகள் சேர்ந்துவர அற்பத்தனம் மேலிட்டு அஷ்டதரித்திரமும் பிடுங்கித்தின்ன அமங்கலவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தமூடாத்மாக்கள் "வாழ்வானவாழ் வளித்துத் தாழாது தாழலவக்கும்" தற்பரனுமென்னீசன் நேசராய், "கோழைமனங் குடிகெடுக்காதென்னைக்காத்தருளத் தயவு மிகவேண்டுந்தாயே!" என்றமும் திருவருட்குழவியின் குரலோசையைக்கேட்டுணர்ந்துய்வதெந்நாளமரம்!

FREE FROM BONDS.

The Autobiography of a Taluk Gumastah.

(Special for the Vivekachintamani)

* அவிழ்த்துவிட்ட கழுதை.

ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம்.

(விவேகசிந்தாமணிக்கென்றெழுதப்பட்டது)

III-கௌமாரம்: உத்தியோகம்.

(181-வது பக்கத் தொடர்ச்சி)

இக்காலத்தில் பிராமணர்கள் ஸ்வதர்மத்தை இழந்து விட்டதாக எல்லோரும் குறை கூறுகின்றனர். கலியின் ஒரு லக்ஷணம் "ஸ்கூல், ஹோடல், ஹாஸ்பிடல், ரயில், ஜெயில்" என்றுகால தேச பேதப் பிரகாரம் பஞ்சீகரணப்பட்டு வர்ணாசிரமதர்மங்களை சின்ன பின்னப்படுத்திக் கொண்டுவருகிறதாம். ஆனால் நான் சொல்ல வந்ததென்ன வெனில், முதலில் நாம் வர்ணாசிரமதர்மங்களை இழந்ததனாற்றான் மேற்கூறிய லக்ஷணபஞ்சகந்தோன்றி நம்மைச் சூழ்ந்துகொண்டதென்பதே. நமது க்ஷீணதசைக்கு இவ்வைந்து மோரறிகுறியே ஒழியக் காரணமன்று. இதெப்படி யிருந்த போதிலும் என்கிறேகிதர் சொல்லுவதுபோல ஒரு விஷயத்தில் நம்முடைய பிராம்மண்யத்தை சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, உத்தியோகங்கிடைக்க விண்ணப்பங்கொடுப்பவர்களில் பிராமணர்களைவேண்டாமென்று நீக்கிவிடுகிறார்கள். மார்பில் பூணூலிருப்பது ஸர்க்கார் உத்தியோகத்திற்குத் தடையாயிருக்கிறது. ஸந்தியாவந்தனம் அக்நிஹோத்ரம் முதலிய விஷயங்களில் பிராமண ரல்லாதவர்களெல்லாம் உத்தியோகத்தைத்தேடிச் செல்லுகையில்மட்டும் பிராமணர்களாக மதிக்கப்பட்டு நீக்கப்படுகிறார்கள். இவர்கள் அப்புறமாவது ஸ்வதர்மத்தைத் தேடுகிறார்களா வென்றால் அதுவுமில்லை. ஸர்க்கார் உத்தியோகங் கிடைக்காவிட்டால் "ஸ்கூல்" அல்லது "ஹோடல்" வைக்கிறார்கள். இல்லாவிட்டால் "ரயில்" வேலைக்குப்போகிறார்கள். அதுவுமில்லாவிடில் "ஜெயிலு"க்குப்போகிறார்கள்.

வாஸ்தவத்தில் பிராமணனுக்கும் உத்தியோகத்திற்கும் வெகுதூரம் என்பது என் அனுபவம். எவனைக்கண்டு உலகம் நடுங்கவில்லையோ, உலகத்தைக்கண்டு எவன் நடுங்கவில்லையோ அவன் பிராமணன். எவனைக்கண்டு உலகம் நடுங்குகிறதோ, எவன் உலகத்தைக்கண்டுநடுங்குகிறானோ அவன் உத்தியோகஸ்தன். உலகத்தைக்கண்டு நான் நடுங்கினாலும் நடுங்காவிட்டாலும், என்னைக்கண்டு யாரும் நடுங்கினதில்லை என்கிற மட்டில் நான் பிராமணனே. எனக்கு யாரையும் எதிர்த்துப் பேசத்தெரியாது. யார் என்ன சொன்னபோதிலும் ஆம் ஆம் என்று தலையசைத்துக்கொண்டிருப்பேன். அவர்கள்அப்புறம்போனபிறகு என்காரியத்தைக்கவனித்துக் கொண்டிருப்பேன். அதனாற்றான் எனக்கு வக்கீல்வேலைக்குப் போகத் தைரியமில்லை. வக்கீலுக்குத்தான் பிடித்த முயலுக்கு இரண்டுகொம்பென்று உறுதியாய்ச்சொல்லத் தெரியவேண்டும். ஹைகோர்ட் வக்கீல் ஒருவர் எதிர்க்கக்ஷி வக்கீல் சொல்வதற்கெல்லாம் "இல்லவேயில்லை" என்று சொல்லி வழக்கம். ஒருசமயம் ஹைகோர்ட் நியாயாதிபதி ஒருவர் ஏதோ விசாரணை மத்தியில் "மனிதனுக்குத் தவறுதல் சகஜந்தானே" என்றார். உடனே நமது வக்கீல் வழக்கம்போல் "இல்லவேஇல்லை" என்றார். நியாதிபதி சிரித்துக்கொண்டு "கோர்ட்டார் சொல்வதை மறுக்க உமக்கதிகாரமில்லை" என்றார். வக்கீலும் தலைகுனிந்து கொண்டு மௌனமாயிருந்து விட்டார்.

அதனால்தான் எனக்குக் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் ஒன்றுஞ் செய்யத் தெரிகிறதில்லை. எதையும் கடைக்காரன் சொன்ன விலையைக் கொடுத்து வாங்கிவிடுவேன். சாமான் எனக்குத் தேவையாயிருந்தால் என்னவிலையானாலும் வாங்கி விடுவேன். இல்லாவிட்டால் என்ன

* தன்னையறிந்து தன தொழிலில் பிரவேசிக்குமனம் நடையறியாது! அடக்கமும் ஸ்வதந்திரமும் பரஸ்பர விருத்தமான குணங்களல்ல!!

விலையானாலும் வாங்கமாட்டேன். ஒன்றேகால் ரூபாய் பெறுமான செருப்புக்கு இரண்டுரூபாய் சக்கிலி கேட்டால் கொடுத்துவிடுவேன். அவன் என்னை ஏமாற்றிவிட்டதாக நினைத்துக்கொண்டு போவான் என்று எனக்குத் தெரியும். உண்மையில் நான் கொடுக்கும் விலை அதிகம் என்று தெரிந்தே தான் கொடுத்தேன். ஆனால் யாராவது செருப்பு என்னவிலை என்று என்னைக் கேட்டால் "ஒன்றேகால் ரூபாய்தான் அதற்குக் கொடுக்கலாம், நான் அதற்குமேல் இனாமாகக் கால் ரூபாய் சக்கிலிக்குக்கொடுத்தேன்" என்று சொல்வேன். உண்மையைச்சொன்னால் பேச்சுவளரும்; நமக்கும் அவமானம்.

நான் தஸ்திரபந்து வேலையிலிருந்தபொழுது ஒரு தாசில்தார் ஓர் பழைய தஸ்தாவேஜைத் தக் ஸமயத்தில் ஏதோ தகவலுக்கு வேண்டுமென்று எடுத்துக்கொண்டு வரச்சொன்னார். நான் எங்குதேடியும் அது அகப்படவில்லை. ஆனால் யாரோ ஒரு குமாஸ்தா அதை தாசில்தார் அவசரமாக வாங்கிக்கொண்டு போனதாக எனக்கு ஞாபகம். ஆனால்இதைத்தாசில்தாரிடம் சொன்னால், "ஏன் அதை எடுத்துக்கொண்ட குமாஸ்தாவின் கையெழுத்துவாங்கிக் கொள்ளவில்லை" என்று கோபிப்பார் என்று சும்மா விருந்து விட்டேன். தாசில்தார் என்னுடைய அஜாக்கிரதைக்காக எனக்குஅபராதம் விதித்தார். நானும் அபராதத்தைக் கொடுத்துவிட்டேன். இரண்டு மூன்று நாட்கழித்துத் தாசில்தார் தானே தன்மேஜையைவேறு ஏதோ விஷயமாகச் சோதித்த பொழுது மேற்சொன்னதஸ்தாவேஜு அம்மேஜையிலிருந்து அகப்பட்டது. தாசில்தாரும் என் அபராதத்தை வாப்ஸு செய்து விட்டார். அதற்குப்பின் அவர் எனக்கு அபராதமே விதித்ததில்லை. ஆனால் தன்னிடத்தில் கொடுத்த தஸ்தாவேஜை ஏன் உடனே திரும்பி வாங்கிக்கொள்ளவில்லைஎன்று இன்னொரு அபராதம் விதிக்காமலிருந்தாரே என்று எனக்குச் சந்தோஷம். தப்பித்தவறி ஏதாவது பேசியே தீரவேண்டிய அவசியம் நேர்ந்தாலும், எனக்கு சமயோசிதமாகப் பேசத் தெரியாது. ஒரு சிரஸ்ததாருக்கு 18 வயதுள்ள ஸீமந்தபுத்திரன் கலியாணமான பின் இறந்துபோக நான் அவரை துக்கம் விசாரிக்க நேர்ந்தது. அவர் விசனப்பட்டு அழுதுகொண்டிருப்பதையும் அவரைச் சுற்றிலும் அவருடைய மற்றக் குழந்தைகள் அழுவதையும் கண்ட எனச்கும் அழுகை வந்துவிட்டது. சற்றுப்பொறுத்து வேறொன்றுஞ் சொல்லத் தெரியாமல் "இந்தக்கஷ்டங்களை அனுபவிப்பதைவிட நாமே உயிரை மாய்த்துக்கொண்டுவிடலாம்" என்றேன். அவர் "இந்த அறியாக் குழந்தைகளில்லாவிட்டால் நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான்" என்றார். நாம் ஏன் வாயை மூடிக்கொண்டிராமல் இந்தவார்த்தை சொன்னோம் என்று எனக்கு வெகுநாள் வரையில் வருத்தமாயிருந்தது.

சென்னப்பட்டணத்தில் பி. எல். பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்த என் பழைய பள்ளித்தோழனொருவனைப் [illegible] யிருந்தபடியால் அவனை விடுமுறை நாட்களில் தன்னூருக்குப்போகும் மார்க்கத்தில் இறங்கி என்னை ஒருதரம் பார்த்துவிட்டுப் போகும்படி எழுதி யிருந்தேன். அதன்பின் வெகுநாட்கழித்து ஒருநாளிராத்திரி 9-மணிக்கு நான் சாப்பிட்டுவிட்டு வாசித்துக் கொண்டிருக்கையில் வாசற்கதவை யாரோ தட்டின சப்தம் கேட்டது. கதவைத்திறந்து பார்க்கையில் என் சிநேகிதன் நின்றான். அச்சமயத்தில் நான் அவனைக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்ட சந்தோஷத்தில் நான் சற்றுநேரம் ஒன்றுந் தோன்றாது மயங்கி நின்ற பிறகு அவனுடைய யோகக்ஷேமங்களை விசாரித்துவிட்டு "நல்லது நீ எங்கே சாப்பிடப்போகிறாய்?" என்றேன் காலையில் 10-மணிக்குச்சென்னப்பட்டணத்தில் ரயிலேறிப் பகல் முழுவதும் பட்டினியுடன்

பிரயாணம்செய்த சிரமம்தீர முன்பின் பார்த்திராத என்னூரில் என்வீட்டில் சாப்பிட்டுத் தூங்க எண்ணிவந்திருக்கு மவனை யுதிஷ்டிரரை யக்ஷன் கேட்டதுபோல் இம்மாதிரி கேள்வி கேட்டால் அவன் என்னபதில் சொல்வான்? அவனை "அகஸ்தியப்ராதா"வின் பெயரென்ன வென்று கேட்டிருந்தாலும் சந்திரமண்டலத்திலிருக்கும் களங்கத்தில் வசிப்பவர்களின் ஆகாரம் என்னவென்று கேட்டிருந்தாலும் அவன் ஒருவாறு பதில்சொல்லி யிருப்பான். ஏனெனில் அவன் சம்ஸ்கிருத காவ்யங்கள் புராணங்களெல்லாம் நன்றாக வாசித்தவன். பிறகு அவன் பிரமித்துநின்றதைப் பார்த்து நானே பரிதபித்து "வேறென்னவோ ஞாபகமாகக் கேட்டேன், ஒன்றும் யோசியாதே; இதோ சமையலாகிறது சாப்பிடலாம்" என்று என் மனைவியைக் கூப்பிட்டு உடனே சமைக்க உத்திரவு கொடுத்தேன். அவனும் சிரித்துக் கொண்டு "உன்வீட்டில் சாதமிருந்தால் இப்பொழுது என் வயற்றில் சாதமில்லை. இல்லாவிட்டால் என் வயற்றிலிருக்கிறது" என்றான்.

எனக்குத் தெரிந்த வயது சென்ற ஒரு சுமங்கிலி யம்மாளைக் கண்டு "பெரியவர் ஊரிலிருக்கிறாரா?" என்றேன். "அவரில்லாவிட்டால் நீர் என்னை இந்த வேஷத்திலெப்படி பார்க்கமுடியும்?" என்றாள். "பெரியவர் சௌக்கியமாயிருக்கிறாரா?" என்று நான்கேட்டிருக்க வேண்டியதாம். பார்ப்பானுக்குப் பின்புத்தியென்கிற விஷயத்தில் என்னைத்தான் முதல் பார்ப்பானாகக் கணக்கிடவேண்டும். நானக்கு உபயோகப்படவேண்டிய சமயத்தில் தோன்றாத புத்தியோசனையெல்லாம் பின்னிட்டுத் தோன்றும். கர்ணனுக்குத்தான் கற்றவித்தையொன்றும் சமயத்துக்குதவாததுபோல் இதுவும் எனக்கொரு சாபம். நான் மெட்றிகுலேஷன் பரீக்ஷைக்கு முதல்தடவை பணங்கட்டின பொழுது கஜானாவில் பணம்செலுத்தவேண்டிய இருசால் ஜாப்தாவில் இன்ன விஷயத்துக்காகப் பணம்செலுத்தப் படுகிறதென்று கண்டு எழுதவேண்டிய கட்டத்தின் தலைப்பில் "எந்த பாபத்துக்காக"* என்று அச்சிட்டிருந்தது. அவ்வருஷம் உபாத்தியாயர் சொன்னபடி "மெட்றிகுலேஷன் பரீக்ஷைக்காக" என்று இங்கிலீஷில் அக்கட்டத்தைப் பூர்த்திசெய்து விட்டேன். முதல்வருஷம் பரீக்ஷை தவறி இரண்டாந்தரம் பணங்கட்டின பொழுது "மெட்றிகுலேஷன் பரீக்ஷைக்கு ஆஜராகப் போகிற பாபத்துக்காக"என்று தமிழில் எழுத உத்தேசித் திருந்தேன். ஆனால் எனக்குமுன் சர்க்கார் விழித்துக்கொண்டு அடுத்த அச்சில் "எந்த விஷயத்துக்காக" என்று தலைப்பின் பெயரைத் திருத்திவிட்ட படியால் என் சிலேஷை சாதுர்யத்தை சர்க்காரறிய இடமில்லாமற் போயிற்று.

ஒரு தடவை நான் ஆற்றங்கரையிலிருந்து ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிவரும் வழியில் இரண்டு நாய்கள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண்டு ஓடிவந்து என்மேல் வேகமாய் மோதவே நான் கையில்வைத்திருந்த தீர்த்த பாத்திரத்தைக் கீழே போட்டுக்கொண்டு விழுந்தேன். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இரண்டு சிறு பெண்கள் சிரித்துவிட்டு "ஏன் ஐயா, நாயின்மீது விழுகிறீர்?" என்று கேட்டார்கள். அவர்கள் சாதாரண அழகுவாய்ந்த முகத்தினவரா யிருந்தாலாவது அவர்கள் சிரிக்கும் பொருட்டே நான் இன்னொருதரம் வேண்டுமானாலும் கீழே விழுந்திருப்பேன். ஆனால் அப்பொழுது பதில் சொல்லத் தெரியாமல் விதியை நொந்துகொண்டு வீடுபோய்ச் சேர்ந்தேன். இரண்டு மூன்றுநாட் கழித்த பின்னர் அவ்வழியே போகையில் "உங்கள் முகத்தைப் பார்த்த கண்ணுக்கு நாயைப்பார்த்தால் அப்ஸர ஸ்திரீ போலிருந்தது" என்று பதில்சொல்லி யிருக்க

* பலவித வரவு செலவு கணக்குகளில் ஒவ்வொரு வித கணக்கும் ஒவ்வொரு "பாபத்து" என்று உத்தியோக பரிபாஷையில் பெயர்.

லாமே என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் அப்பொழுது அப்பெண்களை அங்கே காணவில்லை. அவர்கள் விலாசம் தெரிந்திருந்தாலாவது தபாலில் எழுதியிருப்பேன்; அதுவும் தெரியவில்லை.

"கையில் பேனா எடுத்தால் அவனைப்போல் சமயோசித புத்தியுள்ள வனெவனுமில்லை, அஃதில்லாத விடத்து அவனைப்போல் முட்டாளு முலகிலில்லை" என்று ஓர் ஆங்கில கவியை அவர் நண்பர் புகழ்ந்திருக்கிறார். முன்சொன்ன விஷயத்தில் நான் எப்படிப்பட்டவனென்று நானே சொல்லிக்கொள்வதழகல்ல—(இதைப்படிப்பவர்க்குச் சொல்லவும் தேவையில்லை.) பின்விஷயத்தில் நான் அக்கவியை யொத்திருக்கிறேனென்பது உலகறிந்த ரஹஸியம்.

நான் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் இருந்தவரையில் என்னைக்கண்டிரங்காத சிநேகிதரரிது. என்னைப்புதிதாய்க்கண்டவிடத்து, யோக க்ஷேமங்கள் விசாரித்தபிறகு "என்னசம்பளம்?" என்பவர்கள். நான் சிரிக்கவுமாட்டாமல் அழவுமாட்டாமல்பொய்சொல்லவுமாட்டாமல் "பதினைந்து" என்பேன். "இவ்வளவுதானா? உங்கள் யோக்கியதைக்கு இது வெகு குறைவு" என்பார்கள். "அதை நீங்கள் அறிந்திருப்பதுபோல் என்யஜமானர்கள் அறியவில்லையே!" என்று நினைத்துக் கொண்டு சும்மாவிருந்து விடுவேன். ஐந்தாறு வருஷங்கட்குப்பின் கண்டால் "இன்னும் பதினைந்துதானா?" என்பார்கள். எனக்குப் "பதினைந்தே" ன்றேபுதிதாய்ப் பெயரிட்டுவிடுவார்களோ வென்று பயப்படுவேன். ஆனால் இந்த அற்ப சம்பளத்திலும் நான் வேலையில் எவ்வளவு ஜாக்ரதையாயிருப்பேன் என்பது என்கனவுகளினால் விளங்கும். அநேக தடவை கஜானாவைத் திருடர் கொள்ளையடிப்பது போலும், அல்லது கஜானாவில் பணக்குறைந் திருப்பதுபோலும் கனவுகண்டு கூக்குரலுடன் விழித்துக்கொண்டதுண்டு. மார்க்கண்டேயர் என்றும் பதினாறாயிருந்தது (அல்லது இருப்பது) மெய்யோபொய்யோ, தாலூகா குமாஸ்தாவாகிய நான் என்றும் பதினைந்தாயிருப்பது மெய்யென்றே நம்பியிருந்தேன். என்சம்பளம் என் செலவுக்குப்போதாதென்றறிந்து சிலர் "நீங்கள் ஏதாவது ஒழிந்த வேளைகளில் இரண்டு மூன்று பள்ளிக் கூடத்துப்பிள்ளைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொடுத்துவர ஏற்பாடுசெய்யக் கூடாதா?" என்பார். வேறு சிலர் கோட்டை பிடிக்கப்போகும் சேனாதிபதிக்கு யுக்தி சொல்லுபவர்போல் வெகுநேரம் யோசித்துப்பின்பு ரஹஸியமாய் "நீங்கள் மட்டும் மெதுவாய் இந்தச் சில்லரைச் சட்டங்களை எல்லாம் பரீக்ஷை கொடுத்து வையுங்கள்! (பரீக்ஷைகொடுக்காமலே அவைகளை வைதுகொண்டே தானிருக்கிறேன்.) உங்கள் புத்திக்கு இது எத்தனை நாள் செல்லும்? பிறகு எனக்கு எவ்வளவோ டிப்படி [illegible]லெகடர்கள் ஸ்நேகமுண்டு, [illegible] உங்களுக்குடனே கார்க்கூன் வேலைசெய்து வைத்துவிடுகிறேன்" என்பார். கார்க்கூன் வேலை கிடைத்து விட்டால் அடுத்தபடி இந்திரபதவிதான் என்று இவர்கள் தாத்பரியம். இரண்டு மூன்று ரூபாய் மிகுத்து வைக்கிறேன் என்று இவர்களிடம் சொல்லாமல் 'அதற்கெல்லாம் எனக்குஅவகாசம்கிடையாது' என்பேன். எனக்குச் சம்பளம் இருபது ரூபாயானபிறகு "இனி இவர்கள் முகத்தை ஒருவாறு நிமிர்ந்து பார்க்கலா மென்று தைரியம்பிறந்தது.

நான் சாப்பிட்டுவிட்டுக் கச்சேரிக்குப் போகும்போது யாராவது "மணியென்ன?" வென்று கேட்டால் நான், ஆகாசத்தைப் பார்த்துவிட்டுப் "பதினொருமணி யிருக்கலாம்" என்பேன். கச்சேரிவேலைபதினொருமணிக்கு ஆரம்பம் என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயமாதலால் நான் சொன்னபதில் அவர்களுக்குத் தேவையே யில்லை. ஆனால் அவர்கள் என்னையும் என் சட்டை தலைப்பாலைகளையும் கடியாரச் சங்கிலியினாலலங்கரிக்கப் பெறாத சட்டைப்பையையும் இரண்டு மூன்றுதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் போவார்கள். நான் வாஸ்தவத்தில் உத்தியோகஸ்தன்தானே அல்லது உத்தியோக வேஷந்தரித்த பகல்வேஷக்காரனே என்று அவர்கள் சந்தேகித் திருக்கக் கூடும்.

உலக விஷயங்களில் என்னுடைய அறியாமையை வெளியிட்டால் குழந்தைகள் கூடச் சிரிப்பார்கள். என்தம்பி கலியாணத்தில் தான் நான் முதல் முதல் 'காபி'க் கஷாயம் சாப்பிட்டேன். நாளைவரையில் எனக்குக் 'காபி' என்பது ஓர் மரத்தின் பாலா அல்லது ஒரு ஜாதி பசுவின்பாலா என்று தெரியாது தேயிலை என்பது தேக்குமரத்தின் இலையா அல்லது பட்டையா என்று எனக்குத் தெரியாது.

அவளுடைய புடவைகளுக்கும் நகைகளுக்கும் நான்பெயர் தெரிந்துகொள்ளாம லிருந்ததே எனக்கும் என் மனைவிக்கும் வெகு மனஸ்தாபத்துக்குக் காரணம். "நாகர்" என்பவர் நாகரீக ஜாதியாரா காட்டுமனிதரா வென்றுவது, "புலாக்கு" என்பது மரத்தினால் செய்ததா அல்லது தந்தத்தினால் செய்ததாவென்றுவது 'கம்மல்" என்பது தொண்டையைப் பற்றின வியாதியாகண்ணைப்பற்றினவியாதியா வென்றுவது, 'புளியங்கொட்டைப்' புடவை பழத்துக் கெத்தனை கொட்டை இருக்குமென்றுவது 'பப்பளி'ப் புடவை மரத்துக் கெத்தனை காய்காய்க்குமென்றுவது, எந்த நகைகளைக் கழுத்தில் கட்டித் தொங்கவிடும்படி சட்டமென்றும் எந்த நகைகளைத் தலைமயிலாப்பற்றித் தூக்கிடவேண்டு மென்றும், மகாவிஷ்ணு உலகத்துக்கெல்லாம் படியளப்பதுபோல் தோட்டி முதல் கலெக்டர்துரை வரையிலுள்ள உத்தியோக உலகத்துக்கு மாதம்மாதம் முதல்தேதியில் நான் படியளக்கும் பொழுது கொடுக்கிற பணத்தினால் நகைசெய்கிற வழக்கமா) அல்லது காக்கை முட்டையிடுகிற காக்கைப் பொன்னினால் நகைசெய்கிற வழக்கமா வென்றுவது 'ஆண்டி பெரியவனா கோவணாண்டி பெரியவனா' என்பது போலும், "பிராமணன் பெரியவனா சிவப்பிராமணன்பெரியவனா" என்பதுபோலும், பொன் உயர்ந்ததா காக்கைப்பொன் உயர்ந்ததா வென்றுவது (கமலம் உயர்ந்ததா சீமைக்கமலம் உயர்ந்ததா வென்றுவது) சிவப்பு உயர்ந்ததா போலிச் சிவப்பு உயர்ந்ததா வென்றுவது, நெய் உயர்ந்ததா எண்ணெய் உயர்ந்ததா அல்லது மண்ணெண்ணெய் உயர்ந்ததாவென்றுவது எனக்குத்தெரியுமென்றுசொல்பவர் பாவிகளாவார்.

(இன்னும் வரும்.)

தாலூகாகுமாஸ்தா.

"விவேகசிந்தாமணியின் மடந்தைப் பருவ" விடுகதை வினா.

சீர்து.

தானதனத்தானதனத்தானதனத்தானதனத்
தானதனத்தானதனத்தான

கண்ணிகள்

மங்கலமடந்தைவளர்பாக்கியப்பேரொன்றுகலை
வாணர்துதிகடவுள்பேரொன்று [ரொன்று
செங்கதிரோன்பெயரொன்றுசிகரத்தின்பெய
தேவியெனும்பார்வதிபேரொன்று
கங்கையின்பேரொன்றுமஹாலக்ஷ்மியின்பெய
காசினியிற்கிருபைப்பேரொன்று [ரொன்று
துங்கலக்ஷப்பெயரொன்றுதிருவாபரணமொன்று
துய்யசரஸ்வதிபெயரொன்று (தானதன)
தூயவலங்காரப்பெயரொன்றுபேரின்பப்பேரொன்று
சப்பிரமண்யன்பெயரிலொன்று
நேயதேவதலப்பெயரொன்றுசபைப்பெயரொன்று
நேர்மையுளதாமரைப்பேரொன்று
தாயகவமிசத்தின்பெயரொன்றுசுமுகன்பேரொன்று
சாற்றவதற்கைந்தெழுத்துப்பேராம்
மாயமிலாவிப்பதங்கடேர்ந்தநினவேணியில்
மருவியவெழுத்தினையெடுத்து
தாலமிசைவரிசைக்கிரமமாகவேயெழுதி
சம்ப்ரமமுடன்வாசித்துப்பார்க்க
கோல "விவேகசிந்தாமணியின்மடந்தைப்பருவம்"
கூறுமப்பொருடனையதிந்து
ஞாலமிசையெண்டிசையுமிக்க புகழுடன்வாழும்
நாவலரேமனமகிழ்கூர்ந்து
சீலமுடன்விடைசொல்வீரென்னவேமெனகுருருத்
திரமூர்த்திநிதம்வேண்டினேனே.

விடைப்பொருள்.

(1) பாக்கியப்பேரொன்று	திர-வி-ணம்
(2) கடவுள்பேரொன்று	சரு-வே-சன்
(3) சூரியன்பேரொன்று	திவா-கு-ரன்
(4) சிகரப்பேரொன்று	திரு-சி-கம்
(5) பார்வதிபேரொன்று	சவு-ந்-தரி
(6) கங்கைபேரொன்று	மந்-தா-கினி
(7) மஹாலக்ஷ்மிபேரொன்று	திரு-ம-கள்
(8) கிருபைப்பேரொன்று	கரு-ணி-கம்
(9) லக்ஷப்பேரொன்று	நூறு-யி-ரம்
(10) ஆபரணமொன்று	பவு-ள-மாலை
(11) சரஸ்வதிபேரொன்று	கலை-ம-கள்
(12) அலங்காரப்பேரொன்று	விபூ-ட-ணம்
(13) பேரின்பப்பேரொன்று	ஆன-ந்-தம்
(14) சுப்பிரமண்யன்பேரொன்று	முத்-தை-யன்
(15) தேவதலப்பேரொன்று	திரு-ப்-பதி
(16) சபைப்பேரொன்று	அம்-ப-லம்
(17) தாமரைப்பேரொன்று	சரோ-ரு-கம்
(18) வலிப்பேரொன்று	பிர-வ-ரம்
(19) விநாயகன்பேரொன்று	ஏர-ம்-பன்

மேற்கண்ட மடந்தைப்பருவம் வயது 19-க்கும்-19-பெயர்களுடைய இதினடியிற் கண்ட அக்ஷரங்களை யெடுத்து வரிசைக்கிரமமாக வெழுதி வாசித்துப்பார்க்க "விவேகசிந்தாமணியின் மடந்தைப்பருவம்" என்றாகும்.

V. M. R.

———(:-:)———

Flies as Agents of Disease and Death.

ஈக்களால் நேரும் வியாதியும், மரணமும்.

———(:o:)———

சென்னை ஹெல்த் ஆபீஸரான டாக்டர் டப்ளியூ ஆர். மாக்டொனல்ட் அவர்கள், ஈக்களாலுண்டாகும் பேராபத்துகளை விளக்கி ஒரு அறிக்கைப்பத்திரம் அனுப்பியிருக்கிறார். அதன் கருத்து இது:—

"ஈக்கள் மனிதனுக்குத் தெரிந்த ஆபத்துக்கிடமான பூச்சிகளில் மிகவும் கொடியவையா யிருக்கின்றன. அவை வயிற்றுப் பறப்பனவிலெல்லாம் மிகவும் அசுசியானவை. மலத்திற்பிறந்து மலத்தில் வளர்ந்து எங்குபோனாலும் அவற்றின் கால்களில் மலம் ஒட்டிக்கொண்டிருப்பதினால், மலத்தைப் பரவச்செய்யும் மலவிருத்திக் காதாரமான ஜந்துக்களாயிருக்கின்றன. ஈக்கள் முட்டைகளாயிருக்கும்பொழுது மிகவும் அருவருப்பைத்தரும் மலத்தில் வசித்துக்கொண்டு மலத்தைத் துளைத்துக்கொண்டிருக்கும் (maggots) இருமி உருக்கொண்டிருக்கின்றன. அவை லக்ஷக்கணக்கான மரண ஹேதுக்களாம் வியாதிவித்துக்களைக் கொண்டுபோக ஆதாரமாகவிருக்கின்றன. ஈக்கள் எங்கே மொய்க்கின்றனவோ அங்கே யெல்லாம் இந்த வியாதி வித்துகளைப் பரவச் செய்கின்றன. மலக்குவியல்கள் குப்பைகளிலிருந்து வரும் ஈக்கள் ஆகாரத்தில் மொய்ப்பதால் அந்த ஆகாரம் வியாதிவித்துக்கள் சேர்ந்ததாய் ஆபத்து விளைக்கக் காரணமாகும். அழுகிப்போன வஸ்துக்களிலும் ஆபாஸமான வஸ்துகளிலும் வியாதியஸ்தர்கள் மலங்களிலும், புண், இரத்தி, ருணம் இவைகளிலும், சீழ், கோழை, கபம், மலம் இவைகளிலும் ஈக்கள் தாராளமாய் உட்கார்ந்து புசிக்கின்றன. அவையிலிருந்து மனிதன் உண்ணும் ஆகாரங்களிலும் அவன் உடம்பிலும், கண், வாய், உதடுகளிலும் உட்கார்ந்து காலால் நோண்டி அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் வியாதி வித்துக்கள் மனிதனில் ஒட்டிக்கொள்ளச் செய்கின்றன. இப்படியாக ஈக்கள் எங்கேயிருக்கின்றனவோ அங்கேயெல்லாம் மனிதன் தானறியாமலே மலத்தைப் புசிப்பவனாக விருக்கிறான். இது எவ்வளவு வெறுப்புக்கிடமாயிருக்கிறது பாருங்கள்!

ஈக்களால் மனிதர்களுக் குண்டாகும் துக்கமும் துன்பமும் சொல்லிமுடியாது. மங்களமாய் வாழ்ந்த அனேககுடும்பங்கள் ஈக்களின் செய்கையால், மரணத்துக் காளாகி, சொல்லரிய துக்கங்களும் துன்பங்களும் அனுபவித்திருக்கின்றன. தற்காலம் யுத்தத்தில் மடிகிறவர்களின் தொகையானது ஈக்களால் மடிகிறவர்களுடைய தொகையில் ஒரு சிறிதுதான் என்று சொல்லும்படி அவ்வளவு ஆபத்து விளைத்து வருகின்றன. மண்ணுயிரைக் கொள்ளைகொள்ளும் வியாதிகளெல்லாம் ஈக்களாலேயே பரவுகின்றன.

ஈக்களால் பரவக்கூடிய வியாதிகளின் பேர் எண்ணித் தொலையாது. சந்நிபாதஜ்வரம் என்ன, வாந்திபேதி யென்ன, வயிற்றுப்போக்கு வியாதிகளென்ன, இன்ன மிவைபோன்ற எண்ணிறந்த தொத்துவியாதிகள் ஈக்களால் பரவுகின்றன. க்ஷயரோகத்தால் வருந்துகிறவர்கள் துப்பும் கபம் நிறைந்த எச்சிலிலும், வாந்திபேதி, சந்நிபாதம் வயிற்றுளைச்சல்போன்ற வியாதிகளால் வருந்துகிறவர்கள் மலத்திலும் ஈக்கள் ராளமாய் மொய்த்து வியாதிவித்துக்கள் நிறைந்த அந்த ஆபாஸங்களை வயிறுறப் புசிக்கின்றன. புசிப்பதன்றி அவற்றிலிருந்து நேர நாம் புசிக்கும் அன்னபானாதி ஆகாரங்களிலும் வந்துட்காருகின்றன. அல்லது தூங்குவனின் மெல்லிய உதடுகளில் உட்கார்ந்து அம்மைகுத்துவதுபோல் அந்த வியாதி வித்துகள் அக்குழந்தையின் இரத்தத்தில் பரவும்படி செய்கின்றன! இந்த ஈக்கள் நிறைந்த விடத்தில் வாழ்வில் தாழ்வாம் சாவை (மரணத்தை) நாம் பிரத்தியக்ஷமாகக் காணலாம். இப்படியாக இந்த ஈக்களால் நேரும் விபத்துக்கள் அனந்தமா யிருப்பதால் அவைகளைப் போக்க ஜனங்கள் கவனிக்கத்தக்க குறிப்புகள் சிலவற்றைக் கீழே வரைகிறோம்:—

(1) வீட்டில் ஈக்கள் மொய்க்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் அவை வியாதிக்கும் மரணத்துக்குங் காரணமா யிருக்கின்றன.

(2) அன்னபானாதிகளின் சமீபத்தில்கூட ஈ வராமற் பார்த்துக்கொள்ளுங்கள். விசேஷமாய்ப் பாலில் ஈ மொய்க்காதபடி அதை யெப்போதும் மூடின பாத்திரங்களில் வைத்துக் காப்பாற்றவேண்டும். ஈக்களால் பாலில் வியாதிவித்துக்கள் வெகு சீக்கிரத்தில் பல்கிப் பெருகுந்தன்மை உடைதின்றபடியால் பால், தயிர், மோர் இவைகளை முக்கியமாய் நன்றாக மூடிவைத்து ஈ யணுகாதபடி காப்பாற்றவேண்டும். பாலில் பெரும் வியாதி வித்துக்கள் மனிதனைத் தொத்தும் வியாதிகளின் வித்துக்களாயிருந்தால் அதனால் உடனே பெரிய ஆபத்து விளையும். ஒருபட்டணமெல்லாம் பாழாகச் செய்யும் ஒரு தொத்து நோய் ஒரு ஈ பாலில் உட்கார்ந்ததின் மூலமாக வரெல்லாம் பரவி உயிரைக் கொள்ளைகொண்டு போகலாம். பாலில் வியாதி வித்துக்கள் எளிதில் சேர்க்கூடியதா யிருப்பதால், பாலை நன்றாகக் காய்ச்சி யுபயோகிப்பது அவசியமாம். பாலை நன்றாகப் பொங்கும்படி காய்ச்சினால் அதிலிருக்கக் கூடிய வியாதிவித்துக்கள் மாண்டு விடுகின்றன.

ஆகார வகைகளெல்லாம் ஈக்கள் மொய்க்காதபடி பாதுகாக்கப் படவேண்டும், ஈக்கள் மொய்த்த ஆகாரத்தை யொருபோதும் உட்கொள்ளக் கூடாது. என்ன அவஸரமாயிருந்தாலும் ஈக்கள் மொய்த்த அன்னபானாதிகளை ஆபத்து விளைக்கும் பொருள்களென்று தடையின்றித் தள்ளிவிட வேண்டும்.

(3) கடையில் விற்கும் சாமான்களில் ஈ மொய்க்கக்கூடியதா யிருந்தால் அதை வாங்கக்கூடாது. முக்கியமாய் மிட்டாய் முதலிய தின் பண்டங்களைக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கக்கூடாது. ஈ மொய்க்காதபடி மிட்டாய்க்கடைகளைப் பந்தோபஸ்து செய்ய உத்திரவாயிருக்கிறது. ஆனாலும் ஈ மொய்த்த பண்டம் பாழ் என்று தள்ளவேண்டும்; உட்கொண்டால் உடனே ஆபத்து விளையும்.

(4) குழந்தைகள் தூங்கும்பொழுது முகத்தில் ஈ மொய்க்காதபடி கொசுவலைகளால் மூடவேண்டும். இல்லாவிட்டால் தூங்கும் குழந்தையின் உதடுகளிலுட்காரும் ஒரு ஈ அக்குழந்தையின் உயிரை அல்லது சௌக்கியத்தைக் கொள்ளைகொண்டு போகத்தக்க வியாதிவித்தைப் பரவச்செய்து விடக்கூடும். ஆகையால் குழந்தைகள் விஷயத்தில் மிகவும் உஷாராக விருக்க வேண்டும்.

ஈக்களை நாசஞ்செய்ய வகை.

(1) குடியிருக்கும் வீடுகளில் ஈக்கள் தோன்றுந்தோறும் அவைகளை நாசம்செய்து விடவேண்டும். இதற்கு ஈக்களைக் கொல்லும் பாஷாணங்களை யுபயோகிக்கலாம்; அல்லது ஈக்களுட்கார்ந்தால் ஒட்டிக்கொள்ளும் (sticky fly papers) ஈ பிடிக்குங்காகிதங்களை யுபயோகிக்கலாம். ஈக்களை பிடிப்பதற்கான யந்திரங்களும் (traps) இருக்கின்றன: அவைகளை யுபயோகிக்கலாம். ஈக்களைக் கொல்லும் விஷங்களை அகலமான கிண்ணங்களில், அல்லதுல் தட்டுகளில் வைத்து வீடெங்கும்வைத்தால் ஈக்கள் அதில்விழுந்து செத்துப்போம். ஒரு பைண்ட் (கால்படி) ஜலத்தில் இரண்டு தேக்கரண்டி நிறைய வுள்ள (formaldehyde solution) என்கிற நீரவத்தை விட்டுக் கலந்தால் நல்ல ஈ விஷமாகும். அல்லது இரண்டு அவுன்ஸ் ஜலத்தில் ஒரு டிராம் "bichromate of potash" என்னும் மருந்தைக் கரைத்து கொஞ்சம் சர்க்கரையிலுல்திப்புண்டாகச் செய்தால் அது நல்ல ஈ விஷமாகும். இந்த மருந்துகளும் ஈப்பிடிக்கும் (sticky fly papers) காகிதங்களும் சென்னையிலுள்ள மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்,

(2) வீட்டு மூலைகளிலும் கதவு மூலைகளிலும் அழுக்கு, குப்பை யிவைகளைக் குவித்துவைக்க இடங் கொடுக்கக்கூடாது. சாம்பல், குப்பை, அடுப்புச் சாமான்கள், சமையலறைக் குப்பை காய்கறிகளின் குப்பை இவைகளை உடனுக் குடனே தூரத்தில் கொண்டுபோய்க் கொட்டவேண்டும். இந்தக் குப்பைகள் வைத்திருக்கும் கூடைகள் தொட்டிகள் இவைகளை நன்றாகக்கழுவி சுத்தம் செய்யவேண்டும். அழுக்கு நீக்கும் அசுத்தஹாரியாம் (disinfectant) திரவங்களை யுபயோகிக்க வேண்டும். கக்கூஸ்கள், மூற்றங்கள் இவைகளை யெப்போதும் அலம்பி சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.

(3) வீட்டைச் சுற்றியுள்ள இடங்களையும்சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். அழுகல், அவிசல் சாமான்கள் எதுவாயிருந்தாலும் தூரத்தில் கொண்டு போய்க் குப்பைத் தொட்டியில் சேர்ப்பித்து, அந்தக் குப்பைத் தொட்டியும் நன்றாய் சுத்தம் செய்யப்படுகிறதாவென்று கவனிக்க வேண்டும். எருக்களை வீட்டின் பக்கத்தில் கொட்டிவைக்கக் கூடாது. ஒரு வாரத்துக்கு மேற்பட்ட எருக்களில் ஈக்கள் ஏராளமாய் உண்டாகும். ஏனெனில் எருப் புழுக்கத்தில் ஈக்கள் ஏராளமாக வுண்டாகின்றன. எருக்குழிகளை ஈ மொய்க்க விடமில்லாதபடி லேசான வலைக்கம்பிகளினால் மூடிவைக்க வேண்டும். இல்லாவிட்டால் ஈக்கள் இந்த எருவில் முட்டையிடும்.

(4) வீடுகளில் ஈக்கள் மிகுதியாயிருந்தால், அழுக்கும் ஆபாஸமும் அந்த வீட்டில் அதிகமென்பதற்கு அறிகுறியாம். ஆகையால் குடித்தனக்காரிகளாயுள்ளவர்கள் வீட்டை சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை குஞ்சுகளுக்கு ஆபத்துவரும். வீட்டுக்குள்ளேயன்றி வீட்டைச் சுற்றிலும் சுத்தமாயிருக்கவேண்டும். அசுத்தமான விடத்திலிருக்கும் ஒரு கல்லவீடு, சுற்றுப்பக்கத்து அசுத்தத்தினால், ஆபத்துக்கிடமான வீடாகிவிடும். ஆகையால் வீட்டின் உள்ளும் புறமும் சுத்தமாயிருக்க வேண்டும். இது மிகவும் அவசியம். மாட்டுத்தொழுவங்களையும் மற்றபடியுள்ள குப்பை கூளங்கள் கொட்டும் குழிகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லாவிடில், அந்த வீட்டைச் சுற்றியிருக்கிறவர்கள் கூட அதனால் வருந்தவேண்டிவரும். ஒரு வீட்டுக்காரன் மட்டும் சுத்தமாயிருக்க மற்ற வீட்டுக்காரர்கள் தங்கள் வீட்டை அசுத்தமாய் வைத்திருந்தால், அந்த ஆபத்து எல்லாரையும் பாதிக்கும். ஆகையால் எல்லாரும் ஒன்றுசேர்ந்து தெருவையும் ஊரையும் சுத்தமாய் வைத்திருக்கப் பார்க்கவேண்டும். இதற்கு முனிசிபல் வரி செலுத்துவோர் எல்லாரும் ஒன்று சேர்ந்து முனிசிபாலிடியாருக் கனுகூலமாக நகரைச் சுத்தியாக வைத்துவரப் பாடுபட்டுழைக்க வேண்டும்.

ஈக்களால் வரும் ஆபத்துக்களென்று மேலே சொன்னவெல்லாம் பதியாய்ச் சொன்னவையல்ல ஆதிமுதல் சுகாதாரசம்பந்தமாய் உழைப்பவர்கள் எல்லாரும் அறிந்து ஜனங்களுக்கு அடிக்கடி வற்புறுத்திச்சொன்னவைகளே யன்றி நூதனமாகச் சொன்ன தொன்றுமில்லை. ஈக்களிருக்கு மிடத்தில் சுகாதாரமிருப்பது கூடாமையால் எல்லாரும் ஒன்றுகூடி ஈக்களுக்கிடங் கொடாமல், வீடுகளையும் வாசல்களையும் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று பலவாறாய் வற்புறுத்திக் கூறுகிறார்.

சுத்தமும் சுசியும் சௌக்கியத்துக்காதாரமாதலாலும், ஈக்கள் அசுத்தம் அசுசி யிவற்றிலுண்டாய் வளருவதாலும், ஆயுராரோக்கியத்தை நாடுகிறவர்களெல்லாரும் அசுத்தத்தையும் அசுசியையும் நீக்கி உள்ளும் புறமும் சுத்தமாகவும் சுசியாகவுமிருக்க வாழ வேண்டுமென்பது அவசியந்தானே. ஆகையால் எல்லாரும் ஈக்களாலுண்டாகும் பேராபத்துக்களையும் பெருவிபத்துக்களையு முணரும்படி அவற்றைப்பற்றி விரித்த அறிக்கைப் பத்திரத்தில் கண்டதை யிங்கே சுருக்கச் சொல்லி யெல்லாருக்கும் விளங்க வைத்தோம். இதை வாசிக்கும் எல்லாரும் சுத்தமும் சுசியுமாயிருக்க முயற்சிப்பார்களென்றும், தாங்கள் முயற்சிப்பதன்றி தங்கள் அண்டை அயலிலுள்ளவர்களையும் இது விஷயத்தில் ஊக்கம் பிறக்கத் தூண்டுவோர்களென்றும் கோறுகிறோம்.

———

OFFICE OF THE REGISTRAR 30 NOV 1911 MADRAS.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1911ஆ நவம்டர்மீ, விரோதிகிருதுஆ கார்த்திகைமீ [சஞ்சிகை. 8.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சந்தப்பலனகபோலிடங்கொடாதொடுக்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெம்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே லர்க்கார் செஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது [illegible] விவேகம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புரும் பாழ்நரகிற்புக்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான். கைச்சாற்றிது. ஓ.

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swamin[illegible]yar, [illegible] Publishing Co.,
[illegible], & Proprietor V. C. Sole Agents and Managers
M. K. Narayanaswami Iyer, B.A. B.L.

Hon. Secy,
Vivekachintamani Pub. Committee.

"Use and Abuse of Words."

"Words must not be trifled with; every word has a life of its own; it has, like man, its ancestry; it lives to serve a purpose; and he who corrupts a word by using it without understanding its proper meaning, and root idea, is in danger of corrupting his own life."—Dr. Bhandarkar's lecture to his students, from the reminescence of Sir Narayan Chandavarakar related by him in his lecture on the "Use and Abuse of Words" to the Wilson College Literary Society on Septr 9th, 1911.

"Words stand rooted in the root of national life, they are nourished from a people's history".—*Ibid.*

வாக்கின் அர்த்தாநர்த்தங்கள்.

"நாலுவேத மோதுவீர் ஞானபாத மறிகிலீர்
பாலு நெய் கலந்தவாறு பாவிகா ளறிகிலீர்
ஆலமுண்ட கண்டனு ரகத்துளே யிருக்கவே
காலனென்று சொல்லுவீர் கனவிலும் மதில்லையே."

"வித்திலாத சம்பீரதாயம் மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைத்தவாற தெங்ஙனே
பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாத போது சிவனிலை யில்லை யில்லையே."

வாக்கும் அர்த்தமும் ஒன்று. அவை உடலு முயிரும் போல இணைபிரியாது பொருந்தியிருப்பன. அர்த்தமில்லாத விடத்து வாக்குக்கு வீரியமில்லை. வாக்குக்கும் அர்த்தத்துக்கும் பொருத்த மில்லாத விடத்து அநர்த்தம் விளைகிறது. உள்ளத்தில் உண்மைக்குணம் (ஸத்யவிருதம்) மில்லாதவர்க்கு நினைவும் பனுவலும் பொருந்தாதாதலால் அவர்கள் நினைப்ப தொன்றும் பேசுவதொன்றுமாய்ப் பிதற்றுவார்கள். இவர்கள் உண்மையில் "பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகள்" என்பதிற் சந்தேகமில்லை. பெற்றதாயாவது வாக்கு தேவி. வாக்குக்குத் திவ்யசக்தி (மங்கல வாழ்க்கை) யுண்டாயிருப்பது அதனுடைய அர்த்த விசேஷத்தினால். விஷ்ணு புராணத்தில் பகவான் தேவியை நோக்கி "நீ வாக்காகவும் நான் அதனுள்ளுறையும் அர்த்தமாகவு மிருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

வாக்தேவிக்கு காயத்ரி யென்று ஒரு பேருண்டு. காயத்ரி என்றால் தன்னை ஜபிப்பவர்களைக் காப்பாற்றுகிறவள் என்று அருத்தம். இந்த வாக்தேவி பிராதக்காலத்தில் (அர்த்தோதயத்தில்) காயத்ரி யென்றும், மத்தியான காலத்தில் ஸாவித்ரி யென்றும், மாலைப் பொழுதில் ஸரஸ்வதி யென்றும், த்ரிகாலத்திலும் ஸந்தியை யென்றும் பூஜிக்கப்படுவள்.

கனவிலு மில்லாத "காலன்" (1) யமன் என்றும், (2) தர்மராஜா வென்றும், (3) மிருத்யு வென்றும், (4) அந்தகன் என்றும், (5) வைவஸ்வதன் என்றும், (6) காலன் என்றும், (7) ஸர்வபூதக்ஷயன் என்றும், (8) ஔதும்பரன் என்றும், (9) தத்நன் என்றும், (10) நீலன் என்றும், (11) பரமேஷ்டி என்றும், (12) விருகோதரன் என்றும், (13) சித்ரன் என்றும், (14) சித்ரகுப்தன் என்றும், பதினான்கு பேர்கள் பெற்று வழங்குவது எப்படி? இதெல்லாம் வாக்கு தேவியின் ஆராதனைக் குறைவால் வந்தது. வாக்கு தேவியை ஆராதிப்பதாவது வார்த்தைக்கும் அர்த்தத்துக்கும் விரோத மில்லாது வார்த்தைகளை உபயோகிப்பதாம். உதா[illegible], தத் என்றால் அது [illegible] அர்த்தம் செய்கிறார்கள். ஆனால் அது என்றால் [illegible] என்கிற கேள்வி பிறக்கும் பொழுது "தாங்கள் கருதிய தொன்றெதுவோ" அது என்று தங்கள் மனோ சிருஷ்டியை (சித்த விருத்தியை) அதில் ஏற்றித் தத்பதலக்ஷியத்தை அறவிட்டு, இவர்களுடைய கற்பனையான ஓர் அர்த்தத்தை அதன் தலையில் கட்டுகிறார்கள். இப்படிச் செய்வதைத்தான் "பெற்றதாயை விற்று"—(லக்ஷியார்த்தத்தை விட்டு)—அடிமை கொள்வதற்கு ஒப்பிட்டுச் சொன்னார். பெற்றதாய் தன்னுடைய [illegible]க்கு மூலகாரணமாயிருக்க [illegible]க்கு மூலகாரணமான அகண்ட [illegible]யத்தை விற்று இன்றைக்கிருந்து நாளைக்கில்லாது போகு[illegible]மைகளான அற்ப ஐசுவரியத்தைக் கொள்ள முயலுபவனை "பேதை" யென்றன்றி வேறெ

ன்ன சொல்லலாம். "சித்திலாதபோது"—அறிவில்லாதபோது, "சிதாபாஸனான" ஜீவன் முக்காலத்திலும் இல்லாதிருக்கத், தன்னறிவை (ஆத்மாவை) விற்று தன தான்யாதி பசுக்கள், அடிமைகள், பங்களாக்கள், வண்டிகுதிரைகள் முதலிய அழிந்துபோகும் அற்ப ஐசுவரியத்தை அதற்கு மாற்றாகக்கொள்கிறவர் செய்கிருத்தியத்தினால் கனவிலுமில்லாத காலனுக்கு தர்மராஜா வென்கிற பட்டமும் மற்ற அதிகாரங்களும் உண்டாயின.

யமன் ஸூரியனுக்கும் சாயாதேவிக்கும் பிறந்த பிள்ளை. ஸூரியன் என்றபதத்துக்கு அர்த்தம் நிருபாதிக ஸ்வரூபன் என்பதாம். "நன்றான நியாமகத்தைச் செய்பவன்" ஸூரியன். நன்றான நியாமக மாவது நிருபாதிகமே. நிருபாதிகஸ்வரூபமான ஸ்வயம்பிரகாசத்துக்கு உபாதி கற்பனைசெய்யும் "பெற்றதாயை விற்றடிமை கொள்ளும்பேதைகள்" மனோ சங்கற்பத்தால் (பொய் யெண்ணத்தால்) சாயாதேவி யென்கிற அசம்பாவித கற்பனை யேற்பட்டது. இப்படி ஸூரியன் என்கிற வாக்கின் உண்மையான அர்த்தத்தை விடுத்து அநர்த்தம் செய்ததால், அந்த அநர்த்த பரம்பரையாகவுண்டான சிருஷ்டிகளில் முக்கியமானவன் சூரியபுத்திரன் என்று சொல்லும் யமன். "மலடிமகனை மாலையிட்டுக் கரடிபழகுமோர் மல்யுத்தவீரனைப்பெற்றாள்" என்பதுபோல், உலகத்திலுள்ள பேதைகள் தாங்கள் ஆத்மஸ்வரூபி,—அறிவுமயமாயிருப்பவர்களென்பதை மறந்து, "சித்தில்லை சிவனே நான்" என்று இல்லாத பாவனை இருப்பதாகச் சிருஷ்டித்து அந்தப் பொய்ப்பாவனையைக் கட்டிக்கொண்டு அழுவதுமன்றி, அஃதோடு சதா மல்யுத்தம் செய்துகொண்டும் நிற்கிறார்கள்.

தன் நிழலோடு தான் எதிர்த்து நின்று சண்டைசெய்யும் பரம முட்டாள் சண்டையை யாரால் விலக்கமுடியும்? அளர்களுடைய மனோ தர்மம்தானே உருவெடுத்ததென்ன "தர்மராஜா" இவர்களுக்கு நியாமகனாய் ஏற்பட்டிருக்கிறான். அவனுடைய இராஜ்யத்தில் வாழும் இம்மூடர்கள் கிராதகர்களாய் அவனுடைய பாசத்துக்கன்றி வேறொன்றுக்கு மஞ்சாதவர்களா யிருக்கிறார்கள்.

"வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவன் நத்தினால்
விடுவனோ அவனையின்னம் வெட்டவேணு மென்பவர்
நடுவன் வந்தழைத்தபோது நாறுமிந்த நல்லுடல் [ரே."
கடலைமட்டுங் கொண்டுபோய்த் தோட்டிகைக்கொடுப்ப

மூடனுடைய நியாயப் பிரமாணம் இப்படியிருக்க, இவனுக்கு உபதேசம் செய்ய யாரால் முடியும்? யமனும் தூமாதேவியுமே இவர்களுக்கு ஏற்ற தெய்வங்களாம். இவர்களிருவரும் கூடப்பிறந்த பிறப்புக்களாம். இவர்களுக்கு மந்திரி சனீச்சுரன். சனீசுரன் யாரென்றால், இவர்களின் திரிபுடியாத்மகன். "பிரம்மா விஷ்ணு மஹேசுவரம்" என்பதுபோல், "இராகு கேது சனைசுவரம்" என்னும் மூவரும் இணைபிரியாத் திரிபுடியாத்மகங்களாம். வாக்கின் அர்த்தத்தை யுணராமல் அநர்த்தம் விளைவார்த்தையை துர்விநியோகப்படுத்துவதினால், ஸநாதனமான தர்மத்தைக் கொன்ற பாபம் யமதர்மராஜா அல்லது மிருத்யுவாகவும், "பெற்றதாயை விற்றடிமை கொள்ளத்துணிந்த பேதைமை" தூமாதேவியாகவும், பொய்ச்சிருஷ்டனைசெய்ய வுபயோகித்த மந்தபுத்தி சனீசுவரனாகவும் திரிபுடி யாத்மகங்கொண்டு உலகை யாளுகின்றன. இதனாலேயே பிறப்பு மிறப்பும் ஓர் தொடர்பாய் தொடர்ந்து சங்கிலிக்கட்டாய் மூடாத்மாக்களைக்கட்டி ஸம்ஸார பந்தத்திலாழ்த்தி வருகிறது.

"தத்" என்றால் "அது" என்று அர்த்தம் சொன்னோம். "அது" என்றால் "இது" அல்லாதது. "இது" என்பது வேதாகமங்களில் விரித்துச்சொன்னவையெல்லாம். இவை "நேதிநேதி" யென்னும் நேதிவாக்கியத்துக்குட்பட்டனவாகையால், அந்த நேதி சப்தத்துக்கு விலக்காய்

நின்ற நித்த முத்தப் பொருளை "அது" என்று குறிக்கலாயிற்று. அந்த தத் பதார்த்தத்தை யுள்ளபடி யறிவதையே "ஸமாதி" யென்று பதஞ்சலி முனிவர் கூறியிருக்கிறார்.

"ததேவார்த்தமாத்ர நிர்ப்பாஸம் ஸ்வரூபசூந்ய மிவ ஸமாதிஃ" என்பது யோக சூத்திரம். 'நான்' என்கிற அந்தக்கரணவிர்த்தியாகிற ஸ்வரூபம் சூந்யமாக, (இங்கே "நான் தியானி" யென்கிற ஞானமுண்டாகாமல்,) "ததேவார்த்தமாத்திரம்" —பிரப்மவஸ்து மாத்திரமே சாணப்பெறவது (அதாவது, தியேயாகாரமாத்ரமாய் மிஞ்சி நிற்பது) "ஸமாதி" யெனப்படும் என்பதுபொருள். ஆதலால் இந்த தத் பதத்தை முதலாகக்கொண்டமைந்துள்ள காயத்ரி மந்திரத்தை ஜபிக்கிறவர்கள் முன்னர் பிராணாயாம ஸித்தி பெற்றவர்களா யிருக்கவேண்டும். "பெற்றதாயை விற்ற" பாபம் ஒழிய,—இந்திரன் தேவ வருஷத்தால் 101 வருஷ காலம் பிரஜாபதியினிடம் குருசிஷ்ருஷை செய்து சீஷனாயிருந்து விசார தீரனாகிக் கடைசியில் பிரஹ்ம நிஷ்டையடைந்து தன்னுடைய ஸ்வானுபவத்தை வெளியிட்டபடி,—

"ப்ராணோஸ்மிப்ரஜ்ஞாத்மா"

—"நானே பிராணம், நானே பிரஜ்ஞானம், நானே ஆத்மா" என்கிற அனுபூதி பெறல் வேண்டும். பிராணம், பிரஜ்ஞை, ஆத்மாவென்றுள்ள மூன்றின் லக்ஷியமும் அகண்டைகரஸமாய், "நான்" என்கிற அந்தக்கரண விருத்தி யொழிந்தவிடத்துற்ற ஸமாதியின்கண் அறிந்தபோது வாக்கும் அதன் அர்த்தமும் வேறுபடாது பொருள் விளங்கக்காணும் சக்தியுண்டாகும். இந்த சக்தியுள்ளவர்களே காயத்ரீ மந்த்ரத்தை யுபயோகிக்க அதிகாரிகளாம். மற்றவர்களுக்கெல்லாம் அதிகாரமில்லை. அதிகாரிஜபித்தால் மட்டுமே அவனைக்காப்பாற்றக் கடமைப்பட்டவள் காயத்ரீ தேவி. வாக்கும் அதன் அர்த்தமும் "மந்தாரமும் அதன் தேவதையும்" என்று சொல்லப்படும். இப்படியாகப் பார்க்கில் 'தத்' காரமாகிய காயத்ரீயின் முதல் அக்ஷரத்துக்கு தேவதை அக்னி; அந்த தேவதையை அம்மந்திரத் தியானத்தால் பார்த்தறிந்தருஷி - விசுவாமித்ரர். அதன் தத்வம் ப்ருதிவீ; அவ்வக்ஷரத்தின் சக்தி-ப்ரஹ்லாதிநீ; அதன் அங்கம் "பாதாங்குஷ்டம்;" அதன் வர்ணம்-சம்பகாபீதம். அதன் ரூபம் பிரம்மா விஷ்ணு சிவாத்மகம்; ஸ்வபாவம் சாந்தம், பத்மாஸநாரூடம். இப்படியே அதை தியானம் செய்வதின் பலனும் "தியாத்வாத்ய ஹதிபாதகம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அக்ஷர அக்ஷரமாய் வாக்கின் அர்த்தத்தையறிந்து அதைப்பயோகிப்பவர் யாராகிலும், அவர்களை வாக்தேவி ரக்ஷிப்பள்—அதாவது, அவர்களுடைய வாக்குப் பழுதுறாது என்றபடி. அவர்கள் பதிவிருதாக்ஷர மானுசாரர்களாதலால் அவர்கள்,

"பெய் யெனப் பெய்யு மழை."

இப்படியாக ப்ரம்ம க்ஷத்ரிய வைசியர்களான மூவரும் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்க அதிகாரிகள் என்று விதிக்கப்பட்டதின் உட்கருத்து என்ன வென்றால், இவர்கள் சமஷ்டி விராட்டின் முக்கியாங்கங்களாகையால் -(வாக்கு, புஜங்துடை)—இவர்கள் ஸத்யசந்தர்களாய், ஸத்ய வாக்பரிபாலகர்களாய், ஸத்யசங்கல்பமுடையவர்களாயிருக்கவேண்டுமென்று கொள்ள வேண்டியது.

பிராம்மணன் பொய் சொன்னால் வாக்கு தேவிக்குப் பங்கம் வந்துவிடும்.

அப்படியே க்ஷத்ரியன் பொய் சொன்னால் இராஜ்ஜியபரிபாலனம் நன்றாக நடவாதாகையால் விராட் புருஷனுக்குப் பங்கம் வரும்.

அதேமாதிரி வைசியர்களான மூன்றாம் வருணத்தார் வாக் பரிபாலனம் செய்யாராகில் வாக்கு நாணயம் கெட்டு வர்த்தகம் வியாபாரம் சரிவர நடவாது பங்கம்வரும். இதனால் விவகாரத்துக்கே கேடுவரும். "வைசுவதேவம் கெடும்." கெட்டால் உண்ணச் சோறகப்படாது.

ந்து, வழக்கமான நமது சம்பாஷணையின் இன்பத்தை அனுபவிக்காவிடில் அதிர்ஷ்ட ஹீனர்களே.

மனோன்மணி:—நாம் இப்பொழுது அவ்வாறு செய்ய என்ன அப்பியந்தரம் உளது? நான் சற்றுநேரத்திற்கு முன்பு மேலே சென்றபொழுது, கருணாலயம் சோபா இரண்டை வெளியே எடுத்துப் போட்டிருப்பதைப் பார்த்தேன். வருவாயாகில், சென்று, சற்று நேரம், இன்பமாய்க் காற்று வாங்கிக்கொண்டு பேசிக்கொண்டிருப்போம்.

சீதா:—சரியென்று கூறி, தன்கையில் வைத்திருந்த சமாசாரப் பத்திரிகையுடன், மேலே செல்ல இருவரும் சோபாக்களில் உட்கார்ந்தார்கள்.

மனோன்மணி:—கடைசியாக சமாசாரப் பத்திரிகையில் நீ படித்தது எது?

சீதா:—டிசம்பர் மாதத்தில் டெல்லியில் நடக்கப்போகும் மாக்ஷிமை பொருந்திய நம் சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினிகளின், கிரீடாபிஷேக மஹோத்ஸவ வைபவத்திற்காகச் செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகளைப் பற்றி.

மனோன்மணி:—ஆஹா! ஏற்பாடுகளைப் பற்றி நாம் பத்திரிகைகளிலும், வைபவங்களைப்பற்றி டிசம்பர் மாதத்திய தந்தி சமாசாரங்களிலும் நின்று தெரிந்து கொள்ளல் கூடும். ஆனால், நமது கிட்டற்கரிய ராஜ தம்பதிகளைப் பற்றிக் கிஞ்சித்து தெரிந்துகொள்ளல், தற்காலம் நமக்கு அளவற்ற இன்பத்தைத் தரும் ஆக்ஷேபணையில்லை. ஆனால் எங்ஙனம் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்! நாம் நினைத்தபோதெல்லாமா நம் உபாத்தினி அம்மணி பக்கத்தில் இருந்து, நமதெண்ணங்களைப் பூர்த்தி செய்து கொடுத்தல் முடியும்?

சீதா:—அண்ட சிருஷ்டிக்கே காரணம், ஈசுவரனது அன்பென்று கூறப்படுகிறது. ஆதலின், அன்பு ஸ்வரூபியாகிய பகவான், சிரத்தையுடன் ஏதாவதொரு விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முயன்றால், தெரிவிக்கிறார் என்பதற்கு எனது தற்கால அனுபவமே சாக்ஷி! ஏனெனில், நேற்றுத்தான் நான் ஒரு புத்தகத்தில் நமது சக்கிரவர்த்தியின் சரித்திரச் சுருக்கத்தை அதிக இன்பத்துடன் படித்தேன். நீயும் அதே விஷயத்தை சிரத்தையாய்க் கேட்கப் பிரியப்பட்டாய்! ஆதலின் ஈசுவரப் பிரசாதம் சிரத்தா பக்தி யுள்ளவர்களுக்குக் கிட்டும் என்பது பிரத்தியக்ஷப் பிரமாணம்.

மனோன்மணி.—டிசம்பர் மாதத்தில் டல்லியில் மகுடம் சூட்டிக்கொள்ள வரும் சக்கிரவர்த்தியினது திருநாமம் யாதோ தெரிந்து கொள்ள பிரியமுள்ளவளா யிருக்கிறேன். அவர்களது மனைவியின் நாமதேயத்தையும் கூடித்தெரிவி கேட்கிறேன்.

சீதா:—நமது சக்கிரவர்த்தியின் நாமதேயம் ஐந்தாவது ஜியார்ஜ். நமதரசியாகிய அவரது மனைவியின் பெயர் விக்டோரியா மேரி டெக் மாகாண அதிபதியின் மகள்.

மனோன்மணி:—காலம் சென்ற மாக்ஷிமை பொருந்திய ஏழாவது எட்வர்டு சக்கிரவர்த்தி, அவரது அன்புள்ள மனைவி அலெக்ஸாண்டிரா, இவர்களின் முதல் புதல்வராமோ இவர்?

சீதா:—அல்ல! அல்ல! எப்பொழுதும் ஆங்கில தேசத்தரசரது முதல் புதல்வர், வேல்ஸ் தேசச் சிற்றரசர் என்ற பட்டம் பெற்றவர். ஏழாவது எட்வர்டுக்கு ஆல்பெர்டு விக்டர் என்ற பேருடன் கூடிய மூத்தமகனிருந்தார். அவர் உயிருடனிருந்திருந்தால் நமது சக்கிரவர்த்திக்குப் பட்டம் கிடைத்திராது. அவர் நல்ல வாலிபப் பருவத்தில் காலம்சென்று விட்டதால், இவர் முதலில் வேல்ஸ் சிற்றரசராகி பிறகு எட்வர்டு காலம்சென்றதும் ஆங்கில ராஜ்ஜியபாரம் வகித்தார். எப்பொழுதும் இந்தியாவின் மேலும் இந்துக்கள் முதலான இந்திய குடிகள் மீதும் மிக்க பாசமும் கருணையுமுள்

ளவராதலால், இது காறும் இந்தியாவில் நடைபெற்றிராத இந்தியாவில் தானே நேராக விற்றிருந்து மகுடஞ்சூட்டிக் கொள்வது தனது பிரியம் என்று தெரிவித்ததும், இந்தியாவிலுள்ள குடிகள் மேஹத்தைக் கண்ட மயில்கள் போல ஆனந்தங் கொண்டு, அன்பு, ராஜபக்தி என்னும் கலாபங்களை விரித்தாடி ஆரவாரம் செய்தலும் ஆச்சரியமோ !

மனோன்மணி:—ஆஹா ! இவரது பாலிய விருத்தாந்தங்கள் யாதேனும் தெரிந்திருந்தால் தெரிவி கேட்கிறேன். இவர் எங்ஙனம் வித்யாப்பியாசத்தைச்செய்தார்? எங்ஙனம் ராஜநீதி முதலியனவைகளைக் கற்றார்? என்பதைத்தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சீதா:—இவர் 12-வயதுள்ள வராயிருந்த பொழுது, கப்பல் ராணுவ உத்தியோகப் பயிற்சிபெற "பிரிட்டானியா" என்னும் கப்பலிற் சென்றிருந்து, முதல் முதல் ஓர் சாதாரண மாலுமியாகவிருந்து பழகி பிறகு 1893-ம் வருஷத்தில் காப்டின் பட்டம் பெற்றார். இப்பவும் அவரை நமது மாலுமி அரசர் என்று எல்லோரும் புகழ்ந்து கூப்பிடுவதும் உண்டு.

மனோன்மணி:—பிரிட்டானியா கப்பல் என்பது எது? விரித்துரைக்கக் கேட்கப் பிரியமுள்ளவளா யிருக்கிறேன்

சீதா:—கப்பல் போர் ராணுவவீரர்களையும், உத்தியோகஸ்தர்களையும் பழக்குவதற்காக ஏற்பட்டிருக்கும் ஓர் பெரிய போர் கப்பல் அது, என்று கேள்வி யுற்றிருக்கிறேன்.

மனோன்மணி:—அவரது கலியாண மஹோத்ஸவம் எப்பொழுது முடிந்த தாமோ?

சீதா:—அவர் 28-வது வாலிபப்பருவத்திலிருந்த பொழுது. டெக் மாகாணத்திய அரசகுமாரியாகிய விக்டோரியா மேரி என்னும் மாது சிரோமணியை மணம் செய்து கொண்டார்.

மனோன்மணி:—இத்தம்பதிகளுக்கு எவ்வளவு குழந்தைகள் ?

சீதா:—இவர்களுக்கு ஐந்த ஆண் குழந்தைகளும் ஓர் பெண் குழந்தையும் உள. இவர்களுள் மூத்தவர் எட்வர்ட் ஆல்பெர்ட என்னும் நாமம் வாய்ந்த அரச குமாரர். 1891-ம் வருஷத்தில் பிறந்தார். அவர் தாம் தற்காலத்திய வேல்ஸ் இளவரசர்.

மனோன்மணி:—நமது சக்கிரவர்த்தி பூமியாத்திரை செய்திருக்கிறாரோ ?

சீதா:—ஆஹா ! இவரைப்போல் உலகம் முழுதும் சுற்றி அவ்வளவு இடங்களைப் பார்த்திருக்கும் அரசர்கள் கிடையா. 1877-ம் வருஷத்தில், இவரும், இவரது சகோதரருமாக, இரண்டு வருஷம் சமுத்திர யாத்திரைசெய்து உலகமுழுதும் சுற்றிவந்தார்கள். பிரிட்டிஷ் ஆதீன பிராந்தியங்களிலும் கூட, இவர்கள் பார்த்திருக்கும் அளவு, மற்ற அரசர்கள் பார்த்ததில்லை.

மனோன்மணி:—அப்படியா ! நீ இப்பொழுது கூறிய யாத்திரையைத் தவிர, வேறு, எங்ஙனம், எப்பொழுது செய்திருக்கிறாரோ?

சீதா:—சொல்கிறேன் கேள். அவரது தாயார் விக்டோரியா சக்கிரவர்த்தினி காலஞ்சென்று, அவர், யார்க் மாகாண அதிபதி பட்டத்திலிருந்த பொழுதே, 'ஒபிர்' என்னும் பெயர் வாய்ந்த கப்பலேறிச் சென்று, ஆஸ்திரேலியாவில் தங்கி, அங்கு ராஜாங்க சபையை ஆரம்பம் செய்து விட்டு, "நியூ ஸீலண்டு" தேசமென்ன, தென் ஆப்பிரிக்கா வென்ன, கனடா தேயமென்ன, "நியூ பவுண்டிலண்டு" என்ன, இப்பேர்ப்பட்ட இடங்களிலெல்லாம் தங்கிவிட்டுத் திரும்பினார் என்று சொல்லக் கேள்வியுற்றிருக்கிறேன்.

மனோன்மணி:—நமது சக்கிரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும் இதற்கு முன் எப்பொழுதாகி

இப்படியாக இவர்கள் த்ரிகாலமும் வாக்தேவியை ஆராதித்து வாக்பரிபாலனம் செய்து வந்தால் ஜயம் ஓங்கும். ஐசுவரியம் விர்த்தியாகும்.

"ஓம் தத்' என்று சொன்னவுடன் "ததேவார்த்தமாத்ரம்" விளங்க, "நான்" என்கிற அந்தக்கரணவிருத்தி லயமடைந்து தியேயாகாரமாத்ரமாய் நிற்கவல்லவன் யாரோ அவனே "காயத்ரீ ஜபத்துக்குரியவனான அதிகாரி." அந்த அதிகாரி காய்திரீ மந்திரத்தின் 24 - அக்ஷரங்களையும் இப்படி அறிந்து 24 தத்துவங்களையுங் கடந்து நிற்பானானால் அவனை வாக்கு தேவி ஜயலக்ஷ்மீ பாத்மநாபனாகிக் காப்பாற்றுகிறாள்.

On the Study of Words.

"And so rooted in Hindu literature is the idea as to the sanctity of words and man's divine responsibility to use them properly instead of abusing them and corrupting language that *Gautama*, clinched the idea by defining a a word as the instructive assertion (affirmation of thought) of a reliable person." "ஆப்தோப தேசசப்த:"

"I have heard old orthodox religious teachers, preaching by means of *Kirtans* tell a legend that on one occasion the *Rishi Naradha* while travelling found *Lakshmi*, the Goddess of Wealth, and *Sarasvati*, the Goddess of Learning, lying maimed and crippled. Narada enquired of them the reason. They answered that they had come to that condition because a certain country, wealthy and learned, and therefore favoured of them had begun to misuse words and defile language and they felt the shock of it. This is only a legend, but legends, though they are fictions, are more effectual than facts to reveal our nature to us. This legened shows that it is an ancient tradition in India supported by the writtings of *Rishis* that a country where words are misused is on the road to corruption and decay. It was that which led *Panini* to give us what is a perfect science *Viz*, the Grammar of the Sanskrit Language. So was it also in ancient Greece. In the *Phaedo*, Socrates held that "*to use words wrongly and indefintely is not merely an error in itself; it also creates an evil in the soul.*" (It is this evil in the soul which is described as *Mantra-s'apah* or defilement of words in the Mantra Sastras. C. V. S.)—Sir Narayan chandavarkar's lecture on the "Use and Abuse of Words" before the Wilson College Literary Society on Septr 9th, 1911.

மந்த்ரதீக்ஷை.

"நீரிலே முளைத்தெழுந்த தாமரையினோரிலை
நீரினோடு கூடிநின்று நீரிலாதவாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த பண்புகண்டிருப்பரோ.
பாரினோடு கூடிநின்ற பண்புகண்டிருப்பரே."

"மனம் ஒருவழிப்பட்டது மந்த்ரம். 'ஏகாக்கிரமனதில் ஞானம் உதயமாகும். அதையே அந்தக்கரணமென்பர். அந்த அந்தக்கரண விருத்தி "நான்," "நான்" என்று முளைத்து "எனது" "எனது" எனப்பரவும். "நான்" என்னும் அறிவை அந்தக்கரண விருத்தியென்றும், "எனது" என்னும் அபிமானத்தை சித்தவிருத்தி அல்லது மனோ விருத்தியென்றும் சொல்லுவர். அந்தக்கரண விருத்தியாகிய நான் என்னும் அறிவிற் பிறந்தது நாதம். அந்த நாதத்திற் பிறந்தது பிந்து. நாத-பிந்து இரண்டுங்கூடிப் பிறந்தது சப்தம். இந்த சப்த தன்மாத்ரையிலிருந்து அகத்திற் பரைவாக்கும் புறத்தில் ஆகாசமும் பிறந்தது. ஆகாசத்தில் நாதம் புகவும் ஸ்பர்சதன்மாத்ரை யுண்டானது. ஸ்பர்சதன்மாத்ரையிலிருந்து அஹத்தில் உள்ளத்துணர்ச்சி யென்னும் ஸ்பர்ச ஞானமும் (மனஸு-ம்), புறத்தில் வாயுவும் பிறந்தது. இந்த அபஞ்சீகிருதவாயுவில் பிந்து புகவும் ரூபதன்மாத்ரை யுண்டாயிற்று. அது மயிலின் முட்டையில் காணும் மயில் போலப் பச்யந்திவாக்காக மாறி ரூபரஸத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருந்தது.

ரூபதன்மாத்ரையிலிருந்து (அபஞ்சீகிருத) ஜ்யோதிபிறந்தது. இந்த ஜ்யோதியில் சிதக்னியான அறிவு புகவும் ஸ்வரூபம் அமைந்தது. இந்த ஸ்வரூபம் வித்தில் மரம்போல் பீஜாக்ஷரங்கள் ஒவ்வொன்றிலும் புகுந்து அவற்றிற்கு வர்ணம் வடிவு இரண்டையு முண்டுபண்ணியது. இப்படியாக வர்ணம் வடிவு முதலிய லக்ஷணங்களோடு கூடிய பீஜாக்ஷரங்களிலிருந்து வித்திலிருந்து முளை (கீலகம்) உண்டானதுபோல் மத்தியமை யென்னும் வாக்கும் அதற் கறிகுறி

பான ரேகைகளு முண்டாயின. இவற்றில் சக்திபிரவேசித்ததால் இவை சோபிக்கலாகி அந்தச் சோபையிலிருந்து இந்திரியங்களின் சகாயத்தால் வாயினுலுச்சரித்துக் காதினுல் கேட்கப்படும் லலகரிசபத்திய அலலது வைகரிவாக்குப் பிறந்தது. இப்படியாக வர்ணுக்ஷரங்கள் பிறந்தன. இந்த வர்ணுக்ஷரங்கள் சேர்ந்து அர்த்த புஷ்டியுள்ள தாதுக்களாகி (roots) அந்த தாதுக்கள் விரிந்து வளர்ந்து வார்த்தைகளாகவும் அந்த வார்த்தைகள் விரிந்து குவிந்து விகாரமடைந்து சேர்ந்து வாக்கியங்களாகவும், வாக்கியங்கள் நூல்களாகவும் வளர்ந்து பெருகின. இப்படி விரிந்த வாக்குக் கெல்லா முட்பொருளா யிருப்பது அறிவு. ஆதலால் முதலில் வேதங்கள் உண்டாயினவென்று சொல்வர். அந்த வேதங்களிலும் பிரணவசப்தத்தின் முதற்பதமாகிய சத்ரூப விலாசத்தைத் துதிக்கும் ரிக்குகள் அடங்கிய ருக்வேதத்தை முதலாவதாகவும், இரண்டாவது பாதமான சித்விலாசத்தைக் குறிக்கும் அந்தக்கரண விருத்திப் பிரபாவமான யஜுர்வேதத்தை இரண்டாவதாகவும், துவம் பதவாச்சியார்த்தமான அபிமான விருத்தியைச் சொல்லி, நேதி நேதியென்று சொன்னதையெல்லாம்தள்ளி எஞ்சி நின்ற சாக்ஷிமாத்திரமான துவம்பதலக்ஷியத்தை தத்பதலக்ஷியத்தோடு அபேதமாயறிந்து அழிவில்லா ஆநந்தத்தை யனுபவிக்கச் செய்யும் நாதகீதாத்மகமான ஸாமவேதத்தைப், பிரணவத்தின் மூன்றும்பதத்தைக் குறிப்பதால், மூன்றுவது வேதமுமாகச் சொல்வர். பிரணவத்தின் நான்காம் பாதமான அமாத்திரையை அளந்தளந்துகாட்டி அளவு கடந்ததென்று "அயமாத்மாபிரஹ்ம"—என்னும் மஹாவாக்கியத்தால் சுட்டாமற் சுட்டிச் சுருதி முடிவைக் காட்டும் அதர்வசிரஸை வஹித்த அதர்வணவேதத்தை நான்காவது வேதமென்றும் சொல்லுவர். இப்படியாக் அந்தக்கரண விருத்தியான "நான்" என்னும் நாதப்ரஹ்மத்திலிருந்துண்டான வாக்குகளையும் அவைகளை யுதகரிக்கும் வேதங்களையும் சித்தவிருத்தி நிரோதத்தால் அந்தக்கரணவிருத்தி மாத்திரமாய் நின்று அதுவும ஒடுங்கின ஸமாதிநிலையில் ப்ரஹ்மத்தையறிந்து பிரஹ்மமேயானதால் மனத்திருப்தியடைந்த யோகியானவன் சப்தமாகிய வாக்கை யாராய்ந்து அதனுட் பொருளைக்கண் டனுபவிக்கிறான். இந்த ஆராய்ச்சிக்கு மந்திரசாஸ்திர மென்றுபேர். இந்தச் சாஸ்திர ஞானத்தால் ருஷிகள் கடுகைத்துளைத்து அதில் கடலையடைப்பது போல், கோடிக் கணக்கான கிரந்தங்களிற் சொல்லும் பொருள்களை யெல்லாம் ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து, ஐந்தெழுத்து, என்று ஒன்று முதல் அனேகமான அக்ஷரங்களில் அடைத்திருக்கிறார்கள். இப்படியாக வுள்ள மந்திரங்களிலெல்லாம் பிரஸித்திபெற்றது காயத்ரிமந்திரம். விசுவாமித்ரருஷி ராஜஸத்தால் அதையனுசரித்து அதற்குப் பங்கம்வருவித்தார். விசுவாமித்ரர் அதை துர்விநியோகப் படுத்தினதினுல் வசிஷ்டரும் நிஷ்பிரயோசனமாகக் கடவதென்று சாபமிட்டார்.

மந்திரங்களை துர்விநியோகப் படுததுவதாலும் துஷ்கிருத்யங்களில் உபயோகிப்பதாலும் அதற்கு தோஷம் நேரிடுகிறது. மனோவிருத்தியை நாசம்செய்து அந்தக்கரண விருத்தியை யுண்டுபண்ணி, அந்தக்கரண விருத்தியு மொடுங்கின ஸமாதியில் பிரஹ்ம சாக்ஷாத்கார மென்னும் அபரோக்ஷானுபூதி யுண்டாகச் செய்வது மந்திரங்களின் உத்கிருஷ்ட நோக்கமாம். இதற்கு விருத்தமாக மந்திரங்களை உபயோகிப்பது துர்விநியோக மெனப்படும். வார்த்தைகளை துர்விநியோகப்படுத்தினுல் வாக்வீரியம் குன்றிப் போம். அதாவது வாக்தேவிக்குப் பங்க முண்டாகும்.

ஒரு தீக்ஷா புருஷனுக்கு அவனுடைய குரு ஒரு மூலமந்திரத்தைக் கொடுத்து அதை ஜபம்

செய்து அந்த மந்த்ர தேவதையின் தரிசனம் கிடைத்த பின் மேலுபதேசம் செய்வதாகச் சொன்னுர். சீஷன் அப்படியே மந்திரத்தை ஜபித்துவர, மந்திரதேவதை பிரஸந்நமானுள். ஒரு ஸ்திரீ வலதுகாலில் ஊனம் கண்டு அந்த வாதக்காலை யிழுத்துக்கொண்டு நடப்பதாக பன்முறையும் தரிசனங்காண, அதைச் சீஷன் குருவுக்குத் தெரிவித்தான்.

அந்த குருவானவர் சீஷனிடத்தில் வாக்சுத்தியும், ஹிருதய சுத்தியுமில்லாதது கண்டு அவன் நடத்தையைப் பரிசோதித்து அவனைக் கையால் ஆகாரம் புசிக்காதபடி கோதர்மத்தை யனுசரித்து வாயினுல் தானே சாப்பிடும்படி ஆஜ்ஞாபித்தார். மற்றப்படி துஷ்கிருத்யனான அந்த சீஷனுக்கு குருவாக்கைத் தட்டக் கூடாதவனுய், இலையில் அன்னம் கறி குழம்புகள் எல்லாவற்றையும் ஓரே தடவையாகப் பரிமாறச்சொல்லி, வாய்க்குக் கை உதவாமல் தானே விருதமிருந்து பசுவைப்போல் நாக்கை நீட்டி ஆகாரத்தையெல்லாம் நாக்கினுல் தானே கலந்து வாயினுலெடுத்துப் புசித்து வந்தான். இங்கே கவனிக்கத்தக்கது, சீஷனுடைய குற்றமல்ல. குருவினுடைய சூக்ஷ்ம புத்தியும் சீஷனுடைய குருபக்தியுமே கவனித்து உட்கொள்ளத்தக்கது.

இப்படியாக மந்திரங்களை யெல்லாம் குருமுகமாய் சம்பிரதாய முறைபறிந்து விநியோகம் செய்யவேண்டும்.

"வித்திலாத ஸம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை." ஆகையால் மந்திரத்தின் மூலமறிந்து, மூலத்திருந் துண்டாகும் விளைவறிந்து, சக்தியறிந்து, சாதன மறிந்து,—ருஷி, சந்தஸ், தேவதை, விநியோகம் இவைகளையு மறிந்து உபயோகிக்கவேண்டும். இப்படி முறைதப்பாமல் மனோ விருத்தியை நாசம் செய்து அந்தக்கரண விருத்தியை வளர்த்து, அதையும் தியேயாகாரத்தில் லயிக்கச்செய்து, மந்திரத் தியானம் செய்தால் அந்த மந்திர் தேவதை உபாஸகனைக் குப் பிரத்தியக்ஷமாகி அவனை ரக்ஷிக்கும். இல்லாவிட்டால் உபாஸகனது சித்த விருத்தியால் மந்திர தேவதைக்குப் பங்கமும், மந்திர தேவதைக்குண்டாகும் அங்கபங்கத்தால் உபாஸகனுக்கு அநர்த்தமுமாக இப்படி உபாஸகன் உபாஸியம இரண்டும் ஒன்றைப்பற்றி யொன்று பங்கமடைந்து அநர்த்த பரம்பரைக் காளாவார்கள். இந்த அநர்த்த பரம்பரையால் அசுபாவம் மிகுந்து அதிலிருந்துண்டாகும் அநர்த்த பரம்பரைகள் மிகுதிப்பட்டு, வியஷ்டியிலுண்டான கேட்டின் விளைவு சமஷ்டி சரீரமாகிய ஜன சமூகத்தையும் சமஷ்டி பாவமாகிய ஜனக்ஷேமத்தையும் பற்றிக் கெடுக்கும். தெய்வ வாசனையாகிய ஹிருதயசுத்தி, வாக்சுத்தி, சித்தவிருத்திநிரோதனத்தோடு மந்திரங்களை ஜபித்தால், மந்திர தேவதை உபாஸகனுக்கு இஷ்ட தேவதையாகி இகபர மிரண்டிலுமவனைப் பெற்றதாய்போல் நல்வழிப்படுத்தி ரக்ஷிக்கும்.

"வெளிப்படுவித்துவிளைவறிவித்துத்
தெளிப்படுவித்தெங்கிந்தையினுள்ளே
களிப்படுவித்துக்கதிர்ப்படுசோதியை
யொளிப்படுவித்தென்னையுப்பக்கொண்டவன்
வெளிப்படத்தன்னையும்விட்டுநின்றானே!"

என்பது ஒரு மந்த்ரதிருஷ்டாவின் அனுபவம்.

ஆகையால் மந்த்ரதீக்ஷை பெறுகிறவர்கள் வாக்சுத்தி, மனோசுத்தி, ஹிருதயசுத்தியுள்ளவர்களாக விருக்கவேண்டும்; அல்லது, ஸத்யவிருதமும் நல்லொழுக்கமும் குருசொல்லை "ஆப்தோபதேசமாக"க் கொண்டு வாக்பரிபாலனம் செய்வதற்கு வேண்டிய பூர்ணமான குருபக்தியுமுடையவர்களாயிருக்க வேண்டும்.

"ஆப்தோபதேசஃ சப்தஃ' என்றபடி மந்த்ர குருவின் ஆப்தோபதேசமானது பரிசுத்த மெய்நிய பக்குவ சீஷன் ஹிருதயகமலத்தில் "அநாஹத சப்தமாக"த் தோன்றி, உண்மையான சப்தத்தின் அந்தராத்மாவான த்வனியை க்ளெப்பம்.

அந்த த்வனியி லிருந்து அதன் அந்தராத்மா வானஜ்யோதி தோன்றும். அந்த ஜ்யோதி தரிசனம் மந்திர தேவதையின் ரூபமாகத்தோன்றி உபாஸகனுடைய சித்தவிருத்தியை விழுங்கி, அந்தக்கரண விருத்தியாம் ஹிருதய சுத்தியை யுண்டுபண்ணும். ஹிருதய சுத்திவாய்ந்த உபாஸகனுள்ளத்தில் உறையும் மந்திரதேவதை வாசனாக்ஷயலப்தியின் பொருட்டு உபாஸகனுக்குத் தன் ஸ்வரூப தரிசனமளித்து உபாஸகனை விழுங்கி எல்லாம் தானாய் விளங்குவள். வாஸனாக்ஷய முதிர்ச்சியில் தன் ஸ்வரூபத்தையும் விட்டுநின்று தத்வாதீதமான அரூபத்தைக் காட்டி நிற்பள்.

"களிப்படுவித்துக் கதிர்ப்படு சோதியை
யொளிப்படுவித் தென்னை உய்யக்கொண்டவள்
வெளிப்படத் தன்னையும் விட்டுநின்றாளே."—

என்றதின் உள்ளனுபவம் இதுவே.

அந்த அரூப தெரிசனங் காணுங்கால் உபாஸகன் மந்திரதிருஷ்டா வாகிறான்.

"ஆதி யனாதி யகாரண காரணி
சோதி யசோதி சுகபர சுந்தரி
மாது சமாதி மனோன்மனி மங்கலி
யோதி யென் னுள்ளத்துட னிருந்தம்பர
வீதியி லென்னைவிடத் துணிந்தாளே."

இப்படி "மந்திரதிருஷ்டா" வான யோகதீரன் தனது யோகமாயையுங் கடந்து பூரண சக்தி தரிசனங்காண அருகனாகிறான்.

"அறிவார் பராசக்தி யானந்த மென்பார்
அறிவார் அறிவுரு வாமவ ளென்பார்
அறிவார் கரும மவளிச்சை யென்பார்
அறிவார் பானுமல விடந்தானே."

என்ற திருமந்திரோபதேசப்படி கர்த்ருத்துவம், போக்த்ருத்துவம் இரண்டையும் அறவிட்டு எல்லா மவளிச்சையென்று தன்னை யவளிடம் ஒப்புவித்துத் தான் சிவபோக மொன்றையே நாடி நிற்பான். சிவபோக மனுபவித்தவருக்கு எல்லாம் அன்புருவாய் விளங்குமாதலால் "இன்பக் கலவியும் அன்பாய் முடிந்ததே" யென்றுள்ள அபரோக்ஷானுபூதி வாக்குப்படி எல்லாம் அன்பேயாக, விஷயபோகத்திலும் ஆத்மானந்தத்தையே அனுபவிப்பர்.

இப்படி அபரோக்ஷானுபூதி பெற்றவர் "மந்திரப்பேறு" "யந்திரப்பேறு" பெற்று எல்லாம் சின்மயமாய் விளங்க ஸத்ய ஸங்கல்ப ஸ்வரூப சித்தராய் "சித்தவிருத்தியற்று" "பிரஹ்ம விருத்தி"யில்தானே மூழ்கினவராய் இப்பிரபஞ்சத்தை லீலாவிபூதியாகத் தரிசித்துவப்பர்.

மந்திர தீக்ஷையின் முடிவு இதுவாம்.

பிராமணச் சிறுவர்களுக்கு ஏழு முதல் பத்து வயதுக்குள் செய்யும் பிரம்மோபதேசமாகிய உபநயநதீக்ஷையில் பிதா குருவாயிருந்து உபதேசம் செய்யும் காயத்ரீ மந்திரமானது இவ்வாவையும் தன்னில் அடக்கிக்கொண் டிருக்கிறது.

அந்த காயத்ரீ மந்திரத்தை யுள்ளபடி யுபாஸிக்காமல் இந்தியா சீரழிந்தது. காயத்ரீதேவியும் அவலரிசிக்கழுகிறாள். சந்தியவாக்கில்லாத விடத்தில் காயத்ரீதேவி வாஸம்செய்வதெப்படி? இக்காலத்தில் எல்லாரும் அந்தக்கரண விருத்தியை யொழித்து மனோவிருத்தியை நாடுகிறார்கள். இவர்களைத்தான் சிவவாக்கியர் "பெற்ற தாயைவிற்றடிமைகொள்ளும்பேதைகாள்!" என்று விளித்துகூறி, "சித்திலாதபோது ஜீவனில்லையில்லை யில்லையே!" என்று முக்காலும் உறுதியாச்சொல்லி வற்புறுத்தினார். "சித்திலாது ஜீவனைப்போற்றும்" இக்காலத்தார் அதையெப்படி யுணர்வார்களோ!

ஓம் தத்ஸத்.

"Realisation through Gayatri"
"காயத்ரீமார்க்க தரிசனம்."

மந்த்ரம்=ஜபம், அஜபம் என இருவகைத்து.
மந்த்ரமாவது, (ம=மநஸ் ; த்ர=ரக்ஷணம்) மனஸின் ரக்ஷணத்தோடு கூடியிருப்பது.
மாம் ஒரு வழிப்பட்டது மந்த்ரம்.

"மகாரம் மநஇத்யாஹு ஸ்த்ரகாரம் த்ராணமேவச||
மநஸ்த்ராண ஸமாயுக்தோ மந்த்ர இத்யாபிதீயதே||"

"மநக்காப்புக் காப்பேயன்றி மதில்காப்பு காப்பல்ல."

பிறவிக்காரணமாகிய கர்மபந்தத்தை யறுத்து ஜந்மநாசம் செய்வது எதுவோ அது அக்காரணத்தால் "ஜப" என்னும் சப்தத்தால் குறிக்கப்படுகிறது.

"ஜகாரோஜந்மவிச்சேதஃ பகாரோபாபநாசநஃ|
ஜந்மகர்மஹரோயஸ்மாத்தஸ்மாஜ்ஜபஇதிஸ்மிருதஃ||"

"மந்திரமாவதும்மாமருந்தாவதும்
தந்திரமாவதுந்தானங்களாவதும்
யந்திரமாவதுந்தூய்நெறியாவதும் [திரம்.
எந்தைபிரான்தனிணையடிதானே."—திருமந்

"துணையாயென்னெஞ்சம்துறப்பிப்பாய் நீ"—அப்பர்.

"காயந்தம் த்ராயதே — இதிகாயத்ரீ" தன்னை ஜபிப்பவனை ரக்ஷிப்பதனால் காயத்ரீயென்று பேர்பெற்ற வரதையான தேவியானவள் மந்த்ரரூபமாய், அதாவது "மநஸ்த்ராண ஸமாயுக்த"மாயுள்ளவள். ‡ மநக்காப்பு என்னும் சித்த விருத்தி நிரோத ஸம்பந்தியாயுள்ள பதிவிருதா தர்மஸ்வரூபி. மநஸ் த்ரிபுடிஞானத்தில் மூழ்கிக் காண்பான், காண்பொருள், காட்சி ஆகிய மூன்றும் ஒன்றாயிருக்கும் மர்மத்தை யுணர்ந்தால் அந்த உணர்வு மந்த்ர ஸ்வரூபமாகும். † சித்தவிருத்திநிரோதத்தால் மநோவிருத்திகளெல்லாம் நாசமான பின், நிர்விகாரமடைந்த மநஸ், தைலதாரைபோல் இடையறாது திகழும் அந்தக்கரணவிருத்தியாம் தியானயோகத்தில் முதிர்ச்சியடைந்து, "ததேவார்த்த நிர்ப்பாஸம் ஸ்வரூபசூந்யமிவஸமாதிஃ"—என்ற யோகசூத்திரப்படி தியேயாகார மாத்திரமாய் ஸமாதிகூடி நின்ற நிலையில் நிலைத்து நிச்சல மடைந்ததானால் அப்பொழுது திரிபுடி தரிசநம் கண்டதாகச் சொல்லலாம். இப்படி திரிபுடி தரிசநம் கண்டு அதையுந் தாண்டியுள்ள "மேளாந ஸமாதி" நிலையடைந்த அவசரத்தில்,—அதாவது, சஞ்சலமநம் யோகதீக்ஷையால் நிச்சல மடைந்து, ஞானதீக்ஷையால் "மோநவுரு" வானபொழுது அது "ஸத்யம் ஜபஃ" என்றபடி,

"சாகாதிருந்ததலமேமவுனமது,
ஏகாந்தமாகவிரு."—

என்னும் ஆப்தவாக்கியத்திற் சொன்னவாறு "ஸத்ய ஸ்வரூபத்தில் நித்தியமாய் நிற்க வேண்டி" ஹநுமார் ஸமுத்ரத்தைத் தாண்ட விசுவரூப மெடுத்ததுபோல் எல்லாந்தானாயபின் பிறவிக்கடலைத் தாண்டச் செய்யும் பிரயத்தனமே அதற்கு ஜபமாகும்.

"ப்ரணவஃ பரம் ப்ரஹ்மஸ்வரூபம்."—அப்பொழுது "ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம, ஓமிதியேகாக்ஷரம் பரம்" என்ற சுருதி வசனப்படி பிரணவமே பரமாகவும், ப்ரஹ்ம ஸ்வரூபமாகவும் நிச்சய புத்தியோடு தியானிக்கும்.

"ஜந்ம கர்மஹரோயஸ்மாத் தஸ்மாஜ்ஜப இதி" என்றபடி பிறப்பறுப்பான கர்மநாசத்துக்கும் ஜந்மநாசத்துக்கும் ஹேதுவாயிருக்கிறது எதுவோ அதுவே மேலான தபசினால் ஜபமாகச் சொல்லப்படுகிற தாகையால், "பூஃ, புவஃ, ஸுவஃ, மஹஃ, ஜநஃ, தபஃ, ஸத்ய"மென்று சொல்லப்படுகிற ஸப்த வ்யாஹ்ருதிகளும் "பரம்தபஃ"— அதாவது, உத்கிருஷ்டமான தாபஸாக்கினியை வளர்ப்பவைகளாக ஆகின்றன. ஆகையால், "வ்யாஹ்ருதயஃ பரம்தபஃ" என்று சொல்லப்பட்டது.

இப்படி ஸப்த லோகங்களையும் நவகுண்டாத்மகமான சிதக்னி யென்னும் யாகத்தீயில் ஹோமம் செய்தாகிறவரையில் "தபத்தபஃ"—மேலும் மேலும் தபஸியற்றக் கடவன்.

‡ மனஸின் ரக்ஷணத்தோடு கூடியுள்ளவள்.
† Compare: "நாதவடிவாகிய மஹாமந்த்ராதிரூபியே"—தாயுமானவர்.

இந்த ஜபதபக் கிரமத்துக்கு ஸாதநாபூதமாயிருப்பது காயத்ரீ மந்த்ரத்தினால் உதாகரிக்கப்பட்ட "ஸாவித்ரியா விசிஷ்டம்."—இதைத்தவிர வேறு சிறிதும் இல்லை. ஆகையால், "மௌந ஸமாதியில்", அதாவது, அஜபாகாயத்ரியில், "ஸாதநா பூதாம் ஸாவித்ரியா விசிஷ்டம்"—"நகிஞ்சிதஸ்தி." என்று தர்ம சாஸ்திரம் முறையிடுகின்றது.

இப்படியாக அஜபாகாயத்ரீ யென்னும் மௌந ஸமாதி நிலையில் "காயத்ரீ மார்க்கமாய் தரிசநம்" என்கிற பரஹ்ம சாக்ஷாத்காரம் பெறும் உளவு பெரியோர்களால் குருபதேச மூலமாகக் கர்ணபரம்பரையாய்ப் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இந்த முறையை அநுசரித்தே சென்ற மாதம் நவராத்ரி பூஜா விதானத்தில் "காயத்ரீ மார்க்க தரிசநம்" என்கிற "Realisation through Gayatri" என்னும் "மந்த்ரதிருஷ்டாநுபூதியை" "நாராயண நிஷ்டாநுபூதியாக"ச் சொல்லப்பட்டது. இங்கே புருஷ சூக்தம் "வேதாஹம்" என்கிற 16-வது மந்திரமும் உத்தரானுவாகத்தில் 2-வது மந்திரமும் குருமுகமாய்ப் பார்த்துணரத்தக்கதா மென்று சொல்வோம்.*

வேதாஹமேதம்புருஷமஹாந்தம் ஆதித்யவர்ணம்
[தமஸஃபரஸ்தாத்।
தமேவ-வித்வாந்அம்ருதஃ,இஹபவதி நாந்யஃபந்தா
[வித்யதேஅயநாய॥

"அஜபாகாயத்ரீதரிசன"மாகிய மௌநஸமாதியில் மனோமௌநம் ஸித்திக்கப்பெற்றபின் "நாராயணநிஷ்டாநுபூதி"யாகிய "துரீய காயத்ரீ தரிசனம்" சித்திக்கும். இதற்கு "சாதனம், சாத்தியம், யோகதீக்ஷை, ஞானதீக்ஷை, ஆத்மதீக்ஷை, திருவம்பலச்சக்ரம், மாரன் வெற்றி யல்லது மார்க்கண்டேய பூஜை, அருச்சனை"யாகிய அஷ்டாங்க யோகமும் அவ்வத் தலைப் பின் கீழ் "மகஸ்த்ராண ஸமாயுக்த"மாக விளங்கிய "விளைவுகளை மந்த்ரார்த்தமாகவே "நாராயணநிஷ்டாநுபூதி" வாக்கியமாகத் தெரிவிக்கப்பட்டது.

"ஹரஹரவென்ன அறியதொன்றில்லை
ஹரஹரவென்ன அறிகிலர்மாந்தர்
ஹரஹரவென்ன அமரருமாவர்
ஹரஹரவென்ன அறும்பிறப்பன்றே
ஹரஹரவென்றேயறுத்தனன்பிறப்பை."

என்ற திருமந்திரோபதேசத்தின் கூடார்த்தம் மேலே ஜபம் என்றதற்குச் சொன்ன உண்மையான அர்த்தத்தை யுட்கொண்டு பார்க்க உள்ளபடி விளங்குமென்பதிற் சந்தேகமில்லை.

"காயத்ரீ ஜபம்" என்றால் "சூரியனைத் தியானம் செய்வதே"—அது சகுணமன்றி நிர்க்குணமில்லை யென்று உள்ளனுபவமில்லாக் கற்றுக்குட்டி வித்வான்கள் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் இவர்கள் சகுண நிர்க்குண சம்பந்தத்தை யறியாதவர்களாதலால் "சகுணம் வேறு, நிர்க்குணம் வேறு" என்கிற தப்பபிப்பிராயத்தோடு "இரண்டற்ற தொன்றை" இரண்டு படுத்திச் சொல்கிறார்கள்.

"நமல் ஸவித்ரே ஜகதேக சக்ஷுஷே ஜகத்ப்ரஸூதி ஸ்திதி நாசஹேதவே, த்ரயீமயாய த்ரிகுணாத்ம தாரிணே விரிஞ்ச நாராயண சங்

* வித்யாரண்யர் இந்த மந்த்ரத்துக்குப் பின்வருகிறபடி பாஷ்யார்த்தம் சொல்லியிருக்கிறார்:—"விராட் புருஷனுடைய தியானம் இங்கு ப்ரதிபாதிக்கப்படுகிறது. இந்த அநுவாகத்தைப் பரம புருஷனுடைய அநுக்ரஹத்தினால் பெற்று "நாராயணன்" என்கிற ருஷி தன்னுடைய த்யாநத்தில் விராட்புருஷனை ஸாக்ஷாத்கரித்தபடியைச் சொல்லுகிறார். எந்த விராட் புருஷன் தேவனென்றும், மநுஷ்யனென்றும், பசுவென்றும், பக்ஷி யென்றும் அனேக ஜீவன்களுடைய சரீரத்தை ஸ்ருஷ்டித்து, அதற்கு தேவன், மநுஷ்யன், பசு, பக்ஷி யென்கிற பெயரையுமிட்டு, அப்பெயர் உலகத்தில் வழங்கும்படி தானே அதை முதலில் வ்யவஹரித்தவராயிருக்கிறாரோ, அப்படிப்பட்ட ஸமஸ்த குணங்களையுடைய கோடி ஸூர்ய காந்தி போல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற விராட்புருஷனை நான் ஸாக்ஷாத்கரித்தேன். அவர் அஜ்ஞானத்துக்கப்பால் ("துங்கமுற வெங்குநிறை யாலயங்கடந்து") வஸிக்கிறார். ஆகையால் ஒரு குருவை ஆசரியாமலும் சாஸ்திரத்தை யதிகரியாமலுமிருக்கிற மூடர்களுக்குக் கண்டனுபவிக்கப் போகிறதில்லை."

கரத்மகே—த்யேபஸ் ஸதா" என்றதனால் நிர்க்குணோபாஸனையே சொல்லப்பட்டதன்றி வேறல்ல. இந்த நிர்க்குணோபாஸனைக்கு வேண்டிய "அஜபா ஸித்தி[illegible]வர்களுக்கு அனுகூலமாக சகுணோபாஸனையும் அதுபோ[illegible] சொல்லப்பட்டிருக்கிறது. அது "ஸவிதா மண்டல மத்பவர்த்தீ நாராயணஸ்ஸிரஸிஜாஸந ஸந்நிவிஷ்டஃ, கேயூரவான் மகர குண்டலவான் கிரீடஹாரீஹிரண்மபவபுர்த்ருதசங்கசக்ரஃ। சங்கசக்ர கதாபாணே துவாரகா நிலயாச்யுத கோவிந்த புண்டரீ காக்ஷ ரக்ஷமாம் சரணாகதம்॥" என்றுள்ள ஸ்துதி வாக்கியத்தால் விளங்கும். "ஆத்மகே—" என்ற வரையிலுள்ளதை அஜபாத்தியானமாகவும் (மனோ மௌநத்தோடும்,) பின்னதை சித்தவிருத்தி நிரோத மநஸினால் ஜபமாகவும் செய்யத்தக்கது.

காயத்ரீ மார்க்க தரிசனம் கண்டவர் பஞ்சாக்ஷர உண்மையையும் அஷ்டாக்ஷர மஹிமையையும் உள்ளபடி ஏகமாயறிந்து அகண்டைகரஸமான சகஜானந்த சுகத்தை யிடைபறாதனுபவிப்பவராவர். இவர்களுடைய அனுபவம் வாசோ அநுபூதி வாக்குக்கொத்திருக்கும்.

"எரியலால் உருவமில்லை யேறலால் ஏறலில்லை
கரியலாற் போர்வையில்லை காண்தகு சேதியார்க்குப்
பிரிவிலாத் தேவர்கூடிப் பெருந்தகைப் பிரானென்
[றேற்றும்
ஹரியலால் தேவியில்லை ஐயனையாறறிந்தார்க்கே."

இப்படியாக "ஹரியலால் தேவியில்லை" யென்கிற உண்மையை உள்ளறிந்தனுபவித்தவர்க்கே ராம நாமத்தின் மஹிமை தெரியும். காயத்ரீ மந்தரத்தைச் சுருங்கி லப்த ரிஷிகளும் வால்மீகிக்கு அனுக்ரகம் செய்யவேண்டி யீரக்ஷரமாகப் போதித்தனர். பூர்வஜென்ம சுபவாஸனையிருந்தும் வேடனுப்பப் பிறந்து கிராதகத் தொழில் புரிந்து வந்தமையால் தாமஸம் தலைக்கேறிய அவனுக்கு ராம என்கிற இரண்டக்ஷரங்களையும் மந்த்ர லக்ஷணத்தோடு உச்சரிக்கத் தெரியாமையால் அவன் "மகஸ்த்ராணஸமாயுக்த"மெய்துமாறு அங்கு நின்ற மராமரத்தை அவனுக்கு லக்ஷியமாகக் காட்டி, மராமரமென்று அதன் பேரை "ஜந்மகர்மஹர"ணார்க்தம் ஜபிக்கச்சொல்ல, அவன் "மராமரம்" [illegible] பட்டு லக்ஷியத்தோடு [illegible] மகஸ் ஏகாக்ரப்பட்டு "மராமராமராமராம..." என்று உருப்போட்டுக் கொண்டுவர மகஸ் அந்த மராமரத்தோடு ஐக்கியப்பட்டு மநோவிருத்தியற்று நின்ற அவசரத்தி லுண்டான அந்தக்கரண விருத்தியில் அவனே மராமரமாகி விட்டதாகக்கண்டான். அவ்வனுபவத்தில் மனது ஒய்ந்து உட்கார, அப்படி லயித்த மௌநஸமாதியில் அம்மரத்தின் அந்தராத்மாவான ராமநாமம் அவனது அநாஹத சப்தத்திலிருந்துண்டாக, "ராமராம" வென்று அஜபாமந்த்ரமாக அதைச் சிந்தையொழிந்த ஒழிவில் அந்தக்கரண விருத்தியாகிய ஆஹமும் ஒடுங்கிய ஒடுக்கத்தில் நிர்விருதமாக நிதித்திபாஸநஞ் செய்துவர, "மோனம்" என்கிற மௌநஸமாதி ஸித்தித்து மோநாதீதமான வஸ்துவை அகண்டாநந்த ஐக்கிய போகமாக அனுபவிக்கலானான். அந்த அனுபவத்தை ராமாயணமாகச் சிருஷ்டித்தார் மந்த்ரதிருஷ்டாவான வால்மீகருஷி. வன்மீகமென்பது ஹிருதய சுத்திலைக் குறிக்கும். கரையான்புத்துமண் எப்படி சுத்தமானதாயிருக்கிறதோ, கரையான் சுத்தமான மண்ணால் வீடுகட்ட அதில் எப்படி பாம்பு குடிப்புகுகிறதோ, அப்படிப்போல, தேகத்திரியங்களுக்குமபிமானியான ஜீவன் பஞ்சபௌதிக க்ஷேத்ரமாகிய சரீரத்தை "ஐயாறு" அல்லது "பஞ்சநதம்" என்கிற பஞ்சீகரணவிதிப்பிரவாகத்தால் அலசி அலசிக் கழுவிப் புதிப்பித்துச் சுத்தம் செய்துவர, அதனாலுண்டான சுத்த ஹிருதயத்தில் அனந்தன் என்கிற நித்யசாக்ஷியான கூடஸ்தப்பாம்பு வந்து குடிப்புகுந்து கொள்கிறது. இதுதான் ராமநாமரகஸியமாம்.

"ஸாமம்காலுவேதமும்ஸகலசாஸ்திரங்களும்
சேமமோதவோதிலுஞ்சிவனைநீரறிகிலீர்
காமநோயைவிட்டுநீர்கருத்துளேயுணர்ந்தபின்
ஊனமற்றகாயமாயிருப்பனெங்களீசனே!"

சங்கு,வலம்புரிசங்கம் என்றும் இடம்புரி சங்கமென்றும் இரண்டு [illegible] அதன் [illegible] சப்தத்துவனியையுண்டு பண்ணும் "தாரை" (துவாரம்) ஒன்றே. அது போல, நாடி யொன்றுளையும், வாயுவாகிய பிராணசக்தி யதில் வலசாரி யிடசாரியாக வோடிச் "சன்ன-பின்னலாக"ச் சுற்றிக்கொண்டு திரிவதினால், மாயையின் ஜாலம் அதிகரித்து அறிவை விழுங்கிக் "காலன்" என்கிற பிராந்தியை யுண்டுபண்ணுவதாயிற்று. "Nervous-impulses" என்று சொல்லும் பிராணசக்தியின் இயக்கமெல்லாம் இப்படி "சன்ன-பின்னலாக"ச் சுற்றித்திரியாமல் சுழுமுனைப்பிரவேசம் செய்து "உத்வாகனத்தால்" மேல்நோக்கிச் சென்றால், ஒருவழிப்பட்ட அந்தப் பிராணசக்தியானது பிரணவ முக்தியில் தன்னந்தானாகவே யொடுங்கி அத்வைதானுபவத்தை அபரோக்ஷமாகக் கொடுக்கும். இந்த இரகஸியவழியறிந்து நடக்கத்தெரியாமல் மாந்தர்கள் வீணாய்ச் சங்கடப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள். ஞானவான் இவர்களைச் "சாதகரியாமல் சங்கடப் படுகிறவர்கள்" என்று சொல்லுவான்.

"சங்கிரண்டு தாரையொன்று சன்னபின்ன லாகை
மங்கிமாளுதே யுலகில் மானிடங்க ளெத்தனை![யால்
சங்கிரண்டையுந் தவிர்த்து தாரையூத வல்லரேல்
கொங்கைமங்கை பங்கரோடு கூடிவாழலாகுமே."

ஆகையால் இந்த ராமநாமரகஸியத்தின் மகிமையை யென்னென்றுசொல்லி யேத்துவேன்! ஏதென்று சொல்லித் தொழுவேன்!

"எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்ப னெம்பிரா
முத்தியான வித்துளே முளைத்தெழுந்த வச்சுடர்[ன்
சித்தமுந் தெளிந்துவேதகோயிலுந் திறந்தபின்
அந்தனுடன் கண்டபின் அடங்கலாடல் காணுமே."

"போத'டா வெழுந்ததும் புனலதாகி வந்ததும்
தாத'டா புகுந்ததும் தானடா விளைந்ததும்
ஓதடா' வஞ்சுமூன்று மொன்றதான அக்ஷரம்
ஓதடா விராமராம ராமமென்ன [illegible]."

"[illegible] ஹரேராம ராமராம ஹரேஹரே!
ஹரேக்ருஷ்ண ஹரேக்ருஷ்ண க்ருஷ்ணக்ருஷ்ண
[ஹரேஹரே!
ஹரேராம! ஹரேக்ருஷ்ண! ராமக்ருஷ்ண ஹரே
ஹரேராம! ஹரேராம! ராமராம தோராம! [ஹரே!
ஹரேக்ருஷ்ண! ஹரேக்ருஷ்ண! ராதாக்ருஷ்ண
[ஜேஜேராம!"

இந்த மந்திரத்தை யோதி யுண்மைகண்டபின் "உள்ளம் பெருங்கோவி லுனுடம்பாலய" மன்றி வேறு கோயிலைக் காணார் மந்திர திருஷ்டாக்களான "காயத்ரீமார்க்கதரிசனம்" கண்டனுபவித்தவர்கள்.

"பாண்டுநோன் பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை!
"பாழிலே ஜபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை!
"மிண்டராய்த் திரிந்தபோ நிரைத்தீர்களெத்தனை!
"மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்த தெத்தனை!
"அண்டர்கோ னிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகள்
"கண்டரோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லை.
[யே!"

ஓம்தத்ஸத். K. S. S. A.

Pranayama—Its Characteristics and Ultimate Aim.

ப்ராணயாம—லக்ஷணை—லக்ஷியம்.

(:-:)

(வைத்தியநாத தீக்ஷிதீயப்படி.)

"ப்ராணே வாயுச் சரீரஸ்ய-ஆயாமஃ தஸ்ய
[நிக்ரஹஃ"—நாரதவாக்கியம்.

ப்ராணயாமமென்றால் என்ன?'ப்ராண:' என்றால் சரீரத்திலுள்ள வாயுவென்றும், 'ஆயாமஃ' என்றால் அதை நிரோதஞ் செய்தல் என்றும் நாரத பகவான் சொல்லி யிருக்கிறார். "ப்ராணாயாம இதிப்ரோக்தோத் த்விவிதஃ ப்ரோச்சியதேஹிஸ:॥ அநர்ப்பச்சஸகர்ப்பச்சத்விதீய

ஸ்து தயோர்வரஃ॥ அபித்தியாநம் விநாகர்ப்பஃ ஸகர்ப்பஃ தத்ஸமந்வித இதி॥."=இப்படிச் சொல்லப்பட்ட ப்ராணாயாமமானது இரண்டு விதமாகச் சொல்லப்படும். அகர்ப்பப் பிராணாயாமம் ஸகர்ப்பப் பிராணாயாமம் என்று மிரண்டில் இரண்டாவது (ஸகர்ப்பம்) சிரேஷ்டமானது. அபித்தியாநம் இல்லாதது அகர்ப்பப் பிராணாயாமம். அந்தர்த் தியானத்தோடு கூடினது ஸகர்ப்பம். இது நாரத பகவானுடைய வாக்கியம்.

பிராணாயாமம் த்ரிவித லக்ஷணங்களோடு கூடியது. அவை: (1) பூரகம், (2) கும்பகம், (3) ரேசகம் என மூவகைத்தாம். யோக யாஜ்ஞவல்கியத்தின்படி: "நாஸிக ஆக்ரஷ்ட உச்சுவா ஸொத்மாதஃ பூரக உச்சியதே॥ கும்பகோநிச்சல ச்வாஸஃ ரிசியமாநஸ்து ரேசகஃ॥ பாஹ்யஸ்திதம் க்ராணபுடேந வாயும் ஆக்ரஷ்யயத்கெந சநைஃ ஸமஸ்தம்॥ நாடியச்சஸர்வாஃ பரிபூரணீயாஃ ஸபூரகோநாம மஹாந்நிரோத இதி॥" நாஸி (மூக்கு) வழியாக வாயுவை யிழுத்து மேற்போகச் செய்வது பூரகம். நிச்சல சுவாஸமே கும்பகம். அதை வெளிவிடுகிறது ரேசகம். வெளியிலிருக்கிற பிராணவாயுவை நாசிநாத்துவாரத்தின் வழியாய் (உள்ளிந்திரிய மார்க்கமாய்) முற்றும் மெல்ல (மெதுவாய்) பிரயத்தன பூர்வமாய் இழுக்கவேண்டும். (இழுத்த வாயுவானது) எல்லா நாடிகளிலும் பரிபூரணமாக நிறையும்படி செய்வது பூரகம். (அப்படி பூரகம் செய்தபின்) மஹா நிரோதம் செய்தல் வேண்டும். புத்திமான் மயிர்களின் துளிவழியாகவும், நகங்களின் துளிவழியாகவும் (வெளிப் போகும் வாயுவை) நிரோதம் செய்கிறவனாகிறான் (தடுக்கிறான்.) அப்படி நிரோதம் செய்வதால் அந்த பிராணபந்தத்திலிருந்து தேஹத்தினுள்ளே தானே, வாயு பிறக்கிறது. அந்த வாயுவிலிருந்து அக்னியுண்டாகிறது; அந்த அக்னியிலிருந்து ஆபஃ (ஜலம்) உண்டாகிறது. அந்த ஜலம் அந்தஃ (உள்ளத்தை அல்லது அந்தக்கரணத்தை), சுத்திசெய்கிறது. இது கும்பகம். இப்படி அந்தக்கரணசுத்தி செய்து கொண்டபின் நாஸிகா இந்திரியத்தினாலே வேகமாயில்லாமல் மெதுவாக வாயுவை வெளிவிட வேண்டும் இது ரேசகம். சரீரத்தின் உள்ளே இப்படி பிராணாயாமத்தால் அந்தஃசுத்தி செய்து கொள்ளும் யோகியானவன் பரமயோகியாக மதிக்கப்படுகிறான்.

இப்படியாகப் பிராணயாமமானது அந்தஃசுத்தியின் பொருட்டு செய்யப் படத்தக்கது. ஆசமநீயத்தால் சரியை பாதத்தை யனுஷ்டித்து உள்ளத்தை சுத்திசெய்துகொண்டு, கிரியா பாதத்தில் "ஆபோஹிஷ்டாமயோபுவஃ" என்னும் மந்திரத்தால் புநிதமாக்கப்பட்ட ஜலத்தினால் புரோக்ஷித்துக் கொண்டு, பிறகு அபிமந்திரித்த தீர்த்தத்தால் அகச்சுத்தி செய்துகொண்டு அர்க்கியம் முதலான ஸந்தியா கர்மங்கள் செய்தபின், அந்தக்கரணசுத்தியின் பொருட்டு பிராணாயாமம் செய்ய வேண்டியது. இதில் நாடிதாரணை, வாயுதாரணை, அக்நிதாரணை, அமுத தாரணை யென்னும் நான்கு விதமான தாரணைகளடங்கும்.

வ்யாஹ்ருதியினால் நாடி தாரணையும், வ்யாஹ்ருதியோடு சேர்ந்த பிரணவத்தினால் வாயு தாரணையும், காயத்ரீ மந்திரத்தால் அக்நிதாரணையும், காயத்ரீ சிரஸால் அமுததாரணையும் ஸித்திக்கும்.

இதற்கு உபஸாதகங்களா யிருப்பவை:—தேஹசுத்தி மனோசுத்திக்குக் காரணமான இயம நியமங்கள். பிறகு சித்தவிருத்தி நிரோதத்துக்கனுகூலமான ஆஸநம் (ஸ்திரதன்மை), பின்னர் பிரணவலம்யுக்தமான வ்யாஹிருதி தியானத்தால் பிரத்யாஹாரம். இதனால் நாடிசுத்தியும் வாயுபூரகமும் லபிக்கும். நாடிகளெல்லாம் நிறைந்த வாயுவை வெளிப்போக வொட்டாமல் தடுக்க காயத்ரீ மந்திரத்தால் ஸுஷும்

தேவதையின், ஆத்ம ஸ்வரூபமான கோடி சூரியப் பிரகாசத்தின் காந்திக்கு ஒப்பான "பர்கஃ"—பரஞ்சோதியை, "தீமஹி"—தியானம் செய்ய வேண்டும். இப்படியாக அங்கிதாரணை செய்து 'நகக்கால்,' 'மயிர்க்கால்' வழியாக மாய்கின்ற வாயுவை, "அயிர்ப்பின்றி யுள்ளே பதிக்க", அப்படி நிரோதம் செய்யப்பட்ட வாயு விலிருந்து அக்னி ஜநிக்கக் காணலாம். இந்த அக்னி தத்துவத்தையும் காயத்ரீ சிரஸாயை "ஓபாபோஜ்யோதி ரஸஃ அமிர்தம் ப்ரஹ்ம பூர்புவஸ் ஸுவரோம்" என்னும் மந்திரத் தியானத்தால் நிரோதிக்க அதிலிருந்து அமுத தாரையுண்டாகும். அந்த அமுததாரை உள்ளிந்திரியங்களையும் அந்தக்கரணத்தையும் சுத்தி செய்யும்.

இப்படியாக பிராணயாமம் செய்யும் பொழுது வியாஸ பகவான் சொல்கிறபடி "நாபிமத்யே ஸ்திதம் தியாயேத் கம்ரக்தம் பூரகேணது|| நீலோத்பலாபம் ஷ்ருத்பத்மே குப்பகேந ஜநார்த்தநம்|| லலாடஸ்தம் சிவம் ச்வேதம் ரேசகேந அபிசிந்தயேத்|| சுத்தஸ்படிக ஸம்காசம் நிர்மலம் பாப நாசநம்|| சம்கரம் த்ரியம்பகம் ச்வேதம் தியாயந் முச்சியேத பந்தநாத் இதி||"

"பூரகம் செய்யும் பொழுது நாபிமத்தியத்தில் (நாபி பத்மத்தின் நடுவில்) இருப்பவனும் ரக்த (சிவந்த) வர்ணமுள்ளவனுமான, (கம்—பீஜாத்மக) பிரம்மாவை தியானிக்கவேண்டும்.

"கும்பககாலத்தில் ஹிருதய பத்மத்தின் நடுவில் நீலோத்பல (கருநீல) நிறமுடைய மஹா விஷ்ணுவைத் தியானிக்கவேண்டும்.

"ரேசககாலத்தில் லலாடமத்யத்தில் (ஆஜ்ஞாபதமத்தின் நடுவில்) வெண்மை நிறமுடைய சிவனைச் சிந்திக்கவும்."

[இங்கே, பூரகத்தால் விசுவரூபியும் விராட் புருஷனுமான சிருஷ்டிகர்த்தாவைத் தியானித்து தியேயாகார மானபின், கும்பகத்தால் ஸ்திதிகர்த்தா வாகிய ஜநார்த்தநனைத் தியானம் செய்து விபாபகாத்மகமான விஷ்ணுமயமாக்க வேண்டும் என்பது கவனிக்கத் தக்கது. அப்படி தியேயாகாரமானவன், வாயுவின் நிரோதத்தால் (தஹிரோபாஸ்ய) ஆகாசமாத்ரமாகி, அங்கே அலர்ந்து நின்ற "ஹிருத்பத்ம" மத்யத்திலிருந்து 'முக்கியப்பிராணனை' வாயுபிறக்க, அந்த வாயுவிலிருந்து (வாயுதாரணையின் முதிர்ச்சியில்) அக்னியும், அந்த அக்னியிலிருந்து (அங்கிதாரணையின் முதிர்ச்சியில்) 'ஆபஃ' என்னும் அமிருதவருஷமாகிய ஜலமும் உண்டாகும். அமுததாரணையினால் அவ்வமுத ஜலத்தை யுட்கொண்டு தாபஸாக்கினியினால் ஜீரணிக்கப்பட்ட உள்ளேந்திரியங்களை ஜீரணோத்தாரணம் செய்து, பின், ஹிருதயசுத்தி வாய்ந்த மனத்தோடு ஆஜ்ஞாபத்மாலயமடைந்து ரேசகத்தினால் ஸம்ஹார கர்த்தாவாகிய சிவனைத்தியானிக்க வேண்டுமென்பதை குருமுகமாகவறிந்து குருபதேசப்படி பூரக கும்பக ரேசக மாற்றல் வேண்டும். இப்படி த்ரிவித லக்ஷணமாயுள்ள பிராணயமத்தை த்ரிலக்ஷியங்களின் இரகஸியமறிந்து "மானமுடன் அமோன ஸாரமது உண்மையினில் உள்ளபடி விட்டரைத்து" தஹிக்கப்பட்டு ஸம்ஹாரமான தேஹேந்திரியாதி யுறுப்புகளை பரிசுத்தமான அந்தக்கரண விருத்தியினால் ஆத்ம புத்தியோடு புனர்ஜனனமுண்டாகச் சிருஷ்டித்தால், அப்பொழுது "உள்ளுடம்பினிலைமை" தெரியவரும். அந்த உள்ளுடம் புணர்வுபெற்றால் "உள்ளுடம்பின் வாழ்வன வொன்பது மேழைக் கள்ளவுடம் பாகி விடும்" என்ற ஔவைகுறளிற் சொன்னஉண்மையின்தெளிவு உள்ளாத்துதிக்கும். பின்னுமிதைக் கொண்டு,

"சுற்றலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலாம்
உற்றுடம்பா லாய வுணர்வு."

"பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற்கோர் வித்தாகும்" "பெய்க்கு உள்ளாம்" இந்த "மாயவுடம்பு" தானே, ஊழூழி காலமாயிருந்து "நல்வினையுந் தீவினையு முண்டுத்திரிதரும்." இதுவே பின்னும் "செய்வினைக்கும் வித்தா முடம்பு."

ஆதிமுதல் உள்ளதால் பழமையானதென்று பேர்பெற்ற இந்தத் "தொல்லை யுடம்பின் தொடர்பு" என்று சொல்லும் ஜநந பரம்பரையை குருவருள் பெற்றுத் திருவருள் வெளியில் "ஆய்ந்து ஆய"—பன்முறையும் ஆராய்ந்து பனுவலற்ற மோனவெளியில் ஆராய்ச்சி முடிவெய்தப்பெற்ற விசாரதீரனுக்கு, "அல்லற் பிறப்பை யகற்றுவிக்கும்." "என்றுங்கெடாத" இந்த உள்ளுடம்பைக் கொண்டு பிராணயாமத்தின் முடிவான கேவலகும்பகத்தில் செய்ய வேண்டிய அந்தர்லக்ஷியமான தியானத்தைப் பின்னால் சுட்டுவான். அதன் பலனைச் சொல்லுகிறார். ஔவையார் "வருபயனுடு மகிழ்ந்துடனு நிற்கும் ஒரு பயனைக் காட்டு முடம்பு" என்று சொன்னதின் உட்பொருளையும் உள்ளாய்ந் துணரவேண்டும். பிராணயாம ஸித்திபினாலேயே லபிக்கத்தக்க இது பூரணவாயு நிரோதத்தில் பிறந்த "வாயுவிலாய வுடம்பு." —கும்பகவாயுவில் பிறந்த பிராணாத்மக சரீரமாதலால் இவ்வுடம்பின்பயனே "ஆயுவி னெல்லையது" என்றார். இந்தப் பிராணாத்மக சரீரமே "கும்பமுனி"யின் சரீரமாம். இது மூலாக்னி ஸ்தானமான "பொதிய மலையில்" வஸித்துக் கொண்டு அசரீரியான சிதக்னியைத் தனக்குயிர்நிலையாகக் கொண்டிருப்பதால் தான் "என்றுங் கெடாததிது" என்று இதற்குநித்யத்துவம் கற்பித்துக் கூறினார்.]

"சுத்தஸ்படிக ஸம்காசம்" என்று ஆரம்பிக்கும் வியாஸபகவானுடைய வாக்கியத்திற்கு அர்த்தம் இப்பொழுது விளங்குமென்று அதன் வாச்சியார்த்தத்தைக் கீழே வரைகிறோம்.

"பரிசுத்தமான பளிங்குநிற முள்ளவனும், மல (மாயை அல்லது மும்மல) சம்பந்தமில்லாதவனும், பாபங்களைப் போக்குபவனும், (சூரிய சந்திராக்னி யென்னும் முச்சக்தி வடிவமான மூன்று கண்களையுடையவனும், பரிசுத்தனுமான (சம்-கரோமி=நல்லதையே செய்பவனான) சங்கரனை (சிவ ஸ்வரூபத்தை) ['கும்பக்களிறைந்தும்' என்று சொல்லப்பட்ட 'சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்த' மென்றுள்ள தன்மாத்திரைகளுக்குக் காரணபூதமான பஞ்சலிங்காத்மக ஸ்வரூபத்தை யுணரும் பஞ்ச மஹா காரணேந்திரியங்களோடு கூடிய (காதில்லாது கேட்டல், கண்ணில்லாது காணல் முதலியவான சாமர்த்தியம் வாய்ந்த) 'உள்ளுடம்பு' க்குள்ளிருந்து] தியானிப்பவன் பந்தங்களிலிருந்து விடுபடுகிறான்" என்பது வியாஸ பகவான் சொல்லுண்மை.

இன்னம், யோகயாஜ்ஞவல்கியத்திற் சொல்லியிருக்கிறபடி, பூரகத்தில் தேறினவன் விஷ்ணு ஸாயுஜ்யம் அடைகிறான்; கும்பகத்தில் தேறினவன் ப்ரஹ்மலோகத்தை யடைகிறான். மூன்றாவதான ரேசகத்தில் தேறினவன் ஈசுவரபதமடைகிறான். இடாநாடியால் வெளியிலிருந்து 12-மாத்ரை (கால) அளவு பிராண வாயுவை உள் வாங்கச்செய்து அவ்வாயுவினால் உதரத்தை நிறப்பிக்கொண்டு இரண்டு கண்களையும் நாஸிகையின் அக்ரத்தில் (மூக்கு நுனியில்) ஸ்திரமாய் வைத்துக்கொண்டு (அங்கே காணப்படும் ஓஜஸாத்மகஜோதியை) தியானம் செய்து, பின் பிங்களை யென்னும் நாடிவழியாக மெள்ளமெள்ள விரேசனம் செய்ய வேண்டும் (சுவாஸத்தை விடவேண்டும்). [இடா என்பது வாமநாடி; பிங்களா என்பது தக்ஷிணநாடி. கும்பகம் என்பது மாநஸ ஜபம்.] இந்த அர்த்தத்தில் "ஸ்மிருதி ரத்நம்" என்கிற கிரந்தத்தில் பிராணயாம லக்ஷணம் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது:—

"தக்ஷிணேந ஜபம் குர்யாத் வாமேநா பூரிதோதரா|| கும்பகோ அஜபம் குர்யாத் பிராணயாமஸ்யலக்ஷணம் இதி||"

தக்ஷிண நாடியான பிங்களையால் (மந்த்ர) ஜபம்செய்து, வாம நாடியான இடா நாடியால் உதரம் (உந்தி) பூரிக்கப் பூரிதம் செய்து, கும்

பகத்தால் அஜபா(த்தியானம்) செய்தலாகிய இதுவே பிராணயாமலக்ஷணம். இப்படியாக ஸ்மிருதிரத்நம் என்கிற கிரந்தத்தில் பிராணயாம லக்ஷணம் சொல்லப் பட்டிருக்கிறது.

ஸ்தூலப் பிராணயாமத்தை நாம் இங்கு அதிகமாய் விவரிக்கவில்லை. ஏனெனில் அது குருமுகமாக வுணர்ந்து குரு ஸந்நிதானத்திலிருந்து செய்யப்படவேண்டியது. அப்படிச் செய்யாமல் ஏட்டுப்படிப்பைக் கொண்டு செய்வதால் அனேக அநர்த்தங்கள் நேரிட்டு அதனால் ஆபத்து அநர்த்தங்கள் அனேகம் நேரிடக் காரணமாகிறது. ஆகையால் அதை விட்டு, சூக்ஷ்மப் பிராணயாமம், காரணப் பிராணயாமம் இரண்டையும் சாஸ்திரங்களில் சொல்லியபடி விரித்துரைத்துள்ளோம். நாரத பகவான் திரிபுவன வாஸி யாகையால் அவர் "பிராணயாமம்" என்பதற்கு ஸூக்ஷ்மமாகவே யர்த்தம் சொல்லியிருக்கிறார். "சரீரத்தில் வாயுவை நிக்ரஹம் செய்வதே பிராணயாமம்" என்று அவர் சொல்லியுள்ளதை முதலிலெடுத் துரைத்தோம்.

இப்படி வாயுநிக்ரஹம் செய்து, நிரோதிக்கப்பட்ட வாயுவானது மயிர்க்கால் நகக்கண்களின் வழியாகக் கூட வெளிப்போகாதபடி காக்கவல்ல தீரனான யோகி, அப்படிப்பட்ட மஹா தீரமான பரிபூரணவாயுநிக்ரஹத்தால், பிராணனைத் தன் விதபக மலத்திலிருந்து தானே சிருஷ்டிக்கும் சமர்த்தனாகிறான். ஏனெனில் ஸம்பூரணமான வாயு தீரசித்தத்தினால் முற்றும் நிரோதிக்கப்படின் அது அண்டாகாரமாகி அகண்டத்தைத் தன்னுளடக்கிக் கொண்டிருக்கும். அந்த அகண்டத்தைத் தியானம் செய்வதால், மௌன வித்தியென்று சொல்லும் மோனகுருதரிசனம் லபிக்கும்.

[1]"மோனகுரு நாதர் நடமாடி வருசிலமுறு
[2]கானமிகுநாதவொளிகேட்டெழுந்துணர்வினுள்ளே
[3]ஏனமிலாசோதியருதரிசனங்காண்டுகொள்வான்
[4]சனமிலா வானநிறை வாயுதனி லலைந்துறைந்து
[5]தீனமுடை நெஞ்சனாய் வட்டமிட்டதனுளொரு சக்[கரக்கோட்டைகட்டி
[6]மானமுடனபிமான சாரமது உண்மையினி லுள்ள[படி விட்டரைத்து
[7]ஏனமிசை குயவனவன் கைப்பிடிக் கிசைந்துவணை[திரிகைமண்ணாய்
[8]வானமிசை விரிசடையோன் கைப்பிடியி லமைமு[மவன்மயமேயாகி
[9]மோனவுரு வானவொரு வகை[illegible] காணவெ[illegible] [அன்பிலமுதே!"

மோனகுரு தரிசனங் கிடைத்தால் ஆத்மோத்தாரணமென்கிற "திருப்பள்ளியெழுச்சி" சம்பவிக்கும். ஆத்மோத்தாரணமானால், அப்படி உத்தாரணம் செய்யப்பட்ட ஆத்மசக்தியானது 'த்ரிபம்பரமாய்' (திரிவிதமான சக்தியாய்) ப்பிரிந்து ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதி முத்தொழில்களையும் தானே செய்ய வல்லதாகும்.

ஆக்கியழித்துக் காப்பதாம் இந்த முத்தொழிலையும் செய்வதாமோர் அற்புத ரகஸியத்தையே "நிரோதாஜ்ஜாயதே வாயுஃ" என்றும், "வாயோரக்நிச்சஜாயதே" யென்றும், "அக்நேராபச்சஜாயந்தே" யென்றும் சொல்லலுற்றார். தானாக யோகசாஸ்திர மியற்றிய யோகயாஜ்ஞவல்கியர். இப்படி ஆக்கி யழித்துக் காக்கும் சக்தி தனக்கிருப்பதை யுள்ளுணர்வால் உணருங் காரணத்தால் "தீயோ யோகப் பிரசோதயாத்" என்கிற "ஸவிது:" என்னும் பதத்துக்கு லக்ஷியமான அந்தக்காணவிருத்தியானது(அஹம் என்னும் நான்) நிருபாதிக நிலையடைந்து, சமஷ்டியாத்மகமான "தத்ஸவிதுர் வரேணியம்" என்னும் மந்திரத்துக்கு லக்ஷியமான பரமாத்மாவை, "பர்கோ தேவஸ்யதீமஹி" என்னும் மத்தியபாதமான கும்பக லக்ஷணத்தால் அஜபாத்தியாநம் செய்ய அருகமாகிறது. இந்த அனுபவத்தை "கருடவாஹன

குரு கடாக்ஷ வீக்ஷண்ய பிராப்தாஸ்து" என்னும் மந்திரத்தின் தரிசனமான "மோந குரு நாதர்" என்னும் பாட்டில் மந்திரதிருஷ்டானுபூதியாகச் சொல்லி யிருக்கிறார். அங்கே (1) முதல் அடையாளமிட்டுள்ள—முதலடியினால்—"மோநகுரு"வாம் அருவுருலக்ஷணமும்,

2-ம் அடியினால்—நாதாநுஸந்தானத்தால் லபிக்கும் ஆத்மோத்தாரண லக்ஷணமும்,

3-ம் அடியினால்—நிருபாதிக நிலையில் "ஸ்வரூப ஸூந்ய"மென்கிற 'சொரூப நாச'ஹேதுவான அரூபதரிசன லக்ஷணமும்,

4-ம் அடியினால்—பிராணயாம லக்ஷணமாகிய பரிபூரணவாயுநிரோதத்தால் வித்திக்கும் அஹராகாசத்திற் பிறக்கும் பிராண லக்ஷணமும்,

5-ம் அடியினால் — சித்தவிருத்தி நிரோத வித்தியும் (அதனால்)ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார சக்தி லப்தியும், (இதற்கு கருட தரிசனம் என்று பேர்.) *

6-ம் அடியினால்—"கார-சார" மென்கிற சிருஷ்டி ஸ்திதி சாதனமும், (Anabolic and Katabolic principles that go to produce Metabolism.)

7-ம் [illegible] காரண காரிய உபாதனமாகிய த்ரிகுணாத்மகமான [illegible] பிரஜ்ஞாத்ம' ஸ்வரூப லாதக லக்ஷணமும்,

8-ம் அடியினால்—"ததேவார்த்தமாத்ர நிர்ப்பாஸம் ஸ்வரூப சூன்யமிவ ஸமாதி:" என்ற யோகஸூத்ரப்படி அங்க லிங்க சங்கமரூபஸமாதிலக்ஷணமும்,

9-ம் அடியினால்—"தியாயந் முச்சியேத பந்தநாத்" என்ற வாச்சியத்திற்கு லக்ஷியார்த்தமான மோன வித்தியென்னும் மௌன ஸமாதி லக்ஷணமும்.

கூறப்பட்டிருப்பதை "பிராணயம வித்தி" பூர்வகமாய் ஆய்ந்துணர்ந் தறிந்து கொள்க.

இதுவே பிராணயமத்தின் பூரணமான பலனும். இந்தப் பிராணயாமவித்தியைக் "கேவல கும்பக'மென்று சிவயோகதீபிகையில் ஸ்ரீ சதாசிவ யோகீந்திரர் சொல்லி யிருக்கிறார்.

"குர்யாத்' என்ற ஸ்மிருதிரத்நகர்த்தாவின் பிராணயாமலக்ஷணப்படி, "கேவல கும்பகம்" என்றால் என்னவென்று பார்க்கில், அஜபாத்யாநம் கேவலமாக அதாவது, பிரயத்நபூர்வமாயின்றி தானே தானாக வித்திப்பதாம். இது வாயுநிரோத அப்பியாஸ முதிர்ச்சியாலும் "தாரணத் தியான ஸமாதி" யென்னும் பிராணயம லக்ஷணங்கள் மூன்றும் பொருந்திய யோகஸம்யம வித்தியினாலுமே லபிக்க வேண்டுமென்றி வேறுவிதமாக அடையக் கூடியதில்லை. இது நிச்சயம், நிச்சயம். ஓம் தத்ஸத்.

———(:o:)———

FREE FROM BONDS.

The Autobiography of a Taluk Gumastah.

(Special for the Vivekachintamani)

* அவிழ்த்துவிட்ட கழுதை.

ஒரு தாலூகா குமாஸ்தாவின் சரித்திரம்.

(விவேகசிந்தாமணிக்கென்றெழுதப்பட்டது)

III—கௌமாரம்: உத்தியோகம்.

———:-:———

(221-வது பக்கத் தொடர்ச்சி)

என் தம்பி பி. ஏ. பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்த பொழுது பெண்களைப்பெற்ற எவ்வளவோ பெரிய மனுஷியர்களெல்லாம் என்னைக் காணவந்தார்கள் என்று முன்னமேயே

* கருடன், அனந்தன் முதலாகிய இவர்கள் நிருபாதிகஸித்திபெற்ற நித்தமுக்தர்களான 'நித்ய ஸூரிகள்' என்று சொல்லப்படுவர். புருஷஸூக்தம் பார்க்க.

* தன்னையறிந்து தன் தொழிலில் பிரவேசிக்கு மனம் நடையறியாது! அடக்கமும் ஸ்வதந்திரமும் பரஸ்பர விருத்தமான குணங்களல்ல!!

சொல்லியிருக்கிறேன். ஆனால் நான் என் தம்பியின் கலியாணத்தை என் கலியாணத்தைப் போல் தாறுமாறாக விடக்கூடாதென்று, அவனே பெண்ணைப் பார்த்துத் தன்னிஷ்டப்படி கலியாணம் செய்து கொள்ளும்படி விட்டு விட்டேன். அவனும் அப்படியே ஒரு பெரிய குடித்தனக்காரர் பெண்ணை நிச்சயம் செய்துகொண்டுவந்தான். இவ்வளவு சீர் செய்யவேண்டுமென்றாவது கையில் பணம் கொடுக்கவேண்டுமென்றாவது நானும் பேசவில்லை, என் தம்பியும் பேசவில்லை. ஆனால் அவன் பாட்டனார் தன்னுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி நூறு ரூபாய் பெறுமான பனாரீஸ்பட்டும் 100 ரூபாய்க்கு வெள்ளிப் பாத்திரங்களும் தீபாவளிக்கு ஆயிர ரூபாய்க்கு வைரக் கடுக்கன்களும் வாங்கிக் கொடுத்தார்.

என் தம்பிக்குக் கலியாணமாகி மூன்று வருஷங் கழித்து அவன் பி. எல். பரீக்ஷைக்குப் படிக்கும்போது அவனுக்குச் சாந்தி முகூர்த்தம் நடந்தது. அப்பொழுது நான் என் தம்பி மனைவிக்கொரு தங்கக் கொலுசு செய்து கொடுத்தேன். அந்தக் கலியாணத்தோடுகூடவே என் பெண்ணுக்கும் கலியாணம் நடந்தது. என் மாப்பிள்ளை பி. ஏ. பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தார். அவருக்கு நான்கு வேலி நிலம் குடித்தனமுண்டு. 500 ரூபாய்க்குச் சீர்தவிர வரதக்ஷிணையொன்றும் கொடுக்கவில்லை. அதையும் மற்றக்கலியாணச் செலவுகளையும் என் மாமனாரே "ஒப்புக்கொண்டு செய்ததுந் தவிர தீபாவளிக்கு என் மாப்பிள்ளைக்கு பைஸிகில்" என்று சொல்லப்பட்ட மிதிவண்டி யொன்றும் வாங்கிக் கொடுத்தார். என் பெண்ணையும் புருஷன் வீட்டுக்கனுப்பியாகி விட்டது. இப்பொழுது என் மாப்பிள்ளை தன் கிராமத்திலேயே விவசாயம் செய்துகொண்டு ஏழைப்பிள்ளைகளுக்கு இனாமாகப் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி யிருக்கிறார். தினம் இரண்டுமணி நேரம் தானே சில பாடங்கள் சொல்லிக் கொடுத்துக் கொண்டும் வருகிறார். என் மாமனார் 'பென்ஷன்' வாங்கிக் கொண்டது முதல் என்மகன் சென்னப்பட்டணத்தில் என் தம்பி வீட்டில் படித்துக்கொண்டிருக்கிறான். என் தம்பிக்கொரு பெண் பிறந்திருக்கிறது. என்வீட்டில் இத்தனை கலியாணங்கள் நடந்தும் ஒன்றையும் நான் மேற்போட்டுக்கொண்டு செய்யவேண்டிய அவசியமில்லாமற் போனமையால் எனக்கு உலக வியவகாரங்களிலுள்ள ஞானம் முன்சொன்ன அளவிலேயே நிற்கிறது. நான் முதல் முதல் என் மாப்பிள்ளையின் தலை தீபாவளியில் "பைஸிகில்"க் கண்டபொழுது சாந்திக் கலியாண மாவதற்கு முன் நடைவண்டி வாங்கிக்கொடுக்கவேண்டுமா? குழந்தை பிறந்த பிறகு வாங்கிக் கொடுத்தாற் போதாதா? அதுவும் இவ்வளவு விலையுயர்ந்த நடைவண்டி எதற்கு? சாதாரண மரத்தினால் செய்த சிறுவண்டி போதாதா?', என்று என் மாமனாரைக் கோபித்துக்கொண்டேன். என் மாமனாரும் மைத்துனியாரும் சிரித்தார்கள். என் மாப்பிள்ளை அதில் ஏறி சவாரிசெய்யக் கற்றுக்கொள்வதற்கு 2-மாத மாயிற்று. அதற்குள் முழங்கால் கணுக்கால்களில் இரண்டு மூன்று இடங்களில் காயம், வைத்தியருக்குப் பக்க ரூபாயும் சவாரி கற்[illegible]வருக்குப் பத்[illegible]யும் தக்ஷிணை. பிறகு தன் கிராமத்தில் சவாரி செய்யத்தக்க சாலைகளில்லாமையாலும், அப்படிச் செய்தாலும் மாடுகன்றுகள் முன்னே வெருண்டு கொண்டும், நாய்கள் பின்னே குரைத்துக் கொண்டும் ஓடுவதனாலும் அருவருப்புக் கொண்டு 250-ரூபாய்க்கு வாங்கின அவ்வண்டியை ஒரு வருஷத்துக்கெல்லாம் நூறு ரூபாய்க்கு விற்றுவிட்டார். இதில் என் மாமனாருக்கு வெகு வருத்தம். தன் மாப்பிள்ளைதான் இப்படியிருக்கிறார் என்றால் மாப்பிள்ளைக்கு மாப்பிள்ளையும் அவ்வாறே இருக்க வேண்டுமா என்றிருக்கலாம்.

இக்காலத்தில் நம் தேசத்தவர் புலியைப் பார்த்துப் பூனை குடிக்கொண்டதுபோல் மேற்றிசையாரைப்போல் நமக்கும் சுய அரசாட்சி வேண்டுமென்று மகாஜன சபைகள் கூடிப் பிரசங்கம் செய்கிறார்கள். சுய அரசாக்ஷி என்றால் என்ன அர்த்தம்? அவ்வளவு மேலான சுய அரசாட்சி பெற்ற மேற்றிசையாரையே "என்ன ஐயா சௌக்கியந்தானா?" என்றால், "ஏதோ அப்படி இப்படிந்தா னிருக்கிறோம். இன்னும் முற்றிலும் சுகப்பட்ட பாடில்லை. எங்கள் நாட்டுப் பொதுஜன சபைகளையும் அச்சபையாரை நியமிக்கும் விதத்தையும் முற்றிலும் சீர்திருத்தின பிற்பாடுதான் நல்லகாலம்" என்கிறார்கள். பொதுஜன சபைகளைச் சீர்திருத்துவதெப்படி? ஆயிரம் பிச்சைக்காரர்கள் சேர்ந்து ஒரு கஜானா ஏற்படுத்துவதெப்படியோ, அல்லது லக்ஷம் வெள்ளை நூல்களைச் சேர்த்து ஒரு சிவப்புச் சீலை உண்டாக்குவதெப்படியோ அப்படித்தான் ஒவ்வொருவனும் தன்னை ஆண்டுகொள்ளாத சுய ஆளுகை! கும்பல் கூடின உடனே சித்தித்து விடுமா? ஒவ்வொருவனிடத்திலு மில்லாத சீர்திருத்தம் பொதுஜன சபையில் எங்கிருந்து வரும்? மேற்குச் சீமைகளில் ஜனங்கள் ஏற்படுத்திய சபைகளை ஜனங்கள் சொன்னபடி கேட்கிறதில்லை என்று புகாராயிருக்கிறது. தேசத்து ஜனங்கள் முழுவதும் சேர்ந்து பேசுகையில் காத்தனே மந்திரியாக வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டிருக்க தனித் தனி ஒவ்வொரு ஊரிலுமுள்ளவர்கள் சேர்ந்து நிபமனம் செய்கையில் சாத்தனே தவறாமல் மந்திரியாகிறானும். அல்லது காத்தனே மந்திரியானாலும் மந்திரியாவதற்கு முன்னிருந்த காத்தன் வேறும் மந்திரியான பின்னிருக்கிற காத்தன் வேறுமாக விருக்கிறானும். "அடிமையாயிருந்த காலத்தில் யஜமானன் சோறு போட்டான். கதர் திரம் கிடைத்தபிறகு எங்களுக்குப் பட்டினி கிடந்து சாகச் சுதந்திரமுண்டு. எங்களை யாரும் ஏன் என்று கேட்க அதிகாரம் பெற்றவர்களல்ல' என்று வருஷத்தில் இரண்டு தடவை (தடவைக் காறுமாதம்) வேலையகப்படாமல் அலைகிறவர் சிலர். பகல் 8 மணி முதல் இரவு 10 மணி வரையில் மூச்சு விடாமல் தாயுங் குழந்தையுமாக அல்லது குழந்தையுந் தாயுமாக ஆயிரக் கணக்காய் ஒரே நச்சுவேலையைச் செய்திறப்பவர் சிலர். தங்கள் கூலியை உயர்த்த வேண்டுமென்று ஒரே கும்பலாய் வேலையைப் பாதியில் நிறுத்துபவர் சிலர். இவ்வாறு எங்கும் ஒரே குழப்பமாயிருக்கிறதென்கிறார்கள். பார்க்கப்போனால் அக்கரைக்கிக்கரை பச்சை தான்.

சுய அரசாட்சியின் லக்ஷியார்த்தம் ஒவ்வொருவனும் தனக்குத் தானே ராஜாவாயிருத்தலே. ஒவ்வொருவனும் கிறிஸ்து போன்றும், ஸாக்ரடீஸ் போன்றும், நந்தனார் போன்றும் புத்தர் போன்றும், வஸிஷ்டர் போன்றும் பீஷ்மர் போன்றும் பரிபூர்ணனாயிருக்க முயன்றாலும், அவனை ராஜாக்களாவது மந்திரிகளாவது, பொதுஜன சபைகளாவது, அச்சபைகளின் அங்கிராசனாதிபதிகளாவது ஆளத் தேவை என்ன? ஆளத்தான் இடமேது? ஒருவன் அம்மாதிரி இருக்கக்கூடுமானால் லக்ஷம் பேரு மிருக்கலாம். ஒவ்வொருவனும் தன்னையாளாமையினால் தான், பிறர் அவனை ஆள வேண்டியிருக்கிறது. தன்னைத் தானே யாள ஆரம்பித்த பின் பிறருமவனையாள இடமேது? அதாவது சர்க்கார் தன்னைச் செய்விக்கும் வேலையை ஒவ்வொருவனும் தானே பிரயோஜனமறிந்து செய்து விட்டால் என்றர்த்தம். அப்பொழுது தனக்கு வெளியே இருக்கும் சர்க்கார் தனக்குள்ளே ஆவாகனப்பட்டுப் போகிறது.

ஆனால் வாஸ்தவத்தில் ஒவ்வொருவனுக்கும் அரசிருப்பது அவனுக்குள்ளேயா வெளியிலா? "குருவிருப்பதுள்ளத்திலே மனக்கோணலறுப்பதுள்ளத்திலே" என்றார் பெரியோர். குருவே

அரசன்; குருவின் மூர்த்தமே ராஜாங்கம்; குருவை யறிந்தவனே யறியாதவனுக் கரசன். நான் யாரை என்னை யறியாமல் வணங்குகிறேனோ அவனே உண்மையில் எனக்கரசன். எவன் வார்த்தை என்னை யறியாமல் என் மனதைக் கவர்கிறதோ அவனே என் குரு ஒவ்வொருவனுக்கு மப்படியே. சுருக்கிச்சொல்லின் எங்கும் வியாபியாய் அகண்டாகாரனுப் சர்வ பரிபூரணனுயிருக்கும் 'நான்' என்பவனுடைய சங்கல்பத்திற்கு பங்கம் வாராமல் 'நவத்துவார' தேகியாகிய 'நான்' என்பவனை நடந்து கொள்ளச் செய்யவேண்டியே அரசு ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறே ஒவ்வொருவனும் சுயமாகவே நடந்துகொண்டு விட்டால் ஒவ்வொருவனும் தனக்குத்தானே ராஜாவாகிவிட வில்லையா?

தன்னை ஆளுகை என்பதில் பிறரை ஆளப் பிரயத்தனப் படாமையு மடங்கி யிருக்கிறது. ஏனெனில் மஹத்தான எனக்கு அன்னியமான 'பிறர்' என்று சொல்லக்கூடிய மனமே யில்லாமையாலும், அப்படியே யிருந்தாலும் அம்மனமு மஹத்திலேக்கியப் பட்டாலொழிய, அல்லது ஈர்க்கியப்பட விரும்பினுலொழிய, அதை அதற்கு அன்னியமாயிருந்து யாரும் ஆளமுடியாதென்கிற உண்மையினுலுமே ஆதலால் தன்னையறிந்து ஆளாதவனே பிறரை ஆள யத்தனிப்பான்.

இவ்வுலகில் ஒருவரை யொருவர் கெடுக்கவு முடியாது, கொடுக்கவு முடியாதென்பது பெரியோரறிந்த உண்மை. "இப்புவியில் ஒருவனுக்கொருவன் உதவமாட்ட வில்லையோ அல்லது மனந்தானில்லையோ தெரியவில்லை" என்றார் பேஸ்டலோஜி என்னும் மஹான். இதை யனுசரித்தே தான் "ராமனுண்டாலென்ன ராவணனுண்டாலென்ன" என்று நமக்குள் வசனமும் வழங்கி வருகிறது. அதாவது நல்லவர்களுக்கு எல்லா ராஜ்யமும் நல்ல ராஜ்யமாகவே யிருக்கும். கெட்டவர்களுக்கு எந்த ராஜ்யத்திலும் கெடுதியே விளையு மென்றர்த்தம். "மனிதனுடைய சுக துக்கங்களில் ராஜாங்கத்தார் ஆக்கவோ அழிக்கவோ கூடிய பாகம் எவ்வளவு அற்பம்?" என்றார் என் தோழராகிய ஆங்கில கவி.

ராஜாங்கம் என்பது ஒரு பாயஸ பாத்திரம். பாயஸ பாத்திரம் என்று பெயரிட்ட மாத்திரத்திலாவது அல்லது பாயஸம் வைத்திருந்த பாத்திரம் என்பதனுல் மாத்திரமாவது அதில் வைத்திருக்கும் உப்பு நீர் தித்திக்குமா? அல்லது வழக்கமாய் உப்புவைக்கிற பாத்திரத்தில் பாயஸத்தை வைத்தால் அது கரிக்குமா? பாயஸம் உள்ள அளவுக்கு அது தித்திக்கும். உப்பு உள்ள அளவுக்கு அது கரிக்கத்தான் செயும். அதற்குப் பாத்திரம் என்ன செய்யும்? "ஹிருதய சுத்தியும் புத்தித் தெளிவும் சகல புருஷார்த்த சித்திக்கும் முற்பட்ட காரணங்களே யொழியப் பிற்பட்ட காரியங்களாகா" என்று பேஸ்டலோஜி அனுபவத்தில் கண்டறிந்தார்.

ராஜாங்கத்தாரின் முக்கியமான வேலை, ஜனங்கள் எல்லா விதத்திலும் அதாவது தேக மனோ புத்தியாத்ம தத்துவங்களி லெல்லாம் தேர்ச்சியும் விருத்தியுமடைந்து புருஷார்த்த சித்தி பெறக்கூடிய சாதனங்களை ஏற்படுத்துவதே. இதற்கு அநுகுணமாகவும் இதற்கு வேண்டிய வளவுக்கு மட்டும்தான் அவர்கள் இதர வேலைகளில் பிரவேசிக்கத்தேவை. இவ்வாறு 'குடியுயரக் கோலுயரும்.' ஆனுல் இவ்வளவு முக்கியமான வேலையைச் செய்யக்கூடியவர் யார்? என்றால், ஞானிகளே. எவ்வளவுக் கெவ்வளவு ராஜாங்கத்தை ஞானிகள்வகிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு ராஜாங்கம் செழிக்கும். ஆனுல் ஞானிகள் இம்மாதிரி தங்களை உலகத்தில் சம்பந்தப் படுத்திக்கொள்ள முன்னுக்கு வந்து நிற்பார்களாவென்றால், அவர்கள் அவ்

வளவு சுலபமாய்க் கிடைக்க மாட்டார்கள் என்பது வாஸ்தவந்தான். ஆயினும் அவர்களை எப்படியாவது தேடிப்பிடித்துத் தங்களுக்கு உதவி செய்யக் கோருவது ராஜாங்கத்தாரின் கடமை. அப்பொழுது லோகோபகாரத்தை உத்தேசித்து அவர்களும் சம்மதிப்பார்கள். முற்கால ராஜாக்கள் ரிஷிகளைப்பேணி அவர்களுக்குத் தொண்டு செய்துவந்த காரணமிதுவே. "எந்த ராஜ்யத்தில் உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத்தை வகிக்க சம்மதமற்றிருக்கிறார்களோ அந்த ராஜ்யமே நன்றாய் ஆளப்பட்ட ராஜ்யம்" என்றார் லாக்ரடீஸ் மஹானின் பிரதம சிஷ்யர்.

இவ்வாறு ஜனங்களின் புத்தித் தெளிவையும் விசாலத்தையும் ராஜாங்கத்தார் நாடாவிட்டால், ராஜாங்கத்தாரின் கஷ்ட நிஷ்டூரங்களை உணர்ந் துதவிசெய்யும் சக்தி ஜனங்களுக் குண்டாகிற தில்லை. இதன் பலனைப் பாருங்கள்! வரி வசூல்செய்யும் உத்தியோகஸ்தனைக் கண்டால் ஜனங்கள் ஒளிகிறார்கள். "சாராயக்கடைக்காரனுக்குக் கொடுக்கும் பணத்தைக் காட்டிலும் சர்க்காருக்குக் கொடுக்கும் வரி வீண்செலவென்று" எண்ணுகிறார்கள். "ராஜதந்திரம்" என்கிற பதம் ராஜாங்கத்தை நடத்தும் முறை என்கிற மேலான முதலர்த்தத்திலிருந்து 'ஒரு தேசத்தாரை மற்றொரு தேசத்தார் ஏமாற்று முறை, அல்லது, ஒரு கக்ஷியாரை எதிர்கக்ஷியார் ஜயிக்கச் செய்யும் ரஹஸ்ய ஏற்பாடுகள்" என்றர்த்தப்பட்டு வருகிறது.

ஆனுல் ஜனங்கள் புத்தி விசாலித்து மனம் பலப்பட்டு வருவாராகில், ராஜாங்கத்தின் பரோபகார வேலைகளையெல்லாம் தூண்டுதலின்றித் தாங்களே செய்வார்கள். அப்பொழுது ராஜாங்கத்துக்கு வேலையும் செலவும் சிரமமும் கவலையும் குறையும். ஜனங்கள் ஞானமார்க்கத்தின் பெருமையை யறிந்துவிட்டால் ஞானத்தைத் தாங்களே தேடுவார்கள். பிறரையும் சன்மார்க்கத்தி லிழுப்பார்கள். அப்பொழுது காய் முதிரப் பூவு திருவதுபோல் பஹிரங்க ராஜாங்கம் அந்தரங்க ராஜாங்கமாகிவிடும். இதுவே உண்மைபான சுய அரசாக்கி. மற்ற தெல்லாம் போலி அரசாக்கி அல்லது தற்சுய அரசாக்கி.

இதனுல் எவ்வளவுக்கு ஜனங்களைச் சன்மார்க்கத்தி லிருத்தவும் ஸ்வதர்மத்தை யனுஷ்டிக்கச் செய்யவும் சட்டங்களி னுதவி தேவையில்லாம லிருக்கிறதோ அவ்வளவுக்கு ராஜாங்கம் கிருதகிருத்திய மாயிற்று என்றும், எவ்வளவுக்கு கச்சேரிகளும், வக்கீல்களும், சம்பளம்வாங்கு முத்தியோகஸ்தர்களும் குறைகிறார்களோ அவ்வளவுக்கு ராஜாங்கம் சாபல்யமாயிற்றென்றும் முன்சொன்னபடி சுபிக்ஷமடைந்ததென்றும் அறிந்து கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

Easy Lessons in Economics.

Lesson VII.

குடிவாழ்க்கை.

VII பாடம்

வேலைக்காரர்களின் தன்மை.

வேலைக்காரர்களின் கை சாதுர்யம், புத்தி நுட்பம், முன் யோசனை, விவேகில் தொழிலை நடத்தும் நேர்மை, கவனம், இலாபத்துக்குதவும் சாதனங்களை தெரிந்தெடுக்கும் திறமை, இலாபத்துக் குதவாதவைகளை நீக்கும் கூர்மை போன்ற காரணங்களினுல் தேசத்திற்கு தேசம் செல்வம் மாறும். சில தேசங்களில் மட்டும் இவ்விதமான குணங்கள் மனிதருக்கு இயற்கை போலமைந்து வம்ச பாரம்பரியமாய் நடந்துகொண்டு வருகின்றன. சில விடங்களில் தொழிலாளிகள் தங்கள் இளம்பருவத்தில் மேற்கொள்ளும் தக்க பயிற்சியால் மேற்கண்ட நுட்ப அறிவுகளைக் கைக்கொள்ளு

கிறார்களென்றும் சொல்லுவது பிசகாகாது. தொழிலாளிகள் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து வசிப்பதாலும், தொழில் நடப்பதை இளம் பருவத்தில் பலமுறை கவனித்துப் பார்ப்பதாலும், முயற்சியின் விசேஷம் அதிக மில்லாமலே பலர் தொழில்களை எளிதில் கற்கின்றனர். தொழிற் சாலைகளில் பலர் சேர்ந்து வேலை செய்வதையும், இயந்திரங்களைப் பிரயோகிப்பதையும், வேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய் செய்யுமுதவியையும், எப்பொழுதும் பிரத்யக்ஷமாய்க்காணும் சிறுவனுக்கு அதுவே ஒருவிதப் பயிற்சி யென்பதில் தடையென்ன? இதனாலன்றோ நம்முன்னோர்கள், ஜாதி யென்றும் ஜாதிகளுக்கு வெவ்வேறு தொழில்களென்றும் ஏற்படுத்தினார்களென்று எண்ணக் காரணமா யிருக்கின்றது. அவ்வேற்பாட்டின் பயனை ஆராயப்புகின்.—கம்மாளனுக்குப் பிறந்த பிள்ளை இயற்கையாகவே அத்தொழிலுக்கு அவசியமான சரீர குணங்களை யமையப் பெற்றிருப்பதன்றி, இளம் பருவத்தில் தினந்தோறும் தன் தகப்பன் செய்யும் தொழிலைக் கவனிப்பதினால் அத்தொழிலை சிரமமின்றிக் கற்றுக் கொள்ளுகின்றான். தென்னை, பனை போன்ற மரமேறும் சாணார் தொழிலை அவனது பிள்ளைகள் எளிதில் கற்றுக்கொள்ளுவது போல், துணி வெளுக்கும் வண்ணான் அத்தொழிலை கற்க முயல்வதும், வண்ணான் தொழிலை சாணான் கற்கமுயல்வதும் கஷ்ட சாத்தியமானதே. இதுவே பலதொழில்களின் உண்மையாகும்.

மேலும் தொழில் செய்வோர் எத்தேசத்திலும் ஒரே தன்மையுள்ளவர்களன்று. சில தேசத்தவர் 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்பதை மனதிலிருத்தித் தங்களுக்குப் பலாதிய திரவியத்தைக் கொடுக்கும் பசு அந்நிய தேசமென்றே கருதி நடக்கின்றனர். அங்கிலேயரையே இதற்குத் தகுந்த திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். இவர்கள் செல்வமொன்றையே உத்தேசித்து தமது நாட்டையும் உற்றார் உறவினரையுமிழந்து தூரதேசங்களுக்குச் சென்று திரவியத்தைச் சேகரிக்கும் தொழில்களைக் கைப்பற்றுகின்றனர்.

இங்கிலாந்திலுள்ள ஒருவனுடைய ஐந்து குமாரர்களில் ஒருவன் அமெரிக்காவிலுள்ள கன்னடாவில் இருப்புப்பாதை இஞ்சினியாகவும், இரண்டாவது குமாரன், ஆஸ்திரேலியாவில் கிறிஸ்து மதப் பாதிரியாயும், மூன்றாவது மகன் இந்தியாவிலுள்ள காப்பித் தேயிலைத் தோட்டங்களின் சூபரின்டெண்டாகவும், நான்காவது பிள்ளை, தென்னாப்பிரிகாவிலுள்ள காலனி முனையில் போர் வீரனாகவும், கடைசியானவன், சீனாவிலுள்ள 'ஹாங்காங்கு' என்ற பட்டணத்தில் வைத்திபனாகவு மிருக்கிறார்களென்றால் ஆங்கிலேயரின் திரவிய நாட்டத்தை என்னவென்று கூறுவது? இந்துக்களாகிய நாம் தரைமார்க்கமாய் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பல கஷ்டங்கட்குட்பட்டு பிரயாணஞ் செய்து கடலைக்கண்டால் நடுநடுங்கி உயிரை வெல்லமெனக் கருதி நின்று விடுகின்றோம். ஆங்கிலேயரோ தரைப் பிரயாணம் கஷ்டமான தென்றும், கடற் பிரயாணமே எளிதானதென்றும் யாதொரு கஷ்டமு மின்றிச் செல்லலா மென்றும் கருதுகிறார்கள். ஐரோப்பியர்களுக்கு சாதாரணமாகவே இக்குண முரியதாயிருந்தாலும், அவர்களில் ஆங்கிலேயர் இவ்விஷயத்தில் மற்றவர்களைக் காட்டிலும் தேர்ந்தவர்கள். ஆங்கிலேயர் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும், சுருங்கக்கூறின் உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் குடியேறி ஆங்காங்கு செல்வவிருத்தியைச் செய்துகொண்டு சிறப்பாக வாழ்கின்றனர்.

நம்முடைய தேசத்தார் இவ்விஷயத்தில் ஆங்கிலேயருக்கு நேர் எதிர்க் கட்சியில் நிற்கின்றனர். தடாகம் என்கிற கிராமத்தில் 250-அடி

கிணறுதோண்டி குடிதண்ணீரை யடையவேண்டும். அதுவும் உப்பு நீரே. இக்கிராமத்தில் கிடைக்கப்பட்ட பழங்கனி முதலியவைகளோ வென்றால் சப்பாத்துக்கள்ளிப் பழத்தைத்தவிர வேறொன்றும் கிடையாது. இச் சப்பாத்திக் கள்ளிகளுக்குள் கொடிய விஷப்பாம்புகளோ அநேகம். குருடிமலையை யடுத்த ஊராதலால் கோடைகாலத்தில் உஷ்ணம் சகிக்கமுடியாது. காற்று வாட்டமில்லாத கிராமமாதலால் எப்பொழுதும் ஜனங்கள் பலவிதவியாதியால் வருந்திக் கொண்டே இருப்பார்கள். அவ்வளவு கஷ்டங்களிருந்த போதிலும், வேறொரு அயல் கிராமத்திலுள்ள ஒரு தனிகன், "நீங்கள் ஏன் இங்ஙனம் வருந்துகின்றீர்கள், நான் என்னுடைய செழிப்பான கிராமத்தில் குடியிருக்க வீடும் சாகுபடிசெய்ய பூமியும், வேறு செலவுகளுக்கு இலவசமாக ரொக்கமும் கொடுக்கிறேன், வாருங்கள்" என்று வருந்தியழைத்தாலும் தங்கள் வீட்டையும் ஊரையும் விட்டுப் போகத் துணியார்கள். இப்படியே இத்தேசத்தாரும் தாங்கள் நாட்டையும் சுற்றத்தாருடன் கூடிவாழ்வதையும் கைவிடார்கள். கையில் பத்துப் பணமுண்டானால் அது கையைவிட்டுப் போகும் வரையில் வேலைசெய்ய சம்மதியார்கள். கொடுப்பாருண்டானால் கடன்வாங்கியாவது ஜீவிப்பாரேயன்றி நிலைத்து வேலை செய்து பிழைக்க வழியறியார்கள். பிறருக்காக வேலை செய்வதாயிருந்தால் எவ்விதமாகவாவது ஒப்பேற்றி விடவேண்டுமென்று நினைத்து வேலையை முடிப்பது வழக்கமேயன்றி, அதைத் திருந்தச்செய்ய வேண்டுமென்ற எண்ணம் நம் தேசத் தொழிலாளிகளுக்குக் கிடையாது. வயிற்றுக்குக் கிடைத்தால் பரமார்த்தங் கிடைத்ததுபோல் திருப்தியடைந்து ஜீவிப்பார்கள். திருப்தியடைவது உத்தமகுணமே யென்றாலும் செல்வவிருத்திக்கு ஒத்ததாகாது. சுகமென்றால் வேலையின்றி யிருத்தலென்றே நம்மவரின் எண்ணம், நம் தேசத்தவருள் வேலை செய்ய மனமில்லாத சோம்பேரிகள், பிச்சை எடுப்பதே தங்கள் தொழிலென்று கூறிக்கொண்டு திரிகிற கூட்டத்தாருமுண்டு. அன்றன்று காலக்ஷேபத்திற்கு போதுமான வேலைகிடைத்தால் போதுமென்று வெளியே புறப்பட்டு அதனால் கிடைக்கும் காசைக்கொண்டு அன்றைப் பிழப்பை நிறைவேற்றுவது நம் தொழிலாளிகளில் பலருடைய வழக்கம். பெருத்ததும் மேலானதுமான நோக்கமில்லாதவர்களுக்கு, உள்ளது போதுமென்று திருப்திபடவது பொருந்துமேயாயினும் தேச செல்வ விருத்திக்கு அது பெரும் தீமையே.

சுகங்களை நாடுங் குணமும், சிறுபிணிகளை நீக்க முயற்சியும், சுகத்தைக் கொடுக்கும் பொருள்கள் வேண்டுமென்ற ஆசையும், மேன்பட்ட அன்னபானாதிகளும் உடையும், தட்டுமுட்டுகளும் வேண்டுமென்ற விருப்பமும், ஆபரணாதிகளிலும் நேத்திரானந்தத்தைக்கொடுக்கும் பதார்த்தங்களில் இச்சையும், கல்வியில் பிரீதியும் தேசத்திற்கு தேசம் மாறுபடுவதுமல்லாமல், ஒரு தேசத்தில் கூட எப்பொழுதும் ஒரே நிலைமையிலிருக்கு மென்று செல்லக்கூடவில்லை.

T. C. வேங்கடரமணையர்.

—:-:—

LALITAMBAL.—VI.

"Thorough!" or "Through and Through!"

லளிதாம்பாள் சரித்திரம்.

VI. நல்வழியுபதேசம் : "நாய்வழிகாட்டல்."

"மோனமென்பது ஞானவரம்பு."

"நாய் நல்லவழி காட்டும், பூனை பொட்டை வழி காட்டும்" என்பது பழமொழி. வழியென்பது நடைபாதை. நடைபாதை யென்றால் நடக்கும் பாதையென்பது ஸ்தூலப் பொருளென்பர். பொருள் ஒன்றே. ஆனால் உபாதி பற்றி ஸ்தூலம், சூக்ஷமம், காரணமென்று மூவகைத்தாகச் சொல்லப்படும். இம் மூன்றும்

பதார்த்தமே. மரத்துக்கு வேர் மூலம் என்பது போல் பதத்துக்கு தாது மூலம். அடிமரத்திலிருந்து கப்புக்களைகளுண்டானதுபோல, பதத்திலிருந்து வாச்சிய முண்டாயிற்று. கப்புக்களைகளிலிருந்து பூவும் காயுமுண்டாக மரத்தைத் தன்னுள்வித்தாக அடக்கிக்கொண்டிருக்கும் பழம் உண்டாவதுபோல், வாச்சியார்த்தத்திலிருந்து லக்ஷியார்த்தம் உண்டாயிற்று. இம்மூன்று அர்த்தமும் (பதார்த்தம், வாச்சியார்த்தம், லக்ஷியார்த்தம் என்கிற மூன்றும்) சேர்ந்தது "யதார்த்தம்." அர்த்தபேதம் தேஹாத்திரியங்களின் அபிமான பேதத்தால் உண்டானது. உதாரணமாக:—

1. ஸ்தூல தேஹாபிமானி ஜீவன் ஆகையால் அவன் பதார்த்தத்தையே நாடி நிற்பான்.
2. சூக்ஷ்ம சரீரத்துக் கபிமானி ஈசுவரன் ஆகையால் அவன் வாச்சியார்த்தத்தையே நாடி நிற்பன். ஆனதால்தான் ஈசுவரனை "ஸ்தோத்ரப்பிரியன்" என்று சொல்லித் துதிக்கிறது வழக்கமாயிருக்கிறது.
3. காரண சரீரத்துக்கு அபிமானி பரப்ரஹமம் ஆகையால் அவன் லக்ஷியார்த்தத்தையேநாடி நிற்பன்.

இந்த லக்ஷியார்த்தம் வித்திக்கக் கற்பதே கல்வி. ஆகையால்தான் கற்றோரைக் "கண்ணுடையர்" என்று சொல்வது. மற்றவர்களுக்கெல்லாம் கண்ணில்லையோ என்றால், அது கண்ணல்ல "புண்" என்கிறார் பொய்யா மொழிப்புலவர்.

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்று சொல்லியிருப்பதின் உண்மையிதுவே!

இக்காலத்தில் படிப்பெல்லாம் சோற்றுப் படிப்பாய் முடிந்து விட்டது. மனிதன் தன்னை வபிறவளர்க்கப் பிறந்தவனாக நினைக்கிறான். "உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே" என்ற திருமூல தேவர் வாக்கு இக்காலத்தவருக்குப் பொருந்தாது. "உடம்பை வளர்த்தேன் ஊன் வளர்த்தேனே" என்று நமன் வந்தழைக்கும்போது நாதியற்றுப் புலம்புவர்.

"இந்துக்கள் பூர்வந் தொட்டு, படிப்பை வித்யாரம்பமென்று விஜயதசமியன்று ஐந்து வயதிலேயே ஆரம்பித்து குழந்தைக்கு "ஹரிஃ ஓம்" என்று லக்ஷியப்பொருளாம் "வித்தில்லா மாம்பழத்தை" க்கொடுத்து, "ஆதியனாதி அகாரணகாரணி"யாக வுள்ள அஷ்டாக்ஷரப் பொருள் வித்திப்பதே படிப்பின் பயனாமென்ன, வித்யாரம்பம் செய்யுங் குழந்தைக்கு "ஹரிஃ-ஓம்-நமோ-நா-ரா-ய-ணா-ய-வித்தம்" என்று அழியாதவித்தையாம் அக்ஷராப்பியாஸம் செய்துவைப்பர். ப்ரஹ்லாதன் இதையே கடைப்பிடியாகக் கொண்டு அதன் லக்ஷியார்த்தத்தை நாரதருடைய உபதேசபலத்தால் உள்ளபடி உண்மையாய் கிரஹித்துக்கொண்டு தனது பள்ளிப்பிள்ளைகளுக் கெல்லாம் "ஓம் நமோ நாராயணாய" என்கிற அஷ்டை சுவரியக் களஞ்சியத்தின் கருப்பொருளை கருணைமிகுதியால் வாரி வாரி வழங்கினான். ஆகையால் "ஹரிஃ ஓம்" என்று ஆரம்பித்த வித்யையின் லக்ஷியார்த்தம் வித்திப்பதே வித்யாப்பியாஸத்தின் நோக்கமும் முடிவுமாம். ஆகையால் வழியென்பது "ஹரிஃ" முதல் "வித்தம்' வரையில், அதாவது, "அடிதுவக்கி முடிவரையில்" உள்ள உண்மையான உளவு மார்க்கத்தைக் குறிக்கும். இந்த உளவுமார்க்கம் "யோக மார்க்கம்" என்றும் சொல்லப்படும்.

"அடிதுவக்கிமுடிவரையிலாறுமாநிலங்கடந்து
அப்புறத்தில்வெளிகடந்தஆதியெங்கள்சோதியை
யுபதேசிக்கண் அமுதருந்தியுண்மைஞானஉலகையுள்
உச்சிபட்டிறங்குகின்றயோகிநல்லயோகியே."

என்ற இந்த உளவுமார்க்கமறிந்து வழிநடந்து திரும்பியவர்களான மஹான்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"வழி" யென்பதற்கு "நடைபாதை" யென்று பதார்த்தம் சொல்லிவிட்டு "உளவுமார்க்கம்" என்று சொல்லும் யோகமார்க்கமே அதனால் குறிக்கப்பட்டது என்று சொன்னால் அது எப்படி நம்பத்தக்கது? என்று பல்லோரும் கேட்கலாம். நமது சிஷ்ய மணிக்கமான "தீர்த்தம் பஞ்சகந்த சாஸ்திரிகளும்" ஆதியில் இப்படித்தான் மயங்கினார். இவர் மயக்கமறிந்து 'வாயால் சொன்னால் வழுவிவிடும்' என்று மோன குருமூர்த்தியாய் அவதரித்த ஸ்ரீநாராயணகுருஸ்வாமியவர்கள் அவருக்கு மௌனதீக்ஷை கொடுத்து அந்த தீக்ஷையின் முடிவில் "நாக மாணிக்கம்" என்று சொல்லும் வாழும்பாம்பின் சிரோபூஷணமான "நாகரத்னத்தை"க் கொடுத்துப் பூஜிக்கச் சொன்னார்.

"பாம்புக்குப் பாலை கொடுத்தாலும் அது விஷத்தையே கொடுக்கும்" என்பது உலகத்தார் சொல்லும் பழமொழி. இதுதான் எழுத்தறியாது "எழுத்தறி தத்திபாம் கல்விப்பழக்கம்" பெற்றவர் காணும் பேதஞானம். அந்த விஷம் தானே பின்னும் உருண்டு திரண்டு ஒளிதிகழ் மாணிக்கமாமென்பதை யறியார் பேதஞானமுள்ளவர்கள். நாகரத்னத்துக்குப் பாம்பின் விஷத்தை யெடுக்கும் குணமுண்டு என்பதை அவர்கள் அறியார். பதார்த்தமட்டும் பார்ப்பர் புலனறிவாளர். வாச்சியார்த்தத்தையு முணர்வார் விஜ்ஞான சித்தர்கள். லக்ஷியார்த்தத்தை யுணர்வார் ப்ரஜ்ஞான புருஷர்கள். ஆகையால் பாம்புக்குக் கொடுத்த பால் விஷமானாலும் அந்த விஷமே நிச்சலப்பட்டு நிற்கில் நாகரத்னமாகு மென்பதை யறிந்தவர் "முழுதும் வழியறிந்து முழுவழியும்தான் நடந்த தீரர்கள்." அதேமாதிரியாக வழியென்றால் "நடைபாதை" யென்பது பதார்த்தம். "பிராணன் இயங்கும் (நடக்கும்) பாதை" யென்பது வாச்சியார்த்தம். பிராணன் நடக்கும் பாதையை "நாடி" யென்பர். இதையே இக்காலத்து மேற்றிசைச் சாஸ்திர விற்பன்னர் "Conduction path" என்று சொல்லக் கற்றிருக்கிறார்கள்.

"நாடிகளூடேபாய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடு தருமாம் வீரைந்து.—என்பதை

யுளவறிந் துணர்ந்து, அந்த உளவு வழியில் நடக்கத் துணிந்து,

"நாடிவழக்க மறிந்து செறிந் தடங்கி
நீடொளி காண்ப தறிவு."—என்றபடி

நாடிவழிபற்றி நடந்து அறிவு என்னும் வழி முடிவுக்கு வந்தவர் லக்ஷியார்த்தம் கண்ட "உளவறிவாளர்" என்னப்படுவர்.

"உளவறிவாளர்" என்றாலும் "யோகி" யென்றாலும் ஒன்றே.

'முற்றும் வழியறிந்து முழுவழியுந் தான் நடத்தல் ஒருவழி. இதுதான் "நல்வழி." நாய் போகு மார்க்க மெல்லாம் திருக்கு மூத்திரம் விட்டுக்கொண்டுபோய் பிறகு அந்த வாசனை மோப்பத்தால் போனவழி கண்டறிந்து மீளவும் திரும்பக்கூடுமான சக்தியுடைய தாகையால் இந்தவழியை "நாய்மார்க்கம்' என்றும் "நல்லவழி" யென்றும் சொல்வது பெரியோர் வழக்கம். இதற்கு "மர்க்கட சுபாவம்" வேண்டும். அதாவது கொடுத்ததோர் குறியைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொள்ளும் ஸம்யம சக்திவேண்டும். குரங்குக்குட்டி தாயின் வயிற்றைக் கட்டிக்கொள்வது போல ஆனந்தத்தாயாம் அறிவுதன்னை விடாது பிடித்தற்பிடி "மர்க்கட சுபாவம்" என்னப்படும். இந்த அறிவு ஒன்றைமட்டும் விடாது பற்றிநின்றால், அது கொண்டு "நாடி வழக்கமறிந்து" பின்னர் "செறிந்தடங்கி"—அந்த நாடிகள் நிறைந்த பூரக நிலையில் பொருந்தியிருந்து அதுவே கேவல கும்பகமான 'நிச்சலநிலையில்' "சலிப்பற நின்று" "ஆதியனாதி" யாகவும் "அகாரணகாரணி" யாகவும், "சோதியசோதி" யாகவும், "சுகபர

சுந்தரி" யாகவும், "மாது" என்னும் ஸ்ரீ சப்த மாத்ரமாகவும், "சமாதி" யென்று சொல்லும் "ததேவார்த்தமாத்ர நிர்ப்பாஸமாக" ஸ்வரூப சூந்யத்தில் விளங்கும் அரூபாத்மக அபின்ன சக்தியாகவும், "மனோன்மணி"யாகவும், (மன மிறந்த உன்மனுவஸ்தை யாகவும்) "மங்கலி" யென்னும் சிவசக்தியைக்கிய ஸ்வரூபமாகவும், இப்படி ஆதிமுதல் அந்தம்வரையில் அடிமுடி நடு வென்னும் பேதமின்றி ஓரே ஸ்வயம்பிரகாசமாக விளங்குவதால் "நீடொளி" யென்று சொல்லப்பட்ட நித்தமுத்த சுத்தப்பொருளாம் ஸ்வயம்பிரகாச லக்ஷியத்தை சாக்ஷாத்கார தரிசனமாகக் "காண்பது" (அதாவது அபரோக்ஷானுபூதியாக அறிவது) ஆகிய "அறிவு" என்னும் அத்வைதஞானப் பழம்பொருளை அனுபவ ரீதியாக அறியாமலறிந்து அறிவுமயமாகலாம். இப்படி அறிவு மயமானபின் "போனவழி தானறிந்து மீளவும் திரும்பக்"க் கற்றுக்கொள்ளலாம். இதுதான் "நாய்வழி" யென்று சொல்வது. தர்மராஜனைப் பற்றிச்சென்ற நாய் மற்றவரெல்லாம் வழியில் விழுந்துபோக மார்க்கட சுபாவம் பற்றித் தான்மட்டும் தர்மராஜனைப் பற்றித் தொடர்ந்ததால் கடைசியில் ஸ்வர்க்க ஸாம்ராஜ்யம் பெற்று பின்னும் தர்மராஜனைக் காக்கவென்று அறிவுருக்கொண்டு நரகஞ் சென்று அவரையும் ரக்ஷித்தது. ஒருசித்தன் சிவனைப்பார்த்து "ஸ்வாமி! நீர்போனவழி யெல்லாம் அடியேன் நாய்போல் கூடவர அனுக்கிரகிக்க வேண்டு"மென்றான். "சரி" அப்படியே ஆகுக! வென்று அனுக்ரகித்தார். "சித்தன் போக்கு சிவன் போக்கு" என்று சொல்லிக்கொண்டே அவன்சிவன் போனவழியெல்லாம் கூடவே சுற்றித்திரிந்தான். சிவனும் ஆடியபுத்து அம்பலத்தமர்ந்தார். சித்தன் பகவானைத் தரிசித்துப்பின்னும் ஒரு வரங்கொடுத்து இந்த நாய்க்கு அனுக்ரகம் செய்ய வேண்டுமென்றான். "என்ன?" என்று கேட்டார் பகவான்.

"நான் முன்னேபோக பகவான் நாய்போல் கூடவே வரவேண்டும்!" என்றான்!

"என்னடா அது! இவன் விடுகிற வழியாக வில்லையே!" என்றன்னி பகவான் "அப்படியே ஆகுக!" என்றனுக்ரகித்தார்.

சித்தன் உடனே பகவான் ஆடி யமர்ந்த வெள்ளியம்பலம் விட்டுப் புறப்பட்டு ஜகத்ரக்ஷணார்த்தம், தான் சிவனைப்பற்றிப் போன வழியெல்லாம் திரும்நெடந்தான். பகவானும் கூடவே வந்தார்! ஆதலால் தான் அவருக்கு "அன்பின் வலையில் பட்டோன்" என்கிற திருநாமம் வந்தது.

இப்படியாக நாய்வழி போனவர் சுயநலம் பாரார்; பரநலம்(பரோபகாரம்)ஒன்றையே கருதுவார். இப்படி பரநலம் கருதும் சருத்தே கருணையென்பது. நாயினிடத்தில் இது நன்றியறிவாக விளங்குகிறது.

இப்படியாக "நாய்வழி" யென்பதை வாய் திறக்காமல் தானே குருவானவர் சிஷ்யனகத்திற்புகுந்து மௌனோபதேசஞ்செய்து மனமறவிளக்கினார். இந்த ரகஸியத்தை யுணர்ந்த ஔவைப் பிராட்டியார் "போனமெண்பது ஞானவழிப்பு" என்று சுட்டிச் சொல்லி சும்மாவிருந்தார். ஓம்தத்ஸத்.

Sita-Manonmani.

சீதா—மனோன்மணி.

Our King Emperor.

(Special for the Viveka Chintamani)

நம் சக்கிரவர்த்தி.

சீதா:—மனோன்மணி! நமது மெத்தையின் மேல் நிசாகரன் தனது இன்பம்தரும் கிரணங்களால் வெள்ளித் தகடுபோன்ற ஜியோத்ஸனையை பரவச் செய்திருக்கிறான். தென்றலும் மிக இன்பமாக உத்தியான வனத்திலுள்ள சம்பங்கி, மல்லிகை, முல்லை, பவழமல்லிகை, பன்னீர் முதலான புஷ்பங்களின் வாசனைகளை வஹித்து வீசிக்கொண் டிருக்கிறது. இத்தகைய வமையத்தில், நாம் ஆங்கு சென்று, உட்கார்

லும் நம் இந்தியாவிற்கு வந்திருக்கிறார்களாமோ?

சீதா:—ஆஹா! 1905 வருஷத்தில், இவர்கள், வேல்ஸ் சிற்றரசரும், சிற்றரசியு மாயிருந்த பொழுது, இந்தியாவில் விஜயம் செய்து பம்பாயில் வந்திறங்கினார்கள். இறங்கினதுமன்னியில், நீடித்த காலம் தங்கியும் நின்றார்கள்.

மனோன்மணி:—நீடித்த காலமென்றால் எவ்வளவு காலமிருக்கலாம்?

சீதா:—சுமார் ஐந்தாறு மாதங்களிருக்கலாம். மற்றப இடங்களிலிருந்ததைக்காட்டிலும் அதிக காலம் இங்கு தங்கினதினின்று நீடித்த காலமெனக் கூறினேன்.

மனோன்மணி:—சரிதான்! அவர்கள் இங்கு தங்கின பொழுது, தனக்கு இந்திய பிரஜைகளிடத்துள்ள அன்பைக் காட்டினதுண்டாமோ!

சீதா:—ஆஹா! ராஜதம்பதிகளிருவரும், சென்ற விடங்களிலெல்லாம், எவ்வித பிரஜைகளிடத்தும், மிக்க அன்பையும் ஆதரவையும் காட்டினார்கள். பிரஜைகளும், ராஜபக்தியுடன், மனப்பூர்த்தியான நல்வரவை அவர்களுக்களித்தார்கள்.

மனோன்மணி:—அவர்கள் இந்தியாவினின்று, நேரே, தங்கள் தேசம் சென்றார்களாமோ?

சீதா:—இல்லை! நேரே தங்கள் தேசம் போகாமல், ஆப்பிரிக்காவிலுள்ள ஈஜிப்து தேயத்தில் தங்கி அத்தேசத்தியஅரசனாகிய, "கெடிவ் என்"னும், பிரபுவைப் பார்த்துவிட்டு, தங்களூர் சென்றார்கள்.

மனோன்மணி:—இந்தியாவினின்று திரும்பிச் சென்றபிறகு மறுபடி அவர்கள் தேசயாத்திரை இதுகாறும் செய்யவில்லை போலும்

சீதா:—அப்படிக்கு இல்லை! அப்படிக்கு இல்லை! 1903-ம் வருஷத்தில், நம் ஜியார்ஜு சக்கிரவர்த்தி, மறுபடி கனடா தேசத்திற்குச் சென்றார். மறுபடி 1910-ம் வருஷத்தில் தென் ஆப்பிரிக்காவில் பார்லிமெண்டு யூனியன் என்னும் ராஜாங்க சங்கத்தை முதல்முதல் கூட்டச் செல்லத் தயாராயிருந்தவர், ஏழாவது எட்வர்டாகிய தனது தந்தை காலஞ்சென்றதால் நின்றுவிட நேர்ந்து, அவருக்குப் பதில், அவரது சிற்றப்பராகிய "கன்னாட்டு ட்யூக்" அனுப்பப்பட்டார்.

மனோன்மணி:—இவர் எப்பொழுது ஆங்கில தேசத்து ராஜா வாகவும், நம் சக்கிரவர்த்தியாகவும் ஆனது?

சீதா:—தனது தந்தை இறந்துபோன 1910-ம் வருஷம், மேமாதம் 6-ம்தேதி அன்றுதான்.

மனோன்மணி:—சரிதான்! இவரை ஐந்தாவது ஜியார்ஜு என்று கூறுவது எதனால்! அது எதைக் குறிக்கிறது?

சீதா:—இவர்க்கு முன் ஜியார்ஜு என்று நாமதேயம் பெற்றிருந்த நான்கு அரசர்கள் இங்கிலாந்தில் அரசாண்டிருந்ததால், அவர்களிலிருந்து இவரைப் பகுத்தறிய சரித்திரங்களில் அவ்வாறு கூறியுளது இங்கு 'ஐந்து' என்பது குறிப்பதெல்லாங் கூடி, ஆங்கில தேசத்தில், இவர்க்கு முன், இவரது நாமதேயத்துடன் கூடிய அரசர்கள் நான்குபேர்கள் அரசாண்டிருக்கிறார்கள் என்பதே.

மனோன்மணி:—நம் தற்காலத்திய சக்கிரவர்த்தி போல், இவரது தகப்பனாரும், பாட்டியாரும் கூட இந்தியாவின் மேலும், இந்திய குடிகள் மீதும், பற்றுள்ளவர்களா யிருந்தார்களாமோ?

சீதா:—ஆஹா! கிஞ்சித்தேனும் தடையன்னியில் விக்டோரியா சக்கிரவர்த்தினி அம்மணி, நல்லரசி யென்று அன்புப் பேரிட்டு அழைக்கப்பட்டது மன்னியில், அவர்களுக்கு இந்தியாவின் மீதிருந்த வாஞ்சையினால், ஓர் இந்து கனவானை தனக்கு உருது பாஷைகற்பிக்க ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களது முதல் புதல்வர் எட்வர்டு சக்கிரவர்த்திக்கு இந்தியாவின் மீதும் இந்திய பிரஜைகள் மீது மிருந்த பற்றினால் தான், தனது அருமைப் புதல்வர் வேல்ஸ் சிற்றரசரையும், தனது மருமகளாகிய, அவரது மனைவி வேல்ஸ் சிற்றரசியையும், இந்தியாவுக்குப் போய், அத்தேசத்தையும், ஆங்குள்ளகுடிகளையும் பற்றித் தெரிந்து அதையும், அக்குடிகளையும் நேசிக்கும்நிமித்தம், அனுப்பினார். அவர்களும் அப்பொழுது வந்த பொழுது மாத்திரமேயன்றி, இதுகாறும் நானுவிதமாய், தங்களுக்குள்ள பற்று, தங்க

னது தந்தை, பாட்டியார்களுக் கிருந்ததை விட கிஞ்சித்தாகிலும், குறைவுள்ளதல்லவென்று காட்டி யிருக்கிறார்கள்.

மனோன்மணி:—ஆஹா! அப்படியா! இவ்விஷயங்களைக் கேட்டு மிக்க சந்துஷ்டி அடைந்தேன். இந்த நமது ராஜ தம்பதிகள் போன்ற சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினிகள், இந்தியாவிற்கும், இங்கிலாண்டு தேயத்திற்கும் கிட்டற்கரியதாதலால், நாம் அவ்விருவர்களுக்கும் தீர்க்காயுளைக் கொடுக்குமாறு கடவுளைப் பிரார்த்தித்துச் செல்வோமா?

சீதா:—அங்ஙனமே செல்வோமென்று கூறி வாழி, வாழி நமது சக்கிரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும், நீடூழிவாழ்க பல்லாண்டு வாழ்கவென்ம, ஆசிகூறி கடவுளைப் பிரார்த்தித்து, அவர்களது, நற்குணங்களைத் துதித்துச் சென்றார்கள். ஓம்தத்ஸத்.

உ

ஸ்ரீ லலிதாம்பாயைநமஃ

சென்னை விவேகசிந்தாமணிப் பத்திராதிபர்

மகா-ா-ள-ஸ்ரீ

C. V. சாமிநாதையர் சந்ததி

நீடூழிவாழ்கவென்ற

நறுவெழுத்தலங்கார

இருச்சொல்லுவமை விடைப்பொருளும்

அப்பொருளின்

ஆதியந்த அக்ஷரங்களினின்றவதரித்த

63. அவதானப்பொருளும்

உடைய

வித்தியாவிநோத

விகேதை வினாவிடை.

சொண்டிச்சிந்து.

தெந்தினத்தினதினனு-தினனதின

தெந்தினத்தினதினதினதினனு-தெ

1 மாவளர்கோயிற்பூசை—செய்வோன்பேரொன்று
வளர்கடப்பப்பெயரொன்றுநாடொன்று . .
பாவளர்சபாவப்பெய—ரொன்றுகின்னரன்
பரியாயப்பேரொன்றுசேனைப்பேரொன்று
பூவளர்போதனைப்பேரொன்று—யானைப்பே
[ரொன்று
புண்யகட்டனைப்பேரொன்றுபூமிப்பேரொன்று
கோவளர்கன்னிதிப்பேர்—தனிலொன்று
குருப்பேரொன்றுவேலைவர்கோன்பேரொன்று
(தெந்தி)

2 வாசனைப்பண்டமொன்று—ஓடுக்கமென
வதங்கும்பேரொன்றுபட்டணப்பேரொன்று
நேசமுடன்சொல்வதற்கு—திரியாக்ஷாம்
நிகழ்த்துமிப்பொருள்முற்றுந்தானறித்து
மோசமின்றிநடுவில்வரும்பீஜாக்ஷரத்தை
முற்றுமெடுத்துவரிசைக்ரமமெழுதி
சூசனையுடன்பார்க்க—"சாமிநாதையர்"
தூய"சந்ததிநீடும்வாழ்க"வென்றோதும். (தெந்தி)

இருச்சொல்லுவமை விடைப்பொருளின்
ஆதியந்த
அக்ஷரப்பொருளின் வினா.

---

3 சொன்னயமிகுஞ்சோடச—பதங்கள்தனில்
தொக்கினின்றவாதியந்தவக்ஷரங்களாற்
பன்னகபூஷணன்பேரொன்று—சிவபே
[ரொன்று
பங்கமிலாச்செல்வத்தின்பெயரொன்று
வண்ண(பே—மை)யென்பதொன்று—மன்னன்
[பேரொன்று
வணக்கத்தின்பெயரொன்றுமகள்பேரொன்று
சன்னதத்துவப்பேரொன்று—விடாயழைப்பேர்
தனிலொன்றுகாந்தியின்பெயரொன்று (தெந்தி)

4 சுருதியின்பெயரொன்று—பொறுமையெனச்
சொல்லும்பெயரொன்றுதீர்க்கதர்சியொன்று
மருவில்லாகான்கின்பெயர்—தன்னிலொன்று
வல்லதாம்புப்பேரொன்றுமிருகமொன்று
திருவளர்புவிமீது—இரண்டெழுத்தாய்த்
திரியுமப்பொருளினின்றவதரித்த
பொருளறுபத்துமூன்றும்—இதனடியிற்
புனிதமுடனேயான்புகலுகிறேன். (தெந்தி)

இருச்சொல்லுவமை விடைப்பொருளின்
ஆதியந்த அக்ஷரங்களினின்றவதரித்த
63 அவதானப்பொருள்களின் வினா.

---

5 மாதவபிரகஸ்பதி—மகன்பேரொன்று
வளர்மோக்ஷப்பெயரொன்றுபுல்லொன்று
தாதவிழுமஷ்டமா—சித்தியிலொன்று
சாலிவாகனன்பெயர்தன்னிலொன்று
பூதலத்திற்சேக்கிரப்பே—ரதனிலொன்று
புண்யதர்க்கைபேரொன்றுபுலவர்பேரொன்று
வேதன்புத்திரனென்று—சாசப்பெயர்
விள்ளுபொருளொன்றுகபர்தம்மாபேரொன்று
(தெந்தி)

6 நன்மதிப்பெயரொன்று—இனிமைப்பெயர்
நண்ணுபொருளொன்றுகுளப்பெயரொன்று
தன்மமுடிப்பெயரொன்று—வஞ்சப்பேரொன்று
தாரணியில்நற்பசுவின்பெயரொன்று
பொன்மயநன்னாடொன்று—தீர்த்தத்திலொன்று
போக்குவரவுக்குரியதெருப்பேரொன்று
சன்மசகோதரிபேரொன்று—கடவுள்பெயர்
தன்னிலொன்றமுதத்தின்பெயரொன்று. (தெ)

7 யேதசந்தஸுப்பேரொன்று—ஏகாந்தப்பேர்
விள்ளுபொருளொன்றுசிநேகப்பேரொன்று
போதஞானிபெயரொன்று—கந்தகப்பேர்
பொருளொன்றுபமுனையாற்றின்பேரொன்று
மாதவகாசிபன்மனைவி—யொன்றுமூன்றின்பேர்
வழங்கும்பொருளொன்றுராமமியொன்று
பூதலத்திற்பிரீதியின்பேர்—தன்னிலொன்று
புண்ணியவாராதனைப்பெயரொன்று. (தெந்தி)

8 வனப்பூண்டின்பெயரொன்று—வளரும்பெண்தே
வதைபெயரொன்றுமகன்பெயரொன்று
கனமிகும்மஹத்துவப்பே—ரதனிலொன்று
காசினியிலாண்மகன்பெயரொன்று [ரொன்று
தனப்பெண்ணின்பெயரொன்று—பூவைஞப்பே
தருமவான்கடையேழுவள்ளலொன்று
தினமொளிர்மூக்குத்தி—யதனிலொன்று
திவ்வியபறவைப்பெண்பெயரொன்று (தெந்தி)

9 நடற்பெயரொன்றுதருமம்—கொடைப்பே
காரணபள்ளிவாசற்பெயரொன்று [ரொன்று
புடவியிற்றமயன்மனை—வியின்பேரொன்று
புண்யசந்தான்பேரொன்றுகப்பேரொன்று
நிடமிருளினியின்பே—ரொன்றுதாய்பெயர்
செப்புபொருளொன்றுதாயைப்பெற்றோன்பே
[ரொன்று
படர்விதப்பெயரொன்று—விருப்பப்பெயர்
பதமொன்றுமானமுடையோன்பேரொன்று
(தெந்தி)

10 கானகமிருகமொன்று—முளிவனொன்று
கதிரொப்படிசெய்நெற்களப்பெயரொன்று
தீனமில்லாவறிவின்பெயரொன்று
திட்டத்தின்பெயரொன்றுவேதமுணர்ந்த
வானவன்குலத்துதித்தோன்—பெயரிலொன்று
வரையறுத்துக்கருமிப்பொருள்தெரிந்து
நானிலமும்புகழ்படைத்த—செந்தமிழ்க்கவி
நாவலரேவிடைசொல்லுவீரே. (தெந்தி)

(இன்னும்வரும்)

உ

The Late Sister Nivedita.

ஸ்ரீ நிவேதிதை யம்மாள்.

—(:-:)—

மிஸ் மார்கரெட் நோபிள் என்னும் பேர் பு[illegible] ஆங்கிலேய மாது ஸ்ரீ-விவேகாநந்த ஸ்வாமிகளுக்கு சிஷ்யையாகி ஸ்ரீ-நிவேதிதை யம்மாள் என்னும் தீக்ஷாநாமம[illegible] அப்படியே இந்த பரதக்கண்டத்[illegible] மாத்ருக்ஷேத்ரமாகக் கொண்டு இந்தியாவுக்குத் தன்னை அர்ப்பணம் செய்துழைத்து வந்தது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அந்த அம்மாள் மாது ஸ்ரீ அன்னி பெஸன்ட் அம்மையாரைவிட இந்தியாவையும் இந்தியர்களுடைய ஜாதிமத ஆசார ஒழுக்கங்களையும் உள்ளக்கண்ணால் அறிந்து களங்கமற்ற தன்மனஸில் பட்டதை உள்ளதுள்ளபடி உண்மைக்கே யொப்பிதமாயிருந் தெழுதி வந்தாள். ஆகையால் அவருடைய அபிப்பிராயங்களும் கிரந்தங்களும் ஹிந்துக்களுக்கும் கூட அருமையாயிருந்தது. இந்த அப்பாள் சென்ற மாசம் டார்ஜிலிங்குக்குப் போயிருந்தவிடத்தில் வயிற்றுப்போக்கு மாதிரி ஏதோ உபாதிகண்டு தன்கர்மம் முடிந்ததால் தமது குருவோடு ஐக்கியமானார். நல்லவர்கள் இப்பொல்லா வுலகில் நீடித்திருக்கக் கருதார் போலும், ஸ்வாமி விவேகாநந்தரும், அவருடைய மேற்றிசைச் சிஷ்யர்களில் முக்கியமானவரும் சிலாக்கியமானவருமான ஸ்ரீ நிவேதிதை யம்மையாரும் பத்திம வயதில் தாமே இத்தேகத்தைத் துறந்து சென்றனர். ஆனால் அவர்கள் புகழுடம்பு பெற்று வாழ்ந்திருக் கின்றமையினால் அவர்களுடைய வாழ்நாள் அவர்கள் தேஹத்தோடு முடிந்துவிட்டதாக எண்ணுவது பிசகு. அவர்கள் இன்னும் புகழுடம்போடு ஜீவித்திருக்கிறார்களென்றே சொல்ல வேண்டும். அதுவே உண்மை.

Agricultural Machinery.

வியவசாய யந்திரங்கள்.

சென்னையிலுள்ள மெஸ்ஸர்ஸ் ஸாமுவேல் அண்ட் கம்பெனி அவர்கள் வியவசாய யந்திரங்கள் பல தருவித்து விற்பதில் இந்தியாவின் பல [illegible] விர்த்திக்கு அவசியமான யந்தி[illegible]களைத் தெரிந்தெடுத்து இந்தி[illegible] குடியேறுகமாகும்படி விற்று வருகிறார். இந்த கம்பெனியின் தலைவர் காலஞ்சென்ற தனகோடிராஜு அவர்களின் புத்திரர்களில் ஒருவர். இவர் யந்திர தந்திரங்களில் நன்றாகப் பழகிப் பிரவீந்தி பெற்றவர். இவருடைய அனுபவத்தைக் கொண்டு இந்தியாவில் உபயோகிக்கச் சாதகமான பல யந்திரங்களைத் தருவித்து விற்பதுமன்றிப் பொருட்காட்சி சாலைகளில் அவைகளைக் காட்டி அவைகள் வேலை செய்யும் விதத்தையும் அவைகளின் உபயோகத்தையும் பலரும் அறியப் பரீக்ஷித்துக்காட்டி வருகிறார். மைசூரில் நடந்த தசரா பொருட்காட்சியில், இந்தக் கம்பெனியார் காட்டிய யந்திரங்கள் மிகவும் மேலாக மதிக்கப்பட்டதன்றி, இவர்களுடைய யந்திரங்களின் தேர்ச்சிக்காக 4 தங்கப் பதக்கங்களும், 4 வெள்ளிப் பதக்கங்களும் இவர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்டன.

இவர்கள் காட்டிய வியவசாய யந்திரங்களில் முக்கியமானவை,—நீர்ப் பாய்ச்சல் யந்திரங்கள், தாளறுக்கும் யந்திரங்கள், நில சாகுபடி சம்பந்தான யந்திரங்கள். இவைகளன்றி வீட்டிலும் வேலைச் சாலைகளிலும் உபயோகிக்கத்தக்க மாவரைக்கும் யந்திரங்கள், கையினால் வேலைசெய்யத் தக்கனவும், யந்திர வியக்கத்தால் வேலைசெய்யத் தக்கனவும் பலவுள. கரும்பாலைகள் பல அதி துட்பமான தந்திர யுத்தியினாலமைக்கப் பட்டிருந்தன. காய்ச்சின கரும்பு ரஸத்தைச் சர்க்கரையாகச் செய்வதற்கான யந்திரமொன்று. மிகவும் வேலைப்பாடமைந்தது விருந்தது. நெல்லுக் குத்தும் யந்திரங்கள், எண்ணெயினால் இயக்கப்பெறும் (அடக்கமான) யந்திரங்கள் பற்பல இவர்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. அவற்றில் முக்கியமானது பெட்டர் கம்பெனியாருடைய இஞ்சின்களாம்.

Coronation and Christmas Holidays.

மகுடாபிஷேக, கிறிஸ்த்மஸ் விடுமுறை நாட்கள்.

1911 ஆண்டில் பின்வரும் தினங்கள் பொதுவான ராஜாநாட்களாக கவர்ன்மெண்டாரால் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கின்றன:—

1911 ஆம் டிஸெம்பர் மீ 7உ வியாழக்கிழமை.—மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியவர்கள் ராஜகோலத்தோடு டில்லி நகர்ப்பிரவேசம் செய்யும் நாள்.

டிஸெம்பர் மீ 12உ வெள்ளிக்கிழமை.—"இம்பீரியல் தர்பார்" நடக்கும் நாள். இன்றையதினம் மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியார் முடிசூட்டுவைபவம் இராஜ்ஜிய தர்பார் மூலமாய் பஹிரங்கப்படுத்தப்படும்.

டிஸெம்பர் மீ 25, 26, 27, 29, 30ந்தேதிகள் கிறிஸ்த்மஸ் விடுமுறை நாட்கள்-

பொதுராஜாநாட்களாக விளம்பரப்படுத்தப்படாத பின்வரும் நாட்களில் (1) லீகல்ஸ்ட்மஸ் ஆபீஸ், (2) ரிஜிஸ்ட்ரேஷரி ஆபீஸ், பேபர் கரன்ஸி ஆபீஸ், (3) ஜெனரல் ஸ்டாம்பாபீஸ் இவைகளைத்தவிர மற்ற ஆபீஸ்களெல்லாம் விடுமுறை நாட்போல் மூடப்பட்டிருக்கும். மேற்கண்ட ஆபீஸ்கள் மட்டும் காலை 11-மணிமுதல் மத்தியானம் 1-மணி வரையில் திறந்திருக்கும்.

1911 ஆம் டிஸெம்பர் மீ 23உ சனிக்கிழமை.

1911 ஆம் ,, 28உ வியாழக்கிழமை.

புதுவருஷப்பிறப்பு ஞாயிற்றுக்கிழமையாதலால் அதற்காக மறுநாள் திங்கட்கிழமை விடுமுறையளிக்கப்படும்.

கிராமங்கள்:—செங்கற்பட்டு ஜில்லாவில் கிராமங்களின் உபயோகத்துக்காக அக்கிராமங்களைச் சுற்றியுள்ள காடுகளில் சிலவற்றை கிராமத்தார் வசம் ஒப்புவித்து அவர்களே அவைகளைப் பார்த்துக்கொண்டு வரவேண்டிய தென்கிற ஏற்பாடு புதிதாகப் பரீக்ஷார்த்தமாய் செய்து பார்த்தார்கள். இப்பொழுது அந்த மாதிரி தென்கன்னடத்திலும் கிராம பஞ்சாயத்துகள் மூலமாக கிராமத்தைச் சுற்றியுள்ள சில காடுகளை கிராமத்தார் உபயோகத்தின் பொருட்டு அவர்கள் விசாரணையில் விட்டுவர ஏற்பாடுசெய்ய உத்தரவாகியிருக்கிறது.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1911ஆம் டிசம்பர் மீ, விரோதிகிருதுஆம் மார்கழி மீ [சஞ்சிகை. 9.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are beiug sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lalita Publishing Co., Sole Agents and Managers

M. K. Narayanaswami Iyer, B.A. B.L.

Hon. Secy,

Vivekachintamani Pub. Committee.

33

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலனகபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புரும் பாழ்நரகிற் க்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாட அது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான். கைச்சாற்றிது. ஓ.

In the Horns of a Dilemma.

தர்ம்மசங்கடம்.

——:-:——

"My heart is weighed down with the vice of faintness; my mind is confused as to Dharma. I ask thee which may be the better—that tell me decisively. I am thy disciple, suppliant to thee; teach me."

"For I see not my way out of this anguish which withers up my senses; Not even the sovereignty of earth and heaven could dispel this grief of mine which weighs down my heart."—Arjuna to Sri Krishna.

——(:-:)——

தர்ம்மம் தலைகாக்கு மென்பது உண்மை. ஆனால் தர்ம்மத்தை யுணரஉள்ளறிவு வேண்டும். உள்ளறிவு தோன்ற மனத்தின் கள்ளம் கரைய வேண்டும். "கள்ளம் கரையக் கரைய உள்ளம் உருகும்." உள்ளம் உருக உருகக் கள்ளம் கரைந்து மனம் தெளியும். மனத்தெளிவுண்டானாலன்றி தர்ம்மஸ்வரூபம் விளங்காது. தர்ம்மம் விளங்காதபோது செய்கர்ம்மம் இன்னதென்று திடமாகத் தோன்றாது. திடமற்றபோது மனது சஞ்சலத்தில் ஆழ்ந்து தவிக்கும். அர்ச்சுனன் போர்க்களத்தில் செய்கர்ம்மம் தெரியாது மனம் தத்தளித்தபோது அவன் நா வரண்டு போயிற்று. கையிலேந்திய காண்டீபம் நழுவி விழுந்து விட்டது. சங்கடம் பொறுக்கமாட்டாமல் மூர்ச்சித்துப் போனான்.

இப்படிப்பட்ட அவஸ்தைக்குத்தான் "தர்ம்ம சங்கடம்" என்று சொல்லுகிறது. இதை உலக வழக்கில் ஒரு அழகான பழமொழியினால் சொல்லிக் காட்டுகிறார்கள். ஒரு முடவன் ரோட்டில் நடந்து போகவேண்டி நடக்கமாட்டாமல் தவிக்கிறான். ஒரு எருது வண்டி யிழுத்துக்கொண்டு நடக்க மாட்டாமல் நடந்து போகிறது. இந்த அவஸ்தையில் வண்டியோட்டுகிறவன்பாடு சங்கடமாய் முடிகிறது. முடவன் தன்னை வண்டியில் ஏற்றிக்கொண்டு போகவேண்டிக் கெஞ்சுகிறான். எருது நடக்கமாட்டாமல் தவிக்கிறது. "ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம்: இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்!" இந்த தர்ம்மசங்கடத்தில் அவன் என்னசெய்வான்?

தர்ம்மசங்கடத்தில் கர்ம்மபரிபாகம் அறிந்தவர்களே உண்மையாக உள்ளபடி ஒழுகவல்லவர்களாவர். ஆதலால்தான் அர்ச்சுனன் யுத்தகளத்தில் தனக்கு நேர்ந்த தர்ம்மசங்கடத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானை நோக்கி:—

"யானிப்பொழுது ஸ்வாதீனமற்ற மனமுடையவனாகவும் தர்ம்முணராதவனாகவு மிருக்கின்றேனாதலால், தக்காலம் யான் செய்யத்தக்க காரியம் யாதென்றறியக் கூடாதவனாயிருக்கிறேன். இந்த தர்ம்மசங்கடத்தில் யான் செய்யத் தக்ககாரியம் யாதென்றுஉம்மையக்கேட்கிறேன். எது கீர்த்தியைத்தரத்தக்க காரியமோ அதனை யெனக்குக் கட்டளையிடுக. யான் உமக்குச் சீஷனாயிருந்து கேட்கிறேன். உம்மைச் சரணமடைந்து நிற்கிறேன். ஆதலின் என்னை (இந்த தர்ம்மசங்கடத்திலிருந்து) ரக்ஷியும்" என்று கேட்கிறான். பின்னும் இவன் மனக்குழப்பத்தைத் தான் சரணடைந்த குரு மூர்த்திக்கு பின் வருமாறு சொல்கிறான்:—

"என் இந்திரியங்களைச் சோஷிக்கச் செய்யும் (உலர்த்தும்) இத்துக்கமானது எந்தக் காரியத்தைச் செய்தால் நிவிர்த்தியாகுமோ அத்தகைக் காரியம் எனக்குத் தோற்றவில்லை. பூமண்டலாதிபத்தியமும் தேவேந்திர பட்டமும் இத்துயரை யொழிக்க வல்லவையாகா."

"மர்ம்மப்பாசொல்வதைக்கேள்தர்ம்மவழிபற்றிநில்லாய்
கர்ம்மப்பாகொல்வதுன்னைக்கனமோகம்கெடுப்பது
[உங்காண்"

என்று பஞ்சதசீஸ்தவத்தில் சொல்லியிருப்பதையும் ஆய்ந்துணர்க. நல்வழிபற்றிச் செல்லும் ஜீவனுக்கு தர்ம்மசங்கடத்தைப் போல் உயிர்வதை செய்யும்வன்மைவாய்ந்தது வேறொன்றில்லை. துவந்துவாகாரமான (எதிர்மறை நிறைந்த) இவ்வுலகில் தர்ம்மாதர்ம்மத்தைப்போல் துவந்துவம் விளைப்பது வேறொன்றில்லை. ஆத்ம்மாநாத்ம விவேகம் ஒன்றே தர்ம்மாதர்ம்மத்தைப் பகுத்துணரவல்லதாம். ஆத்ம்மாநாத்ம விவேகம் சம்பூர்ண்மாக நிறைந்தவன் யாரோ அவனே ஞானி. அவனே குரு. அவனே அறியாமை யென்னும் இருளைப் போக்கவல்ல ஞான சூரியன். ஆகையால் ஓம் தத் ஸவிதுர் வரேணியம் பர்கோ தேவஸ்ய தீமஹி, தீயோயோந ப்ரசோதயாத்" என்று சொல்லும் மஹா மந்திர்ம்மானது குருவருளைச் சிந்திக்கும் உபாயம் கூறுவதால் அதற்கு "காயத்ரீ"—அதாவது, தன்னை ஜபிப்பவர்களைக் காப்பாற்றுந் தன்மையுடைய தென்கிற பேர் வந்தது. எவனொருவன் தம்ர்ம சங்கடத்தி லகப்பட்டுக்கொண்டு அலையிலகப்பட்ட துரும்புபோல் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்து தவிக்கிறானோ அவன் குருவருளைச்சிந்திக்க வேண்டியது. அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ண பகவானைக் கேட்டதுபோல், தன் சங்கடத்தைச் சொல்லி சீஷனாயிருக்கிறேனென்று சரணடைந்து தன் சஞ்சலத்தை நிவர்த்தித்து ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள வேண்டியது. அப்படி உண்மையாய் உள்ளபடி குருவையணுகிச் சரண்புகும் சிஷ்யனை எவ்வாற்றானும் குரு காப்பாற்றக் கடமைப்பட்ட வராயிருக்கிறபடியால், காயத்ரீ மந்திரமாகிய சற்சீஷனுடைய உண்மையான விண்ணப்பம் ஒரு போதும் அநாதரவு செய்து தள்ளப்படுவதில்லை யென்பது சத்தியம்.

நேற்று (அமாவாசையன்று) ஒரு புருஷனும் பெண்சாதியும் சண்டை போட்டுக் கொண்டார்கள். "பந்தம்பறி யுற்சவத்தில்" உபாதேவி மஹேசுவரனை முச்சந்தியில் விட்டுப் போய் தனதுகலைகளாகிய பந்தம் பறிகொண்டு சுவாமியை இருட்டில் விட்டதுபோல, பெண்சாதி தன் குடித்தன சாமர்த்திய மாகிய கலைகளைப் பிடுங்கிக் கொண்டு குடிகாரனாகிய (போதை நிறைந்த) தன் புருஷனைத் தெருவில் விட்டுவிட்டாள், — அவன் குடி மயக்கத்தில் செய்வழி யொன்றுந் தெரியாது தன்னஹத் திருந்தநாயகி தன்னை யறுத்து ஒறுத்தது சகியாமல், சோகமோகத்திலாழ்ந்து மனோசஞ்சலத்தில் மூழ்கினவனாய் அலைகடற்றுரும்புபோல் அவன் உள்ளத்துணர்வை வெளியிட்டது மிகவும்உருக்கமாயிருந்தது. அவன் எழுத்தறிவில்லா மூடனாகையால் வார்த்தைகள் அவனுக்கு அதிகமாக அகப்படவில்லை. ஆனால் பச்சைக் குழந்தை "அம்மா" என்கிற ஒரே வார்த்தையைக் கொண்டு தன் அழுகுரலாலும் சந்தோஷத்தாலும் நவரஸ மொழுகத் தன்னுள்ளக் கருத்தை வெளியிடுவதுபோல், 'அந்தக்குடிகாரனை புருஷனும்' தான் சந்தியில் விடப்பட்டதை நினைத்து மனம் புழுங்கி குடி மயக்கத்தில் வேறு ஒன்றும் தோன்றாது "வாடா, வாடா; போடா போடா!" என்னும் இந்த வார்த்தைகளைக் கொண்டு பலுவனிழுத்துப் பல்லவி பாடியது பார்க்க வேடிக்கை யாயிருந்தாலும் உள்ளத்தை உருக்குவதாயிருந்தது. ஏனெனில் அர்ச்சுன விஷாத யோகத்தில் ஸஞ்சயன் தனது சொல்வன்மையினால் கண்ணில்லாத திருதராஷ்டரனுக்கு உள்ளத்திற்படச்சொல்லிய தர்ம்மசங்கடத்தாலுண்டாகும் சோர்வு அத்தனையையும் அந்த ஏழை வேலைக்காரன் நடுத்தெருவிலிருந்து அரங்கேற்றி விட்டான்.

" வாடா வாடா! வாடா வாடா!
போடா போடா! போடா போடா!
வாடா வாடா! போடா போடா!
வாடா போடா! போடா வாடா!"

இந்த வார்த்தைகளை அவன் குடிமயக்கத்தில் தன்னை மறந்து தன் மனம் ஊஞ்சலாடினபடி உண்மையாய்த் தெரிவித்து அதனாலுண்டான வருத்தத்தை அவன் குரலாலும் முகக்குறியினாலும், கையினால் மாரையடித்துக் கொண்டும் பின்னும் பலவித அபிநயங்களோடு இராகம் போட்டுப்பாடிவருந்தியது உண்மை

யுணர்க்தோர்க்குப்பார்க்க பரிதாபமாயிருந்தது! ஆனால் அவன் குடிமபக்கத்தில் அந்த வருத்தத்தையுணராமல், மனம் தவித்ததை வாய் வெளிவிட்ட மாத்திரமாய்க் கதறினதால், அது எல்லாருக்கும் சிரிப்புக்கிடமாயிருந்தது. இப்படியாக ஸ்ரீமந்நாராயணவதாரமாகி யவதரித்து கீதாவாக்கியமாக வெளியிட்ட பகவத்கீதை "யென்னும் அமிருத வசனம்" அருச்சுனன் முதல் அற்பஜீவனாகிய எல்லாரிடத்திலுமுண்மையாக விளங்குகிறதென்பது ஸ்பஷ்டமாக நிதரிசனமாயிற்று. இப்படியே பகவத்கீதையில் விளக்கிய ஒவ்வொரு அர்த்தமும் நித்திய தத்துவத்தை விளக்கி சுத்தமனத்தினற்கு துக்க நிவிருத்தியாகிய முக்தியை யளிப்பதால், அது 'உபநிஷத்து ரூபமானது" என்றும், "பரப்பிரஹ்ம வித்தை" யென்றும் பிரஸித்திபெற்று பிரஸ்தானத்திரயங்களில் ஒன்றாகக் கொண்டாடப்படுகிறது.

போக்கு வரத்தில்லாப் புண்ணியனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவாகிய பகவானவர், மாயையின் வசப்பட்டவனாய் "வாடா வாடா! போடா போடா!" என்று காமத்தால் ஏவப்பட்டபடி, வரத்துப் போக்கான பிறப்பிறப்புக்கு ஆளாகி கால சக்கரத்திலகப்பட்டு அக்கடற்றரும்பு போல் அவதிப்படும் ஜீவசைதன்னியனான அருச்சனனுக்கு உபதேசித்த உண்மைகள் யோகசாஸ்திரத்தின் அதிரகஸமன்றி வேறில்லை யென்று அனுபவ ஞானத்தாலுணர்ந்து அச்சாஸ்திர வுண்மைகளை 14-நாள் வாழ்வாகிய ஜீவகாலத்தில் நடக்கும் பாரதயுத்தத்தில்(Battle of Life) சோக மோகத்தால் வருந்தும் பரிபக்குவ சீவனுக்கு உபதேசார்த்தமாக "துன்பந் துடைக்கும் தூயவழியாக" ப்போதித்துக் கடைத்தேறச் செய்ய வேண்டியது மஹத்துக்களுடைய கடமையாம்.

இது எந்த யுகத்திலும் கால பேதமின்றி லத்தியமேயானாலும் வர்ச்சாமார்ஜ்ஜலியம் மலிந்த இக்காலத்தில், வினவுகிறவர்களுடைய அதிகார யோக்கியதை யறிந்து போதிக்க வேண்டும். ஏனெனில் அநதிகாரிகள் உண்மையை உணரார்! அன்றி, அவர்கட்குப் போதிக்கும் வித்தை அவர்களது மடைமையால் பங்கமுறும்.

"மறைபொருளாலோதியவோர்மந்திரத்தைவெளியிடாதே
நிறைபொருளாலர்ச்சித்தோர்க்குநியமவிதியின்றேகூறு
குறைபொருளார்க்குண்மைபோதிற்குற்றம்வருமந்நற்றம்
[பேரமால்
இறைமேலானைபுலம்பாதேயென்றியம்பினானென்னம்பான்
[வாகை."

என்பது தேவவாக்கா யிருப்பதுமன்றி பகவானும் அபக்குவிகளுக்கு உண்மை யுபதேசம் செய்வது கூடாதென்றே ஆஜ்ஞாபித்திருக்கிறார். வித்தைக்கே யிப்படியென்றால், வித்தையின் அனுபோகமான போகம் மிகவும் பரம ரகஸியமானதால், அதற்குக் கேட்பானேன்!

"தபஸ்விப்யோதிகோயோகீஞாநிப்யோபிமதோதிகஃ
கர்மிப்யஶ்சாதிகோயோகீதஸ்மாத்யோகீபவார்ஜுந."

"அர்ச்சுன! யோகியானவன் தபஸிகளைக் காட்டிலும், சாஸ்திரார்த்தபண்டிதர்களைக்காட்டிலும், கருமிஷ்டர்களைக் காட்டிலும் அதிகன். அந்தக் காரணத்தால் நீ யோகமுடையவனாகப் பெறு!"—என்று பகவான் அர்ச்சனருக்கு உபதேசித்திருக்கிறார். யோக சாஸ்திரத்தில் முதற்படியானதும் கீதா சாஸ்திரத்தின் முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டதுமாயுள்ளது "அர்ச்சுன விஷாதயோகம்."

ஜீவன் தர்மத்தைக் கலைப்பிடித்து நடக்கத் தீர்மானித்து அந்த தர்ம்மவழியில் நடந்து வருகையில் நேரும் தர்ம்மசங்கடத்தால், தனது மோகம் (மனக்குழப்பம்) பொறுக்கக் கூடாமல் சோகத்தில் மூழ்கி எவனொருவன் அலைகடற்றுரும்பாய் அவதிப்படுகிறானோ, அப்படி அவதிப்பட்டு அதனால் இந்திரியங்களெல்லாம் சோஷிக்கப்பெற்ற அவன் குருவருளைச் சிந்தித்து குருவைத்தேட அருகனாகிறான். மற்றவர்களெல்லாம் அநருகர்களேயாம். முக்தியின் லக்ஷணம் துக்க நிவிருத்தியேயாம். முக்தியிலனுபவம் சுகானுபவமே. திரிபுடி ரஹிதத்திலேயே தன்னந்தனியனாயிருக்கும் தனிமுதல் அனுபவம் வித்திப்பதால் 'திரிபுடி நியாயம்' அபரோக்ஷாநுபூதியில் லயித்துப்போ மென்பதே பூரணானுபவம் பெற்ற ஸ்வாநுபூதிச் செல்வர்களின் அநுபவமாம்.

"மாத்தைமறைத்ததுமாமதயானை
மாத்தில்மறைத்ததுமாமதயானை
பாத்தைமறைத்ததுபார்முதற்பூதம்
பாத்தில்மறைந்ததுபார்முதற்பூதம்."

அறிவானும் அறிபொருளும் ஒன்றேயாகின் எல்லாம் அறிவுமயமாய் விளங்கும். திரிபுடியொடுங்கிய அந்த அறிவும் அதற்குச் சாக்ஷியான மோனத்தில் ஒடுங்க, அந்த மோன நிலையின் முதிர்ச்சியில் மோனாதீதமான சுத்தமுத்த புத்தமான அத்வைத வஸ்து விளங்கும்.

"அறிவழிந்த சுகமதனை அனுபவித்தே யறிய வேண்டும்" என்பது ஆனந்தத்தாய்மொழி. "அதுவானால், அதுவாவர் அதுவே சொல்லும்" என்றார் தாயுமானவரும். ஓம் தத்ஸத்.

The Sringeri Jagad Guru on the Establishment of Dharma.

தர்ம்மஸம்ரக்ஷணம்.

—(*)—

"Whenever, Oh Bharata, rightousness is on the decline and unrighteousness assumes predominence, I come forth MYSELF to protect the good, to punish the wicked and to establish the Dharma on a strong basis."—*Sri Krishna to Arjuna in the Brhagarad Gita*, quoted by His Holiness the Jagad Guru of Sringeri on the occasion of the opening of the Indian Sanskrit Institute *at Bangalore.*

தர்ம்மம் இருவகைத்து. அது பிரவிருத்தி மார்க்கம் என்றும், நிவிருத்திமார்க்கம் என்றும் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சிருஷ்டிகாலத்தில் பகவான் மரீசி முதலிய பிரஜாபதிகளை யுண்டுபண்ணி யவர்கள் மூலமாய் பிரவிருத்திமார்க்க தருமத்தையும், ஸநகர், ஸநந்தகுமாரர் முதலியவர்களைச் சிருஷ்டித்து அவர்களால் நிவிருத்தி மார்க்கதருமத்தையும் நிலைவரமாகஸ்தாபித்தார். பிரவிருத்தி மார்க்கம், கருமமார்க்கம்; நிவிருத்தி மார்க்கம் என்பது ஞானமார்க்கம். முன்னது கர்மபலத்தை யுத்தேசித்து செய்யும் காமிய மார்க்கம்; பின்னது கர்மபலத்தியாகமான நிஷ்காம்ய மார்க்கம். முன்னது இகபோகசுவரியங்களை யுண்டுபண்ணி துக்க ரூபமான ஸம்ஸார விருத்தியைக்கொடுக்கும். மற்றொன்று கர்ம்மபலத்தியாகத்தாலுண்டாகும் நைஷ்கர்ம வித்தியினால் துக்கநிவிருத்தியைக் கொடுக்கும். காமிய கர்ம்மம் துக்கத்தை விருத்தி செய்வதால் அதற்குப் பிரவிருத்தி மார்க்க மென்றும், நிஷ்காம்ய கர்ம்மம் துக்கத்தை நிவிருத்தி செய்வதால் அதற்கு நிவிருத்தி மார்க்க மென்றும் பேர்வந்தது. மார்க்க மிரண்டானாலும் ஸநாதனமான தர்ம்மம் ஒன்றே.

எப்படி யெனில்:—வட்டம் விருத்தம் அல்லது சக்ரம் வடிவுபற்றி யொன்றே யானாலும், அதை வரையும் மார்க்கம் பற்றி சவ்வியம் அபசவ்வியம் என இருவகைத்தாம். சவ்வியமாக (வலசாரியாக) வரைந்தாலும் ரேகை முடிந்த விடத்து வடிவம் ஒன்றே அது தான் வட்டம். அபசவ்வியமாக (இடசாரியாக) வரைந்தாலும் ரேகை முடிந்த விடத்து வடிவம் ஒன்றே! அதாவது, முன் சொன்ன வட்டமே. வலசாரியோட்டம் தக்ஷிணமார்க்க மென்றும், நிவிருத்தி மார்க்க மென்றும், ஞானமார்க்க மென்றும் சொல்லப்படும். இடசாரி யோட்டம், வாம மார்க்க மென்றும், பிரவிருத்தி மார்க்க மென்றும், கர்ம்மமார்க்க மென்றும் சொல்லப்படும். இந்த இரண்டும் பூரணத்தில் ஒன்றானாலும், அப்பியாசானுசாரணரீதியில் இருவகைத்தாம். பகவான் "அணோரணீயம் மஹதோமஹீயான்" என்ற சுருதி வாக்கியப்படி அணுவிற்கணுவாயும், மஹத்திற்கும் பெரியமஹத்தாயும் இருக்கு

ருநாதலால், அவரையிருவிதமாகவும் பற்றலாம். "பற்றற்றார் பற்றாகப்பற்றி நிற்குமவன்" பாதம் பற்ற மனப்பற்று அறவொழியல் வேண்டும். மனம் என்பதே விஷயப்பற்றினால் விருத்தியாய்க் கொண்டிருப்பது. மனம் விஷயப்பற்று விட்டால், அது நிர்விஷயமாக நிற்கும். நிர்விஷயமடைந்த மனது அந்தர்முகப்பட்டு தியான யோகத்திலமரும். அதாவது தன்னைத் தானுணரும் வழியில் செல்லும், "திருஷ்ட, தர்சந, தர்சியாமி த்யக்த்வா வாஸநாபாஸஹ" என்ற சுருதி வாக்கியப்படி காண்பான், காட்சி, காண்பொருள் என்கிற மூன்றையும் திரிபுடி வாசனையற நீக்கிப் பார்த்தால், மனசு சோக மோகம் நீங்கித் தெளிவுற்று அறிவுமயமாய் ஸ்படிகம்போல் விளங்கும். அந்த ஸ்படிக லிங்கத்தில் விளங்குகிற சிரேஷ்டமான ஆத்மாவை யே பஜிக்கவேண்டு மென்பது "தர்சநப்ரதமா பாஸமாத்மாநம் கேவலம்பஜ" என்னும் சுருதி வாக்கியத்தின் அருத்தம். இப்படி எவனொருவன் கேவலமான ஆத்மாவை சுத்த மனத்தோடு (சகல பாவனைகளையும் விட்டு) தியானம் செய்கிறானோ அவன் போக்குவரத்தற்ற புருஷோத்தமனே யாகிறான். இப்படிப்பட்ட ஸ்வானுபவம் வித்தித்தவனே தர்ம ஸ்தாபனம் அல்லது தர்ம ஸம்ரக்ஷணம்செய்ய வல்லவனாகிறான். ஏனெனில் பிரவிருத்தி நிவிருத்தி யென்னும் இரண்டு மார்க்கங்களின் முடிவையும் கண்டு தர்ம ஸ்வரூபத்தை யறிந்தவனாதலால், எவ்விதத்தாலும் அதமர்த்தைக் கண்டித்து தர்ம ஸம்ரக்ஷணம் செய்ய வல்லவனாகிறான்.

தர்ம ஸ்தாபனம்செய்ய மனதைச் சலிப்பற நிறுத்தும் சக்திவேண்டும். இந்தச் சக்தி குருவருளினாலும் இஷ்டதேவதாநுக்ரஹத்தினாலும் மன்றி மற்றப்படி வித்திக்க மாட்டாது. "சற்குரு கல்லட்டவிடம் பொட்டைவெளி" யென்று ஒரு பழமொழியுண்டு. அப்படி யென்றால் என்ன? பொன்னிற் பணிபோல் நாமரூபாத்மகஜகத்தெல்லாம் ஜகத்காரணனான புருஷோத்தமனில் ஒடுங்கும். நாமரூபம் பாழ்த்துப் போனால் ஒன்றாய் குறைந்து போகாது. ஏனென்றால் உபாதான காரணத்தில் ஒரு அணுமாத்ரமேனும் கூட்டவாவது குறைக்கவாவது யாராலும் முடியாது. ஆகையால், திருமூலதேவர் திருமந்திரோபதேசத்தில்,—

"உற்றிடமெல்லாம்உலப்பில்பாழாக்கிச்
சற்றிடமெல்லாம்கடுவெளியானது
மற்றிடமில்லைவழியில்லைதானில்லை
சற்றிடமில்லைசலிப்பறநின்றிடே."

என்று ஓதியுள்ளார். தஹராகாசமும் பரமாகாசமும் ஒன்றாய்க் கலந்த விடத்து சமுத்திரத்தை யடைந்த நதி நாமரூபமற்று நின்றது போல், மனம் சலிப்பற (சங்கற்ப விகற்ப மற்று) நின்றதேயானால், "மற்றிட மெல்லாம் மறைப்பில்லை பாரே!" யென்றபடி தீக்ஷதரிசன சித்தியாம் ரிஷித்துவம் லபிக்கும்.

தர்ம்மத்துக்கு அரணாக (சாப்பாக) விருப்பவர்கள் ரிஷிகள் (தீர்க்கதரிசிகள்). தீர்க்கதரிசனமளிப்பவன் குருமூர்த்தமான பகவான். ஆதலால் "எப்பொழுது வேத தருமத்திற்கு அழிவும், அதருமத்திற்கு அபிவிருத்தியு முண்டாகிறதோ, அப்பொழுது நான் அவதரிக்கிறேன்" என்று பகவான் அருச்சுனனுக்குச் சொன்னது எக்காலத்தும் எந்நிமிஷத்திலும் உண்மையே. தர்மத்தைப் பற்றிய தூயமனத்துள்ளே தர்ம ஸ்வரூபியாகி பகவான் அந்தரியாமியாக விருப்பதால், தர்மத்துக்குக் கேடுவரும்போதெல்லாம் பகவான் அந்தர்யாமியாயிருந்து பஹிர்முகப்பட்டு தர்ம்மஸம்ரக்ஷணம் செய்கிறார்.

இதற்கு ஒருதாரணம் ஸவாநுபவத்திலிருந்து சொல்வோம். அவதார புருஷர்கள் லோகோபகாரமாக தர்ம்மரக்ஷணார்த்தம் யோக மாயையினால் அனேகம் அற்புத வித்திகளைச் செய்திருக்கிறார்கள். பகவானைச் சரணடைந்து நிவிருத்தி மார்க்கமாகிய ஞானமார்க்கத்தில் நடப்

வர்களை யோகவித்திகள் தாமாக வந்தடைகின்றன. இந்த யோகவித்திகளைப் பெரிதாக வெண்ணி உபயோகிப்பவன் அவைகளால் அடிமை செய்யப்பட்டு அவைகளுக்கு ஆளாகிறான் என்பது பிரஸித்தம். இப்படி யோகவித்திகளில் ஆசைவைத்து யோகப் பிரஷ்டர்களானவர்கள் எண்ணிறந்தபேர்கள். அவதார புருஷர்களோ போக்கு வரத்தில்லாப் புருஷோத்தமனே யாதலால், அவர்கள் மாயை வசப்படாமற் தானே மாயையைஏவுவார்கள். அவர்களுக்குப் பிறப்பிறப் பிரண்டுமில்லை. ஆதலால் அவர்களை "வாடா! போடா!" வென்று ஏவும் சக்தியுமில்லை. பின்னையவர்கள் எப்படிப் பிறக்கிறார்களென்றால் பகவான் சொல்வதைக் கேளுங்கள்:—

"நான் பிறப்பில்லாதவனாயினும் அழிவில்லாதவனாயினும், பிராணிகளுக்குநாயகனாயினும் ஸ்வகீயமான பிரகிருதியை யதிஷ்டித்து என் மாயையாலுண்டாகின்றேன்"—என்று தனது அவதார மஹிமையையும் ஆற்றலையும் அர்ச்சுனனுக்குத் தெரிவித்தார். அவதார புருஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாஸ மென்னவெனில்—இருவருக்கும் அனேக ஜனனங்களுண்டு. ஆனால் பகவான் அர்ச்சுனனுக்குச் சொல்லியபடி,—"அர்ச்சுன எனக்கும் உனக்கும் இதுவரையில் எத்தனையோ ஜநநங்கள் சென்றன. அவற்றையெல்லாம் நான் அறிவேன். நீ யறியமாட்டாய்."

அவதாரபுருஷர்கள் எப்போதும் "ஸர்வசாக்ஷி" மாத்ரமா யிருப்பார்கள். "ஸர்வசாக்ஷி"யின் சக்தி,—

"ஆதி யனாதி யகார ணகாரணி
சோதி யசோதி சுபர சுந்தரி
மாது சமாதி மரேநன்மனி மங்கலி
யோதி யென்னுள்ளத்துட னிருந்தாளே."

என்ற திருமந்திரோபதேசப்படி எப்போதும் அந்தர்யாமியா யிருக்கும். ஆகையால் பகவான் "அவற்றை யெல்லாம் நானறிவேன்; நீ யறியமாட்டாய்" என்று உண்மையாக அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்தார்.

முக்திலக்ஷணமும், முக்தியிலனுபவமும் முக்தியில் திரிபுடி நியாயமு மெப்படியென்று கேட்ட கேள்வியைக் கண்ணுற்றுத் தர்ம்ம சங்கடத்திலாழ்ந் திருந்தேனுக்கு பகவான் குடியனாக வந்து "வா போ"! என்ற சங்கேத வார்த்தைகளைக் கொண்டு பித்தன்பாட்டுப்பாடிச் சங்கையறுத்தாற் போல, உலகத்தில் க்ஷீணித்துப்போன தர்ம்ம ஸ்தாபனம் செய்வான் அந்தபகவான் தானே ஜகத்குரு மூர்த்தமாய் வந்து குருவாக்கால் தர்ம்ம ஸம்ரக்ஷணம் செய்பலான அதிர்சயத்தை இங்கு என்னென்று சொல்லுவேன்! ஏதென்று புகழுவேன்!

பெங்களூரில் ஒருயர்ந்த ஸம்ஸ்கிருத வித்யாஸ்தாபனம்(Indian Sanskrit Institute)ஏற்படுத்தி இரண்டுலக்ஷம் ரூபாய் செலவழித்துக்கட்டடமும் அக்ரஹாரமும் வித்யாலயமும் ஜகத்குரு மூர்த்தமான பகவத்பாதாச்சாரியராம் ஆதி சங்கரர் திருக்கோவிலொன்றும் கட்டுவித்து அந்த ஸ்தாபனத்தைத் திறக்கும் பொழுது தற்காலம் ஸ்ரீஜகத்குருவாய் ஸ்ரீங்கேரி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஆச்சாரிய ஸ்வாமிகள் செய்த பிரசங்கமொன்று அவரது ஆஜ்ஞையினால் அனுப்பப் பெற்று அதைச் சிரமேல் வகித்து ஏற்றுக் கொண்டோம். அந்த திவ்யப் பிரஸங்கத்தில், தற்காலம் ஆரிய தர்ம்ம க்ஷீணித்திருப்பதின் பரிதாப நிலைமையை யுணர்ந்து அதனால் சேர்ந்துள்ள கேடுகளை யுன்னி, இக்காலத்துக் கேற்றபடி தர்ம்ம ஸம்ரக்ஷணம் செய்யவேண்டி ஆத்ம வித்யையைப் பரவச் செய்வதற்குச் சாதகமாக ஆத்ம ஞானத்துக்குப் பொக்கிஷமாய் விளங்கும் ஸம்ஸ்கிருத வித்தையை விர்த்தி செய்யும் பொருட்டு ஒரு கலாசாலையும் அஃதோடு மேற்றிசையார் தத்துவ ஞானத்தையாராய்ந்து இரண்டுக்கு முள்ள ஒற்றுமையை விருத்திசெய்ய

அனுகூலமாக இங்கிலீஷ் வித்தையைப் போதிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அப்பொழுது ஆச்சாரிய ஸ்வாமிகள் செய்த திவ்யப்பிரசங்கத்தில், ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவதாரமாய் தர்ம்ம ஸம்ரக்ஷணார்த்தம் ஆத்ம வித்தையை அர்ச்சுனன் மூலமாய் உபதேசித்த பெருமையையும், பிறகு ஸ்ரீ சங்கரர் அவதாரமாகி ஆரியதர்ம்மத்தை ஸ்தாபித்தமஹிமையையும், அதற்குப்பின் இன்றைக்குச் சுமார் 700 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் அவதரித்து, க்ஷீணித்துப்போன ஆரிய தர்ம்மத்தை ஸம்ரக்ஷித்து நிலைநிறுத்த வேண்டி, தனது யோக மாயையினால் ஸ்வர்ண வருஷம் பொழியச்செய்து அங்கே விஜயநகர ஸ்தாபனம் செய்து அது ஒரு மஹாராஜ்யமாக ஓங்கி வளரச் செய்து அந்த ராஜ்ஜியத்தின் அதிகார விசேஷத்தால் தான் தர்ம்ம ஸம்ரக்ஷணம் செய்ய முடிசூட்டி தர்ம்ம ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிய தாகவும், அவர்காலம் முதல் ஸ்ரீ ங்கேரி ஜகத்குரு பீடத்துக்கு வருகிறவர்கள் ஆச்சாரிய முறையில் தர்ம்ம ஸம்ரக்ஷணாதிபதிகளாய், பல்லக்கு, கிரீடம், சத்ரம், சாமரம் முதலிய ராஜசின்னங்களை வகித்து வருகிறதாகவும், அவருக்குப்பின் வந்தவர்கள் தர்ம்ம ஸம்ரக்ஷணார்த்தம் பட்டுபட்டுழைத்து வந்ததையும் தற்காலம் க்ஷீணித்துள்ள ஆரியதர்மத்தை ஸம்ரக்ஷித்து ஓங்கச் செய்யும் பொருட்டுக் காலடியில் ஆதிசங்கரருக்குக் கோயிலென்று கட்டிக் கும்பாபிஷேகம் செய்து பின்னர் குருவருளைச் சிந்தித்து பெங்களூரில் ஸமஸ்கிருத வித்தியாஸ்தாபனம் ஒன்றேற்படுத்தி அது மூலமாய் ஆரியதர்ம்ம பரிபாலனம் செய்துவரஉத்தேசிப்பதாகவும் சொன்னார்.

தர்ம்ம ஸம்ரக்ஷணம் செய்வது ஆச்சாரிய மூர்த்தங்களாய் அவதரித்த புண்ணியவான்களின் பிரதமக்கடமையானாலும், ஆத்மஞானமும் ஆத்மதரிசனமும் பெற்றவர்கள் ஸகாயமின்றி யாவராலும் தர்ம்ம ஸம்ரக்ஷணம் செய்வது முடியாது. வெறும் ஏட்டுப்படிப்பு மட்டும் படித்த வித்துவான்கள் வேலியே பயிரை மேய்ந்தாற்போல தர்ம்மத்தைத் தலை கவிழச் செய்வது இக்காலத்தில் சகஜமாயிருக்கிறது. இங்லீஷ் படிப்புப்படித்துப் பணமும் புகழும் பெற்றவர்களி லனேகர் "பெற்ற தாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள்" என்ற வசனத்துக்கிலக் காயிருப்பதைப் பார்த்து நாம் வருந்தித்துக்கித்ததுண்டு.

அப்பியாஸயோகவித்தியிலேதோ சிறிதுதேறியுள்ளவர்கள் ஏழைகளை மோசம் செய்து காசு பறிப்பவர்களாயிருக்கிறார்கள். இது பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வது போல் தானிருக்கிறது. ஆகையால் "பிராஜ்ஞோஸ்மி பிராஜ்ஞானம் ஆத்மா" என்று சொன்ன இந்திரன் ஸ்வாநுபவத்தைப்போல், கிரியாரூப பிராண சக்தியோடு, பிரஜ்ஞானம், ஆத்மா என்கிற, ஞான சக்தி இச்சாசக்திகளையும் பூரணமாய் அடையப் பெற்றவர்கள் மட்டுமே அசுரபாவத்தை விட்டு தேவாம்சமாயிருந்து தர்ம்ம ஸம்ரக்ஷணம் செய்ய வல்லவர்களாவார்கள்.

பணம் பணமென்று பணத்தையே பெரிதாகக் கொண்டாடும் இக்காலத்தவர் ஸ்வர்ண மழை பொழியச் செய்பவர்களையே மஹான்களாக நினைப்பது சகஜமானாலும், இவர்களுடைய மதிப்பைப் பெற வேண்டி உண்மையான மஹான்கள் தமது சக்தியைக்காட்ட மாட்டார்கள். இவர்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்லத்தக்க வசனம் ஒன்றேயுளது. சிவவாக்கியர் சொல்லியபடி அது இது:—

"பெற்றதாயைவிற்றடிமைக்கொள்ளுகின்றபேதைகாள்"
"சித்திலாதபோது தீவணில்லை யில்லை யில்லையே !"

இந்த உண்மை யொன்றே இக்காலத்தில் தர்ம்மஸம்ரக்ஷணம் செய்ய வல்லதாம். இதை யுணர்ந்தவர்கள் "ஸத்யம்வத: தர்ம்மம்சர:" என்னும் வேதவாக்குப் பிசகாமல் நடந்து கொள்வார்கள். அதனால் தர்ம்மம் தலையெடுக்கும்: அதர்ம்மம் அடங்கும். ஓம்தத்ஸத்.

THE ROYAL VISIT.

மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியவர்கள் விஜயம்.

மாக்ஷிமை தங்கிய இந்திய சக்ரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் அரசர் தமது இராக்கினியாகிய மேரி சக்ரவர்த்தினி யவர்களோடு டிசெம்பர் மீ 2உசனிக்கிழமை யன்று காலையில் மெடினா என்னும் கப்பலில் பம்பாய் வந்து சேர்ந்தனர். அன்று சாயங்திரம் 4-மணிக்கு அவர்கள் கப்பலை விட்டிறங்கி பம்பாய் நகர்க்குள் வந்தனர். அப்பொழுது பம்பாய் முனிசிபல் சங்கத்தின் ப்ரெஸிடெண்டாகிய ஸர் பிரோஸ்ஷா மேட்டா அவர்கள் அவர்களுக்கு நல்வரவு கூறி ராஜ விசுவாஸம் பாராட்டி ஒருவர் தனப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர்.

அதற்கு மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியவர்கள் திருவாய் மலர்ந்தருளிய மறுமொழியிது: —

"நான் உங்களுக்கு மத்தியில் அந்நியனாயின்றி (அறிமுகனாய்) வந்திருக்கிறேன் என்று சொன்னது வாஸ்தவம். உங்களுடைய இந்த அழகான நகரில் வந்திருக்கிற நான் என்னை உங்களுக்கு அந்நியமாக நினைக்கவில்லை யென்பது உண்மை. 6-வருஷங்களுக்கு முன் நான் இங்கே வந்திருந்த பொழுது புதியனாயிருந்தேன். ஆனால் அப்பொழுது நீங்கள் மனதாரவும் அனுதாபநிறைந்தும் கூறிய நல்வரவு எனக்கு இன்னும் ஞாபகத்திலிருக்கிறது. கடலிலிருந்து இந்த உங்களுடைய நகரின் தரையை நெருங்கும்பொழுது கானும் விசித்திரக் காட்சி மனோரம்யமாயிருப்பதை நான் இன்னம் மறக்கவில்லை. பனையும் தென்னும் கடலிலிருந்து கிளம்பின போல் தூரத்துப் பார்வைக்குத் தோற்றுவது இன்னம் என் மனதைக் கவர்வதாயிருக்கிறது. 1905-ம் வருஷத்தில் நீங்கள் உள்ளன்போடு கூறிய நல்வரவை பாதரவாகக் கொண்டு இந்த மஹா தேசத்தின் சில பாகங்களைப் பார்த்து ஜனங்களின் யோக க்ஷேமங்களை யறியத் துணிந்து பிரயாணம் செய்தேன். அப்பொழுது நான் அறிந்ததிலிருந்து இந்த மஹா தேசத்தில் வசிக்கும் எல்லா ஜாதி மதஸ்தர்களிடத்தும் எனக்கு மிக்க அனுதாபமுண்டாயிற்று. பிறகு என் னருமைத் தந்தை எல்லாரும் துக்கிக்கக் காலஞ்சென்ற காரணத்தினால் நான் ஸிம்மாஸனமேற நேரிட்டபோது என்னுடைய அபிலாசைகளில் ஒன்று இந்தியாவிலுள்ள எனது நல்ல பிரஜைகளைத் திரும்பிப்பார்க்க வேண்டு மென்பதாயிருந்தது.

அந்த ஆசை பூரணமாக இன்றைக்கு நமது சக்ரவர்தினி பக்கத்திலிருக்க இங்கேவந்து சிற்பது எனக்கு மிக்கச் சந்தோஷத்தை விளைக்கிறது. இவ்விராஜதானியின் சில பாகங்களில் பஞ்சம் நேரிடும் போலிருந்த கவலை நீங்க நல்ல மழை பொழிந்ததைப்பற்றிக் கடவுளை வந்தித்து அடுத்துவரும் வசந்தகாலத்தில் நல்ல மகசூல் அறுவடை கண்டு ஜனங்கள் சுபிக்ஷமாயிருப்பார்களென்று பிரார்த்திக்கிறேன்.

நீங்கள் படித்த சாதுரியம் நிறைந்த வந்தனப் பத்திரத்திலிருந்து முன்னொருகால் பம்பாய் நகரானது ஒரு பிரிடிஷ் இராக்கினியின் ஸ்ரீதனமாக விருந்ததென்று ஞாபகத்துக்கு வருகிறது. அப்படி ஸ்ரீதனமாக விருந்த பூஸ்திதியை 250-வருஷங்களுக்குமுன் ஹம்ரே கூக் என்பவர் காரியஸ்தராயிருந்து நிர்வகித்து வந்தார். அப்பொழுது பம்பாயானது செம்படவர்கள் குடிசை நிறைந்த கிராமமாக விருந்தது. அதை நீங்களும் உங்களுக்கு முன்னிருந்த முனிஸிபல் கமிஷனர்களும் பிரிடிஷ் ராஜமுடியில் திலங்கு மாபரணமென்னும்படி விர்த்தி செய்து விட்டீர்கள். இந்நகரிலுள்ள கட்டடங்கள் கல்லிழைத்த நகைபோல் விளங்குவதைப்பார்க்கச் சந்தோஷப்படுகிறேன். இப்படி விலை பெற்றதாய் விளங்கும் ஆபரணத்தைச் சோபிக்கச் செய்வது

அதில் வசிக்கும் எல்லா ஜனங்களின் சமாதானமும் சந்தோஷமும் சம்பத்துமே யாதலால் இந்த விஷயங்களில் இந்த உங்களுடைய நகர் அடைந்திருக்கும் விருத்தியைப் பார்த்துச் சந்தோஷிக்கிறேன்,

நமது இராக்கினியாகிய சக்ரவர்த்தினிக்கும் எனக்கும் நீங்கள் இன்று ஹிருதய பூரணமாக வளித்த நல்வரவுக்கும் வந்தனோபசாரத்துக்கும்நான் ஹிருதய பூர்வமாக வந்தனமுள்ளவனாக விருக்கிறேன்.

கடவுள் இந்தியா இராஜ்ஜியம் நல்வாழ்வுற்று சமாதானமும் சம்பத்தும் நிலைநிற்கிருக்க ஆசீர்வதிப்பாரென உண்மையாய்ப் பிரார்த்திக்கிறேன்."

———:-:———

THE VISION OF THE ETERNAL DANCE.

A Phantasy.

"திருக்கூத்து தரிசனம்" *

———:-:———

"எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசத்தி
யெங்குஞ் சிதம்பரம் எங்குஞ் சிவாட்டம்
எங்குஞ் சிவமாயிருந்த லாலெங்குந்
தங்குஞ் சிவனருடன் விளையாட்டே."

"சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பரமா மந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
யற்புதக் கூத்தனை யாரறிவாரே."—திருமந்திரம்.

கூத்துக் காட்சி.

"நன்றிது ஆட்டம் நன்றிது கூத்து
நன்று நன்றிது நடனம்
அங்கு மிங்கு மெங்குங் கண்டிலே
னிது வொருவதி சயங்காண்மினோ
ஒன்றி நின்றன்றுணர் வழிந்
துள்ளொளி யானபின்
அங்கு மிங்கு மெங்கு மிதுவலால்
மற்றொரு வதிசயங் காண்கிலேனே!"
(அகண்டானந்தம்)—ஆனந்தத்தாய்மொழி.

* திரிபுரரஹஸ்யாந்தம் எல்லாம் கட்டு சாம்பலில்செய்யும் திருக்கூத்து.

பொற்றில்லைக் கூத்து.

"நாதத்திலாடி நாற்பதத் தேயாடி
வேதத்திலாடித் தழலந்த மீதாடி
போதத்திலாடிப் புவனமுழு தாடுந்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே."

அற்புதக் கூத்து.

"இருவருங்காண வெழிலம் பலத்தே
யுருவோட ருவோடு ருபா ரூபமாய்த்
திருவருட் சத்திக்குள் சித்தஞனந்தன்
அருளுருவாக நின்றாட லுற்றானே."

—திருமந்திரம்

"சொல்லியுங் கேளான் சொல்லினுக் கடங்கான்
மெல்லியர் போல் மனமொழி மெய்மாறுவான்
கோமளிக்கிருஷ்ணன்கூத்துப்பார்க்கவாரும்சதரே!
யவன் கலிகாலக் கூத்துப் பார்க்கவாரும்!"

'N this world of puppet show
The puppet plays its part aho!
'Oth God and man the puppet use to serve 'eir end!
God his puppets use to show the God-in-man
'Ile man his puppets use to serve the 'ev'l-in-man
Thus do God and Man their puppets move to serve 'eir end
And the world goes jogging along to the end
A puppet-play wherein God and Man their puppets move and move!
And the wise stand apart a witness or play unmoved."
—*Anon.*

"Man proposes, God disposes"—*Proverb.*

'You cannot improve the world!" says Man to God:
"And you cannot stand sticking to the mud and mire for long!" retorts God

The Prelude.—சூத்திரக்காரன் சொல்.

"என் வீடு † சுடுகாடானாற்போல் எல்லாருடைய வீடும் சுடுகாடானால் அப்போது உண்மை தெரியவரும். அது வரையில் உண்மை தெரியாதுதான்" என்கிறாள் என்னருமைப் பெண்ணாவித்திரி. ஸாவித்திரி ஸத்தியவானுடைய தர்மபத்னி. ஸத்தியவான் யாரோ அவனே சக்திமான். சக்திமானிடத்தில் சக்தி யிருக்கிறது. ஸத்தியம் சக்தி இவை யிரண்டும் மூலிலைச் சூலம் போலும், வில்வதளம் போலும், முப்பிரிவினதாய்ப் (ஒன்றில் மூன்றாய்) பிரிந்தும் பிரி

† ஸ்மசானம், சுடுகாடு, சுஷும்னை இவை ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள்

யாத சுபாவமுள்ளவை. "ஸத்தியம்வத" என்ற சுருதி வாக்கியம் உடனே "தர்மஞ்சர" என்று கோஷிக்கலாயிற்று. "ஸத்தியமேவ ஜயதே" என்ற சுருதி "நாந்ருதம்" எனக் கட்டிச் சொல்லிற்று. அதாவது "மெய்யே வெல்லும் பொய்யல்ல" என்று சொல்வது வெல்லாததை இரண்டையும் வற்புறுத்தியது. "தத்ஸத்" என்று சொல்லிய சுருதியே "ந-இதி=ம்ருதி" என்ற வாக்கியத்தையும் வெளியிட்டது. ஆகையால், ஒருதலை நியாயமும், ஓரடிப்பேச்சும் ஸ்திரப்படாது: நல்லது பொல்லாது இரண்டுங் கலந்தேயிருக்கும் காரணத்தால் பொல்லாததை யடக்கி நல்லதை யநுஷ்஠ித்தல் வேண்டும்.

உண்ணும் உணவில் அமுதமும் நஞ்சுங்கலந்தேயிருக்கிறது. உணவிலுள்ள அமுதத்தை (அன்னப்பாலை) க்ரகித்துக் கொண்டு நஞ்சை மலபாகமாகக் கழித்துவிடும் சக்தி ஜட சக்தி ரூபமான தேஹத்திற்கு மிருப்பது போல், மடமையோடு கூடிய மந்த புத்தியிலும் கடமையைச் செலுத்தும்நிருபாநோக்கம் அமைந்தேயிருக்கிறது. மனிதன் தேறுவதும் கெடுவதும் தன்னாலேயேயன்றி அவனுக்கு அந்நியமான வேறொன்றால் அல்லது வேறொருவரால் அல்ல. ஆகையால் தான் "தானே தனக்குப் பகையும் நட்டானும்" என்று ஓதினார் திருமந்திரம் ஓதிய திருமூலதேவர். இந்த உலகம் சூத்திரப் பாவைபோல் சுழன்றுழன்று வருகின்றது. பாவை யென்பது ஜடபாகம்: பொம்மை போல் நாமரூபமாத்திரத்தால் விளங்குவது. சூத்திரம் என்பது அதை யாட்டுவிக்கும் கயிறு. இது சூக்ஷ்ம சக்தி ரூபமாயுள்ளது. இதுவே பிராணசக்தி! இதற்கு இயக்கும் சக்தியுண்டானாலும் தானாக இயங்கும் சக்தியில்லை. ஆகையால் சூத்திரக்கயிறு பொம்மையை ஆட்டிவைக்கு மானாலும் அதற்குத்தானாக ஆடும் சக்தி கிடையாது. ஆகையால் அதை யிழுக்கும் ஒருவன் அது இயங்குவதற்குக் காரணமாக அதற்கும் பின்னால் இருக்கவேண்டும். இப்படியாக பொம்மலாட்டம் போல் ஆடும் இந்த உலகத்தில் காரணம், காரியம், என்கிற இரண்டிற்கும் நடுவாயுள்ள மத்தியஸ்தலத்தில், காரணமுமில்லாமல் காரியமுமில்லாமல், காரணத்தோடுசேர்ந்து காரணமாயும், காரியத்தோடுசேர்ந்து காரியமாயும், காரணகாரிய மத்தியஸ்தானமாய் அநிர்வசநீயமாய்த் தோன்றுவதும் மறைவதுமாயுள்ள தொன்றுண்டு. அதுவின்றிப் போனால் உலகம் வியவகாரமற்று விழுந்துபோம். வியவகார மற்றுப் போனால் உபகாரம், அபகாரம்இரண்டும் இருக்க இடமின்றி மறைந்து போம்.

இப்படி வியவகாரமற்று, வியவஸ்தையற்று, பேதாபேதமற்று, நிர்த்துவந் துவமாய், நிராகாரமாய், நிர்மலமாய், நிராமயமாய், ஒன்றிரண்டென்பதுமற்று, எங்கும் நிறைந்த வஸ்துவாயிருப்பது எதுவோ அதுவே "God at Rest" என்று சொல்லும் சிவம்.

நித்தமுத்த சுத்தப் பழம்பொருளான சிவம் என்பதில் சிகாரம் தானே வியவகாரமற்ற பரிபூரண நிலை. வாரமே உபகாரம் என்கிற உத்தம சக்தி நிலை. மகாரம் என்பது மாயாரூபமார்ஜ்ஜலராமனும் மனோவிகாரம்—(கோழைமனம்). இது அபகாரமே உருவாய்க் கொண்டது. இப்படியாக வியவகாரமற்ற நிராகார நிலைக்கும் அபகாரமே யுருவான கோழைமனதாம் குடிகெடுக்கும் சக்திக்கும் நடுவேயிருந்து மத்தியஸ்தம் செய்வது "உபகாரம்" என்னும் உத்தமசக்தி. நிர்விகார நிலையே 'சத்தியம்' என்பது. மனோவிகாரம் அல்லது கோழைமனம் என்பது 'அசத்திய'மாம். சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலிருப்பது "சத்தியாசத்தியம்."

The Dance or Play—திருக் கூத்து.

ஒரு காலத்திலே ஸத்தியத்துக்கும் அஸத்தியத்துக்கும் எதிர்முறை வழக்குண்டாயிற்று. ஸத்தியம் "மெய்யே வெல்லும்" என்ன, அசத்

தியம் "பொய்யே வெல்லும்" என்று விருதுகட்டிக் கொண்டு கிளம்பியது. இவர்களிருவரும் இப்படி துவஜம் கட்டிக்கொண்டு சண்டை செய்வதற்கு ஆஸ்பதமாய் ஆபத்துக்கிடமான அபவாதமொன்று குறுக்கே வந்து நின்றது. இருவரும் வெகு காலம் வாதித்தும் முடிவு எய்தாமையால் உபய ஸம்மதமாய் இருவரும் "ஸத்தியா ஸத்திய ரூப" மத்தியஸ்தானலீலையை நடுவிருந்து வழக்குத்தீர்க்கக் கோறிக் கொண்டார்கள். சத்யம் தனக்கும் அஸத்தியத்துக்குமுள்ள வித்தியாஸத்தை விசாரித்துத் தீர்க்க வேண்டுமென்று கோறிக்கொண்டது. அஸத்ய மோ தனக்கு ஸத்யம் செய்யும் இடையூறை மட்டும் களைந்து தீர்ப்புச்சொல்ல வேண்டுமென்று கோறிக் கொண்டது. இடையிலே "பாக்காய் பிடிக்கிற தந்திரம்" பயின்ற 'டுக்ருங்கரணே' என்கிற தர்க்கவாத நிபுணர் "பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்" என்கிற பழமொழி வழக்கை யனுசரித்து லீலார்த்தமாகத் தானே தர்க்கவாத நியாயம் பேச வுடன்பட்டார்.

இதை யெல்லாம் உள்ள துள்ளபடி யெடுத்தெழுதினால் "நொள்ளக் கண்ணிக்கு (அவித்யாஸம்பந்நகர்களுக்கு) நோப்பாளமா" யிருக்கும். ஆனால் தத்துவார்த்தமாகப் பார்க்க அகக்கண் படைத்தவர்களுக்கு,—

"எங்குந்திருமேனியெங்குஞ்சிவசத்தி
யெங்குஞ்சிதம்பரம்எங்குஞ்சிவகூட்டம்
எங்குஞ்சிவமாயிருத்தலாலெங்குந்
தங்குஞ்சிவனருட்டன்விளையாட்டதே."

என்னும் திருமந்திரத்திலுண்மை யுள்ளபடி விளங்கும்.

—:*:—

"To Marry or not to Marry— That's the Question."

—:-:—

ஏகாங்கியாக விருப்பதா? போகாங்கியாக விருப்பதா?

"As you prophesied some days ago I have taken my choice"—Umaya Shankar.

"செய்யதெங்கிலேயிளநீர்சேர்ந்த காரணங்கள்போல்
ஐயன்வந்தெனுளம்புகுந்து கோயிலங்கே கொண்டனன்!
ஐயன்வந்தெனுளம்புகுந்து கோயிலங்கே கொண்டபின்
வையகத்தில் மாந்தர்முன்னம் வாய்திறப்பதில்லையே"
—சிவவாக்கியர்.

செம்மையாய் வளர்ந்த தென்னை மரத்தின் காயாகிய தேங்காயினுள்ளே இளநீர் இருக்கிறது எல்லாருக்கும் தெரியும். அது குரும்பையாயிருக்கும் பொழுது அதனுள்ளே ஜலமில்லை. ஸாரமாயிருக்கிற நீரும் உப்புக்கரிக்கும். ஆனால் தேங்காயுண்டானபின் அதற்குள் இளநீர் இருக்கிறது. அந்த இளநீர் அங்கேயெப்படி வந்தது? அது தான் தெங்கின் இரகஸியம். அந்த ரகஸியத்தையாரும் புகுந்துபார்க்கமுடியாது. அதேமாதிரியாக மனம் பக்குவமடையவடைய ஹிருதயம்சுத்தியெய்தும். சுத்தியான ஹிருதயத்திலே அருள்சுரக்கிறது. அருள்சுரந்தால் இருளகன்று மருள்நீங்குகின்றது. மருள்நீங்கினால்தெருளுண்டாகி மனம் தெளிகிறது. மனம் தெளிந்தவிடத்தில் ஸ்வரூபதெரிசன முண்டாகிறது. இந்தஸ்வரூப தெரிசனங்கண்டவன் நித்யாநித்யவஸ்து விவேகியாக விளங்குகிறான்.

தேங்காய் முதிரமுதிர இளநீர் சுருங்கி உள்ளேயிருக்கும் மணி முதிர்ந்து கொப்பரையாகிறது போல் ஸ்வரூபதரிசனமானபின் சிந்தை விரிந்து தெளிந்து சிந்தாமணி யாகிறது. சிந்தாமணியே கொப்பரை. கொப்பரையில் தைலமிருக்கிறது போல், சிந்தாமணியில் ஆத்மப்பிரகாசமிருக்கிறது. மணியில் ஒளிபோலிருந்து இந்த ஆத்மப் பிரகாசம் ஆத்மானுசந்தானத்தால் விருத்தி ஞானமாகி, அதன் முடிவில் ஸ்வரூபத்

தையும் விழுங்கித் தானேதானாய்த் தன்மயமாய் நிற்கிறது. இதுவே சமாதி ஞானமாம். "ததேவமாத்ர நிர்ப்பாஸம் ஸ்வரூப சூந்யமிவ ஸமாதி" யென்பது பதஞ்சலி யோகசூத்திரம். "நான்" என்கிற விருத்தி ஞானம் அற்று, தத்பதலக்ஷிய மாத்திரமாய் தியானம் நழுவித் தியேயாகாரமாத்திரமாய் நிற்பது சமாதி. இந்த சமாதி நிலையில் "எட்டெட்டுசித்தியு மெய்துமே" என்று ஓதியுள்ளார் திருமந்திர மோதிய திருமூலதேவர்.

இந்த "எட்டெட்டு சித்தியும்" தானே தானாய் வந்தெய்தினாலும், ஸத்துக்கள் அவைகளை லக்ஷியம் செய்யமாட்டார்கள். ஏனெனில் தத்பதலக்ஷியம் நழுவின விடத்தில் திரிபுடிமுளைக்கும். திரிபுடி உண்டான விடத்தில் சங்கல்பம் முளைக்கும். சங்கல்ப முண்டானால் விகல்பமுமுண்டாகும். சங்கல் விகல்பமுண்டானால் மனம் முளைத்தெழுந்து குரங்குச் சேஷ்டை யெல்லாம் செய்யும். மனோசேஷ்டை யுண்டான விடத்து ஸம்ஸாரபந்தம் வந்தெய்தும். "ஸம்ஸாரம், ஸாகரம், துக்கம்" என்று சொல்லியிருப்பதால், பவஸாகரத்தில் சுகதுக்கமாகிய அலைகளால் மொத்துண்டு வருந்த நேரும். ஆகையால் ஸத்துக்கள் சித்திகளை லக்ஷியம் செய்யார்.

ஆனால் "சமாதியிலெட்டெட்டு சித்தியுமெய்துமே" யென்று திருமந்திரம் கூறுகிறதே! அவைகளின் பிரயோஜனமென்ன? வென்று காரியவாதிகள் கேட்கலாம். காரணமாத்திரமாயுள்ளவர்கள் காரியவாதிகளுக்குச் சமாதானம் சொல்வது முடியாது. ஆதலால்தான் சிவவாக்கியர்,—

"ஐயன் வந்தெனுளம் புகுந்து கோயிலங்கேகொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்பதில்லையே"

என்று தரிசனமகிமையை யெடுத்துக் கூறினார்.

"வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்பதில்லை" யென்றாலும் வையகத்து மாந்தர் (worldly men) வழக்கொழிந்து போகாது. ஏனெனில் வையகமென்பதே வியவகார ரூபமாயிருப்பது. வியவகாரமென்று இருந்தால், அது, உபகாரம் அபகாரம் எனத் துவந்தாகாரமாய் மிதுனப்பட்டு நிற்கும். வியவகாரத்தில் ஒருவனுக்கு உபகாரம் செய்தால் அது மற்றொருவனுக்கு அபகாரமாகவே முடியும். இப்படி உபகாரமும் அபகாரமும் இணைபிரியாத தம்பதிகள் போல் மிதுன சக்தியால் பிணைக்கப்பட்டுத் துவந்தாகாரமாய் நிருத்தம் செய்து வருவதே வியவகாரம். இந்த வியவகாரத்துக் கிருப்பிடமாய் வியவகார புருஷனுக்கு க்ஷேத்திரமாய் இருப்பதே உலகம். உலகத்தையும் அதன் காரியத்தையும் அதிஷ்டித்திருப்பவன் புருஷன். புருஷனை அனுஷ்டித்திருப்பது பிரகிருதி. பிரகிருதி புருஷனிரண்டுஞ் சேர்ந்திருப்பது போகாங்கம். பிரகிருதி புருஷனிலொடுங்கி யிருப்பது ஏகாங்கம். சமஷ்டியிற் போல் வியஷ்டியிலு மிப்படியே. போகாங்கி பிரவிருத்தி மார்க்கத்தை யனுசரித்துக் கிரமமுத்தியால் கடைத்தேறுவான். ஏகாங்கி நிவிர்த்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஸம்ஸாரத்தை யொழித்து ஸத்யோமுத்தியால் கடைத்தேறுவன். பிரவிருத்திமார்க்கம் நிவிருத்திமார்க்கமிரண்டுஞ் சேர்ந்தது ஸநாதனமான தர்மம். இந்த தர்மத்தை யனுசரிக்க ஏகாங்கியாக விருப்பது உசிதமா? போகாங்கியாக விருப்பது உசிதமா? என்பது கேள்வி.

பகவான் ஸனகர், ஸனத்குமாரர் முதலிய குமாரர்களால் நிவிருத்திமார்க்கத்தையும் மரீசி முதலிய பிரஜாபதிகள் மூலமாய் பிரவிருத்தி மார்க்கத்தையும் அனுசரிக்கும் வழிகாட்டி தர்மத்தை ஸ்தாபித்தார். ஆகையால் பிரஹ்மசாரியிருக்கிற வாலிபன் கலியாணம் செய்துகொண்டுரியா (மாணுக்கனு) போகாங்கியா யிருந்தால் ஸத்யத்தை கண்டு பிடிக்கலாமா? கலியாணம் செய்துகொள்ளாமல் ஏகாங்கியாகவிருந்து பிரமசரிய விருதம் அனுசரித்தால் ஸத்யத்தைக்

கண்டுபிடிக்கலாமா? என்று கேட்டால், அவனுக்குஎன்ன பதில் சொல்கிறது?

உபகார, அபகார ரூபமான வியவகாரத்தில் மூழ்கியிருக்கையில் ஒரு மாணுக்கன் வந்து இந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேண்டும்.—"எனக்குத் தானே தானுயிருந்து யோஜித்து முடிவுகட்ட முடியவில்லை. ஐயனே யும்மைச் சரணமென்றடைந்தேன். நீர் சொன்னபடி கேட்பேன். ஸம்ஸாரத்தில் புகச்சொன்னாலும் புகுவேன். பிரஹ்மசாரியா யிருக்கச் சொன்னாலு மிருப்பேன். ஸத்யத்தை யறிந்து அனுபவிக்க வேண்டியது ஒன்றே யென் நோக்கம். அதற்கு இசைந்த வழி யெதுவோ அறியேன். ஆனால் பந்துக்களும் சுற்றத்தாரும் விவாகம் செய்துகொள்ளச் சொல்லி நிர்ப்பந்திக்கிறார்கள். சில வருஷங்களாக அவர்கள் நிர்ப்பந்தத்திலகப்படாமல் தானேதப்பியிருந்தேன். இப்பொழுது நான் தாயுமற்றுத் தந்தையுமற்ற உண்மையு முணராப் பாலனு யிருப்பதால், விவாகம் செய்து கொள்ளும் வயதானாலும் விவாகத்தில் எனக்கு மனது செல்லவில்லை. ஆனால் நிர்ப்பந்தம் செய்யும் பந்துக்களுக்கு பதில் சொல்லவும் சற்று யோஜனையாகவே யிருக்கிறது. ஏனெனில் இறந்துபோன என்பிதா எனது அம்மான் குமாரத்தியை நான் விவாகம் செய்து கொள்ள வேண்டு மென்று வெகு காலமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் இறக்கும் பொழுது அந்த எண்ணத்தோடு தானே பிறந்தார். உயிரோடுள்ளவர்கள் வாக்கை மீறி நடப்பது எனக்கு அவ்வளவு பெரிதாகவில்லாவிட்டாலும், இறந்தவர் எண்ணத்துக்குப் பங்கம் செய்யப் பெரிதும் யோசனையாகவே யிருக்கிறது. ஆயினும் உண்மைவழியில் நடக்க எது அனுகூலமோ அதைக் கிருபை கூர்ந்து சொன்னால் அப்படிநடக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்"—என்று விண்ணப்பம் செய்து கொள்ளும் வாலிபனுக்கு வழியென்ன சொல்கிறது?

"அன்புக்குத் தாப்பாள் கிடையாது. அன்பு நிறைந்தால் அது தானுக வழிந்து ஓடும். அன்பு குறைந்தால் எந்தவழி பற்றிச் சென்றாலும் குறைகுடம் கூத்தாடுந்தான். ஆகையால் அன்புவழிப்பட்டு நடத்தலே சத்திய மார்க்கம்! அன்புவழிப்பட்டார்க்கு ஒரு குறைவும் வராது. ஆகையால் உன் உள்ளன்பு செல்லும்வழியே செல்வாயாகமகனே!" யென்று அருள் கூர்ந்து ஆர்வநிறைந்துரைத்த ஆசானை வணங்கி, ஆத்மபுத்திர னுகிய மாணுக்கன் பின்னும் சொல்கிறான்.

"ஐயனே, எனக்கு இன்னம சித்தம் தெளியவில்லை. மனம் குழம்புகிறது. முன் பின் தெரியவில்லை. எவ்வழி பற்றினாலும் இடையில் எழும் சங்கைகளுக்குச் சமாதானம் சொல்லத் தெரியாது மயங்குகிறேன்."

"மகனே, இருவழியில் ஒன்றைப்பற்றி அவ்வழியிலுதிக்கும் சங்கைகளை யெல்லாம் குறிப்பிட்டுக்கொண்டுவா பிள்ளாய்! உன் ஆக்ஷேபனைகள்தான் என்ன வென்று பார்ப்போம்!"

"சரி! அப்படியேசெய்கிறேன்!" என்று விடைபெற்றுச் சென்ற மாணுக்கன் கட்டுக் கட்டாய் தனக்குத் தோன்றிய சங்கைகளை யெல்லாம் குறித்து தனக்குத்தானே ஆக்ஷேபசமாதானங்கள் சொல்லிச்சொல்லி யலுத்துக்கடைசியில் ஒன்றுந் தோன்றாது சோகமுற்று மூர்ச்சித்தவன் போல் மனம் கலைத்து ஏதும் எண்ணத் தோன்றாது நின்றான். அப்பொழுது தயாளுவான குரு சோகத்தினால் மூர்ச்சித்து விழுந்த அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் ஆத்மோபதேசஞ் செய்ததுபோல், ஏகாங்கியாயிருப்பதா? யோகாங்கியாக விருப்பதா? என்று கேட்ட மாணுக்கனுக்கு தர்மத்தின் ஸ்வரூபத்தை யுபதேசத்து அது ப்ரவிருத்தி நிவிருத்தி யென இருவிதமாகப் பிரிந்திருக்கிறதென்றும், எவ்வழியில் சென்றாலும் முடிவில் பிரவிருத்தி நிவிருத்தி யிரண்டு மொன்றாக வொடுங்குவதேதாமஸ்வரூப மென்றும், கர்மம் ஒழிந்தாலன்றி தன்மயம் விளங்காதென்றும், கர்மமுள்ள மட்டும் தர்மமுண்டு என்றும், கர்மத்தைக் கடக்க தர்மவழியே பற்றி நடக்க வேண்டு மென்றும், கர்மத்தைப் பற்றின்றிக் கடமை யெனக் கருதிச் செய்தால் ஹிருதய சுத்தியுண்டாகுமென்றும், ஹிருதய சுத்தியுண்டானால் அருள்வெளி தோன்றுமென்றும், அருள் வெளியில் மருளெல்லாம் நீங்கித் தெருள் (மனத்தெளிவு) உண்டாகுமென்றும், மனத்தெளிவுண்டானால் மாயை மயக்கமின்றி ஸ்வரூபம் விளங்கு மென்றும், ஸ்வரூபதரிசனத்தில் எல்லாம் வெள்ளிடைமலைபோல் ஐயந்திரிபற ஆத்மானந்தமாக விளங்கு மென்றும் அருட்கண்பார்வையால் சற்சீஷனை நோக்கித் தர்மோபதேசஞ் செய்ய, அருட்பார்வையினால் மனந்தேறின மாணவன்—"ஐயனே! நான் சிந்தாகுல மொழிந்தேன்! மனந்தேறினேன். குருமொழியைச் சிந்தித்துள்ளத் துதிக்கிறதைத் தெரிவிக்கிறேன்'.—என்று சொல்லிச் சென்றான். சிலதினங்கள் கழித்து "ஐயனே! தாங்கள் சொல்லியபடியே யிருந்தது. நானறியாப் பருவத்தே யெனைபறிந்தாண்ட என் ஐயனுக்கு வந்தனம். குருவருளைச் சிந்தித்து ஒருவழியில் மனத்துணிந்தேன். அவ்வழியும் என் ஐயன் உபதேசித்தபடி தர்மவழியே யென்று உள்ளந்தேறி உவகைப் பூக்கலானேன்" என்று எழுதினான்.

—(*)—

Our King-Emperor's Declaration of Faith.

Universal Loving Sympathy.

நமது சக்ரவர்த்தியவர்களின் ஜீவகாருண்யம்.

"No less confident am I in the universal loving sympathy which is assured to my dearest mother in her overwhelming grief. Standing here a little more than nine years ago our beloved King declared that as long as there was breath in his body he would work for the good and amelioration of his people. I am sure that the opinion of the whole nation will be that this declaration has been fully carried out. To endeavour to follow in his (Edward VII) footsteps and at the same time to uphold the constitutional Government of these realms will be the earnest object of my life. I am deeply sensible of the very heavy responsibilities which have fallen upon me. I know that I can rely upon Parliament and upon People of these Islands and of my Dominions beyond the Seas for their help in the discharge of these arduous duties and for their prayers that God will grant me strength and guidance. I am encouraged by the knowledge that I have in my dear wife one who will be a constant help-mate in every endeavour for our people's good."

"யதாராஜாததாப்பிரஜா" என்னும் வாக்கியம் மெய்யே யென்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில் பகவான் மனிதர்களில்தான் ராஜாவா(சந்தோஷிப்பிக்கிறவரா) யிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறபடியாலும், அரசன் இராஜ்ஜிய லக்ஷ்மிக்குத்தலைவனுகையாலும் அரசன் எப்படி யிருக்கிறானோ அப்படியேபிரஜைகளு மிருப்பார்கள். மன்னுயிரைத் தன்னுயிர்போல் காப்பது இராஜதர்மம். அப்படிக் காக்க ஜீவகாருண்யம் வேண்டும். ஜீவகாருண்யம் என்றால் என்ன? ஜீவன்களிடத்தில் கருணை பாராட்டல் ஜீவகாருண்யமாம். கடவுள் கருணாஸ ஸாகரம். கருணாஸம் என்று சொல்வதே "Milk of human kindness" என்று சொல்வதுமாகும். "Universal loving sympathy" என்றாலும் அதுவே. மானிடஜன்ம மெடுத்தவரெல்லாருக்கும் பொதுவாயிருப்பது பிறப்பும் இறப்பும். பிறப் பிறப்புள்ள மனிதர் எல்லாருக்கும் பொதுவாயிருப்பது சுகதுக்கம். "ஸம்ஸாரம் ஸாகரம் துக்கம்" என்றிருப்பதால் பவஸாகரமாகிய ஸம்ஸாரமே துக்க ரூபமாயுள்ளது. இந்த துக்கத்தில் சுகமெங்கே யென்றால் சுகமில்லாத துக்கமும் துக்கமில்லாத சுகமும் உலகத்தில் கிடையாது. உலகம் துவந்த்வாகாரமாய் நின்று மிதுனசக்தியாலியங்குவதாயிருக்கிறது. இப்படிப்பட்ட உலகில் நலமும் தீதும் கலந்தேயிருக்கிறது. இவற்றைப் பிரித்துப் பிரித்துக் கெட்டதைத் தள்ளி நல்லதை வளர்த்து வந்தால் மனது அப்பியாஸ விசேஷத்தால் கெட்டதைத்தள்ளி நல்லதையே பற்றி

நிற்கும். ஒரேபூமியில்கரும்பும் வேம்பும்விளைய, கரும்பு தித்திப்பாகவும் வேம்பு கசப்பாகவு மிருப்பதுபோல், விஷயதை யொன்றாயிருக்க மனோபக்குவத்தால் அதிலிருந்து நல்லதும் பொல்லாதும் தானே யுண்டாகும். தர்ம புத்திரனாகிய யுதிஷ்டர மஹாராஜாவுக்கு உலகத்தில் அதர்மவான்கள் அகப்படுவது அரிதாயிருந்தது. தர்மம் தலையெடுக்க வேண்டுமென்பதைத் தவிர வேறு எண்ணம் அவர் உள்ளத்திற் குடிகொள்ள வில்லை. ஆகையால் மனப் பழக்கம் போல் உலகத்தில் நல்லதும் பொல்லாதும் விருத்தியாகும். "கற்றதோர் கல்வியும் மனப் பழக்கம்" என்றார் ஔவையாரும். கடவுளுடைய பாத பத்மங்களை யறிந்து தொழாவிடின் கற்றதனாலான பயனென்கொல்? என்றார் திருவள்ளுவநாயனாரும். ஆதலால் அன்பும் அனுதாபமும் விருத்தியாகாவிடின் கற்ற கல்விக்குப் பயனிலதாம். "மனப் பழக்கம்" என்றாலும் "சித்த விருத்தி நிரோதனம்" என்றாலும் ஒன்றே. மனதைநிறுத்தப் பழகுவதே பழக்கம். ஏனெனில் மனதுநின்றதானால்,—

"தின்றிடுமேழ்கடலேழ்புவியெல்லாம்
நின்றிடுமுள்ளம்நினைந்தவைதானெக்கும்
நின்றிடுஞ்சக்திநிலைபெறக்கண்டிட
நின்றிடுமேலைவிளக்கொளிதானே
நின்றிடமனத்துளேயில்லடைந்தாளுமே."

என்பது ஸத்யம் ஸத்யம். மனதை நிறுத்தக் கற்றால் ஸர்வஞ்ஞத்துவமும் ஸர்வவல்லமையும் தானே வந்தமையும். ஆகையால் அன்பு நிறைந்த ஹிருதயத்திலிருந்து அனுதாபக் கிரணங்கள் எங்கும் சென்று எல்லாரையும் களிப்பிக்கின்றன. அன்பே சிவமாதலால், அனுதாபமே சிவசக்தி. ஆகையால் இந்த அனுதாபத்தில் யாருக்குப் பூரண நம்பிக்கை யிருக்கிறதோ அவர் சக்தியருள் பெற்றவராகிறார். நமது இந்தியா சக்ரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் அவர்களுக்கு இந்த அனுதாபசக்தியில் பூரண நம்பிக்கையுண்டென்று அவர் மனோவாக்குக் காயங்களால் வெளியிட்டிருக்கிறார்.

முதலாவது, அவர் இந்தியாவுக்கு விஜயமாய் வந்து திரும்பியதும், இந்தியர்களுடைய குணத்தைக் கிரகித்துக்கொண்டு அவர்களை யாள அனுதாபசிந்தை இன்னும் அதிகமாக வேண்டுமென்று சொன்னார். இரண்டாவது அவர் பட்டத்துக்கு வந்தபொழுது தமது பிதா இறந்த துக்கத்தில் தமது தாபாரைக் காத்து ரக்ஷிப்பதாகிய பொதுஜனப் பிரிய அனுதாபத்தில் அவருக்குப் பூரணநம்பிக்கை யிருக்கிறதாகச் சொன்னார். மூன்றாவது, அதே சந்தர்ப்பத்தில் அவருடைய தகப்பனார் பட்டத்துக்கு வந்தபொழுது தேஹத்தில் பிராணனுள்ள மட்டும் தமது பிரஜைகளின் யோகக்ஷேமத்தைநாடி யுழைப்பேன் என்றுசொன்ன வாக்கை யெடுத்துக்கூறி, அவர் அவ்வாக்குப்படி கடைசி வரையில் நடந்து கொண்டது போல் தானும் அவர் வழிபற்றி நடந்து கொள்வதாகச் சொன்னார். நான்காவது, இராஜ்ஜிய பட்டம் கிடைத்ததும் இராஜ்ய பாரத்தின் பொறுப்பை யுள்ளபடி யுணர்ந்தவராய் அதை வகிக்கிறதற்கு வேண்டிய சாதன சாதகங்களை உளவறிந்து கூறித் தேறினவராய்க் காட்டினார்.

ஜனங்களுடைய அனுதாபமும் சகாயமுமின்றித்தான் தனது பொறுப்பான கடமைகளைச் செலுத்த முடியாது என்று உள்ளுணர்வோடு கூறினார். இது ஐந்தாவது லக்ஷணம்.

ஆறாவது, எதற்கும் பகவத் அனுக்ரகம் வேண்டுமென்று ஜனங்களெல்லாரும் பகவான் தனக்கு வேண்டிய புத்தி சத்தியை யளிப்பாரென்று பிரார்த்திக்க வேண்டுமென்றும் அப்படி பிரார்த்திப்பார்களென்று நம்பும் நம்பிக்கையே அவருக்குப் பேராதாரமா யிருக்கிறதென்றும் சொன்னார்.

ஏழாவது,

"முத்தியென்னப்படுமெங்கையைச்சோமுயல்பவரும்
சத்தியென்னப்படுமோசனருளின்றிச்
[சார்தலுண்டோ]"

என்றமூதோர் வாக்கியத்தை யனுசரித்து, தான் என்னதான் தர்ம சிந்தையுடையவனாலும், தன் உள்ளன்பைத் தூண்டத்தக்க தர்மபத்நியில்லாத விடத்து அவை யெல்லாம் வியர்த்தமா மென்றுன்னி யுணர்ந்து தனது தர்மபத்நி தன்னுடைய பிரயத்தனங்களெல்லாவற்றிலும் தனக்கு உற்றவிடத் துதவியாய், உள் விளக்குத் தூண்டுகோலாய் ஸஹதர்மணியாக விருந்துதவுவாளென்று சொன்னார்.

எட்டாவது, தான் பட்டத்துக்கு வந்ததும் இந்தியர்களிடத்தில் தனக்குண்டான பிரீதியை மறக்காமல், தான் சக்ரவர்த்தியானபின் அவர்கள் நடுவே சென்று முடிசூட்டிக் கொள்ள வேண்டுமென்று உள்ளன்பு தூண்ட உவந்து சிந்தித்தார்.

ஒன்பதாவது, தனது நல்லெண்ணம் நிறைவேற எத்தனையோ இடையூறுகள் நேர்ந்ததையும் நீக்கிக்கொண்டு இந்தியாவந்து சேர்ந்தார்.

பத்தாவது, குழந்தையும் தெய்வமும் சொண்டாடு மிடத்திலென்பது பொருந்த, இந்தியாவில் ஜனங்கள் அவர் நல்வரவைக்கொண்டாடிக் குதூஹலப்பட்டதையே ஒரு சந்தோஷமாகக் கொண்டு ஆனந்தித்தார்.

இப்படியாக வுள்ள தசாங்கங்களாலும் நமது சக்ரவர்த்தினியவர்கள் ஜீவகாருண்ய முள்ளவரென்று காட்டியுள்ளார். ஜீவகாருண்ய மெங்கேயிருக்கிறதோ அங்கேயே ஜீவகாரணமான சித்தம் விளக்கும். சித்துள்ள விடத்தில் சிவம் விளங்கும். ஜீவகாருண்யத்தை விற்றுப் பிழைக்கிறவர்களுக்கு அது விளங்காது. ஆனால் அருள்பெற்றவர்களுக்கு விளங்கும்.

"பெற்றதாயைவிற்றடிமைகொள்ளுகின்றபேதைகாள்
சித்தில்லாதபோதுசிவனில்லையில்லையில்லையே!"

என்றார் சிவவாக்கியர். சித்தும் சிவமும் அபேதமாதலால் சித்துள்ள விடத்து சிவமும் உண்டுதான், இப்படியாக சிவசத்தி யருள்பெற்ற நமது சக்ரவர்த்தி தமது ஸஹதர்மிணியாகிய சக்ரவர்த்தினியோடு இந்த மீ 7-உ குருவாரத்தன்று டில்லியில் இராஜகோலத்தோடு பிரவேசித்து ராஜசூயயாகம் செய்து விராட்பட்டம் சூட்டிக்கொண்ட தர்மபுத்திரனைப் போல சிற்றரசர்கள் புடை சூழ்ந்து பணிசெய்ய "டில்லி சக்ரவர்த்தி" யாக முடிசூட்டிக்கொண்டு விளங்குவார். இந்த தர்பார் ஆடம்பரங்களெல்லாம் 7 ம் தேதி முதல் 12-ந்தேதி வரையில் நடக்கும். ஆர்ப்பாட மனிதர்கள் அம்பலத்தாட, அன்பார்ந்த உண்மையர்கள் உள்ளறையிலிருந்தபடி உளவறிந்து எல்லாவற்றையும் சாக்ஷிமாத்ரமாக விருந்து இடையாக்கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஓம் தத்ஸத்.

Pranayama Vidhih.

பிராணயாமவிதி.

(வைத்திபநாத தீக்ஷிதீயப்படி)

பாரத்வாஜர் சொல்லுகிறார்:—

"காயத்ரி ஜெபம் செய்யுமுன் ஏகாக்ரமான மனதுடன் பிராணன்களை கும்பகம் செய்து கொண்டு பிராணாயாமமந்திரத்தை பத்துத்தடவை ஜெபித்துவிட்டு பிறகு காயத்ரீயை ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபக்கிரமமானதுஸர்வ பாபங்களையும் போக்கக் கூடியது. வேறொரு ஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. ஏழுவியாகிருதிகளோடு கூடியகாயத்ரி மந்திரத்தை சிரஸ் என்னும் மந்திரத்தோடு பத்துத்தடவைஜெபித்துவிட்டு அதன்பின் காயத்திரீயை ஜெபிக்க வேண்டும்.

பரத்வாஜர்முன் சொல்லிய வற்றிற்கு ரிஷி முதலியவைகளைச் சொல்லுகிறார்:—

பிரணவத்திற்கு ரிஷி: பிரம்மா; சந்தஸ்: தேவீ காயத்ரீ; தேவதை: பரமாத்மா.

எந்தகர்மத்தில் உபயோகப்படுத்துகிறோமோ அந்தக்கர்மத்தில் 'விநியோகம்' என்று சொல்ல வேண்டியது.

'பிதாமஹஸ்மிருதி' ப்ரணவத்திற்கு ரிஷி: பிரம்மா; தேவதை: அக்கினியும், த்ரையியும் (தரையீ=மூன்று வேதங்கள்); சந்தஸ்: தேவீ காயத்ரீ. ஜெபம் செய்யுங் காலத்தில் ப்ரணவத்திற்கு த்ரையீ தேவதையாகிறது. ஹோமகாலத்தில் அக்கி தேவதையாகின்றார். தியானகாலத்தில் பரப்பிரம்மம். மற்றகாலத்தில் விச்வதேவர்கள். வ்யாஹ்ருதிகளுக்கு முறையே அத்ரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காச்யபர், ஆங்கிரஸர், ரிஷிகள்; சந்தஸ்ஸுகள்: கய்த்ரீ உஷ்ணிக், அனுஷ்டுபு, பிருஹதி, பங்தி, த்ருஷ்டுபு, ஜகதி; தேவதைகள்: அக்கி, வாயு, ஆர்க்கன், வாகீசன், வருணன், இந்திரன், விச்வதேவர்கள். மே வ்யாஹிருதிகளுக்கு சக்திகள் பிராஹ்மீ, ஸ்வாஹீ, ஆவாஹினீ, நித்யா, விலாஸினீ, ப்ரபவாவதீ, லோலா வர்ணங்கள் வெண்மை, கறுப்பு, மஞ்சள், பிசங்கம், கருஞ்சிகப்பு (ஊதாவர்ணம்), நீலம், தங்கத்தின் வர்ணம்.

காயத்ரிக்குரிஷி: விச்வாமித்ரர்; சந்தஸ்: தேவீ காயத்ரீ; தேவதை: ஸவிதா.

சிரஸ் என்னும் மந்திரத்துக்கு ரிஷி: பிரம்மா; சந்தஸ்: அனுஷ்டுபு; தேவதை: பரமாத்மா.

யோகயாஞ்ஞியவல்ஞ்ஞர் ரிஷி முதலியவற்றில் கொஞ்சம் பேதப்படுகிறார். எல்லா வியாஹ்ருதிகளுக்கும் ரிஷி ப்ரஜாபதி. தேவதை அக்கி, வாயு, ஆதித்யன், பிரகஸ்பதி, அப்பு, இந்திரன், விச்வே தேவர்கள். சிரஸ் என்னும் மந்திரத்துக்கு ரிஷி ப்ரஜாபதி; சந்தஸ்: யஜுஸ்; தேவதை: அக்கி, வாயு, சூரியன்; பிராணயாமத்தில் விநியோகம்.

முற் சொல்லிய ரிஷியே நியாஸம் சொல்லுகிறார்:—

பாதம், கணைக்கால், முழங்கால், வயிறு, கண்டம், முகம், சிரஸ், இந்த இடங்களில் முறையே வ்யாஹ்ருதிகளை நியாஸம் செய்யவேண்டும். பிறகு, முதல் வ்யாஹிருதியை கட்டை விரல்களிலும், இரண்டாவதை, தர்ஜ்ஜனிகளிலும், மூன்றாவதை மத்திமங்களிலும், பிறகுகாயத்ரியின் முதல் பாதத்தை அனாமிகைகளிலும், இரண்டாவது பாதத்தை சுண்டு விரல்களிலும், மூன்றாவது பாதத்தை இரண்டு உள்ளங்கைகளிலும் நியாஸம் செய்யவேண்டும்.

பிறகு முதல் வியாஹிருதியை ஹ்ருதயத்திலும், இரண்டாவதைச் சிரசிலும் மூன்றாவதை சிகைகளிலும், காயத்ரியின் முதல் பாதத்தை கவசத்திலும், இரண்டாம் பாதத்தை மூன்று நேத்திரங்களிலும், மூன்றும் பாதத்தை எல்லா திக்குகளிலும், சிரஸ் என்னும் மந்திரத்தை ஸர்வாங்கங்களிலும் நியாஸம் செய்ய வேண்டும்.

இம்மாதிரி நியாஸம் செய்துவிட்டு பிறகு முத்திரை செய்துகொண்டு த்யானத்துடன் பூரகக்கிரமமாய் பிராணயாமம் செய்ய வேண்டும்.

வ்யாஹ்ருதிகளுக்கு முத்திரைகள்:—பத்மம், ஸௌரபைஹீ, சங்கம், வராஹம், வாஸுதேவம், ஆத்மா, ஸம்வித்.

'மந்த்ரதேவதாபிரகாசிகை' என்னும் கிரந்தத்தில் பிரணவத்திற்கு தியானம் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த சுலோகத்தின் அர்த்தம்:—பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், ஒளிபொருந்திய கிரீடம், தோடுவளை, கடகம், கண்டபூஷணம், முத்துமாலை, அரணாள் பாதகடகங்கள், ரத்ன குண்டலங்கள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவரும் சங்கம், சக்ரம், கதை இந்த நான்கு ஆயுதங்களை கையில் தரித்தவரும் பீதாம்பர உடை தரித்தவரும் பாலசூரியன் போன்ற பிரகாசமுடையவருமான விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன்.

வியாஹிருதிகளின் தியானம்:—வியாஸர்சொல்லுகிறார்:—அந்தந்த வியாஹிருதிகளுக்குச்சொல்லிய வர்ணமான † தேஜமுடையவர்களும் அழகும், யௌவனமும், பொருந்தியவர்களும், க்ஷௌமம் (காரால் நெய்த வஸ்திரம்) தரித்தவர்களும், ஸர்வாபரணங்களை அணிந்தவர்களும், திவ்யசந்தனம் பூசிக்கொண்டவர்களும், திவ்யபுஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவர்களும், வெண்மையான உபவீதம் தரித்தமார்பை யுடையவர்களும் பவித்திரம் தரித்த நான்குகரங்களையுடையவர்களும், மலர்ந்த முகபத்மங்களையுடையவர்களும், ப்ரபாமண்டலத்தால் அலங்கரிக்கப் பட்டவர்களும், ஜடாமண்டலத்தில் தரிக்கப்பட்ட சந்திரனுடைய காந்தியால் நிரம்பிய திக்குகளையுடையவர்களும் அபயம் ஜபமாலை, கமண்டலு, வரம், இவைகளையுடைய நான்கு ஹஸ்தங்களை யுடையவர்களுமான வியாஹ்ருதி தேவர்கள் ஹோமம், ஜெபம் இவைகள் ஆரம்பகாலத்தில் த்விஜர்களால் தியானிக்கத் தகுந்தவர்கள்.

காயத்ரீத்யானம்:—முத்து, பவழம், சுவர்ணம், மூன்று கண்களையுடைய (ஐந்து) சிரஸுகளையுடையவளும் சந்திரகலையால் அலங்கரிக்கப்பட்ட கிரீடம் உடையவளும் (24) தத்துவங்களை அர்த்தமாகக் கொண்ட அட்சரங்களாலமைக்கப்பட்டவளும் வரம், அபயம், அங்குசம், சசை (குறடு) வெண்மையான கபாலம், பாசம், சங்கம், சக்கரம், இரண்டு பத்மங்கள் இவைகளை (பத்து) கரங்களில தரித்தவளுமான காயத்ரீயை தியானிக்கின்றேன்.

இம்மாதிரி பிராணயாமம் செய்வதற்கு ஸம்வர்த்தர் பலன் உரைக்கின்றார்:—மூன்று பிராணயாமம் செய்தால் மனஸ், வாக்கு, சரீரம் இவைகளால் செய்யப்பட்ட பாபங்களெல்லாம் உடனே நசிக்கின்றன. யோகயாஞ்ஞயவல்கியர் சொல்லுகிறார்:—சூரியோதய காலத்தில் 5 பிராணயாமம் செய்தவர்கள் நிர்மலர்களாகி, பரம ஸுகிருதமுடைய ஸத்துக்கள் போல் சுவர்க்கலோகத்தை அடைகின்றார்கள்.

மநு சொல்லுகிறார்:—பிராமணனுக்கு வியாஹிருதி ப்ரணவங்களோடு கூடிய விதிப்படி செய்யப்பட்ட 3 பிராணயாமங்கள் மேலான தபஸு என்று கொள்ளவேண்டும். உலையில் வைத்து ஊதப்பட்ட உலோகங்களில் மலங்கள் எப்படி எரிக்கப் படுகின்றனவோ அப்படியே இந்திரியங்களின் தோஷங்களெல்லாம் பிராணயாமத்தால் எரிக்கப்படுகின்றன. வ்யாஹிருதி ப்ரணவங்களோடு கூடிய 16 பிராணயாமங்கள் தினம் தவறாமல் ஒரு மாதம் செய்யப்பட்டால் பிரம்மஹத்தி பாபம் செய்தவனையும் பரிசுத்தமாக்கி விடுகின்றன.

சௌனகர் சொல்லுகிறார்:—ஏகாக்ர சித்தமுடையவனாய் விதிப்படி மூன்று பிராணயாமங்கள் செய்தால் ஒரு அஹோராத்ரத்தில் செய்த பாபம் உடனே நசித்து விடுகிறது. 12 பிராணயாமங்களால் ஆத்மசுத்தி வருகிறது. 24 பிராணயாமங்களால் மஹா தேஜஸ்வி ஆகிறான்.

யமன் (என்கிற ஸ்மிருதி கர்த்தர்) சொல்லுகிறார்:—பத்து ப்ரணவங்களோடு கூடியதான 4 பிராணயாமங்கள் 14, ஒரு பாதம் விடாமல் செய்தவன் பிரம்மஹத்தி உபபாதகங்கள் இவற்றிலிருந்து விடுபடுகிறான். (பிராணயாம மந்திரத்தில் பிரணவோச்சாரணம் பத்து முறை செய்யவேண்டி வருகிறது.)

வ்யாஹிருதி, ப்ரணவத்தோடு கூடிய காயத்ரியை, சிரஸ் என்னும் மந்திரத்தோடு எப்பொழுதும் (தினம் தவறாமல்) எவர் ஜபிக்கின்றாரோ அவர்க்கு ஓரிடத்தும் பயமில்லை.

யாஞ்ஞயவல்கியர் சொல்லுகிறார்:—எவனொருவன் இப்பொழுது சொல்லிய ஏழு வ்யாஹிருதிகளைக் கும்பகத்தோடு ஸ்மரிக்கின்றானோ அவனால் ஏழு உலகங்களும் உபாஸிக்கப் பட்டதாகும்.

† "சுவேதச்யாம பீதபீசங்க லோஹிதநீல கனகவர்ணா" என்றபடி அவைமுறையே வெளுப்பு, கறுப்பு, மஞ்சள், பிங்களவர்ணம், செம்பு, நீலம், ஸ்வர்ணவர்ணம் என்கிற நிறத்தோடு கூடியவை.

டவைகளாய் ஆகின்றன. அவ்வெல்லா உலகங்களிலும் சுவேச்சா ஸஞ்சாரம் ஸம்பவிக்கிறது. 16 அட்சரங்களையுடைய மந்த்ரமானது காயத்ரி சிரஸு என்று சொல்லப்படுகிறது. அதை ஒரு தரம் ஜபித்த பிராஹ்மணன் ஸம்ஸாரத்திலிருந்து கூட விடுபடுகிறான்.

* * * *

இங்கே ஜபம் என்பதற்கு அர்த்தம் "ஜந்ம கர்மஹரோயஸ்மாத் தஸ்மாஜ்ஜப இதில் மிருதஃ" என்னும் வாக்கியத்தைக் கொண்டு அர்த்தம் செய்துகொள்ள வேண்டியது. "ஜகாரோஜந்மவிச்சேதஃ பகாரஃ பாபநாசநஃ" ஜந்மத்தையும் பாபத்தையும் போக்குவது எதுவோ அது ஜபம். அந்த ஜபம் "மந்திரங்கள் உம்மூளே மதித்த நீரு மும்முளே" யென்றடி ஆந்தரத்தியான வித்தி ரூபமாயுள்ளது.

ஸப்த வ்யாஹிருதிகளைக் கும்பகத்தோடு (அதாவது அஜபமாக) த்தியானம் செய்வதால் ஸப்த லோகங்களின் ஞானமும் ஸப்தலோக ஸஞ்சாரமாகிய அனுபவமும் வித்திக்கிறது என்பது யோகயாஜ்ஞவல்கியருடைய அனுபவ வாக்காயிருக்கிறது. ஸப்தலோக ஸஞ்சாரம் வித்தித்தவனுக்கு ஸப்த லோகங்களையும் தேஹமாகக் கொண்டு அந்த லோகங்களுக்கெல்லாம் அந்தர்யாமியாயும் அவைகளை அதிக்கிரமித்தவளாயு மிருக்கிற அதிஷ்டான தேவதையாகிய காயத்ரீ தேவதையின் தரிசனம் வித்திக்குமென்பது ஆன்றோர் அனுபவ உறுதி.

இப்படி ஸப்தவ்யாஹிருதிகளையும் ஜபித்து ஸப்தலோக ஸஞ்சாரம் சித்திக்கப்பெற்ற அறிஞர் அக்ஷரஸ்வரூபியும் "பிரஹ்மஸம்மிதம்" என்றதனால் பிரஹ்மத்துக்கு ஸமானமானவளுமான "ஓஜோஸி" முதலான மந்திரங்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட வரதையான காயத்ரீ தேவியின் தரிசனம் செய்து கொண்டிருப்பர். இப்படி ஸதா காயத்ரீதரிசனம்செய்து கொண்டு அந்த பிரஹ்மதேஜஸோயானவர்களான சேதனர் (அறிஞர்) ஸதா புகழ்கின்ற உண்மையான சோதியை யாவனொருவன் தியான யோகத்தால் நிதித்தியாஸனம் செய்து தியேயாகாரவித்தி விசேஷத்தால் அந்தக் சோதியை அருந்தினவனாகிறானோ அவன் காயத்ரீசரீரத்தை யுணர்ந்தவனாய் அந்த சரீரத்தையுமதிக்கிரமித்திருக்கும் காயத்ரீ சிரஸைத் தியானம் செய்ய அருகனும் அதிகாரியும் ஆகிறான்.

இந்த காயத்ரீ சிரஸானது 16-அக்ஷரங்களையுடைய மந்திரமாயிருக்கிறதென்று யோகயாஜ்ஞவல்கியர் சொல்கிறார். சோடசாக்ஷரம் பொருந்தினதாய் (16 நித்ய கலைகளால் பூரணமானதாய்) ஷோடசீ மந்திரத்துக்கு சாமானமானதாய் விளங்கும் இந்த காயத்ரீ சிரஸை காயத்ரீ தரிசனம் பெற்ற எவனொருவன் (அதாவது, காயத்ரீ மந்திர திருஷ்டாவான எவனொருவன்) ஸங்கல்ப விகல்பமற்று (சித்த விருத்தி நிரோதமான உன்மநவினால்) ஒருதரம் யோக ஸம்யம வித்தியால் ஜபிக்கிறானோ (அஜபா என்று சொல்லும் நிர்விஷய மநவினால் தியானம் செய்கிறானோ) அவன் (அந்த மந்திர திருஷ்டாவாகிய காரணத்தினால்) உடனே (எதனாலும் தீராத) ஸம்ஸாரபாகிய துக்க ஸாகரத்திலிருந்து கரையேறினவனாகிறான் என்று யோகயாஜ்ஞ வல்கியர் சொல்கிறார். "ஸம்ஸாரத்திலிருந்து கூட" என்றதனால் ஸம்ஸார நிவிருத்தியின் அருமையும் ஷோடசாத்மகமான காயத்ரீ சிரஸின் பெருமையுங் கூறப்பட்டது, இது அன்றும் இன்றும் என்றும் உண்மையே யென்பதற்கு ஸ்வாநுபவச் செல்வர்களெல்லோரும் சாக்ஷிபகர்வார்கள்.

நவராத்திரி பூஜா விதானத்தில் (அக்டோபர் மீத்து விவேகசிந்தாணியைப்பார்க்க) "காயத்ரீ மார்க்க தரிசனம்" என்னும் தலைப்பின் கீழ் சொல்லியிருக்கிற அஜபாகாயத்ரீ, துரீயகாயத்ரீ யென்னும் பாடல்களிரண்டையும் கவனித்துப் பார்க்க இதனுண்மை விளங்கும்.

அஜபாகாயத்ரீ

"எங்குநிறையுன்வடிவையுள்ளத்திருத்திக்
கங்குல்பகலறவாடுநல்லரவையெழுப்பியுன்
அங்குசபாசத்தால்ஐந்தொடுநாலையுமறப்படுத்தி
துங்கமுறவெங்குநிறையாலயங்கடந்து
பங்கமிலாதெங்குநிறை யம்பரத்துடுபோய்—"

என்றதனால் காயத்ரீதரிசனமும் பின்வரும் துரீய காயத்ரீ மந்திரத்தால் காயத்ரீ சிரஸின் ஜபபலனான துரீய காயத்ரீ தரிசனமும் கூறப்பட்டுள்ளது.

துரீய காயத்ரீ

"மாதவர்புகழாறுமாநிலங்கடந்து
யாதவர்புகழ்மந்தைமாவெளிகடந்த
சேதனர்புகழுண்மைச்சோதியையருந்தி
வேதனைக்கெட்டாதவீட்டுச்சிபட்டேன்.
நாதனைக்கண்டிறங்கல்யோகியாமே."

இதனால் சிவயோக மாகிய நல்யோகம் கூறப்பட்டது. பிரணவத்தோடு கூடிய வியாஹிருதிகள், காயத்ரீ, காயத்ரீசிரஸ் ஆகிற இம்மூன்று பாதங்களையும் உபாஸித்துண்மையுணர்ந்தவர்கள் அகார, உகார, மகாரரூபமான பிரணவோபாசனையின் பலனையே பெறுகிறார்களென்பது ஸித்தாந்தமான உண்மை. "வேதாந்த ஸித்தாந்த ஸமரஸ நன்னிலைபெற்ற வித்தகச் சித்தர் கணம்" சாக்ஷியாக இது ஸத்யம், ஸத்யம், ஸத்யம்.

ஓம்தத்ஸத்.

The King Emperor's Coronation Durbar Address.

காரனேஷன் தர்பாரில் சக்ரவர்த்தியார் கூறிய திருவாக்கு.

(*)

ஹிந்து, பகம்மதிய, மொகலாய அரசர்கள் தலைமை ஸ்தானமாய்க் கொண்டு ராஜ்யபாரம் பண்ணிவந்த அஸ்தினபுரமென்னும் டெல்லிமாநகரத்தில் இம்மதி 12உ மிகவும் விமர்சையாய், நம்மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியாரின் கிரீடதாரண மகோற்சவம் நிறைவேறிற்று. அங்கிருந்து வரும் தந்திச் செய்திகளைக் கவனிக்கும்போது இது பரியந்தம் இந்தியாவில் எவரும் கண்டிராத மனோஹரமான காட்சியே அந்த நகரத்தில் உருவெடுத்து வந்ததோ என்னவோ என்று சொல்லும்படி கூடத் தோன்றுகின்றது. ஜனசமுகமே ஸாகரம்போல் நாற்புறங்களிலும் நின்று சக்கிரவர்த்தியாரின் முடிசூட்டலைக்கண்டு மனமகிழ்ச்சி கொண்டிருக்குமச்சமயத்தில் தம்முடைய ஏகசக்கிராதிபத்தியத்தின் கீழ் லக்ஷக் கணக்கான பிரஜைகள் புன்சிரிப்புடனும் ஆவல் மிகுந்து தம்மை நோக்கியவாறு இருக்கும்போது அது எவ்வளவு தூரம் கருணைக்கிடங் கொடுக்கும் பாருங்கள். ஜாதி, மதம், நிறம்முதலான வித்தியாசங்களைக் கவனியாமலே தமது ஆட்சிக்குட்பட்ட அபிமானங் கொண்ட குடிகள் என்பதை அரசருணர்ந்துவிட்டால் அதனிலும் திருப்தியைக் கொடுக்கக் கூடியது வேறென்னை? பாராளும் மன்னரிடமிருந்து நாம் எவ்வளவு எதிர்பார்த்தோமோ அதற்கு மதிகமாகவே நமக்குப் பலன் கிட்டிவிட்டது. தர்பாரில் இம்மதி 12உ மங்களவார தினத்தில் கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து அவர் மொழிந்த திருவாக்கே நாம்மேலே சொல்லியதற்கு அத்தாட்சியாகும்.

சக்ரவர்த்தியார் சிறப்புடன் விளங்கும் தர்பார் மண்டபத்தில் தம் சக்கிரவர்த்தினி சமேதராய் ஸ்வர்ண வஜ்ரா வைடூர்யங்களினால் இழைக்கப்பெற்ற வெள்ளி சிம்மாஸனங்களில் வீற்றிருந்ததை வருணிப்பது நேரிற்பார்த்தவர்களுக்கே இயலுமன்றி மற்றெவர்க்கும் இயலாது. சக்ரவர்த்தியார் திருவுளமிகுந்து தர்பாரில் மகா ஜனங்கள், துருப்புகள், இந்திய மன்னர்கள், பிரதிநிதிகள் முதலினோர் கூடிப்புடைசூழ்ந்து நிற்குமச்சமயத்தில், வெடிகள் தீர கரகோஷம் கோஷிக்க, பாண்டு வாத்தியம் முழங்க, அதன் மத்தியில் சக்கரவர்த்தியார் தர்பாரை யாரம்பிக்க ஆஜ்ஞாபித்துப் பின் தாமெழுவே, ஜனங்களெல்லோரும் அரசரது திருவாக்கிலிருந்து வரப்

போவதைக் கேட்கும் ஆவலோடு மௌனமாயிருக்க, சக்கிரவர்த்தியார் அடியிற் குறிப்பிட்டவாறு பேசினார்:—

"இன்று இங்கே உங்கள் மத்தியில் நான் நிற்பது எனக்கு உண்மையான திருப்தியையும் நன்றியுணர்ச்சியையும் கொடுக்கின்றது. இந்த வருஷமெல்லாம் மகாராணி சக்ரவர்த்தினிக்கும் எனக்கும் அநேக பெருஞ் சடங்குகளும் எப்போதுமில்லாத உழைப்பும் பளுவாயிருந்த போதிலும் அதனால் எனக்கும் சந்தோஷமே உண்டாயிற்று. இந்தியாவை முன்னொரு தடவை வந்து பார்த்து அதன் ஞாபகம் எங்கள் மனதில் நன்றியை யுண்டுபண்ணி அப்போது இந்த தேசத்தை நாங்கள் அன்புடன் சிந்திக்கத் தெரிந்து கொண்டோ மாதலால், காலத்தையும் தூரத்தையும் பாராமல் மறுபடியும் வந்து பார்க்க உற்சாகமுண்டாயிற்று. இங்கிலாந்திலிருந்து இந்த நீண்ட யாத்திரை செய்ய திவ்யமான எண்ணங்களோடு புறப்பட்டோம். இங்கே வந்த பிறகு எங்கள் சொந்த தேசத்து அன்பைப்போல இங்கும் அன்பு பாராட்டப்படுகின்றது. இப்படிச் செய்ததனால் சென்ற ஜூலை மாசம் தெரிவித்த செய்தியில் கண்ட விருப்பப்படி நடித்தி யிருக்கிறேன். அந்தச் செய்தியில் இங்கிலாண்டில் வெஸ்டமினிஸ்டர் ஆலயத்தில் நான் செய்துகொண்ட மகுடாபிஷேகத்தை நேரில் உங்களுக்கு அறிவிப்பேன் என்று விளம்பரப் படுத்தினேன். அப்போது கடவுள் கிருபையால் என் முன்னோர்கள் தரித்த கிரீடமானது சகலஉற்சவச்சின்னங்களுடன் பழமையான சம்பிரதாயப்படி என்கிரசில் வைக்கப்பட்டது. மகாராணிச்சக்ரவர்த்தியுடன் நான்இங்கே வந்து இந்தியாவிலிருக்கும் பக்தியுள்ள மன்னவர்களுக்கும் விசுவாசமுள்ள ஜனங்களுக்கும் எங்களுடைய அன்பைக் காட்டக் கவலை கொண்டிருக்கிறேன். இந்திய சத்ராதிபத்தியத்தின் க்ஷேமமும் சந்தோஷமும் எங்கள் இருதயத்துக்கு எவ்வளவு அருமை யென்பதைக் காட்டவும் கவலைகொண்டிருக்கிறேன். என்னுடைய மகுடாபிஷேகக் கொண்டாட்டத்திற்கு வர இயலாதவர்களை டெல்லிமாநகரத்தில் சேர்த்து அந்தக் கொண்டாட்டத்தில் பங்கு பெறச் செய்யவும் விரும்புகிறேன்.

"இந்தப் பெருங் கூட்டத்தைப் பார்க்க எனக்கும் சக்கரவர்த்தினிக்கும் உண்மையான சந்தோஷமும் திருப்தியும் உண்டாகின்றன. என்னுடைய கவர்னர்களையும், நம்பிக்கை பெற்ற உத்தியோகஸ்தர்களையும், என்னுடைய மேலான மன்னர்களையும், ஜனப்பிரதிநிதிகளையும், என் இந்திய சமஸ்தானங்களைச் சேர்ந்த ராணுவங்களின் டெபுடேஷன்களையும், இந்தக் கூட்டத்தில் பார்த்துச் சந்தோஷமும் திருப்தியும் அடைகிறேன். அவர்கள் எனக்கு பக்தியுடன் செலுத்த விருப்பும் சேவஞ்சலியையும் நிஷ்டையையும். மனப்பூர்வமான திருப்தியுடன் நான் நேராகப் பெறுவேன். சரித்திரத்தில் நிலைபெறக்கூடிய இந்த சமயத்தில் மன்னர்களும் ஜனங்களும் ஒற்றுமைச்சியையும் அன்புவாய்ந்த நல்லெண்ணத்தையும் பாராட்டி என்னோடு ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்களென்ற எண்ணம் என்மனதில் ஆழப் பதிகின்றது. இந்த உணர்ச்சிகளுக்கு அறிகுறியாக என்னுடைய விசேஷ தயவையும் மதிப்பையும் காட்டும் குறிகளால் என்னுடைய மகுடாபிஷேக சம்பவம் ஞாபகத்திலிருக்கும்படி செய்ய விரும்புகிறேன்: இன்று இன்னும் சில நேரம் பொறுத்து இவைகள் இன்னவையென்று இந்தக் கூட்டத்துக்கு என் கவர்னர் ஜெனரலைக் கொண்டு சொல்லுவிப்பேன். முடிவில் என்னுடைய பூஜியர்களான மூதாதைகளால் உங்களுடைய சுதந்திர பாத்திபங்களைக் காப்பதாகச் செய்த உறுதிகளை நான் புதுப்பிக்க இந்த சமயம் வாய்த்ததென்று நான் சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய க்ஷேமம், அமைதி, திருப்தி இவைகளைப் பற்றியும் நான் கொள்ளும் கவலையைத் தெரி

விக்கச் சாயம் நேரிட்டதென்றும் சந்தோஷப்படுகிறேன் என்னுடைய பிரஜைகளுக்குக் காவலாய்க் கடவுள் அருள் இருந்து அவர்களுடைய சந்தோஷத்தையும் வளப்பத்தையும் முற்படுத்த என்னாலியன்ற முயற்சியில் உதவி புரிவாராக. இங்கிருக்கும் சமஸ்த மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் எங்களுடைய அன்புவாய்ந்த வாழ்த்துக்களைச் செய்கிறோம்."

இந்தியாவுக்கு வந்து தம்மில் விசுவாசம் கொண்ட இந்தியப் பிரஜைகளின் மத்தியில் தாம் சக்கிரவர்த்தியென மகுடாபிஷேகம் செய்துகொள்ள வேண்டுமென்று அவருக்கு அபிலாஷை ஏற்பட்டதற்கு இந்தியரிடத்திலுள்ள அன்பே காரணம். வேல்ஸ் இளவரசராயிருந்தபோது இவர் இங்கு விஜயம் செய்திருந்த காலத்தில் ஹிந்து மஹாஜனங்கள் அன்னாரிடம் காட்டிய ராஜபக்தியும் ராஜவிசுவாஸமும் மனப் பூர்வமானவை என்றே அவர் மனதில் பட்டது. அவர் இந்தியர்களை வேறு தேசஸ்தர் என்றாவது அந்நியரென்றாவது கருதவேயில்லை. இங்கிலாந்தி லுள்ளவர் தம்மை எப்படி அரசரென்று பாவிக்கிறாரோ அதுபோலவே இந்தியப் பிரஜைகளும் தம்மை அரசராகக் கொண்டாடும்போது அவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாச பேதமிருப்பதாகக் கருதுவது உசிதமாகுமா? உசித மாகாதென்பதை சக்கிரவர்த்தியாரவர்கள் நிச்சயித்து இந்து மகாஜனங்களுக்கும் தம்மிடம் அன்பு பூண்ட இந்தியச் சிற்றரசர்களுக்கும் தம்முடைய பிரேமையைத்தெற்றெனப் புலப்படுத்தவே சக்கிரவர்த்தியா ரவர்கள் இந்த தர்பாரை நடத்த இசைந்தார். தாம் இந்தியாவுக்கு வந்து மகுடாபிஷேகம் செய்துகொள்ள வேண்டுமென்ற விருப்பத்தை இங்கிலண்டில் வெளியிட்டபோது இதென்ன வழக்கமென்று சிற்சிலர் பலவிதமான ஆக்ஷேபங்கள் சொல்லிப்பேசினார்கள். ஆனால் அஃதெதற்கும் செவியாமல் இந்தியாவில் கிரீடதாரணம் செய்துகொள்ளவேண்டும், இந்தியர்க்கு நமது திருவுளத்தைத் தெரிவிக்க வேண்டும், இந்தியர்க்கும் க்ஷேமமுண்டாகட்டும் என்று தாம் கோருவதாக அவர்களறியட்டும், என்னும் இவ்வுன்னதமான உத்தமசிந்தை கொண்டவராய்த் தாம் விஜயஞ் செய்ததாக தமது திருவாக்கினாலே மொழிந்தருளினார். கடைசியில் தம்மை அண்டி நிற்கும் குடிகள் சுகஜீவனஞ் செய்யுமாறும் அதுவிஷயமாய் தாம் அவர்களுக்குப் பேருதவி செய்வதிலும் கிருபை புரியவேண்டுமென்று எங்கும் நிறைந்த கருணாகர மூர்த்தியான ஸர்வேசுவரனைப் பிரார்த்தித்து சக்கிரவர்த்தியாரவர்கள் தர்பாரை முடித்தார். இவ்வளவு சுபசூசகங்களோடு கூடின இந்த தர்பாரை இந்தியர்கள் மறப்பார்களா? இது நம்மவருடைய மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து பாரம்பர்யமாய் நம்பின் வரும் ஸந்ததியால் படித்துப் போற்றும் சரித்திர விஷயங்களில் ஒன்றாய்ப் பிரகாசிக்கு மென்பது எமது துணிபு.

ல. அநந்தய்யர்.

—(:-:)—

Coronation Boons.

முடிசூட்டு நன் கொடைகள்.

டில்லிமாநகரில் நடைபெற்ற மகநீயமான முடிசூட்டு மகோற்சவம் எங்காளும் ஜனங்களுடைய மனவிலிருந்து மறையாதிருக்கும்படி மகாராஜா சக்கிரவர்த்தியவர்களால் தர்பார் முடிவில் நன்கொடைகள் இந்தியப் பிரஜைகளுக்கு அளிக்கப்பட்டன. நன்கொடைகள் என்றால் ஒன்று, இரண்டா, அல்ல, பல நன்கொடைகள் கொடு பட்டிருக்கின்றன. இதைக் கேட்கும் ஜனங்கள் ஆனந்த பரிபூரித மடைந்து ஆங்காங்கு குதூஹலங்கொண்டிருக்கிறார்கள். அந்த நன்கொடைகள் இன்னின்னவை யென்று சுருக்கமாய் இதனடியிற் சொல்லுவோம்.

படிப்புக்காக 50 லட்ச ரூபா.

தேசத்தில் கல்வி விருத்தியாகவேண்டுமென்று மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே

போன்ற பிரமுகர்கள் பாடுபட்டுவருவது நமது நண்பர்கள் உணர்ந்த விஷயம். மற்றும் ஆங்காங்குள்ள சமூகத்தவரும் தேசாபிவ்ருத்திக் கெடுத்தது படிப்பே யாதலால் அது விஷயத்தில் இன்னும் சௌகரிய மிருக்கவேண்டுமென்றும், அவ்விதம் சௌகரியம் இருக்க வேண்டுமானால் அதற்கு முக்கியமாய் வேண்டுவது பணமே யென்றும் அபிப்பிராயப் பட்டிருந்தார்கள். அதற்கிணங்கவே சமயம் எப்போது கிட்டுமென்று பிரஜைகள் போரவல் கொண்டிருந்ததற்கிணங்க மகாராஜா சக்கரவர்த்தியாரவர்கள் கல்விக்குப் பணம் அளிக்கவேண்டு மென்னும் இஷ்டத்தின்படியே, இந்தியா மந்திரியாரின் சம்மதமும் ஏற்று, இதன் பொதுவான நன்மையையும் கருதி பொது ஜனங்களுடைய புத்தி விசாலிக்குமாறு கல்வி கற்பிப்பதன் நிமித்தமாய் 50 லட்ச ரூபா தனியே பெடுத்துவைக்க கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்திருக்கிறார்கள். இத்துடன் பிரதி வருஷத்திலும் கல்வியபிவிருத்திக்காக விசேஷ பணமும் உபகரிக்கப்படும்.

அரைமாதச் சம்பளம் இனும்.

இராஜ சக்கரவர்த்தியவர்களுடைய கடற்படை, தரைப்படை யாட்களின் நன்றியும் பக்தியும் மிகுந்த வேலைபைக் கருதி மாதம் 50 ரூபா சம்பளத்துக்கு மேற்படாதவர்களுக் கெல்லாம் அரைமாதச் சம்பளம் இனும். இதோடு கூட கவர்ன்மெண்ட் ஸர்வீஸிலுள்ளவர் தத்தம் பொறுப்புள்ள கவலைகளை விசுவாஸத்துடன் நிறைவேற்றி வருவதை நன்மதித்து மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத பர்மனென்ட் (காயமான) உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அரைமாதச் சம்பளம் இனும் கொடுக்க வேண்டுமென்று சக்கரவர்த்தியார் ஆக்ஞை பண்ணியிருக்கிறார்.

இந்தியர்களுக்கு "விக்டோரியா கிராஸ்"

இது முதல் சக்ரவர்த்தியாருடைய இந்திய சைனியத்தில் ஆட்களாயும் ரிஸர்வ்களாயும் உள்ளவர்களும் ராயல் நேடிவ் ஆபிஸர்களும் சௌரியத்தின் பொருட்டு "விக்டோரியா கிராஸ்" என்ற அந்தஸ்து பெற உரியவாகளாவார்கள் என்றும், இராஜ சக்ரவர்த்தியின் முடிசூட்டு தர்பாராகிய இது முதல் 10-வருஷத்தில், "ஆர்டர் ஆப் பிரிடிஷ் இந்தியா" மெம்பர்கள் முதல் வகுப்பில் 52-பேர் அதிகமாகும்படி செய்வதோடு, இக் கொண்டாட்டங்களின் அறிகுறியாக, புதியவாய் முதல் வகுப்பில் 15-ஸ்தானங்களும், இரண்டாவது வகுப்பில் 19-ஸ்தானங்களும் உடனே ஏற்படுத்தப் படுமென்றும், இதுமுதல் எல்லைப்புற மிலிஷியா படையையும் மிலிடெரி போலீஸையும் சேர்ந்த இந்திய ஆபீஸர்கள் மேற்சொன்ன அந்தஸ்தைப் பெற அருகர்களாவார்க ளென்றும், நெடுங்காலம் கௌரவத்துக்குரிய விதமாய்ச் சேவகம் செய்து, இராஜசக்ரவர்த்தியின் இந்திய சேனையில் நேடிவ் ஆபீஸர்களா யுள்ளவர்களுக்கு அவரவர்களுக்குத் தக்கபடி, ஸ்பெஷலாக நிலமோ நிலவரி வருமானமோ, இனும் கொடுத்து, அல்லது நிலவரி தள்ளுபடி செய்து சன்மானம் செய்யப்படுமென்றும், இந்தியன் - ஆர்டர் ஆப்-மெரிட்டில் உள்ளவர்களில் மரணம் நேர்ந்தால், மரித்தவரின் மனைவிக்கு மூன்று வருஷங்களுக்கு ஸ்பெஷல் அலவென்ஸ் கொடுப்பதாக இப்போதிருப்பதை மாற்றி, இந்த தர்பார் முதற்கொண்டு, அப்படி புருஷனையிழந்த ஸ்திரீகளுக்கு, அவர்கள் இறக்கும் வரையில், அல்லது மறுவிவாகம் செய்துகொள்ளும் வரையில் அந்த அலவன்ஸ் கொடுக்கப் படுமென்றும் இராஜ சக்கரவர்த்தி நியமித்திருக்கிறார்.

பட்டம் பெற்றோர்களுக்கு அடையாளக் குறிகளும் கலைவல்லோர்க்குப் பென்ஷனும்.

திவான் பகதூர், ஸர்தார் பகதூர், கான் பகதூர், ராய் பகதூர், கான்சாகிப் ராய்சாகிப் ராவ்சாகிப் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளவர்களுக்கும் இனிப் பெறப்போகிறவர்களுக்கும் கௌரவத்துக்கும் மதிப்புக்கும் அறிகுறியாக அவரவர்களுக்குத் தக்கவாறு, அடையாளக் குறிகள் கொடுபட வேண்டும் என்றும், மஹா மகோபாத்தியாயர், ஷாம்ஸுல் - உல்மா என்னும் பயபக்திக்குரிய பட்டங்களை இப்போது பெற்றவர்க ளெல்லோருக்கும், அல்லது இனிப் பெறுவோர்களிற் சிலருக்கு, இந்தியாவின் புராதன கலையின் புகழை உத்தேசித்து, வருஷவாரி பென்ஷன் கொடுக்கப்பட வேண்டுமென்பதும் சக்கரவர்த்திபெருமானின் கருணையான ஆக்ஞை.

வடமேற் கெல்லைப் புறத்தில் பூதானம்.

இந்த தர்பார் ஞாபகார்த்த மாகவும், பொது சேவகத்தில் சிறந்திருப்பதை யுத்தேசித்தும், வடமேற் கெல்லை மாகாணத்திலும் பலுசிஸ்டானிலும் நிலங்கள் வரியின்றி, கொடுக்கப் பெற்றவர் தம் ஜீவ்பகால முழுதுமோ அவர் ஜீவ்யகாலத்துக் கப்புறமும் இன்னொருவர் ஜீவ்யகால முழுமையுமோ லோகல் கவர்ன்மெண்ட் இஷ்டப்படுகிறபடி, அல்லது கவர்ன்மெண்ட் இப்போது கைப்பற்றியிருக்கும் நிலங்கள் மறுபடி கொடுத்து விடப்படும்.

"நாஜிராஜு" இனிச் செலுத்தவேண்டாம்.

தம்முடைய ராயல் இந்தியன் பிரின்ஸ்களின் க்ஷேமத்தைப் பெருமனதுடன் கோரி, அவர்களின் தேச ஆதிக்கத்துக்குப் புதிதாய் ஒருவர் வரும்தோறும் செலுத்த வேண்டிய 'நாஜிராஜு' தொகை இனிச் செலுத்தப்பட வேண்டியதில்லை யென்றும், நியாயாதிகாரம் பெறாத கத்தியவார் குஜராத் ஆகிய பிரதேசங்களிலுள்ள சிறு ராஜ்யங்களும், மீவாரில் பூமியா சீப் (Chief) களும் கவர்ன் மெண்டுக்குக் கொடுக்க வேண்டிய சில்லரைக் கடன்கள், இந்தியாக் கவர்ன்மெண்டின் உத்தரவுப்படி முழுமையுமோ ஒரு பாகமோ, தள்ளுபடி செய்யப்படு மென்றும், இம்பீரியல் சர்வீஸ் துருப்புகளைக் கௌரவிக்கும் பொருட்டு பிரிடிஷ் இந்தியா ஆர்டரில் (அந்தஸ்தில்) சில அதிகஸ்தானங்கள் ஏற்படுத்தப்படும்.

கைதிகள் விடுதலை.

இராஜ-சக்ரவர்த்தி கிருபையையும் இரக்கத்தையும் மேற்கொண்டு, இப்போது குற்றங்கள் (Crimes and misdemeanours) செய்து சட்டப்படியுள்ள தண்டனையை அனுபவிக்கும் சில கைதிகளைச் சிறையினின்று விடுவிக்கும்படியும், சிறுதொகை கடன் பட்டவராயும் மோசம் செய்யாது ஏழைமையால் சிறைப்பட்டவராயும்உள்ள ஜிவில் டெட்டர்க ளெல்லாரையும் விடுவித்து, அவர்கள் பட்ட கடன்களை (கவர்ன்மெண்ட்) கொடுத்து விடும்படியும் உத்தரவிடத் திருவுளங் கொண்டிருக்கிறார்.

வங்காள மாகாண பிரிவினை ரத்து.

தர்பார் முடிவு நேரத்தில் சக்ரவர்த்தியார் தம் மந்திரிகளுடையவும் கவர்னர் ஜனரலுடையவும் ஆலோசனையை முன்னிட்டு, வங்காள மாகாணத்திற்கு ஒரு கவர்னரும், பிஹார், சோடாநாக்பூர், ஒரிஸ்ஸா இவைகளுக்கு ஒரு லப்டினெண்ட கவர்னரும், ஆஸாமுக்கு ஒரு சீவ்கமிஷனரும் நியமிக்கப் படுவார்களென்றும், இவைகளுக்குரிய எல்லைகளை இந்தியா மந்திரியாருடைய அங்கீகாரத்தின் பேரில் கவர்னர் ஜனரல் வேண்டிய நிருவாக ஏற்பாடுகள் செய்வாரென்றும் திருவுளஞ் செய்தார். இதைக் கேட்கும் வங்காளியர் இருகங்கள் ஒவ்வொன்றிலும் குதூஹலமும் ஆரவாரிப்பும் நிரம்பியிருக்குமென்பதற்குத் தடை யென்ன?

இனி இந்தியா கவர்ன்மெண்டின் தலைமைஸ்தானம் டில்லி தான்.

இது பரியந்தம் இந்தியாவுக்குப் பிரதான பட்டணமாயும் ராஜப்பிரதிநிதியின் ஸ்தானமாயு மிருந்தது கல்கட்டா, இனி தமக்கு மகுடாபிஷேகமான இந்த டில்லிமா நகரமே இந்தியாவின் பிரதானபட்டண மாயிருக்கவேண்டுமென்றும், அதுவே ராஜப்பிரதிநிதியின் மத்

தியஸ்தானமா யிருக்கவேண்டுமென்றும ஆக்கினாபித்தா.

மேற்சொன்னவை எந்தெந்த நிபந்தனைக்குட்பட்டுச் செய்யப்படுமென்பது இனி வெளிப்படுத்தப்படும்.

இராஜ சக்கரவர்த்தியை கடவுள் காப்பாராக.

சக்கரவர்த்தியாருடைய ஆக்ஞைப் பிரகாரம் மகா ஜனங்களுக்கு ராஜப்பிரதிநிதியார் மேற்சொன்ன முடிசூட்டு நன்கொடைகளையும் தர்மங்களையும் தெரிவித்தார். அதைக்கேட்டு அவர்கள் ராஜதம்பதிகளுக்கு சமஸ்தமங்களமும் உண்டாகட்டுமென்று மனம்பூரித்துக் கடவுளைப் பிரார்த்தித்து வாழ்த்தினார்கள். இந்த மஹத்தான டில்லிதர்பார் இப்படியாக ஸர்வமங்கள மனோகரமாய் முடிந்தது.

—:-:—

His Majesty's Reply to the Madras Address.

சென்னை இராஜதானியார் விக்ஞாபனத்திற்குச் சக்ரவர்த்தியார் அளித்த பதில்.

—:-:—

டெல்லி முனிசிபாலிடியாரும் சென்னை இராஜதானியாரும் முறையே இரண்டு டிபுடேஷன்கள் மூலமாய் டெல்லியில் நம்மாட்சிமை பொருந்திய சக்கிரவர்த்தி யாருக்கு விக்ஞாபனம் செய்துகொண்டார்கள். நம்சென்னை மாகாணத்தைப் பொறுத்த மட்டில் சக்கரவர்த்தியார் கொடுத்தருளிய பதிலை இதனடியிற்காண்க. ஜனங்களுடைய பக்தி விசுவாஸங்களையும் அடக்கம், மரியாதை பிரைகளையும் தெற்றெனப் புலப்படுத்தி வாசிக்கப்பட்ட அந்த விக்ஞாபனத்தில் மகாராஜா சக்கிரவர்த்தியிடம் உண்மையான பிரியமும் பக்தியும் கொண்டிருப்பதைத் தெரிவித்து, இந்த கிரீடதாரணவைபவ மகோற்சவத்தைத் தம் இந்தியப் பிரஜைகளும் கண்டு பரமானந்த மடையட்டும் என்று இங்கிலாண்டிலிருந்து புறப்பட்டு டில்லிமா நகர்க்கு வந்ததும், ராஜதானி வாசிகளால் சக்கரவர்த்திபின் காம்பிரமான சந்நிதானத்தில் சமர்ப்பிக்கும்படி நன்றருளப் பெற்ற விக்ஞாபனத்துடன் சென்ற பிரதிநிதிகளுக்கு (டெபுடேஷனுக்கு) ப்பேட்டி கொடுத்ததும், நம் சக்கரவர்த்தியாருக்கு இந்தியப் பிரஜைகளிடம் இருக்கும் கருணையும் அன்பும் இத்தன்மையவை யென்று காட்டுகின்றன. அவர் நம்மிராஜதானி விக்ஞாபனத்துக்குத் திருவாய் மலர்ந்தருளிய பதிலை மட்டும் ஈண்டு எழுதியுள்ளோம்:—

'சென்னை ராஜதானியின் ஜனங்கள் போல் நீங்கள் செய்திருக்கும் பக்தியும் அடக்கமுமுள்ள விக்ஞாபனப் பத்திரத்துக்கு நானும் சக்கரவர்த்தினியும்சந்தோஷப்படுகிறோம். நமது இந்திய சமஸ்தானங்களில் பழய ராஜதானியாகிய சென்னையில் வசிக்கும் ஜனங்களுடைய பக்தியால் எங்கள் மனம் நெகிழ்கின்றது இதில் வசிக்கும் 4 கோடி ஜனங்கள் எங்களிடத்தில் நேரான பிடிப்பிருப்பதைக்காட்ட ஒன்று சேர்ந்ததற்காக நன்றிகொள்கிறோம். தென்னிந்தியாவில் பலஜாதி மதஜன வேற்றுமைகளைக் காட்டிக் கையெழுத்திட்டிருப்பது நீங்கள் எங்களை வரவேற்றதற்கு விலை பெற்ற அத்தாட்சியாகச் சேமிக்கப்படும். இந்தியாவுக்கு இப்போதுவந்த சமயத்தைப்பற்றி நீங்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகளையும் 1906-ம் வருஷத்தில் சென்னையில் நாங்கள் இருந்ததை நீங்கள் பட்சமாய் நினைத்திருப்பதையும் நாங்கள் பூரணவாய் அறிகிறோம். எங்களுக்கு அப்போது நீங்கள் செய்த உபசாரத்தை நாங்கள் மறக்கவில்லை. உங்களுடைய பேர்பெற்ற நகரத்தை நாங்கள் திரும்பிப்பார்க்க வேண்டுமென்று நீங்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்குமாறு எங்களுக்கு அவகாச மில்லாததைப்பற்றி நாங்கள் விசனப்

படுகிறோம். இந்திய ஏகாதி பத்தியத்தில் எனக்குப் பிரியமான பாட்டியாரும் பிதாவும் காட்டின ஒற்றுணர்ச்சியையும் தரிசனத்தையும் பற்றி நீங்கள் சொல்லுவதைக் கேட்க எனக்கு ஆழ்ந்த திருப்தி யுண்டாகின்றது. அவர்களுடைய உணர்ச்சி போல என்னுடையதும் இருக்கிற தென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. என் இந்தியப் பிரஜைகளின் க்ஷேமமும் வளப்பமும் என்னுடைய மனப் பூர்வமான கவலைக்கு விஷயங்களா யிருக்குமென்று நான் சொல்ல வேண்டியதில்லை'

இதே காலத்தில் சக்கிரவர்த்தினியாரவர்கள் டில்லி ஸர்க்கியூட் ஹௌஸில் இந்திய ராஜ ஸ்திரீகளுக்குப் பேட்டி கொடுத்தார்கள். சுமார் நூற்றிருபது ராஜஸ்திரீகள் வந்திருந்தனர். சக்கிரவர்த்தினியோடு கூட லேடிஹார்டிஞ்கம், டவன்ஷைர் டச்சஸும், லேடி மக்மோஹனும் இருந்தார்கள். விஜயம் செய்திருந்த இந்திய ராஜஸ்திரீகளுள் நம்மிராஜதானியைச் சேர்ந்த விஜயநகரம் ராணியரும் ஒருவர் இவர்தம் குழந்தைகள் இரண்டையும் தம்முடைன் அழைத்துச் சொன்னதாகவும், அவர்களைச் சக்கிரவர்த்தினியாரவர்கள் தம் சிம்மாஸனத்தின் கீழாகவே உட்காரும்படி சொன்ன தாகவும் தெரிகிறது. பிறகு விஜயநகரம் ராணியார் சக்கிரவர்த்தினியைப்பார்த்து "இந்த மகோற்சவம்மங்களகரமான தென்றும், இரண்டாம் முறை இந்தியாவுக்கு விஜயம் செய்ய சக்கிரவர்த்தினியார் திருவுளம் பற்றியதற்கு இந்தியமாதர் போதுமான நன்றி செலுத்த முடியாதவர் களாயிருக்கிறார் களென்றும், இந்து மகா ஜனங்கள் மனதில் பிரிடிஷ் ஆட்சியும் மகோன்னத நிலைமையும் பதியும்படியான வைபவத்தோடும் ராஜ கம்பீரத்தோடும் கூடிய டெல்லி தர்பாரானது எக்காளும் யாவராலும் கொண்டாடிப் போற்றப்படுமென்றும், சென்ற வருஷம் ஏறக்குறைய இக்காலத்தில் தாம் சக்கரவர்த்தினியாரின் பணிமாதர்களுள் ஒருவராயிருந்து சேவைப்பண்ண வேண்டுமென்னும் அபிலாஷையை லேடி ஹார்டிஞ்சிடம் தெரிவித்தபோது தன் பிரேரேபணை ஒப்புக்கொள்ளப் படவில்லையென்றும், இந்திய மாதர் தம் பக்தி விசுவாஸங்களைத் தெரியப் படுத்திக்கொள்ள ஒரு சமயம் கிடைத்தாலும், அதைக் கொண்டு அவர்கள் சந்துஷ்டியடைவார்கள், என்றும் வெகு சாதுர்யமாய்ப் பேசினார்கள்.

—:*:—

Coronation Honours.

காரனேஷன் கௌரவப்பட்டங்கள்.

—:*:—

விசேஷ சமயங்களில் வழக்கமாய் வருவது போல இந்தக் காரனேஷன் தர்பார் மகோற்சவத்திலும் முக்கியமா யுள்ளவர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் அளிக்கப் பட்டன. அவர்களுள் நமது நேயர்கள் அறியக்கூடிய சிலரை மட்டும் கீழ்தனடியிற் குறிப்பிட்டிருக்கின்றோம்:-

மரியாதைக் குண்டுகள்.

சிந்தியா மகாராஜா 21-குண்டுகள்; மேஜர் ஜெனரல் மகாராஜா ஸர் சந்திர ஷாம் ஷர்ஜங் நேபாளத்து முதல் மந்திரி 19-குண்டுகள்; பார்வானி சம்ஸ்தானம் ராணாஞ்சித்சிங் 11-குண்டுகள்; மோகல்லா சுல்தான் 11-குண்டு; காங்கர் சமஸ்தானத்து அதிபர் மகாராஜாதிராஜா கோமல்தாஸ் 9-குண்டுகள்.

"C. I." பட்டம் பெற்ற ஸ்திரீகள்.

லேடி க்ரூ, போப்பால் பேகம், பௌநகர் மகாராணி.

'பாரோனெட்' பட்டம்.

ஆனரபில் ஸர் ஸாஸூன் ஜாகப் டேவிட்.

"G. C. S. I." பட்டங்கள்.

பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க்; சென்னைப் பழய கவர்னர் ஸர் ஆர்தர் லாலி, காரொனேஷன் கமிட்டி பிரசிடெண்ட் ஸர்ஜான் ஹியூவெட்; பிகானிர் மகாராஜா; கோட்டா மகாராஜா; ஐதராபாத்து நிஜாம் அரசன்; ஹில் லைஹனல் ஆகாகான்; ஸர் ஒமூர் க்ரீ காமாண்டர்-இன்-சீப்.

"C. S. I." பட்டங்கள்.

ராஜப்பிரதிநிதி நிர்வாக சபை மெம்பராகிய மிஸ்டர் சையத் ஆலி இமாம்; சென்னை நிர்வாக சபை மெம்பர் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி அய்யர்; சென்னை சர்ஜன் ஜெனரல் பான

ர்மான்; நிஜாமின் பிரைவேட் செக்ரிடரி மிஸ்டர் A. M. ஹுஸேன்; பிலாஸபூர் ராஜா; கல்கத்தா பிரசிடென்ஸி காலேஜ் டாக்டர் J. C. போஸ்; வேறு பல ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள்.

"G. C. I. E." பட்டங்கள்.

காஷ்மீர் மகாராஜா; பஞ்சாப் லெவ்டினெண்ட் கவர்னர் ஸர் லூயி டேன்; பம்பாய் மாகாணத்தில் கோலாப்பூர் மகாராஜா; பொப்பிலி மகாராஜா; ராஜப்பிரதிநிதி சபை மெம்பர் ஸர் லகப்ளீட்வுட் வில்ஸன்; உதயப்பூர் மகாராஜா பாட்டியலா மகாராஜா; ராஜா ஸ்ரீ ஸர் ராமவர்மா, கொச்சி; டாக்டர் நவாப் ஸர் ச்வாஜா சலிமுல்லா; வேறு சிலர்.

"K. C. I. E." பட்டங்கள்.

வெங்காளத்து ஆக்டிங் லெவ்டினண்ட் கவர்னர் மிஸ்டர் பிரடரிக் வில்லியம் டேச்; பைகூர் யுவராஜா ஸ்ரீ கண்டீரவ நரசிம்ம ராஜா; கல்கட்டா மார்டின் கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் ராஜேந்திரநாத் முகர்ஜி; ராஜப்பிரதிநிதிச் சட்ட சபை மெம்பர் மிஸ்டர் கங்காதர மாதோ சிட்னவிஸ்; புனா டாக்டர் ராமகிருஷ்ண கோபால் பந்தர்க்கர்; சென்னை ராஜ்தானியைச் சேர்ந்த ஜயப்பூர் மகாராஜா ஸ்ரீ விக்கிரமதேவர்; ராஜபுதனத்தைச் சேர்ந்த பிரதாப்கர் மகாராஜா ரகுநாதசிங் பகதூர்; வேறு பல உத்தியோகஸ்தர்கள்.

"நைட்" பட்டம்.

கல்கத்தா ஹைகோர்ட் அஸுடோஷ் முகர்ஜி, நாக்பூர் கான்பகதூர் B. S. மேட்டா; பம்பாய் மிஸ்டர் ஜஸ்டிஸ் D. தேவார்; பம்பாய் மிஸ்டர் ஷாபூர்ஜி பர்ஜர்ஜி ப்ரோச்சா, பம்பாய் ராவ்சாகிப் ஸைஜி ட்ரிகாம்ஜி முஜில், பம்பாய் மிஸ்டர் இப்ராகிம் ரஹிம்தூலா, இவர்களும் மற்ற ஆங்கிலேயர்களும்.

"திவான்பகதூர்" பட்டம்.

மிஸ்டர் T. சதாசிவ அய்யர், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், C. வி. குமாரசுவாமி சாஸ்திரி, ஜட்ஜ் ஸிடி ஸிடி ஸிவில் கோர்ட், கோவிந்ததாஸ் சதுர் புஜதாஸ்காரு, வர்த்தகர், R. R. M. ராமஸாமி செட்டியார், U. ராமபத்ர நாயுடுகாரு, தொட்டப்ப நாயக்கனூர் ஜமீன்தார், K. P. பட்டண செட்டி, மைசூர்.

"ராவ்பகதூர்" பட்டம்.

மிஸ்டர் கே. ராமாநுஜாசாரியர், மகா ராஜா விஜயநகரம், கே. எஸ். வெங்கடராமய்யர் முனிசிபல் சேர்மன், நாகப்பட்டணம்; எம். ஏ. பார்த்தசாரதி அய்யங்கார், ஹைட் காஷியர், மதராசு பாங்க். என். ரங்கநாதராவ். போலீஸ் டிப்டி சூபரின்டென்டெண்ட், ஆர். வெங்கட ரத்னம் நாயுடு, பித்தாபூர் ராஜா காலேஜ்; டி. வி. அய்த்தன் நாயர், சப் ஜட்ஜ், தவசிமுத்து ரத்னசாமி நாடார் அப்காரி கன்ட்ராக்டர். தாங்கம்பாடி: எஸ். ராமசாமி அய்யங்கார், சப் ஜட்ஜ், ராஜா தி. ராமராவ், டெபுடி கலெக்டர் ஏ. சி ப்ரணதார்த்திஹர அய்யர், இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்; ஆர்க்காட் முத்துசாமி சுந்தரமூர்த்தி முதலியார், மைசூர், ஜி. கிருஷ்ணமாசாரி பி. எல். ஹைதராபாத், கொர்வண்ட் மத்தண்ண நஞ்சப்பா, காபித் தோட்டக்காரர், குடகு.

'கான்பகதூர்' பட்டம்.

மிஸ்டர் மகம்மது அப்துல் குதூஸ் பாட்சா சாகிப், மதராஸ்; துபாஷ் காதர் சாகிப், ராமநாதபுரம்.

'கான்சாகிப்' பட்டம்.

மீர் ராஸியுட்டீன், சால்ட் இன்ஸ்பெக்டர், கப்மாரு இமாம் எட்டீன் சாகிப் அனந்தபூர்; மகமது சாகிப் உட்டீன் சாகிப், ஆர்காட் பிரின்ஸின் திவான்; சர்தார் ஹுஸேன் சாகிப், தபால் சூபரின்டென்டெண்ட் ரிடைர்ட், காஜி காஜீ முவுஉட்டின் சாகிப், நந்தியால்; மகமத் ராசக்மாக்காயர், கடலூர் யாசன் பெருசாகிப், யூனியன் சேர்மன், பெல்லாரி ஜில்லா; அப்துல் சுப்ருகான், ஸப் அஸிஸ்டண்ட் சர்ஜன்; முல்லா ஹமீசன் அலிசாகிப், வெடிரினரி இன்ஸ்பெக்டர்.

"ராவ் சாகிப்" பட்டம்.

மிஸ்டர் P. ஆதிமூர்த்த ராவ், அனந்தபூர் முனிசிபல் சேர்மன், T. பாலாஜிராவ் நாயுடு டெப்டி கலெக்டர் P. ராமன். டிஸ்ட்ரிக்ட் முனிசிபு, P. ராமச்சந்திரராவ், ஹைகோர்ட் சிப் இன்டர்பிரிடர், H. கிருஷ்ணசாஸ்திரி, ஆர்கிய

ரலஜி சூபரின்டெண்டெண்ட், P. சுப்பையர், போலீஸ் இன்ஸ்பெக்டர், C. கந்தசாமி முதலியார், போஸ்டல் சூபரின் டென்டெண்ட், பி. கே. சுப்பபர் டெப்டி ரிஜிஸ்ட்ரார், செக்ரிடேரியட் ஆபீஸ், C. B. ராமராவ் அஸிஸ்டண்ட் டிஸ்டிரிக்ட் மெடிகல் அண்ட் சானிடெரி ஆபீஸர் சி. பக்தவத்ஸலு நாயுடு டெப்டிகலெக்டர், மதராஸ் குலாப் ராய், கெமிகல் எக்ஸாமினர் ஆபீஸ்; கே. எம். மாதவமேனன். எல். எம். எஸ். அஸிஸ்டண்ட் டிஸ்டிரிக்ட் மெடிகல் அண்டு சானிடெரி ஆபீஸர்; கே. ரெங்காசாரி, மதராஸ் ரிகார்ட் ஆபீஸ்; கே பி. ராமசுவாமி அய்யர், ஸால்ட் இன்ஸ்பெக்டர்; ஒய். வெங்கட்டராவ் பந்துலு, தாசில்தார், கிருஷ்ணா ஜில்லா கே. எம். கிருஷ்ணராவ் பந்துலு, கவர்ன்மெண்ட் பிளீடர், குண்டூர்; எல். ஏ. ரங்கசாமி அய்யர், ஆனரரி அஸிஸ்டெண்ட் இன்ஜினீயர்; வி. ரத்தன முதலியார், சூபரின்டெண்டெண்ட். கன்ட்ரோலர் ஆபீஸ் ஆர். டி. சுவாமிபிள்ளை ஸப் அஸிஸ்டண்ட் ஸர்ஜன், பர்மா.

—:-:—

வெங்கிடசாமி நாயுடு அண்டு ஸன்சு:—ஜார்ஜ்டவுன் இண்டாவது பீச்லேனிலுள்ள மெஸர்சு வெங்கிடசாமி நாயுடு அண்டு ஸன்சு என்னும் பெயரிய கம்பெனிக்கு திவான்பகதூர் எம்.வெங்கிடசாமி நாயுடு சொந்தக் காரர் தோல் வியாபாரம் வெகு தாராளமாய்ச் செய்து வந்தார் திடீரென்று இவருக்கு நஷ்டம் வந்து விட்டதனாலே நேற்று முன்தினம் அந்தக் கம்பெனிக் கட்டிடத்து வாயிலில் மெஸர்சு ஷார்ட் அண்டு ப்பூல் என்ற ஸொலிஸிடர்களால் அடியிற் குறிப்பிட்ட பிரகாரம் நோட்டீசு போடப் பட்டிருக்கிறது:—

"இன்றைய தினம் மெஸர்சு எம் வெங்கிடசாமி நாயுடு அண்டு ஸன்சு என்னும் பெயர் கொண்ட பரமை (firm) ச்சேர்ந்த மெம்பர்களெல்லோரும் இன்ஸால்வெண்டுகள் என்று கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் பி. ஆர். சுந்தரய்யரால் உத்தரவிடப்பட்டிருப்பதனாலே, அவர்களுடைய சொத்து முழுவதும் அபிஷியல் அஸையிடம் இருக்கிறதென்பதற்கு நோட்டீசு. டிசம்பர் மீ 20உ, 1911."

—:-:—

"THE TRUTH BEHIND THE CORONATION DURBAR."

—(*)—

(From the Madras Dailies.)

It was a splendid service which the Bishop of Madras rendered to the cause of truth and the coming of the Kingdom of God, in the impressive sermon, which he preached to the world from the Coronation Durbar Camp on Sunday last. (10th Dec.) The Truth behind the Coronation Durbar is that "the Kingdom of the World is become the Kingdom of Our Lord and of His Christ." The Lord Bishop said that he spoke only as the representative of the Christian Community in India, but every community and every religion will admit the Truth behind the Coronation Durbar in the text which he took up for his sermon. Only they will not consent to limit the full spiritual meaning of the expressions used by any narrow interpretation of sect or creed. "The vast responsibility of Empire" rests not on the shoulders of the King alone, but on all who are subjects and citizens of the State and so form the body-politic of the Empire of which the King is the symbolical head as the devine representative of Godly power on earth.

"Among men I am the King," said the Lord Sri Krishna to Arjuna, and the accepted Ideal of Kingship as propounded by our *Dharmasastras* is the same as the Lord Bishop of Madras so well and happily expressed in the beautiful sermon which he preached from his place in the Coronation Durbar Camp. "Rajah" means one who pleases all entrusted to his care.

"The history of the world is the gradual fulfilment, even through the working of human passions and ambitions, of God's Eternal Will. Whatever is out of harmony with that Will comes to nought. Whatever opposes it is swept away." The Kingdom of the World must *ever remain* the Kingdom of the Lord' and of His Son, the anointed of the Lord and the Saviour of men. I use Christ in the fullest significance of the word as "the Son of God and the Saviour of men"—*the Kumara Guru*—"the Son and Saviour" with whom every Hindu is only too familiar.

The Bishop of Madras has lifted on high the Holy Flag of Truth, and may all true sons of Barathavarsha and the Empire stand by it and fight for truth—for Truth is a principle that must triumph in the end. Let us, by all means, sweep away the narrow traditions and unspiritual (unchristian) feeling that make the Brotherhood of Man impossible. I trust everyone will bear in mind the exhortation of the noble minded Bishop who expressed the need of the hour as "a sincere effort on the part of individual men and women to look fairly at the facts of life in the spirit of Christ (which is the Spirit of Truth and of Self-Sacrifice) and to apply to their relations with all classes and all races the principle of Brotherhood.'

All India and "the better mind of India" which is keeping 'the Altar-Fire of Consciousness' (*Chidagnikunda*) alive by sacrificing their own individual selves therein say 'Amen!' to this.

As one who has been working now for eleven years uninterruptedly in the cause of truth, ever trying to keep "the Highest Ideal" before man, it gives me great pleasure to bear willing testimony to the truth of the Bishop's statement, that in spite of the frailties and failings of the majority of Engilshmen such as we ordinarily meet with in India, there are good souls and true who are working with a true heart, realising their responsibility to the World and the Empire.

The "Ideal Englishman" in India not only stands for efficiency, for duty and for justice but he also stands still more definitely for Brotherhood and Love, though his lower passions and ambitions make him forget the highest ideal in the struggle to be ever a victor in the battle of life. I did come across the ideal Englishman some 11 years ago and I can speak of him only in the spirit in which he shone before the Holy Mystery of the Lord when he thirsted for a moment to know its meaning. On that momentous occasion was conceived the Mission of the Empire and the World which the Lord Bishop so impressively put before the August Congregation to whom he preached his thrilling sermon.*

After putting before the imperial congregation "the Final Goal" as "the Fatherhood of God and the Brotherhood of Man," the holy man inspired of God for the great occasion spoke, in words that must ring into the ears of all good men and true unto eternity, as follows :—

"The permanent value of any Empire or any social institution must depend upon its power of bringing near the Kingdom of God by making real and effective in the world the ideal of Brotherhood" that is to say, of "Christly Love"–*Paramkarunai* which feeds on and grows perfect by "Neighbourly Love" or *Jeevakaruniam*.

"Here then lies the work of our Empire in the coming years, and let us not forget that *the achievement of this great end does not lie merely with statesmen and politicians*, but FAR MORE WITH THE ORDINARY PEOPLE IN THE ORDINARY ROUTINE OF DAILY LIFE."

The italics and small capitals are mine; and I emphasise it most because that is a truth which has impressed itself strongly on me and possessed my heart and soul these many years. Call it accident or what you will, I see the guiding Hand of Providence in the incident which brought me a note from the Editor of a leading Almanac and Directory for revised and "up to date" information concerning the work to which I have dedicated myself heart and soul just 11 years ago, giving it the universal name of "ANANDA MISSION" whose origin and aim as I just copied it for the Editor of the Directory I give below without mutilation or alteration. The ANANDA MISSION which aims at realising "the permanent value of any Empire or any social institution" as beautifully propounded by the Lord Bishop of Madras, was first conceived at Chidambaram after the *Arudradarisanam* of 1901, on the motion of an eminent Englishman who thirsted for a moment to know the truth of the Holy Mystery '*Chidambara Rahasyam*' and called into existence by the Grace of the Almighty at the instance of a true Englishman thirsting to know "the Truth as it presents itself now" to a seeker who seeks it "without reference to this or that more or less imaginary divine system." Planned on Christmas Eve 1902, and founded on Thursday week of the New Year 1903, having for its aim, the propagation of Truth and Knowledge as the Way to Health, Happiness and Life, through Self-Help, Self-Control and Self-Culture." "Our theism is the purification of the Human mind" and our motto is "Hitch your wagon to a star." We allow the fullest freedom of thought and action to all, demanding of them only consistency in thought, word and deed. Our methods of work are indicated by the Vedic injunctions we have adopted *viz.*, "*Satyam Vada*"—"Speak the Truth"; and *Dharmam Chara*." Do thy duty *i.e.*, *Obey the Moral Law of thy Being*." Our Guardian Spirit is *Ananda Natesa*—"the Holy Ghost," and our leader and guide is *Sri Akhandânanda Satyuru* to whom we bow in salutation and absolute obedience.

It was under the guidance of this Spirit that I suggested the name of Georgetown as a substitute for that odious name "Black Town" and did many other things which have met with Royal Approval. "Recognition" I did not seek and do not want, except the approval of one's own consciousness which I have since received in abundance though men may praise and blame one another according to the mood they find themselves in.

It does one's heart good to affirm and reaffirm "the Truth behind the Coronation Durbar" when it is brought home to men's minds in the most prominent and at the same time the most impressive and holy way on a solemn and sacred occasion like the solemn Church-Service in "the Coronation Durbar Camp," on a day which is devoted wholly and entirely to the Service of God. Let us all—King or subjects—realise "the Final Goal" which is the Unity of God and Comity of Nations.

For what does the Brotherhood of Man amount to in the end but the comity of nations, just as the brotherhood of man indicate the comity of class and creed in the Constitution of a State. "Nothing less than the Love and Self-Sacrifice of Christ will avail for the great work of Empire which God has entrusted to us (Indians and Englishman alike) *to-day* "the great Coronation Durbar Day-when India claims its Sovereign Emperor true as the man entrusted to keep the ancient ideal of Kingship unsullied and hand it down from generation to generation." by making it real and effective in the world," *i.e. in every day life*, the idea of Kingship which has been so solemnly preached in the name of God and heard with reverence on the Sabbath preceding this, the Great Coronation Durbar Day.—*Aum Tat Sat.*

Lalitalaya, Madras, S. } C. V. SWAMINATHA IYER,
12th December 1911. } K. S. S. A.

* The Madras *Mail* in its issue of 16th December published only so far, while the whole appeared unabridged in the *Madras Standard* of 15th December and the *Indian Patriot* of 16th idem.

The Arudradarisanam Special Number Celebrating the 12th Ananda Mission Founder's Day.

Full term Copyright secured in every page, part and volume: and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE.

புத்தகம். 19.] 1912வரு ஜனவரிமீ, விரோதிகிருதுவரு தைமீ [சஞ்சிகை. 10.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor. It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lalita Publishing Co., Sole Agents and Managers

M. K. Narayanaswami er, B.A. B.L.

Hon y,

Vivekachintamani Pub. Committee.

27

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரஞ் சிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சர்ப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே வர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது

3. விவேகசிந்தாமணியிலவரும் விஷயங்களையாவது அவை சம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்ம விக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற் க்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான். கைச்சாற்றிது. ஓம்.

"THE TRUTH BEHIND THE CORONATION DURBAR."

"The Kingdom of the World is become the Kingdom of God and of His Christ"—Revelation.

THE DECAD OF THE LORD OF PALNI'S GRACE.

(By S. S. Avadhûta).

"If your lives are to be beneficent in the effect which thus they cannot but have in some way on the world, few things are more indispensable than that your line of action should conform to the principles on which that world has been framed. Thus and thus alone, can you be assured of true success. One or two of these fundamental principles I have attempted to suggest. Others ought gradually to reveal themselves as years pass by and experience is gained. My chief wish for you all is that guided by whatever *light* you have, and whatever *higher light* may come to you through practical adhesion to every fragment of truth that you come to recognise, you may find your proper place in working out the purposes of God. When any one of you sets himself to play the little part in the fulfilment of those purposes which he sees to be specially assigned to him, he will doubtless often find how difficult it is to work out principles in practice even when he sees clearly that they are valid. That is but one of the difficulties by the overcoming of which wisdom is acquired and moral strength exercised and increased. Doubtless, too, he will often find that his honest effort leads to little more at first than misapprehension, misrepresentation, and antagonism, even on the part of men as honest and as earnest as himself whose point of view affords them but a narrow outlook on the world. Those who find themselves in a case like this will only share the lot of nearly all who are known and of the thousands upon thousands who remain unknown, among the men by whom their fellows have been guided and uplifted. Let me therefore ask any one whose heart is set on serving his generation well, to place among the mottoes of his life the substance of verses which have had some effect on mine.—

"Workman of God, O loose not heart
But learn what God is like;
And in the darkest battle field
Thou shalt know where to strike.

"O blest is he to whom is given
The instinct that can tell,
That God is in the field when He
Is most invisible!

"And blest is he who can discern
Where real right doth lie,
And dares to take the side that seems
Wrong to man's blindfold eye."

May blessings like these be granted to you all!"

—The Rev. Dr. Miller's Annual Message to his "boys."

பழனியாண்டவர் திருப்பதிகம்.

குமரகுருபரன் துணை.

I.

"மெய்ப்பொருளோடிருக்குமெனைக்
"கைப்பொருளேபெரிதனைக்கருதல்வேண்டுமென
"மெய்ப்பொருளைமேவிடாவழியுரைப்பினும்
"உய்ப்பொருளேமெய்ப்பொருளெனஉணர்ந்தோர்
"கைப்பொருளைப்பெரிதெனக்கருதுகரோகனவினும்!
"அப்பொருளால்வருங்கேடுஅனந்தமன்றோ!"—
என்றுரைசெய்தவென் துரையப்பனே!
மன்றிலாடுமோதவன்சாக்ஷியாச்சொல்கிறேன்
கொன்றைசூடியகோனுரையிதுவெனக்கொள்க!
நன்றிலாண்மகன்கவிலுகரபோலிதுவன்றே!

"Among men I am the King"—The Bhagavad Gita.

In Honor of the Coronation of their Imperial Majesties.

(Special for the Vivekachintamani.)

மாட்சிமைதங்கிய இந்திய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினியார் அவர்கள்
மகுடாபிஷேகத்தின் பொருட்டு.

தசாங்கம்.

தூறன்வெண்பா.

செங்கோன் முடிமன்னர் தெய்வமென யாவர்க்கும்
நக்கா தலர்காண் நவில்.

நேரிசை வெண்பா.

1. பேயர்.

சீரார் பசுங்கிளியே தேயமெலாம் ஆண்கின்ற
பேரார்ந்த மன்னன்பேர் பேசுகோய்—பாரார்ந்
மன்ன ரெலாந்துதிக்க மண்டலத்தில் மன்னர்கடம்
மன்னவனும் ஜார் ஜெனவே வாழ்த்து,

2. நாடு.

அஞ்சுகமே எங்கள் அரசன் திருநாட்டைக்
கொஞ்சி மொழிவாய் குதூகலித்து—மஞ்சகல்செய்
செங்கதிரோன் சோதியது செல்லும் இடமெல்லாம்
அங்கவன்றன் நாடாம் அறி.

3. நகர்.

பைங்கிளியே எங்களதுபார்த்திபன்றன் நன்னகரைச்
சங்கையறச் சாற்றாய் சதுருடனே—துங்கமிகும்
†பொன்னகரும் புன்மையெனப்போற்றப் பொலிந்திடுமே
தன்னேரிகர் டில்லி‡ நகர் தான்.

4. ஆறு.

கண்டுநகர் சொற்கிள்ளாய் காவலன்றன் நன்னதிகை
விண்டிடுவாய் எங்கட்கு மேன்மையுடன்—மண்டலத்தில்
சார்ந்தோர் தமைப்புனிதம் சாரமலந்துடைக்கும்
தேர்ந்தோர் புகழ்க்கங்கைதேர்.

5. மலை.

நற்குணங்கள் ஓங்கும் நமதரசன் நன்மலையைப்
பொற்கிளியே சற்றேற புகன்றிடுவாய்—ஆற்குளுபர்
தேனருவி மாரூத்திகழ்சிகரம் தேவருறை
வானுருவும் பொன்வரையாம் மற்று.

6. கரி.

மன்னுயிரைத் தன்னுயிர்போல் மாண்புடனேதான்புரக்கும்
மன்னனவன் ஏறும் வலிகரியைப்—பன்னிடுவாய்
பச்சைநிறக் கிள்ளாய் பகைவரை வெம் போரதனில்
பிச்சிடுமே மற்றதுதான் பேசு.

7. பரி.

அஞ்சொல் அருங்கிளியே அன்பாய் நமைப்புரப்போன்
விஞ்சுபரி தன்னை விளம்பிடுவாய்—வெஞ்சமரில்
ஒன்னாரலரைத் தாக்கி உறவெற்றி யோடுவக்கும்
மன்னனவன் காண்பான் மகிழ்ந்து.

†இந்திரன் பட்டணம் The capital of Indra. ‡ The old name is *Indraprusta*.

8. படை.

மார்தளிரைத் தின்ற மகிழ்கிளியே நம்வேந்தன்
எத்துபடை தன்னை இசைத்திடுவாய்—போர்த்தபகை
வல்லிருளை நீக்கி வதைத்திடுஞ் சூரியன் போல்
வல்லாளியைச் செய்திடுமே வன்கு.

9. முரசு.

கற்றவர்சொல் கேட்டுக் கழறுகின்ற கிள்ளாய்நம்
கொற்றவன்றன் வார்முரசைக் கூறிடுவாய்—பற்றலர்தம்
நெஞ்சதிரத்தானதிரும் நேர்மை யுடைத்துகாண்
வஞ்சமிலார்க் கில்லையது மற்று.

10. மாலை.

சேர்ந்தவாய்க் கிள்ளாய்நம் சீர்மன்னன் மார்பகத்தில்
ஏர்துகின்ற் மாலை இயம்பிடுவாய்—தீர்தணறும்
பூமாலை போலப் புகழ்வெற்றி யாலமையும்
தேமாலை வாடா தெளி.

11. கொடி.

கற்றுரைக்கும் கிள்ளாய் கரிசறவே பாலிப்போன்
வெற்றிக் கொடியை விளம்பிடுவாய்—மற்றதுதான்
மண்டுபகை வன்கரிக்கு வாய்த்ததுகாண் வான்முகடு
கொண்டெரும் சிங்கக்கொடி.

12. தடை.

பொற்கண்டில் ஓங்கும் பொலன்கிளியே அன்பார்நம்
சற்கோமான் கற்குடையைச் சாற்றிடுவாய்—விற்குலவும்
பான்மதியம் போலப் பனிநிழலைச் செய்திடுமேதண
பான்மையதாம் மற்றதுதான்பார்.

13. செங்கோல்.

தேன்மொழிசேர் தத்தாய்நம் தேயமதை ஆள்வோன்செங்
கோன்முறையின் சீரதனைக் கூறிடுவாய்—வான்மறையும்
வாரிதியும் தம்வாம்பில் மாறுகினும்தான்சிறிதும்
சீரதனில் கோடா தெளி.

14. முடிசூட்டும் தினம்.

பத்தொன்பான் நூறுடன்சேர் பஃறொன்றின் சீர்டிலம்பர்
சித்திபுது பன்னிரண்டின் செவ்வாயாம்—புத்திமிகும்
தார்மன்னன் ஜார்ஜினுக்குத் தக்கபுகழ் டில்லியதில்
சீர்மருடம் சூட்டும் தினம்.

15. வாழி.

வாரிமன் ஜார்ஜும் எழிலாரி மேரியெனும்
சீரார் இளங்கொடியும் செங்கோலும்—பாரும்
இந்தாவி யுள்ளவும் எங்கோன் குடிமுழுதும்
சந்தமாய் வாழ்கசகம் தழைத்து.

வித்வான் நா. சேதுராமய்யர்.

II.

முன்னொருநாட்டில்லையிலேமூசரிமுரிடங்காணப்
பன்னொருநாட்டவமிருந்துபரமபதந்தானெய்திப்
பின்னொருநாட்பாரனையிற்பேரின்பவமுதூட்டி
யன்னுதிருவாதிரையிலுன்னருமைத்தரிசனந்தந்
தின்னொருநாட்காலையிலேயெழில்துரைகளிருவருமே
யுன்முன்னேகியழிவிலாஆனந்தநடம்புரியு
மென்னப்பன்னடராஜன்திருக்கோயில்கொண்டருள்
பொன்னம்பலநடேசபொதிந்தமஹாரஹஸியத்தைத்
தன்னந்தனியேதனியிருந்துகாணவேண்டி
20 மன்னுமொருதாசில்மூலம்மனம்பொருந்திக்கேட்டனரே!

III.

அன்னவர்கேட்டகாலையங்கிருந்ததீக்ஷதர்கள்
சின்னவர்கேட்டவரன்சின்மயானந்தனன்றி
மன்னவராஜ்ஞையாலுமருவிலாதறியப்போமோ!
சொன்னவர்சொல்லைப்பற்றிச்சொரூபத்தைக்காட்டிவைப்போம்!—
என்றவர்கர்ப்பூரத்தைஏகமாய்க்கொளுத்திக்காட்டி,—
நின்றவர்நிலையறிந்துநின்மலன்ஏவல்கொண்டு
"இன்றவர்கேட்டகேள்விக்கினிதுரைசெய்வாயாக!"
என்றுரைசொல்லக்கேட்டேக்கம்விட்டுத்தூக்கம்நீங்கி
அன்றுரைசெய்தவுண்மையானந்தசபையினேக்கம்
30 இன்றுரைசெய்தவன்பன்†வாக்கினாற்பலித்ததன்றோ!

IV.

இந்திரப்பிரஸ்தமென்றுமெழில்பெயர்புனைந்தவந்த
இந்திரன்நகரேயொத்தடில்லிமாநகரிலன்றாரபதி
யிந்திரன்போலுமன்னன்எழில்முடிசூடவேண்டி
யிந்திரன்சபையேபோலுங்கூட்டியதர்பார்முன்னே
இந்தியர்மன்னரோடெழில்மன்னர்ஜார்ஜுங்கூடி
பத்தியாப்பலருமங்கேபொங்குடனமர்ந்திருந்து
சித்தியாச்சிந்தையாலேசிவபரமாம்அன்பைச்சிந்தித்
தித்தியாமுழுதுமாளுமெழில்மன்னன்முடிசூட்டுங்கால்
[..]வந்தியாதொன்றுஞ்செய்யவழக்கிலையாகையாலே
40 எந்தையாமீசன்ராஜ்யமெழில்பெறவந்தமைந்ததென்றார்.

V.

உலகாளுமன்னரெல்லாமுண்மையாமன்பன்தோழர்
உலகாளுமன்னராலேஉண்மையாம்ராஜ்யமெய்தும்
உலகாளுமன்னர்தாமேயுண்மையிற்றெய்வமாகர்
உலகாளுமன்னர்காப்பால்உண்மையாம்தர்மமோங்கும்
உலகாளுநீதியாலேஉண்மையாம்ஜயதர்மம்காட்டி

† "The man inspired of God for the occasion"—the Bishop of Madras who preached the Sermon on Revolution II—16 at the Coronation Durbar Camp, on Sunday the 10th December, 1911.

உலகாளுமுறைமையானேயுண்மையாம்கர்மம்ஈட்டி
உலகாளுநிறைமையானேயுண்மையாவர்மம்போக்கி
உலகாளுமுண்மையாலேயுச்சிதமாம்தர்மராஜ்யம்
50 உலகாளுமன்னராலேயுல்கில்நிச்சயமாமென்றார்.

VI.

தர்மம்தலையெடுக்கவென்றேகர்மத்தைச்செய்யவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேவர்மத்தைப்போக்கவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேமர்மத்தையறியவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேஸத்யத்தைச்சொல்லவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேதர்மத்தைச்செய்யவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேதத்துவத்தைக்காணவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேதெய்வத்தைத்தொழவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேதன்மயனுமாகவேண்டும்
தர்மம்தலையெடுக்கவென்றேதற்பரனையர்ச்சிக்கவேண்டும்
60 தர்மம்தலையெடுக்கவென்றேதண்டபாணியுமவதரித்தார்.

VII.

தர்மம்தலையெடுக்கவென்றேதனயன்தண்டபாணிபாலன்
தர்மம்தலையெடுக்கவென்றேகுமரன்குக்குடத்துவஜமெடுத்தான்
தர்மம்தலையெடுக்கவென்றேவேலவன்சேனாதிபதியுமானான்
தர்மம்தலையெடுக்கவென்றேசங்கரசுதன்குருபரனுமானான்
தர்மம்தலையெடுக்கவென்றேதாரகாசுரவதமுஞ்செய்தான்
தர்மம்தலையெடுக்கவென்றேசூரன்தலைபலசீவித்தான்
தர்மம்தலையெடுக்கவென்றேஅசுரப்பூண்டையடியோடழித்தான்
தர்மம்தலையெடுக்கவென்றேஆண்டிவேஷம்பூண்டுநின்றான்
தர்மம்தலையெடுக்கவென்றுலீலைசெய்யும்பாலகனான்
70 தர்மம்தலையெடுக்கவென்றேவர்மம்போக்கும்வீரனானான்.

VIII.

ஆனந்தரூபன்அற்புதசுந்தரன்
தானந்தமில்லாத்தற்பரபாலகன்
ஊனந்தமில்லாபுண்மைத்தபோதனன்
ஈனந்தானில்லாவில்லறநாயகன்
ஏனிந்தவேலையுனக்கென்றெண்ணாது
நானிந்தவேலைநீயேன்னைப்பணியென்றான்!
கோனிந்தவேலையைக்கூவியிட்டானென்று
நானிந்தவேலையைநமுடன்தொட்டேன்!
ஆனந்தவேலையிலாண்டாண்டிமையா
80 யானிந்தவேலையைச்செய்பரீயென்துணை!

IX.

துணையுனைக்கோறினன்துரையப்பாவென்சொற்கேள்!
இணையில்லாவுன்வார்த்தையென்னிதயத்துள்ளூந்தி
பிணையில்லாத்தனியேனையறங்குளிரச்செய்ததுபோல்
இணையில்லாக்கரும்புவில்லகையேந்திநிற்குமவள்

பிணையில்லாப்புத்திரனும்பேரனந்தமுள்ளானைத்
துணையில்லாவென்றனுக்குத்துணைகோறியர்ச்சிக்க
இணையில்லாவுன்னன்பையிஷ்டமுடன்கோறுகின்றேன்!
கணையாழிகையேந்திக்கலிதீர்த்தஇராமதூதன்
இணையில்லாவன்பேபோலிதயமுனக்கமைந்துளதால்
90 புணையெனக்காநிற்கவென்றுபுண்ணியனைப்பூஜிப்பாய்!

X.

இணையில்லாவுன்னன்பேயபிஷேகதீர்த்தமதாம்
துணையில்லாத்தூயமனஸர்ச்சனைப்புஷ்பமதாம்
பிணையில்லாப்பெருமனதேநைவேதனப்பொருளாம்
கணையில்லாக்கரும்பொத்தநல்லஹமேதூபமதாம்
புணையில்லாப்புத்தமுத்தசித்தமதேதீபமுமாம்
குணமில்லாவபிமானதேவதையாம்ஜீவன்தானே
இணையில்லாச்சாக்ஷியொடுகர்ப்பூரதீபம்போல்
மணமில்லாமாட்சிபெற்றவொடுக்கத்திற்பூரணமா
யிணையில்லாவைக்கியத்திலதிநிஜமாயொடுக்குமென்றே
100 யெனையாண்டான்பூஜைசெய்தருட்ப்ரஸாதமளித்திவொய்!

ஓம் சரவணபவ நமோ நமஃ!

இங்ஙனம்
ஆண்டானடிமை.

———(o)———

The 12th Ananda Mission Founder's Day Celebration.

Arudradarisanam—1912.

ஆருத்ராதரிசனம்—1912.

"Among months I am Dhanus."

———:-:———

'மாசங்களில்மார்கழிமாசம்நானே."—பகவத்கீதை x-35

"கருணைப்பாஞ்சோதி யருளைப் பெருதற்கு அன்பு நிலை
தேடும் பருவமிது கண்டீர்.....சகத்திரே!".

"நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே."

பகவான் அருச்சனனுக்குத் தனது லீலா விபூதியை யெடுத்துச் சொன்னபொழுது மாதங்களில் தான் தனுர் மாசம், அதாவது மார்கழி மாசமா யிருக்கிறதாகச் சொன்னார். விருக்ஷங்களில் சிறந்தது அசுவத விருக்ஷம், பக்ஷிகளிற் சிறந்தது கருடன். மனிதர்களிற் சிறந்தவன் மன்னன், மாதங்களிற் சிறந்தது மார்கழி.

இப்படி பகவானுடைய அவதாராத்மசமாய் விளங்கும் மார்கழி மாசத்தில் திருவாதிரை நாள் மிகவும் சிறந்தது. ஏனெனில் அத்திருநக்ஷத்திரத்தில் பகவான் பக்தகோடிகளுய்யுமாறு சகளீகரித்துத் தனது திருவருட் தரிசனமளிக்கிறார்.

அப்படிப்பட்ட ஆருத்ராதரிசனம் கிடைக்க அருந்தவம் புரிந்திருந்தேற்கு, ஆனித்திருமஞ்சனத்தன்று "அழுக்காறு" நீக்கி அடுத்ததிருவாதிரை நாளில் தரிசனமளிப்பதாக அருட்பிரஸாதஞ் சாதித் தருளினார் அன்பே உருவாயமர்ந்த பஞ்ச கிருத்திய பரநிருத்தராகிய ஆநந்த நடேசராம் அருட்திருமூர்த்தி. இப்படியாக நிகழ்ந்த திருவருள் நோக்கை யுன்னியிருந்து ஆனித்திருமஞ்சன நாள்முதல் ஆருத்ரா தரிசனத் திருநாள்வரையில் அருந்தவஞ் செய்திருந்தேன். 1901-ஆ ஜனவரிமாச முதலில் நிகழ்

ந்த ஆருத்ராதரிசனத்துக்கு முதல் முதல் பத்னி புத்திர சமேதனாய்ச் சிதம்பரம் சென்றேன். ஆண்டவன் திருக்கூத்து தரிசனங் கண்டு உவந்திருக்கு நாளில் திருவாதிரைக் கடுத்த மறுநாள் கலெக்டரும் கௌன்ஸில் மெம்பருமாகச் சிதம்பரத்தில் நடராஜா தரிசனங் காண வந்தார்கள். நடராஜா முன்னே முடி மன்னரான மஹாராஜாக்களும் தலைவணங்க வேண்டு மல்லவோ! ஏனெனில் அவர் அருள் மூர்த்தி; மனிதன் இருள் மூர்த்தி; அருளொளியா மப்பலத்தாடிபக்தகோடிகளுய்யச் சித்சபை விட்டெழுந்து திருத்தேரேறித் திரிபுரஸம்ஹாரஞ் செய்து (தேஹத்திரியங்களுக்கு ஒப்பான) திரிபுரமு மெரித்து பஸ்மீகரமான சாம்பலில் திருநட்டம் செய்த ஆனந்தக்கூத்தை அருட்கண்ணுல் பார்த்தனுபவிக்க வேண்டுமே யன்றி இருட்படிந்த ஊனக்கண்ணுல் காண முடியாது. அப்படி யவர்செய்த ஆனந்த நிருத்தத்தை அஹமுகத்திற் கண்டதுபோல் பஹிர் முகத்திலும் கண்டுவந்து உள்ளன்பு பூரித்திருக்கையில், திருவாதிரைக் கடுத்த மறுநாள் "எழில் துரைக ளிருவருமே" நடராஜா ஸந்நிதானத்தின் முன்வந்து, ஆனந்த மூர்த்தியைத் தரிசித்த கண்ணுல் சிதம்பர-ரஹஸியத்தைக் காணவேண்டுமென் றிஷ்டப்பட்டார்கள். ஐயோ பாவம், சிதம்பர தீக்ஷதர்கள் என்னசெய்வார்கள்! கூடவிருந்த தாசில்தார் துரையவர்களுடைய உள்ளக் கருத்தை விநயமாய்த் தீக்ஷிதர்களுக்குத்தெரிவித்தார். தீக்ஷிதர்கள் கர்ப்பூரத்தை நிறையவைத்துக் கொளுத்தித் துரைகளுக்குச் சிதம்பர ரஹஸியத்தைக் காட்டினார்கள். கர்ப்பூரதீபத்தைக் கண்டவர் மேல்சொல்ல வாயெழாது மயங்கி மௌன மாயிருந்தனர். அத்தருணத்தில் பொன்னம்பலத்துக்கு வெளியே உள்ள வெள்ளியம்பலத்திலே பிரு பக்தர்கள் நடராஜசித்தர்களாய் ஆடின மனமடங்க விருந்து தரிசனஞ்செய்து கொண் டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் சிரஸ்தேதார் பதவியிலிருந்தவர். மற்றொருவர் பத்தாசிரியர் தொழிலி லமர்ந்தவர். இவர்கள் காணப் பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் திருச்சந்நிதானத்திற் பேசிக் கொண்டனர்.

பதஞ்சலி.—"உள்ளமொடுங்கக் கள்ளங் கரையக் கண்டது காட்சி."

வியாக்கிரபாதர்.—கள்ளங் கரைய உள்ளம் உருகல் வேண்டும். "உள்ளமுருக வுருகக் கள்ளங் கரையக் கரைய" வென்பது பழமொழி.

பதஞ்சலி.—உள்ள மொடுங்கக் கள்ளந்தானுங் கரைந்திடுங் காண்பீர்.

வியாக்ரபாதர்.—உள்ள மொடுங்கச் சிதம்பர ரஹஸியம் காண வேண்டிக் கேட்டவர் கதி யென்னே?

பதஞ்சலி.—உள்ள மொடுங்கி துண்மையாயின் "சிதம்பர ரஹஸியம்" சித்திடுந் தானுய்த் தோன்றும் காண்பீர்.

வியாக்ரபாதர்.—கேட்டவர் குறை தீரக் குறி சொல்லும் ஐயனே!

பதஞ்சலி.—கேட்டவருண்மையை உள்ளிருந் துணரும் உவப்பலிதன் முன் உமக்கும் எனக்கும் பாரமேன் பக்தரே!

வியாக்ரபாதர்.—அது வாசனு தோஷம்! அஹங்கார மழிந்தாலும் அஹம் அழியாதென்றலோ அம்பலத்தாடுமீசன் எனக்கருள் தந்தான்!

பதஞ்சலி.—அந்த ஈசனே அவர்களுக்கும் அவர்கள் எண்ணம்போல் அருள்பாலிப்பான்.

வியாக்ரபாதர்.—அவர்கள்யார்?

பதஞ்சலி.—இராஜாங்கத்திலோர் அங்கம்.

வியாக்ரபாதர்.—நடராஜா முன்னே இராஜாங்க மெங்கே!

பதஞ்சலி.—இராஜாங்க மாயுள்ள ராஜ்ய லக்ஷ்மியே நடராஜா!

வியாக்ரபாதர்.—இராஜ்யம் என்று லென்னை

பதஞ்சலி.—தர்ம ராஜ்யமே ராஜ்யம்! மற்றவை யெல்லாம் பூஜ்யம்.

வியாக்ரபாதர்—தர்ம்மம் தலை யெடுக்கவழி யென்ன சொல்லுமே!

பதஞ்சலி.—மன்னன் மனுமுறை வழுவா தொழுகின் தர்மம் தானுய்த் தலையெடுத்தோங்கும்.

வியாக்ரபாதர்.—மன்னன் யார்?

பதஞ்சலி.—மனிதரிற் சிரேஷ்டன் மன்னன் மன்னுயிரெல்லாம் தன்னுயிர் போலக் காப்பவனுதலால் மனிதரிற் சிரேஷ்டனுய் விளங்குவன் மன்னன்.

வியாக்ரபாதர்.—அவ்வித மன்னனும் அமைய வேண்டுமே!

பதஞ்சலி.—"ஆனந்த கைங்கரியம் அன்புடனீட்டில் தானந்த மில்லாத் தற்பரநாயகன், ஊனந்த மில்லா உண்மைத் தபோதனன் ஈனந் தானில்லா இல்லற நாயகனுய், ஆனந்த நடேசனருட்பிரபாவத்தால், தன்னந் தானுய் வந்து பாலிப்பன்."

வியாக்ரபாதர்.—ஆனந்த கைங்கரியம் யாரே செய்வது?

பதஞ்சலி.—மன்னுயிர் படைத்த மாக்தரெல்லாம் தன்னுயிர் போலத் தரையிலுயிர் காப்பரே லென்னுயிர் கொடுத்து நான் அடியனுமாவேன்.

வியாக்ரபாதர்.—ஸ்வாமி! நீர் அவதாரஞ் செய்யக் கால மிதுதான். சரி! சரி!

பதஞ்சலி.—நீரென்ன! தூங்கலாமென்று நினைக்கிறீரோ!

வியாக்ரபாதர்.—பாம்பு தன் விஷத்தை யுருட்டித் திரட்டி மணியாக்கிக் கொண்டால், புலியின் சீறலும் ஆறலாகாதோ!

பதஞ்சலி.—பசவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர்குடித்தாலது தர்ம்ம ராஜ்ய மென்பர்.

வியாக்ரபாதர்.—பாம்பும் தேரையும் பரிந்து விளையாடினுல் அது தர்ம்மராஜ்ய மென்பர்.

பதஞ்சலி.—உண்மை! உண்மை!

வியாக்ரபாதர்.—ஆசை யறுத்தால் அம்பரமும் ஆடும்!

பதஞ்சலி.—பாச மொழிந்தால் பம்பரமும் நின்றாடும்!

வியாக்ரபாதர்.—அசையாமலாடும் பம்பரநாதனைப் பணிந்தினியாமும் ஸகங்கரியம் செய்வோம்.

பதஞ்சலி.—ஸத்யானந்த சபையி லெல்லோரும் ஆனந்த கைங்கரியம் அன்புடன் செய்க!

வியாக்ரபாதர்.—தற்பரனுணை! தர்ம்ம கைங்கரியம் திரிகரண சுத்தியாச் செய்திடப்பலிக்கும்!

அசரீரி.—"ஸத்யம் வத! தர்மம் சர!"

பதஞ்சலி.—ஏகம் ஸத்யம் பிரஹ்ம!

வியாக்ரபாதர்.—ஸத்யமேவஜயதே நாந்ருதம்!

சித்தர்கணம்.—நமஃப் பார்வதீபதயே!

பக்தகோடிகள்.—ஹர ஹர மஹாதேவ!

நாதஸ்வர துவனி. } —"ஹரஹர ஹரஹர மஹாதேவா! சம்போ சங்கர சதாசிவா!"

"சிவசிவ சிவசிவ சிவராஜா!
சிவகாமிப் பிரிய நடராஜா!"

இப்படிப்பட்ட ஆர்ப்பாடங்களுடன் ஸத்யானந்த சபை தில்லையம்பலத்தில் திடமா யேற்படுத்தப்பட்டது. அப்படி யென்றால், அம்பலவாணனருளால் பிரதிஷ்டைசெய்யப்பட்டது என்றபடி.

அன்றுமுதலின்றுவரையில் அதுவே சிந்தனையாய் ஆர்ப்பாடங் களின்றி உள்ள முணர உள்ளன்பு பூரிக்க "மனங்குளிந்து விரிந்துலாமாண்டதோர்" முக்தியே சித்தியாய் ஆனந்த கைங்கரியம் அன்பாய் நடந்து வருகிறது.

மாதவன் கையாழி (சக்ரம்) தானுய்ச் சுழல்வதுபோல, ஆனந்த கைங்கரியம் அதுவாய் நடந்துவருகிறது. தேவர்கள் சித்தர்களெல்லாம் இவ்வதிசயத்தைக் கண்டானந்தித்து உள்முகமாயிருந்து உன்மனியைத் தொழுத சிந்தையோடு பஹிர்முகப்பட்டுப் பரங்கருணையைத்தொழு திருந்தார்.

இப்படித் தேவநாட்களில் 11 நாளுங்கழிந்தது. ஏகாதசி விருதமிருந்து எல்லாரும் 12-ம் நாள் துவாதசிப்பாரணைக்குத் தயாராயிருக்கையிலே, அதிதி பூஜைக்குருகராகி அம்பலத்தாடும் அரசே முடிசூட்டி இம்பரமும் உம்பரமும் ஒன்றாக ஆள்கான்போல், இந்தியாவில் முடிசூட்டிக் கொள்ளவேண்டி எழில்மன்னன் தானும் "ஈனந்தானில்லா இல்லற நாயகனுய்" வந்துதித்தான் டில்லியிலே.

அங்கே முடிசூட்டு நாள் வருமுன்னே, "சென்னை பிஷப்," சிற்பரநாயகன் திருவருளாலே, செய்தவோர் உபதேசத்தில், 'லௌகிகராஜ்யம் தெய்வீகராஜ்யமாய், தர்ம்மராஜ்பமுமாம்" என்று அநாதியாயுள்ள உண்மையை உள்ளத் துணர்ந்து மன்னர் மன்னன் முன்னெடுத் தோதிப்போதித்தார். அப்படியே அடுத்த மங்கள வாரத்தன்று முடிசூட்டு சபையில் தர்ம்ம ராஜ்யம் வந்ததென மன்னர்மன்னன் எல்லார் மனமுங் குளிரப்பேசி "வர்மம் போக்கு வீரனுனன்." இப்படியாகச் சிற்றறிவுள்ள மனுஷன் முன்பின்னறியாது தவிக்கையிலே பேரறிவாளர் பரங்கருணை மிகுதியினுல் தர்ம்மம் தலையெடுக்க வென்று ஆனந்த கைங்கரியம் அன்பார்ந்து செய்வது தானே பலித்து வருகிறது.

இப்படியாக மாதங்களிற் சிரேஷ்டமான தனுர் மாசத்தில் திருவாதிரைக் கடுத்த புனர்பூச நாளில் தில்லையம்பலத்தில் ஏற்பட்ட ஸத்யானந்த சபை பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆருத்ரா (தரிசன) நாளாகிய இன்றைக்குச் (1912-வருஷஜனவரிமீ 4உ குருவாரம்) சரியாக தேவநாளில் 12-நாள் ஆகிறது. மனுஷர் கணக்குப்படி 12-வருஷங்களாகின்றன. மனுஷருக்கும் தேவருக்குமுள்ள வித்தியாஸ மென்ன? மனுஷர் அஹம்பாவ முள்ளவர்கள். தேவர்கள் ஸ்வபாவபா யிருப்பவர்கள், மனிதர்களில் சுத்தமானவர்கள் † சூந்யம் தாண்டினுல் சுபாவ சித்தர்களாகிய தேவர்களோடு அளவளாவியிருக்கலாம். இதைக் காலவரையறையினுனே குறித்துக் காட்டவேண்டில், பூரண மனிதன் ரேசக பூரக கும்பகாதிகளால் பேதப்பட்ட சுவாஸம் 21,600 கொண்டவன். இது மன்னுயிருக்கு ஒரு நாள்.

இப்படிப்பட்ட சுவாஸம் ஆறு (6) கொண்டது ஒரு விநாடி; விநாடி அறுபது கொண்டது ஒரு நாழிகை; நாழிகை அறுபது அல்லது முகூர்த்தம் முப்பது கொண்டது பகலு மிரவுமுள்ள ஒரு மனுஷதினம். (6×60×60=21,600).

சக்ரதாமாய்ச் சுழன்று (Spiral motion) மேலெழும் கால சக்ரத்தில் சுவாச வட்டமாயுள்ளது இது. வட்ட மென்றுலும் விருத்த மென்றுலும் ஒன்றே.

சுவாசத்தாலேயே ஜீவிப்பவனுன மனுஷன் இப்படி 21,600 சுவாசங்களால் பூரணமான ஒரு தினத்தை ஆதாரமாகக் கொண்டு "சஷ்டிபூர்த்தி" யென்று சொல்லுகிறபடி 60-வருஷம் பெத்தனுய் ஜீவித்திருக்கிறுன். அதாவது, பிரவிருத்திமார்க்கனு யிருக்கிறுன். பின்னர் நிவிருத்தி மார்க்கத்தி லிறங்கி 60-வருஷம் தபோதனனுயிருந்து கடைசியில் கேவல முக்தி யெய்துகிறுன்.

இரவும் பகலுமானதினம் பதினைந்து கொண்டது ஒரு பக்ஷம்; பக்ஷம் இரண்டு கொண்டது ஒரு மாசம்; மாசம் இரண்டுகொண்டது ஒரு

† ஹிருதய சக்தியினுல் தேஹத்திரியங்களையுங் கடந்து அநிபத வுண்மையிலமர்ந்துள ஸித்தர்கள் என்றபடி.

ருது மூன்று கொண்டது ஒரு அயனம்; அயனம் இரண்டு கொண்டது ஒருமனுஷ வருஷம். இந்தவருஷம் அறுபது கொண்டது ஒரு விருத்தம் (cycle).

(15×2×2×3×2×60=21,600). இது பிரவிருத்தி மார்க்கம். இதில் சிருஷ்டி ஸ்திதி யிரண்டு மடங்கும்.

சஷ்டி பூர்த்தி முதல் (60-வயது முதல்) சதாபிஷேகம் வரையில் (ஆயிரம் பூரணசந்திர தரிசனம் ஆனகாலம், அதாவது 83-வயது 4-மாசம் வரையில்) நிவிருத்தி மார்க்கத்தில் இந்திரிய நிக்ரக காலம். இது ஸம்ஹார கிருத்தியானுசந்தான காலமாம். சதாபிஷேகமானபின் (84-வது வயசிலிருந்து) பூரணுயுஸான 100-வயது வரையில் திரோபவகிருத்திய நிருத்த தரிசன காலம். 100-முதல் 120 வரையில் சாலோக சாமீப சாரூப சாயுஜ்ஜியானந்தரம் கைவல்ய முத்தி யெய்துங்காலம். இந்த 120-வருஷகாலத்தையே பாலப்பிராயம் 5-ம்போக, முதல் 40-வயது வரையில் பிரவிருத்தி காலமென்றும், பின்னுள்ள 40-வயது காலத்தை நிவிருத்தி காலமென்றும், கடைசியாகவுள்ள 40-வருஷத்தை சப்பூர்த்திகால மென்றும் சொல்லுவர்.

இப்படியாக வாசியளவுகொண்டு உசுவாசம்† (பிறப்பு) முதல் நிசுவாசம் ‡ (இறப்பு)வரையில் மும்முறையாய் 21,600 மாத்ரையளவு (3×21,600) உள்ள ஜீவதசையை யனுபவிக்கப் பிறந்த மனிதனுடைய ஒரு வருஷம் தேவர்க்கு ஒரு நாள். அதாவது 21,600×360=77,76,000 சுவாச மாத்ரையுள்ளது ஒரு தேவநாள்.

மனுஷனுடைய சுவாச அளவு ஒன்றுனுல் தேவர்களுடைய சுவாச அளவு அதைவிட 360 பங்கு அதிகமா யிருக்கிறது.

○ இந்த விருத்தாகாரமான சக்கரத்திலே மனுஷன் வட்டத்திலுள்ள ஒரு பொட்டு (ஊசிமுனை) ஆனுல், தேவர்கள் 360 பொட்டா லமைந்த திவ்விய தேஜோ மண்டலாகாரமாக விருக்கிறார்கள். ஜீவகளையை செந்நெல் வால்நுனி யளவாகச் சொல்லி உவமிக்கிறதுண்டு. மனுஷன் செந்நெல் வால்நுனிபோன்ற தூமகேதுவானுல், அதைப்போல் 360 'டிகிரி' (பங்கு) அதிகமான திவ்ய மண்டலாகாரம் (இதை வழக்கில் சந்திரமண்டலமெனச் சொல்வதுண்டு) தேவகளை யாகிறது.

ஆதலால் ஜீவனை சந்திரனுடைய கிரணங்களென்றும் தேவர்களை சந்திர மண்டலமென்றும் உவமித்துரைப்பர்.

கிரணங்களெல்லாம் உண்மையாய்ப் பார்க்கில் அணுப்பிரமாணமான தேஜோமண்டலங்களின் பிரவாகமேயன்றி வேறல்ல.

நதிகளெல்லாம் சமுத்திரத்திற் போய்ச் சேர்வதுபோல, கிரணங்களெல்லாம் மண்டலத்திலிருந்துற்பத்தியாய் மண்டலாகாரமாய் மண்டலத்தில் தானே யொடுங்கும். இதனுண்மை தத்துவ தரிசனம் கண்டு, மும்மண்டல தரிசனம் பெறற் பாக்கியம் பெற்றவர்களுக்கு நன்றாக விளங்கும்; மற்றவர்களுக்கு என்னதான் விரித்துரைக்கினும் மருள்வலியால் எல்லாம் மயக்குறத் தோன்றுமேயன்றித் தெளிவுறத் தோன்றாது. இதற்காகத்தான் ஸத்தியத்தை நாடுவோர் தீக்ஷைபெற்று குருமுகமாய் எதையும் ஆராயவேண்டுமென்று சொல்வது.

இப்படியாக பகவான் அருச்சுனனுக்கு சந்திமானமாகிய மாசத்தைக் கொண்டு காலத்தைத் துதிக்கவேண்டி, மாதங்களில்தான் மார்கழி மாதமாக விருப்பதாகச் சொன்னுர்.

மனுஷதினத்தில் விடியற்காலமாகிய பிரஹ்ம முகூர்த்தம் (விடிய ஐந்துநாழிகை) எப்படி உத்கிருஷ்டமானதோ, அப்படியே தேவநாளில் பிர

† First breath. ‡ Last breath.

ஹ்ம முகூர்த்தத்துக்குச் சரியான தனுர்மாசம் தான் சகளீகரிக்கும் காலமாதலால் அதைச் சிறப்பித்துத், தான் அந்த மாதமாக விருக்கிறதாக பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தார்.

மனுஷர்களுக்குள் ஏகாதசி விருதமும் துவாதசிப் பாரணையு மெப்படியோ, அப்படியே தேவர்களுக்குள் ஏகாதச ஸம்வத்ஸரம் ருத்ரமூர்த்தமாயும், துவாதசாரம்பம் விஷ்ணு முர்த்தமாகவும் கொண்டாடப் படுகிறது. 11-வது வருஷத்தில் இடையூறுகள் கணக்கில்லாது வருமாதலால், ஏகாதசியில் பட்டிணி யிருப்பதுபோல், நிவிருத்தி மார்க்கத்தி லிறங்கினவர்கள் 11-வது ஆண்டில் நிச்சிந்தையாய் நிர்விகாரமாய் நிஷ்காமிய கர்மம் செய்யவேண்டியது. துவாதசிப் பாரணையில் விஷ்ணுப் பிரஸாதம் வித்திப்பது போல், 12-ம் ஆண்டில் "நைஷ்கர்ம ஸித்தி" விருதம் அவர்களுக்குப் பலித்து முத்தி ஸித்தியைக்கொடுக்கும். அதாவது கர்மத்தைச் செய்தும் செய்யாச் சாதனையளிக்கும். இந்தமார்கழி மாசம் தேவர்களுக்கு விடியற்காலமாதலால், தேவாதி தேவனாகிய பகவான் பக்த கோடிகளுய்யுமாறு, சூரியன் காலையிலுதிப்பது போல், மார்கழி மாசம் திருவாதிரைநாளில் சகளீகரித்து பஞ்சகிருத்திய பரிருத்தத் தாண்டவமாடி ஆனந்த நடேசனுய் அற்புதக் காட்சியளிப்பார்.

நிஷ்காமிய கர்மமே ஆனந்த கைங்கரியம். அந்தக் கர்மம் செய்வதினுல்,—

"நீரிலேமுளைத்தெழுந்தாமரையினேரிலை
நீரினெடுகூடிநின்றுநீரிலாதவாறுபோல்
பாரிலேமுளைத்தெழுந்தபண்டிதப்பராபரம்
பாரினெடுகூடிநின்றபண்புகண்டிருப்பிரே."

என்று பெரியோர் கூறியபடி பகவான் பஞ்சகிருத்திய பரிருத்தம் செய்து காட்டியும், நிச்சலன், நிர்மலன், அசலன், என்கிற நாமங்களுக்கு இருப்பிடமா யிருப்பதுபோல், தக்க ஹேதுவாகிய கருமத்தைச் செய்தும், அக்கர்மபலத்தியாக விசேஷத்தால் கர்மபந்தத்தால் பிடிக்கப்படாது, ஆனந்த கைங்கரியமாய் நிஷ்காம்ய கர்மம் செய்து நின்மலசித்தனுய் நிர்விகாரனு யிருப்பதே ஸத்பானந்தசபையின் நோக்கமாம்.

இந்தச் சபை சிதம்பரத்திலே பிரதிஷ்டை செய்யப் பெற்று இன்றைக்குப் பன்னிரு வருஷங்களாகின்றன.

பனிரண்டாவது ஆருத்ரா தரிசனம் கிட்டும் காலையில் பாரா ளு மன்னரெல்லாம் கூடிய சபையில், மன்னர் மன்னனும் ஜார்ஜு சக்ரவர்த்தி முடிசூட்டக்கூடிய மஹாதர்பார் முன், "சென்னை பிஷப்" அவர்கள், இராஜ்ய தர்மத்தைப் பரதர்மத்தோடொன்றுக நிலை நாட்டியோர் உபதேசம் செய்யலானுர். அதன் கருத்து தர்ம்ம தேவதையின் வாக்கேயாக விருப்பதால், அஃதைப் "பழனியாண்டவர் திருப்பதிகமாய்"ப் பாடி தர்மம் தலையெடுக்க வென்று குமாரகுருபரனுக அவதரித்த அவர் பாதத்தில் வைத்து அவருக்கு அர்ப்பணமாக அபிஷேகார்ச்சனைகள் செய்து பூஜிக்கச் சொன்னேம். அப்படியே பூஜிக்கப்பட்டு அவர் அருட்பிரஸாதமும் பெற்று இந்த ஆருத்ராதரிசன மஹிமைமய ஸத்யானந்த சபையின் 12-வது வருஷ மஹோற்சவக் கொண்டாட்டமாக இங்கு அடியார்மனங் குளிர அவர் அடிபணிந்து திருவடி தாங்கிய முடியினுல் சிந்தியாது சிந்தித் தெழுதலானேம். ஆஹா! அந்த அற்புதக் கூத்தை யென்னென்று சொல்லுவோம்! ஏதென்றுரைப்போம்!

சிதம்பராஹஸியம் காணவேண்டிய தர்ம்ம துரைகளே ஆண்டானடிமையா நாம் சொல்வதைக்கேளும்! கேட்டபடி நின்றுணர்ந்துய்யும் வழிதேடி யுழைப்பீர், நன்கிழைப்பீர், நலம் பெற இராஜ்ய காரியங்களை யெல்லாம் ஆனந்த கைங்கர்ய மாகவே அற்புதவருள் தூண்டச் செய்வீர், ஜெயிப்பீர், லயிப்பீர்.

"நன்றிதுகூட்டம்நன்றிதுகூத்துநன்றுநன்றிதுவடனம்
அங்குமிங்குமெங்குங்கண்டிலேனிதுவொருவிர்சயன்
[காண்மினோ!
ஒன்றிநின்றன்றுணர்வழிந்துன்னொளியானபின்
அங்குமிங்குமெங்குமிதுவலால்வேறொருவிர்சயங்காண்
[மினோ!"

ஓம் ஆனந்த நடேசாயநமஃ

"Let the Current that Knows Its Way." *

கர்மதர்ம ரஹஸியம்.

——:-:——

கர்மத்துக்கும் தர்மத்துக்கும் வித்யாஸமென்ன? கர்மம்என்பது 'கரோமி=செய்தல்' என்னும் தாதுவிலிருந்து வந்தது. கர்மம் (செய்கை) உண்மையில் ஆராயில் பீஜவிருக்ஷ நியாயமாயுள்ளது. அதாவது மரத்திலிருந்து வித்துண்டாயிற்று? வித்திலிருந்து மர முண்டாயிற்று? என்கிற நியாயந்தை யொத்தது. இந்த விசாரத்துக்கு முடிவில்லை. செக்கிற் கட்டின மாடுபோல் சுழன்று வரவேண்டியதுதான் கதி

கர்மம், வித்தைப்போல் பலனைத்தரும். வினையும் வினைப்பயனும் பீஜமும் விருக்ஷமும்போல் சம்பந்தப்பட்டிருக்கின்றன. வினையின்றி வினைப் பயனில்லை: வினைப் பயனின்றி வினையில்லை. இந்த இரண்டுக்கும் காரணமாயிருப்பது வித்தை. வித்தை யென்றால் அறிவு. அறிவு இரண்டு விதப்படும். "அறிவு, அறியாமை."-யென்னுமிரண்டில் முன்னது ஆணறிவு (Positive Knowledge) என்றும், பின்னதைப் பெண்ணறிவு (Negative knowledge) என்றும் சொல்லுவர். முன்னது "அறிவேன்!" என்றார்த்தெழும். பின்னது "அறியேன்" என்றலுத் தொடங்கும். இதையே வித்தை யென்றும் அவித்தை யென்றும் சொல்லுவர். வித்தையவித்தை யிரண்டுமற்றலொழிய கர்மவாசனை படங்காது. கர்மமுள்ள மட்டும் காரியமும் உண்டு, கர்த்தாவு முண்டு. கர்மம் பிரவிருத்தியைக் கொடுக்கும். பிரவிருத்தி யென்றால் ஸம்ஸாரவிருத்தி. ஸம்ஸார விருத்தி யென்றாலும் துக்கப் பிரவிருத்தி யென்றாலும் ஒன்றே, இதுவரையில் கர்மத்தைப்பற்றிச் சொன்னேம். இதுசித்த விருத்தியாலுண்டாவது.

இனி தர்மம் என்றால் என்ன? என்று சற்று விசாரிப்போம். "தன்வழியறிந்து நடப்பது" தர்மம். "தன்வழி யென்றால் பிரவிருத்தி, நிவிருத்தி யிரண்டு மடங்கும். ஏனெனில், ஒன்றே விரிந்து குவிந்து பிரவிருத்தி நிவிருத்திக்குக் காரணமாகிறது. அந்த "ஒன்று" தான் என்னவென்று அறிய வேண்டும். அதை யறிந்தவனுக்கு எல்லாம் அறிவானும் அறிபொருளுமாகத் தோன்றும். அறிவானும் அறிபொருளும் ஒன்றேயானுல் எல்லாம் அறிவு மயமாய் (சின்மயமாய்) விளங்கும். அறிவுக்கு விஷயமாயிருப்பது அறியாமை. இதையே சேதனு சேதனமெனப் பகுத்துச் சொல்வர். மேற்சொன்ன அறிவுக்குள் அறிவாயிருப்பது சின்மாத்திரம் என்று சொல்லும் உள்ளறிவு. இந்த உள்ளறிவிலிருந்து தான் உணர்வுண்டாகிறது. இது எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியா யிருக்கிறது. இந்த உள்ளறிவு தான் "தன்வழி யறிந்து நடப்பது." இதை அடக்கியாள முடியாது. ஏனெனில் எல்லாவற்றிற்கும் இது தாய் ஸ்தானமான உற்பத்தி காரணமாயிருக்கிறது, இந்த உள்ளறிவிலிருந்து தான் உள்ளதெல்லாம் உண்டாயிற்று. "சித்தன் போக்கு சிவன் போக்கு—அத்தன் போக்கு அதே போக்கு" என்று சொல்கிற பழமொழியில் ஸர்வ காரியஸித்திகளையும் பெற்ற சித்தன் "சிவன்போக்கு" என்று சொல்லும் தன் உள்ளறிவின் வழியே செல்லுவான். அவனை வியவகார விதி நிஷேதங்கள் கட்டுப்படுத்த மாட்டா! ஏனெனில் விதியும் விலக்கும் அறியாமையி லகப்பட் டுழல்கிறவர்களுக்கே ஏற்பட்டதன்றி தத்துவ தரிசிகளான சித்தர்களுக்கு ஏற்பட்டதல்ல. வழியறியார்க்கே நடைபாதைகளும் 'கைகாட்டி மரங்களும்' வேண்டும். முற்றும் வழியறிந்தவர்களுக்கு அவை அவசியமில்லை. அதேமாதிரி மனதின் உள்ளதிலுள்ள கள்ளம் கரைந்து நீங்கி, ஸ்படிகலிங்கம் போன்ற உள்ளறிவின் வழிப்பட்ட சாத்திய சீலர்களான வித்தர்களுக்கு உலக சம்பி.

* Emerson.

தாயமும் உலக வழக்கும் லக்ஷியமில்லை. "சிவன் போக்கு" என்று சொல்லிய உள்ளறிவின் வழி தான் என்னவெனிலோ, அதுஅத்தன் போக்கே தன் போக்காகக் கொண்டு செல்லும். இப்படிப்பட்ட உள்ளறிவு வழிப்பட்ட வர்களை அவர் போக்கில் போக விடுவதே உண்மைத் தர்மமும் இராஜ நீதியுமாம். ஏனெனில் இவர்கள் தேஹோஹ பாவம் நீங்கி சிவோஹ ஸித்தி பெற்றவர்களாதலால், உலகத்தாருக்குப் பெரிதாகத் தோன்றுவது இவர்களுக்குத் திரணமாகப்படும். சிவ தர்மம் தேஹதர்ம்மத்துக்குக் கட்டுப்பட்டு நடவாது.

"வொய மென்று மகஷாம் வெனிருக்கு மட்சரம்
உபாயமென்று நம்புதற்கு உண்மையான அட்சரம்
கபாடமிட்டவாசலைக் கடந்துபோன வாயுவை
யுபாய மிட்டழைக்குமே வொயமைத் தெழுத்துமே
யமாயவென்று மிருத்யுவையெட்டிக் காலாலுதைக்குமே."

என்பது காயத்ரீமார்க்க தரிசனங்கண்டவர் கட்டுரை. "தலைக்கு மிஞ்சின தண்டனையும் ஆஸ்திக்கு மிஞ்சின அபராதமும் கிடையாது என்பது உலகத்தில் வழங்கும் உண்மையான பழமொழி. ஆஸ்தியெல்லாம் நாஸ்தியென்று கடவுள் ஒருவரையே பெருநிதியமாகக் கொண்டு, தலைக்கு மேலோடிய சிந்தையினராய் (அதாவது சிந்தையிழந்த சித்தராய்—"சித்தவிருத்திநிரோதஸித்தராய்')தேஹபாவம்கடந்த ஸித்தர்களை யாரென்ன செய்ய முடியும்? பேசுகிறிஸ்துவைச் சிலுவையிலறைந்தாற்போல் அவர் தேஹத்தை வதைத்துப் பழிபாவத்தைக் கட்டிக்கொள்ளலாம். தேஹோஹ பாவனை கடந்த விதேஹச்செல்வரை வதைக்க யாரால் முடியும்? செத்த பாம்பை யடிப்பவர்போல் மூடர்கள் ஸித்தர்களை வதைத்துப் பழிபாவத்துக்காளாவர்களன்றி வேறொன்றும்ஆகாது. ஆகையால் உள்ளறிவு அத்தன்போக்கே தன் போக்காகக் கொண்டு ஒழுகும்; அந்த "அத்தன் போக்குத்தான்" எது வென்றாலோ! "அத்தன் போக்கு அதே போக்கு"—அவர்போனதேவழி! அப்படி என்றால், எல்லாம் அவருக்கு வழிவிடும்.

அவனிட்டதே சட்டமென்பது போல் அவர் போன தெல்லாம் தர்மவழி.

தர்மம் என்பது பொது: கர்மம் என்பது சிறப்பு. தர்மம் என்பது வழி: கர்மம் என்பது வழி நடக்கல். வழியறிந்து வழி நடந்தால் காடு வனங்களில் சிக்காமல் ஊர்போய்ச் சேரலாம். அஃதே போல தர்மமறிந்து கர்மம் செய்தால், கர்மபலன் பந்தத்தைக் கொடுக்காது நழுவி விழுந்துவிடும். இப்படிக் கர்ம பலாபேக்ஷையை விட்டு கர்மத்தினாலே பந்தமுமின்றி மோக்ஷமுமின்றி தர்ம்மத்துக்காகக் கர்மத்தைச் செய்வது ஸித்தித்தால் அதற்கு "நைஷ்கர்ம ஸித்தி" யென்றுபேர். எல்லா ஸித்திகளிலும் இந்த ஸித்தி மிகவும் பெரியது. ஏனெனில் இது சகஜாநுபவத்தை யளிக்கும்.

இப்படி நைஷ்கர்ம்மஸித்தி பெற்று ஸகஜாநுபவம் ஸித்தித்தவர்கள் உலகுய்ய வேண்டி ஸ்ரீகிருஷ்ண பகவானைப்போல் அவதார புருஷர்களாய் உலகிலவதரித்துத் தர்மத்தை நிலைநாட்டவேண்டி கர்மத்தைச் செய்வார்கள். இவர்கள் நைஷ்கர்ம ஸித்தர்களாய்ச் செய்யும் கர்மம் தர்ம்ம வழிப்பட்டதே யாதலால், அது யமுனைசேர்ந்த கங்கையின் பிரவாகம் போல் தடையற்ற நடைபெற்று காரிய ஸித்தியைக் கொடுக்கும்.

ஆகையால் தடையற்ற கர்மஞ்செய்ய மடை திறந்த வெள்ளம் போலும் பரங்கருணை பாய வேண்டும்.

பரங்கருணையோ ஜீவகாருண்யத்தின் முதிர்ச்சியிற் பிறந்து முதிர்ச்சியில் வளர்ந்து முதிர்ச்சியில் பழுத்த "மாம்பழமாம்"—மஹத்தான பழமாம்.

"அம்மா வெனக்கொரு மாம்பழ மீன்றாள்
அதற்குத் தோலுமில்லை நாருமில்லை
கட்டியு மில்லை கொட்டையு மில்லை
நின்னத் தின்ன ருசிக்கு மென்றாள்
தெவிட்டாத் தேன் கட்டியென்றாள் [வில்லை!"
நின்னேன் தெவிட்டவில்லை. தேன்மயக்கம் தீர

என்பது ஆனந்தத் தாயீன்ற அருட்குழவியின் மழலைச்சொல். இப்படியாகப் பரங்கருணை யாகிய மம்பழந் தின்றவர் ஆனந்தக் கொழுப்பேறித் "தேன் மயக்கம் தீராத" பிரேமரங்களாய் ஹரீங்காரம் செய்துகொண்டு திரிவார்கள். அப்படி யென்றால் "பாதாநுசந்தானம்" செய்வதே தொழிலாய்த் தொழிலியற்றுவார்கள் என்றபடி. இவர்கள் உலகத்தில் பக்குளிகளான பச்சைப் புழுக்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு போய் அவர் உள்ளத்திலுள்ள "இல்லறம்' என்கிற கூட்டில்வைத்துச் சதா கொட்டிக் கொட்டி† பிரேமரகீட நியாயத்தால் யமன் வாய்க் கிரையாகப் பிறந்த பூச்சிகளைத் தேன் குடித்து ரீங்காரம் செய்யும் வண்டுகளாக மாற்றுவார்கள். இப்படி கொட்டுப் பட்டுக் குளவியானவர்களுக்குப் பின்னர்ப் புழுஜன்மமில்லை. தாமரையிலுள்ள தேனையருந்த வெகு தூரத்திலிருந்து அதன் வாசனை யறிந்து வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு வாராநிற்க, அந்தத் தாமரையின் கீழிருக்கும் தவளைகள் அதன் வாசனை யறியாது வீணே அவமாய்க் கத்திக் கொண்டு காலத்தைக் கழிக்கும். இந்த வுண்மையறிந்த 'எமர்ஸன்' என்னும் அமெரிக்க தேசத்து ஆத்மஞானி, "Let the Current that knows its way."—"தன்வழியறிந்து நடக்கும் தர்மத்தைத் தடைசெய்யாதே: அது போனவழியில் விட்டுவிடு" என்று சொன்னார். பகவானும் அர்ச்சுனனுக்கு ஸ்வதர்மத்தையே மேலாக உபதேசித்தார். ஆகையால், கர்மதர்ம ரஹஸியமறிந்[illegible] "பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரமாய்"ச் சீர்பெற்றிருந்து வாழ்வார். உயர் லக்ஷியத்தைப் பற்றற்ற சிந்தையால்பற்றி, தர்ம கர்ம ரஹஸியமறிந்துஉள்ளறிவுகாட்டு முண்மை வழிபற்றி நடப்பவர் ஸத்யாநந்த சபையில் ஆனந்த நிருத்தமிடும் சபாநடேசனது திருவருட் சேவைக்குப் பாத்திராகிறார்கள். அப்படிப்பட்ட திருக்கூட்டத்தை கண்ட பாக்கியத்தால் "12-வது ஆருத்ராதரிசனமாம் இன்றைய சபா நடேசர் பிறந்தநாளை[illegible] ஆனந்த சபா நடேசர் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம். ஆருத்ரா தரிசனமாகிய இன்றைய நாளாகக் கொண்டாடுகிறோம். ஆனந்த சபா நடேசருக்கு அபிஷேகம் நடப்பித்து அவர் திருப்பாதத்தில் சமர்ப்பித்த துண்டுப்பத்திரம் பக்தகோடிகளுக்கு வரப்பிரஸாதமாக வழங்கப்பட்டது. அத்துண்டுப் பத்திரத்தை விவேகசிந்தாமணியை வாசிப்போரெல்லாம் வாசித்துமகிழ, இதன் மேலேட்டின் மூன்றாவது நாலாவது பக்கங்களில் மறுபடியும் அச்சிட்டிருக்கிறோம். இங்கிலீஷிலுள்ள அதன் கருத்தே பழனியாண்டவர் திருப்பதிகமாகவும் ஆருத்ராதரிசன வரலாறாகவும் தமிழில் வரையப்பட்டிருக்கிறது. பழனியாண்டவர் தந்த திருவருட் பிரஸாதமாம் "குருபரானந்த"த்தை இன்னொரு பக்கத்தில் அப்படியே அச்சிட்டிருப்பதைப் பார்க்கவும்.

ஓம்தத்ஸத்.

குருவாரம்
திருவாதிரைநாள்} ஆண்டானடிமை.

† 'தஹரோபாஸனை விசேஷத்தால்' என்றபடி.

AN OPEN LETTER TO ALL.

TO THE EDITOR.

Sir,—Will you kindly permit me the hospitality of your columns to address an Open Letter to All. I seek it after 12 years of silent work and hard *tapas* (subjugation of the senses) to which I devoted myself heart and soul.

I have availed myself of the priceless opportunities which their Majesties' gracious presence in our midst offers for sowing good thoughts in the now open and receptive hearts of their loyal subjects, to celebrate the Founder's Day of the Ananda Mission on the 12th anniver[illegible] on the 4th [illegible] *eclat*. There was *Abhishekam* and *Archana* to Sri Ananda Natesa from 2 A.M. to 6 A.M. in the temple, while I kept watch and vigil and prayed during the whole night, destributing in the morning copies of the enclosed leaflet among the assembled *Bhaktas*.

I have also forwarded copies of it to His Excellency the Governor of Madras, to H. [illegible] the Governor-General of India and through him to the Rig[illegible] Hon'ble Lord Crewe, the Secretary of State for India and [illegible] His Imperial Majesty the King-Emperor himself, seeking [illegible] them one and all their sympathy for the cause of the Mission [illegible]ich is "the Mission of the Empire and the World."

"A good thought sown, a good word reaped, when duly cultivated with understanding sympathy and observant forethought leads, by the working of the Immutable Law of Self-Attunement'—which is the Great eternal Law of Being and Becoming' which forms the basis of all and every true Religion,—to incalculable good in the end."

That is how "the better-mind of India" works for the good of mankind and the elevation of the world; and the Ananda Mission conceived at *Chidambaram* after the Arudradarisanam of 1901 and planned on Christmas Eve of 1902 and openly established on the First of January 1903, has been working silently and unobtrusively on these lines for the uplift of humanity by the lifting up of human thought above considerations of the lower-self.

I solicit the genuine sympathy of All from His Imperial Majesty the King Emperor and his August representatives in India, down to the proverbial "man in the street," who, in his own person, in a divine way represents the *vox-populi* in which shines the *Vox-Dei* in the form of "the average intelligence of the people;"—I want the sympathy of All for the cause of Truth, of Peace and Goodwill among men, which the Ananda Mission has at heart and for which it is working under the guidance of the spiritual hierarchy of saints and sages who have left their footprints in the sands of time and in the hearts of the good and the true, who wish to serve their generation in the selfless spirit of those Great Souls who from time immemorial have worked for the uplift of humanity and the betterment of the world.

With prayers for the Good of the Empire and the long life of their Majesties who have evinced their personal sympathy and affection for their subjects in a truly Royal Manner, I beg to remain, yours for ever, in the cause of the Mission,

Lalitalaya,
Madras, S.
5th Jany. 1912.

C. V. SWAMINATHA AIYAR,
for the Honorary Secretary,
Ananda Mission.

The Right of Entry into the

உயர்பூமிகையின் உட்பிரவேச பாத்தியதை.

"Faith like that of the child, [illegible] one one thing needful. Such faith leadeth one to [illegible].

"The calculating intellect of the world weigheth things with an eye to [illegible]ridly loss and gain. Man's limited reasoning seeth [illegible] far enough. It hath no right of entry into the [illegible] of the Supreme. It is faith—the faith of a child—which leadeth one forth into that land."—*Sri Ramakrishna Paramahamsa Deva.*

"ஒப்பூ" என்று சொன்னால் பூப்ரஸ்தமெல்லாம் தானாகப் பிரவேசித்து ஆளலாம். இங்கே சொல்லின் திறனறிந்து சொல்வதே சொல்லாம் சொல்லென்பது பரை, பச்யந்தி, மத்திமை, வைகரி யென நால்வகைப்படும். இந்த நாலின் மூலமறிந்து அவற்றின் காலமறிந்து, அதாவது மாத்ரை (அளவு) அறிந்து, தேவதையறிந்து, உளவறிந்து உபயோகிக்கும உண்மையறிந்து உபயோகித்தால் சொல்லின் வீரியங் குன்றாது கல்ல பூமியிலிட்ட வித்து முளைப்பது போல் சங்கல்பவித்தி தானே யுண்டாகும்.

பக்தி யில்லாத புத்தி பிரயோசனமில்லை. சாணைப்பான் பூச்சிபோல் வயிறு வளர்த்துக் கொண்டிருக்கும் வழியொன்றையே தான் பார்க்கும் பேதபுத்தி. "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்பது நல்ல பழமொழி. "பத்திபினால் லாபம் புத்தியினால் லாபமாய்க்தேன்" என்பது தீக்ஷாவழி.

"அஹம்பாவத்தாலே யழிந்தான் துரியோதனன்" என்பது பற்றோர் பழமொழி. அஹம் எல்லாரிடத்துமே யிருக்க, துரியோதனன் மாத்திரமே யதனால் அழிந்தவனாவானேன்? என்று கேட்கலாம். இது ஒரு நல்ல கேள்விதான். "அஹம் அஸ்மி" என்பதற்கும் "தேஹோஹம்" என்பதற்கும் மெத்த வித்தியாஸமுண்டு. ஸர்வாந்தர்யாமியா யிருக்கப்பட்ட நான்தான் தானாயிருக்கிறேன் என்று அறிந்து தன்மயமானால் அஹம் (நான் என்னும் பாவம்) அறி[illegible] "இதுமட்டும் இந்தமட்டும் என்கோடு" என்று எல்லை குறித்துக்கொண்டு குண்டுச்சட்டியோ டிருந்தால் அந்த குண்டுச்சட்டியை விட்டொழித்தல் கூடாத காரியமாகிறது. குண்டுச்சட்டி யுள்ளமட்டும் அதற்கு உள்ளும் புறம்பும் உண்டு. அந்த குண்டுச் சட்டியை சமுத்திரத்தில் போட்டமுழுதினாலும் அதற்கு உள்ளும் புறமும் ஜலம் நிறைந்திருக்குமே தவிர, குண்டுச்சட்டி யொழிந்து போகாது. ஜலத்தை விட்டெடுத்தால் குண்டுச்சட்டி குண்டுச்சட்டியாகவே தானிருக்கும். அது மறைந்துபோகாது. சமுத்திரஜலம் அளவற்றிருந்தாலும் குண்டுச்சட்டியில் குண்டுசட்டி ஜலந்தான் நிற்கும். அந்தச் சட்டியும் ஓட்டை உடைசலானால் அந்த குண்டுச்சட்டி ஜலமும் ஒழுகிப்போய்விடும். ஓட்டைச் சட்டி "லொட லொட்டை' யென்றுதான் சப்தம் செய்யும். அதற்கு உண்மையான த்வனியில்லை இதே பாதியாகத்தான் உண்மையான பேச்சுக்கும் வாச்சாமாத்திரமான பேச்சுக்கும் வித்தியாஸமுண்டு.

உண்மையான வார்த்தை அநாஹத சப்தத்திலிருந்து (தஹராகாசம் பிறந்தவிடத்திலிருந்து) உண்டாவதால், அதன் த்வனி உண்மைச் சோதியை உள்ளடக்கிக் கொண்டிருக்கும். "த்வனே ரந்தர்க்கதம் ஜோதிஃ" என்ற சுருதி வாச்சுப்படி அந்த த்வனியினுள்ளே யிருக்கும் ஜோதி. அதற்குள்ளே வாச்சுப்பிறந்தவிடமாகிய மனஸிருக்கிறது. அந்த ஜோதிர்மனஸே சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதி முத்தொழிலும் செய்யவல்லதாம். திரிகாலதரிசனம் என்பது இந்த ஜோதிர்மனஸுக்கே விளங்கும். இந்த மனசும் லயமாகும்படி சித்தவிருத்தி நிரோதம் செய்தவன் யாரோ, அவனே புருஷன் (புருஷ சப்தத்துக்குரியதீரன்). மற்றவர்களெல்லாம் பேடிகளாவர்.

இப்படியாக சங்கல்ப மூலமறிந்து, சங்கல்ப விதிபறிந்து, சங்கல்ப விகல்பமற்றுச் சலிப்பற நின்ற மனதினுற்சிந்தியாது சிந்தித்து மௌனத்தே காதின்றிக்கேட்ட அசரீரிவாக்கை யுணர்ந்து அதன் வழிப்பட்டு நடந்தால், மனம் ஒருவழிப்பட்டு மந்திர வித்தியை அளிக்கும். மந்திரவித்தி யென்றாலும் வாக்குவித்தி யென்றாலும் காரண காரிய தோரணையினால் ஒன்றே. வாக்குவி[illegible]பெற, மூக்குநுனியில் லக்ஷிய மிருத்தல் வேண்டும். அப்படி யென்றால் வடசாரி இடசாரியாயோடும் சரவோட்டத்தை மூக்கு மையத்தில் நிறுத்தி, புருவமத்தியிற் கொண்டு போய்த் திரிவேணி சங்கமம் என்கிற ஸ்தானத்திலிருந்து பார்த்தால் 'ஜீவகளை' கண்ணுக்குத் தெரியும். சரீரத் திரியங்களுக்கும் அபிமானியான ஜீவதத்துவத்தைத் தரிசித்தால் தாரணத்தியான ஸமாதி முதிர்ச்சியாம் யோகலம்யமத்தில் திரிக்கு தரிசன திரிசிய மென்கிற திரிபுடி தரிசனம் ஸித்திக்கும். திரிபுடி தரிசனம் ஸித்தித்தால், உள்ளன்பு தானாகவூறும். அதிலிருந்து ஜீவகாருண்யம் பெருகும். ஜீவகாருண்யம் பெருகப் பெருக பரங்கருணை ஸித்திக்கும். பரங்கருணை ஸித்தித்தால் பத்தி வெள்ளம் பெருகும்.

பக்தியுள்ள விடத்தில் சிரத்தையு முண்டு. பக்தியும் சிரத்தையும் முத்திக்கு வழியாம். பக்தி சிரத்தையோடு செய்யும் நிஷ்காம கருமத்தால் அஹ மென்னும் தோண்டி நழுவி விழுந்துடைந்துபோம். "தோண்டி யுடையவுமே தோற்பையும் தான் கழியும்." தேஹபாவம், அஹம்பாவம் இரண்டும் விட்டால், "ஹரஹர" வென்ன அமர்ந்திடச் செய்யும்.

"ஹரஹர வென்ன அரியதொன்றில்லை
ஹரஹர வென்ன அறிவிலர் மாந்தர்
ஹரஹர வென்ன அமரருமாவர்
ஹரஹர வென்ன அறும் பிறப்பன்றே."

என்பது திருமந்திரோபதேசம்.

இப்படி யாரொருவர் "ஹரஹர" வென்ற உண்மையாய்ச் சொல்ல வறிந்தார்களோ அவர்கள் உயர் பூமிகையின் உட்பிரவேச பாத்தியதை பெற்றவர்களாவர்.

பூமிகை யென்றாலும், க்ஷேத்திர மென்றாலும், ஸ்தலம் என்றாலும், நிலம் என்றாலும் அவஸ்தா பேதத்தால் ஒன்றையே குறிக்கும். மனிதன் உண்மையாயிருந்து உள்ளபடி எதை நினைக்கிறானோ அது தானே சம்பவிக்கிறது. "யத்பாவம் தத்பவதி." நல்லார் நலத்தையே சிந்தித்து நன்மை யடைகிறார்கள். அல்லார் தீதையே சிந்தித்துத் தீமையை யடைகிறார்கள்.

ஆதலால் "தனக்குத் தானே பகைவனும் நட்டானும்" என்று திருமந்திரம் ஓதிய திருமூலதேவர் நன்றாகக் கூறியுள்ளார்.

மனிதன் இப்படித்தானே தனக்குப் பகையும் நட்டானுமா யிருந்து பிறர்மேல் பழிபாவத்தைச் சுமத்துகிறான். இதனாலுண்டாகும் சண்டை பூசல்களுக்கு அளவு சங்கையில்லை. கோர்ட்டும், கச்சேரியும், போலீஸும், ஜெயிலும், மாஜிஸ்திரேட்டும் ஜட்ஜியும் ஓயாது ஒழியாது வேலைபார்க்கிறதெல்லாம் இந்த அற்புதச் சண்டையை விசாரிக்கத்தான்.

"Renunciation" and "the Worldly Mind."

"Vascillation unto the Last."

"சாவதானால் ஸந்நியாஸம்; பிழைப்பதானால் பெண்டாட்டி."

———(*)———

"பற்றொன்று பற்றொன்று பவோபவம், மற்றொன்று மற்றொன்று மனோபவம்" என்பது ஆன்றோர் பழமொழி. "பவோபவம்," அதாவது தெய்வசிந்தனை குடிகொண்ட "ஜோதிர்மனஸானது" எல்லாப் பற்றையும்விட்டு பரமபதமொன்றையே பற்றிநிற்கும். இதற்குத்தான் தியானயோகம் என்றும் "தியானிபுத்தா" என்றும் சொல்லுகிறது. "தியானம் நிர்விஷயம் மநः" என்பது சுருதி வாக்கியம். நிர்விஷயப் பட்ட ஜோதிர்மநஸானது முத்திவழியைநாடி, பகவத்பாதமாகிய பரமபதத்தையே தைலதாரைபோல் இடையறாத்தியானத்தால் சிந்தித்துச் சிந்தனையும் நழுவியவிடத்து "அங்க லிங்க சங்கம" விநிபற்றித் திவேயாகாரமாய் விளங்கும். இதுதான் பவோபவம்: பகவத்தியானம்.

"மனோபவம்" என்பது என்னவென்றால் குரங்கு சாகை (கிளை) விட்டுச் சாகைபற்றித் தாண்டித் திரிவதுபோல், விஷயமாகிய காட்டில் ஒன்றுவிட்டு மற்றொன்று பற்றி சங்கல்ப விகல்பங்களாகிய சேஷ்டைசெய்து திரியும். மனோபவம் என்பது உலகப்பற்றுள்ள மனதின் சுபாவம். பவோபவம் என்பது மோக்ஷப்பற்றுள்ள மனதின் சுபாவம்.

பூர்வத்தில் டில்லி சக்ரவர்த்தியாண்ட காலத்தில் "வாயால் வல்லவன்" என்கிற ஒரு பிராம்மணன் மந்திரி ஸ்தானத்தை வகித்திருந்தான். டில்லிபாக்ஷா ஒருநாள் பெரியதர்பார்கூடி தனது பிரஜைகள் சிற்றரசர்கள் எல்லாரையும் வரவழைத்து முன்னர் இந்திரப்பிரஸ்தத்தில் தர்மராஜா இராஜசூயயாகம் செய்து சம்ராட்பட்டம் சூட்டிக்கொண்டதுபோல், தான் இந்தியா முழுமைக்கும் ஏகசக்ராதிபதியா யிருப்பதைத் தெரிவிக்கவும் இராஜ்யத்தில் தர்மம் தலையெடுக்கவும், தான் தர்மபுத்திரனைப்போல "சம்ராட்பட்டம்" சூட்டிக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்தார். மந்திரி பிரதானிகளெல்லாரும் சரிசரியென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். இராஜ புரோகிதர் உலகத்தில் தர்ம்ம ஸ்தாபனம் செய்ய தர்மராஜ்யம் தலையெடுக்கலாயிற்றென்று சுருதிஸ்மிருதி இதிஹாஸங்களைக் கொண்டு தர்ம்மோபதேசம் செய்தார்.

டில்லி பாக்ஷாவும் "வாயால்வல்ல" தன் மந்திரியைக் கூப்பிட்டு தாரகவொளிபோலும் தமது லிம்மாஸனத்தை விளங்கச்செய்யும் நக்ஷத்திரக் கூட்டங்களில் ஒன்றாக உம்மை அங்கீகரித்தோம் என்று சொல்லி தமது மந்திரிக்குப் பெரியதோர் பட்டங்கொடுத்து, மந்திரியைப் பார்த்து "ஓ பிராமணோத்தமரே! நீர் ரிஷிகள் பரம்பரையில் அவதரித்த உத்தமராயிற்றே! இல்லறம் பெரியதா? துறவரம் பெரியதா? ஸம்ஸாரம் பெரியதா? ஸந்யாஸம் பெரியதா? இதை யாரத்தீர அமர்ந்து யோஜித்து உம்முடைய முடிவான அபிப்பிராயத்தை நாளைக்குத் தெரிவியும்" என்று ஆஜ்ஞாபித்தார்.

"வாயால்வல்ல" பிராம்மணன் சாணிக்கிய சூத்திரமெல்லாம் கற்றவராகையால், உடனே சண்டப்பிரசண்டமாக பிரசங்கம் செய்யச் சொன்னால் ஒருமணிநேரம் மூச்சுவிடாது பேசியிருப்பார். ஆனால், டில்லிபாக்ஷா சாமான்னிய மானபேர்வழியல்லவே! அவர் கேள்வியைக் கேட்டுவிட்டு, உடனே "உம்முடைய முடிவான அபிப்பிராயத்தை நாளைத் தெரிவியும்" என்றல்லவோ ஆஜ்ஞையிட்டிருக்கிறார். "ஆரத்தீர அமர்ந்து யோஜித்து" என்றும் சொல்லியிருக்கிறாரே! அவர் எண்ணம் எப்படி யிருக்குமோ!

மந்திரி யென்னதான் வாயால்வல்லவராயினும், "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்ற ஔவைபாட்டி சொற்படி, "மனப்பழக்கம்" படியாதவர். 'மனப்பழக்கம்' என்றால் என்ன? "டுக்ருங்கரணே" யென்று வியாகரணம் படிப்பதல்லவே! 'மனப்பழக்கம்" "யோக சூத்ரத்தில் "சித்தவிருத்திநிரோதः" என்றல்லவோசொல்லப்பட்டிருக்கிறது! வாயால் வல்லவனாகவேண்டி "டுக்ருங்கரணே" யென்று வியாகரணம் படித்துக்கொண்டிருந்த ஒரு மூடமதியைப் பார்த்தல்லவோ பகவத்பாத சங்கராசாரிய ஸ்வாமிகள் 'பஜகோவிந்தம்! பஜகோவிந்தம், பஜகோவிந்தம் மூடமதே!" யென்று வற்புறுத்தியோதினார். அந்த பகவத்பாத சங்கராசாரியரே வந்து உபதேசித்திருந்தாலும் அவரைத் தர்க்கத்துக்கிழுத்து வென்றிருப்பார் வாயால்வல்லவரான மந்திரி. அல்லது கோர்ட்டுக் கிழுத்து நஷ்டப் பிராது செய்தாவது ஜயித்திருப்பார். கோவணாண்டியான ஸந்யாசியின்மேல் நஷ்டப்பிராதெடுத்து ஜெயித்து என்ன லாபம்? என்று கேட்கலாம். அவரை ஆறுமாசம் ஸிவில் ஜெயிலில் அடைத்து வைக்கவாவது முடியுமே! அந்த சாஹஸ காரியத்தையாவது செய்து உலகத்தில் கீர்த்தி பெறலா மல்லவா!

ஆனால், இப்பொழுது ஆஜ்ஞையிட்டவர் டில்லி பாக்ஷா! அவருக்குச் சற்று மனங்கோணித்தானால் பிரமாதம் வந்து விடும்! மந்திரி வேலை யெல்லாம் போய்விடும்! அல்லாமல், வேறு அநர்த்தம் விளைந்தாலும் விளையும். தலைதப்பினால் தம்பிரான் புண்யமென்கிற கதையில் வந்து விட்டால் என்ன செய்கிறது!—என்று உள்ளுக்குள்ளே யொருபக்கம் உதைத்துக் கொண்டது!

வாயால் வல்ல பிராமணன் தர்பாரை விட்டுச் சென்றதும், "இல்லறம் பெரியதா? துறவறம் பெரியதா? ஸம்ஸாரம் பெரியதா? ஸந்நியாஸம் பெரியதா?" என்று ஆலோசனை செய்யத் தொடங்கினார். ஒரு நியாய ஸ்தலத்தில் அல்லது மஹா ராஜாக்கள்கூடிய தர்பாரில்தானாலும், இரு கக்ஷியில் ஒன்றை யெடுத்துக் கொண்டு பக்ஷவாதம் செய்யச் சொன்னால் வாயால்வல்லபிராமணர் வெகு நன்றாய் வாதம் செய்திருப்பார். ஆனால் திரிகரண சுத்தியாக இந்த அநர்த்தக் கேள்விக்குப்பதில் சொல்வதென்றால் அவருக்கு ஒன்றும் தோன்ற வில்லை! அவருக்கு புத்தி மயக்கங்கொண்டது; தலை சுழன்றது. யோசனைமேல்யோசனையாக ஒன்றும் ஓடவில்லை!

துறவறம் பெரிது என்று ஸ்தோத்திரம் செய்தால் கையில் "தண்டி கமண்டலு"வைக் கொடுத்து கோவணாண்டியாகத்தானே க்ஷேத்திர யாத்ரை செய்துவாரும் என்று அனுப்பிவிட்டால் என்ன செய்கிறது? என்கிற அச்சம் ஒரு பக்கத்தில் பாதிக்கலாயிற்று. அப்படிக்கில்லை, இல்லறம் தான் பெரியது! ஸம்ஸாரத்துக்கு மிஞ்சிய போகமில்லை யென்றால், குடுமியையும் பூணூலையு மறுத்துக் கொண்டு தாடியை வளர்த்துக் கொண்டு பிராம்மணப்பிரஷ்டனாகும்படி நிர்ப்பந்தித்தால் என்ன செய்கிறது? என்கிற பயம் ஒரு பக்கத்தில் வேதனை விளைத்தது. இப்படியாக ஒரு வழியும் போக முடியாமல் மனம் தத்தளிக்கவே ஏக்கம் பிடித்து ஆரியர் காயலாவாக விழுந்து விட்டார். ஏக்க

மும் தூக்கமும் மனக்கவலையுற்றவிடத்தும் அற்றவிடத்துமன்றி மற்றப்படிக்கில்லை யென்பது ஸநாதநமான தர்மம். மனக்கவலையில்லாவிட்டால் ஏக்கமுமில்லை, தூக்கமு மில்லை.

ஏக்கமும் தூக்கமுமில்லா விட்டால் சோகமோக மிரண்டுமில்லை. சோகமோக மில்லாவிட்டால் மனது ஏகாக்ரப்பட்டு அலையற்ற சமுத்திரம் போல் சங்கல்ப விகல்பமற்று சாந்தோபசாந்தமாய் விளங்கும். சாந்தோப சாந்தத்தால் மனம் விஸ்ராந்தி யடைந்தால் மனத்தெளிவு உண்டாகும். "திரையற்ற நீர் போல் சிந்தை தெளிந்தார்க்குப் புரையற்றிருந்தான் புரிசடையோனே" என்ற திருமந்திரோபதேசப்படி மனத்தெளிவுண்டாக, சந்தேக விபரீதங்களற்றுப்போம். ஆனால் இந்த மனத்தெளிவுக்கும் வாயால்வல்லவரான பிராஹ்மண மந்திரிக்கும் எவ்வளவு தூரம்! பாபம்! பட்டாலல்லவோ தெரியும் பார்ப்பானுக்கு! வாச்சாஞானத்துக்கும் கைவல்ய ஞானத்துக்கு முள்ள வித்யாஸம் அனுபவத்தில் தான் தெரியவரும். வேதாந்தப் பேச்சைப்போல் வெட்டிப் பேச்சு வேறு கிடையாது!

வாயால்வல்ல பிராஹ்மண மந்திரி சிந்தாக்ரந்தராய் சந்தேக விபரீதங்களால் பீடிக்கப்படவும் "தேஹம்" ஆடிக்காற்றி லகப்பட்ட துரும்புபோல் அல்லற்படத் துவங்கிற்று. ஜ்வரம் பிடித்து வர வர அதிகரித்தது! பலம் குறைந்தது! புத்தி மழுங்கிற்று! அந்தகன் கிட்டிவந்து பரிகாலம் செய்வான்போல் "ஸம்ஸாரம் பெரியதா? ஸந்நியாஸம் பெரியதா?" என்று கேட்டுக் கணகளவென்று சிரித்தான்.

"யமாய தர்மராஜாயா மிருத்யுவேச அந்தகாயச, வைவஸ்வதாய காலாய ஸர்வபூதக்ஷயாயச, ஔதும்பராய தத்நாய நீலாய பரமாத்மநே, விருகோதராய சித்ராய சித்ரகுப்தாயவை நமஃ சித்ரகுப்தாயவை நமோந்நமஇதி."—என்று வாயால்வல்ல பிராம்மணகுல திலகர் யமதர்மராஜாமுன் வாயிழந்து அவரை ஸ்துதிக்க லாயினர்.

வைவஸ்வதன்.—"ஸம்ஸாரம் பெரியதா? ஸந்நியாஸம் பெரியதா? சொல்!" என்றான்.

பிராஹ்மணன் விழிவிழி யென்று "மேட்டு வளையைப்பார்த்து" விழித்தான்.

வைவஸ்வதன் வார்த்தையைக் கேட்டு ஆப்தகேயர் ஒருவர், வாயிழந்து தவிக்கும் பிராமண மந்திரியை நெருங்கி, "ஆரியரே! காலன் கிட்டிவிட்டான்! வீண் யோசனையேன்! ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளும்!" என்றார்.

கிட்டவிருந்த புத்ரமித்ர பந்துக்கள் அவரைக் கடிந்துகொண்டு "ஓய் நீர் யார்கானும் அவரிடம் போய் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்! என்று சொல்வதற்கு? வேணுமானால் நீர் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு போம்! அவரைத் தொல்லை செய்யாதேயும்!" என்றார்கள்.

வாயிழந்த வேதியர் வகைசொல்லத் தெரியாது விழித்தார்.

காலன்:—"ஸம்ஸாரம் பெரியதா? ஸந்நியாஸம் பெரியதா? சொல் சீக்கிரம்!" என்று வெருட்டுகிறான்.

வேதாந்த வேதியர்:—"அப்பனே என் சொல்லைக் கேட்பாய்! ஸந்நியாஸம் வாங்கிக்கொள்!"

அந்தியகாலம் கிட்டிய பிராஹ்மண மந்திரி:—ஐயோ! இந்தக் கேள்வி யென்னைவிட்ட பாடாகவில்லையே! கண் சுழன்று சித்தம் தடுமாறுகிறதே! அதோபார்! கருநீலம்போல் இருள் மேனி விளங்க நின்றுகொண்டு கேட்கிறான்! அவனைப் போகச்சொல்! போகச்சொல்!" சேவகர்கள் அங்கு மிங்கு மோடி எல்லாரையும் வெருட்டுகிறார்கள்.

வாயால் வல்லவர்:—"ஐயோ! அதோ சிற்கிறானே! அவன் இருவிழிகளையும் பார்க்க பயங்கரமாயிருக்கிறதே! அவனைத் துரத்தி விடுங்கள்! துரத்தி விடுங்கள்!"—மனம் நெகிழ்ந்து உள்ளுக்குள் அழுகிறார்.

"ஸம்ஸாரம் பெரியதா? ஸந்நியாஸம் பெரியதா?" என்று ஆக்ரோஷத்தோடு பின்னும் ஒரு துவனி பிறந்தது.

வே-வேதியர்:—"ஆரியரே! ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளும்! வாங்கிக் கொள்ளும்!"

ஆர்ப்பாட ஆரியர்:—டாக்டர் எங்கே? நான் பிழைப்பேனா? மாட்டேனா?

வே-வேதியர்:—பிழைத்தாலும் சரி, போனாலும்சரி! ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளும்! இனிக்காலஹரணம் செய்ய வேண்டாம்.

ஆ-ஆரியர்:—டாக்டர் இனி நான் பிழைக்க மாட்டேனென்று உறுதி மொழி யெழுதிக் கொடுத்தால் நான் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்கிறேன்.

வே-வேதியர்.—டாக்டரே, என்ன சொல்கிறீர்?

டாக்டர்.—நான் என்ன யமதர்ம ராஜாவா! உறுதிமொழிச் சீட்டுக் கொடுக்க! அவனவன் தலைவிதி யெப்படி யிருக்கிறதோ! நான் ஏதோ சிகிச்சை செய்கிறேன்: பிழைத்தாலும் சரி! போனாலும் சரி! என்னுடைய தொழிலுக்குரிய சம்பளம் எனக்குச் சேரவேண்டியது ஒன்றுதான் எனக்கு உறுதியாய்த் தெரியும். அதற்கு வேண்டிய தண்டல் கணக்குச் சீட்டை அன்றன்றைக்கே யெழுதிக்கொடுத்து விடுகிறேன். அவ்வளவுதான் நான் செய்ய முடியும்! அதற்குமேல் என்னாலாகாது!

ஆரியர்.—அப்படியானால் அவர் ஒருகை பார்க்கட்டும். நான் பிழைக்க மாட்டேன் என்பது நிச்சயமாய்விட்டால் அப்புறம் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்வது நிச்சயம். மஹாமஹோபாத்தியாயரிடம் சொல்லி ஸந்யாஸ மந்திரத்தை யெழுதி வைக்கச்சொல். காஷாய வஸ்திரம் தயாராக விருக்கட்டும். இனிப்பிழைக்க மாட்டேன் என்பது நிச்சயமாய் விட்டால் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதும் நிச்சயந்தான். பிழைக்கலாமென்கிற எண்ணமிருக்கிற வரையில் ஸந்நியாஸ மந்திரமெல்லாம் உபந்நியாஸத்துக்கே யுதவும். சாஸ்திர வசனங்களை யெல்லாம் பார்த்து எழுதிவைக்கச் சொல். பிழைத்தெழுந்தால் பேஷான உபந்நியாஸம் செய்ய உதவும்.

வாயால் வல்லவருக் கிளையவரான "காலால் வல்லவர்"—அதுதான் சரி! பலே பாவா! பேஷ் அண்ணா! என்னண்ணா! என் முத்தண்ணா!" என்றுசொல்லி ஒருபுறத்தில் தலைகால் தெரியாமல் கூத்தாடினார்.

வே-வேதியர்:—இதென்ன பேச்சு! இதென்ன கூத்து? "சாவதானால் ஸந்நியாஸம்! பிழைப்பதானால் பெண்டாட்டி!" யென்கிற கதையாகவல்லவோ விருக்கிறது! அத்யாவஸ்தையிலும் இந்த ஸந்தேகந்தானா! (இளைய தம்பியைப் பார்த்து) "பிள்ளாய்! இதென்ன கூத்து!"

காலால் வல்லவர்:—"ஓய் பேசாதேயும்! இடறி விழுந்தவனைக் காலால் உதைக்கவல்லவன் யான் என்பதை மறந்து விட்டாரா என்ன! வாய் மூடும் சும்மா!

புத்ர மித்ரர்கள்.—"ஓய்! நீர் வேதாந்த வேதியர்தான்: வேதமுணர்ந்தவர்தான்: போதும்! உமது திருவாயை மூடும்! உமக்கு ஸந்நியாஸத்தில் பிரியமிருந்தால், இப்பொழுதே செய்துகொள்ளும்! காஷாயம் தயாராயிருக்கிறது! இந்த சமயத்தில் அவரிடம் போய் தத்துப்பித்தென்று உளாறாதேயும்."

ஆ-ஆரியர்.—டில்லிபாஷா!-தர்பார்!-ஸம்ஸாரம்!-ஸந்நியாஸம்!-உபந்நியாஸம்!--உத்யோகம்!—என்று பிதற்றிக்கொண்டு மதிமயங்கித் தூங்குகிறார் (எல்லாரும் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு அழுகிறார்கள்.) டாக்டர் "இங்கேயிருந்து சத்தம் செய்யாதேயுங்கள்! எட்டிப் போங்கள்! தூரப்போங்கள்! இனி ஒருவரும் என்னுடைய அனுமதியின்றி அவரிடம் போகக்கூடாது!" என்று தாக்கீது செய்துவிட்டுப் போகிறார்.

(போனவர் திரும்பிவரவில்லை!
படுத்தவரும் பிழைத்தெழுந்தாரில்லை!!)

——(-)——

THE LORD OF PALNI'S GRACE—
"GRANTING OF THE GREAT BOON."
பழனியாண்டவர் திருவருட் பிரஸாதம்.

குருபரானந்தம்.

ஆறுறுமோராறுப் அறுமுகனுமொருமுகமாய்த்
தேராருமுருராய்த் தேடுதற்கோரீயோளித்தாய்!
ஈராறுயர்சேவியாய் இருந்திலையோகாண்டற்கு!
வேறுருனையன்றி விருப்புற்றளிப்பதற்கு!
தேறார்தேறுதற்கு தேவிபராசக்தியுடன்
வாரார்முருகய்யன் வர்ணமயில்வாகனமேல்!

பழனியாண்டவர் திருப்பதிகச் சிறப்பு.

ஆண்டவன் சந்நிதியில் அரங்கேற்றற் காட்சி. (1-1-12.)

"பன்னூல்கற்றுறும்பேற்றைப்பன்னாள்கொண்டடைவதினு
"மின்னூல்கற்றலீதெய்தலெளிமையெனவுளங்கொண்டே
"பன்னூலினுளமிருக்கும்பயன்களெல்லாம்பரிந்தாய்ந்து
"சொன்னூலாமிந்நூற்குச்சுகியார்யார்மகிபாதே!"—
என்றுற்றதென்றுசோன்னானென்னப்பன்முக்தய்பன்
நன்றுற்றதென்றுகோண்டேனடிமையவனடிதொழுதே!

"வேலுமயிலுந்துணையளித்தல்.

ஆண்டானுக்கடிமையென்றேன் ஆண்டவனுமதுகொண்டு
ஆண்டானடிமைக்கடிமைசெயுமடியன்தானென்றுவந்து
தூண்டாமணிவிளக்காய்த்தூயமனத்துள்ளிருந்து
வேண்டாவரமுனக்குவேண்டுமென்றுவேண்டினையே—
ஆண்டானடிமையாநீ ஆனந்தசபைநடுவே
வேண்டாதுவந்துழைக்கவேலுமயிலுந்துணையென்றான்!

ஓம்சரவணபவநமோநமஃ

ஸத்யாநந்த சாந்த அவதூதாத்மாநம்பஜே.

Easy Lessons in Economics.
Lesson VIII.

குடிவாழ்க்கை.
VIII. டாடம்.

வேலைக்காரர்களின் நாணயம்.

வேலை செய்வோர்களுடைய யோக்கியதைக் குறைவினால் விளையும் தீங்குகள் பல. வேலை செய்வோன் ஒருவனாலல் அவனிடத்தில் நம்பிக்கையில்லாக் காரணத்தினாலேயே மேற்பார்வைக்கு மற்றொருவன் அவசியமாய் வேண்டியிருக்கிறது. தொழில் செய்து வைப்பவன், "இவ்வளவு வேலை செய்தால் தான் இவ்வளவு கூலிக்கருகனாகிறான்" என்பது போன்ற திட்டங்களைச் செய்ய வேண்டியதும் அவசியமாகின்றது. வேலைக்காரர்களுடைய புத்திக் குறைவினாலுண்டாகும் நஷ்டத்துடன் அவர்கள் சோம்பலாலும் தெரிந்து செய்யும் குற்றத்தாலும் நேரும் நஷ்டத்தையும் சேர்க்க வேண்டும். இதனால் வேலைக்காரர்களை நம்பி பெரும் தொழிலைத் தொடங்க பயப்படுவோர் பலர்.

நம்முடைய தேசத்திலிருந்து இங்கிலாண்டுக்கு நிலச்சரக்கு, பஞ்சு முதலியவைகள் விசேஷமாக ஏற்றுமதியாகிறது- இதில் நம்தேசத்தார் செய்கிற பிசகுகளினால், அதன் விலை குறைந்து போகிறது மன்றி, மற்ற தேசங்களிலிருந்து வரும் சரக்குகளுக்கு அதிக கிராக்கியேற்படுவதுடன், ஒருவன் புத்திக் குறைவினாலோ, சோம்பலினாலோ, வேண்டு மென்றோ செய்யும் பிசகினால், ஒருதேசச் சரக்குகளுக்கே விலை குறைந்து போவது மன்றி தேசத்தாருக்கும் கெட்ட பெயரைக் கொண்டு வருகிறது.

நிலச்சரக்குகளில் ஈரமுள்ளதை சேர்ப்பதாலும், பருத்திக்காய்களின் தொட்டிகள் பொடிந்து பருத்தியுடன் கலந்திருப்பதை கவனியாமல் சிப்பங்களில் அடைத்துக் கட்டி விடுவதாலும், வேறு தேசங்களிலிருந்து போகிற சரக்கைப் போல் நம்ம தேசத்திய சரக்கின்மேல் அவ்வளவு மோக முண்டாவதில்லை எனப்படுகிறது. புகையிலையைச் சரியாய் பதப்படுத்தத் தெரியாமையாலும், அதில் நடக்கும் சூதுகளாலும், அதிலுள்ள காரம் வெளிப்பட்டுப் போகாமல் கட்டத் தெரியாததாலும் அந்த வியாபாரத்திலும் சரியான விலை கிடைக்காமலும் போகிறதென்று தெரிய வருகிறது.

இத்தேசத்தில் தொழிலாளிகளுடைய வரும்படி குன்றியிருப்பதின் முக்கிய காரணங்கள் இரண்டு. பிறதேசத்தவர் யந்திரம் முதலிய சாதனங்களை யறிந்திருக்கின்றமையால் அவைகளினுதவியால் செய்து அங்கிருந்து வரும் கைத்தொழிற் சரக்கின் விலை சரஸமாயிருக்கின்றது. எப்பொழுதும் கையினுதவியைக் கொண்டே தொழில் முழுவதையும் நடத்திச் செய்யும் நம்முடைய தேசப் பொருள்களுக்கு வேலைக்குத் தக்கப் பிரதிப்பிரயோஜனம் கிடைப்பதில்லை. இக்காரணத்தினால் சொற்பகாலத்திற்குமுன் நெசவுத் தொழிலை செய்து வந்த பலர் தற்காலத்தில் பயிரிட்டும், கூலிவேலை செய்தும் ஜீவனஞ் செய்கின்றனர். நெசவுக்காரனையே கைக்கோளன் என்று கூறுவது தென்தேசவழக்கம். கைக்கோளன் பெரும் பஞ்சகாலத்திலும் பிச்சைக்குப் போகான் என்பதை யுணர்த்தும் பழமொழிகளு முண்டு. ஆனால் இப்பொழுதோ பிச்சைக்காரர்களில் அநேகர் கைக்கோளர் என்பதை பலர் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

மேலும் வேலையைக் கெடுத்து கால தாமசம் செய்தால், வேலையதிகரித்துத் தங்களுக்கு அதிக காலத்திற்கு ஜீவன மார்க்கம் பெருகுமென்ற கெட்ட எண்ணத்தினால் நம்முடைய வேலைக்காரர்கள் சரிவர வேலையைச் செய்வதில்லை. இதனாலன்றோ அதிகபணம் போனாலும் போகட்டு மென்று, மோசமும் காலதாமசமும்

செய்யாத ஐரோப்பியரிடம் நம்மில் பலர் தங்கள் வேலையைச் செய்யும்படி கொடுக்கிறார்கள். சென்னையில் இந்தியரால் நடத்தப்படும் அச்சுக் கூடங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இவைகளில் வேலைத்திறமையுடனும், காலஹரணமின்றியும் வேலையை முடித்துக் கொடுக்கும் அச்சுக் கூடங்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல் விட்டு எண்ண வேண்டியதாயிருக்கிறதேயன்றி ஒவ்வொரு அச்சுக் கூடமும் வேலைத்திறமையாகவும், கால தாமதமின்றியும் வேலையைமுடித்துக் கொடுக்கக் கூடிய தென்று கூறமுடியாதன்றே.

அநேக விடங்களில் நேர்த்தியாய் ஆபரணங்களைச் செய்யும் திறமை நம்முடைய தொழிலாளிகளுக்கிருந்தும் ஒன்றுக்குப் பதின் மடங்கு கூலி கொடுக்கச் சம்மதித்து ஆங்கிலேயருடைய வியாபாரச் சாலைகளில் நம்மில்பலர் ஆபரணங்களை வாங்குகின்றனர். அவ்வியாபார சாலைகளில் வேலை செய்வோர் நம்தேசத்தாரே யாயினும், அவர்கள் யாதொரு பிசகும் செய்யாதபடி மேற்பார்வை தகுந்தபடி இருப்பது கொண்டு, நாம் நம்பவிடமாகின்றது. நம்முடைய தட்டான் இரண்டு, மூன்று ரூபாய் கூலிக்குச் செய்யும் ஆபரணத்திற்கு அங்கிலேயர் வியாபாரச் சாலையில் பத்து, இருபது ரூபாய் கூலி கொடுத்து நாம் வாங்கும் ஆபரணம் பலவாகுமன்றோ? கடியாரம் செப்பனிடுகிற ஓர் இந்து சொற்ப கூலிக்கு ஒரு கடியாரத்தைச் செப்பனிட உடன்படுவானாயினும், அவனிடம் அதை கொடுப்பதற்கும் பயந்து, அவன் கேட்கும் கூலிக்கு ஐந்து அல்லது எட்டுமடங்கு கூலிகேட்கும் அங்கிலேய செப்பனிடுவோனிடம் நாம் நம்பிக் கொடுக்கக் காரணம், வேலை சரிவர நடக்கும், மோசமிராது, குறிய நாளில் திருப்பிக் கொடுப்பான் என்பவை போன்ற நம்பிக்கையேயாகும். இதனாலன்றோ இந்துக்களால் ஏற்பட்டு நடத்தப்படும் வியாபார சாலைகளுக்கும் அங்கிலேயருடைய நாமத்தை வைக்கிறார்கள். இப்படியே துணி வியாபாரத்தில் கெட்டிச்சாயம், சுத்தமான பட்டு வெள்ளிச்சரிகை முதலிய விஷயங்களில் வித்தியாசமாகக் கூறுவதே நம்முடைய தொழிலாளிகளுக்கு சுபாவமாயிருக்கிறது. இதனாலன்றோ 'சரக்கு முடுக்கோ செட்டி முடுக்கோ' என்று பழமொழி வழங்குகின்றது. வியாபாரி மோசமில்லாதவனென்று ஜனங்களுக்கு நன்றாகத் தெரிகிற வரையில் அவன் கேட்கும் விலையை வாங்குகிறவர்கள் கொடுப்பது அரிது. இவ்வியாபாரத்தில் மோசம் போகிறவர்கள் அநேகரென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். நம்தேசத்து ஸ்திரீகளுக்கு உபயோகப்படும் பட்டு, சரிகை சேலை நெய்யும் தொழிலையும் ஆங்கிலேயரும் ஜப்பானியரும் ஆரம்பிப்பாராயின், இப்பொழுது நம் இராஜதானியின் சில ஜில்லாக்களில் சேலைகளைச் செய்து ஜீவனம் செய்யும் பல நெசவுக்காரர்கள் தங்கள் தொழிலைத்துறந்து, பயிரிடும் கூலிக்காரராகமாற நேரு மென்பது திண்ணம்.

தொழிலாளிகளின் கட்டுப்பாடு.

நான் கணக்காகக் கூலி கொடுக்குமிடத்து, வேலையைத் தவக்கப்படுத்துகிற வேலைக்காரனும், செய்து முடிந்த வேலைக்குத் தக்கபடி கூலி கொடுக்கப்படும் பொழுது, வேலையைக் கெடுக்கிறவனும், பார்வைக்குப் பகட்டாயுள்ள சாமான்களைச் செய்து விற்க முயலும் முதலாளியும், சாமான்களுடன் பலவகையாயுள்ள உபயோகப்படாத குப்பைகளைக் கலந்து விற்க முயலும் வியாபாரியும் தேசத்தின் செல்வ விர்த்தியைக் குன்றச்செய்யும் பாபிகளாவார்.

ஒவ்வொரு இடங்களிலும் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து மேற்கண்டவை போன்ற பிசகுகள் நடக்காவண்ணம் கட்டுப்பாடு செய்துகொண்டு தொழிலை நடத்துவாராயின், அவர்களுக்கு அதனால் தொழில் சரிவர நடப்பதன்றி தேசத்தின் செல்வமும் பெருக்கெடுத்து பெரும் புகழையும் தேசத்திற்கே கொடுக்கும்.

சில விடங்களில், செல்வ விர்த்திக்குரிய புதிய முறைகளை சிலர் அநுஷ்டிக்க முன்வர அவற்றை நடக்க வொண்ணாதவண்ணம், பழய தொழிலாளிகள் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துக் கொள்ளுவது வழக்கமாயிருக்கிறது. இப்படியே ஆங்கிலேய நாட்டிலும் சிறிது காலத்திற்கு முன் கையாலேயே நடந்து வந்த வேலையை இயந்திரங்களுடைய உதவியைக் கொண்டு நடத்தினால் வேலை குறைபுமென்ற எண்ணத்தினால், இயந்திரங்களைக்கொண்டு வேலை நடத்துவதில்லை யென்று கட்டுப்பாடு செய்ததுண்டு. நமது நாட்டிலும் பிறஜாதியார் தங்களுக்கு நஷ்டமுண்டாகிறதென்று, கம்மாளர் பிறஜாதியாரைத் தங்களுக்கு உதவியாகச் சேர்த்துக்கொண்டு வேலை நடத்துவோரை ஜாதியினின்றும் விலக்க வேண்டுமென்று கட்டுப்பாடு செய்ததுண்டு.

நாகரீகம் அதிகமாய் மலிந்த இக்காலத்தில் பிறதேசங்களி லுபயோகிக்கப்படும் இயந்திரங்களையும் மற்ற பல வித சூக்ஷமங்களையும் கற்க முயலாது மேற்கண்ட விதம் கட்டுப்பாடு செய்வதினால் பிரயோஜன முண்டாகாது. இவ்விதக் கட்டுப்பாட்டை மதுரைபோன்ற நகரத்திலுள்ளோர் செய்து அதன்படி நடந்து வந்ததால், அவர்கள் சாமான்களுக்கு விலையுயர, அவ்விதக் கட்டுப்பாடில்லாத பெங்களூர், பூனா, பம்பாய் கள்ளிக்கோட்டை முதலிய விடங்களிலிருந்து ஏராளமான பாத்திரங்கள் மதுரை நகரத்திற்கே கொண்டுவரப்பட்டு குறைந்த கிரயத்திற்கு விற்கப்படுகின்றன. காலக்கிரமத்தில் இயந்திரங்களின் உதவியைக் கொண்டு செய்த பாத்திரங்கள் மேல்நாடுகளிலிருந்து இங்குவர மதுரை போன்ற ஊரிலுள்ள கம்மாளர் தங்கள் தொழிலை முற்று மிழக்கநேரும்.

ஆகையால் இப்பொழுதே ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள தொழிலாளிகளும் ஒன்று சேர்ந்து, தங்களிற் சிலரை, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற விடங்களுக்கு அனுப்பியாவது, அவ்விடத்திலுள்ள சில தொழிலாளிகளை இங்கு வரவழைத்தாவது, செவ்வையாகவும், எளிதிலும் தொழிலை நடத்தும் வழிபையறிந்து, தங்கள் தொழிலை செய்தாலொழிய கம்மாளருக்கும், நம் தேசநெசவு காரருடைய கதியே சம்பவிக்கும். கெவர்ன்மெண்டாரும் இவ்விஷயத்தில் உதவி செய்வது அவசியம்.

T. C. வேங்கடரமணய்யர்.

EXTRACTS.

Ananda Mission Founder's Day.

ஸத்யானந்தசபா நடேசர் ஆருத்ரா நாள்.

(:o:)

ஆன்மாக்களுக்காகச் செய்யும், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளலென்னும் பஞ்ச கிருத்தியங்களையு மமைத்த வடிவமே நடேச மூர்த்தியாம் அது டமருகத்திலே படைத்தலும், அபயஹஸ்தத்திலே காத்தலும், அக்கினியேந்திய கையிலே அழித்தலும், ஊன்றிய திருவடியிலே மறைத்தலும் தூக்கிய குஞ்சித பாதத்தில் அனுக்கிரகமுமாகிய ஐந்து தொழில்களும் ஐந்து ஸ்தானங்களிலே யமையப் பெற்றது. அவருடைய நடனம் சூட்சும நடனம் ஸ்தூல நடனம், காரண நடனமென மூன்று வகைப்படும். அவற்றுள் சூட்சும நடனமாவது தன்னுள்ளே தன்னை விஷயீகரித்து அதிஷ்டான தேவர்களையாட்டுந் திருநடனமாம். தூல நடனமாவது அடியார்களுடைய புருவமத்தியிலே அந்தர்யாமியாக நின்று சித்திரப்பாவை யாட்டுவான் போல ஆட்டுவதாம். காரண நடனமாவது பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலிய பக்தசனங்கள் காணும்பொருட்டும், அபக்குவிகளாகிய நம்மவர்களுக்குப் பக்குவம் வருவிக்கும் பொருட்டுக் காட்டிய திருநடனமாம். அது அபக்குவிகளாகிய தாருகாவன இருடிகளுக்குப் பக்குவம் வருவிக்கும் பொருட் டவர்களா லேவப்பட்ட முயலகன் முதுகில் காலூன்றியாடிய திருநடனமாம்.

"நமது ஆணவம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி என்னும் பஞ்சபாசங்களை நிவிர்த்தியாக்கும் பொருட் டப்பெருமான் திருநடனஞ் செய்யுஞ் சபை

கள் தேவசபை, ராஜசபை, ஊர்த்துவ தாண்டவசபை சித்சபை, கனகசபை யென ஐந்துமாம். இவ்வைந்து மொருங்கே யமையப்பெற்ற ஸ்தலம் சிதம்பரமாம். கனகசபை சிதம்பரத்திலும், ரசிதசபை மதுரையிலும், தாமிர சபை திருநெல்வேலியிலும், சித்திர சபை திருக்குற்றாலத்திலும், ரத்தினசபை திருவாலங்காட்டிலுமாக வமைக்கப்பட்டது.

"அப்பெருமான் இத்திரு நடனங்களைச் செய்யா தொழியின் நாமு மொன்றுந் தெரியாது கிடப்போம். "ஆட்டுவித்திடுபவன் அது செய்யாவழிக் கூட்டுடைப் பாவைகள் குலைவுற்றாலென" வென்றும், "காட்டவ னல்போலுடல் கலந்துயிரை யெல்லா, மாட்டுமொரு நட்டுவனெம் மண்ணலென வெண்ணாய்" என்றும், தேவாரத்திலே "நட்டநள்ளிருளாடு காதலுர் நயின் றுறைகோயில்" என்றுங் கூறியவாற்றாலுணர்க. ஒளியுடைக் கண்ணுனது சூரியன் முதலிய வொளியுடைப் பொருளி னுதவிகொண்டு காண்பதேயன்றி நேரே காணமாட்டாதவாறுபோல வத்திருநடனத்தை நேரே காணுஞ் சக்தியில்லாத நமக்கவருடைய அபின்ன சக்தியாகிய சிவகாமி அம்மையாருடைய பேருதவி கொண்டு தரிசிக்கச் செய்யும் நிமித்தமே அத் தேவியாரை நோக்கி ஆடுவதாம். மேலும்,

"உலகத்திலே யுள்ள சனங்களெல்லாரையும் உடுக்கோசையால் வாருங்களென்றழைத்து, உங்களை விருப்பு வெறுப்பால் பிறவிக் கண்ணே விழுத்துவதற்கு அஞ்சாதீரென்று அபயஹஸ்தம் கொடுத்துத், நமது இடக்கையிலுள்ள அக்கினியினு லதனை எரிப்பேனென்று மந்தகாசத்தா லுணர்த்தி, உங்களைப் பந்தித்த ஆணவத்தை இக்காலினால் கீழ்ப்படுத்துவேனென்று முயலகன் முதுகினுன்றிய திருவடியாலுணர்த்தி, மேலே உங்களுக்குத் தருவதிந்தக் குஞ்சிதபாத நீழலென வாதஹஸ்தத்தினு லுணர்த்துவது மென்பதுமொருகருத்து.

"நமக்குள்ள சிசு, பால, தருண, யௌவன, விருத்தாப்பிய, வார்த்தக்கிலேசமாகிய ஆறு பருவக் குற்றங்களையும், காமக் குரோத லோப மோஹ மத மாற்சரிய மென்னும் அறுவகைக் குணக் குற்றங்களையு மகற்றும்பொருட் டப்பெருமா னொருவருடத்திலாறு தின மபிஷேகங் கொண்டருளிக் காட்சி கொடுப்பர்.

"சித்திரையி லோணமுதற் சோனியுத்தராமாம்
சத்ததனு வாதிரையுஞ் சார்பாகும்—பத்திவளர்
மாசியிர் கன்னி மருவுசதுர்த் தசிமன்
நீசரபி ஷேக தினம்."

"இத்திருநடனம் தேவர்களுக்குத் தைமாசமுதலாறு மாசம் பகலும், ஆடிமாசம் முதலாறுமாச மிரவு மாத்லின் விடிய ஐந்துநாழிகை யளவினதாகிய ப்ராம்ய முகூர்த்தமே பெறுந்து சிவத்தியானஞ் செய்தற்குரிய மார்கழிமாசத்துத் திருவாதிரையில் நிகழ்தலினு லக்காலம் விசேஷமாயிற்று.

"அவர்தா சிருட்டியிலே அப்பெருமான் வாமகாத்திலேந்திய மானினது குறிப்பை யுணர்த்துகின்ற மார்க்கசீர்ஷ மென்னும் மார்கழி மாசமே யத்திருநடனோற்பத்திக் கிசைந்த மாசமும் சிவோற்பத்திக் கிசைந்த நாள் திருவாதிரையாகலினத்தினம் விசேடமாயிற்றென்றுங் சொல்லப்படுதலினால் மார்கழி மாசத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்தின் விடிய ஐந்து நாழிகையே அபிஷேகங்கொண்டு காட்சி கொடுத்தருளும் விசேஷ காலமாயிற்று. அபிஷேக மென்பது சிவானுக்கிரக வொழுக்கின் நனைவு.

"உலகத்திலே சென்ன மெடுத்துப் பிறந்தவர்களாகிய நாம் சென்னமெடுத்ததின் பயனை இத்திருநடனத்தைத் தரிசித்துப் பேறடையவே நமக்கல்லாமின்றியமையாப் பெறுதற்கரிய பெரும் பேறாம்.

"சோறிடுமாடு துணிதருங் குப்பை தொண்டன் பரைக்கண், டேறிடுங் கைக ளிறக்கிடுந் தீவினை யெப்பொழுதும், கீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா, லூறிடுங் கண்க ளுருகிடுஞ் நெஞ்சமெனு னுள்ளமுமே."

"செஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன், மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்ப, நெஞ்ஞின்றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான், கைஞ்ஞின்ற வாடல் கண்டாலப் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே"

—,சைவப்பிரசாரகர் கீரிமலை வரம்கபயர்.

சிதம்பர க்ஷேத்ராலய சர்வகதந்தர பர்த்யனாதர்களான பெரு தீக்ஷிதர்கள் இந்தியாவின் முடிசூட்டு மஹோத்சவ விஷயமாய் ரூபா ஆயிரம் செலவு செய்து உத்தியோகஸ்தர்களையும் வியாபாரிகளையும் பிரபுக்களையும் அன்பர்களையும் வரவழைத்து அதிர்வெடி, வாணவேடிக்கை, அபிஷேகம், நைவேத்தியம் தீபாலங்காரம், அன்னதானம், பெரிய மேளக் கச்சேரி, சின்னமேளக் கச்சேரி முதலிய வைகளால் எல்லோரும் சந்தோஷத்துடன் ஸ்ரீமந் சடராச சந்நிதியில் இராச சக்கிரவர்த்தி ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களும், இராணி சக்கிரவர்த்தினி மேரி அம்மை அவர்களும் சுகமாய் இராஜ்ய பரிபாலனம் பண்ணவேணுமென்று பிரார்த்தித்தார்கள்.

EXTRACT.

மார்கழிமாத விசேஷம்.

ஆயுங்கால், தேவர் தினத்துப் பகற்காலமாகி, தைமாத மாதியாய் ஆனி ஈறான ஆறுமாதங்களும், இராக்காலமானது, ஆடிமாத முதல் மார்கழி அந்தமான ஏனைய ஆறுமாதங்களுமாம். தேவருடைய பகற்காலத்தில் சூரியனுனவர் பூ-வுலகத்தாருடைய வடதிசையிலும், இராக்காலத்திலே, அப் பூவுலகத்தாருடைய தென்திசையிலும் முறையே சஞ்சரிக்கின்றனர். இவ்வாறு மானுட வருடந்தோறும் வடபாகப் பாதிக் கோளத்தைச் சார்ந்த மகரமுதல் மிதுனமீறாகிய ஆறு இராசிகளிற் சூரியன் சஞ்சரித்தலை உத்தராயணம் அல்லது வடசஞ்சாரமென்றும், தென்பாகப் பாதி கோளத்தைச் சார்ந்த கர்க்கடக முதற் றனு வீறாகிய ஏனைய ஆறு இராசிகளிற் சஞ்சரித்தலை தக்ஷிணாயனம் அல்லது தென்சஞ்சார மென்றும் கூறுவர். இவ்விரு மனுஷ அயனங்களுந் தேவர்களுக்கு ஒரு நாளாயிருக்கின்றது. எனவே, சூரியன் தனுவிற் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழிமாதமே தேவர்களுக்குச் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னதான பிராமிய முகூர்த்தமாகும். பிராமிய முகூர்த்தமானது தேவாராதனை, கடவுட்பூசை, அருட்பாவோதல், சிவநாம சங்கீர்த்தனம், கல்விகற்றல் முதலியவற்றிற்கு விசேடமான காலமென்பது அநுபவ சித்தாந்தமாம். எக்காலத்தினும் அக்காலம் மிக்க விசேடமுள்ளதாகுமென நூல்களுஞ் சொல்லும். பிறவிடயங்களிற் சென்று, ஓய்ந்தடங்கியிருக்கும் மனமானது, பிராமிய முகூர்த்தத்திலே, பலவழிப்படா தொருவழிப்பட்டுத் தெற்றென முற்றேகிற்றலாகும். ஆதலால், இம்மாத முழுவதும் யாவரும் விடியற்காலத்திற்றான் நீராடிக் கடவுளைப் பூசித்து, நேசித்துத் தோத்திரஞ் செய்து, வழிபட்டு, வழுவாது ஒழுகுதற்கு விசேடமாயது. இதனாற்றான் சிவ சமய ஆலயங்களிற் பூசையாவும் பிராமிய முகூர்த்தத்திற் செய்யப்படும்.

இதர சமயவாதிகள் யாவரும் வியக்கத்தக்க மிக்க கத்த பக்த சிகாமணியும், புத்த சமயத்தவரை வாதில் வென்று, சைவசமயத்தை ஸ்தாபித்த சிவஞானச் செல்வரும், சிவமெய்யடியருமாகிய ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் பல தலங்களைத் தரிசித்தபின், திருவண்ணாமலைக்குச் சென்று, அங்கு அருணாசலேசுவரரைப் பாடித் தோத்திரஞ் செய்து, பூசித்து, அவ்வீசர் தமக்கு அருளும் பொருட்டுப் பரமாசாரிய மூர்த்தியாய் அநுக்கிரக வடிவங் கொண்டு எழுந்தருளி வந்தபொழுது, அவரை நேசமாய்த் தரிசித்து வணங்கி, அவருடைய திருவருளைப் பெற்று, அத்திருப்பதியில் வசிக்கு மக்காலத்திலே, மார்கழிமாதத்திலெல்லாம் சிவ அன்பரான பெண்கள் அனைவருந் திருவாதிரைக்கு முற்படப் பத்துத் தினங்களுள்ள விடியற்காலங்களிலே வீடுகள்தோறுஞ் சென்று நின்று, ஒருவரை யொருவர் விழிக்கச்செய்து, கூட்டங் கூட்டமாய்ப் போய்ப்பாடி, நீராடிக் கடவுளைப் பூசித்தொழுகு வாராயினர். இவ்வாறு தம தாண்டவராகிய பரமசிவத்தைச் சிரத்தையாய் வழிபடும் அன்பர் தோத்திரஞ் செய்து கொண்டிருப்பதைக் கேட்டும், தேவர்கள் யாவரும் பூசிப்பதை யறிந்தும், "நங்காய்! இன்னமும் நீ எழுந்து நீராடவராது நித்திரை செய்யலாமா? உன் காது வலிய காதா? எழுந்திரு, அருணாசலத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பரமசிவத்தைத் தரிசிக்கலா"மென்று சொல்லி, எல்லாரும் ஸ்நானாதி நியமங்களை முடித்துக்கொண்டு, அக்கடவுளைத் திடமாய் வழிபட்டு, விரத மநுட்டித்து, பாடிவரும் மெய்யன்பைக் கண்டு, உள்ளத்திற் தெள்ளிதே ஆனந்தங் கொள்ள அவர்கள் பேசிக்கொண்டமைபோல், தாமும் பரம சிவத்தை "ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்சோதி!" எனவாழ்த்தித் துதித்து, "திருவெம்பாவை" ஆதியாய் ஓதினர். அன்று தொடங்கி, என்றும் மார்கழி மாதத்திலே சிவாலயங்களிலே "திருவெம்பாவை" அன்பாய் ஓதப்படும் இதனை ஆதியிற் பாடியருளியவரான சுவாமிகளுக்கும், அவருக்கு அநுக்கிரகித்தவரான பரம சிவத்துக்கும் முறையே உற்சவம் நடத்தப்பட வேண்டியதென்றுங் கூறப்பட்டிருப்ப தென்பர் புலவர். மார்கழி மாதத்தில் ஸ்நான நியமங்களைப் பிராமிய முகூர்த்தத்திலேயே யாவரும் முடித்துக் கொண்டு சிவத்தை வழிபடுதல் மிக்க விசேடமாகும்.

திருவாதவூரர்புராணம் திருவம்பலச்சருக்கம்.

"அன்றவர் தென்னை யாளு மணியண்ணா மலையாய், போற்றி, என்றுதம் பரிவா லேத்தி யிறைஞ்சியங் குறையு நாளில், ..."

"மாதர்கொண் மாதரெல்லா மார்கழித் திங்கள் தன்னில், ஆதிரை முன் னீரைந்தே யாகிய தினங்களெல்லாம், மேதகு மனைகள்தோறு மழைத்திருள் விடிவதான போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல் செய்வார்."

ஈசராகிய பரமசிவத்தை, இத்துணை அரும் பெருஞ் சிறப்புப் பொருந்திய மார்கழி மாதத்திலே, பிராமிய முகூர்த்தத்திலே, தேவர்களும் விழித்துப் பத்தியாய் வணங்கிப் பூசித்து, வேண்டிய வரங்களைப் பெறுவாராயினர். நாமும் அப்படித் தப்பாது எப்பொழுதும் முப்பொறியினாலுஞ் சிவத்தை வழிபட்டு, உய்ந்நீடேறலாகிய திருவருட் பயனை நித்தியமாய் அடைதல் அத்தியாவசியக மென்பது திண்ணமே. தன்னையே விடயித்திருக்குங் கடவுளை வேண்டுங்காலத்து மந்திரத் தியானங்களாலெழுப்பி, உன்முகப்படுத்தி, நாகுறை முறைகளை வெளிப்படுத்துவதே காரியசித்திக்குப் புத்தியான விசேட வழியாம். ஆதலினாற்றான், மற்றைக் காலங்களினும் பார்க்கப் பூசாகாலம் பெரும்பான்மையாகக் கடவுட்தியானம், தரிசனை யாகிய இவைகட்கு விசேட மாயிற்று. அதினும், பூசை மந்திரங்களாலெழுப்பாது, ஈசர் தாமே எழுந்திருக்குங்காலமே, பிராமிய முகூர்த்தமாகிய திருப்பள்ளியெழுச்சி யாதலால், அக்காலத்திற் செய்யப்படுஞ் சிவவழிபாடே மிக்க விசேடமுடையதாய், விரைவாய்ச் சித்தி முத்திகளைத் தரத்தக்கதா யிருக்கின்றது. அன்றியும், பசுக்களாகிய நம்பொருட்டுத் திருவருட் கடலாகிய பரமசிவம், தம் அபேதவருட்சத்தியார் மாத்திரம் அறிய இயற்றும் பஞ்சகிருத்தியத்துட் படைத்தலால் மலபாகமும், காத்தலால் வினைப்பயனுபவமும், அழித்தலால் இளைப்பொழிதலும் மறைத்தலால் விழிப்பின்றி மயக்கம் போலாறியிருத்தலும், "பிறப்பென்னும் பேதமை நீங்கச், சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு" என்னும் உத்தரவேத வாக்கியப்படி அருளலால், உண்மைச் சிவஞான அறிவுவிளக்கி, முத்தி அநுக்கிரகத்தலுமாகிய பயன்களை முறையே ஆன்மாக்களான பசுவெல்லாமடைகின்றன. இது பற்றியே, முழுமுதற் கடவுளாகிய சிவம் இயற்றுங் கிருத்தியங்கள் தம் பயன் குறித்தனவன்றென்றும், பசுக்களாகிய நம்பயனே என்றுங் குறித்தனவென்றும் நன்றே சித்தாந்தமாயது. இப்பிரபஞ்ச கிருத்தியத்துள் திரோபவமாகிய விருள் நீங்கத் திருவருளாகிய சுவாநுபவப்பேறே "திருவெம்பாவை" என்பதாம். சத்திநிபாதம் பிறக்கும் பொருட்டு அம்பிகை, கணம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியாகிய நவ அருட்சத்திகளின் பிரேரகத்தால், சிவ திருச்சத்தியின் அருள்கொண்டே சிவானந்தப்பேறடைதலுண்மையின், அருட்சத்தியை வியந்ததே "திருவெம்பாவை" என்பதுமாம். இதனைத் திருவாசகத்திலும், சிவஞானசுவாமிகள் இயற்றிய உரையிலுங் காண்க. திருவெம்பாவைத் திருவிருத்தத் தோத்திரமே குறித்த விசேடத்தை உணர்த்தும். இன்னும், பஞ்சகிருத்தியங்களுக்கு முறையே காலை, உச்சி, மாலை; அர்த்தசாமம், உஷக்கால மிவை உரியனவாதலால், இக்காலங்களிலே பூசைகள், தரிசனைகள் செய்துய்யுமாறு கூறி விதிக்கப்பட்டமை அறிக. ஆகவே, அர்த்தசாமம் திரோதான நீக்கமும், உஷக்காலம் திருவருளுதித்தலுமாம். ஞானிகளும் இவற்றையே பெரும்பாலும் விரும்புவர். இவ்விருகாலமும் விசேடமெனத் திருவாதவூரடிகளுக்குக் காட்டியருளியதாலு முணரற்பாலது இந்நியாயங்களால், திருவெம்பாவைக் காலம் சடவுள் வழிபாட்டுக்கு விசேடமாய் உரியதாகும்.

உம்பரும் எம்பெருமானாகிய சிவத்தைப் பத்தியாய் வழிபட்டுப் பற்பல சித்திகளை அடையும் இம்மார்கழி மாதத்திலே நிகழும் புண்ணிய காலமாகிய பிராமிய முகூர்த்த மகத்துவங்களை அனைவரும் பின்வரும் விபத்தாலு மறிந்துணர்க. முற்கூறியபடி, ஆடிமுதல் மார்கழி வரையும் இரவும், தை முதல் ஆனிவரையும் பகலுமாய்த் தேவர்க்கொருநாளாம், சங்கார காலத்துக்கும், சிருட்டி காலத்துக்கும் பிரமாணமாக முறையே ஆறுமாதங்களும் பிரிவாய் நிகழுமென்பர். பிரபஞ்ச சிருட்டியைத் திருவுளத்திற்கொண்டு, வயிந்தவசத்தியைச் சிருட்டிக்க ஆரம்பிக்கும் அவசரந் திருப்பள்ளியெழுச்சி யெனவழங்கும்

என்றுங் கூறியிருக்கின்றனர். இனி, இச்சுத்த பாயை நாதவிந்துக்களாகவும், சாதாக்கியபாகவும், மகேசுரமாகவும் சுத்த வித்தையாகவுமைந்து தலங்களா யிருக்கும். நாத விந்துக்களாகிய தலங்களிலே பரமபரையும் அதிட்டிக்கும். சாதாக்கியமாய தலத்தின் கண்ணே சதாசிவமூர்த்தி எழுந்தருளியிருப்பர். அநுபோகாங்கங்களாகிய அணுசதாசிவர் சேவிக்கவும், இதன் கீழே ஈசுரர்க் கதிட்டானமாகிய மகேசுர தலத்திலே அநந்தாதி அட்ட வித்தியேசுரர் சேவிக்கவும், இதன் கீழே உருத்திரர்க் கதிட்டானமான சுத்தவித்தியா தலத்திலே மந்திரேசுரர் சேவிக்கவும், இவ்வாறு பிரபஞ்ச அநுக்கிரக காரியமாகப் பராசத்தியிற் றோன்றிய ஞானக் கிரியைகள் அனைய மெஞ்ஞானத் திருவருள் சகல வுலகருக்கும் பாலிக்கும் விருப்பமே நித்திய திருமேனியாய்க் கொண்ட சதாசிவ மூர்த்தியானவர், தம்முடைய திருக் கிருபையால் அந்த மகேசுவர தத்துவத்திலே, சத்தி பண்டலத்திலிருந்த மனோன்மனி சத்தியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி சர்வ பூததமனியைச் சிருட்டிக்க, அந்தச் சர்வபூததமனி பெலப்பிரமதமனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பெலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி காளியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பிரவுத்திநியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சேட்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க, இப்படி நவசத்திகள் பிரேரகத்தினால் மாயையை அதிட்டித்திருக்கும் அனந்த தேவராலே அசுத்த மாயை காரியப்பட்டுப் பிருதுவி முதலான பிரபஞ்ச காரியம் நிகழுமாறு அருளலே திருவெம்பாவைக் கருத்தென்றும் நன்றே திருவாசகப் பொழிப்புரையிற் கூறப்பட்டிருத்தல் கண்டுணர்க. மேலும், மார்கழித் திரு நட்சத்திரமாகிய திருவாதிரை உற்சவம் அல்லது நடேசர் ஆருத்திரா தரிசனம் என்பது பஞ்சகிருத்தியத்தைப் பற்றியதாம். இத்தரிசனத்துக்குப் பிராமிய முகூர்த்தமே விசேடமாக உரியதாம். நித்தியானந்தத் திருநிருத்தக் கருத்தராகிய சிவசபாநாதருக்கு வருடந்தோறும் சிதாகாசமான தில்லையில் ஆறு அபிஷேகங்கள் நடக்கும். இதற்குக் காரணம் சிவலிங்கப் பெருமானுக்கு நாடோறும் ஆறுகால பூசை புரியுமாறு ஆகமங்கள் கூறும். மேலேசொல்லிய ஆறுகால அபிஷேக பூசையும் முறையே தேவர்கள் ஒரு நாளிற்செய்யும் ஆறுகால பூசைக் கறிகுறியாம். திருவாதிரை, பரமசிவம் சகளீகரித்த தினமாதலின், விசேடமானதென இல்லற சாரசங்கிரகஞ் சொல்லுத லுணர்ந்தறிக. இந்த ஆருத்திரா தரிசனம் முறையே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் எனும் பஞ்சகிருத்தியத்தைக் குறிக்கு மென்பதற்கு விபரம்: அஃதெவ்வாறெனின், சர்வான்மாக்களுக்கும் அநுக்கிரகிக்குமாறு சிதம்பர சித்க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமான் சிற்சபையை விட்டு எழுந்தருளுவது சிருட்டி; இரட்சாபந்தனந் தரிப்பது திதி; கிருஷ்ண கந்தந் தரிப்பது சங்காரம்; வெள்ளை சாத்துவது திரோபவம்; உற்சவங்கொண்டருளுவது முதலியன அநுக்கிரகம் எனவுணர்க. அகங்கரித்த அசுரரைப் பரமபதி தாமே சங்கரித்த பொழுது, அவர்களுடைய சரீரங் கரிய பஸ்பமானதால், அதைத் திலகமாக்கித் தரித்துக் கொண்ட பாவனையாகக் கிருஷ்ணகந்தஞ் சாத்துவது; அச்சங்கார காலத்தில், திருமேனி அதிக உஷ்ணமா யிருந்தமையால், அது தணியும் பொருட்டுத் தேவர்கள் அத் திருமேனியை வெள்ளை வஸ்திரத்தினாலும், வெள்ளைப் புட்பங்களினாலும் பூசித்து மூடினார்கள். அதற் கறிகுறியாகவே வெள்ளை சாத்துவதாம். பரமசிவமாகிய சபாநாதருக்கு வருடந்தோறும் சிதம்பரத்திலே ஆறு அபிஷேக பூசைகள் நடக்குமென்பதற்குப் பிரமாணம்:—

"சித்திரையி லோண முதற்சீரானி யுத்திரமாஞ்
சத்ததனு வாதிரையுஞ் சார்வாகும்—பத்திவளர்
மாசியிரு கன்னி மருவு சதுர்த்தசிமன்
றீசரபி ஷேக தினமாம்."

ஊனக்கண்ணை யுடையவர்களினும், ஞானக் கண்ணை யுடைய மெய்த்தவ சிரேட்டரே பரமசிவபிரானுடைய திருவருட் கிருத்தியங்களின் மெய்ஞ்ஞானக் கருத்தை நன்கறிவர். பிராமிய முகூர்த்தத்தில் ஈசனைப் பூசித்தால் விசேடமெனப் பெரியோராகிய ஞானிகளும் கூறியிருக்கின்றனர். மார்கழி மாசத்திலே விரதத்தையனுட்டித்தவர்கள் சகலநன்மைகளையும் பெற்று, முத்தி சித்தி அடைந்தனரென புராணங்கள் கூறும், பிரதானமாய் விரதமநுட்டிப்பது, தம்

மனம் பொறி நெறிவழுவி ஒழுகாது தெற்றென முற்றும் நிற்றற் பொருட்டே. விருப்புடன் உணவை நிறுத்தியேனும், ஒறுத்தேனும், மனம் வாக்குக் காயமெனும் மூன்றினாலும் எப்பொழுதும் பரமபதியாகிய சிவத்தை நூல்களிற் சொல்லியபடி தாம உயந்தீடேறுமாறு மெய்யன் போடு நேசித்துப் பூசித்து யாண்டும் வழிப்பட்டு ஒழுகல் வேண்டும். இவ்வாறு செய்து விரதம் அநுட்டிப்பவரே இஷ்டசித்திகளையும், நற்கதிகளையுந் தடையின்றி என்றும் நன்றே அடைவர். இந்துசாதனம்.

The Eternal Dance or the Lord's Play.

SOME SCENES FROM REAL LIFE.

"Arbitration : Pretence and Reality."

"In the year 1708 Prince Eugene of Savoy was besieging the City of Lille, which was defended by the gallant French Commander Marshall de Buoffers. After much fighting, in which deeds of signal valour were performed by both sides, the situation grew so hopless to the defenders that the Marshal offered to capitulate. Thereupon, Prince Eugene, a general who was always as magnanimous in victory as he was terrible in the field of battle, wrote to the Marshal congratulating him upon the way in which he had defended the place intrusted to him, and continued:—"I wish to mark the esteem in which I hold you by requesting you yourself to draw up the articles of surrender according as you judge them proper, assuring you that I shall change nothing, *save in the case that something put in, is contrary to my honour and my duty*; which however I know I need not fear that you will do."

Marshal de Bereffers accordingly drew up the article of capitulation as requested paying scrupulous heed that nothing should be put in that might seem contrary to Eugene's sense of what was due from the standpoint of honour and duty to the German Empire which he served; and Eugene changed nothing in the articles submitted to him abiding by every one, although as regards one the officers under him begged to repudiate it. . . . . .

. . . . . By reserving to himself the right to refuse to do anything inconsistent with honour and duty, by promising, therefore, nothing save what he could perform and yet promising everything he could perform, and then making his promise good, Prince Engene rendered a service to humanity and in especial, by his deed in making good his words, he advanced the standard of civilised conduct among enemies. . . . . .

. . . . . On these two questions of duty and honour, the nation, if true to itself, can never be guided by any outside body, and can pay heed only to its own conscience and its own sense of right; to fail thus to be guided would mean that it was recreant to its duty not only to itself, but to the world at large."—*Ex-President Roosevelt in the 'Outlook.'*

"கோபால கிருஷ்ணன் கூத்து."

"மாயாவழக்கு."

"கூத்துப்பார்க்க வாரும் சுதரே
கோபாலகிருஷ்ணன் கூத்துப்பார்க்க வாரும்!"

Scene 1—முதற்காட்சி.

மத்யஸ்தானலீலை வழக்கை விசாரிக்குமுன் லாபநஷ்ட சம்பந்தமான தாவா எதையும் நாங்கள் விசாரிக்க மாட்டோம் என்றாக்ஷேபித்தாள். லாப நஷ்ட சம்பந்தமில்லாத வழக்கில்லையே யென்றதற்கு டுக்ருங்கரணே யென்ற தர்க்கவாதி கன்னம் வைத்த கள்வன் சுவற்றைத் துளைத்ததால் வீட்டுக்குண்டான நஷ்டத்துச்கும் அவன் கைவலிக்கக் கன்னம் வைத்ததனால் அவன் கைவலித்துபறத்துப் போனதற்காகக்கோறும் நஷ்டத்திற்கும் சரியாகப் போய்விட்டது என்று புதுமையான வொரு தர்க்கநியாயமெடுத்துச் சொன்னார். ஸத்யம் அந்தநியாயத்தை ஒப்புக் கொள்ளாதது கண்டு மத்திபஸ்தானலீலை அது வெல்லாம் விசாரிக்க முடியாது என்று கருக்கமாகச் சில தாவாக்களை மட்டும் குறித்துக் கொண்டாள். அவை:—பின் வருமாறு:—

(1) ஸத்யத்தின் சொத்து அஸத்யத்தினிடத்தில் எவ்வளவு இருக்கிறது? ஏறத்தாழ விருந்தால் அதற்கு வழி யென்ன சொல்கிறது?

(2) கன்னக்கோல் மழுங்கின தீட்டுக்கூலி யார் கொடுக்க வேண்டியது?

( ) கன்னக்கோல் மழுங்கினதற்குக் காரணம் சுவற்றின் குற்றமா? அல்லது கன்னக்கோலின் குற்றமா?

இந்த மூன்று தாவாக்களைமட்டும் விசாரித்து தீர்ப்புச் சொல்வோ மென்றாள் ஸத்யாஸத்யரூப மத்யஸ்தான லீலையாம் ஜட்ஜி.

அஸத்யவாதி.—கன்னம் வைத்த கூலி எனக்குச் சேரவேண்டுமே யதற்கு என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்.

ஸத்யவாதி.—எனக்கு ஸொத்து நஷ்டமானது மல்லாமல் வீடும் இடிந்துபோயிற்றே! அதற்கு கேள்விமுறை யில்லையா? என்றார்.

டுக்ருங்கரணே தர்க்கவாதி:—வீட்டைத் துளைத்த நஷ்டத்துக்கும் கன்னம் வைத்தகூலிக்கும் ஈடு சரியாகப் போய்விட்டது என்றார்.

*266-வது பக்கத்தில் "திருக்கூத்துதரிசனம்" பார்க்க

ஸத்தியவாதி.—"கள்ளன் வந்த வீட்டுக்கு எண்ணெய்ச் செலவு" ஒன்று போதாதா? களவாணிக்குக் கன்னக்கூலி கிடைக்கவும் நியாயமுண்டா?

ஸத்யாஸத்யமத்யஸ்தானலீலை:—அந்தத் தாவாவே வேண்டாம்.

அஸத்யவாதி:—சரி, ஆனால் சரி, இதுவே போதும்.

ஸத்யவாதி:—(தனியனாய்) இதுவும் ஒரு நியாயமா? வல்லான் வகுத்தது வழக்காயிருக்கிறதே! அதர்ப்ம வாழ்வு ஆபத்துக்கிடமா மென்றுணர வில்லையே!

மத்யஸ்தானலீலை:—ஸத்யத்தின் சொத்து அஸத்யத்தினிடத்தில் எவ்வளவு இருக்கிறது?

அஸத்யவாதி:—அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது. இரண்டாவது தாவாவை யெடுத்துக் கொண்டு விசாரியுங்கள்.

மத்யஸ்தானலீலை:—கன்னக்கோல் மழுங்கின தீட்டுக்கூலி யார்கொடுக்க வேண்டியது? என்பது இரண்டாவது தாவா.

அஸத்தியவாதி:—இதோ நான் கன்னக்கோல் தீட்டினதற்கான கணக்கு இருக்கிறது, பாருங்கள்!

ஸத்யவாதி:—அது யார் வீட்டில் கன்னம் வைக்கிறதற்காகத் தீட்டப்பட்டதோ தெரியாது. களவு கொடுத்தவன் கன்னக்கோல் தீட்டுக் கூலியும் கொடுக்க வேண்டுமென்கிற நியாயமிருக்கிறதாக வைத்துக்கொண்டாலும், அந்தக் கணக்கில் என் வீட்டில் கன்னம் வைக்கிறதற்காகத்தான் கன்னக்கோல் தீட்டினதாகக் காட்ட ருஜு வொன்று மேற்பட வில்லையே.

அஸத்தியவாதி:—அனந்த சாக்ஷியாக இவர் வீட்டில் கன்னம் வைக்கத்தான் தீட்டப்பட்டது என்று சொல்கிறேன்.

ஸத்தியவாதி.—"அனந்த சாக்ஷியாக" வென்றால் எனக்கு அர்த்தம் புரியவில்லை: "ஸர்வ ஸாக்ஷி" எல்லாவற்றிற்கும் சாக்ஷியாயிருக்க, உண்மைநிலைதவறி ஒரு தலைச்சார்பாக வழக்குரைப்பார்க்கு உடந்தையாயிருந்து சாக்ஷி சொல்லுமா? இந்த அதிசயம் எங்கேயாவது கண்டது கேட்டதுண்டா?

அஸத்யவாதி:—"நாளைக்கு வந்து சாக்ஷி சொல்ல வைக்கிறேன்."

மத்யஸ்தானலீலை:—"அதை நாளைக்கு ருஜுப்படுத்துகிறேன்" என்கிறார். அது உம்வீட்டில் தான் கன்னக்கோல் வைக்கத் தீட்டப்பட்டது என்று ஏற்பட்டால், அப்புறம் அதற்கு நீர் என்ன ஜவாப்பு சொல்கிறீர்?

ஸத்யவாதி:—அது ருஜுவானால் அதற்கு ஜவாப்பு தானே பிறக்கிறது.

மத்யஸ்தானலீலை:—உம்மிடத்தில் ருஜு ஏதாவதிருக்கிறதா?

ஸத்யவாதி:—அஸத்யம் பக்கத் திருடனுதலால் பல வீட்டில் கன்னம் வைப்பவன். இவனை நம்பப் படாதென்பதற்கு ருஜு விருக்கிறது.

மத்யஸ்தானர்:—எங்கே! அதை யெடும்! பார்ப்போம்!

ஸத்தியவாதி:—இதோ! 'அஸத்யம்' செய்திருக்கிற திருட்டுத் தனத்தைப் பாருங்கள்!

அஸத்யவாதி:—அதுவே இவன் வீட்டில் நான் கன்னம் வைத்ததற்கு சாக்ஷி.

ஸத்யவாதி:—எப்படி?

அஸத்யவாதி:—இது இதற்குமுன் களவு செய்தபோது வைத்த கன்னவாசல். முன் இது வட்ட மாயிருந்தது. அதை இடித்துக் கட்டியிருக்கிறது. மோசம்! மோசம்!! கெகு மோசம்!!!

மத்யஸ்தானலீலை:—(விழித்துக்கொண்டு) மோசமா! என்ன மோசம்?

அஸத்யவாதி:—நாளைக்கு நான் அந்த மோசத்தைக் காட்டுகிறேன். விருத்தாகாரமான கன்னவாசலை யிடித்துச் சதுரமாக மாற்றிச் சுவரில் ஒட்டுப் போட்டிருக்கிறது பாருங்கள்! இது கன்னக்கோல் அளவு பொருந்தாம லிருக்கிறதற்காகச் செய்திருக்கும் தந்திரம்.

மத்யஸ்தானலீலை:—ஓய் 'டுக்ருங்கரணே!' ஸத்யவாதி இதற்கு என்ன ஜவாப்பு சொல்கிறார்? கேளும்!

ஸத்யவாதி:—நாளைக்கு கன்னக்கோல் அளவும், அனந்த சாக்ஷியும் சொணர்ந்து ருஜுவான பின் நான் சொல்லுகிறேன்.

மத்யஸ்தானலீலை:—விசாரணை நாளைக்கு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

ஸத்யம்.—(தன்னந்தனியே) குருதிசை குருபுத்தியில் குருசாரம் இப்படிக் கழிந்தது! நாளைக்கு சுக்கிரனது கிரகசாரம்! ஒற்றைக் கண்ணன் என்னகூத்து இழைப்பனோ பார்ப்போம்!

Scene II—இரண்டாங் காட்சி.

[மத்யஸ்தானலீலை, ஸத்யவாதி, அஸத்ய வாதி, டுக்ருங்காணே தர்க்கவாதி, எல்லாரும் வந்துசேர்ந்து விட்டார்கள். விசாரணை யாரம்பம்.]

மத்யஸ்தானலீலை:—அஸத்யவாதி தன் கக்ஷியை ருஜுப்படுத்த வேண்டியது.

அஸத்தியவாதி:—ஆகா! இதோ! என் கணக்குபிணக்குகளெல்லாமிருக்கிறது! "கதைக்குக் காலில்லை" யென்பார்கள். என்கணக்குக்குக்கும் காலில்லை. கதையை யெல்லாம் நம்புகிறார்கள். ஆகையால் என் கணக்கையும் எல்லாரும் நம்ப வேண்டும்.

ஸத்யவாதி:—(தனியனாக) உன் கணக்குக் காலில்லை. மத்யஸ்தம் செய்ய வந்தவர்களுக்கு மனக்கண்ணில்லை. (பெருமூச்சுவிட்டுப் பின் வாய்திறந்து சொல்கிறார்) "ஸத்யமேவ ஜயதே நாநிருதம்."

மத்யஸ்தானலீலை:-எங்கேயெடும்பார்ப்போம்!

அஸத்தியவாதி:—இதற்கு முன் ஸத்யத்தின் வீட்டில் கொள்ளையிட்டபோது உபயோகித்த கன்னக்கோல் தீட்டின கணக்கு இதோ இருக்கிறது.

ஸத்தியவாதி—அந்தக் கணக்குக்கும் ஸத்யத்துக்கும் என்ன லம்பந்த மிருக்கிறதென்று தெரியவில்லையே!

அஸத்யவாதி:—இராமனுணை! நான்தான் திருடினேன். இவன் வீட்டில் தான் கன்னம் வைத்தேன்.

ஸத்யவாதி:—அஸத்யவாதி திருடன் என்கிற மட்டும் ஒப்புக்கொள்கிறேன். அந்தக் கன்னக்கோல் இவன் வையாடினது என்பதற்கு ருஜுவொன்றுமில்லையே! மார்ஜ்ஜல ராமனுக்குப் பால் வெண்ணெய் திருடத்தெரியுமென்று எனக்குத் தெரியும். அவன் தொழிலுக்கு கன்னக்கோல் வேண்டாம். ஆகையால் எனக்கு அவன் பேரில் சமுசயமுமில்லை. ஆனால் அவன் அப்பாவி! கிருஷ்ணன் ஜகப்புரட்டன் அவனை

அஸத்யவாதி:—(குறுக்கிட்டு) "இராமனுனுலென்ன? கிருஷ்ணனுனுலென்ன? எல்லாம் நானேயாகிறேன்" (அநுமந் தஸ்மி' சுருதி வாக்.) இராமன் அப்பாவிதான்! கிருஷ்ணன் மாயாவி தான்! இராமன் அப்பா சொல்லைக் காப்பாற்ற வேண்டிக் காட்டுக்குப் போனான். கிருஷ்ணன் பகோதரன்; எல்லா ஜாலமும் அவனுக்குத் தெரியும். கிருஷ்ணனுக்கு பன்னெ இராமன் வாலாட்ட முடியுமா! "கம்மவி நபாராமமே!' யென்றால், இருந்த விடம் விட்டுப் பெயராமல் அப்படியே நின்றுகொண்டு இருக்கவேண்டியது தானே!

ஸ்த்யவாதி:—இராமனை அவ்வளவு எளிதாக நினைத்துவிடக் கூடாது. இராமனுக்கு வாலில்லா விட்டாலும் இராமபக்தனான ஹனுமானுக்கு வாலிருக்கிறது. அவனுடைய பலம் யாருக்குவரும்! ஆளறியாமல் பேசிவிடக் கூடாது! அஸத்தியவாதி சொல்கிற பேர்வழி வேறு. அந்த ஆளை யெனக்கு நேரில் தெரியும். அவன் பொய்சொன்னாலும் பொருந்தச் சொல்லுவன். எல்லாரும் அவன் பொய்யை மெய்யென்றே நம்பிச் சந்தோஷிப்பார்கள். அவனிடத்தில் புருஷத்துவமுண்டு. ஆதலால் அவன் புருஷோத்தமன். ஜாப்புரட்டனானாலும் அதக்கட்டில் அகப்படுவான். ஆகையால் அவன் ஜகத்ரக்ஷகன். இவன் கட்டுக்கதை பேர்வழி. சொல்வதெல்லாம் பொய்! அந்தப் பொய்யிலும் இரவல்பொய் சொல்கிறவன். பொய்யிலும் கைம்முதலில்லாமல் கடன் வியாபாரம் செய்கிறவன். கடன் வியாபாரம் ஒருபோதும் உருப்படுவதில்லை. நான் இவனை நம்பமாட்டேன். இவன் அபோக்கியன். நம்பிக்கைக்குப் பாத்திரனில்லை.

அஸத்யவாதி:—நானு அபோக்கியன்! என் சமர்த்தைக் காட்டுகிறேன் பார்! இவன் மோசக்காரன்! ஸத்யவாதி யென்று வெளிபேறி விட்டான். முழுமோசக்காரன் என்று காட்டுகிறேன் இதோ! "நாரதா கலகப்பிரியா!' என்கிற வசனம்கேட்டதில்லையா? நாரதருக்குக் குறுக்கே பிறந்தவன் இந்த ஸத்யவாதி! பொல்லாத பேர்வழி! பிடிவாதக்காரன். கடைப்பிடி யுள்ளவன். சாதுக்காரன். இவன் வேதனை பொறுக்க முடியாது! இவன் செய்தி தெரியாமல் இவனிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டேன்!

மத்யஸ்தானலீலை:-இதெல்லாம் பேச்சை வளர்ப்பதா யிருக்கிறது! உமது கக்ஷியை ஸ்தாபித்துப் பேசும்.

அஸத்தியவாதி:—எனது கக்ஷியா! என் கக்ஷி இவன் கலகக்காரன் என்பதே. பெருமோசம் செய்துவிட்டான்!

மத்யஸ்தான லீலை:—அது எப்படி? ருஜுப்படுத்தும்!

அஸத்தியவாதி:—இதோ பாருங்கள் இந்தக் கன்னக்கோல் அளவும் அந்தக் கன்னவாசல் அளவும் பொருந்தி யிருக்கிறது!

மத்யஸ்தான லீலை:—இல்லையே! உமது கன்னக்கோல் விருத்தாகாரமாகத் துளைப்பதா யிருக்கிறது! அவர் வீட்டுக் கன்னவாசல் சதுரங்கமா யிருக்கிறது! பொருத்தம் எங்கே?

அஸத்தியவாதி:—கன்னவாசலை யிடித்துக் கட்டியிருக்கிறான். இதோ நான் இடித்துப் போட்ட கல்லைவிட ஜாஸ்தி செங்கல் விழுந்து கிடந்த இடம் தெரிகிறது பாருங்கள்!

ஸத்தியவாதி:—கன்னவாசலை யிடித்த குற்றம் நான் செய்யவில்லை. கன்னவாசலை யடைத்தது குற்றமாகாது! இவன் "கன்னக்கூலி வேண்டாம், போனாற் போகிறது!" என்று சொல்லி [illegible] கோல் முழங்கின தீட்டுக் கூலிக்கு"த் தாவா கொண்டு வருவானென்று எனக்குத் தெரியாது. இவன் சொல்வது "கழுவுக்கேற்ற கோமுட்டி நியாயமா" யிருக்கிறதே!

டுக்ருங்காணே தர்க்கவாதி:—ஸத்தியவாதி! நான் சொல்வதைக் கேளும். இந்தக் கயிற்றுச் சுருக்கை உமது கழுத்தில் மாட்டிக்கொள்ளும்! நான் உமக்கு நன்மையையே சொல்கிறேன். கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்ளும்! சீக்கிரம்! சீக்கிரம்!! நான் சொன்னால் கேட்மாட்டேன் என்கிறீரே! நான் உமக்கு ஹிதத்தையே சொல்கிறேன், கேளும்! கேளும்!! சொன்னேன் கேளும்!

ஸத்தியவாதி:—ஐயா! என் ஸ்வபுத்தியைக் கொண்டு நான் பிழைக்கிறேன். இரவல் புத்தியைக் கொண்டு பிழைக்க வேண்டாம். கழுத்தில் சுருக்கை மாட்டிக் கொண்டால் நீங்கள் எல்லாரும் சேர்ந்து இழுக்கும்போது சுருக்கு நெருங்கி நான் திக்குமுக்காடிச் சாகவேண்டியதுதான். கோழிக் குஞ்சைக் கழுத் தொடிப்பதுபோல் என் கழுத்தைக் கொடுத்துவிட்டு நிற்க எனக் கிஷ்டமில்லை. உள்ளதுக்கு விரோதமாக எனக் கிஷ்டமில்லாத காரியத்தை நீர் சொன்னாலும் யார்சொன்னாலும் கேட்கமாட்டேன். என் உயிரை வாங்கவேண்டு மென்கிற அபிப்பிராய மிருந்தால் உண்மையாக வேண்டுமென்று கேளும். நானுகப் பிராணத்தியாகம் செய்து உயிரைத் தத்தம்செய்து கொடுக்கிறேன். கோழிக்குஞ்சு பலிபிடுவது போல், என்னை நீங்கள் அஸத்யத்துக்குப் பலியிட நான் சம்மதிக்க மாட்டேன்.

அசரீரிவாக்:—"ஸத்யமேவ ஜயதே நாநிருதம்!"

மத்யஸ்தான லீலை:—ஓய் டுங்காணே, அவர் கழுத்தைக் காட்டுகிறாரா இல்லையா? கேளும்!

டுக்ருங்காணே தர்க்கவாதி:—பார்த்தீரா, மத்யஸ்தானர் கேட்கிறார்! கழுத்தைக் காட்டும், கழுத்தைக் காட்டும்! கொஞ்சம் தலைகுனியும், நானே சுருக்கை மாட்டிவிடுகிறேன்!

ஸத்தியவாதி:-மூடமதே, தவளைபோல் சத்த வேண்டாம். விருத்தாசுரன்வாயில் அகப்பட்டு பாம்பின்வாய்த் தவளைபோல் தவிக்கும்போது தெரியவரும்; மத்தியஸ்தானர்களே நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். எனக்கு இஷ்டமில்லாத காரியத்தில் நான் தலையிட்டுக் கொள்ளமாட்டேன்.

டுக்ருங்காணே தர்க்கவாதி:—உமக்கு இஷ்டமில்லாவிட்டாலும் எனக்காகவாவது செய்யும்! உமக்கு நல்லதையே சொல்கிறேன் நான்! என் தொழிலைக் கெடுக்காதேயும்!

ஸத்யம்:-என் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு விட்டுப்பின்னர் தங்களுடைய தயவைக்கொண்டு நான் பிழைக்கவேண்டாம்! நான் உள்ளதுள்ளபடி நிற்கிறேன்! உமக் கிஷ்டமானால் தாவிக் குதித்து என்தலையில் சுருக்கை மாட்டும்! அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். நான் அஸத்யத்துச்குக் கட்டுப்படமாட்டேன். உங்களிடத்தில் கழுத்தைக் கொடுத்துவிட்டு அஸ்தயத்துக்குக் கட்டுப்படுவதைவிட, என் தலைபோகிறதா யிருந்தாலும் தோளின்மேல் கழுத்திருக்கத்தானே நான் தலைகொடுக்கிறேன்.

மத்யஸ்தான லீலை:-இப்பொழுது ஸத்யவாதி, கழுத்தைக் கொடுக்கிறாரா இல்லையா? கேளும்!

டுக்ருங்காணே தர்க்கவாதி:—மத்யஸ்தானர் கேட்கிறார்! அதற்கு என்ன சொல்கிறீர்?

ஸத்தியவாதி:—இதோ என் தலையை அரிந்து தங்கள் முன் வைக்கிறேன். வேண்டி யிருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள்! எனக்கு உங்களிடத்தில் கழுத்தைக் கொடுத்துவிட்டு நீங்களிழுக்க நானிழுக்க மல்லுக்கு நிற்க இஷ்டமில்லை!

மத்யஸ்தான லீலை:—உமது தலையை அரிந்து கொடுக்கக்கூடாது! தலையை யெடுத்துக் கழுத்

தில் வைத்துக்கொண்டு சுருக்கை மாட்டிக் கொண்டால் மாட்டிக்கொள்ளும்! இல்லாவிட்டால் உமது தலை வேண்டியதில்லை! எடுத்துக் கொண்டுபோம்!

ஸத்தியவாதி:—தங்கள் இஷ்டம் என்பாக்கியம்!

டேக்ருங்கரணே தர்க்கவாதி:—ஸத்யமே! என் பேச்சைக்கேளு! வீணுகக் கெட்டுப் போகாதே!

ஸத்யவாதி:—ஸத்யம் கெட்டு வாழ்கிற வாழ்வு எனக்கு வேண்டாம். ஸத்யத்தோடு நானு மழிந்து போகிறேன். பிற்பாடு எல்லாரும் "பாழும் ஊருக்கு நரி ராஜா' என்பதுபோல ஏக போகமாய் வாழலாம். அப்படியே வாழுங்கள்! பகவதி! என்னைக் காப்பாற்று!

அசரீரிவாக்கு:—ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்!

அபயம்! அபயம்! அபயம்!

அஞ்சேல், அஞ்சேல், அய்யனே
நெஞ்சில் வஞ்சம் நினையாய்
அஞ்சில் மூன்றில் அறிவை நிறுத்தி
துஞ்சுந் பாம்பைத் தாக்கி யெழுப்பிப்
பஞ்ச பூதங்களைப் பண்பா யொடுக்குநீ!

ஸத்யவாதி:—ஐயகோ! அம்மணி!

"வெண்துயிலுடுத்தநீ
வன்துயில்போக்கியும்
என்துயரார்ருதேவுதலென்ன ஓ!
மன்னுயிர்வதையைநின்
பொன்னுயிர்வாடப்
பொறுக்கலாற்ருதுதவிக்கிறேன் தாயே!
(அடக்க முடியாமல் அழுகிருர்).

அசரீரிவாக்கு:—அபயம்! அபயம்! அஞ்சேல், துஞ்சேல், எஞ்சிவரினு நீ மிஞ்சேல், மிஞ்சேல்!

ஸத்யவாதி:—ஆ! நானுன் சிறு பாலன்!

"என்னென்னசெய்கினுநீ யேதேதியற்றிடினு
முன்பிள்ளையுன்னடிமை யுனக்கே நானர்ப்
பணங்காண்!"

அஸத்யவாதி:—அழு! அழு! உன்னழுகைக்காக் இரங்கப் போகிருர்கள் இங்கே! வேணும்! வேணும்! நன்ருக வேணும்!

டேக்ருங்கரணே தர்க்கவாதி:—நான் தான் சொன்னேனே, "என் வார்த்தையைக் கேளும்!" என்று; நல்லத்தைச் சொன்னுல் கேட்க மாட்டேனென்கிறீரே. இந்தச் சுருக்கைக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொள்ளும்! மணிக்கயிறு! மூடிச்க முடிச்சாயிருக்கிறது! ஜபமாலை யாட்டமாக அழகா யிருக்கும்!

ஸத்யவாதி:—ஹே! மூடமதே! என்னைத் தொல்லை செய்யாதே! உன் மருட்டலுருட்டலுக்கஞ்சி யான் அழவில்லை. என்னை யுன் மூட மதியால் மயக்காதே! உனக்கு உண்மை தெரியாது! "என் வீடு சுடுகாடானுற் போல் எல்லார்வீடும் சுடுகாடானுல் அப்போதுண்மை தெரியவரும்" என்கிருள் ஸாவித்திரி. அவள் பேச்சைக்கேட்டுப் பிழைக்கலாமானுற் பிழை! இல்லாவிட்டால் நீ உன்னிஷ்டம்போல் செய்! என் உள்ளகம்நோவெடுக்க என்னை வதைக்காதே! வீணுக என் பாபத்தைக் கொட்டிக் கொள்ளாதே.

டேக்ருங்கரணே தர்க்கவாதி:—நான் சொல்வதைக் கேட்காமல் தானே பேசுகிறீரே! நான் சொல்வதைக் கேளும்!

அஸத்யவாதி:—வேணும்! வேணும்! நன்ருக வேணும்! திண்டாடு! நன்ருகத் திண்டாடு!

ஸத்யவாதி:—நான் திண்டாடாமல்நானே என் தாய் என்னைக் காப்பாற்றி முச்சந்தியில் விட்டு விட்டாள். திண்டாட்டமெல்லா முனக்குத் தானிருக்கிறது. குதிரைவண்டி மயக்க முனக்குத் தலை தெரியவில்லை. அசுவாரூடை ஆணை! குதிரை படுத்தாலுனக்குக் கொட்டமடங்கிப்போம்! பொறு! பொறு!

அசரீரிவாக்கு:—ஸத்யமேவஜயதே நாந்ருதம்!

டேக்ருங்கரணே தர்க்கவாதி:—ஸத்யத்தை இங்கே யார் கண்டார்கள்! 'கேஸ்' நடக்கிறபோது என்ன உளறுகிறீர்! வாய் மூடும்.

ஸத்யம்:—(தன்னந் தனிமையாய்) "காக்காய் பிடிக்கிற தந்திரம் கருடனிடத்தில் சாயாது!" (மௌனத்திலாழ்ந்து பாடுகிற பண்):—

"குண்டலக்காதிகொலைவிற்புருவத்தன்
கொண்டவரத்தினில்மன்னுகோலத்தன்
கண்டிகையாரம்கதிர்முடிமாமதிச்
சண்டிகைகாற்றிசைதாங்கிநின்ருனே
எண்டிசைபத்துமேகமாய்நின்றனன்."

"ஆதியனுதியகாரணகாரணி
சோதியசோதிசகபரசுந்தரி
மாதுசமாதிமனேன்மனிமங்கலி
யோதியென்னுள்ளத்துடனிருந்தம்பர
வீதியிலென்னைவிடத்துணிந்தாளே."

அஸத்யவாதி:—நில்லு சந்தியிலே, நில்லு.

மத்யஸ்தானர்:-அஸத்யமேவாய்மூடுபோதும்

அஸத்யவாதி:—நிற்கட்டுமே சந்தியில்—

டேக்ருங்கரணே தர்க்கவாதி:—(குறுக்கிட்டு) உன் வேத்தை வரையத்திறவாதேயும் போதும் வாய் மூடு! பேசாதே!

குமருகுருபா ஸத்பாகந்த அவதூதாத்மாநம்யதே.

The Sivaratri Pooja Sepcial—Friday, the 16th February, 1912.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

அன்பேயருள்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 19.] 1912வரு பிப்ரவரிமீ, விரோதிகிருதுவரு மாசிமீ [சஞ்சிகை. 11.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lalita Publishing Co., Sole Agents and Managers

M. K. Narayanaswami Iyer, B.A. B.L. Hon. Secy, Vivekachintamani Pub. Committee.

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசித்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது

3. விவேகசிந்தாமணியிலவரும் விஷயங்களையாவது அவைசம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற் க்கார் கதிய வர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இதபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான், கைச்சாற்றிது. ஓ.

"JUDGE NOT, LEST YE BE JUDGED!"

"ஓரவஞ்சகம் செய்யாதே! ஒருதலைத்தீர்ப்புச் சொல்லாதே!"

"வேதமயிதுத்தனை."

"SETTLE THE QUESTION RIGHT."

I

"However the battle is ended,
Though proudly the victor comes,
With flaunting flags and neighing nags,
And echoing roll of drums,
Still truth proclaims this motto,
In letters of living light,
No question is ever settled,
Until it is settled right.

II

"Though the heel of the strong oppressor,
May grind the weak in the dust,
And the voices of fame with one acclaim,
May call him great and just;
Let those who applaud take warning,
And keep this motto in sight,
No question is ever settled,
Until it is settled right.

III

"Let those who have failed too take courage,
Though the enemy seem to have won:
If he be in the wrong, though his ranks are strong,
The battle is not yet done.
For sure as the morning follows,
The darkest hour of the night,
No question is ever settled,
Until it is settled right.

IV

"O men bowed down with labour,
O women, young yet old,
O heart, oppressed in the toiler's breast,
And crushed by the power of gold,
Keep on with your weary battle,
Against triumphant might;
No question is ever settled,
Until it is settled right."—*The Poem which concerted Lord Morley, and made him resettle his 'settled fact.'*

"முடிவெல்லாம் முடிவெய்த லறநெறியிசை."

I

முடிவில்லா முடிவெல்லாம் முடிவன்றே,
முடிவெல்லாம் முடிவெய்த லறநெறியிசை!
முடிவெய்தச் சண்டையிட்டு வெற்றிபெற்றோம்
முடிவுகட்டிவாதத்தில் வீரம்பேசி வென்றுவிட்டோம்

முடிவில்லா வழக்கையெல்லா முக்கறுத்து முடித்துவிட்டோம்
கொடிபடைகள் சூழவோராம் கொன்றைமலர் சூடிவிட்டோமென்
றிடியேறு போலன்னான் இறுமாப்புக் கொள்வதெல்லாம்
மிடியேறுகாரம்போல் மன்பதைக்குத் துன்பமன்றி வேறிலையே!

II

தீராத வழக்கையெல்லாம் தீர்த்து விட்டோமென்
றோரா துறம்பேசி யெளியாரை வதைக்குமவர்
கோராதபடி யெல்லாம் கோரிமதம் பேசிடினும்
ஓராத மூடமக்கள் ஒப்பாரி சொல்லிடினும்
தீராத வழக்கையெல்லாம் தீர்த்துவைக்க தர்மமன்றி
ஓராத மூடமக்கள் ஒப்பாரிசெல்லாதே! யாதலினால்,
தீராத வழக்கையெல்லாம் தீர்த்துவைக்கும் தர்மராஜன்
தீராவழக்கறுத்துத் தீர்ப்புரைக்குங் காலனானான்.

III

எளியார்தம் கைசோர மாற்றான்கை ஏறினாலும்
எளியார்தம் முடல்சோர மாற்றான்கை வலிமிகினும்
எளியார்தம் முயிர்சோர மாற்றான்வதை செய்யிடினும்
எளியாரை வலியாரடித் திம்சைபல செய்திடினும்
எளியார்கை சோர்ந்ததென்றே யெண்ணவேண்டாம்
எளியாருக்கெளியனா யீசனவனிருக்கையினால்
எளியாரைச் செய்யும்வதை ஈசனையே செய்ததாமால்
எளியாரை வென்றோமென் றிறுமாப்புக் கொள்ளவேண்டாம்.

IV

"ஏழைக ளழுதகண்ணீர் கூரியவாளோ டொக்கும்!"
ஏழைகள் பொறுக்குந்துன்பம் சீறிய நாகபாசம்!
ஏழைகள் தவிக்கும்தாபம் தீயெரிநாகி லுய்க்கும்!
ஏழைகள் மனங்கொதிக்கில் மாரனும்சகிக்க மாட்டான்!
ஏழைகள் படும்பாடெல்லாம் பாபமாய் வந்துசூழும்!
ஏழைகள்தம் பெருமூச்சப்பா நாசமாய் லயிக்கும்வந்து!
ஏழைக்கிரங்கி யென்றே யென்னப்பன் விருதுகட்டி
ஏழைகட் கடைக்கலமா யெழில்பிக்ஷை யெடுக்கலானான்.

V

பிரமனு மொருபொய் சொன்னா னென்றே
பிரமன் தலையைக் கொய்து விட்டான்
பிரமன் மறுபொய் சொல்லாத வாறே
பிரமக பாலங் கையோடாக் கொண்டான்
பிரமனு முண்மை யறிந்தில னென்றே
பிரமனைச் சிறையி லிட்டான் பாலன்
பிரமனே யிந்தப் பாடு பட்டால்
பிரம சிருஷ்டியாம் மனிதன்பா டென்னமோ!

சிந்தாமணிக்ரஹம், சிவராத்திரி பூஜை } சங்கரசுதன்.

குமரகுருபரானந்தம்.

"ஆறுறுமோராறாய் அறுமுகனுமொருமுகமாய்த்
தேறாருமுருராய்த் தேடுதற்கோநீயோளித்தாய்!
ஈறாறுயர்சேவியாய் இருந்திலையோகண்டற்கு!
வேறுருனையன்றி விருப்புற்றளிப்பதற்கு!
தேறுர்தேறுதற்கு தேவிபராசக்தியுடன்
வாரார்முருகையன் வர்ணமயில்வாகனமேல்!"

உ

வேலுமயிலுந்துணை.

Must *Versus* Ought, or, Might Against Right,

MOTTO :—Might says : "*I You Must.*" Right says : "*You ought not.*" Which will you obey ?

"எளியாரை வலியாரடித்தால்
வலியாரைத் தெய்வம் அடிக்கும்."

பழமொழி யென்றால் என்ன? பழமையான, அதாவது ஆதிமுதல் வழங்கிவரும்; மொழி= வாக்கு. ஆதியென்றால் என்ன? "ஆதியிலுள்ள தனுதியோன்றே" என்ற ஆன்றோர் வாக்கால், "அனுதிமுக்த முதலாயுள்ள தெய்வமே" தன் சக்தி மஹத்துவத்தால் ஆதியாக விளங்குகிறது. இது ஸர்வமத ஸம்மதமான கொள்கை. ஸத்யமும் இதுவே. கிறிஸ்துவின் ஸ்வாநுபவச் செல்வப்புத்திராகிய ஸெய்ன்ட்ஜான் என்பவர் தானெழுதியுள்ள கிறிஸ்து வேதத்தில் "In the beginning was the Word, the Word was with God, the Word was God" என்று எழுதியிருக்கிறார். இதைத் தமிழில் மொழி பெயர்த்தவர், இந்த உண்மையைப் பின்வரும் அருள் வாக்கால் வெளியிட்டிருக்கிறார்:—

(1) "ஆதியிலுள்ளதனுதியொன்றே
ஆதியனுதியுமவனேயாவன்
அனுதியாமவனுதியதாக
ஆதியிற்பிறந்ததுநாதந்தானே."

(2) "நாதமுநாதாந்தமுமொன்றே
ஆதியில்நாதமனுதியிலொடுக்கம்
ஆதியனுதிபோல்நாதமனுதி
ஆதியுநாதமும் அனுதிதானே."

இதனால் "ஆதியும் நாதமும் அனுதிதானே" என்ற உண்மையை முன்னம் உள்ளத்தில் சிரகிக்கவேண்டும். இதை தத்துவார்த்தமாய்ச் சொன்னால் சாபானிய ஜனங்களுக்குப் புத்திபிலேறாது; ஆகையால் ஆகமார்த்தமாக (தந்திர மார்க்கமாக) எடுத்துச்சொல்லி விளக்கவைப்போம். அது எப்படியெனில்,—

"ஆதியென்பது அம்மை;
அனுதியென்பது அப்பன்;
ஆதியிற்பிறந்தநாதம் பிள்ளை;
அம்மையும்பிள்ளையும் அப்பனே!"

"நூலைப்போல சேலை!" அதுபோல் "தாயைப் போல பிள்ளை." ஆனால் நூல் எங்கிருந்து வந்தது? பருத்தியிலிருந்து!—அல்லவா? ஆகையால் நூலும் சேலையும் பருத்தியைப்போல் என்று சொல்ல ஐயமென்ன? பருத்தி, நூல், சேலை ஆகிய மூன்றும் எப்படி அபேதமோ அப்படியே அப்பன், அம்மை, பிள்ளை ஆகிய மூவரும் அபேதம். இப்படி அபேதமாயுள்ள திரிபுடிலக்ஷியத்தையே எல்லாம்வல்ல தெய்வமென்று ஸமயகோடிகளெல்லாம் அவரவர் ஸமயம் பற்றிக் கைகூப்பித் தொழுவது. "திரிபுடி லக்ஷியம்" என்பது திரிபுடி ரஹிதமாயுள்ளது. "திரிபுடிலக்ஷணம்" என்பது திரிபுடி ஸஹிதமாயுள்ளது. இப்படி மூன்றும் ஒன்றாய், ஒன்றில் மூன்றும் மூன்றில் ஒன்றுமா யிருப்பது தானே "தத்துவமஸி" மஹா வாக்கியத்தின் மறைபொருள் என்பர். ஆகையால் இந்த உண்மையைப் பற்றாது பற்றி (அதாவது விஷயப் பற்றுவிட்ட "நிர்விஷய மனத்தால் பற்றி"—

"தியானம் நிர்விஷயம் மஹ" என்பது சுருதி வாக்கு) தியானயோக ஸமாதியிலிருந்து பார்த்தால் மறைமொழி (வேதவாக்கு) என்பதும், பழமொழி (லோகவசனம்) என்பதும், ஒரு மொழி (குருவாக்கு அல்லது குருசொல்) என்பதும் உட்புகுந்து பார்ப்பவர்க்கு (யோகஸம்ய மவித்திபெற்றவர்களுக்கு) ஒன்றே என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். எப்படி யெனிலோ,—

"தத்துவமஸி" யென்கிற மஹாவாக்கியார்த்தமே (மறைமொழிப் பொருளே) லோகவழக்கில் உபாஸனையின் பொருட்டு, "ஸோஹமஸ்கந்தர்" என்கிற "அப்பனம்மை பிள்ளை" மூவரும் ஒன்றான நித்தியமங்கள மூர்த்தமாக விளங்கும். இதையே பின்னும் உலகுய்யப் பரங்கருணை மிகுதியால் அருட் திருமேனி பூண்ட பரமாசாரியரான ஸத்குரு (இப்படி) "இரு" என்று சின்முத்திரை சாதித்து நிர்விகல்ப ஸமாதியிற் "சும்மா விருக்கும்" வழிகாட்டி, மௌன முத்திரையால் (சநகாதி நால்வரைப் போல்) உள்ளடம் புற்றார்க்கு மௌனப் பிரசங்கம் செய்து மௌனதீக்ஷை யளிப்பர். இதையே நிர்வாணதீக்ஷைக்கு இன்றியமையாச் சாதனமாகச் சொல்வர். சாதகம், மௌன வித்தியால் 'மோனவுரு' வாதலாம்.—"ஏனமிசை குயவனவன் கைப்பிடிக்கிசைந்து வணைதிரிகை மண்ணாய், வானமிசை விரிசடையோன் கைப்பிடியில் அஹமு மவன் மயமேயாகி மோனவுருவானவொரு அதிர்சயங் கண்டுகொள் அன்பிலமுதே!" யென்பது ஸ்வாநுபவச் செல்வர் செப்பிய பூரண வாக்கு.

மோனவுருவுக் கப்பாலிருப்பது "அரு." அந்த அருவே மோனாதீதமான நித்த முத்த நிர்மல வஸ்து. அது எங்கும் என்றும் இருக்கிறது. தேசகால பரிச்சேதங் கடந்தது. அனாதியான அதுவிலிருந்துண்டானது ஆதி. ஆதியிலிருந்துண்டானது நாதம். ஆகவே "அது ஆதி நாதம்" என்பது மூன்றில் ஒன்றும் ஒன்றில் மூன்றுமாயிருக்கிற எல்லாம்வல்ல கடவுளைக் குறிக்கும். "அது ஆதி நாதம்" என்பதற்குப் பதார்த்தம் (காலாதீதமான) அதுவே ஆதி (காலமாகவும்) நாதம் (ஆகாசம் பிறக்கக் காரணமான சப்த தன்மாத்ரையினால் தேசமாகவும்) இருக்கிறது என்பது பொருள்.

அதற்கு வாச்சியார்த்தம்:—தத்பத லக்ஷியமான "அது" துவம்பத லக்ஷியமான ஜகத்காரண பூதமான "நீ" யென்னும் ஆதி புருஷனாயும், அந்த ஆதி புருஷனிற் பாதியான அர்த்தநாரியாகவும் (நாத வடிவாகவும்) இருக்கிறது.

"அது ஆதி நாதம்" என்பதற்கு லக்ஷியார்த்தம் என்னவெனிலோ, மோனாதீதமான நித்த முத்த சுத்த வஸ்துவாம் அமாத்ரை (அது) அகாரத்தை ஆதியாக வுடைய பிரணவப் பொருளாகவும் (ஓங்காரியாகவும்) ஜகத்காரணமாகிய பிரணவ நாதமாகவும் (ஆங்காரியாகவும்) அபேதமா யிருக்கிறது. பேதத்தில் அபேதம் எப்படிச் சொல்கிறது என்றால், நெற்றிக் கண் திறந்து நித்தியவஸ்துவைச் சாக்ஷாத்கரித்தால் அப்பொழுது தானே தெரியும். அதற்கு முன் என்ன சொன்னாலும் தெரியாது. குருவருளை நம்பிக் குருமுகமாக விருந்துழைப்பவர்களுக்கு அதில் திடநம்பிக்கை யுண்டாகும்.

"அ-ஆ-ம்" = அகாரத்தை (ஸ்வரத்தை) நீட்டினால் (ஆ) என்கிற உச்சரத்தில் வரும் போது அதுதானாகவே ஆரோகண கதிவிட்டு அவரோகணமான உகாரத்தில் பிரவேசிக்கும். உகாரம் அந்தியத்தில் அனுஸ்வாரமான மகாரத்தில் ஒடுங்கும். மகாரம் மோனத்தில் லயிக்கும்; மேலேசொன்ன வியாக்கியானம் எல்லாம் இதில் அடங்கும். இந்த முக்கியார்த்தமும் "ஓம்" என்கிற பிரணவத்தில் அடங்கும். அப்பியாசத்தில் இந்தப் பிரணவம் தானே எல்லாமாக விரியும் குவியும்.

"ஓம்."

"ஓம் எனச்சொல்வது பிரணவ மந்திரம்
ஓம் எனக்கொள்வது பிரணவப்பொருளையே
ஓம் எனக்காட்டுமுறை விர்த்திகூமலயம்
ஓம் எனக்குறிப்பர் காட்டுக்குறிகடந்த காரணன்
[தன்னையே"

என்பது ஸ்ரீ அகண்டானந்த ஸத்குருவாக்கு. இந்தப் பிரணவத்திலிருந்து பிறந்தது,—

"ஓங்காரம்."

"ஓங்காரமாவது லிரியுங் குவியும்
அகாரம் விரியும் உகாரம் குவியும்
மகாரம் ஒடுங்கும் மோனமு மாகும்
அகார உகார மகாரமாய்நிற்பதுஓமதுவாமே."

இந்த ஓங்காரம் தானே பரம ஆஸ்தி. எல்லாப் பொருளும் இதிலடங்கும். இந்த ஓங்காரத்தை யறிந்தவர்தாமே அறிவுடையார். இவரே எல்லா முடையார்.

"அறிவுடையா ரெல்லாமுடையார்
அறிவிலா ரென்னுடையரேனு மிலர்."

இதனுண்மையை வற்புறுத்தவே அம்மையாம் தேவி பவானியா யிருந்து அப்பனுக்கு போக சுக மளித்து போக்கிய பாக்கிய மனுபவிப்பதை விட்டுப் புருஷவேஷம் பூண்டு விஷ்ணுவாகவும், "குரோதேசகாளி"—கோபாவேசத்தினால் காளியாகவும் அவதரித்து, நயபயத்தால் தன்னிற்பிறந்த தன் பிள்ளையாகிய மானிட ஜன்மத்தை யீடேற்ற வுழைக்கிறாள். நயபய மிரண்டிலும் வழிக்கு வராத துஷ்டர்களான தூராத்மாக்களை "சமரேசதுர்க்கா" என்றபடி ஸம்ஹார சக்தியாக அவதரித்து அவர்களைக் கெடுத்த உபாதியின் பலத்தைக்கெடுத்து நாசஞ் செய்து அஹம்பாவத்தை யழித்துத் திரிமலம் போக்கித் தன்னறிவுச்சுடர்விளங்க அருட்பிரஸாதம் சாதித்து திருமுலைப்பாலளித்து ஞானஸம்பந்திகளாக்குவிக்கிறாள்.

இப்படி துர்க்காவேசங்கொண்டு என்னுரு வழித்துத் தன்னுருக்காட்டிப் பொன்னுருத்தந்த என்னம்மைக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! அவளைப்போல் அக்கிரமத்தை யெதிர்த்துச் சமரில் வெல்ல எனக்குச் சக்தி யளிப்பாளாதலால், அவள் திருப்பாதமே கதியாக விழுந்துகிடக்கும் என்னை "ஐயகோ! பாவி! சந்திபிலிழுத்துச் சங்கடங்கள் பல செய்தானே!" யென்று தேம்பித் தேம்பி யழும்படித் தவிக்கவிட்டது ஏன்? இந்தக் கேள்வி யெனக்கு குருவாரத் தன்று பிரஹ்ம முகூர்த்தத்தில் செவியதிரக் கேட்டது. இடியேறுற்ற நாகம்போல், திக்பிரமை கொண்டு "வேலுமயிலுந் துணையளித்த" வேதாந்த வேதியனைத் தொழுதழுதேன்.

குமரகுரபரனுய்வந்துவந்து என்னர்ச்சனையை ஏற்று அடியேனும் கடைத்தேறத் "தில்லைவா ழந்தணர் தம் அடியார்க்குமடியன்" என்ற அம்பலவாணன் திருவாக்கே பொக்க "தகப்பனைப்போல் பிள்ளை" யென்கிற லோகவசனம் பொருந்த "ஆண்டானடிமைக்கடிமை செயுமடியன் தானென்றுவந்தே" "வேண்டாதுவந்துழைக்க வேலு மயிலுந் துணை" யென்றவன் திருவடிபற்றித் தொழுதேன். "தகப்பன்சாமி" யாகிய அந்த "ஆசாமி"யும்,

"ஆறு மோராறாய் அறுமுகனு மொருமுகமாய்
தோரு மூரூராய்த் தேடுதற்கோ நீயொளித்தாய்!
ஈராறுயர் செவியாயிருந்திலையே காண்டற்கு!
வேறுருனையன்றி விருப்புற் றளிப்பதற்கு!"

என்று பெரியோர் அவனை வருந்திப் பாடியபடி 36-தத்துவங்களும் சேர்ந்து "ஒரு ஆறு" என்றுசொல்லும் அறுகோண வடிவமுகனுகி, "ஆறுமுகங்களையும்" ஒரு முகமாய்"த் திருப்பிக்கொண்டு, திருத்தேர் கட்டினதுபோல, தசரதங்கள் நிறைந்த ஊர்கள் பலவற்றில் (லோக வழக்கில்) மறைந்து கிடக்கக் கண்டேன்.

ஒளித்த "ஆசாமி"யைத் தேடிப் பிடித்து நடந்த அக்கிரமங்களை யெடுத்துக் காட்டி "ஈராறுயர்செவியாய்!" என்று திரிபுரங்களும் நடுங்க உறத்துக் கூவி "பூத முதலாகவே நாத

பரியந்தமும் பொய்யென்றெனைக்காட்டிய" அம்மைபேர் சொல்லி அந்த ஆளைப் பிடித்து இந்த அக்கிரமங்களைக் கண்டுங் காணுக் கண் படைத்த கந்தனே, இவைகளை யெல்லாம் கண்டு படியளக்காது நீ யெங்கு போயினை? யென்று வினவுவான் வேண்டி

"இருந்திலையோ காண்டற்கு!"

என்று குறைகூறி முறைபாடி அண்டம் அதிரப் பிண்டம் பொடிபடப் பொறுத்திருந்துரத்துரத்துக் கூவி யழைத்தேன். இவ்வளவுக்கும் வாராத விளையாட்டுப் பையன் "மனமுருகிக்கற்றுபோல்" கைபிசைந்து "வேறுருனையன்றி விருப்புற்றளிப் பதற்கு!" என்று உள்ளமுருகக் கள்ளங் கரையக் கனவு நனவழிந் துழிநயந்துகூற, என்னப்பன், என்னய்யன், 'கண்ணப்பா நில்'லென்று கைபிடித்த வண்ணல் சேய், "என்னப்பா ஏன்!" என்று எழில்பொழிய வந்து நின்றான்.

"அய்யனே!, மெய்யனே! துய்யனே! பன்னிரு கையனே!" எனப் பெரியோர் கரைந்துருகிப் பாடிய கந்தனைக் கண்டேன், கண்டேன், கண்ணாரக் கண்டேன்!

"தேரூர்தேறுதற்குதேவிபராசக்தியுடன்
வாரார்முருகையன்வர்ணமயில்வாகனமேல்!"

என்று சித்த கணங்கள் பைகூப்பித்தொழ தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். எங்கும் ஜயபேரிகை முழங்யது. என் கவலைதீரக் களிதீர்ந்ததென்று நிர்விசாரமா யிருந்தேன். இருந்தபடி யெழுந்தேன். விருந்தெழுந்தபடி யிம்மை யெழுதிவிட்டேன். "எளியாரை வலியாரடித்தால், வலியாரைத் தேய்வடிக்கு!" என்னும் பழமொழி தானே மறைமொழியாம். அம்மறை மொழியே குருமொழியுமாம். ஆகையால் "வேலுமயிலுந் துணை" யென்று விருதுகட்டிக் கொண்டு அக்கிரமக்காரர்கள் செய்யும் அட்டகாசங்களுக் கஞ்சாமல் "சத்தியமேவ ஜயதே நாந்ருதம்" என்ற வேதவாக்குப் பொய்யாமல் நடப்பேன்; எனவும்,—"பொய்க்கால் நடைமெலிப் போலியர் உயர்வு" தாழ்வுறக் கண்டதுபோலவே, "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்று எளியாரை வதைக்கும் வலியாரைத் தெய்வம் தண்டிக்கப் பார்ப்பேன்! தர்மம் தலையெடுக்கக் காண்பேன்! என்று அசரீரிவாக்கு அம்பரத்தில் முழங்கக் கேட்டேன்! "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்பது பழமொழி.

——(:o:)——

"Opus and Opera." or
The Principle of Co-operation.

"Co-operation is now used in the sense of combination or putting together of work. It was originally used in the sense of putting together of resources. The Latin words for Co-operation were *Opus* and *Opera*. According to the Ideal of the Co-operative Society it is not money that formed the foundation of good business but what was called *Opus* or resources. There was no exact equivalent of the word *Opus* in English. Credit was one thing but did not exhaust the whole of it. What was wanted was not exactly capital, but work, labour, resources, influence and all that."—Diwan Bahadur L. D. Swamikkannu Pillai, Registrar of Co-operative Credit Societies, Madras.

"If the system of Co-operation can be introduced and utilised to the full, I foresee a great and glorious future for the agricultural interests of this country."—The King Emperor at Delhi.

"Scotland by no means escaped the fate ordained for every country which is connected but not incorporated with another country of greater resources'—*Macaulay.*

Resource (from *re* again, and *Soudre* to spring forth) (1) That from which anything springs forth hence, that to which one resorts or on which one depends for supply or support; dependence. (2) (Plural) means; capabilities of producing wealth, or to supply necessary wants, available means or capabilities of any kind.

——:-:——

"எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்!"
"கூட்டுறவுண்மை"

"பார்வையிரண்டுண்டுபதறிரகமுகமென்பர்
பார்வைபதறிர்முகம்பார்த்தவுலகாராயில்
பார்வையகமுகமுன்னுனர்வையோர்ந்தனரில்
பார்வையிரண்டுமொன்றுவதுணரார்பரிதவித்துழல்வாரே'

—அகண்டாநந்தம்.

அர்த்தம், அநர்த்தம் என இரண்டிருந்தாலும், அர்த்தத்தி லிருந்தே அநர்த்தம் பிறந்தது. அது எப்படி யெனில், வித்தையிலிருந்து அவித்தை யுண்டானது போலென்க—அறிவிலிருந்து அறியாமை யுண்டானது போலெனினும் பொருந்தும்.

அறிவின்றி அறியாமையில்லை. அப்படியே அர்த்தமின்றி அநர்த்தம் இல்லை. அர்த்தம் வார்த்தையை ஒட்டினது என்றும் வழக்கத்தை யொட்டினது என்றும், வார்த்தை வழக்கம் என்கிற லக்ஷணங்களை விட்டு லக்ஷியமாத்திரமாய் நிற்கும் நித்தியப்பொருளாகிய உண்மையான அர்த்தம் என்றும் மூவகைப்படும். இவற்றில் முதலிரண்டும் (1) பதார்த்தம் என்றும், (2) வாச்சியார்த்தம் என்றும் சொல்லப்படும். இவையிரண்டும் காலத்துக்குக்காலம் மாறுபடக்கூடிய வாதலால் அநர்த்தம் என்கிற வகையில் சேர்ந்ததாம். மூன்றாவதாகிய லக்ஷியார்த்தம் உண்மைப் பொருளையே குறிப்பதால் அது காலதேச மாறுபாடுகளால் மாறுபடாதது எப்போதும் தானேதானாயிருக்கும் நித்தியார்த்தத்தையே குறிக்கும்.

"கஞ்சி வரதப்பா!" என்றால் அதற்குப் பதார்த்தமும், வாச்சியார்த்தமும் வேறு வேறாயுரைக்கலாம். ஆனால் திருவருட் பிரஸாதவள்ளலாகிய காமாக்ஷி ஸமேதரான ஏகாம்பரநாதராயினும், தேவாதி தேவனான வரதராஜப் பெருமானாயினும் சரி, லக்ஷியார்த்தம் ஒன்றே. இதுபோல் வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும், வாச்சியங்களுக்கும், சாதக, சாதன விசேஷம் பற்றி அர்த்தம் வேறுபடும். "பழையனகழிதலும் புதியன புகுதலும் வழுவல." ஏனெனில், "கால வகையினானே"—காலத்துக்குத் தக்கபடி அனுஸாரணை யெப்படியோ அப்படிப்போல் பதார்த்தமும், வாச்சியார்த்தமும் மாறுபடும். ஆகையால் 'பழையன'—பழமையான அர்த்தம் 'கழிதலும்', 'புதியன'—புதுமையான அர்த்தம் 'புகுதலும்' 'வழுவல'—இழுக்கில்லையென்று சொன்னார் இலக்கியம் (லக்ஷியம்) கண்டதற்கு இலக்கணம் (லக்ஷணம்) இயம்பும் புலவர்.

"கற்கக் கசடற"

திவான் பஹதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுபிள்ளையவர்கள், உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவரன்றிப் பிழையறக் கற்றபண்புடையாளர். ஆகையால் அவர் எதைத் தொட்டாலும் அரை குறையாகக் கற்றுச் 'சொப்படி' வித்தைக்காரன் போல் பார்ப்பவர் புலனை மயக்கிப் பிரமாதம் விளைத்து விட்டதாகக் காட்டும் ஜாலவித்தை செய்ய நினைப்பவரில்லை. "கற்கக் கசடற" என்பதைக் கடைப்பிடியாகக்கொண்டு பாலியம் முதல் கல்விகற்று வந்தவர். இங்கே 'கல்வி' யென்றால் என்ன? என்பதற்குப் பொருள் கூறவேண்டிய தவசியமாக விருக்கிறது. ஏனெனில் A. B. C. D. என்கிறப் பட்டப்பேர் பெறுவதெல்லாம் கல்வி யாகாது. கல்வி சற்றதற் கறிகுறியாகக் கொடுக்கும் சின்னங்களையே கல்வியாகக் கொள்ளக்கூடாது. பின்னை 'கல்வி' யென்றால் வேறு என்னதான் அர்த்தம்? எனில், ஔவைப்பாட்டி சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்.

"கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்"

என்று சொல்லியிருக்கிறாள் ஔவையார்.

அவருடன் பிறந்தவரான திருவள்ளுவரும்

"கற்றதனாலானபயனென்கொல்வாலறிவன்
நற்றாள்தொழா அரெனின்."—திருக்குறள்.

என்று சொல்லியிருக்கிறார். வாலறிவன் நற்றாள் எது? "பூத முதலாகவே நாத பரியந்தமும் பொய்" என்றேற்பட்ட மாயாசம்பந்தமான பூத தத்துவக் கூட்டங்களைத் தன்னி, நாத முதல் நாதாந்தம் வரையிலுள்ள நித்திய தத்துவ நிலையெதுவோ அதையறிந்து நிர்விஷய மனத்தால் பற்றுதலே "வாலறிவன் நற்றாள் பற்றுதலாம்."

இந்த "மனப்பழக்கம் அமையப் பெற்றவர் யாவரே யாயினும் அவர் யோக புருஷனேயாம். ஏனெனில் மாறுபாடுகளுக் கெல்லாம் காரணபூதமாயிருக்கிற சித்தவிருத்தியை நிரோதஞ் செய்து தன் மனதைத் தானே யடக்கியாள வல்லவன் யாரோ அவனே யோகபுருஷன். மற்றவர்களெல்லாரும் கர்த்தா போக்தாவென்று சொல்லிக்கொண்டு கர்மத்தைச் செய்து கர்ம வலையிற்சிக்கிக் கர்மத்தைக் கட்டிக்கொண்டழுகிறவர்களாம். இவ்வளவும் இங்கே சொல்லவந்தது ஏனென்றால், திவான் பஹதூர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளை சம்பளத்துக் குழைக்கிற சர்க்கார் உத்தியோகஸ்தராயினும், சம்பளத்தையும் ஸர்க்கார் உத்தியோகத்தையுமே பிரதம ஸ்தானத்தில் வைத்துப் பூசிக்காமல் தொட்ட விஷயத்தை முட்டற ஆராய்ந்து முடிவுகண்டுழைக்கும் ஸ்வபாவமுள்ளவர். இதையவர் பலதடவைகளில் காட்டியிருக்கிறார். பிப்ரவரிமீ 6வ. செவ்வாய்க்கிழமை சாயங்திரம் பச்சையப்பன் மாளிகையில் கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் 'ஐக்கிய நாணயப் பங்கி' யொன்று ஏற்படுத்த வேண்டியதன் உத்தேசத்தைக் குறித்துப் பேசும்பொழுது, இந்த விஷயத்தில் தலைப்பேர்முகப்பின்கீழ் அச்சிட்டுள்ள உண்மையைக் கண்டுபிடித்துச் சொன்னது நமக்கு அருமையிலும் அருமையா யிருந்தது. ஏனெனில் "எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்!" என்கிற இந்த விஷயத்தைப்பற்றி ஸர்க்கார் மில்டர் நிகால்ஸனைக் கொண்டு விசாரிக்கச்சொன்ன காலம் முதல் நாம் இதில் சிரத்தை பூண்டுழைத்ததுண்டு. காலஞ்சென்ற திவான் பஹதூர் எஸ். ஸ்ரீனிவாஸராகவ ஐயங்காரவர்களுடைய சாதகத்தைக்கொண்டு (Raiffeisen) ரபேஸன் என்பவர் கண்டுபிடித்து அனுஸரணைக்குக் கொண்டுவந்த கூட்டுறவுநாணயக் கொள்கையைப்பற்றி நாம் ஆராய்ந்து இந்த 'விவேகசிந்தாமணி'யில் விஸ்தாரமாயெழுதியிருக்கிறோம். குடிகாரனைக் கண்டால் குடிகாரனுக்குக் கொண்டாட்டம் பிறப்பதுபோல், "கோ ஆபரேஷன்" என்று சொல்லும் உண்மைத்தத்துவத்தின் இரகஸியத்தை யறிந்தவர் ஒருவர் அதைச் சிறிது வெளிபிட்டுக்காட்ட நமக்கு உள்ளத்து உவகைமேலிட்டு மனக்கிளர்ச்சியை யுண்டுபண்ணிற்று.

இந்த அவஸரத்தில் நமது நண்பர் ஒருவர் நமது சக்ரவர்த்தியார் சொல்லிய சில மொழிகளுக்கு அர்த்தம் கேட்க, "கூட்டுறவுண்மை" (the Principle of Co-operation) என்கிற விஷயத்தையே யெடுத்துக்கொண்டு நமது கருத்தை வெளிபிடக் கருதினோம். "கோ-ஆபரேஷன்" என்னும் இங்கிலீஷ் வார்த்தையை ஐக்கியபத்தியமில்லாமல் ஐக்கியமத்தியம் மட்டுமுள்ள—அதாவது மனப்பொருத்தமின்றி ஜனப்பொருத்தமட்டுமுள்ள கூட்டுத்தொழில் வகையில் உபயோகித்துவந்தாலும் அதன் உண்மையான அர்த்தம் அது வல்லவென்று சொன்னார். லத்தீன் பாஷையில் அதற்கேனவார்த்தைகள் "*Opus* and *Opera*" என்று சொன்னார். அதன் உட்கருத்தைத் தமிழில் "எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்" என்னும் பழமொழி பதத்தால் நன்றாகத் தெரிவிக்கிறது. 'வாழ்வு' என்பது இகபரமிரண்டுக்கும் பொது. வாழ்வுக்குச் சாதனமென்னவெனில், 'ஒத்திருத்தல்'. இருத்தலில் உழைத்தலும் அடங்கும். ஆகையால் "ஒத்தால் வாழலாம்" என்றதனால், 'அஹம் புறம்' இரண்டும் ஒத்தால்' 'வாழலாம்'—'வயிற்று வாய்ப்பு முதல் முத்திவிடெய்தல் வரையில் உள்ள புருஷார்த்தங்கள் நாலும் பெற்று வாழலாம்.

"தாழ்விலா வாழ்வெனக்குத் தாழாமல் தந்தவனைத்
தாழாமற்றாழ்ந்துநான்தான்தொழுவதென்னாளோ!"

என்றார் ஒத்துவாழக் கற்ற உத்தமர். ஆகையால் "*Opus* and *Opera*" என்றுள்ள கூட்டுறவுண்மைச்சங்க லக்ஷியம் (the Ideal of Co-operative Society) பணமல்ல.

"நாடெல்லாம் வாழக் கேடொன்று மில்லை"

என்பது கூட்டுறவுண்மைச்சங்க லக்ஷியத்தின் லக்ஷணமாம். அதைவிட்டு ஏழை எளியார்களை மோசம்செய்து, பத்மாஸுரனைப்போல் யார் தலையில் கையைவைத்தாலும் அவன் பஸ்மமாகப் போகவேண்டுமென்று ஊரைக் கெடுத்துக் காசைச்சேர்த்து, கர்வம் தலைக்கேறிக்கெடுவது கூட்டுறவுண்மைச்சங்க லக்ஷண மில்லை. "தனினைவிட்டுட்டல் பொருள்" ஆதலால், அர்பத்நட்டியாபாரமாக பாங்கிவைத்து ஊரார் தலையில் கையைவைக்காமல், தன்னைக் கொடுத்து பொன்னைத்தேடி, பொன்னைக்கொடுத்து புண்யத்தைக் கட்டிக்கொள்வதுதான் கூட்டுறவுண்மைச்சங்க லக்ஷியத்தின் லக்ஷணமாம். இதையே முத்திவழியில் "ஸாதுசங்கம்" என்று சொல்லுவர் பெரியோர்.

"கூட்டுறவுண்மைக்கு" இன்னொரு முக்கிய லக்ஷணமென்னவெனில், மூன்று "தி"காரமும் ஒத்துச் சேரவேண்டும். அதாவது, புத்தி, யுத்தி, சத்தி, யென்கிற மூன்றும் ஒத்து (அப்பிறுப்புப்போல் தாதாத்மியமாகச் சேர்ந்து) ஐக்கியபத்தியமாக (கூடும் பக்குவமாக) கூடல் வேண்டும். இந்த மூன்று "த்தி"யும் ஐக்கியபத்தியமாகச் சேர்ந்தால் அறம், பொருள், இன்பம் என்கிற மூன்றையும் பயக்கும். அஃதன்றி இம்மூன்றின் அனுபவ பூரணமே ஐக்கியபத்தியத்தால் (கூடும் பக்குவத்தால்) "முத்தி." மூன்று 'த்தி' சேர்ந்ததான பிரவிருத்தி பூரணத்தில் நிவிருத்திஸித்தியாம் முத்தியைக் கொடுக்கும்.

"நாதலறம், தனினைவிட்டுட்டல் பொருளெஞ்ஞான்
[றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாரிவு
பட்டதேயின்பம் பரனினைவோர்க்கிம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்றாராதலால் புத்தியினால் அறமும், யுத்தியினால் பொருளும், புத்தியுத்தியின் ஐக்கியபத்தியத்தாலுண்டாகுமோர் (யோகஸுகமும்) சத்தியால் இன்பமும் (ஊரோடொத்து வாழ்தலாம் இன்பக்கமும் இதையே 'Public Spirit' என்பர்,) சித்திக்கும் இவ்வளவும் லித்தித்த அளவில் இவற்றைச் சாதனமாகக் கொண்டு இவை மூன்றின் சமஷ்டியோகமாகிய "பேரின்பவீடு" என்கிற "spiritual character" சித்திக்கும். இந்த ஆத்மலக்ஷணமாகிய திரிகுணாதீதத்திலிருந்து திரிகுணங்களையும் அடக்கிவாழ்வதே வாழ்வன்றி மற்றதெல்லாம் வாழ்வல்ல. ஏனெனில் அவை வாழ்வை யளிப்பதுபோல் காட்டி தர்மராஜாவான காலன்வந்த வேளையில் தாழ்வையளிக்கும். யமனுக்கஞ்சா மார்க்கண்டன் வாழ்வே வாழ்வு. காலனைக் காலாலுதைத்தவனைப் பிரவிருத்தி மார்க்கம் பற்றிச் சேவிப்பதே கூட்டுறவுண்மைக் கொள்கையாம். ஆகையால் வேதாந்த பரமான இந்த உண்மைக் கொள்கையை யேற்றிபற ஆராய்ந்து சித்தாந்த முடிவாகச் சாதிக்க வேண்டும்.

சாதனையின்றிச் சாதிப்பாரில்லை யாதலால், ஸ்வாமிக்கண்ணு பிள்ளைபவர்கள் கண்ணுள்ள ஸ்வாமியர்களே யிருப்பது இவ்விராஜதானி ஏழை ஜனங்கள் செய்த புண்ணியம் தான். ஏழைகள் பிழைக்கக் கூட்டுறவுண்மையைப் போல் வேறு சாதனமில்லை, இந்தக் கூட்டுறவானது "காரணகுரு காரியகுரு" கதையாகக் காசு பணம், பேர் கீர்த்தி, சீர் செல்வாச்கு என்கிற காரியசாதன மட்டும் பற்றியதாக வின்றி, ஈவிரக்கம், தயவு தாக்ஷண்யம், தெருள் அருள் என்கிற காரண சாதனங்களும் பற்றியதாக விருக்கவேண்டும். காரணத்தைப்பற்றிக் காரியமாக வேண்டுமேயன்றி காரியத்தைப் பற்றிக் காரணத் தையிழத்தால் அது கைக்கு அகப்படாது.

இப்படி காரணகாரிய தோரணையறிந்து கர்மதர்ம ரஹஸியம் பற்றி யுழைப்பதே "Opus and opera" என்று சொல்லும் கூட்டுறவுண்மைச் சங்க லக்ஷணமாம். ஆகையால், "எத்தால் வாழலாம் தம்பி?" என்றால், "ஒத்தால்

வாழலாம்!" என்பதை ஏழை எளியவர்கள் உள்ளபடி யுண்மையாகக் கடைப்பிடித்து உள்ளத்தில் கிரஹித்து ஏழைகள் தலையில் கையை வைக்கப் பிழைக்கும் பத்மாஸுரர்களை லக்ஷகப்பட்டுக் கொள்ளாமல், தங்களுடைய கூட்டுறவுண்மைச் சித்தாந்த அழகிலிருந்துண்டான சத்தியைக் கொண்டு அவர்கள் பேராசை மோகத்தில் தம் தலையில் தாமே கைவைத்துக் கெட்டழியும்படி செய்ய வேண்டும்.

புத்தி யுத்தி சத்திகளாலாவது முரட்டுத் தனத்தாலும் குருட்டு பலத்தாலும் இருட்டு வழியாலும் முடியாது. ஆகையால் நமது சக்கிரவர்த்தியாகிய மகிமை தங்கிய ஜார்ஜ் அரசர் டில்லி முனிசிபாலிடியார் வந்தனப் பத்திரமளித்ததற்குச் சொல்லிய பதிலுரையில் கண்ட ஓர் வசனத்தையே கூட்டுறவுண்மைக் கொள்கையாளர் எல்லோரும் [illegible] வேத வாக்காகக் கொண்டுழைக்க வேண்டும். அதில் மறைந்து பொதிந்துகிடந்த வுண்மையை வெளியிடவேண்டியே இவ்வளவு விஸ்தாரமாக விரிவஞ்சாது தெளிவுறப் பொருள் விளங்குவதே முக்கியமென்று வியாக்கியானம் செய்தெழுதலானோம். தசரதர் போலும் நமக்கு வாய்த்த சக்கிரவர்த்தி யவர்களின் ஒப்பற்ற வாக்கு இது:—

"கூட்டுறவுண்மைச் சங்க ஏற்பாடு முற்றும் பிரயோஜனார்த்தமாக அனுஷ்ரானைக்கு வருமானால்,—(அந்தக் கொள்கையின் அப்பியாஸ முதிர்ச்சியினால்)—'வரப்புயர" என்று வாழ்த்தின ஔவையார் வாக்குப்போல்,—வியவசாயிகளுக்கு மஹத்தான திவ்ய யோகக்ஷேமங்கள் உண்டாகுமென்று நான் தீர்க்க தரிசனத்தால் உண்மை யுணர்ந்து சொல்கிறேன்"—என்று ரிஷிவாக்குப்போல் பிரஜானுகூலனான பாரத மன்னன் திருவாக்குத் தந்ததற்காக "குடியுயரக் கோனுயர" வென்று நாமெல்லாரும் கூட்டுறவுண்மையின் மஹத்துவத்தை யுணர்ந்து ஒத்து வாழக்கற்று "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" யென்ற அவர் வழிபற்றி நடந்து அவரைத் திரிகரண சுத்தியாக வாழ்த்துவோமாக.

ஓம்தத்ஸத்.

LITERARY PIRACY.

விஷயத் திருட்டு.

இப்பொழுது தமிழ்ப்பத்திரிகைகள் பல வெளிவந்து உலாவுகின்றன. [illegible] தேசத்துக்கு நல்லதுதான். ஆனால் [illegible] வனெல்லாம் ஆண்பிள்ளையல்ல: புடைவை கட்டினவளெல்லாம் பெண்டாட்டியல்ல" என்று ஒரு வசனமுண்டு. அதுபோல் காகிதத்தில் அச்சிட்டு வெளிப்படுவதெல்லாம் பத்திரிகையாகாது. பத்திரிகா தர்மம் என்னவென்றால், பத்திரிகாசிரியர் தானறிந்த அறிவுவிர்த்திக்குச் சாதகமான விஷயத்தைப் பிறரறியத் தெரிவிக்கவேண்டி அதற்கு ஒரு சாதனம் வேண்டுமாகையால், கால விசேஷத்துக்கேற்ப, பத்திரிகைகளோ அச்சாதகமாக உபயோகிப்பது பத்திரிகாதர்மமாம்.

இப்பொழுது பத்திரிகை போலவே பிழைக்கும் வழிதேடவன்றி பத்திரிகாதர்மத்தை யனுசரித்தல்லவென்பது வரவரப் பிரத்தியக்ஷமாய் ஏற்பட்டு வருகிறது. பத்திரிகைகளிலிருந்து விஷயத்திருட்டு நடப்பது கூடாதென்றே நமது விவேகசிந்தாமணியைப் புஸ்தகரூபமாகப் போட்டு அதன் காபிரைட் சுதந்தரத்தையும் ஆதிமுதற்கொண்டே இரண்டு ரூபாய் கொடுத்து ரிஜிஸ்தர் செய்தோம். ஆனால் இவ்வுலகில் சட்டமும் திட்டமும் யோக்கியருக்கேயன்றி, "வல்லான் வகுத்ததேவழி" யென்று போகிறவர்களுக்குசட்டதிட்டம் இருந்தும் இல்லாததுபோல்தான். இப்பொழுது வெளியாகி வருகிற பத்திரிகைகளில் "பெத்தப்பேர்" படைத்த பல, விவேகசிந்தாமணி யிலிருந்து விஷயங்களைத் திருடிப்போடக்கூசவதில்லை. "ஐயா, இப்படி கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கலாமா?" என்று கேட்டால் "நான் அப்படித்தான் செய்வேன், நீ வேணுமானால் கோர்ட்டுக்குப்போய் ஒரு கைபார்;" என்கிறார்கள். அந்தக்களோடு அழிவழக்காட யாரால் முடியும்? ஆயினும் பெத்தப்பேரும் பி.ஏ. பட்டமும் முழங்க முழங்கப் "பத்திராதிபர்" என்று பேர் வைத்துக்கொண்டு தமிழ் தெரியாது தமிழ்ப்பத்திரிகைபோட வந்த மேதாவிகள் சிலர் "வல்லான் வகுத்தது நாய்க்கால்" என்ற சிலகாவம் இருந்த இராஜநீதியைக்கொண்டு விவேகசிந்தாமணியிலுள்ள விஷயங்களைத் திருடிப்போட்டும், அனுமதியில்லாமலெடு-

த்தச்சிட்டும் அக்கிரமம் செய்ததனால், அந்த துர்வழக்கம் எங்கும் பரவி விட்டது. இப்பொழுது கைக்கு வந்த "இஸ்லாம் நேசன்" என்னும் பேர்பூண்ட "மதராஸில் மாதந்தோறும் வெளிவரும் ஓர் [illegible] தமிழ்ப்பத்திரிகை" அதன் [illegible] சத்துச் சஞ்சி[illegible] 150, 151.[illegible] பக்கங்களில் "தாழ்ப்பா[illegible]லில்[illegible]தவு" என்று ஒரு விஷயத்தை யெடுத்து அச்சிட்டுவிட்டு, அது "விவேக சிந்தாமணி" யிலிருந்தெடுத்தது என்று வெளியார் கருதக்கூடுமென்று நினைத்து "விவேகபோதகன்" எனப் பெயர்மாற்றிப் பிரசுரம் செய்திருக்கிறது!

அந்த விஷயம் விவேகசிந்தாமணி 5வது வாலியம் 3-வது நெ. 1886 ஹு ஜூலை மீ த்துச் சஞ்சிகையில் 92-93-வது பக்கங்களில் "சிறுவர்க்கான பக்கம்" என்கிற தலைப்பின் கீழ் "விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது" என்று குறித்து அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. அதில் "பெண்டாட்டி" யென்றிருக்கிற வார்த்தையை மாற்றி "மனைவி" யென்று போட்டு, "போச்சு" என்று சிறுவர்வழக்காய்க் குறித்துள்ள வார்த்தைய "போயிற்று" என்று இலக்கண வழக்காக மாற்றிருக்கிறது. இதைத் தவிர "பிறகு தனக்குள் தானே" யென்று இரண்டு வார்த்தைகள் நூதனமாய் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இம் மாறுதல்களைத்தவிர வேறு யாதொரு வித்தியாஸத்தையும் காணோம். விவேகசிந்தாமணி வாசித்துவந்த சிறுவன் ஒருவன் இதை நமது பார்வைக்குக்கொண்டு வர அவனுக்கு வந்தனம்புரிந்து இந்த அக்கிரம அநியாயத்தை யாவரும் அறிய வெளியிட்டிருக்கிறோம். இந்த அக்கிரமம் எத்தனை காளைக்கு அடுக்கும்? விவேக சிந்தாமணியில் வந்த பின்வரும் விஷயத்தை முஸ்லிம் நேசன் பத்திராதிபர் தமது பத்திரிகையில் போட்டிருக்கும் சமர்த்தைப் பாருங்கள்:—

"தாழ்ப்பாளில்லாத கதவு."

"ஒரு குடியானவனுடைய வீட்டுக்கொல்லையைச் சுற்றிலும் ஒரு பூனைகூட நுழைய முடியாதபடி வேலி யடர்த்தியாய்ப் போடப்பட்டிருந்தது. அந்த வேலிக்கப்புறம் ஒரு வயல் வெளியுண்டு, வீட்டுக் கொல்லையிலிருந்து அந்த வயல் வெளிக்குப் போகும்படி ஒருகதவு வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கதவின் தாழ்ப்பாள் தருப்பிடித்து ஓடிந்து போய் விட்டது. அதனால் அந்தக் கதவைப் படியமூட்டி முடிவதில்லை. குடியானவன் வெளியில் போகும்பொழுதெல்லாம் அந்தக் கதவை மூடிக்கொண்டு போவான். மற்றவர்கள் அவ்வளவு சிரத்தையாய் மூடுகிறதில்லை; அலலவென்று மூடியு மென்ன; மூடினவுடனே ஒரு காற்று வந்தால் கதவு திறந்து கொள்ளும். இப்படியாக அந்தக்கதவு ஒரு தாழ்ப்பாளின்றிக் காற்றில் அலைந்து கொண்டிருந்தது.

"இதனால் கொல்லையில் இருக்கவேண்டிய கோழிகளெல்லாம் வயல் வெளிக்குப்போய் விடும். வயல் வெளியில் மேய்கிற ஆடுமாடுகளெல்லாம் கொல்லையில் நுழைந்து அங்குள்ள செடி செத்தை மேயவரும். வயல் வெளியில்போன கோழிகளை மடக்கி வந்து கொல்லையில் விடுவதிலும், கொல்லையில் மேய வந்த ஆடு மாடுகளைத் துரத்திக்கொண்டுபோய் வயல் வெளியில் விடுவதிலுமே அந்தக் குடியானவனுடைய குழந்தைகளுக்குப் பாதிப்பொழுதும் போய்விடும்.

"ஒரு தாழ்ப்பாளை வாங்கிப் போட்டால் மெத்தச் சௌகரியமாயிருக்குமென்று அந்தக் குடியானவனிடத்தில் அவன் [மனைவி] [விவேகசிந்தாமணியில் 'பெண்டாட்டி' யென்று இருக்கிறது] எத்தனைதரம் சொன்னாலும் அவன் "அடி போ! போ!! பைத்தியக்காரி! அதற்குக் கால் ரூபா அவிழ்த்துக்கொள்ளணுமே; முழுகிப் போன தென்ன? இந்தப் [பசங்களுக்குக்] கோழிகளை மடக்குவதும் ஆட்டை மாட்டைத் துரத்துவதும் ஆகிய இந்த வேலையைப் பார்க்கிலும் வேறு என்ன ஒடிக்கிற வேலை?" என்று சொல்லி உந்தான். கதவும் தாழ்ப்பாளில்லாமலே இருந்தது.

"ஒரு நாள் கொல்லையில் கட்டியிருந்த இளங்கன்று கட்டை அறுத்துக் கொண்டு கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு வயல் வெளிக்குப்போய் அப்படியே அடுத்த காட்டில் மேய ஓடிப்போய் விட்டது. கன்றுக்குட்டி காணாமற் போகவே அதைத் தேடிப்பிடிக்க ஆரம்பித்தார்கள். தொழுவத்தில் கட்டியிருந்த எர்க்குட்டையும் இந்தச் சந்தடியில் கன்றின் பின்னே யோடிப்போய் விட்டது.

"குடியானவனுடைய மனைவி பொரி பொரித்துக்கொண்டிருந்தாள். அவளும் அதைவிட்டுக் கன்றுக் குட்டியைத் தேடிப்போன தன் புருஷன் பின்னே யோடினாள்.

"அவளுடைய பெண் கூழ்ப்பானையைத் தழாவிக் கொண்டிருந்தாள். அவளும் அதைவிட்டுத் தன்னுடைய தாயின் பின்னே யோடினாள்.

"குடியானவனுடைய வேலையாளும் பிள்ளைகளும் இவர்கள் பின்னே ஓடத்தலைப் பட்டார்கள். இப்படியாக எல்லோரும் தலைகால் தெரியாமல் அலங்கோலமாய்க் காட்டுக்கு ஓடும்போது அந்த வேலையாள் அதிக ஆத்திரத்துடனே ஒரு கேலியின்மேல் தாவிக் குதித்தான். குதிக்கையில் வலுக்கால் சுளுக்கிக் கொண்டது. எழுந்திருக்க முடியவில்லை. கன்றுக் குட்டியைத் தேடுவதை விட்டு விட்டுக் குடியானவனும் பிள்ளைகளுமாக அந்த ஆளைத் தூக்கித்தோளில் வைத்து வந்து வீட்டிலிறக்கினார்கள். அவனுக்கு உபசாரம் செய்யும்படி வீட்டுக்காரியும் பெண்ணும் பின்னே வந்தார்கள்.

"வீட்டுக்கு வந்து பார்த்தவிடத்தில் பொரியெல்லாம் தீய்ந்து போய் விட்டன. பொரி பொரித்த இடத்துக்குச் சமீபத்திலே கொடியில் குடியானவனுடைய அங்கவஸ்திரமும் குட்டையும் இருந்தன. அவையிரண்டும் காற்றில் அலைந்து பொரி பொரித்த அடுப்பின் நெருப்புப்பற்றி எரிந்து பஸ்மமாகி விட்டன. கூழ்ப்பானை காய்ந்து பொங்கிப்போய்விட்டது. தொழுவத்திலிருந்த மாட்டையுங் காணவில்லை. அந்த மாடு ஓடுகிற அவசரத்தில் அதன் பக்கத்தில் கட்டியிருந்த ஒரு ஆட்டுக்குட்டியை எட்டி உதைத்தது. ஆட்டுக் குட்டியின் கால் ஒடிந்து நொண்டியாகி விட்டது. கால் சுளுக்கிக் கொண்ட ஆள் இரண்டுகாலம் யாதொரு வேலையும் செய்ய உதவாமல் போனதுமன்றி அவனுக்கு இவர்களே சோறு கொடுத்து அவன் நோய் இலகுவாகிறவரையில் இன்னொரு ஆளைக் கூலிக்குப் பேசிவைக்க வேண்டியதும் ஆயிற்று.

"பொரி தீய்ந்து போனதையும் அங்கவஸ்திரம் எரிந்து போனதையும் பார்க்கவே குடியானவன் தன் மனைவியை நன்றாகத் திட்டினான். காய்ந்து வழிந்து போன கூழ்ப்பானையை பார்த்த வுடனே பெண்ணைப்பார்த்து, "தடிக்கழுதே" யென்று முறு முறுத்தான். [பிறகு தனக்குள்ளானே.] † "கன்றுக்குட்டி [போயிற்று,] ஆட்டுக்குட்டி நொண்டியாயிற்று, மாடு [போயிற்று,] வேலையாள் வேலையோடு கூலியும் [போயிற்று,] அங்கவஸ்திரம் [போயிற்று,] குட்டையும் [போயிற்று,] பொரியும் [போயிற்று,] கூழும் [போயிற்று;] என் போயிற்று? கால் ரூபாய்த் தாழ்ப்பாள்போடாத படியாலல்லவோ "காணிச் சோம்பல் கோடி கஷ்டம்" என்று, அவன் அதிக வருத்தமுற்றுச் சொல்லிக்கொண்டான். இவ்வளவும்பட்டபின்பு தான் அவனுக்குப் புத்திவந்தது. காணிச்சோம்பல் கோடிநஷ்டம்: இச்சிறுவரியிலடங்கிய உண்மையையறிய அவ்வேழைக் குடியானவன் எவ்வளவு விலை கொடுத்தான் பாருங்கள். அவனுதாரணத்தைக் கொண்டு தெளிந்து நடக்கத் தப்பினால் நாமும் இப்படித்தான் சமயத்தில் ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து அறிய வேண்டிவரும்.

* "விவேகபோதகன்."

[†] இந்த வார்த்தைகள் விவேகசிந்தாமணியில் இல்லை. [போயிற்று] என்பதற்கு 'போச்சு' என்றிருக்கிறது.

"* விவேக சிந்தாமணி யென்னும் ஒரு பத்திரிகை யிருப்பதால் அப்பெயரோடும் பகுத்தில் இவ்விஷயம் அப்பத்திரிகையினின்றும் எடுக்கப்பட்டதென்று கருதக்கூடுமென நினைத்துப் பெயர் மாற்றப்பட்டது.—ப. ர்."—(இஸ்லாம் நேசன்.)

———:-:———

The People's Governor.

நமது சென்னைப் புதிய கவர்னர் லார்ட் கார்மிகேல்.

———:-:———

ஸர் ஆர்தர் லாலி 5-வருஷம் 7-மாதம் சென்னை இராஜதானி கவர்னராயிருந்து சென்ற நவம்பர் மீ 3-உ யன்று தமது உத்தியோகத்தை புதிய கவர்னரிடம் ஒப்புவித்தார். இவர் பேர் ஸர் டேவிட் தாமஸ் கிப்ஸன் கார்மிகேல். இவர் கவர்னர் உத்தியோகத்துக்கு வந்தவுடன் டில்லி தர்பாருக்குப் போகவேண்டி வந்தது. அங்கிருந்து திரும்பிவந்து இன்னும் இரண்டு மாசம் ஆகவில்லை அதற்குள் இவர் ஜனங்களுடைய மனதைக் கொள்ளைகொண்டு விட்டார். புது வருஷப் பிறப்பன்று இவருக்கு பாரன் கார்மிகேல் என்கிற பட்டம் கிடைத்தது. இவர் மிகவும் சமாஸ சுபாவமுடையவர். விஷயங்களை நேரில் கிரகித்துக்கொள்ளும் சக்தியுடையவர்; கிராகிய சக்தியோடு [illegible]களுக் கிரக்கும் சுபாவ முடையவர். ஏழைகள் தன்னைத் தேடி வரட்டுமென்ற ஆலோசனையடி

விருந்து தர்பார் செய்பவரில்லை. ஆனால் ஏழைகளைத் தேடிக்கொண்டு அவர்களிருக்குமிடம் போய் அவர்களுடைய குறை நிறைகளைத் தாமே நேரிலறிந்து கொள்ள வேண்டுமென்கிற கருத்தும், அக்கருத்துக் கிசைந்த குணமும், குணத்துக்குத்தக்க முயற்சியுமுடையவர். நம்முள்ளிருந்து பழகிய இரண்டு மாச காலத்துள் ஜனங்களுக்கிசைந்த கவர்னர் என்று பேர் வாங்கி விட்டார். எதையும் தானே நேரில் தண்டு கேட்டு ஆராய்ந்தறியும் சுபாவமுடையவர். நீண்ட படா டோப மென்பது இவரிடம் கிடையவே கிடையாது. மிக்க அமைதியும் சாந்தமும் பொறுப்புமுள்ளவர். உத்தியோகஸ்தர்கள் செய்யும் அக்கிரமங்களைக் கவனித்துக் கண்டிக்கும் தன்மை வாய்ந்தவர். இராஜதந்திர நிபுணர். ஸர்வ ஜன மித்திரர். ஏழைக்கிரங்கி, தீஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலன லக்ஷணமுடையவர். இப்படிப்பட்டவரை நாம் கவர்னராகக் கிடைக்கப் பெற்றது நமது பாக்கியம். ஆனாலும் இவ்விராஜதானியின் துர்ப்பாக்கியம் அதை விட்டதில்லை. இவர் இவ்விராஜதானிக் கிசைந்த கவர்னர் என்று ஜனங்கள் இவரைக் கொண்டாடி வரும் தருணத்தில் தானே இவரை வங்காள இராஜதானிக்குப் புதிய கவர்னராக விருக்கநியமித்து விட்டார்கள். இது இவ்விராஜதானி ஏழை ஜனங்களுக்கெல்லாம் மனக்கலக்கத்தை யுண்டு பண்ணி விட்டது. பொது ஜனக் கூட்டங்கூடி இவரை இவ்விராஜதானிக்கே கவர்னராக விருக்கக் கிருபைபாலிக்க வேண்டுமென்று மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கிலீஷ் தெரியா இவ்விராஜதானிஜனங்களுக்காக நாமும் நயந்து விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறோம். கனம் பொருந்திய லார்ட் கார்மிகேல் அவர்களுக்கே ஒரு பஹிரங்கக் கடிதமெழுதி யிருக்கிறோம். அக்கடிதமூலமாய் மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கும், இராஜப்பிரதிநிதி, இந்தியா மந்திரியவர்களுக்கும் லார்ட் கார்மிகேல் இவ்விராஜதானிக்கு கவர்னராயிருப்பதைக் கலைக்காமல், இவ்விராஜதானியார் அவரால் ஆளப்படும் பாக்கியத்தை ஐந்தாவருஷகாலம் அனுபவிக்க அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். எடுத்தெடுத்திபியான மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி யவர்களுக்கும் அடிதொழுது ஆர்டிபூர்வமாய் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறோம். அவ்விண்ணப்பத்தை சக்கரவர்த்தியவர்கள் அந்தரங்க காரியதரிசி மூலமாய் நமது சக்கரவர்த்தியவர்கள் திருச்சந்நிதானத்துக்கு அனுப்பியிருப்பதன்றி சென்னை கவர்னர், இந்தியா இராஜப்பிரதிநிதி யவர்கள், இந்தியா மந்திரி யவர்கள், இவர்களுக்கும் அதன்பிரதியொன்று அனுப்பியிருக்கிறோம். கடவுள் திருவுள்ளம் யெப்படியாமோ தெரியவில்லை. அதற்குள் லார்ட் கார்மிகேல் வங்காளத்துக்குப் போவது நிச்சய மென்கிறார்கள். அது நிச்சயமானால் அவரைப் போலொரு ஓர் உத்தம புருஷனை இவ்விராஜதானிக்கு கவர்னராக அனுப்ப வேண்டுமென்பது இவ்விராஜதானி ஜனங்கள் எல்லாரும் சேர்ந்து செய்யும் பிரார்த்தனையாக விருக்கிறது. இப்பொழுது ஸ்காட்லாந்துக்கு மந்திரியாக விருக்கும் லார்ட் பென்டலாண்ட் என்பவர் இவருடைய ஸ்தானத்தில் சென்னைக் கவர்னராக வருவாரென்று சங்கி வந்திருக்கிறது. இவரும் லார்ட் கார்மிகேல் அவர்களைப் போலவே மாஜி மிஸ்டர் கோட்ஸடன சுகியார் கையிலிருந்து இராஜாங்க வேலையின்றவர் என்று சொல்லுகிறார்கள். வருகிறவர் எப்படியிருப்பாரோ வந்தபின் தான் தெரிய வேண்டும். நல்லவராய் வந்த ஒருவரை விட்டுப் பிரிவதென்றால் மனதுக்குச் சங்கடமாகத் தானிருக்கிறது. எல்லாரும் தர்ம சங்கடத்திலிருந்து தவிக்கிறார்கள். எல்லாம் வல்ல ஈசன் எப்படி வழி விடுவாரோ தெரியவேண்டும். ஸர் சார்ல்ஸ் டிரிவேலியன் இருந்த காலத்தில் இப்படிப்பட்ட கவர்னர் இவ்விராஜதானிக்கிருந்தார். அப்புறம் பக்கிங்ஹாம் பிரபு இவ்விராஜதானிகவர்னராயிருந்த பொழுது ஏழைக்கிரங்கி யென்று நல்ல பேர் வாங்கினார். காயால்வல்லவருக்கும் காசால் வல்லவருக்கும் வாழ்வு வந்து, மற்றவருக் கெல்லாம் தாழ்வு வந்துற்ற இக்காலத்தில் ஏழைக்கிரங்கும் சுபாவமுள்ள கவர்னர் இவ்விராஜதானிக் கவசியமாமென்பது ஜனங்களுடைய கோரிக்கை. இக்கோரிக்கையை ஈசன்தான் ஈடேற்றி வைக்க வேண்டும்.

—:o:—

Progress of the Potential God from the Latent to the Patent Stage.

(An Actual Experience).

"ஜீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது"

—:o:—

(ஓர் அனுபவம்.)

ஜீவன் என்றால் என்ன? ஜடத்தை யபிமானித்து நிற்பது ஜீவன். ஜடம் என்றாலும் தேகம் என்றாலும் ஒன்றே. தேகம் ஸ்தூலசூக்ஷ்மகாரணமென மூவகைப்படும். ஜீவன் ஸ்தூல தேகத்தையபிமானித்து நிற்கும்பொழுது விசுவன் அல்லது ஜாக்ரன் என்றுபேர். சூக்ஷ்ம தேகமாகிய மனதை யபிமானித்து நிற்கும் பொழுது ஸ்வப்நன் அல்லது தைஜஸன் என்று பேர். காரண தேஹமாகிய அவித்தை அல்லது அறியாமையை அபிமானித்து நிற்கும் பொழுது சுஷுப்திபில் பிராஜ்ஞன்என்று பேர். இப்படியாயுள்ள தேஹத் திரியங்களுக்கும் பொதுவில் அபிமானியாயிருந்து ஜாக்ர, ஸ்வப்ந, சுஷுப்தி யென்கிற அவஸ்தாத்திரியங்களில் புகுந்து பிரவிருத்திக்கிறவன் ஜீவன். இவன் ஜீவவிருக்ஷத்தின் கீழ்க் கிளையிலிருந்து (கர்ம) பலன்களைப் புசிக்கிறவன். இவன் கர்மபலன்களைப் புசிப்பதை ஆனந்தமாய்ப் பார்த்துக்கொண்டு சாக்ஷி மாத்திரமாயிருப்பவன் "ஜீவசாக்ஷி" யென்று சொல்கிற கூடஸ்தன். இந்த ஜீவசாக்ஷியானது பூவில் மணம்போல் ஜீவனில் பொதிந்து கிடக்கிறது.

ஜீவன் (அபிமானி) தேகத் திரியங்களை யபிமானித்துப் பிரிந்து நிற்கும் பொழுது விசுவன் அல்லது ஜாக்ரன் என்றுபேர். சூக்ஷ்ம தேஹமாகிய மனதை யபிமானித்து நிற்கும் பொழுது ஸ்வப்நன் அல்லது தைஜஸன் என்று பேர். காரண தேஹமாகிய அவித்தை அல்லது அறியாமையை அபிமானித்து நிற்கும் பொழுது சுஷுப்திபில் பிராஜ்ஞன்என்று பேர். இப்படியாயுள்ள தேஹத் திரியங்களுக்கும் பொதுவில் அபிமானியாயிருந்து ஜாக்ர, ஸ்வப்ந, சுஷுப்தி யென்கிற அவஸ்தாத்திரியங்களில் புகுந்து பிரவிருத்திக்கிறவன் ஜீவன். இவன் ஜீவவிருக்ஷத்தின் கீழ்க் கிளையிலிருந்து (கர்ம) பலன்களைப் புசிக்கிறவன். இவன் கர்மபலன்களைப் புசிப்பதை ஆனந்தமாய்ப் பார்த்துக்கொண்டு சாக்ஷி மாத்திரமாயிருப்பவன் "ஜீவசாக்ஷி" யென்று சொல்கிற கூடஸ்தன். இந்த ஜீவசாக்ஷியானது பூவில் மணம்போல் ஜீவனில் பொதிந்து கிடக்கிறது.

பன்னத்தின் லக்ஷணமாகிய மருளுமில்லை. மருளில்லை யென்றால் பயக்கத்துக்குக் காரணமாகிய அறியாமையுமில்லை. மூன் தேஹத் திரயங்களையும் அபிமானித்த ஜீவன் நிவிருத்தி மார்க்கனாய், நிர்மலாகாரனாய், சிவசக்தியை அனுசரித்து நிற்கிறான்.

விளையாட்டு விட்ட பிள்ளை வீட்டில் வந்து அம்மையப்பனைத்தேடி அவர்கள் களைப்பினைப் பாறச் செய்யச் சுகமாய்த் தூங்கி விழிக்கிறது. விழிக்கவும் அது அம்மா என்கிற சப்தத்தோடு கண் விழிக்கிறது. அம்மா வென்கிற சப்தத்தில் அப்பாவும் அடக்கமே. இந்த அவஸ்தைக்குத் துரியாவஸ்தை யென்று பேர். தூக்கத்துக்கப்பாலுள்ள விழிப்பு இது. அம்மையிலப்பனைக் கண்டுகளித்து விளையாடி யலுத்த பிள்ளை அம்மையை விட்டு அப்பனைத்தேடி, அந்த அப்பனில் அம்மையைக் கண்டுவக்கும் பொழுது "அம்மையப்ப பிள்ளை" யென்கிற "ஸோமஸ்கந்த" மூர்த்தியாக விளங்குகிறான். இதைத்தான் "சிவமணம் பூத்தது" என்று சொன்னார் திருமூலதேவராம் எம்பெருமானார்.

யோகதற்பனான புருஷன் யாரோ அவரே யோகீசுவரர். அத்தகைபார்க்கு தேஹமே தேவாலயம். பஞ்சாக்ஷர மயபாபிருக்கு மென்பர். அனாதியாயுள்ள மலமாயை சிவ சக்தி சிவன் ஐந்தும் அக்ஷரமா யிருப்பதுபற்றி "நமச்சிவாய வாழ்க" என்றார் மேலோர். இதுநிற்க. ஒரு யோகீசுவரர் பஞ்சாக்ஷரம் ஜபித்து, அஜபாமந்திரமாய் அதை யனுசந்தானித்து மந்திரதேவதையை சாக்ஷாத்கரித்து மந்திரதிருஷ்டாவாக விளங்கினார்.

"ஐந்தெழுத்தாய்த்தேயானு மதன்பொருளாகியெனவே [கண்டேன்
ஐந்தெழுத்தோதியேபினுமதன்முடிவிலுனையேகண் [டேன்
ஐந்தெழுத்தடுத்தடுத்தோதியு மதன்முடிவுளேகாண் [கிலார்க்கு
நெஞ்சமுக்குகீக்குவிக்கும்கஞ்சன்டகண்டன்றியே!"

என்று நீலகண்டனை பரிவத்தையே திபாவித்திருக்குங் காலத்தில் தியேயாகாரமாகித் திரிபுடி ரகிதமான அவஸ்தையில் திரியம்பகனுப் விளங்கினார்.

"கஞ்சுண்டகண்டனுரையக்காம் நமச்சிவாய வென வைந்துண் டதனுண்மைகண்டறிவார் யாரே!" என்றுள்ள திருவாக்குப்படி, பஞ்சாக்ஷர வுண்மை தெரியாமல்தானே பஞ்சாக்ஷர ஜபம் செய்துகொண்டிருந்த பெண்ணறிவு (வித்யேசுவரி) தபஸ்வியாய்க் கண்மூடிக் கையில் ஜபமாலை யேந்தி மந்திரஜபம் செய்துகொண்டிருக்க, அத்தருணம் அம்மந்திரத்துக்கு அதிஷ்டான தேவதையான வாகீசுவரி ஸுமங்கலியுருக்கொண்டு நிர்விஷய மனசுக்குள்ளிருந்து தோன்றி "இங்கே கண்ணைமூடிக்கொண்டுட்கார்ந்துகொண்டிருக்கிறாயே, அங்கே வந்திருக்கிறான் போய்ப்பார்: அவன் எப்படிப்பட்ட வார்த்தை சொல்கிறான், கேள்!" என்று சொல்ல, அப்பெண்ணறிவும் * தன்னுருவாய், மனந்தேறி விழித்துத் தேவியைப் பூஜித்துத் தேவி போடொன்றுபட்ட மனத்தினளாய் யோகேசுவர்முன்வந்து தட்டோடு தன்னையும் வைத்துக்கொடுத்தாள்.

"அம்மணி இதென்ன பிரஸாதம்?'

"அதுதான் பெரியவாளுக்குக் கொடுப்பது வழக்கம்?"

"இதென்ன வழக்கம்! பார்ப்போம்!—இதோ பாக்கு வெற்றிலை, பழம், புஷ்பம்—எல்லாவற்றோடும் இது வொன்றென்ன?"

"அதுதான் ஸ்வர்ணபுஷ்பம்."

"ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பித்தையே, நிவேதனப் பொருள் எங்கே?"

"அதிலிருக்கிறது!"

"ஸ்வர்ண புஷ்பத்திலா நிவேதனப் பொருளிருக்கிறது?"

"அதுதான் ஸம்பிரதாயம்!"

"ஸம்பிரதாயப்படி தட்டு வாங்குகிறவனைத் தேடிக்கொடு அம்மணீ! இவனுக்கு சம்பிரதாயக்காசு வேண்டாம். இங்கே அந்த வழக்கமும் கிடையாது. எல்லாம் முத்ரை ரூபமாயுள்ளது. முத்ரார்த்தம் தெரியாவிட்டால் பிரயோஜனமில்லை. இதையெல்லாம் நீயே வைத்துக்கொள்!"

"அப்படியில்லை; தெரிந்துதான் கொடுத்திருக்கிறது: ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டும்."

"தெரிந்து கொடுத்ததா! பரம சந்தோஷம்! எங்கே பார்ப்போம்,—

"ஓங்காரி யென்பாளவளொரு பெண்பிள்ளை
"நீங்காதபச்சை நிறத்தையுடையவள்
"ஆங்காரி பாகியே ஐவரைப் பெற்றிட்டு
'ஹ்ரீங்காரத்துள்ளே யிளிதிருந்தாளே"

என்றுரை செய்தான் எம்பெருமான். "வெற்றிலை தான் ஓங்காரி; அதன் காரம்தான் ஆங்காரி. பாக்குத்தான் பஞ்சேந்திரியப்பொருள். பழம்தான் பூஜாபலன். புஷ்பமதான் ஜீவன். "ஜீவனுக்குள்ளே பூத்த சிவமணம் எங்கே?"

"ஸ்வர்ண புஷ்பம் தான் "ஜீவனுக்குள்ளே பூத்தசிவமணம்." "அல்ல! ஸ்வர்ண புஷ்பம் தான் 'நான்' எனத் தன்னைக் கொடுத்தவர் "எனதெனும் பொருளைக் கொடுக்குபோர் பெரியதாம் ரஹஸ்யமுத்ரை!"—சரிதானா அம்மணி? தெரிந்துதான் கொடுத்த தென்றதே! பாடம் சரியாக ஒப்பிக்கிறதா இது?"

"அன்றே யென்றன் ஆவியும் பொருளும் உடைமை பெல்லாமும் குன்றே யனையாய் என்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ!" என்றாரல்லவோ மணிவாசகப் பெருமானும்! சரிதானா?

"நிரம்பவும் சரியாக விருக்கிறது."

"சந்தோஷம்! ஆனால் தட்டில்ஒன்று குறைகிறதே! "குறைபொருளார்க் குண்மையோதிற்

* பெண்ணறிவு என்றாலும் பெண்மணி யென்றாலும் ஒன்றே. ஆணறிவு என்றாலும் ஆண்சிங்கம் என்றாலும் ஒன்றே. ஆண் சிங்கத்தின் த்வனி, 'நாதம்'; பெண்மணியின் ஒலி 'பிந்து.' cf. "அழியாதின் றுடலங்தான் நாதபிந்து சேர்ந்தால்."

குற்றம்வரும் நற்றம்போமால், இறைமேலானை புலம்பாதே யென்றியம்பினனென் னம்பாள் வாலை!" என்றிருக்கிறதே! அம்மணீ! குறைபொருளைக் கொடுத்தென்னைக் குறைக்கொள்ளியாக்காதே! "நிறைபொருளா லர்ச்சித்தோர்க்கு நியமவிதியின்றே கூறு" என்றாள் என்னுத்தாள். பெண்புத்தி பிடரியிலேதானிருக்கிறதம்மா, தெரியுமா!"

"தெரியும்!"

"தெரிந்திருந்தால் முத்ரைக்கேற்ற லக்ஷிய மெங்கே? தட்டில் காணோமே!'

"லக்ஷியத்தைத் தட்டில் வைத்தால் தாங்குமா!"

"அம்மாடி! உண்மையுரைத்தாய்! அப்படியானால் புருவமத்தியில் வைத்துக்கொடு!"

"கொடுத்தேன் என்னைக்! கொள்வீர்!

"கொண்டேன்! கொண்டேன்! களிகூறக் கொண்டேன்! எக்தை பிரான் தன் இணையடியேற்றிக் கொண்டேன்! என்னையு மாற்றிக் கொண்டேன்! 'என்னுள்ளங்கவர் கள்வனை'க் கண்டேன், விண்டேன்! கரை திரையற்றதைக் கண்டேன்! கங்கையொடு யமுனை சேரக் கண்டேன்; திரிவேணி சங்கமத்தைக் கண்டேன்!—கங்காபவானியைக் கொண்டேன்."

"ஏகைவசக்திபரமேகவலப்பிரயோஜநார்த்தாயசதுர் [விதாபூத்
போகேபவானி, புருஷோஷவிஷ்ணு, க்ரோதேசகாளிமைரேச [துர்க்கா."

—:o:—

Easy Lessons in Economics.

Lesson IX.

குடிவாழ்க்கை.

—:o:—

XI. பாடம்.

வேலைக்காரரின் ஒற்றுமை.

வேலைக்காரர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் தொழில்களைச் செய்வதினால் விளையும் பயன் அளவற்றதெனலாம். இவ்வொற்றுமை இருவகைப்படும். சில வேலைகளைப் பலர் ஏககாலத்தில் ஒன்று சேர்ந்து செய்யவேண்டியதாக விருக்கும். ஒருவன் தனியாகச் செய்து முடிக்க விபலாத பல காரியங்களைப் பலர் சேர்ந்து எளிதல் முடிக்கலாகும். ஓர் பெருங்கல்லைப் புறட்டவும், வண்டியை இழுக்கவும், சுமை தூக்கவும் மரங்களை வெட்டித்தள்ளி அறுக்கவும், மழையின்றி யிருக்கையிலேயே விளைந்த பயிரை யறுத்துத் தானியத்தைச் சேர்க்கவும், கப்பலில் கயிறிழுக்கவும், படகுகள் தள்ளவும், வீடுகட்டச் சாரம் போடவும் இவைபோன்ற பல வேலைகளைச் செய்யவும் பலர் ஒன்று சேராவிடின் வேலை யற்பமும் நடவாது. சீர்திருத்தமற்ற சில ஜாதியார் ஒருவருக்கொருவர் இவ்விதவுதவியைச் செய்யார். தொழில் செய்பவர்களில் இவ்வளவு ஒற்றுமைகூட இல்லையாயின் மிருகங்களைவிட அவர்கள் மேன்பட்டவரென்று கூற இடமிராது. பலர் ஒரே தொழிலில் ஏககாலத்தில் ஒன்று சேர்ந்து செய்வதைவிட, வேலையைப் பல பாகங்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு பாகத்தைச் சிலர் தங்களுக்குரிய தொழிலாக ஏற்று, அப்பல பாகங்களையும் ஒற்றுமையுடன் செய்து முடிப்பது முக்கியமானதாகும். பலர் கூடி ஓர் படகைத் தள்ளும்பொழுது வேலை செய்வோருக்குத் தாங்கள் ஒற்றுமையுடன் வேலை செய்கிறோமென்பது எளிதில் புலப்படும். ஒவ்வொரு வகுப்பினர் ஓரோர் தொழிலின் ஒவ்வொரு பாகத்தைச் செய்யும் பொழுது, பல வகுப்பினர் சேர்ந்தே அத்தொழில் முற்றுப்பெறுமாயினும், அப்பல வகுப்பினருக்கும் தங்களொற்றுமைப்பாட்டின் பயனெளிதில் புலப்பட மாட்டாது.

பயிரிடக் கலப்பை, கயிறு, கால்நடை முதலியனவும், அரிவாள், மண்வெட்டி, கடப்பாரை முதலிய இருப்பாயுதங்களும், தச்சன், கொல்லன், குயவன் முதலியவர்களுடைய உதவியும் பயிரிடுவோனுக்கு அவசியம். இப்படிப் பயிரிடும் வேலையின் ஒவ்வோர் பாகத்தை பலர்

பகிர்ந்துக்கொண்டு செய்வதினால் நிலம் சாகுபடியாகின்றது. கலப்பையை செய்வோன் வேலையை நிறுத்தினாலும், மண்வெட்டி முதலிய இருப்புக் கருவிகளை செய்வோன் முரண்டிக் கொண்டாலும், கால்நடை கிடைக்காவிடினும் பயிரிடுதல் முடியாதென்றே கூறலாம். நடவு நடவும், காவல் காக்கவும், தண்ணீர் பாய்ச்சவும், அறுப்பறுக்கவும், தானியத்தைக் கிரயத்திற்கு வாங்கவும், இவைபோன்ற மற்ற தொழில்களை செய்யவும் ஏற்பட்டிருக்கிறவர்கள் தங்கள் தங்கள் தொழிலை செய்யாவிடின் பயிரிடுவோன் பாடு கஷ்டமாய் முடியும். இப்படி ஒரு தொழிலை முடிக்க ஒன்று சேரவேண்டிய தொழிலாளிகளுடைய வகுப்புகளைக் கணக்கிடுவது அசாத்தியமாகும்.

நமக்கு முக்கியமாய் வேண்டிய உடைகளுக்கு அவசியமான பஞ்சைப் பயிரிடுவோனுக்கு அவனுடைய கருவிகள் முதலியவற்றை செய்வோருட்பட பல வேலைக்காரர்களுடைய உதவி அவசியம். தவிர பஞ்சை நூற்போர் ஒரு வகுப்பினர்; சாயம் போடுவோர் மற்றொரு வகுப்பினர்; நெய்வோரொரு வகுப்பினர். அதற்கு வேண்டிய பட்டு சரிகை முதலியவைகளுக்கு வேலை செய்வோர் பல வகுப்பினர். இவ்வேலைகளில் சம்பந்தப்பட்ட வியாபாரி, தரகன், கலை யெடுப்போர் முதலியோர் பலர். இவர்களுக்கு வேண்டிய உணவு, வீடு முதலிய சாமான்களை யமைப்போர் பலர். இவ்விதமாக அநேக தொழிலாளிகளின் உதவியினால் வஸ்திரமொன்று நமக்குக் கிடைக்கிறது. பஞ்சைப் பயிரிடாமல் நிறத்தினாலும், அதற்கு வேண்டிய கருவிகள் கிடைக்காவிட்டாலும், மேற்குறித்த பல தொழில் வகுப்பினரில் ஒருவகுப்பார் வேலைசெய்யாது நின்றாலும் உடைசெய்யப்பட்டு நமது கைக்கு வரமாட்டாது.

இவ்விதமாக பல தொழிலாளிகள், தொழிலின் ஒவ்வொரு பாகத்தைத் தங்களுக்குரியதாக்கிக் கொள்வதினின்று விளையும் பயன் பல வகைப் பட்டது. பல குடும்பத்தார் தங்களுடைய பூமியைப் பயிரிட்டு, பயிரிடுவதற்கு வேண்டிய கருவி முதலியவற்றை தங்களுக்குத் தாங்களே செய்துகொண்டு வசிப்பாராயின் வேறுதொழிலாளிகள் அவ்விடத்திலாவது சமீபத்திலாவது இல்லாதிருக்க நேர்ந்து, பயிரிடும் குடும்பங்களுக்கு மிகும் தானியத்தைக் கொள்வோரிருக்கக் காரணமில்லாமல்போக, தங்கள் உழைப்புக்கு பலன் கிடையாமல் வருந்த வேண்டியதுடன், தங்களுக்கு வேண்டிய ஒவ்வொரு பண்டத்தையும் தாங்களே செய்துக் கொள்ள வேண்டிவரும். நிலம் வளப்பமுள்ளதாக விருந்து, ஜனப்பெருக்க மில்லாதிருக்குமானால், பயிரிடுவோர் குடும்பங்களின் ஸ்திரீகள் ஆடைகளை செய்யும் தொழிலை யேற்று, வாசஸ்தலங்களை இயன்றமட்டும் குடிலசைகளைப்போல் கட்டிக் கொண்டு காலங்கழிக்கலாம். கால பேதத்தினால் பூமி விளையாவிடில் உணவின்றி யவர்கள் மரிக்கநேரிடும். ஆடைகளையும் வாசஸ்தலத்தையும் இன்பந்தரத்தக்கவைகளாக அவர்களால் செய்துகொள்ள முடியாது. உயிரைத் தேகத்தினின்று பிரியாமற் காப்பதே அவர்களுக்குப் பெருத்த காரியமாகும். அவர்களால் செய்யப்படும் கருவிகளும் அவர்கள் கைத்திறமையை யொத்ததாயிருக்கும். அவர்கள் பயிரிடும் பயிரும் சரியாக விளைவது அரிது. இப்படியிருக்க அவர்கள் சுகப்பிரதமான பொருள்களைச் செய்து கொள்வது கனவிலு மில்லை. பயிரிடுதல் போன்ற இன்றியமையாத தொழில் ஒன்றைத்தவிர மற்ற தொழிலில் அவர்களுக்கு வல்லமை யுண்டாக வழியில்லை. தவிர பயிரிடுந் தொழிலையும் அவர்கள் ஒழுங்காக நடத்த சக்தியற்றவர்களாகவே இருப்பார்க ளென்பதில் தடையில்லை. பூமியில் சிரமப்பட்டு வேண்டிய அளவுக்குமேல் பலன் கிடைத்தாலும், அதைக் கொண்டு பெறக்கூடிய பொருளில்லை. தவிர அப்படி கஷ்டப்படவும் அவர்களுக்கு மனம் வாராது.

மேற்குறித்த குடும்பங்களி லொருவன் கருவிகள் செய்வதில் மற்றவர்களை விடத் திறமையையுடையவனால், அவன் தானே பயிரிடாமல் யாவருக்கும் வேண்டிய கருவிகளைச் செய்து கொடுக்கலாம் அவைகளுக்குக் கிடைக்கும் தானியம், தானே பயிரிட்டுவரக் கூடியதைவிட அதிகமாயிருப்பதைக் காணலாம். அவன் செய்யும் கருவிகளைக் கொண்டுபயிரிடுவதினால் வழக்கத்திற்கு மேலாகப் பயிர் விளைவதைப் பிறர் கண்டு, தாங்கள் கருவிகள் செய்வதை நிறுத்தி, தங்கள் சாப்பாட்டிற்கும் கருவிகளை வாங்குவதற்கும் போதுமான அளவு பயிரிடலாம்.

கைத்தொழிலின் பயனை நோக்கும்பொழுது பயிரிடுவோருக்கருகில் கைத்தொழிலாளி களிருந்தாலொழிய, பயிரிடுவோர் தானியத்தை ஏராளமாக உற்பத்தியாகும்படி பிரயாசப்படுவதற்கு தூண்டுகோலில்லை. தங்கள் உணவுக்கு வேண்டியதற போக மீதியை விற்று, தங்கள் நிலங்களில் விளையாத உணவுக்கு யோக்கியமான பதார்த்தங்களைப் பிறவிடங்களினின்று கொள்ளவும், ஆடையாபரணங்களையும் தட்டுமுட்டு சாமான்களையும், வீட்டுக்கலங்காரமான பொருள்களையும் வாங்கவும் வகையில்லமாற்போனால் தானியம் மீரும்படி பயிரிடமாட்டார்கள். தம்முடைய தேசத்தில் விளையும் தானியங்களை நாம் பிறதேசங்களுக்கு அனுப்பி அதன் கிரயத்தைக் கொண்டு அத்தேசங்களின் கைத்தொழிலாளிகள் செய்யும் சாமான்களை வாங்குகின்றோம். கைத்தொழில் வேண்டிய அளவு நம்முடைய தேசத்திலேயே அங்கங்கு நடக்குமாயின் பயிரிடுவோர்களுக்கு வெகு நன்மை விளைவது மல்லாமல் நம்முடைய ஜனங்களுக்கு ஜீவனமும் கஷ்டமின்றி நடக்கும்.

நம்முடைய தேசத்தில் பயிரிடுவோர் கையாளும் கருவிகள் பிரயோஜன மற்றவை. கலப்பை இரண்டங்குலத்திற்கு மேல் ஆழமாயுழவாட்டாது. பூமிபிறகிருந்தால் பெயர்க்கச் சக்தியற்றது. அதனால் விளைவுகுன்றி நஷ்டமுண்டாகின்றது; பல ஜில்லாக்களில் உழவு சரிவர நடத்த மாடுங் கலப்பையு மில்லாததினால் கோடையில் மழையின்மையைக் கிராமந்தோறும் வேண்டிக் கொண்டு நிற்பார்கள். அவ்வேண்டுதல் நிறைவேறி நதியில் சரிவரப் பிரவாகம் வருமாயின், உழவின்றியும் எருவின்றியும் நிலமோராளமாக விளையும். கோடையில் மழை பெய்து விடுமானால், கலப்பை வழக்கத்திற்கு மேலுழ மாட்டாதாகையால், நிலத்தினுன்றினபயிர் ஊன்றினபடியே நிற்கும். தகுந்தகருவிகள் சமீபத்தில் கிடைக்குமாயின் தொழிலாளிகளும் அவைகளை வாங்கி நல்ல பயனையடைவார்கள்.

மனிதனுடைய முயற்சியை வேண்டாதபூமி ஒவ்வொரு முறை தானியத்தை ஏராளமாய்க் கொடுப்பதால், விளைவு அதிர்ஷ்டத்தைப் பொருத்ததென்று எண்ணி, வேலையைக்கிரமமாக நடத்தாமல் பயிரிடுவோர் நஷ்டமடைகின்றனர்.

T. C. வேங்கடரமணய்யர்.

Come Ye and See

"The Deceiver who steals away my heart."

"எனதுள்ளங்கவர் கள்வனைக்"
காணவாரீர்!

"நீர்பார்தலிலர் புன்சடைமேலோர்
பிறைவெண்மதிசூடி
யேர்பார்தவின வெள்ளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பார்தவுல கின்முதலாகிய
வோருரு வாகிப்
பேர்பார்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே."—திருஞானசம்ப

"அப்பநீ, ஐயநீ, அம்மைநீ, அன்புடைய மாமனும் மாமியுநீ, ஒப்புடைய தாயரும், உண்பொருளுநீ, ஓர்குலமும், சுற்றமும், ஒருநம்நீ, துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ, இப்பொன்நீ, இம்மணிநீ, இம்முத்துநீ, இறைவநீ, ஏறார்ந்த செல்வநீயே!" என்று அப்பர் ஸ்வாமிகள் பாடியபடி "எல்லாம் அவனே" யென்றுள்ளத் துணர்ந்து, உணர்ந்தபடி யறிந்து, அறிந்தபடி யொழுகி, ஒழுக்கில் இழுக்கின்றி உண்மைநிலை தவறாது நின்றதனியேனை "என்னப்பன், என்னய்யன், என்மனத் துய்யன், மாசிலா மெய்யன்' பரிசோதனை செய்வான் மெள்ளவந்து உள்ளம்புகுந்து கள்ளஞ்செய்து காணாமல் மறைந்தான். "எனதுள்ளங்கவர் கள்வனைக்" கண்டுபிடிக்க நான் எங்கும் தேடித்தேடி யலைந்தேன்: தள்ளாடிக்கீழ்விழுந்தேன்.

காலயர்ந்து கைசோர்ந்து நெஞ்சயர்ந்து மூச்சடங்கி விச்செல்லாம் ஒடுங்கியபின், பேச்சுமூச்சில்லாப் பிரமபுரத்திலவனைக் கண்டுகளித்தேன். ஸ்ரீபுரச் செல்வன், பிரமபுரத்தலைவன், திரிபுரதகனம் செய்தவோர் தீரன், எரிபுரம்விட்டு ஊர்ப்புரம் வந்தான்!

நாற்புரமதிலும் நல்லிசையோசையும், கீழ்ப்புரமதிலே ஐசுவரஸ்தானமும், தென்புரமதிலே நிச்சல விசாலமும், மேற்புரமதிலே வைராக்கியக்கோட்டமும், வடபுரமதிலே ஞான ஸ்தானமும், நாற்புர மத்திபி லுள்ளவோர் நடுவில் ஜ்யோதிர் லிங்கமாய் ஜ்வலித்திடக் கண்டேன், கண்டேன் கலிதீர்ந்தேன்! எனதுள்ளங்கவர் கள்வனைக்கண்டேன், கண்டேன், கலிதீரக் கண்டேன்! கண்டவன் கால்பிடித்தினையடி தொழுது நின்றேன், நின்றேன், நிலையமிந்துநின்றேன்! வென்றேன், வென்றேன், வெளிதருமயலை வென்றேன்!

"தந்ததுன்தன்னைக் கொண்டதென்தன்னைச் சங்கரா! ஆர்கொலோசதுரர்?" என்றேன், என்றேன், என்னகந்தைதீர் அண்ணலையுவந்தே.

"அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்!" என்றுரை செய்தேன், செய்தேன், ஜயமுறச்செய்தேன்! பஹிரஹ முகமெனும் பாவனையெலாம் விட்டுள் நின்றேன், நின்றேன், நிலைபெற நின்றேன்!

"சிந்தையேகோயில்கொண்ட எம்பிரான் திருப்பெருந் துறையுறை சிவனே" "யென்னுள்ளங்கவர் கள்வன்" என வுணர்ந்தே னுணர்ந்தேன்! உள்ளக்குறைதீரவேநா னுணர்ந்தேன், உணர்ந்தேன்!! இது மெய்யென வுணர்ந்தேன், புணர்ந்தேன்; பொன்னம்பல நாதனைக்கூடியே புணர்ந்தேன், புணர்ந்தேன்; புன்புலால்யாக்கைப்பொடிபடப் புலன்பொறி யழிந்து புணர்ந்தேன், புணர்ந்தேன்! பொன்னம்பல நாதனைப் புணர்ந்தேன் மணந்தே!

"எந்தையே ஈசா! உடலிடங்கொண்டாய்! யானிதற்கிலனோர் கைம்மாறே" என்றுரை செய்தேன் னேழைமை விளித்தேன், விளித்தேன்! எனதுள்ளங்கவர் கள்வனைக் கண்டுபிடித்தேன், பிடித்தேன்! பிடித்தபிடிவிடாமற்றானே பிடித்தேன், பிடித்தேன்! எனதுள்ளங்கவர் கள்வனைக்காணவாரீர், வகைமோசம்போகாது வாரீர்! ஜகத்தீரே வாரீர்!

"புகவே வேண்டா புலன்களில்நீர்!
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவேநினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்!
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே!"

* * *

"அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்;
கடிசேர் அடியே வந்தடைந்து,
கடைக்கொண் டுருமின் திருக்குறிப்பைச்

செடிசேர் உடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன்
பூஆர் கழற்கே புகவிடுமே!"

* * *

"புகழ்மின், தொழுமின், பூப்புனைமின்,
புயங்கன் தானே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்,
இனிஓர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள் வணங்கி,நாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே."

* * *

"நிற்பார்நிற்க, நில்லா உலகில்
நில்லோம் இனிநாஞ் செல்வோமே,
பொற்பில் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே!
நிற்பீர் எல்லாந் தாழாதே,
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே!"

ஓம்தத்ஸத்.

ஆண்டானடிமை.

"The Sorrows of Satan."

(With Apologies to Miss Marie Corelli.)

"மொட்டைத்தாதன் குட்டையில்விழத்
தட்டுவாணி தாலி யறுத்தாள்."

"மொட்டைத்தலை" ஸந்யாசிக் கறிகுறி யென்றும், "குடுமித்தலை" குடும்பி அல்லது ஸம்ஸாரிக்கு அறிகுறி யென்றும், "முழுதும் மயிர் வளர்ந்ததலை" யோகிக்கு அடையாளம் என்றும் சுருதி முறையிடுகிறது. "தாதன்" என்றால் தத்பத லக்ஷியத்தில் சிந்தனை செலுத்தியவன். "மொட்டைத் தாதன்" என்றால் "உண்மையான ஸந்யாசி" யென்பது அதனுடைய நிஜமான அர்த்தம். ஆனால் மொட்டைத் தலையனெல்லாம் ஸந்நியாசியல்லன்: "தாதன்" என்று பிச்சைக்கு வருகிறவனெல்லாம் தெய்வத்தைச் சிந்திப்பவனுமல்ல. ஏதோ ஆயிரங்கோடியிலொருவன் உண்மையான ஸந்யாஸயோகத்தை ஆச்ரயித்து பிக்ஷை யெடுத்துண்டு ப்ரஹ்மோபாஸனையினால் பிரஹ்மத்தை யறிகிறான். அப்படி அறிகிற ஒருவனுக்குப் பதினாயிரம் லக்ஷம் பேர் அவனைப்போல் வேஷம் போட்டுத் திரிந்து வயிறு வளர்க்கிறவர்களாயிருக்கிறார்கள். இது உலக வழக்கம். சித்த முத்த புருஷராகிய திருமூலதேவரும் முதலில் "உடம்பினை யிழுக்கென்றிருந்தேன்" என்ற சொல்லிவிட்டுப் பின்னால் உண்மை யுணர்ந்த பின், உடம்பினை ஓம்புதல் அவசிய மென்று கண்டு, "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" யென்று சொல்லி யிருக்கிறார். ஆகையால் உடம்பை வளர்த்ததால் உயிர் வளர்த்ததாகும்படி தேஹஸம்ரக்ஷணை செய்பவரே உண்மையாக உடம்பினைப் பெற்றபயனை யடைந்தவராவர்.

"உடம்பினைப்பெற்றபயனுவதெல்லாம்
உடம்பினிலுத்தமனைக்காண்."—ஔவைகுறள்.

மற்றவர்களெல்லாம் மருளில் மயங்கி இருளில் அலையப் பிறந்தவர்களே.

"குட்டை" யென்பது தீர்த்த குண்டத்துக்குப் பேர்: அழுக்கு ஜலம் தங்கி நிற்கும் பள்ளத்துக்கும் பேர். "மொட்டைத் தாதன்" உண்மையான ஸந்யாசியாயிருந்தால் அவன் ஒருக்காலும் அழுக்குக் குட்டையில் விழமாட்டான். அப்படிக் கில்லாது, வயிற்று வளர்ப்புக்காக வேஷம் பூண்ட மூடாத்மாவானால் "குருடரும் குருடரும் குருட்டாட்டமாடிக் குழிவிழுந்தற்றே' யென்ற திருமந்திரப்படி,

அசத்துக்களுக் குரியதான நரகக் குழியே அவர்களுக்கு கதியாதலால், அவர்கள் அழுக்கு நீர்க்குட்டையில் தான் விழுந்தார்களென்பது நிச்சயம்.

"மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான்" என்றால் உண்மையான லக்ஷியசித்தி பதம் பெற்று (அறிவு மயமாகி), "போகே பவானி' யென்ற வாக்கியப்படி "பவானியோக லக்ஷணமனுப்" பரமேசுவர சாயுஜ்யமாகிற கைவல்ய முத்திபெற்றான் என்பது உண்மையான பொருள்.

"வேஷக்காரனாகிய மோசக்காரன் நரகப் பிராப்தி யடைந்தான்" என்பதும் அதிகார பேதத்தால் அதற்கு வாச்சியார்த்தமாகப் பொருந்தும்.

எதுவாயினும் வார்த்தையில் தோஷம் ஒன்றுமில்லை. பதார்த்தம் ஒன்றே. லக்ஷியார்த்தமும் ஒன்றே. வாச்சியார்த்தம் மட்டும் அதிகார பேதத்தால் பேதப்பட்டு விளங்கும்.

காரணகாரியதோரணை யறியாதார் எல்லாமறிந்தவர்போல் ஒருதலை நியாயம் பேசி, ஓர் வஞ்சகமாய் ஒருதலைத் தீர்ப்புச் சொன்னால் அதற்கு லக்ஷணங்கள் என்ன சொல்வார்கள்? என்று பிறந்த கேள்விக்கு பதிலுரைப்பான் இப்பழமொழி குருமொழியாகப் பிறந்து வழக்கத்துக்கு வந்தது.

"மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுகிற சாமர்த்தியம்" மாயாசக்தி யொன்றுக்கே யுண்டு. மொட்டைத் தலையில் மயிர் இல்லை, முழங்காலிலும் மயிர் இல்லை. இரண்டுக்கும் முடிபோடுவது உண்மையில் முடியாதகாரியம். இப்படி அசாத்தியமான காரியத்தைச் சாதிப்பேன் என்று விருதுகட்டிக் கொண்டு கிளம்பினால் அவனை மாயாவி (ஜாலவித்தைக்காரன்) என்று நாம் கொள்ளவேண்டுமேயன்றி வேறு எவ்விதத்திலும் அவனைக் கருத இடமில்லை. மலடிமகன், முயற்கொம்பு, ஆகாசத்தாமரை, கானல் ஜலம், இவைகளைப் போல சுபாவத்தில் இல்லாத பதார்த்தத்தைக் கற்பிக்கும் சாதனை "intellect" என்று சொல்லும் பேதபுத்தியாம் மனோசக்திக்கேயுண்டு. இது மூக்கியமாக மூளையை ஆதாரமாகக் கொண்டு வேலைசெய்யும். இதற்கு நியாய அநியாயமில்லை. "கண்டதேகாட்சி, கொண்டதே கோலம்" என்பது இதற்கே பொருந்தும். இது எப்போதும் உண்மைக்குக் கட்டுப்பட்டு நடக்காது. ஆகையால் இந்த பேதபுத்தியை வியபசாரிக்கு ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம்.

எமர்ஸன் என்னும் மஹாத்மா இதை வியபசாரியென்றே சொல்லி யிருக்கிறார். "Intellect is a whore" என்பது அவருடைய திருவாக்கு. வியபசாரி யென்றாலும் "தட்டுவாணி" யென்றாலும் ஒன்றே. இந்த வியபசாரத்துவம் "வைகரிவாக்குக்கு" விசேஷமாயுண்டு. ஏனெனில் மனம் ஒன்றினைக்க, வாய் ஒன்று பேசும். வாக்கு வியபசரித்தால் உண்மையைத் தீர்த்துணரமுடியாது. ஆதலால்தான் "ஸத்யம்வத" என்று வேதம் முறையிடலாயிற்று. வாக்குக்கு அதிஷ்டானமாயுள்ளது மனம். மனமோ சங்கல்ப விகல்பரூபமானது. சங்கல்ப விகல்பமான மனது எப்போதும் சஞ்சலத்திலாழ்ந்து பேயாட்டம் ஆடும். பேய்க்கு வாழ்க்கைப்பட்ட வாக்கு (வாணி) எப்போதும் தட்டுப்படும். சித்த வாக்குப்போல் பலிக்காது. "மெய்யேவெல்லும் பொய்யல்ல" என்பது பொய்யாமொழி. "ஸத்யமேவஜயதே நாநிருதம்" என்பது வேதவாக்கு. எப்படி உண்மையான லக்ஷியசித்தியைப்பார்த்து அவனுடைய இதயசுத்தியும் மனோபக்குவமு மில்லாத ஆஷாடபூதி தானும் தலையை மொட்டையடித்துக்கொண்டு "தாதன்" என்று வயிற்றுவளர்ப்பின் பொருட்டு வெளிக்கிளம்புவதினால் லக்ஷிய யோகத்தின் பலனை கைவல்யாயுஜ்யம் பெறாமல் நரகக் குழியாகிய குட்டையில் விழுகிறானோ அப்படிப்போல, சங்கல்ப

மொன்று வார்த்தை யொன்றாகவிருக்கிற அமங்கலையான வாக்கும் "தட்டுவாணி" யாக வியபசரித்து வழங்கும். இந்த வார்த்தையினால் வாய்க்கு நோவன்றி வேறு பாரமார்த்திகமான பிரயோசன மொன்றுமில்லை. இப்படிப்பட்ட வியபசாரவாக்குக் கண்டதெல்லாம் பேசுமானதால், இது செய்யும் வியபசாரத்தால் வாக்குக்கு அதிஷ்டானமான மனதும் இருளடைந்து மருள்திரண்டு மாயாரூபமாக துவந்தத்திலாழ்ந்து வருந்தும்.

"பேயைப் பெண்டாண்டு பேய்க்கோலந் தானாகி
மாயை மயக்கால் மனமெல்லாம் புண்ணாகித் [க்கி
தாயைத் தொழுதழுது துவந்துவமெல்லா மறப்போ
காயைப் பழமாக்கும் கருணையொ டொன்றானே
[னே."

என்பது அனுபவவாக்கு.

தாலி யென்பது மாங்கல்ய முத்திரை; புருஷனுடைய தீர்க்காயுஸுக் கறிகுறியான சின்னம். புருஷஸம்பந்த மில்லாப் பிரகிருதி (பெண்) விதந்துவே. அறிவில்லா (உண்மை யறிவில்லா)ப் புத்தியின் வாழ்வு வாழ்வில்லையென்று சொல்வான் "அறுதலி வாழ்வுக் கொப்பு" என்று சொல்வர் மேலோர். தாலியறுத்தவள் "அறுதலி." அதாவது, மாங்கல்ய முத்திரை யிழந்தவளுக்கு மங்கல வாழ்வில்லை யென்றபடி.

"மொட்டைத் தாதன் குட்டையில் விழத் தட்டுவாணி தாலியறுத்தாள்" என்றதற்கு உலகார்த்தம் என்னவெனில், "மோசம் செய்யும் வேஷக்காரன் நாசமாய்ப்போக வியபசாரி வாழ்விழந்தாள்" என்பதாம். ஏனெனில் எந்தக்காரியமும் சக்தியின்றிச் சாயாது. சக்திமானழிந்தால் சக்திக்கு வாழ்வு (பலம்) இல்லை.

லக்ஷியார்த்தம் செய்தாலும் உண்மையே வெளிப்படும். "வேஷக்காரன் நாசமாப்போவது" சகஜம்! ஏனெனில், "குருடரும் குருடரும் குருட்டாட்டமாடிக் குழிவிழுந்தற்றே" யென்ற உவமானத்தால். இது உலகத்தில் யாவரும் அறிந்த சகஜானுபவமாம்.

"வேஷக்காரன்" இல்லாவிட்டால் "வியபசாரிக்கு"த் தொழில் நடத்தமுடியாது. ஏனெனில் (நாகஸ்தன், யோக்கியன்) வியபசாரியை ஆச்ரியிக்க மாட்டான். இவர்கள் இருவருக்கும் ஒருவித உறவு மேற்படாது. வியபசாரி வாழ்வெல்லாம் அயோக்கியர் உள்ளமட்டும் தான். அயோக்கியர் ஹதமாகப் போனால் வியபசாரிக்கு வாழ்வு போயிற்று: இது ஸ்பஷ்டம். ஆனால் வெளிவேஷத்தைக்கொண்டு பார்க்கில், "மொட்டைத்தாதன்" எல்லாம் விட்டவன், நாதியற்றவன். இவனுக்கும் தட்டுவாணிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை! ஆகையால், மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தால், தட்டுவாணி தாலி யறுப்பானேன்? என்று சாமானியர் கேட்டு ஆச்சரியப் படுவர். "பாம்புக்குத் தெரியும் பாம்பின் கால்" என்றிருப்பதால், "களவையுங் கற்றுமற" என்று ஔவையார் பெரியோர். களவு கற்றவன் தான் களவாணியின் 'குட்டை'க் கண்டு பிடிப்பன். அதையே நினைத்துக் கொண்டிருந்தால் "யத்பாவம் தத்பவதி" யென்கிறபடி களவு செய்யும்படி வரும்! ஆகையால் உளவறிந்து களவாணியின் உண்மை யறிந்துகொண்டு, பின்னர் உண்மையைப்பற்றி நின்று மற்றதை மறந்துவிடல் வேண்டும்.

நான் ஒருவாரத்துக்குமுன் ஒரு பொதுஸ்தலத்தி லிருக்கையில் பழைய நண்பர் ஒருவர் என்னைக் கைப்பிடித் தழைத்துப்போய் நல்லதோர் உபதேசம் செய்தார். சென்னைக் கவர்னருடைய மந்திராலோசனை சபையில் ஒரு மெம்பராக விருந்து காலஞ்சென்ற கனம். வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் மதுமேகத்தால் பாதிக்கப்பட்டவரா யிருந்து அதனால் வந்த ராஜப்பிளவைக்குச் சத்திரம்வைக்க அது புரையோடி "உயிரைவௌவவந்த கள்வன் கன்னம் வைத்ததுபோலும் காட்டி" ப்பிராணனை மாய்த்ததானபடியால், இப்படிப்பட்ட மஹத்தான "மதுமேகம்" மனிதரை நளினமாய்ப்பற்றுவதற்கான காரணத்தையும் அதற்குச் செய்யக்

கூடிய சிகிச்சைகளையும், சாஸ்திரார்த்தமாகப் பரிசிலனை செய்த்தியவேண்டி ஒரு வைத்திய ஆராய்ச்சி சாலை (Research Laboratory) ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்காக அவருடைய ஞாபகச்சின்ன கமிட்டியார் அனுகூலத் தைத்தேடி, இறந்தவரால் மைலாப்பூரில் ஏற்படுத்தப்பட்ட வேங்கட்ரமண வைத்தியசாலை சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி சாலை யேற்படுத்த முயற்சிக்கவேண்டுமென்றும் கலந்து பேசி நலம்பட வுரைத்தார். அதைப்பற்றி ஆர அமர்ந்து யோசித்து அந்த யோசனை நல்லதென்று உவந்து அவ்வைத்தியசாலை சம்பந்தமான பிரமுகர்கள் சிலரைக்கண்டு கலந்து பேசி அதற்காக வேண்டிய முயற்சிசெய்து திரும்புகையில், திடீரென்று மூலாக்னி மூண்டெழுந்து "எரிபலையின் உள்வாயுள் அக்னிகுண்டம் கொதிப்பதுபோல்" கொதித்துக் குமரிக்கொண்டெரிந்தது! "ஐயோ! உள்ளங் கொதிக்கிறதே! யாரிட்ட சாபமோ! எவர் செய்த மோசமோ! வேறென்ன சதி பாதகமோ! தெரியவில்லையே"! என்று தவித்துக்கொண்டிருக்கையில், "மோட்டைத்தாதன் குட்டையில் விழத் தட்டுவோணி தாலியறுத்தாள்" என்று இழவோலை கொண்டுவந்தது போல ஒரு யமதூதன் ஓலை கொண்டுவந்து நின்றான்! கண்டது கனவோ நனவோ அறிகிலேன். கனவு நனவழிந்த விடத்தில் ஏறியிருந்து (துரியஜாக்ரத்தில்) அதனுண்மையை ஆய்ந்தோய்ந்து பார்த்தமட்டில், அக்கிரமக்காரன் அழிவழக்குரைத்திடப் பொய்க்கிரம நீதியில் பலித்திடவோதிய வியபசாரவாக்கும் உபசார உண்மையும் பொய்யெனக் கண்டேன். "மெய்யேவெல்லும் பொய்யல்ல"வென்ற அசரீரிவாக்கு அம்பரத்தில் முழங்கியது. "ஸத்யமேவஜயதே நாந்ருதம்" என்ற வேதவாக்குப் பொய்க்காது! ஸத்யமே ஜயித்ததென்ற உள்ளம் பூரிக்க உண்மையில் "நானெனதென்பது மறியேன்" என்றபடி, என்னைமறந்து தன்னந்தனியே தனியனாயிருந்து "தர்மபிக்ஷை" யெடுத்துப் பிழைத்தேன். உண்மையில் உவப்பிலிராதனும் "தேஹி" யென்றேற்கு "நாஸ்தி" யென்னாமல் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று கையிலறைந்து அபயங்கொடுத்து வரதராஜனாய் நின்றெனை வந்தித்தருளினன். ஆகவே "மோட்டைத்தாதன் குட்டையில்விழத் தட்டுவோணி தாலியறுத்தாள்" என்றெழுந்த யமதூத வசனத்தைக் கேட்டுச் சரிசரி யென்று சம்மதித்தேன். நரகராஜன் நைந்துருகவே! †

உண்மைச்சந்யாஸ யோகத்தி லமர்ந்தவன் கைவல்யமுத்திபெற்றால் "ஞானமென்பது மோனவரம்பு" என்றபடி வாக்கு மோனத்திலொடுங்கிவிடும்: வைகரிவாக்குக்கு வாழ்வில்லையாகும். வாக்கொடுங்கில் நரகராஜன் நலமிழந்தான்!

இந்தக் காலத்து வக்கீல்கள் நியாயம் பேசுகிற தோரணையாய் எட்டுச் சுரைக்காயைக் கொண்டு கறிசமைக்க யத்தனிக்கும் அறிவிலிகள் "நானும் ஸந்யாஸ யோகம் செய்கிறேன்" என்று அஹத்திலொன்றும் 'புறத்திலொன்றுமாக நடக்கும் பாஷண்டர்களான போலி னிதர்கள் "மொட்டைத் தாதன்" வேஷம் போட்டு, "ஆண்டவன் மலையேலாண்டி, மான் கீழேயாண்டி' யென்று சொன்னவன் கதையக் "குருடரும் குருடரும் சேர்ந்து குருட்டாட்டமாடிக் குழிவிழுந்தற்றே" யென்றபடி அழுக்காறு நிறைந்த குட்டையில் விழுந்தால், அதுவும் நல்லதே! ஏனெனில் அயோக்கியர்கள் அக்கிரம மிகுந்து எரிநரகுக் காளாவராயின் உலகத்தில் அக்கிரமங்கள் அடங்கும். அதர்மம் வாழ்வற்றுப் போகத் தர்மம் தலையெடுக்கும். ஆகையால், இருவிதத்திலும் "மொட்டைத் தாதன் குட்டையில் விழத் தட்டுவோணி தாலியறுத்தாள்" என்ற பழமொழி உண்மையே! உண்மையானதுபற்றி அப்பழமொழியே மறைமொழி யாகவும், குருமொழியாகவும் கொண்டு ஸர்வகாரண பூத சக்தியும் வாக்கின் ஸ்வரூப தேவதையுமான ஸ்ரீகுருவுக்கு 'ஓம் நமோ நமஃ" என்று உள்ளம் பூரிக்கப் பன்முறை பணிந்து நமஸ்கரிக்கிறேன்.

ஓம் தத்ஸத்.

† To the great and melting sorrow of Satan.

The Panguni Uttara Festival Day Special—20th Panguni, 1912.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, *but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE.".



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE.

புத்தகம். 19.] 1912ஆ மார்ச்சுமீ, விரோதிகிருதுஆ பங்குனிமீ [சஞ்சிகை. 12.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copyright in the articles should be vested solely in the Editor It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are beiug sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C. M Narayanaswami Iyer, B.A. B.L.

Lalita Publishing Co., Sole Agents and Managers

Hon. Secy, Vivekachintamani Pub. Committee.

44

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசிந்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே லர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவைசம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகலக்ஷணங்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற் க்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலு மிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓ.

THE ARMOUR OF LIGHT.

———(:o:)———

"Wilt thou lay down thy life for my sake? Verily, Verily, I say unto thee, The cock shall not crow till thou hast denied me thrice.

Verily, Verily, I say unto you *that one of you shall betray me.*"

Then the disciples looked at one another doubting of whom he spake.

Now there was leaning on Jesus' bosom one of his disciples whom Jesus loved. Simon Peter therefore beckoned to him, that he should ask whom it should be of whom he spake.

He then lying on Jesus' breast saith unto him, "Lord who is it?" Jesus answered. "He it is, to whom I shall give a sop when I have dipped it."

And when he had dipped the sop he gave *it* to Judas Iscariot, *the son* of Simon.

And after the sop Satan entered into him. Then said Jesus unto him,

"That thou doest do quickly."

* * * * *

He then having received the sop went immediately out and it was night.

Therefore when he was gone out Jesus said, "Now is the Son of man glorified, and God is glorified in him. If God be glorified in him God shall also glorify him in himself, and shall straightway glorify him."

சத்யமலைத்யாத்மலாவித்ரியை நமஃ

விவேகசிந்தாமணிக்கவசம்.

(உபநிஷதர்த்த ஸாரஸங்கிரகம்.)

———(:-:)———

"ஆனநீற்றுக்கவசம்அடையப்புகுமின்கள்
வானவூர் கொள்வோரா, மாயப்படைவாராதே."—
[திருவாசகம்.

"ஏகாக்ஷரத்வைதாக்ஷரி திரியக்ஷரி
பஞ்சாக்ஷரி செஞ்சுடரை பஞ்சதசாக்ஷரி
வாலைவித்தை யம்பிகைதேவீ தயவுநிறை
ஷோடசாக்ஷரி யெங்குநிறைமோனாக்ஷரி!
கசடுதிருகிர்க்ஷர குஹியான்!
நித்ய நிர்மல ஸ்வரூபிநீ! ஆயினும்
ஏனையுளக் கர்ப்பனாஞ் செய்கிறேன்!
அங்கேரித்திவனை யாளாக்கி விடுபொருட்டேன்
திவ்யாக்ஷர மந்த்ரோபதேசஞ்செய் தருளுவாய்!
தாயேதயாபரியே!"

"ஏழையேன் துன்புற்றுத் துயரிலாழ்ந்தேனம் [பிசே!
சோழைமனங் குடிகெடுக்காதென்னைக் காத்தரு [ளத்தயவுமிக
வேண்டுந்தாயே! தற்பரமா யெங்குநிறை ஸஹஸ் [ரதள
மலர்மீதுரை யம்பிகேயுன் ஸ்வஸ்வரூபங்காட்டித்
தன்மயமா யுன்னோடைக்கியந்தத்தருள வேண்டுந் [தாயே!
பின் னுமெனைமாயைபற்றுதாண்டருள்செய் தயா [நிதே!
யுன்பாதமதே சரணமம்மா காத்தருள்செய் அம் [பிசே!
அபயம்! அபயம்! அபயம்!"

"ஒன்பது வாசலு மொர்க் கடைக்கி
லன்பதி லொன்று மரன்"—ஔவைகுறள்.

———

ஏகம் ஸத்யம் ப்ரஹ்ம.

1. விவேக சிந்தா மணியரசே
வித்யா லக்ஷ்மி ஸரஸ்வதியே
துர்க்கா லக்ஷ்மி மஹேசுவரி
துஷ்டரை யடக்கும் தாயேகேள்!

துவிதம் மஹேசுவர லக்ஷணம்.

2. தாயே பிள்ளை சரணமம்மா!
தயாவே மெள்ளக் காத்தருள்வாய்
மாயே கொள்ளை போகுதடி
மஹேசுவரி யுள்ளே சாக்ஷிநிற்பாய்!

திரிவிதம் துர்க்கா லக்ஷணம்.

3. தாயே உன்னைத் தொழுதழுதே
நாயேன் மாயை மயக்கறுத்தேன்
சேயைக் கொண்டுளஞ் சோதித்தே
மாயே கைப்பொருள் கொள்ளைவிட்டாய்!

சதுர்விதம்புருஷ லட்சணம்

4. முன்னே யென்றன் ஆவியும் பொருளும்
அன்னே யென்றன் உடைமையெல்லாமும்
பொன்னே யென்னை யாட்கொண்டபோதே
யென்னே அன்னே கொண்டிலையோ!

பஞ்சகம் பக்த லட்சணம்.

5. இனியோ ரிடையூ றெனக்குண்டோ!
தனியே யென்னைத் தடுத்தாண்டாய்!
கனியே தேனே கற்கண்டே!
தனியேன் தரையில் தவிக்கலாமோ!

அறுவிதம் ஆசை லட்சணம்.

6. காசைப்பெரிசாய்நினைப்பவர்கள்
வேசைப்பரிசாய்நினையிழைத்தால்
ஆசைக்கரசே அரும்பொருளே
தூசைத்தூணாய்மாற்றுவையே!

எழுவிதம் தாது லட்சணம்.

7. தூசைத்தூணாய்மாற்றுவையே
ஆசைக்குள்ளிருந்தாட்டுவிப்பாய்
ஓசைக்குள்ளு றுமோம்பொருளே
வேசைக்குளுன் னுருவேர்ப்புழுவே!

எண்விதம் மூர்த்தி லட்சணம்.

8. ஆணில்லைபெண்ணில்லை அலியில்லை
ஆணும்பெண்ணும்அலியும்நீ
தூணில்தோன்றும்கரவிம்மநீ
ஊணில்தோன்றும்ஓஜஸுநீ!

நவாநாம்தேவி லட்சணம்

9. ஓஜோவிபலமவிப்ராஜோவி
தேஜோவிதிவ்யதேவநாமாவி
யஜோவியஜ்ஞநாமாவி
ராஜோவிராஜ்யதர்ம்மணி!

தசமம் சுத்த வித்யை லட்சணம்.

10. விசுவமவிவிசுவாயுவைவதேஹி
ஸர்வமவிஸர்வாயுஸ்ரஸ்வதி!
கர்வமவிகர்வஹரகாயத்ரி
ஸத்யமவிஸத்யாத்மஸாவித்ரி!

ஏகாதசம் ருத்ர லட்சணம்.

11. ஹரஹர தேவி ஹரதேவி!
ஹரிஹரி தேவி ஹரிதேவி!
பட்பட் தேவி படதேவி!
சட்சட் தேவி சடதேவி!

துவாதசம் ஆதித்திய லட்சணம்.

12. ஹரேராம ஹரேராம ராமராமஹரே [ஹரே
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண கிருஷ்ண [கிருஷ்ண ஹரே ஹரே!
ஹரேராம ஹரேகிருஷ்ண ராமகிருஷ்ண [ஹரேஹரே
ஹரேதர்ம ஹரேராஜ தர்மராஜஹரேஹரே!

த்ரயோதசாநாம் ப்ரதோஷதர்சநம்.

13. விவேகசிந்தாமணியரசே
வித்வத்லக்ஷியலக்ஷணமே
துர்க்காலக்ஷ்மிஸமரேசி
துட்டரையடக்கியாளரசே!

சதுர்த்தசம் வித்வத் லட்சணம்.

14. தாயேபிள்ளைசரணமம்மா!
தர்ம்மவெல்லக்காத்திடுவாய்!
மாயேகொள்ளைபோகுதடி!
மர்ம்மறிந்தேதடியளப்பாய்!

பஞ்சதசம் பாரமார்த்திக லட்சணம்.

15. தாயேஉன்னைச்சரணடைந்தே
நாயேன்மாயைமயக்கறுத்தேன்
சேயைக்கொண்டுளம்சோதித்தாய்
தாயேமெய்ப்பொருள்தந்திடுவாய்!

ஷோடசம் பிந்து லட்சணம்

16. விவேகத் தாயே! தாய்முன்னே!
இனியோர் காசைத்தூசைத் தந்தாளே
ஓஜஸ் விசுவம் ஹரஹரவே
உண்மைத் தாயே தாய்க்கரசே!

ஸப்ததசாம் லாத்விகலட்சணம்.

17. விவேக சிந்தாமணிக் கவசம்
வித்வத் ஜநங்கள் பூணலாக
விருத்திராசுரன் வலியடங்கத்
திருத்தமாச் செப்பினன் ஜயஜயவே!

அஷ்டதசாம் அவித்யாலட்சணம்.

18. உருவில் லருவாம் குருவைநம்பி
குருவில் லசுரப் பூண்டைத்தொட்டே
தெருவில் தவித்த பாலனென்று
குருவில் லடைக்கக் கூத்தாச்சே!

கூத்துக் காட்சி.

"கன்றித ஆட்டம் நன்றிது கூத்து
நன்று நன்றிது நடனம்!
அங்கு மிங்கு மெங்குங் கண்டிலே
னிதுவொருவதிர்சயங்காண்மினோ!
ஒன்றி நின்றன் றுணர்வழிந்
துள்ளொளியானபின்
அங்குமிங்கு மெங்கு மிதுவலால்
வேறொரு அதிர்சயங் காண்கிலேனே!"

அர்ப்பணம் ஐயனரே !

" காண்கிலே னதிர்சயம் காட்சியும் வேறிலை "
பூண்கிலே னணிமணி பூஜையும்வேறிலை
நாண்கிலேன்நடையிடை காட்டமும்வேறிலை
பூண்கிறேன் கவசமிது பூஜித்து ஐயனரே !

சாஸ்தா துணை.

ஆண்டானடிமை.

—(:o:)—

The Betrayal of Friendship.

"Ye are my friends if you do whatsoever I command you. You have not chosen me, but I have chosen you; .....Hence forth I call you not servants for the servant knoweth not what his lord doeth, but I have called you friends for all things I have heard of my Father I have made known to you."—True Friendship.

The true aim of University Education was to liberalise the mind.....When it is said that *we want men of character* what is meant by the wise and discerning is that we want men whose mental and moral equipment is such as to enable them to interpret truly by thought and conduct, the age in which they live. And that is the special function of university.—*Sir N. G. Chandravarkar, Vice-Chancellor of the Bombay University, at the Convocation held on 20th February 1912.*

Give me not O God, that blind fool faith in my friend that sees no evil where evil is but give me O God that sublime belief that seeing evil I yet have faith."—*Vivekachintamani Motto.*

கூடா நட்பு.

அச்சப்பத்து.

—:-:—

"வான்உலாம் எரியும் அஞ்சேன் ;
வரைபுரண்டிடினும் அஞ்சேன் ;
தோன்உலா, சீற்றன், ஏற்றன்,
சொற்பதங் கடந்த அப்பன்,
தாளதா மலரகள் ஏத்தித் !
தடமலர் புனைந்து கையும்
ஆன்அலாதவரைக் கண்டால்,
அம்ம ! நாம் அஞ்சும் ஆறே !"

"கோணிலா வாளி அஞ்சேன்,
கூற்றவன் சீற்றம் அஞ்சேன்
நீள்நிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர,
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆனலா தவரைக் கண்டால்,
அம்ம ! நாம் அஞ்சுமாறே !"—திருவாசகம்.

சாமான்ய ஜனங்களுக்குத் தத்துவார்த்தமாய்ச்சொன்னால் (Abstract Principles) எதுவும் மனதில் ஏறாது. ஏனெனில் பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவும் அதிநுட்பமான விவேக புத்தி அவர்களுக்குக் கிடையாது. விவேக ஞானம் விசார ஞானத்தின் முடிவில் பிறக்கிறது. அதாவது, விசார முடிவில் விவேகம் பிறக்கிறது. விசாரம் என்றால் அததன் ஸ்வபாவத்தை ஆய்ந்தறியும் சக்தி. எதுவும் அதன் ஸ்வபாவம் விளங்கு மட்டும்தான் அறிவை மயக்கும். பழுதையிற் பாம்பும், கிளிஞ்சலில் வெள்ளியும் தோன்றுவது பழுதையைப் பழுதையென்றும், கிளிஞ்சலைக் கிளிஞ்சலென்றும் அறியும் வரையில்தான். அறிந்துவிட்டால் ஒன்றை ஒன்றாக மாறியறிந்து பிரமிக்கும் ப்ரம்மை (அறிவு மயக்கம்) நீங்கிவிடும். பழுதையைப் பாம்பென் றஞ்சவதுபோலவே பாம்பைப் பழுதையென்று மருண்டு மிதிப்பதும் அறிவு மயக்கமாய். அறிவு என்பது தெளிவுமயமாம். அதை ஸ்படிக லிங்கமாய்ப்பாவித்துப் பூஜை செய்வர் பெரியோர். அங்கலிங்க சங்கமவிதிப்படி சுத்த ஹிருதயம் வாய்ந்த பூஜகனும் (சித்த சுத்தியும்) சுத்த ஸ்படிகமாகிய லிங்கமும் ஒன்றானால் அதுவே சிற்றம்பலமாம். சித்சபையென்பதும் அதுவே.

"அருளெனப்படுவதுமருளற்றசிந்தை
மருளேயிருளில்மயக்கமச்சமுமாம்
மயக்கந்தானறும்மாசற்றசிந்தையில்
சிந்தைதெளியத்தெளியச்சிவமதுவாமே."

"சிந்தையதென்னச்சித்தென்னவேறில்லை
சிந்தைதெளிந்திடச்சித்ததுவாமே
சித்ததுவாவதுமுன்னொளிதானே
உள்ளொளிவிளங்கிடம் சித்சபையாமே !"

உள்ளொளி யென்றால் உள்ளத்திலிருந்தெழும் ஸ்வப்பிரகாசமாம். இதையே சிவப்பிரகாசம் என்றும் சொல்லுவர். உள்ளம் என்பது எல்லாவற்றிற்கும் உண்மையான இருப்பிடம் பிருப்பதெதுவோ அது. உண்மை, நிரந்தரம்

பிருத்தல் எனப்பொருள்படும்:உளதாந்தன்மை. அதற்கு எதிர்மறை இன்மை. இன்மையென்றால் இலதாந்தன்மை. உண்மையை 'சத்' என்றும், இன்மையை 'அசத்' என்றும் சொல்வர். பழுதையிற் பழுதை 'சத்'; பழுதையிற் பாம்பு 'அசத்'. இருளும் மருளும் சேர்ந்தால் பழுதையிற் பாம்பு தோன்றும். இருள் என்பது புறப்பொருள். மருள் என்பது அகப்பொருள். பஹிர்முகப் பார்வை மறைபடல் இருள். அகமுகப் பார்வை மறைபடல் மருள். ஆகையால் அரக்கண் பஞ்சடையாமல் துலங்குவது 'அருள்' என்பான் 'அருளெனப்படுவது மருளற்றசிந்தை' என்றார். மருள் என்றால் என்னவென்கிற கேள்வி பிறக்குமால், "மருளே யிருளில் மயக்கமச்சமுமாம்" என்றார். செம்பிற் களிம்பேறினாற்போல் சிந்தையில் மாசுபடிந்தால் மயக்கமுண்டாகும். செம்பிற்குச் சுபாவமான களிம்பேறுந் தன்மை (மாசுபடியுங்குணம்) அற்றால் அது பொன்னாகும். அருளெனப்படுவதும் பொன்மயமாகும். ஆதலால் "மயக்கந்தானறும் மாசற்றசிந்தையில்" என்றார். அருள் உதயமாகி அருள் வெளியில் பழகப்பழக சிந்தை மயங்குந் தன்மைதானே யற்றுப்போம். மயங்குந் தன்மை யற்றுப்போனால் இயங்குந்தன்மைக் கிடமின்றி மனம் ஒப்பந்து உட்கார்ந்து போகும். மனம் சங்கல்ப விகல்பமற்று நின்றால் அதற்கு "ஒழிவிலொடுக்கம்" என்று சொல்வர் மேலோர். இந்த ஒடுக்க நிலையிலிருந்து பழகிப் பழகி அப்பியாஸ முதிர்ச்சிபெற்றால் அப்பொழுது மனம் நிர்விகல்ப நிலையடைந்து இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோம். மறைந்துபோம் என்றால் அழிந்துபோம் என்ற அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. அப்பிலுப்புப்போல் கரைந்து, உப்பெல்லாம் தண்ணயமானதுபோல் மனம் விஷ்ணுமயமாகிவிடும். அப்படியென்றால் ஸர்வாந்தர்யாமியாய் எல்லாவற்றிற்கும் உள்ளமாய் இருந்து விளங்கும். மனம் லயித்து விஷ்ணுமயமாக, விஷ்ணுவும் அதன் காரணமாகிய சிவத்திலொடுங்கும். விஷ்ணுவுக்கு ஆகர்ஷணு சக்தியும் ஆகர்ஷிக்கப்படும் சக்தியுமுண்டு. "ஹரியலால் தேகியில்லை" யென்ற ஆன்றோர் வாக்கியத்தால் சிவத்துக்கு விஷ்ணுவையன்றி வேறு சக்தியில்லை. ஆதலால்தான் "சீதாராமன்" "ராதாகிருஷ்ணன்" என்ற நாமங்கள்போல "ஹரிஹரன்" என்கிற திருநாமம் சக்திஸம்யுக்தமான சிவத்துக்குப்பொருந்த வமைந்தது.

சக்தி பலத்து சக்திமானை யிழுப்பதானால் அது மோஹினி ரூபமெடுத்து ஸத்யாநந்த ஸ்வரூபிணியாய் விளங்கும். பாற்கடலைத் தேவாசுரர்களிருவரும் சேர்ந்துகடைந்தபோது அதிலிருந்துண்டான அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுக்க வந்தது "ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்" என்னும் வேதமாதா வீன்ற பிக்ஷையாம் ஸத்யாநந்த ஸ்வரூபிணியே. இவளே துஷ்டரையடக்குந்தாய். பண்டாசுரனை மயக்கின மஹாமாயையும் இவளே ! இந்த அவஸ்தையில் சக்தியுடன் சக்திமான்சேர ஐயனார் பிறந்தார். இந்த ஐயனாருக்குச் சக்தி பிடாரி. இவர்கள் துஷ்டநிக்ரகாத்மகமான ஆக்மாநாத்ம சக்தியாம். சக்திமான் பலத்து சக்தியை யிழுத்துத் தன்னுளடக்கிக் கொள்வதானால், அப்பொழுது துஷ்டநிக்ரகாத்மகமான காளி துர்க்காம் சத்தைவிட்டு விஷ்ணுபதமெய்தி (ஸர்வாந்தர்யாமியாகி) "யோகேபவானி" யென்றபடி சக்திமானுக்கு யோகமளிக்கும் பொருட்டு சுத்த ஸாத்விகபவானி ரூபமாகி, பர்வதராஜனையடைந்து பார்வதிதேவியா யவதரித்து, உமாதேவியாய் தபஸிருந்து பதியையடைந்து குமரக்கடவுளாம் சுப்ரஹ்மணிய ஸ்வாமியைப் பெற்று, தர்மரக்ஷணார்த்தம் அதர்மப் பூண்டையழிக்கும் திவ்ய சக்தியாம் வேலாயுதமூர்த்தியாய் விளங்கி, சத்துக்களுக்கு ஆண்டியாயும் (குருமூர்த்தியாயும்) அசத்துக்களுக்கு (வேல்) ஆயுதபாணியாகவும், அதாவது, தேவசேனாதிபதியாகவும் தோன்றி தர்மபரிபாலனம் செய்கிறவ

ராகிறார். விஷ்ணு அம்சம் இவரிடத்தில் விசேஷமாயிருத்தலால் இவர் பின்னுபின்ன சக்திகளிரண்டுடனேயும் தோன்றுபவராக விருக்கிறார்.

"தேறார்தேறுதற்குதேவிபராசக்தியுடன்
வாரார்முருகையன்வர்ணமயில்வாகனமேல்."

நமக்கு குமரக்கடவுள் எப்படியோ, அப்படியே யேசுகிறிஸ்துவும் தேவபுத்திரராம்சமாய் அவதரித்தருளினர். சிவசக்தி ஸ்வரூபமெதுவோ அதுவே தேவபுத்ராம்சமாம். ஸெய்ண்ட்ஜான் என்னும் யோகீசுவரர் எழுதியிருக்கும் கிறிஸ்து வேதத்தில் கூடாகட்பின்பயன் நன்றாக வெடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. யேசுநாதர் பிறந்து அருள்பெற்றபின் அவர் பன்னிருவரைச் சிஷ்யராகத் தெரிந்தெடுத்தார். அவர்களில் முற்றுந் தேறின மூதறிஞரானவர் ஸெய்ண்ட்ஜான். முற்றும் கடையரான கூடா நட்பிற் கிலக்காயமரந்தவர் "ஜூடாஸ் இஸ்கேரியாட்" என்பவர். இவர் சிஷ்யர்களுக்குள் பணத்தைக் கையாடும் வேலைபெற்றவர். இவர் உலகப்பற்று நீங்காதவர். "பற்றற்றார் பற்றுகப் பற்றி நிற்குமவன் பரங்கருணையால்" அருட்கண் நோக்குப்பெற்றவரானர். ஆயினும் அவரைப்பற்றிய ஆசை அவரை விடவில்லை. "பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்" என்கிற பழமொழியாக உலகப் பற்றுகளை உள்ளத் தறக்காமல் தானே குருவிடம் தீக்ஷைபெறலானர். பரங்கருணை மிகுதியால் குருவும் அவர் குற்றத்தை யுணர்ந்தும் அதைப் பெரிதும் பாராட்டாது அவரிடத்து அருள்நோக்கு வைத்துவிட்டார். பாம்புக்குப் பாலைக் கொடுத்தாலும் அது விஷத்தைத்தான் கொடுக்கும். பசுவோ புல் வைக்கோல் இவற்றைத்தின்றும் நல்ல பாலைக்கொடுக்கும். ஆகையால் சுபாவத்தை மாற்ற முடியாது.

"குறை பொருளார்க் குண்மையோதிற் குற்றம் வரும் நற்றம் போமால், இறைமேலானை புலம்பாதே யென்றியம்பினு னென்னம் பாள் வாலை" யென்று சொல்லிய சொல் தவர்ந்து அவளிடம் அருள்நோக்குவைத்து மருள் நீக்கா அவனுக் குபதேசம் செய்ததால் அவர் உள்ளம் துடிக்கலாயிற்று :(He was troubled in spirit and testified:) துடிக்கவும் அவர் உண்மையை யறிந்து உள்ளந்த யுள்ளபடி சொல்லலானர்.

"Verily, Verily, I say unto you that one of you shall betray me." "சத்தியம், சத்தியம், உங்களில் ஒருவர் என்னைச் சந்தியிலிழுக்கப் போகிறீர்!" என்று உள்ளம் பதைக்க உண்மையைச் சொன்னர்.

இப்படியவர் உண்மையைச்சொல்லவும், மற்றச் சிஷ்யர்களெல்லாம் இவர் நம்மில் யாரைக் குறித்து இப்படிச் சொல்கிறார் என்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு விழிக்கலானர்.

அத்தருணம் யேசுநாதர் உள்ளத் தமர்ந்த உண்மைச் சீஷராம் ஒருவரை (இவர்தான் ஜான் என்பவர்)ப் பார்த்து அழைத்து, பற்றவர்களெல்லாம் அவரை ஏவி குருநாதர் யாரைக் குறித்து இப்படிச்சொன்னர் என்பதை விளித்தறியும்படி வேண்டினர்.

அவரும் "குருவில்லமர்ந்து"—கள்ளங் கரைந்த சிந்தையினல் குருவினுள்ளமுணர்ந்து: "நாதா நீங்கள் சொன்னது யாரைக்குறித்து?" என்று உள்ளக்கனிவோடு கேட்டிருந்தார்.

அதற்கு யேசுநாதர், பேர் ஊர் ஒன்றும் குறிக்காமல் "இந்த ரொட்டித் துண்டைத் தோய்த்து யாருக்குக் கொடுக்கிறேனே அவன் தான்" என்று மறைபொருளாய்ச் சொன்னர். அப்படியென்றால், என்னைச் சந்தியிலிழுக்கப் போகிறவனுக்கு இதோ நான் வாய்க்கரிசி போடுகிறேன் பார்! என்று சொன்னபடியென்க. சொல்லியவண்ணம் ரொட்டித்துண்டைத் தோய்த்து ஸைமன் புத்திரனான ஜூடாஸ் இஸ்கேரியாட் என்பவனுக்குக் கொடுத்து 'வாய்க்கரிசிபோட்டார்.

"Sop" என்னும் பதத்துக்குத் தமிழில் சரியான வாச்சியார்த்தம் செய்ய வேண்டுமானல், "வாய்க்கரிசி" யென்றுதான் சொல்லல் வேண்டும். செத்தவன் பசிதாபம் தீரப் பிணத்துக்கு வாய்க்கரிசி போடுகிறது அபரக்கிரியைகளில் முக்கியமான தொன்று. ஆகையால் குருத்துரோகிக்கு துரோகம் செய்ய வேண்டு மென்கிற எண்ணமிருந்தும் அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சங்கல்பசக்தியற்றவ னுகையால், பசிதீர வுண்ணும் சக்தியற்ற பிணத்தின்வாயில் அரிசியை நனைத்திட்டு அதன் பூத தேகத்தின் தாபத்தைச் சாந்தி செய்வதுபோல, குருத்துரோகம் செய்ய ஆசைப்பட்டவனுக்கு அவ்வாசையை நிறைவேற்றிவைக்க வேண்டி, விதேஹகைவல்ய முத்தி ஸித்தி பெற்ற பரமகுருவானவர், தனது அருட் திருமேனி அதை விட்டுப் பிரிந்ததால் "செத்துச் சுண்ணும்பான" ஜடதேஹத்தை "ஆபோவா இதம்ஸர்வம்" என்கிற மந்திரப்படி எல்லாம் ஜலமய மென்கிற அவருடைய அந்தர்ப் பாவம் விளங்க அன்னமயகோசமான தேஹத்துக் கறிகுறியான அரிசியை அல்லது ரொட்டித்துண்டை நனைத்து பூதபலியாக குருத்துரோகியான சிஷ்யனுக்குக் கொடுத்து அவன் துராசையைப் பூர்த்தி செய்து அதனல் கிருத கிருத்திய விருதம் தப்பாது காத்துத் தனது சற் சீஷர்களுக்குத் தனது அருட்திருமேனி விளங்கத் தரிசனமளித்து அவரை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றி வைத்து, தனது அநிச்சா ப்ராரப்தத்தால் சேர்ந்த கர்ம பலன்களை யெல்லாம் துரோக சிந்தனைகொண்ட சீஷனுக்குக் கொடுத்து, "யத்பாவம் தத்பவதி" யென்றுள்ள உண்மை வாக்கியத்தை நிறைவேற்றினவராகிறார்.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச் சங்கரா!" என்ற ஆன்றோர் வாக்கியத்தால், தன்னைக் கொடுத்தார்க்குத் தன்னைக் கொடுப்பது குருதர்மம்; ஆகையால் சிஷன் தனது "உடல் பொருளாவி" யையும் திரிகரண சுத்தியாய்த் தத்தம் செய்து கொடுக்க, அதைப் பெற்றுக் கொண்டு "அருள் பொருளானந்தம் என்கிற சச்சிதானந்த ஸ்வரூபமான தன்னைத் தரிசிக்கக் கொடுத்து பிரமரகிட நியாயமாய் "ஜீவனுக்குள்ளே சிவமனம் பூத்தது" என்ற வாக்குப் பலிக்க "சிந்தையே கோயில்கொண்ட எம்பெருமான்" "உடலிடங் கொண்டு" "தேஹோ தேவாலய ப்ரோக்தஃ" என்ற சுருதி வாக்குப் பலிக்க வைக்கிறார்.

மாசறுச் சிந்தையர் காசறுவாசையில் நேசராய் வேஷம்போட்டு ஈசரை மோசம்செய்தால், அவர்கள் மோச சிந்தனையே நாசகாலனுய் உற்பவிப்ப துணர்ந்து அருள்மூர்த்தி செத்துச் சாகாப்பிணமான அவர்களுக்கு வாய்க்கரிசி போட்டு பேய்க்கரசாய் வாழ அனுக்ரகிக்கிறார். ஆதலால் தான் உலகில் ஸர்ஜனர் வருந்த துர்ஜனர் காசும் பணமுமாய்ச் செழித்து வாழ்கிறார்கள். இந்த வாழ்வெல்லாம் வாழ்வுபோல் காட்டித் தாழ்வை யளிக்கும். உதாரணம் வேண்டில் உய்த்துணர்வார்க்கு எத்தனையோ நித்தியப்படி யவர்கள் கானும் காட்சியில் கிடைக்கும். கந்தர்சஷ்டி யுற்சவத்தின்போது சூரஸம்ஹாரம் நடக்கும் திருவிளையாட்டை யுற்றுணர்ந்தாய்வாருக்கு உண்மை வெளிப்படும். சூரனுக்கு ஒரு தலை போனதும் ஒரு தலை வந்தாலும், ஒவ்வொன்றும் தாழ்ந்த மிருகங்களின் தலையாகக் கடைசியில் அவன் விருக்ஷமாகி "ஜடாமுனி" ரூபங் கொள்கிறான். அவன் பாபசிந்தையின் பலனை யெல்லா மிப்படி யவன் அனுபவித்தானபின் பூர்வப்ரஜ்ஞை வந்து குருகடாக்ஷ வீக்ஷணிய பலத்தால் மறுபடியும் ஜனங்களிலெல்லாம் உத்தமமான மானிட ஜன்மம் பெற்று குமரகுரு பரனருட்திருமேனியை க்ஷண நேரம் தரிசிக்கும் பாக்கியம் பெற்று, மஹோந்நதமான அந்த க்ஷணநேரத்தில், குமரகுரு பரனுக்கு வாஹனமாக வேண்டு மென்கிற வரம் வேண்டிப் பெற்று மயிலுருவங் கொண்டு வேலவனுக்கு வாஹனமாகிறான். ஆகையால் "வே

லுமபிலுந் துணை" யென்று சொன்னால் "ஆலு மரசும் சொன்னபடி கேட்கும்" அதாவது ப்ரஹ்மாவும் விஷ்ணுவும் காணாத ஜோதிர்லிங்க தரிசனம் கிடைக்கும் என்றபடி. அந்த ஜோதிர்லிங்கத்தின் அடிமுடி காணாத் தேவர்கள் கர்வபங்கம் செய்வான் திருத்தேரேறித் திரிபுரமெரித்தவன் சாக்ஷியேயாக எவனொருவன் சந்தியில் விட்டிருக்க வேண்டு மென்று நினைக்கிறானோ அவன் சந்தியில் விட்டவனிலும் கடையனாகிறான். "கெடுவான் கேடு நினைப்பான்" ஆகையால் அத்துர்ச் சிந்தையின் தாபந்தீர எனதென்னும் பொருளெல்லாம் அவன் வாய்க் கரிசியாகப் போட்டு அவன் தாபம் தீர்ப்பர் மேலோர். கூடா நட்பினர் கூட்டுறவால் வரும் கேடிது வென்னக் காட்டுவான் ஜானவன் ஜூடாஸ் கதையைச் சூக்ஷ்மமாய்ச் செப்பினர். இதனால்வருங்கேடுணர்ந்தே தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்.,

"இனம்போன் றினமில்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்."

என்று கூடாநட்பினது குற்றங் கூறி, மனப்பழக்க மில்லாது மறை வல்லோனென முழங்கும் "மாணார்" (மாண்பிலா மக்கள்) மனக் குற்றம் நீங்குவதற்கான நல்ல நூல்கள் பல கற்றும் அவர்கள் மனந்திருந்தி நட்பாதல் அகப்பகை நீங்கா அவருக்கில்லை யென்றும், உணர்த்துவான்,

"பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது"—என்றும்,

கண்டால் இனியவர் போல் நகைமுகங் காட்டி வேஷம் போட்டு அகத்தில் பகை பாராட்டும் வஞ்சகரைக் கண்டஞ்ச வேண்டு மென்பான்,

"முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சனை யஞ்சப் படும்"

என்றும் சொல்லி அக்கூடாநட்பின் கண் ஒழுகும் வகையை வற்புறுத்திக் கூறினர்.

புறத்தின்கண் பொய் நட்பு,

"மிகச்செய்து தம்மெள்ளுவாரை நகச்செய்து
நட்பின்உள் சா(க)ப்புல்லற்பாற்று"—என்றும்
"பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்."—என்றும் சொல்லி

கூடாநட்பின் கூட்டுறவறுக்கும் வழிசொன்னர்.

——:o:——

"My only Friend."

"Who are you who go about to save them that are lost?

"Do you know that who would save his own life must loose it? Are you, then, one of the lost? Could you or would you be one of the lost? Arise then and become a saviour.

"O, disrespectable Respectability! There can be no union and love in a country, so long as we keep emphasizing each other's faults. The secret of the successful art of living lies in developing the Mother's heart to whom all her children are lovely, whether big or babies. True education means to learn to look at the Universe through the eyes of God."—*Swami Ram Tirath on "Universal Love."*

"திக்கற்றவர்க்கு தெய்வமே துணை."

——:-:——

"விவேகத்தாயே! தாய்முன்னே!
இனியோர் காசைத்தூசைத் தந்தாளே!
ஓஜஸ் விசுவம் ஹாஹாரவே
உண்மைத்தாயே! தாய்க்கரசே!"

"தேரூர்தேறுதற்குதேவிபாராசக்தியுடன்
வாரார்முருகையன் வர்ணமயில்வாகனமேல்."

"ஈசாபோற்றியென்னிறைவாபோற்றி
மாசிலாமணியேமரகதவொளியேபோற்றி
ஏசிலாமொழியாலிரந்தார்க்கருள்நேசாபோற்றி
ஆசிகூர் அண்ணலே! வாசியென்றுன்தாள்பற்றி
னேன்போற்றி!"

"பெற்றதோர்வீட்டிற்குப்பற்றறவேகொள்ளிவைத்து
உற்றதோர்வீட்டிலுகந்துமேதான்வசித்து
மற்றதோர்வீட்டைமறந்திடாதிறந்திறந்து
பெற்றதோர்வீடும்பெருவாழ்வும்பெற்றாரார்!"

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்,
தகநக நட்பது நட்பு"—என்றார்

பொய்யாமொழிப் புலவராம் திருவள்ளுவ நாயனர். "கண்டாற் காமாக்ஷி நாயகன், காணாவிட்டால் வடுகப்பயல்" என்பார் நட்பு

நட்பன்று, "கண்டவழி அகமொழிய முகமாத் திரமே மலரும் வகை நட்கும் நட்பு நட்பாகாது" என்றார் பரிமேலழகர் தம் உரையில். அகத்திற் பகையும் புறத்தில் நட்பும் பாராட்டுவார் நேசம் எப்போதும் ஆபத்துக்கிடமானதாம். இப்படிப் பட்டவர் நேசத்தைக் கூடா நட்பென்று கண்டு ஒறுத்தல் வேண்டும். அகத்தின் கண்ணே அழுக்காறு நீங்கினால் தான் அகம் மலரும், ஷட்வர்க்கமான அறுபகை உள்ளே யுள்ளவரையில் அகநட்புக் கொள்வது அவருக்கு ஸாத்திய மில்லையாம்.

"நாயைக் குளிப்பாட்டி நட்டுள்ளே வைத்தாலும் அது வாலைக்குழைத்துக் கொண்டு குப்பைமேடேகும்" என்பது இன்னோர் உண்மையான பழமொழி. உள்மலம் நீங்கி நிர்மலமாகாத உள்ளத்தில் உண்மையான நேசம் உதிப்பது எப்படி? வேசையுறவாகக் கண்டால் ஒன்று காணாவிட்டால் ஒன்று என்று இருப்பவரிடத்தில் திரிகாண சுத்தியில்லாமையால் உள் மலம் நீங்க வழியில்லை. ஆனால் இவர்களையெல்லாம் விட்டு நீங்கி யிருக்கலாமோ வென்றால், அதுவும் ஸாத்தியமல்லை. "ஏனெனில் ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்றார் திருமூலதேவர். தெய்வம் எப்படி ஸத்தியமாகப் பார்க்கில் எல்லாருக்கும் ஒன்றேயாமோ அப்படிப் போலவே உண்மையாக, அதாவது தத்துவார்த்தமாகப் பார்க்கில், "மனித குலமும் ஒன்றே" அதாவது, மனித வர்க்மெல்லாம் கூடி சமஷ்டி விராட்டின் ஓஜஸ் ரூபமான பிரஜாபதியில் அடங்கிவிடும்.

ஆதலால் "ஓஜஸ் விசுவம் ஹா ஹாரவே!" யென்றார் "விவேகசிந்தாமணிக் கவசம் பூண்ட கண்ணுடைவள்ளலார்." எல்லாம் ஓஜஸ் ரூபமாயிருத்தலால் அந்த ஓஜஸ் ஒன்றையே பற்றிப் பற்றெலாம் அற்றுப்போக "ஹாஹா" வென்றார்.

"ஹாஹாவென்னதரியதொன்றில்லை
ஹாஹாவென்னஅறிகிலர்மாந்தர்
ஹாஹாவென்னஅமாருமாவர்
ஹாஹாவென்னஅறும்பிறப்பன்றே!
ஹாஹாவென்றேயறுத்தனன்பிறப்பை."

ஆதலால் உண்மை யறிந்தவர்க்குத் தம்முயிரைத் தத்தம் செய்து கொடுப்பதும் பின்னர் அருள் முகமாகப் பெறுவதும் அருமையல்ல! சகஜமே!

யேசுகிறிஸ்துவும் தாம் யோகஸித்தி பெற்ற ஸத்திய புருஷராதலால், தனக்கு உடலை விட்டு உயிரைப் பிரித்து வைப்பதும், பின்னர் உடலோடுயிர் வந்ததொன்றச் செய்வதும் சாத்தியமாம் என்று சொன்னர். அப்படிப்பட்ட சித்த புருஷர்கூடக் கூடாநட்புச் செய்ததால் குருத்துரோகியான ஜூடாஸ் இஸ்கேரியாட் என்பவனுக்கு 'வாய்க்கரிசியாகத்' தன் தேகத்தை மனப்பூர்வமாகத் தியாகம் செய்து கொடுக்கவேண்டிவந்தது.

மஹா தியாகியான அவர் "கடவுளும் நானும் ஒன்றானேன்" என்கிற உத்தம ஸாயுஜ்ய பதவியில் உலகெலாம் வணங்க உலகை வென்று புகழுடம்பெடுத்துப் புண்யாத்மாக்களுக்கு இன்றைக்கும் தனது அருட் திருமேனியினால் திவ்ய தரிசனம் கொடுத்துக்கொண்டு நித்திய வாழ்வெய்தியிருக்கிறார். அவரை யடுத்துக் கெடுத்த குருத்துரோகியோ அவன் பழிபாவம் இன்னுமவனைவிட்டு நீங்காதாகி உலகத்துக்கெல்லாம் பழிச்சொல்லாய் இழிநர கெய்தி இன்னமும் இகழப்படுகிறான். உண்மையறியாத காலத்தில் இதுவெல்லாம் என்னவோ ஒரு கதை யென்றிருப்பர் மாந்தர். "பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு" என்னும் பழமொழி ஸ்வானுபவமெய்தி முதிர முதிர உண்மை யென்று தானேபடும்.

அடுத்துக் கெடுக்கும்பாவி அகப்பேய் பிடிப்பவனாதலால், எல்லாம் நானே யென்று நரி தன் வாலால் சமுத்திரத்தை யாழம் பார்த்ததுபோல்

அனந்தமாயுள்ளதை யெல்லாம் அற்பமாகப் பாவிப்பன். காரியத்தின்பேரிலே கண்ணுயிருந்து காரணத்தில் பூரணத்தைத் தேடுபவன் போல் பாசாங்கு செய்வான். காரண காரிய தோரணையறியாது தானே காரியத்தின்மேல் மாத்திரம் கண்ணுயிருந்து ஆரியக் கூத்தாடுவான் போல் நடிப்பன். காரியவாதியாயிருந்து கொண்டு காரண வாதம் செய்பவன்போல் நடிப்பன். பசுவைக்கொன்று செருப்பு தானம் செய்கிற புண்யவான் தானமாக, நல்லரொருவரை நனுகி அடைக்கலமெனப் புகுந்து அபயஸ்தம் பெற்றபின் பத்மாசுரனைப் போல் அந்த அபயஸ்த முத்திரை பலிக்கிறதா வென்று பார்க்க குருத்துரோகமே செய்து குரூர சித்தனுயிருந்து நடப்பன் அபயஸ்தம் கொடுத்த அன்புடைவள்ளல். "கெடுவான் கேடு நினைப்பான்" என்று "ஒழுவில் ஒடுங்கி" மோன முத்திரை பூண்டால் அந்த மோனத்தையும் கலைக்க வழிதேடுவான் பாவி. ஜீடாஸ் யேசுநாதரைக் காட்டிக்கொடுத்ததுபோல் பழிபாவத்துக் கஞ்சாது அழிவழக்கைத் தொடர்ந்து அக்கிரமஞ் செய்வான். குருத்துரோகி தத்தாபகாரஞ் செய்தாலும் திருவுருவான குருவருள் பெற்றவர் மறுமொழி சொல்லாது ஒரு மொழி வாக்கில் உவந்துமே நிற்பர்.

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனமினி நமக்குள
தென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலே மென்றான்"

ஒருமொழிவாக்கிலுறுதியுள்ள உண்மையாளன். அவனிடத்துள்ள உண்மை வலியை யுணராலாற்றாத விசுவாமித்திரரிஷி "மாதவன்" ஆயினும், அவருடைய தபோமஹிமையினால் இந்திரஜால மஹேந்திரஜால மெல்லாம் இயற்றி அவ்வுண்மையாளனை "உடல்பொருளாவியு மொடுங்க" வருத்தினுயினும், "மெய்யே வெல்லும் பொய்யல்ல" என்ற வேதவாக்குப்படி அவன் தபோமஹிமை யெல்லாம் உண்மை யுறுதிக்கு எதிர் நிற்கலாற்றாது "மதிமிழந்து தன் வாயுமிழந்த" வனுய் மறைந்து போனுன்.

"அன்றே யென்றன் ஆவியும் பொருளும்
உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் எனை
யாட்கொண்ட போதே கொண்டிலையோ!"

என்றார் எம்பெருமானும் மாணிக்கவாசகர். உண்மையில் உடல் பொருளாவியையும் தத்தம் செய்த வாராதலால்தான்,

"இன்றோரிடையூறெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே!"

என்றார். உண்மையாக உடல் பொருள் ஆவியையும் "உடையானே!" யென்று ஒப்புக்கொடுத்தாரை உலகத்தார் என்ன செய்யலாம்! உடல் பொருள் ஆவியையும் ஒருங்கே வதைக்கலாமானுலும் இவர்களுக்குள்ள இந்த அசுர பலத்திலும் அவர்களுக்குள்ள தியாகபலம் பெரிதாகையால்,

"முன்னே யென்றன் ஆவியும் பொருளும்
அன்னே யென்றன் உடமை யெல்லாமும்
பொன்னே யென்னையாட் கொண்டபோதே
என்னே யன்னே கொண்டிலையோ!"

"இனிபோரிடை யூறெனக் குண்டோ!
தனியே யென்னைத் தடுத்தாண்டாய்!
கனியே தேனே கற்கண்டே!
தனியேன் தரையில் தவிக்க லாமோ!" என்று

அன்றில் பக்ஷியைப்போல் பிரிவாற்றாது பாடிக்கொண்டு உளம் குழைந்து குழைந்து உடையானையே சிந்தித்துச் சிந்தை யிழந்த நிர்விகல்ப சமாதியில் தம்பிராணனை யொடுக்கி மனமொடுங்கப் பெற்ற மாண்புடையாராய் மஹாஸமாதி யெய்துவார். அறிவுடையார் "ஹரஹர" வென்றவருண்மையறிந்தய்வர். அறிவாதார் விருத்திராசுரனைப் போல் நீண்டு வளர்ந்து செத்துஞ் சாகாத நடைப்பிணமாய் உலகிலிருந்து வினையிழைத்துக் கொண்டிருப்பர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 13 MAY 1912 MADRAS.

உண்மையறியும் பக்குவ மில்லாத பாமர ஜனங்கள் "செத்தான் சனி தொலைந்து!" என்றிருப்பார்களென்பர். "செத்தவன்" யார்? என்பதுதான் கேள்வி. மாசுணம்போல் உண்டுடுத்துறங்குவதே தொழிலாக உள்ளம் செத்து நடைப் பிணமாகத் திரிந்து பூதப்பிரேத லோகமே கதியாக விருப்பவன் செத்தவனு? சாகாமற் செத்து சத்திய வாழ்வெய்தி நல்லாருளத்தில் நலம் பெற வமைந்து நித்திய வாழ்வெய் திருப்பவன் செத்தவனு? இந்த தேஹம் கர்மத்தினுல் வந்தது. கர்மமுள்ள வரையில் அனுபவித்தே யாகவேண்டும். கர்மம் ஒழிந்து போனுல் இந்த தேஹம் நிறைவெளியில் கரைந்துபோகும். இந்த தேஹம் என்றுல் எது? இந்த பூத தேஹமல்ல அது ஐம்பூதத்தி லழிந்தொடுங்கும். ஆனுல் சூக்ஷ்ம தேஹமாகிய மாயாசரீரமோ வென்னில், அதுவுமல்ல. ஏனெனில் அது கர்ம வலையில் சிக்கிப் பிறப்பிறப்புக்காளாகி யுழலும். பின்னையது வெனில் "உள்ளுடம்பு" என்று சொல்லும் உண்மையான ஜீவோபாதியும் கடந்த தேஹம். அது 'கர்மமதற்கப்பாலே' யுள்ளதாய் "கர்மமுற்று மொழிந்த பின்னர் கரைந்து போகும் நிறைவெளியில்." நல்லவன்கதி அப்படியானுல், அக்கிரமக்காரன் பாடு என்ன வென்று கேட்கலாம். அவன் கர்மம் அவனை விடாது. நல்லார் பாபத்தைக் கொட்டிக்கொண்டவனுதலால் அவனுக்குக் கர்மம் மேன்மேலும் வளரும். ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுடு தீர்த்த யாத்திரைபோகையில் ஒரு லோபியான பணக்காரன் வீட்டில் போய் வெளியாடம்பமாய்த் தர்மம் செய்கிற பாபியிவன் என்றுகாட்ட வேண்டி, காலம் தப்பி பசி மூர்ச்சைபோகிற தென்று அதிதி பிக்ஷை கேட்க, அவன் அகாலத்தில் வந்தையாவென்று அதட்டி வெருட்டி போட்டிவிட்டான். பகவான் அவனுக்கு இன்னும் மேன்மேலும் ஐசுவரியம் விர்த்தியாக வென்று சொல்லிச் சென்றார். அலைக்கேட்டு மயங்கின அர்ச்சுனன் நல்ல உத்தம தர்மம் செய்துவந்த உண்மைக் கொடையாளி வீட்டில் பகவான் போய் அமுதுண்ணவும் உலகசம்பத்து நிறைய வாழ்ந்த அவன் வீட்டில் ஒரு க்ஷணநேரத்தில் எல்லாம்குறைய இந்த அதிசயம் பொறுக்காமல், இப்படிக் கெட்டவனுக்கு உலகசம்பத்தும் நல்லவனுக்கு சம்பத்தழிவும் உண்டுபண்ணின மர்மமென்னவென்று கேட்கலானுன்.

கெடுவான் கேடுநினைப்பா னுதலால் அவன் கேடு விர்த்தியாக அவனுக்கு மேன்மேலும் சம்பத்தையளித்தேன். கைப்பொருளுள்ளவன் மெய்ப்பொருளறியா னுதலால், இவன் கைப்பொருள் கழன்று மெய்ப்பொருளறிந்து பெறற்பேறு பெற மனமுவந்தேன் என்றார்.

அர்ச்சுனன் ஒன்றும் சொல்லமாட்டாமல் "திருட்டுக்கிருஷ்ண!" என்றான்.

நல்லார் தீயார்க்குக் கேடிழைக்கா விட்டாலும் "தீமைவிளைத்தால் தீமைவிளையும்" என்றபடி அவர்கள் கெடுபுத்திதானே கேடுவிளைக்கும். இதன் குட்டு விளங்கவே,

"காசைப் பெரிசாய் நினைப்பவர்கள்
வேசைப்பரிசாய் வினையிழைத்தால்
ஆசைக்காரசே அரும்பொருளே!
தூசைத் தூணுய் மாற்றுவையே!"

என்றும்; ஸத்யவான்களுக்கு நாதத்துள் வசிக்கும் பிரணவப் பொருளே, அஸத்யவான்கள் உள்ளத்தில் வேர்ப்புழுவாயிருந்து அரிக்குமென்றும் சொல்லலுற்றார்.

"தூசைத் தூணுய் மாற்றுவையே
ஆசைக்குள்ளிருந் தாட்டிவைப்பாய்
ஓசைக்குள்ளுறு மோம்பொருளே
வேசைக்குளுன்னுரு வேர்ப்புழுவே."

"ஆணில்லை பெண்ணில்லை அலியில்லை
ஆணும் பெண்ணும் அலியும் நீ
தூணில் தோன்றும் நரஸிம்மநீ
ஊனில் தோன்றும் ஓஜஸு நீ".

நரஸிம்மவதாரம் எப்பொழுதும் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்த மாதலால் துஷ்டரைக்

கண்டிக்க ஆளில்லையென்று சொல்லக் கூடாது. இரணியாக்ஷனைக் கொன்ற உக்ர நரஸிம்மரே பிரஹலாதனுக்கு சாந்தமூர்த்திபாய் யோக நரஸிம்மரானதுபோல, துஷ்டருக்குத் தூணில் தோன்றும் நரஸிம்மரே சிஷ்டருக்கு ஊனில் தோன்றும் ஓஜஸ் ரூபமாகி ஸர்வமங்கள ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கும். ஆதலால் அந்த நரஸிம்ம மூர்த்தியின் சக்தியையே சிஷ்டர்கள் தங்களைக் காப்பாற்றும் காயத்ரி ரூபமாகத் தொழுவார்கள்.

"ஓஜோஸிபலமஸிப்ராஜோஸி
தேஜோஸிதிவ்யதேவகாமாஸி
யஜோஸியஜ்ஞகாமாஸி
ராஜோஸிராஜ்யதர்ம்மணி!"

ராஜசிங்கமும் ராஜ்யலக்ஷ்மியும் அந்த நரஸிம்ம சக்தியேயன்றி வேறில்லை. பின்னுமது,

"விசுவமஸி விசுவாயு:வைதேஹி
ஸர்வமஸி ஸர்வாயு:ஸர்ஸ்வதி
கர்வமஸி கர்வஹர காயத்ரி
ஸத்யமஸி ஸத்யாத்ம ஸாவித்திரி!"

யாகவிருக்கிறது. அப்படியென்றால், எல்லாமாய் எல்லாவற்றிற்கும் உயிர் நிலையாய் அஜபா காயத்ரி யென்னும் அசரீரி வாக்காயிருக்கிறது பிரஹ்மசாக்ஷியுமாகி பிரஹ்ம சக்தியுமாகி ஸரஸ்வதியென்னும் வாக்தேவியும் அந்த நரஸிம்ம சக்தியே. உண்மைக் கர்வத்துக்கு ஆதாரமாயும், வீண்கர்வத்தை யழிப்பவளாயும் காயத்ரி ரூபமாயு மிருப்பது அந்த நரஸிம்ம சக்தியே. ஸத்யனந்த ஸ்வரூபிணியாயும் ஸத்யாத்மக ஸாவித்திரியாயு மிருப்பது அந்த நரஸிம்ம சக்தியே.

இப்படி நித்திய வாழ்வுள்ள ஸாவித்ரி செத்தாளென்று ஒரு இழவோலை யனுப்பித் துக்கம் பாராட்ட வில்லையென்று பிராணனை வதைத்தால் அதற்கு என்ன செய்கிறது! செத்தவளிடத்தில் அன்பு வைத்தால் அன்பு முளைக்குமா? விவேகசிந்தாமணிப் பொருளைக் கொள்ளையிடப்பார்த்தால் முடியுமா? செத்தவளோடு செத்தாரைச் சுடுகாட்டில் கண்டு பேசிக் கொள்ளலாம். சாவு மில்லாமல் வாழ்வு மில்லாமல் இரண்டுங் கெட்டானாய்த் திண்டாடும் அநிர்வசனீய அசுரப் பேயை ஸாவித்திரி தேவதை யென்றும், அதை உபநிஷத் வித்தை யென்று கொண்டாடவில்லை யென்றும் குறைப்பட்டுக் கொண்டால் இக்குறையைத் தீர்க்க யாரால் முடியும்? ஈசுவரனாலும் முடியாத குறையைத் தீரென்றால் தீர்ப்ப தெப்படி? உண்மையான உபநிஷத் வித்தையை உபாசிக்கும் உத்தமாங்கமான சங்கம புருஷன், (Black Magic) என்று சொல்லும் அசுராத்மகமான அவித்தையைப் பூஜிக்க எப்படி சம்மதிப்பான்? சம்மதிக்க முடியாதாகையால் உபத்திரவம்பொறுக்காமல்,

"ஹாஹா தேவி ஹாதேவி
ஹரிஹரி தேவி ஹரிதேவி
பட்பட் தேவி படதேவி
சட்சட் தேவி சட தேவி"—என்று

உக்ர நரஸிம்ம சக்தியைத் துதிக்கலானான்.

ஏகாதசருத்ரரும் ஒன்று சேர்ந்து வந்தாற்போல் தோன்றிய பிரளயகால ரௌத்திர சக்தியைச் சாந்தி செய்வான், பின்னர்,

ஹரேராம ஹரேராம ராமராம ஹரேஹரே
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண கிருஷ்ண
கிருஷ்ண ஹரேஹரே

யென்று கலிசந்தாரண உபநிஷத் வித்தையைத் தொழலானான். இப்படியாக உபநிஷத் வித்தையை ஆராதித்து உண்மைக் கவசம் பூண்ட ஒரு மஹான் அதன் அந்தரங்கமான உண்மையை உபதேசிக்க அதை விவேகசிந்தாமணிக் கவசமாகத் திருவாய் மலர்ந்தருளிய அருள்வாக்கை ஆதாரமாகக் கொண்டு "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" யன்றி வேறுதுணை யில்லை யென்றுள்ளங்குளிர வுணர்ந்து, உணர்ந்தோர் உண்மைக் கேற்றபடி ஸ்ரீராமதீர்த்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய சிலவாக்கியங்களைக் காட்டிய நண்பர் மனங்குளிர இங்கே உணர்ந்தவாறு பலருமறியப் பஹிர்முகப்பட்டெழுதலானேம். பஹிர்முகப்பட்டதால் வந்தணுகிய குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருளுவர். சிறியோர் சிறிதும் சிரிக்கினும் உண்மை யுணரார். உணர்விலா மக்கட்கு ஓர்விலை சார்விலை யாதலால் அவர்களைப்பற்றி இங்கே விசாரப்படத் தேவையில்லை. "வருவனதானே வரும்" போவனவும் அப்படியே! ஆகையால், வரத்தும் போக்கும் போச்குவரத்தில்லாப் புந்திக்கு லக்ஷியமில்லை.

ஓம் தத்ஸத்.

———:-:———

The Decad of Dread.

(After Sri Manicka Vachagar.)

"அச்சப்பத்து."

(அசங்கோகமாதல்.)

———:-:———

"Ingratitude and benifits forgot are worse than Wind and Frost."

"Most friendship is feigning most loving folly."—*Shakespeare.*

"ஆடியகூத்தமர்ந்தசங்கோகமானபின்
எப்படியிருந்தாலென்!
அப்படியிப்படி ஆனந்தப்படி
எப்படியிருந்தாலென்!"

I

"புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்"
* செற்றிலாத் தவக்கே டர்தம்
சேர்க்கையால் வருங்கே டஞ்சேன்;
கற்றிலாக் கயவர் கூட்டத்
திருந்தெழுங் கேடு மஞ்சேன்
உற்றுவாழ் உறவேபோ லுயிர்வாங்கும்
அறிவிலார் உறவைக்கண் டஞ்சுமாறே!

II

"வெருவரேன் வேட்கை வந்தால்; †
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்;"
கருவோ டுருவைக் கரையவே
செய்யும் வேசைப ருறவஞ்சேன்;
உருவோ டிருள்மண் டினவா
றெருமைக் கடாவே றெமனஞ்சேன்;
குருவோ டுறவாய்க் கூடிக்கெடுக்கும்
அறிவிலார் உறவைக் கண்டஞ்சுமாறே!

III

"வன்புலால் வேலு மஞ்சேன்;
வலைக்கையார் கடைக்கண் அஞ்சேன்;"
புன்புலால் யாக்கை போற்றும்
புல்லியர் உறவும் அஞ்சேன்;
என்புதோல் அன்றிவேறு பசையிலா
என்புக்கு டுறைபூதப் பிரேதமஞ்சேன்;
வன்புசெய் தன்புகொண் டுயிர்வாங்கும்
அறிவிலார் உறவைக்கண் டஞ்சுமாறே!

IV

"கிளிஅனார் கிளவி அஞ்சேன்;
அவர்கிறி முறுவல் அஞ்சேன்;"
புளிஅனார் போதப் புந்திகின்
றெழுபுன் மொழியும் அஞ்சேன்;
துளிபுலாங் கண்ண ராகித்
தொழுதெழு துள்ள நெக்கிங்
கிளியிலா தன்புசெய் வம்பர்தம்
முறவிலா உறவைக்கண் டஞ்சுமாறே!

V

"பிணியெலாம் வரினும் அஞ்சேன்;
பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்;"
பணிவிலாத் துட்டர் கூட்டத்
துறவொடு பகையும் அஞ்சேன்;
அணிமணி சித்திபூண் டம்பரத்துலாவு
சித்தர்தம் மாற்றம் அஞ்சேன்;
துணிவிலா துள்ளஞ்செத்துக் கள்ளஞ்செய்வார்
உறவிலா உறவைக்கண் டஞ்சுமாறே!

* செல்ல வேண்டிய வழிசெலாத (சன்மார்க்கங் கெட்ட); நன்னெறி விட்டுவிலகிய (with reference to Black Magic.)

† 'I shudder not though evil yearnings rise' Pope. விருப்பு வெறுப்புக்குக் காரணமாகிய 'வேட்கை, உதிப்பினும் அதற்கஞ்சி நடுக்கமாட்டேன்.'

VI

"வாள்உலாம் எரியும் அஞ்சேன் ;
வரைப்புரண் டிடினும் அஞ்சேன் ;
நீள்நிலா வுலவா நிசியில்
நெடுவழி போவார் தம்மை
வாள்கொடு வீசு வேடர்
வழிப்பறி சிறிதும் அஞ்சேன் ;
ஆள்அலா தன்பிலா துறவாடும்
அறிவிலார் உறைவைக்கண் டஞ்சுமாறே !

VII

"தகையிலாப் பழியும் அஞ்சேன் ;
சாதலை முன்னம் அஞ்சேன் ;"
நகைமுகங் காட்டி நண்ணித்
தகையிலாத் தீமை செய்து
பகைமுகத் தஞ்சி யோடும்
பாதகர் உறவும் அஞ்சேன் ;
பகைபிலா நேசர் போன்று மோசஞ் செய்
நாசகாலர் உறவைக்கண் டஞ்சுமாறே!

VIII

"தறிசெறி களிறும் அஞ்சேன் ;
தழல்விழி யுழுவை ‡ யஞ்சேன் ;"
வெறிதரு மபலை அஞ்சேன் ;
வெற்றிவேற் படையும் அஞ்சேன் ;
பறிமுதற் கொடுக்க அஞ்சேன் ;
பாவியர்தம் கர்மம் அஞ்சேன் [மந்தப்
அறிமுகங் காட்டிப்பின்னர் பறிமுதல்கொள்ளு
பாதகர் உறவைக்கண் டஞ்சுமாறே !

IX

"மஞ்சலாம் உருமும் * அஞ்சேன்,
மன்னனோ டுறவும் அஞ்சேன்;"
நஞ்சையே அமுதமென்ன நயந்துண்ணக்
கொடுப்பார்தம் வஞ்சம் அஞ்சேன்;
பஞ்சைபோற் கஞ்சிகூழைக் குடித்துபிர்
தரித்திருக்கத் தானும் அஞ்சேன் ;
நெஞ்சிலே வஞ்சம்வைத்து நேசங்காட்
டறிவிலார்தம் முறவைக்கண் டஞ்சுமாறே !

† தறிமரத்தில் கட்டிய யானை
‡ எரியுமிழும் விழிபார்வையுடைய புலி.
* I fear not thunderbolt from out the cloud.
மஞ்சு=ஆகாயம். உருமும்=உருமுகின்றதிடியும்.

X

"கோணிலா வாளி † அஞ்சேன் ;
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்;"
ஊணிலா துறக்கம் விட்டு
ஊர்ப்புறம் உலாவல் அஞ்சேன்;
"நீணிலா அணிபி ஞனை"
நினைந்துநின் றேற்ற மாட்டா
"ஆணிலா தவர்கள் செய்யும்
அறிவிலா உறவைக்கண் டஞ்சுமாறே !

உண்மைத்தர்ப்பணம்—"Fulfilment of the Law".

அஞ்சினேன் அச்சம் விட்டேன்
அடுத்தவன் காலைத் தொட்டே ;
கெஞ்சினேன் கூச்சம் விட்டேன்
கெடுத்தவன் வாலைச் சுட்டே ;
துஞ்சினேன் தூக்கம் விட்டேன்
துரோகிசிந் தனையைக் கொன்றே ;
மிஞ்சினேன் பெய் துடிக்க
மார்க்கம்விட் டவன் பேசக் கண்டே !

சிந்தாமணிக்ரஹம்
9-3-1912 } "விவேகசிந்தாமணி யரசு"

—:o:—

"Heigh-ho the Holly!"
A Song of Life.

[The duke or ruler of a country had a wicked brother who took his throne from him and drove him from his palace out into the forest. Many of his nobles followed him and they lived in the forest passing their time in hunting the wild deer and talking pleasantly together and singing Songs. One day one of the lords sang a sang about the different kinds of pain that men have to suffer. He sang about the bitter wind that blew on them in the forest and the frost that chilled them but he also sang that man suffers not so much from the weather as he does from the unkindness of his friends. Ingratitude and benefits forgot are worse than wind and frost. Therefore the forest life in which they all lived lovingly together was a happy one although at times they suffered from the weather. You can now read his song which you will find if you look for it in Shakespear's play, "As you like it." The holly is a tree which keeps its dark green leaves all through the winter when most of the trees are bare and therefore seems to care nothing for the weather.]

† நேரே சென்று பாயும் அம்பு.

I

"Blow blow thou winter wind
Thou art not so unkind
As men's ingratitude ;
Thy tooth is not so keen
Because thou art not seen
Althrough thy breath be rude
Heigh ho! Sing heigh-ho! unto the green holly;
Most friendship is feigning most loving mere folly,
Then heigh-ho! the holly
This life is most jolly."

II

"Freeze, freeze thou bitter Sky
Thou dost not bite so nigh
As benefits forgot
Though thou the waters warp
Thy sting is not so sharp
As friend's remembered not
Heigh-ho Sing heigh-ho unto the green holly
Most friendship is feigning most loving mere folly,
Then heigh-ho the holly
This life is most jolly."

"ஈதென்ன நேசமோ கனமோசமோ!"

—:o:—

"அன்பும்சிவமும்இரண்டென்பர் அறிவிலார்
அன்பேசிவமாதாரும்மறிகிலார்."—திருமந்திரம்.

"ஓங்காரியென்பாளவளொருபெண்பின்னை
நீங்காதபச்சைநிறத்தையுடையவன்."—திருமந்திரம்.

பல்லவி.

ஈதென்னநேசமோ கனமோசமோ!

அனுபல்லவி.

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

கண்ணிகள்.

1. பச்சைப் பாலனவன் பால்மன மருவாயன்
கொச்சை வார்த்தையால் குணம்பல பேசுவன்
அச்சம் விட்டவ னார்வம் நிறைந்தவன்
குச்சைக் கொளுத்திய குணக்கேடன் பாரே!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

2. லஜ்ஜை கெட்டவன் லக்ஷியத்தைக் கொன்றவன்
மஜ்ஜை மாம்ச [illegible] மதுவுண்ட போதையன்
ரஜ்ஜைக் கண்ட[illegible]! அரவென் றலறுவன்
லஜ்ஜைவிட் டெ[illegible] சாகவே பேசினன்பாரே!

—ஈ[illegible]னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

3. உள்ளஞ் செத்தவன் கள்ளமே செய்தான்
மெள்ள வந்தேயென் னுள்ளம் புகுந்தான்
குள்ளனைப் போலவன் கள்ளத் தனஞ்செய்தே
பள்ளிப்பய லம்மன் பாலையை எசினன்!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமே !

4. பள்ளிப் பயலம்மன் பாலையை யிச்சித்து
வெள்ளப் பதுமையாய்ப் பூஜிக்க நேசித்தான்
அள்ளிக் கொடுத்தவன் அறப்பிச்சை யிடாமலே
துள்ளிக் குதித்தம்மா! தொப்பென்று விழுந்தான் [பார்!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ !
வேறென்னபாசமோபடுநாசமோ!

5. உள்ளத் துணர்வை யோர்த்துண ராதவன்
கள்ளத் தனமாகக் கல்விமிகக் கற்றான்
உள்ளப் படத்தொளி ருயர்ப்ரஜ்ஞா பாரமிதா!
கள்ளப்பய லுன்னைக் காட்டிக் கொடுத்தானே!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

6. உம்பர்க்கு மெட்டாத வுயர்ப்ரஜ்ஞா பாரமிதா!
வம்பர்க்கு ணட்டாத வாலைவித்தை யம்பிகைநீ!
நம்பர்க்கு காணாதே நாமகன்சி லம்பெலிக்க
வம்பர்க்கு எட்டாதே வந்திடுவாய் வரதேநீ!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

7. வேசைய ருறவென்ன ஆசையி லழுந்தினன்
காசையே பெரிதென்று காமத்தி லழுந்தவே
ஓசையே பெரிதென்று ஓமவென் றோதவும்
வீசையை முறுக்கியே போபோ வென்றனன்!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

8. போபோ வென்றான் போக்குவர வற்றானைப்
போபோ வென்றான் பொய்மலி வேதியன்
போபோ வென்றான் போக்காலம் மர்த்தாற்
போபோ வென்றான் போய்வரக் காண்பாயே!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

9. ஊர்பேர் நச்சியே ஊத்தைவாய் திறந்தவன்
ஊர்பேர் நச்சியே உன்மத்தம் பேசினன்
ஊர்பேர் வேண்டேன் உற்றுரை வேண்டேனுன்
ஊர்பேரில்லாஉண்மைக்காரீரயுன்னடிதந்தாளே!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

10. தர்மம் தலை யெடுக்க வேண்டும்!
வர்மம் தலை சாய வேண்டும்!
கர்மம் வந்து சூழ வேண்டும்!
மர்மம் வெளி யாக வேண்டும்!

—ஈதென்னநேசமோகனமோசமோ!

அம்மா! இஃதென்னவேஷமோகனதோஷமோ!
வேறென்னபாசமோபடுநாசமோ!

சதிமோசஞ்செய்தவன்மதிமோசம்போனான்
மதிமோசம்போனவன்கதிமோசம்போனான்
அதிமோசம்செய்தவன்அதோகதியாவான்
மதிமோசஞ்செய்தாலும் † ரதிமோசஞ்செய்யாதே!

நேசமோசகோசபாசநாசமாயநமோநமஃ
மோசநேசபாசகோசமாயநாசநமோநமஃ
ஆசமோசவேசநேசஓசைநாசநமோநமஃ

குமருகுருபராநந்தன்.

† cf. "Beauty is Truth, Truth is Beauty That's all Ye know and all ye need to know."

Change of Government.

கவர்ன்மெண்டு மெம்பர்கள் மாறுபாடு.

இந்த மார்ச்சுமீ 13உ கூடிய சட்ட நிருபண சபையில் கனம் லார்ட் கார்மிகேல் அக்கிராசனம் வகித்து சபை நடபடிக்கைகளை நடத்தி முடிந்தபின் அடுத்த ஏப்ரல்மீ 2உ கூடும் சட்ட நிருபண சபை மீட்டிங்கில் தான் இருக்கமுடியாமல் நேரிடுமென்றும், கனம் ஸர் மர்ரே ஹாமிக் அவர்கள் அவருக்கு பதிலாக கவர்னர் ஸ்தானத்தை வகித்து அக்கிராசனாதிபதியாக விருப்பாரென்றும் சொன்னார். இந்த மாசக் கடைசியில் கனம் கவர்னர் இவ்விராஜதானியை விட்டு வங்காள இராஜதானிக்குப் புதிய கவர்னராகப் போகிறாரென்று உலாவிய சமாசாரம் மெய்யென வேற்பட்டது. பலர் வங்காள இராஜதானிக் கவர்னர் ஏற்பாடு அமுலுக்குவர பார்லிமெந்து சபையார் அனுமதி வேண்டுமாதலால், இந்திய கவர்ன்மெண்டு ஆக்ட்டு சீர்திருத்தப் படுகிறவரையில் வங்காளத்து கவர்னர் ஏற்பாடு அமுலுக்கு வருவது ஸாத்தியமாயிராது என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதெல்லாம் பொய்யாகப் போய்விட்டது. கவர்னர் இந்த மாசக் கடைசியில் இவ்விராஜதானிக்குப் போகிறார். புதிய கவர்னர் லார்ட் பென்டலாண்டவர்கள் வருவதற்கு இன்னும் 6-மாசம் செல்லும். அதுவரையில் ஸர் மர்ரேஹாமிக் கவர்னராக வேலைபார்த்து வருவார். இவர் மிகவும் நல்லவர். சாந்த குணமுள்ளவர். நல்லபேர் வாங்கினவர். இவருக்கு 6-மாசகாலம் கவர்னர் வேலைபார்க்கும்படி நேரிட்டது இவரைச் சேர்ந்த எல்லாருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஜனங்களுக்கும் சந்தோஷம்தான். ஆனால்இவர், 6-மாசம், புதுகவர்னர்வருகிற வரையில்தான் அந்த வேலையி லிருப்பாராதலால் புது ஏற்பாடுகள் ஒன்று செய்ய சாத்தியப்படாது. லார்ட் கார்மிகேல் போன மார்ச்சுமாசம் வர முடியவில்லையென்று ஸர் ஆர்தர்லாலி 7-மாசகாலம் அதிகமாக கவர்னராயிருந்தார். லார்ட் கார்மிகேல் வந்ததும் டில்லிதர்பார் அமளியில் ஒன்றும் செய்ய சாத்தியப்படவில்லை. டில்லியிலிருந்துவந்ததும் இவரை வங்காளத்துக்குக் கவர்னராகத் தெரிந்தெடுத்திருக்கிறதாகச் செய்திவந்ததால், இவரும் அடுத்து நிரந்தரமாக நியமிக்கப்படுகிற கவர்னர் வருகிறமட்டும் ஒன்றும் செய்யாது துரைத்தனகாரியங்களை ஏதோ ஓட்டிக்கொண்டு வரும்படி நேரிட்டது. இப்பொழுது இன்னும் 7-மாச காலத்துக்கு இவ்விராஜதானி பாடு திரிசங்கு ஸ்வர்க்கமாக நிற்கும். பிறகு புதிய கவர்னர் வந்தபின் ஒரு வருஷத்துக்கு மேல் அவர் அனுபவம் பெறுகிறவரையில் வழவழா வென்றுதானிருக்கும். இப்படியாக மூன்றுவருஷ காலத்துக்கு இவ்விராஜதானி துரைத்தனம் இப்படி தடுமாட்டமாக விருப்பது சுகிர்தமல்லவென்று பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி யென்கிற பழமொழிப்படி இச்சென்னை இராஜதானி மற்ற இராஜதானிகளெல்லாவற்றிலும் இளைக்காரமாக நடத்தப்படுவதாகப் பலர் முறையிடுகிறார்கள்.

புதிதாய் வருகிற கவர்னர் மிகவும் நல்லவரென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். லார்ட் கார்மிகேல் அவரைப்பற்றி மிகவும் மெச்சிப் பேசினார். அவர் மிகவும் அனுதாபமுள்ளவராயிருப்பரென்று சொன்னார். பலர் அவர் லார்ட் கார்மிகேலுக்கு ஈடாகமாட்டா ரென்கிறார்கள். வங்காளத்து கவர்னர் வேலையை முதலில் அவருக்கு அளித்தார்களாம். அவர் வேண்டாமென்று சொல்லி விட்டதன்மேல், லார்ட் கார்மிகேலை அந்த வேலைக்கு நியமிக்கும்படி நேரிட்டதாம். லார்ட் பென்ட்லாண்ட், பிரபுப்பட்டம் பெறுமுன் காப்டன் வின்க்ளேர் என்னும் பேர் வகித்திருந்தவர். இவர் லார்ட் அபர்டீன் அவர்களுடைய குமாரத்தியை விவாகம் செய்து கொண்டிருப்பதால் தான் இவருக்கு ஆங்கிலேய மந்திராலோசனை சபையில் அதிக செல்வாக்குண்டென்று சிலர்சொல்லுகிறார்கள் மந்திராலோசனை சபையில் மெம்பராயிருப்பவர் சாமர்த்திய மில்லாதவராய் இருப்பது துர்லபம். இப்பொழுது எல்லாம் தூரத்துப் பச்சையாக விருக்கிறது. அடுத்த அக்டோபர் மாசக்கடைசியில் அவர் இங்கே வந்து வேலையை ஒப்புக் கொண்ட பிறகுதான் அவருடைய உண்மைக்குணம் வெளிப்படும். அது வரையில் 'எல்லாம் ஈசன் செயல்' என்று நன்மையையே எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான்.

கனம் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுக்கு பதிலாக, அட்வொகேட்ஜெனரலாயிருந்த கனம் பழமானேரி சுந்தரப்பய்யர் குமாரர் சிவஸ்வாமி அய்யர் அவர்களை மெம்பராக நியமித்திருக்கிறார்கள். இவர் வேலை ஒப்புக்கொண்டு அதிக சிரத்தையோடு தமது புதியவேலையைப் பார்த்துவருகிறார். இவர் மிகவும் நல்லவர். தப்பு வழிக்குப் போகவேமாட்டார். மிகவும் நிதான புத்தியுடையவர். நிதானம் தப்பாமல் சமரஸபாவமாக எல்லாவற்றையும் நடத்தும் சுபாவ முள்ளவர். இவருக்கு இந்த வேலை யானதைப்பற்றிச் சந்தோஷப்பட்டு நன்றிமுகமன் கூறாதவர்களில்லை. இவர் இந்த உந்நதபதவிக்கு வந்ததைப்பற்றி ஜனங்கள் எல்லாருக்கும் மிகத்திருப்தியே யன்றி வேறில்லை. இவர் கௌன்ஸில் மெம்பரானதைப்பற்றி மனமுவந்து இவருக்கு நன்றிமுகமன் கூறுகிறோம். கவர்ன்மெண்டு சீப் செக்ரிடேரியாக விருந்த கனம் ஸர் எச். ஸ்டூவர்ட் அவர்கள் 4-வது மெம்பர் ஸ்தானத்துக்கு வந்திருக்கிறார். இதுவும் எல்லாருக்கும் சந்தோஷமே.

இது எழுதியானபின் கனம் லார்ட் கார்மிகேல் கடல்மார்க்கமாய் டப்பரின் கப்பலில் மார்ச்சுமீ 29உ வெள்ளிக்கிழமை சாயங்காலம் 5-மணிக்கு சென்னையைவிட்டுப் புறப்பட்டு கல்கத்தாவுக்குப் பிரயாணமாகப்போனார்.

A JOLLY SONG OF LIFET ETERNAL.

The Resurrection of Public Life.

"The Grave is not the Goal of Life."

[My concluding words to you are; Be true to your God true to your Emperor, true to you country and to yourselves. Follow these precepts and have no fear for the future of your country or of yourselves.—H. E. the Viceroy's Convocation Address to the Graduates of the Calcutta University.

"I am the Life, the Truth and the Resurrection"—Jesus.

I

The Law of Karma or Action.

The four-faced lair looks fair with a fool'scap,
But 'e 'as....."Nothing to do with..."says this scrap;
The Seven-dashier who pleads and leads 'll judge
Of accounts rendered by ME his agent nor will he budge
A jot of capital, interest, or profits made,' *aha!*

"Then heigh-ho the holly!
This life is most jolly!"

II

The Law of Retribution or Reaction.

"One's a fool, other a knave" they all do say ;
"A knave is a knave, but a fool in the hands of a knave
Is equal to a thousand knaves" they also say ;
But a fool and a knave combined with a capital knave
Is more than what the Public can bear or brook !

"Then heigh-ho the holly !
This life is most jolly !"

III

The Balance or the Child of Light.

I'm true to my God, to my parents and my Emperor true
To my studies and principles I am steadfast truce ;
To my country and my own Self I'm bound to be true !
Nor fear nor frown of man on earth I care, to be true ;
Then why need I fear if Fool Knave & Co. play foul !

Let's sing "heigh-ho the holly !
This life is most jolly !"

* "*Resurrection.*"

* "I am the Life, the Truth and the Resurrection."
—*The Madras Standard.* —*Jesus Christ.*

அபயாநந்தவாழ்வு.

———:(*):———

'அச்சந்தவிர்த்தானென்றாதுசங்கே
'யம்பலவாணனென்றாதுசங்கே
'இச்சையளித்தானென்றாதுசங்கே
'இன்பங்கொடுத்தானென்றாதுசங்கே
'இறவாமையீந்தானென்றாதுசங்கே
'எண்ணம்பலித்ததென்றாதுசங்கே
'ஊனேமறிவதென்றாதுசங்கே
'உணர்வேபிரஹ்மமென்றாதுசங்கே
'நானேபவனுமென்றாதுசங்கே
'நானுமில்லையென்றாதுசங்கே!' —

—ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம் [பான் சரித்திரம்.

'அச்சந்தவிர்த்தான்' அபய வரதன். அச்சம் என்றால் பயம். என்னபயம்? மனிதன் சங்கடப்பட்டு சாகப்பிறந்தவனாதலால் சங்கடத்தைக் கட்டிக்கொண் டழுதழுது சாவதும் பிறப்பது மாபிருப்பது உண்மை பறிந்தார்க்கு மிகவும் பயத்தைக் கொடுப்பதே. அந்த பயம் நீங்க 'அஞ்சாதே' என்று அபயங்கொடுத்து, ஆத்ம ஸுஜூர்த்தம் தன் பாதாம்புஜமே சரணுகத் தந்து வரமுத்ரை யளித்து அம்பலத்தில் ஆடிக் 'கூத்துக்காகி'தந்த குருபான் அருள்பெற்றோர்க்குப் பயமேது? யாருக்குப்பயப்பட வேண்டும்? எதற்குப் பயப்படவேண்டும்? உலகம் என்னசெய்யும்? அது எங்கேயுளது? அதன் சக்தி யென்ன இவைக்கெல்லாம் உண்மையான மறுமொழி பகர்ந்தால் உள்ளது உள்ளபடி விளங்கும். இந்த விவேகசிந்தாமணி சஞ்சிகையின் மற்றோர் பக்கத்தில் பிரசுரித்திருக்கிற "அச்சப்பத்து"—"அசங்கோகமாதல்' என்னும் விஷயத்தை வாசித்துப்பார்த்தால் அருள்பெற்றோர் அஞ்சுவது உலகத்தார் அஞ்சுமவற்றைக் கண்டல்ல. யமனுக்கும், புலிக்கும், பாம்புக்கும் விஷத்துக்கும், இடி மின்னல் முதலான ஆதி பௌதிகங்களால் வரும் ஆபத்துக்களுக்குர், பசி பிணி, மூப்பு, பிறப்பிறப்பு முதலான ஆதிதைவிக சங்கடங்களுக்கும், காமக்குரோத லோப மோக மதமாச்சரியாதி அத்யாத்மிக தாபங்களுக்கும் அவர்கள் அஞ்சார்கள். பின்னே? அன்பிலாமல் கண்டு அவர்கள் அகம் நடுங்க அச்சமுறுவதுபோல் வேறு எதையுங் கண்டு அச்சமுறார்கள். அந்த அச்சம் தவிர்ப்பது எப்படி?

மனிதன் சாகப்பிறந்தவனாதலால், சாவுக்கஞ்சி வாழவேண்டும். ஏனென்றால் பிறப்புண்டானால் இறப்பும் உண்டு. இறவாமலிறக்கக் கற்றால் பிறவாமை யென்னும் பெறற்பேறு பெற்றுப் பேரானந்த முறலாம். இறவாமலிறப்பதாவது "ஊனே மறிவதென்றுணர்ந்து" அஃதை விட்டுப் பிரிதலாம். ஊனே மறிவதென்றுணர்ந்த உணர்வு (அறிவு) எதுவோ, அதுவே அலங்கோகமானவிடத்து பிரஹ்மாகாரமாக விளங்கும். அதாவது, எங்கும் நிறைந்தாய், எல்லாம் தானாய், ஸர்வாந்தர்யாமியாய் விளங்கும். இறவாமை யின்னதென்றுணரப் பசியா மருந்தளிக்கும் பரம ரகஸியத்தை உள்ளங் குளிர உணர்ந்தனுபவிக்க வேண்டும். "இடறி விழுந்தானை யெட்டியுதைப்பேன்" என்றான் ஒரு மூடன்.. முதலில் இந்த வார்

த்தை உயிரை வதைத்து உடலைக் கருக்குவதாயிருந்தது. ஏன்? தேஹத்தில் அபிமானமிருந்ததால். இந்த தேஹ அபிமானத்தை யறிந்து களையவும் உயிர்வதைக் காரணமே உண்மைச் சாதனமாக அமைந்தது. அந்தச் சாதனம்பற்றிச் சாதிக்க அதுவே சகஜானந்த மளிப்பதாயிற்று.

"புல்லரிடத்திற்போய் பொருள்தனக்குக் கையேந்தி
பல்லைமிகக்காட்டிப் பறக்க விழிக்கிறேன்'டி !
பல்லைமிகக்காட்டாமல் பறக்கவிழிக்காமல்
புல்லரிடம்போகாமல் என் கண்ணம்மா !
பொருளெனக்குத் தாராயோ !"

என்று சித்தர்வாக்காய்ப் பிறந்த உண்மையைப் பிடித்துத் திரிகரணசுத்தியாய் த்ரியம்பகனாய் உபாஸித்து நிற்க இல்வாத்மனைப்பற்றிய பாவமெல்லாம் ஒன்றொன்றாய்க் கழன்று விழுந்தது.

"சேவைக் கொண்டுளம் சோதித்தே, மாயே லகபொருள் கொள்ளைவிட்டாய்!" என்றதற்கு அர்த்தம் அநர்த்தம் என இரண்டுண்டு. அர்த்தம் என்பது உண்மையான லக்ஷியப் பொருள். அநர்த்தம் என்பது பொய்யான பாவனப்பொருள். பாவனப்பொருளைப்பற்றி நின்றர்த்தம் செய்தால் அது அநர்த்தம் விளைக்கும். ஏனெனில் "பற்றொன்று பற்றொன்று பவோபவம்!" எண்ண எண்ணப்பற்றுப் பரவும், எண்ணம் பலிப்பது சிந்தை யிறந்தவிடத்திலே யாதலால், எண்ணமெண்ணும் ஈசுவர சங்கற்பமே பலிக்கும். "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினமனம் புண்ணானேன்" என்றபடி வீண் மனோராஜ்ஜியம் செய்வது கர்மத்தை வளர்த்து ருணத்தையே உண்டுபண்ணும். ஆகையால், "எண்ணம் பலித்ததென் றாதுசங்கே" என்றால், "ஸத்யமேவஜயதேநாந்ருதம்" "தர்மமேஜயம்" என்கிற ஸத்பாவனை பலித்தது என்று அர்த்தமேயன்றி ஊர்க்குடியைக்கெடுத்து உண்மைத்துரோகம் செய்து காசையே பெரிசாய் நினைத்து "பார்க்காய்க்குப் பங்கை விற்றவன் கதையாக" உபநிஷத்துக்களை உண்மையறியாமல் படித்துவிட்டு குருத்துரோகம் செய்து குடிகெடுக்கும்யோசனை பலித்தது என்று அர்த்தம் செய்யக்கூடாது. அந்த எண்ணம் பலிப்பதுபோல் காட்டிக் கடைசியில் பலிகொள்ளும். ஆகையால் "இஷ்டசித்தி" யென்றால் குடிகெடுக்கும் யோஜனைபலித்தலன்று. "தர்மமேஜயம்" என்ன "தர்மம் வெல்லக்காத்தலே"இஷ்டசித்தி. இந்த இச்சையொன்றே இச்சிக்கத் தக்கதாம். தர்மரக்ஷணம் செய்யவல்லவர்கள் தர்மம் தலையெடுக்கப்பார்த்து "இச்சையளித்தானென் றாதுசங்கே!" என்று சங்கத்துவனிகளைப்பிஜயபேரிகையடிப்பர். ஏனெனில் "இச்சையளித்தான்" தானே "இன்பங்கொடுத்தான்." தர்மம் ஜயிக்காவிட்டால் இன்பமில்லை. ஸத்யம் பலிக்காவிட்டால் சுகமில்லை. அதர்மமும் அஸத்யமும் பலிப்பதுபோல் காட்டி சலிப்பைத் தரும். சலிப்புண்டானால் வலிப்புண்டாகும்; வலிப்புண்டானால் அகம் விரியாது குவிந்து குறுகும். அகம் குறுகினால் எல்லாம் குறுகும். அகம் குறுகக்குறுக உள்ளத் துணர்வு கெடும். கமலம் குவிய இருள் மூடுவதுபோல், இருள் கவியக் கமலம் மூடுவதுபோல், அகம் குறுகினார்க்கு இருளும் மருளும் வந்தடுக்கும். இருள் என்பது புறப்பொருள்: மருள் என்பது அகப்பொருள். அடுத்துக் கெடுக்கிற பாவியைப்போல் அஞ்சத்தக்க பொருள் உலகத்தில் வேறில்லை. இதைத்தான் துச்சங்கம் என்று சொல்லுகிறது. ஸத்ஸங்கம் வேண்டுமானால் துச்சங்கமும் தானேவரும். ஏனெனில் துவந்தாகாரமான இந்த உலகில், 'ஸதஸத்' இரண்டும் கலந்தேயிருக்கிறது. இந்த உலகம் ஸத்து மில்லை; அஸத்துமில்லை. பின்னே? "ஸத்-அஸத்" என்கிற மெய்யும் பொய்யும் கலந்துண்டானது. மெய்யும் பொய்யும் இணைபிரிந்தால் பிரபஞ்சம் மூழ்கிப்போம். பிரபஞ்சம் மூழ்கிப்போனால் பிரளய காலம் வந்துவிடும். பிரவிருத்திக்கிடமில்லாது

எல்லாம் நிவிருத்தியடைந்து கேவலத்தில் மூழ்கியிருக்கும். நான்முகப் பிரம்மாவும் அப்பொழுது பிரளயத்தில் லயித்துப் போவான். பிரளய ஜலத்தில் விஷ்ணு அம்சம் தோன்றும்; அது க்ஷீராப்தி யென்கிற பாற்கடலாகும். ஜடாத்மகமான நான்முகப் பிரம்மாவுக்கு அங்கே யிடமில்லை. அவனுக்கும் அதற்கும் ஸம்பந்தமில்லை. ஜடமெல்லாம் நாற்கோணவடிவாயுள்ளது. ஜலமோ அர்த்த சந்த்ர ரூபமா யமைந்துள்ளது. பிரம்மா பிரஜாபதி யிவர்களாலே பிரவிருத்திமார்க்கம் ஏற்பட்டு வளருகிறது. சௌனகாதி குமாரர்களால் நிவிருத்தி மார்க்கம் பிரகாசிக்கிறது.

சவக்குழி எப்போதும் ஜடப்பொருளுக்கு அடையாளமாம். அது நான்முகமாய் (நாற்கோணவடிவாய்) இருக்கும். ஸர்வபூத க்ஷயன் ஜடப்பொருளை யெல்லாம் சவக்குழி யாக்குகிறான். இந்த தேஹம் "தேஹோ தேவாலய ப்ரோக்தஃ" என்ற சுருதி வாக்கியப்படி தேவாலயமாகவோ, அல்லது "சவக்குழி" யாகவோ அமையப்பெறும். செத்துப் பிழைத்தார்க்குச் சவக்குழி சமாதியாகும். சாகத்தெரியாமல் சங்கடப்படுகிறவர்களை அவர்களுடைய கர்மம் உள்ள வரையில் தர்மராஜன் அவர்களை யாட்டி வைத்துக் கடைசியில் ஸர்வபூதக்ஷயனுய் நடைப்பிணமான சவக்குழியாம் அவர் தேஹம் நடவாப்பிணமானபின் மண்ணுக்கிரையாகி மண்ணோடு மண்ணுய் மடியும்படி சவக்குழியி லடக்கமாக விதிக்கிறான்.

இப்படி நடைப்பிணமான சவக்குழிபோன்ற தேஹமுடைய ஒருவனுக்கு சவக்குழியில் சவமழுகுகிறதுபோல, உள்ளுக்குள் உண்மை குறையக் குறைய, உண்மையுணர்ந்த யோகிக்கு "தர்மமேகம்" உண்டாவதுபோல் உண்மையுணர்விலாத போகியான பாபிக்கு கர்மவியாதி கர்மமேகமாகப் படரத்துவக்கி, நாளடைவில் அது மதுமேகமாக மாறி நீரழிவு வியாதியைக் கொணர்ந்து விடுகிறது. "ஜூடாஸ் இஸ்கேரியாட்" என்னும் பேர் "யேசுகிறிஸ்து" என்கிற பேருள்ளமட்டும் உலகத்தில் நீடித்திருக்கும். அவன் யதிநேசம்செய்து பின் கனமோசம் செய்ததால், மதிமோசம் போயவன் கதிமோசமானுன். அவன் பேரும் அபவாதத்துக்காளாயிற்று. இதெல்லாம் கர்ம பலன்.

இந்த வினைப்பயனை யெல்லாம் திரட்டி யொருவர் தம் ஆத்மானுபவத்திலிருந்து இங்கிலீஷில் ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார். அதன் பொருள் சாமானியர்க்கு உள்ளது உள்ளபடி விளங்குத லரிதாயினும் நத்துவார்த்த முணர்ந்தவர்களுக்கு வெள்ளிடை மலைபோல் விளங்குவதா யிருக்கிறது. அதன் உள்ளக்கருத்து இது:

அபயாநந்தவாழ்வு

பண்.

"ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம்!
ஆனந்தம் ஆனந்தம், ஆனந்தம் வேறில்லை!"—

—ஆனந்தத் தாம்மொழி.

I. வினைவழி The Law of Karma.

நடைப்பிணமானுர் சவக்குழியாவார்
கடைப்பிடியில்லாக் கயவர்க்கழகிது!
கொடைநலமில்லாக் குணக்கேடாம்ம,!
கடைமுதல்கொள்ளும் சவக்குழிதாண்டார்!
சடைமுடிவேணியன் 'ஜகதேகச்சக்ஷுஸன்'
நடையிடைத்தோன்றிய நாசகாலாந்தகன்
கடையிடையடியென்னும் காலம் மூன்றிலும்
தடைமடை பாராான்கர்மக் கணக்கையே இறுப்பன்!
"ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் மிவ்வாழ்வு
ஆனந்த மெனக்கப யானந்த வாழ்வெனப்பாடே!"

II. வினைப்பயன் The Law of Retribution.

"அறிவிலாதுலகம் குருவிலாதசுரம்" என்பதுகுரு [மொழி!
"குறியிலா குணக்கேடன் குருவிலனுயினும் ஒரு [உனே யாவன்:
"அறிவிலானெருவன் குருவிலான் வசப்பட்டால்ஐய [கோ! அவ்
வறிவிலா ஒருவனே யாயிரம் குருவிலா அசுரர்க்கொ [ப்பாவன்!"
அறிவிலாஒருவனை குருவிலா அசுரன் கூடிக்குலவ
நெறியிலாத் தலைமகன் நகைமுகங் காட்டியேண்ணில்
செறிவிலாச் செகமெலாம் நெறியிலா தொழுகுமால்
அறிகுறிநெறியிலாக்குழுவினர் குலமதும் காலனுலே!

"ஆனந்தம் ஆனந்தம் ஆனந்த மஞ்ஞானம்!
ஆனந்தத்தாய்தந்த தபயா நந்தவாழ் வெனப்பாடே!"

III. வினையறுத்தல் The Balance or The Child of Light.

உள்ளது மொன்றே உண்மையு மொன்றே
உண்மைக் காசே உன்னடி சரணம்!
நல்லது மொன்றே நன்மையு மொன்றே
நன்மைக் காசே நின்னடி சரணம்!
பிள்ளையு மொன்றே பெற்றவ ளொன்றே
பிள்ளைக் கம்மையாம் அப்பனே சரணம்!
கொள்ளையு மொன்றே கொள்முத லொன்றே
கொள்ளைக் கிலக்காம் கோவே சரணம்! †

சள்ளையுமொன்றே சச்சரவொன்றே
சச்சரவறுக்கும் சாகியே சரணம்!
உள்ளதைச் சொன்னேன் பிள்ளையைக் காத்தருள்
உள்ளதுமில்லது மானுய் சரணம்!
கொள்ளையோ கொள்ளை! கூ! கூ! கொள்ளை!
கொள்ளைவிட் டென்னைக் காப்பாய் சரணம்!
உள்ளதே யில்லது மில்லதே யுள்ளதும்
உள்ளத்துறையும் உணர்வே சரணம்!

"ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தஞ் சகவாழ்வு
சகஜாநந்தமே யபயாநந்த வாழ்வெனப் பாடுதும் [வாரீர்!

"The Cinderella of the Empire"

To H. E. Lord Carmicheal, "Her Prince!"

MADRAS IS BECOMING THE CINDERELLA OF THE EMPIRE."—*Press cutting.*

"Hymns to the Guardian Spirit."

I

"Hail! Spirit, Source to me of all life's joys!"
Arise! the darkest hour of Night has fled;
The earliest hour of Dawn is come!
And with it the Light of Public Life!

II

"Darkness and Dawn!" was once the burden of my song!
"The darkest hour has its dawn!" was then my only hope!
Arise, Awake! Lo! the Sun has neared the Eastern bound!
Darkness departs and Dawn broadens out 'nto boundless Day!

III

Deeds done in selfishness, Ignorance or worse;
Must hide their heads afore the piercing Light of Day or Duty clear!
Words spoken in the privacy of darkness must
Force their way to public life afore thy presence!

IV

Hail! Spirit, the Hour is come! the Harbinger of Light
Has touched the land and tinged the life with Golden rays
Of Sympathy, Hope and Sustained efforts
To *resurrect* the Life that self-interest *did crucify*!

V

Carmichael "my Prince,"s going, but his spirit abides!
And the Spirit of Public Life now touched to the quick
By his sympathetic hand must needs arise!
Awake! Spirit, FROM OFF THY COUCH IN GRACE ARISE!

VI

Sordid men with selfish aims to power and pelf
Have found their way in the Darkness of Night
By the glittering light of wealth ill-got, or
By hair-splitting ways and fair-seeming 'deal' with Public Life!

—*From the "The Rousing of Public Spirit."*

† c-f. The Heaven often suffereth violence, for the Violent take it by force.

பொதுப்பள்ளி யெழுச்சி (வாக்குச்சுத்தி).

(ஸ்ரீமாணிக்கவாசகர் திருவடிபோற்றி,)

"போற்றி! என் வாழ்முதல் ஆகியபொருளே!
புலர்ந்தது, பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
"டேற்றி, நின்திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்!"
போற்றி! எம் மிதயகமலத் திருந்தெழு சிற்றம்
பலநடுவாடும் பொதுஜன வாக்கே! வாணி!
மாற்றுயர் வீணுநாதத் துவனிசெய் யிருகைக்
கிடையுறை வாக்கே! பொதுப்பள்ளி யெழுந் [தருளாயே!

கார்மிகேல் பிரபுவின் பிரிவாற்ருது சென்னைமாதேவி யிரங்கல். *

பல்லவி.

ஊர்போகலாமோ! உத்தமதுரையே!

அனுபல்லவி.

பார்மீதெனையிங்கேபஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!

கண்ணிகள்.

(1) கார்மிகேல்பிரபுவே கருணுரஸமே!
ஊர்மிக்கப்பேசும் உத்தமதுரையே!
பார்மீதெனையாளப் பணிபூண்டையே!
சார்பிலாதெனைவிட் டோர்பலபேச—ஊர்போக [லாமோ! உத்தமதுரையே!

பார்மீதெனையிங்கே பஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!

* Advance proof of this was forwarded to His Excellency. (Who was learning Tamil) on the cue of his departure from Madras.

2 ஊர்போகநீரும் உன்னித்துணிந்தீர்
சார்பிலாப்பெண்ணெனச் செகமீதெனைவிட்டுப்
பார்மன்னரென்னைப் பஞ்சையாகினைக்கவும்
பேர்பலபேசும் பாவியர்பலரேச.....
—ஊர்போகலாமோ! உத்தமதுரையே!
பார்மீதெனையிங்கே பஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!

3 சீரில்லைசிறப்பில்லை சிறுதாய்ப்பணியில்லை
ஊரில்லைபேரில்லை உள்ளத்துணர்வில்லை
நேரில்லைநெறியில்லை நேர்கிறைதானில்லை
சீரிலாநெறியிற் சிதறவிட்டென்னை.....
—ஊர்போகலாமோ! உத்தமதுரையே!
பார்மீதெனையிங்கேபஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!

4 கடமையைச்செலுத்தநீர் கடல்வழிபோ'நீர்
உடைமையைக்கொடுத்துநா னுழலுகிறேனிங்கே!
மடமையருறவிலே மாண்பில்லை மதிப்பில்லை
கடையினருறவினால் கதியிழந்தலறநான்.....
—ஊர்போகலாமோஉண்மைத்துரையே!
பார்மீதெனையிங்கே பஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!
—உத்தமதுரையே! ஊர்போகலாமோ!

5 திருமயிலண்டத்திருந்ததுபோலந் திருவாக்கெழுந் [தது
அருங்குயில்கூவியதிருமறைபோலு மிசைந்தது [மத்திமை
குருவழிவந்த 'ஒருமொழி' யன்னக் குவிந்தது [பொருமனம்
வருவழிகாட்டுந்திருமொழியன்ன வரைந்ததுவை [கரி!—ஊர்போகலாமோ! உத்தமதுரையே!
பார்மீதெனையிங்கே பஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!
—உண்மைத்துரையேகேண்மைக்காரசே! ஊர்போக [லாமோ!

(6)"தொழிலாளிகாள்நான்போய்வருகிறே"னென் [றே
மொழிதமி முரைசெய்யக் கற்றவென் துரையே!
பழிமொழிக் கானாய்ப் பாரிலெனைவிட் டேகுத [லாகிய
இழிமொழி யிதுவோ உன்வாய்வழி வரவேண்டும்!
—ஊர்போகலாமோஉண்மைத்துரையே!
பார்மீதெனையிங்கே பஞ்சையாவிட்டுமே
ஊர்போகலாமோ! உமக்கழகிதுவோ!
—உத்தமதுரையே! ஊர்போகலாமோ!

ஸ்ரீராமவலமி }
27—3—12 } சென்னைமாதேவி.

Chingelput Dt. Co-operators' Conference.

"செங்கற்பட்டு ஜில்லா கொவாபரேடர்களின் மகா ஸபை."

———:(*):———

இச்சபை 1912-ம்வரு மார்ச்சுமீ 25-உ திங்கட்கிழமைதினம் சென்னை கிறிஸ்டியின் கலாசாலைக்கடுத்த ஆன்டர்ஸன் ஹால் என்னும் ஸபா மண்டபத்தில் கூடியது. பரஸ்பரோபகாரக் கூட்டுநிதிச் சங்கங்களில் ஆர்வங் கொண்டவர்களும் ஐக்கிய நாணயம் விருத்தி யாகவேண்டுமென்ற அபிலாஷை யுடையோரும் இன்னும் ஏழைகளுக்கு அதி யுபயோகமாயுள்ள இந்த கூட்டு நிதிச்சங்கங்கள் செழிப்படைய வேண்டுமென அவை மீது பூராவான அபிமானம் வைத்தவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். தஞ்சாவூர் திருச்சி, சேலம், கோயம்புத்தூர் முதலான ஜில்லாக்களிலிருந்து கூட்டுத்தொழிற் சபைப் பிரதிநிதிகள் பலர் வந்திருந்தனர். இதல்லாமல் அனேக கனதனவான்களும் வந்திருந்தனர். இதை ஐக்கியநாணய மாகாணசபை யாக்குமிடத்து மிகவும் நன்றாயிருக்கு மென்பது பலபேரது துணிபு. ஒரு ஜில்லாவின் பெயரைமட்டும் குறிப்பிட்டு வைக்காமல் பொதுவாக ஐக்கிய நாணயமாகாண கான்பரென்சு என்று பெயர் வைத்து பிரதி வருஷத்திலும் இவ்விராஜதானியைச் சேர்ந்த முக்கியமான விடங்களில் மீடிங்குகூடி இது முதன்மையாகும்படி செய்தால் கூட்டுத்தொழில் மிகவும் செழிக்கும் என்பதை யாம் சொல்லவேண்டுவதில்லை. இதை ஐக்கியநாணயச்சங்க ரெஜிஸ்ட்டிராரான திவான்பகதூர் எல்.டி. சுவாமிக்கண்ணு பிள்ளையவர்கள் குறிப்பிட்டுப்பேசி அம்மாதிரியான மாகாணசபைக்கு இதுவே யாரம்பமென்று கூறினர். இதல்லாமல் இந்த ஸபை மற்றொரு பாக்கியத்

தையும் அடைந்த மகாசபையுமாயிற்று. சாதாரணமாயிருக்கையிலேயே ஐக்கிய நாணய சம்பந்தமான எம்முயற்சிக்கும் ஸர்வஜன சம்பந்தம் ஏற்படுவது ஒரு புறமிருக்க, மற்றொரு புறத்தில் 'உழுதுண்டு வாழ்வார்க்கு ஒப்பில்லை'யென்று ஸர்மூதோர் கூறிய வார்த்தையை யனுஸரித்து வேளாண்மை செய்து பிழைப்பதையே பெரும்பாரமாய் வகித்த குடிகள் நிரம்பிய இம்மாகாண ஐக்கிய நாணயஸ்தர் நிரம்பிய இச்சபைக்கு ஜனுபமான மிகுந்த கவர்னரவர்கள் அக்கிராசனம் வகித்திருந்தனர் என்றால் இந்த ஸபையின் ஆவசியகம் எத்தன்மையதென்று நாம் சொல்லவேண்டுவது அனுவசியம். கவர்னரவர்கள் தமக்குப் பற்பல காரியங்கள் இப்போது முன்னிட்டிருந்தாலும், தாம் இம்மாகாணத்திலிருந்து வெளிப்புறப்பட்டுப் போகுமுன் ஐக்கியநாணய ஸபையைப்போன்ற பெருந்த முயற்சிகளில் தாமும் ஒற்றுணர்ச்சி கொண்டிருப்பதைத் தெரிவிக்கவேண்டியே இம்மகாஸபையின் அக்கிராஸனாதிபத்தியத்தைத் தாம் அன்று வகித்து நடத்த இசைந்ததாகவும், மற்றெப்பாகத்தைக் காட்டிலும் இவ்விராஜதானியில் பரஸ்பரோபகாரச் சங்கங்கள் பெரிதும் விருத்தியாய்க்கொண்டு வருவது நமக்கு அத்யந்த திருப்தியைக் கொடுக்கிறதென்றும், இச்சபையார் செய்யும் முயற்சிகளாலே சிக்கனம் அல்லது செட்டாய்ச் செலவிடுவது, தன்முயற்சியினாலே பாடுபடுவது, ஒருவருக்கொருவர் நம்பிக்கை கொண்டிலங்குவது, சொல்பவட்டிக்கு ஏழைவிவசாயிகளுக்குக் கடன்கொடுப்பது, மோத்தமாய்ப் பணஞ்சேர்த்துத் தன் தொழிலை நடத்தமுடியாத் எளியோனை அவன் தன் சொந்த உழைப்பினாலே பாடுபட்டுப்பணம் சம்பாதிக்கும்படி செய்து அவனை முன்னுக்குக்கொண்டு வருவது, ஆகிய இவையனைத்தும் பரஸ்பரோபகாரக் கூட்டுச்சபைகளால் உற்பவிப்பதாகுமென்று அனுபவரீதியாய் எவரும் கண்டுகொள்ளலாமென அவர் சொல்லிமுடித்தார். பிறகு ஐக்கிய நாணயச் சங்க ரெஜிஸ்ட்ரார் எழுந்து இது மாகாண ஸபையல்லாது செங்கற்பட்டு ஜில்லா ஐக்கிய நாணய ஸபைகளின் நான்காவது கான்பரென்ஸாயிருந்தாலும், ஜில்லாவிலுள்ள சங்கங்களின் பிரதிநிதிகளும், ஸென்ட்ரல் பாங்கிகளின் காரியதரிசிகளுட் பலரும், மற்றும் இவ்விஷயத்தில் அபிமானங்கொண்ட பலரும் விஜயம் செய்திருப்பதனாலேயே இதையொரு பொதுவான ஐக்கியநாணய மாகாணஸபையெனச் சொல்லலாமென்றும், இது செய்துவரும் பகீரதப் பிரயத்தனங்களுள், இம்முயற்சியினாலேற்படும் ஒப்புயர்வற்ற பெரும்பலன்களை அதிகப்படிப்பில்லாத ஜனங்கள் அடிந்து அது காரணமாகத்தாம் பலனடையும் வண்ணம் பரஸ்பரோபகாரக் கூட்டு நீதியார் செய்யும் வேலைகளையும், அவைகட்குகந்த மூலாதார விதிகளையும் அவ்வெளியோர் மனத்திற்பதியும்படி தேசபாஷைகளிலேயே துண்டுப் பத்திரிகைகள் மூலமாயும் பதியும்படி செய்தாலது காலக்கிரமத்தில் மிகுந்த பிரயோசனத்தைக் கொடுக்காமற் போகமாட்டாதென்று அபிப்பிராயப்பட்டுப் பேசினது நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. அனேகம் பேருடைய நல்லுணர்ச்சி இதற்கு மிகுந்திருப்பதனாலே சங்கங்கள் விருத்தியடைய அடைய நன்மையும் விளைந்துகொண்டே வருமென்பது எமது துணிபு. ல. ஆநந்தய்யர்.

——(-)——

"AS YOU LIKE IT"

'உன்னிஷ்டப்படியே'

——:-——

இத்தலைப் பெயர்கொண்ட நாடகத்தை ஆங்கில பாஷையில் அனேக நாடகங்களை யியற்றி, ஒப்புயர்வற்ற மெய்ப்புலவரென்று பலராலும் புகழெய்திய வில்லியம் ஷேக்ஸ்பியர் இங்கிலீஷில் முறையே யெழுதி யிருக்கிறார்.

இதை ஸ்ரீமத் செய்யூர் முத்தய்யா முதலியாரவர்கள் 'சேர்ப்பனசேர்த்துக் கழிப்பன கழித்துத்' தமிழ் நாட்டிற்குரியவாறு தர்ஜுமாசெய்து, அதற்கு ராஜராஜேசுவரி என்னு பெயருமிட்டு நாடகரூபமாய் வெளிக்கொணர்ந்திருக்கிறார். இச்சென்னை ராஜதானியின் தென்பாரிசத்திலுள்ள எட்டயாபுரம் சமஸ்தானத்திலிருந்துதற்போது ஸ்ரீ ஷண்முகவிலாஸ ஸபையர் சென்னைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஸமீபத்தில் நடித்த ராஜராஜேசுவரி அல்லது 'உன்னிஷ்டப்படியே' என்னும் நாடகத்தைப்பற்றி இரண்டொருவார்த்தை சொல்லாமலிருக்க முடியவில்லை. ராஜதானியின் தலைநகராயுள்ள சென்னையைப்போன்ற பெரும் பட்டணங்களுக்கு இச்சபையார்வந்து நடிப்பது இதுவே முதற்றடவையானாலும், எந்த போதகாசிரியரிடம் இவர்கள் அரங்கஸ்தானப்பயிற்சி யடைந்தார்களோ, இவர்கள் நடிப்பதிலிருந்து உற்பவிக்கும் குண தோஷங்கள் இவர்களைப் பயிலுவித்த எந்த ஆசிரியரிடம் போய்ச்சேருமோ, நாடகத் தலைவியாய் நடிப்பதில் நிகரற்ற சாதுர்யங்காட்டி நன்னகர் முழுவதும் நற்பெயரெடுத்து விளங்கும் நாடகேந்த்ரர் எவரோ, அப்படிப்பட்ட கீர்த்திவானான ஸ்ரீமான் வி. எஸ் கல்யாணராமய்யர் அவர்களிடம் தயாரான சிறுவர்களன்றோ இவர்கள்? 'தாயைப்போல பிள்ளை, நூலைப்போலச்சேலை" யென்றொரு பழமொழியுண்டு. அதற்கேற்ப இச்பையெம்பர்கள் ஆடும் ஆட்டங்களில் இதற்குமுன் யாம் பார்த்தனுபவித்த ஸ்ரீமான் ஐயரவர்களின் சொந்த ஸபையை யனுசியதாகவே தோற்றுகின்றது. நிற்க. சிலதினமுன் இவர்கள் ஆடிய ராஜராஜேசுவரி என்னும் நாடகத்தைப் பொறுத்தமட்டில் முக்கியமாய்ச் சொல்லவேண்டிய அம்சம் ஒன்றுண்டு. நாடகத் தலைவியான ராஜராஜேசுவரி வேடந்தரித்து வந்த சுப்பராயன் என்ற வாலிபன் அன்ற நடித்த நடையும், பேசிய பேச்சும், புரண்டமுத பிரஸாபமும், தனதின்னுயிர்க்காதலனான அருளாநந்தன் உயிர் பிழைத்தான் என்ற செய்தி அடைந்த சந்தோஷமும், பெண் உடையன்றி ஆண் உடை தரித்தபோதும் தெற்றெனப் புலப்பட வேஷப் பொருத்தமும் மிக்க திறமாகவே யிருந்தன. ஒருவர் நாடகமேடையில் வந்து நடிப்பதென்றால், ஸபைக்கோழையில்லாமலும், எந்த பாத்திரம் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதற்குரியவாறாய் அனுபவித்தும் நடிக்க வேண்டும்; குருத்துவம் என்ற மனோபாவம் மிகுந்து, அஹங்காரம் எனும் ஆசங்கை யழிந்து, எந்த பாத்திரமாய்த் தான் மேடையில் வந்திருக்கிறானோ உண்மையில் அந்தப் பாத்திரமே தான் என்று மதித்து காகோஷத்தையும் கண்டோர் சிரிப்பையும் கவனியாது நடித்தல் வேண்டும்; அப்போதுதான் அவர்கள் பெயர் சிறக்கும். இப்போது இராஜ ராஜேச்வரியின் பெயர் சிறப்புற்றிருந்தது என்று நாம் சொல்லும்போது, அவ்வேடம் பூண்டுவந்த வாலிபன் எவ்விதம் அரங்கஸ்தானத்தில் ஐயரிடம் தான் பயிற்சியடைந்ததைப் பிரகாசிக்கச் செய்திருக்க வேண்டுமென்பதை யாம் இன்னும் விவரிக்க வேண்டுவது அனாவசியம் போகப்போக இவ்வாலிபன் நல்ல விருத்திக்கு வருவானென்பது எமது துணிபு. ராஜராஜேஸ்வரியின் தமக்கையாய் வேடம்பூண்ட காலியப்பன், அமுதவசனனாய் வந்த பொன்னுசாமி, அருளானந்தனாய் வந்த முத்தையா, இவர்களுடைய நட்டத்தில் குணதோஷங்கள் சொல்வதற்கில்லை. பின்னும் இச்சபையாரது சித்திரத் திரைகள் நிரம்பமாயிருக்கின்றன. காட்சிகள் ஒவ்வொன்றும் மிக்க மதியூகத்துடன் ஜோடிக்கப்படுகின்றன. இதுகளைக் கவனிக்கும் பாபூஜி என்ற சித்திரக்காரருக்கு இச்சபையார் கடமைப்பட்டிருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்ட ஸபையினை ஆதரிப்பது மகாஜனங்கள் முழுமுதற் கடமையென்போம்.

———:*:———

THE VIVEKA CHINTAMANI

A Monthly Tamil Magazine and High Thought Review.

Devoted to the Diffusion of Practical Truth and Knowledge

Dealing with the Principles of Education, Psychology, Soul-culture, and Ethics.
Adapted for Use in Homes and Schools.

———:*:———

God is Love: Knowledge is power: AUM.

"Love and Learn"—"ஓதுவதொழியேல்."

SATYAMEVA JAYATE.

Vol. XX.

(For the Tamil Year Paritapi.)

April 1912-March 1913.

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

———*———

அறிவுடையாரெல்லாமுடையார் அறிவிலா
ரென்னுடையரேனுமிலர்.—திருக்குறள்.
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.—திருக்குறள்.

20-ம் புத்தகம்.

(பரிதாபி௵.)

1912-௵ எப்ரல்மீ முதல் 1913-௵ மார்ச்சுமீ வரை.

PUBLISHED BY
THE SECRETARY DIFFUSION OF KNOWLEDGE AGENCY,
For The Lalita Publishing Co., (Sole Agents and Managers,)
Lalitalaya, 19, Adam St, Mylapore, Madras, S.

1912-1913.

Bound Vol. Rs. 5.] [Unbound Vol. Rs. 4.

All Rights Registered.
The Copyright of every article first published in this volume is vested solely in the Editor and Registered in his name.

TABLE OF CONTENTS.

Vol XX (April 1912-March 1913)

No. 1. For APRIL 1912.

		PAGE.
1.	Hearty Greetings and Best Wishes for a Happy and Prosperous New Year	2
2.	"Hamlet Redivivus"—A By-Play	5
3.	The Passing of the Jagadguru Sri Sankaracharya Swamigal of Sringeri	7
4.	Sister Nivedita	9
5.	The Depressed Classes Mission	10
6.	The Tamil: Its Origin and Growth	14
7.	On the Use and Abuse of Power and Pelf	17
8.	The Late Dewan Bahadur R. Ragunatha Row, C. S. I.	18
9.	Rice Milling Industry in South India	20
10.	Welcome Address by Rao Bahadur V. K. Ramanujachariar	22
11.	Herbs with Rare Qualities	28
12.	Extracts:—Wages in the Palace	30
13.	Green Leaf Manure and Green Manuring	31

1912-ம் வரு ஏப்ரல் மீ, 1-வது சஞ்சிகை.

1.	புதுவருஷப் பிரளயம்	2
2.	ஹேமலதாளந்த விக்ரஹம்	5
3.	ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் ஐக்கியம்	7
4.	நிவேதிதையம்மள்	9
5.	"தாழ்த்தகுலம்வாழத் தாழாது ஏழைக்குங் குழாம்"	10
6.	தமிழ்மொழி யோகக்ஷேமம்	14
7.	தங்கச்செருப்பு தலைமேலே பதமிட்ட செருப்பு பாதத்திலே	17
8.	திவான்பகதூர் ஆர். இரகுநாதராவ் காலஞ்சென்றார்	18
9.	தென்னிந்தியாவில் நெல்லுக்குத்தும் தொழில்	20
10.	சென்னை மகாணாச் சான்பரென்ஸ் வரவேற்புப் பிரசங்கம்	22
11.	அபூர்வ சக்திவாய்ந்த மூலிகைகள்	28
12.	அரண்மனைச் சம்பளம்	30
13.	பச்சிலைஎருவும் பசுந்தாள் பயிரும்—கிருஷிகன்	31

No. 2. For MAY 1912.

1.	Religion Essential to Worldly Progress	34
2.	Religion Essential to Moral Progress	37
3.	Religion Essential to Material Progress	39
4.	Sri Sankara—A Sketch (T. C. Venkataramana Iyer)	41
5.	Selection: To Lord Ranganatha—Shiyali Arunachala Kavirayar	45
6.	Easy Lessons in Economics—(T. C. V. Iyer)	46
7.	"The Indian Pepys"	48
8.	Hamlet Redivivus—A By-Play Act I. Part 2	51
9.	Notes and Extracts: The High Standard of Justice among Kings of India	54
10.	Maldive Islands	56
11.	Tiger Hunt—A Moral Tale	57

		PAGE.
12.	The Law of Life alone Conquers	61
13.	Co-operative Banks in India	62
14.	Chitrapoornami-V. C.	64

1912-ம் வரு மேமீ, 2-வது சஞ்சிகை.

1.	உண்மதமின்றி உலகக்ஷேமமில்லை	34
2.	நன்மதமின்றிச் சன்மார்க்கமில்லை	37
3.	திவிருத்தியின்றிப் பிரவிருத்தியில்லை	39
4.	ஸ்ரீசங்கர்-டி. வி. வெங்கட்ரமணய்யர்	41
5.	ஸ்ரீரங்கநாதரே! என்பள்ளிகொண்டீர்!	45
6.	குடிவாழ்க்கை—டி. வி. வெங்கட்ரமணய்யர்	46
7.	ஆனந்த ரங்கபிள்ளை அந்தரங்க தினசரிக்குறிப்பு	48
8.	ஹேமலதாலந்த விக்ரஹம் அங்கம் 1, பங்கம் 2	51
9.	இந்துதேச பூர்வீக அரசர்களும் அவர்களுடைய நீதியும்	54
10.	மலையத்தீவு	56
11.	புலிவேட்டை—ஒரு நீதிக்கதை	57
12.	தர்மமே தலைகாக்கும்	61
13.	இந்தியாவில் நாணய பாங்கிகள்	62
14.	சித்ராபூர்ணமி-விவேகசிந்தாமணி	64

No. 3. For JUNE 1912.

1.	IV. Self-Government Essential to National Progress	66
2.	V. The Sacred Task of Nation-Building	69
3.	"The Indian Pepys"—II	71
4.	Hamlet Redivivus—A By-Play—Act I. Part 3	74
5.	Longevity	77
6.	The Lost Child—A short story	80
7.	The Prodigal Put Out	82
8.	Fate *versus* Free Will—A Novel Adventure	85
9.	The Law of Life alone Conquers	90
10.	"Love's Labour Lost' (A New Version)—By L. Anantaiyar	95
11.	Notes & Extracts. The Indian Fibre Industry	96
12.	The Cultivation of Mango	96

1912-ம் வரு ஜூன் மீ, 3-வது சஞ்சிகை

1.	தன்னைத் தானாள தரணியெல்லாம் ஆளலாமே	66
2.	சமஷ்டித்தேர்த் திருப்பணி	69
3.	ஆனந்த ரங்கப்பிள்ளை தினசரிக்குறிப்பு	71
4.	ஹேமலதாலந்த விக்ரஹம்—அங்கம் 1. பங்கம் 3.	74
5.	தீர்க்காயுஸ்	71
6.	காணாமற்போன குழந்தை	80
7.	தத்தளிப் பிள்ளைகளைத் தவிர்க்கும் வழி	82
8.	விதியை மதியால் வெல்லக் கூடுமா?	85
9.	தருமமே தலைகாக்கும்	90
10.	'அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்' ல. அனந்தய்யர்	95
11.	இந்தியர் வாழ் தொழில்	96
12.	மாம் தோப்புகள்.	

No. 4. For JULY 1912.

		PAGE.
1.	The Ultimate End or the *Summum Bonum* of Human Existence	98
2.	Eternity—The Origin of Vedas and Agamas	101
3.	Hamlet Redivivius—A By-Play Act 1 Part 4	102
4.	The Curse of the Country	106
5.	Sri Sankara—A Sketch—II	108
6.	The Indian Pepys—III	112
7.	India's Strong Man	115
8.	The Lost Child—II Short Story	117
9.	A Wife is Half the Man, His truest Friend	121
10.	A Wonderful Bed	122
11.	Benefits of the Co-operative Societies	127

1912-ம் வரு ஜூலை மீ, 4-வது சஞ்சிகை.

1.	சகிர்தலாபம்—ஜீவசாபல்யம்	98
2.	வேத சிவாகமங்களின் உற்பத்தி	101
3.	ஹேமலதாகத்த விக்ரஹம் அங்கம் 1. பங்கம் 4.	102
4.	இந்தியாவின் சாபம்	106
5.	ஸ்ரீ சங்கர்—II	108
6.	ஆங்கிலப்பெப்பிஸ் தினசரிக்குறிப்பு—III	112
7.	இராமமூர்த்தி நாயுடு	115
8.	காணாமற்போன குழந்தை—II சிறுகதை	117
9.	"சதியென்பான் அர்த்தநாரீ—பதியிலவளொருபாதி"	121
10.	அற்புதமான ஒரு கட்டில்	122
11.	ஐக்கியநாணயச் சங்கங்களால் உண்டாகும் நன்மைகள்	127

No. 5. For AUGUST 1912.

1.	Be Still and Know that I am God	130
2.	Easy Lessons in Economics—XI	133
3.	Sri Sankara, A Sketch—III	134
4.	Lo! What wonder this! The Working of the Lord!	140
5.	Our Theism is the Purification of the Human Mind	142
6.	Historical Selections: The Romance of a Vanquished King	144
7.	Sketches from Life—Mahar Mallari	149
8.	On Physical Culture	153
9.	Dahara Vidhya Stutih or The Soul's Awakening	155
10.	The Law of Life alone Conquers	156
11.	"*Honi-Soit-Qui-Mal-y-Pense*,"	156
12.	A Branded Daughter-in-Law	159

1912-வரு ஆக்ஸ்மீ, 5-வது சஞ்சிகை

1.	மோனசாதனம்	130
2.	குடிவாழ்க்கை—பாடம் II	132
3.	ஸ்ரீ சங்கர்—III	134
4.	"ஜீவன்செய்யும் கூத்தென்னவோ இது அதிர்சயங்காண்"	140
5.	ஈசுவரனும் அநாதியுள்வரும் சீர்மலசித்தமும்	142
6.	சரித்திர விலாசம் ஒரு மோஹலாயராஜன் கதை	144
7.	மாஹர் மல்லாரி	149

		PAGE.
8.	தேஹப் பயிற்சி	153
9.	சிருச்சிற்றம்பலம்; ஆத்மாத்தாவைம்	155
10.	தருமமே தலைகாக்கும்	156
11.	"தெவொன் தேநிநைப்பான்"	156
12.	குடிடப்பட்ட மருகி	159

No. 6. For SEPTEMBER 1912.

1.	Joy Immanent and Transcendant	162
2.	Indian Folk Songs of Truth and Wisdom	165
3.	"The Kingdom of the World is become the Kingdom of God and His Son"	167
4.	Wealth Supreme	170
5.	The Lord of Pazhani's Grace Assured	175
6.	"Hamlet Redivvius"—A By-Play	179
7.	"*Honi-Soit-Qui-Mal-y-Pense*"	182
8.	The Law of Life alone Conquers	185
9.	Sri Krishna's Birthday	188
10.	Transfusion of Thought	190
11.	The Lord's Birthday-Experience	191
12.	The Emperor of Japan	192

1912-ம் வரு செப்டம்பர் மீ, 6-வது சஞ்சிகை

1.	இன்பம், "கனவியல்," "கற்பியல்"	162
2.	"கவியுகவாதா! காத்தருள் வேலா!"	165
3.	"ஒருமுருகா, வருமுருகா, தருமுருகா, திருமுருகா!"	167
4.	பரமகவரியப் பிரசாதம்	170
5.	"பழநியாண்டவர் திருவடிசேர்வர்"	175
6.	ஹேமலதாகத்த விக்ரஹம்	179
7.	தெவொன் தேநிநைப்பான்	182
8.	தருமமே தலைகாக்கும்	185
9.	ஜன்மாஷ்டமி	188
10.	வாதவித்தை—பாவனாமாற்றம்	190
11.	ஜன்மாஷ்டமி யனுபவம்	191
12.	ஜப்பான் சக்ரவர்த்தி	192

No. 7. For OCTOBER 1912.

1.	The Undedicated Life and the Undiciplined Mind lead one to Evil	194
2.	Sri Sankara, A sketch—IV	197
3.	The Orphan's Cry: The plaintive Voice that enters the Great Mother-Heart of the Universe	202
4.	Allan Octavius Hume	204
5.	"In the Kingdom of God Within." "The Origin of Life"	206
6.	Wisdom is All-Powerful	210
7.	Patience and Envy	213
8.	The Constitution of Man	217
9.	Easy Lessons in Economics—(T. C. V. Iyer)	219
10.	Historical Selections: The Romance of a Vanquished King	223
11.	Gleanings from Folk Lore: A Nick Name for Money	224

PAGE.

1912-ம் வரு அக்டோபர் மீ, 7-வது சஞ்சிகை.

1. "பலதானமில்லாதவுர் பாழ்"—"நிதானமில்லாதமனை நாசமாகும்" ... 194
2. ஸ்ரீசங்கர்—IV. ... 197
3. அரைப்பிள்ளை யோகம் ! தர்மம்பிரகாசியிடம் முறையீடு ... 202
4. அல்லல் ஆட்டேலியல் ஹிஸ்டரி ... 204
5. குறைப்ரஹ்மம் தத்வம்: சக்திமான் சக்தி ... 206
6. விவேகத்திருவாகாதநில்லை ... 210
7. பொறாமையும் பொறாமையும் ... 213
8. மனிதன் அமைப்பு ... 217
9. குடிவாழ்க்கை—டி. வி. வெங்கடாசலையர் ... 219
10. சரித்திர விலாஸம் ... 221
11. "ஆட்கொல்லி" ... 224

No. 8. For NOVEMBER 1912.

1. "The Origin of Life": "Evolution of the Soul" ... 226
2. The Water of Life ... 230
3. Betrayed—Motto—"Your sin will find you out" ... 234
4. Sri Sankara—A Sketch V. ... 236
5. Navaratri Poojah 1912 ... 239
6. Dusserah or "The Meaning of the Mystic Number Ten." ... 243
7. God's Truth ... 244
8. Tolstoi's Hygienic Maxims ... 246
9. The Law of Life Alone Conquers ... 246
10. Welcome Address to Their Excellencies Lord and Lady Pentland (with Overseas Message) ... 250
11. His Excellency. The Rt. Hon'ble Lord Pentland ... 253
12. Welcome after Adieu ... 256
13. A Strange Scene ... 256

1912-ம் வரு நவம்பர் மீ, 8-வது சஞ்சிகை.

1. குறைப்ரஹ்மம் தத்வம்: சக்திமான் சக்தி II ... 226
2. ஸர்வதேவதைபர் ஓம் பூர்புவஸ்வரோம் ... 230
3. காட்டிக்கொடுத்தவே கர்மம்—"தன்னினை தன்னைக்கடும் ... 234
4. ஸ்ரீ சங்கர்-இந்தம் அத்தியாயம் ... 236
5. நவராத்திரி பூஜை 1912 ... 239
6. தசராத்ரி அல்லது தசமத்தின் கூடாரத்தம் ... 243
7. ஏகம் ஸத்யம் ப்ரஹ்மம் ... 244
8. டால்ஸ்டாயின் சுகாதார நீதிகள் ... 246
9. தர்மமே ஜயம் ... 246
10. சென்னையாதேவி தன் தலைவர்களுக்கு வரவேற்பு ... 250
11. மாகாணம்பொருந்திய கவர்னர் லார்ட் பெண்ட்லாண்டவர்கள் ... 254
12. பிரியாவிடை வரவேற்பு ... 256
13. ஓர் அற்புதக் காட்சி ... 256

No. 9. For DECEMBER 1912.

1. Principles of Progress ... 258
2. The Origin of Life in its Collective aspect ... 260
3. Kartikai Festival ... 264
4. Sri Sankara—A Sketch VI. ... 267

375

PAGE.

5. The Redemption of the Miser—A Short Story ... 270
6. Easy Lessons in Economics XIII ... 273
7. India's Ancient and Eternal Ideals ... 275
8. Kartikai Festival ... 279
9. King Jayasen—A Short Story ... 279
10. *Honi-Soit-Qui-Mai-y-Pense* ... 282
11. Do you want Employment ? ... 284
12. Educational Grants ... 287
13. A Wonderful Sight ... 288

1912-ம் வரு டிசம்பர் மீ, 9-வது சஞ்சிகை

1. "எத்தால்வாழலாம் ஒத்தால் வாழலாம்" ... 258
2. கந்தர்சஷ்டி—கார்த்திகேயாவதாரம் ... 260
3. கார்த்திகேய மூர்த்தி—கார்த்திகைத் திருவிழா ... 264
4. ஸ்ரீசங்கர் ஆறும் அத்தியாயம் ... 267
5. தனலோபி தர்மலிங்கம்—ஓர் சிறு கதை ... 270
6. குடிவாழ்க்கை 13-ம் பாடம் ... 273
7. இந்தியாவின் புராதனமான நித்ய ஸத்தியங்கள் ... 275
8. கார்த்திகைத் திருவிழா: குமாரஸம்பவம் ... 276
9. ஜயசேன ராஜன் கதை ... 279
10. கெவேரன் கேடுநினைப்பான் ... 282
11. உத்தியோகம் வேண்டுமா ? ... 284
12. கல்வி சம்பந்தமான நிதானங்கள் ... 287
13. ஓர் அற்புதக் காட்சி ... 288

No. 10. For JANUAKY 1913.

1. The Worship of the Ishta Devata ... 290
2. Working for the Good of Mankind ... 293
3. Greed, Guilty-Selfishness and Inhumanity are Short Lived ... 294
4. The Delhi-Durbar Celebration :—Abhayahastam or The Supreme Hand of Fellowship ... 299
5. The Mother's Lament ... 300
6. Sri Sankara—A Sketch—VI. ... 301
7. King Jayasen—Short Story ... 304
8. Historical Selections ... 307
9. The Madras Legislative Council ... 310
10. The Delhi Outrage : Sympathy of the South Indian Masses ... 311
11. Three Words of Strength ... 313
12. The Story of Dhasarjuna ... 314
13. Co-operative Weaving ... 316
14. Notes and Supplement ... 317

1913-ம் வரு ஜனவரி மீ, 10-வது சஞ்சிகை.

1. இஷ்ட தேவதா உபாஸனை ... 290
2. "மன்பதை செப்பஞ்செய்" ... 293
3. "ஆட்கொடுக்க சன்னை ஏதுக்கடா" ... 294
4. டெல்லி தர்பார் கொண்டாட்டம் ... 299
5. தனையனைக்கொடுத்த தயிர்கள் ... 300
6. ஸ்ரீ சங்கர் ... 301
7. ஜயசேன ராஜன் கதை ... 304
8. சரித்திர விலாஸம் ... 307
9. சென்னை சட்டநிருபணை சபை மீட்டிங்கு ... 310

PAGE.

10. டிஸ்லியாதம்: தொல்லிந்திய குடிகள் அறுதாயம்... 311
11. மூன்று மந்திரங்கள் 313
12. தாய்க்கோழி கதை 314
13. கட்டுறவு செலவு 316
14. குறிப்புகள்—அறுபயந்தம் 317

No. 11. For FEBRUARY 1913.

1. The Royal Commission on Public Services in India 322
2. The Ravages of the white Ants.—A Lesson from Nature Study 325
3. Sri Sankara—A Sketch (*concluded*) 327
4. Easy Lessons in Economics XIV 330
5. Do you Want Employment? 332
6. Money—the Autocrat 335
7. Rule Britannia, Rule! 336
8. The Wife's Lament and Sati's Prayer. (*Tamil*) 337
9. Divine Will 340
10. Concussion of the Brain 341
11. Health is Wealth 343
12. The Proposed Tamil Lexicon by Govt. 344
13. Sangeetha Rathnavali 345
14. The Supreme Legislative Council 346
15. The Wife's Lament and Sati's Prayer (*English*) 348

1913-ம் வரு பிப்ரவரி—, 11-வது சஞ்சிகை.

1. உத்தியோக உம்பர்களை ராயங்கமிகுதல் 322
2. வெளுப்புச்சியென்னும் கரையான் செய்கை 325
3. ஸ்ரீ சங்கரர் எட்டாம் அத்தியாயம் 327
4. குடிவாழ்க்கை 14-ம் பாடம் 330
5. உத்தியோகம் வேண்டுமா? 332
6. பணமென்பது 'ஆட்கொல்லி' 335
7. பிரிட்டிஷ் அரசாக்கியின் வாழ்த்து 336
8. பதிபிழந்த சதியிரங்கி மாங்கல்யப் பிச்சைகோறல் 337
9. "வருஷகாலமானாலும் வருவது வந்தே தீரும்" 340
10. மூளையின் அதிர்ச்சி 341
11. ஆரோக்கியமே பாக்கியம் 343
12. வெளிவரப்போகிற தமிழ் அகராதி 345
13. சங்கீத ரத்னாவளி 335
14. ஸார்வ பௌம சட்டச் சபை 346
15. பதிபிழந்த சதியிரங்கி மாங்கல்யப் பிச்சை கோறல் 348

No. 12. For MARCH 1913.

1. Wrong Multiplies itself 354
2. The Law of Life alone Conquers 356
3. *Honi-Soit-qui-Mal-y-Pense* 363
4. Lack-a day! Thy will be Done 366
5. When the Grass-hopper becomes a Burden or The Art of Gracefully growing old 370
6. The Boon of Grace from the Bull-Mounted Mother 373

1913-ம் வரு மார்ச்சு—, 12-வது சஞ்சிகை.

1. "குதிரை தாக்கிப் போட்டது மன்றி குழியுமொன்று கூடப்பறித்ததாம் 354
2. தருமமே தலைகாக்கும்... 356
3. தெவோன் சேடிசோப்பான் 363
4. "ஐயோ என் கண்ணே!" 366
5. "திடகாத்ர ஆபராரோக்கிய சம்பத்து" 370
6. வருஷகாலகுருவுடை வரப்பிரசாதம் 373

இதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் விவேகசிந்தாமணி சூசியர்க்கு உரிமையானது அப்படியே காபிரைட் இதிற்பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

The Chitra-Poornami Special—1st May, 1912.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE.".



அஃபேயகன்: அறிவேசகதி [illegible] அத்தஸ்த்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமேவ ஜெயம்—**SATYAMEVA JAYATE.**

புத்தகம். 20.] 1912 வரு ஏப்ரல்மீ, பரீதாபிவரு சித்திரைமீ [சஞ்சிகை. 1.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C. S. Subrahmaniem, Joint Hon. Secretary, Vivekachintamani Rev: Committee.

Lalita Publishing Co., Sole Agents and Managers

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசித்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் கம்பமமோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே லர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது.

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவைசம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்ம விக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற் 'க்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. இ.

விவேக சிந்தாமணி.

Hearty Greetings and Best Wishes for a Happy and Prosperous NEW YEAR.

Friendship of old and faithful friends,
Who ne'er forsake, the WORLD commends.—*Kural 809.*

நவில்தொறு நூல்நயம் போலும்
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு.—குறள்.

Learned scroll the more you ponder,
Sweeter grows the mental food;
So the heart by use grows fonder,
Bound in friendship with the Good.—*Ib. 783.*

புணர்ச்சி பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்.

Not association constant, not affection's token bind;
'Tis the unison of feeling friends unites
of kindred mind.—*Ib. 785.*

புதுவருஷப் பிரளயம்!

புது வருஷம் பிறந்தது. பரீதாபி வருஷம் பரிதாபமாய்ப் பிறந்தது. விரோதிகிருது வுடனே விரோத கிருத்தியமும் முடிந்தது. கூடா நட்பால் குடிகெடுமென்பது உண்மை. ஆகாத நட்பை ஆய்ந்தாயல் மஹா கஷ்டம். போகாத ஊருக்கு வழிதேடல் போல ஆகாத நட்பு அநர்த்தம் விளைக்கும். இந்த அநர்த்தம் விளைந்து நீங்கியதே பெரும் புண்யம். "பெரிய மனுஷாள் சமாசாரம்" என்றால் இப்பொழுதுதான் அர்த்தம் தெரிந்தது. பணத்தால் பெரியவன் குணத்தால் பெரியவனில்லாவிடில் எல்லாம் சங்கடமாய்த்தான் முடியும்.

உலகத்தில் அன்பு, அபிமானம் என இரண்டுண்டு. பற்றறப்பற்றி நிற்பது அன்பு, பற்றறப்பற்றி நிற்பது அபிமானம். முன்னது பவோபவம். பின்னது மனோபவம். அன்பு அழியாதது; அபிமானம் அழியும். ஆகையால் அன்பு பழகப் பழகப் பெருகும். அபிமானமோ பழகப்பழக இறகும். இதனால் அபிமானம் பிடிமானமாகும். பிடிமானமென்றால் உறுதி.

உலகமெல்லாம் அந்துப்பூச்சிபோல் இன்பை நாடித் துன்பில்வீழ்ந்துழல்கிறது. "காதலிருவர் கருத்தொருமித் தாதரவுப்பட்டதே இன்பம்" என்று ஔவையார் கூறியிருக்கிறார். "கருத்தொருமித் தாதரவுப்பட்ட' விடத்திலின்பம் போல், கருத்தொரு மிக்காதிருவரைத்தாய்ப் பிரிந்து பேசுப்பட்டவிடத்தில் துன்பம். இன்ப துன்பமிரண்டும், உணர்ச்சி ஒன்றுபடல் இரண்டுபடல் என்பதை யுணர்த்தும். உணர்ச்சி யொன்றுபட்டவிடத்தில் நட்புண்டாகும். உணர்ச்சி பேதப்பட்ட விடத்தில் பகையுண்டாகும். நட்பும் பகையும் உணர்ச்சியிற் புணர்ச்சியும், புணர்ச்சியிலுணர்ச்சிநீக்கமுமாகும்.

உணர்ச்சியிற் புணர்ச்சி யென்றாலென்ன? உர்ணச்சி யென்றால் உள்ளறிவு. உள்ளறிவுடன் ஒன்றுபட்டொடுங்குவதே உணர்ச்சியிற் புணர்ச்சியாம். உள்ளறிவிலொடுங்கச் சள்ளமனம் கரையவேண்டும். கள்ளமனமென்றால் உள்ளதை யுள்ளபடி பர்ருது சங்கல்ப விகல்பங்களில் அகப்பட்டு உழன்று வருவதாம். சங்கல்ப விகல்ப மென்றால் நினைப்பு மறைப்புமாம். நினைப்புண்டானால் மறைப்புண்டு. மறைப்புண்டானால் நினைப்புமுண்டு. நினைப்பும் மறைப்பும் சேர்ந்தது சித்தவிருத்தி. இந்த சித்த விருத்தியை அடக்கியாள வல்லவனாரோ அவனே நட்பாளன்.

"புணர்ச்சிபழகுதல்வேண்டா
உணர்ச்சிதான்நட்பாங்கிழமைதரும்."

என்பது திருக்குறள். ஒருவரோ டொருவர் சேர்ந்து பழகுதல் வேண்டாம். அல்லது அபிமானத்தில் பழகி யிறகுதலாகிய உறவும் வேண்டாம்: "உணர்ச்சிதான்"—உள்ளறி வுண்மை யுணர்தலாகிய ஒன்றே நட்பு என்று சொல்லப்படும் உரிமைதரும். இதுவே நட்புக்கு இலக்கியமாம். இந்த உள்ளறிவுண்மையுணர்தல் யாரிடமில்லையோ அவர்களிடத்து உண்மையான நட்பு என்று சொல்லப்படும் நேசமுமில்லை யாம்.

நேசம் என்பது உள்ளன்பு காரணமாக உண்டாகும் பற்றிலாப்பற்றுக்குக் காரணமாதலால் அது இதயகமலத்தை மலரச்செய்யும். ஏனெனில் உள்ளன்பிலுதித்த நேசத்தால் உண்மைப் பிரகாசம் ஒளிரும். உண்மை பிரகாசிக்கப் பிரகாசிக்க இதயம் சூரியனைக் கண்ட தாமரை போல் மலரும். இப்படி இதயம் மலர மலர அன்பும், ஆற்றலும் விரியும். அன்பு வளர வளர கூடமையும் சாந்தமும் அதிகரிக்கும். சாந்தம் பயிலப்பயில உபசாந்தமாகும். "சாந்தம்" பிழை பொறுக்கும்சக்தி யென்றால், "உபசாந்தம்" பிழையறுக்கும்சக்தி தரும். திருமந்திரோபதேசம் செய்த திருமூலதேவரும் "சத்திக்கு வித்துத் தனதுபசாந்தமே" என்றாரல்லவா? "சக்திக்கு வித்தான" உபசாந்தத்திலிருந்து ஆற்றல் என்கிற நினைத்ததுமுடித்தலாகிய சாதனசாத்திய சாமர்த்தியம் விளைந்திக்கும். உபசாந்தம் என்றால் (Exceeding Peace of Mind.) "பதறாத காரியம் சிதறாது" என்று சொல்லும் பழமொழியின் கருத்தும் இதுவே! காரியத்தில் மனம் சலிக்கும். மனம் சலித்தால் ஜ்யோதிமத்தியிலுள்ள சுத்தமனம் சங்கல்ப விகல்பமாகிற அலைகளால் மூடப்பட்டு அமெரிக்கை விட்டுக் கொந்தளிக்கும். அதனால் மனத்தெளிவு குறையும். தெளிவு குறையக் குறைய அருள் மறைந்து இருள் மூடும், மருளும் பற்றும். "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதாக மருளடைந்த மனக்கண்முன் ஜகம்விரியும். மருள் என்றால் மயக்கம். ஆதலால்தான் "மனமாயை"யே "மாயை" என்றார் திருமூலர். "காலவஞ்சனம்" என்று சொல்கிற பரமசாதனம்போல் "மாயைமயக்கம்" என்கிற பரம சாதனத்தால் இந்த மாயையை மயக்கவேண்டும். உன்மனஸாகிய ஸ்படிகாத்மக மனஸை மயக்கும் இம்மாயையை மயக்கினால், "கைப்பாலே ககப்பென்னும் மாய்ப்புப்போகும்!" என்றதுபோல இந்த மாயை மயக்கினால் மனமாயை (மனக்குழப்பம்) தீர்ந்துபோகும். அப்படி யென்றால் சங்கல்ப விகல்பங்கள் அற்றுப் போம் என்று அர்த்தமில்லை. ஆனால் நிர்விகல்ப சமாதியில்பழகினபழக்கபலத்தால் தாமரையிலையில் தண்ணீர்போல சங்கல்ப விகல்பமான அசுத்தமனதோடுகூட தாதாத்மிய சம்பந்தம் பாராட்டும் பிணக்குவிட்டுக் குணக்குத்தீர்ந்து உண்மையறியும் உன்மனஸ் ஸ்படிகலிங்கமாய்ச் சோபித்து நிற்கும். ஸ்படிகத்தில் விளங்கும் செம்பரத்தம்பூவின் சிகப்புப்போல, உன்மனஸில் அசுத்த மனஸின் ஸங்கல்ப விகல்பங்கள் பிரதிபிம்பித்தாலும், அவை சாயா மாத்திரமாய்த் தோன்றி ஸ்படிகத்தின் சுத்தங் கெடாதது போல் உன்மனஸின் தெளிவைக் கெடுக்காது. இப்படிப்பட்டவர்களுடைய நட்பே விரும்பத்தக்கதாம்.

"கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு."—திருக்குறள்.

"உரிமையறாது பழையதாய் வந்த நட்பினையுடையாரது நட்பினை, அவர் பிழைநோக்கிவிடுதல் செய்யாதாரை, உலகம் (உண்மையாளர்) நட்புக்குறித்து விரும்பும்."

"கெடார்" என்ற பாடமோதில் "நட்புத் தன்மையிற் கெடாராகி" யென்று அர்த்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

"பழையதாய்" என்று பரிமேலழகர் கூறிய உரையில் 'பழமை' யென்றதற்கு 'காலஞ்சென்ற' என்று அர்த்தம் செய்யக்கூடாது. இங்கே அது வன்று. 'பழமை'யென்ற பதத்தால் குறிக்கப்பட்ட பொருள் பின்னே? யென்னவெனில்?

"பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு."

"பழமையென்று சொல்லப்படுவது யாதென்றவினவின், அது பழமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றுக்கு உடம்படும்."—பரிமேலழகருரை.

"உரிமையாற் செய்வனவாவன" என்பதற்குப் பரிமேலழகர் கூறுவதாவது:—"கருமமாயின் செய்யுங்காற் கேளாது செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவு அச்சங்களின்மை யென்றிவை முதலாயின. சிதைத்தல்=விலக்கல். இதனாற் பழமையாவது காலஞ்சென்றதன்று, இப் பெற்றித்தாய (இப்படிப் பட்டதாய) நட்பென்பது கூறப்பட்டது. நட்பிற் கிலக்ஷணம் என்ன வெனில்:—

"நட்பிற்குஉறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்."—திருக்குறள்.

நட்பிற்குஉறுப்பு=நட்பிற்கு அவயமாவன
கெழுதகைமை (கிழமை)=நட்டார் உரிமையாற் [செய்வன
மற்றதற்குப்பாதல்=அதனுலவ்வுரிமைக்கு இனிய [ராதல்
சான்றோர்கடன்=அமைந்தார்க்கு முறைமை.

நட்பும், கெழுதகைமை யென்றுசொல்லும் 'கிழமை யாகிய உரிமை பாராட்டலும் வேறன்றாதலின் பின்னதை நட்புக்கு உறுப்பு=அவயவம் என்றார்.

அவயவமும் அவயவியும் தாதாத்மிய சம்பந்தத்தாலும் "அங்கபங்க" லக்ஷணத்தாலும் வேறிலாது ஒன்றேயாதல்போல, 'நட்பும்' நட்புரிமையாகிய 'கிழமை'—'கெழுதகைமை'யும் வேறன்று. ஒன்றே (ஒருதன்மையே) யாம்.

"தாமுடம்படாதவை யேனும் நட்டார்
உரிமையாற் செய்தவற்றிற்குத் தாம் செய்தாற்
போல் உடம்படாராயின், அவரோடு பழைய
தாய் (உரிமையாய்) வந்த நட்பு என்ன பய
னைச் செய்யும்!" என்பதுணர்த்தப் பின்னும்,

பழைய நட்பெவன் செய்யும்? கெழுதகமை
செய்தாங் கமையாக் கடை

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்.

"நோதக்க நட்டார் செயின்"—தாம் வெறுக்கத் தக்கனவற்றை நட்டார் செய்தாராயின் அதற்குக் காரணம் 'பேதைமை' யென்றாவது, 'மிக்க வுரிமை' யென்னும் 'பெருங்கிழமை' யென்றாவது கொள்க. 'பேதைமை' இழவூழால் வரும் பேதைமை யாவர்க்கு முண்டாதலால், அவர் பேதைமையால் தமக்குத் தீங்கிழைத்தார் என்றாவது, ஊழ்வகையால் தம்மின் வரற்பாலது 'பெருங்கிழமை' யென்கிற 'ஒற்றுமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றாவது கொள்ளல் வேண்டும். இப்பொருளடங்க,

"பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்"—என்றார்!

'பேதைமையும்' பெருங்கிழமையும் ஒன்று சேர்ந்தால் பிரளயகாலம் வந்தது போலத்தான். ஏனெனில் பிரளயத்தைத் தடுப்பாரில்லாதது போல மடைமையுடையாரும் தீங்கிழைக்கத் தக்காராய்த் தீவினையாலமர்ந்தாரும் (Fool and Knave combined) ஒன்று சேரின் தர்மம் தலைகவிழ்ந்து போகும். தர்மம் தலை கவிழ்ந்தால், அதர்மம் தலையெடுக்கும். தலையெடுத்த அதர்மம் பிரளயத்தில் தானழியும். அழியுங்கால் தர்மம் முன்போல தலை யெடுக்கும். அதர்மம் தலையெடுத்ததனால் பிரளயகாலத்தை யெதிர்பார்த்து நல்லார் பொல்லார் தம் பொய் மலிவைப் பொறுத்திருத்தல் வேண்டும்.

இதுதான் சரண்புகு சிவனாணை!
சிவனார் சிவன்வாமி சொல்லாணை!
ஸத்யம், ஸத்யம், புநஸ்ஸத்யம்
குமர குரபரன் சாக்ஷியம்மா!

குமரஸாம்பவன்.

ஓம் தத்ஸத்.

---:(*):---

"Hamlet Redivivius"-A By-Play.

(Sequel to "Redivivus—A Drama" by L. C. Innes Esqr. I. C. S. of Sevenoaks, Retired Judge, Madras High Court.)

ஹேமலதாநந்தவிக்ரஹம்.

"த்ரிபுரீ த்ரிபுராந்தஸ்தா த்ரிபுராம்ருதபாலிநீ!"

"தின்யோகக்ஷேமத்தைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன்"
—பழனியாண்டவர்.

---:(*):---

அங்கம் I. திரிபுரீ.

சித்சக்திச்சேதநாரூபா! ஜடசக்தி: ஜடாத்மிகா!
காயத்ரீவ்யாஹ்ரிதி:ஸந்தியா! த்விஜவ்ருந்தாநுஸேவிதா

பங்கம் I.

"தண்ணீர்நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்"—அஃதேபோல்
எண்ணீர்மையுள்ளாரால்எழில்புரம்தானேங்கப்
புண்ணீரழிவுடையார்பொய்மலிவாலழியும் புரீ!"

I. அக்கிரம விக்கிரமம். (The foul deed)

பெத்துநாயக்கன், முத்தியாலுசெட்டியாரிவர்கள் வாழ்ந்த காலையில், அவர்களுடைய பெயர் புனையப்பெற்று விளங்கிய முத்தியாலுப் பேட்டை, பெத்துநாயகன்பேட்டை யென்கிற நகர்ப்புற கிராமங்கள் வெள்ளைக்காரர்கள் வந்து வியாபாரம் நடத்தியதுபோய் அதிகாரம் செலுத்துவாரானபோது, பல்கிப் பெருகிப் பரந்ததோர் பட்டினமாகி வளர்ந்தது. அப்பட்டினம் பறைப்பட்டணமென (Black Town) இழிபெயர் புனைந்து செழித்தோங்கி வளர்ந்தது. 1886-ம் வருஷத்தில் இப்பொழுது டில்லி சக்ரவர்த்தியாய் முடிசூட்டப்பெற்ற நம்மரசர் இளவரசராயிருந்து தமது பத்தினியாரோடு இந்நகருக்கு விஜயமாக வந்தபொழுது, சென்னை வடபிரிவு போலீஸ் டிப்டிகமிஷனர், ("Black Town")என்ற இழிபெயர்மாற எழில்பெயரொன்றளிக்கவேண்டி யதைப்பற்றி நகரவாசிகளை ஆலோசனைகேட்டு வந்தார். அப்பொழுது த்ரிபுரமும் ஒருபுரமாய் உலகளந்த மாதவனடியணிந்த மாதவனொருவன் த்ரிபுராந்தஸ்தனாய் மந்த்ரயோகத்தி லழுந்தி நாமதாரணை யப்பியாஸம் செய்துவந்தான். அத்தபோதனன் நாதாநுஸந்தானம் செய்து "நாதவடிவாகியமஹாமகந்திராதி ரூபியை" ஹிருதய சமலத்தில் பூஜித்து அர்ச்சித்து அங்க லிங்க சங்கம ஸ்வரூபத்தில் லயித்து நின்றான். அத்தருணம் "இழிபெயரழிய எழிபெயரொன் றளிக்கவேண்டிப்" போலீஸ் கமிஷனருடைய வேண்டுதலானது நாதமுடி வெய்திய மாதவன் மந்திரதிருஷ்டியில் பட, அப் புண்ணியனும் அப்படித் தோன்றியதோர் எழில்புரியை ஆனந்தபூரிதனாய்க் கண்டனுபவித்து "சித்சக்திச் சேதனாரூபா, ஜடசக்தி: ஜடாத்மிகா!" என்றும் "காயத்ரீ வ்யாஹ்ரிதி: ஸந்தியா த்விஜவ்ருந்தாநு ஸேவிதா!" என்றும் உள்ளம் குளிர ரஹஸியநாமங்களால் துதித்துத் தான் கண்டதோர் சோதிநகருண்மை விளங்க Black Town என்னும் இழிபெயரழிய எழில்பெயர் புனைவான் சோதிநகர் என்னும் உண்மையை "மனிதரில் அரசனாவேன்" என்றவன் வாக்கையுன்னி "ஜார்ஜடவுன்" என்று பேர்புனையக்கருதி அஃதை உலக வழக்கி லுண்மை விளங்கப் பத்திரிகைக் கெழுதிப் பார்மன்னன் மனங்குளிர அவன் பேர் தானுமதுவாக அப் பேர் சூட்டத் திருவுளம் சாதிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொண்டான். அக் கோரிக்கையும் பலித்தது. இளவரசும் இந்நகரைவிட்டேகுமுன் அந்நகருக்கு "ஜார்ஜ்டவுன்" என்கிற பேரளித்துப் பூரிக்கலானார். இது 1896-ல்.

பங்குனி புத்தரம் பவித்ர நாளென்பர் மேலோர். ஆயினும் அப்படிப்பட்ட வோர் புநிதமாநாளில் "ஏப்ரல் முதலாம்" "புண்ணீரழிவுடையார் பொய்மலிவாற் புன்னாளாமந்த" * (All-fool'sDay) நாளையிலே, பகலவன் பேய் மலைவாயில்விழுந்த பின்னர், தோடங்க ஊடங்கும் திவ்ய கண்டாமணி யெட்டு "கண் கண்ணார்க்கணார்" என்றே கணகணவென்றெண்முறையடிக்கப் புன்மதியார் கூடியங்கே பொய்மலிவால் நகரழியப்புண்ணியனும் 'புராந்தஸ்தன்'(The Citi-

* First April 1912.

zen True) பொய்யுடலம் பற்றியம்மா, உள்ளம் பதைக்க அந்தோ! உண்ணீர்மை தான் கலங்கப் புல்லியர் பலர்கூடி யம்மா! போலியதிகாரஞ் செய்துபொன்னகரும் புரமழிய நல்லிதயமன்னனவன் நாணங்கெட அவன்வலியைப் பொற்புடைய "ஹேமலதா" வாழ்வழியச் செலுத்தினளே!

"ஐயகோ! என்செய்வேன்யாரைநான் அடுத்திடுவேன்!
மெய்யகோ! யான்பொய்யேன்மெய்விதிர்ப்பப் [பொறுத்திடுவேன்!
பொய்யவோ! புல்லியவோ! பொய்மலியப்பெற்றி [யவோ!
கையகோநான்பிறக்தேன்நமன்வாய்ப்பட்டிறந் [திலனே!"

"ஐயகோ! புண்ணியனே! யாரிடம்போய் முறையிடுவேன்!" என்றழுதடங்க, தர்மதேவதை வலக்கால் தூக்கிப் பின்வரும் பண்ணுக்கிசைய நிருத்தம் செய்யலானாள்:—

பண்.

அர்மமலிய விர்ரமங் காட்டி
உக்ரமவிக்ரமனு ரைக்கவர்ந்து
விக்ரமசக்ரம்சுழல்வழியுணரா
துக்ரமவிக்ரமதக்கிரமம்செய்தான்!

"காபத்ரீவ்யாஹ்ரீதி: ஸந்தியா" வென்று இருபிறப்பாளரால் எப்பொழுதும் சேவிக்கப்படும் த்ரிபுரவாலிநியான "ஹேமலதா"வை ஐயோ! அக்ரமமாகக் கொன்று கொலைபாதகத்தைக் கட்டிக் கொண்டார்கள் பாவிகள்!

"ஹேமலதா" வென்றால் பொற்கொடியாள் என்ற அர்த்தம். இந்த ரூபம் "சித்சக்தி சேதாரூபா ஜடசக்தி: ஜடாத்மிகா!" என்ற ரஹஸிய நாமங்களின் தரிசனம் கண்டவர்களுக்கு "ஹேமலதா" என்ற நாத நாமக்கிரியையின் லக்ஷண லக்ஷியம் விளங்கும்.

பொற்கொடியாளைக் கொன்று பெரும்பாதகத்தைக் கட்டிக்கொண்டு ஊர்ச் சோற்றைத் தின்று வளரும் துர்த்தப் பிசாசங்களான கோமாளிக் கூட்டம், அவள் பிணத்தைக் 'கோடும்பாவை' கட்டி விழுப்பதுபோல் இழுத்துச் சென்றனர். ஆகாசவாணி அவளுடைய ஆயிரம்வாய்திறந்து ஒப்பாரி பாடி 'ஹேமலதா' கொலையுண்ணவும் அவள் சரீரமாகிய த்ரிபுரியைத் விட்டுப் பிரிந்த அந்தராத்மக, த்ரிபுராந்தஸ்தானவைத் தேடியடைந்து "ஐய்கோ! அநர்த்தம் விளைந்தது!" என்று முறையிட்டழலானாள்.

I.

பொன்னேயென்பொற்கொடியே
பொன்னணிபூணாணங்கே யென்
அன்னே! யென்னருந்தவமே!
பொன்னேயுன்னைப்பூதலத்தோர்பலிகிட்டாரே!

II.

ஹேமலதா! என்னாசே! ராமநகர்சீர்பெறவே
கோமளமாக்காத்தருளும்கற்பரசி சொற்கரசே!
ஹேமலதா! சீதையம்மே! ராவணன்சீறழித்தவனே!
யோமனையே! பரதேவீ! புரமெரியப்பார்த்தவனே!

III.

பேடுவரும்பின்னேமுன் னேசைவருமாறேபோல்
கேடுவரும்பின்னேமுன்கெட்டுவரும்மதியம்மா!
நாடுநகரெல்லாமுன் நலத்தையெதிர்பார்த்திருக்கக்
கேடுகெட்டமானிடர்க்குக் 'கொடும்பாவை'யானாயே!

IV.

கொடும்பாவையாகியம்மாகுலமறுக்குந் துயரானாய்
கெடும்பாவிகெட்டழிந்தால் 'கொடும்பாவை'யென் [செய்வான்!
படும்பாடுபட்டலுத்துக் கெட்டழிந்தகெடுவானவன்
கொடும்பாவையுனையிழுத்துக்குலபங்கம்செய்தா [னையோ!

V.

அக்ரமஞ்செய்தவன்விக்ரமனானான்
துஷ்க்ரமநிஷ்க்ரமதுட்டரைச்சேர்ந்தான்
சொற்க்ரமமறியாச்சூன்யசம்பன்னன்
விக்ரமராஜன்வேதாளக்கதையாச்சே!

அங்கம். 1. பங்கம் 1. முற்றிற்று

—:-:—

Depressed Classes-Cause and Cure.

Public Meeting at the Anderson Hall.

At the second anniversary meeting of the Depressed Classes Mission which was celebrated on Monday evening (15th April) with the Hon'ble Mr. Justice Abdur Rahim in the Chair, Mr. C. V. Swaminathaiyer made a telling speech on the Cause and Cure of depression with the utmost feeling. He effectively placed before the audience the *idea* and the *ideal* of the term "depressed class." Depression

was the direct effect of suppression of the naturally expansive soul. He stood before the audience saying that he was there as a real true specimen of the depressed class. They would not be surprised, at his so doing, if they exactly knew and comprehended and not only comprehended but *realised* what it was which made the depressed classes what they were. He had himself for six years now shared their life, their sufferings, their pangs and woes. His cultivated tastes and feelings made him feel their sufferings a thousand times more. They suffered in silence like dumb driven cattle. He cannot suffer like them. The cultivated intelligence of man would not let the unjust oppressions of the previleged class to enter the soul like iron and there rust. For, all sufferings of man were intended to make him *think* and if one had subdued the modifications of the thought-making mind, suffering then would become evolutionery and an uplifting force instead of its being a depressing load. The sufferings of man must, of course, enter the soul, but the Altar-Fire of Consciousness—the *Chidagnikunda*—which it was the duty of every true man (Brahman) to guard and take care of, converted the iron into well-tempered steel. And man's sufferings then found fitting expression in darting words which entered the heart because they came from the heart though it must come round about through the brain. Language was the slave of thought, as thought itself was the outcome of religious feeling—and when that feeling was chastened and purified it would become intuitive vision.

He paid a high compliment to the lady speaker who preceded him, for it gladdened his heart to see her speak. He put it to the audience that that speaker was another specimen of the depressed class uplifted, for, there was no class more depressed than our womankind. And because the present-day Indians kept them depressed, they found themselves fit for nothing better than be hewers of wood and drawers of water. They had lost their originality for thinking: and all that modern education could make of them, was at the best mechanical quill-drivers, hair-splitting lawyers and senseless agitators, or the worst of them all, political mountebanks.

The conventional depressed classess were *depressed* because their growing intelligence was cruelly and tyrannically suppressed. The talk about giving them doles and feeling merely the animal in them was absurd. For, the speaker glowing with emotion in his face, put it to the audience and asked :—"Who amongst us, the cultivated classes, are more deserving of being fed from the produce of plain hard work—of tillage, toil and industry, than the so-called depressed classes! They are and they form the real wealth of the nation and their neglect of them is not only shameful, but suicidal to the best interests of the nation. They are treated like outcasts of society and their depressed condition is due not to any inherent depratvity of their own,—for depravity in its true sense is not confined to any class as such, the highest having their own share of it as the lowest,—but because the privileged classes will not have the honesty and straightforwardness to recognise merit where it is found and care more to safeguard their own vested interests and clannishness than to portect the true interests of society which according to the eternal laws of Evolution,—Social, Spiritual or Political, gives the palm to "the man who earns his bread with the sweat of his brow," and not to him who lives on the earnings of the weather-beaten tillers of the soil and the horny-handed sons of toil." He told the audience that he presented himself to them as the specimen of a man who could easily be taken for a thief and a house-breaker, not because he was capable of it, but because, forsooth, the privileged and monied class who were *prone* te become a pest of society when left uncontrolled, would *insist* on his being taken as such to guard their own interests, and the Government, in every country, was in the hands of the privileged class. "Man is, after all, the measure of his office great or small, as the heart undoubtedly is the unerring measure of the man." A petty man might bring a high office he holds into *contempt* by the pettiness of his little soul as a man with a large-heart might imbue the lowest office and position in society allotted to him with the highest dignity as did Nanda—the Pariah Saint, who born of the depressed class, uplifted the whole of depraved humanity in the uplifting of his own great soul, clothed though it was in a Pariah body. And this was an illustration of the inborn dignity of soul which was from God and striving ever to reach to God—which had become one of the national traditions of the country and celebrated every year with much *eclat* on what to the Hindus is "the All-Saints' Day" at Mylapore.

Moral:—

Depression sure by suppression is caused I think,
And suppression too, I pray you all bethink,
Is the result of repression simple and pure!
Remove it then by all means and pure bliss secure!

—*From the Daily Papers.*

—(-)—

The Passing of the Jagadguru Sri Sankaracharia Swamigal of Sringeri.

ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகள் ஐக்கியம்.

—:o:—

ஸ்ரீங்கேரியில் ஆதி சங்கரரால் ஏற்படுத்தப்பட்ட ஸாரதா பீடத்துக்கு அதிபதியான ஸ்ரீ ஜகத்குரு ஸங்கராசாரிய ஸ்வாமிகள் மார்ச்சுமீ 20உ புதன்கிழமை பகல் 11-மணிக்கு ஸ்ரீங்கேரியில் தமது "நித்யாநந்த சுகிருத நிலைக்கு எழுந்தருளி ஐக்கிய மடைந்து விட்டார்'

என்று வாசிக்கத் தேகம் சிலிர்த்து "உள்ளக் கொழுவூறுகிறது." "உள்ளக் கொழுவூறில் கள்ள மலமறக்கலாம்' என்பது முதுமொழி. இந்த மஹான் ஸாரதாபீடத்துக்கு வந்த 62-வது சங்கரர் என்று சொல்கிறார்கள். இவர் மஹாஸமாதியடையுமுன் இவருக்குப் பின் பட்டத்துக்கு வர வேண்டியவரைத் தெரிந்தெடுத்து நியமிக்காமல் ஐக்கியமாய்விட்டார் என்று சொல்கிறார்கள். இது எப்படியாயினும் பத்திரிகைக் கெழுதுகிறவர்கள் பற்பல பேர்களைச் சொல்லிப் பலவிதமா யெழுதுகிறார்கள். பட்டத்துக் குரியவர் யாராயினும் தாமே விதிப்படி வந்து சேருவார். அதைப்பற்றி நாம் விசாரிக்கத் தேவையில்லை. அப்படியே ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்பொழுது மஹாஸமாதியடைந்த மஹான் யோகசாஸ்திரத்தில் மிகவும் தேர்ந்தவரென்று புகழ்பெற்றவர். தீர்க்கதரிசனசித்தி பெற்றவர். இவர் ஆதிசங்கரருக்கு காலடியிற் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து முடித்ததொன்றும், தர்மஸ்தாபனார்த்தம் பெங்களூரில் ஸமஸ்கிருதவேத வேதாந்த பாடசாலை யேற்படுத்தியதொன்றும் இவரை தீர்க்கதரிசியென்று நன்றாய் காட்டுகிறது. தீர்க்கதரிசன வித்திபெற்றவர்கள் "அகக்கண்டது புறஞ்சொல்லேல்" என்ற ஆஜ்ஞைக்குட்பட்டவர்களா யிருக்க வேண்டியவராதலால் இவர் "அகக்கண்டது புறஞ்சொல்லாமற்றானே" அகமும் புறமும் ஒற்றிருக்க காலடியில் சங்கராலயமும், பெங்களூரில் ஸமஸ்கிருத பாடசாலையும் ஏற்படுத்தி விட்டுத் தமது வேலை முடிந்ததென விதேககைவல்ய முக்தி யெய்திவிட்டனர் போலும்.

இந்த தேஹம் கர்மமுள்ள மட்டுமே நிலைத்திற்கும். "கர்மமுற்றும் ஒழிந்த பின்னர் கலைந்துபோகும் நிறைவெளியில்" என்பது உண்மை. யோகதரிசனம் என்பது அங்க-லிங்க-சங்கமம் வரையிற் போகும். அங்கம் என்பது உபாஸகன்; லிங்க மென்பது உபாஸ்யம்; இவ்விரண்டு மொன்றாகக் கூட்டிவைப்பது உபாஸனை. "உபாஸக-உபாஸிய-உபாஸனை" மூன்றும் ஒன்றாகக் காண்பது திரிபுடியனுபவம்.

"திரிபுடியனுபவம்" என்றால், அது திரிபுடி ஸாஹித்தியமா, அல்லது திரிபுடி ராஹித்தியமா? என்று கேட்பார்கள். இது பரோக்ஷ ஞானமுதித்தவர்கள் கேட்கும் கேள்வி. அபரோக்ஷானுபூதிச் செல்வர்களுக்கு இந்தக் கேள்வி யுதிக்கவே யுதிக்காது. ஏனெனில் அனுபவம் என்பது 'அனுபவிக்கப்பட்ட பொருள்' அனுபவத்துவாரா 'அனுபவிப்பானில்' ஒடுங்கி அப்பிலுப்புப்போல் ஐக்கியமா யிருப்பதேயாதலால், "திரிபுடியனுபவம்" என்பது திரிபுடிக் கதீதமாயுள்ள ஒன்றில் திரிபுடி லயிப்பதேயாகும். அப்பில் (ஜலத்தில்) கரைந்த உப்பு, அதினின்று வேறாகாதிருந்து, அப்பு காய்ச்சப்பட்டபோது உப்பு மாத்திரமாய் எஞ்சி நிற்பதுபோல; திரிபுடிலயம் என்பது திரிபுடி யொழிந்த ஒழிவாம் அதிபதத்தில் திரிபுடி யொடுங்க, அவ்வோடுக்கநிலை தவறாதிருக்கில், அதன் முதிர்ச்சியில் மோனம் என்று சொல்லும் நிஜபதத்தில் ஐக்கியமாகி மோனாதீதமான வஸ்துவைப்படைக்கும். அவ்வோடுக்கநிலை தவறினால் அப்பிலுப்புத் தோன்றியது போல, ஒழிவிலிழிவாம் திரிபுடி தோன்றக் காரணமாகி அசிபத ஐக்கியநிலை யென்கிற யோகஸம்யமலித்தி தோன்றியும் விளங்கும். யோக ஸம்யம லித்தியென்பது திரிபுடிஞானம் அதற்கப்பாலுள்ள "ஒழுவிலொடுக்கம்" என்பது திரிபுடியனுபவம். திரிபுடிஞானம் யோகாப்பியாஸத்தின் முடிவு. திரிபுடியனுபவம் ஸமாதி லித்தியின் முடிவு. ஒழிவிலொடுக்கமுங் கடந்த மோனஸித்தி "திரிபுடியனுபவாதீதமான" நிஜபதம். நித்த முத்த சுத்தப் பரம்பொருளாகிய "அத்வைதவஸ்து" மாத்திரமே திரிபுடிராஹித்தியமாயுள்ளது. ஆதலால் புஸ்தகங்களையும் சாஸ்திரங்களையும் மட்டும் வாசித்துவிட்டு, அல்லது, ஏதோ பூர்வஜன்மபுண்யத்தால் லித்தித்த லாதுலக்க மஹிமையினாலுதித்த அபரோக்ஷ

ஞானத்தை மட்டும் கொண்டு அபரோக்ஷானுபூதியினுண்மையை அறிந்துவிட்டதாக அழிமதம் பேசுவது அகரபாவம் முதிர்ந்த அசத்துக்கள் வார்த்தையன்றி வேறொன்றுமில்லை. அது வைகரிமாத்திரமா யிருந்து விகாரம் விளைக்குமேயன்றி ப்ரைவாக்கு மட்டும் சென்று சங்கல்ப மூலத்தை யுணர்த்தி நிர்விகல்ப ஞானமளிக்காது. திரிபுடி ஞாநாநந்த நிலையிலிருந்து "செய்வனதிருந்தச்செய்" என்கிற முதுபொழிப்படி செய்கடனைச் செய்து முடித்துத் திரிபுடி யனுபவானந்த "அதீதநிலையில் ஒடுங்கப் பெற்ற குருமூர்த்திக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்," என்று திரிகாலத்தும் நமஸ்காரம் செய்து அவர் திருவடி ஞானம்தந்த தாதாத்மிய நிலையிலிருந்து சலிப்பின்றித் தொழுது நிற்கிறோம்.

ஓம்தத்ஸத்.

SISTER NIVEDITA.

நிவேதிதை யம்மன்.

"In the world you will have tribulations, come unto me, I will give ye Rest.—*Jesus Christ.*"

பங்குனிமீ திருமயிலாப்பூரில் நடந்த அறுபத்திமூவர் உற்சவத்தில் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டிருக்கும் பொழுது அறுபத்திமூன்று சிவனடியார்களுடைய விக்ரஹமும் எழுந்தருளிவந்த திருக்காட்சியைக் கண்ணுற்றிருக்கையில் காரைக்கால் அம்மையாருடைய திருவுருவம் கண்ணைக் கவர்ந்தது. அவருடைய விக்ரஹம் மற்றெல்லா விக்ரஹங்களிலும் விகாரமானது. ஏனெனில் அவர் ஒருவரே தம் அழகெலாம் அனுபவிக்கப் பிறந்தவனான கணவன் அவ்வனுபவத்துக் கஞ்சித் தன்னைத் துறந்தானென்பது கண்டு உலகில் தனக்கு உபயோகமில்லாத அழகை யெல்லாம் தம் பிறவாக் கணவருகிய பதிக்கு அர்ப்பணம் செய்து தாம் பூததேகத்தோடு மட்டுமிருக்க வரம் பெற்றவர். ஆதலால், அவர் பூததேஹம் விகாரப்பட்டிருப்பினும் அவர் "திருவுருவம்" அதாவது அவருடைய "ஸ்வரூபம்" அழகு பொருந்த விளங்கியது. நல்ல மாம்பழம் தோல் சுருங்கி விகாரப்பட்டிருப்பினும் அதன் உள்ரஸம் சுவை மிகுந்து கனியின் சிலாக்கியத்தைக் காட்டுவது போல, காரைக்காலம்மையாருடைய திரை நிறைந்ததேகம் திரோதான சுத்தி யடைந்த அவரது திருவுருவத்தை அதாவது ஸ்வரூபத்தை ஞானசக்ஷுஸ் முன் தோன்றச் செய்தது.

மிஸ்மார்கரேட்நோப்ள் என்னும் பேர் பூனைந்த அங்கிலேயமாது ஸ்வாமி விவேகானந்தரின் சிக்ஷைக்குள்பட்டு அவருடைய சிஷ்யையானபோது அவர் அந்த அம்மாளுடைய உள்ளப் பக்குவத்தை யுணர்ந்து "நிவேதிதை யம்மன்" என்று தீக்ஷா நாமம் கொடுத்தார். அப்பேர் பொருந்த அந்த அம்மணியும் தனது தீக்ஷா விருதம் தவறாது தனக்கு ஆத்ம தீக்ஷை கொடுத்த குருவே சரணாக அவருண்மையை யுணர்ந்து, உணர்ந்தபடி நடந்து, நடந்தபடி நட்டதைநாணாமே ஓதிப் பேரும் புகழும் பெற்றதன்றி உள்ளத்துவகையால் மேன்மேலும் ஆத்ம சுத்தி பெற்றுவந்தார். இந்த அம்மணி சென்ற அக்டோபர்மீ டார்ஜீலிங்கில் தம் குருவோடு ஐக்கிய சித்தி பெற்றதையுன்னி கல்கத்தாவில் சென்ற மாசம் ஷெரிப் மீட்டிங்கு ஒன்று கூடியது. அந்த மீட்டிங்கில் டாக்டர் ராஷ்பிஹாரி கோஸ் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து அவ்வம்மையின் உள்ளத்தழகைப்பற்றி உவந்து சிறப்பாய்ப் பேசினார். பாபு சுரேந்திரநாத் பானர்ஜியவர்களும் 'எம்பையர்' பத்திராசிரியராகிய மிஸ்டர் ப்ரேஸர் ப்ளேயர் அவர்களும், கனம் மிஸ்டர் கோக்கலே யவர்களும் அவருடைய உயர் நலம் பொருந்திய உண்மையான உயிர்வாழ்க்கையைப்பற்றிச் சிலாகித்துப் பேசினார்கள்.

மேற்றிசையாரில் ஸ்வாமி விவேகாநந்தருடைய சிஷ்ய கோடிகளான பல்லோரில், இவர் ஒருவரே உண்மையாகவிருந்து தம் தீக்ஷா விருதம் தவறாது நடந்து கொண்டவர். மற்றவர்களெல்லாம் ஆநந்தம் தேடி ஆநந்தப்பேர் புனைந்து தன்னைக் கொடுக்கமாட்டாமல் தள்ளாடி விழுந்தார்கள். நிவேதிதை யம்மன் ஒருவரே தன் உடல் பொருள் ஆவியையும் அர்ப்பணம் செய்து சொடுத்து மோகானந்தத்தை விட்டுத் தியாகானந்தத்தைப்பற்றி திவ்யதேஜோமயானந்தப் பிராப்தி பெற்றார்.

உண்மைக் குழைப்பவர் யாரும் திண்மையாளராயிருக்க வேண்டும். இந்தத் திண்மை கண்ணப்பனாருக்குப் பிறந்ததுமுத லிருந்ததினாலல்லவோ அவருக்குத் திண்ணனார் என்கிற திருநாமம் இயற்பெயராக வந்தமைந்தது. திண்மையுடையவர் திண்ணனார். திண்மை தேஹத்திரியங்களுக்கும் பொருந்தும். ஸ்தூலம் தடித்தவனுக்கு சூக்ஷ்மம் மெலிந்திருக்கும். சூக்ஷ்மம் தடித்தவனுக்குக் காரண சரீரம் வலிகுறைந்திருக்கும். இது திரிகரண சுத்தியில்லாதவர்கள் விஷயத்தில் உண்மையாம். பூர்வஜன்ம புண்யத்தினாலும் தபோ மஹிமையினாலும் திரிகரண சுத்தி வாய்க்கப் பிறந்தவர்களுக்கு காரணசரீரம் வலி மிகுந்து திண்மையாகவிருக்கும். காரணத்தின் திண்மையினால் அதன் காரியமாகிய சூக்ஷ்மதேஹமும் திண்மை பெற்றுவிளங்கும். இப்படியாக அகத்தழகு பெற்றவர்கட்கு முகத்தழகு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றே. ஏனெனில் காரைக்கால் அம்மையாரைப்போல் தேஹாபிமானத்தை விட்டவர்களுக்குச் சரீர அழகு ஆபத்து விளைக்குமல், ஸ்தூல சரீரம் பூதாத்மகமாகவே யிருக்க விரும்புகிறவர்கள் பெரும்பாலாரவர். ஏனெனில் அவர்கள்.

"கனியே தேனே கற்கண்டே!
தனியேன் தரையில் தவிக்கலாமோ!

என்றபடி தரையினிருந்து தவிக்கப் பொறுக்மாட்டார்.

ஓம் தத்ஸத்.

The Depressed Classes Mission.

The Depressed Classes—Cause and Cure.

"தாழ்ந்தகுலம் வாழத்
தாழா துழைக்குங் குழாம்"

தாழ்ந்தவகுப்பார்—தாழ்வும் வாழ்வும்!

முன்னுரை.

"வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்
தாழாமற் றாழ்ந்தேண்டி சற்றுங் குறையாமல்."

சென்ற ஏப்பிரல் மாதம் 15-உ திங்கட்கிழமை யன்று சென்னை தாழ்ந்த வகுப்பாரைச் சீர்திருத்தும் கைங்கரியம் மேற்கொண்ட சபையார் (Depressed Classes Mission) அவர்களது இரண்டாவது வருஷ மஹோற்சவங் கொண்டாட சென்னை கிறிஸ்தியன் காலேஜுக்குப் பக்கத்திலுள்ள அண்டர்ஸன் ஹாலில் ஒரு மஹாசபை கூடினார்கள். அச்சபைக்கு நிரந்தரமான தலைவர் கனம் மிஸ்டர் வி.சங்கரன் நாயர். அம்மகோற்சவங் கொண்டாடக் கூடின சபையில் அக்கிராசனம் வகிக்க உடன்பட்டவர் கனம். மிஸ்டர் அப்தர் ரஹிம். அப்பொழுது அச்சபையார் கருத்திற் கிசைந்து அனுதாபமிகுதியால் அவர்களோடு ஒத்துழைக்க உடன்பட்டு வருஷாந்த ரிபோர்ட்டு அங்கீகாரத்தைப் பற்றிப் பேச உடன்பட்டு வந்தவர் கனம் பிரஹ்மஸ்ரீ தி. ஸதாசிவய்யர். அண்டர்ஸன் ஹால் நிரம்பச் சென்னைமாவாசிகள் வந்து கூடியிருந்தார்கள். ஏழையேன் தேவி சொல்லைத் தட்டி "மார்ஜால புத்தியுள்ளவனை நம்பாதே" யென்று சொல்லிய எச்சரிக்கை யுணர்ந்தும், அனுபவ முதிர்வினாக் குறைவால் இன்றைக்கு ஆறு வருஷங்கள்முன்னே மார்ஜாலபுத்தியை நம்பிப்பொய் வலையில் சிக்கினேன். "மார்ஜாலி" என்றால் என்ன? பூனை. பகலிலும் இருளிலும் பார்க்கும் திறமை அதற்கே உரித்தாம். அஞ்ஞானத்திலிருந்துகொண்டே ஆசையொழியாது பாசம் நீங்காத, சுத்த ஏட்டுப்படிப்பின் சாமர்த்தியத்தால் சாஸ்திரங்களை யொருவாறு ஓதக்

கற்று மனத்தூய்மை யின்றி மருள்ஞானம் முற்றி இருளில் பார்க்கக் கற்றதனால் அருட்பார்வை வந்ததாக மபங்கி ஸாதுக்களைக் கூடிச் சதிபாதகம் செய்து கூடாநட்பால் குடிகெடுக்கும் தன்மையுடையார் யாராயினும் அவர் "மார்ஜாலபுத்தி"யுடையவராம். அப்படி யென்றால் மார்ஜாலி நியாயமாய் மாயாவித்தை சிறிது கற்று மனமாயை நீங்காது கனமாயையிற் பட்டுழலும் கர்மிகள் என்று பொருள்படும். இவர்களுறவை யுகந்தேற்றவர்களெல்லாம் "சதிரிழந்து கெட்டேனே" யென்று பாடியிருக்கிறார்கள். இதற்கு முக்கிய உதாரணம் யேசுகிறிஸ்து நாதர். மற்ற எல்லாருக்கும் இந்த அனுபவம் பொதுவே! "மார்ஜாலி மாயவழி காட்டும்" என்பதன் கருத்தும் இதுவே.

"கார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன்சொல் [லாஞ்
சாத்திரங்கள் சொல்லிச் சதிரிழந்து கெட்டேனே!"

யெனப்பட்டினத்துப்பிள்ளை யவர்கள் பாடிய அனுபவம் ஏழைக்கும் உண்மையாய்ப்பலித்தது. பலித்தாலு மென்ன! சலிப்பு வராமல் உள்ளிருந்து உளங் காத்தவன் இணையடி பற்றினோர்க்குக் குறைவொன்றுமில்லை.

* * *

பட்டினத்தடிகள் ஊர்ப்பாழ் கடந்ததோர் உண்மைக் கோவிலில் கோவணாண்டியாகப் புறத்துறவு மேலிட்டு அகத்துறவு பூண்டு ஆனந்த ஸமாதியி லிருக்கையில், சில கள்வர் ஏதோ பொருள் கொள்ளை யடித்துவிட்டு, அதிற் சில நகைகளைக் கொணர்ந்து அடியாரிடம் கிடத்திவிட்டு அவரை அரசன் காவலாளர்க்குக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தாங்கள் பரமயோக்கியர்கள்போல வேடிக்கை பார்த்திருந்தார்கள். அந்த மஹாதபஸி மனவில் பேத மொன்றும் நினைக்காமல், அபேத ஞானம் தலையெடுக்க அபயாநந்த வாழ்வில் முழ்கியிருக்க, ஊர்க் காவலாளர்கள் திருடர்களைத் தேடிக்கொண்டுவர, அடியார் கோவணாண்டியாய் உள்ளம் ஒளிரக் கரியுரி போர்த்தான் தகைமையாய் அழுக்கடைந்த திருமேனியோடு அழுக்கறுத்த உள்ளம் ஒளிர வீற்றிருக்க, உளக்கண் பஞ்சடைந்த ஊர்க்காவலர்கள், திருடனைப் பிடிக்காத குற்றம் தமக்கிடையூறாக வந்தெய்துமென்று குருடனைக் கண்டோடிய திருடன் மனப்பாங்கே போல், அத்தூயவரைத் திருடனென்று பற்றி நியாயாதிபதியிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள். நிறுத்தின பெரியவர் மௌனசமாதியூண்டு "சும்மாவிருக்கச் சுகம் சுகம் என்றான்" சொல் நம்பி ஞானாநந்த ஸ்வரூபியாய் நிற்க, நடுவுநிலையறியா நியாயாதிபதியும் அப் பெரியவரை யாரோ பைத்தியக்கார னென்று நம்பி, திருடனைத் தூக்கில் போடுகிற விதிப்படி அவரைத் தூக்கிட்டுத் தண்டிக்க உத்தரவளித்தான்.

காலவஞ்சனத்தால் காலனையும் வஞ்சித்த பெரியவர், தம் நிலைகுலையாது நிற்கக் காவலர்கள் அவரைப் பிடித்து கைக்கட்டு காற்கட்டுகள் கட்டிக் கொலைக்களம் கொண்டு போனார்கள். அங்கும் அவர் அமைதி கெடாது ஆனந்த மூர்த்தியாய் நிற்கச், செய்வன வெல்லாம் செய்தாயத்தமானபின் பட்டினத்தடிகளைத் தூக்குமரத்தின்மே லேறவேண்டித் தூண்டினார்கள். அந்த மஹானும் அத் தூக்குமரத்தைக் கண்விழித்துப் பார்க்க அது பட்டெனத் தீப்பட்டு நீறாயெரிந்தது. அரசன் இது கேட்டு ஓடோடியும் வந்து ஏதோ அபராதம் செய்துவிட்டோமென்று பயந்து பெரியவரைச் சரண்புகுந்து அபயங் கோறி நின்றான். பெரியவரும் அபயமுத்திரை யளித்து அவன் நட்பைவேண்டாது அயல் தேசம் சென்றார். அந்த அரசனது கூடாநட்பை யுன்னியே அவரும்,

"ஆசாரமில்லா அரசருடன் கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்து கெட்டேனே!"

என்று "இறந்த காலத் திரங்கல்" பாடியுள்ளார்.

* * *

இந்த அனுபவத்தை யுன்னி அன்று முற்பகலில் ஏழையேனைத் தோழமைபூண்டுத்துக் கெடுத்த ஆகாத நட்பை விலக்கி, அஞ்சனவும்

பெருத பஞ்சமஹாபாதகமான வாக்கியத்தை அதன் சிறுமை கண்டொதுக்கிக் குலமழியக் கொடுத்தவ னுறவு தீர்த்து, நம்பினார் கைவிடாத நாதன்தாள் பற்றி, அவனே கதியின்றி வேறொரு கதிகாணாது அக்ரம விக்ரம ஆர்ப்பாட்டத்துக் கடங்கியிருக்க,

"பற்றற்றார் பற்றாகப் பற்றி யிருந்தாண்டி
குற்ற மறுத்தாண்டி கூடி யிருந்தாண்டி"

யென்று பாடப்பெற்ற பண்புடையோன் விசுவநாதனுய் வடிவெடுத்து விசாலாக்ஷி யம்மையைச் சுட்டிக் காட்டி குலசேகரபட்டினத்தின் குறியும் சொல்லி, தாகவிடாய் தீர்த்துத் தாகமிகத் தணியவம்மா,

சகஜமாவிருந்தாண்டி.

"வெட்ட வெளியிலெனை மேவி யிருந்தாண்டி
பட்டப் பகலிலடி பார்த்திருந்தா ரெல்லாரும்!"
"செத்தாரை யொத்தேண்டி சித்தை தெளிந்ததடி
மற்றொரு மில்லையடி மறுமாற்றங் காணேன்'டி."
இந்த நிலையிலம்மா திரிபுரமும் சுடுகாடாச்
சுற்றித் திரியலானேன் பற்றிலனு யெனைமறந்தே!
சிதையிலன்று தபஸிருந்தேன் சீர்குலைய வைத்தானென் [று
பதைபதைக்கப் பாலனவன் மேல்விழுந்து அழுதா [னம்மா!
தாயிழந்த குழைந்தையென்று தவிக்கவிடாதுடனிரு [ந்தேன்
வாயிழந்த குழந்தையவன் வயிறெரியத் தவித்தானம் [மா!
கோயில் குளம்வெட்டியவன் குடிபெரிதாய் வாழ்ந்தா [லும்
வாயில் நலம் இல்லானவன் வயிறெரிய வினையிழைத் [தான்!
அவன் செய்த கூத்துக்கெல்லாம் ஆளானேன் வினை [வலியால்
இவன்செய்த கூத்தைக்கண்டு மனமழியக்காவ்ட்டமா [னேன்!
"சுட்டிநந்த பாழ்தனிற் சுகித்திருக்கச் சொன்னவன் [காண்
வட்டிலெழுத்தோ எழுதினவன் கைப்பிழையோ!

* * *

"நீ வீண்ட தெதுவானாலும் வெட்டவெளி யானாலும்
குடியிருந்த வீட்டனைப் பாழ்தரு யாக்காதே!" —

யென்று சொன்ன வென்தாயா. சின்றுவந் தெனைக் [காக்கச்
சோமசுந்தரக்கடவுள் வாமமாக வந்தழைத்தார்.

"சும்மாவிருக்கவைத்தான் சுத்திரத்தை நானறியேன்
அம்மா பொருளிதென உடைய விழுங்கினண்டி."
"பார்த்த விடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி
கோத்தநிலை குலைத்த கொன்கை யறியேண்டி."

இந்த நிலையிலே நான் எனைபறியா திருக்கையிலே, பட்டப் பகலிலம்மா! பார்த்திருக்க வெல்லாரும், பிள்ளைமனம் நோகப் பேய்வழக்குத் தொட்டா னெல்லாப், பிள்ளைபறிகொடுத்த பாவியவன் தேவிகள்ளன், சொல்வழக்குப் பலியாமே சூநிய்மாய்ப் போனுன்காண். குழந்தை மனந்தேறப், பழுத்தமனம் நழுவிவிழ, விசுவநாதருபியவன், காசியிலேவிற்றிருப்பான், குலசேகரத் தம்மையுடன் கூடியிருப்பானவன், குழந்தையை மடியில்வைத்து குணம்பலவாப் பேசியம்மா, "கோர்ட்டாருன்றன் உயர்தந்தையைக் குணக்கேடன் என்னத்தகார்: குணக்கேடுன்னிடமணுகில் உனைப்பெற்ருன் கெடுவனுவான்!" என்றுரைசொல்லியம்மாஹிதோபதேசம்செய்ய உள்ளங்குழைந்துபாலன், உளமுருக மருகின்ருன்.

மனந்தேறிப் பின்னையம்மா மாண்புடனே கூடிவர, ஸோமகந்தர மூர்த்தியவன் சுட்டியென்னை யழைத்தானம்மா!

"தாழ்ந்தகுலம் வாழவென்று தாழாதுழைக்கும் குழாம்," மஹோற்சவங் கொண்டாடக் கூடியுள்ளோம் நாங்களிங்கே! கூடிக்குலாவி நீயும் கோத்தநிலை குலையாமல், சேர்ந்திருந்து கொண்டாட்டம் செய்ய வேண்டுமென்று சொன்னுன்.

"பாழான பட்டணத்தில் 'பழமை' கெட்ட லக்ஷணத்தில் பொதுக்கூட்டம் கூடி நீங்கள் ஏதுசெய்யப் போகுறீர்கள்?" என்றுரைத்தே மனம் வீண்டேன் ஏது செய்வதென்றறியேன்!

* * *

கொன்றபிள்ளை யெழுந்திருக்கக் கூவியழைத்தானவன், கொன்றைமாலைசூடியவன், மன்றிலாடுமாதவன்காண்! பன்றியாகவிருந்து

முன்னே குட்டிகளைக் காத்தானம்மா! என்ன ஜாலம் செய்பவென்றே எனையழைத்தான் [ஞானறியேன்.

* * *

திரயோதசி யன்றம்மா, ப்ரதோஷகாலமம்மா, த்ரிமூர்த்திகள் அவதாரம் ஆகிவந்தாற் போலவம்மா! மன்னன் மனச்சாக்ஷிகாக்கும் [ணமான ஜட்ஜ் மூவர், இனமாக வந்தங்கே [ழில் சேவை தந்தாரம்மா!

* * *

[கூட விருந்தேன்நான் குதூஹலம் ஒன்றுங் [காணேன். அப்தர்ரஹிம் உண்மையாளர் அக் [ராஸனம் வகித்தார். சங்கரனே வந்தாற் [போல் சங்கரன் நாயரவர், தாழ்குலம் வாழ [வென்று தனியுழைப்பார் தலைவரானுர். மனோ [ன்மனி பாகனங்கே மகிழ்ந்தருளி வந்தாற் [போல், ஸதாசிவ மூர்த்தியம்மா, ஸத்ஜனரைக் [காப்பவன் காண், தாழ்குலம் விளங்கவன்று [ழாமற் பேசினுன்காண்! தாழ்குலத்தார் சீர் [பெறவே வெள்ளிப் பதக்கமொன்று விநயமா [ளிப்பே னென்றுன்: எழில்பெரும்சபை [யாரெல்லாம் கழிபெருங்களிப்புக் கொண்டார். [உள்ளத் துணர்வம்மா ஊறினது கண்டேழை, [வாழ்வான வாழ்வெனக்கு" வந்தமுறை [நான் கண்டு "தாழ்ந்தகுலம் வாழவென்று [தாழாமலுழைப்பார் முன்னம்" "தாழாமல் [நான் தாழ்ந்துசிற்கத்" தயவு செய்ய வேண்டு [மென்றேன்.

* * *

[உள்ளத்துணர்வை நான் உண்மையாய்க் [குறித்து வைத்தேன். கள்ளமேதும் நினைத் [தனில்லை கருணைகரன் சாக்ஷி! உள்ளமுணர் [ந்த—"உண்மை யுரைத்தலோடு கேட்டல் [வேண்டும்," என்றுரைப்பார் சொற்கிணங்கி, எனைப் [பேச வழைத்தாரம்மா!

* * *

"தாழ்ந்த குலம் வாழவென்று தாழாதுழை [க்குங் குழாம்" கூடுசபை முன்னே நான் தலை [மிர்ந்து குனிந்து நின்றேன். "தாழ்ந்த குலம் [வாழவைக்கும் தயாபரன் தயவாலே தாழ்ந்த குலத்தவனுய்த் தங்கள் முன்னே நிற்கிறேன் காண்!"—

என்றுரை சொல்லியம்மா 'எதிரொலிசெய் காகோஷம், ஆர்ப்பரித்தடங்குமுன்னே, அடியன்நான் சொன்னதைக்கேள்:—"தாழ்ந்த குலத்தாரவர் தரையில்படுந்துன்பமெல்லாம் அறுவருஷமனுபவித்தே ஆற்றலுடையனுனேன்! வாயில்லாச் சீவன்களாய் ஏழைகள் வருந்துறுர்கள். வாயுள்ள ஜீவனல்லோ மன்குலத்திற் பிறந்தவர்கள்! துன்பம் தரையிலுண்டு: தூய்மை மனத்திலுண்டு. தூயமனமுண்டானல் துன்பமெல்லா மின்பமாகும். ஏழைகளைப் படுத்துகின்ற பாவிகள் பாவமெல்லாம், ஏழைமனம் கோழைப்பட்டால் வாழை மரம் போலாகும்! வாழையடிவாழியாத் துன்பம் வளருமம்மா! துக்கமும் அதிகரிக்கும்! கோழைமனம் தெளியவென்றே குணக்கேடு வாராமல், ஏழைகளைக் காக்கவேண்டும், ஈசன் செயல் இதுவே காண்! "ஏழை யழுத கண்ணீர் கூறியவாளோடொக்கும்" என்று சொன்ன வார்த்தையுமே பொய்யல்ல காண்பீர்கள். பொய்யல்ல மெய்சொன்னேன் மெய்யன்பு பூண்டு பார்ப்பீர். ஏழைமனம் விரியாமல் கோழைப்படச் செய்வதனுல், தாழ்மை வந்து வாழ்வையெல்லாம் கெடுக்குதையா சொன்னேன் கேளீர்! உணர்வை யழித்துவிட்டு ஊனளிக்கும் தர்மமெல்லாம் உயிர்போன வுடலுக்குச் செய்யுமுப சாரம்போலாம்!

"மன் குலத்தார் படுந்துன்பம் மனத்தூய்மையுண்டானல், உயிர்வாங்கும் கோடரியும் ஊர் காக்கும் செங்கோலாம்! சிதக்னிகுண்டத்தீயால் கரும்பொன்னும் செம்பொன்னும். செம்பொன்னைப் புடம்போட்டால் பசும்பொன்னும் மூலிகையால். அதுபோலவே, சபையீர் ஆருயிரை வதைக்குமிந்த அருந்துயர மெல்லாமும், ஓங்கார மூலிகையால், உயர்பொன்னுய், மணியாகும். சிந்தாமணி யுண்டானல்

சிறப்பெல்லாம் வந்தெய்தும். குன்றாத வாழ்வு மப்போ குறைவிலா தெய்துமையே!

"உயர்குலமேயானாலும் உண்மை கெட்ட மானிடர்கள், தமையடுத்தார் பிழைக்கவென்று தரணியிலே யவதரித்து ஏழைமனங்கொண்டவரை இறுமாப்பால் வதைக்கலாகார். உள்ளத்திலுணர்ந்ததுவே யுலகிலும்காணலாகும். ஏழைகளை வதைப்பதாலே எழில்புரம்பாழாகும். கோழை மனம் விருத்தியானால் குடிகேடு வந்துவிடும்! ஆகையினாலே அறிவுடையீர் எல்லாரும் ஏழை மனம் நோவாமல் காக்கவேண்டும் இது தர்மம்.

"ஏழைகளுக் கன்னம் இடுகிறோம் என்கிறார்கள். மேழைச் செல்வம் கோழை படாதல்லோ! உழுதுண்டு வாழ்வானுக் கொப்பில்லை நாமெல்லாம். பெண்டீர் மனம் நோகப்படுத்துகிறோம் அவர்களை நாம். பயனென்ன கண்டீரோ? பாழானோம் நாமெல்லாம்! ஊருக்குழைக்கும் உத்தமரைக் காணோம்! நாட்டுக்குழைக்கும் நல்லாரை நாம் காணோம்! தர்மத்தைக் காக்கும் தபஸிகள் எங்கே போனார்! கர்மத்தைச் செய்யும் கடையர்களே மிகுதியானார். சோற்றுப்படிப்பினால் சுகமுண்டோ சொல்லுவீர் நீர்? பட்டாடை தானுடுத்துப்பகட்டாக வெளிப்போனால் எட்டாத செல்வம்நமக்கென்னமாக வந்தெய்தும்! தாழ்ந்தகுலம் வாழவேண்டில் அறியாமை யழியவேண்டும்! காசாசைகொண்டவர்கள் கொட்டம் அடங்கவேண்டும். நாடெல்லாம்வாழக் கேடொன்று மில்லையென்பார். அந்தப் பழமொழியும் அடியோடே போய்விட்டது! கோயிலைத் தானிடித்து குடிலம் சமைக்கலாமோ! ஜனசமஷ்டி வாழாமல் வியஷ்டி ஜீவன் வாழலாமோ!

"ஏழைகள் தாழ்ந்ததெல்லாம் கோழை மனத்தாலென்பேன்! இங்கிவனைப்பாருங்கள், எப்படி யிருக்கிறான்காண்! தாழாமற்றாழ்ந்து தவவேடம் பூண்டேனான்! வேடங்கலையாமல் வீண்காலம் போக்காமல், உண்மையாயிருந்துநான் உள்ளதைச் செப்பனிட்டதனால், "வாழ்வான வாழ்வெனக்கு வாழாமல் வந்தது காண்!" கள்வனிவனென்றும் கடையனிவ னென்றும் காசாற் பெரியவர்கள் கைப்பாலேயுரைத்தாலும், கள்ளங் கபடென்னகத்தே சிறிதுமில்லை சாக்ஷி சிற்றீர். இப்படியே ஏழைகளை எட்டியடித்தாக்கால் கோழைமனம் செய்கத்தால் குடிகேடு வந்துவிடும்! ஆகையினாலே அறிவுடையீர்! சொல்லக்கேளும்! "தானே தனக்குப் பகையும் நட்டானும்!" உயர்வும் தாழ்வும் உள்ளத்திலே காணவேண்டும். காசாற் பெரியவர்கள் கடமையிலே சிறியவர்கள் உயர்பதவி பெற்றாலும் அவர் சிறுதனம் போகாது. உளத்திற் பெரியவர்கள் உண்மையிற்சிறந்தவர்கள் பறச்சேரியிற் பிறந்தாலும் பண்புடையாரானவார்கள். நந்தனே யிதற்கு நல்லுதாரணமாவார். ஊரெல்லாமஞ்ச உயர்பதவி பெற்றாலும் உள்ளத்தில் பஞ்சையர்வார் மன்பதரே யாவார்கள்! உண்மை யிது சொன்னேன், உன மகழ்ந்து கண்டு கொள்வீர்!

தடையற்றவாழ்வாலேதாழ்வொன்றும்வாராது
மடையற்றபுனலோடிக்கடலிற்போய்விழுமாபோல்
தடையற்றமனப்பழக்கம்தடைக்கஞ்சித்தாழாது!
தடையஞ்சாஅபயவாழ்வால்தாழாமற்றாழலாகும்!
தாழாமல் தாழக்கற்றால் தாழ்ந்தகுலம் வாழலாகும். சற்சபையாரே! சிற்சபைசரணம்!"

ஓம்தத்ஸத்.

—(:o:)—

The Tamil: Its origin and growth.

தமிழ்மொழி யோகக்ஷேமம்.

—:*:—

இவ்வுலகமே துவந்தாகாரமாக வுள்ளது. துவந்துவம் ஒழிந்தால் தத்துவம் மிஞ்சும். 'நீ நீ' யென்பது போனால் "அதுநீ" யென்பது மிஞ்சும். அது என்பது அனுதியாயுள்ளது. நீயென்பதும் அனுதியும் ஆதியும் சேர்ந்துவிடானது. அனுதியை மறந்தால் துவம்பதம் ஆதி முதல் அந்தம் வரைசீலோடும். ஆதி போடந்தமா யனைத்தையு முணர்ந்தபின் ஆதியை விட்டனுதியைத் தேடும். ஆதியை அறி

ந்து அனுதியைத் தேடுவதே தத்துவம். ஆதியில் அனுதியை யறிதல் ஞானம். ஆதியனுதியிரண்டு மொன்று யுணர்ந்திருத்தல் யோகம். "அப்ராப்த ப்ராபணம் யோகம்" கிடைக்கப் பெறாத பொருளைக் கிடைக்கப் பெறுவது யோகம். கிடைத்ததைக் காப்பாற்றுவது க்ஷேமம். ஞானமின்றி யோகம் சித்திக்காது. யோகமின்றி பக்தி பழுக்காது. பக்தி பழுத்தால் மனம் தானே நழுவி விழும். அதனால் முத்தி சித்தியாகிய பெற்றேறு சித்திக்கும். இங்கே ஞானம் என்றது அறிவு; யோகம் என்றது ஞானப்பியாஸம்: (மனப்பழக்கம்.) அறிவதானாயிருந்து பழகுதல்யோகம். அறிவுதானாகி அறிவின்றி வேறிலாதாதல் யோக சித்தி. இதைத் தமிழ்மொழிக்குப் பொருந்தப் பொருந்திப் பார்ப்போம்.

தமிழ்மொழி யென்றால் இனியமொழி. மொழி—வாக்கு. அனுதியிலிருந்து ஆதியும், ஆதியிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து சத்தமும் (ஓசையும்), ஓசையிலிருந்து இசையும் (ஸ்வரமும்), இசையிலிருந்து எழுத்தும், எழுத்திலிருந்து வழக்கும், வழக்கிலிருந்து பதமும் (வார்த்தையும்), பதத்திலிருந்து மொழியும் (வாக்கியமும்). வாக்கியத்திலிருந்து நூலுமாக இப்படி விரியும்.

இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்புவர் புலவனார் என்பர். இலக்கியமெதுவோ அதைச் சாக்ஷாத்காரமாக (நேர்நேராக (திரிபுடிமயக்கந்தீர)க் கண்டு, அப்படிக் கண்டது விலக்ஷணமாயினும், அதில் ஆழ்ந்திருந்து அது விரியும் வகையுணர்ந்து இலக்கணம் கூறுவோர் புலவனார் என்று சொல்லப்படுவர்.

"கற்றதனா லான பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

என்றிருப்பதால் கற்றதற் கழகு கடவுளை வணங்கப் பெறுதல், "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்"—என்றார் ஔவையார். ஆகையால் சித்தவிருத்தி நிரோதமாகிய மனப்பழக்க மில்லாதவர் கற்றகல்வி உண்மையான மனப்பழக்க மில்லாத குறைவால் கல்வி யென்னும் இலக்கியத்துக் கொத்ததாகாது.

அகத்திபனார் பேரகத்தியம் இப்படியே கூறுகின்றது.

"இலக்கிய மின்றி இலக்கண மின்றே
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கியத்தி னின் றெடுபடும் இலக்கணம்."

உள்ளத்தி னுள்ளே யுணரும் இலக்கியப்பொருளில்லாவிட்டால் இலக்கணம் எங்கே யிருந்து வரப்? எள்ளில்லாமல் எண்ணெய் எப்படி யுண்டாகும்? எள்ளிலிருந்தே எண்ணெயெடுப்பது போல, இலக்கியப் பொருளிலிருந்தே இலக்கணம் எடுபடும். ஆகவே தமிழ்மொழி யாராய்ச்சி செய்வோர், முதல்முதல் மொழியை அறிந்தாயவேண்டும். மொழியின் இலக்கிய மறிந்தால் அது வடமொழி, தென்மொழி யென்ற பிரிவு பட்டதின் இலக்கணம் தானே விளங்கும்.

மொழி யெல்லாம் பிரணவப் பொருளிலிருந்துண்டாயது. பிரணவமோ இறைவனார் அகப்பொருள். இறைவனை யறியாதார் இறைவனார் அகப்பொருளை யறியார். எள்ளறியாதார் எள்ளகத்தேதுள்ளஎண்ணெயறியார்போலும். இறைவனார் சகுணரூபி. அவரது அகப்பொருள் நிர்க்குணமானது. சகுண நிர்க்குண ஸ்வரூபமறியார் பிரணவத்தை யறியார். "ஓசைக்குள்ளாறும் ஓர்பொருளே, வேசைக்கு ளுன்னாருவேர்ப்புழவே" யென்றார் பெரியோர்.

ஓசைக்குள் நிர்மலாகாரமா யிருக்கும் பிரணவப் பொருள்தானே, வாக்கு வியபசாரம் செய்பவர்களுக்குள் வாக்குக்கு மூலமாகிய சங்கல்ப சக்தியைப் புழுவாய் அரித்து வாக்சித்தியைக் கொடுக்காது நாசம் செய்யும். ஆதலால் வாக்கு ஆதியில் ஒன்றேயாகும். அதுதான் பரைவாக்கு. தேகியின் காத்தி லுட்கார்ந்திருக்கும் கிளி அப்பரைவாக்கின் உருவகமாம்.

பரை, பச்யந்தி, மத்யமை, வைகரி யென்கிற வாக்கின் விரிவை உள்ளபடி உளவறிந்து கண்

டவர்கள் வாக்கின் இலக்கியம் கண்டவராவார். இவர்களுக்கு வாக்கிலக்ஷணம் தானே ஸித்திக்கும். வாக்கின் இலக்கியம் கண்டதற் கிலக்கணமானது வாக்குசித்தி, இந்த வாக்குசித்தி இதய சுத்தியில்லாமல் பலிக்காது. "வாய்மையால் அகம் தூய்மையாம்" என்றிருப்பதால், ஸத்தியவாக்கு யாரிட மிருக்கின்றதோ அவர்களிடமே வாக்குஸித்தி யுண்டாம். ஸத்ய விருதத்தால் இதய சுத்தி, வாக்ஸித்தி பலித்தாலும், கர்ம சரீரமுள்ள வரையில் தர்மத்தின் மர்மமறிந்து தர்மவழிபற்றி நின்றாலன்றி பிராகிருதாத்மகமாகிய கர்ம முடிச்சை பவிழ்த்து வெல்ல முடியாது. ஆகையால் "ஸத்யம்வத :தர்மம்சர" என்று வேதம் முறையிடலாயிற்று.

இப்படி ஸத்ய விருதத்தோடு தர்மானுசாரமும் சேர்ந்து வந்தால், வாக்கு ஸித்தியோடு கர்மஸித்தியும், கர்மஸித்தியால் தர்மஸித்தியும், தர்மஸித்தியால் நைஷ்கர்ம ஸித்தியும் பலிக்கும். நைஷ்கர்மஸித்தி பெற்றால் அவனே ராஜா. ஏனெனில் கர்மபந்தம் அவனைக் கட்டாது. "மனிதருள் நான் ராஜாவாயிருக்கிறேன்" என்று பகவான் அர்ச்சுனனுக்குச் சொன்னதினுள்ளர்த்தமும் இதுவே. மனிதருக்குள் நைஷ்கர்மஸித்தி பெற்றவனாயிருக்கிறேன் என்பது ஒன்றே உண்மையான இலக்கியப்பொருள். இந்த இலக்கியத்துக் கிலக்கணமாயிருப்பவரே உலகில் அரசுரிமைக் குரியவராவார். மற்றவர் அரசுரிமை பெற்றால் கொடுமை புரிவராவர். இதுவே இலக்கிய இலக்கண விசேஷமாம். தமிழ்மொழிக் கிலக்கியமானார் பரமசிவன். இவர் மொழிக் கிருப்பிடமா யுள்ளவர். மன, மொழி, மெய் என்கிற மூன்று காரணங்களில், மனம் ப்ரஜ்ஞானத்திலும், மொழி பிரணவத்திலும், மெய் (உடல்) பிராண சக்தியிலும் ஒடுங்கும்.

பிரணவஞானம், பிரணவமந்திரம், பிராண சக்தி யென்கிற மூன்றும் அகார, உகார, மகாரங்களிலடங்கி நிற்கும். இறைவன் அகாரம், தேவி உகாரம், ஊமைப் பிள்ளையாம் குமாரக் மகாரம்.

ஆகவே அகஸ்தியர் குமாரக்கடவுளிட மிருந்து தமிழ்மொழியைப் பெற்றார். தன்னை வேண்டிய அகஸ்தியனாருக்கு முருகக் கடவுள் "ஓரிடத்தைச் சுட்டி—'அதை யெடுக்க' எனறார்" என்றதனால் அது "முன்னரே சேமத்தில் இருந்தது என்பார்" உள்ளாய்த் துரைவேண்டிய தென்னெனின் மகார மாத்ராத்மனான (ஊமைப் பிள்ளையாம்) குமாரக் கடவுள், தமது அன்னை யப்பனைச் சுட்டிக்காட்டி, மொழிகளெல்லாம் காரணமாகிய அந்த இடத்திலிருந்து (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகத்தால் அதை யெடுக்க வென்றார் என்பது பொருளன்றி தேசகால பரிச்சேதங்களுக் குள்ளான ஓரிடத்தில் அதைச் சேமித்துவைத்துக் காட்டினாரென்பது பொருளல்ல. அது காலவஞ்சனாரஹிதமிய மறியாதார் கால சக்ரத்தின் சுழற்சியுணராது மாயை மயக்கிலாழ்ந்து சரித்திராராய்ச்சி மாத்திரத்தால் இட்டுக்கட்டிச் சொல்லும் ஓர் யுக்தி சாமர்த்தியமேயன்றி "இலக்கியங்கண்டதற் கிலக்கண" மாகாது.

அகத்தியனார் அம்மொழியைப் பெற்றுத் தமிழ் மொழிக்கிறைவனானார். உலோபா முத்திரையையும் தாயவளானாள். தமிழ் தானும் சித்தனாய்ப் பிறந்தது. இறைவனும் தேவியுமொன்றாகக் குமாரக்கடவுள் பிறந்து, "ஞானமௌனமது மோனவரம்பு" என்பதற் கிலக்கியமாய் "ஊமைப்பிள்ளை" யாயிருந்து சங்கத்தார் சங்கை தீர்த்தருளியது போல, அகஸ்தியரும் லோபாமுத்ரையும் ஒன்றாக சித்தவாக்கு தமிழ்மொழி பிறந்தது. அதுவே "சித்தன்" பிறந்த இலக்ஷணத்துக்கு இலக்கியம்.

இப்படியாகப் பொருளும் பதமும், இசையும் குரலும்போல் இனிதிற் பொருந்தி வளர்ந்தது தமிழ்மொழி, அதைப் பரிபாலித்தார் அகஸ்தியர். பிள்ளைப்பேறு பெற்றார் பரிபாலிக்குங் கடமை பெற்றாரன்றோ!

ஓம்தத்ஸத்.

On the Use & abuse of Power & Pelf.

——(:o:)——

தங்கச்செருப்பு தலைமேலே!
பதமிட்டசெருப்பு பாதத்திலே.

"பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கு" மென்பர். இது ஓர் பழமொழி. உலகத்திலே பணத்தினுடைய மஹிமையையும் பணவாசையினுடைய வல்லமையையும் காட்ட வேற்பட்ட பழமொழியிது. ஆனால் எதற்கும் விநியோகம் துர்விநியோகம் என இரண்டு உபயோகிக்கும் வழியுண்டு. விநியோகமென்பது நல்வழியிலுபயோகிப்பது. துர்விநியோக மென்பது தீவழியிலுபயோகிப்பது. பணம் பெரிதென்று தங்கத்தாலே செருப்புச்செய்து கொண்டால், அந்தச்செருப்புக் காலில் போட்டுக்கொண்டு நடமாட வுதவாது. தங்கச் செருப்பென்று அதைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு போகிறவன், தனக்குள் அதை என்னதான் பெரிதாக மதிப்பினும், பார்ப்பவர்க்கு அவன் செய்கை சிறிதும் மதிப்பாயிராது: செருப்பைச் சுமந்துகொண்டு போகிறவன் என்று தான் அவர்கள் இழிவாய் நினைப்பார்கள். தோலைப் பதமிட்டுச் செருப்புத் தைத்தால் அது காலில் போட்டுக்கொள்ள உதவும். பதமிடாத தோல் செருப்பு காலில்போட உதவாது.

ஆதலால் பதமிட்ட தோலால் செருப்புச் செய்து பாதத்திலே போட்டுக் கொள்ளுவதற்கு பதிலாக, ஒருவன் தன்னிடம் பணம் பெரிதுமிருக்கிறதென்று தங்கத்தால் செருப்புச்செய்து அதைத் தலைமேல் சுமந்துகொண்டு போவானானால், உலகம் அவனைப் புத்திகெட்டவனென்றே பழிக்கும். அதுபோல நல்ல பிள்ளையைப் பெற்றால் சுகிர்தமுண்டு, நல்ல குலத்தில் பிறந்தால் நற்குணந்தானே வந்தெய்தும். தீய குலத்தில் பிறந்தால் தீக்குணம் வந்தெய்தும். ஆகையால் பிறவிக்குணம் பிறப்பனவே யாமென்பர். ஆகையால் தான், "குலத்தைப் பார்த்துப் பெண்ணைக் கொடு: கோத்திரத்தைப் பார்த்துப் பெண்ணைக்கொள்," என்கிற பழமொழி யேற்பட்டது. நற்குலத்திற் பிறந்த பிள்ளைக்கே பெண்ணைக்கொடுக்க வேண்டும். எவ்வளவு படித்தவனா யிருந்தாலும், என்னதான் உத்தியோகம் செய்பவனா யிருந்தாலும், அவன் வெளி மினுக்கையும் காசையும் பணத்தையும் பார்த்துப் பெண்ணைக் கொடுத்துவிடக்கூடாது. ஏனெனில் "குலத்தளவே யாகும் குணம்." "கட்டாலும் சங்கு தன் நிறமறாது"போல், துன்பங்கள் வந்த விடத்தும் நற்குடிப் பிறப்பினரது நல்லகுணம் மாறாது. "கலக்கினும் தண் கடல் சேறாகாது"போல், பெரிய மனதுடையவர்கள் என்ன மனக்கிலேசம் வரினும் இழிவுடையராக நடந்துகொள்ள மாட்டார்கள். இழிகுலத்திற் பிறந்தவர்களோ அவர்களுடைய இழிகுணம் மாறாதவராகி அற்ப வாழ்வில் செய்த அழிபாதகங்களை யெல்லாம், பணத்தாற் பெருவாழ்வு பெற்ற விடத்தும் செய்து எல்லாரையும் நடுங்கச் செய்வார்கள்! தேளுக்குமணியம் கொடுத்ததுபோல் துஷ்டர்களுக்கு வாழ்வு வந்தால் அவர்கள் துராத்மாக்களாய்த் துன்பமே யிழைத்து வருவார்கள். ஆதலால், அற்பனுக்கு வாழ்வு வந்தால் அது ஆபத்தே விளைப்பதாகும்.

தர்மவிதியும் அற்பனுக்கு வாழ்வு வந்தால் அது மேன் மேலும் விருத்தியாகும்படி யமைந்திருக்கிறது. ஏனெனில் தங்கச் செருப்பென்று தலையிலே தூக்கி வைத்துக் கொள்கிறவன், இடம், பொருள், ஏவலறிந்து எதையும் செய்யமாட்டான். தன்னிடத்திலுள்ள பணத்தை ஸத் விஷயத்தில் விநியோகப்படுத்தத் தெரியாமல், துர்விஷயத்தில் துர்க்கிருத்தியம் செய்யவென்றே அதை துர்விநியோகப்படுத்திவருவான். இது அவனுக்கும் உலகுக்கும் பெருங் கேட்டை விளைக்கும். தீவினை விதைத்தால் தீவினை விளையுமாதலால், அவன் செய்யும் துஷ்கிருத்தியங்களெல்லாம் ஒன்று பத்தாக வளர்ந்து வினையை வளர்த்துத் தீவினைப் பயன் அதி

கரிக்கும்படி செய்யும். இதனால் அவனுக்குப் பெருங்கேடு விளையுமென்றார்.

உலகத்தார் மௌட்டிய திசையில் பணவாசை பிடித்தவர்களாதலால் இவன் பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு இவன் காட்டும் கெடுவழியில் பிரவேசித்துத் தமக்கும் பிறர்க்கும் கேடிழைப்பாராவர். இதனால் உலகில் அதர்மம் ஓங்கும். தர்மம் தலைசாயும். வர்மம் அதிகரிக்கும். இதனால் ஏழைமன முடையவர்கள் மிகவருந்தக் கோழைமன முடையவரால் கெடுதி மிகவும் சம்பவிக்கும். "மனப்பழக்கம்' என்கிற "சித்தவிருத்தி நிரோத அப்பியாஸத்தால்" மனந்தேர்ந்து பழகினவர்கள் வந்த வில்லங்கங்களை விலக்கியும் விளக்க முடியாதவைகளை வினைப்பயனாய் வந்தன வென்றனுபவித்தும் தீர்ப்பர். கோழைமன முடையாரோ மனங்கொதித்துத் தீயவை தாங்க மாட்டாமல், உள்ளம் வெதும்பிக் கள்ளம் நினைப்பார்கள். ஐயோ! அவர்கள் அப்படி தங்களை யறியாமல், படுதுயர் தாங்காது கள்ளம் நினைக்கக் கருதினராகில், வந்ததுகேடு! இப்படி ஏழைகளை வருத்துகிறவர்கள் மஹா பாவிகளாவார்கள். ஏனெனில் அவர்கள் தம் தீவினையால் தாமேயன்றித் தம்மை யடுத்தாரையும் கெடுத்து, அரசனது செங்கோலும் சோணும்படி செய்வார்கள். ஆதலால் இவர்கள் உண்மையில் இராஜத் துரோகிகளாவார்கள்.

மநுநீதிகண்ட சோழன் கதையில், பசுவொன்று தன் கன்றிழந்துபோக அரண்மனை வாயிலிற் சென்று ஆராய்ச்சி மணியைக் கொம்பால் அடிக்க, அரசன் ஓடோடியும் வந்து, விளைந்ததை வினவி, உண்மையை யோர்ந்தறிந்து, தர்மந் தலை கவிழாதபடி தன் ஏகபுத்திரனைத் தேர்க்காலில் வைத்துப் பசுவின் கன்றைக் கொன்றதுபோல் அவனது இன்னுயிர் துடிக்கத் தேரை யவன்மேல் விட்டோட்ட, தீவினையாகிய கழிந்த புண்ணியத்தால் 'இருவினை யொப்பு'ண்டாகி அந்த அவசரத்தில் யமவான் தோன்றி மாண்டவர்களுக்குப் பின்னு முயிர்ப் பிச்சையளித்து தர்மந் தழைக்கத் திருவருள் சுரந்தருளலானார். இதுதான் செங்கோல் லக்ஷணம்.

The Late Dewan Bahadur R. Raghunatha Row, C. S. I.

திவான் பகதூர் ஆர். ரெகுநாதராவ் காலகதியானார்.

"நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கமே, குப்பையிற் கிடந்தாலும் குந்துமணி குந்துமணிதான்" என்னும் உலக வழக்கமாய் வழங்கும் பழமொழிக் கிணங்க பழுத்த தேசாபிமானியும் தீர்ந்த அனுபவசாலியும், திருக்குடந்தைவாலியுமான திவான் பகதூர் ஆர். ரெகுநாதராயரவர்கள் 1912-ம் வருஷம் மேமாசம் 2உ வியாழக்கிழமை யிரவு ஒருமணி சுமாருக்கு கும்பகோணத்திலுள்ள தம் வாசஸ்தானத்தில் இம்மாய பிரபஞ்சத்தைவிட்டு விலகினர் இந்தத் துக்கமான செய்தியை இன்று எழுத வேண்டி வந்ததே யென்று மனம் வெதும்பி, முகம்வாடி, மெய்சோர்ந்து நிற்கின்றோம். சமீபத்தில் நடந்தேறிய சென்னைச் சட்டநிருபணசபை மீடிங்குக்கு விஜயம் செய்து கும்பகோணம் சென்றார். அது முதல் அவருக்குத் தேகம் அலைவுக்கியமாகவே யிருந்தது, எனினும் இவ்வளவு சீக்கிரத்தில் இவரை நம்மத்தியிலிருந்து மறலியானவன் (யமன்) கொண்டு செல்வனென்று நாம் எண்ணவேயில்லை. தேக அலைவுகரியத்துடன் அவர் அதிகாலை வருந்தினதாகவும் தெரியவில்லை. வயது முதிர்ந்த வார்த்தியராதலின் பொதுவாயிருக்கக் கூடிய சரீர அசக்தமென்று எல்லோரும் எண்ணியிருந்தார்களே யன்றி திடீரென்று அம்மகான் கண்மூடி விடுவாரென்று எவரும் எதிர் பார்க்கவில்லை. இறப்பதற்கு மூன் தினத்திலிருந்து

அவருக்கு ஆகாரம் அணுவளவும் செல்லாததனாலே மட்டும், 'காலாந்தகன் கடுகென வருவதன் அடையாளமோ இது' என்று சொல்லும்படியாயு மிருந்ததாம். இவரைப்போல் பெருந்தன்மையோடு லோகோபகாரார்த்தமாயும், கௌரவமாயும் தென்னிந்தியாவிற் காலந்தள்ளினோரைக் காண்பதரிது. தேசபக்தியும் ராஜபக்தியும் கொண்ட புருஷோத்தமராவர் ராயரவர்கள். சுறுசுறுப்புடன் உழைக்கும் உத்தம சீலர், சோம்பலென்பதைச் சிறிதும் உணராத சம்பன்னராவர். இத்தகைய குணவானை யிழந்ததனாலே தென்னிந்தியாவிற் பிரகாசித்துக் கொண்டிருந்த திலகமொன்றை நாம் இழக்கும் தௌர்ப்பாக்கியஸ்தராயினோம் என்றே சொல்லவேண்டி வருகிறது.

மகாராஷட்ரத் தலைவராயிருந்த மகா பிரக்யாதியடைந்து விளங்கியவர் சிவாஜி. இவரது சகோதரர் புனாவிலிருந்து தஞ்சைக்குச் சென்றார். அக்காலத்தில் அவரோடு கூடவே சென்ற மகாராஷட்ர பிராமண குடும்பம் ஒன்றில் உதித்தவராவர் நம் ரெகுநாத ராயரவர்கள். கும்பகோணத்தில் தேசஸ்த பிராஹ்மணகுலதிலகராயிருந்த ருப்குண்டை வெங்கடராவுக்கும் ஸ்ரீமதி லட்சுமி பாய்க்கும் பிறந்த புண்ணியராவரிவர். 1831-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 7-ந் தேதி பிறந்தார். இவரது தந்தை சிலகாலம் திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் திவானாயுமிருந்து பிறகு மைசூரில் ரெவினியூ கமிஷனராயுமமர்ந்தவர். இவரது சிறிய தந்தையான ரங்கராவ் அவர்களும் திருவாங்கூர் திவானாயிருந்தவர்; மகா பிராக்யனென்று பேரெடுத்த ராஜா ஸர் டி. மாதவராவின் தந்தையாவர். ஆகையினாலே நம் ரெகுநாதராயரவர்கள் நற்குலத்திற் பிறந்து கீர்த்திவான்களான பெரியோர்களின் பாந்தவ்யம் ஏற்பட்டு, தீர்ந்த நிருவாகஸ்தரென்று நற்பெயரெடுத்த சீலர்களின் உறவினராயுற்பவித்து, உதித்த உத்தமரென்பதற்குத் தடையென்ன? இவரது தந்தை மைசூரிலிருந்த போது பெங்களூர்க் கோட்டையிலிருந்த மிஷன் பாடசாலையில் சேர்ந்து படித்த இவர் 1845-ம் வருஷத்தில் சென்னைக்கு வந்து மதிராஸ் ஐன்கூலில் கல்வி கற்கலாயினர். அதே பாடசாலையில் அப்போது இவரது சிறிய தந்தையின் குமாரரான ஸர் டி. மாதவராவ் இங்கிலீஷைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் ஸர் எ. சேஷய்ய சாஸ்திரி, ஸர் டி. முத்துஸாமி ஐயர், திவான் ரங்காசார்லு போன்ற பிரமுகர்கள் அவருடைய சகாக்களாவர். நிரம்பப்படித்து வித்தியாபட்டம் எதுவும் வாங்காமற்போனாலும் ராயரவர்களுக்கு எதையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் தன்மை வாய்ந்திருந்தது. தாம் ஸ்கூலை விட்டு விலகிய பிறகு நான்கு வருஷகாலம் தமது பிதிரார்ஜித சொத்தைப் பரிபாலித்து வருவதில் கண்ணும் கருத்து மாயிருந்தார். இதனால் தான் இவருக்கு ரெவனியூ இலாகாவின் விஷயாம்சங்கள் நன்கு பதியலாயின. 1856ம் வருஷம் மகான் ஸர் டி. முத்துஸ்வாமி ஐயர் அவர்களோடு இவருக்கும் ப்ளீடர் டிப்ளோமா கிடைத்தது. இதன் பிறகுதான் தஞ்சை கலெக்டராபீஸ் டிரான்ஸ்லேடராய் முதன்முதல் வேலையில் அமர்ந்தது. இவ்வேலையினின்றும் படிப்படியாய், தலைமை ஸிரஸ்தாதாராயும், கும்பகோணம் ஸப்கோர்ட்சிரஸ்தாதாராயும் பிறகு தஞ்சை டிப்டி கலெக்டராயும் நியமிக்கப் பட்டார். அப்போது சென்னைக் கவர்னராயிருந்த ஸர் சார்லஸ் டிரெவெலியன் அவர்கள், அவர் சொந்த பிராந்தியத்திலேயே பாரபக்ஷ மன்னியில் திறமையாய் வேலை பார்த்து வந்ததில் மட்டிற்கடங்காச் சந்தோஷங்கொண்டு, தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாருக்கு நாகப்பட்டணம் முதல் திருச்சி வரையில் இருப்புப்பாதை போட நிலம் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ராயரவர்களை வேண்டினர். பிறகு துங்கபத்ரா பிராந்தியத்தில் நிலம் வாங்க

வேண்டி வந்தபோது ரெகுநாதராவ் அவர்களை அதற்குத் தகுந்தவரென்று கவர்ன்மெண்டார் நினைத்து அவரது உதவியை நாடினர். 1872-ம் வருஷம் அவர் சென்னை டவுன் மாஜிஸ்டிரேட்டாய் நியமிக்கப்பட்டனர். 1873-ம் வருஷத்தில் க்ஷேத்திராடனம் செய்யப் புறப்பட்டகாலத்தில் மத்தியிலே புனவில் தங்கினர். அப்போது தான் ஸர். டி. மாதவராவ் அவர்கள் காலஞ்சென்ற இந்தூர் மஹாராஜா நாகோஜிராவ் அவர்களிடம் இவரை அறிமுகம் செய்வித்தார். 1875-ம் வருஷம் இந்தியா கவர்ன்மெண்டாரது வேண்டுகோளின் மேல் இந்தூர் ஸமஸ்தான ரெவினியூ ஸெட்டில்மெண்டு ஆபீஸராய் நியமிக்கப்பட்டார். பிறகு ஸர் டி. மாதவராவ் அவர்கள் இந்தூரை விட்டுப் பரோடா திவானாப்போனதும் இவருக்குப் பதிலாய் இந்தூர் திவானாகவே ரகுநாதராயரவர்கள் நியமிக்கப்பட்டார். இச்சமயத்தில் இந்தியா கவர்ன்மெண்டாரின் மனதிற்கியைந்து இந்தூர் ஸமஸ்தானத்தைச் சீர்திருத்திய நேர்மை மிக்கப் புகழத் தக்கதாகவே யிருந்தது. இக்காலத்தில் தான் வேல்ஸ் இளவரசராய் ஏழாவது எட்வர்ட் சக்கிரவர்த்தி அவர்கள் இந்தியாவிற் சுற்றுப் பிரயாணம் செய்தது. அப்போது எட்வர்டு அவர்கள் ரகுநாதராயரவர்களது சாமர்த்தியத்தைக் கண்டு மெச்சி ஒரு பொற்பதக்கமளித்தனர். 1877-ம் வருஷம் நடந்த டெல்லிதர்பார் மகோற்சவகாலத்தில் இவருக்கு திவான்பஹதூர் பட்டம் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு இந்தூரைவிட்டு சென்னை ரெவினியூபோர்டு ஆக்டிங் சிரஸ்தேதாராய் வேலை பார்த்தார். சொற்ப நாளைக்கெல்லாம் திரும்பவும் டிபுடி கலெக்டர் வேலை பார்க்க நேர்ந்தது. பிறகு திரும்பவும் இந்தூருக்குச் சென்று பின் 1888-ம் வருஷம் கடைசியில் சென்னைக்கு வந்து பென்ஷன் பெற்றுக்கொண்டு விட்டார். இது முதல் தினமானம் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதிலும் பொது நன்மையநாடி ஆசாரச்சீர்திருத்தவகையிலும் விவசாய மார்க்கத்திலும் மனதைச் செலுத்தி மிக்க முயற்சித்து வந்தாரென்பது யாம் சொல்லாமலே விளங்கும். இவர் ஸம்ஸ்கிருத விற்பன்ன ரென்பது ஆசார சீர்திருத்தவகையில் மநுஸ்மிருதி முதலியவைகளை, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸாக்ஸனி முதலிய விடங்களிலுள்ள ஸம்ஸ்கிருத விற்பன்னர்கள் மிக்க ஆச்சரியமடையும் வண்ணம் வியாக்கியானம் செய்து அதன் பிரகாரம் ஹிந்து லாவைச் சீர்திருத்தம் சக்கிரவர்த்தியின் சந்நிதானத்திற்கு அநுப்பியதினின்றும் நன்கு விளங்கும். 1894-ம் வருஷம் முதல்தான் கும்பகோணத்தைத் தமது முக்கிய வாசஸ்தலமாய்க் கொண்டார். ஸர் ஆர்தர் லாலி கவர்னராய் விளங்கிய காலத்தில் இவருக்கு ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுக்கப் பட்டது. இறக்கும்போது இவருக்கு வயது 81.

ல. அனந்தய்யர்.

Rice Milling Industry in South India.

தென்னிந்தியாவில் நெல்லுக்குத்துந் தொழில்.

நன்செயில் முதல் தரமென்றும் நவதானியங்களுள் மிக்க சிரேஷ்டமான தென்றும் பெயரெடுத்திருப்பது நெல்லு. இந்தியாவிலுள்ள மற்றெவ்விடத்தைக் காட்டிலும் தென்னிந்தியாவிலே தான் நெல் சாகுபடிக்கான நன்செய் நிலங்கள் அபரிமிதமா யிருக்கின்றன. அல்லாமலும் சாகுபடிக்குரிய நிலங்கள் வேளாண்மை செய்வாரில்லாமல் தரிசாகவும் கிடக்கின்றன. சாதாரணமாயுள்ள ஒரு போக நிலங்கள் ஒருபுறமிருக்க மற்றோர்புறத்தில் இருபோக நிலங்களாகவும் மூப்போக நிலங்களாகவும் பூலாரா மிருப்பதையும் நாம் காண்கிறோம். இவ்வளவு விஸ்தாரமாயுள்ள தென்னிந்தியப் பிரதேசத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிரிலிருந்து கிட்டும் மகசூலைச் சொந்தக்காரர் களத்திலேயே கலங்கலமாய் விற்று ரொக்கமாகக் கொண்டு செல்லுகிறார்கள், சிலர் நெல்லை அரிசியாய்க்குத்தி வியாபாரஞ் செய்கிறார்கள். சிலர் நெல்லைக் கொண்டுபோய்த் தமக்கும் தம்மைச்சேர்ந்தோர்க்கும் வருஷாந்தர வுபயோகத்திற்காகத் தம் களஞ்சியங்களில் கொண்டுபோய்ச் சேர்த்து பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். இந்தமூன்று தரத்தவர்களில் நடு வகுப்பினராகிய நெல்லுக்குத்தி அரிசியாக்கி வியாபாரஞ் செய்யும் அவர்களை மட்டும் இப்போது எடுத்துப் பேசுவோம்.

புதிது புதிதான யந்திர விசைகளும், அவைகளைச் செவ்வையாய் ஆராய்ந்து நடத்தக்கூடிய விற்பன்னர்களும் மிகுந்திருக்கும் இக்காலத்தில், வியாபாரஞ் செய்ய விரும்புவோர் நெல்லைக் கையினாற் குத்திப்புடைத்து எடுத்துவாறிக் கொண்டிருப்பார்களா? ஒரு கலம் நெல்லுக்குத்த அரைநாள் கூலி வேலைக்காரர்க்குப் பிடிக்கு மானால், அதே அரைநாளில் யந்திரங்களைக் கொண்டு ஆறு முதல் 12கலம் வரையில் குத்திவிடலாமே. இந்த லாபத்தை யுத்தேசித்து அனேக மிராசுதாரர்களும் மற்றோரும நெல்லுக்குத்தும் யந்திரங்களை யாங்கி வேலைசெய்ய ஆரம்பிக்கிறார்கள். இதற்கு உதாரணமாக அடியிற் குறிப்பிட்ட ஊர்களிலெல்லாம் நெல்லுக்குத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சென்னைக்கு வடக்கிலுள்ள விடங்களை மட்டும் இதனடியிற் குறித்திருக்கிறோம்.—

நெல்லூர், பொன்னூரு, இண்டூர், ஸுபண்டூர், தெனாலி, துக்கிராலா, பெஜவாடா, மணகலகிரி, குண்டூர், நாலாரவ் பேட்டை, கொத்தவரம், குடிவாடா, மசுலிப்பட்டணம், எல்லூர், புல்லா, தடபல்லிகூடம், [illegible]டதவோலு, ராஜமஹேந்திரபுரம், [illegible], லாமல்கோட, காகினாடா, கோரிங்கா, [illegible]ரோல், துணி, அனகாபல்லி விசாகப்பட்டணம், விஜய நகரம்பேட்

இவ்வூர்களிலுள்ள நெல்லுக் குத்துவதற்கான தொழிற்சாலைகளெல்லாம் சென்ற 15 வருஷங்களுக்குள்ளாகவே ஸ்தாபிதமாயிருக்க வேண்டுமென்று காணப்படுகிறது. சில நீராவி யந்திரங்களினாலும் வேறு சில எண்ணெய் இயந்திரங்களினாலும் இயக்கப்படுகின்றன. இவற்றுள் அதிக வேலை செய்யக் கூடியவை 50 தானென்றும், புழுங்கலரிசி கூடச் சிற்சில யந்திர சாலைகளில் தயாரிக்கப் படுவதாகவும் தெரிய வருகிறது. ஒரே யொரு ராஜதானியில் சொற்ப காலத்துள் இவ்வளவு ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்படுவதென்றால் எல்லோருக்குமே என்னதோன்றும்? அபாரமாய் வேலை நடந்து வருவதாகவே தோன்றும். அதையே ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்தியாவிலுள்ள மற்றையோரும் இம்மாதிரியான தொழிற்சாலைகளை ஸ்தாபித்துப் பயன் பெறலாகாதா வென்றும் பலர் சொல்லுவார்கள்; எனினும் அவர்கள் அத்தொழிலை நுட்பமாய் ஆராய்ந்து முறைப்படி வேலை செய்வதாய் மட்டும் காணோம். சென்னைக்கு வடக்கிலுள்ள இவ்விராஜதானி ஜில்லாக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நெல் யந்திர சாலைகளையொப்ப தென்னிந்தியாவிலும், அதிலும்வெகுவாய்த் தஞ்சைஜில்லாவில் உள்ள சிலர் இத்தொழிற்சாலைகளில் அபிமானம் வைத்து ஆரம்பித்திருக்கிறார்கள்; வடக்கே அதிகமாய்த் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும், தொழிற்சாலைக்கு உரித்தான யந்திரக் கருவிகள் செய்யும் வியாபாரிகள் தங்கள் தங்களிடமிருந்து கருவிகள் வாங்கும்படி தமது ஏஜெண்டுகளையனுப்பித் தூண்டுவதையும் உத்தேசித்தே இவர்கள் இத்தொழிற் சாலைகளிற் பிரவேசித்திருக்கிறார்களென்று சொல்லவேண்டிவருகின்றது. வடக்கு ஜில்லாவிலுள்ள அனேகர் தாமெதற்காகத் தொழிற்சாலை வைத்தோமென்று மனம் வெதும்பியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளை முதன் முதல் அமைக்கும்போது அதற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் வலுவாயிருக்கின்றனவா வென்று

பார்த்தும், மற்ற யந்திர பரிசிலனையிற் சிறந்த விற்பன்னர்களை யழைத்தும் காண்பித்து அதற்குப் பிறகே தொழிற்சாலைகளை யேற்படுத்த வேண்டும். இதல்லாமல் சில விடங்களில் அந்தந்த பூஸாரத்திற்குத் தகுந்தாற்போல் நெற்பயிர் கிட்டும். அங்ஙனம் கிட்டுவதை ஆராயுமிடத்து சில உறப்பாயும் சில மிருதுவாயும், வேறுசில மாவாய்ப் போகக் கூடியவையாயும் இருக்கும். ஆனதுபற்றி அந்தந்த நிலவாசிக்கு ஏற்ற பிரகாரம் அமெரிகன் மாதிரி யந்திரத்தையோ, பங்கூன் மாதிரி யந்திரத்தையோ அமைத்துப் பிறகும் அதற்கு அவசியமான விரகு, முன்பணம், அதிகமாய் வேண்டியிருக்கக்கூடிய அடிப்புகள், நிலக்கரி முதலிய யாவற்றையும் பரிசிலனை செய்வது மிகவும் அவசியமாகும். இல்லாவிடத்து ஆரம்பத்தில் கங்குகரையில்லாமற் போட்டு இறுதியில் வேலையும் செம்மையாய் நடவாமல் வீணுக்க காலத்தை வியயமாக்குவதைத் தவிர வேறு வகையிராது; ஆனதுபற்றி நாளடைவிற் செழித்துவரும் முக்கியமான இத்தொழிலை விருத்திசெய்ய வேண்டுமானால் எந்தெந்தக் சரு விகள் உள்ளூரிலேயே அகப்படுமோ அவைகளை வாங்கிய பின்னர் இல்லாதவைகளுக்கு மட்டும் பிறநாட்டுக் கருவிகளை தாராதாம் பார்த்து வாங்கி சாலையை அமைக்கவேண்டும். அப்போது கருவிகளில் ஏதாவது ஒன்று பழுதாய்ப்போனால் அதிக செலவில்லாமல் வேறொன்றைப் புதிதாய் உள்ளூரிலேயே செய்து வேலையை நடத்தலாம். இது விஷயத்தை நெல்லுக் குத்தும் தொழிற்சாலையை வைப்போர் அவைகளுக்கு நீராவி யந்திரங்களையும் எண்ணெய் யந்திரங்களையும் (Oil Engines) வாங்கி வைப்பதன் முன்பு அவைகளில் அனுபவம் வாய்ந்த சிலர்களைக்கொண்டு பரிசிலனை செய்வித்தால் மாத்திரம் பிரயோஜனத்தைக் கொடுக்குமே யல்லாது வியாபாரிகள் வலியவந்து யந்திரங்களைக் கொடுக்கிறார் என்ற பெருமையை வைத்துச் சாலையை ஆரம்பிப்பது கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் கொண்டுவந்துவிடும் என்பதை யாம் அதிகமாய்ச் சொல்ல வேண்டுவதில்லை. ல. அனந்தய்யர்.

சென்னை மாகாணக் கான்பெரன்ஸ்.

உபசரணைக் கமிட்டிச் சேர்மனுடைய வரவேற்பு.*

(Communicated.)

"தங்களை அழைத்து உபசரிக்க ஏற்பட்டிருக்கும் ஸபையாருக்காக நான் தாங்கள் இந்தப் புராதன நகரத்திற்கு விஜயம் செய்ததற்காக மனப்பூர்வமாக நல்வரவு கூறுகிறேன். ஒரு காலத்தில் கும்பகோணம் இந்த ஜில்லாவுக்கே தலை நகராயிருந்தது. அந்தப்பெருமை இப்போதில்லாவிடினும், பிரஸித்தியில் குறைவில்லை. காவிரியின் தென்கரையிலுள்ள இந்தப் பட்டணத்தில் தேவாலயங்கள் அனேக மிருக்கின்றமையால், யாத்திரைக்காரர்கள் மிகுதியாக இங்கே வருகிறார்கள். ஊரிலுள்ள குளங்களில் மிகவும் பெரிதான மகாமகக் குளத்தில் ஸ்நானஞ் செய்வதற்குப் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை வெகு ஜனங்கள் கூடுகிறார்கள். இந்தப்பட்டணம் கொஞ்ச நாளுக்குமுன் ஸம்ஸ்கிருதப் படிப்பு விஷயத்தில் பெயர்போனதாக விருந்தது, இந்த நகரவாசிகள் அனேகர் சதுர் சாஸ்திர பண்டிதர்களா யிருந்தார்கள், மற்ற விடங்களில் ஸம்ஸ்கிருதப் படிப்புக்கு க்ஷீணத்தை உண்டாயிருப்பதுபோல இந்த ஊருக்கும் வந்திருக்கிறது. ஸர்க்கார் ஸர்வலாசாலை ஒன்று இங்குண்டு. போர்டர், சோபலராவ் என்ற மகான்கள் மேற்படி கலாசாலைக்கு அதிபதிகளாக இருந்தகாலத்தில் "தென் இந்தியா கேம்பிரிட்ஜ்" என்று கும்பகோணத்திற்கு பட்டப்பெயர் வழக்கிலிருந்தது. அந்தப் பெருமை இப்பொழுது இருப்பதாகக் காதில்படாமல் போனபோதிலும் ஸர்வ கலாசாலையின் மாணாக்கர்கள் இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் பற்பல விருத்திகளில் அமர்ந்திருக்கிறார்கள். கும்பகோணம் கைத்தொழிலுக்காகவும் பெயர்போனது. தென்பாதியிலுள்ள ஸௌராஷ்டிர ஜாதியார் பம்பாயிலிருந்து வாளமான பட்டுகளைத் தருவித்து சென்னபட்டணம் முதலான விடங்களில் கொரநாட்டுச் சேலைகளென்று சொல்லப்பட்ட பட்டு வஸ்திரங்கள் செய்து பக்கத்திலுள்ள ஜில்லாக்களில் விலையாக்குகிறார்கள். ஆனால் தொழிலாளிகள் ஐக்கியமத்தியத்தையும் இயந்திர உபயோகத்தையும் தெரிந்துகொள்ளவில்லை. வியாச்சிய மாடுவதில் இந்தப் பட்டணம் முதன்மை பெற்றிருக்கிறது. இந்தவூரில் இரண்டு சப் கோர்ட்டுகளும், இரண்டு முன்சீப் கோர்ட்டுகளும் இருக்கின்றன, கொசுக்களின் உபத்திரவம் மிகுதியாக இருப்பதினால் இராத்திரியில் கொசுவலை இல்லாவிட்டால் தூக்கம்பிடிப்பது துர்லபம்.

சென்னையில் இந்த மகாசபை கூடி ஒரு வருஷம் ஆகின்றது. மத்திய காலத்தில் அனேக விசேஷங்கள் நடந்துள்ளன. அவைகளில், முதன்மையானது மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் இந்து தேசத்திற்கு விஜயம் செய்ததுதான். அவ்விருவருடைய வருகையில் நமது நாட்டுக்கு உண்டாயிருக்கும் நலங்களை இங்கு எடுத்துச்சொல்வது அனாவசியம். ஆயினும் காங்கிரஸில் சம்பந்தப்பட்டவர்களுக்கு விசேஷ திருப்தியை யுண்டாக்கும் இரண்டு விஷயங்களை மாத்திரம் சொல்லுகிறேன்; வங்காளத்தில் சில ராஜத்துரோகமான காரியங்களைச் செய்யத்தொடங்கினது முதல் அவைகளை நல்ல எண்ணமுள்ள எவரும் பிசகென்று நன்றாய்ச் சொல்லியும் ஆங்கிலேய பத்திராதிபர்களில் சிலர், படித்த இந்தியர்கள் ராஜத்துரோகிகளென்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். படித்த இந்தியர்களா இது வீண் அபவாதமென்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும், விஜயம் செய்த காலத்தில்தான் படித்தவர்களும் படிக்காதவர்களுமான இந்தியர்கள் நிர்த்தோஷிகள் என்று ஸ்தாபிக்கப்பட்டது. நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் தமது கண்களாலேயே நாம் ராஜபக்தி யுள்ளவர்களென்று தெரிந்துகொண்டார்கள்; அவ்விருவரும் திரும்பி ஆங்கிலேய தேசத்திற்குச் செல்லுங்காலத்தில் தமது அபிப்பிராயத்தை அடியில் வருமாறு வெளியிட்டிருக்கிறார்கள்—"இந்து தேசத்து என்னிடம் விசுவாசமுள்ள குடிகள், நாங்கள் சென்ற ஐந்துவாரம் இந்தியாவில் போன ஒவ்வொரு இடத்திலும் காலத்திலும் காட்டின மனப்பூர்வமான ராஜபக்தி வாஸ்தவமான பிரியமாகிய விரண்டு குணங்களும் எல்லாருடைய மனங்களிலும் குடிகொண்டவை யென்று நாங்கள் எண்ணுகிறோம்." இது சக்கரவர்த்தியாரது விஜயத்தின் முதற் பிரயோஜனம்.

இரண்டாவது பிரயோஜனமாவது:—ஆங்கிலேய துரைத்தனத்தின் நீதியிலும் சத்தியத்திலும் நமக்கிருந்த நம்பிக்கையை ராஜாவின் வரவு நிலை நிறுத்தியது. ஒரு காலத்தில் நம்மவர் ஆங்கிலேய துரைத்தனத்தாருக்குச் செய்துகொள்ளும் மனுவுக்கு ஜவாப் ஒன்று மிருக்காதென்று எண்ணினதுண்டு. நம்முடைய மனுக்கள் அரண்யரோதனம் போலாகுமென்றார்கள். மனுப்பண்ணிக் கொள்வதை யாசகத் தொழிலென்று பரிகாசம் செய்து தேசம் முன்னுக்கு வரவேண்டியதற்கு தயப்பிரயத்தினமே வேண்டியதென்று அபிப்பிராயப்பட்டிருந்தார்கள். இந்தப் பிசகான எண்ணம் நீடித்திருந்தால் நம்மவரில் சிலருக்கும் துரைத்தனத்தாருக்கும் மனவேறுபாடு உண்டாகிவிடும். நல்ல வேளையாக ராஜ விஜயமானது இந்தக்கேட்டை விலக்கிவிட்டது. வெங்காளம் இரண்டு பாகங்களாக ஏற்பட்டிருந்ததை மறுபடியும் ஒன்றாய்ச் செய்ததினால் நம்முடைய குறைகள் வாஸ்தவமாக விருந்து அவைகளை நமது மகாராஜாவுக்கும் ஆங்கிலேயருக்கும் மனதில் படும்படி தெரிவித்தால் அவைகளை உடனே நிவர்த்திசெய்வார்களென்று தெளிவாய்க் காட்டப்பட்டது. மேலும் நியாயமான காரியம் செய்வதில் காலாவதியை ஒரு முகாந்திரமாகச் சொல்லமாட்டார்களென்றும் விளங்குகிறது. நம்முடைய

* Translation of the Welcome Address of Rao Bahadur V. K. Ramanuja Chari, Chairman of the Reception Committee of the 19th Provincial Conference, held at Kumbhakonam, on the 6th May 1912.

க்ஷேமத்தில் தாம் கண்ணுள்ளவர் என்று நம்பலாமென்றும் சக்கரவர்த்தி வாக்களித்திருக்கிறார். ஆதலால் நம்முடைய குறைகளைத் தெரிவிப்போமானால் அவற்றைக் கேட்டுப் பரிகாரம் செய்வார்கள் என்றும், இந்தக் காண்பரன்சில் நாம் படும் பிரயாசம் வீண்போகாதென்றும் நம்பி நம்முடைய தேசாபிவிருத்தியின் பொருட்டு மேன்மேல் முயற்சி செய்யலாம்.

நாம் செய்யும் காரியங்கள் சபலமாவதற்குச் சில பிரதானமான விஷயங்களில் நாம் கவனித்தல் வேண்டும். முதலாவது எல்லா ஜனங்களையும் நம்மோடொத்து நடக்கும்படி செய்து ஏகோபித்துக் குறைவுகளை வெளியிடவேண்டும். ஆங்கிலேய துரைத்தனம் நம்முடைய தேசத்தில் ஏற்பட்டு ஒருநூற்றாண்டு ஆனபிறகு தான் நாஷனல் காங்கிரெஸ் மகாசபையைக் கூட்டின தேசாபிமானிகளின் மனதில் நாம் அனைவரும் ஒரே ஜனமென்றும் நம்முடைய கோரிக்கைகளும் குறைகளும் ஒரேமாதிரியானவை என்றும் முதலில் பட்டது. இந்தக்கருத்து வரவர பலப்பட்டுக்கொண்டே வருகிறதாயினும் கிராமவாசிகளாய் இருக்கப்பட்டவர்களில் பெரும்பாலாரும் பொதுநலம் என்று ஒன்று இருப்பதைத் தெளிவாய் அறிந்தவரில்லை. மனிதன் முதலில் சுயநலத்தில்தான் புத்தியை விசேஷமாய்ச் செலுத்துகிறான். அதன்பின்பு தன்னை மறந்து தன்னுடைய குடும்ப சம்ரக்ஷணையில் தன் வருத்தம் பாராமல் பாடுபடுகிறான். வரவர தன் குடும்பம்போல் தன் சாதியாரையும் பாவித்து அவர்களுக்காகப் பாடுபடுகிறான். கடைசியில் தன் தேசத்தையும் தன் குடும்பம் போல் பாவிக்கிற அறிவு உண்டாகின்றது. குடும்ப நயத்திலிருந்து ஜாதிநயத்தைப் பிரிக்கவும் ஜாதியின் க்ஷேமத்தை யுத்தேசித்து குடும்ப க்ஷேமத்தை மறக்கவும் தெரிந்துகொண்டிருக்கிறோம். இது போதாது. ஜாதி நயத்திலிருந்து தேசத்தையே பெரிதாக எண்ணவும் தேசத்திலுள்ளவர்களனைவரையும் நமது சகோதரசகோதரிகளாய்ப் பாவிக்கவும், பொதுநன்மைக்குரியவற்றை மதிக்கவும் தெரிந்துகொள்ள வேண்டியது.

நம்மவர்களில் தலைவர்களாய் இருக்கிறவர்கள் கிராமவாசிகளுக்கு இந்த விஷயங்களை வற்புறுத்தவும் அவர்களுக்குப் பொதுநன்மையில் சிரத்தை யுண்டாகும்படி செய்யவும் வேண்டும். நம்மிடத்தில் நல்ல அபிப்பிராயமுள்ளவர்களும் நாம் வெவ்வேறு ஜாதிகளாயும் மதங்களாயும் பிரிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் பொதுநலத்திற்கு ஒன்றாய்ச் சேரக்கூடியவர்களல்லவென்று எண்ணுகிறார்கள். இந்த அபிப்பிராயம் சரியானதல்ல. ஜாதிமத பேதங்களை முற்றிலும் மறந்து சக்ரவர்த்தியார் வந்திருந்த காலத்தில் அவருக்கு வழிபாடுசெய்ய நாம் ஒன்று சேரவில்லையா? அதே ஐக்கியமானது பொதுநலத்திற்காக கூடுகிற சமாஜங்களிலும் இருக்கமுடியாதா? நாம் சுயலாபத்தைக் கவனிப்பவர்களென்றும் பொதுநன்மையை நாடாதவர்களென்றும் குறை கூறுகிறவர்களுமுண்டு. அவர்களை கொஞ்சம் பொறுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுநலம் பாராட்டும் குணமானது சிறிது சிறிதாக வளருகின்ற ஓர் செடி. அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டே யிருக்கிறது. கவனிக்க வேண்டிய இரண்டாவது விஷயமானது:—பிரமுகர்கள் பொதுநலத்திலேயே லக்ஷியம் வைத்தவர்களாக இருத்தல் வேண்டும்; நமக்கு இந்த விஷயத்தில் கனம் கோகலேயைவிட வேறு உதாரணம் வேண்டியதில்லை. சாதாரண ஜனங்களுக்கு தமக்கு ஏற்பட்ட தலைவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும் அத்தியாவசியம். இந்தக் கீழ்ப்படுதல் இல்லாவிட்டால் ஒரு காரியமும் முற்றுப்பெறாது.

நமது நாட்டில் பெரிய குடித்தனக்காரர்களாக விருக்கும் கனவான்கள் நமது ஓய்வு காலத்தையும் திரவியத்தில் சில பாகத்தையும்

பொதுநலத்திற்குச் செலவிடவேண்டுமென்று கோருகிறேன். ஈசுவர கிருபையால் பெருங் குடித்தனக்காரர்கள் அன்னவஸ்திராதிகளுக்கு உழைக்கவேண்டிய அவசியமில்லாதவர்களாயும் தக்க வருமானம் யுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். போதுமான சாவகாசமு முடையவர்கள். இந்த சாவகாசமும் வருமானமும் சுயநலத்திலேயே செலவிட வேண்டியவையல்ல. பொதுஜனங்களினுபயோகத்திற்காகவே கொடுக்கப்பட்ட தர்ம சொத்தாகவே அவைகளை எண்ணவேண்டும். ஆகவே, பொதுவான காரியங்கள் எதுவாயிருந்தபோதிலும் அதைச் செய்வதற்கு தனவான்கள் முன்வந்து நிற்கவேண்டும். சர்க்கார் உத்தியோகத்தில் பிரவேசித் திருக்கிறவர்களையும் வேண்டிக்கொள்வதொன்றுண்டு. இவர்கள் உசிதமான பென்ஷன் கிடைத்து குடும்ப ஸம்ரக்ஷணைக்கு வேண்டியபொருள் தேடியானவுடனே சர்க்காருத்தியோகத்திலிருந்து நீங்கி சரீரத்தில் கொஞ்சம் பலம் இருக்கிற காலத்திலேயே பொதுநன்மைக்கு உழைக்கவரவேண்டும். ஆயுள் முழுதிலும் துரைத்தனத்தாருக்கு உழைத்துவிட்டபிறகு ஒருவேலையும் செய்யாமல் சும்மாவிருத்தல் கூடாதென்று சொல்லலாகுமா? என்று சிலருக்குச் சங்கையுண்டாகலாம். நாம் உறுதியாய் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது நாமனைவரும் எக்காலமும் ஊழியஞ் செய்யவே பிறந்தவர்; உழைப்பதிலிருந்து தப்புதல் இல்லை. சலித்துப்போன ஒரு வேலையை விட்டு மற்றொரு வேலையைக் கைக்கொள்ளுவதே இளைப்பாறுதல். சர்க்கார் உத்தியோகஸ்தர் வாங்கும் பென்ஷனானது, துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்ட போதிலும், வாஸ்தவத்தில் பிரஜைகளாலேயே கொடுக்கப்படுகிறது என்றும், அவர் வேலையில் இருந்த காலத்தில் கிடைத்த அனுபோகத்தை பிரஜைகளுடைய வேலையில் அவர்கள் செலவழிக்கக் கடமைப்பட்டவர்களென்று எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கவேண்டியது. நான் வாஸ்தவசங்கதி இன்னதென்று தெரிந்து கொண்டிருப்பதைச் சொல்லுகிறேன். அது பிசகாயிருந்தால் மன்னிக்கவேண்டும். சிலர் பென்ஷன் வாங்கக்கூடியவர்களாயினும், தங்களுடைய உத்தியோகத்தைக் குறித்து தமக்கு ஜனங்கள் செய்யும் உபசாரங்களையும் தம்மைச் சூழ்ந்திருக்கும் சேவகர்களையும் விட்டுவிலக மனமில்லாதவர்களாய் வேலையிலேயே இருந்து வருகிறார்கள். சிலர் பென்ஷன் வாங்கிக்கொண்டபிறகும் தாம் தெய்வப்பிறப்பென்றும் சாமானிய ஜனங்களோடு கலத்தல் கூடாதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இது பிசகு. தாம் அடைந்திருந்த உயர்ந்த பதவி தமக்குத் தற்செயலாய்க் கிடைத்ததென்பதை முற்றிலும் மறந்தார் போலும். அதிருஷ்டவசத்தால் பிறரும் அதே அந்தஸ்துக்கு வரக்கூடியவர்கள் தாம்.

இந்த மாகாண சபை விஷயமாய் இந்த ஜில்லாவில் நான் பற்பலவிடங்களில் போனபோது என்னைப் பலரும் இந்த சபையின் பிரயோஜனம் என்னவென்று கேட்டார்கள்; வேறுசிலர் சட்ட நிர்மாண சபைகள் சீர்திருத்தம் பெற்ற பிறகு இந்த சபைக்கு வேலையில்லை என்றெண்ணி இதே கேள்வியையும் கேழ்க்கிறார்கள். இதற்கு பதில் சொல்லுகிறேன். இவ்விதமான சபைகள் செய்யும் வேலைகள் மூன்று, கனம் சேஷகிரி அய்யர் அவர்கள் சென்ற வருஷ சபையில் சொல்லியபடி, முக்கியமான விஷயங்களில் ஜனங்கள் தீர்க்காலோசனை செய்து தங்களுக்கு அவைகளிலுள்ள அக்கரையைத் தெரிவித்தால், சட்ட நிர்மாண சபையின் மெம்பர்கள் அவற்றைக் குறித்துத் தீர்மானங்கள் பிரேரணை செய்யலாகும். சென்ற வருஷத்தில் நமது கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்களும் இந்தப் பிரயோஜனத்தை சபையின் பிரதிநிதிகளுக்கு எடுத்துச் சொன்னது தங்களுக்குத் தெரிந்திருக்குமே. இரண்டாவது, சட்ட நிர்மாண சபையில் நமது பிரதிநிதிகள் தாமே சில தீர்மானங்

களைப் பிரேரணை செய்யலாம். அந்தத் தீர்மானங்கள் நமக்கு நன்மை பயக்கக் கூடியவையாய் இருக்குமாயின் நாமும் அவர்களுடன் சேர்ந்து தீர்மானங்களை பலப்படுத்தலாம். பத்திரிகைகள் இந்த வேலையைச் செய்கின்றன; அதுமட்டிலும் போதாது. ஆங்கிலேய தேசத்தில் பொது நன்மையைக் குறித்துச் செய்யும் விஷயங்களுக்கு உதவியாய் மகாஜனங்கள் கூட்டம் கூடுவதுண்டு. இப்போது நடக்கும் சபையும் அதே வேலையைத்தான் செய்கிறது. நம்முடைய சபையோ மூடஜனக் கூட்டமல்ல. இதன் மெம்பர்கள் அறிவிலும் பதவியிலும் உயர்ந்தவர்கள். மூன்றாவது, வெவ்வேறு ஜில்லாக்களிலிருந்து ஜனங்களை ஒரே விடத்தில் கூட்டி பொது நன்மைக்குப் பாடுபடும்படி செய்கிறது. இந்தப் பழக்கம் வருஷா வருஷம் ஏற்பட்டால் பொது நன்மைக்குப் பாடுபடும் வாடிக்கைகள் உண்டாகும்.

இவ்விதமகா சபைகள் சில வக்கீல்களால் மட்டில் நடத்தப் படுகிறதென்று சிலர் சொல்லக் கேட்டிருக்கலாம். இதில் கொஞ்சம் உண்மையுண்டு. இங்கிலீஷ் படிப்பு வந்த பிறகுதான் ஜனங்கள் இப்படி ஒன்று சேர்ந்து தமது லாப நஷ்டங்களைப்பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிற வாடிக்கை பிறந்தது. படித்தவர் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்கிறார்கள். அல்லது பள்ளிக்கூட வாத்தியாயர்களாகளாவது வக்கீல்களாயாவது ஆகிறார்கள். வக்கீல்கள் மாத்திரம் பொது நன்மையில் வேலைசெய்யலாகும். இதரர்களுக்கு நிர்ப்பந்த மிருக்கிறது. சில காலமாக மிராசுதாரர்களும் வியாபாரிகளும் பொது நன்மைக்கு உழைக்க வந்திருக்கிறார்கள். இந்த சபையிலும் அவ்வகுப்பினர் முன்னிலும் ஜாஸ்தியாக இருப்பதைக் காணலாம். மடாதிபதிகளும் சபையின் காரியத்தில் அன்பு பாராட்டும் பாக்கியம் இந்த சபை பெற்றிருக்கிறது.

தற்காலத்தில் நம்மவர்கள் கவனிக்கும் விஷயங்களைக் குறித்து நான் கடுத்துப் பேசப் போகிறதில்லை. அது அக்கிராசனாதிபதியவர்களுடைய காரியம், இந்த ஜில்லா மிராசுதாரர்கள் பெரிதாய் எண்ணும் மூன்று விஷயங்களைக் கவனிக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவைகளாவன:—(1) ரெவென்யூ ஸெடில்மெண்ட், (2) கூலியாட்கள் கப்பலேறிப்போதல், (3) பாய்ச்சல் வாய்க்கால் வெட்டுவித்தல். 18-வருஷத்திற்கு முன் இந்த ஜில்லாவில் தரம் பைசல் செய்ததில் புதிதாக இரண்டு தரங்கள் ஏற்பட்டன. (1) வண்டல் களி (2) வண்டல் மிச்ரம். இப்படித் தரம் போட்டதற்குக் காரணம் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பூமியை செவ்வல் என்றாவது கரிசல் என்றாவது சொல்லக் கூடாமைதானும். இவ்விரண்டு வகுப்பும் ஐந்து உட்பிரிவாக பிரிக்கப்பட்டன. யாவரும் பார்த்த உடனே ஒரு பூமியானது கரிசலா செவ்வலா என்றுசொல்ல முடியும்; ஊன்றிப் பார்த்தால் கரிசல் செவ்வல்கள் களியா, மணலா, இவை இரண்டும் கலந்தனவா என்பதையும், சொல்லி விடலாம். பார்த்தவுடனாவது எவ்வளவு கவனம் வைத்தாவது ஒரு தரத்தை மற்றொன்றிலிருந்து தெரிந்துகொள்ளுதல் முடியாது. இதற்காக தரம் பைசல் செய்யும் உத்தியோகஸ்தர் கிராமங்களுக்குப் போக ரஸ்தாக்களிருப்பதையும், அவைகளிலிருந்து நெல்லு முதலானவைகளைக் கொண்டுபோய் விற்கக் கூடிய இடங்களின் சாமீப்பியத்தையும் பாய்ச்சல் சௌகரியங்களையும் கவனிக்கிறார்கள். சர்க்காருக்கு எந்தத்தரம் அல்லது உள்வகுப்பு அதிக தீர்வையைக் கொண்டுவரும் என்பதையே அவர்கள் முக்கியமாய்க் கவனிக்கிறார்கள். ஆகையாலேதான் மேலுத்தியோகஸ்தர்கள் நிரம்ப கவனமாய் பரிசீலனை செய்தும் மாயவரம், கும்பகோணம், நன்னிலம் தாலூகாக்களில் நிலங்கள் உயர்ந்த தரத்தில் போடப்பட்டதுகள். ஆகவே ரெவினியூ அபாரமாக உயர்ந்து விட்டது. மிராசுதாரர்கள் தெரிவித்துக் கொண்டதின்பேரில் ரெவினியூ போர்ட்டாரும்

கவர்ன்மெண்டாரும் தாம் உயர்ந்து போட்டது வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டு உட்பிரிவைக் குறைத்துத் தரத்தைத் தாழ்த்தும்படியாக உத்திரவு பிறப்பித்தார்கள். இன்னும் சிறிது காலத்தில் வரும் செட்டில்மெண்டில் இந்த விஷயங்கள் ஞாபகத்திலிருக்க வேண்டுமென்றும் கடைசியாக ஏற்பட்ட இளாசு உட்பிரிவுகள் மாறுபடக் கூடாதென்றும் தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரர்களாகிய நாங்கள் மிகவும் கவலையுள்ளவர்களா யிருக்கிறோம். வரப்போகிற செட்டில்மெண்டில் கவர்ன்மெண்டார் பலமுறை சொல்லி யிருக்கிறபடி விலைவாசியொன்றே கவனிக்கப்படுமென்று நம்புகிறோம். 30-வருஷத்துக் கொருதரம் செட்டில்மெண்டு செய்கிறதானது நாட்டின் க்ஷேமவிருத்தியைத் தடுக்கின்றது. ஒரு தலைமுறையில் ஒரு செட்டில்மெண்டுக்கு மேற்பட்டு வேண்டாமென்று இவ்வாறு செய்தார்போலும். ஜுரம் அதைப் போன்ற கொடிய கொடிய வியாதிகளால் பீடிக்கப்பட்டும் நம்மவரில் சிலர் 60, 70-வயது வரையிலும் ஜீவந்தர்களா யிருக்கின்றமையால், ஒரு புருஷாயுசிலேயே இரண்டு செட்டில்மெண்டு மிகவும் கடமையாயிருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கும் நிலவரிகளை சாசுவதமானதாகச் செய்யும்படி நாம் கவர்ன்மெண்டைக் கேட்க வேண்டாமா வென்றும், அது கூடாதாயின் 60 வருஷத்திற்கு ஒரு முறை செட்டில்மெண்டு செய்யும்படி மனுச்செய்துகொள்ள வேண்டாமாவென்றும் இந்தச்சபை யோசிக்க வேண்டியது. நம்முடைய கூலியாட்கள் கப்பலேறி வேறு தேசத்திற்குப்போய் விடுவதனால் வியவசாயவேலை வெகுவாகத் தடைபட்டும் போகிறது. அதிக கூலியைத்தேடி அது அகப்படும் இடத்திற்குப் போகிற எவரையும் தடுக்க நமக்கு அதிகாரமில்லை. ஆனால் நம்மிடத்தில் வியவசாயவேலை செய்வதாய் முன்பணம் வாங்கிக் கொண்டதை அவர்கள் திருப்பி நமக்குக்கொடுத்த பின்புதான் அவர்கள் வேறு நாட்டிற்குப் போக வேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். இது விஷயமாக இந்த சபையார் ஓர் தீர்மானஞ் செய்யவேண்டியது அவசியம். நம்முடைய பாய்ச்சல் வாய்க்கால்கள் எக்கலெடுத்துத் தூர்ந்து போயிருக்கின்றன. கிராமவாசிகள் சேர்ந்து வேலைசெய்ய வராமையினால் குடிமராமத் ஆக்டின் நிபந்தனைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படி ரெவின்யூ அதிகாரிகளுக்கு மனுச்செய்துகொள்ள அவசிய முண்டாகிறது. குடிமராமத் ஆக்டோ சில விஷயங்களில் குறைவுள்ள தென்று ரெவின்யூ உத்தியோகஸ்தர்களும் கவனிப்பதில்லை என்று புகார் உண்டு. இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டியவை. துரைத்தனத்தாரும் மிராசுதாரர்களுடன் சேர்ந்து வாய்க்கால் தலைப்பிலிருந்து கிராம எல்லைவரையில் வாய்க்கால் வெட்டி வேலைக்கு ஒத்தாசை செய்யவேண்டியது.

சென்ற வருஷத்தில் நம்முடைய தேசத்தின் இரண்டு உண்மையான பிள்ளைகளை நாம் இழந்து போனதைச் சொல்லாமலிருக்கக் கூடாது. அவர்களில் ஒருவர் கனம் வி. கிருஷ்ணசுவாமி அய்யர். அவருக்குள்ள விசேஷ சாமர்த்தியத்தைக் கொண்டு நாம் எதிர்பார்த்த ஆனுகூலியங்கள் கிடைக்காமல் போய்விட்டன. மற்றொருவர் கனம் திவான்பகதூர் ஆர். ரெகுநாதராவ். அவரைச் சரியாகவே தென்னிந்தியாவின் பெரிய கிழவர் என்று எல்லாரும் கொண்டாடினோம். இவ்விருவருடைய பிரிவும் எனக்குப் பெரியநஷ்டம். ஒருவர் எனக்குச் சிநேகிதர். மற்றொருவர் என்னைப் பிள்ளைபோற் பாராட்டினார்.

அதிகமாக நான் இனி சொல்லவேண்டியது ஒன்றும் இல்லை. உஷ்ணகாலத்தில் இவ்வளவு அசௌகரியத்தை கவனிக்காமல் எங்களுடைய கூப்பாட்டை அங்கீகரித்து இங்குவந்து கூடினதற்கு தங்களுக்கு மறுபடியும் மறுபடியும் மனப்பூர்வமாய் வந்தன மளிக்கிறேன். எங்களாலானமட்டும் தங்களுடைய சௌகரியங்களைக் கவனிக்கத் தயாராக விருக்கிறோம்.

Herbs with Rare Qualities.

அபூர்வசக்தி வாய்ந்த மூலிகைகள்.

—:o:—

"ஆயிரம் வேரைக்கொன்றவன் அரைவைத்தியன்."

மருந்துக்கு எடுத்தது மூலிகை யென்பர் பெரியோர். மூலிகைகளில் எத்தனையோ விதங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான சக்தியும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அம்மூலிகைகளை ஆராய்ந்து பார்த்தோர் எவருமில்லை. மூலிகைகள் முழுமையும் ஒருவனிடம் சிக்கிவிட்டதென்று சொல்லவும் முடியாது. ஏனென்றால் ஒரு மூலிகை நல்ல மணற் பிரதேசத்தில் கிடைத்தால் மற்றொரு மூலிகை நல்ல களிமண் பிரதேசத்தில் கிடைக்கின்றது. இன்னொன்று மலையடிவாரங்களிலும், வேறு சில அடர்ந்த அடவிகளிலும் கிடைக்கின்றன. இந்த விதமாய்ப் பூவுலகெங்கும் பரவியிருக்கும் மூலிகைகள் அனைத்தையும் ஒருவன் கண்டுபிடித்துப் பரீக்ஷைசெய்ய வேண்டுமானால் தேச தேசமாய்ப் பிரயாணஞ் செய்தல் வேண்டும். போகாத விடங்களுக்கெல்லாம் போய்ப் பச்சிலையிருப்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஆங்காங்குள்ள பச்சிலைப்பிரதேசங்களையறிய அவ்வவ்விடத்து ஜனங்களின் பரிச்சயத்தை நாடல்வேண்டும். இப்படி யெல்லாம் செய்வது எவ்வளவு சிரம சாத்தியமென்பது இதனைப்படிப்போரே தெரிந்து கொள்ளலாம். சிரமசாத்தியமானாலுங்கூட பரிசீலனை செய்தால் அதுகாரணமாக பலன் ஏற்படாமற்போகாது. சமீபத்தில் அனங்கமாலா மலைப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்த ஐரோப்பியர் ஒருவர் அபூர்வ சக்தியோடு கூடின சிற்சில பச்சிலைகளைக் கண்டுபிடித்திருப்பதாகச் செய்தி யெட்டுகின்றது. ஆனால் இவர் கண்டு பிடித்திருப்பதில் ஒரு விசேஷமுமுண்டு. மீனைப்பிடிக்க வேண்டுமென்றால் சிறு மீன் ஒன்றைத் தூண்டிலில் போட்டுத் தண்ணீரில் விட்டால் தான் பெருமீன் அதனிடம் வந்து நாடும். இது போலத்தான் புதிதாய் ஒன்றைக்கண்டு பிடிப்பதும்; அதைக்கண்டு பிடிப்பதற்குள் உற்பவிக்கும் நஷ்டங்கள் எத்தனையோ யிருக்கலாம். எங்கும் எவ்விடத்தும் நஷ்டமில்லாமல் லாபம் ஏற்படமாட்டாது; அதாவது லாபம் வரும்போது நஷ்டமும் ஓரிடத்தில் வந்து தான் சேரும். நஷ்டம் வந்துவிட்டதே யென்று பிரலாபிக்காமல் எடுத்த முயற்சியைக் கடைப்பிடித்தால், லாபம் வருவது நஷ்டமாய்த் தோன்றினாலும் காலக்கிரமத்தில் அந்த லாபத்தையடைய எவராலாவது ஒரு வழியேற்படக்கூடும். இதுவே உலக சித்தாந்தம். இந்த ஆதாரமே மேலே சொன்ன ஐரோப்பியர் கண்ணாரக்கண்ட அனுபவம்.

இவர் பார்த்து வந்த அனங்கமாலாமலை யென்பது மேற்றிசை மலைகளைச் சேர்ந்ததோர் பகுதி. மலையாளத்தின் தென்பாரிசத்தில் உள்ளது எனவே ஒட்டபாலம் ஸ்டேஷனுக்கு வடக்காகும். ஒட்டபாலம் ஸ்டேஷனுக்கு வடக்காய் ஆறுமைல் தூரத்தில் கோதைக்குரிச்சி யென்னும் கிராமமிருக்கிறது. இங்கிருந்து இவ்வனங்கமாலாமலை யென்பது ஆரம்பமாகி குணங்காடு வரையிற் சென்று வளைந்து மூன்று யோசனைதூரம் செல்லுகின்றதாம். சாதாரணமாய் இம்மலை 1298 அடி உயரமுள்ளது. இம்மலையின் முக்கியமான பாகத்திற்கு வந்து சிகரத்தைப் பார்த்தால் அவ்விடத்தில் மூன்று அடி குறுக்களவுள்ள கிணறு ஒன்று தோன்றுகிறது. இக்கிணற்றினுள் வடமஞ்சள், நீலகொடுவேலி யென்னும் இரண்டு மூலிகைகள் இருக்கின்றன. இவ்விரண்டுக்கும் அபூர்வமான சக்தி யுண்டாம். எப்பேர்ப்பட்ட வியாதியையும் போக்கடிக்கும்படியான சக்தி வாய்ந்தது வடமஞ்சளுக்கு; நீலகொடுவேலிக்கோ, எவ்வளவு கெட்டியான உலோகமானாலும் அதை திரவமாய்ச் செய்யும் தன்மையுண்டாம். இது இவ்வைரோபியருக்குத் தெரிந்ததன்மேல் தாம் அப்பச்சிலைகளைக் கொண்டுவருவதாய் நிச்சயித்துப் புறப்பட்டார். அக்கம்பக்கத்திலுள்ள கிராமத்தவர் கிணற்றண்டை போவதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நிஷ்டூரங்களைச் செவ்வையாய் எடுத்துரைத்தார்கள். இம்மூலிகைகளைக் கொண்டுவருவதில் மிகுந்த பிரயாசையுண்டென்பது அவ்வைரோபிய பிரயாணிக்குத் தெரிந்திருந்தாலுங்கூட, எவ்விதத்திலும் கொண்டுவந்து தீர்வதென்றே மதித்துத் தம்முடன் கூட பல பேரை யழைத்துக்கொண்டு புறப்பட்டார். பல விதமான வாத்தியங்களோடும் துப்பாக்கி, ஈட்டி, பாலா முதலான கருவிகளோடும் இவர்கள் சென்றார்கள். மலைமீதேறிச் சிகரத்தையெட்டிக் கிணற்றை யணுகினார்களோ இல்லையோ அப்போதே இவர்கள் என்றென்றும் கண்டிராத பயங்கர முண்டாக்கக் கூடிய ஜந்துக்கள் அக்கிணற்றுக் குள்ளிருந்து கிளம்பின. பெருஞ் சத்த முண்டாக்கின. ஜலத்தில் ஒருவன் கைமாற போட்டு நீந்தினால் எப்படிச் சத்தமுண்டாகுமோ அப்படியே இந்தக் கிணற்றினின்றும் சத்தங்கேட்டதாம். கிணற்றுள்ளேயே வெகு நாள் வாஸமாயிருக்கும் ஜந்துக்களின் 'புஸ் புஸ்' சத்தமும் 'கீச் மூச்' ஒலியும் கர்ணகடோரமாயிருந்தன. கிணற்றண்டை சென்றவர்கள் தம் துப்பாக்கிகளை பார்செய்து கிணற்றை நோக்கிச் சுட்டனர். அவ்விடம் முழுவதும் பெரும் புகையாயிருந்தது அதன் மத்தியில் இறகுகளோடு கூடின பறவைகள் பல அதற்குள்ளிருந்து பறந்து போயின. கொஞ்ச நேரத்திற்குப் பிறகுப் புகை சிறிது சமனமாயிற்று. பின் கிணறுபோன்ற சுனைக்குள் துஷ்ட ஜந்துக்கள் இராவென்று இவர்கள் நினைத்து ஒரு பெரிய இரும்புச் சங்கிலியின் முனையில் கிணற்றுள் மூழ்குவோன் ஒருவனை உட்காரவைத்துச் சரசரவென்று சுனைக்குள் விட்டார்கள். ஜலமோ மிக்க ஆழத்திலிருப்பதாக இவர்கள் சங்கிலி விடுவதனாலே தெரிந்ததாம். தண்ணீரண்டை சங்கிலியோடுகூட மூழ்குவோன் போய்ச்சேர்ந்ததும் அங்கு படர்ந்திருக்கும் பற்பல கொடிகளைக் கண்டு இவைகளில் வடமஞ்சளையும் நீலகொடுவேலியையும் பகுத்து எடுக்க முடியாமல் கையில் அகப்பட்டவற்றைக் கொண்டு செல்ல நினைத்த ஜலத்தில் மூழ்கிப் பாசிபோற் படர்ந்திருந்த கொடிகளை இருளகளாலும் வாரியிறுக்கக் கட்டிக்கொண்டு மேலே வெளிக்கிளம்பினான். இதற்குள் இவன் மூழ்கியதையும் பின்னர்க் கொடிகளோடு தலைக் கிளம்பியதையும் கண்ட வெளியிலிருந்தார்க்கு தம் காரியம் பலித்ததென்ற பேராவல் உண்டாயிற்று. இத்தருணத்தில் தண்ணீருக்கு மேல் தலை கிளம்பியவன் தன் கைக்கொடிகளோடு இரும்புச் சங்கிலியைத் தொட்ட நிமிஷத்திலேயே அச்சங்கிலியானது, அவன் கையிலிருந்த நீலகொடுவேலியினது திரவமாக்கும் அற்புதச் சக்தியால் திரவமாகவே, கொடியைக் கொணர்ந்தவன் ஜலத்துள் விழுந்து மூழ்கினான்; ஐயோ பரிதாபம். கிராமத்தவரும் மற்றோரும் இவ்விரண்டு மூலிகைகளின் அபூர்வ சக்தியைக் குறிப்பிட்டுரைத்தபோது நம்பாமலிருந்தவர்கள், தம் கண் முன்பே நேர்ந்தவற்றைக் கண்டு இந்தியாவின் கண் எத்தனையோ மூலிகைகள் இருக்கின்றன வென்றும், அவ்வவற்றின் அதிசயத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அவ்வப்போது நேரக்கூடிய நஷ்டங்களுக்கும் அபாயங்களுக்கும் பின் வாங்கலாகாதென்றுஞ் சொல்லிக் கொண்டே திரும்பினர். 'பச்சிலை நிரம்பிய பசும் பூமி' யென்ற இந்தியாவைப் பல மகான்கள் வருணித்திருந்தாலும் இது பரியந்தம் இதனிடம் இவ்வளவு சக்திவாய்ந்த மூலிகைகள் இருப்பதாக இக்கலியில் யாரும் கேட்டதில்லை. இப்போதோ அவை இருப்பது நிதர்சனமாயிற்று. இனி இவற்றை எவ்விதத்தால் கொணர்ந்து மானிடர்க்கு உபயோகமாக்கலாமென்பதை அறிவாளிகள் கவனிப்பாராக.

"கமலநாதன்."

☞ இதில் ஒரு பெரிய இரகஸியம் புதைந்து கிடக்கிறது இந்த அற்புதக் கேணிக்கு "மூலக் கேணி" யென்று சொல்லுவர் சித்தர்கள். வடமஞ்சள் எப்படிப்பட்ட குணத்தையும் ஆற்றி வைக்கும் அற்புத கற்பமாகும்.—வி. சி. பர்.

EXTRACTS.

WAGES IN THE PALACE.

அரண்மனைச் சம்பளம்.

——:(*):——

"உத்தியோகம் புருஷ லக்ஷணம்" என்னும் நீதிக்கிணங்க ஜனங்கள் யாவரும் கல்வி கற்று கனபண்டிதராகிய பிறகு உத்தியோகம் செய்ய விரும்புவது யாவருள்ளும் இக்காலத்தில் சகஜமென் றேற்பட்டிருக்கிறது. முன் காலத்தில் இவ்வித எண்ணம் விசேஷமாய் பிராம்மண மென்று சொல்லப்படும் பிராமண வகுப்பாருள் தான் தோன்றியிருந்தது. புத்தி நுட்பத்திலும் கலா ஞானங்களிலும் பிராமண வகுப்பாரே மேலானவர்கள் என்று இக்காலத்திலும் யாவர் மனதிலும் நன்கு பதிந்திருப்பதுபோல் முன் காலத்து அரசர்கள் மனதில் பதிந்திருந்தமையால் மந்திரி ஸ்தான முதல் மடப்புளி ஸ்தானம் வரையில் பிராமணர்களுக்கே கொடுக்கப்பட்டுவந்தது. இப்போது நமது காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாராலும் பிராமணர்கள் அபிமானிக்கப்பட்டு வருவது பிராமணர்கள் பிரபல உத்தியோகங்களை வகித்து வருவதினின்றும் வெளியாகும். இருகண்களையும் ஒருங்கே பாராட்டவேண்டியது கவர்ன்மெண்டாருடைய முக்கிய கடமையா யிருக்கவேண்டியதாதலால், நம் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் பணக்காரர்கள் முதல் பரதேசிவரையில் யாவரும் படிக்கவேண்டு மென்றும் அவரவர்கள் கலா போக்கியதைக் கேற்ப உத்தியோக முறைகள் கொடுக்கப்படுமென்றும் ஏற்படுத்தி யிருப்பது, சர்வ ஜன சம்மதமாகு மென்று நாம் கூறவும் வேண்டுமோ? ஜாதிவித்தியாசமின்றி, அதிக எளியோரா யிருப்பவர்களுக்கும், கல்வி கற்பதில் அபிரஷியில்லாதவர்களுக்கும் கல்விகற்பதில் ஆசக்தி ஏற்படும்படி சம்பளங்களில்லாமல் படிப்பும், போக்கியதைக்கு மிஞ்சிய உத்தியோகமும் ஏற்படுத்திக் கொடுப்பதும் சர்வஜன சம்மதமுமே யாகும். என்றாலும், பிந்திய வகையான போக்கியதைக்கு மிஞ்சிய உத்தியோக மேற்படுத்திக் கொடுத்தல் விஷயத்திற்கு ஆக்ஷேபணை நழுப்பாமலிருக்க முடியாதென்பதெமதப்பிராயம். நம் நாடு எவ்விதமிருந்தபோதிலும் ஐரோப்பாவில் எவ்வாறு இம்முறை யனுசரிக்கப்படுகிற தென்பதைக்கவனிப்போம்.

ஐரோப்பாவில் மதப் பிரிவினையாளர்களிருப்பினும், இந்தியாவிலிருப்பதுபோல் ஜாதிப் பிரிவினையாளர்கள் கிடையா. கொண்டு கொடுத்து சம்பந்தம் செய்து கொள்வதிலும், கடுர நியந்தனைகள் கிடையா. "மேதினியிலிட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்" என்னும் ஆன்றோர் வாக்குக்கிணங்க அங்கிருப்பது எளியோர், வலியோரென இருவகை யாளரே. அங்கு எளியோர் என்ன படித்திருப்பினும் வலியோர்(பணக்காரர்) வம்சத்திலுதித்துசற்று போக்கியத்தையும் ஏற்பட்டிருப்பின் அவர்களுக்கே பிரபல உத்தியோகங்கள் கொடுக்கப்படும் விதி ஒருவாறு பொருந்தும். ஏனெனில் வம்ச பரம்பரையாய் திரவியவந்தர்களா யிருப்பவர்களிடத்தில் அடக்கம், பொறுமை, இரக்கம் முதலிய உத்தம குணங்கள் பொலிந்து விளங்கும். எளியோரிடத்திலோ என்ன வித்தியா யோக்கியதை ஏற்பட்டிருப்பினும் கர்வம், டம்பம், அசூயை என்று சொல்லப்படும் துர்க்குணங்கள் செறிந்து அவர்களைப் பங்கப்படுத்தும். ஆனால் எல்லா எளியோரிடத்தும் இத் துர்க்குணங்களிருக்கு மென்பது எமதபிப்பிராயமல்ல. பெஞ்சமின் பிராங்களின், முத்துஸ்வாமி ஐயர் போன்ற எத்தனையோ மகான்கள் ஆரம்பத்தில் இருந்தவிடம் தெரியாமலிருந்து தம் குத்தம குணத்தால் இருளுலகத்தில் தமது ஜோதியைப் பிரகாசித்துக் கொண்டு காலபிலெழும்புங் கதிரவன்போற் கிளம்பி விளங்கினதையும் நாம் கண்ணாரக் கண்டுள்ளோம். எளியோர்கள் முக்கியமாய் வியாபாரம் செய்தும், கூலிவேலை செய்தும் பிழைக்கின்றனர். உத்தியோகம் பெற்றும் பிழைப்பதில் இருவகையுண்டு. ஒன்று கவர்ன்மெண்டு உத்தியோகம் பெற்று பிழைத்தல்; அதாவது இராஜ சேவநம் செய்து பிழைத்தல். இரண்டாவது வியாபாரத் துறைகளில் பிரவர்த்தித்து வேலை செய்யும் நண்பர்களுக்கு உதவி புரிந்து சேவகம் செய்தல் இதில் இராஜ சேவகம் செய்தலே சௌரவமுள்ள, மேன்மை பொருந்திய, தொழில். அதிலும் இறைவனரண்மனையிலேயே உத்தியோகம் பெறுதல் எத்தன்மைய தாகுமென்பதை சற்று விவரிப்போம்.

தற்காலத்தில் இந்திய முன்னர்களது அரண்மனையில் சேவகம் செய்யும் சேவகர்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் சம்மானிக்கப்படுவது போல் சம்மானிக்கப்பட்டே வருகின்றனர். ஐரோப்பாவில் இராஜர் அரண்மனையில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கு விசேஷ கௌரவமும், சம்மானமு முண்டு. அவ்வித உத்தியோகஸ்தர்களிலும், உயர்தர உத்தியோகஸ்தர்களென்றும் கீழ்தர உத்தியோகஸ்தர் களென்றும் இரண்டுண்டு, உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு வருஷத்துக்கு 4000 பவுன் முதல் 600 பவுன் வரையில் சம்பளம்கொடுக்கப்படும். கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு வருஷத்திற்கு 20 பவுன் முதல் 40 பவுன் வரையில் கொடுபடுகிறது. ஐரோப்பாவிலுள்ள எல்லா அரண்மனைகளிலும்விட ருஷிய சக்கரவர்த்தி அவர்களது அரண்மனையில் தான் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது. நம் சக்கிரவர்த்தி அவர்களது அரண்மனை பெரிய உத்தியோகஸ்தருக்கு வருஷமொன்றுக்கு 600 பவுன் தான் கொடுக்கப் படுவதாய்க் கேள்விப் படுகிறோம். ருஷியசக்ரவர்த்தி அரண்மனை பெரிய உத்தியோகஸ்தருக்கு வருஷத்திற்கு 1200 பவுன் கொடுக்கப்படுகிறது. ஜெர்மன் கெய்ஸா அரண்மனையில் பெரிய உத்தியோகம் வகிக்கும் பிரபுவிற்கு வருஷத்துக்கு 600 பவுன் தான் கொடுக்கப்படுகிறது. எவ்விதச் சம்பளம் அவர்கள் பெறினும் விசேஷ தினங்களில் அதாவது அரண்மனையில் விருந்து நடந்த காலத்தும் கலியாண முதலியவைகள் நடந்த காலத்தும் விசேஷ வருமானங்கள் அவர்களுக்குக் கிடைக்கும். மேலும் ஐந்து வருஷ காலம் அரண்மனை உத்தியோகம் வகித்த ஒருவன் சாகும் காலபரியந்தம் உபகாரச் சம்பளம் பெற அருகனாகின்றான். இவாது சந்ததியார்கள் அத்தேசங்களிலேயே நல்ல உத்தியோகம் பெறுவிடினும் அயல் தேசங்களில் நல்ல உத்தியோகம் வகித்து விளங்கும்படியான பாக்கிய மேற்படும். தற்காலத்தில், நம் ஸ்ரீரங்கம் திருப்பதி முதலிய வைஷ்ணவ க்ஷேத்திரங்களில் கோயில் திருப்பணிகள் செய்து ஜீவிக்கும் பிராமண சேவகர்களுக்கு எவ்வளவு செலவுண்டோ அவ்வளவு செலவுண்ணு சீமையில் அரண்மனை உத்யோகஸ்தர்களுக்குண்டான செலவும். அரண்மனை உத்தியோகம் வகித்த சேவகர்களில் எத்தனையோ பேர் இப்போது அங்கு பெரிய ஜமீன்தார்களாய் விளங்குகின்றனர். அரண்மனையில் பெரிய உத்தியோகம் வகிப்பது இலேசான காரியமல்ல. அநேக பாஷா ஞானமுள்ளவர்களாயும் சமயோசிதம் போல் நடந்து கொள்ளக் கூடியவர்களாயு மிருக்க வேண்டும். இல்லாவிடில் அதிபரிதாபகர ஸ்திதிக்கு வரும்படி நேரிடும். நம் இராஜ ஸமஸ்தானங்களில் உத்தியோகங்கள் பாரம்பரியமாய்க் கொடுக்கப்பட்டு வருகிறது போலல்லாமல் அங்கு யோக்கியதா பக்ஷிமறிந்து கொடுக்கப் படுகிறது.

மா. வெ. வைத்திய நாதன்.

Green Leaf Manure and Green Manuring.

பச்சிலை எருவும் பசுந்தாள் பயிரும்.

(ராவ் பகதூர் ஜே. தர்மரங்க ராஜுகாரு செய்த உபந்நியாசம்.)

——(*)——

கந்தகம்—இது உங்கள் எல்லாருக்கும் தெரிந்த வஸ்து. சாதாரண தீக்குச்சிகளை உராய்த்து உண்டாகும் ஓர்வித நாற்றம் இவ்வஸ்து. எரிவதால் உண்டாகின்றது. துத்தம், துருசு, அன்னபேதி போன்ற வஸ்துக்களெல்லாம் கந்தகத்தின் சேர்க்கைப் பொருட்கள்.

பாஸ்கரம்.—எலும்புகளைச் சுட்டால் அவற்றின் நிறையில் 2/3 சாம்பலாக நீறும். இந்த சாம்பலுக்கும் கட்டை யெரித்த சாம்பலுக்கும் மெத்த வித்யாசமுண்டு. எலும்பு நீறு பாஸ்கரமும் சுண்ணபஸ்பமும் சேர்ந்தாகியது. பாஸ்கரம் சுயம்பா யிருக்கும் போது இருட்டில் பிரகாசம் கொடுக்கும். அதனால் அதற்குப் பிரகாசிதம் என்றும் பெயர். இது இவ்வஸ்துவின் கலப்புப் பொருள்.

சுண்ணம்.—இது பிராண வாயுவுடன் கலந்து சுண்ண பஸ்பமாகும் கரியமில வாயுவுடன் கலந்து சுண்ணாம்புக் கல்லாகும்.

மகனீசியம்—இது சுண்ணாம்பு போன்ற ஒரு வஸ்து. பிராணவாயுவுடன் கலக்கும். இரவில் ஏதாவது ஒரு வஸ்துவைப் படம் பிடிக்கவேண்டுமானால் மகனீசியம் என்னும் வஸ்துவை எரித்தால் மிகவும் பிரகாசமான வெளிச்சம் உண்டாகும். அந்த வெளிச்சத்தில் படம் பிடிக்கக்கூடும்.

மரஉப்பு—இது பொட்டாசியம் என்னும் வஸ்துவும் பிராணவாயுவும் கலந்தது. இந்தப் பொருள் ஆகாய மண்டலத்திலுள்ள நாற்றை கிரகித்துக் கொள்ளும் இயற்கையுள்ளது.

சோடா உப்பு—மர உப்புபோன்ற தூள் வஸ்து. ஆனால் மர உப்பைப்போல் பயிர்களுக்கு அவ்வளவு உபயோகமுள்ள வஸ்துவல்ல

இரும்பு.—இரும்பு திருப்பிடித்தால் துயசிந்தூரமாகும். அயம் கந்த கத்துடனும் பிராணவாயுவுடனும் சம்பந்தப்பட்டு அன்னபேதி யென்னும் கலப்புப் பொருளாகின்றது.

மாங்கனீஸ்.—இது இரும்புபோன்ற வஸ்துவாய் மண்ணில் இருப்பதாயினும், இரும்புபோல் பயிர் வகைகளுக்கு உபயோகமுள்ளதல்ல.

ஸ்படிக ழலம்—இது பிராணவாயுவுடன் கலந்து அத்தமான மணலாகின்றது. அனேகவித கற்களிலும் மண்ணிலும் மிகுதியாய் இவ்வஸ்து நிரம்பியிருக்கும்.

தூளோரைன்.-(லவணமூலம்) இது ஜலவாயுவுடன் கலந்தால் லவணம் திராவகமாகும். லவணகாரத்துடன் இவ்வஸ்து கலந்தால் நாம் உண்ணும் கரியுப்பாகின்றது.

மண்ணிலுள்ள ரசாயன வஸ்துக்கள் எவ்வெவை என்பதைப் பற்றியும், அவற்றின் குணகுணங்கள் கலப்புப் பொருட்கள் இவற்றைப்பற்றியும் நான் உங்களுக்குச் சுருக்கமாகச் சொன்னேன். இவற்றில் பயிர்களுக்கு விசேஷமாய் உபயோகப்படுவதும் அத்தியாவசியமானதும் எவையெனப் பின்னால் சொல்லுகிறேன். இப்போது இவ்வஸ்துக்களாலாகிய மண்ணின் குணபேதங்களுக்குத் தக்கபடி அவைகளை எத்தனை வகுப்புகளாகப் பிரிக்கலாம் என்பதைச் சற்று கவனிப்போம்.—

1. சரளை நிலம்—மிகவும் கற்கள் நிரம்பியுள்ளது.

2. மணல் நிலம்.—இதில் 100-க்கு 90-பாகம் மணலாகவே யிருக்கும்.

3. களிமண் நிலம்.—இதில் மூன்றில் இரண்டு பாகம் களிமண்ணாகவே யிருக்கும்.

4. பசளை மண்.—மணலும் களியும் சமமாகக் கலந்திருக்கும். இவைகளே மண்ணின் தன்மையைக் காட்டக்கூடிய முக்கிய பிரிவுகள். என்றாலும் நிறத்திலும் தன்மையிலுமுள்ள முக்கிய வேறுபாடுகளை உத்தேசித்து நிலத்தை:—

கரிசல்நிலம், படுகைநிலம், செம்மண்நிலம், கக்கான்நிலம், களர்நிலம், பருத்திக் கரிசல் நிலம், குருமண் நிலம் என்று பலவிதமாய்ப் பிரிக்கிறார்கள். இவற்றின் குணபேதங்களைப் பற்றிப் பேசுமுன் மண்ணில் சேர்ந்திருக்கும் கந்தமூலப் பொருளின் தன்மையைச் சற்று எடுத்துச் சொல்லுகிறேன். ஒரு நிலத்தை ஒரு அடி ஆழத்துக்குத் தோண்டினால் அதன் மேல் மண்ணுக்கும் அடிமண்ணுக்கும் நிறத்தில் அதிக வித்தியாசமிருக்கும். மேல் மண் கருப்பு நிறமுள்ளதா யிருக்கும். இந்தக் கருப்புநிறம் மேல் மண்ணில் கலந்திருக்கும் கந்தமூல பதார்த்தத்தினாலுண்டானதென்று திட்டமாய்ச் சொல்லலாம். பாரமற்ற மணற்கால் நிலங்களில் இந்தக் கந்தமூலப்பொருள் நூற்றுக்கு ஒரு பாகம்கூடக் கலந்திருக்காது. வளமுள்ள களிக்கால் நிலங்களிலோ இவ்வஸ்து 100-க்கு 15 பாகம் கலந்திருக்கும். கந்தமூல பதார்த்தமானது கரி மூலம், பிராணவாயு, ஜலவாயு, உப்புவாயு இவைகளால் உண்டான ஒரு கலப்புப் பொருள். நிலங்களுக்கு இந்தக் கந்தமூல பதார்த்தமானது அநேக விதங்களில் உபயோகமுள்ளதாயிருக்கிறது. நான் முன் சொன்னபடி உப்புவாயுவின் கலப்பு வஸ்துக்களில் அனேகம் இந்தப் பொருளுடன் மிகவும் அந்நியோந்ய சம்பந்தமுள்ளவைகளா யிருக்கின்றன. நிலத்தின் ஸ்தூல ஸ்திதியும், அதன் குணபேதங்களும் அனேகமாய் கந்தமூல வர்க்கப்பொருள்களின் கலப்பினாலேயே ஏற்படுகின்றன. ஓர் நிலத்தின் வெப்பமும் குளிர்ச்சியும், அதன் உரமும் இளக்கமும், அதன் ஈரங்காக்கும் இயற்கையும் இவையெல்லாம் கந்தமூல வர்க்கப்பொருளின் சம்பந்த பேதத்தாலுண்டாகின்றன.

ஜீவனுள்ள சராசரப் பொருள்களெல்லாம் மாண்டு மடிந்து அழுகிக் கெடுவது உங்களுக்குத் தெரியும். இவ்வஸ்துக்கள் மடிந்து அழுகிக் கெடுவதற்குச் சில வகையான ஜீவ அணுக்கள் அவசியம். அவைகள் வேலை செய்யவில்லையானால் பூதப்பொருள்களுக்கு அழிவு நேரிடாது. பருமனில் மிகவும் சிறியவைகளாயினும் அவைகள் கோடிக்கணக்காய்ப் பல்குவதால், அவற்றின் வேலையானது வெகு விரைவில் நடத்தப்படுகின்றது. பிரபஞ்சம் முழுவதும் இந்த ஜீவ அணுக்கள் நிரம்பியிருக்கின்றன. அவைகள் நமது கண்ணுக்குப் புலப்படாவாயினும் அவற்றின் பயனை நாம் தெளிவாய்ப் பார்க்கிறோம். திராக்ஷை ரசம் சாராயமாவதும், வாழைப்பழத்தின் ரசம் கடலைப் புளிப்பு ஆக மாறுவதும், பால் உறைவிடைத் தயிராவதும், மாம்பழம் அழுகிக் கெடுவதும், மாம்சம் அழுகி துர்நாற்ற முண்டாக்குவதும், ஜீவர்களுக்குக் காய்ச்சலுண்டாகி உடம்பு க்ஷீணமுண்டாவதும், எல்லாம் இச்சிற்றுயிர்களின் வேலையினால் தான்.

—கிருஷ்ணன்.

விவேகசிந்தாமணி—வைகாசி மீ 17உ.

Full term Copyright secured in every page, part and volume; and the right of reproduction, revision and republication strictly reserved by the Editor and Publisher. Due notice of subsisting Copyright in every issue and article was given and published in the Fort St. George Gazette in 1892. Pilfering prohibited, which please note.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is. but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it." But,

"Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE.'

அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE.

புத்தகம். 20.] 1912ஆ மேமீ, பரீதாபிஆ வைகாசிமீ [சஞ்சிகை. 2.

NOTICE.

The Editor of the *Vivekachintamani* while thanking his contributors for their valuable contributions, would like to draw the attention of the public to the fact that in pursuance of the uniform policy of this journal, articles could be received only on the understanding that the entire copy right in the articles should be vested solely in the Editor It would not have become necessary to mention this matter now but for the fact that literary pilfering is becoming more and more prevalent in the journalistic world; and the intentions of the contributors who have by their free gift of the manuscripts helped to further the objects of the Diffusion of Knowledge Agency which the Editor has been maintaining and working for the public good under great difficulties and trials for the past twenty-five years, are being sought to be frustrated by unscrupulous persons.

C. V. Swaminathaiyar, Editor, & Proprietor V. C.

Lalita Publishing Co., Sole Agents and Managers

S. Subrahmaniem, Joint Hon. Secretary,

Vivekachintamani Rev: Committee.

"To sell the mind for money is a greater sin than to sell the body."

1. அறிவைப்பரவச்செய்வதற்கான நம் விவேகசிந்தாமணிக்கு வியாச, விஷய தானம் செய்வோர் யாவரேயாயினும் உண்மையான அந்தர்த்தியானத்தோடு பூர்ணமதஸம்மதமாய் விஷயார்ப்பணஞ் செய்யல் வேண்டும். தானம் செய்தபின் தத்தாபஹாரம் செய்யக்கூடாது. தத்தாபஹாரசித்தையினர்க்கு விவேகசிந்தாமணி சங்கப்பலகைபோலிடங்கொடாதொடுங்கும்.

2. உழைக்கும்வழி யுணராது பிழைக்கவழி தேடும் சில தப்பிலிகள் நம்மை மோசஞ்செய்யாதபடி விவேகசிந்தாமணியிலுள்ள சுதந்திரமெல்லாமெமக்கேஉரிமையாமென்று சட்டப்படி ஆதிமுதற்கொண்டே ஸர்க்கார் கெஜட்டில் தாக்கல் செய்யப்பெற்றிருக்கிறது

3. விவேகசிந்தாமணியில்வரும் விஷயங்களையாவது அவைசம்பந்தமான ஸாதன ஸம்யம விவேகவிளக்கப் பேர்களையாவது தர்மவிரோதமாயுபயோகித்துக் கர்மவிக்னம் செய்வோர் பிழைக்கவழிதெரியாப் புல்லியர் புகும் பாழ்நரகிற் க்கார் கதியாவர்: அடாஅது செய்தவர் பாடஅது படுவர்: இகபர மிரண்டிலுமிது ஸத்தியம் ஸத்தியம், பலிக்குமென்றோதினன் பழனியாண்டவன். வேலுமயிலுந்துணை. ஆண்டானடிமையாய் உழைக்க உடன்பட்டான் கைச்சாற்றிது. ஓ.

Religion Essential to Wordly Progress.

உள்மதமின்றி உலகக்ஷேமமில்லை.

"They seem to think that religion belongs exclusively to the spiritual plane, and that it is a great obstacle to our material advancement. This, I should think, is a great mistake. Religion is not intended only for those who have given up the world altogether and have transported themselves to the region of spirituality: nor does it demand of us that we should all give up the world abruptly and devote our sole attention to our spiritual wants. Religion is intended not only for those in the spiritual plane but to those in the material plane as well—even more in the interests of the latter than in those of the former. The main object of religion is to regulate the conduct of those in the material plane and to guide them in their various walks of life, consistently with the final end to which they are all destined. In fact, our shastras say that to one advanced in spirituality there is no need for a religion :—

"வருணநெறிசார்மரத்தம்மதமெய்ப்
பொருளுணர்வூடென்றுத்தீபற
பொன்றுதலொன்றேபுக்தீபற".

'Caste ends where Religion begins
Religion ends where realization of Truth begins
This is the One End that endeth not".

—*Mr. S. Subaratnam before the Kandy Tamils' Literary Association on 1st April 1912.*

"Religion" என்றால் என்ன? "மதம்" என்று அவ்வார்த்தையைத் தமிழில் மொழி பெயர்க்கிறார்கள். மதம் என்றால் அபிப்பிராயம், மனக்கொள்கை யென்று பொருள்படும். "மனம் கொண்டது மதம்." ஆனால் மனம் என்றால் என்ன? சங்கல்ப விகல்பரூபமாயிருப்பது மனம்: அப்படியென்றால் நினைப்பும் மறப்புமாயிருப்பது மனம். நினைப்பும் மறப்புமாயிருப்பது தன்நிலையறிந்து நின்றால் அது நின்றவிடம் உள்ளம் என்று சொல்லப்படும். தன்நிலையறிந்து நின்றமனம் நினைப்பு மறப்பு என்கிற சித்தவிருத்தியை நிரோதம் செய்ததாகும். சித்தவிருத்தி நிரோதம் செய்தால் அதுவே யோகமாம். மனம் ஒருவழிபட்டது மந்திரமாவதுபோல, மனம் தன்நிலையறிந்து தனிப்படநின்றது யோகம். மந்திரமுண்டானால் தந்திரமுண்டு. ஏனெனில் சாதனமின்றி சாதிப்பாரில்லை. சாதகமின்றி சாதனை சித்திக்காது. சாதகம் உள்பக்குவம். சாதனம் அதற்குவேண்டிய உதவி. இவையிரண்டும் ஒன்றுக்கொன்று அத்யாவசியமாம்.

ஏனெனில் பிரபஞ்சம் இருவகைத்தாம். அவற்றை உட்பிரபஞ்சம், வெளிப்பிரபஞ்சம், என்பர். பிரபஞ்சம் என்றால் தோற்றம். உள்ளத்திலே உணர்ந்ததைத்தான் வெளியிலே கண்டுணரலாம். உள்ளுணர்வு இல்லையாயின் வெளித்தோற்றமுமில்லை. இதைத்தான் எமர்ஸன் "Man sees as he is" என்ற சொன்னார். இக்காலத்திலே "சீர்திருத்தக்காரர்" என்று புறப்படுகிறவர்கள் தன்னைச் சீர்திருத்திக்கொள்ளாமல் உலகைச் சீர்திருத்தவேண்டிப் புறப்படுகிறார்கள். அகத்தளவேயாகும் முகத்தொளி போல, இவர்கள் செய்யும் படாடோபங்களெல்லாம் யாரையும் பாதிக்கிறதில்லை. வாய்ப்பந்தல் போட்டுக் காலத்தை நியர்த்தமாகப் போக்குவதன்றி வேறு பிரயோசன மொன்றுமில்லை. இந்த உண்மையை யுணர்ந்தே 15 வருஷகாலம் ஊருக்குழைத்துவிட்டு ஒன்றும் பலிக்காதது கண்டு உள்ளத்தைச் செப்பனிட நினைத்தோம். பூர்வ புண்ணிய பலத்தாலும் கர்ம பரிபாகத்தாலும் சற்குரு கரிசனமும் அவரது திருவருளும் சித்திக்க அப்பெருந்தகையாரை யடுத்துப் புனிதனுகிக் கிருதார்த்தனானோம். கிருதார்த்தனான பின் படாதபாடெல்லாம் பட்டோம். அனுபவிக்காத துன்பங்களெல்லாம் அனுபவித்தோம். உடலம் பட்டுவிழும்படியான பாதகங்களெல்லாம் பட்டனுபவித்தும் "சாகத் தெரிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்மட்டும்" என்கிற முதுமொழிப்படி, உடலம்பட்டு விழுந்தோறும் மனம் பழுத்ததன்றி வேறு தீங்கு ஒன்றும் விளைந்ததில்லை.

உள்ளத்துணர்வுண்டாகக் கள்ளமனம் கரைந்துருகினால், "நீலக்கொடுவேலி" மூலிகையட்டமாத்திரத்தில் இரும்பும் திரவமா யுருகிப்போனதுபோல, இந்த மண்ணுலகெல்லாம் தண்ணுயுருகிப்போம். இதைத்தான் பிரளயம் (பெரியலயம்) என்று சொல்கிறது. மனது, புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற நாற்கரணங்களில் மனமுருகினால் மண்ணுலகு அப்பிலுப்புப் போல தண்ணீராய் லயித்துப்போம். புத்தி கலங்காது திரையற்ற நீர்போல் தெளிவுற்றதானால், "ஆபோவா இதம்ஸர்வம்" என்கிற மந்திரப்படி ஜலமயமான உலகமெல்லாம் புதிதமாகி நீரில் நெருப்புப்போல் தேஜோமயமாகப் பிரகாசிக்கும். புத்தி தெளிந்தபின் சித்தவிருத்தி நிரோதத்தால் தேஜோமனஸும் வசப்பட்டு நின்றால் தீயே மின்னொளியானாற்போல ஒளிமயமெல்லாம் சக்தியுருவெடுத்துப் பிராணமயமாகும். ஆதலால் சித்தவிருத்திநிரோதம் செய்தவருக்குப் பிராணசக்தி கைவசமாம். இதையேகூறுதல் "I have the power to lay down my life and take it again" என்று சொன்னார். இப்படிப் பிராணசக்தி வசப்பட்டவர்களே யமலோகந் தாண்டிச்செல்லத் தக்கவரவர். இதையே "கெருப்பாற மயிர்ப்பாலம் தாண்டல்" என்று தந்திரமாய்ச் சொல்வர். இவரே உண்மையில் தியாகியாவர். இந்த அருமையான பக்குவம் பெற்றவர்களுக்கு பரமான் தியாகராஜ மூர்த்தமாய்த் தரிசனம் தந்து இஷ்டலிங்கங்களை யளிக்கிறார். இவர்களுக்குச் சாவதும் பிழைப்பதும் சகஜமாம். இவர்களைத்தான் செத்துப் பிழைத்தவர்களென்றும், சாகக் கற்றவர்களென்றும், சுடுகாடு கண்டவர்களென்றும், ஸ்மசானவாஸிகளென்றும் பலவிதமாகச் சொல்லுவர்.

"முன்னைப் பின்னைச் செத்திருந்தாலல்லவோ சுடுகாடு தெரியப்போகிறது!" என்கிற வசனத்துக்கு உண்மையான அருத்தம் என்னவெனில்: மரணத்தை யுள்ளுணர்வோடு அறிவு கெடாமல் அனுபவித்தவனுக்குத்தான், மரணகூகம் தெரியும்; மற்றவர்களுக்கெல்லாம் "சுடுகாடு" பயங்கரமாகத்தானிருக்கும்.

மனது, புத்தி, சித்தம் என்கிற மூன்று கரணங்களும் லயிக்கப்பெற்றவன் யாரோ அவனே யோகபுருஷன். அவனே தியாகராஜதாஸன். அவனே திரிபுரசுந்தரிசுதன். அவனே ஜகதம்பிகையின் திருவருட்குழவி. அவனுக்குத் திரிபுரமும் திரிகரணங்களாம். அவனே திரிபுரவாலி; நாரதரைப்போல் திரிலோக சஞ்சாரம் செய்யத்தக்கவன்! அவன் உள்ளுணர் அறிவே அழகுருவாகும். அவ்வழகு(சொரூபம்) தானே உண்மையுமாகும். அந்த உண்மையின் அதிஷ்டான தேவதையே "என்தாய்" என்று மேலோர் போற்றும் "ஸத்யாநந்த ஸ்வரூபிணி." இந்த லக்ஷியத்தை யுணர்வார்யாரோ அவர்கள் தாமே ஸாதுக்கள் ஆவார். இந்த ஸாது லக்ஷணம் பூர்வஜன்ம வாஸனையால் புநிதகுல ஜநநம் பற்றி வரவேண்டும். சோற்றுப்படிப்புக் கற்றசடுகுடு வித்தையால் வாய்மதம் பேசி தாய் மோசம்செய்து தாணியில் காசுசேர்த்த சண்டாளர் செய் சாகஸவித்தையால் இது சித்திக்காது. இவர்கள் செய் ஜாலமெல்லாம் திருவாழ்த்தான் கறுப்புநாயை வெள்ளைநாயாக்கினது போலத்தான். புறமதமெல்லாம் பொய்மதமாகும். உள்மதமொன்றே உண்மைவழிகாட்டும். யோகஸித்திகளெல்லாம்பெற்று யோக லோகங்களெல்லாம் ஆண்டாலும் ஞானஸித்தியில்லாவிடத்து யோகஸித்தி ஆபத்துக்கே யிடமாகும்.

யோகஸித்திபெற்றும் ஞானஸித்தி பெறாதவர்கள் தாம் யோகப்பிரஷ்டர்களாய் உலகத்துக்கு பெருந்துன்ப மிழைப்பவர்களாகிறார்கள். அஸாரசுபாவம் மேலிட்டால், யோகசக்தியால் பெருங்கேடிழைப்பவனாகிறான். ஏனெனில் எப்படியும் ஆசை மோசம் செய்யும்: ஆகங்காரமுள்ள வரையில் ஆசையறாது. ஆகையால்தான் யோகசாதன மியற்றுகிறவர்களுக்கு

ஈசுவர பக்தி யவசியமிருக்கவேண்டு மென்று பதஞ்சலி பகவான் சாங்கியத்தை யாராய்ந்து யோக சாஸ்திரத்தை அதற்கும் மேலான சாதனமாக மெய்ப்பொருளுணர்வோர்க்குப் போதிக்கலானார்.

யோகமின்றி க்ஷேமமில்லை; ஆதலால் முதலில் யோகஸித்திபெறவேண்டும். யோக ஸித்திக்கு ஈசுவரபக்தி யவசியம் வேண்டும். ஏனெனில் பக்தியில்லாதயோகம் நீசஸித்தையாகும். யோக ஸித்தியினால் யோகமாயையைக் கொண்டு "தூசைத்தூணாய்" மாற்றுவிக்கலாம். ஆனால் "தூசைத்தூணாய் மாற்றும்" சக்தியுள்ள யோகமாயையும் "வேதாளக்கதையாக" யோக புருஷனை "ஆசைக்குள்ளிருந்தாட்டுவிக்கும்". ஆகையினால் எம்பெருமானார் திருமூலதேவர் "ஆசையறுமின் ஆசையறுமின்! ஈசனோடாயினுமாசையறுமின்!" என்று திருமந்திரோபதேசம் செய்யலானார்.

"தூசைத்தூணாய் மாற்றவையே
ஆசைக்குள்ளிருந் தாட்டிவைப்பாய்
ஓசைக்குள்ளூறு மோம்பொருளே
வேசைக்குளுன்னுரு வேர்ப்புழவே!"

என்றோதியுள்ளார் ஸ்வாநுபவச் செல்வம் படைத்த பெரியோரும். பகவானும் அர்ச்சனனுக்கு பக்தியினவசியத்தைப் போதித்துப் பின்பு நீ "யோகியாகவிரு!" என்றுபதேசித்தருளினார்.

"அப்ராப்தப்ராபணம் யோகஃ க்ஷேமௌலப்தஸ்யபாலநம்" என்றாராகையால், முதலில் பெறாத பேற்றைப்பெற்று, பெற்றதைப் பரிபாலநம் செய்வதே க்ஷேமம். ஒருபேறுமில்லாத சூந்யசம்பந்தனுக்கு க்ஷேமம் எங்கிருந்து வந்தது! எல்லா சூந்யத்திலும் பக்தி சூந்யம் மிக்கக்கொடியது. அவன் சத்தசோம்பேறியாய் போக்கிலிநாதனாயிருப்பானென்பது நிச்சயம். அவனுடைய வித்தும் அப்படியேதானிருக்கும். விஷ விருக்ஷம் செழித்தோங்கி வளர்ந்தாலும் விஷவேகம் நீங்கி வடவிருக்ஷத்தைப் போல் தாபத்திரயங்களையும் நீக்கத் தக்க நிழலைக் கொடுக்குமா? கொடுக்காது. அதுபோல, துர்ச்சனர் விருத்தியடைந்தாலும் உலகத்துக்குத் துன்பமே இழைப்பாரன்றி அவரால் க்ஷேமமொன்று முண்டாவதில்லை. இதற்கு மகாதீரர்களான அசுரர்கள் செய்கைகளே உதாரணமாம். ஆகையால் இராவணேசுவரனே யானாலும் உண்மதமில்லையாயின் அவனால் உலகத்துக்கு க்ஷேமமில்லை. 'இராவண ராஜ்யம்" என்று சொல்வது பொய்மதப் புன்மைமலிந்ததோர்பொலிவாம். இராம ராஜ்யமென்பது உண்மதவுண்மை உறைந்ததோர் நிறைவாம். ஆகையால் உண்மதப்பயிர்ச்சியைக் கொண்மதமாகக் கொள்ளாதொழிந்து பொய்மலிப் புன்மைநிறைந்த போலிப்புறமதக் கொள்கையே பெரிதாய்ப் பாராட்டுமவரால் ஊரழிந்து போழிந்து உண்மைநலம் தானழிந்து பொய்மலிந்த புன்மையர்தம் பொய்வாழ்வு தான்மலிந்து, ஏழைகள் அழுதகண்ணீர் இருகரை புரளுமாறுப், புட்டிக்கு மண்கமந்து பிரம்படிபட்டவன்பால், வேகமாய் ஓடி யங்கே வினைக்கடல் சேர்ந்து பாயும்.

வைகையின் வெள்ளந்தானும் மதுரையே மூழ்கவம்மா! முன்னந்தான் சூழ்ந்தவாறு, பொய்மலிப் புன்மையாளர் பொய்யுரைப் புன்மைவாழ்வு, ஸாதுக்கள் உள்ளம் மூழ்கச் சதிபதி தர்மம் தாழ, ஊழ்வினைப் பயனாய் வந்து சூழ்ந்ததை யனுபவிக்க, மாதொரு பக்கங்கெண்டான் மன்பதைக்கிலக்கு பாவான், தாழாமற் றாழ்ந்தவென்னைத் தாணியுற் காப்பான் தாயே!

காப்பவன் காக்கானாகிற் கருணைதான்
நாப்பாய்ப்போகும்; அருணனொடு வருணன்தானும்
ஆர்ப்பாடகேடம்போட்டு அருந்தவம்பாழாப்போக
ஊர்ப்பாடுபட்டார்வாக்குக்குகந்துமோக்கான்ஞாய்
[வான்!

ஓம் தத்ஸத்.